Koviloor Digital Library

12469

அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி

திருஅருட்பிரகாச வள்ளலார்

அருளிய

ACCNo:12469
R65

திருஅருட்பா

ஆறாம் திருமுறை

வெளியீடு: திருஅருட்பிரகாச வள்ளலார் தெய்வ நிலையம்,
வடலூர், தமிழ்நாடு.

Koviloor Digital Library

KOVILOOR ANDAVAR
A. No. 12469
LIBRARY, KOVILOOR

Koviloor Digital Library

அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி

திருஅருட்பிரகாச வள்ளலார்

அருளிய

திருஅருட்பா

ஆறாம் திருமுறை

KOVILOOR ANDAVAR LIBRARY, KOVILOOR
A. No. 12469

வெளியீடு :
திரு அருட்பிரகாச வள்ளலார் தெய்வ நிலையம்,
வடலூர், தமிழ்நாடு.

Koviloor Digital Library

நூலின் பெயர்	:	திருஅருட்பிரகாச வள்ளலார் அருளிய திருஅருட்பா ஆறாம் திருமுறை
முதற்பதிப்பு	:	5–10–1999 – வள்ளலார் அவதார தினம் 2000 பிரதிகள்
இரண்டாம் பதிப்பு	:	1–1–2002 – மாதப்பூசம் 2000 பிரதிகள்
மூன்றாம் பதிப்பு	:	24–5–2004 – தாரண ஆண்டு வைகாசி 11, 138 ஆம் ஆண்டு தருமச்சாலை தோற்றுவித்த நாள் 5000 பிரதிகள்
பதிப்பு உரிமை	:	திருஅருட்பிரகாச வள்ளலார் தெய்வநிலையம் வடலூர் –607 303. கடலூர் மாவட்டம் தமிழ்நாடு. போன் : 04142– 259250
பக்கங்கள்	:	590
எழுத்து	:	12 புள்ளிகள்
பேப்பர் தரம்	:	11.6 கிலோ

விலை ரூ. 100

அச்சிட்டோர் :

சிந்தாமணி பிரிண்டர்ஸ்,

(கம்ப்யூட்டர் ஆப்செட் பிரிண்டிங்)

மயிலாடுதுறை.

Koviloor Digital Library

அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி

திருஅருட்பா ஆறாம் திருமுறை

பொருளடக்கம்

வ.எண்.	விவரம்	பக்கம்
	1. பாயிரம்	
1	முன்னுரை	5
2	திருஅருட்பிரகாச வள்ளற் பெருமானார்	8
3	திருஅருட்பா ஆறாம் திருமுறையின் சிறப்பு	14
4	பதிக அட்டவணை	17
	2. நூல்	
1	ஆறாம் திருமுறை	1
2	பல்வகைய தனிப்பாடல்கள்	475
	3. பின் இணைப்புகள்	
1	ஆதாரப் பதிப்புகளின் முகப்பேடுகள்	536
2	பாட்டு முதற்குறிப்பு அகராதி	541

Koviloor Digital Library



ஜீவகாருண்ய ஒழுக்கத்தை நடத்தும் பொருட்டு வள்ளற்பெருமானார் வடலூரில் 23–05–1867ல் நிறுவிய சத்திய தருமச்சாலை



சாதி, மதம், இனம், மொழி, தேசம், நிறம் முதலிய வேறுபாடுகள் இல்லாத நிலையில் அருட்பெருஞ்ஜோதியை வழிபட, உலகில் வேறு எங்கும் இல்லாத அற்புத அமைப்பாக வள்ளற்பெருமானார் வடலூரில் 1872–ல் நிறுவிய சத்திய ஞான சபை.



வள்ளற் பெருமானார்
அருட்பெருஞ்ஜோதி ஆண்டவராய் நிறைந்த
சித்திவளாகத் திருமாளிகை.

Koviloor Digital Library

அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி

எல்லா உயிர்களும் இன்புற்று வாழ்க!

முன்னுரை

திருஅருட்பிரகாச வள்ளற்பெருமானார் அருளிய திருஅருட்பா நம் தீந்தமிழ் மொழியில் அருளப்பெற்ற ஈடு இணையற்ற தெய்வீக நூலாகும். நமது தமிழ் மொழியின் செய்யுள் இலக்கணத்தில் எத்தனை வகை யாப்புகள் உண்டோ அத்தனை வகையாலும் பாடப் பெற்றுள்ளன. அத்துடன் புத்தம் புதிய இசைப் பாடல்கள் என்னும் கீர்த்தனங்களும் இதில் அமையப் பெற்றுள்ளன. எனவே **திரு அருட்பா** மெய்ஞ்ஞானச் சுரங்கம் மட்டுமன்று தீந்தமிழின் தேவகானமும் ஆகும்.

சன்மார்க்க சங்கத்தவர்களது அருள் வேதமே **திருஅருட்பா**தான். இது சாதி, மதம், சமயம், இனம், மொழி, நிறம், தேசம் - முதலிய வேறுபாடுகள் இல்லாத சன்மார்க்க சமுதாயம் உருவாக வழி காட்டுகின்றது. ஆன்மநேயம் தழைத்து ஓங்க உறுதுணையாகின்றது.

வள்ளற் பெருமானார், தான் பெற்ற பெரும் பேற்றையும், அருள் அனுபவங்களையும் ஆற்றலையும் சாகாக்கல்வியையும் அருட்பெருஞ்ஜோதி ஆண்டவரைப் பற்றிய ஒரு முழுமையான அருமையான அருள் அற்புத விளக்கத்தையும் **"திருஅருட்பா ஆறாம் திருமுறையில்"** அருளி உள்ளார்கள்.

ஏடகத்தே எழுதாத மறைகளை எல்லாம் அருட்பெருஞ்ஜோதி ஆண்டவர், நம் பெருமானார் அருள் உள்ளத்தில் எழுதுவித்தார். அந்தச் சத்திய மறைகளையெல்லாம் ஆன்ம நேயத்தால் திருஅருட்பாவில் நமக்காக அருளியுள்ளார்கள்.

"வான் கொடுத்த மணி மன்றில் திருநடனம் புரியும்
வள்ளல் எலாம் வல்லவர் நன்மலர் எடுத்து என் உளத்தே
தான் கொடுக்க நான் வாங்கித் தொடுக்கின்றேன்"

எனத் திருஅருட்பாவைப் பற்றிப் பெருமானார் அருளி உள்ளார்கள்.

"புனைந்துரையேன்,
பொய்ப் புகலேன்,
சத்தியம் சொல்கின்றேன்,
ஆசை உண்டேல் வம்மின்." என நம்மை அழைத்து நாம் அருட்பெருஞ்ஜோதியாக வாழ வழிகாட்டுகிறார்கள்.

Koviloor Digital Library

அருட்பெருஞ்ஜோதி அற்புத ஆண்டவரின் தனிப்பெருங்கருணையாய்த் திகழும் திரு அருட்பிரகாச வள்ளலார் அருளிய திருஅருட்பா ஆறு திருமுறைகளாகப் பகுக்கப் பெற்றுள்ளது. வள்ளற் பெருமானார் தோன்றும் துணையாய் இருந்தபோது முதல் மாணாக்கர், உபயகலாநிதிப் பெரும் புலவர், **தொழுவூர் வேலாயுதனார்** 1867 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் திருஅருட்பா முதல் நான்கு திருமுறைகளை, பேரன்பர் இறுக்கம் இரத்தினம் என்பவர் பெருமுயற்சியினால் வெளியிட்டார். அந்நூலினை மறு அச்சாக்கி நம் தெய்வ நிலையத்தால் 23-1-1997 தைப்பூச நன்னாளில் மலிவு விலைப் பதிப்பாக வெளியிடப் பெற்றுள்ளது.

1880-ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் **திருஅருட்பா ஐந்தாம் திருமுறையை** முதல் மாணாக்கர் வெளியிட்டார். அவர் தொகுத்த பதிகங்களின் வரிசையிலும், பதம் பிரித்தும், திருஅருட்பா பதிப்புச் செம்மல் ஆ. பாலகிருஷ்ணர், சன்மார்க்க அறிஞர், ஊரன் அடிகளார் ஆகியோரது பதிப்புகளை ஆதாரப் பதிப்புகளாகக் கொண்டும், நம் தெய்வ நிலையத்தால் 10-2-1998 தைப்பூச நன்னாளில் திருஅருட்பா ஐந்தாம் திருமுறை மலிவு விலைப் பதிப்பாக வெளியிடப் பெற்றுள்ளது.

திருஅருட்பா ஆறாம் திருமுறையை முதன் முதலில் வேலூர் பத்மநாபர் 1885 ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் வெளியிட்டார். சன்மார்க்க அறிஞர் ஊரன் அடிகளார் வரலாற்று முறை பதிப்பாக 24-5-1972 இல் ஆறு திருமுறைகளையும் சேர்த்து வெளியிட்டு உள்ளார்.

இவ்விரு பதிப்புகளையும் மற்றும் உள்ள பழம் பதிப்புகளையும் ஆதாரப் பதிப்புகளாகக் கொண்டு நம் தெய்வ நிலையத்தால் **ஆறாம் திருமுறை** முதற்பதிப்பு 5-10-1999 வள்ளற்பெருமானார் அவதார தினத்தில் வெளியிடப் பெற்றது. இரண்டாம் பதிப்பு 1-1-2002-ல் வெளியிடப்பெற்றது. தற்போது ஆறாம் திருமுறை மூன்றாம் பதிப்பு வெளியிடப்படுகின்றது. மூன்றாம் பதிப்பில் 150 பதிகங்களில் 2553 பாடல்கள் இடம் பெற்றுள்ளன. பாடல்கள் சந்தி பிரிக்கப் பெற்றுத் தொடர் எண்கள் கொடுக்கப் பெற்றுள்ளன.

திருஅருட்பாவைக் கற்கக் கற்கக் களிப்பு உண்டாகும். அருள் இன்பத்தை வாரி வாரி வழங்கும். எனவே நினைந்து நினைந்து, உணர்ந்து உணர்ந்து, நெகிழ்ந்து நெகிழ்ந்து திருஅருட்பாவை தினசரி பாராயணம் செய்து, அதன் வழி நடந்து

Koviloor Digital Library

அருட்பெருஞ்ஜோதியின் தனிப்பெருங்கருணையைப் பெறுவோமாக. அருள் இன்பம் எனும் பெரு வெள்ளம் **திருஅருட்பா ஆறாம் திருமுறையில்** கரைபுரண்டு ஓடுகின்றது பருக வாரீர்! வாரீர்!

நன்றி! நன்றி!!

இந்நூலினை வெளியிட அனுமதி வழங்கிய இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை, சென்னை ஆணையர் திருமிகு. **G. இராமகிருஷ்ணன்** I.A.S. அவர்களுக்கும் சிறப்புடன் வெளிவர ஆலோசனை வழங்கிய கூடுதல் ஆணையர் திருமிகு. **S. கனகய்யா** B.Sc., B. L., அவர்களுக்கும், தலைமையிடத்து இணை ஆணையர் திருமிகு. **த. சுந்தரம்** B.A., B.L., அவர்களுக்கும் மயிலாடுதுறை இணை ஆணையர் திருமிகு. **க. இராஜநாயகம்** B.A., B. L., அவர்களுக்கும் அன்பான நன்றியையும், வணக்கத்தையும் தெரிவிக்கின்றோம்.

இந்நூலினை அச்சிடுவதற்கு நன்கொடை வழங்கிய புண்ணியர்கள் அனைவருக்கும், நன்றியினைத் தெரிவிக்கின்றோம். மேலும் அவர்கள் பல்லாண்டு பல்லாண்டு வாழ்க! வாழ்க! என வாழ்த்துகின்றோம். சிறந்த முறையில் அச்சிட்டுத்தந்த சிந்தாமணி அச்சகத்தாருக்கும் எங்களது நன்றியினைத் தெரிவிக்கின்றோம். **பதிப்புப்பணி : ப. ஞானப்பிரகாசம், பி.காம்., கணக்கர் வள்ளலார் தெய்வ நிலையம், வடலூர். இவருக்கும் அன்பான நன்றியைத் தெரிவிக்கின்றோம்.**

திருஅருட்பா ஆறாம் திருமுறையை மூன்றாம் பதிப்பாக வெளியீடு செய்ய எங்களுக்கு அருள்பாலித்த, அருட்பெருஞ்ஜோதிக்கு அனந்தம் கோடி வந்தனம்! வந்தனம்!!

இங்ஙனம்

இரா. இராஜேந்திரன், பி.எஸ்சி., பி.எல்.,
தக்கார் / உதவி ஆணையர்
இந்துசமய அறநிலைய ஆட்சித்துறை
கடலூர் –1

கே. பி. அசோக்குமார், எம்.ஏ., பி.எல்.,
நிர்வாக அதிகாரி
வள்ளலார் தெய்வ நிலையம்
வடலூர்.

Koviloor Digital Library

அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி

திருஅருட்பிரகாச வள்ளலார்
வரலாற்றுக் காலக் குறிப்புகள்

திருஅவதாரம்	:	சுபானு, புரட்டாசி 21 சித்திரை நட்சத்திரம் (ஞாயிறு)		5–10–1823
ஊர்	:	மருதூர்–சிதம்பரம் வட்டம், கடலூர் மாவட்டம்		
பெற்றோர்	:	இராமையா–சின்னம்மமை		
இயற்பெயர்	:	இராமலிங்கம்		
சிறப்புப் பெயர்	:	திருஅருட்பி ரகாச வள்ளலார்		

குடும்பம் சென்னைக்குச் சென்றது		–	1824
தொழுவூர் வேலாயுதனார், பெருமானாரின் மாணவரானது		–	1849
ஒழிவிலொடுக்கம் பதிப்பித்தது	விரோதிகிருது, ஐப்பசி	–	1851
மனுமுறை கண்ட வாசகம் வெளிவந்தது	ஆனந்த, ஆனி	–	6, 1854
தொண்ட மண்டல சதகம் பதிப்பித்தது	இராஷச. மார்கழி	–	1855
சின்மய தீபிகை பதிப்பித்தது	பிங்கள, கார்த்திகை	–	1857
கருங்குழியில் உறையத் தொடங்கியது	–	–	1858
சன்மார்க்க சங்கம் நிறுவியது	–	–	1865
திருஅருட்பா முதல் நான்கு திருமுறைகள் வெளிவந்தது	அக்ஷய, தை	–	2, 1867
சத்திய தருமச்சாலை தொடங்கியது	பிரபவ, வைகாசி 11	–	23.5.1867
மேட்டுக்குப்பத்தில் உறையத்தொடங்கியது	–	–	1870
சத்திய ஞானசபை அமைத்தது	–	–	1871
சத்திய ஞானசபையில் முதல் தைப்பூசம்	பிரஜோத்பத்தி, தை 13	–	25.1.1872
அருட்பெருஞ்ஜோதி அகவல் எழுதியது	ஆங்கிரச, சித்திரை 8	–	18.4.1872
ஞானசபை வழிபாட்டு விதி வகுத்தது, சங்கம், சாலை, சபை பெயர் மாற்றம் செய்தது	அங்கிரச, ஆடி 5	–	18.7.1872
சன்மார்க்கக் கொடி கட்டியது, பேருபதேசம்	ஸ்ரீமுக, ஐப்பசி 7	–	22.10.1873
மேட்டுக்குப்பம் சித்திவளாகத்தில் வழிபாட்டு முறை தொடங்கியது		–	1873
சித்திவளாகத்தில் அருட்பெருஞ்ஜோதி ஆண்டவராய் நிறைந்தது	ஸ்ரீமுக, தை 19 – இரவு மணி 12	–	30.01.1874

Koviloor Digital Library

வள்ளற்பெருமானாரின் பன்முகஞானம்

சேக்கிழார் நூலாசிரியரும், உரையாசிரியரும், போதகாசிரியரும், ஞானாசிரியரும் ஆவாரெனத் திரிசிரபுரம் மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் சேக்கிழார் பிள்ளைத்தமிழில் பாடியுள்ளார்.

நாடிய விரிநூல் சொற்றிடு திறனால் நன்னூரலா சிரியன்
நகுபா சுரமுத லுரைசெய் தலினால் நவிலுரை யாசிரியன்
நீடிய பரசம யக்குழி வீழ்ந்தவர் நீப்பப் போதனைசெய்
நிலையாற் போத காசிரி யன்னிவை நிகழ்தொறு நிகழ்தொறும்
ஆடிய ஞானத் திறனுற லான் ஞானாசிரி யனுநீ யென்
றான்றோர் பலரும் புகழப் படுபவ வகில மெலாஞ் சென்று
கூடிய புகழ்சால் குன்றத் தூரன் கொட்டுக சப்பாணி
கொற்றச் சேவையர்காவல நாவல கொட்டுக சப்பாணி.

— சப்பாணிப் பருவம் 9

வள்ளற்பெருமானாரோ, நூலாசிரியரும், உரையாசிரியரும், ஞானாசிரியரும் ஆதலொடு பதிப்பாசிரியரும் பத்திரிகாசிரியரும் ஆவார். இவ்வாறு பல்வகை ஆசிரியராய் விளங்கியதோடன்றி வியாக்கியான கர்த்தராய், சித்தமருத்துவராய், சீர்திருத்த வாதியாய், அருட்கவிஞராய், இவை அத்தனைக்கும் மேலாக அருட்பெருஞ் ஜோதியராய் விளங்குகிறார்.

நூலாசிரியர்

மனு முறைகண்ட வாசகம், ஜீவகாருண்ய ஒழுக்கம் என்ற நூல்களை இயற்றியமையான் நூலாசிரியர்.

உரையாசிரியர்

ஒழிவிலொடுக்கம், பாயிர விருத்தி உரை, தொண்ட மண்டல சதகத்தின் கடவுள் வாழ்த்துப் பாடல் உரை முதலியவற்றைச் செய்தமையான் உரையாசிரியர்.

பதிப்பாசிரியர்

ஒழிவிலொடுக்கம் பாயிரவிருத்தி, தொண்ட மண்டல சதகம், சின்மயதீபிகை ஆகிய நூல்களைப் பதிப்பித்தமையால் பதிப்பாசிரியர்.

பத்திரிகாசிரியர்

சன்மார்க்க விவேகவிருத்தி என்னும் பத்திரிகையைத் தொடங்கியமையான் பத்திரிகாசிரியர்.

போதகாசிரியர்

தொழுவூர் வேலாயுத முதலியார், இறுக்கம் இரத்தின முதலியார், நரசிங்கபுரம் வீராசாமி முதலியார், கிரியாயோக சாதகராகிய பண்டார ஆறுமுக ஐயா, பொன்னேரி சுந்தரம் பிள்ளை, காயாறு ஞானசுந்தர ஐயர் ஆகிய பலருக்குப் பாடஞ் சொன்னமையான் போதகாசிரியர்.

Koviloor Digital Library

ஞானாசிரியர்

திருவருண் ஞானத்தை அனைவர்க்கும் வாரி வழங்கி வருவதால் ஞானாசிரியர்.

வியாக்கியானகர்த்தர்

உலகெலாம் என்னும் மெய்ம்மொழிப்பொருள் விளக்கம், தமிழ் என்னும் சொல்லுக்கிட்ட உரை முதலிய வியாக்கியானங்களைச் செய்தமையான் வியாக்கியானகர்த்தர்.

சித்தமருத்துவர்

தாமேபல மருந்துகளைச் செய்து பிணியாளர் பலருக்குக் கொடுத்து நோய் தீர்த்ததோடன்றிச் சிலருக்குக் கடித வாயிலாக மருந்து எழுதியது, மருந்துச் சரக்குகளின் குண அட்டவணை எழுதியது ஆகியவற்றால் சித்த மருத்துவர்.

மருத்துவத்தோடன்றி ரசவாதத்திலும் பெருமானார் வல்லவர். வைத்தியம், வாதம், யோகம், ஞானம் இவை ஒன்றுக்கொன்று தொடர்புடையவை. நம் நாட்டுச் சித்தர்கள் இவற்றில் வல்லவர்கள். பெருமானாரும் வல்லவரின் வல்லவர். பொன் செய்யும் வகையை இறைவன் தமக்கு உணர்த்தினான் எனப் பெருமானார் ஒரு பாடலிற் கூறுகின்றார். திருவருட்பா உரைநடைப் பகுதி நூலில் ரசவாதம் என்ற உபதேசக் குறிப்பையும் பொன்விளைவு என்ற திருமுகத்தையும் காண்க. இறுக்கம் இரத்தின முதலியார்க்கு வரைந்த வேறொரு திருமுகத்தில் தற்காலம் ஒருவகை முயற்சி நிமித்தம் சுமார் நய (30) வராகனெடை பொன் வேண்டுவது. அவை நஷ்ட மாகாது, விருத்தியே யாகும். இவையும் சிவபுண்ணியம் பற்றியே என்றெழுதி யுள்ளது முண்டு. பொன் செய்யும் ஆற்றலை ஒரு பேறாகவே பெருமானார் கூறுகின்றார்.

சீர்திருத்தவாதி

இன்று துறைகள்தோறும் தோன்றியுள்ள பல சீர்திருத்தங்களுக்கு வித்திட்டவர் வள்ளற் பெருமானாரே. சென்ற பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியிலும் இவ்விருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் சைவசமயத்தில் பல சீர்த்திருத்தங்கள் தோன்றின. சீர்திருத்தச் சைவம் என்றொன்று தோன்றிற்று. சீர்திருத்தச் சைவம் தோன்றற்குக் காரணர் பெருமானாரே. சமயத் துறையில் மட்டுமின்றிச் சமூக வாழ்விலும் பெரும் மாறுதல்களும், சீர்திருத்தங்களும் பெருமானாரால் ஏற்பட்டன.

இதுவரை உலகில் தோன்றிய சீர்த்திருத்த வாதிகளுள் ஒப்பும் உயர்வும் அற்றவர் பெருமானாரே. சீர்திருத்தத்தில் பெருமானார் யாருக்கும் பின்னிற்பவர் அல்லர். பெருமானார் கூறிய சீர்திருத்தங்கள் பல, இதுவரை யாராலும் கூறப்பெறாதவை. சீர்திருத்த வானில் பெருமானார் ஒரு சூரியன். அவரை எட்டிப்பிடித்தல் இயலாது. எடுத்துக் காட்டாக ஒன்று கூறுவோம். கணவன் இறந்தால் மனைவி தாலி வாங்க வேண்டாம் என்பது பெருமானார் கூறிய சீர்திருத்தங்களுள் ஒன்று.

இத்தகைய சீர்திருத்தங்களைச் சொன்னவர் வேறு யார்? பெருமானார் சாதாரண சீர்திருத்தவாதி அல்லர். சீர்திருத்தவாதிகளுக் கெல்லாம் தலைச்சிறந்த சீர்திருத்தவாதி.

Koviloor Digital Library

அருட்கவிஞர்

வள்ளற்பெருமானார் அருட் கவிஞர் என்பதைப் பலவாறு எடுத்துச் சொல்லவும் வேண்டுமோ? அதற்கு அவர்அருளிய திருஅருட்பா வொன்று போதாதோ?

அருள்ஞானி

வள்ளற்பெருமானார் அருள்ஞானி என்பதற்குப் பற்பல பகர்தல் வேண்டுமோ? திருஅருட்பிரகாச வள்ளலார் என்று அவர் பெற்ற பேரொன்றும் போதாதோ?

பொதுவாக, நூல்செய்ய வல்லார் உரைசெய்ய வல்லாராயிருப்பதில்லை. உரைசெய்ய வல்லார் நூல்செய்ய வல்லாராயிருப்பதில்லை. செய்யுள் வல்லார் உரைநடை வல்லாரா யிருப்பதில்லை. உரைநடை வல்லார் செய்யுள் வல்லாராயிருப்பதில்லை. இயல் வல்லார் இசை வல்லாரா யிருப்பதில்லை. இசைவல்லார் இயல் வல்லாராயிருப்ப தில்லை. இலக்கியம் வல்லார் இலக்கணம் வல்லாராயிருப்ப தில்லை. இலக்கணம் வல்லார் இலக்கியம் வல்லாராயிருப்ப தில்லை. சமய வல்லார் இலக்கண இலக்கிய வல்லாராயிருப்ப தில்லை. இலக்கண விலக்கியம் வல்லார் சமயநூல் வல்லாரா யிருப்பதில்லை. இலக்கணவிலக்கியம் வல்லாரா யிருப்போர், அவற்றைப் பாடஞ்சொல்ல வல்லாராயிருப்பதில்லை. சமயநூல் வல்லாராயிருப்போர் அவற்றைப் பாடஞ் சொல்ல வல்லாராயிருப்பதில்லை. எழுத்து வல்லாராயிருப்போர் பேச்சு வல்லாரா யிருப்பதில்லை. பேச்சுவல்லார் எழுத்து வல்லாரா யிருப்பதில்லை. அருளியல் வல்லார் உலகியல் வல்லாரா யிருப்பதில்லை. உலகியல் வல்லார் அருளியல் வல்லாரா யிருப்பதில்லை. இவ்வாறு ஒன்றில் வல்லார் பிறிதொன்றில் வல்லாரல்ல ராதலையே யாண்டும் காண்கிறோம். அன்றும் காண்கிறோம். இன்றும் காண்கிறோம். சென்ற நூற்றாண்டிலே பெருமானார் காலத்திலே நூல் செய்தல், உரைசெய்தல், பாடஞ்சொல்லுதல், பதிப்பித்தல் என்னும் துறைகளுள் ஒவ்வொன்றில் வல்லாரே பலராக இருந்தனர். இயற்றமிழாசிரியர் என்றே சிலர் வழங்க வள்ளற்பெருமானார் ஒருவரே செய்யுள் நூல் செய்தல், உரைநடை செய்தல், செய்யுள் நூல்களுக்கு உரை செய்தல், பாடஞ்சொல்லல், பதிப்பித்தல் எனும் பலதுறைகளிலும் வல்லாராய் மொழிப்புலமை மட்டுமே யன்றி இசை மருத்துவம் முதலிய கலைப்புலமைகளிலும் வல்லாராய் இவையனைத்தினுக்கும் மேற்பட்ட அருட்புலமை முற்றினவராய்ப் பன்முக ஞானத்தோடு ஒப்பாரும் மிக்காருமின்றி விளங்குகின்றார்.

பலவற்றில் முதன்மையும் தனிச்சிறப்பும்

முற்கூறியவாறு நூலாசிரியராய், உரையாசிரியராய், பதிப்பாசிரியராய், பத்திரிகாசிரியராய், போதகாசிரியராய், ஞானாசிரியராய், வியாக்கியானகர்த்தராய், சித்த மருத்துவராய், சீர்திருத்தவாதியாய், அருட்கவிஞராய், அருண்ஞானியாய்ப் பன்முகஞானத்தோடு விளங்கிய பெருமானார் பலவற்றில் முதல்வராயும் தனிச்சிறப் புடையவராயும் திகழ்கின்றார்கள்.

Koviloor Digital Library

வள்ளற்பெருமானாரின் அருளிச்செயல்கள்

1. பாடல்கள் – திருஅருட்பா – ஆறு திருமுறைகளாக வகுக்கப் பெற்றவை
2. பாடல்கள் – ஆறு திருமுறைகளிலும் சேராதவை
3. விண்ணப்பங்கள் – இறைவனிடத்துச்செய்துகொண்டவை (உரைநடை)
4. கடிதங்கள் – தம் கைப்பட எழுதியவை
5. கட்டளைகள் – தாம் நிறுவிய நிலையங்களின் நடை முறைகள் பற்றி எழுதியவை
6. பத்திரிகைகள் – சுற்றறிக்கைகளும், அழைப்பிதழ்களும்
7. உபதேசங்கள் – உடன் கூட்டத்தாராலும் கேட்டவர்களாலும் எழுதி வைக்கப்பட்டுள்ள குறிப்புகள்
8. உரைநடை நூல்கள் –
   1. மனுமுறை கண்டவாசகம்
   2. ஜீவகாருண்ய ஒழுக்கம்.
9. உரைகள் –
   1. தமிழ் என்ற சொல்லுக்கு வரைந்த உரை
   2. பெரியபுராணம் முதற் பாடல் முதற் சொல்லாகிய உலகெலாம் என்பதற்கு வரைந்த விளக்க உரை.
   3. ஒழிவிலொடுக்கப்பாயிரவிருத்தி.
   4. தொண்ட மண்டல சதகத்தின் நூற் பெயரிலக்கணமும், கடவுள் வாழ்த்துப் பாடலுக்குச் செய்த உரையும்.
   5. பொன்வண்ணத் தந்தாதியின் இருபத்தி இரண்டாம் பாடலுக்குச் செய்த உரை.
   6. வேதாந்த தேசிகரின் குறட்பா ஒன்றுக்கு வரைந்த உரை.
10. பதிப்பித்த நூல்கள் –
    1. ஒழிவிலொடுக்கம் (1851)
    2. தொண்டமண்டல சதகம் (1855)
    3. சின்மய தீபிகை (1857)
11. பிற – பிறரது நூல்களுக்கும் பதிப்புகளுக்கும் வழங்கிய சாற்றுக்கவிகள், மருந்துச் சரக்குகளின் குண அட்டவணை முதலியன.

மகாமந்திரம்

அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி

Koviloor Digital Library

வள்ளற்பெருமானாரின் சன்மார்க்க பெருநெறிகள்

1. கடவுள் ஒருவரே. அவர் அருட்பெருஞ்ஜோதி ஆண்டவர்
2. எல்லா உயிர்களும் நமக்குச் சகோதரர்களே என்று உணர்க
3. சாதி, சமய, மத, இன வேறுபாடுகளைத் தவிர்த்தல்
4. சிறு தெய்வ வழிபாட்டினையும், பலியிடுவதனையும் விலக்குக
5. புலால் உண்ணற்க : எவ்வுயிரையும் கொலை செய்யற்க
6. ஜீவகாருணிய ஒழுக்கமே பேரின்ப வீட்டின் திறவுகோல்
7. இறந்தவர்களை எரிக்காது சமாதி வைக்க வேண்டும். கருமாதி, திதி, சடங்குகளைத் தவிர்த்தல் வேண்டும்.
8. ஜீவகாருணிய, இந்திரிய, கரண ஜீவ, ஆன்ம, ஒழுக்கங்களைப் பின்பற்ற வேண்டும்.
9. உண்மை அன்பால் அருட்பெருஞ்ஜோதியை வழிபாடு செய்து அருள் ஒளியை நமக்குள் காண வேண்டும்.
10. உயிர்க்குலமே கடவுள் விளங்கும் ஆலயமாகக் கருதி உயிர்கட்கு தொண்டு செய்ய வேண்டும்.
11. என்மார்க்கம் இறப்பொழிக்கும் சன்மார்க்கம் – சாகாதவனே சன்மார்க்கி

மகாமந்திரம்

அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி

Koviloor Digital Library

ஆறாம் திருமுறையின் சிறப்பு

முதல் ஐந்து திருமுறைகள்	பொது
ஆறாம் திருமுறை	சிறப்பு
முதல் ஐந்து திருமுறைகள்	பூர்வம்
ஆறாம் திருமுறை	உத்தரம்
முதல் ஐந்து திருமுறைகள்	ELEMENTARY
ஆறாம் திருமுறை	ADVANCED
முதல் ஐந்து திருமுறைகள்	சமயஞ் சார்ந்தவை
ஆறாம் திருமுறை	சமயாதீதம்
முதல் ஐந்து திருமுறைகள்	தோத்திரம் மிகுதி
ஆறாம் திருமுறை	சாத்திரக் கருத்துகள் மிகுதி
முதல் ஐந்து திருமுறைகள்	சாதனம்
ஆறாம் திருமுறை	சாத்தியம் – அனுபவம்
முதல் ஐந்து திருமுறைகள்	முத்தி தருவது
ஆறாம் திருமுறை	சித்தி தருவது
முதல் ஐந்து திருமுறைகள்	உருவ வழிபாடு
ஆறாம் திருமுறை	ஒளி வழிபாடு
முதல் ஐந்து திருமுறைகள்	சமய, சன்மார்க்கம்
ஆறாம் திருமுறை	சமரச சுத்த சன்மார்க்கம்
முதல் ஐந்து திருமுறைகள்	சரியை கிரியை யோக ஞான அனுபவம்
ஆறாம் திருமுறை	அருள் அனுபவம்
முதல் ஐந்து திருமுறைகள்	அடி, நடு, தொடக்கநிலை
ஆறாம் திருமுறை	முடி. முடிந்தநிலை

அருட்பெருஞ்ஜோதி அகவலின்சிறப்பு

திருமுறை ஆறினுள்ளும் சிறந்தது ஆறாம் திருமுறை

அதனுள்ளும் சிறந்தது அருட்பெருஞ்ஜோதி அகவல்

திருஅருட்பா ஒரு ஞான உடம்பு எனின்

அதன் தலை (முகம்) ஆறாம் திருமுறை

அம்முகத்திற் கண் அருட்பெருஞ்ஜோதி அகவல்

அக்கண்ணுள் மணி அருட்பெருஞ்ஜோதி மந்திரம்

Koviloor Digital Library

ஆறாம் திருமுறையிற் காணும் அரும்பொருள்கள்

சாகாத்தலை – வேகாக்கால் – போகாப்புனல்
சாகாக்கல்வி
மரணமிலாப் பெருவாழ்வு
செத்தாரை எழுப்புதல்
சமாதி வற்புறுத்தல்
தத்பதம் – தொம்பதம் – அசிபதம், தத்துவமசிநிலை
தத்துவநிக்கிரகம், தத்துவவெற்றி
திருக்கதவந்திறத்தல், திரைவிலகல், அமுதசித்தி
ஏமசித்தி (பொன்விளைவு)
சத்து, சித்து, ஆனந்தம்
இயற்கைஉண்மை, இயற்கைவிளக்கம், இயற்கைஇன்பம்
நயனதீக்கை, பரிசதீக்கை, வாசகதீக்கை, திருவடிதீக்கை
அத்தமத்தக சையோக தீக்கை
சிலம்பொலி கேட்டல்
ஓங்காரம், எட்டும்இரண்டும், அகரஉகரம், சிகரவகரம், பஞ்சாக்கரம்
சாக்கிரம் சொப்பனம் சுழுத்தி துரியம் துரியாதீதம்
சிவதுரியம் குருதுரியம் பரதுரியம்
புருவமத்திய அனுபவம்
இரவுபகலற்ற இடம், வரவுபோக்கற்ற நிலை
ஆறந்தம்
உடல்பொருள் ஆவிகளை மாற்றிக்கொள்ளல்
கற்பூர அனுபவம்
சுத்ததேகம், பிரணவதேகம், ஞானதேகம்
சிவமயமாதல் (கடவுள்நிலை யறிந்து அம்மயமாதல்)
ஐந்தொழிலாற்றல்
ஆன்மநேயஒருமைப்பாடு
அகவினம், புறவினம், புலை கொலை தவிர்த்தல்
சாதி சமயங்களைக் கண்டித்தல்
மூடப் பழக்க வழக்கங்களைக் கண்டித்தல்
ஜீவகாருண்யத்தை வற்புறுத்தல்
கடவுள் ஒருவரே எனல்
சிறுதெய்வ வழிபாட்டைக் கண்டித்தல்
நாத்திகத்தைக் கண்டித்தல்

Koviloor Digital Library

ஆறாம் திருமுறையிற் காணும் அருந்தொடர்கள்

கொல்லா நெறியே குருவருள்நெறி
கருணையும் சிவமே பொருள்
உயிரெலாம் ஒருநீ திருநடம் புரியும் ஒருதிருப்பொது
உயிர்க்கொலையும்புலைப்பொசிப்பும் உடையவர்கள் எல்லாம்
உறவினத்தார் அல்லர் அவர் புறஇனத்தார்
ஆருயிர்கட்கெல்லாம் நான் அன்புசெயல் வேண்டும்
என்போல் இவ்வுலகம் பெறுதல் வேண்டுவனே
எல்லா உலகமும் வாழ்க
எல்லா உயிர்களும் இன்புற்று வாழ்க
ஒருமையின் உலகெலாம் ஓங்குக
ஒத்தாரும் உயர்ந்தாரும் தாழ்ந்தாரும் எவரும்
ஒருமையுளராகி உலகியல்நடத்தல் வேண்டும்
சாதியும் மதமும் சமயமும் பொய்
நால்வருணம் ஆசிரமம் ஆசாரம் முதலா நவின்ற கலைச்
சரிதமெல்லாம் பிள்ளைவிளையாட்டே
மேல்வருணம் தோல்வருணம் கண்டறிவார் இலை
எங்குலம் எம்மினம் என்பது தொண்ணூற்றா றங்குலம்.
எம்மத நிலையும்...............................சம்மதம்
கண்மூடி வழக்கமெலாம் மண்மூடிப் போக
கருணைஇலா ஆட்சி கடுகி ஒழிக
நாத்திகம் சொல்கின்றவர்தம் நாக்கு முடைநாக்கு
மரணமிலாப் பெருவாழ்வில் வாழ்ந்திடலாம் கண்டீர்
என்மார்க்கம் இறப்பொழிக்கும் சன்மார்க்கம் தானே
பரன் அளிக்கும் தேகம் இது சுடுவது அபராதம்

Koviloor Digital Library

அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி

பதிக அட்டவணை

வ. எண்.	பதிகம்	பாடல்	பக்கம்
1	பரசிவ வணக்கம்	3	1
2	அருட்பெருஞ்ஜோதி அகவல்	1	2
3	அருட்பெருஞ்ஜோதி அட்டகம்	8	43
4	பதி விளக்கம்	13	45
5	சிவபதி விளக்கம்	10	48
6	ஆற்றாமை	10	49
7	நான் ஏன் பிறந்தேன்	10	51
8	மாயை வலிக்கழுங்கல்	10	53
9	முறையீடு	10	55
10	அடியார் பேறு	20	58
11	ஆன்ம விசாரத்து அழுங்கல்	10	60
12	அவா அறுத்தல்	13	62
13	திருவருள் விழைதல்	20	64
14	சிற்சபை விளக்கம்	10	68
15	திருவடி முறையீடு	10	71
16	தற்சுதந்தரம் இன்மை	10	72
17	அத்துவித ஆனந்த அனுபவ இடையீடு	10	74
18	திருக்கதவந் திறத்தல்	10	76
19	பிள்ளைச்சிறு விண்ணப்பம்	24	78
20	பிள்ளைப்பெரு விண்ணப்பம்	133	82
21	சுத்த சன்மார்க்க வேண்டுகோள்	11	99
22	ஆன்ம தரிசனம்	10	101
23	சிவ தரிசனம்	11	103
24	வாதனைக்கழிவு	20	105
25	அனுபோக நிலயம்	10	108
26	தற்போத இழப்பு	10	110
27	மாயையின் விளக்கம்	10	112
28	அபயத் திறன்	28	113
29	பிரிவாற்றாமை	10	117
30	பிரியேன் என்றல்	11	119
31	திருவருட்பேறு	10	121
32	அருட்பெருஞ்ஜோதி என் ஆண்டவர்	10	124
33	திருமுன் விண்ணப்பம்	10	126
34	இறை எளிமையை வியத்தல்	10	128
35	அபயம் வேண்டுதல்	10	130

Koviloor Digital Library

வ. எண்.	பதிகம்	பாடல்	பக்கம்
36	உண்மை கூறல்	10	132
37	அருள் விளக்க மாலை	100	134
38	வரம்பில் வியப்பு	10	156
39	திருவடிப் புகழ்ச்சி	10	158
40	கண்கொளாக்காட்சி	10	160
41	காட்சிக் களிப்பு	10	163
42	கண்டு கனிந்து கலந்து கொளல்	10	165
43	இறை திருக்காட்சி	30	168
44	திருவடி நிலை	10	175
45	அச்சோப் பத்து	10	176
46	அருட்ஜோதி நிலை	10	179
47	பேரானந்த நிலை	10	181
48	ஆண்டருளிய அருமையை வியத்தல்	10	182
49	இறைவனை ஏத்தும் இன்பம்	10	184
50	திருநடப் புகழ்ச்சி	10	185
51	பெறாப்பேறு	10	188
52	பொதுநடம்	20	190
53	திருவருட்பெருமை	10	193
54	அருள் ஆரமுதப்பேறு	13	194
55	உபதேச உண்மை	10	196
56	இறை இன்பக் குழைவு	10	197
57	அனுபவ நிலை	8	200
58	கைம்மாறின்மை	10	201
59	வேண்டுகோள்	10	202
60	உலப்பில் இன்பம்	10	204
61	செய்பணி வினவல்	12	205
62	ஆற்றமாட்டாமை	10	207
63	திருப்பள்ளி எழுச்சி	10	208
64	திரு உந்தியார்	10	210
65	அடைக்கலம் புகுதல்	11	212
66	பற்றறுத்தல்	11	213
67	சிற்சத்தி துதி	10	216
68	பிரிவாற்றாமை	10	217
69	ஆனந்த அனுபவம்	12	219
70	சிவபுண்ணியப்பேறு	10	220
71	அந்தோ பத்து	11	222
72	சன்மார்க்க நிலை	11	223
73	சிவானந்தப் பற்று	10	224
74	தலைவி தோழிக்கு உரைத்தல்	11	226
75	நற்றாய் கூறல்	10	227

Koviloor Digital Library

வ. எண்.	பதிகம்	பாடல்	பக்கம்
76	பாங்கி தலைவி பெற்றி உரைத்தல்	10	230
77	தலைவி தலைவன் செயலைத் தாய்க் குரைத்தல்	10	232
78	தலைவி வருந்தல்	24	235
79	நற்றாய் செவிலிக்குக் கூறல்	10	240
80	திருவடிப் பெருமை	45	243
81	தோழிக் குரிமை கிளத்தல்	14	253
82	அருட்பெருஞ்ஜோதி அடைவு	13	256
83	அடிமைப்பேறு	10	258
84	உத்தரஞான சிதம்பர மாலை	11	259
85	திருவருட்பேறு	10	261
86	நெஞ்சோடுநேர்தல் (தில்லையும் பார்வதிபுரமும்)	9	262
87	கைம்மாறின்மை	20	263
88	பாமாலை ஏற்றல்	12	266
89	திருஅருட் கொடை	10	268
90	உற்றது உரைத்தல்	10	269
91	அனுபவ சித்தி	11	270
92	இன்பத்திறன்	10	272
93	சிவயோக நிலை	10	274
94	அழிவுறா அருள்வடிவப்பேறு	10	276
95	பேரருள் வாய்மையை வியத்தல்	10	277
96	பொன் வடிவப்பேறு	16	278
97	நடராஜபதி மாலை	34	281
98	சற்குரு மணிமாலை	25	295
99	தத்துவ வெற்றி	20	300
100	பேறடைவு	10	305
101	உய்வகை கூறல்	12	307
102	இறைவன் வரவு இயம்பல்	10	309
103	தலைவி கூறல்	10	311
104	உலகர்க்கு உய்வகை கூறல்	10	314
105	புனித குலம் பெறுமாறு புகலல்	10	316
106	சுத்த சிவநிலை	47	319
107	ஞானசரியை (வாய்ப்பறை ஆர்த்தல்)	28	325
108	சமாதி வற்புறுத்தல்	10	331
109	உலகப்பேறு	10	334
110	தனித்திரு அலங்கல்	162	335
	கண்ணிகள்		
111	நெஞ்சொடு கிளத்தல்	10	365
112	மெய்யருள் வியப்பு	101	366
113	அம்பலவாணர் வருகை	105	379

Koviloor Digital Library

வ. எண்.	பதிகம்	பாடல்	பக்கம்
114	அம்பலவாணர் அணைய வருகை	12	388
115	அம்பலவாணர் ஆட வருகை	12	391
116	ஆடேடிபந்து	11	394
117	ஞானமருந்து	34	396
118	சிவசிவ ஜோதி	33	401
119	ஜோதியுள் ஜோதி	30	405
120	அஞ்சாதே நெஞ்சே அஞ்சாதே	23	409
121	இது நல்ல தருணம்	6	411
122	என்ன புண்ணியம் செய்தேனோ	9	412
123	வருவார் அழைத்து வாடி	5	413
124	பெருவழக்கு	5	414
125	ஆடிய பாதம்	17	415
126	அபயம் அபயம் அபயம்	16	417
127	அற்புதம் அற்புதமே	9	419
128	ஆணிப்பொன்னம்பலக் காட்சி	33	420
129	அக்கச்சி	4	424
130	ஊதூது சங்கே	17	424
131	சின்னம் பிடி	10	427
132	கண்புருவப் பூட்டு	11	428
133	பிரபஞ்ச வெற்றி (முரசறைதல்)	1	430
	நாமாவளி		
134	அம்பலத்தரசே	88	430
135	போகம் சுகபோகம்	2	437
136	சூதுமன்னு மிந்தையே	38	437
137	நடுநாடி	3	440
138	தங்குறு வம்பு	12	441
139	பொதுநிலை அருள்வது	3	442
140	வான சிற்கன	3	442
141	ஓதவடங்காது	2	443
142	விரைசேர் சடையாய்	4	443
143	பசியாத அமுதே	15	444
144	நீடிய வேதம்	8	446
145	வேத சிகாமணியே	10	447
146	பதநம்புறு	3	448
147	அனுபவமாலை	100	450
148	சத்தியவார்த்தை	2	472
149	சத்திய அறிவிப்பு	4	472
150	ஜோதி ஜோதி ஜோதி	3	474

Koviloor Digital Library

வ. எண்.	பதிகம்	பாடல்	பக்கம்
	பல்வகைய தனிப்பாடல்கள்		
1.	**குடும்ப கோஷம்**		
	காப்பு	4	476
	அவையடக்கம்	1	477
	1. குருதரிசனப் படலம்	53	477
	2. முயற்சிப் படலம்	58	486
2.	**குருட்டாட்டம்**		
	1. குருட்டு மாணாக்கர் புல்லொழுக்கம்	14	498
	2. குருட்டு ஆசிரியர் புல்லொழுக்கம்	5	501
3.	**குடும்ப கோரம்**	1	503
4.	**திருமுக அகவல்**	1	517
5.	மதுரை திருஞானசம்பந்த சுவாமிகள் ஆதீனம் குருமகா சந்நிதானத்திற்கு வரைந்த திருமுகப்பாசுரம்	1	519
6.	திருவாவடுதுறை ஆதீனம் வித்துவான் தாண்டவராயத் தம்பிரான் சுவாமிகளுக்கு வரைந்த திருமுகப்பாசுரம்	1	523
7.	அன்பர்களுக்கு எழுதிவிடுத்த திருமுகப்பாடல்கள்	7	527
8.	**சாற்றுக் கவிகள்**		
	1. நிட்டானுபூதி உரைக்கு அருளியது	1	530
	2. சிதம்பர புராணப் பதிப்புக்கு அருளியது	1	530
	3. வேதநாயகம் பிள்ளை நீதிநூலுக்கு அருளியது	1	534
	4. தேவநாத பிள்ளை தோத்திரங்களுக்கு அருளியது	1	535
	5. முத்துசாமி முதலியார் தோத்திரங்களுக்கு அருளியது	1	535
	பின் இணைப்புகள்		
1.	ஆதாரப் பதிப்புகளின் முகப்பேடுகள்		536
2.	பாட்டு முதற்குறிப்பு அகராதி		541

Koviloor Digital Library

[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]

[illegible]

[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]

[illegible]

[illegible]

Koviloor Digital Library

அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி

Koviloor Digital Library

ஆசிரிய வணக்கம்

வள்ளற்பெருமானாரின் மாணாக்கர்

புராணிகர் பொன்னேரி சுந்தரம் பிள்ளை

இயற்றியது

எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்.

திருச்சிற்றம்பலம்

தாய்மலர்ந்த பெருங்கருணைத் தத்துவனார் எங்கள்
    சனிப்பிறப்பை ஒறுத்துவினைத் தனித்தொடக்கை அறுக்க
ஏய்மலர்ந்த கருணைதிரு மேனிகொண்ட காலத்(து)
    எண்தோளோ இருதோளோ முக்கண்ணோ இருமை
யாய்மலர்ந்த அருட்கண்ணோ நாமம்எழுத்(து) ஐந்தோ
    அன்றிஅருள் இராமலிங்க அற்புதப்பொற் பெயரோ
வாய்மலர்ந்த(து) ஈரிரண்டு மறையோமூ விரண்டு
    மாமுறையோ வகுத்துரையீர் மயக்கொழிமா தவரே.

திருச்சிற்றம்பலம்

நூற்சிறப்பு

மதுரை திருஞானசம்பந்த சுவாமிகள் ஆதீனம்

சிதம்பர சுவாமிகள்

அருளியது

நேரிசை வெண்பா

திருச்சிற்றம்பலம்

தண்ணீர் விளக்கெரித்த தன்மைபோன் மாந்தர்கள்தம்
உண்ணீர் சிவம்விளங்க ஓங்குவிக்கும் - கண்மணியாம்
நங்கள் இராமலிங்கன் நல்லஅருட் பாமுறையைத்
துங்கமுற மாணா தொழு.

திருச்சிற்றம்பலம்.

Koviloor Digital Library

அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி

திருஅருட்பா

ஆறாம் திருமுறை

1. பரசிவ வணக்கம்

திருச்சிற்றம்பலம்

குறள் வெண்பா

1 எல்லாம் செயல்கூடும் என்ஆணை அம்பலத்தே
எல்லாம்வல் லான்தனையே* ஏத்து. 1

எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

2 திருவிளங்கச் சிவயோக சித்திஎலாம் விளங்கச்
சிவஞான நிலைவிளங்கச் சிவானுபவம் விளங்கத்
தெருவிளங்கு திருத்தில்லைத் திருச்சிற்றம்பலத்தே
திருக்கூத்து விளங்க ஒளிசிறந்த திருவிளக்கே
உருவிளங்க உயிர்விளங்க உணர்ச்சியது விளங்க
உலகமெலாம் விளங்கஅருள் உதவுபெருந் தாயாம்
மருவிளங்கு குழல்வல்லி மகிழ்ந்து ஒருபால் விளங்க
வயங்குமணிப் பொதுவிளங்க வளர்ந்தசிவக் கொழுந்தே. 2

எழுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

3 அன்பெனும் பிடியுள் அகப்படும் மலையே
அன்பெனும் குடில்புகும் அரசே
அன்பெனும் வலைக்குட் படுபரம்பொருளே
அன்பெனும் கரத்தமர் அமுதே
அன்பெனும் கடத்துள் அடங்கிடும் கடலே
அன்பெனும் உயிர்ஒளிர் அறிவே
அன்பெனும் அணுவுள் அமைந்தபே ரொளியே
அன்புருவாம் பரசிவமே! 3

திருச்சிற்றம்பலம்

---

* தாளைஏத்து – முதற் பதிப்பு, பொன்னேரி சுந்தரம் பதிப்பு.

Koviloor Digital Library

2. அருட்பெருஞ்ஜோதி அகவல்

உ

திருச்சிற்றம்பலம்

நிலைமண்டில ஆசிரியப்பா

4 அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி
அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி
அருட்சிவ நெறிசார் அருட்பெரு நிலைவாழ்
அருட்சிவ பதியாம் அருட்பெருஞ்ஜோதி
ஆகம முடிமேல் ஆரண முடிமேல்
ஆகநின்று ஓங்கிய அருட்பெருஞ்ஜோதி
இகநிலைப் பொருளாய்ப் பரநிலைப் பொருளாய்
அகமறப் பொருந்திய அருட்பெருஞ்ஜோதி
ஈனம்இன் றிகபரத்து இரண்டின்மேற் பொருளாய்
ஆனலின் றோங்கிய அருட்பெருஞ்ஜோதி
உரைமனம் கடந்த ஒருபெரு வெளிமேல்
அரைசு செய்து ஓங்கும் அருட்பெருஞ்ஜோதி
ஊக்கமும் உணர்ச்சியும் ஒளிதரும் ஆக்கையும்
ஆக்கமும் அருளிய அருட்பெருஞ்ஜோதி
எல்லையில் பிறப்பெனும் இருங்கடல் கடத்திஎன்
அல்லலை நீக்கிய அருட்பெருஞ்ஜோதி
ஏறா நிலைமிசை ஏற்றி என்தனக்கே
ஆறாறு காட்டிய அருட்பெருஞ்ஜோதி
ஐயமும் திரிபும் அறுத்து எனது உடம்பினுள்
ஐயமும் நீக்கிய அருட்பெருஞ்ஜோதி
ஒன்றென இரண்டென ஒன்றிரண்டென இவை
அன்றென விளங்கிய அருட்பெருஞ்ஜோதி
ஓதாது உணர்ந்திட ஒளி அளித்து எனக்கே
ஆதாரமாகிய அருட்பெருஞ்ஜோதி
ஔவியம் ஆதி ஓர் ஆறுந் தவிர்த்தபேர்
அவ்வியல் வழுத்தும் அருட்பெருஞ்ஜோதி
திருநிலைத் தனிவெளி சிவவெளி எனும் ஓர்
அருள்வெளிப் பதிவளர் அருட்பெருஞ்ஜோதி
சுத்த சன்மார்க்க சுகத்தனி வெளிஎனும்
அத்தகைச் சிற்சபை அருட்பெருஞ்ஜோதி
சுத்த மெய்ஞ்ஞான சுகோதய வெளிஎனும்
அத்து விதச்சபை அருட்பெருஞ்ஜோதி
தூய கலாந்த சுகந்தரு வெளிஎனும்
ஆய சிற்சபையில் அருட்பெருஞ்ஜோதி
ஞானயோகாந்த நடத்திரு வெளிஎனும்
ஆனியில் சிற்சபை அருட்பெருஞ்ஜோதி

Koviloor Digital Library

விமலபோதாந்தமா மெய்ப்பொருள் வெளிஎனும்
அமல சிற்சபையில் அருட்பெருஞ்ஜோதி
பெரிய நாதாந்தப் பெருநிலை வெளிஎனும்
அரிய சிற்றம்பலத்து அருட்பெருஞ்ஜோதி
சுத்த வேதாந்தத் துரியமேல் வெளிஎனும்
அத்தகு சிற்சபை அருட்பெருஞ்ஜோதி
சுத்த சித்தாந்த சுகப்பெரு வெளிஎனும்
அத்தனிச் சிற்சபை அருட்பெருஞ்ஜோதி
தகரமெய்ஞ்ஞானத் தனிப்பெரு வெளிஎனும்
அகர நிலைப்பதி அருட்பெருஞ்ஜோதி
தத்துவா தீத தனிப்பொருள் வெளிஎனும்
அத்திரு அம்பலத்து அருட்பெருஞ்ஜோதி
சச்சிதானந்தத் தனிப்பர வெளிஎனும்
அச்சியல் அம்பலத்து அருட்பெருஞ்ஜோதி
சாகாக் கலைநிலை தழைத்திடு வெளிஎனும்
ஆகாயத் தொளிர் அருட்பெருஞ்ஜோதி
காரண காரியம் காட்டிடு வெளிஎனும்
ஆரணச் சிற்சபை அருட்பெருஞ்ஜோதி
ஏகம் அனேகம் எனப்பகர் வெளிஎனும்
ஆகமச் சிற்சபை அருட்பெருஞ்ஜோதி
வேதஆகமங்களின் விளைவுகட்கு எல்லாம்
ஆதாரமாம் சபை அருட்பெருஞ்ஜோதி
என்றாதிய சுடர்க்கு இயல்நிலையாய் அது
அன்றாம் திருச்சபை அருட்பெருஞ்ஜோதி
சமயம் கடந்த தனிப்பொருள் வெளியாய்
அமையும் திருச்சபை அருட்பெருஞ்ஜோதி
முச்சுடர் களும்ஒளி முயங்குற அளித்தருள்
அச்சுடராம் சபை அருட்பெருஞ்ஜோதி
துரியமுங் கடந்த சுக பூரணம்தரும்
அரிய சிற்றம்பலத்து அருட்பெருஞ்ஜோதி
எவ்வகைச் சுகங்களும் இனிதுற அளித்தருள்
அவ்வகைச் சிற்சபை அருட்பெருஞ்ஜோதி
இயற்கை உண்மையதாய் இயற்கையின்பமுமாம்
அயர்ப்பிலாச் சிற்சபை அருட்பெருஞ்ஜோதி
சாக்கிரா தீதத் தனிவெளியாய் நிறைவு
ஆக்கிய சிற்சபை அருட்பெருஞ்ஜோதி
சுட்டுதற்கு அரிதாம் சுகாதீத வெளிஎனும்
அட்டமேற் சிற்சபை அருட்பெருஞ்ஜோதி
நவந்தவிர் நிலைகளும் நண்ணும் ஓர்நிலையாய்
அவந்தவிர் சிற்சபை அருட்பெருஞ்ஜோதி

Koviloor Digital Library

உபய பக்கங்களும் ஒன்றெனக் காட்டிய
அபய சிற்சபையில் அருட்பெருஞ்ஜோதி
சேகர மாம்பல சித்திநிலைக்கு எலாம்
ஆகர மாம்சபை அருட்பெருஞ்ஜோதி
மனாதிகட்கு அரிய மதாதீத வெளியாம்
அனாதி சிற்சபையில் அருட்பெருஞ்ஜோதி
ஓதிநின்று உணர்ந்துணர்ந்து உணர்தற்கு அரிதாம்
ஆதி சிற்சபையில் அருட்பெருஞ்ஜோதி,
வாரமும் அழியா வரமும் தருந்திரு
ஆரமு தாம்சபை அருட்பெருஞ்ஜோதி
இழியாப் பெருநலம் எல்லாம் அளித்தருள்
அழியாச் சிற்சபை அருட்பெருஞ்ஜோதி
கற்பம் பலபல கழியினும் அழிவுறா
அற்புதம் தரும்சபை அருட்பெருஞ்ஜோதி
எனைத்தும் துன்புஇலா இயலளித்து எண்ணிய
அனைத்தும் தருஞ்சபை அருட்பெருஞ்ஜோதி
பாணிப் பிலதாய்ப் பரவினோர்க்கு அருள்புரி
ஆணிப்பொன் அம்பலத்து அருட்பெருஞ்ஜோதி
எம்பலம் எனத்தொழுது ஏத்தினோர்க்கு அருள்புரி
அம்பலத்து ஆடல்செய் அருட்பெருஞ்ஜோதி
தம்பர ஞான சிதம்பரம் எனும்ஓர்
அம்பரத்து ஓங்கிய அருட்பெருஞ்ஜோதி
எச்சபை பொதுஎன இயம்பினர் அறிஞர்கள்,
அச்சபை இடங்கொளும் அருட்பெருஞ்ஜோதி
வாடுதல் நீக்கிய மணிமன்று இடையே
ஆடுதல் வல்ல அருட்பெருஞ்ஜோதி
நாடகத் திருச்செயல் நவிற்றிடும் ஒருபேர்
ஆடகப் பொது ஒளிர் அருட்பெருஞ்ஜோதி
கற்பனை முழுவதும் கடந்து ஒளிதரும் ஓர்
அற்புதச் சிற்சபை அருட்பெருஞ்ஜோதி
ஈன்ற நற்றாயினும் இனிய பெருந்தயவு
ஆன்ற சிற்சபையில் அருட்பெருஞ்ஜோதி
இன்புறுநானுளத் தெண்ணியாங்கு எண்ணியாங்கு
அன்புறத் தருசபை அருட்பெருஞ்ஜோதி
எம்மையும் என்னைவிட்டு இறையும் பிரியாது
அம்மை அப்பனுமாம் அருட்பெருஞ்ஜோதி
பிறிவுற்று அறியாப் பெரும்பொரு ளாய்என்
- அறிவுக்கு அறிவாம் அருட்பெருஞ்ஜோதி
சாதியும் மதமும் சமயமும் காணா
ஆதி அநாதியாம் அருட்பெருஞ்ஜோதி

Koviloor Digital Library

தனுகர ணாதிகள் தாம்கடந்து அறியும் ஓர்
அனுபவம் ஆகிய அருட்பெருஞ்ஜோதி
உனும் உணர்வு உணர்வாய் உணர்வெலாம் கடந்த
அனுபவா தீத அருட்பெருஞ்ஜோதி
பொதுவுணர்வு உணரும் போது அலால் பிரித்தே
அது எனில் தோன்றா அருட்பெருஞ்ஜோதி
உளவினில் அறிந்தால் ஒழியமற்று அளக்கின்
அளவினில் அளவா அருட்பெருஞ்ஜோதி
என்னையும் பணிகொண்டு இறவா வரம் அளித்து
அன்னையில் உவந்த அருட்பெருஞ்ஜோதி
ஓதி ஓதாமல் உறவு எனக்கு அளித்த
ஆதியீறு இல்லா அருட்பெருஞ்ஜோதி
படி அடி வான்முடி பற்றினும் தோற்றா
அடிமுடி எனும் ஓர் அருட்பெருஞ்ஜோதி
பவனத்தின் அண்டப் பரப்பின் எங்கெங்கும்
அவனுக்கு அவனாம் அருட்பெருஞ்ஜோதி
திவள் உற்ற அண்டத் திரளின் எங்கெங்கும்
அவளுக்கு அவளாம் அருட்பெருஞ்ஜோதி
மதன் உற்ற அண்ட வரைப்பின் எங்கெங்கும்
அதனுக்கு அதுவாம் அருட்பெருஞ்ஜோதி
எப்பாலுமாய் வெளிஎல்லாம் கடந்து மேல்
அப்பாலும் ஆகிய அருட்பெருஞ்ஜோதி
வல்லதாய் எல்லாம் ஆகிஎல்லாமும்
அல்லதாய் விளங்கும் அருட்பெருஞ்ஜோதி
எப்பொருள் மெய்ப்பொருள் என்பர்மெய்கண்டோர்
அப்பொருள் ஆகிய அருட்பெருஞ்ஜோதி
தாங்கு அகிலாண்ட சராசர நிலை நின்று
ஆங்குற விளங்கும் அருட்பெருஞ்ஜோதி
சத்தர்கள் எல்லாம் தழைத்திட அகம்புறத்து
அத்திசை விளங்கும் அருட்பெருஞ்ஜோதி
சத்திகள் எல்லாம் தழைக்க எங்கெங்கும்
அத்தகை விளங்கும் அருட்பெருஞ்ஜோதி
முந்துறும் ஐந்தொழில் மூர்த்திகள் பலர்க்கும்
ஐந்தொழில் அளிக்கும் அருட்பெருஞ்ஜோதி
பெரிதினும் பெரிதாய்ச் சிறிதினும் சிறிதாய்
அரிதினும் அரிதாம் அருட்பெருஞ்ஜோதி
காட்சியும் காணாக் காட்சியும் அதுதரும்
ஆட்சியும் ஆகிய அருட்பெருஞ்ஜோதி
இன்புறு சித்திகள் எல்லாம் புரிகவென்று
அன்புடன் எனக்கு அருள் அருட்பெருஞ்ஜோதி

Koviloor Digital Library

இறவா வரம் அளித்து என்னை மேல் ஏற்றிய
அறவாழியாம் தனி அருட்பெருஞ்ஜோதி
நான் அந்தம் இல்லா நலம்பெற எனக்கே
ஆனந்தம் நல்கிய அருட்பெருஞ்ஜோதி
எண்ணிய எண்ணியாங்கு இயற்றுக என்றுஎனை
அண்ணி உள் ஓங்கும் அருட்பெருஞ்ஜோதி
மேயினை மெய்ப்பொருள் விளங்கினைநீ அது
ஆயினை என்று அருள் அருட்பெருஞ்ஜோதி
எண்ணிற் செழுந்தேன் இனியதெள்ளமுதுஎன
அண்ணித்து இனிக்கும் அருட்பெருஞ்ஜோதி
சிந்தையில் துன்பொழி சிவம்பெறுகஎனத்தொழில்
ஐந்தையும் எனக்கருள் அருட்பெருஞ்ஜோதி
எங்கெங்கு இருந்துஉயிர் ஏதெது வேண்டினும்
அங்கங்கு இருந்து அருள் அருட்பெருஞ்ஜோதி
சகமுதல் புறப்புறம் தங்கிய அகப்புறம்
அகம்புறம் முற்றுமாம் அருட்பெருஞ்ஜோதி
சிகரமும் வகரமும் சேர்தனி உகரமும்
அகரமும் ஆகிய அருட்பெருஞ்ஜோதி
உபரச வேதியின் உபயமும் பரமும்
அபரமும் ஆகிய அருட்பெருஞ்ஜோதி
மந்தணம் இது என மறுஇலா மதியால்
அந்தணர் வழுத்தும் அருட்பெருஞ்ஜோதி
எம்புயக்கனி என எண்ணுவார் இதய
அம்புயத்து அமர்ந்த அருட்பெருஞ்ஜோதி
செடியறுத் தேதிட தேகமும் போகமும்
அடியருக் கேதரும் அருட்பெருஞ்ஜோதி
துன்பு அறுத்துஒரு சிவதுரிய சுகந்தனை
அன்பருக்கே தரும் அருட்பெருஞ்ஜோதி
பொதுவது சிறப்பது புதியது பழயது என்று
அதுவது வாய்த்திகழ் அருட்பெருஞ்ஜோதி
சேதனப் பெருநிலை திகழ்தரும் ஒருபரை
ஆதனத்து ஓங்கிய அருட்பெருஞ்ஜோதி
ஓமயத் திருவுரு உவப்புடன் அளித்துஎனக்கு
ஆமயத் தடைதவிர் அருட்பெருஞ்ஜோதி
எப்படி எண்ணியது என்கருத்து இங்கு எனக்கு
அப்படி அருளிய அருட்பெருஞ்ஜோதி
எத்தகை விழைந்தன என்மனம் இங்கு எனக்கு
அத்தகை அருளிய அருட்பெருஞ்ஜோதி
இங்குறத்திரிந்து உளம் இளையா வகை எனக்கு
அங்கையில் கனியாம் அருட்பெருஞ்ஜோதி

Koviloor Digital Library

பார்உயப் புரிகெனப்பணித்து எனக்கு அருளிஎன்
ஆருயிர்க்குள் ஒளிர் அருட்பெருஞ்ஜோதி
தேவிஉற்று ஒளிர்தரு திருஉருஉடன் எனது
ஆவியில் கலந்து ஒளிர் அருட்பெருஞ்ஜோதி
எவ்வழி மெய்வழி என்பவே தாகமம்
அவ்வழிஎனக்கு அருள் அருட்பெருஞ்ஜோதி
வையமும் வானமும் வாழ்த்திட எனக்கருள்
ஐயறிவு அளித்த அருட்பெருஞ்ஜோதி
சாமாறு அனைத்தும் தவிர்த்து இங்கு எனக்கே
ஆமாறு அருளிய அருட்பெருஞ்ஜோதி
சத்தியமாம் சிவ சத்தியை யீந்து எனக்கு
அத்திறல் வளர்க்கும் அருட்பெருஞ்ஜோதி
சாவா நிலை இதுதந்தனம் உனக்கே
ஆவா என அருள் அருட்பெருஞ்ஜோதி
சாதியும் மதமும் சமயமும் பொய் என
ஆதியில் உணர்த்திய அருட்பெருஞ்ஜோதி
மயர்ந்திடேல் சிறிதும் மனம் தளர்ந்து அஞ்சேல்
அயர்ந்திடேல் என்றருள் அருட்பெருஞ்ஜோதி
தேசுறத் திகழ்தரு திருநெறிப் பொருள் இயல்
ஆசறத்தெரித்த அருட்பெருஞ்ஜோதி
காட்டிய உலகெலாம் கருணை யால் சித்தியின்
ஆட்டியல் புரியும் அருட்பெருஞ்ஜோதி
எங்குலம் எம்இனம் என்ப தொண்ணூற்றாறு
அங்குலம் என்றருள் அருட்பெருஞ்ஜோதி
எம்மதம் எம் இறை என்ப உயிர்த்திரள்
அம்மதம் என்றருள் அருட்பெருஞ்ஜோதி
கூறிய கருநிலை குலவிய கீழ்மேல்
ஆறியல் என உரை அருட்பெருஞ்ஜோதி
எண்தர முடியாது இலங்கிய பற்பல
அண்டமும் நிறைந்தொளிர் அருட்பெருஞ்ஜோதி
சார் உயிர்க்கு எல்லாம் தாரக மாம்பரை
ஆருயிர்க்கு உயிராம் அருட்பெருஞ்ஜோதி
வாழிநீடூழி வாழியென்று ஓங்குபேர்
ஆழியை அளித்த அருட்பெருஞ்ஜோதி
மாய்ந்தவர் மீட்டும் வருநெறி தந்துஇதை
ஆய்ந்திடு என்றுரைத்த அருட்பெருஞ்ஜோதி
எச்சம் நினைக்கிலை எல்லாம் பெறுகஎன்று
அச்சம் தவிர்த்த என் அருட்பெருஞ்ஜோதி
நீடுகநீயே நீள்உலகு அனைத்தும் நின்று
ஆடுக என்ற என் அருட்பெருஞ்ஜோதி

Koviloor Digital Library

முத்திறல் வடிவமும் முன்னிஆங்கு எய்துறும்
அத்திறல் எனக்கருள் அருட்பெருஞ்ஜோதி
மூவகைச் சித்தியின் முடிபுகள் முழுவதும்
ஆவகை எனக்கருள் அருட்பெருஞ்ஜோதி
கரும சித்திகளின் கலைபல கோடியும்
அரசுற எனக்கருள்அருட்பெருஞ்ஜோதி
யோகசித்திகள் வகை உறுபல கோடியும்
ஆக என்று எனக்கருள் அருட்பெருஞ்ஜோதி
ஞான சித்தியின் வகைநல்விரிவு அனைத்தும்
ஆனி யின்று எனக்கருள் அருட்பெருஞ்ஜோதி
புடைஉறு சித்தியின் பொருட்டே முத்தியை
அடைவது என்று அருளிய அருட்பெருஞ்ஜோதி
முத்தி என்பது நிலைமுன் உறுசாதனம்
அத்தக என்றஎன் அருட்பெருஞ்ஜோதி
சித்திஎன்பது நிலைசேர்ந்த அநுபவம்
அத்திறல் என்ற என் அருட்பெருஞ்ஜோதி
ஏகசிற் சித்தியே இயல்உற அனேகம்
ஆகியது என்ற என் அருட்பெருஞ்ஜோதி
இன்பசித்தியின் இயல்ஏகம் அனேகம்
அன்பருக்கு என்ற என் அருட்பெருஞ்ஜோதி
எட்டு இரண்டு என்பன இயலும் முற்படியென
அட்டநின்று அருளிய அருட்பெருஞ்ஜோதி
இப்படி கண்டனை இனி உறுபடிஎலாம்
அப்படியே எனும் அருட்பெருஞ்ஜோதி
படிமுடி கடந்தனை பார் இதுபார் என
அடிமுடி காட்டிய அருட்பெருஞ்ஜோதி
ஜோதியுட் ஜோதியின் சொருபமே அந்தம்
ஆதி என்று அருளிய அருட்பெருஞ்ஜோதி
இந்த சிற்ஜோதியின் இயல்உறு ஆதி
அந்தம் என்று அருளிய அருட்பெருஞ்ஜோதி
ஆதியும் அந்தமும் அறிந்தனை நீயே
ஆதி என்று அருளிய அருட்பெருஞ்ஜோதி
நல்அமுது என் ஒரு நா உளம் காட்டி என்
அல்லலை நீக்கிய அருட்பெருஞ்ஜோதி
கற்பகம் என் உளங் கைதனில் கொடுத்தே
அற்புதம் இயற்றெனும் அருட்பெருஞ்ஜோதி
கதிர் நலம் என் இரு கண்களிற் கொடுத்தே
அதிசயம் இயற்றெனும் அருட்பெருஞ்ஜோதி
அருள் ஒளி என்தனி அறிவினில் விரித்தே
அருள்நெறி விளக்கெனும் அருட்பெருஞ்ஜோதி

Koviloor Digital Library

பரை ஒளி என்மனப் பதியினில் விரித்தே
அரசது இயற்றெனும் அருட்பெருஞ்ஜோதி
வல்லப சத்திகள் வகை எலாம் அளித்து எனது
அல்லலை நீக்கிய அருட்பெருஞ்ஜோதி
ஆரியல் அகம்புறம் அகப்புறம் புறப்புறம்
ஆரமுது எனக்கருள் அருட்பெருஞ்ஜோதி
சூரிய சந்திர ஜோதியுட் ஜோதி என்று
ஆரியர் புகழ்தரும் அருட்பெருஞ்ஜோதி
பிறிவேது இனி உனைப் பிடித்தனம் உனக்குநம்
அறிவே வடிவெனும் அருட்பெருஞ்ஜோதி
எஞ்சேல் உலகினில் யாதொன்று பற்றியும்
அஞ்சேல் என்றருள் அருட்பெருஞ்ஜோதி
மாண்டுழ லாவகை வந்து இளங்காலையே
ஆண்டுகொண்டருளிய அருட்பெருஞ்ஜோதி
பற்றுகள் அனைத்தையும் பற்றறத் தவிர்த்து எனது
அற்றமும் நீக்கிய அருட்பெருஞ்ஜோதி
சமயம் குலமுதல் சார்பெலாம் விடுத்த
அமயம் தோன்றிய அருட்பெருஞ்ஜோதி
வாய்தற்கு உரித்தெனும் மறை ஆகமங்களால்
ஆய்தற்கு அரிய அருட்பெருஞ்ஜோதி
எல்லாம் வல்லசித்தெனக்கு அளித்து எனக்குஉனை
அல்லாது இலையெனும் அருட்பெருஞ்ஜோதி
நவைஇலா உளத்தில் நாடிய நாடிய
அவைஎலாம் அளிக்கும் அருட்பெருஞ்ஜோதி
கூற்றுதைத்து என்பால் குற்றமுங் குணங்கொண்டு
ஆற்றல்மிக் களித்த அருட்பெருஞ்ஜோதி
நன்று அறிவு அறியா நாயினேன் தனையும்
அன்று வந்து ஆண்ட அருட்பெருஞ்ஜோதி
நாயினும் கடையேன் ஈயினும் இழிந்தேன்
ஆயினும் அருளிய அருட்பெருஞ்ஜோதி
தோத்திரம் புகலேன் பாத்திரம் அல்லேன்
ஆத்திரம் அளித்த அருட்பெருஞ்ஜோதி
எச்சோ தனைகளும் இயற்றாது எனக்கே
அச்சோ என்றருள் அருட்பெருஞ்ஜோதி
ஏறாநிலைநடு ஏற்றி என்றனை ஈண்டு
ஆறாறு கடத்திய அருட்பெருஞ்ஜோதி
தாபத்துயரம் தவிர்த்து உலகுஉறும் எலா
ஆபத்தும் நீக்கிய அருட்பெருஞ்ஜோதி
மருட்பகை தவிர்த்துஎனை வாழ்வித்து எனக்கே
அருட்குரு ஆகிய அருட்பெருஞ்ஜோதி

Koviloor Digital Library

உருவமும் அருவமும் உபயமும் ஆகிய
அருள்நிலை தெரித்த அருட்பெருஞ்ஜோதி
இருளறுத்து என்உளத்து எண்ணியாங்கு அருளி
அருள் அமுது அளித்த அருட்பெருஞ்ஜோதி
தெருள்நிலைஇது எனத்தெருட்டி என்னுளத்திருந்து
அருள்நிலை காட்டிய அருட்பெருஞ்ஜோதி
பொருட்பதம் எல்லாம் புரிந்துமேல் ஓங்கிய
அருட்பதம் அளித்த அருட்பெருஞ்ஜோதி
உருள்சகடு ஆகிய உளஞ்சலியாவகை
அருள்வழி நிறுத்திய அருட்பெருஞ்ஜோதி
வெருள்மன மாயை வினைஇருள் நீக்கிஉள்
அருள் விளக்கேற்றிய அருட்பெருஞ்ஜோதி
சுருள்விரி வுடைமனச் சுழல்எலாம் அறுத்தே
அருள்ஒளி நிரப்பிய அருட்பெருஞ்ஜோதி
விருப்போடு இகல்உறு வெறுப்பும் தவிர்த்தே
அருட்பேறு அளித்த அருட்பெருஞ்ஜோதி
அருட்பேர் தரித்து உலகனைத்தும் மலர்ந்திட
அருட்சீர் அளித்த அருட்பெருஞ்ஜோதி
உலகெலாம் பரவஎன் உள்ளத்து இருந்தே
அலகிலா ஒளிசெய் அருட்பெருஞ்ஜோதி
விண்ணினுள் விண்ணாய் விண்ணடு விண்ணாய்
அண்ணி நிறைந்த அருட்பெருஞ்ஜோதி
விண்உறு விண்ணாய் விண்நிலை விண்ணாய்
அண்ணி வயங்கும் அருட்பெருஞ்ஜோதி
காற்றினுட் காற்றாய்க் காற்றிடைக் காற்றாய்
ஆற்றலின் ஓங்கும் அருட்பெருஞ்ஜோதி
காற்றுறு காற்றாய்க் கானிலைக் காற்றாய்
ஆற்ற விளங்கும் அருட்பெருஞ்ஜோதி
அனலினுள் அனலாய் அனல் நடு அனலாய்
அனல்உற விளங்கும் அருட்பெருஞ்ஜோதி
அனல்உறும் அனலாய் அனல்நிலை அனலாய்
அனல்உற வயங்கும் அருட்பெருஞ்ஜோதி
புனலினுள் புனலாய்ப் புனலிடைப் புனலாய்
அனை என வயங்கும் அருட்பெருஞ்ஜோதி
புனலுறு புனலாய்ப் புனல் நிலைப் புனலாய்
அனை எனப் பெருகும் அருட்பெருஞ்ஜோதி
புவியின் உட் புவியாய்ப் புவிநடுப் புவியாய்
அவைதர வயங்கும் அருட்பெருஞ்ஜோதி
புவி உறு புவியாய்ப் புவிநிலைப் புவியாய்
அவைகொள விரிந்த அருட்பெருஞ்ஜோதி

Koviloor Digital Library

விண்நிலை சிவத்தின் வியன் நிலை அளவி
அண் உற அமைத்த அருட்பெருஞ்ஜோதி
வளிநிலை சத்தியின் வளர்நிலை அளவி
அளியுற அமைத்த அருட்பெருஞ்ஜோதி
நெருப்பது நிலைநடுநிலை எலாம் அளவி
அருப்பிட வகுத்த அருட்பெருஞ்ஜோதி
நீர்நிலை திரைவளர் நிலைதனை அளவி
ஆர்வுற வகுத்த அருட்பெருஞ்ஜோதி
புவிநிலை சுத்தமாம் பொற்பதி அளவி
அவை உற வகுத்த அருட்பெருஞ்ஜோதி

மண்ணினில் திண்மையைவகுத்து அதில்கிடக்கை
அண்உற அமைத்த அருட்பெருஞ்ஜோதி
மண்ணினில் பொன்மை வகுத்து அதில்ஐமையை
அண்உற வகுத்த அருட்பெருஞ்ஜோதி
மண்ணினில் ஐம்பூவகுத்த அதில் ஐந்திறம்
அண்உற அமைத்த அருட்பெருஞ்ஜோதி
மண்ணினில் நாற்றம் வகுத்தது பல்வகை
அண்உறப் புரிந்த அருட்பெருஞ்ஜோதி
மண்ணினில் பற்பல வகைகருநிலை இயல்
அண்உறப் புரிந்த அருட்பெருஞ்ஜோதி
மண்ணினில் ஐந்தியல் வகுத்து அதில் பல்பயன்
அண்உற வகுத்த அருட்பெருஞ்ஜோதி
மண்ணிடை அடிநிலை வகுத்து அதில் பன்னிலை
அண்உற அமைத்த அருட்பெருஞ்ஜோதி
மண்ணில் ஐந்தைந்துவகையும் கலந்துகொண்டு
அண்உறப் புரிந்த அருட்பெருஞ்ஜோதி
மண்இயற் சத்திகள் மண்செயற் சத்திகள்
அண்உற வகுத்த அருட்பெருஞ்ஜோதி
மண்உருச் சத்திகள் மண்கலைச் சத்திகள்
அண்உற வகுத்த அருட்பெருஞ்ஜோதி
மண்ஒளிச் சத்திகள் மண்கருச் சத்திகள்
அண்உற வகுத்த அருட்பெருஞ்ஜோதி
மண்கணச் சத்திகள் வகைபல பலவும்
அண்கொள அமைத்த அருட்பெருஞ்ஜோதி
மண்நிலைச் சத்தர்கள் வகைபல பலவும்
அண்உற அமைத்த அருட்பெருஞ்ஜோதி
மண்கரு உயிர்த்தொகை வகைவிரி பலவா
அண்கொள அமைத்த அருட்பெருஞ்ஜோதி
மண்ணினில் பொருள்பல வகைவிரி வெவ்வேறு
அண்உறப் புரிந்த அருட்பெருஞ்ஜோதி

Koviloor Digital Library

மண்உறு நிலைபல வகுத்து அதில் செயல்பல
அண்உற அமைத்த அருட்பெருஞ்ஜோதி
மண்ணிடைப் பக்குவம் வகுத்து அதில்பயன்பல
அண்உற அமைத்த அருட்பெருஞ்ஜோதி
மண்இயல் பலபல வகுத்து அதில் பிறவும்
அண்உற அமைத்த அருட்பெருஞ்ஜோதி

நீரினில் தண்மையும் நிகழ்ஊ ரொழுக்கமும்
ஆர்உற வகுத்த அருட்பெருஞ்ஜோதி
நீரினில் பசுமையை நிறுத்தி அதில்பல
ஆருற வகுத்த அருட்பெருஞ்ஜோதி
நீரிடைப் பூவியல் நிகழுறு திறவியல்
ஆர்தர வகுத்த அருட்பெருஞ்ஜோதி
நீரினில் சுவைநிலை நிரைத்து அதில் பல்வகை
ஆருறப் புரிந்த அருட்பெருஞ்ஜோதி
நீரினில் கருநிலை நிகழ்த்திய பற்பல
ஆர்உற வகுத்த அருட்பெருஞ்ஜோதி
நீரிடை நான்குஇயல் நிலவுவித்து அதில்பல
ஆர்தர வகுத்த அருட்பெருஞ்ஜோதி
நீரிடை அடிநடு நிலைஉறவகுத்து அனல்
ஆர்தரப் புரிந்த அருட்பெருஞ்ஜோதி
நீரிடை ஒளிஇயல் நிகழ்பல குணஇயல்
ஆர்தர வகுத்த அருட்பெருஞ்ஜோதி
நீரிடைச் சத்திகள் நிகழ்வகை பலபல
ஆர்தர வகுத்த அருட்பெருஞ்ஜோதி
நீரினில் சத்தர்கள் நிறைவகை உறைவகை
ஆர்தரப் புரிந்த அருட்பெருஞ்ஜோதி
நீரிடை உயிர்பல நிகழ்உறு பொருள்பல
ஆர்உற அமைத்த அருட்பெருஞ்ஜோதி
நீரிடை நிலைபல நிலைஉறு செயல்பல
ஆர்கொள வகுத்த அருட்பெருஞ்ஜோதி
நீர்உறு பக்குவ நிறைவுறு பயன்பல
ஆர்உற அமைத்த அருட்பெருஞ்ஜோதி
நீர்இயல் பலபல நிறைத்து அதில் பிறவும்
ஆர்தரப் புரிந்த அருட்பெருஞ்ஜோதி

தீயினில் சூட்டியல் சேர்தரச்செலவு இயல்
ஆய்உற வகுத்த அருட்பெருஞ்ஜோதி
தீயினில் வெண்மைத் திகழ்இயல் பலவா
ஆய்உற வகுத்த அருட்பெருஞ்ஜோதி
தீயிடைப் பூஎலாம் திகழ்உறு திறம்எலாம்
ஆய்உற வகுத்த அருட்பெருஞ்ஜோதி

Koviloor Digital Library

தீயிடை ஒளியே திகழ்உற அமைத்து அதில்
ஆய்பல வகுத்த அருட்பெருஞ்ஜோதி
தீயிடை அருநிலை திருநிலை கருநிலை
ஆய்உற அமைத்த அருட்பெருஞ்ஜோதி
தீயிடை மூவியல் செறிவித்து அதிற்பல
ஆய்வகை அமைத்த அருட்பெருஞ்ஜோதி
தீயிடை நடுநிலை திகழ்நடு நடுநிலை
ஆய்உற அமைத்த அருட்பெருஞ்ஜோதி
தீயிடைப் பெருந்திறல் சித்திகள் பலபல
ஆய்உற அமைத்த அருட்பெருஞ்ஜோதி
தீயிடைச் சித்துகள் செப்புறும் அனைத்தும்
ஆய்உற அமைத்த அருட்பெருஞ்ஜோதி
தீயிடைச் சத்திகள் செறிதரு சத்தர்கள்
ஆய்பல வகுத்த அருட்பெருஞ்ஜோதி
தீயிடை உயிர்பல திகழ்உறு பொருள்பல
ஆய்வகை அமைத்த அருட்பெருஞ்ஜோதி
தீயிடை நிலைபல திகழ்செயல் பலபயன்
ஆய்பல வகுத்த அருட்பெருஞ்ஜோதி
தீயினில் பக்குவம் சேர்குணம் இயற்குணம்
ஆய்பல வகுத்த அருட்பெருஞ்ஜோதி
தீயிடை உருக்கியல் சிறப்பியல் பொதுஇயல்
ஆய்உற வகுத்த அருட்பெருஞ்ஜோதி
தீஇயல் பலபல செறித்து அதில்பலவும்
ஆய்உறப் புரிந்த அருட்பெருஞ்ஜோதி

காற்றிடை அசை இயல் கலைஇயல் உயிர் இயல்
ஆற்றலின் அமைத்த அருட்பெருஞ்ஜோதி
காற்றிடைப்பூ இயல் கருதுறு திறவியல்
ஆற்றலின் வகுத்த அருட்பெருஞ்ஜோதி
காற்றினில் ஊறியல் காட்டுறு பலபல
ஆற்றலின் அமைத்த அருட்பெருஞ்ஜோதி
காற்றினில் பெருநிலை கருநிலை அளவில
ஆற்றவும் வகுத்த அருட்பெருஞ்ஜோதி
காற்றிடை ஈரியல் காட்டி அதிற்பல
ஆற்றவும் வகுத்த அருட்பெருஞ்ஜோதி
காற்றினில் இடைநடு கடைநடு அகம்புறம்
ஆற்றவும் வகுத்த அருட்பெருஞ்ஜோதி
காற்றினில் குணம்பல கணம்பல வணம்பல
ஆற்றலின் அமைத்த அருட்பெருஞ்ஜோதி
காற்றிடைச் சத்திகள் கணக்கில உலப்பில
ஆற்றவும் அமைத்த அருட்பெருஞ்ஜோதி

Koviloor Digital Library

காற்றிடைச் சத்தர்கள் கணிதம் கடந்தன
ஆற்றவும் வகுத்த அருட்பெருஞ்ஜோதி
காற்றிடை உயிர்பல கதிபல கலைபல
ஆற்றலின் அமைத்த அருட்பெருஞ்ஜோதி
காற்றிடை நானிலைக் கருவிகள் அனைத்தையும்
ஆற்றுற வகுத்த அருட்பெருஞ்ஜோதி
காற்றிடை உணரியல் கருதியல் ஆதிய
ஆற்றுற வகுத்த அருட்பெருஞ்ஜோதி
காற்றிடைச் செயல் எலாம் கருதியபயன் எலாம்
ஆற்றவும் வகுத்த அருட்பெருஞ்ஜோதி
காற்றினில் பக்குவக் கதியெலாம் விளைவித்து
ஆற்றலின் வகுத்த அருட்பெருஞ்ஜோதி
காற்றினில் காலம் கருதுறு வகைஎலாம்
ஆற்றவும் வகுத்த அருட்பெருஞ்ஜோதி
காற்றியல் பலபல கணித்து அதில்பிறவும்
ஆற்றவும் வகுத்த அருட்பெருஞ்ஜோதி
வெளியிடைப் பகுதியின் விரிவியல் அணைவியல்
அளிஉற அமைத்த அருட்பெருஞ்ஜோதி
வெளியிடைப் பூஎலாம் வியப்புறு திறன்எலாம்
அளிஉற அமைத்த அருட்பெருஞ்ஜோதி
வெளியினில் ஒலிநிறை வியன்நிலை அனைத்தும்
அளிஉற அமைத்த அருட்பெருஞ்ஜோதி
வெளியிடைக் கருநிலை விரிநிலை அருநிலை
அளிகொள வகுத்த அருட்பெருஞ்ஜோதி
வெளியிடை முடிநிலை விளங்குற வகுத்தே
அளிபெற விளக்கும் அருட்பெருஞ்ஜோதி
வெளியினில் சத்திகள் வியப்புற சத்தர்கள்
அளிஉற வகுத்த அருட்பெருஞ்ஜோதி
வெளியிடை ஒன்றே விரித்து அதிற் பற்பல
அளிஉற வகுத்த அருட்பெருஞ்ஜோதி
வெளியிடை பலவே விரித்து அதிற் பற்பல
அளிதர அமைத்த அருட்பெருஞ்ஜோதி
வெளியிடை உயிர்இயல் வித்தியல் சித்தியல்
அளிபெற அமைத்த அருட்பெருஞ்ஜோதி
வெளியின் அனைத்தையும் விரித்து அதில் பிறவும்
அளிஉற அமைத்த அருட்பெருஞ்ஜோதி

புறநடு வொடுகடை புணர்ப்பித்து ஒருமுதல்
அறம்உற வகுத்த அருட்பெருஞ்ஜோதி
புறந்தலை நடுவொடு புணர்ப்பித்து ஒருகடை
அறம்பெற வகுத்த அருட்பெருஞ்ஜோதி

Koviloor Digital Library

அகப்புற நடுக்கடை அணைவால் புறமுதல்
அகப்பட வகுத்த அருட்பெருஞ்ஜோதி
அகப்புற நடுமுதல் அணைவால் புறக்கடை
அகப்பட அமைத்த அருட்பெருஞ்ஜோதி
கருது அக நடுவொடு கடைஅணைந்து அகமுதல்
அருள்உற அமைத்த அருட்பெருஞ்ஜோதி
தணி அக நடுவொடு தலை அணைந்து அகக்கடை
அணிஉற வகுத்த அருட்பெருஞ்ஜோதி
அகநடு புறக்கடை அணைந்து அகப்புறமுதல்
அகம்உற வகுத்த அருட்பெருஞ்ஜோதி
அகநடு புறத்தலை அணைந்து அகப்புறக்கடை
அகலிடை வகுத்த அருட்பெருஞ்ஜோதி
அகநடு அதனால் அகப்புற நடுவை
அகம் அற வகுத்த அருட்பெருஞ்ஜோதி
அகப்புற நடுவால் அணிபுற நடுவை
அகப்பட அமைத்த அருட்பெருஞ்ஜோதி
புறநடு அதனால் புறப்புற நடுவை
அறம்உற வகுத்த அருட்பெருஞ்ஜோதி
புகல் அரும் அகண்ட பூரண நடுவால்
அகநடு வகுத்த அருட்பெருஞ்ஜோதி
புறப்புறக் கடைமுதல் புணர்ப்பால் புறப்புறம்
அறக்கணம் வகுத்த அருட்பெருஞ்ஜோதி
புறத்தியல் கடைமுதல் புணர்ப்பால் புறத்துறும்
அறக்கணம் வகுத்த அருட்பெருஞ்ஜோதி
அகப்புறக் கடைமுதல் அணைவால் அக்கணம்
அகத்துற வகுத்த அருட்பெருஞ்ஜோதி
அகக்கடைமுதல் புணர்ப்பு அதனால் அகக்கணம்
அகத்திடை வகுத்த அருட்பெருஞ்ஜோதி

வானிடைக் காற்றும் காற்றிடை நெருப்பும்
ஆனற வகுத்த அருட்பெருஞ்ஜோதி
நெருப்பிடை நீரும் நீரிடைப் புவியும்
அருப்பிட வகுத்த அருட்பெருஞ்ஜோதி
நீர்மேல் நெருப்பும் நெருப்பின்மேல் உயிர்ப்பும்
ஆர்உற வகுத்த அருட்பெருஞ்ஜோதி
புனல்மேல் புவியும் புவிமேல் புடைப்பும்
அனல்மேல் வகுத்த அருட்பெருஞ்ஜோதி
பகுதிவான் வெளியில் படர்ந்தமா பூத
அகல்வெளி வகுத்த அருட்பெருஞ்ஜோதி

Koviloor Digital Library

உயிர்வெளி இடையே உரைக்கரும் பகுதி
அயவெளி வகுத்த அருட்பெருஞ்ஜோதி
உயிர்வெளி அதனை உணர்கலை வெளியில்
அயல் அற வகுத்த் அருட்பெருஞ்ஜோதி
கலைவெளி அதனைக் கலப்பறு சுத்த
அலர்வெளி வகுத்த அருட்பெருஞ்ஜோதி
சுத்தநல் வெளியைத் துரிசறு பரவெளி
அத்திடை வகுத்த அருட்பெருஞ்ஜோதி
பரவெளி அதனைப் பரம்பர வெளியில்
அரசுற வகுத்த அருட்பெருஞ்ஜோதி
பரம்பர வெளியைப் பராபர வெளியில்
அரந்தெற வகுத்த அருட்பெருஞ்ஜோதி
பராபர வெளியைப் பகர்பெரு வெளியில்
அராவற வகுத்த அருட்பெருஞ்ஜோதி
பெருவெளி அதனைப் பெருஞ்சுக வெளியில்
அருள்உற வகுத்த அருட்பெருஞ்ஜோதி
குணமுதல் கருவிகள் கூடிய பகுதியில்
அணைவுற வகுத்த அருட்பெருஞ்ஜோதி
மனமுதல் கருவிகள் மன்உயிர் வெளியிடை
அனமுற வகுத்த அருட்பெருஞ்ஜோதி
காலமே முதலிய கருவிகள் கலைவெளி
ஆலுற வகுத்த அருட்பெருஞ்ஜோதி
துரிசறு கருவிகள் சுத்தநல் வெளியிடை
அரசுற வகுத்த அருட்பெருஞ்ஜோதி
இவ்வெளி எல்லாம் இலங்க அண்டங்கள்
அவ்வயின் அமைத்த அருட்பெருஞ்ஜோதி
ஓங்கிய அண்டம் ஒளிபெற முச்சுடர்
ஆங்கிடை வகுத்த அருட்பெருஞ்ஜோதி
சிருட்டித் தலைவரைச் சிருட்டி அண்டங்களை
அருள் திறல் வகுத்த அருட்பெருஞ்ஜோதி
காவல்செய் தலைவரைக் காவல் அண்டங்களை
ஆவகை அமைத்த அருட்பெருஞ்ஜோதி
அழித்தல்செய் தலைவரை அவர் அண்டங்களை
அழுக்கற அமைத்த அருட்பெருஞ்ஜோதி
மறைத்திடு தலைவரை மற்றும் அண்டங்களை
அறத்தொடு வகுத்த அருட்பெருஞ்ஜோதி
தெளிவுசெய் தலைவரைத் திகழும் அண்டங்களை
அளிபெற வகுத்த அருட்பெருஞ்ஜோதி
விந்துவாம் சத்தியை விந்தின் அண்டங்களை
அந்திறல் வகுத்த அருட்பெருஞ்ஜோதி

Koviloor Digital Library

ஓங்கார சத்திகள் உற்ற அண்டங்களை
    ஆங்காக அமைத்த அருட்பெருஞ்ஜோதி
சத்தத் தலைவரைச் சாற்றும் அண்டங்களை
    அத்தகை வகுத்த அருட்பெருஞ்ஜோதி
நாதமாம் பிரமமும் நாத அண்டங்களும்
    ஆதரம் வகுத்த அருட்பெருஞ்ஜோதி
பகர்பரா சத்தியைப் பதியும் அண்டங்களை
    அகம்அற வகுத்த அருட்பெருஞ்ஜோதி
பரசிவ பதியைப் பரசிவாண்டங்களை
    அரசுற அமைத்த அருட்பெருஞ்ஜோதி
எண்ணில்பல் சத்தியை எண்ணில் அண்டங்களை
    அண்உற வகுத்த அருட்பெருஞ்ஜோதி
அளவில்பல் சத்தரை அளவில் அண்டங்களை
    அளவற வகுத்த அருட்பெருஞ்ஜோதி
உயிர்வகை அண்டம் உலப்பில எண்ணில
    அயர்வற வகுத்த அருட்பெருஞ்ஜோதி

களவில கடல்வகை கங்கில கரையில
    அளவில வகுத்த அருட்பெருஞ்ஜோதி
கடலவை அனைத்தும் கரையின்றி நிலையுற
    அடலனல் அமைத்த அருட்பெருஞ்ஜோதி
கடல்களும் மலைகளும் கதிகளும் நதிகளும்
    அடல்உற வகுத்த அருட்பெருஞ்ஜோதி
கடலிடைப் பல்வளம் கணித்து அதில் பல்உயிர்
    அடலுற வகுத்த அருட்பெருஞ்ஜோதி

மலையிடைப் பல்வளம் வகுத்து அதில் பல்உயிர்
    அலைவற வகுத்த அருட்பெருஞ்ஜோதி

ஒன்றினில் ஒன்றே ஒன்றிடை ஆயிரம்
    அன்றற வகுத்த அருட்பெருஞ்ஜோதி
பத்திடை ஆயிரம் பகர் அதில்கோடி
    அத்துற வகுத்த அருட்பெருஞ்ஜோதி
நூற்றிடை இலக்கம் நுவல் அதில் அனந்தம்
    ஆற்றிடை வகுத்த அருட்பெருஞ்ஜோதி
கோடியில் அனந்த கோடி பல்கோடி
    ஆடுற வகுத்த அருட்பெருஞ்ஜோதி

வித்தியல் ஒன்றாய் விளைவியல் பலவா
    அத்தகை அமைத்த அருட்பெருஞ்ஜோதி
விளைவியல் அனைத்தும் வித்திடை அடங்க
    அளவு செய்து அமைத்த அருட்பெருஞ்ஜோதி

Koviloor Digital Library

வித்தும்பதமும் விளை உப கரிப்பும்
அத்திறல் அமைத்த அருட்பெருஞ்ஜோதி
வித்திடை முளையும் முளையிடை விளைவும்
அத்தக அமைத்த அருட்பெருஞ்ஜோதி
வித்தினுள் வித்தும் வித்ததில் வித்தும்
அத்திறம் வகுத்த அருட்பெருஞ்ஜோதி
விளைவினுள் விளைவும் விளைவதில் விளைவும்
அளையுற வகுத்த அருட்பெருஞ்ஜோதி
முளையதின் முளையும் முளையினுள் முளையும்
அளைதர அமைத்த அருட்பெருஞ்ஜோதி
வித்திடைப் பதமும் பதத்திடை வித்தும்
அத்துற அமைத்த அருட்பெருஞ்ஜோதி
பதமதிற் பதமும் பதத்தினுள் பதமும்
அதிர்வற வகுத்த அருட்பெருஞ்ஜோதி

ஒற்றுமை வேற்றுமை உரிமைகள் அனைத்தும்
அற்றென வகுத்த அருட்பெருஞ்ஜோதி
பொருள்நிலை உறுப்பியல் பொதுவகை முதலிய
அருள்உற வகுத்த அருட்பெருஞ்ஜோதி
உறவினில் உறவும் உறவினில் பகையும்
அறன்உற வகுத்த அருட்பெருஞ்ஜோதி
பகையினிற் பகையும் பகையினில் உறவும்
அகைவுற வகுத்த அருட்பெருஞ்ஜோதி
பாதியும் முழுதும் பதிசெயும் அந்தமும்
ஆதியும் வகுத்த அருட்பெருஞ்ஜோதி
துணையும் நிமித்தமும் துலங்கதின் அதுவும்
அணைவுற வகுத்த அருட்பெருஞ்ஜோதி
உருவதின் உருவும் உருவினுள் உருவும்
அருள்உற அமைத்த அருட்பெருஞ்ஜோதி
அருவினுள் அருவும் அருவதில் அருவும்
அருள்இயல் அமைத்த அருட்பெருஞ்ஜோதி
கரணமும் இடமும் கலைமுதல் அணையும் ஓர்
அரண்நிலை வகுத்த அருட்பெருஞ்ஜோதி
உருவதில் அருவும் அருவதில் உருவும்
அருளுற அமைத்த அருட்பெருஞ்ஜோதி
வண்ணமும் வடிவும் மயங்கிய வகைபல
அண்உற வகுத்த அருட்பெருஞ்ஜோதி
சிறுமையில் சிறுமையும் சிறுமையில் பெருமையும்
அறிதர வகுத்த அருட்பெருஞ்ஜோதி
பெருமையில் பெருமையும் பெருமையில் சிறுமையும்
அருள்நிலை வகுத்த அருட்பெருஞ்ஜோதி

Koviloor Digital Library

திண்மையில் திண்மையும் திண்மையில் நேர்மையும்
அண்மையின் வகுத்த அருட்பெருஞ்ஜோதி
மென்மையில் மென்மையும் மென்மையில் வன்மையும்
அன்மை அற்றமைத்த அருட்பெருஞ்ஜோதி
அடியினுள் அடியும் அடியிடை அடியும்
அடிஉற அமைத்த அருட்பெருஞ்ஜோதி
நடுவினுள் நடுவும் நடுவதில் நடுவும்
அடர்வுற அமைத்த அருட்பெருஞ்ஜோதி
முடியினுள் முடியும் முடியினில் முடியும்
அடர்தர அமைத்த அருட்பெருஞ்ஜோதி

அகப்பூ அகவுறுப் பாக்க அதற்கவை
அகத்தே வகுத்த அருட்பெருஞ்ஜோதி
புறப்பூ புறத்தில் புனையுரு வாக்கிட
அறத்துடன் வகுத்த அருட்பெருஞ்ஜோதி
அகப்புறப் பூ அகப் புற உறுப் பியற்றிட
அகத்திடை வகுத்த அருட்பெருஞ்ஜோதி
புறப்புறப் பூவதில் புறப்புற உறுப்புற
அறத்திடை வகுத்த அருட்பெருஞ்ஜோதி

பாரிடை வேர்வையில் பையிடை முட்டையில்
ஆருயிர் அமைக்கும் அருட்பெருஞ்ஜோதி
ஊர்வன பறப்பன உறுவன நடப்பன
ஆர்வுற வகுத்த அருட்பெருஞ்ஜோதி
அசைவில அசைவுள ஆருயிர்த் திரள்பல
அசலற வகுத்த அருட்பெருஞ்ஜோதி
அறிவொரு வகைமுதல் ஐவகை அறுவகை
அறிதர வகுத்த அருட்பெருஞ்ஜோதி
வெவ்வேறு இயலொடு வெவ்வேறு பயன் உற
அவ்வாறு அமைத்த அருட்பெருஞ்ஜோதி
சித்திர விசித்திர சிருட்டிகள் பலபல
அத்தகை வகுத்த அருட்பெருஞ்ஜோதி

பெண்ணினுள் ஆணும் ஆணினுள் பெண்ணும்
அண்ணுற வகுத்த அருட்பெருஞ்ஜோதி
பெண்ணினுள் மூன்றும் ஆணினுள் இரண்டும்
அண்ணுற வகுத்த அருட்பெருஞ்ஜோதி
பெண்ணிடை நான்கும் ஆணிடை மூன்றும்
அண்ணுற அமைத்த அருட்பெருஞ்ஜோதி
பெண்இயல் ஆணும் ஆண்இயல் பெண்ணும்
அண்உற அமைத்த அருட்பெருஞ்ஜோதி

Koviloor Digital Library

பெண்திறல் புறத்தும் ஆண்திறல் அகத்தும்
அண்டுற வகுத்த அருட்பெருஞ்ஜோதி
பெண்இயல் மனமும் ஆண்இயல் அறிவும்
அண்ணுற வகுத்த அருட்பெருஞ்ஜோதி
தனித்தனி வடிவினும் தக்க ஆண் பெண் இயல்
அனைத்துற வகுத்த அருட்பெருஞ்ஜோதி

உனற்கரும் உயிர்உள உடல்உள உலகுள
அனைத்தையும் வகுத்த அருட்பெருஞ்ஜோதி
ஒவுறா எழுவகை உயிர் முதல் அனைத்தும்
ஆவகை வகுத்த அருட்பெருஞ்ஜோதி
பைகளில் முட்டையில் பாரினில் வேர்வினில்
ஐபெற அமைத்த அருட்பெருஞ்ஜோதி
தாய் கருப்பையினுள் தங்கிய உயிர்களை
ஆய்வுறக் காத்தருள் அருட்பெருஞ்ஜோதி
முட்டைவாய்ப் பயிலும் முழுஉயிர்த் திரள்களை
அட்டமே காத்தருள் அருட்பெருஞ்ஜோதி
நிலம் பெறும் உயிர்வகை நீள்குழு அனைத்தும்
அலம்பெறக் காத்தருள் அருட்பெருஞ்ஜோதி
வேர்வுற உதித்த மிகும் உயிர்த் திரள்களை
ஆர்வுறக் காத்தருள் அருட்பெருஞ்ஜோதி
உடல்உறு பிணியால் உயிர் உடல் கெடாவகை
அடல்உறக் காத்தருள் அருட்பெருஞ்ஜோதி
சிசு முதல் பருவச் செயல் களின் உயிர்களை
அசைவறக் காத்தருள் அருட்பெருஞ்ஜோதி
உயிர்உறும் உடலையும் உடல்உறும் உயிரையும்
அயர்வறக் காத்தருள் அருட்பெருஞ்ஜோதி
பாடுறும் அவத்தைகள் பலவினும் உயிர்களை
ஆடுறக் காத்தருள் அருட்பெருஞ்ஜோதி
முச்சுடர் ஆதியால் எச்சக உயிரையும்
அச்சறக் காத்தருள் அருட்பெருஞ்ஜோதி
வான்முகில் சத்தியால் மழைபொழி வித்து உயிர்
ஆனறக் காத்தருள் அருட்பெருஞ்ஜோதி
இன்புறு சத்தியால் எழில்மழை பொழிவித்து
அன்புறக் காத்தருள் அருட்பெருஞ்ஜோதி
எண்இயல் சத்தியால் எல்லா உலகினும்
அண் உயிர் காத்தருள் அருட்பெருஞ்ஜோதி
அண்டப் புறப்புற அமுதம் பொழிந்து உயிர்
அண்டுறக் காத்தருள் அருட்பெருஞ்ஜோதி
தேவரை எல்லாம் திகழ்புற அமுதளித்து
ஆவகை காத்தருள் அருட்பெருஞ்ஜோதி

Koviloor Digital Library

அகப்புற அமுதளித்து ஐவர் ஆதிகளை
அகப்படக் காத்தருள் அருட்பெருஞ்ஜோதி
தருமக அமுதால் சத்தி சத்தர்களை
அருளினிற் காக்கும் அருட்பெருஞ்ஜோதி
காலமும் நியதியும் காட்டி எவ்வுயிரையும்
ஆலுறக் காத்தருள் அருட்பெருஞ்ஜோதி
விச்சையை இச்சையை விளைவித்து உயிர்களை
அச்சறக் காத்தருள் அருட்பெருஞ்ஜோதி
போகமும் களிப்பும் பொருந்துவித்து உயிர்களை
ஆகமுட் காக்கும் அருட்பெருஞ்ஜோதி
கலையறிவு அளித்துக் களிப்பினில் உயிரெலாம்
அலைவறக் காத்தருள் அருட்பெருஞ்ஜோதி
விடய நிகழ்ச்சியால் மிகுமுயிர் அனைத்தையும்
அடைவுறக் காத்தருள் அருட்பெருஞ்ஜோதி
துன்பளித்து ஆங்கே சுகமளித்து உயிர்களை
அன்புறக் காத்தருள் அருட்பெருஞ்ஜோதி
கரணேந் தியத்தால் களிப்புற உயிர்களை
அரண்நேர்ந்து அளித்தருள் அருட்பெருஞ்ஜோதி
எத்தகை எவ்வுயிர் எண்ணின அவ்வுயிர்க்கு
அத்தகை அளித்தருள் அருட்பெருஞ்ஜோதி
எப்படி எவ்வுயிர் எண்ணின அவ்வுயிர்க்கு
அப்படி அளித்தருள் அருட்பெருஞ்ஜோதி
ஏங்காது உயிர்த்திரள் எங்கெங்கு இருந்தன
ஆங்காங்கு அளித்தருள் அருட்பெருஞ்ஜோதி
சொல்லுறும் அசுத்தத் தொல்லுயிர்க் கவ்வகை
அல்லலில் காத்தருள் அருட்பெருஞ்ஜோதி
சுத்தமும் அசுத்தமும் தோயுயிர்க் கிருமையின்
அத்தகை காத்தருள் அருட்பெருஞ்ஜோதி
வாய்ந்திடும் சுத்த வகையுயிர்க்கு ஒருமையின்
ஆய்ந்துறக் காத்தருள் அருட்பெருஞ்ஜோதி
எவையெலாம் எவைஎலாம் ஈண்டின ஈண்டின
அவைஎலாம் காத்தருள் அருட்பெருஞ்ஜோதி

அண்டத் துரிசையும் அகிலத் துரிசையும்
அண்டற அடக்கும் அருட்பெருஞ்ஜோதி
பிண்டத் துரிசையும் பேருயிர்த் துரிசையும்
அண்டற அடக்கும் அருட்பெருஞ்ஜோதி
உயிருறு மாயையின் உறுவிரிவு அனைத்தும்
அயிரற அடக்கும் அருட்பெருஞ்ஜோதி
உயிருறும் இருவினை உறுவிரிவு அனைத்தும்
அயர்வற அடக்கும் அருட்பெருஞ்ஜோதி

Koviloor Digital Library

காமப் புடைப்புயிர் கண் தொடராவகை
ஆமற அடக்கும் அருட்பெருஞ்ஜோதி
பொங்குறு வெகுளிப் புடைப்புகள் எல்லாம்
அங்கற அடக்கும் அருட்பெருஞ்ஜோதி
மதம்புரை மோகமும் மற்றவும் ஆங்காங்கு
அதம்பெற அடக்கும் அருட்பெருஞ்ஜோதி
வடுவுறும் அசுத்த வாதனை அனைத்தையும்
அடர்பற அடக்கும் அருட்பெருஞ்ஜோதி
சுத்தமும் அசுத்தமும் தோய்ந்தவா தனைகளை
அத்தகை அடக்கும் அருட்பெருஞ்ஜோதி
நால்வயிற் துரிசும் நண்ணுயிர் ஆதியில்
ஆலற அடக்கும் அருட்பெருஞ்ஜோதி
நால்வயிற் படைப்பும் நால்வயிற் காப்பும்
ஆலற அடக்கும் அருட்பெருஞ்ஜோதி
மூவிடத்து இருமையின் முன்னிய தொழிற்கரில்
ஆவிடத்து அடக்கும் அருட்பெருஞ்ஜோதி
மூவிட மும்மையின் முன்னிய தொழிற்கரில்
ஆவிடம் அடக்கும் அருட்பெருஞ்ஜோதி
தத்துவச் சேட்டையும் தத்துவத் துரிசும்
அத்தகை அடக்கும் அருட்பெருஞ்ஜோதி
சுத்தமா நிலையில் சூழுறு விரிவை
அத்தகை அடக்கும் அருட்பெருஞ்ஜோதி

கரைவின்மா மாயைக் கரும்பெரும் திரையால்
அரைசது மறைக்கும் அருட்பெருஞ்ஜோதி
பேருறு நீலப்பெருந்திரை அதனால்
ஆருயிர் மறைக்கும் அருட்பெருஞ்ஜோதி
பச்சைத் திரையால் பரவெளி அதனை
அச்சுற மறைக்கும் அருட்பெருஞ்ஜோதி
செம்மைத் திரையால் சித்துறு வெளியை
அம்மையின் மறைக்கும் அருட்பெருஞ்ஜோதி
பொன்மைத் திரையால் பொருளுறு வெளியை
அன்மையின் மறைக்கும் அருட்பெருஞ்ஜோதி
வெண்மைத் திரையால் மெய்ப்பதி வெளியை
அண்மையின் மறைக்கும் அருட்பெருஞ்ஜோதி
கலப்புத் திரையால் கருது அனுபவங்களை
அலப்புற மறைக்கும் அருட்பெருஞ்ஜோதி
விடய நிலைகளை வெவ்வேறு திரைகளால்
அடர்புற மறைக்கும் அருட்பெருஞ்ஜோதி
தத்துவ நிலைகளைத் தனித்தனித் திரையால்
அத்திறம் மறைக்கும் அருட்பெருஞ்ஜோதி

Koviloor Digital Library

திரைமறைப்பெல்லாம் தீர்த்து ஆங்காங்கே
அரசுறக் காட்டும் அருட்பெருஞ்ஜோதி

தோற்றமா மாயைத் தொடர்பறுத்து அருளின்
ஆற்றலைக் காட்டும் அருட்பெருஞ்ஜோதி
சுத்தமா மாயைத் தொடர்பறுத்து அருளை
அத்தகை காட்டும் அருட்பெருஞ்ஜோதி
எனைத்து ஆணவமுதல் எல்லாம் தவிர்த்தே
அனுக்கிர கம்புரி அருட்பெருஞ்ஜோதி
விடய மறைப்பெலாம் விடுவித்து உயிர்களை
அடைவுறத் தெருட்டும் அருட்பெருஞ்ஜோதி
சொருப மறைப்பெலாம் தொலைப்பித்து உயிர்களை
அருளினில் தெருட்டும் அருட்பெருஞ்ஜோதி
மறைப்பின் மறந்தன வருவித்து ஆங்கே
அறத்தொடு தெருட்டும் அருட்பெருஞ்ஜோதி
எவ்வகை உயிர்களும் இன்புற ஆங்கே
அவ்வகை தெருட்டும் அருட்பெருஞ்ஜோதி
கடவுளர் மறைப்பைக் கடிந்தவர்க் கின்பம்
அடையுறத் தெருட்டும் அருட்பெருஞ்ஜோதி
சத்திகள்மறைப்பைத் தவிர்த்தவர்க் கின்பம்
அத்துறத் தெருட்டும் அருட்பெருஞ்ஜோதி
சத்தர்கள் மறைப்பைத் தவிர்த்தவர்க் கின்பம்
அத்தகை தெருட்டும் அருட்பெருஞ்ஜோதி
படைக்கும் தலைவர்கள் பற்பல கோடியை
அடைப்புறப் படைக்கும் அருட்பெருஞ்ஜோதி
காக்கும் தலைவர்கள் கணக்கில் பல் கோடியை
ஆக்குறக் காக்கும் அருட்பெருஞ்ஜோதி
அடக்கும் தலைவர்கள் அளவிலர் தம்மையும்
அடர்ப்பற அடக்கும் அருட்பெருஞ்ஜோதி
மறைக்கும் தலைவர்கள் வகைபல கோடியை
அறத்தொடு மறைக்கும் அருட்பெருஞ்ஜோதி
தெருட்டும் தலைவர்கள் சேர்பல கோடியை
அருள்திறம் தெருட்டும் அருட்பெருஞ்ஜோதி
ஐந்தொழில் ஆதிசெய் ஐவர் ஆதிகளை
ஐந்தொழில் ஆதிசெய் அருட்பெருஞ்ஜோதி
இறந்தவர் எல்லாம் எழுந்திட உலகில்
அறந்தலை அளித்த அருட்பெருஞ்ஜோதி
செத்தவர் எல்லாம் சிரித்து ஆங்கு எழுதிறல்
அத்தகை காட்டிய அருட்பெருஞ்ஜோதி
இறந்தவர் எழுகஎன்று எண்ணி ஆங்கு எழுப்பிட
அறந்துணை எனக்கருள் அருட்பெருஞ்ஜோதி

Koviloor Digital Library

செத்தவர் எழுகெனச் செப்பி ஆங் கெழுப்பிட
அத்திறல் எனக்கருள் அருட்பெருஞ்ஜோதி
சித்தெலாம் வல்ல திறல்அளித்து எனக்கே
அத்தனென்று ஓங்கும் அருட்பெருஞ்ஜோதி

ஒன்றதில் இரண்டது ஒன்றின் இரண்டது
ஒன்றினுள் ஒன்றது ஒன்றெனும் ஒன்றே
ஒன்றல இரண்டல ஒன்றின் இரண்டல
ஒன்றினுள் ஒன்றல ஒன்றுஎனும் ஒன்றே
ஒன்றினில் ஒன்றுள ஒன்றினில் ஒன்றில
ஒன்றற ஒன்றிய ஒன்றெனும் ஒன்றே

களங்கநீத்து உலகம் களிப்புற மெய்ந் நெறி
விளங்க என்னுள்ளே விளங்கு மெய்ப்பொருளே
மூவிரு நிலையின் முடிநடு முடிமேல்
ஓவற விளங்கும் ஒருமை மெய்ப்பொருளே
எழு நிலை மிசையே இன்புரு ஆகி
வழுநிலை நீக்கி வயங்கு மெய்ப்பொருளே
நவநிலை மிசையே நடுவுறு நடுவே
சிவமயம் ஆகித் திகழ்ந்த மெய்ப்பொருளே
ஏகா தசநிலை யாது அதின் நடுவே
ஏகா தனமிசை இருந்த மெய்ப்பொருளே
திரையோ தசநிலை சிவவெளி நடுவே
வரையோ தருசுக வாழ்க்கை மெய்ப்பொருளே
ஈரெண் ணிலை என இயம்புமேல் நியைில்
பூரண சுகமாய்ப் பொருந்து மெய்ப்பொருளே
எல்லா நிலைகளும் இசைந்து ஆங்காங்கே
எல்லாம் ஆகி இலங்கு மெய்ப்பொருளே
மனாதிகள் பொருந்தா வானடு வானாய்
அனாதி உண்மையதாய் அமர்ந்த மெய்ப்பொருளே
தானொரு தானாய்த் தானே தானாய்
ஊனுயிர் விளக்கும் ஒரு தனிப்பொருளே
அதுவினுள் அதுவாய் அதுவே அதுவாய்ப்
பொதுவினுள் நடிக்கும் பூரணப் பொருளே
இயல்பினுள் இயல்பாய் இயல்பே இயல்பாய்
உயலுற விளங்கும் ஒருதனிப்பொருளே
அருவினுள் அருவாய் அருவரு அருவாய்
உருவினுள் விளங்கும் ஒருபரம் பொருளே
அலகிலாச் சித்தாய் அதுநிலை அதுவாய்
உலகெலாம் விளங்கும் ஒருதனிப் பொருளே

Koviloor Digital Library

பொருளினுள் பொருளாய்ப்பொருளது பொருளாய்
ஒருமையின் விளங்கும் ஒருதனிப்பொருளே
ஆடுறு சித்திகள் அறுபத்து நான்கெழு
கோடியும் விளங்கக் குலவு மெய்ப்பொருளே
கூட்டுறு சித்திகள் கோடிபல் கோடியும்
ஆட்டுற விளங்கும் அரும்பெரும்பொருளே
அறிவுறு சித்திகள் அனந்த கோடிகளும்
பிறிவற விளக்கும் பெரும் தனிப்பொருளே
வீடுகள் எல்லாம் விதிநெறி விளங்க
ஆடல்செய் தருளும் அரும்பெரும் பொருளே
பற்றுகள் எல்லாம் பதிநெறி விளங்க
உற்றருள் ஆடல்செய்ஒரு தனிப்பொருளே
பரத்தினிற் பரமே பரத்தின்மேல்பரமே
பரத்தினுட் பரமே பரம்பரம் பரமே
பரம்பெறும் பரமே பரம்தரும் பரமே
பரம்பதம் பரமே பரஞ் சிதம்பரமே
பரம்புகழ் பரமே பரம்பகர் பரமே
பரஞ்சுக பரமே பரம்சிவ பரமே
பரங்கொள் சிற்பரமே பரஞ்செய் தற்பரமே
தரங்கொள் பொற்பரமே தனிப்பெரும்பரமே
வரம்பரா பரமே வணம்பரா பரமே
பரம்பரா பரமே பதம்பரா பரமே

சத்திய பதமே சத்துவ பதமே
நித்திய பதமே நிற்குண பதமே
தத்துவ பதமே தற்பத பதமே
சித்துறு பதமே சிற்சுக பதமே
தம்பரம் பதமே தனிச்சுகம் பதமே
அம்பரம் பதமே அருட்பரம் பதமே
தந்திர பதமே சந்திர பதமே
மந்திர பதமே மந்தண பதமே
நவந்தரு பதமே நடந்தரு பதமே
சிவந்தரு பதமே சிவசிவ பதமே

பிரமமெய்க் கதியே பிரமமெய்ப்பதியே
பிரமநிற் குணமே பிரமசிற் குணமே
பிரமமே பிரமப் பெருநிலை மிசையுறும்
பரமமே பரம பதந்தரும் சிவமே
அவனோடு அவளாய் அதுவாய் அலவாய்
நவமா நிலைமிசை நண்ணிய சிவமே

Koviloor Digital Library

எம்பொருளாகி எமக்கு அருள் புரியும்
செம்பொருளாகிய சிவமே சிவமே
ஒருநிலை இதுவே உயர்நிலை எனும்ஒரு
திருநிலை மேவிய சிவமே சிவமே
மெய்வைத்து அழியா வெறு வெளி நடுவுறு
தெய்வப் பதியாம் சிவமே சிவமே
புரை தவிர்த்து எனக்கே பொன்முடி சூட்டிச்
சிரமுற நாட்டிய சிவமே சிவமே
கல்வியும் சாகாக் கல்வியும் அழியாச்
செல்வமும் அளித்த சிவமே சிவமே
அருளமு தெனக்கே அளித்தருள் நெறிவாய்த்
தெருளுற வளர்க்கும் சிவமே சிவமே
சத்தெலாம் ஆகியும் தானொரு தானாம்
சித்தெலாம் வல்லதோர் திருவருட் சிவமே
எங்கே கருணை இயற்கையின் உள்ளன
அங்கே விளங்கிய அருட்பெருஞ்சிவமே
யாரே என்னினும் இரங்குகின் றார்க்குச்
சீரே அளிக்கும் சிதம்பர சிவமே
பொய்ந்நெறி அனைத்தினும்புகுத்தா தெனையருள்
செந்நெறி செலுத்திய சிற்சபைச் சிவமே
கொல்லா நெறியே குருவருள் நெறிஎனப்
பல்கால் எனக்குப் பகர்ந்த மெய்ச்சிவமே
உயிரெலாம் பொதுவின் உளம்பட நோக்குக
செயிரெலாம் விடுகெனச் செப்பியசிவமே
பயிர்ப்புறு கரணப் பரிசுகள் பற்பல
உயிர்த்திரள் ஒன்றென உரைத்த மெய்ச்சிவமே
உயிருள்யாம் எம் முள் உயிர் இவை யுணர்ந்தே
உயிர்நலம் பரவுகென்று உரைத்த மெய்ச்சிவமே
இயல்அருள் ஒளிஓர் ஏகதே சத்தினாம்
உயிர்ஒளிகாண்க என்றுரைத்த மெய்ச்சிவமே

அருளலாது அணுவும் அசைந்திடாது அதனால்
அருள்நலம் பரவுகென்று அறைந்தமெய்ச்சிவமே
அருளுறின் எல்லாம் ஆகும் ஈது உண்மை
அருளுற முயல்கவென்று அருளியசிவமே
அருள்நெறி ஒன்றே தெருள்நெறி மற்றெலாம்
இருள்நெறி யென எனக்கு இயம்பிய சிவமே
அருள்பெறில் துரும்பும் ஓர்ஐந்தொழில் புரியும்
தெருளிது எனவே செப்பிய சிவமே
அருளறிவு ஒன்றே அறிவுமற் றெல்லாம்
மருளறிவு என்றே வகுத்த மெய்ச்சிவமே

Koviloor Digital Library

அருட்சுகம் ஒன்றே அரும்பெறல் பெருஞ்சுகம்
மருட்சுகம் பிறஎன வகுத்த மெய்ச்சிவமே
அருட்பேறு அதுவே அரும்பெறல் பெரும்பேறு
இருட்பேறு அறுக்கும் என்றியம் பியசிவமே
அருள்தனி வல்லபம் அதுவே எல்லாஞ்செய்
பொருள் தனிச்சித்தெனப் புகன்ற மெய்ச்சிவமே
அருளறியார் தமை அறியார் எம்மையும்
பொருளறியார் எனப் புகன்ற மெய்ச்சிவமே
அருள்நிலை ஒன்றே அனைத்தும் பெறுநிலை
பொருள் நிலை காண்கெனப் புகன்ற மெய்ச்சிவமே
அருள் வடிவு அதுவே அழியாத் தனிவடிவு
அருள்பெற முயலுகென்று அருளிய சிவமே
அருளே நம்மியல் அருளே நம்உரு
அருளே நம்வடிவாம் என்ற சிவமே
அருளே நம்அடி அருளே நம்முடி
அருளே நம்நடு ஆம் என்ற சிவமே
அருளே நம்மறிவு அருளே நம்மனம்
அருளே நம்குணமாம் என்ற சிவமே
அருளே நம்பதி அருளே நம்பதம்
அருளே நம்மிடமாம் என்ற சிவமே
அருளே நம்துணை அருளே நம்தொழில்
அருளே நம் விருப்பாம் என்ற சிவமே
அருளே நம்பொருள் அருளே நம்ஒளி
அருளே நாம் அறிவாய் என்ற சிவமே
அருளே நம்குலம் அருளே நம்இனம்
அருளே நாம் அறிவாய் என்ற சிவமே
அருளே நம்சுகம் அருளே நம்பெயர்
அருளே நாம் அறி வாய் என்ற சிவமே
அருளொளி அடைந்தனை அருளமுது உண்டனை
அருள்மதி வாழ்கவென்று அருளிய சிவவே
அருள்நிலை பெற்றனை அருள்வடிவு உற்றனை
அருளரசு இயற்றுகென்று அருளிய சிவமே

உள்ளகத் தமர்ந்தெனது உயிரிற் கலந்தருள்
வள்ளல்சிற் றம்பலம் வளர்சிவ பதியே
நிகரிலா இன்ப நிலைநடு வைத்தெனைத்
தகவொடு காக்கும் தனிச் சிவபதியே
சுத்த சன்மார்க்க சுகநிலை தனிலெனைச்
சத்தியன் ஆக்கிய தனிச் சிவபதியே
ஐவருங் காண்டற்கு அரும் பெரும் பொருள் என்
கைவரப் புரிந்த கதிசிவ பதியே

Koviloor Digital Library

துன்பம் தொலைத்தருள் ஜோதியால் நிறைந்த
இன்பம் எனக்கருள் எழில் சிவபதியே
சித்தமும் வாக்கும் செல்லாப் பெருநிலை
ஒத்துற வேற்றிய ஒரு சிவபதியே
கையறவு அனைத்தும் கடிந்து எனைத்தேற்றி
வையமேல் வைத்த மாசிவ பதியே
இன்புறச் சிறியேன் எண்ணுதோ றெண்ணுதோறும்
அன்பொடுஎன் கண்ணுறும் அருட்சிவபதியே
பிழையெலாம் பொறுத்து எனுள் பிறங்கிய கருணை
மழையெலாம் பொழிந்து வளர் சிவபதியே
உளத்தினும் கண்ணினும் உயிரினும் எனது
குளத்தினும் நிரம்பிய குருசிவ பதியே
பரமுடன் அபரம் பகர்நிலை இவையெனத்
திரமுற அருளிய திருவருட் குருவே
மதிநிலை இரவியின் வளர்நிலை அனலின்
திதிநிலை அனைத்தும் தெரித்த சற்குருவே
கணநிலை அவற்றின் கருநிலை அனைத்தும்
குணமுறத் தெரித்து உட்குலவு சற்குருவே
பதிநிலை பசுநிலை பாசநிலை எலாம்
மதியுறத் தெரித்து உள்வயங்கு சற்குருவே
பிரம ரகசியம் பேசி என்னுளத்தே
தரமுற விளங்கும் சாந்த சற்குருவே
பரம ரகசியம் பகர்ந்து எனதுளத்தே
வரமுற வளர்த்து வயங்கு சற்குருவே
சிவரகசியம் எலாம் தெரிவித்து எனக்கே
நவநிலை காட்டிய ஞானசற் குருவே
சத்தியல் அனைத்தும் சித்தியல் முழுவதும்
அத்தகை தெரித்த அருட்சிவ குருவே
அறிபவை எல்லாம் அறிவித்து என்னுள்ளே
பிறிவற விளங்கும் பெரிய சற்குருவே
கேட்பவை எல்லாம் கேட்பித்து எனுள்ளே
வேட்கையின் விளங்கும் விமல சற்குருவே
காண்பவை எல்லாம் காட்டுவித்து எனக்கே
மாண்பதம் அளித்து வயங்கு சற்குருவே
செய்பவை எல்லாம் செய்வித்து எனக்கே
உய்பவை அளித்தெனுள் ஓங்கு சற்குருவே
உண்பவை எல்லாம் உண்ணுவித்து என்னுள்
பண்பினில் விளங்கும் பரம சற்குருவே
சாகாக் கல்வியின் தரமெலாம் கற்பித்து
ஏகாக் கரப்பொருள் ஈந்த சற்குருவே

Koviloor Digital Library

சத்திய மாம்சிவ சித்திகள் அனைத்தையும்
மெய்த்தகை அளித்தெனுள் விளங்கு சற்குருவே
எல்லா நிலைகளும் ஏற்றிச் சித்தெலாம்
வல்லான் எனஎனை வைத்த சற்குருவே

சீருற அருளாம் தேசுற அழியாப்
பேருற என்னைப் பெற்ற நற்றாயே
பொருந்திய அருட்பெரும் போகமே உறுகெனப்
பெருந்தயவால் எனைப் பெற்ற நற்றாயே
ஆன்ற சன்மார்க்கம் அணிபெற எனைத்தான்
ஈன்றமுது அளித்த இனிய நற்றாயே
பசித்திடுதோறும் என்பால் அணைந்து அருளால்
வசித்தமுது அருள்புரி வாய்மை நற்றாயே
தளர்ந்ததோ றடியேன் சார்பணைந் தென்னை
உளந்தெளி வித்த ஒருமை நற்றாயே
அருளமு தேமுதல் ஐவகை அமுதமும்
தெருளுற எனக்கருள் செல்வ நற்றாயே
இயலமு தேமுதல் எழுவகை அமுதமும்
உயலுற எனக்கருள் உரிய நற்றாயே
நண்புறும் எண்வகை நவவகை அமுதமும்
பண்புற எனக்கருள் பண்புடைத்தாயே
மற்றுள அமுத வகையெலாம் எனக்கே
உற்றுண அளித்தருள் ஓங்கு நற்றாயே
கலக்கமும் அச்சமும் கடிந்து என துளத்தே
அலக்கணும் தவிர்த்தருள் அன்புடைத்தாயே
துய்ப்பினில் அனைத்தும் சுகம்பெற அளித்தெனக்கு
எய்ப்பெலாம் தவிர்த்த இன்புடைத்தாயே
சித்திகள்எல்லாம் தெளிந்திட எனக்கே
சத்தியை அளித்த தயவுடைத்தாயே
சத்தினி பாதந் தனையளித்து எனைமேல்
வைத்தமு தளித்த மரபுடைத்தாயே
சத்தி சத்தர்கள் எலாஞ் சார்ந்தெனது ஏவல்செய்
சித்தியை அளித்த தெய்வ நற்றாயே
தன்னிகர் இல்லாத் தலைவனைக் காட்டியே
என்னை மேலேற்றிய இனிய நற்றாயே
வெளிப்பட விரும்பிய விளைவெலாம் எனக்கே
அளித்தளித்து இன்புசெய் அன்புடைத் தாயே
எண்அகத் தொடுபுறத்து என்னைஎஞ் ஞான்றும்
கண்எனக் காக்கும் கருணை நற்றாயே
இன்னருள் அமுதளித்து இறவாத் திறல்புரிந்து
என்னை வளர்த்திடும் இன்புடைத் தாயே

Koviloor Digital Library

என்னுடல் என்னுயிர் என்னறிவு எல்லாம்
தன்னவென் றாக்கிய தயவுடைத்தாயே
தெரியா வகையால் சிறியேன் தளர்ந்திடத்
தரியாது அணைத்த தயவுடைத் தாயே
சினமுதல் அனைத்தையும் தீர்த்தெனை நனவினும்
கனவினும் பிரியாக் கருணை நற்றாயே
தூக்கமும் சோம்பும் என் துன்பமும் அச்சமும்
ஏக்கமும் நீக்கிய என் தனித் தாயே

துன்பெலாந் தவிர்த்துளே அன்பெலாம் நிரம்ப
இன்பெலாம் அளித்த என்தனித் தந்தையே
எல்லா நன்மையும் என்றனக்கு அளித்த
எல்லாம் வல்லசித்து என்தனித் தந்தையே
நாயிற்கடையேன் நலம்பெறக் காட்டிய
தாயிற் பெரிதும் தயவுடைத் தந்தையே
அறிவிலாப் பருவத்து அறிவெனக்கு அளித்தே
பிறிவிலாது அமர்ந்த பேரருள் தந்தையே
புன்னிகர் இல்லேன் பொருட்டு இவண் அடைந்த
தன்னிகர் இல்லாத் தனிப்பெருந் தந்தையே
அகத்தினும் புறத்தினும் அமர்ந்து அருட்ஜோதி
சகத்தினில் எனக்கே தந்த மெய்த்தந்தையே
இணையிலாக் களிப்புற்று இருந்திட எனக்கே
துணைஅடி சென்னியில் சூட்டிய தந்தையே
ஆதியீறு அறியா அருளரசு ஆட்சியில்
ஜோதிமா மகுடம் சூட்டிய தந்தையே
எட்டிரண்டு அறிவித்து எனைத்தனி ஏற்றிப்
பட்டிமண்டபத்தில் பதித்த மெய்த் தந்தையே
தங்கோல் அளவது தந்து அருட்ஜோதிச்
செங்கோல் செலுத்தெனச் செப்பிய தந்தையே
தன்பொருள் அனைத்தையும் தன் அரசாட்சியில்
என்பொருள் ஆக்கிய என்தனித் தந்தையே
தன்வடிவு அனைத்தையும் தன் அரசாட்சியில்
என்வடிவு ஆக்கிய என்றனித் தந்தையே
தன்சித் தனைத்தையும் தன் சமுகத்தினில்
என்சித் தாக்கிய என்றனித் தந்தையே
தன்வசம் ஆகிய தத்துவம் அனைத்தையும்
என்வசம் ஆக்கிய என்னுயிர்த் தந்தையே
தன்கையில் பிடித்த தனி அருட்ஜோதியை
என்கையில் கொடுத்த என்றனித் தந்தையே
தன்னையும் தன்னருள் சத்தியின் வடிவையும்
என்னையும் ஒன்றென இயற்றிய தந்தையே

Koviloor Digital Library

தன்இயல் என்இயல் தன்செயல் என்செயல்
என்ன இயற்றிய என்தனித் தந்தையே
தன்உரு என் உரு தன்உரை என்உரை
என்ன இயற்றிய என்தனித் தந்தையே
சதுரப் பேரருள் தனிப்பெரும் தலைவனென்று
எதிரற்று ஓங்கிய என்னுடைத் தந்தையே
மனவாக் கறியா வரைப்பினில் எனக்கே
இனவாக் கருளிய என்னுயிர்த்தந்தையே
உணர்ந்துணர்ந்து உணரினும் உணராப் பெருநிலை
அணைந்திட எனக்கே அருளிய தந்தையே
துரிய வாழ்வுடனே சுக பூரணமெனும்
பெரிய வாழ்வளித்த பெருந்தனித் தந்தையே
ஈறிலாப் பதங்கள் யாவையும் கடந்த
பேறளித்து ஆண்டபெருந்தகைத்தந்தையே
எவ்வகைத் திறத்தினும் எய்துதற்கு அரிதாம்
அவ்வகை நிலையெனக் களித்த நல்தந்தையே
இனிப் பிறவாநெறி எனக்களித்து அருளிய
தனிப்பெரும் தலைமைத் தந்தையே தந்தையே

பற்றயர்ந்து அஞ்சிய பரிவுகண் டணைந்துஎனைச்
சற்றுமஞ்சேல் எனத் தாங்கிய துணையே
தளர்ந்தஅத் தருணம்என் தளர்வெலாம் தவிர்த்துஉள்
கிளர்ந்திட எனக்குக் கிடைத்த மெய்த்துணையே
துறையிது வழியிது துணிவிது நீசெயும்
முறையிது எனவே மொழிந்தமெய்த்துணையே
எங்குறு தீமையும் எனைத்தொடரா வகை
கங்குலும் பகலும் மெய்க்காவல்செய்துணையே
வேண்டிய வேண்டிய விருப்பெலாம் எனக்கே
ஈண்டிருந்து அருள்புரி என்னுயிர்த் துணையே
இகத்தினும் பரத்தினும் எனக்கிடர் சாராது
அகத்தினும் புறத்தினும் அமர்ந்த மெய்த்துணையே

அயர்வற எனக்கே அருள்துணை யாகிஎன்
உயிரினும் சிறந்த ஒருமை என் நட்பே
அன்பினில் கலந்து எனதறிவினில் பயின்றே
இன்பினில் அளைந்தஎன் இன்னுயிர் நட்பே
நான் புரிவன எலாம்தான் புரிந்து எனக்கே
வான் பதம் அளிக்க வாய்த்த நல்நட்பே
உள்ளமும் உணர்ச்சியும் உயிரும் கலந்துகொண்டு
எள்ளுறு நெய்யில் என்உள்ளுறும் நட்பே
செற்றமும் தீமையும் தீர்த்துநான் செய்த
குற்றமும் குணமாக் கொண்ட என்நட்பே

Koviloor Digital Library

குணங்குறி முதலிய குறித்திடாது எனையே
அணங்கறக் கலந்த அன்புடை நட்பே
பிணக்கும் பேதமும் பேயுல கோர்புகல்
கணக்கும் தீர்த்தெனைக் கலந்தநல் நட்பே
சவலை நெஞ்சகத்தின் தளர்ச்சியும் அச்சமும்
கவலையும் தவிர்த்தெனைக் கலந்தநன் நட்பே

களைப்பறிந் தெடுத்துக் கலக்கம் தவிர்த்தெனக்கு
இளைப்பறிந்து உதவிய என்னுயிர் உறவே
தன்னைத் தழுவுறு தரஞ்சிறிது அறியா
என்னைத் தழுவிய என்னுயிர் உறவே
மனக்குறை நீக்கிநல் வாழ்வளித்து என்றும்
எனக்குறவு ஆகிய என்னுயிர் உறவே
துன்னும் அனாதியே சூழ்ந்துஎனைப் பிரியாது
என்னுறவு ஆகிய என்னுயிர் உறவே

என்றுமோர் நிலையாய் என்றுமோர் இயலாய்
என்றும் உள் ளதுவாம் என்தனிச் சத்தே
அனைத்துலகு அவைகளும் ஆங்காங்கு உணரினும்
இனைத்தென அறியா என்தனிச் சத்தே
பொதுமறை முடிகளும் புகலவை முடிகளும்
இதுஎனற்கு அரிதாம் என்தனிச் சத்தே
ஆகம முடிகளும் அவைபுகல் முடிகளும்
ஏகுதற்கு அரிதாம் என்தனிச் சத்தே
சத்தியம் சத்தியம் சத்தியம் எனவே
இத்தகை வழுத்தும் என்தனிச் சத்தே
துரியமும் கடந்ததோர் பெரியவான் பொருள்என
உரைசெய் வேதங்கள் உன்னும் மெய்ச்சத்தே
அன்றதன் அப்பால் அதன்பரத்து அதுதான்
என்றிட நிறைந்த என்தனிச் சத்தே

என்றும் உள்ளதுவாய் எங்கும் ஓர் நிறைவாய்
என்றும் விளங்கிடும் என்தனிச் சித்தே
சத்திகள் பலவாய்ச் சத்தர்கள் பலவாய்
இத்தகை விளங்கும் என்தனிச் சித்தே
தத்துவம் பலவாய்த் தத்துவி பலவாய்
இத்தகை விளங்கும் என்தனிச் சித்தே
படி நிலை பலவாய்ப் பதநிலை பலவாய்
இடிவற விளங்கிடும் என்தனிச் சித்தே
மூர்த்தர்கள் பலவாய் மூர்த்திகள் பலவாய்
ஏற்பட விளக்கிடும் என்தனிச் சித்தே

Koviloor Digital Library

உயிர்வகை பலவாய் உடல்வகை பலவாய்
இயலுற விளக்கிடும் என்தனிச் சித்தே
அறிவவை பலவாய் அறிவன பலவாய்
எறிவற விளக்கிடும் என்தனிச் சித்தே
நினைவவை பலவாய் நினைவன பலவாய்
இனைவற விளக்கிடும் என்தனிச் சித்தே
காட்சிகள் பலவாய்க் காண்பன பலவாய்
ஏட்சியின் விளக்கிடும் என்தனிச் சித்தே
செய்வினை பலவாய்ச் செய்வன பலவாய்
எய்வற விளக்கிடும் என்தனிச் சித்தே
அண்டசராசரம் அனைத்தையும் பிறவையும்
எண்தர விளக்கும்என்தனிச் சித்தே
எல்லாம் வல்லசித்து எனமறை புகன்றிட
எல்லாம் விளக்கிடும் என்தனிச் சித்தே

ஒன்றதில் ஒன்றென்று உரைக்கவும் படாதாய்
என்றும் ஓர் படித்தாம் என்தனி இன்பே
இது அது என்னா இயலுடை அதுவாய்
எதிர் அற நிறைந்த என்தனி இன்பே
ஆக்குறும் அவத்தைகள் அனைத்தையும் கடந்துமேல்
ஏக்கற நிறைந்த என்தனி இன்பே
அறிவுக்கு அறிவினில் அது அது அதுவாய்
எறிவற்று ஓங்கிய என்தனி இன்பே
விடயம் எவற்றினும் மேல்மேல் விளைந்தவை
இடையிடை ஓங்கிய என்தனி இன்பே
இம்மையும் மறுமையும் இயம்பிடும் ஒருமையும்
எம்மையும் நிரம்பிடும் என்தனி இன்பே
முத்தர்கள் சித்தர்கள் சத்திகள் சத்தர்கள்
எத்திறத்தவர்க்குமாம் என்தனி இன்பே
எல்லா நிலைகளின் எல்லா உயிர்உறும்
எல்லா இன்புமாம் என்தனி இன்பே

கரும்புறு சாறும் கனிந்தமுக் கனியின்
விரும்புறும் இரதமும் மிக்கதீம் பாலும்
குணங்கொள் கோல் தேனும் கூட்டி ஒன்றாக்கி
மணங்கொளப் பதஞ்செய் வகைஉற இயற்றிய
உணவெனப் பல்கால் உரைக்கினும் நிகரா
வணமுறும் இன்ப மயமே அதுவாய்க்
கலந்து அறிவுறுவாய்க் கருதுதற்கு அரிதாய்
நலந்தரு விளக்கமும் நவிலரும் தண்மையும்
உள்ளதாய் என்றும் உள்ளதாய் என்னுள்
உள்ளதாய் என்தன் உயிர் உளம் உடம்புடன்

Koviloor Digital Library

எல்லாம் இனிப்ப இயலுறு சுவையளித்து
எல்லாம் வல்லசித்து இயற்கைய தாகிச்
சாகா வரமும் தனித்த பேரறிவும்
மாகா தலிற்சிவ வல்லப சத்தியும்
செயற்கரும் அனந்த சித்தியும் இன்பமும்
மயக்கறத் தருந்திறல் வண்மையதாகிப்
பூரண வடிவாய்ப் பொங்கிமேல் ததும்பி
ஆரண முடியுடன் ஆகம முடியும்
கடந்தென தறிவாம் கனமேற் சபைநடு
நடந்திகழ் கின்ற மெய்ஞ்ஞான ஆரமுதே
சத்திய அமுதே தனித்திரு அமுதே
நித்திய அமுதே நிறைசிவ அமுதே
சச்சி தானந்தத் தனிமுதல் அமுதே
மெய்ச் சிதாகாசவிளை அருளமுதே
ஆனந்த அமுதே அருள்ஒளி அமுதே
தானந்தம் இல்லாத் தத்துவ அமுதே
நவநிலை தரும்ஓர் நல்ல தெள்ளமுதே
சிவநிலை தனிலே திரண்ட உள்ளமுதே
பொய்படாக் கருணைப் புண்ணிய அமுதே
கைபடாப் பெருஞ்சீர்க் கடவுள் வானமுதே
அகம்புறம் அகப்புறம் ஆகிய புறப்புறம்
உகந்தநான்கு இடத்தும் ஓங்கிய அமுதே
பனிமுதல் நீக்கிய பரம்பர அமுதே
தனிமுதல் ஆய சிதம்பர அமுதே
உலகெலாம் கொள்ளினும் உலப்பிலா அமுதே
அலகிலாப் பெருந்திறல் அற்புத அமுதே

அண்டமும் அதன்மேல் அண்டமும் அவற்றுள
பண்டமும் காட்டிய பரம்பர மணியே
பிண்டமும் அதிலுறு பிண்டமும் அவற்றுள
பண்டமும் காட்டிய பராபர மணியே
நினைத்தவை நினைத்தவை நினைத்தாங்கு எய்துற
அனைத்தையும் தரும்ஓர் அரும்பெறல் மணியே
விண்பதம் அனைத்தும் மேற்பதம் முழுவதும்
கண்பெற நடத்தும் ககனமா மணியே
பார்பதம் அனைத்தும் பகரடி முழுவதும்
சார்புற நடத்தும் சரவொளி மணியே
அண்டகோடிகள் எலாம் அரைக்கணத்து ஏகிக்
கண்டுகொண்டிட ஒளிர் கலைநிறை மணியே
சராசர உயிர்தொறும் சாற்றிய பொருள்தொறும்
விராவி யுள்விளங்கும் வித்தக மணியே

Koviloor Digital Library

மூவரும் முனிவரும் முத்தரும் சித்தரும்
தேவரும் மதிக்கும் சித்திசெய் மணியே
தாழ்வெலாம் தவிர்த்துச் சகமிசை அழியா
வாழ்வெனக் களித்த வளரொளி மணியே
நவமணி முதலிய நலமெலாம் தருமொரு
சிவமணி எனும் அருட்செல்வமா மணியே

வான் பெறற்கு அரியவகையெலாம் விரைந்து
நான் பெறவளித்த நாத மந்திரமே
கற்பம் பலபல கழியினும் அழியாப்
பொற்புற அளித்த புனித மந்திரமே
அகரமும் உகரமும் அழியாச் சிகரமும்
வகரமும் ஆகிய வாய்மை மந்திரமே
ஐந்தென எட்டென ஆறென நான்கென
முந்துறு மறைமுறை மொழியு மந்திரமே
வேதமும் ஆகம விரிவுகள் அனைத்தும்
ஓதநின்று உலவாது ஓங்கு மந்திரமே

உடற்பிணி அனைத்தையும் உயிர்ப்பிணி அனைத்தையும்
அடர்ப்பறத் தவிர்த்த அருட்சிவ மருந்தே
சித்திக்கு மூலமாம் சிவமருந்து எனஉளம்
தித்திக்கு ஞானத் திருவருள் மருந்தே
இறந்தவர் எல்லாம் எழுந்திடப் புரியும்
சிறந்தவல் லபம்உறு திருவருள் மருந்தே
மரணப் பெரும்பிணி வாரா வகைமிகு
கரணப் பெருந்திறல் காட்டிய மருந்தே
நரைதிரை மூப்பவை நண்ணா வகைதரும்
உரைதரு பெருஞ்சீர் உடையநன் மருந்தே
என்றே என்னினும் இளமையோடு இருக்க
நன்றே தரும் ஒரு ஞானமா மருந்தே
மலப்பிணி தவிர்த்தருள் வலம்தரு கின்றதோர்
நலத்தகை அதுவென நாட்டிய மருந்தே
சிற்சபை நடுவே திருநடம் புரியும்
அற்புத மருந்தெனும் ஆனந்த மருந்தே

இடையுறப் படாத இயற்கை விளக்கமாய்த்
தடைஒன்றும் இல்லாத் தகவுடை யதுவாய்
மாற்றிவை என்ன மதித்து அளப்பரிதாய்
ஊற்றமும் வண்ணமும் ஒருங்குடை அதுவாய்க்
காட்சிக் கினியநற் கலையுடை அதுவாய்
ஆட்சிக் குரியபன் மாட்சியும் உடைத்தாய்

Koviloor Digital Library

கைதவர் கனவினும் காண்டற்கு அரிதாய்ச்
　　செய்தவப் பயனாந் திருவருள் வலத்தால்
உளம்பெறும் இடமெலாம் உதவுக எனவே
　　வளம்பட வாய்த்து மன்னிய பொன்னே
புடம்படாத் தரமும் விடம்படாத் திறமும்
　　வடம்படா நலமும் வாய்த்த செம்பொன்னே
மும்மையும் தருமொரு செம்மையை உடைத்தாய்
　　இம்மையேகிடைத்து இங்கிலங்கிய பொன்னே
எடுத்தெடுத்து உதவினும் என்றும் குறையாது
　　அடுத்தடுத்து ஓங்குமெய் அருளுடைப்பொன்னே
தளர்ந்திடேல் எடுக்கின் வளர்ந்திடு வேம்எனக்
　　கிளர்ந்திட உரைத்துக் கிடைத்த செம்பொன்னே
எண்ணிய தோறும் இயற்றுக என்றெனை
　　அண்ணி என்கரத்தில் அமர்ந்தபைம் பொன்னே
நீகேண் மறக்கினும் நின்னையாம் விட்டுப்
　　போகேம் என எனைப் பொருந்திய பொன்னே
எண்ணிய எண்ணியாங்கு எய்திட எனக்குப்
　　பண்ணிய தவத்தால் பழுத்த செம்பொன்னே
விண்ணியல் தலைவரும் வியந்திட எனக்குப்
　　புண்ணியப் பயனால் பூத்த செம்பொன்னே
நால்வகை நெறியினும் நாட்டுக எனவே
　　பால்வகை முழுதும் பணித்த பைம்பொன்னே
எழுவகை நெறியினும் இயற்றுக எனவே
　　முழுவகைகாட்டி முயங்கிய பொன்னே

எண்ணியபடி எலாம் இயற்றுக என்றெனைப்
　　புண்ணிய பலத்தாற் பொருந்திய நிதியே
ஊழிதோ றூழி உலப்புறாது ஓங்கி
　　வாழிஎன்று எனக்கு வாய்த்த நன்னிதியே
இதமுற ஊழிதோறு எடுத்தெடுத்து உலகோர்க்கு
　　உதவினும் உலவாது ஓங்கு நன்னிதியே
இருநிதி எழுநிதி இயல்நவ நிதிமுதல்
　　திருநிதி எல்லாம் தரும்ஒரு நிதியே
எவ்வகை நிதிகளும் இந்தமா நிதியிடை
　　அவ்வகை கிடைக்கும் என்று அருளிய நிதியே
அற்புதம் விளங்கும் அருட்பெரு நிதியே
　　கற்பனை கடந்த கருணைமா நிதியே
நற்குண நிதியே சற்குண நிதியே
　　நிற்குண நிதியே சிற்குண நிதியே

Koviloor Digital Library

பளகிலாது ஓங்கும் பளிக்குமா மலையே
வளம்எலாம் நிறைந்த மாணிக்க மலையே
மதியுற விளங்கும் மரகத மலையே
வதிதரு பேரொளி வச்சிர மலையே
உரைமனம் கடந்தாங்கு ஓங்குபொன் மலையே
துரியமேல் வெளியில் ஜோதிமா மலையே

புற்புதம் திரைநுரை புரைமுதல் இலதோர்
அற்புதக் கடலே அமுதத்தண் கடலே
இருட்கலை தவிர்த்தொளி எல்லாம் வழங்கிய
அருட்பெரும் கடலே ஆனந்தக் கடலே
பவக்கடல் கடந்துநான் பார்த்தபோது அருகே
உவப்புறு வளங்கொண்டு ஓங்கிய கரையே
என் துயர்ச் சோடைகள் எல்லாம் தவிர்த்துளம்
நன்றுற விளங்கிய நந்தனக்காவே
சேற்றுநீர் இன்றிநல் தீஞ்சுவை தரும்ஓர்
ஊற்றுநீர் நிரம்ப உடையபூந் தடமே
கோடைவாய் விரிந்த குளிர்தரு நிழலே
மேடைவாய் வீசிய மெல்லிய காற்றே
களைப்பறக் கிடைத்த கருணை நன்னீரே
இளைப்பற வாய்த்த இன்சுவை உணவே
தென்னைவாய்க் கிடைத்த செவ்விளநீரே
தென்னை வான் பலத்தில் திருகுதீம் பாலே
நீர் நசை தவிர்க்கும் நெல்லியங் கனியே
வேர் விளை பலவின் மென்சுவைச் சுளையே
கட்டுமாம் பழமே கதலிவான் பழமே
இட்ட நற்சுவைசெய் இலந்தையங் கனியே
புனிதவான் தருவில் புதுமையாம் பலமே
கனி எலாங் கூட்டிக் கலந்த தீஞ்சுவையே
இதந்தரு கரும்பில் எடுத்த தீஞ்சாறே
பதந்தரு வெல்லப் பாகினின் சுவையே
சாலவே இனிக்கும் சர்க்கரைத் திரளே
ஏலவே நாவுக்கு இனிய கற்கண்டே
உலப்புறாது இனிக்கும் உயர்மலைத் தேனே
கலப்புறா மதுரம் கனிந்த கோற்தேனே
நவையிலாது எனக்கு நண்ணிய நறவே
சுவையெலாம் திரட்டிய தூயதீம் பதமே
பதம்பெறக் காய்ச்சிய பசு நறும் பாலே
இதம்பெற உருக்கிய இளம்பசு நெய்யே
உலர்ந்திடாது என்றும் ஒரு படித்து ஆகி
மலர்ந்துநல் வண்ணம் வயங்கிய மலரே

Koviloor Digital Library

இகந்தரு புவிமுதல் எவ்வுலகு உயிர்களும்
உகந்திட மணக்கும் சுகந்த நன்மணமே
யாழுறும் இசையே இனிய இன்னிசையே
ஏழுறும் இசையே இயல் அருளிசையே
திவள்ஒளிப் பருவம் சேர்ந்த நல்லவளே
அவளொடும் கூடி அடைந்ததோர் சுகமே
நாதநல் வரைப்பின் நண்ணிய பாட்டே
வேதகீதத்தில் விளை திருப்பாட்டே
நன்மார்க்கர் நாவில் நவிற்றிய பாட்டே
சன்மார்க்க சங்கம் தழுவிய பாட்டே
நம்புறும் ஆகமம் நவிற்றிய பாட்டே
எம்பலம் ஆகிய அம்பலப் பாட்டே
என்மனக் கண்ணே என்அருட் கண்ணே
என்இரு கண்ணே என்கணுண் மணியே
என்பெரும் களிப்பே என்பெரும் பொருளே
என்பெரும் திறலே என்பெரும் செயலே
என்பெரும் தவமே என்தவப் பலனே
என்பெருஞ் சுகமே என்பெரும் பேறே
என்பெரு வாழ்வே என்றன் வாழ் முதலே
என்பெரு வழக்கே என்பெரும் கணக்கே
என்பெரு நலமே என்பெரும் குலமே
என்பெரு வலமே என் பெரும்புலமே
என்பெரு வரமே என்பெரும் தரமே
என்பெரு நெறியே என்பெரு நிலையே
என்பெரும் குணமே என்பெரும் கருத்தே
என்பெரும் தயவே என்பெரும் கதியே
என்பெரும் பதியே என்னுயிர் இயலே
என்பெரு நிறைவே என்தனி அறிவே

தோலெலாம் குழைந்திடச் சூழ் நரம்பனைத்தும்
மேலெலாம் கட்டவை விட்டு விட்டு இயங்கிட
என்பெலாம் நெக்குநெக்கு இயலிடை நெகிழ்ந்திட
மென்புடைத் தசையெலாம் மெய்யுறத்தளர்ந்திட
இரத்தம் அனைத்தும் உள் இறுகிடச் சுக்கிலம்
உரத்திடை பந்தித்து ஒருதிரள் ஆயிட
மடல்எலாம் மூளை மலர்ந்திட அமுதம்
உடலெலாம் ஊற்றெடுத்து ஓடி நிரம்பிட
ஒண்ணுதல் வியர்த்திட ஒளிமுகம் மலர்ந்திட
தண்ணிய உயிர்ப்பினில் சாந்தம் ததும்பிட
உண்ணகை தோற்றிட உரோமம் பொடித்திடக்
கண்ணில் நீர் பெருகிக் கால்வழிந்து ஓடிட

Koviloor Digital Library

வாய்துடித்து அலறிட வளர்செவித் துணைகளிற்
கூயிசைப் பொறியெலாம் கும்மெனக் கொட்டிட
மெய்யெலாம் குளிர்ந்திட மென்மார் பசைந்திடக்
கையெலாம் குவிந்திடக் காலெலாம் சுலவிட
மனங்கனிந் துருகிட மதிநிறைந் தொளிர்ந்திட
இனம்பெறு சித்தம் இயைந்து களித்திட
அகங்காரம் ஆங்காங்கு அதிகரிப் பமைந்திடச்
சகங்காண உள்ளம் தழைத்து மலர்ந்திட
அறிவுறு அனைத்தும் ஆனந்தம் ஆயிடப்
பொறியுறும் ஆன்மதற் போதமும் போயிடத்
தத்துவம் அனைத்தும் தாம்ஒருங்கு ஒழிந்திடச்
சத்துவம் ஒன்றே தனித்துநின்று ஓங்கிட
உலகெலாம் விடயம் உளவெலாம் மறைந்திட
அலகிலா அருளின் ஆசைமேல் பொங்கிட
என்னுளத் தெழுந்து உயிர்எல்லாம் மலர்ந்திட
என்னுளத்து ஓங்கிய என்தனி அன்பே
பொன்னடி கண்டு அருட் புத்தமுது உணவே
என்னுளத்து எழுந்த என்னுடை அன்பே
தன்னையே எனக்குத் தந்தருள் ஒளியால்
என்னை வேதித்த என்தனி அன்பே
என்னுளே அரும்பி என்னுளே மலர்ந்து
என்னுளே விரிந்த என்னுடை அன்பே
என்னுளே விளங்கி என்னுளே பழுத்து
என்னுளே கனிந்த என்னுடை அன்பே
தன்னுளே நிறைவுறு தரமெலாம் அளித்தே
என்னுளே நிறைந்த என்தனி அன்பே
துன்புள அனைத்தும் தொலைத்து எனதுஉருவை
இன்புரு ஆக்கிய என்னுடை அன்பே
பொன்னுடம்பு எனக்குப்பொருந்திடும் பொருட்டா
என்னுளம் கலந்த என்தனி அன்பே
தன்வசமாகித் ததும்பிமேல் பொங்கி
என்வசம் கடந்த என்னுடை அன்பே
தன்னுளே பொங்கிய தண்ணமுது உணவே
என்னுளே பொங்கிய என்தனி அன்பே

அருளொளி விளங்கிட ஆணவம் எனும் ஓர்
இருளற என்னுளத்து ஏற்றிய விளக்கே
துன்புறு தத்துவத் துரிசெலாம் நீக்கிநல்
இன்புற என்னுளத்து ஏற்றிய விளக்கே
மயலற அழியா வாழ்வு மேன்மேலும்
இயலுற என்னுளத்து ஏற்றிய விளக்கே

Koviloor Digital Library

இடுவெளி அனைத்தும் இயல்ஒளி விளங்கிட
நடுவெளி நடுவே நாட்டிய விளக்கே
கருவெளி அனைத்தும் கதிரொளி விளங்கிட
உருவெளி நடுவே ஒளிர்தரு விளக்கே
தேற்றிய வேதத் திருமுடி விளங்கிட
ஏற்றிய ஞான இயலொளி விளக்கே
ஆகம முடிமேல் அருளொளி விளங்கிட
வேகமது அறவே விளங்கொளி விளக்கே
ஆரியர் வழுத்திய அருள்நிலை அனாதி
காரியம் விளக்கும் ஓர் காரண விளக்கே

தண்ணிய அமுதே தந்து என துளத்தே
புண்ணியம் பலித்த பூரணமதியே
உய்தர அமுதம் உதவி என்னுளத்தே
செய்தவம் பலித்த திருவளர் மதியே
பதியெலாம் தழைக்கப் பதம் பெறும் அமுத
நிதியெலாம் அளித்த நிறைதிரு மதியே
பாலெனத்தண்கதிர் பரப்பி எஞ்ஞான்று
மேல்வெளி விளங்க விளங்கிய மதியே

உயங்கிய உள்ளமும் உயிரும் தழைத்திட
வயங்கிய கருணை மழைபொழி மழையே
என்னையும் பணிகொண்டு என்னுளே நிரம்ப
மன்னிய கருணை மழைபொழி மழையே
உளங்கொளும் எனக்கே உவகைமேல் பொங்கி
வளங்கொளக் கருணை மழைபொழி மழையே
நலந்தர உடலுயிர் நல்லறிவு எனக்கே
மலர்ந்திடக் கருணை மழைபொழி மழையே
தூய்மையால் எனது துரிசெலாம் நீக்கிநல்
வாய்மையால் கருணை மழைபொழி மழையே

வெம்மல இரவது விடி தருணம்தனில்
செம்மையில் உதித்துளம் திகழ்ந்த செஞ்சுடரே
திரையெலாம் தவிர்த்துச் செவ்விஉற்று ஆங்கே
வரையெலாம் விளங்க வயங்கு செஞ்சுடரே
அலகிலாத் தலைவர்கள் அரசு செய் தத்துவ
உலகெலாம் விளங்க ஓங்கு செஞ்சுடரே
முன்னுறு மலஇருள் முழுவது நீக்கியே
என்னுள வரைமேல் எழுந்த செஞ்சுடரே
ஆதியும் நடுவுடன் அந்தமும் கடந்த
ஜோதியாய் என்னுளம் சூழ்ந்த மெய்ச்சுடரே

Koviloor Digital Library

உள்ளொளி ஓங்கிட உயிரொளி விளங்கிட
வெள்ளொளிகாட்டிய மெய்யருட்கனலே
நலங்கொளப் புரிந்திடு ஞானயா கத்திடை
வலஞ்சுழித்து எழுந்து வளர்ந்த மெய்க்கனலே
வேதமும் ஆகமவிரிவும் பரம்பர
நாதமும் கடந்த ஞானமெய்க் கனலே
எண்ணிய எண்ணிய எல்லாம்தர எனுள்
நண்ணிய புண்ணிய ஞானமெய்க் கனலே
வலமுறு சுத்தசன் மார்க்க நிலைபெறு
நலமெலாம் அளித்த ஞானமெய்க் கனலே

இரவொடு பகலிலா இயல்பொது நடமிடு
பரம வேதாந்தப் பரம்பரஞ் சுடரே
வரநிறை பொதுவிடை வளர்திரு நடம்புரி
பரம சித்தாந்தப் பதிபரஞ் சுடரே
சமரச சத்தியச் சபையில் நடம்புரி
சமரச சத்தியத் தற்சுயம் சுடரே

சபைஎன துளமெனத் தானமர்ந்து எனக்கே
அபயம் அளித்ததோர் அருட்பெருஞ்ஜோதி
மருளெலாம் தவிர்த்து வரமெலாம் கொடுத்தே
அருளமுது அருத்தியஅருட்பெருஞ்ஜோதி
வாழிநின்பேரருள் வாழிநின் பெருஞ்சீர்
ஆழி ஒன்றளித்த அருட்பெருஞ்ஜோதி
என்னையும் பொருளென எண்ணி என்னுளத்தே
அன்னையும் அப்பனும் ஆகி வீற்றிருந்து
உலகியல் சிறிதும் உளம்பிடி யாவகை
அலகில்பே ரருளால் அறிவது விளக்கிச்
சிறுநெறி செல்லாத் திறனளித்து அழியாது
உறுநெறி உணர்ச்சி தந்து ஒளியுறப் புரிந்து
சாகாக் கல்வியின் தரமெலாம் உணர்த்திச்
சாகா வரத்தையும் தந்துமேன் மேலும்
அன்பையும் விளைவித்து அருட்பே ரொளியால்
இன்பையும் நிறைவித்து என்னயைும் நின்னையும்
ஓர்உரு ஆக்கியான் உன்னியபடி எலாம்
சீர்உறச் செய்துயிர்த் திறம்பெற அழியா
அருளமுது அளித்தனை அருள்நிலை ஏற்றினை
அருளறிவு அளித்தனை அருட்பெருஞ்ஜோதி
வெல்கநின் பேரருள் வெல்கநின் பெருஞ்சீர்
அல்கலின் றோங்கிய அருட்பெருஞ்ஜோதி

Koviloor Digital Library

உலகுயிர்த் திரளெலாம் ஒளிநெறி பெற்றிட
இலகும் ஐந்தொழிலையும் யான்செயத் தந்தனை
போற்றிநின் பேரருள் போற்றிநின் பெருஞ்சீர்
ஆற்றலின் ஓங்கிய அருட்பெருஞ்ஜோதி
மூவரும் தேவரும் முத்தரும் சித்தரும்
யாவரும் பெற்றிடா இயல்எனக் களித்தனை
போற்றிநின் பேரருள் போற்றிநின் பெருஞ்சீர்
ஆற்றலின் ஓங்கிய அருட்பெருஞ்ஜோதி
சித்திகள் அனைத்தையும் தெளிவித்து எனக்கே
சத்திய நிலைதனைத் தயவினில் தந்தனை
போற்றிநின் பேரருள் போற்றிநின் பெருஞ்சீர்
ஆற்றலின் ஓங்கிய அருட்பெருஞ்ஜோதி
உலகினில் உயிர்களுக்கு உறும்இடையூ றெலாம்
விலகநீ அடைந்து விலக்குக மகிழ்க
சுத்த சன்மார்க்க சுகநிலை பெறுக
உத்தமன் ஆகுக ஓங்குக என்றனை
போற்றிநின் பேரருள் போற்றிநின் பெருஞ்சீர்
ஆற்றலின் ஓங்கிய அருட்பெருஞ்ஜோதி
அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி
அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி

திருச்சிற்றம்பலம்

Koviloor Digital Library

3. அருட்பெருஞ்ஜோதி அட்டகம்

எழுசீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

5 அருட்பெரு வெளியில் அருட்பெரு உலகத்து
அருட்பெருந் தலத்து மேல் நிலையில்
அருட்பெரும் பீடத்து அருட்பெரு வடிவில்
அருட்பெரும் திருவிலே அமர்ந்த
அருட்பெரும் பதியே அருட்பெரும் நிதியே
அருட்பெரும் சித்தி என் அமுதே
அருட்பெரும் களிப்பே அருட்பெரும் சுகமே
அருட்பெருஞ் ஜோதி என் அரசே. 1

6 குலவுபே ரண்டப் பகுதியோர் அனந்த
கோடி கோடிகளும் ஆங்காங்கே
நிலவிய பிண்டப் பகுதிகள் முழுதும்
நிகழ்ந்தபற் பலபொருள் திரளும்
விலகுறாது அகத்தும் புறத்தும் மேலிடத்தும்
மெய்யறி வானந்தம் விளங்க
அலகுறாது ஒழியாது அதுவதில் விளங்கும்
அருட்பெருஞ் ஜோதிஎன் அரசே. 2

7 கண்முதல் பொறியால் மனமுதல் கரணக்
கருவினால் பகுதியின் கருவால்
எண்முதல் புருட தரத்தினால் பரத்தால்
இசைக்கும் ஓர் பரம்பர உணர்வால்
விண்முதல் பரையால் பராபர அறிவால்
விளங்குவது அரிதென உணர்ந்தோர்
அண்முதல் தடித்துப் படித்திட ஓங்கும்
அருட்பெருஞ் ஜோதிஎன் அரசே. 3

8 நசைத்த மேனிலை ஈதென உணர்ந்தாங்கே
நண்ணியும் கண்ணுறாது அந்தோ
திசைத்தமா மறைகள் உயங்கின மயங்கித்
திரும்பின எனில் அதன் இயலை
இசைத்தல் எங்ஙனமோ ஐயகோ சிறிதும்
இசைத்திடு வேம்என நாவை
அசைத்திடற்கு அரிதென்று உணர்ந்துளோர் வழுத்தும்
அருட்பெருஞ் ஜோதிஎன் அரசே. 4

Koviloor Digital Library

9 சுத்த வேதாந்த மவுனமோ அலது
சுத்த சித்தாந்த ராசியமோ
நித்த நாதாந்த நிலை அனுபவமோ
நிகழ்பிற முடிபின் மேல்முடிபோ
புத்தமு தனைய சமரசத் ததுவோ
பொருளியல் அறிந்திலம் எனவே
அத்தகை உணர்ந்தோர் உரைத்து உரைத்தேத்தும்
அருட்பெருஞ் ஜோதிஎன் அரசே. 5

10 ஏகமோ அன்றி அனேகமோ என்றும்
இயற்கையோ செயற்கையோ சித்தோ
தேகமோ பொதுவோ சிறப்பதோ பெண்ணோ
திகழ்ந்திடும் ஆணதோ அதுவோ
யோகமோ பிரிவோ ஒளியதோ வெளியோ
உரைப்பது எற்றோஎன உணர்ந்தோர்
ஆகமோ டுரைத்து வழுத்த நின்றோங்கும்
அருட்பெருஞ்ஜோதி என் அரசே. 6

11 தத்துவம் அனைத்தும் தனித்தனி கடந்தேம்
தத்துவா தீதமேல் நிலையில்
சித்தியல் முழுதும் தெரிந்தனம் அவைமேல்
சிவநிலை தெரிந்திடச் சென்றேம்
ஒத்தஅந் நிலைக்கண் யாமும் எம்உணர்வும்
ஒருங்குறக் கரைந்துபோ யினம்என்று
அத்தகை யுணர்ந்தோர் வழுத்த நின்றோங்கும்
அருட்பெருஞ்ஜோதி என் அரசே. 7

12 எங்குமாய் விளங்கும் சிற்சபை யிடத்தே
இது அது என உரைப் பரிதாய்த்
தங்குமோர் இயற்கைத் தனிஅனு பவத்தைத்
தந்து எனைத் தன்மய மாக்கிப்
பொங்கும் ஆனந்த போகபோக் கியனாய்ப்
புத்தமு தருத்தியென் உளத்தே
அங்கையில் கனிபோன்று அமர்ந்தருள் புரிந்த
அருட்பெருஞ்ஜோதி என் அரசே. 8

திருச்சிற்றம்பலம்

Koviloor Digital Library

4. பதிவிளக்கம்

எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

13 அகரநிலை விளங்குசத்தர் அனைவருக்கும் அவர்பால்
அமர்ந்தசத்தி மாரவர்கள் அனைவருக்கும் அவரால்
பகரவரும் அண்டவகை அனைத்தினுக்கும் பிண்டப்
பகுதிகள்அங் கனைத்தினுக்கும் பதங்கள்அனைத் தினுக்கும்
இகரமுறும் உயிர்எவைக்கும் கருவிகள்அங் கெவைக்கும்
எப்பொருட்கும் அனுபவங்கள் எவைக்கும்முத்தி எவைக்கும்
சிகரமுதல் சித்திவகை எவைக்கும்ஒளி வழங்கும்
திருச்சிற்றம் பலந்தனிலே தெய்வமொன்றே கண்டீர். 1

14 வண்ணமிகு பூதவெளி பகுதிவெளி முதலா
வகுக்குமடி வெளிகளெலாம் வயங்குவெளி யாகி
எண்ணமுறு மாமவுன வெளியாகி அதன்மேல்
இசைத்தபர வெளியாகி இயல்உபய வெளியாய்
அண்ணுறுசிற் பரவெளியாய்த் தற்பரமாம் வெளியாய்
அமர்ந்தபெரு வெளியாகி அருளின்ப வெளியாய்த்
திண்ணமுறும் தனிஇயற்கை உண்மைவெளி யான
திருச்சிற்றம் பலந்தனிலே தெய்வமொன்றே கண்டீர். 2

15 சார்பூத விளக்கமொடு பகுதிகளின் விளக்கம்
தத்துவங்கள் விளக்கமெலாந் தருவிளக்க மாகி
நேராதி விளக்கமதாய்ப் பரைவிளக்க மாகி
நிலைத்தபரா பரைவிளக்க மாகிஅகம் புறமும்
பேராசை விளக்கமதாய்ச் சுத்தவிளக் கமதாய்ப்
பெருவிளக்க மாகிஎலாம் பெற்றவிளக் கமதாய்ச்
சீராட விளங்குகின்ற இயற்கைவிளக் கமதாம்
திருச்சிற்றம் பலந்தனிலே தெய்வமொன்றே கண்டீர். 3

16 இடம்பெறும்இந் திரியஇன்பம் கரணஇன்பம் உலக
இன்பம்உயிர் இன்பம்முதல் எய்தும்இன்ப மாகித்
தடம்பெறும்ஓர் ஆன்மஇன்பம் தனித்தஅறி வின்பம்
சத்தியப்பே ரின்பம்முத்தி இன்பமுமாய் அதன்மேல்
நடம்பெறுமெய்ப் பொருள்இன்பம் நிரதிசய இன்பம்
ஞானசித்திப் பெரும்போக நாட்டரசின் பமுமாய்த்
திடம்பெறஓங் கிய இயற்கைத் தனிஇன்ப மயமாம்
திருச்சிற்றம் பலந்தனிலே தெய்வமொன்றே கண்டீர். 4

Koviloor Digital Library

17 எல்லாந்தான் உடையதுவாய் எல்லாம்வல் லதுவாய்
எல்லாந்தான் ஆனதுவாய் எல்லாந்தான் அலதாய்ச்
சொல்லாலும் பொருளாலும் தோன்றும்அறி வாலும்
துணிந்தளக்க முடியாதாய்த் துரியவெளி கடந்த
வல்லாளர் அனுபவத்தே அதுஅதுவாய் அவரும்
மதித்திடுங்கால் அரியதுவாய்ப் பெரியதுவாய் அணுவும்
செல்லாத நிலைகளினும் செல்லுவதாய் விளங்கும்
திருச்சிற்றம் பலந்தனிலே தெய்வமொன்றே கண்டீர். 5

18 அயர்வறுபே ரறிவாகி அவ்வறிவுக் கறிவாய்
அறிவறிவுள் அறிவாய்ஆங் கதனுள்ளோர் அறிவாய்
மயர்வறும்ஓர் இயற்கைஉண்மைத் தனிஅறிவாய்ச் செயற்கை
மன்னும்அறி வனைத்தினுக்கும் வயங்கியதா ரகமாய்த்
துயரறுதா ரகமுதலாய் அம்முதற்கோர் முதலாய்த்
துரியநிலை கடந்ததன்மேல் சுத்தசிவ நிலையாய்
உயர்வுறுசிற் றம்பலத்தே எல்லாந்தா மாகி
ஓங்குகின்ற தனிக்கடவுள் ஒருவருண்டே கண்டீர். 6

19 அண்டம்எலாம் பிண்டம்எலாம் உயிர்கள்எலாம் பொருள்கள்
ஆனஎலாம் இடங்கள்எலாம் நீக்கமற நிறைந்தே
கொண்டஎலாங் கொண்டஎலாங் கொண்டுகொண்டு மேலும்
கொள்வதற்கே இடங்கொடுத்துக் கொண்டுசலிப் பின்றிக்
கண்டமெலாங் கடந்துநின்றே அகண்டமதாய் அதுவும்
கடந்தவெளி யாய்அதுவும் கடந்ததனி வெளியாம்
ஒண்தகுசிற் றம்பலத்தே எல்லாம்வல் லவராய்
ஓங்குகின்ற தனிக்கடவுள் ஒருவருண்டே கண்டீர். 7

20 பாரொடுநீர் கனல்காற்றா காயம்எனும் பூதப்
பகுதிமுதல் பகர்நாதப் பகுதிவரை யான
ஏர்பெறுதத் துவஉருவாய்த் தத்துவகா ரணமாய்
இயம்பியகா ரணமுதலாய்க் காரணத்தின் முடிவாய்
நேருறும்அம் முடிவனைத்தும் நிகழ்ந்திடுபூ ரணமாய்
நித்தியமாய்ச் சத்தியமாய் நிற்குணசிற் குணமாய்
ஓர்தருசன் மாத்திரமாம் திருச்சிற்றம் பலத்தே
ஓங்குகின்ற தனிக்கடவுள் ஒருவருண்டே கண்டீர். 8

21 இரவிமதி உடுக்கள்முதல் கலைகள்எலாம் தம்மோர்
இலேசமதாய் எண்கடந்தே இலங்கியபிண் டாண்டம்
பரவுமற்றைப் பொருள்கள்உயிர்த் திரள்கள்முதல் எல்லாம்
பகர்அகத்தும் புறத்தும்அகப் புறத்துடன்அப் புறத்தும்

Koviloor Digital Library

விரவிளங்கும் நீக்கமற விளங்கிஅந்த மாதி
விளம்பரிய பேரொளியாய் அவ்வொளிப்பே ரொளியாய்
உரவுறுசின் மாத்திரமாம் திருச்சிற்றம் பலத்தே
ஓங்குகின்ற தனிக்கடவுள் ஒருவருண்டே கண்டீர். 9

22 ஆற்றுவிட யானந்தம் தத்துவஆ னந்தம்
அணியோகா னந்தம்மதிப் பருஞானா னந்தம்
பேற்றுறும்ஆன் மானந்தம் பரமானந் தஞ்சேர்
பிரமானந் தம்சாந்தப் பேரானந் தத்தோடு
ஏற்றிடும்ஏ கானந்தம் அத்துவிதா னந்தம்
இயன்றசச்சி தானந்தம் சுத்தசிவா னந்த
ஊற்றமதாம் சமரசஆ னந்தசபை தனிலே
ஓங்குகின்ற தனிக்கடவுள் ஒருவருண்டே கண்டீர். 10

23 வகுத்தஉயிர் முதற்பலவாம் பொருள்களுக்கும் வடிவம்
வண்ணநல முதற்பலவாங் குணங்களுக்கும் புகுதல்
புகுத்தலுறல் முதற்பலவாம் செயல்களுக்கும் தாமே
புகல்கரணம் உபகரணம் கருவிஉப கருவி
மிகுத்தஉறுப் பதிகரணம் காரணம்பல் காலம்
விதித்திடுமற் றவைமுழுதும் ஆகிஅல்லார் ஆகி
உகப்புறும்ஓர் சுத்தசிவா னந்தசபை தனிலே
ஓங்குகின்ற தனிக்கடவுள் ஒருவருண்டே கண்டீர். 11

24 இயற்கையிலே பாசங்கள் ஒன்றும்இலார் குணங்கள்
ஏதுமிலார் தத்துவங்கள் ஏதுமிலார் மற்றோர்
செயற்கைஇல்லார் பிறப்பில்லார் இறப்பில்லார் யாதும்
திரிபில்லார் களங்கம்இல்லார் தீமைஒன்றும் இல்லார்
வியப்புறவேண் டுதல்இல்லார் வேண்டாமை இல்லார்
மெய்யேமெய் ஆகிஎங்கும் விளங்கிஇன்ப மயமாய்
உயத்தரும்ஓர் சுத்தசிவா னந்தசபை தனிலே
ஓங்குகின்ற தனிக்கடவுள் ஒருவருண்டே கண்டீர். 12

25 ஒன்றும்அலார் இரண்டும்அலார் ஒன்றிரண்டும் ஆனார்
உருவும்அலார் அருவும்அலார் உருஅருவும் ஆனார்
அன்றும்உளார் இன்றும்உளார் என்றும்உளார் தமக்கோர்
ஆதியிலார் அந்தமிலார் அரும்பெருஞ்ஜோ தியினார்
என்றுகனல் மதிஅகத்தும் புறத்தும்விளங் கிடுவார்
யாவும்இலார் யாவும்உளார் யாவும்அலார் யாவும்
ஒன்றுறுதாம் ஆகிநின்றார் திருச்சிற்றம் பலத்தே
ஓங்குகின்ற தனிக்கடவுள் ஒருவருண்டே கண்டீர். 13

திருச்சிற்றம்பலம்

Koviloor Digital Library

5. சிவ பதிவிளக்கம்

எழுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்
திருச்சிற்றம்பலம்

26 உரைவளர் கலையே கலைவளர் உரையே உரைகலை வளர்தரு பொருளே
விரைவளர் மலரே மலர்வளர் விரையே விரைமலர் வளர்தரு நறவே
கரைவளர் தருவே தருவளர் கரையே கரைதரு வளர்கிளர் கனியே
பரைவளர் ஒளியே ஒளிவளர் பரையே பரையொளி வளர்சிவ பதியே. 1

27 ஒளிவளர் உயிரே உயிர்வளர் ஒளியே ஒளியுயிர் வளர்தரும் உணர்வே
வெளிவளர் நிறைவே நிறைவளர் வெளியே வெளிநிறை வளர்தரு விளைவே
வளிவளர் அசைவே அசைவளர் வளியே வளியசை வளர்தரு செயலே
அளிவளர் அனலே அனல்வளர் அளியே அளியனல் வளர்சிவ பதியே. 2

28 அடிவளர் இயலே இயல்வளர் அடியே அடியியல் வளர்தரு கதியே
முடிவளர் பொருளே பொருள்வளர் முடியே முடிபொருள் வளர்சுக நிதியே
படிவளர் விதையே விதைவளர் படியே படிவிதை வளர்பல நிகழ்வே
தடிவளர் முகிலே முகில்வளர் தடியே தடிமுகில் வளர்சிவ பதியே. 3

29 சிரம்வளர் முதலே முதல்வளர் சிரமே சிரமுதல் வளர்தரு செறிவே
தரம்வளர் நிலையே நிலைவளர் தரமே தரநிலை வளர் தரு தகவே
வரம்வளர் நிறையே நிறைவளர் வரமே வரநிறை வளர்தரு வயமே
பரம்வளர் பதமே பதம்வளர் பரமே பரபதம் வளர்சிவ பதியே. 4

30 திருவளர் வளமே வளம்வளர் திருவே திருவளம் வளர்தரு திகழ்வே
உருவளர் வடிவே வடிவளர் உருவே உருவடி வளர்தரு முறைவே
கருவளர் அருவே அருவளர் கருவே கருவரு வளர்நவ கதியே
குருவளர் நெறியே நெறிவளர் குருவே குருநெறி வளர்சிவ பதியே. 5

31 நிறைவளர் முறையே முறைவளர் நிறையே நிறைமுறை வளர்பெரு நெறியே
பொறைவளர் புவியே புவிவளர் பொறையே புவிபொறை வளர்தரு புனலே
துறைவளர் கடலே கடல்வளர் துறையே துறைகடல் வளர்தரு சுதையே
மறைவளர் பொருளே பொருள்வளர் மறையே மறைபொருள் வளர்சிவ பதியே. 6

32 தவம்வளர் தயையே தயைவளர் தவமே தவநிறை தயைவளர் சதுரே
நவம்வளர் புரமே புரம்வளர் நவமே நவபுரம் வளர்தரும் இறையே
துவம்வளர் குணமே குணம்வளர் துவமே துவகுணம் வளர்தரு திகழ்வே
சிவம்வளர் பதமே பதம்வளர் சிவமே சிவபதம் வளர்சிவ பதியே. 7

Koviloor Digital Library

33 நடம்வளர் நலமே நலம்வளர் நடமே நடநலம் வளர்தரும் ஒளியே
இடம்வளர் வலமே வலம்வளர் இடமே இடம்வலம் வளர்தரும் இசைவே
திடம்வளர் உளமே உளம்வளர் திடமே திடவுளம் வளர்தரு திருவே
கடம்வளர் உயிரே உயிர்வளர் கடமே கடமுயிர் வளர்சிவ பதியே 8

34 அதுவளர் அணுவே அணுவளர் அதுவே அதுவணு வளர்தரும் உறவே
விதுவளர் ஒளியே ஒளிவளர் விதுவே விதுஒளி வளர்தரு செயலே
மதுவளர் சுவையே சுவைவளர் மதுவே மதுவுறு சுவைவளர் இயலே
பொதுவளர் வெளியே வெளிவளர் பொதுவே பொதுவெளி வளர்சிவ பதியே 9

35 நிதிவளர் நிலமே நிலம்வளர் நிதியே நிதிநிலம் வளர்தரு நிறைவே
மதிவளர் நலமே நலம்வளர் மதியே மதிநலம் வளர்தரு பரமே
கதிவளர் நிலையே நிலைவளர் கதியே கதிநிலை வளர்தரு பொருளே
பதிவளர் பதமே பதம்வளர் பதியே பதிபதம் வளர்சிவ பதியே. 10

திருச்சிற்றம்பலம்

6. ஆற்றாமை

எழுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

36 எழுவினும் வலிய மனத்தினேன் மலஞ்சார் ஈயினும் நாயினும் இழிந்தேன்
புழுவினும் சிறியேன்பொய்விழைந் துழல்வேன்புன்மையேன் புலைத்தொழிற்கடையேன்
வழுவினும் பெரியேன் மடத்தினும் பெரியேன் மாண்பிலா வஞ்சக நெஞ்சக்
குழுவினும் பெரியேன்அம்பலக் கூத்தன் குறிப்பினுக் கென்கட வேனே. 1

37 கற்றமே லவர்தம் உறவினைக் கருதேன் கலகர்தம் உறவினிற் களித்தேன்
உற்றமே தகவோர் உவட்டுற இருந்தேன் உலகியற் போகமே உவந்தேன்
செற்றமே விழையும் சிறுநெறி பிடித்தேன் தெய்வம்ஒன் றெனும்அறி வறியேன்
குற்றமே உடையேன் அம்பலக் கூத்தன் குறிப்பினுக் கென்கட வேனே. 2

38 கடுமையேன் வஞ்சக் கருத்தினேன் பொல்லாக் கன்மனக் குரங்கனேன் கடையேன்
நெடுமைஆண் பனைபோல் நின்றவெற் றுடம்பேன் நீசனேன் பாசமே உடையேன்
நடுமைஒன் றறியேன் கெடுமையிற் கிளைத்த நச்சுமா மரம்எனக்கிளைத்தேன்
கொடுமையே குறித்தேன் அம்பலக் கூத்தன் குறிப்பினுக் கென்கட வேனே. 3

39 நிலத்திலும் பணத்தும் நீள்விழி மடவார் நெருக்கிலும் பெருக்கிய நினைப்பேன்
புலத்திலும் புரைசேர் பொறியிலும் மனத்தைப் போக்கிவீண் போதுபோக் குறுவேன்
நலத்தில்ஓர் அணுவும் நண்ணிலேன் கடைய நாயினுங் கடையனேன் நவையேன்
குலத்திலும் கொடியேன் அம்பலக் கூத்தன் குறிப்பினுக் கென்கட வேனே. 4

Koviloor Digital Library

40 செடிமுடிந் தலையும் மனத்தினேன் துன்பச் செல்லினால் அரிப்புண்ட சிறியேன்
அடிமுடி அறியும் ஆசைசற் றறியேன் அறிந்தவர் தங்களை அடையேன்
படிமுடி வழித்துக் கடிகொளும் கடையர் பணத்திலும் கொடியனேன் வஞ்சக்
கொடிமுடிந் திடுவேன் அம்பலக் கூத்தன் குறிப்பினுக் கென்கட வேனே.
5

41 அரங்கினிற் படைகொண் டுயிர்க்கொலை புரியும் அறக்கடை யவரினுங் கடையேன்
இரங்கில்ஓர் சிறிதும் இரக்கம்உற் றறியேன் இயலுறு நாசியுட் கிளைத்த
சிரங்கினிற் கொடியேன் சிவநெறி பிடியேன் சிறுநெறிச் சழக்கையே சிலுகுக்
குரங்கெனப் பிடித்தேன் அம்பலக் கூத்தன் குறிப்பினுக் கென்கட வேனே.
6

42 வாட்டமே உடையார் தங்களைக் காணின் மனஞ்சிறி திரக்கமுற் றறியேன்
கோட்டமே உடையேன் கொலையனேன் புலையேன் கூற்றினும் கொடியனேன் மாயை
ஆட்டமே புரிந்தேன் அறத்தொழில் புரியேன் அச்சமும் அவலமும் இயற்றும்
கூட்டமே விழைந்தேன் அம்பலக் கூத்தன் குறிப்பினுக் கென்கட வேனே.
7

43 கலைத்தொழில் அறியேன் கள்உணுங் கொடியேன் கறிக்குழல் நாயினும் கடையேன்
விலைத்தொழில் உடையேன் மெய்எலாம் வாயாய் விளம்புறும் வீணனேன் அசுத்தப்
புலைத்தொழில் புரிவேன் பொய்யனேன் சீற்றம் பொங்கிய மனத்தினேன் பொல்லாக்
கொலைத்தொழில் புரிவேன் அம்பலக் கூத்தன் குறிப்பினுக் கென்கட வேனே.
8

44 பணமிலார்க் கிடுக்கண் புரிந்துணுஞ் சோற்றுப் பணம்பறித் துழல்கின்ற படிறேன்
எணமிலா தடுத்தார்க் குறுபெருந்தீமை இயற்றுவேன் எட்டியே அனையேன்
மணமிலா மலரிற் பூத்தனன் இருகால் மாடெனத் திரிந்துழல் கின்றேன்
குணமிலாக் கொடியேன் அம்பலக் கூத்தன் குறிப்பினுக் கென்கட வேனே.
9

45 கடியரில் கடியேன் கடையரில் கடையேன் கள்வரில் கள்வனேன் காமப்
பொடியரில் பொடியேன் புலையரில் புலையேன் பொய்யரில் பொய்யனேன் பொல்லாச்
செடியரில் செடியேன் சினத்தரில் சினத்தேன் தீயரில் தீயனேன் பாபக்
கொடியரில் கொடியேன் அம்பலக் கூத்தன் குறிப்பினுக் கென்கட வேனே.
10

திருச்சிற்றம்பலம்

Koviloor Digital Library

7. நான் ஏன் பிறந்தேன்

எண்சீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

46 குலத்திடையும் கொடியன்ஒரு குடித்தனத்தும் கொடியேன்
குறிகளிலும் கொடியன்அன்றிக் குணங்களிலும் கொடியேன்
மலத்திடையே புழுத்தசிறு புழுக்களிலும் கடையேன்
வன்மனத்துப் பெரும்பாவி வஞ்சநெஞ்சப் புலையேன்
நலத்திடைஓர் அணுஅளவும் நண்ணுகிலேன் பொல்லா
நாய்க்குநகை தோன்றநின்றேன் பேய்க்கும்மிக இழிந்தேன்
நிலத்திடைநான் ஏன்பிறந்தேன் நின்கருத்தை அறியேன்
நிர்க்குணனே நடராஜ நிபுணமணி விளக்கே. 1

47 விளக்கறியா இருட்டறையில் கவிழ்ந்துகிடந் தழுது
விம்முகின்ற குழவியினும் மிகப்பெரிதும் சிறியேன்
அளக்கறியாத் துயர்க்கடலில் விழுந்துநெடுங் காலம்
அலைந்தலைந்து மெலிந்ததுரும் பதனின்மிகத் துரும்பேன்
கிளக்கறியாக் கொடுமைஎலாம் கிளைத்தபழு மரத்தேன்
கெடுமதியேன் கடுமையினேன் கிறிபேசும் வெறியேன்
களக்கறியாப் புவியிடைநான் ஏன்பிறந்தேன் அந்தோ
கருணைநடத் தரசேநின் கருத்தைஅறி யேனே. 2

48 அறியாத பொறியவர்க்கும் இழிந்ததொழி லவர்க்கும்
அதிகரித்துத் துன்மார்க்கத் தரசுசெயுங் கொடியேன்
குறியாத கொடும்பாவச் சுமைசுமக்கும் திறத்தேன்
கொல்லாமை என்பதைஓர் குறிப்பாலும் குறியேன்
செறியாத மனக்கடையேன் தீமையெலாம் உடையேன்
சினத்தாலும் மதத்தாலும் செறிந்தபுதல் அனையேன்
எறியாத புவியிடைநான் ஏன்பிறந்தேன் உன்றன்
இதயமறி யேன்மன்றில் இனித்தநடத் திறையே. 3

49 இனித்தபழச் சாறுவிடுத் திழிந்தமலங் கொளும்ஓர்
இழிவிலங்கில் இழிந்துநின்றேன் இரக்கம்ஒன்றும் இல்லேன்
அனித்தநெறி யிடைத்தொடர்ந்து மனித்தஉடம் பெடுத்த
அறக்கடையர் தமக்கெல்லாம் அறக்கடையன் ஆனேன்
பனித்தமனக் குரங்காட்டிப் பலிக்குழலும் கொடியேன்
பாதகமும் சூதகமும் பயின்றபெரும் படிறேன்
தனித்தகடுங் குணத்தேன்நான் ஏன்பிறந்தேன் நினது
தனிக்கருத்தை அறிந்திலேன் சபைக்கேற்றும் ஒளியே. 4

Koviloor Digital Library

50 ஏறுகின்றேம் எனமதித்தே இறங்குகின்ற கடையேன்
ஏதமெலாம் நிறைமனத்தேன் இரக்கமிலாப் புலையேன்
சீறுகின்ற புலியனையேன் சிறுதொழிலே புரிவேன்
செய்வகைஒன் றறியாத சிறியரினும் சிறியேன்
மாறுகின்ற குணப்பேதை மதியதனால் இழிந்தேன்
வஞ்சம்எலாம் குடிகொண்ட வாழ்க்கைமிக உடையேன்
வீறுகின்ற உலகிடைநான் ஏன்பிறந்தேன் நினது
மெய்க்கருத்தை அறிந்திலேன் விளங்குநடத் தரசே. 5

51 அரசர்எலாம் மதித்திடப்பே ராசையிலே அரசோ
டால்எனவே மிகக்கிளைத்தேன் அருளறியாக் கடையேன்
புரசமரம் போற்பருத்தேன் எட்டிஎனத் தழைத்தேன்
புங்கெனவும் புளிஎனவும் மங்கிஉதிர் கின்றேன்
பரசும்வகை தெரிந்துகொளேன் தெரிந்தாரைப் பணியேன்
பசைஅறியாக் கருங்கல்மனப் பாவிகளிற் சிறந்தேன்
விரசுநிலத் தேன்பிறந்தேன் நின்கருத்தை அறியேன்
வியக்குமணி மன்றோங்கி விளங்குபரம் பொருளே. 6

52 பொருளறியேன் பொருளறிந்தார் போன்றுநடித் திங்கே
பொங்கிவழிந் துடைகின்றேன் பொய்யகத்தேன் புலையேன்
மருளறியாத் திருவாளர் உளங்கயக்கத் திரிவேன்
வையுண்டும் உழவுதவா மாடெனவே தடித்தேன்
வெருளறியாக் கொடுமனத்தேன் விழற்கிறைத்துக் களிப்பேன்
வீணர்களில் தலைநின்றேன் விலக்கனைத்தும் புரிவேன்
தெருளறியேன் உலகிடைநான் ஏன்பிறந்தேன் நினது
திருவுளத்தை அறிந்திலேன் தெய்வநடத் தவனே. 7

53 தவம்புரியேன் தவம்புரிந்தார் தமைப்போல நடித்துத்
தருக்குகின்றேன் உணர்ச்சியிலாச் சடம்போல இருந்தேன்
பவம்புரிவேன் கமரினிடைப் பால்கவிழ்க்கும் கடையேன்
பயனறியா வஞ்சமனப் பாறைசுமந் துழல்வேன்
அவம்புரிவேன் அறிவறியேன் அன்பறியேன் அன்பால்
ஐயாநின் அடியடைந்தார்க் கணுத்துணையும் உதவேன்
நவம்புரியும் உலகிடைநான் ஏன்பிறந்தேன் நினது
நல்லதிரு வுளம்அறியேன் ஞானநடத் திறையே. 8

54 இறைஅளவும் அறிவொழுக்கத் திச்சையிலேன் நரகில்
இருந்துழன்று வாடுகின்றோர் எல்லார்க்கும் இழிந்தேன்
பொறைஅளவோ நன்மைஎலாம் போக்கில்விட்டுத் தீமை
புரிகின்றேன் எரிகின்ற புதுநெருப்பிற் கொடியேன்

Koviloor Digital Library

நிறைஅளவோ முறைஅளவோ நிலைஅளவுந் தவிர்ந்த
நெடுஞ்சால நெஞ்சகத்தேன் நீலவிடம் போல்வேன்
கறையளவா உலகிடைநான் ஏன்பிறந்தேன் நினது
கருத்தறியேன் கருணைநடங் காட்டுகின்ற குருவே. 9

55 காட்டுகின்ற உவர்க்கடல்போல் கலைகளிலும் செல்வக்
களிப்பினிலும் சிறந்துமிகக் களித்துநிறை கின்றேன்
நீட்டுகின்ற ஆபத்தில் ஒருசிறிதும் உதவேன்
நெடுந்தூரம் ஆழ்ந்துதவாப் படுங்கிணறு போல்வேன்
ஆட்டுகின்ற அருட்பெருமை ஒருசிறிதும் தெரியேன்
அச்சமிலேன் நாணமிலேன் அடக்கம்ஒன்றும் இல்லேன்
கூட்டுகின்ற உலகிடைநான் ஏன்பிறந்தேன் நினது
குறிப்பறியேன் மன்றில்நடங் குலவுகுல மணியே. 10

திருச்சிற்றம்பலம்

8. மாயை வலிக்கழுங்கல்

எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

56 தாவு மான்எனக் குதித்துக்கொண் டோடித்
தைய லார்முலைத் தடம்படுங் கடையேன்
கூவு காக்கைக்குச் சோற்றில்ஓர் பொருக்கும்
கொடுக்க நேர்ந்திடாக் கொடியரில் கொடியேன்
ஓவு றாதுழல் ஈஎனப் பலகால்
ஓடி ஓடியே தேடுறும் தொழிலேன்
சாவு றாவகைக் கென்செயக் கடவேன்
தந்தை யேஎனைத் தாங்கிக்கொண் டருளே. 1

57 போக மாதியை விழைந்தனன் வீணில்
பொழுது போக்கிடும் இழுதையேன் அழியாத்
தேக மாதியைப் பெறமுயன் றறியேன்
சிரங்கு நெஞ்சகக் குரங்கொடும் உழல்வேன்
காக மாதிகள் அருந்தஓர் பொருக்கும்
காட்ட நேர்ந்திடாக் கடையரில் கடையேன்
ஆக மாதிசொல் அறிவறி வேனோ
அப்ப னேஎனை ஆண்டுகொண் டருளே. 2

58 விழியைத் தூர்க்கின்ற வஞ்சரை விழைந்தேன்
விருந்தி லேஉண வருந்திஓர் வயிற்றுக்
குழியைத் தூர்க்கின்ற கொடியரில் கொடியேன்
கோப வெய்யனேன் பாபமே பயின்றேன்

Koviloor Digital Library

வழியைத் தூர்ப்பவர்க் குளவுரைத் திடுவேன்
மாய மேபுரி பேயரில் பெரியேன்
பழியைத் தூர்ப்பதற் கென்செயக் கடவேன்
பரம னேஎனைப் பரிந்துகொண் டருளே. 3

59 மதத்தி லேஅபி மானங்கொண் டுழல்வேன்
வாட்ட மேசெயும் கூட்டத்தில் பயில்வேன்
இதத்தி லேஒரு வார்த்தையும் புகலேன்
ஈயும் மொய்த்திடற் கிசைவுறா துண்பேன்
குதத்தி லேஇழி மலத்தினுங் கடையேன்
கோடை வெய்யலின் கொடுமையிற் கொடியேன்
சிதத்தி லேஉறற் கென்செயக் கடவேன்
தெய்வ மேஎனைச் சேர்த்துக் கொண் டருளே. 4

60 கொடிய வெம்புலிக் குணத்தினேன் உதவாக்
கூவம் நேர்ந்துளேன் பாவமே பயின்றேன்
கடிய நெஞ்சினேன் குங்குமம் சுமந்த
கழுதை யேன்அவப் பொழுதையே கழிப்பேன்
விடியு முன்னரே எழுந்திடா துறங்கும்
வேட னேன்முழு மூடரில் பெரியேன்
அடிய னாவதற் கென்செயக் கடவேன்
அப்ப னேஎனை ஆண்டுகொண் டருளே. 5

61 தூங்கு கின்றதே சுகம்என அறிந்தேன்
சோற தேபெறும் பேறதென் றுணர்ந்தேன்
ஏங்கு கின்றதே தொழிலெனப் பிடித்தேன்
இரக்கின் றோர்களே என்னினும் அவர்பால்
வாங்கு கின்றதே பொருள்என வலித்தேன்
வஞ்ச நெஞ்சினால் பஞ்செனப் பறந்தேன்
ஓங்கு கின்றதற் கென்செயக் கடவேன்
உடைய வாஎனை உவந்துகொண் டருளே. 6

62 வருத்த நேர்பெரும் பாரமே சுமந்து
வாடும் ஓர்பொதி மாடென உழன்றேன்
பருத்த ஊனோடு மலம் உணத் திரியும்
பன்றி போன்றுளேன் நன்றியொன் றறியேன்
கருத்தி லாதயல் குரைத்தலுப் படைந்த
கடைய நாயினிற் கடையனேன் அருட்குப்
பொருத்தன் ஆவதற் கென்செயக் கடவேன்
புண்ணியாஎனைப் புரிந்துகொண் டருளே. 7

Koviloor Digital Library

63 துருக்க லோகொடுங் கருங்கலோ வயிரச்
சூழ்க லோஎனக் காழ்கொளும் மனத்தேன்
தருக்கல் ஆணவக் கருக்கலோ டுழல்வேன்
சந்தை நாயெனப் பந்தமுற் றலைவேன்
திருக்கெ லாம்பெறு வெருக்கெனப் புகுவேன்
தீய னென்பெரும் பேயனேன் உளந்தான்
உருக்கல் ஆகுதற் கென்செயக் கடவேன்
உடைய வாஎனை உவந்துகொண் டருளே. 8

64 கான மேஉழல் விலங்கினிற் கடையேன்
காம மாதிகள் களைகணிற் பிடித்தேன்
மான மேலிடச் சாதியே மதமே
வாழ்க்கை யேஎன வாரிக்கொண் டலைந்தேன்
ஈன மேபொருள் எனக்களித் திருந்தேன்
இரக்கம் என்பதோர் எட்டுணை அறியேன்
ஞான மேவுதற் கென்செயக் கடவேன்
நாய காஎனை நயந்துகொண் டருளே. 9

65 இருளை யேஒளி எனமதித் திருந்தேன்
இச்சை யேபெரு விச்சைஎன் றலந்தேன்
மருளை யேதரு மனக்குரங் கோடும்
வனமெ லாஞ்சுழன் றினம்எனத் திரிந்தேன்
பொருளை நாடுநற் புந்திசெய் தறியேன்
பொதுவி லேநடம் புரிகின்றோய் உன்றன்
அருளை மேவுதற் கென்செயக் கடவேன்
அப்ப னேஎனை ஆண்டுகொண் டருளே. 10

திருச்சிற்றம்பலம்

9. முறையீடு

எண்சீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

66 மருந்தறியேன் மணிஅறியேன் மந்திரம்ஒன் றறியேன்
மதிஅறியேன் விதிஅறியேன் வாழ்க்கைநிலை அறியேன்
திருந்தறியேன் திருவருளின் செயலறியேன் அறந்தான்
செய்தறியேன் மனமடங்கும் திறத்தினில்ஓர் இடத்தே
இருந்தறியேன் அறிந்தோரை ஏத்திடவும் அறியேன்
எந்தைபிரான் மணிமன்றம் எய்தஅறி வேனோ
இருந்ததிசை சொலஅறியேன் எங்ஙனம்நான் புகுவேன்
யார்க்குரைப்பேன் என்னசெய்வேன் ஏதும்அறிந் திலனே. 1

Koviloor Digital Library

67 அகங்காரக் கொடுங்கிழங்கை அகழ்ந்தெறிய அறியேன்
அறிவறிந்த அந்தணர்பால் செறியும்நெறி அறியேன்
நகங்கானம் உறுதவர்போல் நலம்புரிந்தும் அறியேன்
நச்சுமரக் கனிபோலே இச்சைகனிந் துழன்றேன்
மகங்காணும் புலவரெலாம் வந்துதொழ நடிக்கும்
மணிமன்றந் தனைஅடையும் வழியும்அறி வேனோ
இகங்காணத் திரிகின்றேன் எங்ஙனம்நான் புகுவேன்
யார்க்குரைப்பேன் என்னசெய்வேன் ஏதும்அறிந் திலனே. 2

68 கற்குமுறை கற்றறியேன் கற்பனகற் றறிந்த
கருத்தர்திருக் கூட்டத்தில் களித்திருக்க அறியேன்
நிற்குநிலை நின்றறியேன் நின்றாரின் நடித்தேன்
நெடுங்காமப் பெருங்கடலை நீந்தும்வகை அறியேன்
சிற்குணமா மணிமன்றில் திருநடனம் புரியும்
திருவடிஎன் சென்னிமிசைச் சேர்க்கஅறி வேனோ
இற்குணஞ்செய் துழல்கின்றேன் எங்ஙனம்நான் புகுவேன்
யார்க்குரைப்பேன் என்னசெய்வேன் ஏதும்அறிந் திலனே. 3

69 தேகமுறு பூதநிலைத் திறம்சிறிதும் அறியேன்
சித்தாந்த நிலைஅறியேன் சித்திநிலை அறியேன்
யோகமுறு நிலைசிறிதும் உணர்ந்தறியேன் சிறியேன்
உலகநடை யிடைக்கிடந்தே உழைப்பாரில் கடையேன்
ஆகமுறு திருநீற்றின் ஒளிவிளங்க அசைந்தே
அம்பலத்தில் ஆடுகின்ற அடியைஅறி வேனோ
ஏகஅனு பவம்அறியேன் எங்ஙனம்நான் புகுவேன்
யார்க்குரைப்பேன் என்னசெய்வேன் ஏதும்அறிந் திலனே. 4

70 வேதாந்த நிலைநாடி விரைந்துமுயன் றறியேன்
மெய்வகையும் கைவகையும் செய்வகையும் அறியேன்
நாதாந்தத் திருவீதி நடந்திடுதற் கறியேன்
நான்ஆர்என் றறியேன்எங் கோன்ஆர்என் றறியேன்
போதாந்தத் திருநாடு புகஅறியேன் ஞான
பூரணா காயம்எனும் பொதுவைஅறி வேனோ
ஏதாந்தீ யேன்சரிதம் எங்ஙனம்நான் புகுவேன்
யார்க்குரைப்பேன் என்னசெய்வேன் ஏதும்அறிந் திலனே. 5

71 கலைமுடிவு கண்டறியேன் கரணமெலாம் அடக்கும்
கதிஅறியேன் கதிஅறிந்த கருத்தர்களை அறியேன்
கொலைபுலைகள் விடுத்தறியேன் கோபமறுத் தறியேன்
கொடுங்காமக் கடல்கடக்கும் குறிப்பறியேன் குணமாம்

Koviloor Digital Library

மலைமிசைநின் றிடஅறியேன் ஞானநடம் புரியும்
மணிமன்றந் தனைஅடையும் வழியும்அறி வேனோ
இலைஎனும்பொய் உலகினிடை எங்ஙனம்நான் புகுவேன்
யார்க்குரைப்பேன் என்னசெய்வேன் ஏதும்அறிந் திலனே. 6

72 சாதிமதம் சமயம்எனும் சங்கடம்விட் டறியேன்
சாத்திரச்சே றாடுகின்ற சஞ்சலம்விட் டறியேன்
ஆதிஅந்த நிலையறியேன் அலைஅறியாக் கடல்போல்
ஆனந்தப் பெரும்போகத் தமர்ந்திடவும் அறியேன்
நீதிநெறி நடந்தறியேன் சோதிமணிப் பொதுவில்
நிருத்தமிடும் ஒருத்தர்திருக் கருத்தைஅறி வேனோ
ஏதிலர்சார் உலகினிடை எங்ஙனம்நான் புகுவேன்
யார்க்குரைப்பேன் என்னசெய்வேன் ஏதும்அறிந் திலனே. 7

73 சாகாத தலைஅறியேன் வேகாத காலின்
தரம்அறியேன் போகாத தண்ணீரை அறியேன்
ஆகாய நிலைஅறியேன் மாகாய நிலையும்
அறியேன்மெய்ந் நெறிதனைஓர் அணுஅளவும் அறியேன்
மாகாத லுடையபெருந் திருவாளர் வழுத்தும்
மணிமன்றந் தனைஅடையும் வழியும்அறி வேனோ
ஏகாய உலகினிடை எங்ஙனம்நான் புகுவேன்
யார்க்குரைப்பேன் என்னசெய்வேன் ஏதும்அறிந் திலனே. 8

74 தத்துவம்என் வசமாகத் தான்செலுத்த அறியேன்
சாகாத கல்விகற்கும் தரஞ்சிறிதும் அறியேன்
அத்தநிலை சத்தநிலை அறியேன்மெய் அறிவை
அறியேன்மெய் அறிந்தடங்கும் அறிஞரையும் அறியேன்
சுத்தசிவ சன்மார்க்கத் திருப்பொதுவி னிடத்தே
தூயநடம் புரிகின்ற ஞாயமறி வேனோ
எத்துணையும் குணமறியேன் எங்ஙனம்நான் புகுவேன்
யார்க்குரைப்பேன் என்னசெய்வேன் ஏதும்அறிந் திலனே. 9

75 வரைஅபர மார்க்கமொடு பரமார்க்கம் அறியேன்
மரணபயம் தவிர்த்திடுஞ்சன் மார்க்கமதை அறியேன்
திரையறுதண் கடலறியேன் அக்கடலைக் கடைந்தே
தெள்ளமுதம் உணவறியேன் சினமடக்க அறியேன்
உரைஉணர்வு கடந்ததிரு மணிமன்றந் தனிலே
ஒருமைநடம் புரிகின்றார் பெருமைஅறி வேனோ
இரையுறுபொய் உலகினிடை எங்ஙனம்நான் புகுவேன்
யார்க்குரைப்பேன் என்னசெய்வேன் ஏதும்அறிந் திலனே. 10

திருச்சிற்றம்பலம்

Koviloor Digital Library

10. அடியார் பேறு

அறுசீரடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

76 அடியார் வருத்தம் தனைக்கண்டு தரியார் இன்பம் அளித்திடுவார்
வடியாக் கருணைப் பெருங்கடலார் என்ற பெரியர் வார்த்தைஎலாம்
நெடியார்க் கரியாய் கொடியேன்என் ஒருவன் தனையும் நீக்கியதோ
கடியாக் கொடுமா பாதகன்முன் கண்ட பரிசுங் கண்டிலனே. 1

77 பையார் பாம்பு கொடியதெனப் பகர்வார் அதற்கும் பரிந்துமுன்னாள்
ஐயா கருணை அளித்தனைஎன் அளவில் இன்னும் அளித்திலையே
மையார் மிடற்றோய் ஆனந்த மன்றில் நடிப்போய் வல்வினையேன்
நையா நின்றேன் ஐயோநான் பாம்பிற் கொடியன் ஆனேனே. 2

78 பீழை புரிவான் வருந்துகின்ற பேய்க்கும் கருணை பெரிதளிப்பான்
ஊழை அகற்றும் பெருங்கருணை உடையான் என்பார் உனைஐயோ
மோழை மனத்தால் குரங்கெறிந்த விளங்கா யாகி மொத்துண்ணும்
ஏழை அடியேன் வருத்தங்கண் டிருத்தல் அழகோ எங்கோவே. 3

79 மருணா டுலகில் கொலைபுரிவார் மனமே கரையாக் கல்என்று
பொருணா டியநின் திருவாக்கே புகல அறிந்தேன் என்னளவில்
கருணா நிதிநின் திருவுளமுங் கல்என் றுரைக்க அறிந்திலனே
இருணா டியஇச் சிறியேனுக் கின்னும் இரங்கா திருந்தாயே. 4

80 முன்னுங் கொடுமை பலபுரிந்து முடுகிப் பின்னுங் கொடுமைசெய
உன்னுங் கொடியர் தமக்கும்அருள் உதவுங் கருணை உடையானே
மன்னும் பதமே துணைஎன்று மதித்து வருந்தும் சிறியேனுக்
கின்னுங் கருணை புரிந்திலைநான் என்ன கொடுமை செய்தேனோ. 5

81 அங்கே அடியர் தமக்கெல்லாம் அருளார் அமுதம் அளித்தையோ
இங்கே சிறியேன் ஒருவனுக்கும் இடர்தான் அளிக்க இசைந்தாயேல்
செங்கேழ் இதழிச் சடைக்கனியே சிவமே அடிமைச் சிறுநாயேன்
எங்கே புகுவேன் என்செய்வேன் எவர்என் முகம்பார்த் திடுவாரே. 6

82 அளியே அன்பர் அன்பேநல் லமுதே சுத்த அறிவான
வெளியே வெளியில் இன்பநடம் புரியும் அரசே விதிஒன்றும்
தெளியேன் தீங்கு பிறர்செயினும் தீங்கு நினையாத் திருவுளந்தான்
எளியேன் அளவில் நினைக்கஒருப் படுமோ கருணை எந்தாயே. 7

Koviloor Digital Library

83 தீது நினைக்கும் பாவிகட்கும் செய்தாய் கருணை எனத்தெளிந்து
வாது நினைக்கும் மனக்கடையேன் மகிழ்வுற் றிருந்தேன் என்னளவில்
சூது நினைப்பாய் எனில்யார்க்குச் சொல்வேன் யாரைத் துணைகொள்வேன்
ஏது நினைப்பேன் ஐயோநான் பாவி உடம்பேன் எடுத்தேனே. 8

84 பொதுவென் றறிந்தும் இரங்காத சிலர்க்கும் கருணை புரிவதன்றிக்
கதுவென் றழுங்க நினையாநின் கருணை உளந்தான் அறிவென்ப
திதுவென் றறியா எனைவருத்த எந்த வகையால் துணிந்ததுவோ
எதுவென் றறிவேன் என்புரிவேன் ஐயோ புழுவில் இழிந்தேனே. 9

85 வெடிக்கப் பார்த்து நிற்கின்ற வெய்யர் தமையும் வினைத்துயர்கள்
பிடிக்கப் பார்க்கத் துணியாத பெருமான் நினது திருவுளந்தான்
நடிக்கப் பார்க்கும் உலகத்தே சிறியேன் மனது நவையாலே
துடிக்கப் பார்த்திங் கிருந்ததுகாண் ஐயோ இதற்குந் துணிந்ததுவோ. 10

86 கல்லுங் கனியத் திருநோக்கம் புரியும் கருணைக் கடலேநான்
அல்லும் பகலுந் திருக்குறிப்பை எதிர்பார்த் திங்கே அயர்கின்றேன்
கொல்லுங்கொடியார்க் குதவுகின்ற குறும்புத் தேவர் மனம்போலச்
சொல்லும் இரங்கா வன்மைகற்க எங்கே ஐயோ துணிந்தாயோ. 11

87 படிமேல் ஆசை பலவைத்துப் பணியும் அவர்க்கும் பரிந்துசுகக்
கொடிமேல் உறச்செய் தருள்கின்றாய் என்பால் இரக்கங் கொண்டிலையே
பொடிமேல் அணிநின் அருட்கிதுதான் அழகோ பொதுவில் நடிக்கும்உன்றன்
அடிமேல் ஆசை அல்லால்வே றாசை ஐயோ அறியேனே. 12

88 நாயேன் உலகில் அறிவுவந்த நாள்தொட் டிந்த நாள்வரையும்
ஏயேன் பிறிதி லுன்குறிப்பே எதிர்பார்த் திருந்தேன் என்னுடைய
தாயே பொதுவில் நடம்புரிஎந் தாயே தயவு தாராயேல்
மாயேன் ஐயோ எதுகொண்டு வாழ்ந்திங் கிருக்கத் துணிவேனே. 13

89 நயத்தால் உனது திருவருளை நண்ணாக் கொடியேன் நாய்உடம்பை
உயத்தான் வையேன் மடித்திடுவேன் மடித்தாற் பின்னர் உலகத்தே
வயத்தால் எந்த உடம்புறுமோ என்ன வருமோ என்கின்ற
பயத்தால் ஐயோ இவ்வுடம்பைச் சுமக்கின் றேன்எம் பரஞ்சுடரே. 14

90 இன்ப மடுத்துன் அடியர்எலாம் இழியா தேறி யிருக்கின்றார்
வன்ப ரிடத்தே பலகாற்சென் றவரோ டுறவு வழங்கிஉன்றன்
அன்பர் உறவை விடுத்துலகில் ஆடிப் பாடி அடுத்தவினைத்
துன்ப முடுகிச் சுடச்சுடவுஞ் சோறுண் டிருக்கத் துணிந்தேனே. 15

Koviloor Digital Library

91 எந்நாள் கருணைத் தனிமுதல்நீ என்பால் இரங்கி அருளுதலோ
அந்நாள் இந்நாள் இந்நாள்என் றெண்ணி எண்ணி அலமந்தேன்
சென்னாள் களில்ஓர் நன்னாளுந் திருநா ளான திலைஐயோ
முன்னாள் என்னை ஆட்கொண்டாய் என்ன நாணம் முடுகுவதே. 16

92 எந்த வகைசெய் திடிற்கருணை எந்தாய் நீதான் இரங்குவையோ
அந்த வகையை நான்அறியேன் அறிவிப் பாரும் எனக்கில்லை
இந்த வகைஇங் கையோநான் இருந்தால் பின்னர் என்செய்வேன்
பந்த வகைஅற் றவர்உளத்தே நடிக்கும் உண்மைப் பரம்பொருளே. 17

93 அடுக்குந் தொண்டர் தமக்கெல்லாம் அருளீந் திங்கே என்னளவில்
கொடுக்குந் தன்மை தனைஒளித்தால் ஒளிக்கப் படுமோ குணக்குன்றே
தடுக்குந் தடையும் வேறில்லை தமியேன் தனைஇத் தாழ்வகற்றி
எடுக்குந் துணையும் பிறிதில்லை ஐயோ இன்னும் இரங்கிலையே. 18

94 எல்லாம் உடையாய் நின்செயலே எல்லாம் என்றால் என்செயல்கள்
எல்லாம் நினது செயல்அன்றோ என்னே என்னைப் புறந்தள்ளல்
வல்லாய் என்னைப் புறம்விடுத்தால் புறத்தும் உன்றன் மயம் அன்றே
நல்லார் எங்கும் சிவமயம்என் றுரைப்பார் எங்கள் நாயகனே. 19

95 கூடுங் கருணைத் திருக்குறிப்பை இற்றைப் பொழுதே குறிப்பித்து
வாடுஞ் சிறியேன் வாட்டம்எலாந் தீர்த்து வாழ்வித் திடல்வேண்டும்
பாடும் புகழோய் நினைஅல்லால் துணைவே றில்லைப் பரவெளியில்
ஆடுஞ் செல்வத் திருவடிமேல் ஆணை முக்கால் ஆணையதே. 20

திருச்சிற்றம்பலம்

11. ஆன்ம விசாரத் தழுங்கல்

எழுசீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

96 போகமே விழைந்தேன் புலைமனச் சிறியேன் பூப்பினும் புணர்ந்தவெம் பொறியேன்
ஏகமே பொருள்என் றறிந்திலேன் பொருளின் இச்சையால் எருதுநோ வறியாக்
காகமே எனப் போய்ப்பிறர்தமை வருத்திக் களித்தபா தகத்தொழிற்கடையேன்
மோகமே உடையேன் என்னினும் எந்தாய் முனிந்திடேல் காத்தருள் எனையே. 1

97 பூப்பினும் பலகால் மடந்தையர்தமைப்போய்ப் புணர்ந்தவெம் புலையனேன் விடஞ்சார்
பாப்பினுங் கொடியர் உறவையே விழைந்த பள்ளனேன் கள்ளனேன் நெருக்கும்
ஆப்பினும் வலியேன் அறத்தொழில் புரியேன் அன்பினால் அடுத்தவர்கரங்கள்
கூப்பினுங் கூப்பாக் கொடுங்கையேன் எனினும் கோபியேல் காத்தருள் எனையே. 2

Koviloor Digital Library

98 விழுத்தலை நெறியை விரும்பிலேன் கரும்பின் மிகஇனிக் கின்றநின் புகழ்கள்
வழுத்தலை அறியேன் மக்களே மனையே வாழ்க்கையே துணைஎனமதித்துக்
கொழுத்தலை மனத்துப் புழுத்தலைப் புலையேன் கொக்கனேன் செக்கினைப் பலகால்
இழுத்தலை எருதேன் உழத்தலே உடையேன் என்னினும் காத்தருள் எனையே.
3

99 புலைவிலைக் கடையில் தலைகுனித் தலைந்து பொறுக்கிய சுணங்கனேன் புறத்தில்
தலைவிலை பிடித்துக் கடைவிலை படித்த தயவிலாச் சழக்கனேன் சழக்கர்
உலைவிலை எனவே வியக்கவெந் தொழிலில் உழன்றுழன் றழன்றதோர் உளத்தேன்
இலைவிலை எனக்கென் றகங்கரித் திருந்தேன் என்னினும் காத்தருள் எனையே.
4

100 கொட்டிலை அடையாப் பட்டிமா டனையேன் கொட்டைகள் பரப்பிமேல் வனைந்த
கட்டிலை விரும்பி அடிக்கடி படுத்த கடையனேன் கங்குலும் பகலும்
அட்டிலை அடுத்த பூஞையேன் உணவை அறவுண்டு குப்பைமேற் போட்ட
நெட்டிலை அனையேன் என்னினும் வேறு நினைத்திடேல் காத்தருள் எனையே.
5

101 நேரிழை யவர்தம் புணர்முலை நெருக்கில் நெருங்கிய மனத்தினேன் வீணில்
போரிழை வெறியர் புகழ்பெறு வெறியேன் புனைகலை இலர்க்கொரு கலையில்
ஓரிழை எனினும் கொடுத்திலேன் நீள உடுத்துடுத் தூர்தொறுந் திரிந்தேன்
ஏரிழை விழைந்து பூண்டுளங் களித்தேன் என்னினும் காத்தருள்எனையே.
6

102 அளத்திலே படிந்த துரும்பினும் கடையேன் அசடனேன் அறிவிலேன் உலகில்
குளத்திலே குளிப்பார் குளிக்கவெஞ் சிறுநீர்க் குழியிலே குளித்தவெங் கொடியேன்
வளத்திலே பொசித்துத் தளத்திலே படுக்க மனங்கொண்ட சிறியனேன் மாயைக்
களத்திலே பயின்ற உளத்திலே பெரியன் என்னினும் காத்தருள் எனையே.
7

103 தொழுதெலாம் வல்ல கடவுளே நின்னைத் துதித்திலேன் தூய்மைஒன் றறியேன்
கழுதெலாம் அனையேன் இழுதெலாம் உணவில் கலந்துணக் கருதிய கருத்தேன்
பழுதெலாம் புரிந்து பொழுதெலாம் கழித்த பாவியேன் தீமைகள் சிறிதும்
எழுதலாம் படித்தன் றெனமிக உடையேன் என்னினும் காத்தருள் எனையே.
8

104 வட்டியே பெருக்கிக் கொட்டியே ஏழை மனைகவர் கருத்தினேன் ஓட்டைச்
சட்டியே எனினும்பிறர்கொளத் தரியேன் தயவிலேன் சூதெலாம் அடைத்த
பெட்டியே நிகர்த்த மனத்தினேன் உலகில் பெரியவர் மனம்வெறுக் கச்செய்
எட்டியே மண்ணாங் கட்டியே அனையேன் என்னினும் காத்தருள் எனையே.
9

105 உடுத்திலேம் சிறிதும் உண்டிலேம் எனவந் தோதிய வறிஞருக் கேதும்
கொடுத்திலேன் கொடுக்கும் குறிப்பிலேன் உலகில் குணம்பெரி துடையநல் லோரை
அடுத்திலேன் அடுத்தற் காசையும் இல்லேன் அவனிமேல் நல்லவன் எனப்பேர்
எடுத்திலேன் எனினும் தெய்வமே துணைஎன் றிருக்கின்றேன் காத்தருள் எனையே.

திருச்சிற்றம்பலம்

Koviloor Digital Library

12. அவா அறுத்தல்

எழுசீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

106 தாலவாழக் கையிலே சார்ந்தவர் எல்லாம் தக்கமுப் போதினும் தனித்தே
சீலமார் பூசைக் கடன்முடிக் கின்றார் சிறியனேன் தவஞ்செய்வான் போலே
ஞாலமே லவர்க்குக் காட்டிநான் தனித்தே நவிலும்இந் நாய்வயிற் றினுக்கே
காலையா தியமுப் போதினும் சோற்றுக் கடன்முடித் திருந்தனன் எந்தாய்.
1

107 சோற்றிலே விருப்பஞ் சூழ்ந்திடில் ஒருவன் துன்னுநல் தவம்எலாஞ் சுருங்கி
ஆற்றிலே கரைத்த புளிஎனப் போம்என் றறிஞர்கள் உரைத்திடல் சிறிதும்
போற்றிலேன் உன்னைப் போற்றிலேன் சுவையில் பொருந்திய காரசா ரஞ்சேர்
சாற்றிலே கலந்த சோற்றிலே ஆசை தங்கினேன் என்செய்வேன் எந்தாய்.
2

108 விருப்பிலேன் போலக் காட்டினேன் அன்றி விளைவிலா தூண்எலாம் மறுத்த
கருப்பிலே எனினும் கஞ்சியா திகளைக் கருத்துவந் துண்ணுதற் கமையேன்
நெருப்பிலே உருக்கு நெய்யிலே சிறிதும் நீரிடாத் தயிரிலே நெகிழ்ந்த
பருப்பிலே சோற்றுப் பொருப்பிலே ஆசை பற்றினேன் என்செய்வேன் எந்தாய்.
3

109 உறியிலே தயிரைத் திருடிஉண் டனன்என் றொருவனை உரைப்பதோர் வியப்போ
குறியிலே அமைத்த உணவெலாம் திருடிக் கொண்டுபோய் உண்டனன் பருப்புக்
கறியிலே பொரித்த கறியிலே கூட்டுக் கறியிலே கலந்தபே ராசை
வெறியிலே உனையும் மறந்தனன் வயிறு வீங்கிட உண்டனன் எந்தாய்.
4

110 கீரையே விரும்பேன் பருப்பொடு கலந்த கீரையே விரும்பினேன் வெறுந்தண்
நீரையே விரும்பேன் தெங்கிளங் காயின் நீரையே விரும்பினேன் உணவில்
ஆரையே எனக்கு நிகர்எனப் புகல்வேன் அய்யகோ அடிச்சிறு நாயேன்
பேரையே உரைக்கில் தவம்எலாம் ஓட்டம் பிடிக்குமே என்செய்வேன் எந்தாய்.
5

111 பாலிலே கலந்த சோறெனில் விரைந்தே பத்தியால் ஒருபெரு வயிற்றுச்
சாலிலே அடைக்கத் தடைபடேன் வாழை தகுபலா மாமுதற் பழத்தின்
தோலிலே எனினும் கிள்ளிஓர் சிறிதும் சூழ்ந்தவர்க் கீந்திடத் துணியேன்
வாலிலேன் இருக்கில் வனத்திலே இருக்க வாய்ப்புளேன் என்செய்வேன் எந்தாய்.
6

112 உடம்பொரு வயிறாய்ச் சருக்கரை கலந்த உண்டியே உண்டனன் பலகால்
கடம்பெறு புளிச்சோ றுண்டுளே களித்தேன் கட்டிநல் தயிரிலே கலந்த
தடம்பெறு சோற்றில் தருக்கினேன் எலுமிச் சம்பழச் சோற்றிலே தடித்தேன்
திடம்பெறும் மற்றைச் சித்திரச் சோற்றில் செருக்கினேன் என்செய்வேன் எந்தாய்.
7

Koviloor Digital Library

113 மிளகுமேன் மேலும் சேர்த்தபல் உணவில் விருப்பெலாம் வைத்தனன் உதவாச்
சுளகினும் கடையேன் பருப்பிலே அமைத்த துவையலே சுவர்க்கம்என் றுண்டேன்
இளகிலா மனத்தேன் இனியபச் சடிசில் எவற்றிலும் இச்சைவைத் திசைத்தேன்
குளகுணும் விலங்கின் இலைக்கறிக் காசை கொண்டனன் என்செய்வேன் எந்தாய். 8

114 தண்டுகாய் கிழங்கு பூமுதல் ஒன்றும் தவரவிட் டிடுவதற் கமையேன்
கொண்டுபோய் வயிற்றுக் குழிஎலாம் நிரம்பக் கொட்டினேன் குணமிலாக் கொடியேன்
வண்டுபோல் விரைந்து வயல்எலாம் நிரம்ப மலங்கொட்ட ஓடிய புலையேன்
பண்டுபோல் பசித்தூண் வருவழி பார்த்த பாவியேன் என்செய்வேன் எந்தாய். 9

115 வறுத்தலே பொடித்து மலர்த்தலே புரட்டிவைத்தலே துவட்டலில் சுவைகள்
உறுத்தலே முதலா உற்றபல் உணவை ஒருமல வயிற்றுப்பை உள்ளே
துறுத்தலே எனக்குத் தொழில்எனத் துணிந்தேன் துணிந்தரைக்கணத்தும்வன் பசியைப்
பொறுத்தலே அறியேன் மலப்புலைக் கூட்டைப் பொறுத்தனன் என்செய்வேன் எந்தாய். 10

116 பருப்பிடி யரிவா லிடிகளா திகளால் பண்ணிய பண்ணிகா ரங்கள்
உருப்பிடி நிரம்ப வரவர எல்லாம் ஒருபெரு வயிற்றிலே அடைத்தேன்
கருப்பிடி உலகின் எருப்பிடி அனைய கடையரில் கடையனேன் உதவாத்
துருப்பிடி இருப்புத் துண்டுபோல் கிடந்து தூங்கினேன் என்செய்வேன் எந்தாய். 11

117 அடிக்கடி நுண்மை விழைந்துபோய் அவைகள் அடுக்கிய இடந்தொறும் அலைந்தே
தடிக்கடி நாய்போல் நுகர்ந்துவாய் சுவைத்துத் தவம்புரிந் தான்என நடித்தேன்
பொடிக்கடி நாசித் துளையிலே புகுத்திப் பொங்கினேன் அய்யகோ எனது
முடிக்கடி புனைய முயன்றிலேன் அறிவில் மூடனேன் என்செய்வேன் எந்தாய். 12

118 உண்டியே விழைந்தேன் எனினும்என் தன்னை உடையவா அடியனேன் உனையே
அண்டியே இருந்தேன் இருக்கின்றேன் இருப்பேன் அப்பநின் ஆணைநின் தனக்கே
தொண்டுறா தவர்கைச் சோற்றினை விரும்பேன் தூயனே துணைநினை அல்லால்
கண்டிலேன் என்னைக் காப்பதுன் கடன்காண் கைவிடேல் கைவிடேல் எந்தாய். 13

திருச்சிற்றம்பலம்

Koviloor Digital Library

13. திருவருள் விழைதல்

ஏழுசீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

119 செய்வகை அறியேன் மன்றுள்மா மணிநின்
திருவுளக் குறிப்பையும் தெரியேன்
உய்வகை அறியேன் உணர்விலேன் அந்தோ
உறுகண்மேல் உறுங்கொல்என் றுலைந்தேன்
மெய்வகை அடையேன் வேறெவர்க் குரைப்பேன்
வினையனேன் என்செய விரைகேன்
பொய்வகை உடையேன் எங்ஙனம் புகுவேன்
புலையனேன் புகல்அறி யேனே. 1

120 அறிவிலேன் அறிந்தார்க் கடிப்பணி புரியேன்
அச்சமும் அவலமும் உடையேன்
செறிவிலேன் பொதுவாம் தெய்வம்நீ நினது
திருவுளத் தெனைநினை யாயேல்
எறிவிலேன் சிறியேன் எங்ஙனம் புகுவேன்
என்செய்வேன் யார்துணை என்பேன்
பிறிவிலேன் பிரிந்தால் உயிர்தரிக் கலன்என்
பிழைபொறுத் தருள்வதுன் கடனே. 2

121 உன்கடன் அடியேற் கருளல்என் றுணர்ந்தேன்
உடல்பொருள் ஆவியும் உனக்கே
பின்கடன் இன்றிக் கொடுத்தனன் கொடுத்த
பின்னும்நான் தளருதல் அழகோ
என்கடன் புரிவேன் யார்க்கெடுத் துரைப்பேன்
என்செய்வேன் யார்துணை என்பேன்
முன்கடன் பட்டார் போல்மனம் கலங்கி
முறிதல்ஓர் கணம்தரி யேனே. 3

122 தரித்திடேன் சிறிதும் தரித்திடேன் எனது
தளர்ச்சியும் துன்பமும் தவிர்த்தே
தெரித்திடல் அனைத்தும் தெரித்திடல் வேண்டும்
தெரித்திடாய் எனில்இடர் எனைத்தான்
எரித்திடும் அந்தோ என்செய்வேன் எங்கே
எய்துகேன் யார்துணை என்பேன்
திரித்தநெஞ் சகத்தேன் சரித்திரம் அனைத்தும்
திருவுளம் தெரிந்தது தானே. 4

Koviloor Digital Library

123 தான்எனைப் புணரும் தருணம்ஈ தெனவே
சத்தியம் உணர்ந்தனன் தனித்தே
தேன்உறக் கருதி இருக்கின்றேன் இதுநின்
திருவுளம் தெரிந்ததெந் தாயே
ஆன்எனக்கூவி அணைத்திடல் வேண்டும்
அரைக்கணம் ஆயினும் தாழ்க்கில்
நான்இருப் பறியேன் திருச்சிற்றம் பலத்தே
நடம்புரி ஞானநா டகனே. 5

124 ஞானமும் அதனால் அடைஅனு பவமும்
நாயினேன் உணர்ந்திட உணர்த்தி
ஈனமும் இடரும் தவிர்த்தனை அந்நாள்
இந்தநாள் அடியனேன் இங்கே
ஊனம்ஒன் றில்லோய் நின்றனைக் கூவி
உழைக்கின்றேன் ஒருசிறி தெனினும்
ஏனென வினவா திருத்தலும் அழகோ
இறையும்நான் தரிக்கலன் இனியே. 6

125 இனியநற் றாயின் இனியஎன் அரசே
என்னிரு கண்ணினுண் மணியே
கனிஎன இனிக்கும் கருணையா ரமுதே
கனகஅம் பலத்துறும் களிப்பே
துனிஉறு மனமும் சோம்புறும் உணர்வும்
சோர்வுறு முகமும்கொண் டடியேன்
தனிஉளங் கலங்கல் அழகதோ எனைத்தான்
தந்தநற் றந்தைநீ அலையோ. 7

126 தந்தையும் தாயும் குருவும்யான் போற்றும்
சாமியும் பூமியும் பொருளும்
சொந்தநல் வாழ்வும் நேயமும் துணையும்
சுற்றமும் முற்றும்நீ என்றே
சிந்தையுற் றிங்கே இருக்கின்றேன் இதுநின்
திருவுளம் தெரிந்ததே எந்தாய்
நிந்தைசெய் உலகில் யான்உளம் கலங்கல்
நீதியோ நின்அருட் கழகோ. 8

127 அழகனே ஞான அமுதனே என்றன்
அப்பனே அம்பலத் தரசே
குழகனே இன்பக் கொடிஉளம் களிக்கும்
கொழுநனே சுத்தசன் மார்க்கக்

Koviloor Digital Library

கழகநேர் நின்ற கருணைமா நிதியே
கடவுளே கடவுளே எனநான்
பழகநேர்ந் திட்டேன் இன்னும்இவ் வுலகில்
பழங்கணால் அழுங்குதல் அழகோ. 9

128 பழம்பிழி மதுரப் பாட்டல எனினும்
பத்தரும் பித்தரும் பிதற்றும்
கிழம்பெரும் பாட்டும் கேட்பதுன் உள்ளக்
கிளர்ச்சிஎன் றறிந்தநாள் முதலாய்
வழங்குநின் புகழே பாடுறு கின்றேன்
மற்றொரு பற்றும்இங் கறியேன்
சழங்குடை உலகில் தளருதல் அழகோ
தந்தையுந் தாயும்நீ அலையோ. 10

129 தாயும்என் ஒருமைத் தந்தையும் ஞான
சபையிலே தனிநடம் புரியும்
தூயநின் பாதத் துணைஎனப் பிடித்தேன்
தூக்கமும் சோம்பலும் துயரும்
மாயையும் வினையும் மறைப்பும்ஆ ணவமும்
வளைத்தெனைப் பிடித்திடல் வழக்கோ
நாயினேன் இனிஓர் கணந்தரிப் பறியேன்
நல்அருட் சோதிதந் தருளே. 11

130 சோதியேல் எனைநீ சோதனை தொடங்கில்
சூழ்உயிர் விடத்தொடங் குவன்நான்
நீதியே நிறைநின் திருவருள் அறிய
நிகழ்த்தினேன் நிச்சயம் இதுவே
ஓதியே உணர்தற் கரும்பெரும் பொருளே
உயிர்க்குயிர் ஆகிய ஒளியே
ஆதியே நடுவே அந்தமே ஆதி
நடுஅந்தம் இல்லதோர் அறிவே. 12

131 இல்லைஉண் டெனும்இவ் விருமையும் கடந்தோர்
இயற்கையின் நிறைந்தபே ரின்பே
அல்லைஉண் டெழுந்த தனிப்பெருஞ் சுடரே
அம்பலத் தாடல்செய் அமுதே
வல்லைஇன் றடியேன் துயர்எலாம் தவிர்த்து
வழங்குக நின்அருள் வழங்கல்
நல்லைஇன் றலது நாளைஎன் றிடிலோ
நான்உயிர் தரிக்கலன் அரசே. 13

Koviloor Digital Library

132 அரைசெலாம் வழங்கும் தனிஅர சதுநின்
அருளர செனஅறிந் தனன்பின்
உரைசெய்நின் அருள்மேல் உற்றபே ராசை
உளம்எலாம் இடங்கொண்ட தெந்தாய்
வரைசெயா மேன்மேல் பொங்கிவாய் ததும்பி
வழிகின்ற தென்வசங் கடந்தே
இரைசெய்என் ஆவி தழைக்கஅவ் வருளை
ஈந்தருள் இற்றைஇப் போதே. 14

133 போதெலாம் வீணில் போக்கிஏ மாந்த
புழுத்தலைப் புலையர்கள் புணர்க்கும்
சூதெலாம் கேட்குந் தொறும்உனைப் பரவும்
தூயர்கள் மனம்அது துளங்கித்
தாதெலாம் கலங்கத் தளருதல் அழகோ
தனிஅருட் சோதியால் அந்த
வாதெலாம் தவிர்த்துச் சுத்தசன் மார்க்கம்
வழங்குவித் தருளுக விரைந்தே. 15

134 விரைந்துநின் அருளை ஈந்திடல் வேண்டும்
விளம்பும்இத் தருணம்என் உளந்தான்
கரைந்தது காதல் பெருகிமேல் பொங்கிக்
கரைஎலாம் கடந்தது கண்டாய்
வரைந்தெனை மணந்த வள்ளலே எல்லாம்
வல்லவா அம்பல வாணா
திரைந்தஎன் உடம்பைத் திருஉடம் பாக்கித்
திகழ்வித்த சித்தனே சிவனே. 16

135 சிவந்திகழ் கருணைத் திருநெறிச் சார்பும்
தெய்வம்ஒன் றேஎனும் திறமும்
நவந்தரு நிலைகள் சுதந்தரத் தியலும்
நன்மையும் நரைதிரை முதலாம்
துவந்துவம் தவிர்த்துச் சுத்தமா தியமுச்
சுகவடி வம் பெறும் பேறும்
தவந்திகழ் எல்லாம் வல்லசித் தியும்நீ
தந்தருள் தருணம்ஈ தெனக்கே. 17

136 தருணம் இஞ் ஞான்றே சுத்தசன் மார்க்கத்
தனிநெறி உலகெலாம் தழைப்பக்
கருணையும் சிவமே பொருள்எனக் கருதும்
கருத்தும்உற் றெம்மனோர் களிப்பப்

Koviloor Digital Library

பொருள்நிறை ஓங்கத் தெருள்நிலை விளங்கப்
புண்ணியம் பொற்புற வயங்க
அருள்நயந் தருள்வாய் திருச்சிற்றம் பலத்தே
அருட்பெருஞ் சோதிஎன் அரசே. 18

137 என்உள வரைமேல் அருள்ஒளி ஓங்கிற்
றிருள்இர வொழிந்தது முழுதும்
மன்உறும் இதய மலர்மலர்ந் ததுநன்
மங்கல முழங்குகின் றனசீர்ப்
பொன்இயல் விளக்கம் பொலிந்தது சித்திப்
பூவையர் புணர்ந்திடப் போந்தார்
சொன்னநல் தருணம் அருட்பெருஞ்சோதி
துலங்கவந் தருளுக விரைந்தே. 19

138 வந்தருள் புரிக விரைந்திது தருணம்
மாமணி மன்றிலே ஞான
சுந்தர வடிவச் சோதியாய் விளங்கும்
சுத்தசன் மார்க்கசற் குருவே
தந்தருள் புரிக வரம்எலாம் வல்லை
தனிஅருட் சோதியை எனது
சிந்தையில் புணர்ப்பித் தென்னொடுங் கலந்தே
செய்துவித் தருள்கசெய் வகையே. 20

திருச்சிற்றம்பலம்

14. சிற்சபை விளக்கம்

எண்சீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

139 சோறு வேண்டினும் துகில்அணி முதலாம்
சுகங்கள் வேண்டினும் சுகமலால் சுகமாம்
வேறு வேண்டினும் நினைஅடைந் தன்றி
மேவொ ணாதெனும் மேலவர் உரைக்கே
மாறு வேண்டிலேன் வந்துநிற் கின்றேன்
வள்ள லேஉன்றன் மனக்குறிப் பறியேன்
சாறு வேண்டிய பொழில்வடல் அரசே
சத்தி யச்சபைத் தனிப்பெரும் பதியே. 1

Koviloor Digital Library

140 எஞ்சல் இன்றிய துயரினால் இடரால்
இடுக்குண் டையநின் இன்னருள் விரும்பி
வஞ்ச நெஞ்சினேன் வந்துநிற் கின்றேன்
வள்ள லேஉன்றன் மனக்குறிப் பறியேன்
அஞ்சல் என்றெனை ஆட்கொளல் வேண்டும்
அப்ப நின்னலால் அறிகிலேன் ஒன்றும்
தஞ்சம் என்றவர்க் கருள்வடல் அரசே
சத்தி யச்சபைத் தனிப்பெரும் பதியே. 2

141 சூழ்வி லாதுழல் மனத்தினால் சுழலும்
துட்ட னேன்அருட் சுகப்பெரும் பதிநின்
வாழ்வு வேண்டினேன் வந்துநிற் கின்றேன்
வள்ள லேஉன்றன் மனக்குறிப் பறியேன்
ஊழ்வி டாமையில் அரைக்கணம் எனினும்
உன்னை விட்டயல் ஒன்றும்உற் றறியேன்
தாழ்வி லாதசீர் தருவடல் அரசே
சத்தி யச்சபைத் தனிப்பெரும் பதியே. 3

142 ஆட்டம் ஒய்கிலா வஞ்சக மனத்தால்
அலைதந் தையவோ அயர்ந்துளம் மயர்ந்து
வாட்ட மோடிவண் வந்துநிற் கின்றேன்
வள்ள லேஉன்றன் மனக்குறிப் பறியேன்
நாட்டம் நின்புடை அன்றிமற் றறியேன்
நாயி னேன்பிழை பொறுத்திது* தருணம்
தாட்ட லந்தரு வாய்வடல் அரசே
சத்தி யச்சபைத் தனிப்பெரும் பதியே. 4

143 கருணை ஒன்றிலாக் கல்மனக் குரங்கால்
காடு மேடுழன் றுளம்மெலிந் தந்தோ
வருண நின்புடை வந்துநிற் கின்றேன்
வள்ள லேஉன்றன் மனக்குறிப் பறியேன்
அருணன் என்றெனை அகற்றிடு வாயேல்
ஐய வோதுணை அறிந்திலன் இதுவே
தருணம் எற்கருள் வாய்வடல் அரசே
சத்தி யச்சபைத் தனிப்பெரும் பதியே. 5

144 கரண வாதனை யால்மிக மயங்கிக்
கலங்கி னேன்ஒரு களைகணும் அறியேன்
மரணம் நீக்கிட வந்துநிற் கின்றேன்
வள்ள லேஉன்றன் மனக்குறிப் பறியேன்

---

* நயந்திது – படிவேறுபாடு. ஆ.பா

Koviloor Digital Library

இரணன் என்றெனை எண்ணிடேல் பிறிதோர்
இச்சை ஒன்றிலேன் எந்தைநின் உபய
சரணம் ஈந்தருள் வாய்வடல் அரசே
சத்தி யச்சபைத் தனிப்பெரும் பதியே. 6

145 தூய நெஞ்சினேன் அன்றுநின் கருணைச்
சுகம்வி ழைந்திலேன் எனினும்பொய் உலக
மாயம் வேண்டிலேன் வந்துநிற் கின்றேன்
வள்ள லேஉன்றன் மனக்குறிப் பறியேன்
ஈய வாய்த்தநல் தருணம்ஈ தருள்க
எந்தை நின்மலர் இணைஅடி அல்லால்
தாயம் ஒன்றிலேன் தனிவடல் அரசே
சத்தி யச்சபைத் தனிப்பெரும் பதியே. 7

146 சிரத்தை ஆதிய சுபகுணம் சிறிதும்
சேர்ந்தி லேன்அருட் செயலிலேன் சாகா
வரத்தை வேண்டினேன் வந்துநிற் கின்றேன்
வள்ள லேஉன்றன் மனக்குறிப் பறியேன்
கரத்தை நேர்உளக் கடையன்என் றெனைநீ
கைவி டேல்ஒரு கணம்இனி ஆற்றேன்
தரத்தை ஈந்தருள் வாய்வடல் அரசே
சத்தி யச்சபைத் தனிப்பெரும் பதியே. 8

147 பத்தி யஞ்சிறி துற்றிலேன் உன்பால்
பத்தி ஒன்றிலேன் பரமநின் கருணை
மத்தி யம்பெற வந்துநிற் கின்றேன்
வள்ள லேஉன்றன் மனக்குறிப் பறியேன்
எத்தி அஞ்சலை எனஅரு ளாயேல்
ஏழை யேன்உயிர் இழப்பன்உன் ஆணை
சத்தி யம்புகன் றேன்வடல் அரசே
சத்தி யச்சபைத் தனிப்பெரும் பதியே. 9

148 கயவு செய்மத கரிஎனச் செருக்கும்
கருத்தி னேன்மனக் கரிசினால் அடைந்த
மயர்வு நீக்கிட வந்துநிற் கின்றேன்
வள்ள லேஉன்றன் மனக்குறிப் பறியேன்
உயவு வந்தருள் புரிந்திடாய் எனில்என்
உயிர் தரித்திடா துன்அடி ஆணை
தயவு செய்தருள் வாய்வடல் அரசே
சத்தி யச்சபைத் தனிப்பெரும் பதியே. 10

திருச்சிற்றம்பலம்

Koviloor Digital Library

15. திருவடி முறையீடு

ஏழுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

149 சீரிடம் பெறும்ஓர் திருச்சிற்றம் பலத்தே திகழ்தனித் தந்தையே நின்பால்
சேரிடம் அறிந்தே சேர்ந்தனன் கருணை செய்தருள் செய்திடத் தாழ்க்கில்
யாரிடம் புகுவேன் யார்துணை என்பேன் யார்க்கெடுத் தென்குறை இசைப்பேன்
போரிட முடியா தினித்துய ரொடுநான் பொறுக்கலேன் அருள்கஇப் போதே. 1

150 போதுதான் விரைந்து போகின்ற தருள்நீ புரிந்திடத் தாழ்த்தியேல் ஐயோ
யாதுதான் புரிவேன் யாரிடம் புகுவேன் யார்க்கெடுத் தென்குறை இசைப்பேன்
தீதுதான் புரிந்தேன் எனினும்நீ அதனைத் திருவுளத் தடைத்திடு வாயேல்
ஈதுதான் தந்தை மரபினுக் கழகோ என்னுயிர்த் தந்தைநீ அலையோ. 2

151 தந்தைநீ அலையோ தனயன்நான் அலனோ தமியனேன் தளர்ந்துளங் கலங்கி
எந்தையே குருவே இறைவனே முறையோ என்றுநின் றோலிடு கின்றேன்
சிந்தையே அறியார் போன்றிருந் தனையேல் சிறியனேன் என்செய்கேன் ஐயோ
சந்தையே புகுந்த நாயினில் கடையேன் தளர்ச்சியைத் தவிர்ப்பவர் யாரே. 3

152 யாரினும் கடையேன் யாரினும் சிறியேன் என்பிழை பொறுப்பவர் யாரே
பாரினும் பெரிதாம் பொறுமையோய் நீயே பாவியேன் பிழைபொறுத் திலையேல்
ஊரினும் புகுத ஒண்ணுமோ பாவி உடம்பைவைத் துலாவவும் படுமோ
சேரினும் எனைத்தான் சேர்த்திடார் பொதுவாம் தெய்வத்துக் கடாதவன் என்றே. 4

153 அடாதகா ரியங்கள் செய்தனன் எனினும் அப்பநீ அடியனேன் தன்னை
விடாதவா றறிந்தே களித்திருக் கின்றேன் விடுதியோ விட்டிடு வாயேல்
உடாதவெற் றரைநேர்ந் துயங்குவேன் ஐயோ உன்னருள் அடையநான் இங்கே
படாதபா டெல்லாம் பட்டனன் அந்தப் பாடெலாம் நீஅறி யாயோ. 5

154 அறிந்திலை யோஎன் பாடெலாம் என்றே அழைத்தனன் அப்பனே என்னை
எறிந்திடா திந்தத் தருணமே வந்தாய் எடுத்தணைத் தஞ்சிடேல் மகனே
பிறிந்திடேம் சிறிதும் பிறிந்திடேம் உலகில் பெருந்திறல் சித்திகள் எல்லாம்
சிறந்திட உனக்கே தந்தனம் எனஎன் சென்னிதொட் டுரைத்தனை களித்தே. 6

155 களித்தென துடம்பில் புகுந்தனை எனது கருத்திலே அமர்ந்தனை கனிந்தே
தெளித்தஎன் அறிவில் விளங்கினை உயிரில் சிறப்பினால் கலந்தனை உள்ளம்
தளிர்த்திடச் சாகா வரங்கொடுத் தென்றும் தடைபடாச் சித்திகள் எல்லாம்
அளித்தனை எனக்கே நின்பெருங் கருணை அடியன்மேல் வைத்தவா றென்னே. 7

Koviloor Digital Library

156 என்நிகர் இல்லா இழிவினேன் தனைமேல் ஏற்றினை யாவரும் வியப்பப்
பொன்இயல் வடிவும் புரைபடா உளமும் பூரண ஞானமும் பொருளும்
உன்னிய எல்லாம் வல்லசித் தியும்பேர் உவகையும் உதவினை எனக்கே
தன்னிகர் இல்லாத் தலைவனே நினது தயவைஎன் என்றுசாற் றுவனே. 8

157 சாற்றுவேன் எனது தந்தையே தாயே சற்குரு நாதனே என்றே
போற்றுவேன் திருச்சிற் றம்பலத் தாடும் பூரணா எனஉல கெல்லாம்
தூற்றுவேன் அன்றி எனக்குநீ செய்த தூயபேர் உதவிக்கு நான்என்
ஆற்றுவேன் ஆவி உடல்பொருள் எல்லாம் அப்பநின் சுதந்தரம் அன்றோ. 9

158 சுதந்தரம் உனக்கே கொடுத்தனம் உனது தூயநல் உடம்பினில் புகுந்தேம்
இதந்தரும் உளத்தில் இருந்தனம் உனையே இன்புறக் கலந்தனம் அழியாப்
பதந்தனில் வாழ்க அருட்பெருஞ் ஜோதிப் பரிசுபெற் றிடுகபொற் சபையும்
சிதந்தரு சபையும் போற்றுக என்றாய் தெய்வமே வாழ்கநின் சீரே. 10

திருச்சிற்றம்பலம்

16. தற்சுதந்தரம் இன்மை

அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

159 இப்பாரில் உடல்ஆவி பொருளும்உன்பாற் கொடுத்தேன்மற் றெனக்கென் றிங்கே
எப்பாலும் சுதந்தரம்ஓர் இறையும்இலை அருட்சோதி இயற்கை என்னும்
துப்பாய உடலாதி தருவாயோ இன்னும்எனைச் சோதிப் பாயோ
அப்பாநின் திருவுளத்தை அறியேன்இவ் வடியேனால் ஆவ தென்னே. 1

160 என்னேஎம் பெருமான்இங் கின்னும் அணைந் திலன்என்றே ஏங்கிஏங்கி
மன்னேஎன் மணியேகண் மணியேஎன் வாழ்வேநல் வரத்தாற் பெற்ற
பொன்னேஅற் புதமேசெம் பொருளேஎன் புகலேமெய்ப் போத மேஎன்
அன்னேஎன் அப்பாஎன் றழைத்தலன்றி அடியேனால் ஆவ தென்னே. 2

161 பொடிஎடுக்கப் போய்அதனை மறந்துமடி எடுத்தரையில் புனைவேன் சில்லோர்
தடிஎடுக்கக் காணில்அதற் குளங்கலங்கி ஓடுவனித் தரத்தேன் இங்கே
முடிஎடுக்க வல்லேனோ இறைவாநின் அருள் இலதேல் முன்னே வைத்த
அடிஎடுக்க முடியாதே அந்தோஇச் சிறியேனால் ஆவ தென்னே. 3

162 பாட்டுவித்தால் பாடுகின்றேன் பணிவித்தால் பணிகின்றேன் பதியே நின்னைக்
கூட்டுவித்தால் கூடுகின்றேன் குழைவித்தால் குழைகின்றேன் குறித்த ஊணை
ஊட்டுவித்தால் உண்கின்றேன் உறக்குவித்தால் உறங்குகின்றேன் உறங்கா தென்றும்
ஆட்டுவித்தால் ஆடுகின்றேன் அந்தோஇச் சிறியேனால் ஆவதென்னே.

Koviloor Digital Library

163 உடுப்பவனும் உண்பவனும் நானேஎன் னவும்நாணம் உறுவ தெந்தாய்
தடுப்பவனும் தடைதீர்த்துக் கொடுப்பவனும் பிறப்பிறப்புத் தன்னை நீக்கி
எடுப்பவனும் காப்பவனும் இன்பஅனு பவஉருவாய் என்னுள் ஓங்கி
அடுப்பவனும் நீஎன்றால் அந்தோஇச் சிறியேனால் ஆவ தென்னே. 5

164 சாவதென்றும் பிறப்பதென்றும் சாற்றுகின்ற பெரும்பாவம் தன்னை எண்ணி
நோவதின்று புதிதன்றே என்றும்உள தால்இந்த நோவை நீக்கி
ஈவதுமன் றிடைநடிப்போய் நின்னாலே ஆகும்மற்றை இறைவ ராலே
ஆவதொன்றும் இல்லைஎன்றால் அந்தோஇச் சிறியேனால் ஆவதென்னே.
6

165 இசைத்திடவும் நினைத்திடவும் பெரிதரிதாம் தனித்தலைமை இறைவா உன்றன்
நசைத்திடுபே ரருட்செயலால் அசைவதன்றி ஐந்தொழில்செய் நாத ராலும்
தசைத்திடுபுன் துரும்பினையும் அகங்கரித்துத் தங்கள்சுதந் தரத்தால்இங்கே
அசைத்திடற்கு முடியாதேல் அந்தோஇச் சிறியேனால் ஆவ தென்னே.
7

166 கல்லாய மனத்தையும்ஓர் கணத்தினிலே கனிவித்துக் கருணை யாலே
பல்லாரும் அதிசயிக்கப் பக்குவந்தந் தருட்பதமும் பாலிக் கின்றோய்
எல்லாஞ்செய் வல்லோய்சிற் றம்பலத்தே ஆடல்இடு கின்றோய் நின்னால்
அல்லால்ஒன் றாகாதேல் அந்தோஇச் சிறியேனால் ஆவ தென்னே. 8

167 கரைசேரப் புரிந்தாலும் கடையேன்செய் குற்றமெலாம் கருதி மாயைத்
திரைசேரப் புரிந்தாலும் திருவுளமே துணைஎனநான் சிந்தித் திங்கே
உரைசேர இருத்தல்அன்றி உடையாய்என் உறவேஎன் உயிரே என்றன்
அரைசேஎன் அம்மேஎன் அப்பாஇச் சிறியேனால் ஆவ தென்னே. 9

168 இன்பேநன் றருளிஅருள் இயற்கையிலே வைத்தாலும் இங்கே என்னைத்
துன்பேசெய் வித்தாலும் என்செய்வேன் நின்னருளே துணைஎன் றந்தோ
என்பேதை மனமடங்கி இருப்பதன்றி எல்லாங்கண் டிருக்கும் என்றன்
அன்பேஎன் அம்மேஎன் அப்பாஇச் சிறியேனால் ஆவ தென்னே. 10

திருச்சிற்றம்பலம்

Koviloor Digital Library

17. அத்துவிதானந்தத் தனுபவ விடையீடு

எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

169 திருத்தகுபொன் னம்பலத்தே திருநடஞ்செய் தருளும்
திருவடிகள் அடிச்சிறியேன் சென்னிமிசை வருமோ
உருத்தகுநா னிலத்திடைநீள் மலத்தடைபோய் ஞான
உருப்படிவம் அடைவேனோ ஒன்றிரண்டென் னாத
பொருத்தமுறு சுத்தசிவா னந்தவெள்ளம் ததும்பிப்
பொங்கிஅகம் புறங்காணா தெங்குநிறைந் திடுமோ
அருத்தகும்அவ் வெள்ளத்தே நான்மூழ்கி நான்போய்
அதுவாகப் பெறுவேனோ அறிந்திலன்மேல் விளைவே. 1

170 கரணமெலாம் கரைந்ததனிக் கரைகாண்ப துளதோ
கரைகண்ட பொழுதெனையுங் கண்டுதெளி வேனோ
அரணமெலாம் கடந்ததிரு வருள்வெளிநேர் படுமோ
அவ்வெளிக்குள் ஆனந்த அனுபவந்தான் உறுமோ
மரணமெலாம் தவிர்ந்துசிவ மயமாகி நிறைதல்
வாய்த்திடுமோ மூலமல வாதனையும் போமோ
சரணமெலாம் தரமன்றில் திருநடஞ்செய் பெருமான்
தனதுதிரு வுளம்எதுவோ சற்றுமறிந் திலனே. 2

171 நாதாந்தத் திருவீதி நடந்துகடப் பேனோ
ஞானவெளி நடுஇன்ப நடந்தரிசிப் பேனோ
போதாந்தத் திருவடிஎன் சென்னிபொருந் திடுமோ
புதுமையறச் சிவபோகம் பொங்கிநிறைந் திடுமோ
வேதாந்த சித்தாந்த சமரசமும் வருமோ
வெறுவெளியில் சுத்தசிவ வெளிமயந்தான் உறுமோ
பாதாந்த வரைநீறு மணக்கமன்றி லாடும்
பரமர்திரு வுளம்எதுவோ பரமம்அறிந் திலனே. 3

172 சிதம்பரத்தே ஆனந்த சித்தர்திரு நடந்தான்
சிறிதறிந்த படிஇன்னும் முழுதும்அறி வேனோ
பதம்பெறத்தேம் பழம்பிழிந்து பாலும்நறும் பாகும்
பசுநெய்யும் கலந்ததெனப் பாடிமகிழ் வேனோ
நிதம்பரவி ஆனந்த நித்திரைநீங் காத
நித்தர்பணி புரிந்தின்ப சித்திபெறு வேனோ
மதம்பரவு மலைச்செருக்கில் சிறந்தசிறி யேன்நான்
வள்ளல்குரு நாதர்திரு வுள்ளம்அறி யேனே. 4

Koviloor Digital Library

173 களக்கமறப் பொதுநடம்நான் கண்டுகொண்ட தருணம்
கடைச்சிறியேன் உளம்பூத்துக் காய்த்ததொரு காய்தான்
விளக்கமுறப் பழுத்திடுமோ வெம்பிஉதிர்ந் திடுமோ
வெம்பாது பழுக்கினும்என் கரத்தில் அகப் படுமோ
கொளக்கருது மலமாயைக் குரங்குகவர்ந் திடுமோ
குரங்குகவ ராதெனது குறிப்பில்அகப் படினும்
துளக்கமற உண்ணுவனோ தொண்டைவிக்கிக் கொளுமோ
சோதிதிரு வுளம்எதுவோ ஏதும்அறிந் திலனே. 5

174 திருப்பொதுவில் திருநடம்நான் சென்றுகண்ட தருணம்
சித்திஎனும் பெண்ணரசி எத்திஎன்கை பிடித்தாள்
கருப்பறியா தெனைஅதன்முன் கலந்தபுத்தி எனும்ஓர்
காரிகைதான் கண்டளவில் கனிந்துமகிழ்ந் திடுமோ
விருப்பமுறா தெனைமுனிந்து விடுத்திடுமோ நேயம்
விளைந்திடுமோ இவர்க்குநிதம் சண்டைவிளைந் திடுமோ
தருப்பொதுவில் இருவர்க்கும் சந்ததிஉண் டாமோ
தடைபடுமோ திருவுளந்தான் சற்றும்அறிந் திலனே. 6

175 ஆனந்த நடம்பொதுவில் கண்டதரு ணத்தே
அருமருந்தொன் றென்கருத்தில் அடைந்தமர்ந்த ததுதான்
கானந்த மதத்தாலே காரமறை படுமோ
கடுங்கார மாகிஎன்றன் கருத்தில்உறைந் திடுமோ
ஊனந்த மறக்கொளும்போ தினிக்கரசம் தருமோ
உணக்கசந்து குமட்டிஎதிர் எடுத்திடநேர்ந் திடுமோ
நானந்த உளவறிந்து பிறர்க்கீய வருமோ
நல்லதிரு வுளம்எதுவோ வல்லதறிந் திலனே. 7

176 தாய்கொண்ட திருப்பொதுவில் எங்கள்குரு நாதன்
சந்நிதிபோய் வரவிடுத்த தனிக்கரணப் பூவை
காய்கொண்டு வந்திடுமோ பழங்கொண்டு வருமோ
கனிந்தபழங் கொண்டுவருங் காலதனை மதமாம்
பேய்கொண்டு போய்விடுமோ பிலத்திடைவீழ்ந் திடுமோ
பின்படுமோ முன்படுமோ பிணங்கிஒளித் திடுமோ
வாய்கொண்டு வென்றிடுமோ தோற்றிடுமோ என்னை
மறந்திடுமோ திருவுளத்தின் வண்ணம்அறிந் திலனே. 8

177 தீட்டுமணிப் பொதுநடஞ்செய் திருவடிகண் டேத்தச்
செல்கின்றேன் சிறியேன்முன் சென்றவழி அறியேன்
காட்டுவழி கிடைத்திடுமோ நாட்டுவழி தருமோ
கால்இளைப்புக் கண்டிடுமோ காணாதோ களிப்பாம்

Koviloor Digital Library

மேட்டினிடை விடுத்திடுமோ பள்ளத்தே விடுமோ
விவேகம்எனும் துணையுறுமோ வேடர்பயம் உறுமோ
ஈட்டுதிரு வடிச்சமுகம் காணவும்நேர்ந் திடுமோ
எப்படியோ திருவுளந்தான் ஏதும்அறிந் திலனே. 9

178 ஞானமணிப் பொதுநடஞ்செய் திருவடிகண் டிடவே
நடக்கின்றேன் அந்தோமுன் நடந்தவழி அறியேன்
ஊனமிகும் ஆணவமாம் பாவிஎதிர்ப் படுமோ
உடைமைஎலாம் பறித்திடுமோ நடைமெலிந்து போமோ
ஈனமுறும் அகங்காரப் புலிகுறுக்கே வருமோ
இச்சைஎனும் இராக்கதப்பேய் எனைப்பிடித்துக் கொளுமோ
ஆனமலத் தடைநீக்க அருட்டுணைதான் உறுமோ
ஐயர்திரு வுளம்எதுவோ யாதுமறிந் திலனே. 10

திருச்சிற்றம்பலம்

18. திருக்கதவந் திறத்தல்

எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

179 திருக்கதவம் திறவாயோ திரைகளெலாம் தவிர்த்தே
திருவருளாம் பெருஞ்சோதித் திருஉருக்காட் டாயோ
உருக்கிஅமு தூற்றெடுத்தே* உடம்புயிரோ டுளமும்
ஒளிமயமே ஆக்குறமெய் உணர்ச்சிஅரு ளாயோ
கருக்கருதாத் தனிவடிவோய் நின்னைஎன்னுட் கலந்தே
கங்குல்பகல் இன்றிஎன்றும் களித்திடச்செய் யாயோ
செருக்கருதா தவர்க்கருளும் சித்திபுரத் தரசே
சித்தசிகா மணியேஎன் திருநடநா யகனே. 1

180 மணிக்கதவம் திறவாயோ மறைப்பையெலாம் தவிர்த்தே
மாற்றறியாப் பொன்னேநின் வடிவதுகாட் டாயோ
கணிக்கறியாப் பெருநிலையில் என்னோடுநீ கலந்தே
கரைகடந்த பெரும்போகம் கண்டிடச்செய் யாயோ
தணிக்கறியாக் காதல்மிகப் பெருகுகின்ற தரசே
தாங்கமுடி யாதினிஎன் தனித்தலைமைப் பதியே
திணிக்கலையா தியஎல்லாம் பணிக்கவல்ல சிவமே
சித்தசிகா மணியேஎன் திருநடநா யகனே. 2

---

* ஊற்றெடுத்துஎன் – 1885 வே.ப.மு. பதிப்பு

Koviloor Digital Library

181 உரைகடந்த திருவருட்பே ரொளிவடிவைக் கலந்தே
உவட்டாத பெரும்போகம் ஓங்கியுறும் பொருட்டே
இரைகடந்தென் உள்ளகத்தே எழுந்துபொங்கித் ததும்பி
என்காதல் பெருவெள்ளம் என்னைமுற்றும் விழுங்கிக்
கரைகடந்து போனதினித் தாங்கமுடி யாது
கண்டுகொள்வாய் நீயேஎன் கருத்தின்வண்ணம் அரசே
திரைகடந்த குருமணியே சிவஞான மணியே
சித்தசிகா மணியேஎன் திருநடநா யகனே. 3

182 உன்புடைநான் பிறர்போலே உடுக்கவிழைந் தேனோ
உண்ணவிழைந் தேனோவே றுடைமைவிழைந் தேனோ
அன்புடையாய் என்றனைநீ அணைந்திடவே விழைந்தேன்
அந்தோஎன் ஆசைவெள்ளம் அணைகடந்த தரசே
என்புடைவந் தணைகஎன இயம்புகின்றேன் உலகோர்
என்சொலினும் சொல்லுகஎன் இலச்சைஎலாம் ஒழித்தேன்*
தென்புடையோர் முகநோக்கித் திருப்பொதுநிற் கின்றோய்
சித்தகா மணியேஎன் திருநடநா யகனே. 4

183 இறந்திறந்தே இளைத்ததெலாம்** போதும்இந்த உடம்பே
இயற்கைஉடம் பாகஅருள் இன்னமுதம் அளித்தென்
புறந்தழுவி அகம்புணர்ந்தே கலந்துகொண்டெந் நாளும்
பூரணமாம் சிவபோகம் பொங்கியிட விழைந்தேன்
பிறந்திறந்து பொய்க்கதியைப் பெறநினைந்தே மாந்த
பேதையர்போல் எனைநினையேல் பெரியதிருக் கதவம்
திறந்தருளி அணைந்திடுவாய் சிற்சபைவாழ் அரசே
சித்தசிகா மணியேஎன் திருநடநா யகனே. 5

184 பொய்யுடையார் விழைகின்ற புணர்ச்சிவிழைந் தேனோ
பூணவிழைந் தேனோவான் காணவிழைந் தேனோ
மெய்யுடையாய் என்னொடுநீ விளையாட விழைந்தேன்
விளையாட்டென் பதுஞானம் விளையும்விளை யாட்டே
பையுடைப்பாம் பனையரொடும் ஆடுகின்றோய் எனது
பண்பறிந்தே நண்புவைத்த பண்புடையோய் இன்னே
செய்யுடைஎன் னொடுகூடி ஆடஎழுந் தருள்வாய்
சித்தசிகா மணியேஎன் திருநடநா யகனே. 6

185 கூறுகின்ற சமயம்எலாம் மதங்கள்எலாம் பிடித்துக்
கூவுகின்றார் பலன்ஒன்றும் கொண்டறியார் வீணே
நீறுகின்றார் மண்ணாகி நாறுகின்றார் அவர்போல்
நீடுலகில் அழிந்துவிட நினைத்தேனோ நிலைமேல்

---

* விடுத்தேன் – வே.ப.மு. பதிப்பு ** இளைத்தவெலாம் – வே.ப.மு. பதிப்பு

Koviloor Digital Library

ஏறுகின்ற திறம்விழைந்தேன் ஏற்றுவித்தாய் அங்கே
இலங்குதிருக் கதவுதிறந் தின்னமுதம் அளித்தே
தேறுகின்ற மெய்ஞ்ஞான சித்திஉறப் புரிவாய்
சித்தசிகா மணியேஎன் திருநடநா யகனே. 7

186 வேதநெறி ஆகமத்தின் நெறிபவுரா ணங்கள்
விளம்புநெறிஇதிகாசம் விதித்தநெறி முழுதும்
ஓதுகின்ற சூதனைத்தும் உளவனைத்தும் காட்டி
உள்ளதனை உள்ளபடி உணரஉரைத் தனையே✦
ஏதமற உணர்ந்தனன் வீண் போதுகழிப் பதற்கோர்
எள்ளளவும் எண்ணம்இலேன் என்னோடுநீ புணர்ந்தே
தீதறவே அனைத்தும்வல்ல சித்தாடல் புரிவாய்
சித்தசிகா மணியேஎன் திருநடநா யகனே. 8

187 கலையுரைத்த கற்பனையே நிலைஎனக்கொண் டாடும்
கண்மூடி வழக்கம்எலாம் மண்மூடிப் போக
மலைவறுசன் மார்க்கம்ஒன்றே நிலைபெறமெய் உலகம்
வாழ்ந்தோங்கக் கருதியருள் வழங்கினைஎன் தனக்கே
உலைவறும்இப் பொழுதேநல் தருணம்என நீயே
உணர்த்தினைவந் தணைந்தருள்வாய் உண்மைஉரைத் தவனே
சிலைநிகர்வன் மனங்கரைத்துத் திருவமுதம் அளித்தோய்
சித்தசிகா மணியேஎன் திருநடநா யகனே. 9

188 திருத்தகும்ஓர் தருணம்இதில் திருக்கதவம் திறந்தே
திருவருட்பே ரொளிகாட்டித் திருவமுதம் ஊட்டிக்
கருத்துமகிழ்ந் தென்உடம்பில் கலந்துளத்தில் கலந்து
கனிந்துயிரில் கலந்தறிவிற் கலந்துலகம் அனைத்தும்
உருத்தகவே அடங்குகின்ற ஊழிதொறும் பிரியா
தொன்றாகிக் காலவரை உரைப்பஎலாம் கடந்தே
திருத்தியோடு விளங்கிஅருள் ஆடல்செய வேண்டும்
சித்தசிகா மணியேஎன் திருநடநா யகனே. 10

திருச்சிற்றம்பலம்

19. பிள்ளைச்சிறு விண்ணப்பம்

எழுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

189 தடித்த ஓர் மகனைத் தந்தைஈண் டடித்தால் தாயுடன் அணைப்பள்தாய் அடித்தால்
பிடித்தொரு தந்தை அணைப்பன்இங் கெனக்குப் பேசிய தந்தையும் தாயும்
பொடித்திரு மேனி அம்பலத் தாடும் புனிதநீ ஆதலால் என்னை
அடித்தது போதும் அணைத்திடல் வேண்டும் அம்மைஅப் பாஇனிஆற்றேன்.

✦ உணர்தினையே – வே.ப.மு. பதிப்பு

Koviloor Digital Library

190 பெற்றதம் பிள்ளைக் குணங்களை எல்லாம் பெற்றவர் அறிவரே அல்லால்
மற்றவர் அறியார் என்றனை ஈன்ற வள்ளலே மன்றிலே நடிக்கும்
கொற்றவ ஓர்எண் குணத்தவ நீதான்குறிக்கொண்ட கொடியனேன்குணங்கள்
முற்றுநன் கறிவாய் அறிந்தும்என் றனை நீ முனிவதென் முனிவுதீர்ந் தருளே.
2

191 வெம்மதிக் கொடிய மகன்கொடுஞ் செய்கை விரும்பினும் அங்ஙனம் புரியச்
சம்மதிக் கின்றார் அவன்றனைப் பெற்ற தந்தைதாய் மகன்விருப் பாலே
இம்மதிச் சிறியேன் விழைந்ததொன் றிலைநீ என்றனை விழைவிக்க விழைந்தேன்
செம்மதிக் கருணைத் திருநெறி இதுநின் திருவுளம் அறியுமே எந்தாய்.
3

192 பொய்பிழை அனந்தம் புகல்கின்றேன் அதில்ஓர் புல்முனை ஆயினும் பிறர்க்கு
நைபிழை உளதேல் நவின்றிடேன் பிறர்பால் நண்ணிய கருணையால் பலவே
கைபிழை யாமை கருதுகின் றேன்நின் கழற்பதம் விழைகின்றேன் அல்லால்
செய்பிழை வேறொன் றறிகிலேன் அந்தோ திருவுளம் அறியுமே எந்தாய்.
4

193 அப்பணி முடி*என் அப்பனே மன்றில் ஆனந்த நடம்புரி அரசே
இப்புவி தனிலே அறிவுவந் ததுதொட் டிந்தநாள் வரையும்என் தனக்கே
எப்பணி இட்டாய் அப்பணி அலதென் இச்சையால் புரிந்ததொன் றிலையே
செப்புவ தென்நான் செய்தவை எல்லாம் திருவுளம் அறியுமே எந்தாய்.
5

194 முன்னொடு பின்னும் நீதரு மடவார் முயக்கினில் பொருந்தினேன் அதுவும்
பொன்னொடு விளங்கும் சபைநடத் தரசுன் புணர்ப்பலால் என்புணர்ப் பலவே
என்னொடும் இருந்திங் கறிகின்ற நினக்கே எந்தைவே றியம்புவ தென்னோ
சொன்னெடு வானத் தரம்பையர் எனினும் துரும்பெனக் காண்கின்றேன் தனித்தே.
6

195 இன்னுமிங் கெனைநீ மடந்தையர் முயக்கில் எய்துவித் திடுதியேல் அதுவுன்
தன்னுளப் புணர்ப்பிங் கெனக்கொரு சிறிதும் சம்மதம் அன்றுநான் இதனைப்
பன்னுவ தென்னே இதில்அரு வருப்புப் பால்உணும் காலையே உளதால்
மன்னும்அம் பலத்தே நடம்புரி வோய்என் மதிப்பெலாம் திருவடி மலர்க்கே.
7

196 அறிவிலாச் சிறிய பருவத்திற் றானே அருந்தலில் எனக்குள வெறுப்பைப்
பிறிவிலா தென்னுட் கலந்தநீ அறிதி இன்றுநான் பேசுவ தென்னே
செறிவிலாக் கடையேன் என்னினும் அடியேன் திருவருள் அமுதமே விழைந்தேன்
எறிவிலாச் சுவைவே றெவற்றினும் விழைவோர் எட்டுணை யேனும்இன் றெந்தாய்.
8

197 இன்சுவை உணவு பலபல எனக்கிங் கெந்தைநீ கொடுப்பிக்கச் சிறியேன்
நின்சுவை உணவென் றுண்கின்றேன் இன்னும் நீதரு வித்திடில் அதுநின்
தன்சுதந் தரம்இங் கெனக்கதில் இறையும் சம்மதம் இல்லைநான் தானே
என்சுதந் தரத்தில் தேடுவேன் அல்லேன் தேடிய தும்இலை ஈண்டே. 9

---

* அப்பணிசடை – ச.மு.க.

Koviloor Digital Library

198 செறிவதில் மனத்தேன் காசிலே ஆசை செய்திலேன் இந்தநாள் அன்றி
அறிவதில் லாத சிறுபரு வத்தும் அடுத்தவர் கொடுத்தகா சவர்மேல்
எறிவதும் மேட்டில் எறிந்ததும் எனக்குள் இருக்கின்ற நீஅறிந் ததுவே
பிறிவதில் லாநின் அருட்பெரும் பொருளைப் பெற்றனன் பேசுவ தென்னே.
10

199 பணத்திலே சிறிதும் ஆசைஒன் றிலைநான் படைத்தஅப் பணங்களைப்பலகால்
கிணற்றிலே எறிந்தேன் குளத்திலும் எறிந்தேன் கேணியில் எறிந்தனன் எந்தாய்
குணத்திலே நீதான் கொடுக்கின்ற பொருளை எறிகலேன் கொடுக்கின்றேன் பிறர்க்கே
கணத்திலே எல்லாம் காட்டும்நின் அருளைக் கண்டனன் இனிச்சொல்வ தென்னே.
11

200 கிளைத்தஇவ் வுடம்பில் ஆசைஎள் ளளவும் கிளைத்திலேன் பசிஅற உணவு
திளைத்திடுந் தோறும் வெறுப்பொடும் உண்டேன் இன்றுமே வெறுப்பில்உண் கின்றேன்
தளைத்திடு முடைஊன் உடம்பொரு சிறிதும்தடித் திடநினைத்திலேன் இன்றும்
இளைத்திட விழைகின் றேன் இது நான்தான் இயம்பல்என்நீ அறிந்ததுவே.
12

201 இவ்வுல கதிலே இறைஅர சாட்சி இன்பத்தும் மற்றைஇன் பத்தும்
எவ்வள வெனினும் இச்சைஒன் றறியேன் எண்ணுதோ றருவருக் கின்றேன்
அவ்வுல கதிலே இந்திரர் பிரமர் அரிமுத லோர்அடை கின்ற
கவ்வைஇன் பத்தும் ஆசைசற் றறியேன் எந்தைஎன் கருத்தறிந் ததுவே.
13

202 சரியைஓர் நான்கும் கிரியைஓர் நான்கும் சாற்றிடும் யோகமோர் நான்கும்
புரியவும் பதங்கள் பொருந்தவும் எனது புந்தியில் ஆசைசற் றறியேன்
பெரியதோர் ஞானம் நான்கினும் ஆசை பெற்றிலேன் முத்திபெற் றிடவும்
உரியதோர் இச்சை எனக்கிலை என்றன் உள்ளம்நீ அறிந்ததே எந்தாய்.
14

203 இறக்கவும் ஆசை இல்லைஇப் படிநான் இருக்கவும் ஆசைஇன் றினிநான்
பிறக்கவும் ஆசை இலைஉல கெல்லாம் பெரியவர் பெரியவர் எனவே
சிறக்கவும் ஆசை இலைவிசித் திரங்கள் செய்யவும் ஆசைஒன் றில்லை
துறக்கவும் ஆசை இலைதுயர் அடைந்து தூங்கவும் ஆசைஒன் றிலையே.
15

204 சற்சபைக் குரியார் தம்மொடும் கூடித் தனித்தபே ரன்புமெய் அறிவும்
நற்சபைக் குரிய ஒழுக்கமும் அழியா நல்லமெய் வாழ்க்கையும் பெற்றே
சிற்சபை நடமும் பொற்சபை நடமும் தினந்தொறும் பாடிநின் றாடித்
தெற்சபை உலகத் துயிர்க்கெலாம் இன்பம் செய்வதென் இச்சையாம் எந்தாய்.
16

205 உருமலி உலகில் உன்னைநான் கலந்தே ஊழிதோ றூழியும் பிரியா
தொருமையுற் றழியாப் பெருமைபெற் றடியேன் உன்னையே பாடி நின்றாடி
இருநிலத் தோங்கிக் களிக்கவும் பிறருக் கிடுக்கணுற் றால்அவை தவிர்த்தே
திருமணிப் பொதுவில் அன்புடை யவராச் செய்யவும் இச்சைகாண் எந்தாய்.
17

Koviloor Digital Library

206 எவ்வுயிர்த் திரளும் என்னுயிர் எனவே எண்ணிநல் இன்புறச் செயவும்
அவ்வுயிர் களுக்கு வரும்இடை யூற்றை அகற்றியே அச்சநீக் கிடவும்
செவ்வையுற் றுனது திருப்பதம் பாடிச் சிவசிவ என்றுகூத் தாடி
ஒவ்வுறு களிப்பால் அழிவுறா திங்கே ஓங்கவும் இச்சைகாண் எந்தாய்.
18

207 உலகறி வெனக்கிங் குற்றநாள் தொடங்கி உன்அறி வடையும்நாள் வரையில்
இலகிஎன் னோடு பழகியும் எனைத்தான் எண்ணியும் நண்ணியும் பின்னர்
விலகிய மாந்தர்அனைவரும் இங்கே மெய்யுறக் கூடிநின் றுனையே
அலகில்பே ரன்பில் போற்றிவாழ்ந் திடவும் அடியனேற் கிச்சைகாண் எந்தாய்.
19

208 திருவளர் திருச்சிற் றம்பலம் ஓங்கும் சிதம்பரம் எனும்பெருங் கோயில்
உருவளர் மறையும் ஆகமக் கலையும் உரைத்தவா றியல்பெறப் புதுக்கி
மருவளர் மலரின் விளக்கிநின் மேனி வண்ணங்கண் டுளங்களித் திடவும்
கருவளர் உலகில் திருவிழாக் காட்சி காணவும் இச்சைகாண் எந்தாய்.
20

209 தங்கமே அனையார் கூடிய ஞான சமரச சுத்தசன் மார்க்கச்
சங்கமே கண்டு களிக்கவும் சங்கம் சார்திருக் கோயில் கண் டிடவும்*
துங்கமே பெறுஞ்சற் சங்கம்நீ டூழி துலங்கவும் சங்கத்தில் அடியேன்
அங்கமே குளிர நின்றனைப் பாடி ஆடவும் இச்சைகாண் எந்தாய். 21

210 கருணையே வடிவாய்ப் பிறர்களுக் கடுத்த கடுந்துயர் அச்சமா திகளைத்
தருணநின் அருளால் தவிர்த்தவர்க் கின்பம் தரவும்வன் புலைகொலை இரண்டும்
ஒருவிய நெறியில் உலகெலாம் நடக்க உஞற்றவும் அம்பலந் தனிலே
மருவிய புகழை வழுத்தவும் நின்னை வாழ்த்தவும் இச்சைகாண் எந்தாய்.
22

211 மண்ணுல கதிலே உயிர்கள்தாம் வருந்தும் வருத்தத்தை ஒருசிறி தெனினும்
கண்ணுறப் பார்த்தும் செவியுறக் கேட்டும் கணமும்நான் சகித்திடமாட்டேன்
எண்ணுறும் எனக்கே நின்னருள் வலத்தால் இசைத்தபோ திசைத்தபோ தெல்லாம்
நண்ணும்அவ் வருத்தம் தவிர்க்கநல் வரந்தான் நல்குதல் எனக்கிச்சை எந்தாய்.
23

212 இவையலால் பிறிதோர் விடயத்தில் இச்சை எனக்கில்லை இவைஎலாம் என்னுள்
சிவையொடும் அமர்ந்த பெருந்தயா நிதிநின் திருவுளத் தறிந்தது தானே
தவம்இலேன் எனினும் இச்சையின் படிநீ தருதலே வேண்டும்இவ் விச்சை
நவைஇலா இச்சை எனஅறி விக்க அறிந்தனன் நவின்றனன் எந்தாய்.
24

திருச்சிற்றம்பலம்

---

* சங்கம்சார்திருக்கோயில் – வடலூர் ஞானசபை. ச.மு.க

Koviloor Digital Library

20. பிள்ளைப் பெரு விண்ணப்பம்

ஏழுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

213 தனிபெருஞ் சோதித் தலைவனே எனது தந்தையே திருச்சிற்றம் பலத்தே
கனிப்பெருங் கருணைக் கடவுளே அடியேன் கருதிநின் றுரைக்கும்விண் ணப்பம்
இனிப்புறும் நினது திருவுளத் தடைத்தே எனக்கருள் புரிகநீ விரைந்தே
இனிச்சிறு பொழுதும் தரித்திடேன் உன்றன் இணைமலர்ப் பொன்னடி ஆணை.

214 திரிபிலாப் பொருளே திருச்சிற்றம் பலத்தே திகழ்கின்ற தெய்வமே அன்பர்
பரிவுறுந் தோறும் விரைந்துவந் தருளும் பண்பனே பரையிடப் பாகா
பெரியபொற் சபையில் நடம்புரி கின்ற பேரருட் சோதியே எனக்கே
உரியநல் தந்தை வள்ளலே அடியேன் உரைக்கின்றேன் கேட்டருள் இதுவே.
2

215 தானலா திறையும் உயிர்க்கசை வில்லாத் தலைவனே திருச்சிற்றம்பல த்தே
வானலால் வேறொன் றிலைஎன உரைப்ப வயங்கிய மெய்யின்ப வாழ்வே
ஊனலால் உயிரும் உளமும்உள் உணர்வும் உவப்புற இனிக்குந்தெள் ளமுதே
ஞானநா டகஞ்செய் தந்தையே அடியேன் நவில்கின்றேன் கேட்டருள் இதுவே.
3

216 என்னுயிர்க் குயிராம் தெய்வமே என்னை எழுமையும் காத்தருள் இறைவா
என்னுளத் தினிக்கும் தீஞ்சுவைக் கனியே எனக்கறி வுணர்த்திய குருவே
என்னுடை அன்பே திருச்சிற்றம் பலத்தே எனக்கருள் புரிந்தமெய் இன்பே
என்னைஈன் றெடுத்த தந்தையே அடியேன் இசைக்கின்றேன் கேட்கஇம் மொழியே.
4

217 கருணையார் அமுதே என்னுயிர்க் குயிரே கனிந்தசிற் றம்பலக் கனியே
வருணமா மறையின் மெய்ப்பொருள் ஆகி வயங்கிய வள்ளலே அன்பர்
தெருள்நிறை உளத்தே திகழ்தனித் தலைமைத் தெய்வமே திருவருட்சிவமே
தருணம்என் ஒருமைத் தந்தையே தாயே தரித்தருள் திருச்செவிக் கிதுவே.
5

218 என்னைஆண் டருளி என்பிழை பொறுத்த இறைவனே திருச்சிற்றம்பலத்தே
என்னைஆண் டஞ்சேல் உனக்குநல் அருளிங் கீகுதும் என்றஎன் குருவே
என்னைவே றெண்ணா துள்ளதே உணர்த்தி எனக்குளே விளங்குபே ரொளியே
என்னைஈன் றளித்த தந்தையே விரைந்திங் கேற்றருள் திருச்செவிக் கிதுவே.
6

219 இரும்புநேர் மனத்தேன் பிழையெலாம் பொறுத்தென் இதயத்தில் எழுந்திருந் தருளி
விரும்புமெய்ப் பொருளாம் தன்னியல் எனக்கு விளங்கிட விளக்கியுட் கலந்தே
கரும்புமுக் கனிபால் அமுதொடு செழுந்தேன் கலந்தென இனிக்கின்றோய் பொதுவில்
அரும்பெருஞ் சோதி அப்பனே உளத்தே அடைத்தருள் என்மொழி இதுவே.
7

Koviloor Digital Library

220 மலத்திலே கிடந்தேன் தனையெடுத் தருளி மன்னிய வடிவளித் தறிஞர்
குலத்திலே பயிலுந் தரமுமிங் கெனக்குக் கொடுத்துளே விளங்குசற் குருவே
பலத்திலே சிற்றம் பலத்திலே பொன்னம் பலத்திலே அன்பர்தம் அறிவாம்
தலத்திலே ஓங்கும் தலைவனே எனது தந்தையே கேட்கஎன் மொழியே.
8

221 விண்டபோ தகரும் அறிவரும் பொருளே மெய்யனே ஐயனே உலகில்
தொண்டனேன் தன்னை அடுத்தவர் நேயர் சூழ்ந்தவர் உறவினர் தாயர்
கொண்டுடன் பிறந்தோர் அயலவர் எனும்இக் குறிப்பினர் முகங்களில் இளைப்பைக்
கண்டபோ தெல்லாம் மயங்கிஎன் னுள்ளம் கலங்கிய கலக்கம்நீ அறிவாய்.
9

222 சீர்த்தசிற் சபைஎன் அப்பனே எனது தெய்வமே என்பெருஞ் சிறப்பே
ஆர்த்தஇவ் வுலகில் அம்மையர் துணைவர் அடுத்தவர் உறவினர் நேயர்
வேர்த்தமற் றயலார் பசியினால் பிணியால் மெய்யுளம் வெதும்பிய வெதுப்பைப்
பார்த்தபோ தெல்லாம் பயந்தென துள்ளம் பதைத்ததுன் உளம்அறி யாதோ.
10

223 பரைத்தனி வெளியில் நடம்புரிந் தருளும் பரமனே அரும்பெரும் பொருளே
தரைத்தலத் தியன்ற வாழ்க்கையில் வறுமைச் சங்கடப் பாவியால் வருந்தி
நரைத்தவர் இளைஞர் முதலினோர் எனையோர் நண்பன் என் றவரவர் குறைகள்
உரைத்தபோ தெல்லாம் நடுங்கிஎன் னுள்ளம் உடைந்ததுன் உளம்அறி யாதோ.
11

224 அன்னையே அப்பா திருச்சிற்றம் பலத்தென் ஐயனே இவ்வுல கதிலே
பொன்னையே உடையார் வறியவர் மடவார் புகலும்ஆ டவர்இவர் களுக்குள்
தன்னையே அறியாப் பிணியினால் ஆவி தளர்கின்றார் தருணம்ஈ தெனவே
சொன்னபோ தெல்லாம் பயந்துநான் அடைந்த சோபத்தை நீஅறி யாயோ.
12

225 உண்டதோ றெல்லாம் அமுதென இனிக்கும் ஒருவனே சிற்சபை உடையாய்
விண்டபே ருலகில் அம்மஇவ் வீதி மேவும்ஓர் அகத்திலே ஒருவர்
ஒண்டுயிர் மடிந்தார் அலறுகின் றார்என் றொருவரோ டொருவர்தாம் பேசிக்
கொண்டபோ தெல்லாம் கேட்டென துள்ளம் குலைநடுங் கியதறிந் திலையோ.
13

226 காவிநேர் கண்ணாள் பங்கனே* தலைமைக் கடவுளே சிற்சபை தனிலே
மேவிய ஒளியே இவ்வுல கதில்ஊர் வீதிஆ திகளிலே மனிதர்
ஆவிபோ னதுகொண் டுறவினர் அழுத அழுகுரல் கேட்டபோ தெல்லாம்
பாவியென் உள்ளம் பகீர்என நடுங்கிப் பதைத்ததுன் உளம்அறி யாதோ.
14

227 நாதனே என்னை நம்பிய மாந்தர் ஞாலத்தில் பிணிபல அடைந்தே
ஏதநேர்ந் திடக்கண் டையகோ அடியேன் எய்திய சோபமும் இளைப்பும்
ஓதநேர் உள்ள நடுக்கமும் திகைப்பும் உற்றபேர் ஏக்கமா திகளும்
தீதனேன் இன்று நினைத்திட உள்ளம் திடுக்கிடல் நீஅறிந் திலையோ. 15

* காவியல் கருணை வடிவனே – முதற் பதிப்பு, பொன்னேரி, சுந்தரம் பிள்ளைப்பதிப்பு

Koviloor Digital Library

228 கற்றவர் உளத்தே கரும்பினில் இனிக்கும் கண்ணுதற் கடவுளே என்னைப்
பெற்றதாய் நேயர் உறவினர் துணைவர் பெருகிய பழக்கமிக் குடையோர்
மற்றவர் இங்கே தனித்தனி பிரிந்து மறைந்திட்ட தோறும்அப் பிரிவை
உற்றுநான் நினைக்குந் தோறும்உள் நடுங்கி உடைந்தனன் உடைகின்றேன் எந்தாய். 16

229 என்றும்நா டுறுவோர்க் கின்பமே புரியும் எந்தையே என்றனைச் சூழ்ந்தே
நன்றுநா டியநல் லோர்உயிர்ப் பிரிவை நாயினேன் கண்டுகேட் டுற்ற
அன்றுநான் அடைந்த நடுக்கமுந் துயரும் அளவிலை அளவிலை அறிவாய்
இன்றவர் பிரிவை நினைத்திடுந் தோறும் எய்திடும் துயரும்நீ அறிவாய்.17

230 நிலைபுரிந் தருளும் நித்தனே உலகில் நெறியலா நெறிகளில் சென்றே
கொலைபுரிந் திட்ட கொடியவர் இவர்என் றயலவர் குறித்தபோ தெல்லாம்
உலைபுரிந் திடுவெந் தீவயிற் றுள்ளே உற்றென நடுநடுக் குற்றே
துலைபுரிந்* தோடிக் கண்களை மூடித் துயர்ந்ததும் நீஅறிந் ததுவே. 18

231 ஓர்ந்தஉள் ளகத்தே நிறைந்தொளிர் கின்ற ஒருவனே உலகியல் அதிலே
மாந்தர்கள் இறப்பைக் குறித்திடும் பறையின் வல்லொலி கேட்டபோ தெல்லாம்
காந்திஎன் உள்ளம் கலங்கிய கலக்கம் கடவுள்நீ யேஅறிந் திடுவாய்
ஏந்தும்இவ் வுலகில் இறப்பெனில் எந்தாய் என்னுளம் நடுங்குவ தியல்பே. 19

232 மறைமுடி வயங்கும் ஒருதனித் தலைமை வள்ளலே உலகர சாள்வோர்
உறைமுடி** வாள்கொண் டொருவரை ஒருவர் உயிரறச் செய்தனர் எனவே
தறையுறச் சிறியேன் கேட்டபோ தெல்லாம் தளர்ந்துள நடுங்கிநின் றயர்ந்தேன்
இறையும்இவ் வுலகில் கொலைஎனில் எந்தாய் என்னுளம் நடுங்குவ தியல்பே. 20

233 தாய்மொழி குறித்தே கணக்கிலே மற்றோர் தாய்க்குநால் என்பதை இரண்டாய்
வாய்மொழி வஞ்சம் புகன்றனன் வரைந்தேன் நடுங்கினேன் நினைத்ததை மனத்தே
தூய்மொழி நேயர் நம்பினோர் இல்லில் சூழ்ந்தனன் நினைத்தது துயர்ந்தேன்
காய்மொழி புகன்றேன் பொய்மொழி புகன்றேன் கலங்கினேன் அதுநினைத் தெந்தாய். 21

234 எட்டரும் பொருளே திருச்சிற்றம் பலத்தே இலகிய இறைவனே உலகில்
பட்டினி உற்றோர் பசித்தனர் களையால் பரதவிக் கின்றனர் என்றே
ஒட்டிய பிறரால் கேட்டபோ தெல்லாம் உளம்பகீர் எனநடுக் குற்றேன்
இட்டஇவ் வுலகில் பசிஎனில் எந்தாய் என்னுளம் நடுங்குவ தியல்பே. 22

235 பல்லிகள் பலவா யிடத்தும் உச் சியினும் பகரும்நேர் முதற்பல வயினும்
சொல்லிய தோறும் பிறர்துயர் கேட்கச் சொல்கின் றவோஎனச் சூழ்ந்தே
மெல்லிய மனம்நொந் திளைத்தனன் கூகை வெங்குரல் செயுந்தொறும் எந்தாய்+
வல்லியக் குரல்கேட் டயர்பசுப் போல வருந்தினேன் எந்தைநீ அறிவாய்.23

---

*தொலைபுரிந்து. **உறைஉறு—முதற்பதிப்பு, பொ. சு., ச.மு.க.

+ எந்தாய் கூகை வெங்குரல் செயுந்தோறும் — முதற்பதிப்பு

Koviloor Digital Library

236 காக்கைகள் கூவக் கலங்கினேன் பருந்தின் கடுங்குரல்கேட்டுளங் குலைந்தேன்
தாக்கிய ஆந்தை குரல்செயப் பயந்தேன் சாக்குரல் பறவையால் தளர்ந்தேன்
வீக்கிய வேறு கொடுஞ்சகு னஞ்செய் வீக்களால் மயங்கினேன் விடத்தில்*
ஊக்கிய பாம்பைக் கண்டபோ துள்ளம் ஒடுங்கினேன் நடுங்கினேன் எந்தாய்.
24

237 வேறுபல் விடஞ்செய் உயிர்களைக் கண்டு வெருவினேன் வெய்யநாய்க் குழுவின்
சீறிய குரலோ டழுகுரல் கேட்டுத் தியங்கினேன் மற்றைவெஞ் சகுனக்
கூறதாம் விலங்கு பறவைஊர் வனவெங் கோள்செயும்+ ஆடவர் மடவார்
ஊறுசெய் கொடுஞ்சொல் இவைக்கெலாம் உள்ளம் உயங்கினேன் மயங்கினேன் எந்தாய்.
25

238 நிறமுறு விழிக்கீழ்ப் புறத்தொடு தோளும் நிறைஉடம் பிற்சில உறுப்பும்
உறவுதோல் தடித்துத் துடித்திடுந் தோறும் உன்னிமற் றவைகளை அந்தோ
பிறர்துயர் காட்டத் துடித்தவோ என்று பேதுற்று மயங்கிநெஞ் சுடைந்தேன்
நறுவிய துகிலில் கறைஉறக் கண்டே நடுங்கினேன் எந்தைநீ அறிவாய்.26

239 மங்கையர் எனைத்தாம் வலிந்துறுந் தோறும் மயங்கிநாம் இவரொடு முயங்கி
இங்குளங் களித்தால் களித்தவர்க் குடனே இன்னல்உற் றிடும்நமக் கின்னல்
தங்கிய பிறர்தம் துயர்தனைக்++ காண்டல் ஆகும்அத் துயருறத் தரியேம்
பங்கமீ தெனவே எண்ணிநான் உள்ளம் பயந்ததும் எந்தைநீ அறிவாய். 27

240 வலிந்தெனை அழைக்கும் மடந்தையர் தெருவில் மறந்துவந் தடுத்தபின் நினைந்தே
மலிந்திவர் காணில் விடுவர் அன் றிவரால் மயங்கிஉள் மகிழ்ந்தனம் எனிலோ
நலிந்திடு பிறர்தந் துயர்தனைக் கண்டே நடுங்குற வரும்எனப் பயந்தே
மெலிந்துடன் ஒளித்து வீதிவே றொன்றின் மேவினேன் எந்தைநீ அறிவாய்.
28

241 களிப்புறு சுகமாம் உணவினைக் கண்ட காலத்தும் உண்டகா லத்தும்
நெளிப்புறு மனத்தோ டஞ்சினேன் எனைத்தான் நேர்ந்தபல் சுபங்களில் நேயர்
அளிப்புறு விருந்துண் டமர்கஎன் றழைக்க அவர்களுக் கன்பினோ டாங்கே
ஒளிப்புறு வார்த்தை உரைத்தயல் ஒளித்தே பயத்தொடும் உற்றனன் எந்தாய்.
29

242 இன்புறும் உணவு கொண்டபோ தெல்லாம் இச்சுகத் தால்இனி யாது
துன்புறுங் கொல்லோ என்றுளம் நடுங்கிச்சூழ்வெறு வயிற்றொடும் இருந்தேன்
அன்பிலே அன்பர் கொடுத்தவை எல்லாம்ஐயகோ^x தெய்வமே இவற்றால்
வன்புறச் செய்யேல் என்றுளம் பயந்து வாங்கியுண் டிருந்தனன் எந்தாய்.30

243 உற்றதா ரணியில் எனக்குல குணர்ச்சி உற்றநாள் முதல்ஒரு சிலநாள்
பெற்றதாய் வாட்டம் பார்ப்பதற் கஞ்சிப் பேருண வுண்டனன் சிலநாள்
உற்றவர் நேயர் அன்புளார் வாட்டம் உறுவதற் கஞ்சினேன் உண்டேன்
மற்றிவை அல்லால் சுகஉணாக் கொள்ள மனநடுங் கியதுநீ அறிவாய். 31

---

* விடத்தின் – ச.மு.க.
++ துயர்களை – ச.மு.க.
\+ செறும் – பிருங்கி மாநகரம் இராமசாமி முதலியார் பதிப்பு
x ஐயவோ – படிவேறுபாடு. ஆ.பா.

Koviloor Digital Library

244 தொழுந்தகை உடைய சோதியே அடியேன் சோம்பலால் வருந்திய தோறும்
அழுந்தஎன் உள்ளம் பயந்ததை என்னால் அளவிடற் கெய்துமோ பகலில்
விழுந்துறு தூக்கம் வரவது தடுத்தும் விட்டிடா வன்மையால் தூங்கி
எழுந்தபோ தெல்லாம் பயத்தொடும் எழுந்தேன் என்செய்வேன் என்செய்வேன் என்றே. 32

245 அந்தமோ டாதி இல்லதோர் பொதுவில் அரும்பெருஞ் சோதியே அடியேன்
சொந்தமோ அறியேன் பகலிர வெல்லாம் தூக்கமே கண்டனன் தூக்கம்
வந்தபோ தெல்லாம் பயத்தொடு படுத்தேன் மற்றுநான்எழுந்தபோ தெல்லாம்
தொந்தமாம் பயத்தால் சிவசிவ தூக்கம் தொலைவதெக் காலம்என் றெழுந்தேன். 33

246 உடையஅம் பலத்தில் ஒருவனே என்றன் உயிர்க்குயிர் ஆகிய ஒளியே
கடையன்நான் நனவில் நடுங்கிய நடுக்கம் கணக்கிலே சிறிதுறும் கனவில்
இடையுறு நடுக்கம் கருதவும் சொலவும் எண்ணவும் எழுதவும் படுமோ
நடையுறு சிறியேன் கனவுகண் டுள்ளம் நடுங்கிடா நாளும்ஒன் றுளதோ. 34

247 பகலிர வடியேன் படுத்தபோ தெல்லாம் தூக்கமாம் பாவிவந் திடுமே
இகலுறு கனவாம் கொடியவெம் பாவி எய்துமே என்செய்வோம் என்றே
உகலுற உள்ளே நடுங்கிய நடுக்கம் உன்னுளம் அறியுமே எந்தாய்
நகலுறச் சிறியேன் கனவுகண் டுள்ளம் நடுங்கிடா நாளும்ஒன் றுளதோ. 35

248 தொகுப்புறு சிறுவர் பயிலுங்கால் பயிற்றும் தொழிலிலே வந்தகோ பத்தில்
சகிப்பிலா மையினால் அடித்தனன் அடித்த தருணம்நான் கலங்கிய கலக்கம்
வகுப்புற நினது திருவுளம் அறியும் மற்றுஞ்சில் உயிர்களில் கோபம்
மிகப்புகுந் தடித்துப் பட்டபா டெல்லாம் மெய்யநீ அறிந்ததே அன்றோ. 36

249 ஒடித்தஇவ் வுலகில் சிறுவர்பால் சிறிய உயிர்கள்பால் தீமைகண் டாங்கே
அடித்திடற் கஞ்சி உளைந்தனன் என்னால் ஆற்றிடாக் காலத்தில் சிறிதே
பொடித்துநான் பயந்த பயமெலாம் உனது புந்தியில் அறிந்ததே எந்தாய்
வெடித்தவெஞ் சினம்என் உளமுறக் கண்டே வெதும்பிய நடுக்கம்நீ* அறிவாய். 37

250 கோபமே வருமோ காமமே வருமோ கொடியமோ கங்களே வருமோ
சாபமே அனைய தடைமதம் வருமோ தாமதப் பாவிவந் திடுமோ
பாபமே புரியும் லோபமே வருமோ பயனில்மாற் சரியம்வந் திடுமோ
தாபஆங் கார மேஉறு மோஎன் றையநான் தளர்ந்ததும் அறிவாய். 38

251 காமமா மதமாங் காரமா திகள்என் கருத்தினில் உற்றபோ தெல்லாம்
நாமம்ஆர் உளத்தோ டையவோ நான்தான் நடுங்கிய நடுக்கம்நீ அறிவாய்
சேமமார் உலகில் காமமா திகளைச் செறிந்தவர் தங்களைக் கண்டே
ஆமைபோல் ஒடுங்கி அடங்கினேன் அதுவும் ஐயநின் திருவுளம் அறியும்.

---

* – நடுக்கமும் – படிவேறுபாடு. ஆ.பா.

Koviloor Digital Library

252 கருத்துவே றாகிக் கோயிலில் புகுந்துன் காட்சியைக் கண்டபோ தெல்லாம்
வருத்தமே அடைந்தேன் பயத்தொடும் திரும்பி வந்துநொந் திளைத்தனன் எந்தாய்
நிருத்தனே நின்னைத் துதித்தபோ தெல்லாம் நெகிழ்ச்சிஇல் லாமையால் நடுங்கிப்
பருத்தஎன் உடம்பைப் பார்த்திடா தஞ்சிப் படுத்ததும் ஐயநீ அறிவாய். 40

253 புன்புலால் உடம்பின் அசுத்தமும் இதனில் புகுந்துநான் இருக்கின்ற புணர்ப்பும்
என்பொலா மணியே எண்ணிநான் எண்ணி ஏங்கிய ஏக்கம்நீ அறிவாய்
வன்புலால் உண்ணும் மனிதரைக் கண்டு மயங்கிஉள் நடுங்கிஆற் றாமல்
என்பெலாம் கருக இளைத்தனன் அந்த இளைப்பையும் ஐயநீ அறிவாய்.
41

254 இந்தவிர் சடைஎம் இறைவனே என்னோ டியல்கலைத் தருக்கஞ்செய் திடவே
வந்தவர் தம்மைக் கண்டபோ தெல்லாம் மனம்மிக நடுங்கினேன் அறிவாய்
சந்தியுற் றொருகால் படித்தசாத் திரத்தைத் தமியனேன் மீளவுங் கண்டே
நொந்ததும் உலகப் படிப்பில்என் உள்ளம் நொந்ததும் ஐயநீ அறிவாய். 42

255 முனித்தவெவ் வினையோ நின்னருட் செயலோ தெரிந்திலேன் மோகமே லின்றித்
தனித்தனி ஒருசார் மடந்தையர் தமக்குள்ஒருத்தியைக் கைதொடச் சார்ந்தேன்
குனித்தமற் றவரைத் தொட்டனன் அன்றிக் கலப்பிலேன் மற்றிது குறித்தே
பனித்தனன் நினைத்த தோறும்உள் உடைந்தேன் பகர்வதென் எந்தைநீ அறிவாய்.
43

256 பதியனே பொதுவில் பரமநா டகஞ்செய் பண்பனே நண்பனே உலகில்
ஒதியனேன் பிறர்பால் உரத்தவார்த் தைகளால் ஒருசில வாதங்கள் புரிந்தே
மதியிலா மையினால் அகங்கரித் ததன்பின் வள்ளல்உன் அருளினால் அறிந்தே
விதியைநான் நொந்து நடுங்கிய தெல்லாம் மெய்யனே நீஅறிந் ததுவே.
44

257 அருளினை அளிக்கும் அப்பனே உலகில் அன்புளார் வலிந்தெனக் கீந்த
பொருளினை வாங்கிப் போனபோ தெல்லாம் புழுங்கிய புழுக்கம்நீ அறிவாய்
மருளும்அப் பொருளைச் சாலகத் தெறிந்து மனமிக இளைத்ததும் பொருளால்
இருளுறும் எனநான் உளம்நடுங் கியதும் எந்தைநின் திருவுளம் அறியும்.
45

258 பொருளிலே உலகம் இருப்பதா தலினால் புரிந்துநாம் ஒருவர்பால் பலகால்
மருவினால் பொருளின் இச்சையால் பலகால் மருவுகின் றான்எனக் கருதி
வெருவுவர் எனநான் அஞ்சிஎவ் விடத்தும் மேவிலேன் எந்தைநீ அறிவாய்
ஒருவும்அப் பொருளை நினைத்தபோ தெல்லாம்உவட்டினேன் இதுவும்நீ அறிவாய்.
46

259 தகைத்தபே ருலகில் ஐயனே அடியேன் தடித்தஉள் ளத்தொடு களித்தே
நகைத்தபோ தெல்லாம் நடுங்கினேன் இங்கே நல்லவா கனங்களில் ஏறி
உகைத்தபோ தெல்லாம் நடுங்கினேன் விரைந்தே ஓட்டிய போதெலாம் பயந்தேன்
பகைத்தபோ தயலார் பகைகளுக் கஞ்சிப் பதுங்கினேன் ஒதுங்கினேன் எந்தாய்.
47

Koviloor Digital Library

260 சகப்புற வாழ்வைப் பார்த்திடில் கேட்கில் சஞ்சலம் உறும்எனப் பயந்தே
நகர்ப்புறத் திருக்குந் தோட்டங்கள் தோறும் நண்ணியும் பிறவிடத் தலைந்தும்
பகற்பொழு தெல்லாம் நாடொறுங் கழித்தேன் பகலன்றி இரவும்அப் படியே
மிகப்பல விடத்தும் திரிந்தனன் அடியேன் விளம்பலென் நீஅறிந் ததுவே. 48

261 உருவுள மடவார் தங்களை நான்கண் ணுற்றபோ துளநடுக் குற்றேன்
ஒருவுளத் தவரே வலிந்திட வேறோர் உவளகத் தொளித்தயல் இருந்தேன்
கருவுளச் சண்டைக் கூக்குரல் கேட்ட காலத்தில் நான்உற்ற கலக்கம்
திருவுளம் அறியும் உரத்தசொல் எனது செவிபுகில் கனல்புகு வதுவே. 49

262 பண்ணிகா ரங்கள் பொசித்தஅப் போதும் பராக்கிலே செலுத்திய போதும்
எண்ணிய மடவார் தங்களை விழைந்தே இசைந்தனு பவித்தஅப் போதும்
நண்ணிய தயிலம் முழுக்குற்ற போதும் நவின்றசங் கீதமும் நடமும்
கண்ணுறக் கண்டு கேட்டஅப் போதும் கலங்கிய கலக்கம்நீ அறிவாய். 50

263 நயந்தபொற் சரிகைத் துகில்எனக் கெனது நண்பினர் உடுத்திய போது
பயந்தஅப் பயத்தை அறிந்தவர் எல்லாம் பயந்தனர் வெய்யலிற் கவிகை
வியந்துமேற் பிடித்த போதெலாம் உள்ளம் வெருவினேன் கைத்துகில் வீசி
அயந்தரு தெருவில் நடப்பதற் கஞ்சி அரைக்குமேல் வீக்கினன் எந்தாய். 51

264 கையுற வீசி நடப்பதை நாணிக் கைகளைக் கட்டியே நடந்தேன்
மெய்யுறக் காட்ட வெருவிவெண் துகிலால் மெய்எலாம் ஐயகோ* மறைத்தேன்
வையமேல் பிறர்தங் கோலமும் நடையும் வண்ணமும் அண்ணலே சிறிதும்
பையநான் ஊன்றிப் பார்த்ததே இல்லைப் பார்ப்பனேல் பயமிகப் படைப்பேன். 52

265 வைகிய நகரில் எழிலுடை மடவார் வலிந்தெனைக் கைபிடித் திழுத்தும்
சைகைவே றுரைத்தும் சரசவார்த் தைகளால் தனித்தெனைப் பலவிசை அறிந்தும்
பொய்கரைந் தாணை புகன்றுமேல் விழுந்தும் பொருள்முத லியகொடுத் திசைத்தும்
கைகலப் பறியேன் நடுங்கினேன் அவரைக் கடிந்ததும் இல்லைநீ அறிவாய். 53

266 எளியரை வலியார் அடித்தபோ தையோ என்மனம் கலங்கிய கலக்கம்
தெளியநான் உரைக்க வல்லவன் அல்லேன் திருவுளம் அறியுமே எந்தாய்**
களியரைக் கண்டு பயந்தஎன் பயந்தான் கடலினும் பெரியது கண்டாய்
அளியர்பால் கொடியர் செய்தவெங் கொடுமை அறிந்தஎன் நடுக்கம்ஆர் அறிவார். 54

267 இரவிலே பிறர்தம் இடத்திலே இருந்த இருப்பெலாம் கள்ளர்கள் கூடிக்
கரவிலே கவர்ந்தார் கொள்ளைஎன் றெனது காதிலே விழுந்தபோ தெல்லாம்
விரவிலே+ நெருப்பை மெய்யிலே மூட்டி வெதுப்பல்போல் வெதும்பினேன் எந்தாய்
உரவிலே ஒருவர் திடுக்கென வரக்கண் டுளம்நடுக் குற்றனன் பலகால். 55

---

* ஐயவோ – படிவேறுபாடு. ஆ.பா. ** அறியும் எந்தாயே – பி. இரா.
+ விரைவிலே – முதற்பதிப்பு, பொ.சு., ச.மு.க. பி.இரா.,

Koviloor Digital Library

268 உரத்தொரு வருக்கங் கொருவர் பேசியபோ துள்ளகம் நடுங்கினேன் பலகால்
கரத்தினால் உரத்துக் கதவுதட் டியபோ தையவோ கலங்கினேன் கருத்தில்
புரத்திலே அம்மா அப்பனே ஐயோ எனப்பிறர் புகன்றசொல் புகுந்தே
தரத்தில்என் உளத்தைக் கலக்கிய கலக்கம் தந்தைநீ அறிந்தது தானே.56

269 மண்ணினீள் நடையில் வந்தவெந் துயரை மதித்துளம் வருந்திய பிறர்தம்
கண்ணினீர் விடக்கண் டையவோ நானும் கண்ணினீர் விட்டுளங் கவன்றேன்
நண்ணிநின் றொருவர் அசப்பிலே* என்னை அழைத்தபோ தடியனேன் எண்ணா
தெண்ணியா துற்ற தோஎனக் கலங்கி ஏன்எனல் மறந்தனன் எந்தாய். 57

270 தேட்டிலே மிகுந்த சென்னையில் இருந்தால் சிலுகுறும்** என்றுளம் பயந்தே
நாட்டிலே சிறிய ஊர்ப்புறங் களிலே நண்ணினேன் ஊர்ப்புறம் அடுத்த
காட்டிலே பருக்கைக் கல்லிலே புன்செய்க் களத்திலே திரிந்துற்ற இளைப்பை
ஏட்டிலே எழுத முடியுமோ இவைகள் எந்தைநீ அறிந்தது தானே. 58

271 என்புடை வந்தார் தம்முகம் நோக்கி என்கொலோ என்கொலோ இவர்தாம்
துன்புடை யவரோ இன்புடை யவரோ சொல்லுவ தென்னையோ என்றே
வன்புடை மனது கலங்கிஅங் கவரை வாஎனல் மறந்தனன் எந்தாய்
அன்புடை+ யவரைக் கண்டபோ தெல்லாம் என்கொலோ என்றயர்ந் தேனே.
59

272 காணுறு பசுக்கள் கன்றுக ளாதி கதறிய போதெல்லாம் பயந்தேன்
ஏணுறு மாடு முதல்பல விருகம்++ இளைத்தவை கண்டுளம் இளைத்தேன்
கோணுறு கோழி முதல்பல பறவை கூவுதல் கேட்டுளங் குலைந்தேன்
வீணுறு கொடியர் கையிலே வாளை விதிர்த்தல்கண் டென்என வெருண்டேன்.x
60

273 பிதிர்ந்தமண் உடம்பை மறைத்திட வலியார் பின்முன்நோக் காதுமேல் நோக்கி
அதிர்ந்திட நடந்த போதெலாம் பயந்தேன் அவர்புகன் றிட்டதீ மொழிகள்
பொதிந்திரு செவியில் புகுந்தொறும் பயந்தேன் புண்ணியா நின்துதி எனும்ஓர்
முதிர்ந்ததீங் கனியைக் கண்டிலேன் வேர்த்து முறிந்தகாய் கண்டுளம் தளர்ந்தேன்.
61

274 வாடிய பயிரைக் கண்டபோ தெல்லாம் வாடினேன் பசியினால் இளைத்தே
வீடுதோ றிரந்தும் பசியறா தயர்ந்த வெற்றரைக் கண்டுளம் பதைத்தேன்
நீடிய பிணியால் வருந்துகின் றோர்என் நேர்உறக் கண்டுளந் துடித்தேன்
ஈடின்மா னிகளாய் ஏழைக ளாய்நெஞ் சிளைத்தவர் தமைக்கண்டே இளைத்தேன்.
62

---

* அசைபிலே – படிவேறுபாடு. ஆ.பா.

** சிறுகுறும் – முதற்பதிப்பு. பொ.சு., ச.மு.க.

\+ இன்புடை – ச.மு.க.

++ மிருகம் – முதற்பதிப்பு, பொ.சு., ச.மு.க., பி.இரா.

x வெகுண்டேன் – வேலூர் பத்மநாப முதலியார் பதிப்பு 1885

Koviloor Digital Library

275 நலிதரு சிறிய தெய்வமென் றையோ நாட்டிலே பலபெயர் நாட்டிப்
பலிதர ஆடு பன்றிகுக் குடங்கள் பலிக்கடா முதலிய உயிரைப்
பொலிவுறக் கொண்டே போகவும் கண்டே புந்திநொந் துளநடுக் குற்றேன்
கலியுறு சிறிய தெய்வவெங் கோயில் கண்டகா லத்திலும் பயந்தேன். 63

276 துண்ணெனக் கொடியோர் பிறவுயிர் கொல்லத் தொடங்கிய போதெலாம் பயந்தேன்
கண்ணினால் ஐயோ பிறஉயிர் பதைக்கக் கண்டகா லத்திலும் பதைத்தேன்
மண்ணினில் வலையும் தூண்டிலும் கண்ணி வகைகளும் கண்டபோ தெல்லாம்
எண்ணிஎன் உள்ளம் நடுங்கிய நடுக்கம் எந்தைநின் திருவுளம்* அறியும்.
64

277 நடுநிலை இல்லாக் கூட்டத்தைக் கருணை நண்ணிடா அரையரை** நாளும்
கெடுநிலை நினைக்கும் சிற்றதி காரக் கேடரைப் பொய்யலால் கிளத்தாப்
படுநிலை யவரைப் பார்த்தபோ தெல்லாம் பயந்தனன் சுத்தசன் மார்க்கம்
விடுநிலை உலக நடைஎலாங் கண்டே வெருவினேன் வெருவினேன் எந்தாய்.
65

278 ஓங்கிய திருச்சிற் றம்பல முடைய ஒருதனித் தலைவனே என்னைத்
தாங்கிய தாயே தந்தையே குருவே தயாநிதிக் கடவுளே நின்பால்
நீங்கிய மனத்தார் யாவரே எனினும் அவர்தமை நினைத்தபோ தெல்லாம்
தேங்கிய உள்ளம் பயந்தனன் அதுநின் திருவுளம் அறியுமே எந்தாய். 66

279 காட்டுயர் அணைமேல் இருக்கவும் பயந்தேன் காலின்மேல் கால்வைக்கப் பயந்தேன்
பாட்டயல் கேட்கப் பாடவும் பயந்தேன் பஞ்சணை படுக்கவும் பயந்தேன்
நாட்டிய உயர்ந்த திண்ணைமேல் இருந்து நன்குறக் களித்துக் கால்கீழே
நீட்டவும் பயந்தேன் நீட்டிப்பே சுதலை நினைக்கவும் பயந்தனன் எந்தாய்.
67

280 தலைநெறி ஞான சுத்தசன் மார்க்கம் சார்ந்திட முயலுறா தந்தோ
கலைநெறி உலகக் கதியிலே கருத்தைக் கனிவுற வைத்தனர் ஆகிப்
புலைநெறி விரும்பி னார் உல குயிர்கள் பொதுஎனக் கண்டிரங் காது
கொலைநெறி நின்றார் தமக்குளம் பயந்தேன் எந்தைநான் கூறுவ தென்னே.
68

281 இவ்வணஞ் சிறியேற் குலகியல் அறிவிங் கெய்திய நாளது தொடங்கி
நைவணம் இற்றைப் பகல்வரை அடைந்த நடுக்கமும் துன்பமும் உரைக்க
எவ்வணத் தவர்க்கும் அலகுறா+ தெனில்யான் இசைப்பதென் இசைத்ததே அமையும்
செவ்வணத் தருணம் இதுதலை வாநின் திருவுளம் அறிந்ததே எல்லாம்.
69

282 தரைத்தலத் தெனைநீ எழுமையும் பிரியாத் தம்பிரான் அல்லையோ மனத்தைக்
கரைத்துளே புகுந்தென் உயிரினுட் கலந்த கடவுள்நீ அல்லையோ எனைத்தான்
இரைத்திவ++ ணளித்தோர் சிற்சபை விளங்கும் எந்தைநீ அல்லையோ நின்பால்
உரைத்தல்என் ஒழுக்கம் ஆதலால் உரைத்தேன் நீஅறி யாததொன் றுண்டோ.

---

* திருவருள் – முதற் பதிப்பு, பொ.சு. பதிப்பு. ** அமையரை – வே.ப.மு. பதிப்பு
+ அலகுறாது – குறைவுபடாது. முதற் பதிப்பு ++ இசைத்திவண் – 1885. வே.ப.மு. பதிப்பு.

Koviloor Digital Library

283 கைதலத் தோங்கும் கனியின்* என் னுள்ளே கனிந்தஎன் களைகண்நீ அலையோ
மெய்தலத் தகத்தும் புறத்தும்விட் டகலா மெய்யன்நீ அல்லையோ எனது
பைதல்தீர்த் தருளுந் தந்தைநீ அலையோ பரிந்துநின் திருமுன்விண் ணப்பம்
செய்தல்என் ஒழுக்கம் ஆதலால் செய்தேன் திருவுளம் தெரிந்ததே** எல்லாம். 71

284 இன்னவா றடியேன் அச்சமுந் துயரும் எய்திநின் றிளைத்தனன் அந்தோ
துன்னஆ ணவமும் மாயையும் வினையும் சூழ்ந்திடும் மறைப்பும்இங் குனைத்தான்
உன்னவா சற்றே உரைக்கவா ஒட்டேம் என்பவால் என்செய்வேன் எனது
மன்னவா ஞான மன்றவா எல்லாம் வல்லவா இதுதகு மேயோ. 72

285 எள்ளலாம் பயத்தால் துயரினால் அடைந்த இளைப்பெலாம் இங்குநான் ஆற்றிக்
கொள்ளவே அடுத்தேன் மாயையா திகள்என் கூடவே அடுத்ததென் அந்தோ
வள்ளலே எனது வாழ்முதற் பொருளே மன்னவா நின்னலால் அறியேன்
உள்ளல்வே றிலைஎன் உடல்பொருள்ஆவி உன்னதே என்னதன் றெந்தாய். 73

286 என்சுதந் தரம்ஓர் எட்டுணை யேனும் இல்லையே எந்தைஎல் லாம்உன்
தன்சுதந் தரமே அடுத்தஇத் தருணம் தமியனேன் தனைப்பல துயரும்
வன்சுமை மயக்கும் அச்சமும் மறைப்பும் மாயையும் வினையும்ஆ ணவமும்
இன்சுவைக் கனிபோல் உண்கின்ற தழகோ இவைக்கெலாம் நான்இலக் கலவே. 74

287 அறிவொரு சிறிதிங் கறிந்தநாள் முதல்என் அப்பனே நினைமறந் தறியேன்
செறிவிலாச் சிறிய பருவத்தும் வேறு சிந்தைசெய் தறிந்திலேன் உலகில்
பிறிதொரு பிழையுஞ் செய்திலேன் அந்தோ பிழைத்தனன் ஆயினும் என்னைக்
குறியுறக் கொண்டே குலங்குறிப் பதுநின் குணப்பெருங் குன்றினுக் கழகோ. 75

288 ஐயநான் ஆடும் பருவத்திற் றானே அடுத்தநன் னேயனோ டப்பா
பொய்யுல காசை எனக்கிலை உனக்கென் புகல்என அவனும்அங் கிசைந்தே
மெய்யுறத் துறப்போம் என்றுபோய் நினது மெய்யருள் மீட்டிட மீண்டேம்
துய்யநின் உள்ளம் அறிந்ததே எந்தாய் இன்றுநான் சொல்லுவ தென்னே. 76

289 தேர்விலாச் சிறிய பருவத்திற் றானே தெய்வமே தெய்வமே என நின்
சார்வுகொண் டெல்லாச் சார்வையும் விடுத்தேன் தந்தையும் குருவும்நீ என்றேன்
பேர்விலா துளத்தே வந்தவா பாடிப் பிதற்றினேன் பிறர்மதிப் பறியேன்
ஓர்விலாப் பிழைகள் ஒன்றையும் அறியேன் இன்றுநான் உரைப்பதிங் கென்னே. 77

290 பொறித்துணைப் பதியாப் பெற்றநாள் அடிமை புரிந்தது போலவே இன்றும்
செறித்துநிற் கின்றேன் அன்றிஎன் உரிமைத் தெய்வமும் குருவும்மெய்ப் பொருளும்
நெறித்தநற் றாயுந் தந்தையும் இன்பும் நேயமும் நீஎனப் பெற்றே
குறித்தறிந் ததன்பின் எந்தைநான் ஏறிக் குதித்ததென் கூறுக நீயே. 78

---

* கனியில் – பி. இரா. பதிப்பு. **அறிந்ததே – முதற்பதிப்பு., பொ.சு. ச.மு.க. பதிப்பு

Koviloor Digital Library

291 பரிந்துனைப் பதியா பெற்றநாள் அடிமை பணிபுரிந் தாங்கிது வரையில்
புரிந்துறு கின்றேன் அன்றிஎன் உயிரும் பொருளும்என் புணர்ப்பும்என் அறிவும்
விரிந்தஎன் சுகமும் தந்தையுங் குருவும் மெய்ம்மையும் யாவும்நீ என்றே
தெரிந்தபின் அந்தோ வேறுநான் செய்த செய்கைஎன் செப்புக நீயே. 79

292 மைதவழ் விழிஎன் அம்மைஒர் புடைகொள்* வள்ளலே நின்னை அன் பாலும்
வைதவர் தமைநான் மதித்திலேன் அன்பால் வாழ்த்துகின் றோர்தமை வாழ்த்தி
உய்தவர் இவர்என்றுறுகின்றேன் அல்லால் உன்அருள் அறியநான் வேறு
செய்ததொன் றிலையே செய்தனன் எனினும் திருவுளத் தடைத்திடல் அழகோ.
80

293 ஆரணம் உரைத்த வரைப்பெலாம் பலவாம் ஆகமம் உரைவரைப் பெல்லாம்
காரண நினது திருவருட் செங்கோல் கணிப்பருங் களிப்பிலே ஓங்கி
நாரணர் முதலோர் போற்றிட விளங்கி நடக்கின்ற பெருமைநான் அறிந்தும்
தாரணி யிடைஇத் துன்பமா திகளால் தனையனேன் தளருதல் அழகோ.
81

294 பார்முதல் நாதப் பதிஎலாங் கடந்தப் பாலும்அப் பாலும்அப் பாலும்
ஓர்முதல் ஆகித் திருவருட் செங்கோல் உரைப்பரும் பெருமையின் ஓங்கிச்
சீர்பெற விளங்க நடத்திமெய்ப் பொதுவில் சிறந்தமெய்த் தந்தைநீ இருக்க
வார்கடல் உலகில் அச்சமா திகளால் மகன்மனம் வருந்துதல் அழகோ.
82

295 ஆர்ந்தவே தாந்தப் பதிமுதல் யோகாந் தப்பதி வரையும்அப் பாலும்
தேர்ந்தருள் ஆணைத் திருநெறிச் செங்கோல் செல்லஒர் சிற்சபை இடத்தே
சார்ந்தபே ரின்பத் தனியர சியற்றும் தந்தையே தனிப்பெருந் தலைவா
பேர்ந்திடேன் எந்தவிதத்தினும் நினக்கே பிள்ளைநான் வருந்துதல் அழகோ.
83

296 சித்திகள் எல்லாம் வல்லதோர் ஞானத் திருச்சபை தன்னிலே திகழும்
சத்திகள் எல்லாம் சத்தர்கள் எல்லாம் தழைத்திடத் தனிஅருட் செங்கோல்
சத்திய ஞானம் விளக்கியே நடத்தும் தனிமுதல் தந்தையே தலைவா
பித்தியல் உடையேன் எனினும்நின் தனக்கே பிள்ளைநான் வாடுதல் அழகோ.
84

297 சாற்றுபே ரண்டப் பகுதிகள் அனைத்தும் தனித்தனி அவற்றுளே நிரம்பித்
தோற்றுமா பிண்டப் பகுதிகள் அனைத்தும் சோதியால் விளக்கிஆ னந்த
ஆற்றிலே நனைத்து வளர்த்திடும் பொதுவில் அரும்பெருந் தந்தையே இன்பப்
பேற்றிலே விழைந்தேன் தலைவநின் தனக்கே பிள்ளைநான் பேதுறல் அழகோ.
85

298 சிறந்தசத் துவங்கள் அனைத்துமாய் அலவாய்த் திகழ்ஒளி யாய்ஒளி எல்லாம்
பிறங்கிய வெளியாய் வெளிஎலாம் விளங்கும் பெருவெளி யாய்அதற் கப்பால்
நிறைந்தசிற் சபையில் அருளர சியற்றும் நீதிநல் தந்தையே இனிமேல்
பிறந்திடேன் இறவேன் நின்னைவிட் டகலேன் பிள்ளைநான் வாடுதல் அழகோ.
86

* மைதவழ் முகில்போன் றருள்பொழி கருணை – முதற் பதிப்பு, பொ.சு., ச.மு.க.,

Koviloor Digital Library

299 எண்ணிய எல்லாம் வல்லபே ரருளாம் இணையிலாத் தனிநெடுஞ் செங்கோல்
நண்ணிய திருச்சிற் றம்பலத் தமர்ந்தே நடத்தும்ஓர் ஞானநா யகனே
தண்ணருள் அளிக்கும் தந்தையே உலகில் தனையன்நான் பயத்தினால் துயரால்
அண்ணிய மலங்கள் ஐந்தினால் இன்னும் ஐயகோ வாடுதல் அழகோ.87

300 கலைஎலாம் புகலும் கதிஎலாம் கதியில் காண்கின்ற காட்சிகள் எல்லாம்
நிலையெலாம் நிலையில் நேர்ந்தனு பவஞ்செய் நிறைவெலாம் விளங்கிடப் பொதுவில்
மலைவிலாச் சோதி அருட்பெருஞ் செங்கோல் வாய்மையான் நடத்தும்ஓர் தனிமைத்
தலைவனே எனது தந்தையே நினது தனையன்நான் தளருதல் அழகோ.
88

301 ஆதியே நடுவே அந்தமே எனும்இவ் வடைவெலாம் இன்றிஒன் றான
சோதியே வடிவாய்த் திருச்சிற்றம் பலத்தே தூயபே ரருள்தனிச் செங்கோல்
நீதியே நடத்தும் தனிப்பெருந் தலைமை நிருத்தனே ஒருத்தனே நின்னை
ஓதியே வழுத்தும் தனையன்நான் இங்கே உறுகணால் தளருதல் அழகோ.
89

302 அத்தனே திருச்சிற் றம்பலத் தரசே அரும்பெருஞ் சோதியே அடியார்
பித்தனே எனினும் பேயனே எனினும் பெரிதருள் புரிதனித் தலைமைச்
சித்தனே எல்லாம் செய்திட வல்ல செல்வனே சிறப்பனே சிவனே
சுத்தனே நினது தனையன்நான் மயங்கித் துயர்ந்துளம் வாடுதல் அழகோ.
90

303 உற்றதோர் திருச்சிற் றம்பலத் தோங்கும் ஒருதனித் தந்தையே நின்பால்
குற்றம்நான் புரிந்திங் கறிந்திலேன் குற்றம் குயிற்றினேன் என்னில்அக் குற்றம்
இற்றென அறிவித் தறிவுதந் தென்னை இன்புறப் பயிற்றுதல் வேண்டும்
மற்றய லார்போன் றிருத்தலோ தந்தை வழக்கிது நீஅறி யாயோ. 91

304 குற்றமோ குணமோ நான்அறி யேன்என் குறிப்பெலாம் திருச்சிற்றம் பலத்தே
உற்றதா தலினால் உலகியல் வழக்கில் உற்றன* மற்றென தலவே
தெற்றென** அருட்கே குற்றம்என் பதுநான் செய்திடில் திருத்தலே அன்றி
மற்றய லார்போன் றிருப்பதோ தந்தை மரபிது நீஅறி யாயோ. 92

305 மாயையால் வினையால் அரிபிர மாதி வானவர் மனமதி மயங்கித்
தீயகா ரியங்கள் செய்திடில் அந்தோ சிறியனேன் செய்வது புதிதோ
ஆயினும் தீய இவைஎன அறியேன் அறிவித்துத் திருத்துதல் அன்றி
நீயிவண் பிறர்போன் றிருப்பது தந்தை நெறிக்கழ கல்லவே எந்தாய். 93

306 கருணையும் சிவமே பொருள்எனக் காணும் காட்சியும் பெறுகமற் றெல்லாம்
மருள்நெறி எனநீ எனக்கறி வித்த வண்ணமே பெற்றிருக் கின்றேன்
இருள்நெறி மாயை வினைகளால் கலக்கம் எய்திய தென்செய்வேன் எந்தாய்
தெருள்நிலை இன்றிக் கலங்கினேன் எனினும் சிறுநெறி பிடித்ததொன் றிலையே.
94

---

* உற்றிடின்—முதற்பதிப்பு, பொ.சு., ச.மு.க. பதிப்பு ** தெற்றென – விரைந்து, முதற்பதிப்பு

Koviloor Digital Library

307 கலங்கிய போதும் திருச்சிற்றம் பலத்தில் கருணையங் கடவுளே நின்பால்
இலங்கிய நேயம் விலங்கிய திலையே எந்தைநின் உளம்அறி யாதோ
மலங்கிய மனத்தேன் புகல்வதென் வினையால் மாயையால் வரும்பிழை எல்லாம்
அலங்கும்என் பிழைகள் அல்லஎன் றுன்னோ டடிக்கடி அறைந்தனன் ஆண்டே.
95

308 இரும்பினும் கொடிய மனஞ்செயும் பிழையும் என்பிழை அன்றெனப் பலகால்
விரும்பிநின் அடிக்கே விண்ணப்பித் திருந்தேன் வேறுநான் செய்ததிங் கென்னே
அரும்பொனே திருச்சிற் றம்பலத் தமுதே அப்பனே என்றிருக் கின்றேன்
துரும்பினும் சிறியேன் புகல்வதென் நினது தூயதாம் திருவுளம் அறியும்.
96

309 வருமுயிர் இரக்கம் பற்றியே உலக வழக்கில்என் மனஞ்சென்ற தோறும்
வெருவிநின் அடிக்கே விண்ணப்பித் திருந்தேன் விண்ணப்பம் செய்கின்றேன் இன்றும்
உருவஎன் உயிர்தான் உயிர்இரக் கந்தான் ஒன்றதே இரண்டிலை இரக்கம்
ஒருவில்என் உயிரும் ஒருவும்என் உள்ளத் தொருவனே நின்பதத் தாணை.
97

310 தலைவர்கள் எல்லாம் தனித்தனி வணங்கும் தலைவனே இன்றும்என் உளமும்
மலைவில்என் அறிவும் நானும்இவ் வுலக வழக்கிலே உயிர்இரக் கத்தால்
இலகுகின் றனம்நான் என்செய்வேன் இரக்கம் என்னுயிர் என்னவே றிலையே
நிலைபெறும் இரக்கம் நீங்கில்என் உயிரும் நீங்கும்நின் திருவுளம் அறியும்.
98

311 ஆதலால் இரக்கம் பற்றிநான் உலகில் ஆடலே அன்றிஓர் விடயக்
காதலால் ஆடல் கருதிலேன் விடயக் கருத்தெனக் கில்லைஎன் றிடல்இப்
போதலால் சிறிய போதும்உண் டதுநின் புந்தியில் அறிந்தது தானே
ஈதலால் வேறோர் தீதென திடத்தே இல்லைநான் இசைப்பதென் எந்தாய்.
99

312 என்னையும் இரக்கந் தன்னையும் ஒன்றாய் இருக்கவே இசைவித் திவ்வுலகில்
மன்னிவாழ் வுறவே வருவித்த கருணை வள்ளல்நீ நினக்கிது விடயம்
பன்னல்என் அடியேன் ஆயினும் பிள்ளைப் பாங்கினால் உரைக்கின்றேன் எந்தாய்
இன்னவா றெனநீ சொன்னவா றியற்றா திருந்ததோர் இறையும்இங் கிலையே.
100

313 உறுவினை தவிர்க்கும் ஒருவனே உலகில் ஓடியும் ஆடியும் உழன்றும்
சிறுவர்தாம் தந்தை வெறுப்பஆர்க் கின்றார் சிறியனேன் ஒருதின மேனும்
மறுகிநின் றாடிஆர்த்ததிங் குண்டோ நின்பணி மதிப்பலால் எனக்குச்
சிறுவிளை யாட்டில் சிந்தையே இலைநின் திருவுளம் அறியுமே எந்தாய்.
101

314 தந்தையர் வெறுப்ப மக்கள்தாம் பயனில் சழக்குரை யாடிவெங் காமச்
சிந்தைய ராகித் திரிகின்றார் அந்தோ சிறியனேன் ஒருதின மேனும்
எந்தைநின் உள்ளம் வெறுப்பநின் பணிவிட் டிவ்வுல கியலில்அவ் வாறு
தெந்தன என்றே திரிந்ததுண் டேயோ திருவுளம் அறியநான் அறியேன்.
102

Koviloor Digital Library

315 அம்புவி தனிலே தந்தையர் வெறுப்ப அடிக்கடி அயலவர் உடனே
வம்புறு சண்டை விளைக்கின்றார் சிறுவர் வள்ளலே நின்பணி விடுத்தே
இம்பர்இவ் வுலகில் ஒருதின மேனும் ஏழையேன் பிறரொடு வெகுண்டே
வெம்புறு சண்டை விளைத்ததுண் டேயோ மெய்யநின் ஆணைநான் அறியேன்.
103

316 வள்ளல்இவ் வுலகில் தந்தையர் வெறுப்ப மக்கள்தாம் ஒழுக்கத்தை மறந்தே
கள்ளருந் துதல்சூ தாடுதல் காமக் கடைதொறும் மயங்குதல் பொய்யே
விள்ளுதல் புரிவார் ஐயகோ அடியேன் மெய்யநின் திருப்பணி விடுத்தே
எள்ளிஅவ் வாறுபுரிந்ததொன் றுண்டோ எந்தைநின் ஆணைநான் அறியேன்.
104

317 மலைவிலாத் திருச்சிற் றம்பலத் தமர்ந்த வள்ளலே உலகினில் பெற்றோர்
குலைநடுக் குறவே கடுகடுத் தோடிக் கொடியதீ நெறியிலே மக்கள்
புலைகொலை களவே புரிகின்றார் அடியேன் புண்ணிய நின்பணி விடுத்தே
உலையஅவ் வாறு புரிந்ததொன் றுண்டோ உன்பதத் தாணைநான் அறியேன்.
105

318 தனிப்பெருஞ் சோதித் தந்தையே உலகில் தந்தையர் பற்பல காலும்
இனிப்புறு மொழியால் அறிவுற மக்கட் கேற்கவே பயிற்றிடுந் தோறும்
பனிப்புற ஓடிப் பதுங்கிடு கின்றார் பண்பனே என்னைநீ பயிற்றத்
தினைத்தனை யேனும் பதுங்கிய துண்டோ திருவுளம் அறியநான் அறியேன்.
106

319 தன்னைநே ரில்லாத் தந்தையே உலகில் தந்தையர் தங்களை அழைத்தே
சொன்னசொல் மறுத்தே மக்கள்தம் மனம்போம் சூழலே போகின்றார்அடியேன்
என்னைநீ உணர்த்தல் யாதது மலையின் இலக்கெனக் கொள்கின்றேன் அல்லால்
பின்னைஓர் இறையும் மறுத்ததொன் றுண்டோ பெரியநின் ஆணைநான் அறியேன்.
107

320 போற்றுவார் போற்றும் புனிதனே மக்கள் பொருந்துதம் தந்தையர் தமையே
வேற்றுவாழ் வடைய வீடுதா பணந்தா மெல்லிய சரிகைவத் திரந்தா
ஏற்றஆ பரணந் தாஎனக் கேட்டே இரங்குவார் இவைகுறித் தடியேன்
தேற்றுவாய் நின்னைக் கேட்டதொன் றுண்டோ திருவுளம் அறியநான் அறியேன்.
108

321 குணம்புரி எனது தந்தையே உலகில் கூடிய மக்கள்தந் தையரைப்
பணம்புரி காணி பூமிகள் புரிநற் பதிபுரி ஏற்றபெண் பார்த்தே
மணம்புரி எனவே வருத்துகின் றார்என் மனத்திலே ஒருசிறி தேனும்
எணம்புரிந் துனைநான் வருத்திய துண்டோ எந்தைநின் ஆணைநான் அறியேன்.
109

322 இகத்திலே எனைவந் தாண்டமெய்ப் பொருளே என்னுயிர்த் தந்தையே இந்தச்
சகத்திலே மக்கள் தந்தையர் இடத்தே தாழ்ந்தவ ராய்ப்புறங் காட்டி
அகத்திலே வஞ்சம் வைத்திருக் கின்றார் ஐயவோ வஞ்சம்நின் அளவில்
முகத்திலே என்றன் அகத்திலே உண்டோ முதல்வநின் ஆணைநான் அறியேன்.
110

Koviloor Digital Library

323 தன்மைகாண் பரிய தலைவனே எனது தந்தையே சகத்திலே மக்கள்
வன்மைவார்த் தைகளால் தந்தையர் தம்மை வைகின்றார் வள்ளலே மருந்தே
என்மனக் கனிவே என்னிரு கண்ணே என்னுயிர்க் கிசைந்தமெய்த் துணையே
நின்மனம் வெறுப்பப் பேசிய துண்டோ நின்பதத் தாணைநான் அறியேன். 111

324 ஒப்பிலா மணிஎன் அப்பனே உலகில் உற்றிடு மக்கள்தந் தையரை
வைப்பில்வே றொருவர் வைதிடக்கேட்டு மனம்பொறுத் திருக்கின்றார் அடியேன்
தப்பிலாய்* நினைவே றுரைத்திடக் கேட்டால் தரிப்பனோ தரித்திடேன் அன்றி
வெப்பில்என் உயிர்தான் தரிக்குமோ யாதாய் விளையுமோ அறிந்திலேன் எந்தாய். 112

325 இத்தகை உலகில் இங்ஙனம் சிறியேன் எந்தைநின் திருப்பணி விடுத்தே
சித்தம்வே றாகித் திரிந்ததே இலைநான் தெரிந்தநாள் முதல்இது வரையும்
அத்தனே அரசே ஐயனே அமுதே அப்பனே அம்பலத் தாடும்
சித்தனே சிவனே என்றென துளத்தே சிந்தித்தே இருக்கின்றேன் இன்றும். 113

326 பொய்வகை மனத்தேன் என்னினும் எந்தாய் பொய்யுல காசைசற் றறியேன்
நைவகை தவிரத் திருச்சிற்றம் பலத்தே நண்ணிய மெய்ப்பொருள் நமது
கைவகைப் படல்எக் கணத்திலோ எனநான் கருதினேன் கருத்தினை முடிக்கச்
செய்வகை அறியேன் என்செய்வேன் ஐயோ தெய்வமே என்றிருக்கின்றேன். 114

327 அன்னையே என்றன் அப்பனே திருச்சிற் றம்பலத் தமுதனே எனநான்
உன்னையே கருதி உன்பணி புரிந்திங் குலகிலே கருணைஎன் பதுதான்
என்னையே நிலையாய் இருத்தஉள் வருந்தி இருக்கின்றேன் என்உள மெலிவும்
மன்னும்என் உடம்பின் மெலிவும் நான் இருக்கும் வண்ணமும் திருவுளம் அறியும். 115

328 பொய்படாப் பயனே பொற்சபை நடஞ்செய் புண்ணியா கண்ணினுள் மணியே
கைபடாக் கனலே கறைபடா மதியே கணிப்பருங் கருணையங் கடலே
தெய்வமே எனநான் நின்னையே கருதித் திருப்பணி புரிந்திருக் கின்றேன்
மைபடா உள்ள மெலிவும்நான் இருக்கும் வண்ணமும் திருவுளம் அறியும். 116

329 தன்னிகர் அறியாத் தலைவனே தாயே தந்தையே தாங்குநற் றுணையே
என்னிரு கண்ணே என்னுயிர்க் குயிரே என்னுடை எய்ப்பினில் வைப்பே
உன்னுதற் கினிய வொருவனே எனநான் உன்னையே நினைத்திருக் கின்றேன்
மன்னும்என் உள்ள மெலிவும்நான் இருக்கும் வண்ணமும் திருவுளம் அறியும். 117

330 திருவளர் திருஅம் பலத்திலே அந்நாள் செப்பிய மெய்ம்மொழிப் பொருளும்
உருவளர் திருமந் திரத்திரு முறையால் உணர்த்திய மெய்ம்மொழிப் பொருளும்
கருவளர் அடியேன் உளத்திலே நின்று காட்டிய மெய்ம்மொழிப் பொருளும்
மருவிஎன் உளத்தே நம்பிநான் இருக்கும் வண்ணமும் திருவுளம் அறியும். 118

* தப்பிலா – முதற்பதிப்பு, பொ.சு., ச.மு.க. பதிப்பு

Koviloor Digital Library

331 உவந்தென துளத்தே உணர்த்திய எல்லாம் உறுமலை இலக்கென நம்பி
நிவந்ததோள் பணைப்ப மிகஉளங் களிப்ப நின்றதும் நிலைத்தமெய்ப் பொருள்இப்
பவந்தனில் பெறுதல் சத்தியம் எனவே பற்பல குறிகளால் அறிந்தே
சிவந்தபொன் மலைபோல் இருந்ததும் இந்நாள் திகைப்பதும் திருவுளம் அறியும். 119

332 ஏய்ந்தபொன் மலைமேல் தம்பத்தில் ஏறி ஏகவும் ஏகவும் நுணுகித்
தேய்ந்தபோ தடியேன் பயந்தவெம் பயத்தைத் தீர்த்துமேல் ஏற்றிய திறத்தை
வாய்ந்துளே கருதி மலைஎனப் பணைத்தே மனங்களிப் புற்றுமெய் இன்பம்
தோய்ந்துநின் றாடிச் சுழன்றதும் இந்நாள் சுழல்வதும் திருவுளம் அறியும். 120

333 வாட்டமோ டிருந்த சிறியனேன் தனது வாட்டமும் மாயையா திகளின்
ஈட்டமும் தவிர்க்கத் திருவுளத் திரங்கி என்னைஓர் பொருள்என மதித்தே
தீட்டரும் புகழ்சேர் திருவடித் துணைகள் செலுத்திய திருச்சிலம் பொலிநான்
கேட்டபோ திருந்த கிளர்ச்சியும் இந்நாள் கிலேசமுந் திருவுளம் அறியும். 121

334 கற்றவர் கல்லார் பிறர்பிறர் குரல்என் காதிலே கிடைத்தபோ தெல்லாம்
மற்றவர் தமக்கென் உற்றதோ அவர்தம் மரபினர் உறவினர் தமக்குள்
உற்றதிங் கெதுவோ என்றுளம் நடுங்கி ஓடிப்பார்த் தோடிப்பார்த் திரவும்
எற்றரு பகலும் ஏங்கிநான் அடைந்த ஏக்கமுந் திருவுளம் அறியும். 122

335 கருணையம் பதிநங் கண்ணுள்மா மணிநம் கருத்திலே கலந்ததெள் ளமுதம்
மருள்நெறி தவிர்க்கும் மருந்தெலாம் வல்ல வள்ளல்சிற் றம்பலம் மன்னும்
பொருள்நிறை இன்பம் நம்மைஆண் டளித்த புண்ணியம் வருகின்ற தருணம்
தருணம்இப் போதென் றெண்ணிநான் இருக்கும் தன்மையும் திருவுளம் அறியும். 123

336 இமையவர் பிரமர் நாரணர் முதலோர் எய்துதற் கரியபே ரின்பம்
தமைஅறிந் தவருட் சார்ந்தபே ரொளிநம் தயாநிதி தனிப்பெருந் தந்தை
அமையும்நம் உயிர்க்குத் துணைதிருப் பொதுவில் ஐயர்தாம் வருகின்ற சமயம்
சமயம்இப் போதென் றெண்ணிநான் இருக்கும் தன்மையும் திருவுளம் அறியும். 124

337 அடியனேன் உள்ளம் திருச்சிற்றம் பலத்தென் அமுதநின் மேல்வைத்த காதல்
நெடியஏழ் கடலில் பெரிதெனக் கிந்நாள் நிகழ்கின்ற ஆவலும் விரைவும்
படியஎன் தன்னால் சொலமுடி யாது பார்ப்பறப் பார்த்திருக் கின்றேன்
செடியனேன் இருக்கும் வண்ணங்கள் எல்லாம் திருவுளங் கண்டதே எந்தாய். 125

338 பன்னிரண் டாண்டு தொடங்கிநான் இற்றைப் பகல்வரை அடைந்தவை எல்லாம்
உன்னிநின் றுரைத்தால் உலப்புறா ததனால் ஒருசில உரைத்தனன் எனினும்
என்னுளத் தகத்தும் புறத்தும்உட் புறத்தும் இயல்புறப் புறத்தினும் விளங்கி
மன்னிய சோதி யாவும்நீ அறிந்த வண்ணமே வகுப்பதென் நினக்கே. 126

Koviloor Digital Library

339 இதுவரை அடியேன் அடைந்தவெம் பயமும் இடர்களும் துன்பமும் எல்லாம்
பொதுவளர் பொருளே பிறர்பொருட் டல்லால் புலையனேன் பொருட்டல இதுநின்
மதுவளர் மலர்ப்பொற் பதத்துணை அறிய வகுத்தனன் அடியனேன் தனக்கே
எதிலும்ஓர் ஆசை இலைஇலை பயமும் இடரும்மற் றிலைஇலை எந்தாய். 127

340 என்னள விலையே என்னினும் பிறர்பால் எய்திய கருணையால் எந்தாய்
உன்னுறு பயமும் இடருமென் தன்னை உயிரொடும் தின்கின்ற தந்தோ
இன்னும்என் றனக்கிவ் விடரொடு பயமும் இருந்திடில்* என் உயிர் தரியா
தன்னையும் குருவும் அப்பனும் ஆன அமுதனே அளித்தருள் எனையே. 128

341 பயத்தொடு துயரும் மறைப்புமா மாயைப் பற்றொடு வினையும்ஆ ணவமும்
கயத்தவன் மயக்கும் மருட்சியும் எனது கருத்திலே இனிஒரு கணமும்
வியத்திடத் தரியேன் இவையெலாந் தவிர்த்துன் மெய்யருள் அளித்திடல் வேண்டும்
உயத்தரு வாயேல் இருக்கின்றேன் இலையேல் உயிர்விடு கின்றனன் இன்றே. 129

342 ஐயநான் பயத்தால் துயரினால் அடைந்த அடைவைஉள் நினைத்திடுந் தோறும்
வெய்யதீ மூட்டி விடுதல்** ஒப் பதுநான் மிகஇவற் றால்இளைத்திட்டேன்
வையமேல் இனிநான் இவைகளால் இளைக்க வசமிலேன்இவைஎலாம் தவிர்த்தே
உய்யவைப் பாயேல் இருக்கின்றேன் இலையேல் உயிர்விடு கின்றனன் இன்றே. 130

343 பயந்துயர் இடர்உள் மருட்சியா தியஇப் பகைஎலாம் பற்றறத் தவிர்த்தே
நயந்தநின் அருளார்+ அமுதளித் தடியேன் நாடிஈண் டெண்ணிய எல்லாம்
வியந்திடத் தருதல் வேண்டும்ஈ தெனது விண்ணப்பம் நின்திரு உளத்தே
வயந்தரக் கருதித் தயவுசெய் தருள்க வள்ளலே சிற்சபை வாழ்வே. 131

344 என்னுயிர் காத்தல் கடன்உனக் கடியேன் இசைத்தவிண் ணப்பம்ஏற் றருளி
உன்னுமென் உள்ளத் துறும்பயம் இடர்கள் உறுகண்மற் றிவைஎலாம் ஒழித்தே
நின்னருள் அமுதம் அளித்தென தெண்ணம் நிரப்பியாட் கொள்ளுதல் வேண்டும்
மன்னுபொற் சபையில் வயங்கிய மணியே வள்ளலே சிற்சபை வாழ்வே. 132

345 பரிக்கிலேன் பயமும் இடரும்வெந் துயரும் பற்றறத் தவிர்த்தருள் இனிநான்
தரிக்கிலேன் சிறிதும் தரிக்கிலேன் உள்ளம் தரிக்கிலேன் தரிக்கிலேன்அந்தோ
புரிக்கிலே சத்தை அகற்றிஆட் கொள்ளும் பொற்சபை அண்ணலே கருணை
வரிக்கணோர் மடந்தை பாகனே சிவனே++ வள்ளலே சிற்சபை வாழ்வே. 133

திருச்சிற்றம்பலம்

---

* இருக்கில் – பி. இரா. பதிப்பு ** விடுத்தல் – முதற்பதிப்பு
+ அருளாம் – ச.மு.க. பதிப்பு
++ வரிக்கணோர் இன்ப வல்லியை மணந்த – முதற்பதிப்பு, பொ.சு., ச.மு.க. பதிப்பு.

Koviloor Digital Library

21. சுத்த சன்மார்க்க வேண்டுகோள்

எண்கசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்
திருச்சிற்றம்பலம்

346 அப்பாநான் வேண்டுதல்கேட் டருள்புரிதல் வேண்டும்
ஆருயிர்கட் கெல்லாம்நான் அன்புசெயல் வேண்டும்
எப்பாரும் எப்பதமும் எங்கணும்நான் சென்றே
எந்தைநின தருட்புகழை இயம்பியிடல் வேண்டும்
செப்பாத மேனிலைமேல் சுத்தசிவ மார்க்கம்
திகழ்ந்தோங்க அருட்ஜோதி செலுத்தியிடல் வேண்டும்
தப்பேது நான்செயினும் நீபொறுத்தல் வேண்டும்
தலைவநினைப் பிரியாத நிலைமையும்வேண் டுவனே. 1

347 ஐயாநான் வேண்டுதல்கேட் டருள்புரிதல் வேண்டும்
அடிமுடிகண் டெந்நாளும் அனுபவித்தல் வேண்டும்
பொய்யாத வாய்மைகளே புகன்றிடுதல் வேண்டும்
புகன்றபடி புகன்றபடி புரிந்திடுதல் வேண்டும்
எய்யாத* அருட்ஜோதி என்கையுறல் வேண்டும்
இறந்தஉயிர் தமைமீட்டும் எழுப்பியிடல் வேண்டும்
நையாத வண்ணம்உயிர் காத்திடுதல் வேண்டும்
நாயகநின் தனைப்பிரியா துறுதலும்வேண் டுவனே. 2

348 அண்ணாநான் வேண்டுதல்கேட் டருள்புரிதல் வேண்டும்
அழியாத தனிவடிவம் யானடைதல் வேண்டும்
கண்ணார நினைஎங்கும் கண்டுவத்தல் வேண்டும்
காணாத காட்சிஎலாம் கண்டுகொளல் வேண்டும்
பண்ணார நின்றனையே பாடியுறல் வேண்டும்
பரமானந் தப்பெருங்கூத் தாடியிடல் வேண்டும்
உண்ணாடி உயிர்கள்உறும் துயர்தவிர்த்தல் வேண்டும்
உனைப்பிரியா துறுகின்ற உறவதுவேண் டுவனே. 3

349 அத்தாநான் வேண்டுதல்கேட் டருள்புரிதல் வேண்டும்
அருட்பெருஞ்ஜோ தியைப்பெற்றே அகங்களித்தல் வேண்டும்
செத்தாரை மீட்டும்இங்கே எழுப்பியிடல் வேண்டும்
திருச்சபைக்கே அடிமைகளாச் செய்வித்தல் வேண்டும்
ஒத்தாரும் உயர்ந்தாரும் தாழ்ந்தாரும் எவரும்
ஒருமைஉளர் ஆகிஉல கியல்நடத்தல் வேண்டும்
எத்தாலும் அழியாத வடிவதிலே நானும்
எந்தாயும் ஒன்றாக இனிதுறல் வேண் டுவனே. 4

---

* எய்யாத – அறியாத

Koviloor Digital Library

350 அரைசேநான் வேண்டுதல்கேட் டருள்புரிதல் வேண்டும்
அருட்பெருஞ்ஜோ தியைப்பெற்றே அகமகிழ்தல்வேண்டும்
வரைசேர்எவ் வுலகமும்ஓர் ஒழுக்கமுறல் வேண்டும்
மடிந்தாரை மீளவும்நான் வருவித்தல் வேண்டும்
புரைசேரும் கொலைநெறியும் புலைநெறியும் சிறிதும்
பொருந்தாமல் எவ்வுயிரும் புரிந்துவத்தல் வேண்டும்
உரைசேர்மெய்த் திருவடிவில் எந்தாயும் நானும்
ஒன்றாகி எஞ்ஞான்றும் ஓங்குதல்வேண் டுவனே. 5

351 அடிகேள்நான் வேண்டுதல்கேட் டருள்புரிதல் வேண்டும்
அண்டமெலாம் பிண்டமெலாம் கண்டுகொளல் வேண்டும்
துடிசேர்எவ் வுலகமும்எத் தேவரும்எவ் வுயிரும்
சுத்தசிவ சன்மார்க்கம் பெற்றிடுதல் வேண்டும்
படிவானும் படைத்தல்முதல் ஐந்தொழிலும் ஞானம்
படைத்தல்முதல் ஐந்தொழிலும் நான்புரிதல் வேண்டும்
ஒடியாத திருவடிவில் எந்தாயும் நானும்
ஒன்றாகி எஞ்ஞான்றும் ஓங்குதல்வேண் டுவனே. 6

352 அம்மாநான் வேண்டுதல்கேட் டருள்புரிதல் வேண்டும்
ஆணவம்ஆ தியமுழுதும் அறுத்துநிற்றல் வேண்டும்
இம்மாலைத் தத்துவங்கள் எல்லாம்என் வசத்தே
இயங்கிஒரு தீமையும்இல் லாதிருத்தல் வேண்டும்
எம்மான்நான் வேண்டுதல்வேண் டாமையறல் வேண்டும்
ஏகசிவ போகஅனு போகம்உறல் வேண்டும்
தம்மானத் திருவடிவில் எந்தாயும் நானும்
சார்ந்துகலந் தோங்குகின்ற தன்மையும்வேண் டுவனே. 7

353 அச்சாநான் வேண்டுதல்கேட் டருள்புரிதல் வேண்டும்
ஆறந்த நிலைகளெலாம் அறிந்தடைதல் வேண்டும்
எச்சார்பும் ஆகிஉயிர்க் கிதம்புரிதல் வேண்டும்
எனைஅடுத்தார் தமக்கெல்லாம் இன்புதரல் வேண்டும்
இச்சாதி சமயவிகற் பங்களெலாம் தவிர்ந்தே
எவ்வுலகும் சன்மார்க்கப் பொதுவடைதல் வேண்டும்
உச்சாதி அந்தமிலாத் திருவடிவில் யானும்
உடையாயும் கலந்தோங்கும் ஒருமையும்வேண் டுவனே. 8

354 அறிவாநான் வேண்டுதல்கேட் டருள்புரிதல் வேண்டும்
ஐந்தொழில்நான் புரிந்துலகில் அருள்விளக்கல் வேண்டும்
செறியாத கரணமெலாம் செறித்தடக்கல் வேண்டும்
சித்தாந்த வேதாந்தப் பொதுசிறத்தல் வேண்டும்

Koviloor Digital Library

எறியாதென் எண்ணமெலாம் இனிதருளல் வேண்டும்
எல்லாஞ்செய் வல்லசித்தே எனக்களித்தல் வேண்டும்
பிறியாதென் னொடுகலந்து நீ இருத்தல் வேண்டும்
பெருமான்நின் தனைப்பாடி ஆடுதல்வேண் டுவனே. 9

355 அருளாநான் வேண்டுதல்கேட் டருள்புரிதல் வேண்டும்
அணுத்துணையும் சினங்காமம் அடையாமை வேண்டும்
மருளாய உலகமெலாம் மருள்நீங்கி ஞான
மன்றிடத்தே வள்ளல்உனை வாழ்த்தியிடல் வேண்டும்
இருளாமை உறல்வேண்டும் எனைஅடுத்தார் சுகம்வாய்ந்
திடல்வேண்டும் எவ்வுயிரும் இன்படைதல் வேண்டும்
பொருளாம்ஓர் திருவடிவில் உடையாயும் நானும்
புணர்ந்துகலந் தொன்றாகிப் பொருந்துதல்வேண் டுவனே. 10

356 அமலாநான் வேண்டுதல்கேட் டருள்புரிதல் வேண்டும்
ஆடிநிற்குஞ் சேவடியைப் பாடிநிற்க வேண்டும்
எமனாதித் தடைஎன்றும் எய்தாமை வேண்டும்
எல்லாம்செய் வல்லதிறன் எனக்களித்தல் வேண்டும்
கமையாதி அடைந்துயிர்கள் எல்லாம்சன் மார்க்கம்
காதலித்தே திருப்பொதுவைக் களித்தேத்தல் வேண்டும்
விமலாதி உடையஒரு திருவடிவில் யானும்
விமலாநீ யுங்கலந்தே விளங்குதல்வேண் டுவனே. 11

திருச்சிற்றம்பலம்

22. ஆன்ம தரிசனம்

எழுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

357 திருஎலாம் தரும்ஓர் தெய்வமாம் ஒருவன் திருச்சிற்றம் பலந்திகழ் கின்றான்
உருஎலாம் உணர்ச்சி உடல்பொருள் ஆவி உளஎலாம் ஆங்கவன் தனக்கே
தெருஎலாம் அறியக் கொடுத்தனன் வேறு செயலிலேன் எனநினைத் திருந்தேன்
அருஎலாம் உடையாய் நீஅறிந் ததுவே அடிக்கடி உரைப்பதென் நினக்கே. 1

358 நினைத்தபோ தெல்லாம் நின்னையே நினைத்தேன் நினைப்பற நின்றபோ தெல்லாம்
எனைத்தனி ஆக்கி நின்கணே நின்றேன் என்செயல் என்னஓர் செயலும்
தினைத்தனை எனினும் புரிந்திலேன் எல்லாம் சிவன்செய லாம்எனப் புரிந்தேன்
அனைத்தும்என் அரசே நீஅறிந் ததுவே அடிக்கடி உரைப்பதென்நினக்கே. 2

Koviloor Digital Library

359 களித்தபோ தெல்லாம் நின்இயல் உணர்ந்தே களித்தனன் கண்கள்நீர் ததும்பித்
துளித்தபோ தெல்லாம் நின்அருள் நினைத்தே துளித்தனன் சூழ்ந்தவர் உளத்தைத்
தெளித்தபோ தெல்லாம் நின்திறம் புகன்றே தெளித்தனன் செய்கைவே றறியேன்
ஒளித்திரு வுளமே அறிந்ததிவ் வனைத்தும் உரைப்பதென் அடிக்கடி உனக்கே.
3

360 உண்டதும் பொருந்தி உவந்ததும் உறங்கி உணர்ந்ததும் உலகியல் உணர்வால்
கண்டதும் கருதிக் களித்ததும் கலைகள் கற்றதும் கரைந்ததும் காதல்
கொண்டதும் நின்னோ டன்றிநான் தனித்தென் குறிப்பினில் குறித்ததொன் றிலையே
ஒண்தகும் உனது திருவுளம் அறிந்த துரைப்பதென் அடிக்கடி உனக்கே.
4

361 களவிலே களித்த காலத்தும் நீயே களித்தனை நான்களித் தறியேன்
உளவிலே உவந்த போதும்நீ தானே உவந்தனை நான்உவந் தறியேன்
கொளஇலே சமும்ஓர் குறிப்பிலேன் அனைத்தும் குறித்தனை கொண்டனை நீயே
அளவிலே எல்லாம் அறிந்தனை அரசே அடிக்கடி உரைப்பதென் நினக்கே.
5

362 திலகவாள் நுதலார் தமைக்கன விடத்தும் சிறிதும்நான் விழைந்திலேன் இந்த
உலகவாழ் வதில்ஓர் அணுத்துணை எனினும் உவப்பிலேன் உலகுறு மாயைக்
கலகவா தனைதீர் காலம்என் றுறுமோ கடவுளே எனத்துயர்ந் திருந்தேன்
அலகிலாத் திறலோய் நீஅறிந் ததுநான் அடிக்கடி உரைப்பதென் நினக்கே.
6

363 சாதியும் மதமும் சமயமும் தவிர்ந்தேன் சாத்திரக் குப்பையும் தணந்தேன்
நீதியும் நிலையும் சத்தியப் பொருளும் நித்திய வாழ்க்கையும் சுகமும்
ஆதியும் நடுவும் அந்தமும் இல்லா அருட்பெருஞ் ஜோதிஎன் றறிந்தேன்
ஓதிய அனைத்தும் நீஅறிந் ததுநான் உரைப்பதென் அடிக்கடி உனக்கே.
7

364 பித்தெலாம் உடைய உலகர்தங் கலகப் பிதற்றெலாம் என்றொழிந் திடுமோ
சத்தெலாம் ஒன்றென் றுணர்ந்தசன் மார்க்கசங்கம்என் றோங்குமோ தலைமைச்
சித்தெலாம் வல்ல சித்தன்என் றுறுமோ தெரிந்திலேன் எனத்துயர்ந் திருந்தேன்
ஒத்தெலாம் உனது திருவுளம் அறிந்த துரைப்பதென் அடிக்கடி உனக்கே.
8

365 ஒன்றெனக் காணும் உணர்ச்சிஎன் றுறுமோ ஊழிதோ றூழிசென் றிடினும்
என்றும்இங் கிறவா இயற்கைஎன் றுறுமோ இயல்அருட் சித்திகள் எனைவந்
தொன்றல்என் றுறுமோ அனைத்தும்என் வசத்தே உறுதல்என் றோஎனத் துயர்ந்தேன்
உன்திரு வுளமே அறிந்ததிவ் வனைத்தும் உரைப்பதென் அடிக்கடி உனக்கே.
9

366 கள்ளவா தனையைக் களைந்தருள் நெறியைக் காதலித் தொருமையில் கலந்தே
உள்ளவா றிந்த உலகெலாம் களிப்புற் றோங்குதல் என்றுவந் துறுமோ
வள்ளலே அதுகண் டடியனேன் உள்ளம் மகிழ்தல்என் றோஎனத் துயர்ந்தேன்
ஒள்ளியோய் நினது திருவுளம் அறிந்த துரைப்பதென் அடிக்கடி உனக்கே.

திருச்சிற்றம்பலம்
10

Koviloor Digital Library

23. சிவதரிசனம்

எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

367 திருஉடையாய் சிற்சபைவாழ் சிவபதியே எல்லாம்
செய்யவல்ல தனித்தலைமைச் சித்தசிகா மணியே
உருஉடைஎன் உயிர்க்குயிராய் ஒளிர்கின்ற ஒளியே
உன்னுதொறும் என்னுளத்தே ஊறுகின்ற அமுதே
அருஉடைய பெருவெளியாய் அதுவிளங்கு வெளியாய்
அப்பாலு மாய்நிறைந்த அருட்பெருஞ்ஜோ தியனே
மருஉடையாள் சிவகாம வல்லிமண வாளா
வந்தருள்க அருட்ஜோதி தந்தருள்க விரைந்தே. 1

368 சொல்லவனே பொருளவனே துரியபதத் தவனே
தூயவனே நேயவனே ஜோதிஉரு வவனே
நல்லவனே நன்னிதியே ஞானசபா பதியே
நாயகனே தாயகனே நண்பவனே அனைத்தும்
அல்லவனே ஆனவனே அம்மைஅப்பா என்னை
ஆண்டவனே தாண்டவனே அருட்குருவே எல்லாம்
வல்லவனே சிவகாம வல்லிமண வாளா
மன்னவனே என்னவனே வந்தருள்க விரைந்தே. 2

369 துரியநிலை துணிந்தவரும் சொல்லரும்மெய்ப் பொருளே
சுத்தசிவா னந்தசபைச் சித்தசிகா மணியே
பெரியசிவ பதியேநின் பெருமைஅறிந் திடவே
பேராசைப் படுகின்றேன் பித்தர்களில் பெரியேன்
கரியமணித்திறத்தினையும் காணவல்லேன் அல்லேன்
கண்மணியே நின்திறத்தைக் காணுதல்வல் லேனோ
அரியபெரும் பொருளாம்உன் அருட்ஜோதி எனக்கே
அளித்தனையேல் அறிந்துகொள்வேன் அளித்திடுக விரைந்தே. 3

370 மறப்பறியாப் பேரறிவில் வாய்த்தபெருஞ் சுகமே
மலைவறியா நிலைநிரம்ப வயங்கியசெம் பொருளே
இறப்பறியாத் திருநெறியில்* என்னைவளர்த் தருளும்
என்னுடைய நற்றாயே எந்தாயே நினது
சிறப்பறியா உலகமெலாம் சிறப்பறிந்து கொளவே
சித்தசிகா மணியேநீ சித்திஎலாம் விளங்கப்
பிறப்பறியாப் பெருந்தவரும் வியப்பவந்து தருவாய்
பெருங்கருணை அரசேநீ தருந்தருணம் இதுவே. 4

---

* திருநிலையே – முதற்பதிப்பு, பொ.சு., பி.இரா.

Koviloor Digital Library

371 முன்னுழைப்பால் உறும்எனவே மொழிகின்றார் மொழியின்
முடிவறியேன் எல்லாம்செய் முன்னவனே நீஎன்
தன்னுழைப்பார்த் தருள்வாயேல் உண்டனைத்தும் ஒருநின்
தனதுசுதந் தரமேஇங் கெனதுசுதந் தரமோ
என்னுழைப்பால் என்பயனோ இரங்கிஅரு ளாயேல்
யானார்என் அறிவெதுமேல் என்னைமதிப் பவரார்
பொன்னுழைப்பால் பெறலும்அரி தருள்இலையேல் எல்லாம்
பொதுநடஞ்செய் புண்ணியநீ எண்ணியவா றாமே. 5

372 விழித்துவிழித் திமைத்தாலும் சுடர்உதயம் இலையேல்
விழிகள்விழித் திளைப்பதலால் விளைவொன்றும் இலையே
மொழித்திறஞ்செய் தடிக்கடிநான் முடுகிமுயன் றாலும்
முன்னவநின் பெருங்கருணை முன்னிடல்இன் றெனிலோ
செழித்துறுநற் பயன்எதுவோ திருவுளந்தான் இரங்கில்
சிறுதுரும்போர் ஐந்தொழிலும் செய்திடல்சத் தியமே
பழித்துரைப்பார் உரைக்களலாம் பசுபதிநின் செயலே
பரிந்தெனையும் பாடுவித்துப் பரிசுமகிழ்ந் தருளே. 6

373 மாநிருபா திபர்சூழ மணிமுடிதான் பொறுத்தே
மண்ணாள வானாள மனத்தில்நினைத் தேனோ
தேன்ஒருவா மொழிச்சியரைத் திளைக்கவிழைந் தேனோ
தீஞ்சுவைகள் விரும்பினனோ தீமைகள்செய் தேனோ
நானொருபா வமும்அறியேன் நன்னிதியே எனது
நாயகனே பொதுவிளங்கும் நடராஜ பதியே
ஏன்ஒருமை இலர்போல்நீ இருக்கின்றாய் அழகோ
என்ஒருமை அறியாயோ யாவும்அறிந் தாயே. 7

374 பாவிமனக் குரங்காட்டம் பார்க்கமுடி யாதே
பதிவெறுத்தேன் நிதிவெறுத்தேன் பற்றனைத்தும் தவிர்ந்தேன்
ஆவிஉடல் பொருளைஉன்பாற் கொடுத்தேன்உன் அருட்பே
ராசைமய மாகிஉனை அடுத்துமுயல் கின்றேன்
கூவிஎனை ஆட்கொள்ள நினையாயோ நினது
குறிப்பறியேன் பற்பலகால் கூவிஇளைக் கின்றேன்
தேவிசிவ காமவல்லி மகிழுமண வாளா
தெருள்நிறைவான் அமுதளிக்கும் தருணம்இது தானே. 8

375 கட்டவிழ்ந்த கமலம்எனக் கருத்தவிழ்ந்து நினையே
கருதுகின்றேன் வேறொன்றும் கருதுகிலேன்இதுதான்
சிட்டருளம் திகழ்கின்ற சிவபதியே நினது
திருவுளமே அறிந்ததுநான் செப்புதல்என் புவிமேல்

Koviloor Digital Library

விட்டகுறை தொட்டகுறை இரண்டும்நிறைந் தனன்நீ
விரைந்துவந்தே அருட்ஜோதி புரிந்தருளும் தருணம்
தொட்டதுநான் துணிந்துரைத்தேன் நீஉணர்த்த உணர்ந்தே
சொல்வதலால் என்அறிவால் சொல்லவல்லேன் அன்றே. 9

376 காட்டைஎலாம் கடந்துவிட்டேன் நாட்டைஅடைந் துனது
கடிநகர்ப்பொன் மதிற்காட்சி கண்குளிரக் கண்டேன்
கோட்டைஎலாம் கொடிநாட்டிக் கோலமிடப் பார்த்தேன்
கோயிலின்மேல் வாயிலிலே குறைகளெலாம் தவிர்ந்தேன்
சேட்டைஅற்றுக் கருவிஎலாம் என்வசம்நின் றிடவே
சித்திஎலாம் பெற்றேன்நான் திருச்சிற்றம் பலமேல்
பாட்டைஎலாம் பாடுகின்றேன் இதுதருணம் பதியே
பலந்தரும்என் உளந்தனிலே கலந்துநிறைந் தருளே. 10

377 சித்திஎலாம் வல்லசிவ சித்தன்உளம் கலந்தான்
செத்தாரை எழுப்புகின்ற திருநாள்கள் அடுத்த
இத்தினமே தொடங்கிஅழி யாதநிலை அடைதற்
கேற்றகுறி ஏற்றவிடத் திசைந்தியல்கின் றனநாம்
சத்தியமே பெருவாழ்வில் பெருங்களிப்புற் றிடுதல்
சந்தேகித் தலையாதே சாற்றியஎன் மொழியை
நித்தியவான் மொழிஎன்ன நினைந்துமகிழ்ந் தமைவாய்
நெஞ்சேநீ அஞ்சேல்உள் அஞ்சேல்அஞ் சேலே. 11

திருச்சிற்றம்பலம்

24. வாதனைக் கழிவு

அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

378 பொழுது விடிந்த தினிச்சிறிதும் பொறுத்து முடியேன் எனநின்றே
அழுது விழிகள் நீர்துளும்பக் கூவிக் கூவி அயர்கின்றேன்
பழுது தவிர்க்கும் திருச்செவிக்குள் பட்ட திலையோ பலகாலும்*
உழுது களைத்த மாடனையேன் துணைவே றறியேன் உடையானே. 1

379 உடையாய் திருஅம் பலத்தாடல் ஒருவா ஒருவா உலவாத
கொடையாய் எனநான் நின்றனையே கூவிக் கூவி அயர்கின்றேன்
தடையா யினதீர்த் தருளாதே தாழ்க்கில் அழகோ புலைநாயிற்
கடையாய்த் திரிந்தேன் கலங்குதல்சம் மதமோ கருணைக் கருத்தினுக்கே. 2

---

* பலநாளும் – ச.மு.க. பதிப்பு

Koviloor Digital Library

380 கருணைக் கருத்து மலர்ந்தெனது கலக்க மனைத்துந் தவிர்த்தேஇத்
தருணத் தருளா விடில்அடியேன் தரியேன் தளர்வேன் தளர்வதுதான்
அருணச் சுடரே நின்னருளுக் கழகோ அழகென் றிருப்பாயேல்
தெருணற் பதஞ்சார் அன்பரெலாம்* சிரிப்பார் நானும் திகைப்பேனே. 3

381 திகைப்பார் திகைக்க நான்சிறிதும் திகையேன் எனநின் திருவடிக்கே
வகைப்பா மாலை சூட்டுகின்றேன் மற்றொன் றறியேன் சிறியேற்குத்
தகைப்பா ரிடைஇத் தருணத்தே தாராய் எனிலோ பிறரெல்லாம்
நகைப்பார் நகைக்க உடம்பினைவைத் திருத்தல் அழகோ நாயகனே. 4

382 நாயிற் கடையேன் கலக்கமெலாம் தவிர்த்து நினது நல்லருளை
ஈயிற் கருணைப் பெருங்கடலே என்னே கெடுவ தியற்கையிலே
தாயிற் பெரிதும்** தயவுடையான் குற்றம் புரிந்தோன் தன்னையும்ஓர்
சேயிற் கருதி அணைத்தான்என் றுரைப்பா ருனைத்தான் தெரிந்தோரே. 5

383 தெரிந்த பெரியர்க் கருள்புரிதல் சிறப்பென் றுரைத்த தெய்வமறை
திரிந்த சிறியர்க் கருள்புரிதல் சிறப்பிற் சிறப்பென் றுரைத்தனவே
புரிந்தம் மறையைப் புகன்றவனும் நீயே என்றால் புண்ணியனே
விரிந்த மனத்துச் சிறியேனுக் கிரங்கி அருளல் வேண்டாவோ. 6

384 வேண்டார் உளரோ நின்னருளை மேலோ ரன்றிக் கீழோரும்
ஈண்டார் வதற்கு வேண்டினரால் இன்று புதிதோ யான்வேண்டல்
தூண்டா விளக்கே திருப்பொதுவிற் ஜோதி மணியே ஆறொடுமூன்
றாண்டா வதிலே முன்னென்னை ஆண்டாய் கருணை அளித்தருளே. 7

385 அருளே வடிவாம் அரசேநீ அருளா விடில்இவ் வடியேனுக்
கிருளே தொலைய அருளளிப்பார் எவரே எல்லாம் வல்லோய்நின்
பொருளேய் வடிவிற் கலைஒன்றே புறத்தும் அகத்தும் புணர்ந்தெங்குந்
தெருளே யுறஎத் தலைவருக்குஞ் சிறந்த அருளாய்த் திகழ்வதுவே. 8

386 திகழ்ந்தார் கின்ற திருப்பொதுவில் சிவமே நின்னைத் தெரிந்துகொண்டு
புகழ்ந்தார் தம்மைப் பொறுத்திடவும் புன்மை அறிவால் பொய்உரைத்தே
இகழ்ந்தேன் தனைக்கீழ் வீழ்த்திடவும் என்னே புவிக்கிங் கிசைத்திலைநீ
அகழ்ந்தார் தமையும் பொறுக்கஎன அமைத்தாய் எல்லாம் அமைத்தாயே. 9

387 எல்லாம் வகுத்தாய் எனக்கருளில் யாரே தடுப்பார் எல்லாஞ்செய்
வல்லான் வகுத்த வண்ணம்என மகிழ்வார் என்கண் மணியேஎன்
சொல்லா னவையும் அணிந்துகொண்ட துரையே ஜோதித் திருப்பொதுவில்
நல்லாய் கருணை நடத்தரசே தருணம் இதுநீ நயந்தருளே. 10

---

* அடியரெலாம் – முதற்பதிப்பு, பொ.சு., ச.மு.க., பி. இரா.

** தாயிற் பெரிய – முதற்பதிப்பு, பொ.சு., பி. இரா.

Koviloor Digital Library

388 நயந்த கருணை நடத்தரசே ஞான அமுதே நல்லோர்கள்
வியந்த மணியே மெய்யறிவாம் விளக்கே என்னை விதித்தோனே
கயந்த மனத்தேன் எனினும்மிகக் கலங்கி நரகக் கடுங்கடையில்
பயந்த பொழுதும் தாழ்த்திருத்தல் அழகோ கடைக்கண் பார்த்தருளே. 11

389 பார்த்தார் இரங்கச் சிறியேன்நான் பாவி மனத்தால் பட்டதுயர்
தீர்த்தாய் அந்நாள் அதுதொடங்கித் தெய்வந் துணைஎன் றிருக்கின்றேன்
சேர்த்தார்* உலகில் இந்நாளில் சிறியேன் தனைவெந் துயர்ப்பாவி
ஈர்த்தால் அதுகண் டிருப்பதுவோ கருணைக் கழகிங் கெந்தாயே. 12

390 தாயே எனைத்தான் தந்தவனே தலைவா ஞான சபாபதியே
பேயேன் செய்த பெருங்குற்றம் பொறுத்தாட் கொண்ட பெரியோனே
நீயே இந்நாள் முகமறியார் நிலையில் இருந்தால் நீடுலகில்
நாயே அனையேன் எவர்துணைஎன் றெங்கே புகுவேன் நவிலாயே. 13

391 ஆயேன் வேதா கமங்களைநன் கறியேன் சிறியேன் அவலமிகும்
பேயேன் எனினும் வலிந்தென்னைப் பெற்ற கருணைப் பெருமானே
நீயே அருள நினைத்தாயேல் எல்லா நலமும் நிரம்புவன் நான்
காயே எனினும் கனிஆகும் அன்றே நினது கருணைக்கே. 14

392 கருணா நிதியே என்இரண்டு கண்ணே கண்ணிற் கலந்தொளிரும்
தெருணா டொளியே வெளியேமெய்ச் சிவமே சித்த சிகாமணியே
இருணா டுலகில் அறிவின்றி இருக்கத் தரியேன் இதுதருணம்
தருணா அடியேற் கருட்ஜோதி தருவாய் என்முன் வருவாயே. 15

393 வருவாய் என்கண் மணிநீஎன் மனத்திற் குறித்த வண்ணமெலாம்
தருவாய் தருணம் இதுவேமெய்த் தலைவா ஞான சபாபதியே
உருவாய் சிறிது தாழ்க்கில்உயிர் ஒருவும் உரைத்தேன் என்னுடைவாய்
இருவாய் அலநின் திருவடிப்பாட் டிசைக்கும் ஒருவாய் இசைத்தேனே. 16

394 தேனே திருச்சிற் றம்பலத்தில் தெள்ளா ரமுதே சிவஞான
வானே ஞான சித்தசிகா மணியே என்கண் மணியேஎன்
ஊனே புகுந்தென் உளங்கலந்த உடையாய் அடியேன் உவந்திடநீ
தானே மகிழ்ந்து தந்தாய்இத் தருணம் கைம்மா றறியேனே. 17

395 அறியேன் சிறியேன் செய்தபிழை அனைத்தும் பொறுத்தாய் அருட்ஜோதிக்
குறியே குணமே பெறஎன்னைக் குறிக்கொண் டளித்தாய் சன்மார்க்க
நெறியே விளங்க எனைக்கலந்து நிறைந்தாய் நின்னை ஒருகணமும்
பிறியேன் பிறியேன் இறவாமை பெற்றேன் உற்றேன் பெருஞ்சுகமே. 18

---

* சேர்த்தாய் – முதற்பதிப்பு, பொ.சு., மு.க., பி.இரா.

Koviloor Digital Library

396 சுகமே நிரம்பப் பெருங்கருணைத் தொட்டில் இடத்தே எனைஅமர்த்தி
அகமே விளங்கத் திருஅருளா ரமுதம் அளித்தே அணைத்தருளி
முகமே மலர்த்திச் சித்திநிலை முழுதும் கொடுத்து மூவாமல்
சகமேல் இருக்கப் புரிந்தாயே தாயே என்னைத் தந்தாயே. 19

397 தந்தாய் இன்றும் தருகின்றாய் தருவாய் மேலுந் தனித்தலைமை
எந்தாய் நினது பெருங்கருணை என்என் றுரைப்பேன் இவ்வுலகில்
சிந்தா குலந்தீர்த் தருள்எனநான் சிறிதே கூவு முன்என்பால்
வந்தாய் கலந்து மகிழ்கின்றாய் எனது பொழுது வான்பொழுதே. 20

திருச்சிற்றம்பலம்

25. அநுபோக நிலயம்

எழுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

398 இனிப்பிரிந் திறையும் இருக்கலேன் பிரிவை எண்ணினும் ஐயவோ மயங்கிப்
பனிப்பில்என் உடம்பும் உயிரும்உள் உணர்வும் பரதவிப் பதைஅறிந் திலையோ
தனிப்படு ஞான வெளியிலே இன்பத்தனிநடம் புரிதனித் தலைவா
கனிப்பயன் தருதற் கிதுதகு தருணம்கலந்தருள் கலந்தருள் எனையே. 1

399 பிரிந்தினிச் சிறிதும் தரிக்கலேன் பிரிவைப் பேசினும் நெய்விடுந் தீப்போல்
எரிந்துளங் கலங்கி* மயங்கல்கண் டிலையோ எங்கணும் கண்ணுடை எந்தாய்
புரிந்தசிற் பொதுவில் திருநடம் புரியும் புண்ணியா என்னுயிர்த் துணைவா
கரந்திடா** துறுதற் கிதுதகு தருணம் கலந்தருள் கலந்துருள் எனையே. 2

400 மேலைஏ காந்த வெளியிலே நடஞ்செய் மெய்யனே ஐயனே எனக்கு
மாலையே அணிந்த மகிழ்நனே எல்லாம் வல்லனே நல்லனே அருட்செங்
கோலையே நடத்தும் இறைவனே ஓர்எண்குணத்தனே இனிச்சகிப் பறியேன்
காலையே தருதற் கிதுதகு தருணம்கலந்தருள் கலந்தருள் எனையே. 3

401 பண்டுகொண் டெனைத்தான் பிழைகுறி யாத பண்பனே திருச்சிற்றம் பலத்தே
தொண்டுகொண் டடியர் களிக்கநின் றாடும் தூயனே நேயனே பிரமன்
விண்டுகண் டறியா முடிஅடி எனக்கே விளங்குறக் காட்டிய விமலா
கண்டுகொண் டுறுதற் கிதுதகு தருணம்கலந்தருள் கலந்தருள் எனையே. 4

---

* கருகி – முதற் பதிப்பு, பொ.சு., பி. இரா., ச.மு.க.,

** கரைந்திடாது – முதற்பதிப்பு, பொ.சு., ச.மு.க.,

Koviloor Digital Library

402 தனித்துணை எனும்என் தந்தையே தாயே தலைவனே சிற்சபை தனிலே
இனித்ததெள் ளமுதே என்னுயிர்க் குயிரே என்னிரு கண்ணுள்மா மணியே
அனித்தமே நீக்கி ஆண்டஎன் குருவே அண்ணலே இனிப்பிரி வாற்றேன்
கனித்துணை தருதற் கிதுதகு தருணம் கலந்தருள் கலந்தருள் எனையே.
5

403 துன்பெலாம் தவிர்க்கும் திருச்சிற்றம் பலத்தே ஜோதியுட் ஜோதியே அழியா
இன்பெலாம் அளிக்கும் இறைவனே என்னை ஈன்றநல் தந்தையே தாயே
அன்பெலாம் ஆகி நிறைந்ததோர் நிறைவே அண்ணலே இனிப்பிரி வாற்றேன்
பொன்பதந் தருதற் கிதுதகு தருணம் புணர்ந்தருள் புணர்ந்தருள் எனையே.
6

404 ஏதும்ஒன் றறியாப் பேதையாம் பருவத் தென்னைஆட் கொண்டெனை உவந்தே
ஓதும்இன் மொழியால் பாடவே பணித்த ஒருவனே என்னுயிர்த் துணைவா
வேதமும் பயனும் ஆகிய பொதுவில் விளங்கிய விமலனே ஞான
போதகம் தருதற் கிதுதகு தருணம் புணர்ந்தருள் புணர்ந்தருள் எனையே.
7

405 எண்ணிய எனதுள் எண்ணமே எண்ணத் திசைந்தபே ரின்பமே யான்தான்
பண்ணிய தவமே தவத்துறும் பலனே பலத்தினால் கிடைத்தஎன் பதியே
தண்ணிய மதியே மதிமுடி அரசே தனித்தசிற் சபைநடத் தமுதே
புண்ணியம் அளித்தற் கிதுதகு தருணம் புணர்ந்தருள் புணர்ந்தருள் எனையே.
8

406 மலப்பகை தவிர்க்கும் தனிப்பொது மருந்தே மந்திர மேஒளிர் மணியே
நிலைப்பட எனைஅன் றாண்டருள் அளித்த நேயனே தாயனை யவனே
பலப்படு பொன்னம் பலத்திலே நடஞ்செய் பரமனே பிரமசிற் சுகந்தான்
புலப்படத் தருதற் கிதுதகு தருணம் புணர்ந்தருள் புணர்ந்தருள் எனையே.
9

407 களிப்புறும் அடியேன் கையிலே கிடைத்த கற்பகத் தீஞ்சுவைக் கனியே
வெளிப்புறத் தோங்கும் விளக்கமே அகத்தே விளங்கும்ஓர் விளக்கமே எனக்கே
ஒளிப்பிலா தன்றே அளித்தசிற் பொதுவில் ஒருவனே இனிப்பிரி வாற்றேன்
புளிப்பற இனித்தற் கிதுதகு தருணம் புணர்ந்தருள் புணர்ந்தருள் எனையே.
10

திருச்சிற்றம்பலம்

Koviloor Digital Library

26. தற்போத இழப்பு

எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

408 அவ்வண்ணம் பழுத்தவரும் அறிந்திலர்சற் றெனினும்
அறிந்தனம்ஓர் சிறிதுகுரு அருளாலே அந்தச்
செவ்வண்ணம் பழுத்ததனித் திருவுருக்கண் டெவர்க்கும்
தெரியாமல் இருப்பம்எனச் சிந்தனைசெய் திருந்தேன்
இவ்வண்ணம் இருந்தஎனைப் பிறர்அறியத் தெருவில்
இழுத்துவிடுத் ததுகடவுள் இயற்கைஅருட் செயலோ
மவ்வண்ணப் பெருமாயை தன்செயலோ அறியேன்
மனம்ஆலை பாய்வதுகாண் மன்றில்நடத் தரசே. 1

409 கள்ளிருந்த மலர்இதழிச் சடைக்கனிநின் வடிவம்
கண்டுகொண்டேன் சிறிதடியேன் கண்டுகொண்ட படியே
நள்ளிருந்த வண்ணம்இன்னும் கண்டுகண்டு களித்தே
நாடறியா திருப்பம்என்றே நன்றுநினைந் தொருசார்
உள்ளிருந்த எனைத்தெருவில் இழுத்துவிடுத் ததுதான்
உன்செயலோ பெருமாயை தன்செயலோ அறியேன்
வள்ளிருந்த குணக்கடையேன் இதைநினைக்குந் தோறும்
மனம்ஆலை பாய்வதுகாண் மன்றில்நடத் தரசே. 2

410 இகத்திருந்த வண்ணம்எலாம் மிகத்திருந்த அருட்பேர்
இன்பவடி வம்சிறியேன் முன்புரிந்த தவத்தால்
சகத்திருந்தார் காணாதே சிறிதுகண்டு கொண்ட
தரம்நினைந்து பெரிதின்னும் தான்காண்பேம் என்றே
அகத்திருந்த எனைப்புறத்தே இழுத்துவிடுத் ததுதான்
ஆண்டவநின் அருட்செயலோ மருட்செயலோ அறியேன்
மகத்திருந்தார் என்அளவில் என்நினைப்பார் அந்தோ
மனம்ஆலை பாய்வதுகாண் மன்றில்நடத் தரசே. 3

411 கருங்களிறு போல்மதத்தால் கண்செருக்கி வீணே
காலம்எலாம் கழிக்கின்ற கடையர்கடைத் தலைவாய்
ஒருங்குசிறி யேன்தனைமுன் வலிந்தருளே வடிவாய்
உள்அமர்ந்தே உள்ளதனை உள்ளபடி உணர்த்திப்
பெருங்கருணை யால்அளித்த பேறதனை இன்னும்
பிறர்அறியா வகைபெரிதும் பெறுதும்என உள்ளே
மருங்கிருந்த எனைவெளியில் இழுத்துவிட்ட தென்னோ
மனம்ஆலை பாய்வதுகாண் மன்றில்நடத் தரசே. 4

Koviloor Digital Library

412 நாடுகின்ற மறைகள்எலாம் நாம்அறியோம் என்று
நாணிஉரைத் தலமரவே நல்லமணி மன்றில்
ஆடுகின்ற சேவடிகண் டானந்தக் கடலில்
ஆடும்அன்பர் போல்நமக்கும் அருள்கிடைத்த தெனினும்
வீடுகின்ற பிறர்சிறிதும் அறியாமல் இருக்க
வேண்டும்என இருந்தஎன்னை வெளியில்இழுத் திட்டு
வாடுகின்ற வகைபுரிந்த விதியைநினைந் தையோ
மனம்ஆலை பாய்வதுகாண் மன்றில்நடத் தரசே. 5

413 நதிகலந்த சடைஅசையத் திருமேனி விளங்க
நல்லதிருக் கூத்தாட வல்லதிரு வடிகள்
கதிகலந்து கொளச்சிறியேன் கருத்திடையே கலந்து
கள்ளமற உள்ளபடி காட்டிடக்கண் டின்னும்
பதிகலந்து கொளும்மட்டும் பிறர்அறியா திருக்கப்
பரிந்துள்ளே இருந்தஎன்னை வெளியில்இழுத் திட்டு
மதிகலந்து கலங்கவைத்த விதியைநினைந் தையோ
மனம்ஆலை பாய்வதுகாண் மன்றில்நடத் தரசே. 6

414 மஞ்சனைய குழலம்மை எங்கள்சிவ காம
வல்லிமகிழ் திருமேனி வண்ணமது சிறிதே
நஞ்சனைய கொடியேன்கண் டிடப்புரிந்த அருளை
நாடறியா வகைஇன்னும் நீடநினைத் திருந்தேன்
அஞ்சனைய பிறர்எல்லாம் அறிந்துபல பேசி
அலர்தூற்ற அளியஎனை வெளியில்இழுத் திட்டு
வஞ்சனைசெய் திடவந்த விதியைநினைந் தையோ
மனம்ஆலை பாய்வதுகாண் மன்றில்நடத் தரசே. 7

415 அரிபிரமர் உருத்திரரும் அறிந்துகொள மாட்டா
தலமரவும் ஈதென்ன அதிசயமோ மலத்தில்
புரிபுழுவில் இழிந்தேனைப் பொருளாக்கி அருளாம்
பொருள்அளிக்கப் பெற்றனன்இப் புதுமைபிறர் அறியா
துரிமைபெற இருப்பன்என உள்இருந்த என்னை
உலகறிய வெளியில்இழுத் தலகில்விருத் தியினால்
வரிதலையிட் டாட்டுகின்ற விதியை நினைந் தையோ
மனம்ஆலை பாய்வதுகாண் மன்றில்நடத் தரசே. 8

416 விழற்கிறைத்துக் களிக்கின்ற வீணர்களிற் சிறந்த
வினைக்கொடியேம் பொருட்டாக விரும்பிஎழுந் தருளிக்
கழற்கிசைந்த பொன்அடிநம் தலைமேலே அமைத்துக்
கருணைசெயப் பெற்றனம்இக் கருணைநம்மை இன்னும்

Koviloor Digital Library

நிழற்கிசைத்த மேல்நிலையில் ஏற்றும்என மகிழ்ந்து
நின்றஎன்னை வெளியில்இழுத் துலகவியா பார
வழக்கில்வளைத் தலைக்கவந்த விதியைநினைந் தையோ
மனம்ஆலை பாய்வதுகாண் மன்றில்நடத் தரசே. 9

417 அடிபிடித்துத் திரிகின்ற மறைகள் எலாம் காணா
அருள்வடிவைக் காட்டிநம்மை ஆண்டுகொண்ட கருணைக்
கொடிபிடித்த குருமணியைக் கூடுமட்டும் வேறோர்
குறிப்பின்றி இருப்பம்எனக் கொண்டகத்தே இருந்தேன்
படிபிடித்த பலர்பலவும் பகர்ந்திடஇங் கெனைத்தான்
படுவழக்கிட் டுலகியலாம் வெளியில்இழுத் தலைத்தே
மடிபிடித்துப் பறிக்கவந்த விதியைநினைந் தையோ
மனம்ஆலை பாய்வதுகாண் மன்றில்நடத் தரசே. 10

திருச்சிற்றம்பலம்

27. மாயையின் விளக்கம்

ஏழுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

418 திடுக்கற எனைத்தான் வளர்த்திடப் பரையாம் செவிலிபாற் சேர்த்தனை அவளோ
எடுக்கவும் நினையாள் படுக்கவும் ஒட்டாள் என்செய்வேன் இன்னும்என் னிடைப்பால்
மடுக்கநற் றாயும் வந்திலள் நீயும் வந்தெனைப் பார்த்திலை அந்தோ
தடுக்கருங் கருணைத் தந்தையே தளர்ந்தேன் தனையனேன் தளர்ந்திடல் அழகோ. 1

419 தளர்ந்திடேல் மகனே என்றெனை எடுத்தோர் தாய்கையில் கொடுத்தனை அவளோ
வளர்ந்திடா வகையே நினைந்தனள் போன்று மாயமே புரிந்திருக் கின்றாள்
கிளர்ந்திட எனைத்தான் பெற்றநற் றாயும் கேட்பதற் கடைந்திலள் அந்தோ
உளந்தரு கருணைத் தந்தையே நீயும் உற்றிலை பெற்றவர்க் கழகோ. 2

420 தாங்கஎன் தனைஓர் தாய்கையில் கொடுத்தாய் தாயவள் நான்தனித் துணர்ந்து
தூங்கவும் ஒட்டாள் எடுக்கவும் துணியாள் சூதையே நினைத்திருக் கின்றாள்
ஓங்குநற் றாயும் வந்திலாள் அந்தோ உளந்தளர் வுற்றனன் நீயும்
ஈங்குவந் திலையேல் என்செய்வேன் இதுதான் எந்தைநின் திருவருட் கழகோ. 3

421 அத்தநீ எனைஓர் தாய்கையில் கொடுத்தாய் ஆங்கவள் மகள்கையில் கொடுத்தாள்
நித்திய மகள்ஓர் நீலிபால் கொடுத்தாள் நீலியோ தன்புடை ஆடும்
தத்துவ மடவார் தங்கையில் கொடுத்தாள் தனித்தனி அவர்அவர் எடுத்தே
கத்தவெம் பயமே காட்டினர் நானும் கலங்கினேன் கலங்கிடல் அழகோ. 4

Koviloor Digital Library

422 வாங்கிய செவிலி அறிவொடும் துயிற்ற மகள்கையில் கொடுத்தனள் எனைத்தான்
ஈங்கிவள் கருத்தில் எதுநினைத் தனளோ என்செய்வேன் என்னையே உணர்ந்து
தூங்கவும் ஒட்டாள் அடிக்கடி கிள்ளித் தொட்டிலும் ஆட்டிடு கின்றாள்
ஏங்குறு கின்றேன் பிள்ளைதன் அருமை ஈன்றவர் அறிவரே எந்தாய். 5

423 வலத்திலே செவிலி எடுத்திடச் சோம்பி மக்கள்பால் காட்டிவிட் டிருந்தாள்
மலத்திலே உழைத்துக் கிடந்தழல் கேட்டும் வந்தெனை எடுத்திலார் அவரும்
இலத்திலே கூடி ஆடுகின் றனர்நான் என்செய்வேன் என்னுடை அருமை
நிலத்திலே அவர்கள் அறிந்திலார் பெற்றோய் நீயும்இங் கறிந்திலை யேயோ. 6

424 தும்மினேன் வெதும்பித் தொட்டிலிற் கிடந்தே சோர்ந்தழு திளைத்துமென் குரலும்
கம்மினேன் செவிலி அம்மிபோல் அசையாள் காதுறக் கேட்டிருக் கின்றாள்
செம்மியே மடவார் கொம்மியே பாடிச் சிரித்திருக் கின்றனர் அந்தோ
இம்மியே எனினும் ஈந்திடார் போல இருப்பதோ நீயும்எந் தாயே. 7

425 துருவிலா வயிரத் தொட்டிலே தங்கத் தொட்டிலே பலஇருந் திடவும்
திருவிலாப் பொத்தைத் தொட்டிலிற் செவிலி சிறியனைக் கிடத்தினள் எந்தாய்
பிரிவிலாத் தனிமைத் தலைவநீ பெற்ற பிள்ளைநான் எனக்கிது பெறுமோ
கருவிலாய் நீஇத் தருணம்வந் திதனைக் கண்டிடில் சகிக்குமோ நினக்கே. 8

426 காய்ந்திடு மனத்தாள் போன்றனள் சிறிதும் கனிவிலாள் காமமா திகளாம்
பாய்ந்திடு வேடப் பயல்களால் எனக்குப் பயம்புரி வித்தனள் பலகால்
தேய்ந்திடு மதிஎன் றெண்ணினாள் குறையாத் திருமதி எனநினைந் தறியாள்
சாய்ந்தஇச் செவிலி கையிலே என்னைத் தந்தது சாலும்எந் தாயே. 9

427 ஞானஆ னந்த வல்லியாம் பிரியா நாயகி யுடன்எழுந் தருளி
ஈனம்ஆர் இடர்நீத் தெடுத்தெனை அணைத்தே இன்னமு தனைத்தையும் அருத்தி
ஊனம்ஒன் றில்லா தோங்குமெய்த் தலத்தில் உறப்புரிந் தெனைப்பிரி யாமல்
வானமும் புவியும் மதிக்கவாழ்ந் தருள்க மாமணி மன்றில்எந் தாயே. 10

திருச்சிற்றம்பலம்

28. அபயத் திறன்

எழுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

428 ஆடக மணிப்பொற் குன்றமே என்னை ஆண்டுகொண் டருளிய பொருளே
வீடகத் தேற்றும் விளக்கமே விளக்கின் மெய்யொளிக் குள்ளொளி வியப்பே
வாடகச் சிறியேன் வாட்டங்கள் எல்லாம் தவிர்த்தருள் வழங்கிய மன்றில்
நாடகக் கருணை நாதனே உன்னை நம்பினேன் கைவிடேல் எனையே. 1

Koviloor Digital Library

429 வட்டவான் சுடரே வளரொளி விளக்கே வயங்குசிற் ஜோதியே அடியேன்
இட்டமே இட்டத் தியைந்துளே கலந்த இன்பமே என்பெரும் பொருளே
கட்டமே தவிர்த்திங் கென்னைவாழ் வித்த கடவுளே கனகமன் றகத்தே
நட்டமே புரியும் பேரரு ளரசே நம்பினேன் கைவிடேல் எனையே. 2

430 புல்லவா மனத்தேன் என்னினும் சமயம் புகுதவா பொய்ந்நெறி ஒழுக்கம்
சொல்லவா பிறரைத் துதிக்கவா சிறிதோர்சொப்பனத் தாயினும் நினையேன்
கல்லவா மனத்தோர் உறவையுங் கருதேன் கனகமா மன்றிலே நடிக்கும்
நல்லவா எல்லாம் வல்லவா உனையே நம்பினேன் கைவிடேல் எனையே. 3

431 புண்படா உடம்பும் புரைபடா மனமும் பொய்படா ஒழுக்கமும் பொருந்திக்
கண்படா திரவும் பகலும்நின் தனையே கருத்தில்வைத் தேத்துதற் கிசைந்தேன்
உண்பனே எனினும் உடுப்பனே எனினும் உலகரை நம்பிலேன் எனது
நண்பனே நலஞ்சார் பண்பனே உனையே நம்பினேன் கைவிடேல் எனையே. 4

432 புண்ணிலே புகுந்த கோல்எனத் துயரம் புகுந்தெனைக் கலக்கிய போதும்
கண்ணிலே எனது கருத்திலே கலந்த கருத்தனே நின்றனை அல்லால்
மண்ணிலே வயங்கும் வானிலே பிறரை மதித்திலேன் மதிக்கின்றார் தமையும்
நண்ணிலேன் வேறொன் றெண்ணிலேன் உனையே நம்பினேன் கைவிடேல் எனையே. 5

433 ஊன்பெறும் உயிரும் உணர்ச்சியும் அன்பும் ஊக்கமும் உண்மையும் என்னைத்
தான்பெறு தாயும் தந்தையும் குருவும் தனிப்பெருந் தெய்வமுந் தவமும்
வான்பெறு பொருளும் வாழ்வும்நற் றுணையும் மக்களும் மனைவியும் உறவும்
நான்பெறு நண்பும் யாவும்நீ என்றே நம்பினேன் கைவிடேல் எனையே. 6

434 வாட்டமும் துயரும் அச்சமும் தவிர்த்தென் வடிவமும் வண்ணமும் உயிரும்
தேட்டமும் நீயே கொண்டுநின் கருணைத் தேகமும் உருவும்மெய்ச் சிவமும்
ஈட்டமும் எல்லாம் வல்லநின் னருட்பே ரின்பமும் அன்பும்மெய்ஞ் ஞான
நாட்டமும் கொடுத்துக் காப்பதுன் கடன்நான் நம்பினேன் கைவிடேல் எனையே. 7

435 வம்பனேன் பிறர்போல் வையமும் வானும் மற்றவும் மதித்திலேன் மதஞ்சார்
உம்பனோர் அகங்கா ரந்தவிர்ந் தெல்லா உலகமும் வாழ்கவென் றிருந்தேன்
செம்பொனே கருணைத் தெய்வமே எல்லாம் செயவல்ல சித்தனே சிவனே
நம்பனே ஞான நாதனே உனையே நம்பினேன் கைவிடேல் எனையே. 8

436 ஆயகால் இருந்தும் நடந்திட வலியில் லாமையால் அழுங்குவார் எனஉண்
மேயகால் இருந்தும் திருவருள் உறஓர் விருப்பிலா மையின்மிக மெலிந்தேன்
தீயகான் விலங்கைத் தூயமா னிடஞ்செய் சித்தனே சத்திய சபைக்கு
நாயகா உயிர்க்கு நாயகா உனையே நம்பினேன் கைவிடேல் எனையே. 9

Koviloor Digital Library

437 அற்றமும் மறைக்கும் அறிவிலா தோடி ஆடிய சிறுபரு வத்தே
குற்றமும் குணங்கொண் டென்னைஆட் கொண்ட குணப்பெருங் குன்றமே குருவே
செற்றமும் விருப்பும் தீர்த்தமெய்த்* தவர்தம் சிந்தையில் இனிக்கின்ற தேனே
நற்றக வுடைய நாதனே உனையே நம்பினேன் கைவிடேல் எனையே. 10

438 படம்புரி பாம்பிற் கொடியனேன் கொடிய பாவியிற் பாவியேன் தீமைக்
கிடம்புரி மனத்தேன் இரக்கம்ஒன் றில்லேன்என்னினும் துணைஎந்த விதத்தும்
திடம்புரி நின்பொன் அடித்துணை எனவே சிந்தனை செய்திருக் கின்றேன்
நடம்புரி கருணை நாயகா உனையே நம்பினேன் கைவிடேல் எனையே. 11

439 படித்தனன் உலகப் படிப்பெலாம் மெய்ந்நூல் படித்தவர் தங்களைப் பார்த்து
நொடித்தனன் கடிந்து நோக்கினேன் காம நோக்கினேன் பொய்யர்தம் உறவு
பிடித்தனன் உலகில் பேதையர் மயங்கப் பெரியரில் பெரியர்போல் பேசி
நடித்தனன் எனினும் நின்னடித் துணையே நம்பினேன் கைவிடேல் எனையே. 12

440 பஞ்சுநேர் உலகப் பாட்டிலே மெலிந்த பாவியேன் சாவியே போன
புஞ்செயே அனையேன் புழுத்தலைப் புலையேன் பொய்யெலாம் பூரித்த வஞ்ச
நெஞ்சினேன் பாப நெறியினேன் சினத்தில் நெடியனேன் கொடியனேன் காம
நஞ்சினேன் எனினும் அஞ்சினேன் உனையே நம்பினேன் கைவிடேல் எனையே. 13

441 கயந்துளே உவட்டும் காஞ்சிரங் காயில் கடியனேன் காமமே கலந்து
வியந்துளே மகிழும் வீணனேன் கொடிய வெகுளியேன் வெய்யனேன் வெறியேன்
மயர்ந்துளேன் உலக வாழ்க்கையை மனையை மக்களை ஒக்கலை மதித்தே
நயந்துளேன் எனினும் பயந்துளேன் உனையே நம்பினேன் கைவிடேல் எனையே. 14

442 ஓடினேன் பெரும்பே ராசையால் உலகில் ஊர்தொறும் உண்டியே உடையே
தேடினேன் காமச் சேற்றிலே விழுந்து தியங்கினேன் மயங்கினேன் திகைத்து
வாடினேன் சிறிய வாரியான் மகிழ்ந்தேன் வஞ்சமே பொருளென மதித்து
நாடினேன் எனினும் பாடினேன் உனையே நம்பினேன் கைவிடேல் எனையே. 15

443 காட்டிலே திரியும் விலங்கினிற் கடையேன் கைவழக் கத்தினால் ஒடிந்த
ஓட்டிலே எனினும் ஆசைவிட் டறியேன் உலுத்தனேன் ஒருசிறு துரும்பும்
ஏட்டிலே எழுதிக் கணக்கிட்ட கொடியேன் எச்சிலும் உமிழ்ந்திடேன் நரக
நாட்டிலே பெரியேன் என்னினும் உனையே நம்பினேன் கைவிடேல் எனையே. 16

444 துனித்தவெம் மடவார் பகல்வந்த போது துறவியின் கடுகடுத் திருந்தேன்
தனித்திர வதிலே வந்தபோ தோடித் தழுவினேன் தடமுலை விழைந்தேன்
இனித்தசொல் புகன்றேன் என்பினைக் கறித்தே இடர்ப்பட்ட நாயென இளைத்தேன்
நனித்தவ றுடையேன் என்னினும் உனையே நம்பினேன் கைவிடேல் எனையே. 17

---

* தீர்ந்த மெய்த் – வே.ப.மு. பதிப்பு

Koviloor Digital Library

445 தார்த்தட முலையார் நான்பல ரொடுஞ்சார் தலத்திலே வந்தபோ தவரைப்
பார்த்திலேன் வார்த்தை பகர்ந்திலேன் தவசுப் பாதகப் பூனைபோல் இருந்தேன்
பேர்த்துநான் தனித்த போதுபோய் வலிந்து பேசினேன் வஞ்சரிற் பெரியேன்
நார்த்திடர் உளத்தேன் என்னினும் உனையே நம்பினேன் கைவிடேல் எனையே.
18

446 பெண்மையே விழைந்தேன் அவர்மனம் அறியேன் பேய்எனப் பிடித்தனன் மடவார்க்
குண்மையே புகல்வான் போன்றவர் தமைத்தொட்டுவந்தகங் களித்தபொய் யுளத்தேன்
தண்மையே அறியேன் வெம்மையே உடையேன் சாத்திரம் புகன்றுவாய் தடித்தேன்
நண்மையே அடையேன் என்னினும் உனையே நம்பினேன் கைவிடேல் எனையே.
19

447 வன்மையில் பொருள்மேல் இச்சைஇல் லவன்போல் வாதிபோல் வார்த்தைகள் வழங்கி
அன்மையில் பிறர்பால் உளவினால் பொருளை அடிக்கடி வாங்கிய கொடியேன்
இன்மையுற் றவருக் குதவிலேன் பொருளை எனைவிடக் கொடியருக் கீந்தேன்
நன்மையுற் றறியேன் என்னினும் உனையே நம்பினேன் கைவிடேல் எனையே.
20

448 கட்டமே அறியேன் அடுத்தவர் இடத்தே காசிலே ஆசையில் லவன்போல்
பட்டமே காட்டிப் பணம்பறித் துழன்றேன் பகல்எலாம் தவசிபோல் இருந்தேன்
இட்டமே இரவில் உண்டயல் புணர்ந்தே இழுதையிற் றூங்கினேன் களித்து
நட்டமே புரிந்தேன் என்னினும் உனையே நம்பினேன் கைவிடேல் எனையே.
21

449 காணியே கருதும் கருத்தினைப் பிறர்க்குக் காட்டிடா தம்பெலாம் அடங்கும்
தூணியே எனச்சார்ந் திருந்தனன் சோற்றுச் சுகத்தினால் சோம்பினேன் உதவா
ஏணியே அனையேன் இரப்பவர்க் குமியும் ஈந்திலேன் ஈந்தவன் எனவே
நாணிலேன் உரைத்தேன் என்னினும் உனையே நம்பினேன் கைவிடேல் எனையே.
22

450 அடுத்தவர் மயங்கி மதித்திட நினைத்தேன் அடிக்கடி பொய்களே புனைந்தே
எடுத்தெடுத் துரைத்தேன் எனக்கெதிர் இலைஎன் றிகழ்ந்தனன் அகங்கரித் திருந்தேன்
கொடுத்தவர் தமையே மிகவுப சரித்தேன் கொடாதவர் தமைஇகழ்ந் துரைத்தேன்
நடுத்தய வறியேன் என்னினும் உனையே நம்பினேன் கைவிடேல் எனையே.
23

451 எளியவர் விளைத்த நிலமெலாங் கவரும் எண்ணமே பெரிதுளேன் புன்செய்க்
களியுணும் மனையில் சர்க்கரை கலந்து காய்ச்சுபால் கேட்டுண்ட கடையேன்
துளியவர்க் குதவேன் விருப்பிலான் போலச் சுவைபெறச் சுவைத்தநாக் குடையேன்
நளிர்எனச் சுழன்றேன் என்னினும் உனையே நம்பினேன் கைவிடேல் எனையே.
24

452 கொலைபல புரிந்தே புலைநுகர்ந் திருந்தேன் கோடுறு குரங்கினிற் குதித்தே
அலைதரு மனத்தேன் அறிவிலேன் எல்லாம் அறிந்தவன் போல்பிறர்க் குரைத்தேன்
மலைவுறு சமய வலைஅகப் பட்டே மயங்கிய மதியினேன் நல்லோர்
நலையல எனவே திரிந்தனன் எனினும் நம்பினேன் கைவிடேல் எனையே.
25

Koviloor Digital Library

453 ஈயெனப் பறந்தேன் எறும்பென உழன்றேன் எட்டியே எனமிகத் தழைத்தேன்
பேயெனச் சுழன்றேன் பித்தனே எனவாய்ப் பிதற்றொடும் ஊர்தொறும் பெயர்ந்தேன்
காயெனக் காய்த்தேன் கடையென நடந்தேன் கல்லெனக் கிடந்தனன் குரைக்கும்
நாயெனத் திரிந்தேன் என்னினும் உனையே நம்பினேன் கைவிடேல் எனையே.
26

454 ஒன்றியே உணவை உண்டுடல் பருத்த ஊத்தையேன் நாத்தழும் புறவே
வென்றியே உரைத்து வினைகளே விளைத்தவீணனேன் ஊர்தொறுஞ் சுழன்ற
பன்றியே அனையேன் கட்டுவார் அற்ற பகடெனத் திரிகின்ற படிறேன்
நன்றியே அறியேன் என்னினும் உனையே நம்பினேன் கைவிடேல் எனையே.
27

455 கவையெலாந் தவிர்ந்த வெறுமரம் அனையேன் கள்ளனேன் கள்ளுண்ட கடியேன்
சுவையெலாம் விரும்பிச் சுழன்றதோர் கடையேன் துட்டனேன் தீதெலாந் துணிந்தேன்
இவையெலாம் அந்நாள் உடையனோ அலனோ இந்தநாள் இறைவநின் அருளால்
நவையெலாம் தவிர்ந்தேன் தூயனாய் நினையே நம்பினேன் கைவிடேல் எனையே.
28

திருச்சிற்றம்பலம்

29. பிரிவாற்றாமை

அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

456 போகமாட்டேன் பிறரிடத்தே பொய்யிற் கிடந்து புலர்ந்துமனம்
வேகமாட்டேன் பிறிதொன்றும் விரும்ப மாட்டேன் பொய்யுலகன்
ஆகமாட்டேன் அரசேஎன் அப்பா என்றன் ஐயாநான்
சாகமாட்டேன் உனைப்பிரிந்தால் தரிக்க மாட்டேன் கண்டாயே. 1

457 செல்ல மாட்டேன் பிறரிடத்தே சிறிதுந் தரியேன் தீமொழிகள்
சொல்ல மாட்டேன் இனிக்கணமுந் துயர மாட்டேன் சோம்பன்மிடி
புல்ல மாட்டேன் பொய்யொழுக்கம் பொருந்த மாட்டேன் பிறஉயிரைக்
கொல்ல மாட்டேன் உனைஅல்லால் குறிக்க மாட்டேன் கனவிலுமே.* 2

458 வெறுக்க மாட்டேன் நின்றனையே விரும்பிப் பிடித்தேன் துயர்சிறிதும்
பொறுக்க மாட்டேன் உலகவர்போல் பொய்யிற் கிடந்து புரண்டினிநான்
சிறுக்க மாட்டேன் அரசேநின் திருத்தாள் ஆணை நின்ஆணை
மறுக்க மாட்டேன் வழங்குவன எல்லாம் வழங்கி வாழியவே. 3

459 கருணைப் பெருக்கே ஆனந்தக் கனியே என்னுட் கலந்தொளிரும்
தருணச் சுடரே எனை ஈன்ற தாயே என்னைத் தந்தோனே
வருணப் படிக மணிமலையே மன்றில் நடஞ்செய் வாழ்வேநற்
பொருண்மெய்ப் பதியே இனித்துயரம் பொறுக்க மாட்டேன் கண்டாயே.

---

* கண்டாயே – முதற்பதிப்பு, பொ.சு., ச.மு.க.,

Koviloor Digital Library

460 திண்ணம் பழுத்த சிந்தையிலே தித்தித் துலவாச் சுயஞ்ஜோதி
வண்ணம் பழுத்த தனிப்பழமே மன்றில் விளங்கு மணிச்சுடரே
தண்ணம் பழுத்த மதிஅமுதே தருவாய் இதுவே தருணம்என்றன்
எண்ணம் பழுத்த தினிச்சிறியேன் இறையுந் தரியேன் தரியேனே. 5

461 நாட்டுக் கிசைந்த மணிமன்றில் ஞான வடிவாய் நடஞ்செயருள்
ஆட்டுக் கிசைந்த பெருங்கருணை அப்பா என்றன் அரசேஎன்
பாட்டுக் கிசைந்த பதியேஓர் பரமா னந்தப் பழமேமேல்
வீட்டுக் கிசைந்த விளக்கேஎன் விவேகம் விளங்க விளக்குகவே. 6

462 வேதந் தலைமேற் கொளவிரும்பி வேண்டிப் பரவு நினதுமலர்ப்
பாதந் தலைமேற் சூட்டிஎனைப் பணிசெய் திடவும் பணித்தனைநான்
சாதந் தலைமேல் எடுத்தொருவர் தம்பின் செலவும் தரமில்லேன்
ஏதந் தலைமேற் சுமந்தேனுக் கிச்சீர் கிடைத்த* தெவ்வாறே. 7

463 பொய்விட் டகலாப் புலைக்கொடியேன் பொருட்டா இரவில் போந்தொருநின்
கைவிட் டகலாப் பெரும்பொருள்என் கையிற் கொடுத்தே களிப்பித்தாய்
மைவிட் டகலா விழிஇன்ப வல்லி மகிழும் மணவாளா
மெய்விட் டகலா மனத்தவர்க்கு வியப்பாம் உனது மெய்யருளே. 8

464 சாமத் திரவில் எழுந்தருளித் தமியேன் தூக்கந் தடுத்துமயல்
காமக் கடலைக் கடத்திஅருட் கருணை அமுதங் களித்தளித்தாய்
நாமத்தடிகொண் டடிபெயர்க்கும் நடையார் தமக்கும் கடையானேன்
ஏமத் தருட்பே றடைந்தேன்நான் என்ன தவஞ்செய் திருந்தேனே. 9

465 பாதி இரவில் எழுந்தருளிப் பாவி யேனை எழுப்பிஅருட்
ஜோதி அளித்தென் உள்ளகத்தே சூழ்ந்து கலந்து துலங்குகின்றாய்
நீதி நடஞ்செய் பேரின்ப நிதிநான் பெற்ற நெடும்பேற்றை
ஓதி முடியா தென்போல்இவ் வுலகம் பெறுதல் வேண்டுவனே. 10

திருச்சிற்றம்பலம்

---

* கொடுத்த – முதற்பதிப்பு, பொ.சு., பி.இரா., ச.மு.க.

Koviloor Digital Library

30. பிரியேன் என்றல்

எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

466 அப்பாநான் பற்பலகால் அறைவதென்னே அடியேன்
அச்சம்எலாம் துன்பம்எலாம் அறுத்துவிரைந் துவந்தே
இப்பாரில் இதுதருணம் என்னைஅடைந் தருளி
எண்ணம்எலாம் முடித்தென்னை ஏன்றுகொளாய் எனிலோ
தப்பாமல் உயிர்விடுவேன் சத்தியஞ்சத் தியம்நின்
தாளிணைகள் அறிகஇது தயவுடையோய் எவர்க்கும்
துப்பாகித் துணையாகித் துலங்கியமெய்த் துணையே
சுத்தசிவா னந்தஅருட் ஜோதிநடத் தரசே. 1

467 ஆணைஉன்மேல் ஆணைஉன்மேல் ஆணைஉன்மேல் ஐயா
அரைக்கணமும் நினைப்பிரிந்தே இனித்தரிக்க மாட்டேன்
கோணைநிலத் தவர்பேசக் கேட்டதுபோல் இன்னும்
குறும்புமொழி செவிகள்உறக் கொண்டிடவும் மாட்டேன்
ஊணைஉறக் கத்தையும்நான் விடுகின்றேன் நீதான்
உவந்துவராய் எனில்என்றன் உயிரையும்விட் டிடுவேன்
மாணைமணிப் பொதுநடஞ்செய் வள்ளால்நீ எனது
மனம்அறிவாய் இனம்உனக்கு வகுத்துரைப்ப தென்னே. 2

468 படமுடியா தினித்துயரம் படமுடியா தரசே
பட்டதெல்லாம் போதும்இந்தப் பயந்தீர்த்திப் பொழுதென்
உடல்உயிரா தியஎல்லாம் நீ எடுத்துக் கொண்டுன்
உடல்உயிரா தியஎல்லாம் உவந்தெனக்கே அளிப்பாய்
வடலுறுசிற் றம்பலத்தே வாழ்வாய்என் கண்ணுள்
மணியேஎன் குருமணியே மாணிக்க மணியே
நடனசிகா மணியேஎன் நவமணியே ஞான
நன்மணியே பொன்மணியே நடராஜ மணியே. 3

469 வாழையடி வாழைஎன வந்ததிருக் கூட்ட
மரபினில்யான் ஒருவன்அன்றோ வகைஅறியேன் இந்த
ஏழைபடும் பாடுனக்குந் திருவுளச்சம் மதமோ
இதுதகுமோ இதுமுறையோ இதுதருமந் தானோ
மாழைமணிப் பொது நடஞ்செய் வள்ளால்யான் உனக்கு
மகன்அலனோ நீஎனக்கு வாய்த்ததந்தை அலையோ
கோழைஉல குயிர்த்துயரம் இனிப்பொறுக்க மாட்டேன்
கொடுத்தருள்நின் அருள்ஒளியைக் கொடுத்தருள் இப் பொழுதே. 4

Koviloor Digital Library

470 செய்வகைஎன் எனத்திகைத்தேன் திகையேல்என் றொருநாள்
திருமேனி காட்டிஎனைத் தெளிவித்தாய் நீயே
பொய்வகைஅன் றிதுநினது புந்திஅறிந் ததுவே
பொன்னடியே துணைஎனநான் என்உயிர்வைத் திருந்தேன்
எய்வகைஎன் நம்பெருமான் அருள்புரிவான் என்றே
எந்தைவர வெதிர்பார்த்தே இன்னும்இருக் கின்றேன்
ஐவகை இவ் உயிர்த்துயரம் இனிப்பொறுக்க மாட்டேன்
அருட்ஜோதிப் பெரும்பொருளை அளித்தருள்இப் பொழுதே. 5

471 முன்ஒருநாள் மயங்கினன்நீ மயங்கேல்என் றெனக்கு
முன்னின்* உருக் காட்டினைநான் முகமலர்ந்திங் கிருந்தேன்
இன்னும்வரக் காணேன்நின் வரவைஎதிர் பார்த்தே
எண்ணிஎண்ணி வருந்துகின்றேன் என்னசெய்வேன் அந்தோ
அன்னையினும் தயவுடையாய் நின்தயவை நினைத்தே
ஆருயிர்வைத் த்ருக்கின்றேன் ஆணைஇது கண்டாய்
என்இருகண் மணியேஎன் அறிவேஎன் அன்பே
என்னுயிர்க்குப் பெருந்துணையே என்னுயிர்நா யகனே. 6

472 உன்னைமறந் திடுவேனோ மறப்பறியேன் மறந்தால்
உயிர்விடுவேன் கணந்தரியேன் உன்ஆணை இதுநீ
என்னைமறந் திடுவாயோ மறந்திடுவாய் எனில்யான்
என்னசெய்வேன் எங்குறுவேன் எவர்க்குரைப்பேன் எந்தாய்
அன்னையினும் தயவுடையாய் நீமறந்தாய் எனினும்
அகிலம்எலாம் அளித்திடும்நின் அருள்மறவா தென்றே
இன்னுமிகக் களித்திங்கே இருக்கின்றேன் மறவேல்
இதுதருணம் அருட்ஜோதி எனக்குவிரைந் தருளே. 7

473 நான் மறந்தேன் எனினும்எனைத் தான்மறவான் எனது
நாயகன்என் றாடுகின்றேன் எனினும்இது வரையும்
வான்மறந்தேன் வானவரை மறந்தேன்மால் அயனை
மறந்தேன்நம் உருத்திரரை மறந்தேன்என் னுடைய
ஊன்மறந்தேன் உயிர்மறந்தேன் உணர்ச்சிஎலாம் மறந்தேன்
உலகம்எலாம் மறந்தேன்இங் குன்னைமறந் தறியேன்
பான்மறந்த குழவியைப்போல் பாரேல்இங் கெனையே
பரிந்துநின தருட்ஜோதி புரிந்துமகிழ்ந் தருளே. 8

474 தெருவிடத்தே விளையாடித் திரிந்தஎனை வலிந்தே
சிவமாலை அணிந்தனைஅச் சிறுவயதில் இந்த
உருவிடத்தே நினக்கிருந்த ஆசைஎலாம் இந்நாள்
ஓடியதோ புதியஒரு உருவுவிழைந் ததுவோ

* முன்னும் – வே.ப. மு. பதிப்பு.

Koviloor Digital Library

கருவிடத்தே எனைக்காத்த காவலனே உனது
கால்பிடித்தேன் விடுவேனோ கைப்பிடிஅன் றதுதான்
வெருவிடத்தென் உயிர்ப்பிடிகாண் உயிர்அகன்றால் அன்றி
விடமாட்டேன் விடமாட்டேன் விடமாட்டேன் நானே. 9

475 பெரியன்அருட் பெருஞ்ஜோதிப் பெருங்கருணைப் பெருமான்
பெரும்புகழைப் பேசுதலே பெரும்பேறென் றுணர்ந்தே
துரியநிலத் தவர்எல்லாம் துதிக்கின்றார் ஏழை
துதித்தல்பெரி தலஇங்கே துதித்திடஎன் றெழுந்த
அரியபெரும் பேராசைக் கடல்பெரிதே அதுஎன்
அளவுகடந் திழுக்கின்ற தாதலினால் விரைந்தே
உரியஅருள் அமுதளித்தே நினைத்துதிப்பித் தருள்வாய்
உலகமெலாம் களித்தோங்க ஓங்குநடத் தரசே. 10

476 கவலைஎலாம் தவிர்ந்துமிகக் களிப்பினொடு நினையே
கைகுவித்துக் கண்களில்நீர் கனிந்துசுரந் திடவே
சவலைமனச் சலனம்எலாம் தீர்ந்துசுக மயமாய்த்
தானேதான் ஆகிஇன்பத் தனிநடஞ்செய் இணைத்தாள்
தவலருஞ்சீர்ச் சொன்மாலை வனைந்துவனைந் தணிந்து
தானாகி நானாடத் தருணம்இது தானே
குவலையத்தார் அதிசயிக்க எழுந்தருளி வருவாய்
குருவேஎன் குற்றமெலாம் குணமாக்கொண் டவனே. 11

திருச்சிற்றம்பலம்

31. திருவருட் பேறு

எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

477 படிகள்எலாம் ஏற்றுவித்தீர் பரமநடம் புரியும்
பதியைஅடை வித்தீர்அப் பதிநடுவே விளங்கும்
கொடிகள்நிறை மணிமாடக் கோயிலையும் காட்டிக்
கொடுத்தீர்அக் கோயிலிலே கோபுரவா யிலிலே
செடிகள்இலாத் திருக்கதவம் திறப்பித்துக் காட்டித்
திரும்பவும்நீர் மூடுவித்தீர் திறந்திடுதல் வேண்டும்
அடிகள்இது தருணம்இனி அரைக்கணமும் தரியேன்
அம்பலத்தே நடம்புரிவீர் அளித்தருள்வீர் விரைந்தே. 1

478 பெட்டிஇதில் உலவாத பெரும்பொருள்உண் டிதுநீ
பெறுகஎன அதுதிறக்கும் பெருந்திறவுக் கோலும்
எட்டிரண்டும் தெரியாதேன் என்கையிலே கொடுத்தீர்
இதுதருணம் திறந்ததனை எடுக்கமுயல் கின்றேன்

Koviloor Digital Library

அட்டிசெய நினையாதீர் அரைக்கணமும் தரியேன்
அரைக்கணத்துக் காயிரம்ஆ யிரங்கோடி ஆக
வட்டிஇட்டு நும்மிடத்தே வாங்குவன்நும் ஆணை
மணிமன்றில் நடம்புரிவீர் வந்தருள்வீர் விரைந்தே. 2

479 கைக்கிசைந்த பொருள்எனக்கு வாய்க்கிசைந்துண் பதற்கே
காலம்என்ன கணக்கென்ன கருதும்இடம் என்ன
மெய்க்கிசைந்தன் றுரைத்ததுநீர் சத்தியம் சத்தியமே
விடுவேனோ இன்றடியேன் விழற்கிறைத்தேன் அலவே
செய்க்கிசைந்த சிவபோகம் விளைத்துணவே இறைத்தேன்
தினந்தோறும் காத்திருந்தேன் திருவுளமே அறியும்
மைக்கிசைந்த விழிஅம்மை சிவகாம வல்லி
மகிழநடம் புரிகின்றீர் வந்தருள்வீர் விரைந்தே. 3

480 பரிகலத்தே திருஅமுதம் படைத்துணவே பணித்தீர்
பணித்தபின்னோ என்னுடைய பக்குவம்பார்க் கின்றீர்
இருநிலத்தே பசித்தவர்க்குப் பசிநீக்க வல்லார்
இவர்பெரியர் இவர்சிறியர் என்னல்வழக் கலவே
உரிமையுற்றேன் உமக்கேஎன் உள்ளம்அன்றே அறிந்தீர்
உடல்பொருள்ஆ விகளைஎலாம் உம்மதெனக் கொண்டீர்
திரிவகத்தே நான்வருந்தப் பார்த்திருத்தல் அழகோ
சிவகாம வல்லிமகிழ் திருநடநா யகரே. 4

481 பொய்கொடுத்த மனமாயைச் சேற்றில்விழா தெனக்கே
பொன்மணிமே டையில்ஏறிப் புந்திமகிழ்ந் திருக்கக்
கைகொடுத்தீர் உலகம்எலாம் களிக்கஉல வாத
கால்இரண்டும் கொடுத்தீர்எக் காலும்அழியாத
மெய்கொடுக்க வேண்டும்உமை விடமாட்டேன் கண்டீர்
மேல்ஏறி னேன்இனிக்கீழ் விழைந்திறங்கேன் என்றும்
மைகொடுத்த விழிஅம்மை சிவகாம வல்லி
மகிழநடம் புரிகின்றீர் வந்தருள்வீர் விரைந்தே. 5

482 மின்போலே வயங்குகின்ற விரிசடையீர் அடியேன்
விளங்கும்உம திணைஅடிகள் மெய்அழுந்தப் பிடித்தேன்
முன்போலே ஏமாந்து விடமாட்டேன் கண்டீர்
முனிவறியீர் இனிஒளிக்க முடியாது நுமக்கே
என்போலே இரக்கம்விட்டுப் பிடித்தவர்கள் இலையே
என்பிடிக்குள் இசைந்ததுபோல் இசைந்ததிலை பிறர்க்கே
பொன்போலே முயல்கின்ற மெய்த்தவர்க்கும் அரிதே
பொய்தவனேன் செய்தவம்வான் வையகத்திற் பெரிதே. 6

Koviloor Digital Library

483 எதுதருணம் அதுதெரியேன் என்னினும்எம் மானே
எல்லாஞ்செய் வல்லவனே என்தனிநா யகனே
இதுதருணம் தவறும்எனில் என்உயிர்போய் விடும்இவ்
வெளியேன்மேல் கருணைபுரிந் தெழுந்தருளல் வேண்டும்
மதுதருண வாரிசமும் மலர்ந்ததருள் உதயம்
வாய்த்ததுசிற் சபைவிளக்கம் வயங்குகின்ற துலகில்
விதுதருண அமுதளித்தென் எண்ணம்எலாம் முடிக்கும்
வேலைஇது காலைஎன விளம்பவும்வேண் டுவதோ. 7

484 கோள்அறிந்த பெருந்தவர்தம் குறிப்பறிந்தே உதவும்
கொடையாளா சிவகாமக் கொடிக்கிசைந்த கொழுநா
ஆள்அறிந்திங் கெனைஆண்ட அரசேஎன் அமுதே
அம்பலத்தே நடம்புரியும் அரும்பெருஞ்சோ தியனே
தாள்அறிந்தேன் நின்வரவு சத்தியம்சத் தியமே
சந்தேகம் இல்லைஅந்தத் தனித்திரு வரவின்
நாள்அறிந்து கொளல்வேண்டும் நவிலுகநீ எனது
நனவிடையா யினும்அன்றிக் கனவிடையா யினுமே. 8

485 அன்றெனக்கு நீஉரைத்த தருணம்இது எனவே
அறிந்திருக்கின் றேன்அடியேன் ஆயினும்என் மனந்தான்
கன்றெனச்சென் றடிக்கடிஉட் கலங்குகின்ற தரசே
கண்ணுடைய கரும்பேஎன் கவலைமனக் கலக்கம்
பொன்றிடப்பே ரின்பவெள்ளம் பொங்கிடஇவ் வுலகில்
புண்ணியர்கள் உளங்களிப்புப் பொருந்திவிளங் கிடநீ
இன்றெனக்கு வெளிப்படஎன் இதயமலர் மிசைநின்
றெழுந்தருளி அருள்வதெலாம் இனிதருள்க விரைந்தே. 9

486 இதுதருணம் நமையாளற் கெழுந்தருளுந் தருணம்
இனித்தடைஒன் றிலைகண்டாய் என்மனனே நீதான்
மதுவிழுமோர் ஈப்போலே மயங்காதே கயங்கி
வாடாதே மலங்காதே மலர்ந்துமகிழ்ந் திருப்பாய்
குதுகலமே இதுதொடங்கிக் குறைவிலைகாண் நமது
குருவாணை நமதுபெருங் குலதெய்வத் தாணை
பொதுவில்நடம் புரிகின்ற புண்ணியனார் எனக்குள்
புணர்ந்துரைத்த திருவார்த்தை பொன்வார்த்தை இதுவே. 10

திருச்சிற்றம்பலம்

Koviloor Digital Library

32. அருட்பெருஞ்ஜோதி என் ஆண்டவர்

எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

487 காரண காரியக் கல்விகள் எல்லாம்
கற்பித்தென் னுள்ளே கலந்துகொண் டென்னை
நாரணர் நான்முகர் போற்றமேல் ஏற்றி
நாதாந்த நாட்டுக்கோர் நாயகன் ஆக்கிப்
பூரண மாம்இன்பம் பொங்கித் ததும்பப்
புத்தமு தாம்அருட் போனகம் தந்தே
ஆரண வீதியில் ஆடச்செய் தீரே
அருட்பெருஞ் ஜோதிஎன் ஆண்டவர் நீரே. 1

488 தேகம்எப் போதும் சிதையாத வண்ணம்
செய்வித் தெலாம்வல்ல சித்தியும் தந்தே
போகம்எல் லாம்என்றன் போகம தாக்கிப்
போதாந்த நாட்டைப் புரக்கமேல் ஏற்றி
ஏகசி வானந்த வாழ்க்கையில் என்றும்
இன்புற்று வாழும் இயல்பளித் தென்னை
ஆகம வீதியில் ஆடச்செய் தீரே
அருட்பெருஞ் ஜோதிஎன் ஆண்டவர் நீரே. 2

489 தானந்தம் இல்லாத தன்மையைக் காட்டும்
சாகாத கல்வியைத் தந்தெனக் குள்ளே
தேனந்தத் தெள்ளமு தூற்றிப் பெருக்கித்
தித்தித்துச் சித்தம் சிவமய மாக்கி
வானந்தம் ஆதியும் கண்டுகொண் டழியா
வாழ்க்கையில் இன்புற்றுச் சுத்தவே தாந்த
ஆனந்த வீதியில் ஆடச்செய் தீரே
அருட்பெருஞ் ஜோதிஎன் ஆண்டவர் நீரே. 3

490 சிற்சபை இன்பத் திருநடங் காட்டித்
தெள்ளமு தூட்டிஎன் சிந்தையைத் தேற்றிப்
பொற்சபை தன்னில் பொருத்திஎல் லாம்செய்
பூரண சித்திமெய்ப் போகமும் தந்தே
தற்பர மாம்ஓர் சதானந்த நாட்டில்
சத்தியன் ஆக்கிஓர் சுத்த சித் தாந்த
அற்புத வீதியில் ஆடச்செய் தீரே
அருட்பெருஞ் ஜோதிஎன் ஆண்டவர் நீரே. 4

Koviloor Digital Library

491 தத்துவம் எல்லாம்என் தன்வசம் ஆக்கிச்
சாகாவ ரத்தையும் தந்தெனைத் தேற்றி
ஒத்துவந் துள்ளே கலந்துகொண் டெல்லா
உலகமும் போற்ற உயர்நிலை ஏற்றிச்
சித்திஎ லாம்செயச் செய்வித்துச் சத்தும்
சித்தும் வெளிப்படச் சுத்த நாதாந்த
அத்திரு வீதியில் ஆடச்செய் தீரே
அருட்பெருஞ் ஜோதிஎன் ஆண்டவர் நீரே. 5

492 இத்தனை என்றுநின் றெண்ணிடல் ஒண்ணா
என்பிழை யாவையும் அன்பினில் கொண்டே
சத்திய மாம்சிவ சித்தியை என்பால்
தந்தெனை யாவரும் வந்தனை செயவே
நித்தியன் ஆக்கிமெய்ச் சுத்தசன் மார்க்க
நீதியை ஓதிஓர் சுத்தபோ தாந்த
அத்தனி வீதியில் ஆடச்செய் தீரே
அருட்பெருஞ் ஜோதிஎன் ஆண்டவர் நீரே. 6

493 மருந்திது மணிஇது மந்திரம் இதுசெய்
வகைஇது துறைஇது வழிஇது எனவே
இருந்தெனுள் அறிவித்துத் தெள்ளமு தளித்தே
என்னையும் தன்னையும் ஏகம தாக்கிப்
பொருந்திஎ லாஞ்செய வல்லஓர் சித்திப்
புண்ணிய வாழ்க்கையில் நண்ணியோ காந்த
அருந்தவ வீதியில் ஆடச்செய் தீரே
அருட்பெருஞ் ஜோதிஎன் ஆண்டவர் நீரே. 7

494 பதிசார வைத்துமுற் பசுநிலை காட்டிப்
பாசவி மோசனப் பக்குவன் ஆக்கி
நிதிசார நான்இந்த நீள்உல கத்தே
நினைத்தன நினைத்தன நேருறப் புரிந்து
திதிசேர மன்னுயிர்க் கின்பஞ்செய் கின்ற
சித்திஎ லாந்தந்து சுத்தக லாந்த
அதிகார வீதியில் ஆடச்செய் தீரே
அருட்பெருஞ் ஜோதிஎன் ஆண்டவர் நீரே. 8

495 இருளான மலம்அறுத் திகபரங் கண்டே
எல்லா உயிர்களும் இன்புற்று வாழ
மருளான பற்பல மார்க்கங்கள் எல்லாம்
வழிதுறை தெரியாமல் மண்மூடிப் போகத்

Koviloor Digital Library

தெருளான சுத்தசன் மார்க்கம தொன்றே
சிறந்து விளங்கஓர் சிற்சபை காட்டும்
அருளானவீதியில் ஆடச்செய் தீரே
அருட்பெருஞ் ஜோதிஎன் ஆண்டவர் நீரே. 9

496 இருட்சாதி தத்துவச் சாத்திரக் குப்பை
இருவாய்ப்புப் புன்செயில் எருவாக்கிப் போட்டு
மருட்சாதி சமயங்கள் மதங்களாச் சிரம
வழக்கெலாம் குழிக்கொட்டி மண்மூடிப் போட்டுத்
தெருட்சாறும் சுத்தசன் மார்க்கநன் னீதி
சிறந்து விளங்கஓர் சிற்சபை காட்டும்
அருட்ஜோதி வீதியில் ஆடச்செய் தீரே
அருட்பெருஞ் ஜோதிஎன் ஆண்டவர் நீரே. 10

திருச்சிற்றம்பலம்

33. திருமுன் விண்ணப்பம்

அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம

497 மாழை மாமணிப் பொதுநடம் புரிகின்ற வள்ளலே அளிகின்ற
வாழை வான்பழச் சுவைஎனப் பத்தர்தம் மனத்துளே தித்திப்போய்
ஏழை நாயினேன் விண்ணப்பம் திருச்செவிக் கேற்றருள் செயல்வேண்டும்
கோழை மானிடப் பிறப்பிதில் உன்னருட் குருஉருக் கொளுமாறே. 1

498 பொன்னின் மாமணிப் பொதுநடம் புரிகின்ற புண்ணியா கனிந்தோங்கி
மன்னு வாழையின் பழச்சுவை எனப்பத்தர் மனத்துளே தித்திப்போய்
சின்ன நாயினேன் விண்ணப்பம் திருச்செவி சேர்த்தருள் செயல்வேண்டும்
இன்ன என்னுடைத் தேகம்நல் லொளிபெறும் இயலுருக் கொளுமாறே. 2

499 விஞ்சு பொன்னணி அம்பலத் தருள்நடம் விளைத்துயிர்க் குயிராகி
எஞ்சு றாதபே ரின்பருள் கின்றஎன் இறைவநின் அருள்இன்றி
அஞ்சும் நாயினேன் விண்ணப்பம் திருச்செவி அமைத்தருள் செயல்வேண்டும்
துஞ்சும் இவ்வுடல் இம்மையே துஞ்சிடாச் சுகஉடல் கொளுமாறே. 3

500 ஓங்கு பொன்னணி அம்பலத் தருள்நடம் உயிர்க்கெலாம் ஒளிவண்ணப்
பாங்கு மேவநின் றாடல்செய் இறைவநின் பதமலர் பணிந்தேத்தாத்
தீங்கு நாயினேன் விண்ணப்பம் திருச்செவி சேர்த்தருள் செயல்வேண்டும்
ஈங்கு வீழுடல் இம்மையே வீழ்ந்திடா இயலுடல் உறுமாறே. 4

Koviloor Digital Library

501 இலங்கு பொன்னணிப் பொதுநடம் புரிகின்ற இறைவஇவ் வுலகெல்லாம்
துலங்கும் வண்ணநின் றருளுநின் திருவடித் துணைதுணை என்னாமல்
கலங்கு நாயினேன் விண்ணப்பம் திருச்செவி கலந்தருள் செயல்வேண்டும்
அலங்கும் இவ்வுடல் இம்மையே அழிவுறா அருள்உடல் உறுமாறே. 5

502 சிறந்த பொன்னணித் திருச்சிற்றம் பலத்திலே திருநடம் புரிகின்ற
அறந்த வாதசே வடிமலர் முடிமிசை அணிந்தக மகிழ்ந்தேத்த
மறந்த நாயினேன் விண்ணப்பம் திருச்செவி மடுத்தருள் செயல்வேண்டும்
பிறந்த இவ்வுடல் இம்மையே அழிவுறாப் பெருநலம் பெறுமாறே. 6

503 விளங்கு பொன்னணிப் பொதுநடம் புரிகின்ற விரைமலர்த் திருத்தாளை*
உளங்கொள் அன்பர்தம் உளங்கொளும் இறைவநின் ஒப்பிலாப் பெருந்தன்மை
களங்கொள் நாயினேன் விண்ணப்பம் திருச்செவி கலந்தருள் செயல்வேண்டும்
துளங்கும் இவ்வுடல் இம்மையே அழிவுறாத் தொல்லுடல் உறுமாறே. 7

504 வாய்ந்த பொன்னணிப் பொதுநடம் புரிகின்ற வள்ளலே மறைஎல்லாம்
ஆய்ந்தும் இன்னஎன் றறிந்திலா நின்திரு அடிமலர் பணியாமல்
சாய்ந்த நாயினேன் விண்ணப்பம் திருச்செவி தரித்தருள் செயல்வேண்டும்
ஏய்ந்த இவ்வுடல் இம்மையே திருவருள் இயல்உடல் உறுமாறே. 8

505 மாற்றி லாதபொன் னம்பலத் தருள்நடம் வயங்கநின் றொளிர்கின்ற
பேற்றில் ஆருயிர்க் கின்பருள் இறைவநின் பெய்கழற் கணிமாலை
சாற்றி டாதஎன் விண்ணப்பம் திருச்செவி தரித்தருள் செயல்வேண்டும்
காற்றில் ஆகிய இவ்வுடல் இம்மையே கதியுடல் உறுமாறே. 9

506 தீட்டு பொன்னணி அம்பலத் தருள்நடம் செய்துயிர்த் திரட்கின்பம்
காட்டு கின்றதோர் கருணையங் கடவுள்நின் கழலிணை கருதாதே
நீட்டு கின்றஎன் விண்ணப்பம் திருச்செவி நேர்ந்தருள் செயல்வேண்டும்
வாட்டும்** இவ்வுடல் இம்மையே அழிவுறா வளமடைந் திடுமாறே. 10

திருச்சிற்றம்பலம்

---

* விளங்கு பொன்னணித் திருச்சிற் றம்பலத்திலே விரைமலர்த் திருத்தாளை – முதற் பதிப்பு. பொ.சு., ச.மு.க.,

** ஆட்டும் ¬ படிவேறுபாடு, ஆ.பா.

Koviloor Digital Library

34. இறை எளிமையை வியத்தல்

வாதனைக் கிரங்கல்

எண்சீர் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

507 படமாட்டேன் துயர்சிறிதும் படமாட்டேன் இனிநான்
பயப்படவும் மாட்டேன்நும் பதத்துணையே பிடித்தேன்
விடமாட்டேன் ஏமாந்து விடமாட்டேன் கண்டீர்
மெய்ம்மைஇது நும்மாணை விளம்பினன்நும் அடியேன்
கெடமாட்டேன் பிறர்மொழிகள் கேட்டிடவும் மாட்டேன்
கிளர்ஒளிஅம் பலத்தாடல் வளர்ஒளிநும் அல்லால்
நடமாட்டேன் என்உளத்தே நான்சாக மாட்டேன்
நல்லதிரு வருளாலே நான்தான்ஆ னேனே. 1

508 சாகாத கல்வியிலே தலைகாட்டிக் கொடுத்தீர்
தடையறியாக் கால்காட்டித் தரம்பெறவும் அளித்தீர்
மாகாதல் உடையவனா மனங்கனிவித் தழியா
வான்அமுதும் மெய்ஞ்ஞான மருந்தும்உணப் புரிந்தீர்
போகாத புனலாலே சுத்தஉடம் பினராம்
புண்ணியரும் நண்ணரிய பொதுநிலையுந் தந்தீர்
நாகாதி பதிகளும்நின் றேத்தவளர்க் கின்றீர்
நடராஜ ரேநுமக்கு நான்எதுசெய் வேனே. 2

509 வேதாந்த நிலையும்அதன் அந்தத்தே விளங்கும்
மெய்ந்நிலையும் காட்டுவித்தீர் விளங்கியசித் தாந்தப்
போதாந்த நிலையும்அப்பால் புகல்அரிதாம் பெரிய
பொருள்நிலையும் தெரிவித்தீர் புண்ணியரே நுமது
பாதாந்தம் அறிவித்தீர் சுத்தவடி வுடனே
பகர்பிரண வாகாரப் பரிசும்எனக் களித்தீர்
நாதாந்தத் தனிச்செங்கோல் நான்செலுத்தக் கொடுத்தீர்
நடராஜ ரேநுமக்கு நான்எதுசெய் வேனே. 3

510 ஆர்நீஎன் றெதிர்வினவில் விடைகொடுக்கத் தெரியா
அறிவிலியேன் பொருட்டாக அன்றுவந்தென் தனக்கே
ஏர்நீடும் பெரும்பொருள்ஒன் றீந்துமகிழ்ந் தாண்டீர்
இன்றும்வலிந் தெளியேன்பால் எய்திஒளி ஓங்கப்
பார்நீடத் திருவருளாம் பெருஞ்ஜோதி அளித்தீர்
பகரும்எலாம் வல்லசித்திப் பண்புறவும் செய்தீர்
நார்நீட நான்தானாய் நடம்புரிகின் றீரே
நடராஜ ரேநுமக்கு நான்எதுசெய் வேனே. 4

Koviloor Digital Library

511 பாயிரமா மறைகளெலாம் பாடுகின்ற பாட்டுன்
பாட்டேஎன் றறிந்துகொண்டேன் பரம்பொருள்உன் பெருமை
ஆயிரம்ஆ யிரங்கோடி நாஉடையோர் எனினும்
அணுத்துணையும் புகல்அரிதேல் அந்தோஇச் சிறியேன்
வாய்இரங்கா வகைபுகலத் துணிந்தேன்என் னுடைய
மனத்தாசை ஒருகடலோ எழுகடலில் பெரிதே
சேய்இரங்கா முனம்எடுத்தே அணைத்திடுந்தாய் அனையாய்
திருச்சிற்றம் பலம்விளங்கும் சிவஞான குருவே. 5

512 ஊன்உரைக்கும் உயிரளவும் உலகளவும் அறியேன்
உன்னளவை அறிவேனோ என்னளவை அறிந்தோய்
வான்உரைக்க மாட்டாதே வருந்தினவே மறையும்
வகுத்துரைக்க அறியாதே மயங்கினவே அந்தோ
கோன்உரைக்கும் குறிகுணங்கள் கடந்தபெரு வெளிமேல்
கூடாதே கூடிநின்ற கோவேநின் இயலை
நான்உரைக்க நான்ஆரோ நான்ஆரோ நவில்வேன்*
நான்எனவே நாணுகின்றேன் நடராஜகுருவே. 6

513 கண்ணுடையீர் பெருங்கருணைக் கடலுடையீர் எனது
கணக்கறிந்தீர் வழக்கறிந்தீர் களித்துவந்தன் றுரைத்தீர்
எண்ணுடையார் எழுத்துடையார் எல்லாரும் போற்ற
என்னிதய மலர்மிசைநின் றெழுந்தருளி வாமப்
பெண்ணுடைய மனங்களிக்கப் பேருலகம் களிக்கப்
பெத்தருமுத் தருமகிழப் பத்தரெலாம் பரவ
விண்ணுடைய அருட்ஜோதி விளையாடல் புரிய
வேண்டுமென்றேன் என்பதன்முன் விரைந்திசைந்தீர் அதற்கே. 7

514 பொதுநடஞ்செய் மலரடிஎன் தலைமேலே அமைத்தீர்
புத்தமுதம் அளித்தீர்என் புன்மைஎலாம் பொறுத்தீர்
சதுமறைஆ கமங்கள்எலாம் சாற்றரிய பெரிய
தனித்தலைமைத் தந்தையரே சாகாத வரமும்
எதுநினைத்தேன் நினைத்தாங்கே அதுபுரியும் திறமும்
இன்பஅனு பவநிலையும் எனக்கருளு வதற்கே
இதுதருணம் என்றேன்நான் என்பதன்முன் கொடுத்தீர்
என்புகல்வேன் என்புடைநும் அன்பிருந்த வாறே. 8

515 கரும்பின்மிக இனிக்கின்ற கருணைஅமு தளித்தீர்
கண்ணனையீர் கனகசபை கருதியசிற் சபைமுன்
துரும்பின்மிகச் சிறியேன்நான் அன்றுநின்று துயர்ந்தேன்
துயரேல்என் றெல்லையிட்டீர் துரையேஅவ் வெல்லை

---

* நவிலேன் – வே.ப.மு. பதிப்பு

Koviloor Digital Library

விரும்புறஆ யிற்றிதுதான் தருணம் இந்தத் தருணம்
விரைந்தருள வேண்டுமென விளம்பிநின்றேன் அடியேன்
பெரும்பிழைகள் அனைத்தினையும் பொறுத்தருளி இந்நாள்
பெரிதளித்தீர் அருட்பெருமை பெற்றவளில் பெரிதே. 9

516 அந்நாளில் அடிச்சிறியேன் அம்பலவா யிலிலே
அருளைநினைந் தொருபுறத்தே அயர்ந்தழுது நின்றேன்
முந்நாளில் யான்புரிந்த பெருந்தவத்தால் எனக்கு
முகமலர்ந்து மொழிந்தஅருண் மொழியைநினைந் தந்தச்
செந்நாளே எதிர்பார்த்தே பன்னாளும் களித்தேன்
சிந்தைமலர்ந் திருந்தேன்அச் செல்வமிகு திருநாள்
இந்நாளே ஆதலினால் எனக்கருள்வீர் என்றேன்
என்பதன்முன் அளித்தீர்நும் அன்புலகில் பெரிதே. 10

திருச்சிற்றம்பலம்

35. அபயம் வேண்டுதல்

முறையீடு

எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

517 உருவாய் அருவாய் ஒளியாய் வெளியாய் உலவா ஒருபே ரருளா ரமுதம்
தருவாய் இதுவே தருணம் தருணம் தரியேன் சிறிதுந் தரியேன் இனிநீ
வருவாய் அலையேல் உயிர்வாழ் கலன்நான் மதிசேர் முடிஎன் பதியே அடியேன்
குருவாய் முனமே மனமே இடமாக்குடிகொண் டவனே அபயம் அபயம்.
1

518 என்னே செய்வேன் செய்வகை ஒன்றிங் கிதுஎன் றருள்வாய் இதுவே தருணம்
மன்னே அயனும் திருமா லவனும் மதித்தற் கரிய பெரிய பொருளே
அன்னே அப்பா ஐயா அரசே அன்பே அறிவே அமுதே அழியாப்
பொன்னே மணியே பொருளே அருளே பொதுவாழ் புனிதா அபயம் அபயம்.
2

519 கருணா நிதியே அபயம் அபயம் கனகா கரனே அபயம் அபயம்
அருணா டகனே அபயம் அபயம் அழகா அமலா அபயம் அபயம்
தருணா தவனே அபயம் அபயம் தனிநா யகனே அபயம் அபயம்
தெருணா டுறுவாய் அபயம் அபயம் திருவம் பலவா அபயம் அபயம். 3

520 மருளும் துயரும் தவிரும் படிஎன் மனமன் றிடைநீ வருவாய் அபயம்
இருளும் பவமும் பெறுவஞ் சகநெஞ் சினன்என் றிகழேல் அபயம் அபயம்
வெருளும் கொடுவெம் புலையும் கொலையும் விடுமா றருள்வாய் அபயம் அபயம்
அருளும் பொருளும் தெருளும் தருவாய் அபயம் அபயம் அபயம் அபயம்.
4

Koviloor Digital Library

521 இனிஓர் இறையும் தரியேன் அபயம் இதுநின் அருளே அறியும் அபயம்
கனியேன் எனநீ நினையேல் அபயம் கனியே கருணைக் கடலே அபயம்
தனியேன் துணைவே றறியேன் அபயம் தகுமோ தகுமோ தலைவா அபயம்
துனியே அறவந் தருள்வாய் அபயம் சுகநா டகனே அபயம் அபயம். 5

522 அடியார் இதயாம் புயனே அபயம் அரசே அமுதே அபயம் அபயம்
முடியா தினிநான் தரியேன் அபயம் முறையோ முறையோ முதல்வா அபயம்
கடியேன் அலன்நான் அபயம் அபயம் கருணா கரனே அபயம் அபயம்
தடியேல் அருள்வாய் அபயம் அபயம் தருணா தவனே அபயம் அபயம். 6

523 மலவா தனைதீர் கலவா அபயம் வலவா திருஅம் பலவா அபயம்
உலவா நெறிநீ சொலவா அபயம் உறைவாய் உயிர்வாய் இறைவா அபயம்
பலஆ குலம்நான் தரியேன் அபயம் பலவா பகவா பனவா அபயம்
நலவா அடியேன் அலவா அபயம் நடநா யகனே அபயம் அபயம். 7

524 கொடியேன் பிழைநீ குறியேல் அபயம் கொலைதீர் நெறிஎன் குருவே அபயம்
முடியேன் பிறவேன் எனநின் அடியே முயல்வேன் செயல்வே றறியேன் அபயம்
படியே அறியும் படியே வருவாய் பதியே கதியே பரமே அபயம்
அடியேன் இனிஓர் இறையும் தரியேன் அரசே அருள்வாய் அபயம் அபயம். 8

525 இடர்தீர் நெறியே அருள்வாய் அபயம் இனிநான் தரியேன் தரியேன் அபயம்
விடர்போல் எனைநீ நினையேல் அபயம் விடுவேன் அலன்நான் அபயம் அபயம்
உடலோ டுறுமா பொருள்ஆ வியும்இங் குனவே எனவே அலவே அபயம்
சுடர்மா மணியே அபயம் அபயம் சுகநா டகனே அபயம் அபயம். 9

526 குற்றம் பலஆ யினும்நீ குறியேல் குணமே கொளும்என் குருவே அபயம்
பற்றம் பலமே அலதோர் நெறியும் பதியே அறியேன் அடியேன் அபயம்
சுற்றம் பலவும் உனவே எனவோ துணைவே றிலைநின் துணையே அபயம்
சிற்றம் பலவா அருள்வாய் இனிநான் சிறிதுந் தரியேன் தரியேன் அபயம். 10

திருச்சிற்றம்பலம்

KOVILOOR ANDAVAR LIBRARY, KOVILOOR
A. No. 12469

Koviloor Digital Library

36. உண்மை கூறல்

எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

527 தனிப்பெருந் தலைவரே தாயவ ரேஎன்
தந்தைய ரேபெருந் தயவுடை யவரே
பனிப்பறுத் தெனையாண்ட பரம்பர ரேஎம்
பார்வதி புரஞானப் பதிசிதம் பரரே
இனிச்சிறு பொழுதேனுந் தாழ்த்திடல்* வேண்டா
இறையவ ரேஉமை இங்குகண் டல்லால்
அனிச்சய** உலகினைப் பார்க்கவும் மாட்டேன்
அருட்பெருஞ் ஜோதியீர் ஆணைநும் மீதே. 1

528 பெறுவது நுமைஅன்றிப் பிறிதொன்றும் விரும்பேன்
பேசல்நும் பேச்சன்றிப் பிறிதொன்றும் பேசேன்
உறுவதுநும் அருள்அன்றிப் பிறிதொன்றும் உவவேன்
உன்னல்உம் திறன்அன்றிப் பிறிதொன்றும் உன்னேன்
மறுநெறி தீர்த்தெனை வாழ்வித்துக் கொண்டீர்
வள்ளலே நும்திரு வரவுகண் டல்லால்
அறுசுவை உண்டிகொண் டருந்தவும் மாட்டேன்
அருட்பெருஞ் ஜோதியீர் ஆணைநும் மீதே. 2

529 கரும்பிடை இரதமும் கனியில்இன் சுவையும்
காட்டிஎன் உள்ளம் கலந்தினிக் கின்றீர்
விரும்பிநும் பொன்னடிக் காட்பட்டு நின்றேன்
மேல்விளை வறிகிலன் விச்சைஒன் றில்லேன்
துரும்பினும் சிறியனை அன்றுவந் தாண்டீர்
தூயநும் பேரருட் சோதிகண் டல்லால்
அரும்பெறல் உண்டியை விரும்பவும் மாட்டேன்
அருட்பெருஞ் ஜோதியீர் ஆணைநும் மீதே. 3

530 தடுத்தெனை ஆட்கொண்ட தந்தைய ரேஎன்
தனிப்பெருந் தலைவரே சபைநடத் தவரே
தொடுத்தொன்று சொல்கிலேன் சொப்பனத் தேனும்
தூயநும் திருவருள் நேயம்விட் டறியேன்
விடுத்திடில் என்னைநீர் விடுப்பன்என் உயிரை
வெருவுளக் கருத்தெல்லாம் திருவுளத் தறிவீர்
அடுத்தினிப் பாயலில் படுக்கவும் மாட்டேன்
அருட்பெருஞ் ஜோதியீர் ஆணைநும் மீதே. 4

---

* தாழ்ந்திடல் – வே.ப.மு. பதிப்பு ** அநித்திய – வே.ப.மு. பதிப்பு

Koviloor Digital Library

531 காசையும் பணத்தையும் கன்னியர் தமையும்
காணியின் ஆட்சியும் கருதிலேன் கண்டீர்
நேசநும் திருவருள் நேசம்ஒன் றல்லால்
நேசம்மற் றிலைஇது நீர்அறி யீரோ
ஏசறல் அகற்றிவந் தென்னைமுன் ஆண்டீர்
இறையவ ரேஉமை இன்றுகண் டல்லால்
ஆசையிற் பிறரொடு பேசவும் மாட்டேன்
அருட்பெருஞ் ஜோதியீர் ஆணைநும் மீதே. 5

532 என்பொருள் என்உடல் என்உயிர் எல்லாம்
ஈந்தனன் உம்மிடத் தெம்பெரு மானீர்
இன்பொடு வாங்கிக்கொண் டென்னையாட் கொண்டீர்
என்செயல் ஒன்றிலை யாவும்நும் செயலே
வன்பொடு நிற்கிலீர் என்பொடு கலந்தீர்
வள்ளலே நும்திரு வரவுகண் டல்லால்
அன்பொடு காண்பாரை முன்பிட மாட்டேன்
அருட்பெருஞ் ஜோதியீர் ஆணைநும் மீதே. 6

533 திருந்தும்என் உள்ளத் திருக்கோயில் ஞான
சித்தி புரம்எனச் சத்தியம் கண்டேன்
இருந்தருள் கின்றநீர் என்னிரு கண்கள்
இன்புற அன்றுவந் தெழில்உருக் காட்டி
வருந்தலை என்றெனைத் தேற்றிய வாறே
வள்ளலே இன்றும்நும் வரவுகண் டல்லால்
அருந்தவர் நேரினும் பொருந்தவும் மாட்டேன்
அருட்பெருஞ் ஜோதியீர் ஆணைநும் மீதே. 7

534 கரைக்கணம் இன்றியே கடல்நிலை செய்தீர்
கருணைக் கடற்குக் கரைக்கணஞ் செய்யீர்
உரைக்கண வாத உயர்வுடை யீர்என்
உரைக்கண விப்பல உதவிசெய் கின்றீர்
வரைக்கண எண்குண மாநிதி ஆனீர்
வாய்மையில் குறித்தநும் வரவுகண் டல்லால்
அரைக்கணம் ஆயினும் தரித்திட மாட்டேன்
அருட்பெருஞ் ஜோதியீர் ஆணைநும் மீதே. 8

535 மடுக்கநும் பேரருள் தண்அமு தெனக்கே
மாலையும் காலையும் மத்தியா னத்தும்
கடுக்கும் இரவினும் யாமத்தும் விடியற்
காலையி னுந்தந்தென் கடும்பசி தீர்த்து

Koviloor Digital Library

எடுக்குநற் றாயொடும் இணைந்துநிற் கின்றீர்
இறையவ ரேஉம்மை இங்குகண் டல்லால்
அடுக்கவீழ் கலைஎடுத் துடுக்கவும் மாட்டேன்
அருட்பெருஞ் ஜோதியீர் ஆணைநும் மீதே. 9

536 கறுத்துரைக் கின்றவர் களித்துரைக் கின்ற
காலைஈ தென்றே கருத்துள் அறிந்தேன்
நிறுத்துரைக் கின்றபல் நேர்மைகள் இன்றி
நீடொளிப் பொற்பொது நாடகம் புரிவீர்
செறுத்துரைக் கின்றவர் தேர்வதற் கரியீர்
சிற்சபை யீர்எனைச் சேர்ந்திடல் வேண்டும்
அறுத்துரைக் கின்றேன்நான் பொறுத்திட மாட்டேன்
அருட்பெருஞ் ஜோதியீர் ஆணைநும் மீதே. 10

திருச்சிற்றம்பலம்

37. அருள்விளக்க மாலை

எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

537 அருள்விளக்கே அருட்சுடரே அருட்ஜோதிச் சிவமே
அருளமுதே அருள்நிறைவே அருள்வடிவப் பொருளே
இருள்கடிந்தென் உளமுழுதும் இடங்கொண்ட பதியே
என்அறிவே என்உயிரே எனக்கினிய உறவே
மருள்கடிந்த மாமணியே மாற்றறியாப் பொன்னே
மன்றில்நடம் புரிகின்ற மணவாளா எனக்கே
தெருள்அளித்த திருவாளா ஞானஉரு வாளா
தெய்வநடத் தரசேநான் செய்மொழிஏற் றருளே. 1

538 கோடையிலே இளைப்பாற்றிக் கொள்ளும்வகை கிடைத்த
குளிர்தருவே தருநிழலே நிழல்கனிந்த கனியே
ஓடையிலே ஊறுகின்ற தீஞ்சுவைத்தண் ணீரே
உகந்ததண்ணீ ரிடைமலர்ந்த சுகந்தமண மலரே
மேடையிலே வீசுகின்ற மெல்லியபூங் காற்றே
மென்காற்றில் விளைசுகமே சுகத்தில்உறும் பயனே
ஆடையிலே யெனைமணந்த மணவாளா பொதுவில்
ஆடுகின்ற அரசேஎன் அலங்கல்அணிந் தருளே. 2

Koviloor Digital Library

539 இன்புறநான் எய்ப்பிடத்தே பெற்றபெரு வைப்பே
ஏங்கியபோ தென்றன்னைத் தாங்கிய நல்துணையே
அன்புறஎன் னுட்கலந்தே யண்ணிக்கு மமுதே
அச்சமெலாம் தவிர்த்தென்னை யாட்கொண்ட குருவே
என்பருவம் குறியாதே எனைமணந்த பதியே
இச்சையுற்ற படிஎல்லாம் எனக்கருளும் துரையே
துன்பறமெய் அன்பருக்கே பொதுநடஞ்செய் அரசே
தூயதிரு வடிகளுக்கென் சொல்லும்அணிந் தருளே. 3

540 ஒசித்தகொடி அனையேற்குக் கிடைத்தபெரும் பற்றே
உள்மயங்கும் போதுமயக் கொழித்தருளும் தெளிவே
பசித்தபொழு தெதிர்கிடைத்த பால்சோற்றுத் திரளே
பயந்தபொழு தெல்லாம்என் பயந்தவிர்த்த துரையே
நசித்தவரை எழுப்பிஅருள் நல்கியமா மருந்தே
நான்புணர நானாகி நண்ணியமெய்ச் சிவமே
கசித்தமனத் தன்பர்தொழப் பொதுநடஞ்செய் அரசே
களித்தெனது சொன்மாலை கழலில் அணிந்தருளே. 4

541 மனம்இளைத்து வாடியபோ தென்எதிரே கிடைத்து
வாட்டமெலாம் தவிர்த்தெனக்கு வாழ்வளித்த நிதியே
சினமுகத்தார் தமைக்கண்டு திகைத்தபொழு தவரைச்
சிரித்தமுகத் தவராக்கி எனக்களித்த சிவமே
அனம்உகைத்தான் அரிமுதலோர் துருவிநிற்க எனக்கே
அடிமுடிகள் காட்டுவித்தே அடிமைகொண்ட பதியே
இனம்எனப்பே ரன்பர்தொழப் பொதுநடஞ்செய் அரசே
என்னுடைய சொன்மாலை யாவும்அணிந் தருளே. 5

542 கங்குலிலே வருந்தியஎன் வருத்தமெலாம் தவிர்த்தே
காலையிலே என்உளத்தே கிடைத்தபெருங் களிப்பே
செங்குவளை மாலையொடு மல்லிகைப்பூ மாலை
சேர்த்தணிந்தென் தனைமணந்த தெய்வமண வாளா
எங்கும்ஒளி மயமாகி நின்றநிலை காட்டி
என்அகத்தும் புறத்தும்நிறைந் திலங்கியமெய்ப் பொருளே
துங்கமுறத் திருப்பொதுவில் திருநடஞ்செய் அரசே
சொன்மாலை சூட்டுகின்றேன் தோளில்அணிந் தருளே. 6

543 கரைந்துவிடா தென்னுடைய நாவகத்தே இருந்து
கனத்தசுவை தருகின்ற கற்கண்டே கனிவாய்
விரைந்துவந்தென் துன்பமெலாம் தவிர்த்தஅரு ளமுதே
மெய்அருளே மெய்யாகி விளங்குகின்ற விளக்கே

Koviloor Digital Library

திரைந்தஉடல் விரைந்துடனே பொன்உடம்பே ஆகித்
திகழ்ந்தழியா தோங்கஅருள் சித்தேமெய்ச் சத்தே
வரைந்தென்னை மணம்புரிந்து பொதுநடஞ்செய் அரசே
மகிழ்வொடுநான் புனைந்திடுஞ்சொன் மாலைஅணிந் தருளே. 7

544 கதிக்குவழி காட்டுகின்ற கண்ணேஎன் கண்ணில்
கலந்தமணி யேமணியில் கலந்தகதிர் ஒளியே
விதிக்கும்உல குயிர்க்குயிராய் விளங்குகின்ற சிவமே
மெய்யுணர்ந்தோர் கையகத்தே விளங்கியதீங் கனியே
மதிக்குமதிக் கப்புறம்போய் வயங்குதனி நிலையே
மறைமுடிஆ கமமுடிமேல் வயங்கும்இன்ப நிறைவே
துதிக்கும்அன்பர் தொழப்பொதுவில் நடம்புரியும் அரசே
சொன்மாலை சூட்டுகின்றேன் தோளில்அணிந் தருளே. 8

545 அண்டவள வெவ்வளவோ அவ்வளவும் அவற்றில்
அமைந்தசரா சரஅளவெவ் வளவோஅவ் வளவும்
கண்டதுவாய் ஆங்கவைகள் தனித்தனியே அகத்தும்
காண்புறத்தும் அகப்புறத்தும் புறப்புறத்தும் விளங்க
விண்டகுபே ரருட்சோதிப் பெருவெளிக்கு நடுவே
விளங்கிஒரு பெருங்கருணைக் கொடிநாட்டி அருளாம்
தண்டகும்ஓர் தனிச்செங்கோல் நடத்திமன்றில் நடிக்கும்
தனிஅரசே என்மாலை தாளில்அணிந் தருளே. 9

546 நல்லார்சொல் யோகாந்தப் பதிகள்பல கோடி
நாட்டியதோர் போதாந்தப் பதிகள்பல கோடி
வல்லார்சொல் கலாந்தநிலைப் பதிகள்பல கோடி
வழுத்தும்ஒரு நாதாந்தப் பதிகள்பல கோடி
இல்லார்ந்த வேதாந்தப் பதிகள்பல கோடி
இலங்குகின்ற சித்தாந்தப் பதிகள்பல கோடி
எல்லாம்பே ரருட்சோதித் தனிச்செங்கோல் நடத்தும்
என்அரசே என்மாலை இனிதுபுனைந் தருளே. 10

547 நாட்டியதோர் சுத்தபரா சத்திஅண்டம் முதலா
ஞானசத்தி அண்டமது கடையாக இவற்றுள்
ஈட்டியபற் பலசத்தி சத்தர்அண்டப் பகுதி
எத்தனையோ கோடிகளும் தன்நிழற்கீழ் விளங்கச்
சூட்டியபொன் முடிஇலங்கச் சமரசமெய்ஞ் ஞானச்
சுத்தசிவ சன்மார்க்கப் பெருநிலையில் அமர்ந்தே
நீட்டியபே ரருட்சோதித் தனிச்செங்கோல் நடத்தும்
நீதிநடத் தரசேஎன் நெடுஞ்சொல்அணிந் தருளே. 11

Koviloor Digital Library

548 தன்பெருமை தான்அறியாத் தன்மையனே எனது
தனித்தலைவா என்னுயிர்க்குள் இனித்ததனிச் சுவையே
நின்பெருமை நான்அறியேன் நான்மட்டோ அறியேன்
நெடுமால்நான் முகன்முதலா மூர்த்திகளும் அறியார்
அன்புறும்ஆ கமமறைகள் அறியாவே எனினும்
அவரும்அவை களும்சிலசொல் அணிகின்றார் நினக்கே
என்பருவம் குறியாதே எனையாண்ட அரசே
யானும்அவர் போல்அணிகின் றேன்அணிந்திங் கருளே. 12

549 உண்ணஉண்ணத் தெவிட்டாதே தித்தித்தென் உடம்போ
டுயிர்உணர்வும் கலந்துகலந் துள்ளகத்தும் புறத்தும்
தண்ணியவண் ணம்பரவப் பொங்கிநிறைந் தாங்கே
ததும்பிஎன்றன் மயம்எல்லாம் தன்மயமே ஆக்கி
எண்ணியஎன் எண்ணமெலாம் எய்தஒளி வழங்கி
இலங்குகின்ற பேரருளாம் இன்னமுதத் திரளே
புண்ணியமே என்பெரிய பொருளேஎன் அரசே
புன்மொழிஎன் றிகழாதே புனைந்துமகிழ்ந் தருளே. 13

550 நாட்டார்கள் சூழ்ந்துமதித் திடமணிமே டையிலே
நடுஇருக்க என்றனையே நாட்டியபே ரிறைவா
பாட்டாளர் பாடுதொறும் பரிசளிக்கும் துரையே
பன்னுமறைப் பாட்டேமெய்ப் பாட்டினது பயனே
கூட்டாளா சிவகாமக் கொடிக்கிசைந்த கொழுநா
கோவேஎன் கணவாஎன் குரவாஎன் குணவா
நீட்டாளர் புகழ்ந்தேத்த மணிமன்றில் நடிக்கும்
நீதிநடத் தரசேஎன் நெடுமொழிகொண் டருளே. 14

551 கைக்கிசைந்த பொருளேஎன் கருத்திசைந்த கனிவே
கண்ணேஎன் கண்களுக்கே கலந்திசைந்த கணவா
மெய்க்கிசைந்த அணியேபொன் மேடையில்என் னுடனே
மெய்கலந்த தருணத்தே விளைந்தபெருஞ் சுகமே
நெய்க்கிசைந்த உணவேஎன் நெறிக்கிசைந்த நிலையே
நித்தியமே எல்லாமாஞ் சத்தியமே உலகில்
பொய்க்கிசைந்தார் காணாதே பொதுநடஞ்செய் அரசே
புன்மொழிகள்என் றிகழாதே புனைந்துமகிழ்ந் தருளே. 15

552 கொடுத்திடநான் எடுத்திடவும் குறையாத நிதியே
கொல்லாத நெறியேசித் தெல்லாஞ்செய் பதியே
மடுத்திடவும் அடுத்தடுத்தே மடுப்பதற்குள் ளாசை
வைப்பதன்றி வெறுப்பறியா வண்ணநிறை அமுதே

Koviloor Digital Library

எடுத்தெடுத்துப் புகன்றாலும் உலவாத ஒளியே
என்உயிரே என்உயிருக் கிசைந்தபெருந் துணையே
தடுத்திடவல் லவர்இல்லாத் தனிமுதற்பே ரரசே
தாழ்மொழிஎன் றிகழாதே தரித்துமகிழ்ந் தருளே. 16

553 தனித்தனிமுக் கனிபிழிந்து வடித்தொன்றாக் கூட்டிச்
சர்க்கரையுங் கற்கண்டின் பொடியுமிகக் கலந்தே
தனித்தநறுந் தேன்பெய்து பசும்பாலுந் தேங்கின்
தனிப்பாலுஞ் சேர்த்தொருதீம் பருப்பிடியும் விரவி
இனித்தநறு நெய்அளைந்தே இளஞ்சூட்டின் இறக்கி
எடுத்தசுவைக் கட்டியினும் இனித்திடுந்தெள் ளமுதே
அனித்தமறத் திருப்பொதுவில் விளங்குநடத் தரசே
அடிமலர்க்கென் சொல்லணியாம் அலங்கல்அணிந் தருளே. 17

554 மலைவறியாப் பெருஞ்சோதி வச்சிரமா மலையே
மாணிக்க மணிப்பொருப்பே மரகதப்பேர் வரையே
விலைஅறியா உயர்ஆணிப் பெருமுத்துத் திரளே
விண்ணவரும் நண்ணரும்ஓர் மெய்ப்பொருளின் விளைவே
கொலைஅறியாக் குணத்தோர்தங் கூட்டுறவே அருட்செங்
கோல்நடத்து கின்றதனிக் கோவேமெய் அறிவால்
நிலைஅறிந்தோர் போற்றுமணி மன்றில்நடத் தரசே
நின்னடிப்பொன் மலர்களுக்கென் நெடுஞ்சொல்அணிந் தருளே. 18

555 கண்களிக்கப் புகைசிறிதும் காட்டாதே புருவக்
கலைநடுவே விளங்குகின்ற கற்பூர விளக்கே
பண்களிக்கப் பாடுகின்ற பாட்டில்விளை சுகமே
பத்தருளே தித்திக்கப் பழுத்ததனிப் பழமே
மண்களிக்க வான்களிக்க மணந்தசிவ காம
வல்லிஎன மறைகளெலாம் வாழ்த்துகின்ற வாமப்
பெண்களிக்கப் பொதுநடஞ்செய் நடத்தரசே நினது
பெரும்புகழ்ச்சே வடிகளுக்கென் அரும்பும்அணிந் தருளே. 19

556 உருவெளியே உருவெளிக்குள் உற்றவெளி உருவே
உருநடுவும் வெளிநடுவும் ஒன்றான ஒன்றே
பெருவெளியே பெருவெளியில் பெருஞ்சோதி மயமே
பெருஞ்சோதி மயநடுவே பிறங்குதனிப் பொருளே
மருஒழியா மலர்அகத்தே வயங்கு ஒளி மணியே
மந்திரமே தந்திரமே மதிப்பரிய மருந்தே
திருஒழியா தோங்குமணி மன்றில்நடத் தரசே
சிறுமொழிஎன் றிகழாதே சேர்த்துமகிழ்ந் தருளே. 20

Koviloor Digital Library

557 நான்என்றும் தான்என்றும் நாடாத நிலையில்
ஞானவடி வாய்விளங்கும் வானநடு நிலையே
ஊன்என்றும் உயிர்என்றும் குறியாமே முழுதும்
ஒருவடிவாம் திருவடிவம் உவந்தளித்த பதியே
தேன்என்றும் கரும்பென்றும் செப்பரிதாய் மனமும்
தேகமும்உள் ளுயிர்உணர்வும் தித்திக்கும் சுவையே
வான்என்றும் ஒளிஎன்றும் வகுப்பரிதாம் பொதுவில்
வயங்குநடத் தரசேஎன் மாலையும்ஏற் றருளே. 21

558 எட்டிரண்டும் என்என்றால் மயங்கியஎன் றனக்கே
எட்டாத நிலைஎல்லாம் எட்டுவித்த குருவே
சுட்டிரண்டுங் காட்டாதே துரியநிலை நடுவே
சுகமயமாய் விளங்குகின்ற சுத்தபரம் பொருளே
மட்டிதுஎன் றறிவதற்கு மாட்டாதே மறைகள்
மவுனம்உறப் பரம்பரத்தே வயங்குகின்ற ஒளியே
தட்டறியாத் திருப்பொதுவில் தனிநடஞ்செய் அரசே
தாழ்மொழிஎன் றிகழாதே தரித்துமகிழ்ந் தருளே. 22

559 சாதிகுலம் சமயமெலாம் தவிர்த்தெனைமேல் ஏற்றி
தனித்ததிரு அமுதளித்த தனித்தலைமைப் பொருளே
ஆதிநடுக் கடைகாட்டா தண்டபகி ரண்டம்
ஆருயிர்கள் அகம்புறம்மற் றனைத்தும்நிறை ஒளியே
ஓதிஉணர்ந் தவர்எல்லாம் எனைக்கேட்க எனைத்தான்
ஓதாமல் உணர்ந்துணர்வாம் உருவுறச்செய் உறவே
சோதிமய மாய்விளங்கித் தனிப்பொதுவில் நடிக்கும்
தூயநடத் தரசேஎன் சொல்லும்அணிந் தருளே. 23

560 அடிக்கடிஎன் அகத்தினிலும் புறத்தினிலும் சோதி
அருள்உருவாய்த் திரிந்துதிரிந் தருள்கின்ற பொருளே
படிக்களவின் மறைமுடிமேல் ஆகமத்தின் முடிமேல்
பதிந்தபதம் என்முடிமேல் பதித்ததனிப் பதியே
பொடிக்கனகத் திருமேனித் திருமணங்கற் பூரப்
பொடிமணத்தோ டகம்புறமும் புதுமணஞ்செய் அமுதே
அடிக்கனக அம்பலத்தே திருச்சிற்றம் பலத்தே
ஆடல்புரி அரசேஎன் அலங்கல்அணிந் தருளே. 24

561 அறையாத மிகுபெருங்காற் றடித்தாலும் சிறிதும்
அசையாதே அவியாதே அண்டபகி ரண்டத்
துறையாவும் பிண்டவகைத் துறைமுழுதும் விளங்கத்
தூண்டாதே விளங்குகின்ற ஜோதிமணி விளக்கே

Koviloor Digital Library

மறையாதே குறையாதே களங்கமும் இல்லாதே
மயக்காதே பனிக்காதே வயங்குகின்ற மதியே
இறையாய்எவ் வுயிரகத்தும் அகப்புறத்தும் புறத்தும்
இலங்குநடத் தரசேஎன் இசையும்அணிந் தருளே. 25

562 பார்த்தாலும் நினைத்தாலும் படித்தாலும் படிக்கப்
பக்கம்நின்று கேட்டாலும் பரிந்துள்உணர்ந் தாலும்
ஈர்த்தாலும் பிடித்தாலும் கட்டிஅணைத் தாலும்
இத்தனைக்கும் தித்திக்கும் இனித்தசுவைக் கரும்பே
வேர்த்தாவி மயங்காது கனிந்தநறுங் கனியே
மெய்ம்மைஅறி வானந்தம் விளக்கும்அருள் அமுதே
தீர்த்தாஎன் றன்பர்எலாம் தொழப்பொதுவில் நடிக்கும்
தெய்வநடத் தரசேஎன் சிறுமொழிஏற் றருளே. 26

563 பற்றுதலும் விடுதலும்உள் அடங்குதலும் மீட்டும்
படுதலொடு சுடுதலும்புண் படுத்தலும்இல் லாதே
உற்றொளிகொண் டோங்கிளங்கும் தன்மயமாய் ஞான
உருவாகி உயிர்க்குயிராய் ஓங்குகின்ற நெருப்பே
சுற்றுதலும் தோன்றுதலும் மறைதலும்வெச் சென்றே
சுடுதலும்இல் லாதென்றும் துலங்குகின்ற சுடரே
முற்றும்உணர்ந் தவர்உளத்தே திருச்சிற்றம் பலத்தே
முயங்கும்நடத் தரசேஎன் மொழியும்அணிந் தருளே. 27

564 ஐம்பூத பரங்கண்முதல் நான்கும்அவற் றுள்ளே
அடுத்திடுநந் நான்கும்அவை அகம்புறமேல் நடுக்கீழ்
கம்பூத பக்கமுதல் எல்லாந்தன் மயமாய்க்
காணும்அவற் றப்புறமும் கலந்ததனிக் கனலே
செம்பூத உலகங்கள் பூதாண்ட வகைகள்
செழித்திடநற் கதிர்பரப்பித் திகழ்கின்ற சுடரே
வெம்பூதத் தடைதவிர்ந்தார் ஏத்தமணி மன்றில்
விளங்குநடத் தரசேஎன் விளம்பும்அணிந் தருளே. 28

565 வாதுறும்இந் தியகரண பரங்கண்முதல் நான்கும்
வகுத்திடுநந் நான்கும்அகம் புறமேல்கீழ் நடுப்பால்
ஓதுறும்மற் றெல்லாந்தன் மயமாகக் கலந்தே
ஓங்கவற்றின் அப்புறமும் ஒளிர்கின்ற ஒளியே
சூதுறுமிந் தியகரண லோகாண்டம் அனைத்தும்
சுடர்பரப்பி விளங்குகின்ற சுயஞ்ஜோதிச் சுடரே
போதுறுவார் பலர்நின்று போற்றநடம் பொதுவில்
புரியும்நடத் தரசேஎன் புகலும்அணிந் தருளே. 29

Koviloor Digital Library

566 பகுதிபர முதல்நான்கும் அவற்றுறுநந் நான்கும்
பரவிஎலாம் தன்மயமாம் படிநிறைந்து விளங்கித்
தகுதிபெறும் அப்பகுதிக் கப்புறமும் சென்றே
தனிஒளிச்செங் கோல்நடத்தித் தழைக்கின்ற ஒளியே
மிகுதிபெறு பகுதிஉல கம்பகுதி அண்டம்
விளங்கஅருட் சுடர்பரப்பி விளங்குகின்ற சுடரே
தொகுதிபெறு கடவுளர்கள் ஏத்தமன்றில் நடிக்கும்
துரியநடத் தரசேஎன் சொல்லும்அணிந் தருளே. 30

567 மாமாயைப் பரமாதி நான்கும்அவற் றுள்ளே
வயங்கியநந் நான்குந்தன் மயத்தாலே விளக்கி
ஆமாறம் மாமாயைக் கப்புறத்தும் நிறைந்தே
அறிவொன்றே வடிவாகி விளங்குகின்ற ஒளியே
தாமாயா புவனங்கள் மாமாயை அண்டம்
தழைத்துவிளங் கிடக்கதிர்செய் தனித்தபெருஞ் சுடரே
தேமாலும் பிரமனும்நின் றேத்தமன்றில் நடிக்கும்
தெய்வநடத் தரசேஎன் சிறுமொழிஏற் றருளே. 31

568 சுத்தபர முதல்நான்கும் அவற்றுறுநந் நான்கும்
தூயஒளி வடிவாகத் துலங்கும்ஒளி அளித்தே
நித்தபரம் பரநடுவாய் முதலாய்அந் தமதாய்
நீடியஓர் பெருநிலைமேல் ஆடியபே ரொளியே
வித்தமுறும் சுத்தபர லோகாண்டம் அனைத்தும்
விளக்கமுறச் சுடர்பரப்பி விளங்குகின்ற சுடரே
சத்தியஞா னானந்தச் சித்தர்புகழ் பொதுவில்
தனித்தநடத் தரசேஎன் சாற்றும்அணிந் தருளே. 32

569 சாற்றுகின்ற கலைஐந்தில் பரமாதி நான்கும்
தக்கஅவற் றூடிருந்த நந்நான்கும் நிறைந்தே
ஊற்றுகின்ற அகம்புறமேல் நடுக்கீழ்மற் றனைத்தும்
உற்றிடுந்தன் மயமாகி ஒளிர்கின்ற ஒளியே
தோற்றுகின்ற கலைஉலகம் கலைஅண்ட முழுதும்
துலங்குகின்ற சுடர்பரப்பிச் சூழ்கின்ற சுடரே
போற்றுகின்ற மெய்அடியர் களிப்பநடித் தருளும்
பொதுவில்நடத் தரசேஎன் புகலும்அணிந் தருளே. 33

570 நாட்டியஓங் காரம்ஐந்தில் பரமுதல்ஓர் நான்கும்
நந்நான்கு மாறிடத்தும் நயந்துநிறைந் தருளி
ஈட்டியசெம் பொருள்நிலையோ டிலக்கியமும் விளங்க
இனிதுநின்று விளங்குகின்ற இன்பமய ஒளியே

Koviloor Digital Library

கூட்டியஓங் காரஉல கோங்கார அண்டம்
குடிவிளங்கக் கதிர்பரப்பிக் குலவுபெருஞ் சுடரே
பாட்டியல்கொண் டன்பரெலாம் போற்றமன்றில் நடிக்கும்
பரமநடத் தரசேஎன் பாட்டும்அணிந் தருளே. 34

571 மன்னுகின்ற அபரசத்திப் பரமாதி அவற்றுள்
வகுத்தநிலை யாதிஎலாம் வயங்கவயின் எல்லாம்
பன்னுகின்ற பற்பலவாம் விசித்திரசித் திரங்கள்
பரவிவிளங் கிடவிளங்கிப் பதிந்தருளும் ஒளியே
துன்அபர சத்திஉல கபரசத்தி அண்டம்
சுகம்பெறவே கதிர்பரப்பித் துலங்குகின்ற சுடரே
உன்னும்அன்பர் உளங்களிக்கத் திருச்சிற்றம் பலத்தே
ஓங்கும்நடத் தரசேஎன் உரையும்அணிந் தருளே. 35

572 விளங்குபர சத்திகளின் பரமாதி அவற்றுள்
விரிந்தநிலை யாதிஎலாம் விளங்கிஒளி வழங்கிக்
களங்கமிலாப் பரவெளியில் அந்தம்முதல் நடுத்தான்
காட்டாதே நிறைந்தெங்கும் கலந்திடும்பே ரொளியே
உளங்குலவு பரசத்தி உலகமண்ட முழுதும்
ஒளிவிளங்கச் சுடர்பரப்பி ஓங்குதனிச் சுடரே
வளங்குலவு திருப்பொதுவில் மாநடஞ்செய் அரசே
மகிழ்ந்தெனது சொல்எனும்ஓர் மாலைஅணிந் தருளே. 36

573 தெரிந்தமகா சுத்தபர முதலும்அவற் றுள்ளே
சிறந்தநிலை யாதிகளும் தெளிந்துவிளங் குறவே
பரிந்தஒரு சிவவெளியில் நீக்கமற நிறைந்தே
பரமசுக மயமாகிப் பரவியபே ரொளியே
விரிந்தமகா சுத்தபர லோகாண்ட முழுதும்
மெய்அறிவா னந்தநிலை விளக்குகின்ற சுடரே
புரிந்ததவப் பயனாகும் பொதுவில்நடத் தரசே
புன்மொழிஎன் றிகழாதே புனைந்துமகிழ்ந் தருளே. 37

574 வாய்ந்தபர நாதம்ஐந்தில் பரமுதலும் அவற்றுள்
மன்னுநிலை யாதிகளும் வயங்கியிட நிறைந்தே
ஆய்ந்தபர சிவவெளியில் வெளிஉருவாய் எல்லாம்
ஆகியதன் இயல்விளக்கி அலர்ந்திடும்பே ரொளியே
தோய்ந்தபர நாதஉல கண்டமெலாம் விளங்கச்
சுடர்பரப்பி விளங்குகின்ற தூயதனிச் சுடரே
வேய்ந்தமணி மன்றிடத்தே நடம்புரியும் அரசே
விளம்புறும்என் சொன்மாலை விளங்கஅணிந் தருளே. 38

Koviloor Digital Library

575 கல்லார்க்கும் கற்றவர்க்கும் களிப்பருளும் களிப்பே
காணார்க்கும் கண்டவர்க்கும் கண்ணளிக்கும் கண்ணே
வல்லார்க்கும் மாட்டார்க்கும் வரமளிக்கும் வரமே
மதியார்க்கும் மதிப்பவர்க்கும் மதிகொடுக்கும் மதியே
நல்லார்க்கும் பொல்லார்க்கும் நடுநின்ற நடுவே
நரர்களுக்கும் சுரர்களுக்கும் நலங்கொடுக்கும் நலமே
எல்லார்க்கும் பொதுவில்நடம் இடுகின்ற சிவமே
என்அரசே யான்புகலும் இசையும்அணிந் தருளே. 39

576 காட்சியுறக் கண்களுக்குக் களிக்கும்வண்ணம் உளதாய்க்
கையும்மெய்யும் பரிசிக்கச் சுகபரிசத் ததுவாய்ச்
சூழ்ச்சியுற நாசிக்குச் சுகந்தஞ்செய் குவதாய்த்
தூயசெவிக் கினியதொரு சுகநாதத் ததுவாய்
மாட்சியுற வாய்க்கினிய பெருஞ்சுவைஈ குவதாய்
மறைமுடிமேல் பழுத்தெனக்கு வாய்த்தபெரும் பழமே
ஆட்சியுற அருள்ஒளியால் திருச்சிற்றம் பலத்தே
ஆடல்புரி அரசேஎன் அலங்கல்அணிந் தருளே. 40

577 திரைஇலதாய் அழிவிலதாய்த் தோலிலதாய்ச் சிறிதும்
சினைப்பிலதாய்ப் பனிப்பிலதாய்ச் செறிந்திடுகோ திலதாய்
விரைஇலதாய்ப் புரைஇலதாய் நார்இலதாய் மெய்யே
மெய்யாகி அருள்வண்ணம் விளங்கிஇன்ப மயமாய்ப்
பரைவெளிக்கப் பால்விளங்கு தனிவெளியில் பழுத்தே
படைத்தஎன துளத்தினிக்கக் கிடைத்ததனிப் பழமே
உரைவளர்மா மறைகளெலாம் போற்றமணிப் பொதுவில்
ஓங்கும்நடத் தரசேஎன் உரையும்அணிந் தருளே. 41

578 கார்ப்பிலதாய்த் துவர்ப்பிலதாய் உவர்ப்பிலதாய்ச் சிறிதும்
கசப்பிலதாய்ப் புளிப்பிலதாய்க் காய்ப்பிலதாய்ப் பிறவில்
சேர்ப்பிலதாய் எஞ்ஞான்றும் திரிபிலதாய் உயிர்க்கே
தினைத்தனையும் நோய்தரும்அத் தீமைஒன்றும் இலதாய்
பார்ப்பனையேன் உள்ளகத்தே விளங்கிஅறி வின்பம்
படைத்திடமெய்த் தவப்பயனால் கிடைத்ததனிப் பழமே
ஓர்ப்புடையார் போற்றமணி மன்றிடத்தே வெளியாய்
ஓங்கியபே ரரசேஎன் உரையும்அணிந் தருளே. 42

579 தெற்றியிலே நான்பசித்துப் படுத்திளைத்த தருணம்
திருஅமுதோர் திருக்கரத்தே திகழ்வள்ளத் தெடுத்தே
ஒற்றியிற்போய்ப் பசித்தனையோ என்றெனையங் கெழுப்பி
உவந்துகொடுத் தருளியஎன் உயிர்க்கினிதாந் தாயே

Koviloor Digital Library

பற்றியஎன் பற்றனைத்தும் தன்அடிப்பற் றாகப்
பரிந்தருளி எனைஈன்ற பண்புடைஎந் தாயே
பெற்றியுளார் சுற்றிநின்று போற்றமணிப் பொதுவில்
பெருநடஞ்செய் அரசேஎன் பிதற்றும்உவந் தருளே. 43

580 தாய்முதலோ ரொடுசிறிய பருவமதில் தில்லைத்
தலத்திடையே திரைதூக்கத் தரிசித்த போது
வேய்வகைமேல் காட்டாதே என்றனக்கே எல்லாம்
வெளியாகக் காட்டியஎன் மெய்உறவாம் பொருளே
காய்வகைஇல் லாதுளத்தே கனிந்தநறுங் கனியே
கனவிடத்தும் நனவிடத்தும் எனைப்பிரியாக் களிப்பே
தூய்வகையோர் போற்றமணி மன்றில்நடம் புரியும்
சோதிநடத் தரசேஎன் சொல்லும்அணிந் தருளே. 44

581 ஓங்கியஓர் துணைஇன்றிப் பாதிஇர வதிலே
உயர்ந்தஒட்டுத் திண்ணையிலே படுத்தகடைச் சிறியேன்
தூங்கிமிகப் புரண்டுவிழத் தரையில்விழா தெனையே
தூக்கிஎடுத் தணைத்துக்கீழ்க் கிடத்தியமெய்த் துணையே
தாங்கியஎன் உயிர்க்கின்பம் தந்தபெருந் தகையே
சற்குருவே நான்செய்பெருந் தவப்பயனாம் பொருளே
ஏங்கியஎன் ஏக்கமெலாம் தவிர்த்தருளிப் பொதுவில்
இலங்குநடத் தரசேஎன் இசையும்அணிந் தருளே. 45

582 தனிச்சிறியேன் சிறிதிங்கே வருந்தியபோ ததனைத்
தன்வருத்தம் எனக்கொண்டு தரியாதக் கணத்தே
பனிப்புறும்அவ் வருத்தமெலாம் தவிர்த்தருளி மகனே
பயம்உனக்கென் என்றென்னைப் பரிந்தணைத்த குருவே
இனிப்புறுநன் மொழிபுகன்றென் முடிமிசையே மலர்க்கால்
இணைஅமர்த்தி எனையாண்ட என்னுயிர்நற் றுணையே
கனித்தநறுங் கனியேஎன் கண்ணேசிற் சபையில்
கலந்தநடத் தரசேஎன் கருத்தும்அணிந் தருளே. 46

583 ஒருமடந்தை வலிந்தணைந்து கலந்தகன்ற பின்னர்
உளம்வருந்தி என்செய்தோம் என்றயர்ந்த போது
பெருமடஞ்சேர் பிள்ளாய்என் கெட்டதொன்றும் இலைநம்
பெருஞ்செயல்என் றெனைத்தேற்றிப் பிடித்தபெருந் தகையே
திருமடந்தை மார்இருவர் என்எதிரே நடிக்கச்
செய்தருளிச் சிறுமைஎலாம் தீர்த்ததனிச் சிவமே
கருமடம்தீர்ந் தவர்எல்லாம் போற்றமணி மன்றில்
காட்டுநடத் தரசேஎன் பாட்டும்அணிந் தருளே. 47

Koviloor Digital Library

584 இருள்இரவில் ஒருமூலைத் திண்ணையில்நான் பசித்தே
இளைப்புடனே படுத்திருக்க எனைத்தேடி வந்தே
பொருள்உணவு கொடுத்துண்ணச் செய்வித்தே பசியைப்
போக்கிஅருள் புரிந்தஎன்றன் புண்ணியநற் றுணையே
மருள்இரவு நீக்கிஎல்லா வாழ்வும்எனக் கருளி
மணிமேடை நடுஇருக்க வைத்தஒரு மணியே
அருள்உணவும் அளித்தென்னை ஆட்கொண்ட சிவமே
அம்பலத்தென் அரசேஎன் அலங்கல்அணிந் தருளே. 48

585 நான்பசித்த போதெல்லாம் தான்பசித்த தாகி
நல்உணவு கொடுத்தென்னைச் செல்வம்உற வளர்த்தே
ஊன்பசித்த இளைப்பென்றும் தோற்றாத வகையே
ஒள்ளியதெள் ளமுதெனக்கிங் குவந்தளித்த ஒளியே
வான்பதிக்கும் நெடுமாற்கும் நான்முகற்கும் அரிதாம்
வாழ்வெனக்கே ஆகியுற வரம்அளித்த பதியே
தேன்பரித்த மலர்மணமே திருப்பொதுவில் ஞானத்
திருநடஞ்செய் அரசேஎன் சிறுமொழிஏற் றருளே. 49

586 நடைக்குரிய உலகிடைஓர் நல்லநண்பன் ஆகி
நான்குறித்த பொருள்கள்எலாம் நாழிகைஒன் றதிலே
கிடைக்கஎனக் களித்தகத்தும் புறத்தும்அகப் புறத்தும்
கிளர்ந்தொளிகொண் டோங்கியமெய்க் கிளைஎனும்பேரொளியே
படைப்புமுதல் ஐந்தொழிலும் கொள்கஎனக் குறித்தே
பயந்தீர்த்தென் உள்ளகத்தே அமர்ந்ததனிப் பதியே
கடைப்படும்என் கரத்தில்ஒரு கங்கணமும் தரித்த
ககனநடத் தரசேஎன் கருத்தும்அணிந் தருளே. 50

587 நீநினைத்த நன்மைஎலாம் யாம்அறிந்தோம் நினையே
நேர்காண வந்தனம்என் றென்முடிமேல் மலர்க்கால்
தான்நிலைக்க வைத்தருளிப் படுத்திடநான் செருக்கித்
தாள்களெடுத் தப்புறத்தே வைத்திடத்தான் நகைத்தே
ஏன்நினைத்தாய் இவ்வளவு சுதந்தரம்என் மகனே
எனக்கிலையோ என்றருளி எனையாண்ட குருவே
தேன்நிலைத்த தீம்பாகே சர்க்கரையே கனியே
தெய்வநடத் தரசேஎன் சிறுமொழிஏற் றருளே. 51

588 மூர்த்திகளும் நெடுங்காலம் முயன்றாலும் அறிய
முடியாத முடிவெல்லாம் முன்னியஓர் தினத்தே
ஆர்த்தியுடன் அறியஎனக் களித்தருளி அடியேன்
அகத்தினைத்தன் இடமாக்கி அமர்ந்தஅருட் குருவே

Koviloor Digital Library

பார்த்திபரும் விண்ணவரும் பணிந்துமகிழ்ந் தேத்தப்
பரநாத நாட்டரசு பாலித்த பதியே
ஏர்த்திகழும் திருப்பொதுவில் இன்பநடத் தரசே
என்னுடைய சொன்மாலை இலங்கஅணிந் தருளே. 52

589 இச்சைஒன்றும் இல்லாதே இருந்தஎனக் கிங்கே
இயலுறுசன் மார்க்கநிலைக் கிச்சையைஉண் டாக்கித்
தச்சுறவே பிறமுயற்சி செயுந்தோறும் அவற்றைத்
தடையாக்கி உலகறியத் தடைதீர்த்த குருவே
எச்சமய முடிபுகளும் திருச்சிற்றம் பலத்தே
இருந்தன எனக்கருளி இசைவித்த இறையே
முச்சகமும் புகழமணி மன்றிடத்தே நடிக்கும்
முதல்அரசே என்னுடைய மொழியும்அணிந் தருளே. 53

590 கையாத தீங்கனியே கயக்காத அமுதே
கரையாத கற்கண்டே புரையாத கரும்பே
பொய்யாத பெருவாழ்வே புகையாத கனலே
போகாத புனலேஉள் வேகாத காலே
கொய்யாத நறுமலரே கோவாத மணியே
குளியாத பெருமுத்தே ஒளியாத வெளியே
செய்யாத பேருதவி செய்தபெருந் தகையே
தெய்வநடத் தரசேஎன் சிறுமொழிஏற் றருளே. 54

591 எண்ணாத மந்திரமே எழுதாத மறையே
ஏறாத மேனிலைநின் றிறங்காத நிறைவே
பண்ணாத பூசையிலே படியாத படிப்பே
பாராத பார்வையிலே பதியாத பதிப்பே
நண்ணாத மனத்தகத்தே அண்ணாத நலமே
நாடாத நாட்டகத்தே நடவாத நடப்பே
அண்ணாஎன் அப்பாஎன் ஐயாஎன் அரசே
அடிஇணைக்கென் சொன்மாலை அணிந்துமகிழ்ந் தருளே. 55

592 சாகாத கல்வியிலே தலையான நிலையே
சலியாத காற்றிடைநின் றொலியாத கனலே
ஏகாத புனலிடத்தே இடியாத புவியே
ஏசாத மந்திரத்தே பேசாத பொருளே
கூகாஎன் றெனைக்கூடி எடுக்காதே என்றும்
குலையாத வடிவெனக்கே கொடுத்ததனி அமுதே
மாகாதல் உடையார்கள் வழுத்தமணிப் பொதுவில்
மாநடஞ்செய் அரசேஎன் மாலையும்ஏற் றருளே. 56

Koviloor Digital Library

593 சுத்தநிலை அனுபவங்கள் தோன்றுவெளி யாகித்
தோற்றும்வெளி யாகிஅவை தோற்றுவிக்கும் வெளியாய்
நித்தநிலை களின்நடுவே நிறைந்தவெளி யாகி
நீயாகி நானாகி நின்றதனிப் பொருளே
சத்தியமே சத்துவமே தத்துவமே நவமே
சமரசசன் மார்க்கநிலைத் தலைநின்ற சிவமே
புத்தமுதே சித்திஎலாம் வல்லதிருப் பொதுவில்
புனிதநடத் தரசேஎன் புகலும்அணிந் தருளே. 57

594 நான்அளக்குந் தோறும்அதற் குற்றதுபோல் காட்டி
நாட்டியபின் ஒருசிறிதும் அளவில்உறா தாகித்
தான்அளக்கும் அளவதிலே முடிவதெனத் தோற்றித்
தன்அளவுங் கடந்தப்பால் மன்னுகின்ற பொருளே
வான்அளக்க முடியாதே வான்அனந்தங் கோடி
வைத்தபெரு வான்அளக்க வசமோஎன் றுரைத்துத்
தேன்அளக்கும் மறைகளெலாம் போற்றமணி மன்றில்
திகழுநடத் தரசேஎன் சிறுமொழிஏற் றருளே. 58

595 திசையறிய மாட்டாதே திகைத்தசிறி யேனைத்
தெளிவித்து மணிமாடத் திருத்தவிசில் ஏற்றி
நசைஅறியா நற்றவரும் மற்றவருஞ் சூழ்ந்து
நயப்பஅருட் சிவநிலையை நாட்டவைத்த பதியே
வசையறியாப் பெருவாழ்வே மயல்அறியா அறிவே
வான்நடுவே இன்பவடி வாய்இருந்த பொருளே
பசைஅறியா மனத்தவர்க்கும் பசைஅறிவித் தருளப்
பரிந்தநடத் தரசேஎன் பாட்டும்அணிந் தருளே, 59

596 என்உயிரும் என்உடலும் என்பொருளும் யானே
இசைந்துகொடுத் திடவாங்கி இட்டதன்பின் மகிழ்ந்தே
தன்உயிரும் தன்உடலும் தன்பொருளும் எனக்கே
தந்துகலந் தெனைப்புணர்ந்த தனித்தபெருஞ் சுடரே
மன்உயிருக் குயிராகி இன்பமுமாய் நிறைந்த
மணியேஎன் கண்ணேஎன் வாழ்முதலே மருந்தே
மின்னியபொன் மணிமன்றில் விளங்குநடத் தரசே
மெய்யும்அணிந் தருள்வோய்என் பொய்யும்அணிந் தருளே. 60

597 மன்னுகின்ற பொன்வடிவும் மந்திரமாம் வடிவும்
வான்வடிவும் கொடுத்தெனக்கு மணிமுடியுஞ் சூட்டிப்
பன்னுகின்ற தொழில்ஐந்துஞ் செய்திடவே பணித்துப்
பண்புறஎன் அகம்புறமும் விளங்குகின்ற பதியே

Koviloor Digital Library

உன்னுகின்ற தோறும்எனக் குள்ளமெலாம் இனித்தே
ஊறுகின்ற தெள்ளமுதே ஒருதனிப்பே ரொளியே
மின்னுகின்ற மணிமன்றில் விளங்குநடத் தரசே
மெய்யும்அணிந் தருள்வோய்என் பொய்யும்அணிந் தருளே. 61

598 நன்மைஎலாம் தீமைஎனக் குரைத்தோடித் திரியும்
நாய்க்குலத்தில் கடையான நாயடியேன் இயற்றும்
புன்மைஎலாம் பெருமைஎனப் பொறுத்தருளிப் புலையேன்
பொய்உரைமெய் உரையாகப் புரிந்துமகிழ்ந் தருளித்
தன்மைஎலாம் உடையபெருந் தவிசேற்றி முடியும்
தரித்தருளி ஐந்தொழில்செய் சதுர்அளித்த பதியே
இன்மைஎலாம் தவிர்ந்தடியார் இன்பமுறப் பொதுவில்
இலங்குநடத் தரசேஎன் இசையும்அணிந் தருளே. 62

599 விழுக்குலத்தார் அருவருக்கும் புழுக்குலத்தில் கடையேன்
மெய்யுரையேன் பொய்யுரையை வியந்துமகிழ்ந் தருளி
முழுக்குலத்தோர் முடிசூட்டி ஐந்தொழில்செய் எனவே
மொழிந்தருளி எனையாண்ட முதற்றனிப்பே ரொளியே
எழுக்குலத்தில் புரிந்தமனக் கழுக்குலத்தார் தமக்கே
எட்டாத நிலையேநான் எட்டியபொன் மலையே
மழுக்குலத்தார் போற்றமணி மன்றில்நடம் புரியும்
மாநடத்தென் அரசேஎன் மாலைஅணிந் தருளே. 63

600 கலைக்கொடிகண் டறியாத புலைக்குடியில் கடையேன்
கைதவனேன் பொய்தவமும் கருத்தில்உவந் தருளி
மலைக்குயர்மாத் தவிசேற்றி மணிமுடியுஞ் சூட்டி
மகனேநீ வாழ்கஎன வாழ்த்தியஎன் குருவே
புலைக்கொடியார் ஒருசிறிதும் புலப்படக்கண் டறியாப்
பொன்னேநான் உண்ணுகின்ற புத்தமுதத் திரளே
விலைக்கறியா மாமணியே வெறுப்பறியா மருந்தே
விளங்குநடத் தரசேஎன் விளம்பும்அணிந் தருளே. 64

601 மதம்என்றும் சமயம்என்றும் சாத்திரங்கள் என்றும்
மன்னுகின்ற தேவர்என்றும் மற்றவர்கள் வாழும்
பதம்என்றும் பதம்அடைந்த பத்தர்அனு பவிக்கப்
பட்டஅனு பவங்கள்என்றும் பற்பலவா விரிந்த
விதம்ஒன்றும் தெரியாதே மயங்கிய என் தனக்கே
வெட்டவெளி யாஅறிவித் திட்டஅருள் இறையே
சதம்ஒன்றும் சுத்தசிவ சன்மார்க்கப் பொதுவில்
தனிநடஞ்செய் அரசேஎன் சாற்றும்அணிந் தருளே. 65

Koviloor Digital Library

602 என்ஆசை எல்லாம்தன் அருள்வடிவந் தனக்கே
எய்திடச்செய் திட்டருளி எனையும்உடன் இருத்தித்
தன்ஆசை எல்லாம்என் உள்ளகத்தே வைத்துத்
தானும்உடன் இருந்தருளிக் கலந்தபெருந் தகையே
அன்னாஎன் ஆருயிரே அப்பாஎன் அமுதே
ஆவாஎன் றெனையாண்ட தேவாமெய்ச் சிவமே
பொன்னாரும் பொதுவில்நடம் புரிகின்ற அரசே
புண்ணியனே என்மொழிப்பூங் கண்ணியும்ஏற் றருளே. 66

603 தன்அரசே செலுத்திநின்ற தத்துவங்கள் அனைத்தும்
தனித்தனிஎன் வசமாகித் தாழ்ந்தேவல் இயற்ற
முன்அரசும் பின்அரசும் நடுஅரசும் போற்ற
முன்னும்அண்ட பிண்டங்கள் எவற்றினும்எப் பாலும்
என்அரசே என்றுரைக்க எனக்குமுடி சூட்டி
இன்பவடி வாக்கிஎன்றும் இலங்கவைத்த சிவமே
என்அரசே என்உயிரே என்இருகண் மணியே
இணைஅடிப்பொன் மலர்களுக்கென் இசையும்அணிந் தருளே. 67

604 பரவெளியே நடுவெளியே உபசாந்த வெளியே
பாழ்வெளியே முதலாக ஏழ்வெளிக்கப் பாலும்
விரவியமா மறைகளெலாம் தனித்தனிசென் றளந்தும்
மெய்யளவு காணாதே மெலிந்திளைத்துப் போற்ற
உரவில்அவை தேடியஅவ் வெளிகளுக்குள் வெளியாய்
ஓங்கியஅவ் வெளிகளைத்தன் னுள்அடக்கும் வெளியாய்க்
கரையறநின் றோங்குகின்ற சுத்தசிவ வெளியே
கனிந்தநடத் தரசேஎன் கருத்தும்அணிந் தருளே. 68

605 வெய்யலிலே நடந்திளைப்பு மேவியஅக் கணத்தே
மிகுநிழலும் தண்ணமுதும் தந்தஅருள் விளைவே
மையல்சிறி துற்றிடத்தே மடந்தையர்கள் தாமே
வலிந்துவரச் செய்வித்த மாண்புடைய நட்பே
கையறவால் கலங்கியபோ தக்கணத்தே போந்து
கையறவு தவிர்த்தருளிக் காத்தளித்த துரையே
ஐயமுறேல் என்றெனையாண் டமுதளித்த பதியே
அம்பலத்தென் அரசேஎன் அலங்கல்அணிந் தருளே. 69

606 கொலைபுரிவார் தவிரமற்றை எல்லாரும் நினது
குலத்தாரே நீஎனது குலத்துமுதல் மகனே
மலைவறவே சுத்தசிவ சமரசசன் மார்க்கம்
வளரவளர்ந் திருக்கஎன வாழ்த்தியஎன் குருவே

Koviloor Digital Library

நிலைவிழைவார் தமைக்காக்கும் நித்தியனே எல்லா
நிலையும்விளங் குறஅருளில் நிறுத்தியசிற் குணனே
புலையறியாப் பெருந்தவர்கள் போற்றமணிப் பொதுவில்
புனிதநடத் தரசேஎன் புகலும்அணிந் தருளே. 70

607 உயிர்க்கொலையும் புலைப்பொசிப்பும் உடையவர்கள் எல்லாம்
உறவினத்தார் அல்லர்அவர் புறஇனத்தார் அவர்க்குப்
பயிர்ப்புறும்ஓர் பசிதவிர்த்தல் மாத்திரமே புரிக
பரிந்துமற்றைப் பண்புரையேல் நண்புதவேல் இங்கே
நயப்புறுசன் மார்க்கம்அவர் அடையளவும் இதுதான்
நம்ஆணை என்றெனக்கு நவின்றஅருள் இறையே
மயர்ப்பறுமெய்த் தவர்போற்றப் பொதுவில்நடம் புரியும்
மாநடத்தென் அரசேஎன் மாலைஅணிந் தருளே. 71

608 வன்புடையார் கொலைகண்டு புலைஉண்பார் சிறிதும்
மரபினர்அன் றாதலினால் வகுத்தஅவர் அளவில்
அன்புடைய என்மகனே பசிதவிர்த்தல் புரிக
அன்றிஅருட் செயல்ஒன்றும் செயத்துணியேல் என்றே
இன்புறஎன் தனக்கிசைத்த என்குருவே எனைத்தான்
ஈன்றதனித் தந்தையே தாயேஎன் இறையே
துன்பறுமெய்த் தவர்சூழ்ந்து போற்றுதிருப் பொதுவில்
தூயநடத் தரசேஎன் சொல்லும்அணிந் தருளே. 72

609 கொடியவரே கொலைபுரிந்து புலைநுகர்வார் எனினும்
குறித்திடும்ஓர் ஆபத்தில் வருந்துகின்ற போது
படியில்அதைப் பார்த்துகவேல் அவர்வருத்தம் துன்பம்
பயந்தீர்த்து விடுகஎனப் பரிந்துரைத்த குருவே
நெடியவரே நான்முகரே நித்தியரே பிறரே
நின்மலரே என்கின்றோர் எல்லாரும் காண
அடியும்உயர் முடியும்எனக் களித்தபெரும் பொருளே
அம்பலத்தென் அரசேஎன் அலங்கல்அணிந் தருளே. 73

610 தயைஉடையார் எல்லாரும் சமரசசன் மார்க்கம்
சார்ந்தவரே ஈங்கவர்கள் தம்மோடுங் கூடி
நயமுறுநல் அருள்நெறியில் களித்துவிளை யாடி
நண்ணுகஎன் றெனக்கிசைத்த நண்புறுசற் குருவே
உயலுறும்என் உயிர்க்கினிய உறவேஎன் அறிவில்
ஓங்கியபே ரன்பேஎன் அன்பிலுறும் ஒளியே
மயலறுமெய்த் தவர்சூழ்ந்து போற்றும்மணி மன்றில்
மாநடத்தென் அரசேஎன் மாலைஅணிந் தருளே. 74

Koviloor Digital Library

611 அருளுடையார் எல்லாரும் சமரசசன் மார்க்கம்
அடைந்தவரே ஆதலினால் அவருடனே கூடி
தெருளுடைய அருள்நெறியில் களித்துவிளை யாடிச்
செழித்திடுக வாழ்கஎனச் செப்பியசற் குருவே
பொருளுடைய பெருங்கருணைப் பூரணமெய்ச் சிவமே
போதாந்த முதல்ஆறும் நிறைந்தொளிரும் ஒளியே
மருளுடையார் தமக்குமருள் நீக்கமணிப் பொதுவில்
வயங்குநடத் தரசேஎன் மாலையும்ஏற் றருளே. 75

612 வெம்மாலைச் சிறுவரொடும் விளையாடித் திரியும்
மிகச்சிறிய பருவத்தே வியந்துநினை நமது
பெம்மான்என் றடிகுறித்துப் பாடும்வகை புரிந்த
பெருமானே நான்செய்த பெருந்தவமெய்ப் பயனே
செம்மாந்த சிறியேனைச் சிறுநெறியில் சிறிதும்
செலுத்தாமல் பெருநெறியில் செலுத்தியநற் றுணையே
அம்மானே என்ஆவிக் கானபெரும் பொருளே
அம்பலத்தென் அரசேஎன் அலங்கல்அணிந் தருளே. 76

613 ஆணவமாம் இருட்டறையில் கிடந்தசிறி யேனை
அணிமாயை விளக்கறையில் அமர்த்திஅறி வளித்து
நீணவமாம் தத்துவப்பொன் மாடமிசை ஏற்றி
நிறைந்தஅருள் அமுதளித்து நித்தமுற வளர்த்து
மாணுறஎல் லாநலமும் கொடுத்துலகம் அறிய
மணிமுடியும் சூட்டியஎன் வாழ்முதலாம் பதியே
ஏணுறுசிற் சபைஇடத்தும் பொற்சபையின் இடத்தும்
இலங்குநடத் தரசேஎன் இசையும்அணிந் தருளே. 77

614 பான்மறுத்து விளையாடும் சிறுபருவத் திடையே
பகரும்உல கிச்சைஒன்றும் பதியாதென் உளத்தே
மான்மறுத்து விளங்குதிரு ஐந்தெழுத்தே பதிய
வைத்தபெரு வாழ்வேஎன் வாழ்வில்உறும் சுகமே
மீன்மறுத்துச் சுடர்மயமாய் விளங்கியதோர் விண்ணே
விண்அனந்தம் உள்ளடங்க விரிந்தபெரு வெளியே
ஊன்மறுத்த பெருந்தவருக் கொளிவடிவம் கொடுத்தே
ஓங்குநடத் தரசேஎன் உரையும்அணிந் தருளே. 78

615 மெய்ச்சுகமும் உயிர்ச்சுகமும் மிகுங்கரணச் சுகமும்
விளங்குபதச் சுகமும் அதன் மேல்வீட்டுச் சுகமும்
எச்சுகமும் தன்னிடத்தே எழுந்தசுகம் ஆக
எங்கணுமோர் நீக்கமற வெழுந்தபெரும் சுகமே

Koviloor Digital Library

அச்சுகமும் அடையறிவும் அடைந்தவரும் காட்டா
தததானாய் அதுஅதுவாய் அப்பாலாம் பொருளே
பொய்ச்சுகத்தை விரும்பாத புனிதர்மகிழ்ந் தேத்தும்
பொதுநடத்தென் அரசேஎன் புகலும்அணிந் தருளே. 79

616 அண்டவகை எவ்வளவோ அவ்வளவும் அவற்றில்
அமைந்தஉயிர் எவ்வளவோ அவ்வளவும் அவைகள்
கண்டபொருள் எவ்வளவோ அவ்வளவும் அவற்றில்
கலந்தகலப் பெவ்வளவோ அவ்வளவும் நிறைந்தே
விண்தகும்ஓர் நாதவெளி சுத்தவெளி மோன
வெளிஞான வெளிமுதலாம் வெளிகளெலாம் நிரம்பிக்
கொண்டதுவாய் விளங்குகின்ற சுத்தசிவ மயமே
குலவுநடத் தரசேஎன் குற்றமும்கொண் டருளே. 80

617 சத்தியநான் முகர்அனந்தர் நாரணர்மற் றுளவாம்
தலைவர்அவர் அவருலகில் சார்ந்தவர்கள் பிறர்கள்
இத்திசைஅத் திசையாக இசைக்கும்அண்டப் பகுதி
எத்தனையோ கோடிகளில் இருக்கும்உயிர்த் திரள்கள்
அத்தனைபேர் உண்டாலும் அணுவளவும் குறையா
தருள்வெளியில் ஒளிவடிவாய் ஆனந்த மயமாய்ச்
சுத்தசிவ அனுபவமாய் விளங்கியதெள் ளமுதே
தூயநடத் தரசேஎன் சொல்லும்அணிந் தருளே. 81

618 பொறிகரண முதற்பலவாம் தத்துவமும் அவற்றைப்
புரிந்தியக்கி நடத்துகின்ற பூரணரும் அவர்க்குச்
செறியும்உப காரிகளாம் சத்திகளும் அவரைச்
செலுத்துகின்ற சத்தர்களும் தன்ஒளியால் விளங்க
அறிவறிவாய் அவ்வறிவுக் கறிவாய்எவ் விடத்தும்
ஆனதுவாய்த் தானதுவாய் அதுஅதுவாய் நிறைந்தே
நெறிவழங்கப் பொதுவில்அருள் திருநடஞ்செய் அரசே
நின்அடியேன் சொன்மாலை நிலைக்கஅணிந் தருளே. 82

619 உண்ணுகின்ற ஊண்வெறுத்து வற்றியும்புற் றெழுந்தும்
ஒருகோடிப் பெருந்தலைவர் ஆங்காங்கே வருந்திப்
பண்ணுகின்ற பெருந்தவத்தும் கிடைப்பரிதாய்ச் சிறிய
பயல்களினும் சிறியேற்குக் கிடைத்தபெரும் பதியே
நண்ணுகின்ற பெருங்கருணை அமுதளித்தென் உளத்தே
நானாகித் தானாகி அமர்ந்தருளி நான்தான்
எண்ணுகின்ற படிஎல்லாம் அருள்கின்ற சிவமே
இலங்குநடத் தரசேஎன் இசையும்அணிந் தருளே. 83

Koviloor Digital Library

620 கொள்ளைவினைக் கூட்டுறவால் கூட்டியபல் சமயக்
கூட்டமும்அக் கூட்டத்தே கூவுகின்ற கலையும்
கள்ளமுறும் அக்கலைகள் காட்டியபல் கதியும்
காட்சிகளும் காட்சிதரு கடவுளரும் எல்லாம்
பிள்ளைவிளை யாட்டெனநன் கறிவித்திங் கெனையே
பிள்ளைஎனக் கொண்டுபிள்ளைப் பெயரிட்ட பதியே
தள்ளரிய மெய்யடியார் போற்றமணி மன்றில்
தனிநடஞ்செய் அரசேஎன் சாற்றும்அணிந் தருளே. 84

621 நால்வருணம் ஆசிரமம் ஆசாரம் முதலா
நவின்றகலைச் சரிதம் எலாம் பிள்ளைவிளை யாட்டே
மேல்வருணம் தோல்வருணம் கண்டறிவார் இலைநீ
விழித்திதுபார் என்றெனக்கு விளம்பியசற் குருவே
கால்வருணங் கலையாதே வீணில்அலை யாதே
காண்பனஎல் லாம்எனக்குக் காட்டியமெய்ப் பொருளே
மால்வருணங் கடந்தவரை மேல்வருணத் தேற்ற
வயங்குநடந் தரசேஎன் மாலைஅணிந் தருளே. 85

622 எவ்விடத்தும் எவ்வுயிர்க்கும் இலங்குசிவம் ஒன்றே
என்னானை என்மகனே இரண்டில்லை ஆங்கே
செவ்விடத்தே அருளொடுசேர்த் திரண்டெனக்கண் டறிநீ
திகைப்படையேல் என்றெனக்குச் செப்பியசற் குருவே
அவ்விடத்தே உவ்விடத்தே அமர்ந்ததுபோல் காட்டி
அங்குமிங்கும் அப்புறமும் எங்குநிறை பொருளே
ஒவ்விடச்சிற் சபைஇடத்தும் பொற்சபையின் இடத்தும்
ஓங்குநடத் தரசேஎன் உரையும்அணிந் தருளே. 86

623 இயல்வேதா கமங்கள்புரா ணங்கள்இதி காசம்
இவைமுதலா இந்திரசா லங்கடையா உரைப்பார்
மயல்ஒருநூல் மாத்திரந்தான் சாலம்என அறிந்தார்
மகனேநீ நூல்அனைத்தும் சாலம்என அறிக
செயல்அனைத்தும் அருள்ஒளியால் காண்கஎன எனக்கே
திருவுளம்பற் றியஞான தேசிகமா மணியே
அயல்அறியா அறிவுடையார் எல்லாரும் போற்ற
ஆடுகின்ற அரசேஎன் அலங்கல்அணிந் தருளே. 87

624 தோன்றியவே தாகமத்தைச் சாலம்என உரைத்தேம்
சொற்பொருளும் இலக்கியமும் பொய்எனக்கண் டறியேல்
ஊன்றியவே தாகமத்தின் உண்மைநினக் காகும்
உலகறிவே தாகமத்தைப் பொய்எனக்கண் டுணர்வாய்

Koviloor Digital Library

ஆன்றதிரு அருட்செங்கோல் நினக்களித்தோம் நீயே
ஆள்கஅருள் ஒளியால்என் றளித்ததனிச் சிவமே
ஏன்றதிரு வமுதெனக்கும் ஈந்தபெரும் பொருளே
இலங்குநடத் தரசேஎன் இசையும்அணிந் தருளே. 88

625 நான்முகர்நல் உருத்திரர்கள் நாரணர்இந் திரர்கள்
நவில்அருகர் புத்தர்முதல் மதத்தலைவர் எல்லாம்
வான்முகத்தில் தோன்றிஅருள் ஒளிசிறிதே அடைந்து
வானகத்தும் வையகத்தும் மனம்போன படியே
தேன்முகந்துண் டவர்எனவே விளையாடா நின்ற
சிறுபிள்ளைக் கூட்டம்என அருட்பெருஞ்ஜோ தியினால்
தான்மிகக்கண் டறிகஎனச் சாற்றியசற் குருவே
சபையில்நடத் தரசேஎன் சாற்றும்அணிந் தருளே. 89

626 தவறாத வேதாந்த சித்தாந்த முதலாச்
சாற்றுகின்ற அந்தமெலாம் தனித்துரைக்கும் பொருளை
இவறாத சுத்தசிவ சன்மார்க்க நிலையில்
இருந்தருளாம் பெருஞ்ஜோதி கொண்டறிதல் கூடும்
எவராலும் பிறிதொன்றால் கண்டறிதல் கூடா
தென்ஆணை என்மகனே அருட்பெருஞ்ஜோ தியைத்தான்
தவறாது பெற்றனைநீ வாழ்கஎன்ற பதியே
சபையில்நடத் தரசேஎன் சாற்றும்அணிந் தருளே. 90

627 ஐயமுறேல் என்மகனே இப்பிறப்பிற் றானே
அடைவதெலாம் அடைந்தனைநீ அஞ்சலைஎன் றருளி
வையமிசைத் தனிஇருத்தி மணிமுடியும் சூட்டி
வாழ்கஎன வாழ்த்தியஎன் வாழ்க்கைமுதற் பொருளே
துய்யஅருட் பெருஞ்சோதி சுத்தசிவ வெளியே
சுகமயமே எல்லாஞ்செய் வல்லதனிப் பதியே
உய்யுநெறி காட்டிமணி மன்றிடத்தே நடிக்கும்
ஒருமைநடத் தரசேஎன் உரையும்அணிந் தருளே. 91

628 காலையிலே என்றனக்கே கிடைத்தபெரும் பொருளே
களிப்பேஎன் கருத்தகத்தே கனிந்தநறுங் கனியே
மேலையிலே இம்மையிலே ஒருமையிலே தவத்தால்
மேவுகின்ற பெரும்பயனாம் விளைவைஎலாம் தருமச்
சாலையிலே ஒருபகலில் தந்ததனிப் பதியே
சமரசசன் மார்க்கசங்கத் தலைஅமர்ந்த நிதியே
மாலையிலே சிறந்தமொழி மாலைஅணிந் தாடும்
மாநடத்தென் அரசேஎன் மாலையும்ஏற் றருளே. 92

Koviloor Digital Library

629 சிற்பதமும் தற்பதமும் பொற்பதத்தே காட்டும்
சிவபதமே ஆனந்தத் தேம்பாகின் பதமே
சொற்பதங்கள் கடந்ததன்றி முப்பதமும் கடந்தே
துரியபத முங்கடந்த பெரியதனிப் பொருளே
நற்பதம்என் முடிசூட்டிக் கற்பதெலாங் கணத்தே
நான்அறிந்து தானாக நல்கியஎன் குருவே
பற்பதத்துத் தலைவரெலாம் போற்றமணி மன்றில்
பயிலும்நடத் தரசேஎன் பாடல்அணிந் தருளே. 93

630 ஆதியிலே எனையாண்டென் அறிவகத்தே அமர்ந்த
அப்பாஎன் அன்பேஎன் ஆருயிரே அமுதே
வீதியிலே விளையாடித் திரிந்தபிள்ளைப் பருவம்
மிகப்பெரிய பருவம்என வியந்தருளி அருளாம்
சோதியிலே விழைவுறச்செய் தினியமொழி மாலை
தொடுத்திடச்செய் தணிந்துகொண்ட துரையேசிற் பொதுவாம்
நீதியிலே நிறைந்தநடத் தரசேஇன் றடியேன்
நிகழ்த்தியசொன் மாலையும்நீ திகழ்த்திஅணிந் தருளே. 94

631 கணக்குவழக் கதுகடந்த பெருவெளிக்கு நடுவே
கதிர்பரப்பி விளங்குகின்ற கண்நிறைந்த சுடரே
இணக்கமுறும் அன்பர்கள்தம் இதயவெளி முழுதும்
இனிதுவிளங் குறநடுவே இலங்கும்ஒளி விளக்கே
மணக்குநறு மணமேசின் மயமாய்என் உளத்தே
வயங்குதனிப் பொருளேஎன் வாழ்வேஎன் மருந்தே
பிணக்கறியாப் பெருந்தவர்கள் சூழமணி மன்றில்
பெருநடஞ்செய் அரசேஎன் பிதற்றும்அணிந் தருளே. 95

632 அடிச்சிறியேன் அச்சமெலாம் ஒருகணத்தே நீக்கி
அருளமுதம் மிகஅளித்தோர் அணியும்எனக் கணிந்து
கடிக்கமலத் தயன்முதலோர் கண்டுமிக வியப்பக்
கதிர்முடியும் சூட்டிஎனைக் களித்தாண்ட பதியே
வடித்தமறை முடிவயங்கு மாமணிப்பொற் சுடரே
மனம்வாக்குக் கடந்தபெரு வான்நடுவாம் ஒளியே
படித்தலத்தார் வான்தலத்தார் பரவியிடப் பொதுவில்
பரிந்தநடத் தரசேஎன் பாட்டும்அணிந் தருளே. 96

633 எத்துணையும் சிறியேனை நான்முகன்மால் முதலோர்
ஏறரிதாம் பெருநிலைமேல் ஏற்றிஉடன் இருந்தே
மெய்த்துணையாம் திருவருட்பே ரமுதம்மிக அளித்து
வேண்டியவா றடிநாயேன் விளையாடப் புரிந்து

Koviloor Digital Library

சுத்தசிவ சன்மார்க்க நெறிஒன்றே எங்கும்
துலங்கஅருள் செய்தபெருஞ் சோதியனே பொதுவில்
சித்துருவாய் நடம்புரியும் உத்தமசற் குருவே
சிற்சபைஎன் அரசேஎன் சிறுமொழிஏற் றருளே. 97

634 இருந்தஇடந் தெரியாதே இருந்தசிறி யேனை
எவ்வுலகில் உள்ளவரும் ஏத்திடமேல் ஏற்றி
அருந்தவரும் அயன்முதலாம் தலைவர்களும் உளத்தே
அதிசயிக்கத் திருவமுதும் அளித்தபெரும் பதியே
திருந்துமறை முடிப்பொருளே பொருள்முடியில் உணர்ந்தோர்
திகழமுடிந் துட்கொண்ட சிவபோகப் பொருளே
பெருந்தவர்கள் போற்றமணி மன்றில்நடம் புரியும்
பெருநடத்தென் அரசேஎன் பிதற்றும்அணிந் தருளே. 98

635 குணமறியேன் செய்தபெருங் குற்றமெலாங் குணமாக்
கொண்டருளி என்னுடைய குறிப்பெல்லாம் முடித்து
மணமுறுபே ரருள்இன்ப அமுதமெனக் களித்து
மணிமுடியும் சூட்டிஎனை வாழ்கஎன வாழ்த்தித்
தணவிலிலா தென்னுளத்தே தான்கலந்து நானும்
தானும்ஒரு வடிவாகித் தழைத்தோங்கப் புரிந்தே
அணவுறுபேர் அருட்சோதி அரசுகொடுத் தருளி
ஆடுகின்ற அரசேஎன் அலங்கல்அணிந் தருளே. 99

636 தலைகால்இங் கறியாதே திரிந்தசிறி யேனைத்
தான்வலிந்தாட் கொண்டருளித் தடைமுழுதும் தவிர்த்தே
மலைவறுமெய் அறிவளித்தே அருளமுதம் அருத்தி
வல்லபசத் திகளெல்லாம் மருவியிடப் புரிந்து
நிலையுறவே தானும்அடி யேனும்ஒரு வடிவாய்
நிறையநிறை வித்துயர்ந்த நிலையதன்மேல் அமர்த்தி
அலர்தலைப்பேர் அருட்சோதி அரசுகொடுத் தருளி
ஆடுகின்ற அரசேஎன் அலங்கல்அணிந் தருளே. 100

திருச்சிற்றம்பலம்

38. வரம்பில் வியப்பு

எழுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

637 பொன்புனை புயனும் அயனும்மற் றவரும் புகலரும் பெரியஓர் நிலையில்
இன்புரு வாகி அருளொடும் விளங்கி இயற்றலே ஆதிஐந் தொழிலும்
தன்பொதுச் சமுகத் தைவர்கள் இயற்றத் தனிஅர சியற்றும்ஓர் தலைவன்
அன்பெனும் குடிசை நுழைந்தன னானால் அவன்தனை மறுப்பவர் யாரே.

Koviloor Digital Library

638 மன்பதை வகுக்கும் பிரமர்நா ரணர்கள் மன்னுருத் திரர்களே முதலா
ஒன்பது கோடித் தலைவர்கள் ஆங்காங் குறுபெருந் தொழில்பல இயற்றி
இன்புறச் சிறிதே கடைக்கணித் தருளி இலங்கும்ஓர் இறைவன்இன் றடியேன்
அன்பெனும் குடிசை நுழைந்தனன் அந்தோ அவன்தனை மறுப்பவர் யாரே.
2

639 தன்னிக ரில்லாத் தலைவஎன் றரற்றித் தனித்தனி மறைகள்ஆ கமங்கள்
உன்னிநின் றோடி உணர்ந்துணர்ந் துணரா ஒருதனிப் பெரும்பதி உவந்தே
புன்னிக ரில்லாப் புலையனேன் பிழைகள் பொறுத்தருட் பூரண வடிவாய்
என்னுளம் புகுந்தே நிறைந்தனன் அந்தோ எந்தையைத் தடுப்பவர் யாரே.
3

640 பால்வகை ஆணோ பெண்கொலோ இருமைப் பாலதோ பால்உறா அதுவோ
ஏல்வகை ஒன்றோ இரண்டதோ அனாதி இயற்கையோ ஆதியின்* இயல்போ
மேல்வகை யாதோ எனமறை முடிகள் விளம்பிட விளங்கும்ஓர் தலைவன்
மால்வகை மனத்தேன் உளக்குடில் புகுந்தான் வள்ளலைத் தடுப்பவர் யாரே.
4

641 வரம்பெறும் ஆன்ம உணர்ச்சியும் செல்லா வருபர உணர்ச்சியும் மாட்டாப்
பரம்பர உணர்ச்சி தானும்நின் றறியாப் பராபர உணர்ச்சியும் பற்றா
உரம்பெற உணர்வார் யார்எனப் பெரியர் உரைத்திட ஓங்கும்ஓர் தலைவன்
கரம்பெறு கனிபோல் என்னுளம் புகுந்தான் கடவுளைத் தடுப்பவர் யாரே.
5

642 படைத்திடல் முதல்ஐந் தொழில்புரிந் திலங்கும் பரம்பர ஒளிஎலாம் அணுவில்
கிடைத்திடக் கீழ்மேல் நடுஎனக்காட்டாக் கிளர்ஒளி யாய்ஒளிக் கெல்லாம்
அடைத்தகா ரணமாய்க் காரணங் கடந்த அருட்பெருஞ் ஜோதியாம் ஒருவன்
கடைத்தனிச் சிறியேன் உளம்புகுந் தமர்ந்தான் கடவுளைத் தடுப்பவர் யாரே.
6

643 அளவெலாங் கடந்த பெருந்தலை அண்ட அடுக்கெலாம் அம்மஓர் அணுவின்
பிளவில்ஓர் கோடிக் கூற்றில்ஒன் றாகப் பேசநின் றோங்கிய பெரியோன்
களவெலாந் தவிர்த்தென் கருத்தெலாம் நிரப்பிக் கருணையா ரமுதளித் துளமாம்
வளவிலே புகுந்து வளர்கின்றான் அந்தோ வள்ளலைத் தடுப்பவர் யாரே.
7

644 உள்ளவாம் அண்ட கோடி கோடிகளில் உளவுயிர் முழுவதும் ஒருங்கே
கொள்ளைகொண் டிடினும் அணுத்துணை எனினும் குறைபடாப் பெருங்கொடைத் தலைவன்
கள்ளநெஞ் சகத்தேன் பிழைஎலாம் பொறுத்துக் கருத்தெலாம் இனிதுதந் தருளித்
தள்ளரும் திறத்தென் உள்ளகம் புகுந்தான் தந்தையைத் தடுப்பவர் யாரே.
8

645 அறிந்தன அறிந்தாங் கறிந்தறிந் தறியா தையகோ ஐயகோ அறிவின்
மறிந்தன மயர்ந்தேம் எனமறை அனந்தம் வாய்குழைந் துரைத்துரைத் துரையும்
முறிந்திடவாளா இருந்தஎன் றறிஞர் மொழியும்ஓர் தனிப்பெருந் தலைவன்
செறிந்தென துளத்தில் சேர்ந்தனன் அவன்றன் திருவுளம் தடுப்பவர் யாரே.
9

*அவதிஇல் – வே.ப.மு. பதிப்பு

Koviloor Digital Library

646 கருமுதற் கருவாய்க் கருவினுட் கருவாய்க் கருஎலாங் காட்டும்ஓர் கருவாய்க்
குருமுதற் குருவாய்க் குருஎலாங் கிடைத்த கொள்கையாய்க் கொள்கையோ டளவா
அருமுதல் அருவாய் அல்லவாய் அப்பால் அருட்பெருஞ் ஜோதியாந் தலைவன்
மருவிஎன் உளத்தில் புகுந்தனன் அவன்தன் வண்மையைத் தடுப்பவர் யாரே. 10

திருச்சிற்றம்பலம்

39. திருவடிப் புகழ்ச்சி

உள்ளம் புகுந்த திறம் வியத்தல்

எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

647 வானிருக்கும் பிரமர்களும் நாரணரும் பிறரும்
மாதவம்பன் னாட்புரிந்து மணிமாட நடுவே
தேனிருக்கும் மலரணைமேல் பளிக்கறையி னூடே
திருவடிசேர்த் தருள்கஎனச் செப்பிவருந் திடவும்
நானிருக்கும் குடிசையிலே வலிந்துநுழைந் தெனக்கே
நல்லதிரு அருளமுதம் நல்கியதன் றியும்என்
ஊனிருக்கும் குடிசையிலும் உவந்துநுழைந் தடியேன்
உள்ளமெனும் சிறுகுடிசை யுள்ளும்நுழைந் தனையே. 1

648 படிசெய்பிர மன்முதலோர் பற்பலநாள் வருந்திப்
பன்மணிகள் ஒளிவிளங்கப் பதித்தசிங்கா தனத்தே
அடிசெய்தெழுந் தருளிஎமை ஆண்டருளல் வேண்டும்
அரசேஎன் றவரவரும் ஆங்காங்கே வருந்த
வடிசெய்மறை முடிநடுவே மன்றகத்தே நடிக்கும்
மலரடிகள் சிவப்பஒரு வளமும்இலா அசுத்தக்
குடிசைநுழைந் தனையேஎன் றேசுவரே அன்பர்
கூசாமல் என்னுளமாம் குடிசைநுழைந் தனையே. 2

649 உள்ளபடி உள்ளதுவாய் உலகமெலாம் புகினும்
ஒருசிறிதும் தடையிலதாய் ஒளியதுவே மயமாய்
வெள்ளவெளி நடுவுளதாய் இயற்கையிலே விளங்கும்
வேதமுடி இலக்கியமா மேடையிலே அமர்ந்த
வள்ளன்மலர் அடிசிவப்ப வந்தெனது கருத்தின்
வண்ணமெலாம் உவந்தளித்து வயங்கியபே ரின்பம்
கொள்ளைகொளக் கொடுத்ததுதான் போதாதோ அரசே
கொடும்புலையேன் குடிசையிலும் குலவிநுழைந் தனையே. 3

Koviloor Digital Library

650 தடையறியாத் தகையினதாய்த் தன்னிகரில் லதுவாய்த்
தத்துவங்கள் அனைத்தினுக்கும் தாரகமாய் அவைக்கு
விடையறியாத் தனிமுதலாய் விளங்குவெளி நடுவே
விளங்குகின்ற சத்தியமா மேடையிலே அமர்ந்த
நடையறியாத் திருவடிகள் சிவந்திடவந் தெனது
நலிவனைத்துந் தவிர்த்தருளி ஞானஅமு தளித்தாய்
கொடையிதுதான் போதாதோ என்னரசே அடியேன்
குடிசையிலும் கோணாதே குலவிநுழைந் தனையே. 4

651 இறையளவும் துரிசிலதாய்த் தூய்மையதாய் நிறைவாய்
இயற்கையதாய் அனுபவங்கள் எவைக்கும்முத லிடமாய்
மறைமுடியோ டாகமத்தின் மணிமுடிமேல் முடியாய்
மன்னுகின்ற மெய்ஞ்ஞான மணிமேடை அமர்ந்த
நிறையருட்சீ ரடிமலர்கள் சிவந்திடவந் தடியேன்
நினைத்தஎலாம் கொடுத்தருளி நிலைபெறச்செய் தனையே
குறைவிலதிப் பெருவரந்தான் போதாதோ அரசே
கொடும்புலையேன் குடிசையிலும் குலவிநுழைந் தனையே. 5

652 உருவினதாய் அருவினதாய் உருஅருவாய் உணர்வாய்
உள்ளதுவாய் ஒருதன்மை உடையபெரும் பதியாய்
மருவியவே தாந்தமுதல் வகுத்திடுங்க லாந்த
வரை அதன்மேல் அருள்வெளியில் வயங்கியமே டையிலே
திருவுறவே அமர்ந்தருளும் திருவடிகள் பெயர்த்தே
சிறியேன்கண் அடைந்தருளித் திருவனைத்தும் கொடுத்தாய்
குருவேஎன் அரசே ஈ தமையாதோ அடியேன்
குடிசையிலும் கோணாதே குலவிநுழைந் தனையே. 6

653 மணமுளதாய் ஒளியினதாய் மந்திரஆ தரமாய்
வல்லதுவாய் நல்லதுவாய் மதங்கடந்த வரைப்பாய்
வணமுளதாய் வளமுளதாய் வயங்கும்ஒரு வெளியில்
மணிமேடை அமர்ந்ததிரு அடிமலர்கள் பெயர்த்தே
எணமுளஎன் பால்அடைந்தென் எண்ணமெலாம் அளித்தாய்
இங்கிதுதான் போதாதோ என்னரசே ஞானக்
குணமலையே அருளமுதே குருவேஎன் பதியே
கொடும்புலையேன் குடிசையிலும் குலவிநுழைந் தனையே. 7

654 சிரம்பெறுவே தாகமத்தின் அடிநடுவும் முடியும்
செல்லாத நிலைஅதுவாய் எல்லாம்வல் லதுவாய்
பரம்பரமாய்ப் பரம்பரமேற் பரவுசிதம் பரமாய்ப்
பதிவெளியில் விளங்குகின்ற மதிசிவமே டையிலே

Koviloor Digital Library

தரங்குலவ அமர்ந்ததிரு வடிகள்பெயர்த் தெனது
சார்படைந்தென் எண்ணமெலாம் தந்தனைஎன் அரசே
குரங்குமனச் சிறியேனுக் கிங்கிதுபோ தாதோ
கொடும்புலையேன் குடிசையிலும் குலவிநுழைந் தனையே. 8

655 பற்றியபற் றனைத்தினையும் பற்றறவிட் டறிவாம்
பான்மைஒன்றே வடிவாகிப் பழுத்தபெரி யவரும்
உற்றறிதற்* கரியஒரு பெருவெளிமேல் வெளியில்
ஓங்குமணி மேடைஅமர்ந் தோங்கியசே வடிகள்
பெற்றறியப் பெயர்த்துவந்தென் கருத்தனைத்துங் கொடுத்தே
பிறவாமல் இறவாமல் பிறங்கவைத்தாய்** அரசே
கொற்றமுளேன் தனக்கிதுதான் போதாதோ கொடியேன்
குடிசையிலும் கோணாதே குலவிநுழைந் தனையே. 9

656 கருவியொடு கரணமெலாம் கடந்துகடந் ததன்மேல்
காட்சியெலாம் கடந்ததன்மேல் காணாது கடந்து
ஒருநிலையின் அனுபவமே உருவாகிப் பழுத்த
உணர்ச்சியினும் காணாமல் ஓங்கும்ஒரு வெளியில்
மருவியதோர் மேடையிலே வயங்கியசே வடிகள்
மலர்த்திவந்தென் கருத்தனைத்தும் வழங்கினைஇன் புறவே
குருமணியே என்னரசே எனக்கிதுபோ தாதோ
கொடும்புலையேன் குடிசையிலும் குலவிநுழைந் தனையே. 10

திருச்சிற்றம்பலம்

40. கண்கொளாக்காட்சி

திருவடி புகழ்ச்சி

எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

657 அடுத்தானை அடியேனை அஞ்சேல் என்றிங்
காண்டானைச் சிறுநெறிகள் அடையா தென்னைத்
தடுத்தானைப் பெருநெறிக்குத் தடைதீர்த் தானைத்
தன்னருளும் தன்பொருளும் தானே என்பால்
கொடுத்தானைக் குற்றமெலாம் குணமாக் கொள்ளும்
குணத்தானைச் சமயமதக் குழிநின் றென்னை
எடுத்தானை எல்லாஞ்செய் வல்ல சித்தே
ஈந்தானைக் கண்டுகளித் திருக்கின் றேனே. 1

* உற்றிடுதெற் – படிவேறுபாடு. ஆ.பா.
** பிறங்கவைத்த – முதற்பதிப்பு. பொ.சு., ச.மு.க.

Koviloor Digital Library

658 விரித்தானைக் கருவிஎலாம் விரிய வேதம்
விதித்தானை மெய்ந்நெறியை மெய்யே எற்குத்*
தெரித்தானை நடம்பொதுவில் செய்கின் றானைச்
சிறியேனுக் கருள்ஒளியால் சிறந்த பட்டம்
தரித்தானைத் தானேநா னாகி என்றும்
தழைத்தானை எனைத்தடுத்த தடைகள் எல்லாம்
எரித்தானை என்உயிருக் கின்பா னானை
எம்மானைக் கண்டுகளித் திருக்கின் றேனே. 2

659 நட்டானை நட்டஎனை நயந்து கொண்டே
நம்மகன்நீ அஞ்சல்என நவின்றென் சென்னி
தொட்டானை எட்டிரண்டும் சொல்லி னானைத்
துன்பமெலாம் தொலைத்தானைச் சோர்ந்து தூங்க
ஒட்டானை மெய்அறிவே உருவாய் என்னுள்
உற்றானை உணர்ந்தார்க்கும் உணர்ந்து கொள்ள
எட்டானை என்னளவில் எட்டி னானை
எம்மானைக் கண்டுகளித் திருக்கின் றேனே. 3

660 சோற்றானைச் சோற்றில்உறும் சுகத்தி னானைத்
துளக்கம்இலாப் பாரானை நீரா னானைக்
காற்றானை வெளியானைக் கனலா னானைக்
கருணைநெடுங் கடலானைக் களங்கர் காணத்
தோற்றானை நான்காணத் தோற்றி னானைச்
சொல்லறியேன் சொல்லியபுன் சொல்லை யெல்லாம்
ஏற்றானை என்னுளத்தில் எய்தி னானை
எம்மானைக் கண்டுகளித் திருக்கின் றேனே. 4

661 சேர்த்தானை என்றனைத்தன் அன்ப ரோடு
செறியாத மனஞ்செறியச் செம்பொற் றாளில்
ஆர்த்தானை அம்பலத்தில் ஆடா நின்ற
ஆனந்த நடத்தானை அருட்கண் நோக்கம்
பார்த்தானைப் பாராரைப் பாரா தானைப்
பார்ப்பறவே பார்த்திருக்கப் பண்ணி என்னை
ஈர்த்தானை ஐந்தொழில்நீ இயற்றென் றானை
எம்மானைக் கண்டுகளித் திருக்கின் றேனே. 5

662 முளையானைச் சுத்தசிவ வெளியில் தானே
முளைத்தானை மூவாத முதலா னானைக்
களையானைக் களங்கமெலாம் களைவித் தென்னைக்
காத்தானை என்பிழையைக் கருதிக் கோபம்

---

* விரைத்தானை மெய்யே என்னை – பி.இரா. பதிப்பு

Koviloor Digital Library

விளையானைச் சிவபோகம் விளைவித் தானை
வேண்டாமை வேண்டல்இவை மேவி என்றும்
இளையானை மூத்தானை மூப்பி லானை
எம்மானைக் கண்டுகளித் திருக்கின் றேனே. 6

663 புயலானை மழையானை அதிர்ப்பி னானைப்
போற்றியமின் ஒளியானைப் புனித ஞானச்
செயலானைச் செயலெல்லாந் திகழ்வித் தானைத்
திருச்சிற்றம் பலத்தானைத் தெளியார் உள்ளே
அயலானை உறவானை அன்பு ளானை
அறிந்தாரை அறிந்தானை அறிவால் அன்றி
இயலானை எழிலானைப் பொழிலா னானை
எம்மானைக் கண்டுகளித் திருக்கின் றேனே. 7

664 தாயானைத் தந்தைஎனக் காயி னானைச்
சற்குருவு மானானைத் தமியேன் உள்ளே
மேயானைக் கண்காண விளங்கி னானை
மெய்ம்மைஎனக் களித்தானை வேதஞ் சொன்ன
வாயானை வஞ்சம்இலா மனத்தி னானை
வரங்கொடுக்க வல்லானை மணிமன் றன்றி
ஏயானைத் துரியநடு விருக்கின் றானை
எம்மானைக் கண்டுகளித் திருக்கின் றேனே. 8

665 தழைத்தானைத் தன்னைஒப்பார் இல்லா தானைத்
தானேதா னானானைத் தமிய னேனைக்
குழைத்தானை என்கையிலோர் கொடைதந் தானைக்
குறைகொண்டு நின்றேனைக் குறித்து நோக்கி
அழைத்தானை அருளமுதம் அளிக்கின் றானை
அச்சமெலாம் தவிர்த்தானை அன்பே என்பால்
இழைத்தானை என்னிதயத் திருக்கின் றானை
எம்மானைக் கண்டுகளித் திருக்கின் றேனே. 9

666 உடையானை அருட்ஜோதி உருவி னானை
ஓவானை மூவானை உலவா இன்பக்
கொடையானை என்குறைதீர்த் தென்னை ஆண்டு
கொண்டானைக் கொல்லாமை குறித்தி டாரை
அடையானைத் திருச்சிற்றம் பலத்தி னானை
அடியேனுக் கருளமுதம் அளிக்க வேபின்
இடையானை என்னாசை எல்லாந் தந்த
எம்மானைக் கண்டுகளித் திருக்கின் றேனே. 10

திருச்சிற்றம்பலம்

Koviloor Digital Library

41. காட்சிக் களிப்பு

திருவடிப் புகழ்ச்சி - 3

எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

667 அறிந்தானை அறிவறிவுக் கறிவா னானை
அருட்பெருஞ்ஜோ தியினானை அடியேன் அன்பில்
செறிந்தானை எல்லாஞ்செய் வல்ல சித்தாய்ச்
சிறந்தானைச் சிறுநெறியில் சென்றார் தம்மைப்
பிறிந்தானை என்னுளத்தில் கலந்து கொண்ட
பிரியமுள பெருமானைப் பிறவி தன்னை
எறிந்தானை எனைஎறியா தெடுத்தாண் டானை
எம்மானைக் கண்டுகளித் திருக்கின் றேனே. 1

668 பாலானைத் தேனானைப் பழத்தி னானைப்
பலனுறுசெங் கரும்பானைப் பாய்ந்து வேகாக்
காலானைக் கலைசாகாத் தலையி னானைக்
கால்என்றும் தலையென்றும் கருதற் கெய்தா
மேலானை மேல்நிலைமேல் அமுதா னானை
மேன்மேலும் எனதுளத்தே விளங்கல் அன்றி
ஏலானை என்பாடல் ஏற்றுக் கொண்ட
எம்மானைக் கண்டுகளித் திருக்கின் றேனே. 2

669 உள்ளானைக் கதவுதிறந் துள்ளே காண
உளவெனக்கே உரைத்தானை உணரார் பாட்டைக்
கொள்ளானை என்பாட்டைக் குறிக்கொண் டானைக்
கொல்லாமை விரதமெனக் கொண்டார் தம்மைத்
தள்ளானைக் கொலைபுலையைத் தள்ளா தாரைத்
தழுவானை யான்புரிந்த தவறு நோக்கி
எள்ளானை இடர்தவிர்த் திங்கென்னை ஆண்ட
எம்மானைக் கண்டுகளித் திருக்கின் றேனே. 3

670 உறவானை என்னுயிர்க்குள் உயிரா னானை
உறுபிழைகள் செயினும்அவை உன்னி என்னை
மறவானை அறவாழி வழங்கி னானை
வஞ்சகர்க்குத் திருக்கோயில் வழிக்க பாடந்
திறவானை என்னளவில் திறந்து காட்டிச்
சிற்சபையும் பொற்சபையும் சேர்வித் தானை
இறவானைப் பிறவானை இயற்கை யானை
எம்மானைக் கண்டுகளித் திருக்கின் றேனே. 4

Koviloor Digital Library

671 அகத்தானைப் புறத்தானை அணுவா னானை
அணுவினுக்குள் அணுவானை அதனுள் ளானை
மகத்தானை மகத்தினும்ஓர் மகத்தா னானை
மாமகத்தாய் இருந்தானை வயங்கா நின்ற
சகத்தானை அண்டமெலாம் தானா னானைத்
தனிஅருளாம் பெருங்கருணைத் தாயா னானை
இகத்தானைப் பரத்தானைப் பொதுவில் ஆடும்
எம்மானைக் கண்டுகளித் திருக்கின் றேனே. 5

672 செய்யானைக் கரியானைப் பசுமை யானைத்
திகழ்ந்திடுபொன் மையினானை வெண்மை யானை
மெய்யானைப் பொய்யானை மெய்பொய் இல்லா
வெளியானை ஒளியானை விளம்பு வார்க்குக்
கையானை என்னைஎடுத்து அணைத்துக் கொண்ட
கையானை என்னையென்றும் கையா தானை
எய்யானை எவ்வுலகும் ஏத்த என்னை
ஈன்றானைக் கண்டுகளித் திருக்கின் றேனே. 6

673 மருந்தானை மணியானை வழுத்தா நின்ற
மந்திரங்க ளானானை வான நாட்டு
விருந்தானை உறவானை நண்பி னானை
மேலானைக் கீழானை மேல்கீழ் என்னப்
பொருந்தானை என்னுயிரில் பொருந்தி னானைப்
பொன்னானைப் பொருளானைப் பொதுவாய் எங்கும்
இருந்தானை இருப்பானை இருக்கின் றானை
எம்மானைக் கண்டுகளித் திருக்கின் றேனே. 7

674 ஆன்றானை அறிவானை அழிவி லானை
அருட்பெருஞ்ஜோ தியினானை அலர்ந்த ஜோதி
மூன்றானை இரண்டானை ஒன்றா னானை
முன்னானைப் பின்னானை மூட நெஞ்சில்
தோன்றானைத் தூயருளே தோன்றி னானைச்
சுத்தசிவ சன்மார்க்கந் துலங்க என்னை
ஈன்றானை எல்லாமாய் அல்லா தானை
எம்மானைக் கண்டுகளித் திருக்கின் றேனே. 8

675 தோய்ந்தானை என்னுளத்தே என்பால் அன்பால்
சூழ்ந்தானை யான்தொடுத்த சொற்பூ மாலை
வேய்ந்தானை என்னுடைய வினைதீர்த் தானை
வேதாந்த முடிமுடிமேல் விளங்கி னானை

Koviloor Digital Library

வாய்ந்தானை எய்ப்பிடத்தே வைப்பா னானை
மணிமன்றில் நடிப்பானை வரங்கள் எல்லாம்
ஈய்ந்தானை* ஆய்ந்தவர்தம் இதயத் தானை
எம்மானைக் கண்டுகளித் திருக்கின் றேனே. 9

676 நன்றானை மன்றகத்தே நடிக்கின் றானை
நாடாமை நாடலிவை நடுவே ஓங்கி
நின்றானைப் பொன்றாத நிலையி னானை
நிலைஅறிந்து நில்லாதார் நெஞ்சி லேசம்
ஒன்றானை எவ்வுயிர்க்கும் ஒன்றா னானை
ஒருசிறியேன் தனைநோக்கி உளம்நீ அஞ்சேல்
என்றானை என்றும்உள இயற்கை யானை
எம்மானைக் கண்டுகளித் திருக்கின் றேனே. 10

திருச்சிற்றம்பலம்

42. கண்டு கனிந்து கலந்து கொளல்

திருவடிப் புகழ்ச்சி

எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

677 அருளரசை அருட்குருவை அருட்பெருஞ் ஜோதியைஎன்
அம்மையைஎன் அப்பனைஎன் ஆண்டவனை அமுதைத்
தெருளுறும்என் உயிரைஎன்றன் உயிர்க்குயிரை எல்லாம்
செய்யவல்ல தனித்தலைமைச் சித்தசிகா மணியை
மருவுபெரு வாழ்வைஎல்லா வாழ்வும்எனக் களித்த
வாழ்முதலை மருந்தினைமா மணியைஎன்கண் மணியைக்
கருணைநடம் புரிகின்ற கனகசபா பதியைக்
கண்டுகொண்டேன் கனிந்துகொண்டேன் கலந்துகொண்டேன் களித்தே. 1

678 திருத்தகுவே தாந்தமொடு சித்தாந்த முதலாத்
திகழ்கின்ற அந்தமெலாம் தேடியுங்கண் டறியா
ஒருத்தனைஉள் ளொளியைஒளிர் உள்ளொளிக்குள் ஒளியை
உள்ளபடி உள்ளவனை உடையபெருந் தகையை
நிருத்தனைமெய்ப் பொருளான நின்மலனைச் சிவனை
நித்தியனைச் சத்தியனை நிற்குணனை எனது
கருத்தனைச்சிற் சபையோங்கு கடவுளைஎன் கண்ணால்
கண்டுகொண்டேன் கனிந்துகொண்டேன் கலந்துகொண்டேன் களித்தே. 2

* ஈந்தாணை – முதற் பதிப்பு, பொ.சு., பி. இரா., ச.மு.க.

Koviloor Digital Library

679 பாட்டுவந்து பரிசளித்த பதியைஅருட் பதியைப்
பசுபதியைக் கனகசபா பதியைஉமா பதியைத்
தேட்டமிகும் பெரும்பதியைச் சிவபதியை எல்லாம்
செய்யவல்ல தனிப்பதியைத் திகழ்தெய்வப் பதியை
ஆட்டியல்செய் தருள்பரம பதியைநவ பதியை
ஆனந்த நாட்டினுக்கோர் அதிபதியை ஆசை
காட்டிஎனை மணம்புரிந்தென் கைபிடித்த பதியைக்
கண்டுகொண்டேன் கனிந்துகொண்டேன் கலந்துகொண்டேன் களித்தே.
3

680 மதித்திடுதல் அரியஒரு மாணிக்க மணியை
வயங்கியபே ரொளியுடைய வச்சிரமா மணியைத்
துதித்திடுவே தாகமத்தின் முடிமுடித்த மணியைத்
சுயஞ்ஜோதித் திருமணியைச் சுத்தசிவ மணியை
விதித்தல்முதல் தொழில்இயற்று வித்தகுரு மணியை
விண்மணியை அம்மணிக்குள் விளங்கியமெய்ம் மணியைக்
கதித்தசுக மயமணியைச் சித்தசிகா மணியைக்
கண்டுகொண்டேன் கனிந்துகொண்டேன் கலந்துகொண்டேன் களித்தே.
4

681 மாற்றைஅளந் தறிந்திலம்என் றருமறைஆ கமங்கள்
வழுத்தமணி மன்றோங்கி வயங்கும்அருட் பொன்னை
ஆற்றல்மிகு பெரும்பொன்னை ஐந்தொழிலும் புரியும்
அரும்பொன்னை என்தன்னை ஆண்டசெழும் பொன்னைத்
தேற்றமிகு பசும்பொன்னைச் செம்பொன்னை ஞான
சிதம்பரத்தே விளங்கிவளர் சிவமயமாம் பொன்னைக்
காற்றனல்ஆ காயம்எலாம் கலந்தவண்ணப் பொன்னைக்
கண்டுகொண்டேன் கனிந்துகொண்டேன் கலந்துகொண்டேன் களித்தே.
5

682 ஆய்தருவே தாகமத்தின் அடிமுடிநின் றிலங்கும்
அரியபெரும் பொருளைஅவைக் கனுபவமாம் பொருளை
வேய்தருதத் துவப்பொருளைத் தத்துவங்கள் விளங்க
விளங்குகின்ற பரம்பொருளைத் தத்துவங்கள் அனைத்தும்
தோய்தரல்இல் லாததனிச் சுயஞ்ஜோதிப் பொருளைச்
சுத்தசிவ மயமான சுகாதீதப் பொருளைக்
காய்தரல்இல் லாதென்னைக் காத்தஅருட் பொருளைக்
கண்டுகொண்டேன் கனிந்துகொண்டேன் கலந்துகொண்டேன் களித்தே.
6

683 திருத்தமிகு முனிவர்களும் தேவர்களும் அழியாச்
சித்தர்களும் சிருட்டிசெயும் திறத்தர்களும் காக்கும்
அருத்தமிகு தலைவர்களும் அடக்கிடல்வல் லவரும்
அலைபுரிகின் றவர்களும்உள் அனுக்கிரகிப் பவரும்

Koviloor Digital Library

பொருத்துமற்றைச் சத்திகளும் சத்தர்களும் எல்லாம்
 பொருள்எதுவோ எனத்தேடிப் போகஅவர் அவர்தம்
கருத்தில்ஒளித் திருக்கின்ற கள்வனைஎன் கண்ணால்
 கண்டுகொண்டேன் கனிந்துகொண்டேன் கலந்துகொண்டேன் களித்தே. 7

684 கோணாத நிலையினராய்க் குறிகுணங்கண் டிடவும்
 கூடாத வண்ணம்மலைக் குகைமுதலாம் இடத்தில்
ஊணாதி விடுத்துயிர்ப்பை அடக்கிமனம் அடக்கி
 உறுபொறிகள் அடக்கிவரும் உகங்கள்பல கோடித்
தூணாக அசைதல்இன்றித் தூங்காது விழித்த
 தூயசதா நிட்டர்களும் துரியநிலை இடத்தும்
காணாத வகைஒளித்த கள்வனைஎன் கண்ணால்
 கண்டுகொண்டேன் கனிந்துகொண்டேன் கலந்துகொண்டேன் களித்தே. 8

685 நீட்டாய சித்தாந்த நிலையினிடத் தமர்ந்தும்
 நிகழ்கின்ற வேதாந்த நெறியினிடத் திருந்தும்
ஆட்டாய போதாந்தம் அலைவறுநா தாந்தம்
 ஆதிமற்றை அந்தங்கள் அனைத்தினும்உற் றறிந்தும்
வேட்டாசைப் பற்றனைத்தும் விட்டுலகம் போற்ற
 வித்தகராய் விளங்குகின்ற முத்தர்கட்கும் தன்னைக்
காட்டாமல் ஒளித்திருக்கும் கள்வனையென் கண்ணால்
 கண்டுகொண்டேன் கனிந்துகொண்டேன் கலந்துகொண்டேன் களித்தே. 9

686 மருள்நெறிசேர் மலஉடம்பை அழியாத விமல
 வடிவாக்கி எல்லாஞ்செய் வல்லசித்தாம் பொருளைத்
தருணமது தெரிந்தெனக்குத் தானேவந் தளித்த
 தயாநிதியை எனைஈன்ற தந்தையைஎன் தாயைப்
பொருள்நிறைசிற் றம்பலத்தே விளங்குகின்ற பதியைப்
 புகல்அரிதாம் சுத்தசிவ பூரணமெய்ச் சுகத்தைக்
கருணைஅருட் பெருஞ்ஜோதிக் கடவுளைஎன் கண்ணால்
 கண்டுகொண்டேன் கனிந்துகொண்டேன் கலந்துகொண்டேன் களித்தே. 10

திருச்சிற்றம்பலம்

Koviloor Digital Library

43. இறை திருக்காட்சி

திருவடிப் புகழ்ச்சி

ஏழுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

687 அருளெலாம் அளித்த அம்பலத் தமுதை
அருட்பெருஞ் ஜோதியை அரசை
மருளெலாம் தவிர்த்து வாழ்வித்த மருந்தை
வள்ளலை மாணிக்க மணியைப்
பொருளெலாம் கொடுத்தென் புந்தியில் கலந்த
புண்ணிய நிதியைமெய்ப் பொருளைத்
தெருளெலாம் வல்ல சித்தைமெய்ஞ் ஞான
தீபத்தைக் கண்டுகொண் டேனே. 1

688 துன்பெலாம் தவிர்த்த துணையைஎன் உள்ளத்
துரிசெலாந் தொலைத்தமெய்ச் சுகத்தை
என்பொலா மணியை என்சிகா மணியை
என்னிரு கண்ணுள்மா மணியே
அன்பெலாம் அளித்த அம்பலத் தமுதை
அருட்பெருஞ் ஜோதியை அடியேன்
என்பெலாம் உருக்கி இன்பெலாம் அளித்த
எந்தையைக் கண்டுகொண் டேனே. 2

689 சிதத்திலே ஊறித் தெளிந்ததெள் ளமுதைச்
சித்தெலாம் வல்லமெய்ச் சிவத்தைப்
பதத்திலே பழுத்த தனிப்பெரும் பழத்தைப்
பரம்பர வாழ்வைஎன் பதியை
மதத்திலே மயங்கா மதியிலே விளைந்த
மருந்தைமா மந்திரந் தன்னை
இதத்திலே என்னை இருத்திஆட் கொண்ட
இறைவனைக் கண்டுகொண் டேனே. 3

690 உணர்ந்தவர் உளம்போன் றென்னுளத் தமர்ந்த
ஒருபெரும் பதியைஎன் உவப்பைப்
புணர்ந்தெனைக் கலந்த போகத்தை எனது
பொருளைஎன் புண்ணியப் பயனைக்
கொணர்ந்தொரு பொருள்என் கரத்திலே கொடுத்த
குருவைஎண் குணப்பெருங் குன்றை
மணந்தசெங் குவளை மலர்எனக் களித்த
வள்ளலைக் கண்டுகொண் டேனே. 4

Koviloor Digital Library

691 புல்லிய நெறிநீத் தெனைஎடுத் தாண்ட
பொற்சபை அப்பனை வேதம்
சொல்லிய படிஎன் சொல்எலாம் கொண்ட
ஜோதியைச் சோதியா தென்னை
மல்லிகை மாலை அணிந்துளே கலந்து
மன்னிய பதியைஎன் வாழ்வை
எல்லியும் இரவும் என்னைவிட் டகலா
இறைவனைக் கண்டுகொண் டேனே. 5

692 பண்ணிய தவமும் பலமும்மெய்ப் பலஞ்செய்
பதியுமாம் ஒருபசு பதியை
நண்ணிஎன் உளத்தைத் தன்னுளம் ஆக்கி
நல்கிய கருணைநா யகனை
எண்ணிய படியே எனக்கருள் புரிந்த
இறைவனை மறைமுடி இலங்கும்
தண்ணிய விளக்கைத் தன்னிக ரில்லாத்
தந்தையைக் கண்டுகொண் டேனே. 6

693 பெண்மையை வயங்கும் ஆண்மையை அனைத்தும்
பிறங்கிய பொதுமையைப்பெரிய
தண்மையை எல்லாம் வல்லஓர் சித்த
சாமியைத் தயாநிதி தன்னை
வண்மையை அழியா வரத்தினை ஞான
வாழ்வைஎன் மதியிலே விளங்கும்
உண்மையை என்றன் உயிரைஎன் உயிருள்
ஒருவனைக் கண்டுகொண் டேனே. 7

694 ஆதியை ஆதி அந்தமீ தெனஉள்
அறிவித்த அறிவைஎன் அன்பைச்
ஜோதியை எனது துணையைஎன் சுகத்தைச்
சுத்தசன் மார்க்கத்தின் துணிபை
நீதியை எல்லா நிலைகளும் கடந்த
நிலையிலே நிறைந்தமா நிதியை
ஓதியை ஓதா துணர்த்திய வெளியை
ஒளிதனைக் கண்டுகொண் டேனே. 8

695 என்செயல் அனைத்தும் தன்செயல் ஆக்கி
என்னைவாழ் விக்கின்ற பதியைப்
பொன்செயல் வகையை உணர்த்திஎன் உளத்தே
பொருந்திய மருந்தையென் பொருளை

Koviloor Digital Library

வன்செயல் அகற்றி உலகெலாம் விளங்க
வைத்தசன் மார்க்கசற் குருவைக்
கொன்செயல் ஒழித்த சத்திய ஞானக்
கோயிலில் கண்டுகொண் டேனே. 9

696 புன்னிக ரில்லேன் பொருட்டிருட் டிரவில்
போந்தருள் அளித்தசற் குருவைக்
கன்னிகர் மனத்தைக் கரைத்தெனுட் கலந்த
கருணையங் கடவுளைத் தனது
சொன்னிகர் எனஎன் சொல்எலாங் கொண்டே
தோளுறப் புனைந்தமெய்த் துணையைத்
தன்னிக ரில்லாத் தலைவனை எனது
தந்தையைக் கண்டுகொண் டேனே. 10

697 ஏங்கலை மகனே தூங்கலை எனவந்
தெடுத்தெனை அணைத்தஎன் தாயை
ஓங்கிய எனது தந்தையை எல்லாம்
உடையஎன் ஒருபெரும் பதியைப்
பாங்கனில் என்னைப் பரிந்துகொண் டெல்லாப்
பரிசும்இங் களித்ததற் பரத்தைத்
தாங்கும்ஓர் நீதித் தனிப்பெருங் கருணைத்
தலைவனைக் கண்டுகொண் டேனே. 11

698 துன்புறேல் மகனே தூங்கலை எனஎன்
சோர்வெலாந் தவிர்த்தநற் றாயை
அன்புளே கலந்த தந்தையை என்றன்
ஆவியைப் பாவியேன் உளத்தை
இன்பிலே நிறைவித் தருள்உரு வாக்கி
இனிதமர்ந் தருளிய இறையை
வன்பிலாக் கருணை மாநிதி எனும்என்
வள்ளலைக் கண்டுகொண் டேனே. 12

699 நனவினும் எனது கனவினும் எனக்கே
நண்ணிய தண்ணிய அமுதை
மனனுறு மயக்கம் தவிர்த்தருட் ஜோதி
வழங்கிய பெருந்தயா நிதியைச்
சினமுதல் ஆறுந் தீர்த்துளே அமர்ந்த
சிவகுரு பதியைஎன் சிறப்பை
உனலரும் பெரிய துரியமேல் வெளியில்
ஒளிதனைக் கண்டுகொண் டேனே. 13

Koviloor Digital Library

700 கரும்பிலின் சாற்றைக் கனிந்தமுக் கனியைக்
கருதுகோற் றேன்நறுஞ் சுவையை
அரும்பெறல் அமுதை அறிவைஎன் அன்பை
ஆவியை ஆவியுட் கலந்த
பெருந்தனிப் பதியைப் பெருஞ்சுகக் களிப்பைப்
பேசுதற் கரும்பெரும் பேற்றை
விரும்பிஎன் உளத்தை இடங்கொண்டு விளங்கும்
விளக்கினைக் கண்டுகொண் டேனே. 14

701 களங்கொளுங் கடையேன் களங்கெலாந் தவிர்த்துக்
களிப்பெலாம் அளித்தசர்க் கரையை
உளங்கொளுந் தேனை உணவுணத் தெவிட்டா
துள்ளகத் தூறும்இன் னமுதை
வளங்கொளும் பெரிய வாழ்வைஎன் கண்ணுள்
மணியைஎன் வாழ்க்கைமா நிதியைக்
குளங்கொளும் ஒளியை ஒளிக்குளே விளங்கும்
குருவையான் கண்டுகொண் டேனே. 15

702 சிதம்பர ஒளியைச் சிதம்பர வெளியைச்
சிதம்பர நடம்புரி சிவத்தைப்
பதந்தரு பதத்தைப் பரம்பர பதத்தைப்
பதிசிவ பதத்தைத்தற் பதத்தை
இதந்தரும் உண்மைப் பெருந்தனி நிலையை
யாவுமாய் அல்லவாம் பொருளைச்
சதந்தருஞ் சச்சி தானந்த நிறைவைச்
சாமியைக் கண்டுகொண் டேனே. 16

703 ஆரண முடிமேல் அமர்பிர மத்தை
ஆகம முடிஅமர் பரத்தைக்
காரண வரத்தைக் காரிய தரத்தைக்
காரிய காரணக் கருவைத்
தாரண நிலையைத் தத்துவ பதியைச்
சத்திய நித்திய தலத்தைப்
பூரண சுகத்தைப் பூரண சிவமாம்
பொருளினைக் கண்டுகொண் டேனே. 17

704 சுத்தவே தாந்த பிரமரா சியத்தைச்
சுத்தசித் தாந்தரா சியத்தைத்
தத்துவா தீதத் தனிப்பெரும் பொருளைச்
சமரச சத்தியப் பொருளைச்

Koviloor Digital Library

சித்தெலாம் வல்ல சித்தைஎன் அறிவில்
தெளிந்தபே ரனந்தத் தெளிவை
வித்தமா வெளியைச் சுத்தசிற் சபையின்
மெய்மையைக் கண்டுகொண் டேனே. 18

705 சமயமும் மதமும் கடந்ததோர் ஞான
சபைநடம் புரிகின்ற தனியைத்
தமைஅறிந் தவருட் சார்ந்தமெய்ச் சார்வைச்
சத்துவ நித்தசற் குருவை
அமைஎன் மனத்தைத் திருத்திநல் அருளார்
அமுதளித் தமர்ந்தஅற் புதத்தை
நிமலநிற் குணத்தைச் சிற்குணா கார
நீதியைக் கண்டுகொண் டேனே. 19

706 அளவைகள் அனைத்தும் கடந்துநின் றோங்கும்
அருட்பெருஞ் சோதியை உலகக்
களவைவிட் டவர்தங் கருத்துளே விளங்கும்
காட்சியைக் கருணையங் கடலை
உளவைஎன் றனக்கே உரைத்தெலாம் வல்ல
ஒளியையும் உதவிய ஒளியைக்
குளவயின் நிறைந்த குருசிவ பதியைக்
கோயிலில் கண்டுகொண் டேனே. 20

707 சார்கலாந் தாதிச் சடாந்தமுங் கலந்த
சமரச சத்திய வெளியைச்
சோர்வெலாந் தவிர்த்தென் அறிவினுக் கறிவாய்த்
துலங்கிய ஜோதியைச் சோதிப்
பார்பெறாப் பதத்தைப் பதமெலாங் கடந்த
பரமசன் மார்க்கமெய்ப் பதியைச்
சேர்குணாந் தத்திற் சிறந்ததோர் தலைமைத்
தெய்வத்தைக் கண்டுகொண் டேனே. 21

708 அடிநடு முடியோர் அணுத்துணை யேனும்
அறிந்திடப் படாதமெய் அறிவைப்
படிமுதல் அண்டப் பரப்பெலாங் கடந்த
பதியிலே விளங்குமெய்ப் பதியைக்
கடியஎன் மனனாங் கல்லையும் கனியிற்
கடைக்கணித் தருளிய கருணைக்
கொடிவளர் இடத்துப் பெருந்தயா நிதியைக்
கோயிலில் கண்டுகொண் டேனே. 22

Koviloor Digital Library

709 பயமும்வன் கவலை இடர்முதல் அனைத்தும்
பற்றறத் தவிர்த்தருட் பரிசும்
நயமும்நற் றிருவும் உருவும்ஈங் கெனக்கு
நல்கிய நண்பைநன் னாத
இயமுற வெனது குளநடு நடஞ்செய்
எந்தையை என்னுயிர்க் குயிரைப்
புயனடு விளங்கும் புண்ணிய ஒளியைப்
பொற்புறக் கண்டுகொண் டேனே. 23

710 கலைநிறை மதியைக் கனலைச் செங் கதிரைக்
ககனத்தைக் காற்றினை அமுதை
நிலைநிறை அடியை அடிமுடி தோற்றா
நின்மல நிற்குண நிறைவை
மலைவறும் உளத்தே வயங்குமெய் வாழ்வை
வரவுபோக் கற்றசின் மயத்தை
அலையறு கருணைத் தனிப்பெருங் கடலை
அன்பினிற் கண்டுகொண் டேனே. 24

711 மும்மையை எல்லாம் உடையபே ரரசை
முழுதொருங் குணர்த்திய உணர்வை
வெம்மையைத் தவிர்த்திங் கெனக்கரு ளமுதம்
வியப்புற அளித்தமெய் விளைவைச்
செம்மையை எல்லாச் சித்தியும் என்பால்
சேர்ந்திடப் புரிஅருட் டிறத்தை
அம்மையைக் கருணை அப்பனை என்பேர்
அன்பனைக் கண்டுகொண் டேனே. 25

712 கருத்தனை எனது கண்அனை யவனைக்
கருணையா ரமுதெனக் களித்த
ஒருத்தனை என்னை உடையநா யகனை
உண்மைவே தாகம முடியின்
அருத்தனை வரனை அபயனைத் திருச்சிற்
றம்பலத் தருள்நடம் புரியும்
நிருத்தனை எனது நேயனை ஞான
நிலையனைக் கண்டுகொண் டேனே. 26

713 வித்தெலாம் அளித்த விமலனை எல்லா
விளைவையும் விளைக்கவல் லவனை
அத்தெலாங் காட்டும் அரும்பெறல் மணியை
ஆனந்தக் கூத்தனை அரசைச்

Koviloor Digital Library

சத்தெலாம் ஆன சயம்புவை ஞான
சபைத்தனித் தலைவனைத் தவனைச்
சித்தெலாம் வல்ல சித்தனை ஒன்றாந்
தெய்வத்தைக் கண்டுகொண் டேனே. 27

714 உத்தர ஞான சித்திமா புரத்தின்
ஓங்கிய ஒருபெரும் பதியை
உத்தர ஞான சிதம்பர ஒளியை
உண்மையை ஒருதனி உணர்வை
உத்தர ஞான நடம்புரி கின்ற
ஒருவனை உலகெலாம் வழுத்தும்
உத்தர ஞான சுத்தசன் மார்க்கம்
ஓதியைக் கண்டுகொண் டேனே. 28

715 புலைகொலை தவிர்த்த நெறியிலே என்னைப்
புணர்த்திய புனிதனை எல்லா
நிலைகளும் காட்டி அருட்பெரு நிலையில்
நிறுத்திய நிமலனை எனக்கு
மலைவறத் தெளிந்த அமுதளித் தழியா
வாழ்க்கையில் வாழ்வைத் தவனைத்
தலைவனை ஈன்ற தாயைஎன் உரிமைத்
தந்தையைக் கண்டுகொண் டேனே. 29

716 பனிஇடர் பயந்தீர்த் தெனக்கமு தளித்த
பரமனை என்னுளே பழுத்த
கனிஅனை யவனை அருட்பெருஞ் சோதிக்
கடவுளைக் கண்ணினுள் மணியைப்
புனிதனை எல்லாம் வல்லஓர் ஞானப்
பொருள்எனக் களித்தமெய்ப் பொருளைத்
தனியனை ஈன்ற தாயைஎன் உரிமைத்
தந்தையைக் கண்டுகொண் டேனே. 30

திருச்சிற்றம்பலம்

Koviloor Digital Library

44. திருவடி நிலை

எழுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

717 உலகுபல் கோடி கோடிகள் இடங்கொள் உலப்பிலா அண்டத்தின் பகுதி
அலகுகாண் பரிய பெரியகூட் டத்த அவைஎலாம் புறத்திறைச் சார்பில்
விலகுறா அணுவில் கோடியுள் ஒருகூற் றிருந்தென விருந்தன மிடைந்தே
இலகுபொற் பொதுவில் நடம்புரி தருணத்*தென்பர்வான் திருவடி நிலையே.
1

718 தடையுறாப் பிரமன் விண்டுருத் திரன்மா யேச்சுரன் சதாசிவன் விந்து
நடையுறாப் பிரமம் உயர்பரா சத்தி நவில்பர சிவம்எனும் இவர்கள்
இடையுறாத் திருச்சிற் றம்பலத் தாடும் இடதுகாற் கடைவிரல் நகத்தின்
கடையுறு துகள்என் றறிந்தனன் அதன்மேற் கண்டனன் திருவடி நிலையே.
2

719 அடர்மலத் தடையால் தடையுறும் அயன்மால் அரன்மயேச் சுரன்சதா சிவன்வான்
படர்தரு விந்து பிரணவப் பிரமம் பரைபரம் பரன்எனும் இவர்கள்
சுடர்மணிப் பொதுவில் திருநடம் புரியும் துணையடிப் பாதுகைப் புறத்தே
இடர்கெட வயங்கு துகள்என அறிந்தே ஏத்துவன் திருவடி நிலையே. 3

720 இகத்துழல் பகுதித் தேவர்இந் திரன்மால் பிரமன்ஈ சானனே முதலாம்
மகத்துழல் சமய வானவர் மன்றின் மலரடிப் பாதுகைப் புறத்தும்
புகத்தரம் பொருந்தா மலத்துறு சிறிய புழுக்கள்என் றறிந்தனன் அதன்மேல்
செகத்தொடர் பிகந்தார் உளத்தமர் ஒளியில் தெரிந்தனன் திருவடி நிலையே.
4

721 பொன்வணப் பொருப்பொன் றதுசகு ணாந்தம் போந்தவான் முடியதாங் கதன்மேல்
மன்வணச் ஜோதித் தம்பம்ஒன் றதுமா வயிந்துவாந் தத்ததாண் டதன்மேல்
என்வணச் ஜோதிக் கொடிபர நாதாந் தத்திலே இலங்கிய ததன்மேல்
தன்வணம் மணக்கும் ஒளிமல ராகத் தழுவினன் திருவடி நிலையே. 5

722 மண்முதல் பகர்பொன் வண்ணத்த வுளவான் மற்றவற் றுட்புறங் கீழ்மேல்
அண்ணுறு நனந்தர் பக்கம்என் றிவற்றின் அமைந்தன சத்திகள் அவற்றின்
கண்ணுறு சத்தர் எனும்இரு புடைக்கும் கருதுரு முதலிய விளங்க
நண்ணுறும் உபயம் எனமன்றில் என்று நவின்றனர் திருவடி நிலையே.6

723 தொகையள விவைஎன் றறிவரும் பகுதித் தொல்லையின் எல்லையும் அவற்றின்
வகையொடு விரியும் உளப்பட ஆங்கே மன்னிளங் கணும்இரு பாற்குத்
தகையுறு முதலா வணங்கடை யாகத் தயங்கமற் றதுவது கருவிச்
சிகையுற உபயம் எனமன்றில் ஆடும் என்பரால் திருவடி நிலையே. 7

---

* கருணை இணையடிச் சமுகத்துஒ ரிடத்தே – வே.ப.மு. பதிப்பு

Koviloor Digital Library

724 மன்றஓங் கியமா மாயையின் பேத வகைதொகை விரிஎன மலிந்த
ஒன்றின்ஒன் றனந்த கோடிகோ டிகளா உற்றன மற்றவை எல்லாம்
நின்றஅந் நிலையின் உருச்சுவை விளங்க நின்றசத் திகளொடு சத்தர்
சென்றதி கரிப்ப நடித்திடும் பொதுவில் என்பரால் திருவடி நிலையே. 8

725 பேசும்ஓங் காரம் ஈறதாப் பேசாப் பெரியஓங் காரமே முதலா
ஏசறும் அங்கம் உபாங்கம்வே றங்கம் என்றவற் றவண்அவண் இசைந்த
மாசறு சத்தி சத்தர்ஆண் டமைத்து மன்அதி காரம்ஐந் தியற்றத்
தேசுசெய் தணிபொன் னம்பலத்தாடும் என்பரால் திருவடி நிலையே. 9

726 பரைதரு சுத்த நிலைமுதல் அதீதப் பதிவரை நிறுவிஆங் கதன்மேல்
உரைதர ஒண்ணா வெறுவெளி வெட்ட வெறுவெளி எனஉல குணர்ந்த
புரைஅறும் இன்ப அனுபவம் தரற்கோர் திருவுருக் கொண்டுபொற் பொதுவில்
திரைஅறும் இன்ப நடம்புரி கின்ற என்பரால் திருவடி நிலையே. 10

திருச்சிற்றம்பலம்

45. அச்சோப் பத்து

அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

727 கருத்தனைஎன் கண்மணியைக் கண்ணுதலைப்
பெருங்கருணைக் கடலை வேதத்
திருத்தனைஎன் சிவபதியைத் தீங்கனியைத்
தெள்ளமுதத் தெளிவை வானில்
ஒருத்தனைஎன் உயிர்த்துணையை உயிர்க்குயிரை
உயிர்க்குணர்வை உணர்த்த னாதி
அருத்தனைச்சிற் றம்பலத்தென் அருட்பெருஞ்ஜோ
தியைப்பெற்றேன் அச்சோ அச்சோ. 1

728 மெய்யனைஎன் துயர்தவிர்த்த விமலனைஎன்
இதயத்தே விளங்கு கின்ற
துய்யனைமெய்த் துணைவனைவான் துரியநிலைத்
தலைவனைச்சிற் சுகந்தந் தானைச்
செய்யனைவெண் நிறத்தனைஎன் சிவபதியை
ஒன்றான தெய்வந் தன்னை
அய்யனைச்சிற் றம்பலத்தென் அருட்பெருஞ்ஜோ
தியைப்பெற்றேன் அச்சோ அச்சோ. 2

Koviloor Digital Library

729 எப்பொருளும் எவ்வுயிரும் எவ்வுலகும்
விளங்கவிளக் கிடுவான் தன்னைச்
செப்பரிய பெரியஒரு சிவபதியைச்
சிவகதியைச் சிவபோ கத்தைத்*
துப்புரவு பெறஎனக்கே அருளமுதம்
துணிந்தளித்த துணையை என்றன்
அப்பனைச்சிற் றம்பலத்தென் அருட்பெருஞ்ஜோ
தியைப்பெற்றேன் அச்சோ அச்சோ. 3

730 பிறிவெனைத்துந்** தோற்றாதென் உளங்கலந்த
பெருந்தகைஎம் பெருமான் தன்னைச்
செறிவெனைத்தும் என்மனத்துக் களித்தெனக்குப்
பெருங்களிப்புச் செய்தான் தன்னை
முறிவெனைத்தும் இன்றிஅருள் அமுதுணவு
கொடுத்தெனக்கு முன்னின் றானை
அறிவனைச்சிற் றம்பலத்தென் அருட்பெருஞ்ஜோ
தியைப்பெற்றேன் அச்சோ அச்சோ. 4

731 பொன்புனைஉள் ளொளிக்கொளியைப் பூரணமாம்
பெரும்பொருளைப் புனிதம் தன்னை
என்பிழையைப் பொறுத்தெனையும் ஏன்றுகொண்ட
பெருங்கருணை இயற்கை தன்னை
இன்பினைஎன் இதயத்தே இருந்தருளும்
பெருவாழ்வை என்னுள் ஓங்கும்
அன்பினைச்சிற் றம்பலத்தென் அருட்பெருஞ்ஜோ
தியைப்பெற்றேன் அச்சோ அச்சோ. 5

732 இத்தனைஎன் றிடமுடியாச் சத்திஎலாம்
உடையானை எல்லாம் வல்ல
சித்தனைஎன் சிவபதியைத் தெய்வமெலாம்
விரித்தடக்கும் தெய்வந் தன்னை
எத்தனையும் என்பிழைகள் பொறுத்ததனிப்
பெருந்தாயை என்னை ஈன்ற
அத்தனைச்சிற் றம்பலத்தென் அருட்பெருஞ்ஜோ
தியைப்பெற்றேன் அச்சோ அச்சோ. 6

733 எம்மையும்என் தனைப்பிரியா தென்னுளமே
இடங்கொண்ட இறைவன் தன்னை
இம்மையில்என் தனக்கழியாத் திருவடிவம்
தந்தானை எல்லாம் வல்ல

---

* சிவபோகத்தே – முதற்பதிப்பு. பொ.சு. பதிப்பு. ** பிறிவனைத்தும் – வே. ப.மு. பதிப்பு

Koviloor Digital Library

செம்மைதரு சித்தனைஎன் சிவபதியைத்
தெள்ளமுதத் திரளை என்றன்
அம்மையைச்சிற் றம்பலத்தென் அருட்பெருஞ்ஜோ
தியைப்பெற்றேன் அச்சோ அச்சோ. 7

734 என்னையும்என் பொருளையும்என் ஆவியையும்
தான்கொண்டிங் கென்பால் அன்பால்
தன்னையும்தன் பொருளையும்தன் ஆவியையும்
களித்தளித்த தலைவன் தன்னை
முன்னையும்பின் னையும்எனக்கே முழுத்துணையாய்
இருந்தமுழு முதல்வன் தன்னை
அன்னையைச்சிற் றம்பலத்தென் அருட்பெருஞ்ஜோ
தியைப்பெற்றேன் அச்சோ அச்சோ. 8

735 எண்ணலைவே றிரங்கலைநின் எண்ணமெலாம்
தருகின்றோம் இன்னே என்றென்
கண்நிரம்ப ஒளிகாட்டிக் கருத்தில்அமர்ந்
திருக்கின்ற கருத்தன் தன்னைப்
புண்ணியனை உளத்தூறும் புத்தமுதை
மெய்இன்பப் பொருளை என்றன்
அண்ணலைச்சிற் றம்பலத்தென் அருட்பெருஞ்ஜோ
தியைப்பெற்றேன் அச்சோ அச்சோ. 9

736 சாதியைநீள் சமயத்தை மதத்தைஎலாம்
விடுவித்தென் தன்னை ஞான
நீதியிலே சுத்தசிவ சன்மார்க்க
நிலைதனிலே நிறுத்தி னானைப்
பாதியைஒன் றானவனைப் பரம்பரனைப்
பராபரனைப் பதிஅ னாதி
ஆதியைச்சிற் றம்பலத்தென் அருட்பெருஞ்ஜோ
தியைப்பெற்றேன் அச்சோ அச்சோ. 10

திருச்சிற்றம்பலம்

Koviloor Digital Library

46. அருட்ஜோதி நிலை

பரசிவ நிலை

எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

737 அருட்சோதித் தெய்வம்எனை ஆண்டுகொண்ட தெய்வம்
அம்பலத்தே ஆடுகின்ற ஆனந்தத் தெய்வம்
பொருட்சாரும் மறைகளெலாம் போற்றுகின்ற தெய்வம்
போதாந்தத் தெய்வம்உயர் நாதாந்தத் தெய்வம்
இருட்பாடு நீக்கிஒளி ஈந்தருளுந் தெய்வம்
எண்ணியநான் எண்ணியவா றெனக்கருளுந் தெய்வம்
தெருட்பாடல் உவந்தெனையும் சிவமாக்கும் தெய்வம்
சிற்சபையில் விளங்குகின்ற தெய்வமதே தெய்வம். 1

738 எல்லாஞ்செய் வல்லதெய்வம் எங்கும்நிறை தெய்வம்
என்னுயிரில் கலந்தெனக்கே இன்பநல்கும் தெய்வம்
நல்லார்க்கு நல்லதெய்வம் நடுவான தெய்வம்
நற்சபையில் ஆடுகின்ற நடராஜ தெய்வம்
கல்லார்க்குங் கற்றவர்க்குங் களிப்பருளுந் தெய்வம்
காரணமாந் தெய்வம்அருட் பூரணமாந் தெய்வம்
செல்லாத நிலைகளெலாஞ் செல்லுகின்ற தெய்வம்
சிற்சபையில் விளங்குகின்ற தெய்வமதே தெய்வம். 2

739 தாயாகித் தந்தையுமாய்த் தாங்குகின்ற தெய்வம்
தன்னைநிகர் இல்லாத தனித்தலைமைத் தெய்வம்
வாயார வாழ்த்துகின்றோர் மனத்தமர்ந்த தெய்வம்
மலரடிஎன் சென்னிமிசை வைத்தபெருந் தெய்வம்
காயாது கனியாகிக் கலந்தினிக்குந் தெய்வம்
கருணைநிதித் தெய்வம்முற்றுங் காட்டுவிக்குந் தெய்வம்
சேயாக எனைவளர்க்குந் தெய்வமகா தெய்வம்
சிற்சபையில் ஆடுகின்ற தெய்வமதே தெய்வம். 3

740 என்னிதய கமலத்தே இருந்தருளுந் தெய்வம்
என்னிரண்டு கண்மணிக்குள் இலங்குகின்ற தெய்வம்
பொன்னடிஎன் சென்னியிலே பொருந்தவைத்த தெய்வம்
பொய்யாத தெய்வம்இடர் செய்யாத தெய்வம்
அன்னியம்அல் லாததெய்வம் அறிவான தெய்வம்
அவ்வறிவுக் கறிவாம்என் அன்பான தெய்வம்
சென்னிலையில் செம்பொருளாய்த் திகழ்கின்ற தெய்வம்
சிற்சபையில் விளங்குகின்ற தெய்வமதே தெய்வம். 4

Koviloor Digital Library

741 எண்ணியவா விளையாடென் றெனைஅளித்த தெய்வம்
எல்லாஞ்செய் வல்லசித்தே எனக்கீந்த தெய்வம்
நண்ணியபொன் னம்பலத்தே நடம்புரியுந் தெய்வம்
நானாகித் தானாகி நண்ணுகின்ற தெய்வம்
பண்ணியஎன் பூசையிலே பலித்தபெருந் தெய்வம்
பாடுகின்ற மறைமுடியில் ஆடுகின்ற தெய்வம்
திண்ணியன்என் றெனைஉலகம் செப்பவைத்த தெய்வம்
சிற்சபையில் விளங்குகின்ற தெய்வமதே தெய்வம். 5

742 இச்சைஎலாம் எனக்களித்தே எனைக்கலந்த தெய்வம்
இறந்தவர்கள் அனைவரையும் எழுப்புகின்ற தெய்வம்
எச்சமயத் தெய்வமுந்தான் எனநிறைந்த தெய்வம்
எல்லாஞ்செய் வல்லதெய்வம் எனதுகுல தெய்வம்
பிச்சகற்றும் பெருந்தெய்வம் சிவகாமி எனும்ஓர்
பெண்கொண்ட தெய்வம்எங்கும் கண்கண்ட தெய்வம்
செச்சைமலர் எனவிளங்குந் திருமேனித் தெய்வம்
சிற்சபையில் விளங்குகின்ற தெய்வமதே தெய்வம். 6

743 சாகாத வரம்எனக்கே தந்ததனித் தெய்வம்
சன்மார்க்க சபையில்எனைத் தனிக்கவைத்த தெய்வம்
மாகாத லால்எனக்கு வாய்த்தஒரு தெய்வம்
மாதவரா தியர்எல்லாம் வாழ்த்துகின்ற தெய்வம்
ஏகாத நிலைஅதன்மேல் எனைஏற்றும் தெய்வம்
எண்ணுதொறும் என்னுளத்தே இனிக்கின்ற தெய்வம்
தேகாதி உலகமெலாஞ் செயப்பணித்த தெய்வம்
சிற்சபையில் விளங்குகின்ற தெய்வமதே தெய்வம். 7

744 தூண்டாத மணிவிளக்காய்த் துலங்குகின்ற தெய்வம்
துரியதெய்வம் அரியதெய்வம் பெரியபெருந் தெய்வம்
மாண்டாரை எழுப்புகின்ற மருந்தான தெய்வம்
மாணிக்க வல்லியைஓர் வலத்தில்வைத்த தெய்வம்
ஆண்டாரை ஆண்டதெய்வம் அருட்சோதித் தெய்வம்
ஆகமவே தாதிஎலாம் அறிவரிதாந் தெய்வம்
தீண்டாத வெளியில்வளர் தீண்டாத தெய்வம்
சிற்சபையில் விளங்குகின்ற தெய்வமதே தெய்வம். 8

745 எவ்வகைத்தாந் தவஞ்செயினும் எய்தரிதாந் தெய்வம்
எனக்கெளிதிற் கிடைத்தென்மனம் இடங்கொண்ட தெய்வம்
அவ்வகைத்தாந் தெய்வம்அதற் கப்பாலாந் தெய்வம்
அப்பாலும் பெருவெளிக்கே அப்பாலாந் தெய்வம்

Koviloor Digital Library

ஒவ்வகத்தே ஒளியாகி ஓங்குகின்ற தெய்வம்
ஒன்றான தெய்வம்மிக நன்றான தெய்வம்
செவ்வகைத்தென் றறிஞரெலாஞ் சேர்பெரிய தெய்வம்
சிற்சபையில் விளங்குகின்ற தெய்வமதே தெய்வம். 9

746 சத்தியமாந் தனித்தெய்வம் தடையறியாத் தெய்வம்
சத்திகள்எல் லாம்விளங்கத் தானோங்கும் தெய்வம்
நித்தியதன் மயமாகி நின்றதெய்வம் எல்லா
நிலைகளுந்தன் அருள்வெளியில் நிலைக்கவைத்த தெய்வம்
பத்திவலைப் படுகின்ற தெய்வம்எனக் கெல்லாப்
பரிசுமளித் தழியாத பதத்தில்வைத்த தெய்வம்
சித்திஎலாந் தருதெய்வம் சித்தாந்தத் தெய்வம்
சிற்சபையில் விளங்குகின்ற தெய்வமதே தெய்வம். 10

திருச்சிற்றம்பலம்

47. பேரானந்த நிலை

சிவானந்த நிலை

எழுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

747 அணிவளர் திருச்சிற் றம்பலத் தாடும் ஆனந்த போகமே அமுதே
மணிவளர் ஒளியே ஒளியினுள் ஒளியே மன்னும்என் ஆருயிர்த் துணையே
துணிவுறு சித்தாந் தப்பெரும் பொருளே தூயவே தாந்தத்தின் பயனே
பணிவுறும் உளத்தே இனித்திட எனக்கேபழுத்தபே ரானந்தப் பழமே. 1

748 திருவளர் திருச்சிற் றம்பலத் தாடும் தெய்வமே மெய்ப்பொருட் சிவமே
உருவளர் ஒளியே ஒளியினுள் ஒளியே ஓங்கும்என் உயிர்ப்பெருந் துணையே
ஒருதனித் தலைமை அருள்வெளி நடுவே உவந்தர சளிக்கின்ற அரசே
பருவரல் நீக்கி இனித்திட எனக்கே பழுத்தபே ரானந்தப் பழமே. 2

749 துதிவளர் திருச்சிற் றம்பலத் தாடும் ஜோதியுட் ஜோதியே எனது
மதிவளர் மருந்தே மந்திர மணியே மன்னிய பெருங்குண மலையே
கதிதரு துரியத் தனிவெளி நடுவே கலந்தர சாள்கின்ற களிப்பே
பதியுறும் உளத்தே இனித்திட எனக்கே பழுத்தபே ரானந்தப் பழமே. 3

750 சீர்வளர் திருச்சிற் றம்பலத் தோங்குஞ் செல்வமே என்பெருஞ் சிறப்பே
நீர்வளர் நெருப்பே நெருப்பினுள் ஒளியே நிறைஒளி வழங்கும்ஓர் வெளியே
ஏர்தரு கலாந்த மாதிஆ றந்தத் திருந்தர சளிக்கின்ற பதியே
பாருறும் உளத்தே இனித்திட எனக்கே பழுத்தபே ரானந்தப் பழமே. 4

Koviloor Digital Library

751 உரைவளர் திருச்சிற் றம்பலத் தோங்கும் ஒள்ளிய தெள்ளிய ஒளியே
வரைவளர் மருந்தே மவுனமந் திரமே மந்திரத் தாற்பெற்ற மணியே
நிரைதரு சுத்த நிலைக்குமேல் நிலையில் நிறைந்தர சாள்கின்ற நிதியே
பரையுறும் உளத்தே இனித்திட எனக்கே பழுத்த பேரானந்தப் பழமே. 5

752 மேல்வளர் திருச்சிற் றம்பலத் தோங்கும் மெய்யறி வானந்த விளக்கே
கால்வளர் கனலே கனல்வளர் கதிரே கதிர்நடு வளர்கின்ற கலையே
ஆலுறும் உபசாந் தப்பர வெளிக்கப் பால்அர சாள்கின்ற அரசே
பாலுறும் உளத்தே இனித்திட எனக்கே பழுத்தபே ரானந்தப் பழமே. 6

753 இசைவளர் திருச்சிற் றம்பலத் தோங்கும் இன்பமே என்னுடை அன்பே
திசைவளர் அண்டகோடிகள் அனைத்தும் திகழுறத் திகழ்கின்ற சிவமே
மிசையுறு மௌன வெளிகடந் ததன்மேல் வெளிஅர சாள்கின்ற பதியே
பசையுறும் உளத்தே இனித்திட எனக்கே பழுத்தபே ரானந்தப் பழமே. 7

754 அருள்வளர் திருச்சிற் றம்பலத் தோங்கும் அரும்பெருஞ் ஜோதியே எனது
பொருள்வளர் அறிவுக் கறிவுதந் தென்னைப் புறம்விடா தாண்டமெய்ப் பொருளே
மருவும்ஓர் நாத வெளிக்குமேல் வெளியில் மகிழ்ந்தர சாள்கின்ற வாழ்வே
பருவரல் நீக்கி இனித்திட எனக்கே பழுத்தபே ரானந்தப் பழமே. 8

755 வான்வளர் திருச்சிற் றம்பலத் தோங்கும் மாபெருங் கருணைஎம் பதியே
ஊன்வளர் உயிர்கட் குயிரதாய் எல்லா உலகமும் நிறைந்தபே ரொளியே
மான்முதன் மூர்த்தி மானிலைக் கப்பால் வயங்கும்ஓர் வெளிநடு மணியே
பான்மையுற் றுளத்தே இனித்திட எனக்கே பழுத்தபே ரானந்தப் பழமே.9

756 தலம்வளர் திருச்சிற் றம்பலத் தோங்கும் தனித்தமெய்ப் பொருட்பெருஞ் சிவமே
நலம்வளர் கருணை நாட்டம்வைத் தெனையே நண்புகொண் டருளிய நண்பே
வலமுறு நிலைகள் யாவையுங் கடந்து வயங்கிய தனிநிலை வாழ்வே
பலமுறும் உளத்தே இனித்திட எனக்கே பழுத்தபே ரானந்தப் பழமே. 10

திருச்சிற்றம்பலம்

48. ஆண்டருளிய அருமையை வியத்தல்

ஆற்றாமை கூறல்

எழுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

757 அம்பலத் தாடும் அமுதமே என்கோ அடியனேன் ஆருயிர் என்கோ
எம்பலத் தெல்லாம் வல்லசித் தென்கோ என்னிரு கண்மணி என்கோ
நம்பிடில் அணைக்கும் நற்றுணை என்கோ நான்பெற்ற பெருஞ்செல்வம் என்கோ
இம்பர்இப் பிறப்பே மெய்ப்பிறப் பாக்கி என்னைஆண் டருளிய நினையே.1

Koviloor Digital Library

758 அம்மையே என்கோ அப்பனே என்கோ அருட்பெருஞ் ஜோதியே என்கோ
செம்மையே எல்லாம் வல்லசித் தென்கோ திருச்சிற்றம் பலத்தமு தென்கோ
தம்மையே உணர்ந்தார் உளத்தொளி என்கோ தமியனேன் தனித்துணை என்கோ
இம்மையே அழியாத் திருஉரு அளித்திங் கென்னைஆண் டருளிய நினையே. 2

759 எய்ப்பிலே கிடைத்த வைப்பது என்கோ என்னுயிர்க் கின்பமே என்கோ
துய்ப்பிலே நிறைந்த பெருங்களிப் பென்கோ ஜோதியுட் ஜோதியே என்கோ
தப்பெலாம் பொறுத்த தயாநிதி என்கோ தனிப்பெருந் தலைவனே என்கோ
இப்பிறப் பதிலே மெய்ப்பயன் அளித்திங் கென்னைஆண் டருளிய நினையே. 3

760 அச்சம்நீக் கியஎன் ஆரியன் என்கோ அம்பலத் தெம்பிரான் என்கோ
நிச்சலும் எனக்கே கிடைத்தவாழ் வென்கோ நீடும்என் நேயனே என்கோ
பிச்சனேற் களித்த பிச்சனே என்கோ பெரியரிற் பெரியனே என்கோ
இச்சகத் தழியாப் பெருநலம் அளித்திங் கென்னைஆண் டருளிய நினையே. 4

761 அத்தம்நேர் கிடைத்த சுவைக்கனி என்கோ அன்பிலே நிறைஅமு தென்கோ
சித்தெலாம் வல்ல சித்தனே என்கோ திருச்சிற்றம் பலச்சிவம் என்கோ
மத்தனேன் பெற்ற பெரியவாழ் வென்கோ மன்னும்என் வாழ்முதல் என்கோ
இத்தனிப் பிறப்பை நித்தியம் ஆக்கி என்னைஆண் டருளிய நினையே. 5

762 மறப்பெலாம் தவிர்த்த மதிஅமு தென்கோ மயக்கநீத் தருள்மருந் தென்கோ
பறப்பெலாம் ஒழித்த பதிபதம் என்கோ பதச்சுவை அனுபவம் என்கோ
சிறப்பெலாம் எனக்கே செய்ததாய் என்கோ திருச்சிற்றம் பலத்தந்தை என்கோ
இறப்பிலா வடிவம் இம்மையே அளித்திங் கென்னைஆண் டருளிய நினையே. 6

763 அன்பிலே பழுத்த தனிப்பழம் என்கோ அறிவிலே அறிவறி வென்கோ
இன்பிலே நிறைந்த சிவபதம் என்கோ என்னுயிர்த் துணைப்பதி என்கோ
வன்பிலா மனத்தே வயங்கொளி என்கோ மன்னும்அம் பலத்தர சென்கோ
என்புரி அழியாப் பொன்புரி ஆக்கி என்னைஆண் டருளிய நினையே. 7

764 தடையிலா தெடுத்த அருளமு தென்கோ சர்க்கரைக் கட்டியே என்கோ
அடைவுறு வயிரக் கட்டியே என்கோ அம்பலத் தாணிப்பொன் என்கோ
உடைய மாணிக்கப் பெருமலை என்கோ உள்ளொளிக் குள்ளொளி என்கோ
இடைதல்அற் றோங்கும் திருஅளித் திங்கே என்னைஆண் டருளிய நினையே. 8

765 மறைமுடி விளங்கு பெரும்பொருள் என்கோ மன்னும்ஆ கமப்பொருள் என்கோ
குறைமுடித் தருள்செய் தெய்வமே என்கோ குணப்பெருங் குன்றமே என்கோ
பிறைமுடிக் கணிந்த பெருந்தகை என்கோ பெரியஅம் பலத்தர சென்கோ
இறைமுடிப் பொருள்என் உளம்பெற வளித்திங் கென்னையாண் டருளிய நினையே. 9

Koviloor Digital Library

766 என்உளம் பிரியாப் பேரொளி என்கோ என்உயிர்த் தந்தையே என்கோ
என்உயிர்த் தாயே இன்பமே என்கோ என்உயிர்த் தலைவனே என்கோ
என்உயிர் வளர்க்கும் தனிஅமு தென்கோ என்னுடைய நண்பனே என்கோ
என்ஒரு வாழ்வின்* தனிமுதல் என்கோ என்னைஆண் டருளிய நினையே.

திருச்சிற்றம்பலம்

49. இறைவனை ஏத்தும் இன்பம்

ஆற்றாமை கூறல் - 2

எழுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

767 கருணைமா நிதியே என்னிரு கண்ணே கடவுளே கடவுளே என்கோ
தருணவான் அமுதே என்பெருந் தாயே தந்தையே தந்தையே என்கோ
தெருள்நிறை மதியே என்குரு பதியே தெய்வமே தெய்வமே என்கோ
அருள்நிறை தரும்என் அருட்பெருஞ் ஜோதி ஆண்டவ நின்றனை அறிந்தே.
1

768 ஒட்டியே என்னுள் உறும்ஒளி என்கோ ஒளிஎலாம் நிரம்பிய நிலைக்கோர்
வெட்டியே என்கோ வெட்டியில்** எனக்கு விளங்குறக் கிடைத்தஓர் வயிரப்
பெட்டியே என்கோ பெட்டியின் நடுவே பெரியவர் வைத்ததோர் தங்கக்
கட்டியே என்கோ அம்பலத் தாடும் கருணையங் கடவுள்நின் றனையே.
2

769 துன்பெலாம் தவிர்த்த துணைவனே என்கோ ஜோதியுட் ஜோதியே என்கோ
அன்பெலாம் அளித்த அன்பனே என்கோ அம்மையே அப்பனே என்கோ
இன்பெலாம் புரிந்த இறைவனே என்கோ என்உயிர்க் கின்னமு தென்கோ
என்பொலா மணியே என்கணே என்கோ என்னுயிர் நாதநின் றனையே.
3

770 கருத்தனே எனது கருத்தினுக் கிசைந்த கணவனே கணவனே என்கோ
ஒருத்தனே எல்லாம் உடையநா யகனே ஒருதனிப் பெரியனே என்கோ
திருத்தனே எனது செல்வமே எல்லாம் செயவல்ல சித்தனே என்கோ
நிருத்தனே எனக்குப் பொருத்தனே என்கோநிறைஅருட் ஜோதிநின் றனையே.
4

771 தாயனே எனது தாதையே ஒருமைத் தலைவனே தலைவனே என்கோ
பேயனேன் பிழையைப் பொறுத்தருள் புரிந்த பெருந்தகைப் பெரும்பதி என்கோ
சேயனேன் பெற்ற சிவபதம் என்கோ சித்தெலாம் வல்லசித் தென்கோ
தூயனே எனது நேயனே என்கோ ஜோதியுட் ஜோதிநின் றனையே.
5

---

* என்பெரு – பி.இரா. பதிப்பு.

** கெட்டியே என்கோ கெட்டியில் – முதற்பதிப்பு., பொ.சு. பதிப்பு.

Koviloor Digital Library

772 அரும்பிலே மலர்வுற் றருள்மணம் வீசும் ஆனந்தத் தனிமலர் என்கோ
கரும்பிலே எடுத்த சுவைத்திரள் என்கோ கடையனேன் உடையநெஞ் சகமாம்
இரும்பிலே பழுத்துப் பேரொளி ததும்பி இலங்கும்ஓர் பசும்பொனே என்கோ
துரும்பினேன் பெற்ற பெரும்பதம் என்கோ ஜோதியுட் ஜோதிநின் றனையே.6

773 தாகமுள் எடுத்த போதெதிர் கிடைத்த சர்க்கரை அமுதமே என்கோ
மோகம்வந் தடுத்த போதுகைப் பிடித்த முகநகைக் கணவனே என்கோ
போகமுள் விரும்பும் போதிலே வலிந்து புணர்ந்தஓர் பூவையே என்கோ
ஆகமுட் புகுந்தென் உயிரினுட் கலந்த அம்பலத் தாடிநின் றனையே. 7

774 தத்துவம் அனைத்தும் தவிர்த்துநான் தனித்த தருணத்தில் கிடைத்ததொன் றென்கோ
சத்துவ நிரம்பும் சுத்தசன் மார்க்கந் தனில்உறும் அனுபவம் என்கோ
ஒத்துவந் தெனைத்தான் கலந்துகொண் டெனக்குள் ஓங்கிய ஒருமையே என்கோ
சித்துவந் தாடுஞ் சித்தனே என்கோ திருச்சிற்றம் பலத்தவ நினையே.8

775 யோகமெய்ஞ் ஞானம் பலித்தபோ துளத்தில் ஓங்கிய காட்சியே என்கோ
ஏகமெய்ஞ் ஞான யோகத்திற் கிடைத்துள் இசைந்தபே ரின்பமே என்கோ
சாகலைத் தவிர்த்தென் தன்னைவாழ் விக்கச் சார்ந்தசற் குருமணி என்கோ
மாகமும் புவியும் வாழ்வுற மணிமா மன்றிலே நடிக்கின்றோய் நினையே.
9

776 இரவிலா தியம்பும் பகலிலா திருந்த இயற்கையுள் இயற்கையே என்கோ
வரவிலா வுரைக்கும் போக்கிலா நிலையில் வயங்கிய வான்பொருள் என்கோ
திரையிலா தெல்லாம் வல்லசித் தெனக்கேசெய்ததோர் சித்தனே என்கோ
கரவிலா தெனக்குப் பேரருட் ஜோதி களித்தளித் தருளிய நினையே. 10

திருச்சிற்றம்பலம்

50. திருநடப் புகழ்ச்சி

எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

777 பதியேஎம் பரனேஎம் பரம்பரனே எமது
பராபரனே ஆனந்தப் பதந்தருமெய்ஞ் ஞான
நிதியேமெய்ந் நிறைவேமெய்ந் நிலையேமெய் இன்ப
நிருத்தமிடும் தனித்தலைமை நிபுணமணி விளக்கே
கதியேஎன் கண்ணேஎன் கண்மணியே எனது
கருத்தேஎன் கருத்தில்உற்ற கனிவேசெங் கனியே
துதியேஎன் துரையேஎன் தோழாஎன் உளத்தே
சுத்தநடம் புரிகின்ற சித்தசிகா மணியே. 1

Koviloor Digital Library

778 ஆரணமே ஆகமமே ஆரணஆ கமத்தின்
அரும்பொருளே அரும்பொருளின் அனுபவமே அறிவே
காரணமே காரியமே காரணகா ரியங்கள்
கடந்தபெரும் பதியேஎன் கருத்தமர்ந்த நிதியே
பூரணமே புண்ணியமே பொதுவிளங்கும் அரசே
புத்தமுதே சத்தியமே பொன்னேசெம் பொருளே
தோரணமே விளங்குசித்தி புரத்தினும்என் உளத்தும்
சுத்தநடம் புரிகின்ற சித்தசிகா மணியே. 2

779 இணைஏதும் இன்றிநின்ற இறையவனே மறைசொல்
ஏகமுமாய் அனேகமுமாய் இலங்குபரம் பரனே
அணையேதும் இன்றிநிறை பெரும்புனலே அதன்மேல்
அனலேஎன் அப்பாஎன் அவத்தைஎலாம் கடத்தும்
புணையேமெய்ப் பொருளேமெய்ப் புகழேமெய்ப் புகலே
பொதுவேஉள் ளதுவேதற் போதமிலார்க் குதவும்
துணையேசத் துவமேதத் துவமேஎன் னுளத்தே
சுத்தநடம் புரிகின்ற சித்தசிகா மணியே. 3

780 எருதின்உழைத் திருந்தேனுக் கிரங்கிஅடிச் சிறியேன்
இருந்தஇடந் தனைத்தேடி இணைப்பரிமான் ஈர்க்கும்
ஒருதிருத்தேர் ஊர்ந்தென்னை உடையவளோ டடைந்தே
உள்வாயில் தாழ்பிடித்துப் பயத்தொடுநின் றேனை
வருதிஎனத் திருக்கரங்கள் அசைத்தழைத்த பதியே
மணியேஎன் மருந்தேஎன் வாழ்வேஎன் வரமே
சுருதிமுடி அடிக்கணிந்த துரையேஎன் உளத்தே
சுத்தநடம் புரிகின்ற சித்தசிகா மணியே. 4

781 அகவடிவை ஒருகணத்தே அனகவடி வாக்கி
அருளமுதம் உவந்தளித்தே அடிக்கடிஎன் உளத்தே
முகவடிவந் தனைக்காட்டி களித்துவியந் திடவே
முடிபனைத்தும் உணர்த்திஒரு முன்னிலைஇல் லாதே
சகவடிவில் தானாகி நானாகி நானும்
தானும்ஒரு வடிவாகித் தனித்தோங்கப் புரிந்தே
சுகவடிவந் தனைஅளித்த துரையேஎன் உளத்தே
சுத்தநடம் புரிகின்ற சித்தசிகா மணியே. 5

782 உடுத்ததுகில் அவிழ்த்துவிரித் தொருதரையில் தனித்தே
உன்னாதும் உன்னிஉளத் துறுகலக்கத் தோடே
படுத்தயர்ந்த சிறியேன்றன் அருகணைந்து மகனே
பயமுனக்கென் என்றென்னைப் பரிந்துதிருக் கரத்தால்

Koviloor Digital Library

அடுத்தணைத்துக் கொண்டெடுத்துப் போய்ப்பிறிதோர் இடத்தே
அமர்த்திநகைத் தருளியஎன் ஆண்டவனே அரசே
தொடுத்தணிஎன் மொழிமாலை அணிந்துகொண்டென் உளத்தே
சுத்தநடம் புரிகின்ற சித்தசிகா மணியே. 6

783 ஆற்றாத அடிச்சிறியேற் காற்றல்மிகக் கொடுத்தே
அம்மையுமாய் அப்பனுமாய் ஆதரித்தன் புடனே
போற்றாத குற்றமெலாம் பொறுத்தருளி எனைஇப்
பூதலத்தார் வானகத்தார் போற்றிமதித் திடவே
ஏற்றாத உயர்நிலைமேல் ஏற்றிஎல்லாம் வல்ல
இறைமையுந்தந் தருளியஎன் இறையவனே எனக்கே
தோற்றாத தோற்றுவித்த துரையேஎன் உளத்தே
சுத்தநடம் புரிகின்ற சித்தசிகா மணியே. 7

784 படிப்படக்கிக் கேள்விஎலாம் பற்றறவிட் டடக்கிப்
பார்த்திடலும் அடக்கிஉறும் பரிசம்எலாம் அடக்கித்
தடிப்புறும்ஊண் சுவைஅடக்கிக் கந்தம்எலாம் அடக்கிச்
சாதிமதம் சமயம்எனும் சழக்கையும்விட் டடக்கி
மடிப்படக்கி நின்றாலும் நில்லேன்நான் எனவே
வனக்குரங்கும் வியப்பஎன்றன் மனக்குரங்கு குதித்த
துடிப்படக்கி ஆட்கொண்ட துரையேஎன் உளத்தே
சுத்தநடம் புரிகின்ற சித்தசிகா மணியே. 8

785 பணிந்தறியேன் அன்புடனே பாடுதலும் அறியேன்
படித்தறியேன் கேட்டறியேன் பத்தியில்பூ மாலை
அணிந்தறியேன் மனம்உருகக் கண்களின்நீர் பெருக
அழுதறியேன் தொழுதறியேன் அகங்காரம் சிறிதும்
தணிந்தறியேன் தயவறியேன் சத்தியவா சகமும்
தான்அறியேன் உழுந்தடித்த தடியதுபோல் இருந்தேன்
துணிந்தெனக்கும் கருணைசெய்த துரையேஎன் உளத்தே
சுத்தநடம் புரிகின்ற சித்தசிகா மணியே. 9

786 தாங்காதே பசிபெருக்கிக் கடைநாய்போல் உலம்பித்
தவம்விடுத்தே அவந்தொடுத்தே தனித்துண்டும் வயிறு
வீங்காதேல் எழுந்திருக்கேன் வீங்கிவெடித் திடல்போல்
விம்மும்எனில் எழுந்துடனே வெறுந்தடிபோல் விழுந்தே
வாங்காது தூங்கியதோர் வழக்கம்உடை யேனை
வலிந்தடிமை கொண்டருளி மறப்பொழித்தெந் நாளும்
தூங்காதே விழிக்கவைத்த துரையேஎன் உளத்தே
சுத்தநடம் புரிகின்ற சித்தசிகா மணியே. 10

திருச்சிற்றம்பலம்

Koviloor Digital Library

51. பெறாப்பேறு

பற்றுகை

எண்சீர்க் கெழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

787 ஆவாஎன் றெனையாட்கொண் டருளியதெள் ளமுதே
அம்மேஎன் அப்பாஎன் ஐயாஎன் அரசே
சாவாத வரம்எனக்குத் தந்தபெருந் தகையே
தயாநிதியே சிற்சபையில் தனித்தபெரும் பதியே
ஓவாதென் உள்ளகத்தே ஊற்றெழும்பே ரன்பே
உள்ளபடி என்னறிவில் உள்ளபெருஞ் சுகமே
நீவாஎன் மொழிகளெலாம் நிலைத்தபயன் பெறவே
நித்திரைதீர்ந் தேன்இரவு நீங்கிவிடிந் ததுவே. 1

788 ஆராலும் அறிந்துகொளற் கரியபெரும் பொருளே
அம்மேஎன் அப்பாஎன் ஐயாஎன் அரசே
காராலும் கனலாலும் காற்றாலும் ககனக்
கலையாலும் கதிராலும் கடலாலும் கடல்சூழ்
பாராலும் படையாலும் பிறவாலும் தடுக்கப்
படுதலிலாத் தனிவடிவம் எனக்களித்த பதியே
சீராலும் குணத்தாலும் சிறந்தவர்சேர் ஞான
சித்திபுரத் தமுதேஎன் நித்திரைதீர்ந் ததுவே. 2

789 ஆதிஅந்தம் தோற்றாத அரும்பெருஞ்சோ தியனே
அம்மேஎன் அப்பாஎன் ஐயாஎன் அரசே
ஓதிஎந்த வகையாலும் உணர்ந்துகொளற் கரிதாய்
உள்ளபடி இயற்கையிலே உள்ளஒரு பொருளே
ஊதியம்தந் தெனையாட்கொண் டுள்ளிடத்தும் புறத்தும்
ஓவாமல் விளங்குகின்ற உடையவனே இந்தச்
சாதிஇந்த மதம்எனும்வாய்ச் சழக்கைஎலாம் தவிர்த்த
சத்தியனே உண்கின்றேன்* சத்தியத்தெள் ளமுதே. 3

790 அச்சமெலாம் தவிர்த்தருளி இச்சைஎலாம் அளித்த
அம்மேஎன் அப்பாஎன் ஐயாஎன் அரசே
துச்சவுல காசாரத் துடுக்கனைத்தும் தவிர்த்தே
சுத்தநெறி வழங்குவித்த சித்தசிகா மணியே
உச்சநிலை நடுவிளங்கும் ஒருதலைமைப் பதியே
உலகமெலாம் எடுத்திடினும் உலவாத நிதியே
இச்சமயம் எழுந்தருளி இறவாத வரமும்
எல்லாஞ்செய் வல்லசித்தின் இயற்கையுந்தந் தனையே. 4

* உணர்கின்றேன் – ச.மு.க. பதிப்பு

Koviloor Digital Library

791 அன்புடைய என்னறிவே அருளுடைய பொருளே
அம்மேஎன் அப்பாஎன் ஐயாஎன் அரசே
துன்புடைய உலகரெலாம் சுகமுடையார் ஆகத்
துன்மார்க்கம் தவிர்த்தருளிச் சன்மார்க்கம் வழங்க
இன்புடைய பேரருளிங் கெனைப்பொருள்செய் தளித்த
என்அமுதே என்உறவே எனக்கினிய துணையே
என்புடைநீ இருக்கின்றாய் உன்புடைநான் மகிழ்ந்தே
இருக்கின்றேன் இவ்வொருமை யார்பெறுவார் ஈண்டே. 5

792 அடுக்கியபே ரண்டமெலாம் அணுக்கள்என விரித்த
அம்மேஎன் அப்பாஎன் ஐயாஎன் அரசே
நடுக்கியஎன் அச்சமெலாம் தவிர்த்தருளி அழியா
ஞானஅமு தளித்துலகில் நாட்டியபே ரறிவே
இடுக்கியகைப் பிள்ளைஎன இருந்தசிறி யேனுக்
கெல்லாஞ்செய் வல்லசித்தி ஈந்தபெருந் தகையே
முடுக்கியஅஞ் ஞானாந்த காரமெலாம் தவிர்த்து
முத்தருளத் தேமுளைத்த சுத்தபரஞ் சுடரே. 6

793 ஆங்காரம் தவிர்ந்தவருள் ஓங்காநின் றவனே
அம்மேஎன் அப்பாஎன் ஐயாஎன் அரசே
ஓங்கார நிலைகாட்டி அதன்மேல்உற் றொளிரும்
ஒருநிலையும் காட்டிஅப்பால் உயர்ந்ததனி நிலையில்
பாங்காக ஏற்றி எந்தப் பதத்தலைவ ராலும்
படைக்கவொணாச் சித்தியைநான் படைக்கவைத்த பதியே
தூங்காது பெருஞ்சுகமே சுகித்திடஇவ் வுலகைச்
சுத்தசன்மார்க் கந்தனிலே வைத்தருள்க விரைந்தே. 7

794 ஆடகப்பொற் சபைநடுவே நாடகஞ்செய் தருளும்
அம்மேஎன் அப்பாஎன் ஐயாஎன் அரசே
ஏடகத்தே எழுதாத மறைகளெலாம் களித்தே
என்உளத்தே எழுதுவித்த என்உரிமைப் பதியே
பாடகக்கால் மடந்தையரும் மைந்தரும்சன் மார்க்கப்
பயன்பெறநல் அருளளித்த பரம்பரனே மாயைக்
காடகத்தை வளஞ்செறிந்த நாடகமாப் புரிந்த
கருணையனே சிற்சபையில் கனிந்தநறுங் கனியே. 8

795 அடியாதென் றறிந்துகொளற் கரும்பெரிய நிலையே
அம்மேஎன் அப்பாஎன் ஐயாஎன் அரசே
முடியாதென் றறிந்திடற்கு முடியாதென் றுணர்ந்தோர்
மொழிந்திடவே முடியாது முடிந்ததனி முடிபே

Koviloor Digital Library

கடியாத பெருங்கருணைக் கருத்தேஎன் கருத்தில்
கனிந்துகனிந் தினிக்கின்ற கனியேஎன் களிப்பே
மடியாத வடிவெனக்கு வழங்கியநல் வரமே
மணிமன்றில் நடம்புரியும் வாழ்க்கைஇயற் பொருளே. 9

796 அனந்தமறை ஆகமங்கள் அளப்பரிய சிவமே
அம்மேஎன் அப்பாஎன் ஐயாஎன் அரசே
மனந்தருவா தனைதவிர்த்தோர்* அறிவினில்ஓர் அறிவாய்
வயங்குகின்ற குருவேஎன் வாட்டமெலாம் தவிர்த்தே
இனந்தழுவி என்னுளத்தே இருந்துயிரில் கலந்தென்
எண்ணமெலாம் களித்தளித்த என்னுரிமைப் பதியே
சினந்தவிர்ந்தெவ் வுலகமும்ஓர் சன்மார்க்கம் அடைந்தே
சிறப்புறவைத் தருள்கின்ற சித்தசிகா மணியே. 10

திருச்சிற்றம்பலம்

52. பொதுநடம்

திருவடிப் புகழ்ச்சி

எழுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

797 அருட்பெருஞ் சோதி அமுதமே அமுதம் அளித்தெனை வளர்த்திட அருளாம்
தெருட்பெருந் தாய்தன் கையிலே கொடுத்த தெய்வமே சத்தியச் சிவமே
இருட்பெரு நிலத்தைக் கடத்திஎன் றனைமேல் ஏற்றிய இன்பமே எல்லாப்
பொருட்பெரு நெறியும் காட்டிய குருவே பொதுநடம் புரிகின்ற பொருளே. 1

798 சித்தெலாம் வல்ல சித்தனே ஞான சிதம்பர ஜோதியே சிறியேன்
கத்தெலாம் தவிர்த்துக் கருத்தெலாம் அளித்த கடவுளே கருணையங் கடலே
சத்தெலாம் ஒன்றே சத்தியம் எனஎன் தனக்கறி வித்ததோர் தயையே
புத்தெலாம் நீக்கிப் பொருளெலாம் காட்டும் பொதுநடம் புரிகின்ற பொருளே. 2

799 கலைகளோர் அனந்தம் அனந்தமேல் நோக்கிக் கற்பங்கள் கணக்கில கடப்ப
நிலைகளோர் அனந்தம் நேடியுங் காணா நித்திய நிற்குண நிறைவே
அலைகளற் றுயிருக் கமுதளித் தருளும் அருட்பெருங் கடல்எனும் அரசே
புலைகள வகற்றி எனக்குளே நிறைந்து பொதுநடம் புரிகின்ற பொருளே. 3

800 தண்ணிய மதியே தனித்தசெஞ் சுடரே சத்திய சாத்தியக் கனலே
ஒண்ணிய ஒளியே ஒளிக்குள்ஓர் ஒளியே உலகெலாந் தழைக்கமெய் உளத்தே
நண்ணிய விளக்கே எண்ணிய படிக்கே நல்கிய ஞானபோ னகமே
புண்ணிய நிதியே கண்ணிய நிலையே பொதுநடம் புரிகின்ற பொருளே. 4

---

* தவிர்ந்தோர் – பி.இரா. பதிப்பு

Koviloor Digital Library

801 அற்புத நிறைவே சற்புதர் அறிவில் அறிவென அறிகின்ற அறிவே
சொற்புனை மாயைக் கற்பனை கடந்த துரியநல் நிலத்திலே துலங்கும்
சிற்பரஞ் சுடரே தற்பர ஞானச் செல்வமே சித்தெலாம் புரியும்
பொற்புலம் அளித்த நற்புலக் கருத்தேபொதுநடம் புரிகின்ற பொருளே. 5

802 தத்துவ பதியே தத்துவம் கடந்த தனித்ததோர் சத்திய பதியே
சத்துவ நெறியில் சார்ந்தசன் மார்க்கர் தமக்குளே சார்ந்தநற் சார்பே
பித்துறு சமயப் பிணக்குறும் அவர்க்குப் பெறல்அரி தாகிய* பேறே
புத்தமுதளித்தென் உளத்திலே கலந்து பொதுநடம் புரிகின்ற பொருளே. 6

803 மேல்வெளி காட்டி வெளியிலே விளைந்த விளைவெலாம் காட்டிமெய் வேத
நூல்வழி காட்டி என்னுளே விளங்கும் நோக்கமே ஆக்கமும் திறலும்
நால்வகைப் பயனும் அளித்தெனை வளர்க்கும் நாயகக் கருணைநற் றாயே
போலுயிர்க் குயிராய்ப் பொருந்திய மருந்தே பொதுநடம் புரிகின்ற பொருளே. 7

804 அலப்பற விளங்கும் அருட்பெரு விளக்கே அரும்பெருஞ் சோதியே சுடரே
மலப்பிணி அறுத்த வாய்மைஎம் மருந்தே மருந்தெலாம் பொருந்திய மணியே
உலப்பறு கருணைச் செல்வமே எல்லா உயிர்க்குளும் நிறைந்ததோர் உணர்வே
புலப்பகை தவிர்க்கும் பூரண வரமே பொதுநடம் புரிகின்ற பொருளே. 8

805 பரம்பர நிறைவே பராபர வெளியே பரமசிற் சுகந்தரும் பதியே
வரம்பெறு சிவசன் மார்க்கர்தம் மதியில் வயங்கிய பெருஞ்சுடர் மணியே
கரம்பெறு கனியே கனிவுறு சுவையே கருதிய கருத்துறு களிப்பே
புரம்புகழ் நிதியே சிரம்புகல் கதியே பொதுநடம் புரிகின்ற பொருளே. 9

806 வெற்புறு முடியில் தம்பமேல் ஏற்றி மெய்ந்நிலை அமர்வித்த வியப்பே
கற்புறு கருத்தில் இனிக்கின்ற கரும்பே கருணைவான் அமுதத்தெண் கடலே
அற்புறும் அறிவில் அருள்ஒளி ஆகி ஆனந்த மாம்அனு பவமே
பொற்புறு பதியே அற்புத நிதியே பொதுநடம் புரிகின்ற பொருளே. 10

807 தன்மைகாண் பரிய தலைவனே எல்லாம் தரவல்ல சம்புவே சமயப்
புன்மைநீத் தகமும் புறமும்ஒத் தமைந்த புண்ணியர் நண்ணிய புகலே
வன்மைசேர் மனத்தை நன்மைசேர் மனமா வயங்குவித் தமர்ந்தமெய் வாழ்வே
பொன்மைசார் கனகப் பொதுவொடு ஞானப் பொதுநடம் புரிகின்ற பொருளே. 11

808 மூவிரு முடிபின் முடிந்ததோர் முடிபே முடிபெலாம் கடந்ததோர் முதலே
தாவிய முதலும் கடையும்மேற் காட்டாச் சத்தியத் தனிநடு நிலையே
மேவிய நடுவில் விளங்கிய விளைவே விளைவெலாம் தருகின்ற வெளியே
பூவியல் அளித்த புனிதசற் குருவே பொதுநடம் புரிகின்ற பொருளே. 12

---

* பெரிதரிதாகிய – பொ.க. பதிப்பு

Koviloor Digital Library

809 வேதமும் பொருளும் பயனும்ஓர் அடைவும் விளம்பிய அனுபவ விளைவும்
போதமும் சுகமும் ஆகிஇங் கிவைகள் போனது மாய்ஒளிர் புலமே
ஏதமுற் றிருந்த ஏழையேன் பொருட்டிவ் விருநிலத் தியல்அருள் ஒளியால்
பூதநல் வடிவம் காட்டிஎன் உளத்தே பொதுநடம் புரிகின்ற பொருளே. 13

810 அடியனேன் பொருட்டிவ் வவனிமேல் கருணை அருள்வடி வெடுத்தெழுந் தருளி
நெடியனே முதலோர் பெறற்கரும் சித்தி நிலைஎலாம் அளித்தமா நிதியே
மடிவுறா தென்றும் சுத்தசன் மார்க்கம் வயங்கநல் வரந்தந்த வாழ்வே
பொடிஅணி கனகப் பொருப்பொளிர் நெருப்பே பொதுநடம் புரிகின்ற பொருளே. 14

811 என்பிழை அனைத்தும் பொறுத்தருள் புரிந்தென் இதயத்தில் இருக்கின்ற குருவே
அன்புடை அரசே அப்பனே என்றன் அம்மையே அருட்பெருஞ் ஜோதி
இன்புறு நிலையில் ஏற்றிய துணையே என்னுயிர் நாதனே என்னைப்
பொன்புனை மாலை புனைந்தஓர் பதியே பொதுநடம் புரிகின்ற பொருளே. 15

812 சத்திய பதியே சத்திய நிதியே சத்திய ஞானமே வேத
நித்திய நிலையே நித்திய நிறைவே நித்திய வாழ்வருள் நெறியே
சித்திஇன் புருவே சித்தியின் கருவே சித்தியிற் சித்தியே எனது
புத்தியின் தெளிவே புத்தமு தளித்துப் பொதுநடம் புரிகின்ற பொருளே. 16

813 சிதத்தொளிர் பரமே பரத்தொளிர் பதியே சிவபத அனுபவச் சிவமே
மதத்தடை தவிர்த்த மதிமதி மதியே மதிநிறை அமுதநல் வாய்ப்பே
சதத்திரு நெறியே தனிநெறித் துணையே சாமியே தந்தையே தாயே
புதப்பெரு வரமே புகற்கருந் தரமே பொதுநடம் புரிகின்ற பொருளே. 17

814 கலைவளர் கலையே கலையினுட் கலையே கலைஎலாம் தரும்ஒரு கருவே
நிலைவளர் கருவுட் கருஎன வயங்கும் நித்திய வானமே ஞான
மலைவளர் மருந்தே மருந்துறு பலனே மாபலம் தருகின்ற வாழ்வே
புலைதவிர்த் தெனையும் பொருளெனக் கொண்டு பொதுநடம் புரிகின்ற பொருளே. 18

815 மெய்ம்மையே கிடைத்த மெய்ம்மையே ஞான விளக்கமே விளக்கத்தின் வியப்பே
கைம்மையே தவிர்த்து மங்கலம் அளித்த கருணையே கரிசிலாக் களிப்பே
ஐம்மையே அதற்குள் அதுஅது ஆகும் அற்புதக் காட்சியே எனது
பொய்ம்மையே பொறுத்துப் புகலளித் தருளிப் பொதுநடம் புரிகின்ற பொருளே. 19

816 காரண அருவே காரிய உருவே காரண காரியம் காட்டி
ஆரண முடியும் ஆகம முடியும் அமர்ந்தொளிர் அற்புதச் சுடரே
நாரண தலமே* நாரண வலமே நாரணா காரத்தின் ஞாங்கர்ப்
பூரண ஒளிசெய் பூரண சிவமே பொதுநடம் புரிகின்ற பொருளே. 20

திருச்சிற்றம்பலம்

---

* தரமே – முதற் பதிப்பு. பொ. சு., ஆ.பா.,

Koviloor Digital Library

53. திருவருட் பெருமை

எழுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

817 அன்பனே அப்பா அம்மையே அரசே அருட்பெருஞ் ஜோதியே அடியேன்
துன்பெலாம் தொலைத்த துணைவனே ஞான சுகத்திலே தோற்றிய சுகமே
இன்பனே எல்லாம் வல்லசித் தாகி என்னுளே இலங்கிய பொருளே
வன்பனேன் பிழைகள் பொறுத்தருட் ஜோதி வழங்கினை வாழிநின் மாண்பே.
1

818 பெருகுமா கருணைப் பெருங்கடல் இன்பப் பெருக்கமே என்பெரும் பேறே
உருகும்ஓர் உள்ளத் துவட்டுறா தினிக்கும் உண்மைவான் அமுதமே என்பால்
கருகும்நெஞ் சதனைத் தளிர்த்திடப் புரிந்த கருணையங் கடவுளே விரைந்து
வருகஎன் றுரைத்தேன் வந்தருட் ஜோதி வழங்கினை வாழிநின் மாண்பே.
2

819 எந்தைஎன் குருவே என்னுயிர்க் குயிரே என்னிரு கண்ணினுள் மணியே
இந்துறும் அமுதே என்னுயிர்த் துணையே இணையிலா என்னுடை அன்பே
சொந்தநல் உறவே அம்பலத் தரசே ஜோதியே ஜோதியே விரைந்து
வந்தருள் என்றேன் வந்தருட் ஜோதி வழங்கினை வாழிநின் மாண்பே. 3

820 கோஎன எனது குருஎன ஞான குணம்என ஒளிர்சிவக் கொழுந்தே
பூஎன அதிலே மணம்என வணத்தின் பொலிவென வயங்கிய பொற்பே
தேவெனத் தேவ தேவென ஒருமைச் சிவம்என விளங்கிய பதியே
வாஎன உரைத்தேன் வந்தருட் ஜோதி வழங்கினை வாழிநின் மாண்பே.
4

821 உள்ளமே இடங்கொண் டென்னைஆட் கொண்ட ஒருவனே உலகெலாம் அறியத்
தெள்ளமு தளித்திங் குன்னைவாழ் விப்பேம் சித்தம்அஞ் சேல்என்ற சிவமே
கள்ளமே தவிர்த்த கருணைமா நிதியே கடவுளே கனகஅம் பலத்தென்
வள்ளலே என்றேன் வந்தருட் ஜோதி வழங்கினை வாழிநின் மாண்பே. 5

822 நல்லவா அளித்த நல்லவா எனையும் நயந்தவா நாயினேன் நவின்ற
சொல்லவா எனக்குத் துணையவா ஞான சுகத்தவா சோதிஅம் பலவா
அல்லவா அனைத்தும் ஆனவா என்னை ஆண்டவா தாண்டவா எல்லாம்
வல்லவா என்றேன் வந்தருட் ஜோதி வழங்கினை வாழிநின் மாண்பே. 6

823 திண்மையே முதலைங் குணக்கரு வாய செல்வமே நல்வழி காட்டும்
கண்மையே கண்மை கலந்தஎன் கண்ணே கண்ணுற இயைந்தநற் கருத்தே
உண்மையே எல்லாம் உடையஓர் தலைமை ஒருதனித் தெய்வமே உலவா
வண்மையே என்றேன் வந்தருட் ஜோதி வழங்கினை வாழிநின் மாண்பே.
7

Koviloor Digital Library

824 காய்மையே தவிர்த்துக் கருணையே கனிந்த கற்பகத் தனிப்பெருந் தருவே
தூய்மையே விளக்கித் துணைமையே அளித்த ஜோதியே தூய்மைஇல் லவர்க்குச்
சேய்மையே எல்லாம் செயவல்ல ஞான சித்தியே சுத்தசன் மார்க்க
வாய்மையே என்றேன் வந்தருட் ஜோதி வழங்கினை வாழிநின் மாண்பே. 8

825 என்னவா அனைத்தும் ஈந்தவா என்னை ஈன்றவா என்னவா வேதம்
சொன்னவா கருணைத் தூயவா பெரியர் துதியவா அம்பலத் தமுதம்
அன்னவா அறிவால் அறியரி வறிவா ஆனந்த நாடகம் புரியும்
மன்னவா என்றேன் வந்தருட் ஜோதி வழங்கினை வாழிநின் மாண்பே.9

826 விரதமா திகளும் தவிர்த்துமெய்ஞ் ஞான விளக்கினால் என்னுளம் விளக்கி
இரதமா தியநல் தெள்ளமு தளித்திங் கென்கருத் தனைத்தையும் புரிந்தே
சரதமா நிலையில் சித்தெலாம் வல்ல சத்தியைத் தயவினால் தருக
வரதனே என்றேன் வந்தருட் ஜோதி வழங்கினை வாழிநின் மாண்பே. 10

திருச்சிற்றம்பலம்

54. அருள் ஆரமுதப்பேறு

திருவருட் பெருமை

கலி விருத்தம்

பண் – நட்டராகம்

திருச்சிற்றம்பலம்

827 விரைசேர் பொன்மல ரே – அதில் – மேவிய செந்தே னே
கரைசேர் முக்கனி யே – கனி – யிற்சுவை. யின்பய னே
பரைசேர் உள்ளொளி யே – பெரும் – பற்றம்ப லநடஞ் செய்
அரைசே தந்தனை யே – அரு – ளாரமு தந்தனை யே. 1

828 விண்ணார் செஞ்சுட ரே – சுடர் – மேவிய உள்ளொளி யே
தண்ணார் வெண்மதி யே – அதில் – தங்கிய தண்ணமு தே
கண்ணார் மெய்க்கன லே – சிவ –காமப்பெண் காதல னே
அண்ணா தந்தனை யே –அரு – ளாரமு தந்தனை யே. 2

829 துப்பார் செஞ்சடை யாய் – அருட் – சோதிச் சுகக்கட லே
செப்பா மேனிலைக் கே – சிறி – யேனைச் செலுத்திய வா
எப்பா லும்புகழும் – பொது – இன்ப நடம்புரி யும்
அப்பா தந்தனை யே – அரு – ளாரமு தந்தனை யே. 3

830 மெய்யா மெய்யருளே – என்று – மேவிய மெய்ப்பொரு ளே
கையா ருங்கனி யே –நுதற் – கண்கொண்ட செங்கரும் பே
செய்யாய் வெண்ணிறத் தாய் – திருச் – சிற்றம்பல நடஞ் செய்
ஐயா தந்தனை யே – அரு – ளாரமு தந்தனை யே. 4

Koviloor Digital Library

831 பொறிவே றின்றி நினை – நிதம் – போற்றும் புனிதரு ளே
குறிவே றின்றி நின்ற – பெருஞ் – சோதிக் கொழுஞ்சுடரே
செறிவே தங்களெ லாம் – உரை – செய்ய நிறைந்திடும் பேர்
அறிவே தந்தனை யே – அரு – ளாரமு தந்தனை யே. 5

832 முத்தா முத்தரு ளே – ஒளிர் – கின்ற முழுமுத லே
சித்தா சித்திஎ லாந் – தர – வல்ல செழுஞ்சுட ரே
பித்தா பித்தனெ னை – வலிந் – தாண்ட பெருந்தகை யே
அத்தா தந்தனை யே – அரு – ளாரமு தந்தனை யே. 6

833 தன்னே ரில்லவ னே – எனைத் – தந்த தயாநிதி யே
மன்னே மன்றிடத் தே – நடஞ் – செய்யுமென் வாழ்முத லே
பொன்னே என்னுயி ரே – உயி – ருள் நிறை பூரண மே
அன்னே தந்தனை யே – அரு – ளாரமு தந்தனை யே 7

834 ஒளியே அவ்வொளி யின் – நடு – உள்ளொளிக் குள்ளொளி யே
வெளியே எவ்வெளி யும் – அடங் – கின்ற வெறுவெளி யே
தளியே அம்பலத் தே – நடஞ் – செய்யுந் தயாநிதி யே
அளியே தந்தனை யே – அரு – ளாரமு தந்தனையே. 8

835 மருளேய் நெஞ்சக னேன் – மன வாட்டமெ லாந்தவிர்த் தே
தெருளே யோர்வடி வாய் – உறச் – செய்த செழுஞ்சுட ரே
பொருளே சிற்சபை வாழ் – வுறு – கின்றவென் புண்ணிய னே
அருளே தந்தனை யே – அரு – ளாரமு தந்தனையே. 9

836 முன்பே என்றனை யே – வலிந் – தாட்கொண்ட முன்னவ னே
இன்பே என்னுயி ரே – எனை – ஈன்ற இறையவ னே
பொன்பே ரம்பல வா – சிவ – போகஞ்செய் சிற்சபை வாழ்
அன்பே தந்தனை யே – அரு – ளாரமு தந்தனை யே. 10

837 பவனே வெம்பவ நோய் – தனைத் – தீர்க்கும் பரஞ்சுடரே
சிவனே செம்பொரு ளே – திருச் – சிற்றம் பலநடிப் பாய்
தவநே யம்பெறு வார் – தமைத் தாங்கி யருள்செய வல்
லவனே தந்தனை யே – அரு – ளாரமு தந்தனை யே. 11

838 தேனாய்த் தீம்பழ மாய்ச் – சுவை – சேர்கரும் பாயமு தம்
தானாய் அன்பரு ளே – இனிக் – கின்ற தனிப்பொரு ளே
வானாய்க் காலன லாய்ப் – புன – லாயதில் வாழ்புவி யாய்
ஆனாய் தந்தனை யே – அரு – ளாரமு தந்தனை யே. 12

Koviloor Digital Library

839 பொடியேற் றும்புய னே – அருட் – பொன்னம் பலத்தர சே
செடியேற் கன்றளித் தாய் – திருச் – சிற்றம் பலச்சுட ரே
கடியேற் கன்னையெ னுஞ் – சிவ – காமக் கொடையுடை யாய்
அடியேற் கின்றளித் தாய் – அரு – ளாரமு தந்தனையே. 13

திருச்சிற்றம்பலம்

55. உபதேச உண்மை

கலி விருத்தம்
பண்–நட்டராகம்
திருச்சிற்றம்பலம்

840 கண்ணே கண்மணி யே – கருத் – தேகருத் தின்கனி வே
விண்ணே விண்ணிறை வே – சிவ – மேதனி மெய்ப்பொரு ளே
தண்ணேர் ஒண்மதி யே – எனைத் – தந்த தயாநிதி யே
உண்ணேர் உள்ளொளி யே – எனக் – குண்மை உரைத்தரு ளே 1

841 வளியே வெண்ணெருப் பே – குளிர் – மாமதி யேகன லே
வெளியே மெய்ப்பொரு ளே – பொருள் – மேவிய மேனிலை யே
அளியே அற்புத மே – அமு – தேஅறி வேஅர சே
ஒளியே உத்தம னே – எனக் – குண்மை உரைத்தரு ளே. 2

842 அன்பே என்னர சே – திரு – வம்பலத் தாரமு தே
என்பே உள்ளுரு கக் – கலந் – தென்னு ளிருந்தவ னே
இன்பே என்னறி வே – பர – மேசிவ மேயென வே
உன்பே ரோதுகின் றேன் – எனக் – குண்மை உரைத்தரு ளே. 3

843 தனையா வென்றழைத் தே – அருட் – சத்தி யளித்தவ னே
அனையா யப்பனு மாய் – எனக் – காரிய னானவ னே
இனையா தென்னையுமேல் – நிலை – யேற்றுவித் தாண்டவனே
உனையான் ஏத்துகின் றேன் – எனக் – குண்மை உரைத்தரு ளே. 4

844 துப்பார் செஞ்சுடரே – அருட் – சோதி சுகக்கட லே
அப்பா என்னர சே – திரு – வம்பலத் தாரமு தே
இப்பா ரிற்பசிக் கே – தந்த – இன்சுவை நல்லுண வே
ஒப்பாய் ஒப்பரி யாய் – எனக் – குண்மை உரைத்தரு ளே. 5

845 என்றே யென்று ளுறுஞ் – சுட – ரேஎனை ஈன்றவ னே
நன்றே நண்பெனக் கே – மிக – நல்கிய நாயக னே
மன்றோ் மாமணி யே – சுக – வாழ்க்கையின் மெய்ப் பொருளே
ஒன்றே யென்துணையே – எனக் – குண்மை உரைத்தரு ளே. 6

Koviloor Digital Library

846 திருவே தெள்ளமுதே – அருட் – சித்தசிகா மணியே
கருவே ரற்றிடவே – களை – கின்றவென் கண்ணுதலே
மருவே மாமலரே – மலர் – வாழ்கின்ற வானவனாம்
உருவே யென்குருவே – யெனக் – குண்மை உரைத்தரு ளே. 7

847 தடையா வுந்தவிர்த் தே – எனைத் – தாங்கிக்கொண் டாண்டவ னே
அடையா யன்பிலர் பால் – எனக் – கன்பொடு தந்தபெ ருங்
கொடையாய் குற்றமெ லாங் – குணங் – கொண்டகு ணக்குன்ற மே
உடையாய் உத்தம னே – எனக் – குண்மை உரைத்தரு ளே. 8

848 பெண்ணாய் ஆணுரு வாய் – எனைப் – பெற்றபெ ருந்தகை யே
அண்ணா என்னர சே – திரு – வம்பலத் தாடுகின் றோய்
எண்ணா நாயடி யேன் – களித் – திட்டவு ணவையெ லாம்
உண்ணா துண்டவ னே – எனக் – குண்மை உரைத்தரு ளே. 9

849 நந்தா லுங்கடந் தே – ஒளிர் – ஞானச பாபதி யே
பொன்னா ருஞ்சபை யாய் – அருட் – பூரண புண்ணிய னே
என்னால் ஆவதொன்றும் – உனக் – கில்லையெ னினுமெந் தாய்
உன்னால் வாழுகின் றேன் – எனக் – குண்மை உரைத்தரு ளே. 10

திருச்சிற்றம்பலம்

56. இறை இன்பக் குழைவு

அமையங் கூறல்

பன்னிருசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

850 கருணை ததும்பிப் பொதுநோக்கும் கண்ணிற் கிடைத்த கண்ணேஓர்
கனியில் கனிந்தன் புருவான கருத்தில் கிடைத்த கருத்தேமெய்
அருள்நன் னிலையில் அதுஅதுவாய் அறிவிற் கிடைத்த அறிவேஎன்
அகத்தும் புறத்தும் ஒளிநிறைவித் தமர்ந்த குருவே ஐம்பூத
வருண முதலா அவைகடந்த வரைப்பாய் விளங்கு மணிமன்றில்
வயங்கு சுடரே எல்லாஞ்செய் வல்ல குருவே என்னுளத்தே
தருண நடஞ்செய் அரசேஎன் தாயே என்னைத் தந்தாயே
தனித்த தலைமைப் பதியேஇத் தருணம் வாய்த்த தருணமதே. 1

851 கருவிற் கலந்த துணையேஎன் கனிவில் கலந்த அமுதேஎன்
கண்ணிற் கலந்த ஒளியேஎன் கருத்திற் கலந்த களிப்பேஎன்
உருவிற் கலந்த அழகேஎன் உயிரிற் கலந்த உறவேஎன்
உணர்விற் கலந்த சுகமேஎன் னுடைய ஒருமைப் பெருமானே

Koviloor Digital Library

தெருவிற் கலந்து விளையாடுஞ் சிறியேன் தனக்கே மெய்ஞ்ஞான
சித்தி அளித்த பெருங்கருணைத் தேவே உலகத் திரளெல்லாம்
மருவிக் கலந்து வாழ்வதற்கு வாய்த்த தருணம்இதுஎன்றே
வாயே பறையாய் அறைகின்றேன் எந்தாய் கருணை வலத்தாலே. 2

852 தானே தயவால் சிறியேற்குத் தனித்த ஞான அமுதளித்த
தாயே எல்லாச் சுதந்தரமும் தந்த கருணை எந்தாயே
ஊனே விளங்க ஊனமிலா ஒளிபெற் றெல்லா உலகமும்என்
உடைமை யாக்கொண் டருள்நிலைமேல் உற்றேன் உன்றன் அருளாலே
வானே மதிக்கச் சாகாத வரனாய் எல்லாம் வல்லசித்தே
வயங்க உனையுட் கலந்துகொண்டேன் வகுக்குந் தொழிலே முதலைந்தும்
நானே புரிகின் றேன்புரிதல் நானோ நீயோ நான்அறியேன்
நான்நீ என்னும் பேதம்இலா நடஞ்செய் கருணை நாயகனே. 3

853 கலைசார் முடிபு கடந்துணர்வு கடந்து நிறைவாய்க் கரிசிலதாய்க்
கருணை மயமாய் விளங்குசிதா காய நடுவில் இயற்கையுண்மைத்
தலைசார் வடிவில் இன்பநடம் புரியும் பெருமைத் தனிமுதலே
சாகாக் கல்வி பயிற்றிஎன்னுட் சார்ந்து விளங்கும் சற்குருவே
புலைசார் மனத்துச் சிறியேன்றன் குற்றம் அனைத்தும் பொறுத்தருளிப்
பொன்றா வடிவு கொடுத்தெல்லாம் புரிவல் லபந்தந் தருட்சோதி
நிலைசார் இறைமை அளித்தனைநான் பொதுவில் ஞான நீதிஎனும்
நிருத்தம் புரிகின் றேன்புரிதல் நீயோ நானோ நிகழ்த்தாயே. 4

854 கருத்தில் கருதிக் கொண்டஎலாம் கணத்தில் புரிய எனக்கேமெய்க்
காட்சி ஞானக் கண்கொடுத்த கண்ணேவிடயக் கானகத்தே
எருத்தில் திரிந்த கடையேனை எல்லா உலகும் தொழநிலைமேல்
ஏற்றி நீயும் நானும்ஒன்றாய் இருக்கப் புரிந்தாய் எந்தாயே
இருத்திக் கருத்தில் உன்தயவை எண்ணுந் தோறும் அந்தோஎன்
இதயம் உருகித் தளதளஎன் றிளகி இளகித் தண்ணீராய்
அருத்திப் பெருநீர் ஆற்றொடுசேர்ந் தன்புப் பெருக்கில் கலந்ததுநான்
அதுஎன் றொன்றும் தோற்றாதே அச்சோ அச்சோ அச்சோவே. 5

855 ஏதும் தெரியா தகங்கரித்திங் கிருந்த சிறியேன் தனைவலிந்தே
எல்லா உலகும் அதிசயிக்க எல்லாம் வல்ல சித்தெனவே
ஓதும் பொருளைக் கொடுத்தென்றும் உலவா இன்பப் பெருநிலையில்
ஓங்கி உறவைத் தனையேஎன் னுடைய ஒருமைப் பெருமானே
ஈதுன் கருணைக் கியல்போநீ என்பால் வைத்த பெருங்கருணை
இந்நாட்புதிதே அந்நாளில் இலையே இதனை எண்ணியநான்
தாதும் உணர்வும் உயிரும்உள்ளத் தடமும் பிறவாந் தத்துவமும்
தாமே குழைந்து தழைந்தமுத சார மயமா கின்றேனே. 6

Koviloor Digital Library

856 ஓவா துண்டு படுத்துறங்கி உணர்ந்து விழித்துக் கதைபேசி
உடம்பு நோவா துளமடக்கா தோகோ நோன்பு கும்பிட்டே
சாவா வரமும் சித்திஎலாம் தழைத்த நிலையும் சன்மார்க்க
சங்க மதிப்பும் பெற்றேன்என் சதுர்தான் பெரிதென் சரித்திரத்தை
ஆவா நினைக்கில் அதிசயம்என் அப்பா அரசே அமுதேஎன்
ஆவிக் கினிய துணையேஎன் அன்பே அறிவே அருட்சோதித்
தேவா இதுநின் செயலேஇச் செயலை நினைக்குந் தொறும் எனது
சிந்தை கனிந்து கனிந்துருகித் தெள்ளா ரமுதம் ஆனதுவே. 7

857 இரவும் பகலும் தூங்கியஎன் தூக்கம் அனைத்தும் இயல்யோகத்
திசைந்த பலனாய் விளைந்ததுநான் இரண்டு பொழுதும்உண்டஎலாம்
பரவும் அமுத உணவாயிற் றந்தோ பலர்பால் பகல்இரவும்
படித்த சமயச் சாத்திரமும் பலரால் செய்த தோத்திரமும்
விரவிக் களித்து நாத்தடிக்க விளம்பி விரித்த பாட்டெல்லாம்
வேதா கமத்தின் முடிமீது விளங்கும் திருப்பாட் டாயினவே
கரவொன் றறியாப் பெருங்கருணைக் கடவுள் இதுநின் தயவிதனைக்
கருதும் தொறும்என் கருத்தலர்ந்து சுகமே மயமாக் கண்டதுவே.8

858 ஊற்றை உடம்பில் இருட்டறைவாய் உறங்கி விழித்துக் கதைபேசி
உண்டிங் குடுத்துக் கருத்திழந்தே உதவா எருதின் ஊர்திரிந்து
நேற்றை வரையும் வீண்போது போக்கி இருந்தேன் நெறிஅறியேன்
நேரேஇற்றைப் பகல்அந்தோ நெடுங்கா லமும்மெய்த் தவயோக
ஆற்றை அடைந்தோர் எல்லோரும் அச்சோ என்றே அதிசயிப்ப
அமுதுண் டழியாத் திருஉருவம் அடைந்தேன் பெரிய அருட்சோதிப்
பேற்றை உரிமைப் பேறாகப் பெற்றேன் பெரிய பெருமான்நின்
பெருமை இதுவேல் இதன்இயலை யாரே துணிந்து பேசுவரே. 9

859 புரைசேர் வினையும் கொடுமாயைப் புணர்ப்பும் இருளும் மறைப்பினொடு
புகலும் பிறவாம் தடைகளெலாம் போக்கி ஞானப் பொருள்விளங்கும்
வரைசேர்த் தருளிச் சித்தியெலாம் வழங்கிச் சாகா வரங்கொடுத்து
வலிந்தென் உளத்தில் அமர்ந்துயிரில் கலந்து மகிழ்ந்து வாழ்கின்றாய்
பரைசேர் வெளியில் பதியாய் அப் பால்மேல் வெளியில் விளங்குசித்த
பதியே சிறியேன் பாடலுக்குப் பரிசு விரைந்தே பாலித்த
அரைசே அமுதம் எனக்களித்த அம்மே உண்மை அறிவளித்த
அப்பா பெரிய அருட்ஜோதி அப்பா வாழி நின்அருளே. 10

திருச்சிற்றம்பலம்

Koviloor Digital Library

57. அனுபவ நிலை

கட்டளைக்கலித்துறை

திருச்சிற்றம்பலம்

860 நான்செய்த புண்ணியம் என்னுரைக் கேன்பொது நண்ணியதோர்
வான்செய்த மாமணி என்கையில் பெற்றுநல்வாழ்வடைந்தேன்
ஊன்செய்த தேகம் ஒளிவடி வாகநின் றோங்குகின்றேன்
தேன்செய்த தெள்ளமு துண்டேன்கண் டேன்மெய்த் திருநிலையே. 1

861 நான்செய்த புண்ணியம் என்னுரைப் பேன்பொது நண்ணியதோர்
வான்செய்த மெய்ப்பொருள் என்கையிற் பெற்றுமெய் வாழ்வடைந்தேன்
கோன்செய்த பற்பல கோடிஅண் டங்களும் கூறவற்றில்
தான்செய்த பிண்டப் பகுதியும் நான்செயத் தந்தனனே. 2

862 திருநிலை பெற்றனன் அம்பலத் தான்அருள் தெள்ளமுதுண்
டுருநிலை பெற்றனன் ஒன்றே சிவமென ஓங்குகின்ற
பெருநிலை பெற்றனன் சுத்தசன் மார்க்கம் பிடித்துநின்றேன்
இருநிலை முந்நிலை எல்லா நிலையும் எனக்குளவே. 3

863 எத்தனை நான்குற்றம் செய்தும் பொறுத்தனை என்னைநின்பால்
வைத்தனை உள்ளம் மகிழ்ந்தனை நான்சொன்ன வார்த்தைகள்இங்
கத்தனை யும்சம் மதித்தருள் செய்தனை அம்பலத்தே
முத்தனை யாய்நினக் கென்மேல் இருக்கின்ற மோகம்என்னே. 4

864 இனியே இறையும் சகிப்பறி யேன்எனக் கின்பநல்கும்
கனியேஎன் தன்இரு கண்ணேமுக் கண்கொண்ட கற்பகமே
தனியேஎன் அன்புடைத் தாயேசிற் றம்பலம் சார்தந்தையே
முனியேல் அருள்க அருள்கமெய்ஞ் ஞானம் முழுதையுமே. 5

865 புத்தியஞ் சேல்சற்றும் என்நெஞ்ச மேசிற் பொதுத்தந்தையார்
நித்தியஞ் சேர்ந்த நெறியில் செலுத்தினர் நீஇனிநன்
முத்தியும் ஞானமெய்ச் சித்தியும் பெற்று முயங்கிடுவாய்
சத்தியம் சத்தியம் சத்தியம் சத்தியம் சத்தியமே. 6

866 கூடிய நாளிது தான்தரு ணம்எனைக் கூடிஉள்ளே
வாடிய வாட்டமெல் லாந்தவிர்த் தேசுக வாழ்வளிப்பாய்
நீடிய தேல்இனிச் சற்றும்பொ றேன்உயிர் நீத்திடுவேன்
ஆடிய பாதம் அறியச்சொன் னேன்என தாண்டவனே. 7

Koviloor Digital Library

867 ஆக்கிய நாள்இது தான்தரு ணம்அரு ளாரமுதம்
தேக்கிமெய் இன்புறச் செய்தருள் செய்தருள் செய்தருள்நீ
நீக்கினை யேல்இனிச் சற்றும்பொ றேன்உயிர் நீத்திடுவேன்
தூக்கிய பாதம் அறியச்சொன் னேன்அருட் சோதியனே. 8

திருச்சிற்றம்பலம்

58. கைம்மாறின்மை

அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

868 இழைஎலாம் விளங்கும் அம்மை இடங்கொள்நின் கருணை என்னும்
மழைஎலாம் பொழிந்தென் உள்ள மயக்கெலாம் தவிர்த்து நான்செய்
பிழைஎலாம் பொறுத்த உன்றன் பெருமைக்கென் புரிவேன் அந்தோ
உழைஎலாம் இலங்குஞ் சோதி உயர்மணி மன்று ளானே. 1

869 போதுதான் வீணே போக்கிப் புலையனேன் புரிந்த பொல்லாத்
தீதுதான் பொறுத்த உன்றன் திருவருட் பெருமைக் கந்தோ
ஏதுதான் புரிவேன் ஓகோ என்என்று புகழ்வேன் ஞான
மாதுதான் இடங்கொண் டோங்க வயங்குமா மன்று ளானே. 2

870 சிற்றறி வுடையன் ஆகித் தினந்தொறும் திரிந்து நான்செய்
குற்றமும் குணமாக் கொண்ட குணப்பெருங் குன்றே என்னைப்
பெற்றதா யுடனுற் றோங்கும் பெருமநின் பெருமை தன்னைக்
கற்றறி வில்லேன் எந்தக் கணக்கறிந் துரைப்பேன் அந்தோ. 3

871 மையரி நெடுங்க ணார்தம் வாழ்க்கையின் மயங்கி இங்கே
பொய்யறி வுடையேன் செய்த புன்மைகள் பொறுத்தாட் கொண்டாய்
ஐயறி வுடையார் போற்றும் அம்பலத் தரசே நின்சீர்
மெய்யறி வறியேன் எந்த விளைவறிந் துரைப்பேன் அந்தோ. 4

872 பேயினும் பெரியேன் செய்த பிழைகளுக் கெல்லை இல்லை
ஆயினும் பொறுத்தாட் கொண்டாய் அம்பலத் தரசே என்றன்
தாயினும் இனிய உன்றன் தண்ணருட் பெருமை தன்னை
நாயினுங் கடையேன் எந்த நலமறிந் துரைப்பேன் அந்தோ. 5

873 துரும்பினில் சிறியேன் வஞ்சம் சூழ்ந்தநெஞ் சகத்தேன் செய்த
பெரும்பிழை அனைத்தும் அந்தோ பெருங்குண மாகக் கொண்டாய்
அரும்பொருள் என்ன வேதம் ஆகமம் வழுத்து கின்ற
கரும்பினில் இனியாய் உன்றன் கருணைஎன் னென்பேன் அந்தோ. 6

Koviloor Digital Library

874 வரைகடந் தடியேன் செய்த வன்பிழை பொறுத்தாட் கொண்டாய்
திரைகடந் தண்ட பிண்டத் திசைஎலாம் கடந்தே அப்பால்
கரைகடந் தோங்கும் உன்றன் கருணையங் கடற்சீர் உள்ளம்
உரைகடந் ததுஎன் றால்யான் உணர்வதென் உரைப்ப தென்னே. 7

875 நனவினும் பிழையே செய்தேன் நாயினும் கடையேன் அந்தோ
கனவினும் பிழையே செய்தேன் கருணைமா நிதியே நீதான்
நினைவினும் குறியா தாண்டாய் நின்னருட் பெருமை தன்னை
வினவினும் சொல்வார் காணேன் என்செய்வேன் வினைய னேனே. 8

876 வன்செயல் பொறுத்தாட் கொண்ட வள்ளலே அடிய னேன்றன்
முன்செயல் அவைகளோடு முடுகுபின் செயல்கள் எல்லாம்
என்செயல் ஆகக் காணேன் எனைக்கலந் தொன்றாய் நின்றோய்
நின்செயல் ஆகக் கண்டேன் கண்டபின் நிகழ்த்தல் என்னே. 9

877 இருமையும் ஒருமை தன்னில் ஈந்தனை எந்தாய் உன்றன்
பெருமைஎன் னென்று நான்தான் பேசுவேன் பேதம் இன்றி
உரிமையால் யானும்நீயும் ஒன்றெனக் கலந்து கொண்ட
ஒருமையை நினைக்கின்றேன்என் உள்ளகந் தழைக்கின் றேனே. 10

திருச்சிற்றம்பலம்

59. வேண்டுகோள்

எழுசீர்க் கழிநெடில ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

878 உரத்தவான் அகத்தே உரத்தவா ஞான ஒளியினால் ஓங்கும்ஓர் சித்தி
புரத்தவா பெரியோர் புரத்தவா குற்றம் பொறுத்தடி யேன்தனக் களித்த
வரத்தவா உண்மை வரத்தவா ஆக மங்களும் மறைகளும் காணாத்
தரத்தவா அறிவா தரத்தவா பொதுவில் தனித்தவா இனித்தவாழ் வருளே.
1

879 முன்னவா திபர்க்கு முன்னவா வேத முடிமுடி மொழிகின்ற முதல்வா
பின்னவா திபர்க்குப் பின்னவா எவர்க்கும் பெரியவா பெரியவர் மதிக்கும்
சின்னவா சிறந்த சின்னவா ஞான சிதம்பர வெளியிலே நடிக்கும்
மன்னவா அமுதம் அன்னவா எல்லாம் வல்லவா நல்லவாழ் வருளே.
2

880 விடையவா தனைதீர் விடையவா சுத்த வித்தைமுன் சிவவரை கடந்த
நடையவா ஞான நடையவா இன்ப நடம்புரிந் துயிர்க்கெலாம் உதவும்
கொடையவா ஓவாக் கொடையவா எனையாட் கொண்டெனுள் அமர்ந்தரு ளியஎன்
உடையவா எல்லாம் உடையவா உணர்ந்தோர்க் குரியவா பெரியவாழ் வருளே.
3

Koviloor Digital Library

881 வலத்தவா நாத வலத்தவா ஜோதி மலையவா மனமுதல் கடந்த
புலத்தவா எனது புலத்தவா தவிர்த்துப் பூரண ஞானநோக் களித்த
நலத்தவா வரையா நலத்தவா மறைகள் நாடியும் காண்பதற் கரிதாம்
பலத்தவா திருஅம் பலத்தவா எல்லாம் படைத்தவா படைத்தவாழ் வருளே. 4

882 உணர்ந்தவர் உளத்தை உகந்தவா இயற்கை உண்மையே உருவதாய் இன்பம்
புணர்ந்திட எனைத்தான் புணர்ந்தவா ஞானப் பொதுவிலே பொதுநடம் புரிந்தெண்
குணந்திகழ்ந் தோங்கும் குணத்தவா குணமும் குறிகளும் கோலமும் குலமும்
தணந்தசன் மார்க்கத் தனிநிலை நிறுத்தும் தக்கவா மிக்கவாழ் வருளே. 5

883 தத்துவங் கடந்த தத்துவா ஞான சமரச சுத்தசன் மார்க்கச்
சத்துவ நெறியில் நடத்திஎன் தனைமேல் தனிநிலை நிறுத்திய தலைவா
சித்துவந் தாடும் சித்திமா புரத்தில் திகழ்ந்தவா திகழ்ந்தென துளத்தே
ஒத்துநின் றோங்கும் உடையவா கருணை உளத்தவா வளத்தவாழ்வருளே. 6

884 மதம்புகல் முடிபு கடந்தமெய்ஞ் ஞான மன்றிலே வயங்கொள்நா டகஞ்செய்
பதம்புகல் அடியேற் கருட்பெருஞ் சோதிப் பரிசுதந் திடுதும்என் றுளத்தே
நிதம்புகல் கருணை நெறியவா இன்ப நிலையவா நித்தநிற் குணமாம்
சிதம்புகல் வேத சிரத்தவா இனித்ததேனவா ஞானவாழ் வருளே. 7

885 மூவிரு முடிபும் கடந்ததோர் இயற்கை முடிபிலே முடிந்தென துடம்பும்
ஆவியும் தனது மயம்பெறக் கிடைத்த அருட்பெருஞ் சோதிஅம் பலவா
ஓவுரு முதலா உரைக்கும்மெய் உருவும் உணர்ச்சியும் ஒளிபெறு செயலும்
மேவிநின் றவர்க்குள் மேவிய உணர்வுள் மேயவா தூயவாழ் வருளே. 8

886 பங்கமோர் அணுவும் பற்றிடா அறிவால் பற்றிய பெற்றியார் உளத்தே
தங்குமோர் சோதித்தனி ப்பெருங்க கருணைத் தரந்திகழ் சத்தியத் தலைவா
துங்கமுற் றழியா நிலைதரும் இயற்கைத் தொன்மையாம் சுத்தசன் மார்க்கச்
சங்கநின் றேத்தும் சத்திய ஞான சபையவா அபயவாழ் வருளே. 9

887 இனித்தசெங் கரும்பில் எடுத்ததீஞ் சாற்றின் இளம்பதப் பாகொடு தேனும்
கனித்ததீங் கனியின் இரதமும் கலந்து கருத்தெலாம் களித்திட உண்ட
மனித்தரும் அமுத உணவுகொண் டருந்தும் வானநாட் டவர்களும் வியக்கத்
தனித்தமெய்ஞ் ஞான அமுதெனக் களித்த தனியவா இனியவாழ் வருளே. 10

திருச்சிற்றம்பலம்

Koviloor Digital Library

60. உலப்பில் இன்பம்

வேண்டுகோள்-2

கலிவிருத்தம்

திருச்சிற்றம்பலம்

888 கருணாநிதி யேஅடி யேன்இரு கண்ணுளானே
தெருள்நாடும்என் சிந்தையுள் மேவிய தேவதேவே
பொருள்நாடிய சிற்றம்ப லத்தொளிர் புண்ணியாமெய்த்
தருணாஇது தான்தரு ணம்எனைத் தாங்கிக்கொள்ளே. 1

889 கூகாஎனக் கூடி எடாதிக் கொடியனேற்கே
சாகாவரம் தந்த தயாநிதித் தந்தையேநின்
மாகாதலன் ஆகினன் நான்இங்கு வாழ்கின்றேன்என்
யோகாதி சயங்கள் உரைக்க உலப்புறாதே. 2

890 எந்தாய்உனைக் கண்டு களித்தனன் ஈண்டிப்போதே
சிந்தாநல மும்பல மும்பெற்றுத் தேக்குகின்றேன்
அந்தாமரை யான்நெடு மாலவன் ஆதிவானோர்
வந்தார்எனை வாழ்த்துகின் றார்இங்கு வாழ்கஎன்றே. 3

891 வாழ்வேன்அரு ளாரமு துண்டிங்கு வாழ்கின்றேன்நான்
ஏழ்வேதனை யும்தவிர்ந் தேன்உனை யேஅடைந்தேன்
சூழ்வேன்திருச் சிற்றம்பலத்தைத் துதித்து வாழ்த்தித்
தாழ்வேன்அல தியார்க்கும் இனிச்சற்றும் தாழ்ந்திடேனே. 4

892 தாழாதெனை ஆட்கொண் டருளிய தந்தையேநின்
கேழார்மணி அம்பலம் போற்றக் கிடைத்துளேன்நான்
ஏழாநிலை மேல்நிலை ஏறி இலங்குகின்றேன்
ஊழால்வந்த துன்பங்கள் யாவும் ஒழிந்ததன்றே. 5

893 கோடாமறை ஆகமம் ஆதிய கூறுகின்ற
சூடாமணி யேமணி யுள்ஒளிர் சோதியேஎன்
பாடானவை தீர்த்தருள் ஈந்துநின் பாதம்என்னும்
வாடாமலர் என்முடி சூட்டினை வாழிநீயே. 6

894 எல்லாஞ்செய வல்லவ னேஎனை ஈன்றதாயின்
நல்லாய்சிவ ஞானிகள் பெற்றமெய்ஞ் ஞானவாழ்வே
கொல்லாநெறி காட்டிஎன் தன்னைக் குறிப்பிற்கொண்டென்
பொல்லாமை பொறுத்தனை வாழ்கநின் பொற்பதமே. 7

Koviloor Digital Library

895 பரமான சிதம்பர ஞான சபாபதியே
வரமான எல்லாம் எனக்கீந்தநல் வள்ளலேஎன்
தரமானது சற்றும் குறித்திலை சாமிநின்னை
உரமானஉள் அன்பர்கள் ஏசுவர் உண்மைஈதே. 8

896 தாயேஎனைத் தந்த தயாநிதித் தந்தையே இந்
நாயேன்பிழை யாவையும் கொண்டனை நன்மைஎன்றே
காயேகனி யாகக் கருதும் கருத்தனேநின்
சேயேஎன என்பெயர் எங்கும் சிறந்ததன்றே. 9

897 பொய்யேஉரைக் கின்றஎன் சொல்லும் புனைந்துகொண்டாய்
மெய்யேதிரு அம்பலத் தாடல்செய் வித்தகனே
எய்யேன்இனி வெம்மலக் கூட்டில் இருந்தென்உள்ளம்
நையேன்சுத்த நல்லுடம் பெய்தினன் நானிலத்தே. 10

திருச்சிற்றம்பலம்

61. செய்பணி வினவல்

திருவருட்பேறு

அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

898 அருளே பழுத்த சிவதருவில் அளிந்த பழந்தந் தடியேனைத்
தெருளே சிற்றம் பலவாநின் செல்வப் பிள்ளை ஆக்கினையே
மருளே முதலாம் தடைஎல்லாம் தீர்ந்தேன் நின்பால் வளர்கின்றேன்
பொருளே இனிநின் தனைப்பாடி ஆடும் வண்ணம் புகலுகவே. 1

899 ஒருவா தடியேன் எண்ணியவா றெல்லாம் அருளி உளங்களித்தே
திருவார் சிற்றம் பலவாநின் செல்வப் பிள்ளை ஆக்கினையே
பெருவாழ் வடைந்தேன் பெருங்களிப்பால் பெருமான் நின்பால் வளர்கின்றேன்
உருவார் உலகில் உனைப்பாடி ஆடும் வண்ணம் உரைத்தருளே. 2

900 அவமே புரிந்தேன் தனைமீட்டுன் அருளா ரமுதம் மிகப்புகட்டிச்
சிவமே சிற்றம் பலவாநின் செல்வப் பிள்ளை ஆக்கினையே
பவமே தொலைத்தேன் பெருங்களிப்பால் பதியே நின்பால் வளர்கின்றேன்
நவமே அடியேன் நினைப்பாடி ஆடும் வண்ணம் நவிலுகவே. 3

901 பல்வா தனையும் தவிர்த்தெனக்கே பரமா னந்த அமுதளித்துச்
செல்வா சிற்றம் பலவாநின் செல்வப் பிள்ளை ஆக்கினையே
வல்வா தனைசெய்மனச்செருக்கை மாற்றி நின்பால் வளர்கின்றேன்
நல்வாழ் வளித்தாய் நினைப்பாடி ஆடும் வண்ணம் நவிலுகவே. 4

Koviloor Digital Library

902 ஓவா இன்ப மயமாகி ஓங்கும் அமுதம் உதவிஎனைத்
தேவா சிற்றம் பலவாநின் **செல்வப் பிள்ளை** ஆக்கினையே
பூவார் மணம்போல் சுகந்தருமெய்ப் பொருளே நின்பால் வளர்கின்றேன்
நாவால்அடியேன் நினைப்பாடி ஆடும் வண்ணம் நவிலுகவே. 5

903 இளிவே தவிர்த்துச் சிறியேன்தன் எண்ணம் முழுதும் அளித்தருளித்
தெளிவே சிற்றம் பலவாநின் **செல்வப் பிள்ளை** ஆக்கினையே
ஒளிவேய் வடிவு பெற்றோங்கி உடையாய் உன்பால் வளர்கின்றேன்
தளிவேய் நினது புகழ்பாடி ஆடும் வண்ணம் சாற்றுகவே. 6

904 மறப்பே தவிர்த்திங் கெனைஎன்றும் மாளா நிலையில் தனியமர்த்திச்
சிறப்பே சிற்றம் பலவாநின் **செல்வப் பிள்ளை** ஆக்கினையே
பிறப்பே தவிர்ந்தேன் பெருங்களிப்பால் பெருமான் நின்பால் வளர்கின்றேன்
திறப்பேர் உலகில் உனைப்பாடி ஆடும் வண்ணம் செப்புகவே. 7

905 ஊனே புகுந்தென் உளங்கனிவித் துயிரில் கலந்தே ஒன்றாகித்
தேனே சிற்றம் பலவாநின் **செல்வப் பிள்ளை** ஆக்கினையே
நானே அழியா வாழ்வுடையேன் நானே நின்பால் வளர்கின்றேன்
தானேர் உலகில் உனைப்பாடி ஆடும் வண்ணம் சாற்றுகவே. 8

906 ஆரா அமுதம் அளித்தருளி அன்பால் இன்ப நிலைக்கேற்றிச்
சீரார் சிற்றம் பலவாநின் **செல்வப் பிள்ளை** ஆக்கினையே
ஏரார் இன்ப அனுபவங்கள் எல்லாம் பொருந்தி இருக்கின்றேன்
தீரா உலகில் அடிச்சிறியேன் செய்யும் பணியைத் தெரித்தருளே. 9

907 மெய்வைப் பழியா நிலைக்கேற்றி விளங்கும் அமுதம் மிகஅளித்தே
தெய்வப் பதியே சிவமேநின் செல்வப்பிள்ளை ஆக்கினையே
ஐவைப் பறிந்தேன் துரிசெல்லாம் அறுத்தேன் நின்பால் வளர்கின்றேன்
பொய்வைப் படையேன் இவ்வுலகில் புரியும் பணியைப் புகன்றருளே. 10

908 ....
....
நாரா யணனு நான்முகனு நயந்து வியக்க நிற்கின்றேன்
ஏரார் உலகில் இனிஅடியேன் செய்யும் பணியை இயம்புகவே. 11

909 பிறந்தேற் கென்றும் இறவாது பிறவா தோங்கும் பெருமைதந்து
சிறந்தே சிற்றம் பலவாநின் **செல்வப் பிள்ளை** ஆக்கினையே
திறந்தோர் முனிவர் தேவரெலாந் தேர்ந்து நயப்ப நிற்கின்றேன்
அறந்தோர் உலகில் இனிஅடியேன் செய்யும் பணியை அருளுகவே. 12

Koviloor Digital Library

62. ஆற்றமாட்டாமை

ஆற்றாமை

அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

910 இப்பார் முதல்எண் மூர்த்தமதாய் இலங்கும் கருணை எங்கோவே
தப்பா யினதீர்த் தென்னையும்முன் தடுத்தாட் கொண்ட தயாநிதியே
எப்பா லவரும் புகழ்ந்தேத்தும் இறைவா எல்லாம் வல்லோனே
அப்பா அரசே இனிச்சிறிதும் ஆற்ற மாட்டேன் கண்டாயே. 1

911 புரைசேர் துயரப் புணரிமுற்றும் கடத்திஞான பூரணமாம்
கரைசேர்த் தருளி இன்னமுதக் கடலைக் குடிப்பித் திடல்வேண்டும்
உரைசேர் மறையின் முடிவிளங்கும் ஒளிமா மணியே உடையானே
அரைசே அப்பா இனிச்சிறிதும் ஆற்ற மாட்டேன் கண்டாயே. 2

912 கண்ணார் அமுதக் கடலேஎன் கண்ணே கண்ணுட் கருமணியே
தண்ணார் மதியே கதிர்பரப்பித் தழைத்த சுடரே தனிக்கனலே
எண்ணா டரிய பெரியஅண்டம் எல்லாம் நிறைந்த அருட்சோதி
அண்ணா அரசே இனிச்சிறிதும் ஆற்ற மாட்டேன் கண்டாயே. 3

913 பொய்யா தென்றும் எனதுளத்தே பொருந்தும் மருந்தே புண்ணியனே
கையார்ந் திலங்கு மணியேசெங் கரும்பே கனியே கடையேற்குச்
செய்யா உதவி செய்தபெருந் தேவே மூவாத் தெள்ளமுதே
ஐயா அரசே இனிச்சிறிதும் ஆற்ற மாட்டேன் கண்டாயே. 4

914 இத்தா ரணியில் என்பிழைகள் எல்லாம் பொறுத்த என்குருவே
நித்தா சிற்றம் பலத்தாடும் நிருத்தா எல்லாஞ் செயவல்ல
சித்தா சித்தி புரத்தமர்ந்த தேவே சித்த சிகாமணியே
அத்தா அரசே இனிச்சிறிதும் ஆற்ற மாட்டேன் கண்டாயே. 5

915 எம்மே தகவும் உடையவர்தம் இதயத் தமர்ந்த இறையவனே
இம்மே தினியில் எனைவருவித் திட்ட கருணை எம்மானே
நம்மே லவர்க்கும் அறிவரிய நாதா என்னை நயந்தீன்ற
அம்மே அப்பா இனிச்சிறிதும் ஆற்ற மாட்டேன் கண்டாயே. 6

916 செப்பார் கலைகள் மொழிந்தபொருள் திறங்கள் அனைத்துந் தெரிந்துதெளிந்
திப்பா ரிடைநின் புகழ்பாடு கின்ற பெரிய ரின்மொழிப்பாட்
டொப்பச் சிறியேன் புன்மொழிப்பாட் டெல்லாம் உவந்த உடையானே
அப்பா அரசே இனிச்சிறிதும் ஆற்ற மாட்டேன் கண்டாயே. 7

Koviloor Digital Library

917 துப்பார் கனகப் பொதுவில்நடத் தொழிலால் உலகத் துயர்ஒழிக்கும்
வைப்பாம் இறைவா சிவகாம வல்லிக் கிசைந்த மணவாளா
ஒப்பார் உயர்ந்தார் இல்லாத ஒருவா எல்லாம் உடையானே
அப்பா அரசே இனிச்சிறிதும் ஆற்ற மாட்டேன் கண்டாயே. 8

918 ஒப்பா ருரைப்பார் நின்பெருமைக் கெனமா மறைகள் ஓலமிடும்
துப்பார் வண்ணச் சுடரேமெய்ச் சோதிப் படிக வண்ணத்தாய்
வெப்பா னவைதீர்த் தெனக்கமுத விருந்து புரிதல் வேண்டும்என்றன்
அப்பா அரசே இனிச்சிறிதும் ஆற்ற மாட்டேன் கண்டாயே. 9

919 வெப்பார் உள்ளக் கலக்கமெலாம் இற்றைப் பொழுதே விலக்கிஒழித்
திப்பா ரிடைஎன் கருத்தின்வண்ணம் எல்லாம் விரைவின் ஈந்தருள்க
ஒப்பால் உரைத்த தன்றுண்மை உரைத்தேன் கருணை உடையானே
அப்பா அரசே இனிச்சிறிதும் ஆற்ற மாட்டேன் கண்டாயே. 10

திருச்சிற்றம்பலம்

63. திருப்பள்ளி எழுச்சி

எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

920 பொழுது விடிந்ததென் உள்ளமென் கமலம்
பூத்தது பொன்னொளி பொங்கிய தெங்கும்
தொழுதுநிற் கின்றனன் செய்பணி யெல்லாம்
சொல்லுதல் வேண்டுமென் வல்லசற் குருவே
முழுதுமா னான் எனஆகம வேத
முறைகளெ லாமொழி கின்றமுன் னவனே
எழுதுத லரியசீர் அருட்பெருஞ்ஜோதி
என்தந்தை யேபள்ளி எழுந்தருள் வாயே. 1

921 துற்குண மாயைபோய்த் தொலைந்தது ஞானம்
தோன்றிடப் பொன்னொளி தோற்றிய கதிர்தான்
சிற்குண வரைமிசை உதயஞ்செய் ததுமா
சித்திகள் அடிப்பணி செய்திடச் சூழ்ந்த
நற்குணச் சன்மார்க்க சங்கத்தா ரெல்லாம்
நண்ணினர் தோத்திரம் பண்ணிநிற் கின்றார்
எற்குண வளித்தஎன் அருட்பெருஞ்ஜோதி
என்னம்மை யேபள்ளி எழுந்தருள் வாயே. 2

Koviloor Digital Library

922 நிலந்தெளிந் ததுகண மழுங்கின சுவண
நீடொளி தோன்றிற்றுக் கோடொலிக் கின்ற
அலர்ந்தது தாமரை ஆணவ இருள்போய்
அழிந்தது கழிந்தது மாயைமால் இரவு
புலர்ந்தது தொண்டரோ டண்டருங் கூடிப்
போற்றியோ சிவசிவ போற்றியென் கின்றார்
இலங்குரு வளித்தஎன் அருட்பெருஞ்ஜோதி
என்குரு வேபள்ளி எழுந்தருள் வாயே. 3

923 கல்லாய மனங்களும் கரையப்பொன் னொளிதான்
கண்டது கங்குலும் விண்டது தொண்டர்
பல்லாரு மெய்தினர் பாடிநின் றாடிப்
பரவுகின் றார் அன்பு விரவுகின் றாராய்
நல்லார் மெய்ஞ் ஞானிகள் யோகிகள் பிறரும்
நண்ணினர் சூழ்ந்தனர் புண்ணிய நிதியே
எல்லாஞ்செய் வல்லஎன் அருட்பெருஞ்ஜோதி
என்தெய்வ மேபள்ளி யெழுந்தருள் வாயே. 4

924 புன்மாலை இரவெலாம்புலர்ந்தது ஞானப்
பொருப்பின் மேற்பொற்கதிர் பொலிந்தது புலவோர்
சொன்மாலை தொடுத்தனர் துதித்துநிற் கின்றார்
சுத்தசன் மார்க்கசங் கத்தவர் எல்லாம்
மன்மாலை மாலையா வந்துசூழ் கின்றார்
வானவர் நெருங்கினர் வாழியென் கின்றார்
என்மாலை அணிந்தஎன் அருட்பெருஞ்ஜோதி
என்பதி யேபள்ளி எழுந்தருள் வாயே. 5

925 ஒருமையின் உலகெலாம் ஓங்குக எனவே
ஊதின சின்னங்கள் ஊதின சங்கம்
பெருமைகொள் சமரச சுத்தசன் மார்க்கப்
பெரும்புகழ் பேசினர் பெரியவர் சூழ்ந்தார்
அருமையும் எளிமையும் ஆகிஅன் றாகி
அம்பலத் தேசித்தி ஆடல்செய் பதியே
இருமையும் அளித்தஎன் அருட்பெருஞ்ஜோதி
என்னர சேபள்ளி யெழுந்தருள் வாயே. 6

926 சினைப்பள்ளித் தாமங்கள் கொணர்ந்தனர் அடியார்
சிவசிவ போற்றியென் றுவகைகொள் கின்றார்
நினைப்பள்ளி உண்ணத்தெள் ளாரமு தளிக்கும்
நேரமிந் நேரமென் றாரியர் புகன்றார்

Koviloor Digital Library

முனைப்பள்ளி பயிற்றாதென் றனைக்கல்வி பயிற்றி
முழுதுணர் வித்துடற் பழுதெலாம் தவிர்த்தே
எனைப்பள்ளி எழுப்பிய அருட்பெருஞ்ஜோதி
என்னப்ப னேபள்ளி யெழுந்தருள் வாயே. 7

927 மதம்பிடித் தவர்எல்லாம் வாய்ப்பிடிப் புண்டு
வந்துநிற் கின்றனர் வாய்திறப் பிப்பான்
கதம்பிடித் தவர்எல்லாம் கடும்பிணி யாலே
கலங்கினர் சூழ்ந்தனர் உலம்புறு கின்றார்
பதம்பிடித் தவர் எல்லாம் அம்பலப் பாட்டே
பாடினர் ஆடினர் பரவிநிற் கின்றார்
இதம்பிடித் தெனையாண்ட அருட்பெருஞ்ஜோதி
என்னைய னேபள்ளி யெழுந்தருள் வாயே. 8

928 மருளொடு மாயைபோய்த் தொலைந்தது மதங்கள்
வாய்மூடிக் கொண்டன மலர்ந்தது கமலம்
அருளொளி விளங்கிய தொருதிருச் சபையும்
அலங்கரிக் கின்றனர் துலங்கி வீற்றிருக்கத்
தெருளொடு பொருளும்மேன் மேல் எனக்களித்துச்
சித்தெலாஞ் செய்திடத் திருவருள்புரிந்தே
இருளறுத் தெனையாண்ட அருட்பெருஞ்ஜோதி
என்வள்ள லேபள்ளி யெழுந்தருள் வாயே. 9

929 அலங்கரிக் கின்றோம் ஓர் திருச்சபை அதிலே
அமர்ந்தருட் ஜோதிகொண் டடிச்சிறியோமை
வலம்பெறும் இறவாத வாழ்வில்வைத் திடவே
வாழ்த்துகின்றோம் முன்னர் வணங்கி நிற்கின்றோம்
விலங்கிய திருளெலாம் விடிந்தது பொழுது
விரைந்தெமக் கருளுதல் வேண்டும்இத் தருணம்
இலங்குநற் றருணமெம் அருட்பெருஞ்ஜோதி
என்தந்தை யேபள்ளி எழுந்தருள் வாயே. 10

திருச்சிற்றம்பலம்

64. திருஉந்தியார்

கலித்தாழிசை

திருச்சிற்றம்பலம்

930 இரவு விடிந்தது இணையடி வாய்த்தன
பரவி மகிழ்ந்தேன்என்று உந்தீபற
பாலமுது உண்டேன் என்று உந்தீபற. 1

Koviloor Digital Library

931 பொழுது விடிந்தது பொற்பதம் வாய்த்தன
தொழுது மகிழ்ந்தேன்என்று உந்தீபற
தூயவன் ஆனேன்என்று உந்தீபற. 2

932 தூக்கம் தொலைந்தது சூரியன் தோன்றினன்
ஏக்கம் தவிர்ந்தேன்என்று உந்தீபற
இன்னமுது உண்டேன்என்று உந்தீபற. 3

933 துன்பம் தவிர்ந்தது தூக்கம் தொலைந்தது
இன்பம் கிடைத்ததென்று உந்தீபற
எண்ணம் பலித்ததென்று உந்தீபற. 4

934 ஞானம் உதித்தது நாதம் ஒலித்தது
தீனந் தவிர்ந்ததென்று உந்தீபற
சிற்சபை கண்டேன் என்று உந்தீபற. 5

935 திரையற்று விட்டது செஞ்சுடர் தோன்றிற்று
பரைஒளி ஓங்கிற்றென்று உந்தீபற
பலித்தது பூசையென்று உந்தீபற. 6

936 உள்ளிருள் நீங்கிற்றுஎன் உள்ளொளி ஓங்கிற்றுத்
தெள்ளமுது உண்டேன்என்று உந்தீபற
தித்திக்க உண்டேன் என்று உந்தீபற. 7

937 எந்தையைக் கண்டேன் இடரெலாம் நீங்கினேன்
சிந்தை மகிழ்ந்தேன்என்று உந்தீபற
சித்திகள் பெற்றேன்என்று உந்தீபற. 8

938 தந்தையைக் கண்டேன்நான் சாகா வரம்பெற்றேன்
சிந்தை களித்தேன்என்று உந்தீபற
சித்தெலாம் வல்லேன்என்று உந்தீபற. 9

939 முத்தியைப் பெற்றேன்அம் முத்தியினால் ஞான
சித்தியை உற்றேன்என்று உந்தீபற
சித்தனும் ஆனேன்என்று உந்தீபற. 10

திருச்சிற்றம்பலம்

Koviloor Digital Library

65. அடைக்கலம் புகுதல்

சரணடைதல்

அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

940 எண்ணா நின்றேன் எண்ணமெலாம் எய்த அருள்செய் கின்றதனித்
தண்ணா ரமுதே சிற்சபையில் தனித்த தலைமைப் பெருவாழ்வே
கண்ணா ரொளியே ஒளிஎல்லாம் கலந்த வெளியே கருதுறும்என்
அண்ணா ஐயா அம்மாஎன் அப்பா யான்உன் அடைக்கலமே. 1

941 திரைசேர் மறைப்பைத் தீர்த்தெனக்கே தெரியா வெல்லாந் தெரிவித்துப்
பரைசேர் ஞானப் பெருவெளியில் பழுத்த கொழுத்த பழந்தந்தே
கரைசேர் இன்பக் காட்சிஎலாம் காட்டிக் கொடுத்தே எனையாண்ட
அரைசே ஐயா அம்மாஎன் அப்பா யான்உன் அடைக்கலமே. 2

942 தேனே அமுதே சிற்சபையில் சிவமே தவமே செய்கின்றோர்
ஊனே புகுந்த ஒளியேமெய் உணர்வே என்றன் உயிர்க்குயிராம்
வானே என்னைத் தானாக்கு வானே கோனே எல்லாம்வல்
லானே ஐயா அம்மாஎன் அப்பா யான்உன் அடைக்கலமே. 3

943 கடையேன் உள்ளக் கவலைஎலாம் கழற்றிக் கருணை அமுதளித்தென்
புடையே அகத்தும் புறத்தும்அகப் புறத்தும்விளங்கும் புண்ணியனே
தடையே தவிர்க்கும் கனகசபைத் தலைவா ஞான சபாபதியே
அடையேன் உலகைஉனை அடைந்தேன் அடியேன் உன்றன் அடைக்கலமே. 4

944 இகத்தும் பரத்தும் பெறும்பலன்கள் எல்லாம் பெறுவித் திம்மையிலே
முகத்தும் உளத்தும் களிதுளும்ப மூவா இன்ப நிலை அமர்த்திச்
சகத்துள் ளவர்கள் மிகத்துதிப்பத் தக்கோன் எனவைத் தென்னுடைய
அகத்தும் புறத்தும் விளங்குகின்றோய் அடியேன் உன்றன் அடைக்கலமே. 5

945 நீண்ட மறைகள் ஆகமங்கள் நெடுநாள் முயன்று வருந்திநின்று
வேண்ட அவைகட் கொருசிறிதும் விளங்கக் காட்டா தென்மொழியைப்
பூண்ட அடியை என்தலைமேல் பொருந்தப் பொருத்தி என்தன்னை
ஆண்ட கருணைப் பெருங்கடலே அடியேன் உன்றன் அடைக்கலமே. 6

946 பாடுஞ் சிறியேன் பாட்டனைத்தும் பலிக்கக் கருணை பாலித்துக்
கோடு மனப்பேய்க் குரங்காட்டம் குலைத்தே சீற்றக் கூற்றொழித்து
நீடும் உலகில் அழியாத நிலைமேல் எனைவைத் தென்னுளத்தே
ஆடும் கருணைப் பெருவாழ்வே அடியேன் உன்றன் அடைக்கலமே. 7

Koviloor Digital Library

947 கட்டுக் கடங்கா மனப்பரியைக் கட்டும் இடத்தே கட்டுவித்தென்
மட்டுக் கடங்கா ஆங்கார மதமா அடங்கா அடக்குவித்தே
எட்டுக் கிசைந்த இரண்டும்எனக் கிசைவித் தெல்லா இன்னமுதும்
அட்டுக் கொடுத்தே அருத்துகின்றோய் அடியேன்உன்றன் அடைக்கலமே. 8

948 புல்லுங் களபப் புணர்முலையார் புணர்ப்பும் பொருளும் பூமியும்என்
தொல்லும் உலகப் பேராசை உவரி கடத்தி எனதுமனக்
கல்லுங் கனியக் கரைவித்துக் கருணை அமுதங் களித்தளித்தே
அல்லும் பகலும் எனதுளத்தே அமர்ந்தோய் யான்உன் அடைக்கலமே. 9

949 பிச்சங் கவரி நிழற்றியசைத் திடமால் யானைப் பிடரியின்மேல்
நிச்சம் பவனி வருகின்ற நிபுணர் எல்லாம் தொழுதேத்த
எச்சம் புரிவோர் போற்றஎனை ஏற்றா நிலைமேல் ஏற்றுவித்தென்
அச்சந்தவிர்த்தே ஆண்டுகொண்டோய்அடியேன் உன்றன் அடைக்கலமே. 10

950 இருளைக் கெடுத்தென் எண்ணமெலாம் இனிது முடிய நிரம்புவித்து
மருளைத் தொலைத்து மெய்ஞ்ஞான வாழ்வை அடையும் வகைபுரிந்து
தெருளைத் தெளிவித் தெல்லாஞ்செய் சித்தி நிலையச் சேர்வித்தே
அருளைக் கொடுத்தென் தனைஆண்டோய் அடியேன் உன்றன் அடைக்கலமே. 11

திருச்சிற்றம்பலம்

66. பற்றறுத்தல்

எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

951 சத்தியம் சத்தியம் அருட்பெருஞ் ஜோதித்
தந்தைய ரேஎனைத் தாங்குகின் றீரே
உத்தமம் ஆகும்நுந் திருச்சமு கத்தென்
உடல்பொருள் ஆவியை உவப்புடன் அளித்தேன்
இத்தகை உலகிடை அவைக்கும்என் தனக்கும்
ஏதுஞ் சுதந்தரம் இல்லைஇங் கினிநீர்
எத்தகை ஆயினும் செய்துகொள் கிற்பீர்
எனைப்பள்ளி எழுப்பிமெய் இன்பந்தந் தீரே. 1

952 ஆணைநும் ஆணைஎன் அருட்பெருஞ் ஜோதி
ஆண்டவ ரேதிரு அம்பலத் தவரே
நாணைவிட் டுரைக்கின்ற வாறிது கண்டீர்
நாயக ரேஉமை நான்விட மாட்டேன்

Koviloor Digital Library

கோணைஎன் உடல்பொருள் ஆவியும் நுமக்கே
கொடுத்தனன் இனிஎன்மேல் குறைசொல்ல வேண்டாம்
ஏணைநின் றெடுத்தகைப் பிள்ளைநான் அன்றோ
எனைப்பள்ளி எழுப்பிமெய் இன்பந்தந் தீரே. 2

953 அகத்தொன்று புறத்தொன்று நினைத்ததிங் கில்லை
அருட்பெருஞ் ஜோதிஎன் ஆண்டவ ரேநீர்
சகத்தென்றும் எங்கணும் சாட்சியாய் நின்றீர்
தனிப்பெருந் தேவரீர் திருச்சமு கத்தே
உகத்தென துடல்பொருள் ஆவியை நுமக்கே
ஒருமையின் அளித்தனன் இருமையும் பெற்றேன்
இகத்தன்றிப் பரத்தினும் எனக்கோர்பற் றிலைகாண்
எனைப்பள்ளி எழுப்பிமெய் இன்பந்தந் தீரே. 3

954 தப்படி எடுத்துக்கொண் டுலகவர் போலே
சாற்றிட மாட்டேன்நான் சத்தியம் சொன்னேன்
செப்படி வித்தைசெய் சித்தர்என் றோதும்
தேவரீர் வல்லபத் திருச்சமு கத்தே
இப்படி வான்முதல் எங்கணும் அறிய
என்னுடல் ஆதியை ஈந்தனன் உமக்கே
எப்படி ஆயினும் செய்துகொள் கிற்பீர்
எனைப்பள்ளி எழுப்பிமெய் இன்பந்தந் தீரே. 4

955 தருணத்துக் கேற்றவா சொல்லிப்பின் மாற்றும்
தப்புரை ஈதன்று சத்தியம் சொன்னேன்
கருணைப் பெருக்கினில் கலந்தென துள்ளே
கனவினும் நனவினும் களிப்பருள் கின்றீர்
வருணப் பொதுவிலும் மாசமு கத்தென்
வண்பொரு ளாதியை நண்பொடு கொடுத்தேன்
இருள்நச் சறுத்தமு தந்தர வல்லீர்
எனைப்பள்ளி எழுப்பிமெய் இன்பந்தந் தீரே. 5

956 வாய்மட்டில் சொல்கின்ற வார்த்தைஅன் றிதுஎன்
மனம்ஒத்துச் சொல்லிய வாய்மைமுக் காலும்
தாய்மட்டில் அன்றிஎன் தந்தையும் குருவும்
சாமியும் ஆகிய தனிப்பெருந் தகையீர்
ஆய்மட்டில் என்னுடல் ஆதியை நுமக்கே
அன்புடன் கொடுத்தனன் ஆண்டவ ரேநீர்
ஏய்மட்டில் எப்படி யேனுஞ்செய் கிற்பீர்
எனைப்பள்ளி எழுப்பிமெய் இன்பந்தந் தீரே. 6

Koviloor Digital Library

957 தித்திக்கப் பேசிக் கசப்புள்ளே காட்டும்
திருட்டுப்பேச் சன்றுநும் திருவுளம் அறியும்
எத்திக்கும் அறியஎன் உடல்பொருள் ஆவி
என்பவை மூன்றும்உள் அன்பொடு கொடுத்தேன்
சித்திக்கும் மூலத்தைத் தெளிவித்தென் உள்ளே
திருநடம் செய்கின்ற தேவரீர் தாமே
இத்திக்கில் எப்படி யேனுஞ்செய் கிற்பீர்
எனைப்பள்ளி எழுப்பிமெய் இன்பந்தந் தீரே. 7

958 புன்மார்க்கத் துள்ளும் புறத்தும் வேறாகிப்
புகன்றசொல்அன்றுநும் பொன்னடி கண்ட
சன்மார்க்க சங்கத்துச் சாதுக்கள் காணச்
சத்தியம் சத்தியம் சத்தியம் சொன்னேன்
தன்மார்க்கத் தென்னுடல் ஆதியை நுமக்கே
தந்தனன் திருவருட் சந்நிதி முன்னே
என்மார்க்கத் தெப்படி யேனுஞ்செய் கிற்பீர்
எனைப்பள்ளி எழுப்பிமெய் இன்பந்தந் தீரே. 8

959 இச்சைவே றில்லைஇங் கென்கருத் தெல்லாம்
என்னுள் அமர்ந்தறிந் தேஇருக் கின்றீர்
விச்சை எலாம்வல்ல நுந்திருச் சமுக
விண்ணப்பம் என்னுடல் ஆதியை நுமக்கே
நிச்சலும் தந்தனன் என்வசம் இன்றி
நின்றனன் என்றனை நீர்செய்வ தெல்லாம்
எச்செயல் ஆயினும் செய்துகொள் கிற்பீர்
எனைப்பள்ளி எழுப்பிமெய் இன்பந்தந் தீரே. 9

960 மன்செய்து கொண்டசன் மார்க்கத்தில் இங்கே
வான்செய்து கொண்டது நான்செய்து கொண்டேன்
முன்செய்து கொண்டதும் இங்ஙனங் கண்டீர்
மூவகை யாம்உடல் ஆதியை நுமது
பொன்செய்து கொண்ட பொதுவினில் ஆடும்
பொன்னடி காணப் பொருந்திக் கொடுத்தேன்
என்செய்து கொண்டாலும் செய்துகொள் கிற்பீர்
எனைப்பள்ளி எழுப்பிமெய் இன்பந்தந் தீரே. 10

961 தெய்வங்கள் பலபல சிந்தைசெய் வாரும்
சேர்கதி பலபல செப்புகின் றாரும்
பொய்வந்த கலைபல புகன்றிடு வாரும்
பொய்ச்சம யாதியை மெச்சுகின் றாரும்

Koviloor Digital Library

மெய்வந்த திருவருள் விளக்கம்ஒன் றில்லார்
மேல்விளை வறிகிலர் வீண்கழிக் கின்றார்
எய்வந்த துன்பொழித் தவர்க்கறி வருள்வீர்
எனைப்பள்ளி எழுப்பிமெய் இன்பந்தந் தீரே. 11

திருச்சிற்றம்பலம்

67. சிற்சத்தி துதி

அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

962 ஜோதிக் கொடியே! ஆனந்த சொருபக் கொடியே! ஜோதியுருப்
பாதிக் கொடியே ஜோதிவலப்பாகக் கொடியே! எனைஈன்ற
ஆதிக் கொடியே! உலகுகட்டி ஆளுங் கொடியே! சன்மார்க்க
நீதிக் கொடியே! சிவகாம நிமலக் கொடியே! அருளுகவே 1

963 பொருணற் கொடியே! மாற்றுயர்ந்த பொன்னங் கொடியே! போதாந்த
வருணக் கொடியே! எல்லாஞ்செய் வல்லார் இடம்சேர் மணிக்கொடியே!
தருணக் கொடியே! என்தன்னைத் தாங்கி ஓங்கும் தனிக் கொடியே!
கருணைக் கொடியே! ஞானசிவ காமக் கொடியே அருளுகவே!
2

964 நீட்டுக் கொடியே! சன்மார்க்க நீதிக் கொடியே! சிவகீதப்
பாட்டுக் கொடியே! இறைவர்வலப் பாகக் கொடியே! பரநாத
நாட்டுக் கொடியே! எனைஈன்ற ஞானக் கொடியே! என்உறவாம்
கூட்டுக் கொடியே! சிவகாமக் கொடியே! அடியேற்கு அருளுகவே! 3

965 மாலக் கொடியேன் குற்றம்எலாம் மன்னித் தருளி மரணம் எனும்
சாலக் கொடியை ஒடித்து எனக்குள் சார்ந்து விளங்கும் தவக்கொடியே!
காலக் கருவைக் கடந்து ஒளிர்வான் கருவுங் கடந்து வயங்குகின்ற
கோலக் கொடியே! சிவஞானக் கொடியே! அடியேற்கு அருளுகவே !
4

966 நாடாக் கொடிய மனம் அடக்கி நல்ல மனத்தைக் கனிவித்துப்
பாடாப் பிழையைப் பொறுத்து எனக்கும் பதம்ஈந்து ஆண்ட பதிக்கொடியே!
தேடாக் கரும சித்தியெலாம் திகழத் தயவால் தெரிவித்த
கோடாக் கொடியே ! சிவதருமக் கொடியே! அடியேற்கு அருளுகவே!
5

967 மணங்கொள் கொடிப்பூ முதல்நான்கு வகைப் பூ வடிவுள் வயங்குகின்ற
வணங்கொள் கொடியே .! ஐம்பூவும் மலிய மலர்ந்த வான்கொடியே !
கணங்கொள் யோக சித்தியெலாம் காட்டுங் கொடியே ! கலங்காத
குணங்கொள் கொடியே! சிவபோகக் கொடியே! அடியேற்கு அருளுகவே!
6

Koviloor Digital Library

968 புலங்கொள் கொடியமனம்போன போக்கில் போகாது எனைமீட்டு
நலங்கொள் கருணைச் சன்மார்க்க நாட்டில் விடுத்த நற்கொடியே
வலங்கொள் ஞான சித்தியெலாம் வயங்க விளங்கு மணிமன்றில்
குலங்கொள் கொடியே! மெய்ஞ்ஞானக்கொடியே! அடியேற்கு அருளுகவே! 7

969 வெறிக்கும் சமயக் குழியில்விழ விரைந்தேன் தன்னை விழாதவகை
மறிக்கும் ஒருபே ரறிவளித்த வள்ளற் கொடியே ! மனக்கொடியைச்
செறிக்கும் பெரியர் உளத்தோங்கும் தெய்வக் கொடியே ! சிவஞானம்
குறிக்கும் கொடியே ! ஆனந்தக் கொடியே! அடியேற்கு அருளுகவே!8

970 தடுத்தல் அரிய* பயம்கவலை எல்லாம் தவிர்த்துக் கருத்துள்ளே
அடுத்த கொடியே ! அருளமுதம் அளித்து என்தனை மெய்யருட்கரத்தால்
எடுத்த கொடியே ! சித்தியெலாம் இந்தா மகனே என்று எனக்கே
கொடுத்த கொடியே! ஆனந்தக் கொடியே! அடியேற்கு அருளுகவே! 9

971 ஏட்டைத் தவிர்த்து என்எண்ணமெலாம் எய்த ஒளிதந்து யான்வனைந்த
பாட்டைப் புனைந்து பரிசளித்த பரம ஞானப் பதிக்கொடியே !
தேட்டைத் தனிப்பே ரருட்செங்கோல் செலுத்தும் சுத்த சன்மார்க்கக்
கோட்டைக் கொடியே! ஆனந்தக் கொடியே! அடியேற்கு அருளுகவே! 10

திருச்சிற்றம்பலம்

68. பிரிவாற்றாமை

எழுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

972 தேடிய துண்டு நினதுரு வுண்மை தெளிந்திடச் சிறிதுநின் னுடனே
ஊடிய துண்டு பிறர்தமை அடுத்தே உரைத்ததும் உவந்ததும் உண்டோ
ஆடிய பாதம் அறியநான் அறியேன் அம்பலத் தரும்பெருஞ் சோதி
கூடிய நின்னைப் பிரிகிலேன் பிரிவைக் கூறவுங் கூசும்என் நாவே. 1

973 மடம்புரி மனத்தால் கலங்கிய துண்டு வள்ளலே நின்திரு வரவுக்
கிடம்புரி சிறியேன் கலங்கினேன் எனினும் இறையும்வே றெண்ணிய துண்டோ
நடம்புரி பாதம் அறியநான் அறியேன் நான்செயும் வகையினி நன்றே
திடம்புரிந் தருளிக் காத்திடல் வேண்டும் சிறிதும்நான் பொறுக்கலேன் சிவனே. 2

974 நீக்கிய மனம்பின் அடுத்தெனைக் கலக்கி நின்றதே அன்றிநின் அளவில்
நோக்கிய நோக்கம் பிறவிட யத்தே நோக்கிய திறையும் இங்குண்டோ
தூக்கிய பாதம் அறியநான்அறியேன் துயரினிப் பொறுக்கலேன் சிறிதும்
தேக்கிய களிப்பில் சிறப்பவந் தென்னைத் தெளிவித்தல் நின்கடன் சிவனே.

---

*கடுத்த விடர்வன் பயம் – பாட பேதம்

Koviloor Digital Library

975 ஈன்றநற் றாயுந் தந்தையும் குருவும் என்னுயிர்க் கின்பமும் பொதுவில்
ஆன்றமெய்ப் பொருளே என்றிருக் கின்றேன் அன்றிவே றெண்ணிய துண்டோ
ஊன்றிய பாதம் அறியநான் அறியேன் உறுகணிங் காற்றலேன் சிறிதும்
தோன்றிஎன் உளத்தே மயக்கெலாந் தவிர்த்துத் துலக்குதல் நின்கடன் துணையே.
4

976 மாயையாற் கலங்கி வருந்திய போதும் வள்ளல்உன் தன்னையே மதித்துன்
சாயையாப் பிறரைப் பார்த்ததே அல்லால் தலைவவே றெண்ணிய துண்டோ
தூயபொற் பாதம் அறியநான் அறியேன் துயர்இனிச் சிறிதும்இங் காற்றேன்
நாயகா எனது மயக்கெலாம் தவிர்த்தே நன்றருள் புரிவதுன் கடனே.
5

977 வண்ணம் வேறெனினும் வடிவுவே றெனினும் மன்னிய உண்மை ஒன்றென்றே
எண்ணிய தல்லால் சச்சிதா னந்தத் திறையும்வே றெண்ணிய துண்டோ
அண்ணல்நின் பாதம் அறியநான் அறியேன் அஞர்இனிச் சிறிதும்இங் காற்றேன்
திண்ணமே நின்மேல் ஆணைஎன் தன்னைத் தெளிவித்துக் காப்பதுன் கடனே.
6

978 ஊடல்செய் மதமும் சமயமும் இவற்றில் உற்றகற் பனைகளும் தவிர்ந்தேன்
வாடல்செய் மனத்தால் கலங்கினேன் எனினும் மன்றினை மறந்ததிங் குண்டோ
ஆடல்செய் பாதம் அறியநான் அறியேன் ஐயவோ சிறிதும்இங் காற்றேன்
பாடல்செய் கின்றேன் படிக்கின்றேன் எனக்குப் பரிந்தருள் புரிவதுன் கடனே.
7

979 உள்ளதே உள்ள திரண்டிலை எல்லாம் ஒருசிவ மயமென உணர்ந்தேன்
கள்ளநேர் மனத்தால் கலங்கினேன் எனினும் கருத்தயல் கருதிய துண்டோ
வள்ளலுன் பாதம் அறியநான் அறியேன் மயக்கினிச் சிறிதும்இங் காற்றேன்
தெள்ளமு தருளி மயக்கெலாம் தவிர்த்தே தெளிவித்தல் நின்கடன் சிவனே.
8

980 எம்மத நிலையும் நின்னருள் நிலையில் இலங்குதல் அறிந்தனன் எல்லாம்
சம்மதம் ஆக்கிக் கொள்கின்றேன் அல்லால் தனித்துவே றெண்ணிய துண்டோ
செம்மலுன் பாதம் அறியநான் அறியேன் சிறிதும்இங் கினித்துயர் ஆற்றேன்
இம்மதிக் கடியேன் குறித்தவா றுள்ள தியற்றுவ துன்கடன் எந்தாய்.
9

981 அகம்புறம் மற்றை அகப்புறம் புறத்தே அடுத்திடும் புறப்புறம் நான்கில்
இகந்ததும் இலைஓர் ஏகதே சத்தால் இறையும்இங் கெண்ணிய துண்டோ
உகந்தநின் பாதம் அறியநான் அறியேன் உறுகணிங் கினிச்சிறி துந்தான்
இகம்பெறல் ஆற்றேன் மயக்கெலாம் தவிர்த்திங் கென்னைஆண் டருள்வ துன்கடனே
10

திருச்சிற்றம்பலம்

Koviloor Digital Library

69. ஆனந்த அனுபவம்

நேரிசை வெண்பா

திருச்சிற்றம்பலம்

982 கள்ளத்தை எல்லாம் கடக்கவிட்டேன் நின்அருளாம்
வெள்ளத்தை எல்லாம் மிகஉண்டேன் – உள்ளத்தே
காணாத காட்சிஎலாம் காண்கின்றேன் ஓங்குமன்ற
வாணா நினக்கடிமை வாய்த்து. 1

983 காலையிலே நின்றன்னைக் கண்டுகொண்டேன் சன்மார்க்கச்
சாலையிலே இன்பம் தழைக்கின்றேன் – ஞாலமிசைச்
சாகா வரம்பெற்றேன் தத்துவத்தின் மேல்நடிக்கும்
ஏகா நினக்கடிமை ஏற்று. 2

984 மூவர்களும் செய்ய முடியா முடிபெல்லாம்
யாவர்களுங் காண எனக்களித்தாய் – மேவுகடை
நாயக்குத் தவிசளித்து நன்முடியும் சூட்டுதல்எந்
தாய்க்குத் தனிஇயற்கை தான். 3

985 கொள்ளைஎன இன்பம் கொடுத்தாய் நினதுசெல்வப்
பிள்ளைஎன எற்குப் பெயரிட்டாய் – தெள்ளமுதம்
தந்தாய் சமரசசன் மார்க்கசங்கத் தேவைத்தாய்
எந்தாய் கருணை இது. 4

986 கண்டேன் களித்தேன் கருணைத் திருஅமுதம்
உண்டேன் உயர்நிலைமேல் ஓங்குகின்றேன் – கொண்டேன்
அழியாத் திருஉருவம் அச்சோஎஞ் ஞான்றும்
அழியாச்சிற் றம்பலத்தே யான். 5

987 பார்த்தேன் பணிந்தேன் பழிச்சினேன் மெய்ப்புளகம்
போர்த்தேன்என் உள்ளமெலாம் பூரித்தேன் – ஆர்த்தேநின்
றாடுகின்றேன் பாடுகின்றேன் அன்புருவா னேன்அருளை
நாடுகின்றேன் சிற்சபையை நான். 6

988 எண்ணுகின்றேன் எண்ணங்கள் எல்லாம் தருகின்றான்
எண்ணுகின்றேன் உண்ணஉண்ண ஊட்டுகின்றான் – நண்ணுதிருச்
சிற்றம் பலத்தே திருநடஞ்செய் கின்றான்என்
குற்றம் பலபொறுத்துக் கொண்டு. 7

Koviloor Digital Library

989 கொண்டான் அடிமை குறியான் பிழைஒன்றும்
கண்டான்* களித்தான் கலந்திருந்தான் – பண்டாய
நான்மறையும் ஆகமமும் நாடுந் திருப்பொதுவில்
வான்மயத்தான்** என்னை மகிழ்ந்து. 8

990 கண்டேன் களித்தேன் கருணைத் திருஅமுதம்
உண்டேன் அழியா உரம்+ பெற்றேன் – ப ண்டே
எனைஉவந்து கொண்டான் எழில்ஞான மன்றம்
தனைஉவந்து கொண்டான் தனை. 9

991 தாதையாம் என்னுடைய தாயாம்என் சற்குருவாம்
மேதையாம் இன்ப விளைவுமாம் – ஓது
குணவாளன் தில்லைஅருட் கூத்தன் உமையாள்
மணவாளன் பாத மலர். 10

992 திருவாம்என் தெய்வமாம் தெள்ளமுத ஞானக்
குருவாம் எனைக்காக்கும் கோவாம் – பருவரையின்
தேப்பிள்ளை யாம்எம் சிவகாம வல்லிமகிழ்
மாப்பிள்ளை பாத மலர். 11

993 என்அறிவாம் என்அறிவின் இன்பமாம் என்னறிவின்
தன்அறிவாம் உண்மைத் தனிநிலையாம் – மன்னுகொடிச்
சேலைஇட்டான் வாழச் சிவகாம சுந்தரியை
மாலைஇட்டான் பாத மலர். 12

திருச்சிற்றம்பலம்

70. சிவபுண்ணியப் பேறு

எழுர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

994 மாலிலே மயங்கி மண்ணிலே அநித்த வாழ்விலே வரவிலே மலஞ்சார்
தோலிலே ஆசை வைத்துவீண் பொழுது தொலைக்கின்றார் தொலைக்கநான் உனது
காலிலே ஆசை வைத்தனன் நீயும் கனவினும் நனவினும் எனைநின்
பாலிலே வைத்தாய் எனக்கிது போதும் பண்ணிய தவம்பலித் ததுவே. 1

995 மதத்திலே சமய வழக்கிலே மாயை மருட்டிலே இருட்டிலே மறவாக்
கதத்திலே மனத்தை வைத்துவீண் பொழுது கழிக்கின்றார் கழிக்கநான் உன்பூம்
பதத்திலே மனத்தை வைத்தனன் நீயும் பரிந்தெனை அழிவிலா நல்ல
பதத்திலே வைத்தாய் எனக்கிது போதும் பண்ணிய தவம்பலித் ததுவே. 2

* கண்டே – முதற்பதிப்பு. பி. இரா.
** வாய் மலர்ந்தான் – வே.ப.மு. பதிப்பு
+ வரம் – படிவேறுபாடு. ஆ.பா.

Koviloor Digital Library

996 குலத்திலே சமயக் குழியிலே நரகக் குழியிலே குமைந்துவீண் பொழுது
நிலத்திலே போக்கி மயங்கிர மாந்து நிற்கின்றார் நிற்கநான் உவந்து
வலத்திலே நினது வசத்திலே நின்றேன் மகிழ்ந்துநீ என்உளம் எனும்அம்
பலத்திலே நின்றாய் எனக்கிது போதும் பண்ணிய தவம்பலித் ததுவே.
3

997 கூடவும் பின்னே பிரியவும் சார்ந்த கொழுநரும் மகளிரும் நாண
நீடஎன் உளத்தே கலந்துகொண் டென்றும் நீங்கிடா திருந்துநீ என்னோ
டாடவும் எல்லாம் வல்லசித் தியைப்பெற் றறிவுரு வாகிநான் உனையே
பாடவும் பெற்றேன் எனக்கிது போதும் பண்ணிய தவம்பலித் ததுவே. 4

998 உயத்திடம் அறியா திறந்தவர் தமைஇவ் வுலகிலே உயிர்பெற்று மீட்டும்
நயத்தொடு வருவித் திடும்ஒரு ஞான நாட்டமும் கற்பகோ டியினும்
வயத்தொடு சாகா வரமும்என் தனக்கே வழங்கிடப் பெற்றனன் மரண
பயத்தைவிட் டொழித்தேன் எனக்கிது போதும் பண்ணிய தவம்பலித் ததுவே.
5

999 நாடல்செய் கின்றேன் அருட்பெருஞ் சோதி நாதனை என்உளே கண்டு
கூடல்செய் கின்றேன் எண்ணிய எல்லாம் கூடிடக் குலவிஇன் புருவாய்
ஆடல்செய் கின்றேன் சித்தெலாம் வல்லான் அம்பலம் தன்னையே குறித்துப்
பாடல்செய் கின்றேன் எனக்கிது போதும் பண்ணிய தவம்பலித் ததுவே.
6

1000 துதிபெறும் அயனோ டரிஅரன் முதலோர் சூழ்ந்துசூழ்ந் திளைத்தொரு தங்கள்
விதியைநொந் தின்னும் விழித்திருக் கின்றார் விழித்திருந் திடவும்நோ வாமே
மதியிலேன் அருளால் சுத்தசன் மார்க்க மன்றிலே வயங்கிய தலைமைப்
பதிபதம் பெற்றேன் எனக்கிது போதும் பண்ணிய தவம்பலித் ததுவே. 7

1001 புரிசைவான் உலகில் பூவுல கெல்லாம் புண்ணிய உலகமாய்ப் பொலிந்தே
கரிசெலாம் தவிர்ந்து களிப்பெலாம் அடைந்து கருத்தொடு வாழவும் கருத்தில்
துரிசெலாம் தவிர்க்கும் சுத்தசன் மார்க்கம் துலங்கவும் திருவருட் சோதிப்
பரிசெலாம் பெற்றேன் எனக்கிது போதும் பண்ணிய தவம்பலித் ததுவே.
8

1002 வேதமே விளங்க மெய்ம்மையே வயங்க வெம்மையே நீங்கிட விமல
வாதமே வழங்க வானமே முழங்க வையமே உய்யஓர் பரம
நாதமே தொனிக்க ஞானமே வடிவாய் நன்மணி மன்றிலே நடிக்கும்
பாதமே பிடித்தேன் எனக்கிது போதும் பண்ணிய தவம்பலித் ததுவே. 9

1003 கட்டமும் கழன்றேன் கவலைவிட் டொழித்தேன் கலக்கமும் தீர்ந்தனன் பிறவிச்
சட்டமும் கிழித்தேன் தூக்கமும் துறந்தேன் சாவையும் நோவையும் தவிர்ந்தேன்
சிட்டமும் அடைந்தேன் சிற்சபை உடையான் செல்வமெய்ப் பிள்ளைஎன் றொருபேர்ப்
பட்டமும் தரித்தேன் எனக்கிது போதும் பண்ணிய தவம்பலித் ததுவே.10

திருச்சிற்றம்பலம்

Koviloor Digital Library

71. அந்தோ பத்து

தாழிசை

திருச்சிற்றம்பலம்

1004 நானந்த மடையாதெந் நாளினும்உள் ளவனாகி நடிக்கும் வண்ணம்
ஆனந்த நடம்புரிவான் ஆனந்த அமுதளித்தான் அந்தோ அந்தோ. 1

1005 சாதிமதம் சமயமுதற் சங்கற்ப விகற்பம்எலாம் தவிர்ந்து போக
ஆதிநடம் புரிகின்றான் அருட்சோதி எனக்களித்தான் அந்தோ அந்தோ. 2

1006 துரியபதம் அடைந்தபெருஞ் சுத்தர்களும் முத்தர்களும் துணிந்து சொல்லற்
கரியபதம் எனக்களித்தான் அம்பலத்தில் ஆடுகின்றான் அந்தோ அந்தோ. 3

1007 மருட்பெருஞ்சோ தனைஎனது மட்டுமிலா வணங்கருணை வைத்தே மன்றில்
அருட்பெருஞ்சோ திப்பெருமான் அருளமுதம் எனக்களித்தான் அந்தோ அந்தோ. 4

1008 துன்பமெலாம் ஒருகணத்தில் தொலைத்தருளி எந்நாளும் சுகத்தில் ஓங்க
அன்புடையான் அம்பலத்தான் அருட்சோதி எனக்களித்தான் அந்தோ அந்தோ. 5

1009 பந்தமெலாம் தவிர்த்தருளிப் பதந்தருயோ காந்தமுதல் பகரா நின்ற
அந்தமெலாம் கடந்திடச்செய் தருளமுதம் எனக்களித்தான் அந்தோ அந்தோ. 6

1010 பேராலும் அறிவாலும் பெரியரெனச் சிறப்பாகப் பேச நின்றோர்
ஆராலும் பெறலரிய தியாததனைப் பெறுவித்தான் அந்தோ அந்தோ. 7

1011 தினைத்தனையும் அறிவறியாச் சிறியனென நினையாமல் சித்தி யான
அனைத்துமென்றன் வசமாக்கி அருளமுதம் எனக்களித்தான் அந்தோ அந்தோ. 8

1012 பொதுவாகிப் பொதுவில் நடம் புரிகின்ற பேரின்பப் பொருள்தான் யாதோ
அதுநானாய் நான்அதுவாய் அத்துவிதம் ஆகின்றேன் அந்தோ அந்தோ. 9

1013 மருள்வடிவே எஞ்ஞான்றும் எவ்விடத்தும் எதனாலு மாய்வி லாத
அருள்வடிவாய் இம்மையிலே அடைந்திடப்பெற் றாடுகின்றேன் அந்தோ அந்தோ. 10

1014 எக்கரையும் காணாதே இருட்கடலில் கிடந்தேனை எடுத்தாட் கொண்டு
அக்கரைசேர்த் தருளெனுமோர் சர்க்கரையும் எனக்களித்தான் அந்தோ அந்தோ.* 11

திருச்சிற்றம்பலம்

---

* இப்பதினோராம் செய்யுள் ஒரு தனிப்பாடல். பொருள் ஒற்றுமை கருதி இப்பதிகத்தில் சேர்க்கப்பெற்றது.

Koviloor Digital Library

72. சன்மார்க்க நிலை

சமரச நிலை

நேரிசை வெண்பா

திருச்சிற்றம்பலம்

1015 சித்திபுரத்தே தினந்தோறும் சீர்கொளருள்
சத்திவிழா நீடித் தழைத்தோங்க – எத்திசையில்
உள்ளவரும் வந்தே உவகை உறுகமதத்
துள்ளல் ஒழிக தொலைந்து. 1

1016 ஒன்றே சிவம்என் றுணர்த்திவ் வுலகமெலாம்
நன்றே ஒருமையுற்று நண்ணியே – மன்றே
நடம்புரியும் பாத நளினமலர்க் குள்ளம்
இடம்புரிக வாழ்க இசைந்து. 2

1017 சிற்சபையும் பொற்சபையும் சித்தி விளக்கத்தால்
நற்சகமேல் நீடூழி நண்ணிடுக – சற்சபையோர்
போற்றிவரம் பெற்றுவகை பூரிக்க வாழ்ந்திடுக
நாற்றிசையும் வாழ்க நயந்து. 3

1018 அச்சந் தவிர்த்தே அருளிற் செலுத்துகின்ற
விச்சை அரசே விளங்கிடுக – நச்சரவம்
ஆதிக் கொடியஉயிர் அத்தனையும் போய்ஒழிக
நீதிக் கொடிவிளங்க நீண்டு. 4

1019 கருணைஇலா ஆட்சி கடுகி ஒழிக
அருள்நயந்த நன்மார்க்கர் ஆள்க – தெருள்நயந்த
நல்லோர் நினைத்த நலம்பெறுக நன்றுநினைத்
தெல்லோரும் வாழ்க இசைந்து. 5

1020 புல்லொழுக்கம் எல்லாம் புணரியிடைப் போய்ஒழிக
நல்லொழுக்கம் ஒன்றே நலம்பெறுக – இல்லொழுக்கில்
செத்தார்கள் எல்லாம் திரும்ப எழுந்துமனம்
ஒத்தாராய் வாழ்க உவந்து. 6

1021 செத்தார் எழுக சிவமே பொருள்என்றே
இத்தா ரணியில் இருந்தொளிர்க – சுத்தசிவ
சன்மார்க்கம் ஒன்றே தழைக்க தயவறியாத்
துன்மார்க்கம் போக தொலைந்து. 7

Koviloor Digital Library

1022 செத்தவர்கள் எல்லாம் திரும்ப எழுந்துவரச்
சித்தம் வைத்துச் செய்கின்ற சித்தியனே – சுத்தசிவ
சன்மார்க்க சங்கத் தலைவனே நிற்போற்றும்
என்மார்க்கம் நின்மார்க்க மே. 8

1023 நல்லாரும் என்னை நயந்தாரும் நன்மைசொல
வல்லாரும் என்னை வளர்த்தாரும் – எல்லாரும்
நீஎன் றிருக்கின்றேன் நின்மலனே நீபெற்ற
சேய்என் றிருக்கின்றேன் சேர்ந்து. 9

1024 ஆடஎடுத் தான்என் றறைகின்றீர் என்தலைமேல்
சூடஎடுத் தான் என்று சொல்கின்றேன் – நாடறிய
இவ்வழக்கை யார்பால் இசைத்தறுத்துக் கொள்கிற்பாம்
கவ்வைஅற்ற அம்பலத்தான் கால். 10

1025 நோவாது நோன்பெனைப்போல் நோற்றவரும் எஞ்ஞான்றும்
சாவா வரம்எனைப்போல் சார்ந்தவரும் – தேவாநின்
பேரருளை என்போலப் பெற்றவரும் எவ்வுலகில்
யார்உளர்நீ சற்றே அறை. 11

திருச்சிற்றம்பலம்

73. சிவானந்தப் பற்று

வேண்டுகோள்

கட்டளைக் கலித்துறை

திருச்சிற்றம்பலம்

1026 வேதமும் வேதத்தின் அந்தமும் போற்ற விளங்கியநின்
பாதமும் மாமுடி யும்கண்டு கொள்ளும் படிஎனக்கே
போதமும் போதத் தருள்அமு தும்தந்த புண்ணியனே
நாதமும் நாத முடியும் கடந்த நடத்தவனே. 1

1027 வண்ணப்பொன் னம்பல வாழ்வேஎன் கண்ணினுள் மாமணியே
சுண்ணப்பொன் நீற்றொளி ஓங்கிய சோதிச் சுகப்பொருளே
எண்ணப்ப யின்றஎன் எண்ணம் எலாம்முன்னர் ஈகஇதென்
விண்ணப்பம் ஏற்று வருவாய்என் பால்விரைந் தேவிரைந்தே. 2

1028 சிற்சபை அப்பனைக் கண்டுகொண் டேன்அருள் தெள்ளமுதம்
சற்சபை உள்ளம் தழைக்கஉண் டேன்உண்மை தான் அறிந்த
நற்நபைச் சித்திகள் எல்லாம்என் கைவசம் நண்ணப்பெற்றேன்
பொற்சபை ஓங்கப் புரிந்தாடு தற்குப் புகுந்தனனே. 3

Koviloor Digital Library

1029 வரையற்ற சீர்ப்பெரு வாழ்வுதந் தென்மனம் மன்னிஎன்றும்
புரையற்ற மெய்ந்நிலை ஏற்றிமெய்ஞ் ஞானப் பொதுவினிடைத்
திரையற்ற காட்சி அளித்தின் னமுதத் தெளிவருளி
நரையற்று மூப்பற் றிறப்பற் றிருக்கவும் நல்கியதே. 4

1030 தாயாகி என்உயிர்த் தந்தையும் ஆகிஎன் சற்குருவாய்த்
தேயாப் பெரும்பதம் ஆகிஎன் சத்தியத் தெய்வமுமாய்
வாயாரப் பாடும்நல் வாக்களித் தென்உளம் மன்னுகின்ற
தூயா திருநட ராயாசிற் றம்பலச் சோதியனே. 5

1031 ஆதியும் அந்தமும் இல்லாத் தனிச்சுட ராகிஇன்ப
நீதியும் நீர்மையும் ஓங்கப் பொதுவில் நிருத்தமிடும்
சோதியும் வேதியும் நான்அறிந் தேன்இச் செகதலத்தில்
சாதியும் பேதச் சமயமும் நீங்கித் தனித்தனனே. 6

1032 தன்னே ரிலாத தலைவாசிற் றம்பலம் தன்னில்என்னை
இன்னே அடைகுவித் தின்பருள் வாய்இது வேதருணம்
அன்னே எனைப்பெற்ற அப்பாஎன் றுன்னை அடிக்கடிக்கே
சொன்னேன்முன் சொல்லுகின் றேன்பிற ஏதுந் துணிந்திலனே. 7

1033 தேகாதி மூன்றும்உன் பாற்கொடுத் தேன்நின் திருவடிக்கே
மோகா திபன்என் றுலகவர் தூற்ற முயலுகின்றேன்
நாகா திபரும் வியந்திட என்எதிர் நண்ணிஎன்றும்
சாகா வரந்தந்து சன்மார்க்க நீதியும் சாற்றுகவே. 8

1034 கற்றேன்சிற் றம்பலக் கல்வியைக் கற்றுக் கருணைநெறி
உற்றேன்எக் காலமும் சாகாமல் ஓங்கும் ஒளிவடிவம்
பெற்றேன் உயர்நிலை பெற்றேன் உலகில் பிறநிலையைப்
பற்றேன் சிவானந்தப் பற்றேஎன் பற்றெனப் பற்றினனே. 9

1035 தீமைகள் யாவும் தொலைத்துவிட் டேன்இத் தினந்தொடங்கிச்
சேமநல் இன்பச் செயலே விளங்கமெய்ச் சித்திஎலாம்
காமமுற் றென்னைக் கலந்துகொண் டாடக் கருணைநடத்
தாமன்என் உள்ளமும் சாரவும் பெற்றனன் சத்தியமே. 10

திருச்சிற்றம்பலம்

Koviloor Digital Library

74. தலைவி தோழிக்கு உரைத்தல்

கலித்தாழிசை

திருச்சிற்றம்பலம்

1036 வேதாந்த நிலையொடு சித்தாந்த நிலையும்
மேவும் பொதுநடம் நான்காணல் வேண்டும்
நாதாந்தத் திருவீதி நடப்பாயோ தோழி
நடவாமல் என்மொழி கடப்பாயோ தோழி. 1

1037 தொம்பத உருவொடு தத்பத வெளியில்
தோன்றசி பதநடம் நான்காணல் வேண்டும்
எம்பதமாகி இசைவாயோ தோழி
இசையாமல் வீணிலே அசைவாயோ தோழி. 2

1038 சின்மய வெளியிடைத் தன்மய மாகித்
திகழும் பொதுநடம் நான்காணல் வேண்டும்
என்மய மாகி இருப்பாயோ தோழி
இச்சை மயமாய் இருப்பாயோ* தோழி. 3

1039 நவநிலை மேற்பர நாதத் தலத்தே
ஞானத் திருநடம் நான்காணல் வேண்டும்
மவுனத் திருவீதி வருவாயோ தோழி
வாராமல் வீண்பழி தருவாயோ தோழி. 4

1040 ஆறாறுக் கப்புற மாகும் பொதுவில்
அதுவது வாநடம் நான்காணல் வேண்டும்
ஏறாமல் இழியாமல் இருப்பாயோ தோழி
ஏறி இழிந்திங் கிறப்பாயோ** தோழி. 5

1041 வகார வெளியில் சிகார உருவாய்
மகாரத் திருநடம் நான்காணல் வேண்டும்
விகார உலகை வெறுப்பாயோ தோழி
வேறாகி என்சொல் மறுப்பாயோ தோழி. 6

1042 நாதாந்த நிலையொடு போதாந்த நிலைக்கு
நடுவாம் பொதுநடம் நான்காணல் வேண்டும்
சூதாந்தற் போதத்தைச் சுடுவாயோ தோழி
துட்டநெறியில் கெடுவாயோ தோழி. 7

---

* மயமாய்ப் பெருப்பாயோ – ஆ.பா. ** இருப்பாயோ – முதற்பதிப்பு

Koviloor Digital Library

1043 அறிவில் அறிவை அறியும் பொதுவில்
ஆனந்தத் திருநடம் நான்காணல் வேண்டும்
செறிவில் அறிவாகிச் செல்வாயோ தோழி
செல்லாமல் மெய்ந்நெறி வெல்வாயோ தோழி. 8

1044 என்னைத் தன்னோடே இருத்தும் பொதுவில்
இன்பத் திருநடம் நான்காணல் வேண்டும்
நின்னைவிட் டென்னோடே நிலைப்பாயோ தோழி
நிலையாமல் என்னையும் அலைப்பாயோ தோழி. 9

1045 துரியத்திற் கப்பாலுந் தோன்றும் பொதுவில்
ஜோதித் திருநடம் நான்காணல் வேண்டும்
கரியைக்கண் டாங்கது காண்பாயோ தோழி
காணாது போய்ப்பழி* பூண்பாயோ தோழி. 10

1046 தத்துவத்துட்புறந் தானாம் பொதுவில்
சத்தாந் திருநடம் நான்காணல் வேண்டும்
கொத்தறு வித்தைக் குறிப்பாயோ தோழி
குறியா துலகில் வெறிப்பாயோ தோழி. 11

திருச்சிற்றம்பலம்

75. நற்றாய் கூறல்

எழுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

1047 காதல்கைம் மிகுந்த தென்செய்வேன் எனைநீ
கண்டுகொள் கணவனே என்றாள்
ஓதலுன் புகழே அன்றிநான் ஒன்றும்
உவந்திலேன் உண்மையீ தென்றாள்
பேதைநான் பிறிதோர் புகலிலேன் செய்த
பிழையெலாம் பொறுத்தருள் என்றாள்
மாதய வுடைய வள்ளலே என்றாள்
வரத்தினால் நான்பெற்ற மகளே. 1

1048 மயங்கினேன் எனினும் வள்ளலே உனைநான்
மறப்பனோ கனவினும் என்றாள்
உயங்கினேன் உன்னை மறந்திடில் ஐயோ
உயிர்தரி யாதெனக் கென்றாள்

* பொய்ப்பணி – முதற்பதிப்பு. பொ.சு., பி. இரா.

Koviloor Digital Library

கயங்கினேன் கயங்கா வண்ணநின் கருணைக்
கடலமு தளித்தருள் என்றாள்
வயங்குசிற் சபையில் வரதனே என்றாள்
வரத்தினால் நான்பெற்ற மகளே. 2

1049 அஞ்சல்என் றெனை இத் தருணநீ வந்தே
அன்பினால் அணைத்தருள் என்றாள்
பஞ்சுபோல் பறந்தேன்அய்யவோ துன்பம்
படமுடி யாதெனக் கென்றாள்
செஞ்செவே எனது கருத்தெலாம் உனது
திருவுளம் அறியுமே என்றாள்
வஞ்சகம் அறியா வள்ளலே என்றாள்
வரத்தினால் நான்பெற்ற மகளே. 3

1050 பூமியோ பொருளோ விரும்பிலேன் உன்னைப்
புணர்ந்திட விரும்பினேன் என்றாள்
காமிஎன் றெனை நீ கைவிடேல் காமக்
கருத்தெனக் கில்லைகாண் என்றாள்
சாமிநீ வரவு தாழ்த்திடில் ஐயோ
சற்றுநான் தரித்திடேன் என்றாள்
மாமிகு கருணை வள்ளலே என்றாள்
வரத்தினால் நான்பெற்ற மகளே. 4

1051 அடுத்துநான் உன்னைக் கலந்தனு பவிக்க
ஆசைமேற் பொங்கிய தென்றாள்
தடுத்திட முடியா தினிச்சிறு பொழுதும்
தலைவனே தாழ்த்திடேல் என்றாள்
தொடுத்துல குள்ளார் தூற்றுதல் வாயால்
சொலமுடி யாதெனக் கென்றாள்
மடுத்தவெந் துயர்தீர்த் தெடுத்தருள் என்றாள்
வரத்தினால் நான்பெற்ற மகளே. 5

1052 தடுத்திடல் வல்லார் இல்லைநின் அருளைத்
தருகநற் றருணம்ஈ தென்றாள்
கொடுத்திடில் ஐயோ நின்னருட் பெருமை
குறையுமோ குறைந்திடா தென்றாள்
நடுத்தய விலர்போன் றிருத்தலுன் றனக்கு
ஞாயமோ நண்பனே என்றாள்
வடுத்தினும் வாயேன் அல்லன்நான் என்றாள்
வரத்தினால் நான்பெற்ற மகளே. 6

Koviloor Digital Library

1053 பொன்செய் நின்வடிவைப் புணர்ந்திட நினைத்தேன்
பொங்கிய தாசைமேல் என்றாள்
என்செய்வேன் எனையும் விழுங்கிய தையோ
என்னள வன்றுகாண் என்றாள்
கொன்செயும் உலகர் என்னையும் உனது
குறிப்பையும் குறித்திலார் என்றாள்
வன்செயும் அவர்வாய் ஒய்வதென் றென்றாள்
வரத்தினால் நான்பெற்ற மகளே. 7

1054 மெலிந்தஎன் உளத்தை அறிந்தனை தயவு
மேவிலை என்னையோ என்றாள்
நலிந்தபோ தின்னும் பார்த்தும்என் றிருத்தல்
நல்லவர்க் கடுப்பதோ என்றாள்
மலிந்த இவ்வுலகர் வாய்ப்பதர் தூற்ற
வைத்தல்உன் மரபல என்றாள்
வலிந்தெனைக் கலந்த வள்ளலே என்றாள்
வரத்தினால் நான்பெற்ற மகளே. 8

1055 ஒன்றிலேன் பிறிதொன் றுன்னருட் ஜோதி
ஒன்றுற ஒன்றினேன் என்றாள்
நன்றிலேன் எனினும் நின்திரு வடியை
நம்பினேன் நயந்தருள் என்றாள்
குன்றிலே இருத்தற் குரியநான் துயரக்
குழியிலே இருந்திடேன் என்றாள்
மன்றிலே நடஞ்செய் வள்ளலே என்றாள்
வரத்தினால் நான்பெற்ற மகளே. 9

1056 ஆடிய பாதத் தழகன்என் றனைத்தான்*
அன்பினால் கூடினன் என்றாள்
கோடிமா தவங்கள் புரியினும் பிறர்க்குக்
கூடுதல் கூடுமோ என்றாள்
பாடிய படிஎன் கருத்தெலாம் நிரப்பிப்
பரிசெலாம் புரிந்தனன் என்றாள்
வாடிய உளமும் தளிர்த்தனன் என்றாள்
வரத்தினால் நான்பெற்ற மகளே. 10

திருச்சிற்றம்பலம்

---

* என்றெனைத்தான் – படி வேறுபாடு ஆ.பா.

Koviloor Digital Library

76. பாங்கி தலைவிபெற்றி உரைத்தல்

எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

1057 அம்மதவேள் கணைஒன்றோ ஐங்கணையும் விடுத்தான்
அருள் அடையும் ஆசையினால் ஆருயிர்தான் பொறுத்தாள்
இம்மதமோ சிறிதும்இலாள் கலவியிலே எழுந்த
ஏகசிவ போகவெள்ளத் திரண்டுபடாள் எனினும்
எம்மதமோ எக்குலமோ என்றுநினைப் புளதேல்
இவள் மதமும் இவள்குலமும் எல்லாமும் சிவமே
சம்மதமோ தேவர்திரு வாய்மலர வேண்டும்
சபையில்நடம் புரிகின்ற தனிப்பெரிய துரையே. 1

1058 அங்கலிட்ட களத்தழகர் அம்பலவர் திருத்தோள்
ஆசையெனும் பேய்அகற்றல் ஆவதிலை எனவே
பொங்கலிட்ட தாயர்முகம் தொங்கலிட்டுப் போனார்
பூவைமுகம் பூமுகம்போல் பூரித்து மகிழ்ந்தாள்
எங்களிட்டம் திருவருள்மங் கலஞ்சூட்டல் அன்றி
இரண்டுபடா தொன்றாக்கி இன்படைவித் திடவே
தங்களிட்டம் யாதுதிரு வாய்மலர வேண்டும்
சபையில்நடம் புரிகின்ற தனிப்பெரிய துரையே. 2

1059 பனம்பழமே எனினும்இந்தப் பசிதவிர்த்தால் போதும்
பாரும்எனப் பகர்கின்ற பாவையர்போல் பகராள்
இனம்பழமோ கங்கலந்தாள் சிவானுபவத் தல்லால்
எந்தஅனு பவங்களிலும் இச்சைஇல்லாள் அவர்தம்
மனம்பழமோ காயோஎன் றறிந்துவர விடுத்தாள்
மற்றவர்போல் காசுபணத் தாசைவைத்து வருந்தாள்
தனம்பழமோ தேவர்திரு வாய்மலர வேண்டும்
சபையில்நடம் புரிகின்ற தனிப்பெரிய துரையே. 3

1060 புல்லவரே பொய்உலக போகம்உற விழைவார்
புண்ணியரே சிவபோகம் பொருந்துதற்கு விழைவார்
கல்லவரே மணிஇவரே என்றறிந்தாள் அதனால்
கனவிடையும் பொய்யுறவு கருதுகிலாள் சிறிதும்
நல்லவரே எனினும்உமை நாடாரேல் அவரை
நன்குமதி யாள்இவளை நண்ணஎண்ணம் உளதோ
வல்லவரே நுமதுதிரு வாய்மலர வேண்டும்
வயங்குதிரு மணிமன்றில் வாழ்பெரிய துரையே. 4

Koviloor Digital Library

1061 தத்துவருந் தத்துவஞ்செய் தலைவர்களும் பிறரும்
தனித்தனியே வலிந்துவந்து தன்எதிர்நிற் கின்றார்
எத்துணையும் மற்றவரை ஏறெடுத்துப் பாராள்
இருவிழிகள் நீர்சொரிவாள் என்னுயிர்நா யகனே
ஒத்துயிரில் கலந்துகொண்ட உடையாய்என் றுமையே
ஓதுகின்றாள் இவள்அளவில் உத்தமரே உமது
சித்தம்எது தேவர்திரு வாய்மலர வேண்டும்
சிற்சபையில் பொற்சபையில் திகழ்பெரிய துரையே. 5

1062 அன்னையைக்கண் டம்மாநீ அம்பலத்தென் கணவர்
அடியவளேல் மிகவருக அல்லள்எனில் இங்கே
என்னைஉனக் கிருக்கின்ற தேகுகஎன் றுரைப்பாள்
இச்சைஎலாம் உம்மிடத்தே இசைந்தனள்இங் கிவளை
முன்னையள்என் றெண்ணாதீர் தாழ்த்திருப்பீர் ஆனால்
முடுகிஉயிர் விடுத்திடுவாள் கடுகிவரல் உளதேல்
மன்னவரே உமதுதிரு வாய்மலர வேண்டும்
வயங்குதிரு மணிமன்றில் வாழ்பெரிய துரையே. 6

1063 கரவறியா அம்பலத்தென் கணவரைக்கண் டலது
கண்துயிலேன் உண்டிகொளேன் களித்தமரேன் என்பாள்
இரவறியாள் பகலறியாள் எதிர்வருகின் றவரை
இன்னவர்என் றறியாள்இங் கின்னல்உழக் கின்றாள்
வரவெதிர்பார்த் துழல்கின்றாள் இவள்அளவில் உமது
மனக்கருத்தின் வண்ணம்எது வாய்மலர வேண்டும்
விரவும்ஒரு கணமும்இனித் தாழ்க்கில்உயிர் தரியாள்
மெய்ப்பொதுவில் நடம்புரியும் மிகப்பெரிய துரையே. 7

1064 ஊராசை உடலாசை உயிர்பொருளின் ஆசை
உற்றவர்பெற் றவராசை ஒன்றுமிலாள் உமது
பேராசைப் பேய்பிடித்தாள் கள்ளுண்டு பிதற்றும்
பிச்சிஎனப் பிதற்றுகின்றாள் பிறர்பெயர்கேட் டிடிலோ
நாராசஞ் செவிபுகுந்தால் என்னநலி கின்றாள்
நாடறிந்த திதுஎல்லாம் நங்கைஇவள் அளவில்
நீர்ஆசைப் பட்டதுண்டேல் வாய்மலர வேண்டும்
நித்தியமா மணிமன்றில் நிகழ்பெரிய துரையே. 8

1065 என்னுயிரில் கலந்துகொண்டார் வரிலிஃதவர்தாம் இருக்க
இடம்புனைக என்கின்றாள்இச்சைமய மாகித்
தன்னுயிர்தன் உடல்மறந்தாள் இருந்தறியாள் படுத்தும்
தரித்தறியாள் எழுந்தெழுந்து தனித்தொருசார் திரிவாள்

Koviloor Digital Library

அன்னமுண அழைத்தாலும் கேட்பதிலாள் உலகில்
அணங்கனையார் அதிசயிக்கும் குணங்கள்பல பெற்றாள்
மின்னிவளை விழைவதுண்டேல் வாய்மலர வேண்டும்
மெய்ப்பொதுவில் நடம்புரியும் மிகப்பெரிய துரையே. 9

1066 அம்பலத்தே நடம்புரியும் எனதுதனித் தலைவர்
அன்புடன்என் உளங்கலந்தே அருட்பெருஞ்ஜோ தியினால்
தம்பலத்தே பெரும்போகந் தந்திடுவார் இதுதான்
சத்தியஞ்சத் தியமதனால் சார்ந்தவர்தாம் இருக்க
எம்பலத்தே மலரணையைப் புனைகஎனப் பலகால்
இயம்புகின்றாள் இவள்அளவில் இசைந்துநும தருளாம்
செம்பலத்தே உறுதருணம் வாய்மலர வேண்டும்
சிற்சபைபொற் சபைஓங்கித் திகழ்பெரிய துரையே. 10

திருச்சிற்றம்பலம்

77. தலைவி தலைவன் செயலைத் தாய்க் குரைத்தல்

எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

1067 அன்னப்பார்ப் பால்* அழ காம்நிலை யூடே
அம்பலம் செய்துநின் றாடும் அழகர்
துன்னப்பார்த் தென்னுயிர்த் தோழியும் நானும்
சூதாடு கின்றஅச் சூழலில் வந்தே
உன்னைப்பார்த் துன்னுள்ளே என்னைப்பா ராதே
ஊரைப்பார்த் தோடி உழல்கின்ற பெண்ணே
என்னைப்பார் என்கின்றார் என்னடி அம்மா
என்கை பிடிக்கின்றார் என்னடி அம்மா. 1

1068 அதுபா வகமுகத் தானந்த நாட்டில்
அம்பலம் செய்துநின் றாடும் அழகர்
விதுபா வகமுகத் தோழியும் நானும்
மெய்ப்பா வனைசெய்யும் வேளையில் வந்து
பொதுபா வனைசெய்யப் போகாதே பெண்ணே
பொய்ப்பா வனைசெய்து கைப்பானேன் ஐயோ
இதுபாவம் என்கின்றார் என்னடி அம்மா
என்கை பிடிக்கின்றார் என்னடி அம்மா. 2

* அன்னைப் பார்ப்பாள் – ஆ.பா. பதிப்பு

Koviloor Digital Library

1069 அறங்காதல் செய்தேனை ஆண்டுகொண் டிங்கே
அருட்பெருஞ் ஜோதியாய் ஆடும் அழகர்
உறங்காத வண்ணஞ்சிற் றம்பலம் பாடி
உதிக்கின்ற ஒண்மையில் துதிக்கின்ற போது
புறங்காதல் செய்வார்போல் செய்யாதே பெண்ணே
பொற்கம்பம் ஏறினை சொர்க்கம்அங் கப்பால்
இறங்காதே என்கின்றார் என்னடி அம்மா
என்கை பிடிக்கின்றார் என்னடி அம்மா. 3

1070 அந்நாள்வந் தென்றனை ஆண்டருள் செய்த
அய்யர் அமுதர்என் அன்பர் அழகர்
நன்னாள் கழிக்கின்ற நங்கைய ரோடு
நான்அம் பலம்பாடி நண்ணுறும் போது
பின்னாள்என் றெண்ணிப் பிதற்றாதே பெண்ணே
பேரருட் ஜோதிப் பெருமணம் செய்நாள்
இந்நாளே என்கின்றார் என்னடி அம்மா
என்கை பிடிக்கின்றார் என்னடி அம்மா. 4

1071 தப்போது வார்உளம் சார்ந்திட உன்னார்
சத்தியர் உத்தமர் நித்தம ணாளர்
ஒப்போத ஒண்ணாத மெய்ப்போத மன்றின்
உண்மையைப் பாடிநான் அண்மையில் நின்றேன்
அப்போதென் றெண்ணி அயர்ந்திடேல் பெண்ணே
அன்புடை நின்னையாம் இன்புறக் கூடல்
இப்போதே என்கின்றார் என்னடி அம்மா
என்கை பிடிக்கின்றார் என்னடி அம்மா. 5

1072 மெய்க்குலம் போற்ற விளங்கு மணாளர்
வித்தகர் அம்பலம் மேவும் அழகர்
இக்குல மாதரும் யானும்என் நாதர்
இன்னருள் ஆடல்கள் பன்னுறும் போது
பொய்க்குலம் பேசிப் புலம்பாதே பெண்ணே
பூரண நோக்கம் பொருந்தினை நீதான்
எக்குலம் என்கின்றார் என்னடி அம்மா
என்கை பிடிக்கின்றார் என்னடி அம்மா. 6

1073 வெம்மத நெஞ்சிடை மேவுற உன்னார்
வெம்பல மாற்றும்என் அம்பல வாணர்
சம்மத மாமட வார்களும் நானும்
தத்துவம் பேசிக்கொண் டொத்துறும் போது

Koviloor Digital Library

இம்மதம் பேசி இறங்காதே பெண்ணே
ஏகசி வோகத்தை எய்தினை நீதான்
எம்மதம் என்கின்றார் என்னடி அம்மா
என்கை பிடிக்கின்றார் என்னடி அம்மா. 7

1074 பாரொடு விண்ணும் படைத்தபண் பாளர்
பற்றம் பலத்தார்சொல் சிற்றம் பலத்தார்
வாரிடு கொங்கையர் மங்கைய ரோடே
மன்றகம் பாடி மகிழ்கின்ற போது
ஏருடம் பொன்றென எண்ணேல்நீ பெண்ணே
எம்முடம் புன்னை* இணைத்திங் கெமக்கே
ஈருடம் பென் கின்றார் என்னடி அம்மா
என்கை பிடிக்கின்றார் என்னடி அம்மா. 8

1075 மறப்பற்ற நெஞ்சிடை வாழ்கின்ற வள்ளல்
மலப்பற் றறுத்தவர் வாழ்த்து மணாளர்
சிறப்புற்ற மங்கையர் தம்மொடு நான்தான்
சிற்றம் பலம்பாடிச் செல்கின்ற போது
புறப்பற் றகற்றத் தொடங்காதே பெண்ணே
புலைஅகப் பற்றை அறுத்தாய் நினக்கே
இறப்பற்ற தென்கின்றார் என்னடி அம்மா
என்கை பிடிக்கின்றார் என்னடி அம்மா. 9

1076 ஆறெனும் அந்தங்கள் ஆகிஅன் றாகும்
அம்பலத் தாடல்செய் ஆனந்த சித்தர்
தேறறி வாகிச் சிவானு பவத்தே
சின்மய மாய்நான் திளைக்கின்ற போது
மாறகல் வாழ்வினில் வாழ்கின்ற பெண்ணே
வல்லவள் நீயேஇம் மாநிலை மேலே
ஏறினை என்கின்றார் என்னடி அம்மா
என்கை பிடிக்கின்றார் என்னடி அம்மா. 10

திருச்சிற்றம்பலம்

---

* எம்முடம் பும்மை – ஆ.பா. பதிப்பு

Koviloor Digital Library

78. தலைவி வருந்தல்

எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

1077 பருவமிலாக் குறையாலோ பகுதிவகை யாலோ
பழக்கமிலா மையினாலோ படிற்றுவினை யாலோ
இருவகைமா யையினாலோ ஆணவத்தி னாலோ
என்னாலோ பிறராலோ எதனாலோ அறியேன்
சருவல்ஒழிந் தென்மனமாம் பாங்கிபகை யானாள்
தனித்தபரை எனும்வளர்த்த தாயும்முகம் பாராள்
நிருவ மடப் பெண்களெலாம் வலதுகொழிக் கின்றார்
நிபுணர்எங்கள் நடராயர் நினைவைஅறிந் திலனே. 1

1078 அம்பலத்தே திருநடஞ்செய் அடிமலர்என் முடிமேல்
அணிந்திடமுன் சிலசொன்னேன் அதனாலோ அன்றி
எம்பலத்தே எம்மிறைவன் என்னைமணம் புரிவான்
என்றுசொன்னேன் இதனாலோ எதனாலோ அறியேன்
வம்பிசைத்தேன் எனஎனது பாங்கிபகை யானாள்
வளர்த்தெடுத்த தனித்தாயும் மலர்ந்துமுகம் பாராள்
நிம்பமரக் கனியானார் மற்றையர்கள் எல்லாம்
நிபுணர்எங்கள் நடராயர் நினைவைஅறிந் திலனே. 2

1079 கண்ணுறங்கேன் உறங்கினும்என் கணவரொடு கலக்குங்
கனவன்றி இலைஎன்றேன் அதனாலோ அன்றி
எண்ணுறங்கா நிலவில்அவர் இருக்குமிடம் புகுவேன்
என்றுரைத்தேன் இதனாலோ எதனாலோ அறியேன்
பெண்ணடங்காள் எனத்தோழி பேசிமுகங் கடுத்தாள்
பெருந்தயவால் வளர்த்தவளும் வருந்தயலாள் ஆனாள்
மண்ணடங்காப் பழிகூறி மற்றவர்கள் இருந்தார்
வள்ளல்நட ராயர் திரு வுள்ளம்அறிந் திலனே. 3

1080 எல்லாஞ்செய் வல்லதுரை என்கணவர் என்றால்
எனக்கும்ஒன்று நினக்கும்ஒன்றா என்றஅத னாலோ
இல்லாமை எனக்கில்லை எல்லார்க்குந் தருவேன்
என்றுசொன்னேன் இதனாலோ எதனாலோ அறியேன்
கல்லார்போல் என்னைமுகம் கடுத்துநின்றாள் பாங்கி
களித்தெடுத்து வளர்த்தவளும் கலந்தனள்அங் குடனே
செல்லாமை சிலபுகன்று சிரிக்கின்றார் மடவார்
சித்தர்நட ராயர்திருச் சித்தமறிந் திலனே. 4

Koviloor Digital Library

1081 இச்சைஎலாம் வல்லதுரை என்னைமணம் புரிந்தார்
ஏடிஎனக் கிணைஎவர்கள் என்றஅத னாலோ
எச்சமயத் தேவரையும் இனிமதிக்க மாட்டேன்
என்றுசொன்னேன் இதனாலோ எதனாலோ அறியேன்
நச்சுமரக் கனிபோலே பாங்கிமனங் கசந்தாள்
நயந்தெடுத்து வளர்த்தவளும் கயந்தெடுப்புப் புகன்றாள்
அச்சமிலாள் இவள்என்றே அலர்உரைத்தார் மடவார்
அண்ணல்நட ராயர்திரு எண்ணம்அறிந் திலனே. 5

1082 வஞ்சமிலாத் தலைவருக்கே மாலையிட்டேன் எல்லா
வாழ்வும்என்றன் வாழ்வென்றேன் அதனாலோ அன்றி
எஞ்சலுறேன் மற்றவர்போல் இறந்துபிறந் துழலேன்
என்றுசொன்னேன் இதனாலோ எதனாலோ அறியேன்
அஞ்சுமுகங் காட்டிநின்றாள் பாங்கிஎனை வளர்த்த
அன்னையும்அப் படியாகி என்னைமுகம் பாராள்
நெஞ்சுரத்த பெண்களெல்லாம் நீட்டிநகைக் கின்றார்
நிருத்தர்நட ராயர்திருக் கருத்தைஅறிந் திலனே. 6

1083 அன்னமுண அழைத்தனர்நான் ஆடும்மல ரடித்தேன்
அருந்துகின்றேன் எனஉரைத்தேன் அதனாலோ அன்றி
என்னுயிர்நா யகனொடுநான் அணையும்இடம் எங்கே
என்றுரைத்தேன் இதனாலோ எதனாலோ அறியேன்
துன்னுநெறிக் கொருதுணையாம் தோழிமனங் கசந்தாள்
துணிந்தெடுத்து வளர்த்தவளும் சோர்ந்தமுகம் ஆனாள்
நென்னல்ஒத்த பெண்களெலாங் கூடிநகைக் கின்றார்
நிபுணர்எங்கள் நடராயர் நினைவைஅறிந் திலனே. 7

1084 பொதுநடஞ்செய் துரைமுகத்தே தளதளஎன் றொளிரும்
புன்னகைஎன் பொருள்என்றேன் அதனாலோ அன்றி
இதுவரையும் வரக்காணேன் தடைசெய்தார் எவரோ
எனப்புகன்றேன் இதனாலோ எதனாலோ அறியேன்
புதுமுகங்கொண் டெனதுதனித் தோழிமனந் திரிந்தாள்
புரிந்தெடுத்து வளர்த்தவளும் புதுமைசில புகன்றாள்
மதுவுகந்து களித்தவர்போல் பெண்கள்நொடிக் கின்றார்
வள்ளல்நட ராயர்திரு வுள்ளமறிந் திலனே. 8

1085 கண்கலந்த கள்வர் என்னைக் கைகலந்த தருணம்
கரணம்அறிந் திலன்என்றேன் அதனாலோ அன்றி
எண்கலந்த போகமெலாம் சிவபோகந் தனிலே
இருந்ததென்றேன் இதனாலோ எதனாலோ அறியேன்

Koviloor Digital Library

விண்கலந்த மதிமுகந்தான் வேறுபட்டாள் பாங்கி
வியந்தெடுத்து வளர்த்தவளும் வேறுசில புகன்றாள்
பண்கலந்த மொழிமடவார் பழிகூற லானார்
பத்தர்புகழ் நடராயர் சித்தம்அறிந் திலனே. 9

1086 மாடமிசை ஓங்குநிலா மண்டபத்தே மகிழ்ந்தேன்
வள்ளலொடு நானென்றேன் அதனாலோ அன்றி
ஈடறியாச் சுகம்புகல என்னாலே முடியா
தென்றுரைத்தேன் இதனாலோ எதனாலோ அறியேன்
ஏடவிழ்பூங் குழற்கோதைத் தோழிமுகம் புலர்ந்தாள்
எனைஎடுத்து வளர்த்தவளும் இரக்கமிலாள் ஆனாள்
நாடறியப் பெண்களெலாங் கூடிநகைக் கின்றார்
நல்லநட ராயர்கருத் தெல்லைஅறிந் திலனே. 10

1087 கற்பூரம் மணக்கின்ற தென்மேனி முழுதும்
கணவர்மணம் அதுவென்றேன் அதனாலோ அன்றி
இற்பூவை அறியுமடி நடந்தவண்ணம் எல்லாம்
என்றுரைத்தேன் இதனாலோ எதனாலோ அறியேன்
பொற்பூவின் முகம்வியர்த்தாள் பாங்கிஅவ ளுடனே
புரிந்தெடுத்து வளர்த்தவளும் கரிந்தமுகம் படைத்தாள்
சொற்பூவைத் தொடுக்கின்றார் கால்கள்களை யாதே
துன்னுநட ராயர்கருத் தெல்லைஅறிந் திலனே. 11

1088 மன்னுதிருச் சபைநடுவே மணவாள ருடனே
வழக்காடி வலதுபெற்றேன் என்றஅத னாலோ
இன்னும்அவர் வதனஇள நகைகாணச் செல்வேன்
என்றுசொன்னேன் இதனாலோ எதனாலோ அறியேன்
மின்னும்இடைப் பாங்கிஒரு விதமாக நடந்தாள்
மிகப்பரிவால் வளர்த்தவளும் வெய்துயிர்த்துப் போனாள்
அன்னநடைப் பெண்களெலாம் சின்னமொழி புகன்றார்
அத்தர்நட ராயர்திருச் சித்தம்அறிந் திலனே. 12

1089 கள்ளுண்டாள் எனப்புகன்றீர் கனகசபை நடுவே
கண்டதலால் உண்டதிலை என்றஅத னாலோ
எள்ளுண்ட மற்றவர்போல் என்னைநினை யாதீர்
என்றுரைத்தேன் இதனாலோ எதனாலோ அறியேன்
உள்ளுண்ட மகிழ்ச்சிஎலாம் உவட்டிநின்றாள் பாங்கி
உவந்துவளர்த் தவளும்என்பால் சிவந்தகண்ணள் ஆனாள்
துள்ளுண்ட பெண்களெலாம் சூழ்ந்துநொடிக் கின்றார்
சுத்தர்நட ராயர்திருச் சித்தம்அறிந் திலனே. 13

Koviloor Digital Library

1090 காரிகையீர் எல்லீரும் காணவம்மின் எனது
கணவர்அழ கினைஎன்றேன் அதனாலோ அன்றி
ஏரிகவாத் திருவுருவை எழுதமுடி யாதே
என்றுசொன்னேன் இதனாலோ ஏதனாலோ அறியேன்
காரிகவாக் குழல்சோரக் கடுத்தெழுந்தாள் பாங்கி
கண்பொறுத்து வளர்த்தவளும் புண்பொறுத்தாள் உளத்தே
நேரிகவாப் பெண்கள்மொழிப் போர்இகவா தெடுத்தார்
நிருத்தர்நட ராயர்திருக் கருத்தைஅறிந் திலனே. 14

1091 கண்ணேறு படும்எனநான் அஞ்சுகின்றேன் எனது
கணவர்வடி வதுகாணற் கென்றஅத னாலோ
எண்ணாத மனத்தவர்கள் காணவிழை கின்றார்
என்றுரைத்தேன் இதனாலோ எதனாலோ அறியேன்
நண்ணாரில் கடுத்தமுகம் தோழிபெற்றாள் அவளை
நல்கிளனை வளர்த்தவளும் மல்கியவன் படுத்தாள்
பெண்ணாயம் பலபலவும் பேசுகின்றார் இங்கே
பெரியநட ராயர்உள்ளப் பிரியம்அறிந் திலனே. 15

1092 கற்பூரம் கொணர்ந்துவம்மின் என்கணவர் வந்தால்
கண்ணெச்சில் கழிக்கஎன்றேன் அதனாலோ அன்றி
எற்பூத நிலையவர்தம் திருவடித்தா மரைக்கீழ்
என்றுசொன்னேன் இதனாலோ எதனாலோ அறியேன்
வற்பூத வனம்போன்றாள் பாங்கியவள் தனைமுன்
மகிழ்ந்துபெற்றிங் கெனைவளர்த்தாள் வினைவளர்த்தாள் ஆனாள்
விற்பூஒள் நுதல்மடவார் சொற்போர்செய் கின்றார்
விண்ணிலவு நடராயர் எண்ணம்அறிந் திலனே. 16

1093 மனைஅணைந்த மலரணைமேல் எனைஅணைந்த போது
வடிவுசுக வடிவானேன் என்றஅத னாலோ
இனைவறியேன் முன்புரிந்த பெருந்தவம்என் புகல்வேன்
என்றுரைத்தேன் இதனாலோ எதனாலோ அறியேன்
புனைமுகம்ஓர் கரிமுகமாய்ப் பொங்கிநின்றாள் பாங்கி
புழுங்குமனத் தவளாகி அழுங்குகின்றாள் செவிலி
பனையுலர்ந்த ஓலைஎனப் பெண்கள்ஒலிக் கின்றார்
பண்ணவர்என் நடராயர் எண்ணம்அறிந் திலனே. 17

1094 தாழ்குழலீர் எனைச்சற்றே தனிக்கவிட்டால் எனது
தலைவரைக்காண் குவல்என்றேன் அதனாலோ அன்றி
ஏழ்கடலிற் பெரிதன்றோ நான்பெற்ற இன்பம்
என்றுரைத்தேன் இதனாலோ எதனாலோ அறியேன்

Koviloor Digital Library

கூழ்கொதிப்ப தெனக்கொதித்தாள் பாங்கிஎனை வளர்த்த
கோதைமருண் டாடுகின்ற பேதைஎனல் ஆனாள்
சூழ்மடந்தை மார்களெலாம் தூற்றிநகைக் கின்றார்
சுத்தர்நட ராயர்திருச் சித்தம்அறிந் திலனே. 18

1095 தனித்தலைவர் வருகின்ற தருணம்இது மடவீர்
தனிக்கஎனை விடுமின்என்றேன் அதனாலோ அன்றி
இனித்தசுவை எல்லாம்என் கணவர்அடிச் சுவையே
என்றுரைத்தேன் இதனாலோ எதனாலோ அறியேன்
பனித்தகுளிர் காலத்தே சனித்தசலம் போன்றாள்
பாங்கிஎனை வளர்த்தவளும் தூங்குமுகங் கொண்டாள்
கனித்தபழம் விடுத்துமின்னார் காய்தின்னு கின்றார்
கருத்தர்நட ராயர்திருக் கருத்தைஅறிந் திலனே. 19

1096 அரும்பொன்அனை யார்எனது துரைவரும்ஓர் சமயம்
அகலநின்மின் அணங்கனையீர் என்றஅத னாலோ
இரும்புமனம் ஆனாலும் இளகிவிடுங் கண்டால்
என்றுரைத்தேன் இதனாலோ எதனாலோ அறியேன்
கரும்பனையாள் பாங்கியும்நாய்க் கடுகனையாள் ஆனாள்
களித்தென்னை வளர்த்தவளும் புளித்தின்றாள் ஒத்தாள்
விரும்புகின்ற பெண்களெலாம் அரும்புகின்றார் அலர்தான்
வித்தகர்என் நடராயர் சித்தம்அறிந் திலனே. 20

1097 மணவாளர் வருகின்ற தருணம்இது மடவீர்
மறைந்திருமின் நீவிர்என்றேன் அதனாலோ அன்றி
எணமேது நுமக்கெனைத்தான் யார்தடுக்கக் கூடும்
என்றுரைத்தேன் இதனாலோ எதனாலோ அறியேன்
குணநீடு பாங்கிஅவள் எம்மிறையை நினையார்
குணங்கொண்டாள் வளர்த்தவளும் பணம்விண்டாள் ஆனாள்
மணநீடு குழன்மடவார் குணநீடு கின்றார்
வள்ளல்நட ராயர்திரு வுள்ளம்அறிந் திலனே. 21

1098 பதிவரும்ஓர் தருணம்இது நீவிர்அவர் வடிவைப்
பார்ப்பதற்குத் தரமில்லீர் என்றஅத னாலோ
எதிலும்எனக் கிச்சைஇல்லை அவரடிக்கண் அல்லால்
என்றுரைத்தேன் இதனாலோ எதனாலோ அறியேன்
மதிமுகத்தாள் பாங்கிஒரு விதிமுகத்தாள் ஆனாள்
மகிழ்ந்தென்னை வளர்த்தவளும் இகழ்ந்துபல புகன்றாள்
துதிசெய்மட மாதர்எலாம் சதிசெய்வார் ஆனார்
சுத்தர்நட ராயர் திருச் சித்தம்அறிந் திலனே. 22

Koviloor Digital Library

1099 மன்றாடுங் கணவர்திரு வார்த்தைஅன்றி உமது
வார்த்தைஎன்றன் செவிக்கேறா தென்றஅத னாலோ
இன்றாவி அன்னவர்க்குத் தனித்தஇடங் காணேன்
என்றுரைத்தேன் இதனாலோ எதனாலோ அறியேன்
முன்றானை அவிந்துவிழ முடுகிநடக் கின்றாள்
முதற்பாங்கி வளர்த்தவளும் மதர்ப்புடன்செல் கின்றாள்
ஒன்றாத மனப்பெண்கள் வென்றாரின் அடுத்தார்
ஒருத்தர்நட ராயர்திருக் கருத்தைஅறிந் திலனே. 23

1100 கூடியஎன் கணவர்எனைக் கூடாமற் கலைக்கக்
கூடுவதோ நும்மாலே என்றஅத னாலோ
ஏடிஎனை அறியாரோ சபைக்குவரு வாரோ
என்றுரைத்தேன் இதனாலோ எதனாலோ அறியேன்
நாடியஎன் பாங்கிமன மூடிநின்று போனாள்
நண்ணிஎனை வளர்த்தவளும் எண்ணியவா றிசைத்தாள்
தேடியஆ யங்களெலாம் கூடிஉரைக் கின்றார்
திருத்தர்நட ராயர்திருக் கருத்தைஅறிந் திலனே. 24

திருச்சிற்றம்பலம்

79. நற்றாய் செவிலிக்குக் கூறல்

எழுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

1101 உணர்ந்தவர் தமக்கும் உணர்வரி யான்என்
உள்ளகத் தமர்ந்தனன் என்றாள்
அணிந்தனன் எனக்கே அருண்மண மாலை
அதிசயம் அதிசயம் என்றாள்
துணிந்துநான் தனித்த போதுவந் தென்கை
தொட்டனன் பிடித்தனன் என்றாள்
புணர்ந்தனன் கலந்தான் என்றுளே களித்துப்
பொங்கினாள் நான்பெற்ற பொன்னே. 1

1102 தனிப்பெரும் பதியே என்பதி ஆகத்
தவம்எது புரிந்ததோ என்றாள்
அனித்தநீத் தெனைத்தான் அன்பினால் அணைத்தான்
அதிசயம் அதிசயம் என்றாள்
இனித்துயர் சிறிதும் அடைந்திடேன் என்றாள்
எனக்கிணை யார்கொலோ என்றாள்
சனிப்பிறப் பறுத்தேன் என்றுளே களிப்புத்
ததும்பினாள் நான்பெற்ற கனியே. 2

Koviloor Digital Library

1103 புண்ணிய பதியைப் புணர்ந்தனன் நான்செய்
புண்ணியம் புகல்அரி தென்றாள்
தண்ணிய மதியின் அமுதெனக் களித்த
தயவைநான் மறப்பனோ என்றாள்
எண்ணிய அனைத்தும் ஈந்தருள் கின்றான்
என்னையோ என்னையோ என்றாள்
அண்ணிய பேரா னந்தமே வடிவம்
ஆயினாள் நான்பெற்ற அணங்கே. 3

1104 சத்திய ஞான சபாபதி எனக்கே
தனிப்பதி ஆயினான் என்றாள்
நித்திய வாழ்வு பெற்றுநான் இன்ப
நிலைதனில் நிறைந்தனன் என்றாள்
பித்தியல் உலகீர் காண்மினோ சித்திப்
பேறெலாம் என்வசத் தென்றாள்
எத்திசை யீரும் ஒத்திவண் வருக
என்றனள் எனதுமெல் லியலே. 4

1105 திருமணிப் பொதுவில் ஒருபெரும் பதிஎன்
சிந்தையில் கலந்தனன் என்றாள்
பெருமையில் சிறந்தேன் என்பெருந் தவத்தைப்
பேசுதல் அரிதரி தென்றாள்
இருமையும் என்போல் ஒருமையில் பெற்றார்
யாண்டுளார் யாண்டுளார் என்றாள்
மருமலர் முகத்தே இளநகை துளும்ப
வயங்கினாள் நான்பெற்ற மகளே. 5

1106 வள்ளலைப் புணர்ந்தேன் அம்மவோ இதுதான்
மாலையோ காலையோ என்றாள்
எள்ளலைத் தவிர்த்தேன் உலகெலாம் எனக்கே
ஏவல்செய் கின்றன என்றாள்
தெள்ளமு தருந்தி அழிவிலா உடம்பும்
சித்தியும் பெற்றனன் என்றாள்
துள்ளிய மடவீர் காண்மினோ என்றாள்
சோர்விலாள் நான்பெற்ற சுதையே. 6

1107 கனகமா மன்றில் நடம்புரி பதங்கள்
கண்டனன் கண்டனன் என்றாள்
அனகசிற் சபையில் ஒருபெரும் பதிஎன்
அன்பிலே கலந்தனன் என்றாள்

Koviloor Digital Library

தினகர சோமாக் கினிஎலாம் எனக்கே
செயல்செயத் தந்தனன் என்றாள்
தனகரத் தெனைத்தான் தழுவினான் என்றாள்
தவத்தினால் பெற்றநம் தனயே. 7

1108 கொடிப்பெரு மணிப்பொற் கோயில்என் உளமாக்
கொண்டுவந் தமர்ந்தனன் என்றாள்
கடிப்புது மலர்ப்பூங் கண்ணிவேய்ந் தெனைத்தான்
கடிமணம் புரிந்தனன் என்றாள்
ஒடிப்பற எல்லாம் வல்லதோர் சித்தாம்
ஒளிஎனக் களித்தனன் என்றாள்
இடிப்பொடு நொடித்தீர் காண்மினோ என்றாள்
என்தவத் தியன்றமெல் லியலே. 8

1109 வாழிமா மணிமன் றிறைவனே எனக்கு
மாலைவந் தணிந்தனன் என்றாள்
ஊழிதோ றூழி உலவினும் அழியா
உடம்பெனக் களித்தனன் என்றாள்
ஆழிசூழ் உலகோ டண்டங்கள் அனைத்தும்
அளிக்கஎன் றருளினான் என்றாள்
ஏழியன் மாட மிசையுற வைத்தான்
என்றனள் எனதுமெல் லியலே. 9

1110 ஏலுநன் மணிமா மன்றருட் ஜோதி
என்னுளத் தமர்ந்தனன் என்றாள்
பாலும்இன் சுவையும் போன்றென தாவி
பற்றினன் கலந்தனன் என்றாள்
சாலும்எவ் வுலகும் தழைக்கஎன் தனக்கே
சத்தியை அளித்தனன் என்றாள்
மேலும்எக் காலும் அழிவிலேன் என்றாள்
மிகுகளிப் புற்றனள் வியந்தே. 10

திருச்சிற்றம்பலம்

Koviloor Digital Library

80. திருவடிப் பெருமை

வரம்பில் இன்பம்

எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

1111 திருவாளர் கனகசபைத் திருநடஞ்செய் தருள்வார்
தேவர்சிகா மணிஎனக்குத் திருமாலை கொடுத்தார்
உருவாளர் அருவாகி ஒளியாகி வெளியாய்
ஓங்குகின்றார் என்னுடைய உயிர்த்துணைவர் அவர்தம்
பெருவாய்மைத் திறம்சிறிதும் பேசமுடி யாதே
பேசுவதார் மறைகளெலாம் கூசுகின்ற என்றால்
துருவாமல் இங்கெனக்குக் கிடைத்ததைஎன் சொல்வேன்
சொல்லளவல் லாதசுகம் தோன்றுவதென் தோழி. 1

1112 அருளாளர் பொற்பொதுவில் அற்புதநா டகஞ்செய்
ஆனந்த வண்ணர்எனை ஆளுடையார் சிறியேன்
தெருளாத பருவத்தே தெருட்டிமணம் புரிந்த
சீராளர் அவர்பெருமைத் திறத்தைஎவர் புகல்வார்
மருளாத ஆகமங்கள் மாமறைகள் எல்லாம்
மருண்டனவே என்னடிஎன் மனவாக்கின் அளவோ
இருளாமை என்றுறுமோ அன்றுசிறி துரைப்பேன்
என்னவும்நாண் ஈர்ப்பதிதற் கென்புரிவேன் தோழி. 2

1113 செம்பவளத் திருமலையோ மாணிக்க விளக்கோ
செழுஞ்சோதித் தனிப்பிழம்போ செவ்வண்ணத் திரளோ
அம்பதுமத் திருவிளங்கும் அகலத்தான் பிரமன்
அரன்முதலோர் ஐவர்களும் அப்பால்நின் றோரும்
எம்பரம்என் றெம்பெருமான் புறவண்ணம் எதுவோ
என்பாரேல் அகவண்ணம் யார்உரைக்க வல்லார்
தம்பரம்என் றென்னைஅன்று மணம்புரிந்தார் கனக
சபைநாதர்அவர்பெருமை சாற்றுவதென் தோழி. 3

1114 தேவர்களோ சித்தர்களோ சீவன்முத்தர் தாமோ
சிறந்தமுனித் தலைவர்களோ செம்பொருள்கண் டோரோ
மூவர்களோ அறுவர்களோ முதற்சத்தி அவளோ
முன்னியநம் பெருங்கணவர் தம்இயலை உணர்ந்தோர்
யாவர்களும் அல்லஎன்றால் யான்உணர்ந்து சொல்ல
அமையுமோ ஒருசிறிதும் அமையாது கண்டாய்
ஆவலொடும் அன்பர்தொழக் கனகசபை நடிப்பார்
அவர்பெருமை எவ்விதத்தும் அவர்அறிவார் தோழி. 4

Koviloor Digital Library

1115 பதிஉடையார் கனகசபா பதிஎனும்பேர் உடையார்
பணம்பரித்த வரையர்என்னை மணம்புரிந்த கணவர்
விதியுடையார் ஏத்தநின்ற துதிஉடையார் ஞான
விளக்கனைய மெய்உடையார் வெய்யவினை அறுத்த
மதிஉடையார் தமக்கருளும் வண்கைபெரி துடையார்
மங்கைசிவ காமவல்லி மணவாளர் முடிமேல்
நதிஉடையார் அவர்பெருமை மறைக்கும்எட்டா தென்றால்
நான்உரைக்க மாட்டுவனோ நவிலாய்என் தோழி. 5

1116 வெடித்தளிந்த முக்கனியின் வடித்தரசந் தனிலே
விரும்புறநின் றோங்கியசெங் கரும்பிரதம் கலந்து
தடித்தசெழும் பாற்பெய்து கோற்றேன்விட் டதனைத்
தனித்தபரா அமுதத்தில் தான்கலந்துண் டாற்போல்
இடித்திடித்தென் உளமுழுதும் தித்திக்கும் வார்த்தை
இனிதுரைத்து மணம்புரிந்த என்னுயிர்நா யகர்வான்
பொடித்திருமே னியர்நடனம் புரிகின்றார் அவர்தம்
புகழ்உரைக்க வல்லேனோ அல்லேன் காண் தோழி. 6

1117 திருச்சிற்றம் பலத்தின்பத் திருஉருக்கொண் டருளாம்
திருநடஞ்செய் தருளுகின்ற திருவடிகள் இரண்டும்
அருச்சிக்கும் பேரன்பர் அறிவின்கண் அறிவாய்
அவ்வறிவில் விளைந்தசிவா னந்தஅமு தாகி
உருச்சிக்கும் பரநாதத் தலங்கடந்தப் பாற்சித்
துருவுகடந் திருக்கும்என உணர்ந்தோர்சொல் வாரேல்
பெருச்சித்தெல் லாம்வல்ல நடராசப் பெருமான்
பெருமையையாம் பேசுவதென் பேசாய்என் தோழி. 7

1118 நாதவரை சென்றுமறை ஓர்அனந்தம் கோடி
நாடிஇளைத் திருந்தன ஆ கமங்கள் பரநாத
போதவரை போந்துபல முகங்கொண்டு தேடிப்
புணர்ப்பறியா திருந்தனஎன் றறிஞர்புகல் வாரேல்
பாதவரை வெண்ணீறு படிந்திலங்கச் சோதிப்
படிவம்எடுத் தம்பலத்தே பரதநடம் புரியும்
போதவரைக் காண்பதலால் அவர்பெருமை என்னால்
புகலவச மாமோநீ புகலாய்என் தோழி. 8

1119 பரைஇருந்த வெளிமுழுதும் பரவிஅப்பால் பரையின்
பரமாகி அப்பரத்தில் பரம்பரமாய் விளங்கித்
திரைகடந்த திருவெளியில் ஆனந்தா தீதத்
திருநடஞ்செய் யாதுசெயும் திருவடிகள் என்றே

Koviloor Digital Library

புரைகடந்தோர் புகல்கின்றார் கேட்கின்றோம் என்றால்
புண்ணியர்என் தனித்தலைவர் புனிதநட ராஜர்
வரைகடந்த திருத்தோள்மேல் திருநீற்றர் அவர்தம்
வாய்மைசொல வல்லேனோ அல்லேன் காண் தோழி. 9

1120 ஏய்ப்பந்தி வண்ணர்என்றும் படிகவண்ணர் என்றும்
இணையில்ஒளி உருவர்என்றும் இயல்அருவர் என்றும்
வாய்ப்பந்தல் இடுதலன்றி உண்மைசொல வல்லார்
மண்ணிடத்தும் விண்ணிடத்தும் மற்றிடத்தும் இலையே
காய்ப்பந்த மரம்என்று கண்டுசொல்வ தன்றிக்
காய்த்தவண்ணம் பூத்தவண்ணம் கண்டுகொள மாட்டாத்
தாய்ப்பந்த உணர்வுடையேன் யானோசிற் சபையில்
தனிமுதல்வர் திருவண்ணம் சாற்றவல்லேன் தோழி. 10

1121 கலைக்கடலைக் கடந்தமுனிக் கணங்களும்மும் மலமாம்
கரிசகன்ற யோகிகளும் கண்டுகொள மாட்டா
தலைக்கடலில் துரும்பாகி அலைகின்றார் மன்றுள்
ஆடுகின்றார் என்பதலால் அவர்வண்ணம் அதுவும்
நிலைக்குரிய திருச்சபையின் வண்ணமும்அச் சபைக்கண்
நிருத்தத்தின் வண்ணமும்இந் நீர்மையன என்றே
மலைக்குநிறை கண்டாலும் காணவொணா தம்ம
வாய்ப்பதர்கள் தூற்றுவதில் வரும்பயன்என் தோழி. 11

1122 சிதமலரோ சுகமலரும் பரிமளிக்க ஓங்கும்
திருச்சிற்றம் பலநடுவே திருநடனம் புரியும்
பதமலரோ பதமலரில் பாதுகையோ அவையில்
படிந்ததிருப் பொடியோஅப் பொடிபடிந்த படியோ
இதமலரும் அப்படிமேல் இருந்தவரோ அவர்பேர்
இசைத்தவரும் கேட்டவரும் இலங்குமுத்தர் என்றால்
நிதமலரும் நடராஜப் பெருமான்என் கணவர்
நிலைஉரைக்க வல்லார்ஆர் நிகழ்த்தாய்என் தோழி. 12

1123 சுத்தமுற்ற ஐம்பூத வெளிகரண வெளிமேல்
துலங்குவெளி துரியவெளி சுகவெளியே முதலாம்
இத்தகைய வெளிகளுள்ளே எவ்வெளியோ நடனம்
இயற்றுவெளி என்கின்றார் என்றால்அவ் வெளியில்
நித்தபரி பூரணமாய் ஆனந்த மயமாய்
நிருத்தமிடும் எம்பெருமான் நிபுணநட ராயர்
சித்துருவாம் திருவடியின் உண்மைவண்ணம் அறிந்து
செப்புவதார் என்வசமோ செப்பாய்என் தோழி. 13

Koviloor Digital Library

1124 காற்றுருவோ கனல்உருவோ கடவுள்உரு என்பார்
காற்றுருவும் கனல்உருவும் கண்டுரைப்பீர் என்றால்
வேற்றுருவே புகல்வர்அதை வேறொன்றால் மறுத்தால்
விழித்துவிழித் தெம்போல்வார் மிகவும்மருள் கின்றார்
தோற்றும்அந்தத் தத்துவமும் தோற்றாத்தத் துவமும்
துரிசாக அவைகடந்த சுகசொருபம் ஆகி
மாற்றமனம் உணர்வுசெல்லாத் தலத்தாடும் பெருமான்
வடிவுரைக்க வல்லவரார் வழுத்தாய்என் தோழி. 14

1125 நாதமட்டும் சென்றனம்மேல் செல்லவழி அறியேம்
நவின்றபர விந்துமட்டும் நாடினம்மேல் அறியேம்
ஏதமிலாப் பரநாத எல்லைமட்டும் சென்றேம்
இனிச்செல்ல வழிகாணேம் இலங்குபெரு வெளிக்கே
ஆதரவில் சென்றனம்மேல் செல்லவழி தெரியேம்
அம்மம்ம என்றுமறை ஆகமங்கள் எல்லாம்
ஓதநின்ற திருநடனப் பெருமானார் வடிவின்
உண்மைசொல வல்லவரார் உரையாய்என் தோழி. 15

1126 தோன்றுசத்தி பலகோடி அளவுசொல ஒண்ணாத்
தோற்றுசத்தி பலகோடித் தொகைஉரைக்க முடியா
சான்றுலகம் தோற்றுவிக்கும் சத்திபல கோடி
தனைவிளம்பல் ஆகாஅச் சத்திகளைக் கூட்டி
ஏன்றவகை விடுக்கின்ற சத்திபல கோடி
இத்தனைக்கும் அதிகாரி என்கணவர் என்றால்
ஆன்றமணி மன்றில்இன்ப வடிவாகி நடிக்கும்
அவர்பெருமை எவர்உரைப்பார் அறியாய்என் தோழி. 16

1127 தோற்றம்ஒன்றே வடிவொன்று வண்ணம்ஒன்று விளங்கும்
சோதிஒன்று மற்றதனில் துலங்கும்இயல் ஒன்று
ஆற்றஅதில் பரமாய அணுஒன்று பகுதி
அதுஒன்று பகுதிக்குள் அமைந்தகரு ஒன்று
ஏற்றமிக்க அக்கருவுள் சத்திஒன்று சத்திக்
கிறைஒன்றாம் இத்தனைக்கும் என்கணவர் அல்லால்
ஆற்றமற்றோர் அதிகாரி இல்லையடி மன்றில்
ஆடும்அவர் பெருந்தகைமை யார்உரைப்பார் தோழி. 17

1128 ஒருமைபெறு தோற்றம்ஒன்று தத்துவம்பல் வேறு
ஒன்றின்இயல் ஒன்றிடத்தே உற்றிலஇங் கிவற்றை
இருமையினும் மும்மைமுதல் எழுமையினும் கூட்டி
இலங்கியசிற் சத்திநடு இரண்டொன்றென் னாத

Koviloor Digital Library

பெருமைபெற்று விளங்கஅதின் நடுஅருள்நின் றிலங்கப்
பெரியஅருள் நடுநின்று துரியநடம் புரியும்
அருமைஎவர் கண்டுகொள்வர் அவர்பெருமை அவரே
அறியாரே என்னடிநீ அறைந்தவண்ணம் தோழி. 18

1129 படைத்தபடைப் பொன்றதிலே பரம்அதிற்கா ரணமாம்
பகுதிஅதில் பகுக்கின்ற பணிகள்பல பலவாம்
புடைத்தஅவை புகுந்துலவும் புரம்ஒன்றப் புரத்தில்
பூபதிஒன் றவர்க்குணர்த்தும் பூரணசித் தொன்று
மிடைத்தஇவை எல்லாஞ்சிற் றம்பலத்தே நடிக்கும்
மென்பதத்தோர் சிற்றிடத்து விளங்கிநிலை பெறவே
அடைத்துமற்றிங் கிவைக்கெல்லாம் அப்புறத்தே நிற்பார்
அவர்பெருமை எவர்அறிவார் அறியாய்நீ தோழி. 19

1130 சிருட்டிஒன்று சிற்றணுவில் சிறிததனில் சிறிது
சினைத்தகர ணக்கருஅச் சினைக்கருவில் சிறிது
வெருட்டியமான் அம்மானில் சிறிதுமதி மதியின்
மிகச்சிறிது காட்டுகின்ற வியன்சுடர்ஒன் றதனில்
தெருட்டுகின்ற சத்திமிகச் சிறிததனில் கோடித்
திறத்தினில்ஓர் சிறிதாகும் திருச்சிற்றம் பலத்தே
அருட்டிறத்தின் நடிக்கின்ற என்னுடைய தலைவர்
அருட்பெருமை எவர்உரைப்பார் அறியாய்என் தோழி. 20

1131 நான்முகர்கள் மிகப்பெரியர் ஆங்கவரில் பெரியர்
நாரணர்கள் மற்றவரின் நாடின்மிகப் பெரியர்
வான்முகத்த உருத்திரர்கள் மற்றவரில் பெரியர்
மயேச்சுரர்கள் சதாசிவர்கள் மற்றவரில் பெரியர்
மீன்முகத்த விந்ததனில் பெரிததனில் நாதம்
மிகப்பெரிது பரைஅதனில் மிகப்பெரியள் அவளின்
ஆன்முகத்தில் பரம்பரந்தான் பெரிததனில் பெரிதாய்
ஆடுகின்ற சேவடியார் அறிவார்காண் தோழி. 21

1132 மண்அனந்தங் கோடிஅள வுடையதுநீர் அதனில்
வயங்கியநூற் றொருகோடி மேல்அதிகம் வன்னி
எண்ணியஆ யிரம்ஆயுதம் கோடியின்மேல் இலக்கம்
எண்பத்து நான்கதின்மேல் அதிகம்வளி யொடுவான்
விண்ணளவு மூலமுயிர் மாமாயை குடிலை
விந்தளவு சொலமுடியா திந்தவகை எல்லாம்
அண்ணல்அடிச் சிறுநகத்தில் சிற்றகத்தாம் என்றால்
அவர்பெருமை எவர்உரைப்பார் அறியாய்நீ தோழி. 22

Koviloor Digital Library

1133 மண்ணாதி ஐம்பூத வகைஇரண்டின் ஒன்று
வடிவுவண்ணம் இயற்கைஒரு வாலணுச்சத் தியலாய்க்
கண்ணென்னும் உணர்ச்சிசெலாக் காட்சியவாய் நிற்பக்
கருதும்அவைக் குட்புறங்கீழ் மேற்பக்கம் நடுவில்
நண்ணிஒரு மூன்றைந்து நாலொடுமூன் றெட்டாய்
நவமாகி மூலத்தின் நவின்றசத்திக் கெல்லாம்
அண்ணுறும்ஓர் ஆதார சத்திகொடுத் தாடும்
அடிப்பெருமை யார்அறிவார் அவர்அறிவார் தோழி. 23

1134 மண்பூத முதற்சத்தி வால்அணுவில் அணுவாய்
மதித்தஅதன் உள்ஒளியாய் அவ்வொளிக்குள் ஒளியாய்
எண்பூதத் தவ்வொளிக்குள் இலங்குவெளி யாய்அவ்
வியல்வெளிக்குள் ஒருவெளியாய் இருந்தவெளி நடுவே
பண்பூத நடம்புரியும் பதப்பெருமை எவரும்
பகுத்துணர முடியாதேல் பதமலர்என் தலைமேல்
நண்பூற வைத்தருளும் நடராஜப் பெருமான்
நல்லசெயல் வல்லபம்ஆர் சொல்லுவர்காண் தோழி. 24

1135 வண்கலப்பில் சந்திசெயும் சத்தியுளே ஒருமை
வயங்கொளிமா சத்திஅத னுள்ஒருகா ரணமாம்
விண்கரண சத்திஅத னுள்தலைமை யாக
விளங்குகுருச் சத்திஅதின் மெய்ம்மைவடி வான
எண்குணமா சத்தி இந்தச் சத்திதனக் குள்ளே
இறையாகி அதுஅதுவாய் இலங்கிநடம் புரியும்
தண்கருணைத் திருவடியின் பெருமைஅறி வரிதேல்
சாமிதிரு மேனியின்சீர் சாற்றுவதென் தோழி. 25

1136 பெரியஎனப் புகல்கின்ற பூதவகை எல்லாம்
பேசுகின்ற பகுதியிலே வீசுகின்ற சிறுமை
உரியபெரும் பகுதியும் அப் பகுதிமுதல் குடிலை
உளங்கொள்பரை முதல்சத்தி யோகமெலாம் பொதுவில்
துரியநடம் புரிகின்ற சோதிமலர்த் தாளில்
தோன்றியதோர் சிற்றசைவால் தோன்றுகின்ற என்றால்
அரியபெரும் பொருளாக நடிக்கின்ற தலைவர்
அருட்பெருமை என்அளவோ அறியாய்என் தோழி. 26

1137 பொன்வண்ணப் பூதமுதல் தன்மைஉண்மை அகத்தே
பொற்புறமாக் கருவிளக்கம் பொருந்தவெண்மை செம்மை
தன்வண்ணப் பசுமையொடு கருமைகலப் பாகும்
தன்மையினில் தன்மையதாய்த் தனித்ததற்கோர் முதலாய்

Koviloor Digital Library

மன்வண்ணத் தொளிஉருவம் உயிர்ப்பினொடு தோன்ற
வால்அணுக்கூட் டங்களைஅவ் வகைநிறுவி நடத்தும்
மின்வண்ணத் திருச்சபையில் ஆடுகின்ற பதத்தின்
மெய்வண்ணம் புகலுவதார் விளம்பாய்என் தோழி. 27

1138 பொற்புடைய ஐங்கருவுக் காதார கரணம்
புகன்றஅறு கோடிஅவைக் காறிலக்கம் அவற்றுக்
கற்புறும்ஓர் அறுபதினா யிரம்அவற்றுக் கடையா
றாயிரமாங் கவற்றுக்கோர் அறுநூறிங் கிவைக்கே
விற்பொலியும் அறுபதுமற் றிவைக்காறிங் கிந்த
வியன்கரண சத்திகளை விரித்துவிளக் குவதாய்ச்
சிற்பரமாய் மணிமன்றில் திருநடனம் புரியும்
திருவடியின் பெருமைஎவர் செப்புவர்காண் தோழி. 28

1139 ஏற்றமுறும் ஐங்கருவுக் கியல்பகுதிக் கரணம்
எழுகோடி ஈங்கிவற்றுக் கேழ்இலக்கம் இவைக்கே
தோற்றமுறும் எழுபதினா யிரமிவற்றுக் கெழுமை
துன்னியநூ றிவற்றினுக்குச் சொல்லும் எழுபதுதான்
ஆற்றலுறும் இவைதமக்கோர் ஏழாம்இக் கரணம்
அனைத்தினையும் தனித்தனியே தோற்றிநிலை பொருத்திச்
சாற்றரிய வடிவுவண்ணம் சுவைப்பயன்உண் டாக்கும்
சாமிதிரு வடிப்பெருமை சாற்றுவதார் தோழி. 29

1140 விளங்கிஐங் கருச்சத்தி ஓர்அனந்தங் கருவில்
விளைகின்ற சத்திகள்ஓர் அனந்தம்விளை வெல்லாம்
வளம்பெறவே தருகின்ற சத்திகள்ஓர் அனந்தம்
மாண்படையத் தருவிக்கும் சத்திகள்ஓர் அனந்தம்
உளங்கொளநின் றதிட்டிக்கும் சத்திகள்ஓர் அனந்தம்
ஓங்கியஇச் சத்திகளைத் தனித்தனியே இயக்கித்
தளங்கொளஈண் டவ்வவற்றிற் குட்புறம்நின் றொளிரும்
சாமிதிரு வடிப்பெருமை சாற்றுவதார் தோழி. 30

1141 காணுகின்ற ஐங்கருவின் வித்தின்இயல் பலவும்
கருதுறும்அங் குரத்தின்இயல் பற்பலவும் அடியின்
மாணுகின்ற இயல்கள்பல் பலப்பலவும் நடுவில்
மன்னும்இயல் பலப்பலவும் முடியின்
பூணும்இயல் அனந்தவகை புரிந்தபல பலவும்
பொருந்துவதாய் அவ்வவற்றின் புணர்க்கையுந்தான் ஆகி
ஏணுகின்ற அவைகளுக்குட் பற்றாமல் நடிக்கும்
எழிற்கருணைப் பதப்பெருமை இயம்புவதார் தோழி. 31

Koviloor Digital Library

1142 மண்முதலாம் தத்துவத்தின் தன்மைபல கோடி
வயங்குசத்திக் கூட்டத்தால் வந்தனஓர் அனந்தம்
பண்ணுறும்அத் தன்மையுளே திண்மை ஒரு கோடி
பலித்தசத்திக் கூட்டத்தால் பணித்தனஓர் அனந்தம்
எண்ணுறும்இத் திண்மைகளும் இவற்றினது விகற்பம்
எல்லாமும் தனித்தனிநின் றிலங்கநிலை புரிந்தே
விண்ணென்னும் படி அவற்றில் கலந்துகல வாது
விளையாடும் அடிப்பெருமை விளம்புவதார் தோழி. 32

1143 விண்ணிடத்தே முதன்முப்பூ விரியஅதில் ஒருபூ
விரியஅதின் மற்றொருபூ விரிந்திடஇவ் வைம்பூக்
கண்ணிடத்தே பிறிதொருபூ கண்மலர அதிலே
கட்டவிழ வேறொருபூ விட்டஎழு பூவும்
பெண்ணிடத்தே நான்காகி ஆணிடத்தே மூன்றாய்ப்
பிரிவிலவாய்ப் பிரிவுளவாய்ப் பிறங்கியுடல் கரணம்
நண்ணிடத்தோர்ந் தியற்றிஅதின் நடுநின்று விளங்கும்
நல்லதிரு வடிப்பெருமை சொல்லுவதார் தோழி. 33

1144 வண்பூவில் வடிவுபல வண்ணங்கள் பலமேல்
மதிக்கும்இயல் பலஒளியின் வாய்மைபல ஒளிக்குள்
நண்பூறும் சத்திபல சத்திகளுள் வயங்கும்
நாதங்கள் பலநாத நடுவணைஓர் கலையில்
பண்பாய நடங்கள்பல பலபெயர்ப்பும் காட்டும்
பதிகள்பல இவைக்கெல்லாம் பதியாகிப் பொதுவில்
கண்பாய இவற்றினொடு கலந்துகல வாமல்
காணுகின்ற திருவடிச்சீர் கழறுவதார் தோழி. 34

1145 ஓங்கியஐம் பூஇவைக்குள் ஒன்றின்ஒன்று திண்மை
உற்றனமற் றதுஅதுவும் பற்றுவன பற்றத்
தாங்கியமா சத்திகளின் பெருங்கூட்டம் கலையாத்
தன்மைபுரிந் தாங்காங்குத் தனித்தனிநின் றிலங்கித்
தேங்கியபோ தவவைகலையச் செய்கைபல புரிந்து
திகழ்ஒளியாய் அருள்வெளியாய்த் திறவில்ஒளி வெளியில்
பாங்குறநேர் விளங்குகின்ற திருவடியின் பெருமை
பகுத்துரைக்க வல்லவரார் பகராய்என் தோழி. 35

1146 விரிந்திடும்ஐங் கருவினிலே விடயசத்தி அனந்த
விதமுகங்கொண் டிலகஅவை விகிதவிகற் பாகிப்
பிரிந்திடுமான் இலக்கணங்கள் பலகோடி பிரியாப்
பெருஞ்சத்தி இலக்கணங்கள் பற்பலகோ டிகளாய்த்

Koviloor Digital Library

தெரிந்திடுநா னிலைக்குள்ளே இருந்துவெளிப் படவும்
செய்கைபல புரிகின்ற திறல்உடைத்தா ரகமேல்
எரிந்திடுதீ நடுவெளிக்கண் இருந்ததிரு வடியின்
எல்லையையார் சொல்லவல்லார் இயம்பாய்என் தோழி. 36

1147 தோன்றியஐங் கருவினிலே சொல்லரும்ஓர் இயற்கைத்
துலங்கும்அதில் பலகோடிக் குலங்கொள்குருத் துவிகள்
ஆன்றுவிளங் கிடும்அவற்றின் அசலைபல கோடி
அமைந்திடும்மற் றவைகளுளே அமலைகள்ஓர் அனந்தம்
ஏன்றுநிறைந் திடும்அவற்றிற் கணிப்பதனுக் கரிதாய்
இலங்குபிர காசிகள்தாம் இருந்தனமற் றிவற்றில்
ஊன்றியதா ரகசத்தி ஓங்குமதின் நடுவே
உற்றதிரு வடிப்பெருமை உரைப்பவரார் தோழி. 37

1148 உறைந்திடும்ஐங் கருவினிலே உருவசத்தி விகற்பம்
உன்னுதற்கும் உணர்வதற்கும் ஒண்ணாவெண் ணிலவே
நிறைந்தஅவை தனித்தனியே நிகழ்ந்திலங்க அவைக்குள்
நேர்மைஒண்மை உறுவித்தந் நேர்மைஒண்மை அகத்தே
குறைந்திலவாம் பலவேறு குணங்கள்உறப் புரிந்து
குணங்களுளே குறிகள்பல கூட்டுவித்தாங் கமர்ந்தே
மறைந்தமணம் வெளிப்படுத்தும் மலரடியின் பெருமை
வகுத்துரைக்க வல்லவரார் வழுத்தாய்என் தோழி. 38

1149 சூழ்ந்திடும்ஐங் கருவினிலே சொருபசத்தி பேதம்
சொல்லினொடு மனங்கடந்த எல்லையிலா தனவே
தாழ்ந்திலவாய் அவைஅவையும் தனித்தனிநின் றிலங்கத்
தகும்அவைக்குள் நவவிளக்கம் தரித்தந்த விளக்கம்
வாழ்ந்திடஓர் சத்திநிலை வயங்கியுறப் புரிந்து
மதிக்கும்அந்தச் சத்திதனில் மன்னுசத்தர் ஆகி
ஆழ்ந்திடும்ஓர் பரம்பரத்தை அசைத்துநின்று நடிக்கும்
அடிப்பெருமை உரைப்பவரார் அறியாய்என் தோழி. 39

1150 பசுநிறத்த ஐங்கருவில் பகர்ந்தசுவைத் தன்மை
பற்பலகோ டிகளாம்அவ் வுற்பவசத் திகளில்
வசுநிறத்த விவிதநவ சத்திபல கோடி
வயங்கும்அவைக் குள்ஆதி வயங்குவள்அவ் வாதி
தசநிறத்த வாகஅதில் தனித்தனிஓங் காரி
சார்ந்திடுவள் அவள்அகத்தே தனிப்பரைசார்ந் திடுவள்
திசைநிறத்தப் பரைநடுவில் திருநடனம் புரியும்
திருவடியின் பெருவடிவைச் செப்புவதார் தோழி. 40

Koviloor Digital Library

1151 பூத்தசுடர்ப் பூஅகத்தே புறத்தேசூழ் இடத்தே
பூத்துமிகக் காய்த்துமதி அமுதொழுகப் பழுத்து
மாத்தகைய பெருஞ்ஜோதி மணிமன்றுள் விளங்கும்
வண்ணம்ஒரு சிறிதறிய மாட்டாமல் மறைகள்
ஏத்துவதும் ஏறுவதும் இறங்குவதும் ஆகி
இருக்கின்ற என்றுணர்ந்தோர் இயம்பிடில்இச் சிறியேன்
தோத்திரஞ்செய் தம்மைகண்டு மகிழ்ந்திடஅம் மன்றில்
துலங்கும்அடிப் பெருமையைஎன் சொல்லுவது தோழி. 41

1152 வளம்பெறுவிண் அணுக்குள்ஒரு மதிஇரவி அழலாய்
வயங்கியதா ரகையாய்இவ் வகைஅனைத்தும் தோற்றும்
தளம்பெறுசிற் சொலிதபரா சத்திமயம் ஆகித்
தனித்தசத்தி மான்ஆகித் தத்துவம்எல் லாம்போய்
உளம்புகுத மணிமன்றில் திருநடம்செய் தருளும்
ஒருதலைவன் சேவடிச்சீர் உரைப்பவர்எவ் வுலகில்
அளந்தறிதும் எனமறைகள் அரற்றும்எனில் சிறிய
அடிச்சியுரைத் திடப்படுமோ அறியாய்என் தோழி. 42

1153 பரவியஐங் கருவினிலே பருவசத்தி வயத்தே
பரைஅதிட்டித் திடநாத விந்துமயக் கத்தே
விரவியதத் துவஅணுக்கள் ஒன்றோடொன் றாய்ஒன்றி
விளங்கஅவற் றடிநடுவீ றிவற்றினில்மூ விதமாய்
உரவியலுற் றுயிர்இயக்கி அறிவைஅறி வித்தே
ஓங்குதிரு அம்பலத்தில் ஒளிநடனம் புரியும்
தரவியலிற் றிதுஎனயார் தெரிந்துரைப்பார் சிறிய
தமியள்உரைத் திடுந்தரமோ சாற்றாய்என் தோழி. 43

1154 ஜோதிமலை ஒருதலையில் ஜோதிவடி வாகிச்
சூழ்ந்தமற்றோர் தலைஞான சொரூபமய மாகி
ஓதியவே றொருதலையில் உபயவண்ணம் ஆகி
உரைத்திடும்ஐங் கருவகைக்கோர் முப்பொருளும் உதவி
ஆதிநடு அந்தம்இலா ஆனந்த உருவாய்
அம்பலத்தே ஆடுகின்ற அடிஇணையின் பெருமை
வேதியனும் திருமாலும் உருத்திரரும் அறியார்
விளைவறியேன் அறிவேனோ விளம்பாய்என் தோழி. 44

1155 பூஒன்றே முப்பூஐம் பூஎழுபூ நவமாம்
பூஇருபத் தைம்பூவாய்ப் பூத்துமலர்ந் திடவும்
நாஒன்று மணம்வேறு வணம்வேறு வேறா
நண்ணிவிளங் குறவும்அதின் நற்பயன்மாத் திரையில்

Koviloor Digital Library

மேவொன்றா இருப்பஅதின் நடுநின்று ஞான
வியன்நடனம் புரிகின்ற விரைமலர்ச்சே வடியின்
பாஒன்று பெருந்தகைமை உரைப்பவர்ஆர் சிறியேன்
பகர்ந்திடவல் லுநள் அல்லேன் பாராய்என் தோழி. 45

திருச்சிற்றம்பலம்

81. தோழிக் குரிமை கிளத்தல்

எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

1156 நயந்தநட நாயகர்உன் நாயகரே எனினும்
நாடியமந் திரங்கள்சில கூடிஉரை யிடவே
வியந்துமற்றைத் தேவர்எலாம் வரவும்அவர் நேயம்
விரும்பாதே இருப்பதென்நீ என்கின்றாய் தோழி
வயந்தரும்இந் திரர்பிரமர் நாரணர்கா ரணர்கள்
மற்றையர்கள் மற்றையர்கள் மற்றையர்கள் எவர்க்கும்
பயந்தகுடி அல்லடிநான் திருச்சிற்றம் பலத்தே
பதிநடஞ்செய் அடிப்பணிக்கே பதித்தகுடி அறியே. 1

1157 நயந்தநட நாயகர்உன் நாயகரே எனினும்
நங்கைநினைக் கண்டிடவே நாடிமற்றைத் தலைவர்
வியந்துவரு கின்றதுகண் டுபசரியா திங்கே
மேல்நோக்கி இருப்பதென்நீ என்கின்றாய் தோழி
வயந்தருபார் முதல்நாத வரையுளநாட் டவர்க்கும்
மற்றவரை நடத்துகின்ற மாநாட்டார் தமக்கும்
பயந்தகுடி அல்லடிநான் திருச்சிற்றம் பலத்தே
பதிநடஞ்செய் அடிப்பணிக்கே பதித்தகுடி அறியே. 2

1158 நயந்தநட நாயகர்உன் நாயகரே எனினும்
நாடும்மற்றைத் தலைவர்தமைக் கண்டபொழு தெனினும்
வியந்தவர்க்கோர் நல்லுரையும் சொல்லாதே தருக்கி
வீதியிலே நடப்பதென்நீ என்கின்றாய் தோழி
வயந்தரும்இவ் வண்டபகி ரண்டமட்டோ நாத
வரையோஅப் பாலும்உள மாநாட்டார் தமக்கும்
பயந்தகுடி அல்லடிநான் திருச்சிற்றம் பலத்தே
பதிநடஞ்செய் அடிப்பணிக்கே பதித்தகுடி அறியே. 3

1159 கடுங்குணத்தோர் பெறற்கரிய நடத்தரசே நினக்குக்
கணவர்எனி னும்பிறரைக் கண்டபொழு தெனினும்
நடுங்குணத்தால் நின்றுசில நல்வார்த்தை பகராய்
நங்காய்ஈ தென்எனநீ நவில்கின்றாய் தோழி

Koviloor Digital Library

ஒடுங்குபல தத்துவர்க்கும் தத்துவரை நடத்தும்
உபயநிலைத் தலைவருக்கும் அவர்தலைவர் களுக்கும்
நடுங்குகுடி அல்லடிநான் திருச்சிற்றம் பலத்தே
நடஞ்செய்அடிப் பணிக்கென்றே நாட்டியநற் குடியே. 4

1160 மடங்கலந்தார் பெறற்கரிய நடத்தரசே நினக்கு
மணவாளர் எனினும்உன்பால் வார்த்தைமகிழ்ந் துரைக்க
இடங்கலந்த மூர்த்திகள்தாம் வந்தால்அங் கவர்பால்
எண்ணம்இலா திருக்கின்றாய் என்கொல்என்றாய் தோழி
மடங்குசம யத்தலைவர் மதத்தலைவர் இவர்க்கும்
வயங்கும்இவர்க் குபகரிக்கும் மாத்தலைவர் களுக்கும்
அடங்குகுடி அல்லடிநான் திருச்சிற்றம் பலத்தே
ஆடல்அடிப் பணிக்கென்றே அமைத்தகுடி அறியே. 5

1161 அறங்குலவு தோழிஇங்கே நீஉரைத்த வார்த்தை
அறிவறியார் வார்த்தைஎத னால்எனில்இம் மொழிகேள்
உறங்குவதும் விழிப்பதும்பின் உண்ணுவதும் இறத்தல்
உறுவதுடன் பிறத்தல்பல பெறுவதுமாய் உழலும்
மறங்குலவும் அணுக்கள்பலர் செய்தவிர தத்தால்
மதத்தலைமை பதத்தலைமை வாய்த்தனர்அங் கவர்பால்
இறங்கலிலேன் பேசுதலால் என்பயனோ நடஞ்செய்
இறைவர்அடிப் புகழ்பேசி இருக்கின்றேன் யானே. 6

1162 சிவமயமே வேறிலைஎல் லாம்எனநீ தானே
தேமொழியாய் பற்பலகால் செப்பியிடக் கேட்டேன்
தவமயத்தார் பலசமயத் தலைவர்மதத் தலைவர்
தத்துவர்தத் துவத்தலைவர் அவர்தலைவர் தலைவர்
இவர்அவர்என் றயல்வேறு பிரித்தவர்பால் வார்த்தை
இயம்புவதென் என்றாய்ஈ தென்கொல்என்றாய் தோழி
நவமயம்நீ உணர்ந்தறியாய் ஆதலில்இவ் வண்ணம்
நவின்றனைநின் ஐயமற நான்புகல்வேன் கேளே. 7

1163 ஒளிஒன்றே அண்டபகி ரண்டமெலாம் விளங்கி
ஓங்குகின்ற தன்றிஅண்ட பகிரண்டங் களிலும்
வெளிநின்ற சராசரத்தும் அகத்தினொடு புறத்தும்
விளம்பும்அகப் புறத்தினொடு புறப்புறத்தும் நிறைந்தே
உளிநின்ற இருள்நீக்கி இலங்குகின்ற தன்மை
உலகறியும் நீஅறியா தன்றுகண்டாய் தோழி
தளிநின்ற ஒளிமயமே வேறிலைஎல் லாமும்
தான்எனவே தாகமங்கள் சாற்றுதல்சத் தியமே. 8

Koviloor Digital Library

1164 ஏற்றிடுவே தாகமங்கள் ஒளிமயமே எல்லாம்
என்றமொழி தனைநினைத்தே இரவில்இருட் டறையில்
சாற்றிடுமண் பாத்திரத்தை மரவட்டில் களைக்கல்
சட்டிகளை வேறுபல சார்ந்தகரு விகளைத்
தேற்றமிகு தண்ணீரைச் சீவர்கள்பற் பலரைச்
செப்பியஅவ் விருட்டறையில் தனித்தனிசேர்த் தாலும்
ஊற்றம்உறும் இருள்நீங்கி ஒளிகாண்ப துளதோ
உளதேல்நீ உரைத்தமொழி உளதாகும் தோழி. 9

1165 பரமதனோ டுலகுயிர்கள் கற்பனையே எல்லாம்
பகர்சிவமே எனஉணர்ந்தோம் ஆதலினால் நாமே
பிரமம்எனப் பிறர்க்குரைத்துப் பொங்கிவழிந் தாங்கே
பேசுகின்ற பெரியவர்தம் பெரியமதம் பிடியேல்
உரமிகுபேர் உலகுயிர்கள் பரமிவைகா ரியத்தால்
உள்ளனவே காரணத்தால் உள்ளனஇல் லனவே
தரமிகுபேர் அருள்ஒளியால் சிவமயமே எல்லாம்
தாம்எனவே உணர்வதுசன் மார்க்கநெறி பிடியே. 10

1166 பிரமம்என்றும் சிவம்என்றும் பேசுகின்ற நிலைதான்
பெருநிலையே இந்நிலையில் பேதமுண்டோ எனவே
தரம்அறிய வினவுகின்றாய் தோழிஇது கேள் நீ
சமரசசன் மார்க்கநிலை சார்திஎனில் அறிவாய்
திரமுறவா யினும்எல்லாம் ஆகிஅல்லா தாகும்
திருவருளாம் வெளிவிளங்க விளங்குதனிப் பொருளாம்
சிரமுறும்ஓர் பொதுஉண்மைச் சிவம்பிரம முடியே
திகழ்மறைஆ கமம்புகலும் திறன் இதுகண் டறியே. 11

1167 இலங்குகின்ற பொதுஉண்மை இருந்தநிலை புகல்என்
றியம்புகின்றாய் மடவாய்கேள் யான்அறியுந் தரமோ
துலங்கும்அதை உரைத்திடவும் கேட்டிடவும் படுமோ
சொல்அளவோ பொருள் அளவோ துன்னும்அறி வளவோ
விலங்குகின்ற தத்துவங்கள் அத்தனையும் கடந்த
மேனிலைஎன் றந்தமெலாம் விளம்புகின்ற தன்றி
வலங்கொளும்அம் மேனிலையின் உண்மைஎது என்றால்
மவுனஞ்சா திப்பதன்றி வாய்திறப்ப திலையே. 12

1168 வாய்திறவா மவுனமதே ஆகும்எனில் தோழி
மவுனசத்தி வெளிஏழும் பரத்தபரத் தொழியும்
தூயபரா பரம்அதுவே என்றால்அங் கதுதான்
துலங்குநடு வெளிதனிலே கலந்துகரை வதுகாண்

Koviloor Digital Library

மேயநடு வெளிஎன்றால் சிற்பரமாம் வெளியில்
விரவியிடும் தற்பரமாம் வெளிஎன்றால் அதுவும்
ஆயபெரு வெளிதனிலே அடங்கும்இது மட்டே
அளப்பதொரு வாறதன்மேல் அளப்பதரி தரிதே. 13

1169 கிளக்கின்ற மறைஅளவை ஆகமப்பே ரளவை
கிளந்திடுமெய்ச் சாதனமாம் அளவைஅறி வளவை
விளக்கும்இந்த அளவைகளைக் கொண்டுநெடுங் காலம்
மேலவர்கள் அளந்தளந்து மெலிகின்றார் ஆங்கே
அளக்கின்ற கருவிஎலாம் தேய்ந்திடக் கண்டாரே
அன்றிஒரு வாறேனும் அளவுகண்டார் இலையே
துளக்கம்உறு சிற்றறிவால் ஒருவாறென் றுரைத்தேன்
சொன்னவெளி வரையேனும் துணிந்தளக்கப் படுமோ. 14

திருச்சிற்றம்பலம்

82. அருட்பெருஞ்ஜோதி அடைவு

கட்டளைக் கலித்துறை

திருச்சிற்றம்பலம்

1170 அருட்பெருஞ் ஜோதிஎன் ஆருயி ரில்கலந் தாடுகின்ற
அருட்பெருஞ் ஜோதிஎன் அன்பிற் கலந்தறி வாய்விளங்கும்
அருட்பெருஞ் ஜோதித்தெள் ளாரமு தாகிஉள் அண்ணிக்கின்ற
அருட்பெருஞ் ஜோதிநின் ஆசைஒன் றேஎன்னுள் ஆர்கின்றதே. 1

1171 ஆர்கின்ற தெள்ளமு தின்சுவை என்என் றறைவன்அந்தோ
சார்கின்ற சிற்றம் பலப்பெருஞ் சீரினைச் சாற்றுதொறும்
சேர்கின்ற நாவுடன் உள்ளமும் ஆவியும் தித்தித்தலே
நேர்கின்ற தால்என் அருட்பெருஞ் ஜோதி நிறைந்துளத்தே. 2

1172 உளத்தே பெருங்களிப் புற்றடி யேன்மிக உண்ணுகின்றேன்
வளத்தே அருட்பெருஞ் ஜோதியி னால்ஒளி வாய்ந்தெனது
குளத்தே நிறைந்தணை யுங்கடந் தோங்கிக் குலவுபரி
மளத்தே மிகுந்து வயங்கும் அமுதம் மனமகிழ்ந்தே. 3

1173 மனமகிழ்ந் தேன்மன மாயையை நீக்கினன் மாநிலத்தே
சினமொடும் காமமும் தீர்ந்தேன் எலாம்வல்ல சித்தும்பெற்றேன்
இனமிகும் சுத்தசன் மார்க்கப் பெருநெறி எய்திநின்றேன்
கனமிகும் மன்றில் அருட்பெருஞ் ஜோதியைக் கண்டுகொண்டே. 4

Koviloor Digital Library

1174 கண்டேன் அருட்பெருஞ் ஜோதியைக் கண்களில் கண்டுகளி
கொண்டேன் சிவானந்தக் கூத்தாடிக் கொண்டிக் குவலயத்தே
தொண்டே திருஅம் பலந்தனக் காக்கிச் சுகஅமுதம்
உண்டேன் உயிர்தழைத் தோங்குகின் றேன்உள் உவப்புறவே. 5

1175 உறவே எனதின் னுயிரேஎன் உள்ளத்தில் உற்றினிக்கும்
நறவே அருட்பெருஞ் ஜோதிமன் றோங்கு நடத்தரசே
இறவேன் எனத்துணி வெய்திடச் செய்தனை என்னைஇனி
மறவேல்அடிச்சிறி யேன்ஒரு போது மறக்கினுமே. 6

1176 மறப்பேன் அலேன்உன்னை ஓர்கணமேனும் மறக்கில்அன்றே
இறப்பேன் இதுசத் தியம்சத் தியம்சத் தியம்இசைத்தேன்
பிறப்பே தவிர்த்தெனை ஆட்கொண்ட முதம் பெரிதளித்த
சிறப்பே அருட்பெருஞ் சோதிமன் றோங்கு செழுஞ்சுடரே. 7

1177 சுடரே அருட்பெருஞ் ஜோதிய னேபெண் சுகத்தைமிக்க
விடரே எனினும் விடுவர்எந் தாய்நினை விட்டயல்ஒன்
றடரேன் அரைக்கண மும்பிரிந் தாற்றலன் ஆணைகண்டாய்
இடரே தவிர்த்தெனக் கெல்லா நலமும்இங் கீந்தவனே. 8

1178 தவநேய மும்சுத்த சன்மார்க்க நேயமும் சத்தியமாம்
சிவநேய மும்தந்தென் உள்ளம் தெளியத் தெளித்தனையே
நவநேய மன்றில்அருட்பெருஞ் ஜோதியை நாடிநின்ற
இவனே அவன்எனக் கொள்வார்உன் அன்பர் இருநிலத்தே. 9

1179 நிலத்தே புழுத்த புழுவும் அலேன்புன் நிலத்திழிந்த
மலத்தே புழுத்த புழுஅனை யேனைஅவ் வான்துதிக்கும்
குலத்தே தலைமை கொடுத்தென் உளத்தில் குலவுகின்றாய்
தலத்தே அருட்பெருஞ் ஜோதிஅப் பாஎன் தயாநிதியே. 10

1180 நிதியே என்னுள்ள நிறைவே பொதுவில் நிறைந்தசிவ
பதியே அருட்பெருஞ் ஜோதிய னேஅம் பலம்விளங்கும்
கதியே என்கண்ணும் கருத்தும் களிக்கக் கலந்துகொண்ட
மதியே அமுத மழையேநின் பேரருள் வாழியவே. 11

1181 வாழிஎன் றேஎனை மால்அயன் ஆதியர் வந்தருட்பேர்
ஆழிஎன் றேதுதித் தேத்தப் புரிந்தனை அற்புதம்நீ
டூழிஅன் றேஎன்றும் சாகா வரமும் உவந்தளித்தாய்
வாழிமன் றோங்கும் அருட்பெருஞ் ஜோதிநின் மன்னருளே. 12

Koviloor Digital Library

1182 மன்னிய நின்அரு ளாரமு தம்தந்து வாழ்வித்துநான்
உன்னிய உன்னிய எல்லாம் உதவிஎன் உள்ளத்திலே
தன்னியல் ஆகிக் கலந்தித் தருணம் தயவுசெய்தாய்
துன்னிய நின்னருள் வாழ்க அருட்பெருஞ் ஜோதியனே. 13

திருச்சிற்றம்பலம்

83. அடிமைப் பேறு

நேரிசை வெண்பா

திருச்சிற்றம்பலம்

1183 அருள்அளித்தான் அன்பளித்தான் அம்பலத்தான் உண்மைப்
பொருள்அளித்தான் என்னுட் புணர்ந்தான் – தெருள்அளித்தான்
எச்சோ தனையும் இயற்றாமல் ஆண்டுகொண்டான்
அச்சோ எனக்கவன்போல் ஆர். 1

1184 ஆரணமும் ஆகமும் ஆங்காங் குணர்த்துகின்ற
காரணமும் காரியமும் காட்டுவித்தான் – பூரணன்சிற்
றம்பலத்தான் என்னாசை அப்பன் எலாம்வல்ல
செம்பலத்தை என்உளத்தே சேர்த்து. 2

1185 சேர்த்தான் பதம்என் சிரத்தே திருவருட்கண்
பார்த்தான்என் எண்ணமெலாம் பாலித்தான் – தீர்த்தான்என்
துன்பமெலாம் தூக்கமெலாம் சூழாது நீக்கிவிட்டான்
இன்பமெலாம் தந்தான் இசைந்து. 3

1186 இசைந்தான்என் உள்ளத் திருந்தான் எனையும்
நசைந்தான்என் பாட்டை நயந்தான் – அசைந்தாடு
மாயை மனம்அடக்கி வைத்தான் அருள்எனும்என்
தாயைமகிழ் அம்பலவன் தான். 4

1187 தானே அருள்ஆனான் தானே பொருள்ஆனான்
தானேஎல் லாம்வல்ல தான்ஆனான் – தானேதான்
நான்ஆனான் என்னுடைய நாயகன்ஆ னான்ஞான
வான்ஆனான் அம்பலத்தெம் மான். 5

1188 மான்முதலா உள்ள வழக்கெல்லாம் தீர்த்தருளித்
தான்முதலாய் என்னுளமே சார்ந்தமர்ந்தான் – தேன்முதலாத்
தித்திக்கும் பண்டமெலாம் சேர்ந்தாங்கென் சிந்தைதனில்
தித்திக்கும் அம்பலத்தான் தேர்ந்து. 6

Koviloor Digital Library

1189 தேர்ந்தேன் தெளிந்தேன் சிவமே பொருள்எனஉள்
ஓர்ந்தேன் அருளமுதம் உண்கின்றேன் – சார்ந்தேன்சிற்
றம்பலத்தில் எல்லாம்வல் லானை அவன்அருளால்
எம்பலத்தெல் லாம்வலன்ஆ னேன். 7

1190 ஆனேன் அவனா அவன்அருளால் ஆங்காங்கு
நானே களித்து நடிக்கின்றேன் – தானேஎன்
தந்தைஎன்பால் வைத்த தயவைநினைக் குந்தோறும்
சிந்தைவியக் கின்றேன் தெரிந்து. 8

1191 தெரிந்தேன் அருளால் சிவம்ஒன்றே என்று
புரிந்தேன் சிவம்பலிக்கும் பூசை – விரிந்தமனச்
சேட்டைஎலாம் தீர்த்துவிட்டேன் சித்தெல்லாம் வல்லஅருள்
நாட்டைஎலாம் கைக்கொண்டேன் நான். 9

1192 நான்செய்த நற்றவந்தான் யாதோ நவிற்றரிது
வான்செய்த தேவரெலாம் வந்தேவல் – தான்செய்து
தம்பலம்என் றேமதிக்கத் தான்வந்தென் னுட்கலந்தான்
அம்பலவன் தன்அருளி னால். 10

திருச்சிற்றம்பலம்

84. உத்தர ஞான சிதம்பர மாலை

வடலூர் மான்யம்

கட்டளைக் கலித்துறை

திருச்சிற்றம்பலம்

1193 அருளோங்கு கின்ற தருட்பெருஞ் ஜோதி யடைந்ததென்றன்
மருளோங்கு றாமல் தவிர்த்தது நல்ல வரமளித்தே
பொருளோங்கி நான் அருட் பூமியில் வாழப் புரிந்ததென்றும்
தெருளோங்க ஓங்குவது உத்தர ஞான சிதம்பரமே. 1

1194 இணைஎன்று தான்தனக் கேற்றது போற்றும் எனக்குநல்ல
துணைஎன்று வந்தது சுத்தசன் மார்க்கத்தில் தோய்ந்ததென்னை
அணைஎன் றணைத்துக்கொண் டைந்தொழில் ஈந்த தருளுலகில்
திணைஐந்து மாகியது உத்தர ஞான சிதம்பரமே. 2

1195 உலகம் எலாந்தொழ உற்ற தெனக்குண்மை ஒண்மைதந்தே
இலகஎ லாம்படைத் தாருயிர் காத்தருள் என்றதென்றும்
கலகம்இ லாச்சுத்த சன்மார்க்க சங்கம் கலந்ததுபார்த்
திலகம் எனாநின்றது உத்தர ஞான சிதம்பரமே. 3

Koviloor Digital Library

1196 பவமே தவிர்ப்பது சாகா வரமும் பயப்பதுநல்
தவமே புரிந்தவர்க் கின்பந் தருவது தான்தனக்கே
உவமேய மான தொளிஒங்கு கின்ற தொளிருஞ்சுத்த
சிவமே நிறைகின்றது உத்தர ஞான சிதம்பரமே. 4

1197 ஒத்தா ரையும்இழிந் தாரையும் நேர்கண் டுவக்கஒரு
மித்தாரை வாழ்விப்ப தேற்றார்க் கமுதம் விளம்பிஇடு
வித்தாரைக் காப்பது சித்தாடு கின்றது மேதினிமேல்
செத்தாரை மீட்கின்றது உத்தர ஞான சிதம்பரமே. 5

1198 எத்தாலும் மிக்க தெனக்கருள் ஈந்ததெல் லாமும்வல்ல
சித்தாடல் செய்கின்ற தெல்லா உலகும் செழிக்கவைத்தது
இத்தா ரணிக்கணி ஆயது வான்தொழற் கேற்றதெங்கும்
செத்தால் எழுப்புவது உத்தர ஞான சிதம்பரமே. 6

1199 குருநெறிக் கேஎன்னைக் கூட்டிக் கொடுத்தது கூறரிதாம்
பெருநெறிக் கேசென்ற பேர்க்குக் கிடைப்பது பேய்உலகக்
கருநெறிக் கேற்றவர் காணற் கரியது காட்டுகின்ற
திருநெறிக் கேற்கின்றது உத்தர ஞான சிதம்பரமே. 7

1200 கொல்லா நெறியது கோடா நிலையது கோபமிலார்
சொல்லால் உவந்தது சுத்தசன் மார்க்கந் துணிந்ததுல
கெல்லாம் அளிப்ப திறந்தால் எழுப்புவ தேதம்ஒன்றும்
செல்லா வளத்தினது உத்தர ஞான சிதம்பரமே. 8

1201 காணாத காட்சிகள் காட்டுவிக் கின்றது காலம் எல்லாம்
வீணாள் கழிப்பவர்க் கெய்தரி தானது வெஞ்சினத்தால்
கோணாத நெஞ்சில் குலாவிநிற் கின்றது கூடிநின்று
சேணாடர் வாழ்த்துவது உத்தர ஞான சிதம்பரமே. 9

1202 சொல்வந்த வேத முடிமுடி மீதில் துலங்குவது
கல்வந்த நெஞ்சினர் காணற் கரியது காமம்இலார்
நல்வந் தனைசெய நண்ணிய பேறது நன்றெனக்கே
செல்வந்தந் தாட்கொண்டது உத்தர ஞான சிதம்பரமே. 10

1203 ஏகாந்த மாகி வெளியாய் இருந்ததிங் கென்னைமுன்னே
மோகாந்த காரத்தின் மீட்டதென் நெஞ்ச முயங்கிரும்பின்
மாகாந்த மானது வல்வினை தீர்த்தெனை வாழ்வித்தென்றன்
தேகாந்த நீக்கியது உத்தர ஞான சிதம்பரமே. 11

திருச்சிற்றம்பலம்

Koviloor Digital Library

85. திருவருட்பேறு

நேரிசை வெண்பா

திருச்சிற்றம்பலம்

1204 சீர்விளங்கு சுத்தத் திருமேனி தான்தரித்துப்
பார்விளங்க நான்படுத்த பாயலிலே – தார்விளங்க
வந்தாய் எனைத்தூக்கி மற்றொருசார் வைத்தனையே
எந்தாய்நின் உள்ளமறி யேன். 1

1205 பயத்தோ டொருபால் படுத்திருந்தேன் என்பால்
நயத்தோ டணைந்தே நகைத்து – வயத்தாலே
தூக்கி எடுத்தெனைமேல் சூழலிலே வைத்தனைநான்
பாக்கியவான் ஆனேன் பதிந்து. 2

1206 என்னேநின் தண்ணருளை என்னென்பேன் இவ்வுலகில்
முன்னே தவந்தான் முயன்றேனோ – கொன்னே
படுத்தயர்ந்தேன் நான்படுத்த பாய்அருகுற் றென்னை
எடுத்தொருமேல் ஏற்றிவைத்தா யே. 3

1207 சிந்தா குலத்தொடுநான் தெய்வமே என்றுநினைந்
தந்தோ படுத்துள் அயர்வுற்றேன் – எந்தாய்
எடுத்தாள் எனநினையா தேகிடந்தேன் என்னை
எடுத்தாய் தயவைவிய வேன். 4

1208 உன்னுகின்ற தோறுமென துள்ளம் உருகுகின்ற
தென்னுரைப்பேன் என்னுரைப்பேன் எந்தாயே – துன்னிநின்று
தூக்கம் தவிர்த்தென்னைத் தூக்கிஎடுத் தன்பொடுமேல்
ஆக்கமுற வைத்தாய் அது. 5

1209 நான்படுத்த பாய்அருகில் நண்ணி எனைத்தூக்கி
ஊன்படுத்த தேகம் ஒளிவிளங்கத் – தான்பதித்த
மேலிடத்தே வைத்தனைநான் வெம்மைஎலாம் தீர்ந்தேன்நின்
காலிடத்தே வாழ்கின்றேன் காண். 6

1210 புண்ணியந்தான் யாது புரிந்தேனோ நானறியேன்
பண்ணியதுன் போடே படுத்திருந்தேன் – நண்ணிஎனைத்
தூக்கி எடுத்தெனது துன்பமெலாந் தீர்த்தருளி
ஆக்கியிடென் றேயருள்தந் தாய். 7

Koviloor Digital Library

1211 அஞ்சிஅஞ்சி ஊணும் அருந்தாமல் ஆங்கொருசார்
பஞ்சின் உழந்தே படுத்தயர்ந்தேன் – விஞ்சிஅங்கு
வந்தாய் எனைத்தூக்கி மற்றொருசார் வைத்தமுது
தந்தாய்என் நான்செய் தவம். 8

1212 நானே தவம்புரிந்தேன் நானே களிப்படைந்தேன்
தேனே எனும்அமுதம் தேக்கஉண்டேன் – ஊனே
ஒளிவிளங்கப் பெற்றேன் உடையான் எனைத்தான்
அளிவிளங்கத் தூக்கிஅணைத் தான். 9

1213 வாழி எனைத்தூக்கி வைத்த கரதலங்கள்
வாழி எலாம்வல்ல மணிமன்றம் – வாழிநடம்
வாழி அருட்ஜோதி வாழிநட ராயன்
வாழி சிவஞான வழி. 10

திருச்சிற்றம்பலம்

86. நெஞ்சோடு கூறல்

தில்லையும் பார்வதிபுரமும்

நேரிசை வெண்பா

திருச்சிற்றம்பலம்

1214 அன்னையப்பன் மாவினத்தார் ஆய்குழலார் ஆசையினால்
தென்னைஒப்ப நீண்ட சிறுநெஞ்சே – என்னைஎன்னை
யாவகைசேர் வாயில் எயிற்றில்லை என்கிலையே
ஆவகைஐந் தாய்ப்பதம்ஆ றார்ந்து. 1

1215 நீர்க்கிசைந்த நாம நிலைமூன்று கொண்டபெயர்
போர்க்கிசைந்த தென்றறியாப் புன்னெஞ்சே – நீர்க்கிசைந்தே
ஒன்றுஒன்றுஒன்று ஒன்றுஒன்றுஒன்று ஒன்றுஒன்று தில்லைமணி
மன்றொன்று வானை மகிழ்ந்து. 2

1216 ஈற்றில்ஒன்றாய் மற்றை இயல்வருக்க மாகியபேர்
ஏற்ற பறவை இருமைக்கும் – சாற்றுவமை
அன்றே தலைமகட்கா அம்பலவர் தம்பால்ஏ(கு)
என்றே எனக்குநினைக் கும். 3

1217 கைத்தலைமே லிட்டலையிற் கண்ணுடையான் கால்மலர்க்குக்
கைத்தலைமே லிட்டலையிற் கண்ணீர்கொண் – டுய்த்தலைமேல்
காணாயேல் உண்மைக் கதிநிலையைக் கைக்கணியாக்
காணாயே நெஞ்சே களித்து. 4

Koviloor Digital Library

1218 கல்லோ மணலோ கனியோ கரும்போஎன்(று)
எல்லோமும் இங்கே இருக்கின்றோம் – சொல்லோம்
அதுவாய் அதன்பொருளாய் அப்பாலாய் யார்க்கும்
பொதுவாய் நடிக்கின்ற போது. 5

1219 அதுபார் அதிலே அடைந்துவதி மற்றாங்(கு)
அதில்ஏழை யைப்புரமெய் யன்பால் – அதிலே
நலமே வதிலேநின் னாவூர் திருவம்
பலமேவக் காட்டும் பரிசு. 6

1220 நம்பார் வதிபாக னம்புரத்தில் நின்றுவந்தோன்
அம்பாரத் தென்கிழக்கே அம்பலத்தான் – வெம்பாது
பார்த்தால் அளிப்பான் தெரியுஞ் சிதம்பரம்நீ
பார்த்தாய்இப் பாட்டின் பரிசு. 7

1221 நடிப்பார் வதிதில்லை நற்கோ புரத்தின்
அடிப்பாவை யும் வடக்கே ஆர்ந்து – கொடிப்பாய
நின்று வளர்மலைபோல் நெஞ்சேபார்த் தால்தெரியும்
இன்றெவ்விடத் தென்னில்இப்பாட் டில். 8

1222 பூமிபொருந்து புரத்தே நமதுசிவ
காமிதனை வேட்டுக் கலந்தமர்ந்தான் – நேமி
அளித்தான்மால் கண்மலருக் கானந்தக் கூத்தில்
களித்தான் அவன்றான் களித்து. 9

திருச்சிற்றம்பலம்

87. கைம்மாறின்மை

அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

1223 கடையேன் புரிந்த குற்றமெலாம் கருதா தென்னுட் கலந்துகொண்டு
தடையே முழுதும் தவிர்த்தருளித் தனித்த ஞான அமுதளித்துப்
புடையே இருத்தி அருட்சித்திப் பூவை தனையும் புணர்த்திஅருட்
கொடையே கொடுத்தாய் நின்தனக்குக் கைம்மா றேது கொடுப்பேனே. 1

1224 கடுத்த மனத்தை அடக்கிஒரு கணமும் இருக்க மாட்டாதே
படுத்த சிறியேன் குற்றமெலாம் பொறுத்தென் அறிவைப் பலநாளும்
தடுத்த தடையைத் தவிர்த்தென்றும் சாகா நலஞ்செய் தனிஅமுதம்
கொடுத்த குருவே நின்தனக்குக் கைம்மா றேது கொடுப்பேனே. 2

Koviloor Digital Library

1225 மருவும் உலகம் மதித்திடவே மரண பயந்தீர்த் தெழில்உறுநல்
உருவும் பொருள்ஒன் றெனத்தெளிந்த உணர்வும் என்றும் உலவாத
திருவும் பரம சித்திஎனும் சிறப்பும் இயற்கைச் சிவம்எனும்ஓர்
குருவும் கொடுத்தாய் நின்தனக்குக் கைம்மா றேது கொடுப்பேனே. 3

1226 சேட்டித் துலகச் சிறுநடையில் பல்கால் புகுந்து திரிந்துமயல்
நீட்டித் தலைந்த மனத்தைஒரு நிமிடத் தடக்கிச் சன்மார்க்கக்
கோட்டிக் கியன்ற குணங்களெலாம் கூடப் புரிந்து மெய்ந்நிலையைக்
காட்டிக் கொடுத்தாய் நின்தனக்குக் கைம்மா றேது கொடுப்பேனே. 4

1227 தோலைக் கருதித் தினந்தோறும் சுழன்று சுழன்று மயங்கும்அந்த
வேலைக் கிசைந்த மனத்தைமுற்றும் அடக்கிஞான மெய்ந்நெறியில்
கோலைத் தொலைத்துக் கண்விளக்கம் கொடுத்து மேலும் வேகாத
காலைக் கொடுத்தாய் நின்தனக்குக் கைம்மா றேது கொடுப்பேனே. 5

1228 பட்டிப் பகட்டின் ஊர்திரிந்து பணமே நிலமே பாவையரே
தெட்டிற் கடுத்த பொய்ஒழுக்கச் செயலே என்று திரிந்துலகில்
ஒட்டிக் குதித்துச் சிறுவியைாட் டுஞற்றி யோடும் மனக்குரங்கைக்
கட்டிக் கொடுத்தாய் நின்தனக்குக் கைம்மா றேது கொடுப்பேனே. 6

1229 மதியைக் கெடுத்து மரணம்எனும் வழக்கைப் பெருக்கி இடர்ப்படும்ஓர்
விதியைக் குறித்த சமயநெறி மேவா தென்னைத் தடுத்தருளாம்
பதியைக் கருதிச் சன்மார்க்கப் பயன்பெற் றிடஎன் உட்கலந்தோர்
கதியைக் கொடுத்தாய் நின்தனக்குக் கைம்மா றேது கொடுப்பேனே.
7

1230 தருண நிதியே என்னொருமைத் தாயே என்னைத் தடுத்தாண்டு
வருண நிறைவில் சன்மார்க்கம் மருவப் புரிந்த வாழ்வேநல்
அருண ஒளியே எனச்சிறிதே அழைத்தேன் அழைக்கும் முன்வந்தே
கருணை கொடுத்தாய் நின்தனக்குக் கைம்மா றேது கொடுப்பேனே.
8

1231 பொற்பங் கயத்தின் புதுநறவும் சுத்தசலமும் புகல்கின்ற
வெற்பந் தரமா மதிமதுவும் விளங்கு பசுவின் தீம்பாலும்
நற்பஞ் சகமும் ஒன்றாகக் கலந்து மரண நவைதீர்க்கும்
கற்பங் கொடுத்தாய் நின்தனக்குக் கைம்மா றேது கொடுப்பேனே. 9

1232 புலையைத் தவிர்த்தென் குற்றமெலாம் பொறுத்து ஞான பூரணமா
நிலையைத் தெரித்துச் சன்மார்க்க நீதிப் பொதுவில் நிருத்தமிடும்
மலையைக் காட்டி அதனடியில் வயங்க இருத்திச் சாகாத
கலையைக் கொடுத்தாய் நின்தனக்குக் கைம்மா றேது கொடுப்பேனே.

Koviloor Digital Library

1233 அருணா டறியா மனக்குரங்கை அடக்கத் தெரியா ததனொடுசேர்ந்
திருணா டனைத்தும் சுழன்றுசுழன் றிளைத்துக் களைத்தேன் எனக்கந்தோ
தெருணா டுலகில் மரணம்உறாத் திறந்தந் தழியாத் திருஅளித்த
கருணா நிதியே நின்தனக்குக் கைம்மா றேது கொடுப்பேனே. 11

1234 மண்ணுள் மயங்கிச் சுழன்றோடு மனத்தை அடக்கத் தெரியாதே
பெண்ணுள் மயலைப் பெருங்கடல்போல் பெருக்கித் திரிந்தேன் பேயேனை
விண்ணுள் மணிபோன் றருட்சோதி விளைவித் தாண்ட என்னுடைய
கண்ணுள் மணியே நின்தனக்குக் கைம்மா றேது கொடுப்பேனே. 12

1235 புலந்த மனத்தை அடக்கிஒரு போது நினைக்க மாட்டாதே
அலந்த சிறியேன் பிழைபொறுத்தே அருளா ரமுதம் அளித்திங்கே
உலந்த உடம்பை அழியாத உடம்பாப் புரிந்தென் உயிரினுளே
கலந்த பதியே நின்தனக்குக் கைம்மா றேது கொடுப்பேனே. 13

1236 தனியே கிடந்து மனங்கலங்கித் தளர்ந்து தளர்ந்து சகத்தினிடை
இனியே துறுமோ என்செய்வேன் எந்தாய் எனது பிழைகுறித்து
முனியேல் எனநான் மொழிவதற்கு முன்னே கருணை அமுதளித்த
கனியே கரும்பே நின்தனக்குக் கைம்மா றேது கொடுப்பேனே. 14

1237 பெண்ணே பொருளே எனச்சுழன்ற பேதை மனத்தால் பெரிதுழன்று
புண்ணே எனும்இப் புலைஉடம்பில் புகுந்து திரிந்த புலையேற்குத்
தண்ணேர் மதியின் அமுதளித்துச் சாகா வரந்தந் தாட்கொண்ட
கண்ணே மணியே நின்தனக்குக் கைம்மா றேது கொடுப்பேனே. 15

1238 பொருத்திக் கொடுத்த புலைஉடம்பில் புகுந்தேன் புணைத்தற் கிணங்காத
எருத்தில் திரிந்தேன் செய்பிழையை எண்ணா தந்தோ எனைமுற்றும்
திருத்திப் புனித அமுதளித்துச் சித்தி நிலைமேல் சேர்வித்தென்
கருத்தில் கலந்தோய் நின்தனக்குக் கைம்மா றேது கொடுப்பேனே. 16

1239 பெண்ணுக் கிசைந்தே பலமுகத்தில் பேய்போல் சுழன்ற பேதைமனத்
தெண்ணுக் கிசைந்து துயர்க்கடலாழ்ந் திருந்தேன் தன்னை எடுத்தருளி
விண்ணுக் கிசைந்த கதிர்போல்என் விவேகத் திசைந்து மேலும்என்தன்
கண்ணுக் கிசைந்தோய் நின்தனக்குக் கைம்மா றேது கொடுப்பேனே.
17

1240 மாட்சி அளிக்கும் சன்மார்க்க மரபில் மனத்தைச் செலுத்துதற்கோர்
சூழ்ச்சி அறியா துழன்றேனைச் சூழ்ச்சி அறிவித் தருளரசின்
ஆட்சி அடைவித் தருட்சோதி அமுதம் அளித்தே ஆனந்தக்
காட்சி கொடுத்தாய் நின்தனக்குக் கைம்மா றேது கொடுப்பேனே. 18

Koviloor Digital Library

1241 பொய்யிற் கிடைத்த மனம்போன போக்கில் சுழன்றே பொய்உலகில்
வெய்யிற் கிடைத்த புழுப்போல வெதும்பிக் கிடந்த வெறியேற்கு
மெய்யிற் கிடைத்தே சித்திஎலாம் விளைவித் திடுமா மணியாய்என்
கையிற் கிடைத்தோய் நின்தனக்குக் கைம்மா றேது கொடுப்பேனே. 19

1242 போதல் ஒழியா மனக்குரங்கின் போக்கை அடக்கத் தெரியாது
நோதல் புரிந்த சிறியேனுக் கிரங்கிக் கருணை நோக்களித்துச்
சாதல் எனும்ஓர் சங்கடத்தைத் தவிர்த்தென் உயிரில் தான்கலந்த
காதல் அரசே நின்தனக்குக் கைம்மா றேது கொடுப்பேனே. 20

திருச்சிற்றம்பலம்

88. பாமாலை ஏற்றல்

நேரிசை வெண்பா

திருச்சிற்றம்பலம்

1243 நான்புனைந்த சொன்மாலை நன்மாலை என்றருளித்
தான்புனைந்தான் ஞான சபைத்தலைவன் – தேன்புனைந்த
சொல்லாள் சிவகாம சுந்தரியைத் தோள்புணர்ந்த
நல்லான்தன் தாட்கே நயந்து. 1

1244 சொல்லுகின்ற என்சிறுவாய்ச் சொன்மாலை அத்தனையும்
வெல்லுகின்ற தும்பைஎன்றே மேல்அணிந்தான் – வல்லிசிவ
காம சவுந்தரிக்குக் கண்ணனையான் ஞான சபைச்
சேமநட ராஜன் தெரிந்து. 2

1245 ஏதாகு மோஎனநான் எண்ணி இசைத்தஎலாம்
வேதாக மம்என்றே மேல்அணிந்தான் – பாதார
விந்தம் எனதுசிர மேல்அமர்த்தி மெய்அளித்த
எந்தைநட ராஜன் இசைந்து. 3

1246 இன்னுரைஅன் றென்றுலகம் எல்லாம் அறிந்திருக்க
என்னுரையும் பொன்னுரைஎன் றேஅணிந்தான் – தன்னுரைக்கு
நேர்என்றான் நீடுலகில் நின்போல் உரைக்கவல்லார்
ஆர்என்றான் அம்பலவன் ஆய்ந்து. 4

1247 என்பாட்டுக் கெண்ணாத தெண்ணி இசைத்தேன்என்
தன்பாட்டைச் சத்தியமாத் தான்புனைந்தான் – முன்பாட்டுக்
காலையிலே வந்து கருணைஅளித் தேதருமச்
சாலையிலே வாஎன்றான் தான். 5

Koviloor Digital Library

1248 என்னே அதிசயம்ஈ திவ்வுலகீர் என்னுரையைப்
பொன்னே எனமேற் புனைந்து கொண்டான் – தன்னேரில்
நல்ஆர ணங்கள்எலாம் நாணியவே எல்லாஞ்செய்
வல்லான் திருக்கருணை வாய்ப்பு. 6

1249 முன்பின்அறி யாது மொழிந்தமொழி மாலைஎலாம்
அன்பின் இசைந் தந்தோ அணிந்துகொண்டான் – என்பருவம்
பாராது வந்தென் பருவரல்எல் லாம்தவிர்த்துத்
தாரா வரங்களெலாம் தந்து. 7

1250 பொன்னொப்ப தாம்ஒருநீ போற்றியசொன் மாலைஎன்றே
என்னப்பன் என்சொல் இசைந்தணிந்தான் – தன்ஒப்பில்
வல்லான் இசைந்ததுவே மாமாலை அற்புதம்ஈ
தெல்லாம் திருவருட்சீ ரே. 8

1251 பின்முன்அறி யேன்நான் பிதற்றியசொன் மாலைஎலாம்
தன்முன்அரங் கேற்றெனவே தான்உரைத்தான் – என்முன்
இருந்தான்என் னுள்ளே இருக்கின்றான் ஞான
மருந்தான்சிற் றம்பலத்தான் வாய்ந்து. 9

1252 நீயேஎன் பிள்ளைஇங்கு நின்பாட்டில் குற்றமொன்றும்
ஆயேம்என் றந்தோ அணிந்துகொண்டான் – நாயேன்செய்
புண்ணியம்இவ் வானிற் புவியின் மிகப்பெரிதால்
எண்ணியஎல் லாம்புரிகின் றேன். 10

1253 எண்ணுகின்றேன் எண்ணுதொறென் எண்ணமெலாம் தித்திக்க
நண்ணுகின்ற தென்புகல்வேன் நானிலத்தீர் – உண்ணுகின்ற
உள்ளமுதோ நான்தான் உஞற்றுதவத் தாற்கிடைத்த
தெள்ளமுதோ அம்பலவன் சீர். 11

1254 ஆக்கி அளித்தல்முத லாந்தொழில்ஓர் ஐந்தினையும்
தேக்கி அமுதொருநீ செய்என்றான் – தூக்கி
எடுத்தான் அணைத்தான் இறவாத தேகம்
கொடுத்தான்சிற் றம்பலத்தென் கோ. 12

திருச்சிற்றம்பலம்

Koviloor Digital Library

89. திருஅருட் கொடை

கொச்சகக் கலிப்பா

திருச்சிற்றம்பலம்

1255 சிருட்டிமுதல் ஐந்தொழில்நான் செய்யஎனக் கருள்புரிந்தாய்
பொருட்டிகழ்நின் பெருங்கருணைப் புனிதஅமு துவந்தளித்தாய்
தெருட்டிகழ்நின் அடியவர்தம் திருச்சபையின் நடுஇருத்தித்
தெருட்டிஎனை வளர்க்கின்றாய் சிற்சபையில் நடிக்கின்றாய். 1

1256 படைத்தல்முதல் ஐந்தொழில்செய் பணிஎனக்கே பணித்திட்டாய்
உடைத்தனிப்பே ரருட்ஜோதி ஓங்கியதெள் ளமுதளித்தாய்
கொடைத்தனிப்போ கங்கொடுத்தாய் நின்அடியார் குழுநடுவே
திடத்தமர்த்தி வளர்க்கின்றாய் சிற்சபையில் நடிக்கின்றாய். 2

1257 அயன்முதலோர் ஐவர்செயும் தொழில்எனக்கே அளித்திட்டாய்
உயர்வுறுபே ரருட்ஜோதி திருவமுதம் உவந்தளித்தாய்
மயர்வறுநின் அடியவர்தம் சபைநடுவே வைத்தருளிச்
செயமுறவே வளர்க்கின்றாய் சிற்சபையில் நடிக்கின்றாய். 3

1258 ஐவர்செயும் தொழில்எனக்கே அளித்தாய்நின் அருளமுதென்
கைவரச்செய் துண்ணுவித்தாய் கங்கணம்என் கரத்தணிந்தாய்
சைவர்எனும் நின்னடியார் சபைநடுவே வைத்தருளித்
தெய்வமென்று வளர்க்கின்றாய் சிற்சபையில் நடிக்கின்றாய். 4

1259 முத்தொழிலோ ஐந்தொழிலும் முன்னிமகிழ்ந் தெனக்களித்தாய்
புத்தமுதம் உண்ணுவித்தோர் பொன்னணிஎன் கரத்தணிந்தாய்
சித்தர்எனும் நின்னடியார் திருச்சபையில் நடுஇருத்திச்
சித்துருவின் வளர்க்கின்றாய் சிற்சபையில் நடிக்கின்றாய். 5

1260 ஐந்தொழில்நான் செயப்பணித்தாய் அருளமுதம் உணவளித்தாய்
வெந்தொழில்தீர்ந் தோங்கியநின் மெய்யடியார் சபைநடுவே
எந்தைஉனைப் பாடிமகிழ்ந் தின்புறவே வைத்தருளிச்
செந்தமிழின் வளர்க்கின்றாய் சிற்சபையில் நடிக்கின்றாய். 6

1261 நான்முகன்நா ரணன் முதலாம் ஐவர்தொழில் நயந்தளித்தாய்
மேன்மைபெறும் அருட்சோதித்திருவமுதும் வியந்தளித்தாய்
பான்மையுறு நின்னடியார் சபைநடுவே பதித்தருளித்
தேன்மையொடு வளர்க்கின்றாய் சிற்சபையில் நடிக்கின்றாய். 7

Koviloor Digital Library

1262 நாயெனவே திரிந்தேனை வலிந்தழைத்து நான்முகன்மால்
தூயபெருந் தேவர்செயும் தொழில்புரியென் றமுதளித்தாய்
நாயகநின் னடியர்சபை நடுவிருக்க வைத்தருளிச்
சேயெனவே வளர்க்கின்றாய் சிற்சபையில் நடிக்கின்றாய். 8

1263 புல்வழங்கு புழுஅதனில் சிறியேனைப் புணர்ந்தருளிச்
சொல்வழங்கு தொழில்ஐந்தும் துணிந்துகொடுத் தமுதளித்தாய்
கல்விபெறு நின்னடியர் கழகநடு வைத்தென்னைச்
செல்வமொடு வளர்க்கின்றாய் சிற்சபையில் நடிக்கின்றாய். 9

1264 தெருமனைதோ றலைந்தேனை அலையாமே சேர்த்தருளி
அருளொளியால் ஐந்தொழிலும் செயப்பணித்தே அமுதளித்து
மருவியநின் மெய்யடியார் சபைநடுவே வைத்தழியாத்
திருவளித்து வளர்க்கின்றாய் சிற்சபையில் நடிக்கின்றாய். 10

திருச்சிற்றம்பலம்

90. உற்றது உரைத்தல்

வேண்டுகோள்

அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

1265 துனிநாள் அனைத்தும் தொலைத்துவிட்டேன் தூக்கம் தவிர்த்தேன் சுகம்பலிக்கும்
கனிநாள் இதுவே என்றறிந்தேன் கருத்து மலர்ந்தேன் களிப்புற்றேன்
தனிநா யகனே கனகசபைத் தலைவா ஞான சபாபதியே
இனிநான் இறையும் கலக்கமுறேன் இளைக்க மாட்டேன் எனக்கருளே. 1

1266 அருளும் பொருளும் யான்பெறவே அடுத்த தருணம் இதுஎன்றே
தெருளும் படிநின் அருள்உணர்த்தத் தெரிந்தேன் துன்பத் திகைப்பொழிந்தேன்
மருளும் மனந்தான் என்னுடைய வசத்தே நின்று வயங்கியதால்
இருளும் தொலைந்த தினிச்சிறிதும் இளைக்க மாட்டேன் எனக்கருளே. 2

1267 அருளே உணர்த்த அறிந்துகொண்டேன் அடுத்த தருணம் இதுஎன்றே
இருளே தொலைந்த திடர்அனைத்தும் எனைவிட் டகன்றே ஒழிந்தனவால்
தெருளே சிற்றம் பலத்தாடும் சிவமே எல்லாம் செய்யவல்ல
பொருளே இனிநான் வீண்போது போக்க மாட்டேன் கண்டாயே. 3

1268 கண்டே களிக்கும் பின்பாட்டுக் காலை இதுஎன் றருள்உணர்த்தக்
கொண்டே அறிந்து கொண்டேன்நல் குறிகள் பலவுங் கூடுகின்ற
தொண்டே புரிவார்க் கருளும்அருட் சோதிக் கருணைப் பெருமானே
உண்டேன் அமுதம் உண்கின்றேன் உண்பேன் துன்பை ஒழித்தேனே. 4

Koviloor Digital Library

1269 ஒழித்தேன் அவலம் அச்சம்எலாம் ஓடத் துறந்தேன் உறுகண்எலாம்
கழித்தேன் மரணக் களைப்பற்றேன் களித்தேன் பிறவிக் கடல்கடந்தேன்
பழித்தேன் சிற்றம் பலம்என்னாப் பாட்டை மறந்தேன் பரம்பரத்தே
விழித்தேன் கருத்தின் படிஎல்லாம் விளையா டுதற்கு விரைந்தேனே. 5

1270 விரைந்து விரைந்து படிகடந்தேன் மேற்பால் அமுதம் வியந்துண்டேன்
கரைந்து கரைந்து மனம்உருகக் கண்ணீர் பெருகக் கருத்தலர்ந்தே
வரைந்து ஞான மணம்பொங்க மணிமன் றரசைக் கண்டுகொண்டேன்
திரைந்து நெகிழ்ந்த தோலுடம்பும் செழும்பொன் உடம்பாய்த் திகழ்ந்தேனே. 6

1271 தேனே கன்னல் செழும்பாகே என்ன மிகவும் தித்தித்தென்
ஊனே புகுந்தென் உளத்தில்அமர்ந் துயிரில் கலந்த ஒருபொருளை
வானே நிறைந்த பெருங்கருணை வாழ்வை மணிமன் றுடையானை
நானே பாடிக் களிக்கின்றேன் நாட்டார் வாழ்த்த நானிலத்தே. 7

1272 நிலத்தே அடைந்தஇடர் அனைத்தும் நிமிடத் தொழித்தே நிலைபெற்றேன்
வலத்தே அழியா வரம்பெற்றேன் மணிமன் றேத்தும் வாழ்வடைந்தேன்
குலத்தே சமயக் குழியிடத்தே விழுந்திவ் வுலகம் குமையாதே
நலத்தே சுத்த சன்மார்க்கம் நாட்டா நின்றேன் நாட்டகத்தே. 8

1273 அகத்தே கறுத்துப் புறத்துவெளுத் திருந்த உலகர்அனைவரையும்
சகத்தே திருத்திச் சன்மார்க்க சங்கத் தடைவித் திடஅவரும்
இகத்தே பரத்தைப் பெற்றுமகிழ்ந் திடுதற் கென்றே எனைஇந்த
உகத்தே இறைவன் வருவிக்க உற்றேன் அருளைப் பெற்றேனே. 9

1274 பெற்றேன் என்றும் இறவாமை பேதம் தவிர்ந்தே இறைவன்எனை
உற்றே கலந்தான் நானவனை உற்றே கலந்தேன் ஒன்றானேம்
எற்றே அடியேன் செய்ததவம் யாரே புரிந்தார் இன்னமுதம்
துற்றே உலகீர் நீவிர்எலாம் வாழ்க வாழ்க துனிஅற்றே. 10

திருச்சிற்றம்பலம்

91. அனுபவ சித்தி

கட்டளைக் கலித்துறை

திருச்சிற்றம்பலம்

1275 அப்பா எனக்கெய்ப்பில் வைப்பாய் இருக்கின்ற ஆரமுதே
இப்பாரில் என்தன்னை நீயே வருவித் திசைவுடனே
தப்பாத தந்திரம் மந்திரம் யாவையும் தந்துலகில்
வெப்பா னதுதவிர்த் தைந்தொழில் செய்ய விதித்தனையே. 1

Koviloor Digital Library

1276 விதித்தனை என்னைநின் தன்மக னாக விதித்துளத்தே
பதித்தனை என்னுட் பதிந்தனை சிற்றம் பலநடமும்
உதித்தொளிர் பொன்னம் பலநட மும்ஒருங் கேஎனக்கே
கதித்தழி யாமையும் இன்பமும் கைவரக் காட்டினையே. 2

1277 காட்டினை ஞான அமுதளித் தாய்நற் கனகசபை
ஆட்டினை என்பக்கம் ஆக்கினை மெய்ப்பொருள் அன்றுவந்து
நீட்டினை என்றும் அழியா வரந்தந்து நின்சபையில்
கூட்டினை நான்முனம் செய்தவம் யாதது கூறுகவே. 3

1278 கூறுகந் தாய்சிவ காமக் கொடியைக் கொடியில்வெள்ளை
ஏறுகந் தாய்என்னை ஈன்றுகந் தாய்மெய் இலங்குதிரு
நீறுகந் தாய்உல கெல்லாம் தழைக்க நிமிர்சடைமேல்
ஆறுகந் தாய்மன்றில் ஆட்டுகந் தாய்என்னை ஆண்டவனே. 4

1279 ஆண்டவ னேதிரு அம்பலத் தேஅரு ளால் இயற்றும்
தாண்டவ னேஎனைத் தந்தவ னேமுற்றுந் தந்தவனே
நீண்டவ னேஉயிர்க்கெல்லாம் பொதுவினில் நின்றவனே
வேண்ட அனேக வரங்கொடுத் தாட்கொண்ட மேலவனே. 5

1280 மேலவ னேதிரு அம்பலத் தாடல் விளக்கும்மலர்க்
காலவ னேகனல் கையவ னேநுதற் கண்ணவனே
மாலவன் ஏத்தும் சிவகாம சுந்தர வல்லியைஓர்
பாலவ னேஎனைப் பாலகன் ஆக்கிய பண்பினனே. 6

1281 வாட்டமெல் லாந்தவிர்ந் தேன்அருட் பேரொளி வாய்க்கப்பெற்றேன்
கூட்டமெல் லாம்புகழ் அம்பல வாணரைக் கூடப்பெற்றேன்
தேட்டமெல் லாம்வல்ல சித்திபெற் றேன்இச் செகதலத்தே
ஆட்டமெல் லாம்விளை யாடுகின் றேன்எனக் கார்சரியே. 7

1282 நான்செய்த புண்ணியம் யார்செய் தனர்இந்த நானிலத்தே
வான்செய்த தேவரும் காணாத காட்சி மகிழ்ந்துகண்டேன்
ஊன்செய்த மெய்யும் உயிரும் உணர்வும் ஒளிமயமாக்
கோன்செய வேபெற்றுக் கொண்டேன்உண் டேன்அருட்கோன்அமுதே. 8

1283 எனையான் மதித்துப் புகல்கின்ற தன்றிஃ தெந்தைபிரான்
தனையான் மதித்திங்குப் பெற்றநல் வாழ்வது சாற்றுகின்றேன்
வினையான் மெலிந்த மெலிவைஎல் லாம்விரைந் தேதவிர்த்துத்
தனையான் புணர்ந்திடச் சாகா வரத்தையும் தந்தனனே. 9

Koviloor Digital Library

1284 சிற்றம் பலத்தைத் தெரிந்துகொண் டேன்எம் சிவன்அருளால்
குற்றம் பலவும் தவிர்ந்துநின் றேன்எண் குணக்குன்றிலே
வெற்றம்பல் செய்தவர் எல்லாம் விரைந்து விரைந்துவந்தே
நற்றம் பலம்தரு வாய்என்கின் றார் இந்த நானிலத்தே. 10

1285 ஒன்றுகண் டேன் திருஅம்பலத் தேஒளி ஓங்குகின்ற
நன்றுகண் டேன்உல கெல்லாம் தழைக்க நடம் புரிதல்
இன்றுகண் டேன் என்றும் சாகாத வரத்தை எனக்கருள
மன்றுகண் டார்க்கிந்த வாழ்வுள தென்று மகிழ்ந்தனனே. 11

திருச்சிற்றம்பலம்

92. இன்பத் திறன்

எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

1286 உலகுபுகழ் திருவமுதம் திருச்சிற்றம் பலத்தே
உடையவர்இன் றுதவினர்நான் உண்டுகுறை தீர்ந்தேன்
இலகுசிவ போகவடி வாகிமகிழ் கின்றேன்
இளைப்பறியேன் தவிப்பறியேன் இடர்செய்பசி அறியேன்
விலகல்இலாத் திருவனையீர் நீவிர்எலாம் பொசித்தே
விரைந்துவம்மின் அம்பலத்தே விளங்குதிருக் கூத்தின்
அலகறியாத் திறம்பாடி ஆடுதும்நாம் இதுவே
அருள்அடையும் நெறிஎனவே தாகமம்ஆர்ப் பனவே. 1

1287 மாதவத்தால் நான்பெற்ற வானமுதே எனது
வாழ்வேஎன் கண்ணமர்ந்த மணியேஎன் மகிழ்வே
போதவத்தால் கழித்தேனை வலிந்துகலந் தாண்ட
பொன்னேபொன் னம்பலத்தே புனிதநடத் தரசே
தீதவத்தைப் பிறப்பிதுவே சிவமாகும் பிறப்பாச்
செய்வித்தென் அவத்தையெலாம் தீர்த்தபெரும் பொருளே
பூதலத்தே அடிச்சிறியேன் நினதுதிரு வடிக்கே
புகழ்மாலை சூட்டுகின்றேன் புனைந்துகலந் தருளே. 2

1288 அளந்திடுவே தாகமத்தின் அடியும்நடு முடியும்
அப்புறமும் அப்பாலும் அதன்மேலும் விளங்கி
வளர்ந்திடுசிற் றம்பலத்தே வயங்கியபே ரொளியே
மாற்றறியாப் பொன்னேஎன் மன்னேகண் மணியே
தளர்ந்தஎனை அக்கணத்தே தளர்வொழித்தா னந்தம்
தந்தபெருந் தகையேஎன் தனித்ததனித் துணைவா
உளந்தருசம் மதமான பணிஇட்டாய் எனக்கே
உன்பணியே பணியல்லால் என்பணிவே றிலையே. 3

Koviloor Digital Library

1289 நாடுகலந் தாள்கின்றோர் எல்லாரும் வியப்ப
நண்ணிஎனை மாலைஇட்ட நாயகனே நாட்டில்
ஈடுகரைந் திடற்கரிதாம் திருச்சிற்றம் பலத்தே
இன்பநடம் புரிகின்ற இறையவனே எனைநீ
பாடுகஎன் னோடுகலந் தாடுகஎன் றெனக்கே
பணிஇட்டாய் நான்செய்பெரும் பாக்கியம்என் றுவந்தேன்
கோடுதவ றாதுனைநான் பாடுதற்கிங் கேற்ற
குணப்பொருளும் இலக்கியமும் கொடுத்துமகிழ்ந் தருளே. 4

1290 நண்புடையாய் என்னுடைய நாயகனே எனது
நல்உறவே சிற்சபையில் நடம்புரியும் தலைவா
எண்புடையா மறைமுடிக்கும் எட்டாநின் புகழை
யாதறிவேன் பாடுகஎன் றெனக்கேவல் இட்டாய்
பண்புடைநின் மெய்யன்பர் பாடியபே ரன்பில்
பழுத்தபழம் பாட்டில்ஒரு பாட்டும்அறி யேனே
தண்புடைநன் மொழித்திரளும் சுவைப்பொருளும் அவைக்கே
தக்கஇயல் இலக்கியமும் தந்தருள்வாய் எனக்கே. 5

1291 பணிந்தடங்கும் மனத்தவர்பால் பரிந்தமரும் பதியே
பாடுகின்றோர் உள்ளகத்தே கூடுகின்ற குருவே
கணிந்தமறை பலகோடி ஆகமம்பல் கோடி
கடவுள்நின தருட்புகழைக் கணிப்பதற்குப் பலகால்
துணிந்துதுணிந் தெழுந்தெழுந்து தொடர்ந்துதொடர்ந் தடிகள்
சுமந்துசுமந் திளைத்திளைத்துச் சொல்லியவல் லனவென்
றணிந்தமொழி மாற்றிவலி தணிந்தஎன்றால் அந்தோ
அடியேன்நின் புகழ்உரைக்கல் ஆவதுவோ அறிந்தே. 6

1292 விதிப்பவர்கள் பலகோடி திதிப்பவர் பல்கோடி
மேலவர்கள் ஒருகோடி விரைந்துவிரைந் துனையே
மதிப்பவர்கள் ஆகிஅவர் மதியாலே பலகால்
மதித்துமதித் தவர்மதிபெண் மதியாகி அலந்தே
துதிப்பதுவே நலம்எனக் கொண் டிற்றைவரை ஏற்ற
சொற்பொருள்கள் காணாதே சுழல்கின்றார் என்றால்
குதிப்பொழியா மனச்சிறிய குரங்கொடுழல் கின்றேன்
குறித்துரைப்பேன் என்னஉளம் கூசுகின்ற தரசே. 7

1293 ஒளியாகி உள்ஒளியாய் உள்ஒளிக்குள் ஒளியாய்
ஒளிஒளியின் ஒளியாய்அவ் ஒளிக்குளும்ஓர் ஒளியாய்
வெளியாகி வெளிவெளியாய் வெளியிடைமேல் வெளியாய்
மேல்வெளிமேல் பெருவெளியாய்ப் பெருவெளிக்கோர் வெளியாய்

Koviloor Digital Library

அளியாகி அதுஆகி அதுவும்அல்லா தாகி
அப்பாலாய் அப்பாலும் அல்லதுவாய் நிறைவாம்
தளியாகி எல்லாமாய் விளங்குகின்ற ஞான
சபைத்தலைவா நின்இயலைச் சாற்றுவதெவ் வணமே. 8

1294 வாக்கொழிந்து மனம்ஒழிந்து மதிஒழிந்து மதியின்
வாதனையும் ஒழிந்தறிவாய் வயங்கிநின்ற இடத்தும்
போக்கொழிந்தும் வரவொழிந்தும் பூரணமாய் அதுவும்
போனபொழு துள்ளபடி புகலுவதெப் படியோ
நீக்கொழிந்த நிறைவேமெய்ந் நிலையேஎன் னுடைய
நேயமே ஆனந்த நிருத்தமிடும் பதியே
ஏக்கொழிந்தார் உளத்திருக்கும் இறையேஎன் குருவே
எல்லாமாய் அல்லதுமாய் இலங்கியமெய்ப் பொருளே. 9

1295 என்இயலே யான்அறியேன் இவ்வுலகின் இயல்ஓர்
எள்அளவும் தான்அறியேன் எல்லாமும் உடையோய்
நின்இயலை அறிவேனோ அறிந்தவனே போல
நிகழ்த்துகின்றேன் பிள்ளைஎன நிலைப்பெயர்பெற் றிருந்தேன்
தன்இயலாம் தனிஞான சபைத்தலைமைப் பதியே
சத்தியனே நித்தியனே தயாநிதியே உலகம்
பின்இயல்மா னிடப்பிள்ளை பேச்சினும்ஓர் பறவைப்
பிறப்பின்உறும் கிளிப்பிள்ளைப் பேச்சுவக்கின் றதுவே. 10

திருச்சிற்றம்பலம்

93. சிவயோக நிலை

கதவைத் திறத்தல்

நேரிசை வெண்பா

திருச்சிற்றம்பலம்

1296 மதிமண்ட லத்தமுதம் வாயார உண்டே
பதிமண்ட லத்தரசு பண்ண – நிதிய
நவநேய மாக்கும் நடராஜ னேயெஞ்
சிவனே கதவைத் திற. 1

1297 இந்தார் அருளமுதம் யானருந்தல் வேண்டுமிங்கே
நந்தா மணிவிளக்கே ஞானசபை – எந்தாயே
கோவே எனது குருவே எனையாண்ட
தேவே கதவைத் திற. 2

Koviloor Digital Library

1298 சாகா அருளமுதம் தான்அருந்தி நான்களிக்க
நாகா திபர்சூழ் நடராஜா – ஏகா
பவனே பரனே பராபரனே எங்கள்
சிவனே கதவைத் திற. 3

1299 அருளோங்கு தண்ணமுதம் அன்பால் அருந்தி
மருள்நீங்கி நான்களித்து வாழப் – பொருளாந்
தவநேயர் போற்றும் தயாநிதியே எங்கள்
சிவனே கதவைத் திற. 4

1300 வானோர்க் கரிதெனவே மாமறைகள் சாற்றுகின்ற
ஞானோ தயஅமுதம் நானருந்த – ஆனாத்
திறப்பா வலர்போற்றும் சிற்றம் பலவா
சிறப்பா கதவைத் திற. 5

1301 எல்லாமும் வல்லசித்தென் றெல்லா மறைகளுஞ்சொல்
நல்லார் அமுதமது நான் அருந்த – நல்லார்க்கு
நல்வாழ் வளிக்கும் நடராயா மன்றோங்கு
செல்வா கதவைத் திற. 6

1302 ஏழ்நிலைக்கு மேற்பால் இருக்கின்ற தண்ணமுதம்
வாழ்நிலைக்க நான்உண்டு மாண்புறவே – கேழ்நிலைக்க
ஆவாஎன் றென்னைஉவந் தாண்டதிரு அம்பலமா
தேவா கதவைத் திற. 7

1303 ஈன உலகத் திடர்நீங்கி இன்புறவே
ஞான அமுதமது நான் அருந்த – ஞான
உருவே உணர்வே ஒளியே வெளியே
திருவே கதவைத் திற. 8

1304 திரையோ தசத்தே திகழ்கின்ற என்றே
வரையோது தண்ணமுதம் வாய்ப்ப – உரைஓது
வானேஎம் மானேபெம் மானே மணிமன்றில்
தேனே கதவைத் திற. 9

1305 ஜோதிமலை மேல்வீட்டில் தூய திருஅமுதம்
மேதினிமேல் நான்உண்ண வேண்டினேன் –ஓதரிய
ஏகா அனேகா எழிற்பொதுவில் வாழ்ஞான
தேகா கதவைத் திற. 10

திருச்சிற்றம்பலம்

Koviloor Digital Library

94. அழிவுறா அருள்வடிவப்பேறு

திருவருட் பேறு

அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

1306 சிவங்க னிந்தசிற் றம்பலத் தருள்நடம் செய்கின்ற பெருவாழ்வே
நவங்க னிந்தமேல் நிலைநடு விளங்கிய நண்பனே அடியேன்றன்
தவங்க னிந்ததோர் விண்ணப்பம் திருச்செவி தரித்தருள் புரிந்தாயே
பவங்க னிந்தஇவ் வடிவமே அழிவுறாப் பதிவடி வாமாறே. 1

1307 விளங்கு கின்றசிற் றம்பலத் தருள்நடம் விளைக்கின்ற பெருவாழ்வே
களங்க மில்லதோர் உளநடு விளங்கிய கருத்தனே அடியேன்நான்
விளம்பி நின்றதோர் விண்ணப்பம் திருச்செவி வியந்தருள் புரிந்தாயே
உளங்கொள் இவ்வடி விம்மையே மந்திர ஒளிவடி வாமாறே. 2

1308 விஞ்சு கின்றசிற் றம்பலத் தருள்நடம் விளைக்கின்ற பெருவாழ்வே
எஞ்சல் அற்றமா மறைமுடி விளங்கிய என்னுயிர்த் துணையே நான்
அஞ்சல் இன்றியே செய்தவிண் ணப்பம்ஏற் றகங்களித் தளித்தாயே
துஞ்சும் இவ்வுடல் அழிவுறா தோங்குமெய்ச் சுகவடி வாமாறே. 3

1309 ஓங்கு கின்றசிற் றம்பலத் தருள்நடம் ஒளிர்கின்ற பெருவாழ்வே
தேங்கு லாவிய தெள்ளமு தேபெருஞ் செல்வமே சிவமேநின்
பாங்க னேன்மொழி விண்ணப்பம் திருச்செவி பதித்தருள் புரிந்தாயே
ஈங்கு வீழுடல் என்றும்வீ ழாதொளிர் இயல்வடி வாமாறே. 4

1310 இலங்கு கின்றசிற் றம்பலத்தருள்நடம் இடுகின்ற பெருவாழ்வே
துலங்கு பேரருட் சோதியே சோதியுள் துலங்கிய பொருளேஎன்
புலங்கொள் விண்ணப்பம் திருச்செவிக் கேற்றருள் புரிந்தனை இஞ்ஞான்றே
அலங்கும் இவ்வுடல் எற்றையும் அழிவுறா அருள்வடி வாமாறே. 5

1311 சிறந்த பேரொளித் திருச்சிற்றம் பலத்திலே திகழ்கின்ற பெருவாழ்வே
துறந்த பேருளத் தருட்பெருஞ் சோதியே சுகப்பெரு நிலையேநான்
மறந்தி டாதுசெய் விண்ணப்பம் திருச்செவி மடுத்தருள் புரிந்தாயே
பிறந்த இவ்வுடல் என்றும்இங் கழிவுறாப் பெருமைபெற் றிடுமாறே. 6

1312 வயங்கு கின்றசிற் றம்பலந் தன்னிலே வளர்கின்ற பெருவாழ்வே
மயங்கு றாதமெய் அறிவிலே விளங்கிய மாமணி விளக்கேஇங்
கியங்கு சிற்றடி யேன்மொழி விண்ணப்பம் ஏற்றருள் புரிந்தாயே
தயங்கும் இவ்வுடல் எற்றையும் அழிவுறாத் தனிவடி வாமாறே. 7

Koviloor Digital Library

1313 தீட்டு கின்றசிற் றம்பலத் தன்னிலே திகழ்கின்ற பெருவாழ்வே
காட்டு கின்றதோர் கதிர்நடு விளங்கிய கடவுளே அடியேன்நான்
நீட்டி நின்றதோர் விண்ணப்பம் திருச்செவி நிறைத்தருள் புரிந்தாயே
பூட்டும் இவ்வுடல் எற்றையும் அழிவுறாப் பொன்வடி வாமாறே. 8

1314 தடையி லாதசிற் றம்பலந் தன்னிலே தழைக்கின்ற பெருவாழ்வே
கடையி லாப்பெருங் கதிர்நடு விளங்கும்ஓர் கடவுளே அடியேன்நான்
இடைவு றாதுசெய் விண்ணப்பம் திருச்செவிக் கேற்றருள் புரிந்தாயே
புடையின் இவ்வுடல் எற்றையும் அழிவுறாப் பொன்வடி வாமாறே. 9

1315 கையின் நெல்லிபோல் விளங்குசிற் றம்பலங் கலந்தருள் பெருவாழ்வே
மெய்யி லேவிளைந் தோங்கிய போகமே மெய்ப்பெரும் பொருளேநான்
ஐய மற்றுரைத்திட்டவிண் ணப்பம்ஏற் றளித்தனை இஞ்ஞான்றே
செய்யும் இவ்வுடல் என்றுமிங் கழிவுறாச் சிவவடி வாமாறே. 10

திருச்சிற்றம்பலம்

95. பேரருள் வாய்மையை வியத்தல்

கைம்மாறின்மை

கட்டளைக் கலித்துறை

திருச்சிற்றம்பலம்

1316 நன்றே தருந்திரு நாடகம் நாடொறும் ஞானமணி
மன்றே விளங்கப் புரிகின்ற ஆனந்த வார்கழலோய்
இன்றே அருட்பெருஞ் சோதிதந் தாண்டருள் எய்துகணம்
ஒன்றே எனினும் பொறேன்அரு ளாணை உரைத்தனனே. 1

1317 தற்சோதி என்னுயிர்ச் சத்தியஜோதி தனித்தலைமைச்
சிற்சோதி மன்றொளிர் தீபக ஜோதிஎன் சித்தத்துள்ளே
நற்சோதி ஞானநல் நாடக ஜோதி நலம்புரிந்த
பொற்சோதி ஆனந்த பூரண ஜோதிஎம் புண்ணியனே. 2

1318 திரைகண்ட மாயைக் கடல்கடந் தேன்அருட் சீர்விளங்கும்
கரைகண் டடைந்தனன் அக்கரை மேல்சர்க் கரைகலந்த
உரைகண்ட தெள்ளமு துண்டேன் அருளொளி ஓங்குகின்ற
வரைகண்ட தன்மிசை உற்றேன் உலகம் மதித்திடவே. 3

1319 மனக்கேத மாற்றிவெம் மாயையை நீக்கி மலிந்தவினை
தனக்கே விடைகொடுத் தாணவம் தீர்த்தருள் தண்ணமுதம்
எனக்கே மிகவும் அளித்தருட் சோதியும் ஈந்தழியா
இனக்கேண்மை யுந்தந்தென் உட்கலந் தான்மன்றில் என்னப்பனே.

Koviloor Digital Library

1320 வாதித்த மாயை வினையா ணவம்எனும் வன்மலத்தைச்
சேதித்தென் உள்ளம் திருக்கோயி லாக்கொண்டு சித்திஎலாம்
போதித் துடம்பையும் பொன்னுடம் பாக்கிநற் புத்தமுதும்
சாதித் தருளிய நின்னருட் குயான்செயத் தக்கதென்னே. 5

1321 செத்தார் எழுகெனச் சிந்தைசெய் முன்னஞ் சிரித்தெழவே
இத்தா ரணியில் அருட்பெருஞ் சோதி எனக்களித்தாய்
எத்தாலும் என்றும் அழியா வடிவுதந் தென்னுள்நின்னை
வைத்தாய் மணிமன்ற வாணநின் பேரருள் வாய்மையென்னே. 6

1322 ஆக்கல்ஒன் றோதொழில் ஐந்தையும் தந்திந்த அண்டபிண்ட
வீக்கம்எல் லாம்சென்றுன் இச்சையின் வண்ணம் விளங்குகநீ
ஏக்கமு றேல்என் றுரைத்தருட் சோதியும் ஈந்தெனக்கே
ஊக்கமெ லாம்உற உட்கலந் தான்என் உடையவனே. 7

1323 என்னேஎன் மீதெம் பெருமான் கருணை இருந்தவண்ணம்
தன்னே ரிலாத அருட்பெருஞ் சோதியைத் தந்துலகுக்
கன்னே எனவிளை யாடுக என்றழி யாதசெழும்
பொன்னேர் வடிவும் அளித்தென் னுயிரில் புணர்ந்தனனே. 8

1324 அச்சோ என்என்று புகல்வேன்என் ஆண்டவன் அம்பலத்தான்
எச்சோ தனையும் இயற்றாதென் னுட்கலந் தின்னருளாம்
மெய்ச்சோதி ஈந்தெனை மேனிலைக் கேற்றி விரைந்துடம்பை
இச்சோதி ஆக்கிஅழியா நலந்தந்த விச்சையையே. 9

1325 வாழிஎன் ஆண்டவன் வாழிஎங் கோன்அருள் வாய்மைஎன்றும்
வாழிஎம் மான்புகழ் வாழிஎன் நாதன் மலர்ப்பதங்கள்
வாழிமெய்ச் சுத்தசன் மார்க்கப் பெருநெறி மாண்புகொண்டு
வாழிஇவ் வையமும் வானமும் மற்றவும் வாழியவே. 10

திருச்சிற்றம்பலம்

96. பொன் வடிவப்பேறு

குறையிறுத்தல்

நேரிசை வெண்பா

திருச்சிற்றம்பலம்

1326 அருட்பெருஞ் ஜோதி அபயம் அபயம்
பொருட்பெருஞ் ஜோதிப் புணைதந் – திருட்பெருங்கார்
அள்ளற் கடல்கடத்தி அக்கரைமேல் ஆனந்தம்
கொள்ளற் கபயங் கொடு. 1

Koviloor Digital Library

1327 ஆரமுதம் தந்தென்னுள் அச்சமெலாம் தீர்த்தருளிச்
சீரமுத வண்ணத் திருவடிகண் – டார்வமிகப்
பாடி உடம்புயிரும் பத்திவடி வாகிக்கூத்
தாடிக் களிக்க அருள். 2

1328 இடர்தொலைந்த ஞான்றே இனைவும் தொலைந்த
சுடர்கலந்த ஞான்றே சுகமும் – முடுகிஉற்ற
தின்னே களித்திடுதும் என்நெஞ்சே அம்பலவன்
பொன்னேர் பதத்தைப் புகழ். 3

1329 ஈனமெலாம் தீர்ந்தனவே இன்பமெலாம் எய்தினவே
ஊனமெலாம் கைவிட் டொழிந்தனவே – ஞானமுளோர்
போற்றும்சிற் றம்பலத்தும் பொன்னம்ப லத்துநடம்
போற்றும் படிப்பெற்ற போது. 4

1330 உள்ளக் கவலையெலாம் ஓடி ஒழிந்தனவே
வள்ளற் பெருஞ்சோதி வாய்த்தனவே – கள்ளக்
கருத்தொழிய ஞானக் கருத்தியைந்து நாதன்
பொருத்தமுற்றென் உள்ளமர்ந்த போது. 5

1331 ஊன உடம்பே ஒளிஉடம்பாய் ஓங்கிநிற்க
ஞான அமுதெனக்கு நல்கியதே – வானப்
பொருட்பெருஞ் சோதிப் பொதுவில் விளங்கும்
அருட்பெருஞ் சோதி அது. 6

1332 எல்லாம் செயவல்லான் எந்தையருள் அம்பலவன்
நல்லான் எனக்குமிக நன்களித்தான் – எல்லாரும்
கண்டுவியக் கின்றார் கருணைத் திருவமுதம்
உண்டுவியக் கின்றேன் உவந்து. 7

1333 ஏசா உலகவர்கள் எல்லாரும் கண்டுநிற்கத்
தேசார் ஒளியால் சிறியேனை – வாசாம
கோசரத்தின் ஏற்றிக் கொடுத்தான் அருளமுதம்
ஈசனத்தன் அம்பலவ னே. 8

1334 ஐயனெனக் கீந்த அதிசயத்தை என்புகல்வேன்
பொய்யடியேன் குற்றம் பொறுத்தருளி – வையத்
தழியாமல் ஓங்கும் அருள்வடிவம் நான்ஓர்
மொழிஆடு தற்கு முனம். 9

Koviloor Digital Library

1335 ஒப்புயர்வொன் றில்லா ஒருவன் அருட்சோதி
அப்பனெலாம் வல்லதிரு அம்பலத்தான் – இப்புவியில்
வந்தான் இரவி வருதற்கு முன்கருணை
தந்தானென் னுட்கலந்தான் தான். 10

1336 ஓத உலவா ஒருதோழன் தொண்டருளன்
சாதல் ஒழித் தென்னைத் தானாக்கிப் – பூதலத்தில்
ஐந்தொழில்செய் என்றே அருட்சோதிக் கோலளித்தான்
வெந்தொழில்போய் நீங்க விரைந்து. 11

1337 ஔவியந்தீர் உள்ளத் தறிஞரெலாம் கண்டுவக்கச்
செவ்வியசன் மார்க்கம் சிறந்தோங்க – ஒவ்வி
விரைந்துவந்தென் உட்கலந்து மெய்யேமெய் யாக
நிரந்தொன்றாய் நின்றான் நிலத்து. 12

1338 சோதிப் பிழம்பே சுகவடிவே மெய்ஞ்ஞான
நீதிப் பொதுவே நிறைநிதியே – சோதிக்
கடவுளே மாயைஇரு கன்மமிருள் எல்லாம்
விடவுளே நின்று விளங்கு. 13

1339 துன்பமெலாம் தீர்ந்த சுகமெல்லாம் கைதந்த
அன்பரெலாம் போற்ற அருள்நடஞ்செய் – இன்பன்
அருட்பெருஞ்சிற் சோதிதிரு அம்பலத்தான் வேதப்
பொருட்பெருஞ்சித் தென்னுட் புகுந்து. 14

1340 தூக்கம் கெடுத்துச் சுகங்கொடுத்தான் என்தனக்கே
ஆக்கமென ஓங்கும்பொன் அம்பலத்தான் – ஏக்கமெலாம்
நீங்கினேன் எண்ணம் நிரம்பினேன் பொன்வடிவம்
தாங்கினேன் சத்தியமாத் தான். 15

1341 துன்பம் கெடுத்துச் சுகங்கொடுத்தான் என்தனக்கே
அன்பகத்தில் வாழும்சிற் றம்பலத்தான் – இன்புருவம்
தாங்கினேன் சாகாத் தனிவடிவம் பெற்றொளியால்
ஓங்கினேன் உண்மை உரை. 16

திருச்சிற்றம்பலம்

Koviloor Digital Library

97. நடராஜபதி மாலை

பன்னிருசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்
திருச்சிற்றம்பலம்

1342 அருள்நிலை விளங்குசிற் றம்பலம்எ னுஞ்சிவ
சுகாதீத வெளிநடுவிலே
அண்டபகி ரண்டகோ டிகளும் சராசரம்
அனைத்தும்அவை ஆக்கல்முதலாம்
பொருள்நிலைச் சத்தரொடு சத்திகள் அனந்தமும்
பொற்பொடுவி ளங்கிஓங்கப்
புறப்புறம் அகப்புறம் புறம்அகம் இவற்றின்மேல்
பூரணா காரமாகித்
தெருள்நிலைச் சச்சிதா னந்தகிர ணாதிகள்
சிறப்பமுதல் அந்தம்இன்றித்
திகழ்கின்ற மெய்ஞ்ஞான சித்திஅனு பவநிலை
தெளிந்திட வயங்குசுடரே
சுருள்நிலைக் குழலம்மை ஆனந்த வல்லிசிவ
சுந்தரிக் கினியதுணையே
சுத்தசிவ சன்மார்க்க நிதியே அருட்பெருஞ்
ஜோதிநட ராஜபதியே. 1

1343 என்இயல் உடம்பிலே என்பிலே அன்பிலே
இதயத்தி லேதயவிலே
என்உயிரி லேஎன்றன் உயிரினுக் குயிரிலே
என்இயற் குணம்அதனிலே
இன்இயல்என் வாக்கிலே என்னுடைய நாக்கிலே
என்செவிப் புலன்இசையிலே
என்இருகண் மணியிலே என்கண்மணி ஒளியிலே
என்அனு பவந்தன்னிலே
தன்இயல்என் அறிவிலே அறிவினுக் கறிவிலே
தானே கலந்துமுழுதும்
தன்மயம தாக்கியே தித்தித்து மேன்மேல்
ததும்பிநிறை கின்றஅமுதே
துன்னிய பெருங்கருணை வெள்ளமே அழியாத
சுகமே சுகாதீதமே
சுத்தசிவ சன்மார்க்க நிதியே அருட்பெருஞ்
ஜோதிநட ராஜபதியே. 2

Koviloor Digital Library

1344 உடல்எலாம் உயிர்எலாம் உளம்எலாம் உணர்வெலாம்
உள்ளனஎ லாங்கலந்தே
ஒளிமயம தாக்கிஇருள் நீக்கிஎக் காலத்தும்
உதயாத்த மானம்இன்றி
இடல்எலாம் வல்லசிவ சத்திகிர ணாங்கியாய்
ஏகமாய் ஏகபோக
இன்பநிலை என்னும்ஒரு சிற்சபையின் நடுவே
இலங்கிநிறை கின்றசுடரே
கடல்எலாம் புவிஎலாம் கனல்எலாம் வளிஎலாம்
ககன்எலாம் கண்டபரமே
காணாத பொருள்எனக் கலைஎலாம் புகலஎன்
கண்காண வந்தபொருளே
தொடல்எலாம் பெறஎனக் குள்ளும் புறத்தும்மெய்த்
துணையாய் விளங்கும் அறிவே
சுத்தசிவ சன்மார்க்க நிதியே அருட்பெருஞ்
ஜோதிநட ராஜபதியே. 3

1345 மெய்தழைய உள்ளங் குளிர்ந்துவகை மாறாது
மேன்மேற் கலந்துபொங்க
விச்சைஅறிவோங்கஎன் இச்சைஅறி வனுபவம்
விளங்கஅறி வறிதாகி
உய்தழை வளித்தெலாம் வல்லசித் ததுதந்
துவட்டாதுள் ஊறிஊறி
ஊற்றெழுந் தென்னையும் தானாக்கி என்னுளே
உள்ளபடி உள்ளஅமுதே
கைதழைய வந்தவான் கனியே எலாங்கண்ட
கண்ணே கலாந்தநடுவே
கற்பனைஇ லாதோங்கு சிற்சபா மணியே
கணிப்பருங் கருணைநிறைவே
துய்தழை பரப்பித் தழைந்ததரு வேஅருட்
சுகபோக யோகஉருவே
சுத்தசிவ சன்மார்க்க நிதியே அருட்பெருஞ்
ஜோதிநட ராஜபதியே. 4

1346 எண்ணிலா அண்டபகி ரண்டத்தின் முதலிலே
இடையிலே கடையிலேமேல்
ஏற்றத்தி லேஅவையுள் ஊற்றத்தி லேதிரண்
டெய்துவடி வந்தன்னிலே
கண்ணுறா அருவிலே உருவிலே குருவிலே
கருவிலே தன்மைதனிலே
கலையாதி நிலையிலே சத்திசத் தாகிக்
கலந்தோங்கு கின்றபொருளே

Koviloor Digital Library

தெண்ணிலாக் காந்தமணி மேடைவாய்க் கோடைவாய்ச்
சேர்ந்தனு பவித்தசுகமே
சித்தெலாஞ் செயவல்ல தெய்வமே என்மனத்
திருமாளி கைத்தீபமே
துண்ணுறாச் சாந்தசிவ ஞானிகள் உளத்தே
சுதந்தரித் தொளிசெய்ஒளியே
சுத்தசிவ சன்மார்க்க நிதியே அருட்பெருஞ்
சோதிநட ராஜபதியே. 5

1347 அம்புவியி லேபுவியின்அடியிலே முடியிலே
அம்மண்ட லந்தன்னிலே
அகலத்தி லேபுவியின் அகிலத்தி லேஅவைக்
கானவடி வாதிதனிலே
விம்பமுற வேநிறைந் தாங்கவை நிகழ்ந்திட
விளக்கும்அவை அவையாகியே
மேலும்அவை அவையாகி அவைஅவைஅ லாததொரு
மெய்ந்நிலையும் ஆனபொருளே
தம்பமிசை எனைஏற்றி அமுதூற்றி அழியாத்
தலத்திலுற வைத்தஅரசே
சாகாத வித்தைக் கிலக்கண இலக்கியம்
தானாய்இ ருந்தபரமே
தொம்பதமும் உடனுற்ற தற்பதமும் அசிபதச்
சுகமும்ஒன் றானசிவமே
சுத்தசிவ சன்மார்க்க நிதியே அருட்பெருஞ்
சோதிநட ராஜபதியே. 6

1348 நீரிலே நீர்உற்ற நிறையிலே நிறைஉற்ற
நிலையிலே நுண்மைதனிலே
நிகழ்விலே நிகழ்வுற்ற திகழ்விலே நிழலிலே
நெகிழிலே தண்மைதனிலே
ஊரிலே அந்நீரின் உப்பிலே உப்பிலுறும்
ஒண்சுவையி லேதிரையிலே
உற்றநீர்க் கீழிலே மேலிலே நடுவிலே
உற்றியல் உறுத்தும்ஒளியே
காரிலே ஒருகோடி பொழியினும் துணைபெறாக்
கருணைமழை பொழிமேகமே
கனகசபை நடுநின்ற கடவுளே சிற்சபைக்
கண்ணோங்கும் ஒருதெய்வமே
தூரிலே பலமளித் தூரிலே வளர்கின்ற
சுகசொருப மானதருவே
சுத்தசிவ சன்மார்க்க நிதியே அருட்பெருஞ்
ஜோதிநட ராஜபதியே. 7

Koviloor Digital Library

1349 ஒள்ளிய நெருப்பிலே உப்பிலே ஒப்பிலா
ஒளியிலே சுடரிலேமேல்
ஒட்டிலே சூட்டிலே உள்ளாடும் ஆட்டிலே
உறும்ஆதி அந்தத்திலே
தெள்ளிய நிறத்திலே அருவத்தி லேஎலாம்
செயவல்ல செய்கைதனிலே
சித்தாய் விளங்கிஉப சித்தாய சத்திகள்
சிறக்கவளர் கின்றஒளியே
வள்ளிய சிவானந்த மலையே சுகாதீத
வானமே ஞானமயமே
மணியேஎன் இருகண்ணுள் மணியேஎன் உயிரேஎன்
வாழ்வேஎன் வாழ்க்கைவைப்பே
துள்ளிய மனப்பேயை உள்ளுற அடக்கிமெய்ச்
சுகம்எனக் கீந்ததுணையே
சுத்தசிவ சன்மார்க்க நிதியே அருட்பெருஞ்
ஜோதிநட ராஜபதியே. 8

1350 அறைகின்ற காற்றிலே காற்றுப்பி லேகாற்றின்
ஆதிநடு அந்தத்திலே
ஆனபல பலகோடி சத்திகளின் உருவாகி
ஆடும்அதன் ஆட்டத்திலே
உறைகின்ற நிறைவிலே ஊக்கத்தி லேகாற்றின்
உற்றபல பெற்றிதனிலே
ஓங்கிஅவை தாங்கிமிகு பாங்கினுறு சத்தர்கட்
குபகரித் தருளும்ஒளியே
குறைகின்ற மதிநின்று கூசஓர் ஆயிரம்
கோடிகிர ணங்கள்வீசிக்
குலஅமுத மயமாகி எவ்வுயி ரிடத்தும்
குலாவும்ஒரு தண்மதியமே
துறைநின்று பொறைஒன்று தூயர்அறி வாற்கண்ட
சொருபமே துரியபதமே
சுத்தசிவ சன்மார்க்க நிதியே அருட்பெருஞ்
ஜோதிநட ராஜபதியே. 9

1351 வானிலே வானுற்ற வாய்ப்பிலே வானின்அரு
வத்திலே வான்இயலிலே
வான்அடியி லேவானின் நடுவிலே முடியிலே
வண்ணத்தி லேகலையிலே
மானிலே நித்திய வலத்திலே பூரண
வரத்திலே மற்றையதிலே
வளரனந் தானந்த சத்தர்சத் திகள் தம்மை
வைத்தஅருள் உற்றஒளியே

Koviloor Digital Library

தேனிலே பாலிலே சர்க்கரையி லேகனித்
திரளிலே தித்திக்கும்ஓர்
தித்திப்பெ லாங்கூட்டி உண்டாலும் ஒப்பெனச்
செப்பிடாத் தெள்ளமுதமே
தூநிலா வண்ணத்தில் உள்ளோங்கும் ஆனந்த
சொருபமே சொருபசுகமே
சுத்தசிவ சன்மார்க்க நிதியே அருட்பெருஞ்
ஜோதிநட ராஜபதியே. 10

1352 என்றிரவி தன்னிலே இரவிசொரு பத்திலே
இயல்உருவி லேஅருவிலே
ஏறிட்ட சுடரிலே சுடரின்உட் சுடரிலே
எறிஆத பத்திரளிலே
ஒன்றிரவி ஒளியிலே ஓங்கொளியின் ஒளியிலே
ஒளிஒளியின் ஒளிநடுவிலே
ஒன்றாகி நன்றாகி நின்றாடு கின்றஅருள்
ஒளியேஎன் உற்றதுணையே
அன்றிரவில் வந்தெனக் கருள்ஒளி அளித்தஎன்
அய்யனே அரசனேஎன்
அறிவனே அமுதனே அன்பனே இன்பனே
அப்பனே அருளாளனே
துன்றியஎன் உயிரினுக் கினியனே தனியனே
தூயனே என்நேயனே
சுத்தசிவ சன்மார்க்க நிதியே அருட்பெருஞ்
ஜோதிநட ராஜபதியே. 11

1353 அணிமதியி லேமதியின் அருவிலே உருவிலே
அவ்வுருவின் உருவத்திலே
அமுதகிர ணத்திலே அக்கிரண ஒளியிலே
அவ்வொளியின் ஒளிதன்னிலே
பணிமதியின் அமுதிலே அவ்வமு தினிப்பிலே
பக்கநடு அடிமுடியிலே
பாங்குபெற ஓங்கும்ஒரு சித்தேஎன் உள்ளே
பலித்தபர மானந்தமே
மணிஒளியில் ஆடும்அருள் ஒளியே நிலைத்தபெரு
வாழ்வே நிறைந்தமகிழ்வே
மன்னேஎன் அன்பான பொன்னேஎன் அன்னேஎன்
வரமே வயங்குபரமே
துணிமதியில் இன்பஅனு பவமாய் இருந்தகுரு
துரியமே பெரியபொருளே
சுத்தசிவ சன்மார்க்க நிதியே அருட்பெருஞ்
ஜோதிநட ராஜபதியே. 12

Koviloor Digital Library

1354 அண்டஒரு மைப்பகுதி இருமையாம் பகுதிமேல்
ஆங்காரி யப்பகுதியே
ஆதிபல பகுதிகள் அனந்தகோ டிகளின்நடு
அடியினொடு முடியும்அவையில்
கண்டபல வண்ணமுத லானஅக நிலையும்
கணித்தபுற நிலையும்மேன்மேல்
கண்டதிக ரிக்கின்ற கூட்டமும் விளங்கக்
கலந்துநிறை கின்ற ஒளியே
கொண்டபல கோலமே குணமே குணங்கொண்ட
குறியே குறிக்கஒண்ணாக்
குருதுரிய மேசுத்த சிவதுரிய மேஎலாம்
கொண்டதனி ஞானவெளியே
தொண்டர்இத யத்திலே கண்டென இனிக்கின்ற
சுகயோக அனுபோகமே
சுத்தசிவ சன்மார்க்க நிதியே அருட்பெருஞ்
சோதிநட ராஜபதியே. 13

1355 கரையிலாக் கடலிலே கடல்உப்பி லேகடற்
கடையிலே கடல் இடையிலே
கடல்முதலி லேகடல் திரையிலே நுரையிலே
கடல்ஓசை அதன்நடுவிலே
வரையிலா வெள்ளப் பெருக்கத்தி லேவட்ட
வடிவிலே வண்ணம்அதிலே
மற்றதன் வளத்திலே உற்றபல சத்தியுள்
வயங்கிஅவை காக்கும் ஒளியே
புரையிலா ஒருதெய்வ மணியேஎன் உள்ளே
புகுந்தறி வளித்தபொருளே
பொய்யாத செல்வமே நையாத கல்வியே
புடம்வைத் திடாதபொன்னே
மரையிலா வாழ்வே மறைப்பிலா வைப்பே
மறுப்பிலா தருள்வள்ளலே
மணிமன்றில் நடுநின்ற ஒருதெய்வ மேஎலாம்
வல்லநட ராஜபதியே. 14

1356 உற்றியலும் அணுவாதி மலைஅந்த மானஉடல்
உற்றகரு வாகிமுதலாய்
உயிராய் உயிர்க்குள்உறும் உயிராகி உணர்வாகி
உணர்வுள்உணர் வாகிஉணர்வுள்
பற்றியலும் ஒளியாகி ஒளியின்ஒளி யாகிஅம்
பரமாய்ச் சிதம்பரமுமாய்ப்
பண்புறுசி தம்பரப் பொற்சபையு மாய்அதன்
பாங்கோங்கு சிற்சபையுமாய்த்

Koviloor Digital Library

தெற்றியலும்அச்சபையின் நடுவில்நடம் இடுகின்ற
சிவமாய் விளங்குபொருளே
சித்தெலாம் செய்எனத் திருவாக் களித்தெனைத்
தேற்றிஅருள் செய்தகுருவே
மற்றியலும் ஆகிளனை வாழ்வித்த மெய்ஞ்ஞான
வாழ்வேஎன் வாழ்வின்வரமே
மணிமன்றில் நடுநின்ற ஒருதெய்வ மேஎலாம்
வல்லநட ராஜபதியே. 15

1357 எவ்வுலகும் எவ்வுயிரும் எப்பொருளும் உடையதாய்
எல்லாஞ்செய் வல்லதாகி
இயற்கையே உண்மையாய் இயற்கையே அறிவாய்
இயற்கையே இன்பமாகி
அவ்வையின் அனாதியே பாசமில தாய்ச்சுத்த
அருளாகி அருள்வெளியிலே
அருள்நெறி விளங்கவே அருள்நடம் செய்தருள்
அருட்பெருஞ் சோதியாகிக்
கவ்வைஅறு தனிமுதற் கடவுளாய் ஓங்குமெய்க்
காட்சியே கருணைநிறைவே
கண்ணேஎன் அன்பிற் கலந்தெனை வளர்க்கின்ற
கதியே கனிந்தகனியே
வெவ்வினை தவிர்த்தொரு விளக்கேற்றி என்னுளே
வீற்றிருந் தருளும்அரசே
மெய்ஞ்ஞான நிலைநின்ற விஞ்ஞான கலர்உளே
மேவுநட ராஜபதியே. 16

1358 நாதாந்த போதாந்த யோகாந்த வேதாந்த
நண்ணுறு கலாந்தம்உடனே
நவில்கின்ற சித்தாந்தம் என்னும்ஆ றந்தத்தின்
ஞானமெய்க் கொடிநாட்டியே
மூதாண்ட கோடிக ளொடுஞ்சரா சரம்எலாம்
முன்னிப் படைத்தல்முதலாம்
முத்தொழிலும் இருதொழிலும் முன்னின் றியற்றிஐம்
மூர்த்திகளும் ஏவல்கேட்ப
வாதாந்தம் உற்றபல சத்திக ளொடும்சத்தர்
வாய்ந்துபணி செய்யஇன்ப
மாராச்சி யத்திலே திருவருட் செங்கோல்
வளத்தொடு செலுத்தும்அரசே
சூதாண்ட நெஞ்சினில் தோயாத நேயமே
துரியநடு நின்றசிவமே
சுத்தசிவ சன்மார்க்க நிதியே அருட்பெருஞ்
ஜோதிநட ராஜபதியே. 17

Koviloor Digital Library

1359 ஒருபிரமன் அண்டங்கள் அடிமுடிப் பெருமையே
உன்னமுடியா அவற்றின்
ஓராயி ரங்கோடி மால்அண்டம் அரன்அண்டம்
உற்றகோ டாகோடியே
திருகலறு பலகோடி ஈசன்அண் டம்சதா
சிவஅண்டம் எண்ணிறந்த
திகழ்கின்ற மற்றைப் பெருஞ்சத்தி சத்தர்தம்
சீரண்டம் என்புகலுவேன்
உருவுறும்இவ் வண்டங்கள் அத்தனையும் அருள்வெளியில்
உறுசிறு அணுக்களாக
ஊடசைய அவ்வெளியின் நடுநின்று நடனமிடும்
ஒருபெருங் கருணைஅரசே
மருவிஎனை ஆட்கொண்டு மகனாக்கி அழியா
வரந்தந்த மெய்த்தந்தையே
மணிமன்றின் நடுநின்ற ஒருதெய்வ மேஎலாம்
வல்லநட ராஜபதியே. 18

1360 வரவுசெல வற்றபரி பூரணா காரசுக
வாழ்க்கைமுத லாஎனக்கு
வாய்த்தபொரு ளேஎன்கண் மணியேஎன் உள்ளே
வயங்கிஒளிர் கின்ற ஒளியே
இரவுபகல் அற்றஒரு தருணத்தில் உற்றபேர்
இன்பமே அன்பின்விளைவே
என்தந்தை யேஎனது குருவேஎன் நேயமே
என்னாசை யேஎன்அறிவே
கரவுநெறி செல்லாக் கருத்தினில் இனிக்கின்ற
கருணைஅமு தேகரும்பே
கனியே அருட்பெருங் கடலேஎ லாம்வல்ல
கடவுளே கலைகள்எல்லாம்
விரவிஉணர் வரியசிவ துரியஅனு பவமான
மெய்ம்மையே சன்மார்க்கமா
மெய்ஞ்ஞான நிலைநின்ற விஞ்ஞான கலர்உளே
மேவுநட ராஜபதியே. 19

1361 பாராதி பூதமொடு பொறிபுலன் கரணமும்
பகுதியும் காலம்முதலாப்
பகர்கின்ற கருவியும் அவைக்குமேல் உறுசுத்த
பரமாதி நாதம்வரையும்
சீராய பரவிந்து பரநாத முந்தனது
திகழங்கம் என்றுரைப்பத்
திருவருட் பெருவெளியில் ஆனந்த நடனம்இடு
தெய்வமே என்றும்அழியா

Koviloor Digital Library

ஊராதி தந்தெனை வளர்க்கின்ற அன்னையே
உயர்தந்தை யேஎன்உள்ளே
உற்றுதுணை யேஎன்தன் உறவேஎன் அன்பே
உவப்பேஎன் உடையஉயிரே
ஆராலும் அறியாத உயர்நிலையில் எனைவைத்த
அரசே அருட்ஜோதியே
அகரநிலை முழுதுமாய் அப்பாலும் ஆகிநிறை
அமுதநட ராஜபதியே. 20

1362 உரைவிசுவம் உண்டவெளி உபசாந்த வெளிமேலை
உறுமவுன வெளிவெளியின்மேல்
ஓங்குமா மவுனவெளி யாதியுறும் அனுபவம்
ஒருங்கநிறை உண்மைவெளியே
திரையறு பெருங்கருணை வாரியே எல்லாஞ்செய்
சித்தே எனக்குவாய்த்த
செல்வமே ஒன்றான தெய்வமே உய்வகை
தெரித்தெனை வளர்த்தசிவமே
பரைநடு விளங்கும்ஒரு ஜோதியே எல்லாம்
படைத்திடுக என்றெனக்கே
பண்புற உரைத்தருட் பேரமுத ளித்தமெய்ப்
பரமமே பரமஞான
வரைநடு விளங்குசிற் சபைநடுவில் ஆனந்த
வண்ணநடம் இடுவள்ளலே
மாறாத சன்மார்க்க நிலைநீதி யேஎலாம்
வல்லநட ராஜபதியே. 21

1363 ஊழிதோ றூழிபல அண்டபகிர் அண்டத்
துயிர்க்கெலாம் தரினும்அந்தோ
ஒருசிறிதும் உலவாத நிறைவாகி அடியேற்
குவப்பொடு கிடைத்தநிதியே
வாழிநீ டூழியென வாய்மலர்ந் தழியா
வரந்தந்த வள்ளலேஎன்
மதியினிறை மதியே வயங்குமதி அமுதமே
மதிஅமுதின் உற்றசுகமே
ஏழினோ டேழுலகில் உள்ளவர்கள் எல்லாம்இ
தென்னைஎன் றதிசயிப்ப
இரவுபகல் இல்லாத பெருநிலையில் ஏற்றிஎனை
இன்புறச் செய்தகுருவே
ஆழியோ டணிஅளித் துயிரெலாம் காத்துவிளை
யாடென் றுரைத்தஅரசே
அகரநிலை முழுதுமாய் அப்பாலு மாகிஒளிர்
அபயநட ராஜபதியே. 22

Koviloor Digital Library

1364 பூதமுத லாயபல கருவிகள் அனைத்தும்என்
புகல்வழிப் பணிகள்கேட்பப்
பொய்படாச் சத்திகள் அனந்தகோ டிகளும்மெய்ப்
பொருள்கண்ட சத்தர்பலரும்
ஏதமற என்னுளம் நினைத்தவை நினைத்தாங்
கிசைந்தெடுத் துதவஎன்றும்
இறவாத பெருநிலையில் இணைசொலா இன்புற்
றிருக்கஎனை வைத்தகுருவே
நாதமுதல் இருமூன்று வரையந்த நிலைகளும்
நலம்பெறச் சன்மார்க்கமாம்
ஞானநெறி ஓங்கஓர் திருவருட் செங்கோல்
நடத்திவரு நல்லஅரசே
வாதமிடு சமயமத வாதிகள் பெறற்கரிய
மாமதியின் அமுதநிறைவே
மணிமன்றின் நடுநின்ற ஒருதெய்வ மேஎலாம்
வல்லநட ராஜபதியே. 23

1365 வாட்டமொடு சிறியனேன் செய்வகையை அறியாது
மனமிக மயங்கிஒருநாள்
மண்ணிற் கிடந்துஅருளை உன்னிஉல கியலினை
மறந்துதுயில் கின்றபோது
நாட்டமுறு வைகறையில் என்அருகணைந்தென்னை
நன்றுற எழுப்பிமகனே
நல்யோக ஞானம்எனி னும்புரிதல் இன்றிநீ
நலிதல்அழ கோஎழுந்தே
ஈட்டுகநின் எண்ணம்பலிக்கஅருள் அமுதம்உண்டு
இன்புறுக என்றகுருவே
என்ஆசை யேஎன்தன் அன்பேநிறைந்தபேர்
இன்பமே என்செல்வமே
வேட்டவை அளிக்கின்ற நிதியமே சாகாத
வித்தையில் விளைந்தசுகமே
மெய்ஞ்ஞான நிலைநின்ற விஞ்ஞான கலர்உளே
மேவுநட ராஜபதியே. 24

1366 என்செய்வேன் சிறியனேன் என்செய்வேன் என்எண்ணம்
ஏதாக முடியுமோஎன்
றெண்ணிஇரு கண்ணினீர் காட்டிக் கலங்கிநின்
றேங்கிய இராவில்ஒருநாள்
மின்செய்மெய்ஞ் ஞானஉரு வாகிநான் காணவே
வெளிநின் றணைத்தென்உள்ளே
மேவிஎன் துன்பந் தவிர்த்தருளி அங்ஙனே
வீற்றிருக் கின்றகுருவே

Koviloor Digital Library

நன்செய்வாய் இட்டவிளை வதுவிளைந் ததுகண்ட
நல்குரவி னோன்அடைந்த
நன்மகிழ்வின் ஒருகோடி பங்கதிகம் ஆகவே
நான்கண்டு கொண்டமகிழ்வே
வன்செய்வாய் வாதருக் கரியபொரு ளேஎன்னை
வலியவந் தாண்டபரமே
மணிமன்றின் நடுநின்ற ஒருதெய்வ மேஎலாம்
வல்லநட ராஜபதியே. 25

1367 துன்பெலாந் தீர்ந்தன சுகம்பலித் ததுநினைச்
சூழ்ந்ததருள் ஒளிநிறைந்தே
சுத்தசன் மார்க்கநிலை அனுபவம் நினக்கே
சுதந்தரம தானதுலகில்
வன்பெலாம் நீக்கிநல் வழியெலாம் ஆக்கிமெய்
வாழ்வெலாம் பெற்றுமிகவும்
மன்னுயிர் எலாம்களித் திடநினைத் தனைஉன்தன்
மனநினைப் பின்படிக்கே
அன்பநீ பெறுகஉல வாதுநீ டூழிவிளை
யாடுக அருட்ஜோதியாம்
ஆட்சிதந் தோம்உனைக் கைவிடோம் கைவிடோம்
ஆணைநம் ஆணைஎன்றே
இன்புறத் திருவாக் களித்தெனுள் ளேகலந்
திசைவுடன் இருந்தகுருவே
எல்லாஞ்செய் வல்லசித் தாகிமணி மன்றினில்
இலங்குநட ராஜபதியே. 26

1368 பேருற்ற உலகிலுறு சமயமத நெறிஎலாம்
பேய்ப்பிடிப் புற்றபிச்சுப்
பிள்ளைவிளை யாட்டென உணர்ந்திடா துயிர்கள்பல
பேதமுற் றங்கும்இங்கும்
போருற் றிறந்துவீண் போயினார் இன்னும்வீண்
போகாத படிவிரைந்தே
புனிதமுறு சுத்தசன் மார்க்கநெறி காட்டிமெய்ப்
பொருளினை உணர்த்திஎல்லாம்
ஏருற்ற சுகநிலை அடைந்திடப் புரிதிநீ
என்பிள்ளை ஆதலாலே
இவ்வேலை புரிகஎன் றிட்டனம் மனத்தில்வே
றெண்ணற்க என்றகுருவே
நீருற்ற ஒள்ளிய நெருப்பே நெருப்பினுள்
நிறைந்திருள் அகற்றும்ஒளியே
நிர்க்குணா னந்தபர நாதாந்த வரைஓங்கு
நீதிநட ராஜபதியே. 27

Koviloor Digital Library

1369 சாகாத கல்வியே கல்விஒன் றேசிவம்
தான்என அறிந்தஅறிவே
தகும்அறிவு மலம்ஐந்தும் வென்றவல் லபமே
தனித்தபூ ரணவல்லபம்
வேகாத காலாதி கண்டுகொண் டெப்பொருளும்
விளையவிளை வித்ததொழிலே
மெய்த்தொழில தாகும்இந் நான்கையும் ஒருங்கே
வியந்தடைந் துலகம்எல்லாம்
மாகாத லுறஎலாம் வல்லசித் தாகிநிறை
வானவர மேஇன்பமாம்
மன்னும்இது நீபெற்ற சுத்தசன் மார்க்கத்தின்
மரபென் றுரைத்தகுருவே
தேகாதி மூன்றும்நான் தருமுன்அருள் செய்தெனைத்
தேற்றிஅருள் செய்தசிவமே
சிற்சபையின் நடுநின்ற ஒன்றான கடவுளே
தெய்வநட ராஜபதியே. 28

1370 நீடுலகில் உற்றவர்கள் நன்குற உரைக்கின்ற
நின்வார்த்தை யாவும்நமது
நீள்வார்த்தை யாகும்இது உண்மைமக னேசற்றும்
நெஞ்சம்அஞ் சேல்உனக்கே
ஆடுறும் அருட்பெருஞ் ஜோதிஈந் தனம்என்றும்
அழியாத நிலையின்நின்றே
அன்பினால் எங்கெங்கும் எண்ணிய படிக்குநீ
ஆடிவாழ் கென்றகுருவே
நாடுநடு நாட்டத்தில் உற்றஅனு பவஞானம்
நான்இளங் காலைஅடைய
நல்கிய பெருங்கருணை அப்பனே அம்மையே
நண்பனே துணைவனேஎன்
ஊடுபிரி யாதுற்ற இன்பனே அன்பனே
ஒருவனே அருவனேஉள்
ஊறும்அமு தாகிஒர் ஆறின்முடி மீதிலே
ஓங்குநட ராஜபதியே. 29

1371 அந்நாளில் அம்பலத் திருவாயில் இடைஉனக்
கன்புடன் உரைத்தபடியே
அற்புதம்எ லாம்வல்ல நம்அருட் பேரொளி
அளித்தனம் மகிழ்ந்துன்உள்ளே
இந்நாள் தொடுத்துநீ எண்ணிய படிக்கே
இயற்றிவிளை யாடிமகிழ்க
என்றும்இற வாநிலையில் இன்பஅனு பவனாகி
இயல்சுத்தம் ஆதிமூன்றும்

Koviloor Digital Library

எந்நாளும் உன்இச்சை வழிபெற்று வாழ்கயாம்
எய்திநின் னுட்கலந்தேம்
இனிஎந்த ஆற்றினும் பிரிவுறேம் உண்மைஈ
தெம்மாணை என்றகுருவே
மன்னாகி என்பெரிய வாழ்வாகி அழியாத
வரமாகி நின்றசிவமே
மணிமன்றின் நடுநின்ற ஒருதெய்வ மேஎலாம்
வல்லநட ராஜபதியே. 30

1372 காய்எலாம் கனிஎனக் கனிவிக்கும் ஒருபெருங்
கருணைஅமு தேஎனக்குக்
கண்கண்ட தெய்வமே கலிகண்ட அற்புதக்
காட்சியே கனகமலையே
தாய்எலாம் அனையஎன் தந்தையே ஒருதனித்
தலைவனே நின்பெருமையைச்
சாற்றிட நினைத்திட மதித்திட அறிந்திடச்
சார்கின்ற தோறும்அந்தோ
வாய்எலாந் தித்திக்கும் மனம்எலாந் தித்திக்கும்
மதிஎலாந் தித்திக்கும்என்
மன்னியமெய் அறிவெலாந் தித்திக்கும் என்னில்அதில்
வரும்இன்பம் என்புகலுவேன்
தூய்எலாம் பெற்றநிலை மேல்அருட் சுகம்எலாம்
தோன்றிட விளங்குசுடரே
துரியவெளி நடுநின்ற பெரியபொரு ளேஅருட்
ஜோதிநட ராஜகுருவே. 31

1373 எய்ப்பற எனக்குக் கிடைத்தபெரு நிதியமே
எல்லாஞ்செய் வல்லசித்தாய்
என்கையில் அகப்பட்ட ஞானமணி யேஎன்னை
எழுமையும் விடாதநட்பே
கைப்பறஎன் உள்ளே இனிக்கின்ற சர்க்கரைக்
கட்டியே கருணை அமுதே
கற்பக வனத்தே கனிந்தகனி யேஎனது
கண்காண வந்தகதியே
மெய்ப்பயன் அளிக்கின்ற தந்தையே தாயேஎன்
வினைஎலாந் தீர்த்தபதியே
மெய்யான தெய்வமே மெய்யான சிவபோக
விளைவேஎன் மெய்ம்மைஉறவே
துய்ப்புறும்என் அன்பான துணையேஎன் இன்பமே
சுத்தசன் மார்க்கநிலையே
துரியவெளி நடுநின்ற பெரியபொரு ளேஅருட்
ஜோதிநட ராஜகுருவே. 32

Koviloor Digital Library

1374 துன்புறு மனத்தனாய் எண்ணாத எண்ணிநான்
சோர்ந்தொரு புறம்படுத்துத்
தூங்குதரு ணத்துஎன்தன் அருகிலுற் றன்பினால்
தூயதிரு வாய்மலர்ந்தே
இன்புறு முகத்திலே புன்னகை ததும்பவே
இருகைமலர் கொண்டுதூக்கி
என்தனை எடுத்தணைத் தாங்குமற் றோரிடத்
தியலுற இருத்திமகிழ்வாய்
வன்பறு பெருங்கருணை அமுதளித் திடர்நீக்கி
வைத்தநின் தயவை அந்தோ
வள்ளலே உள்ளுதொறும் உள்ளக மெலாம்இன்ப
வாரிஅமு தூறிஊறித்
துன்பம்அற மேற்கொண்டு பொங்கித் ததும்பும்இச்
சுகவண்ணம் என்புகலுவேன்
துரியவெளி நடுநின்ற பெரியபொரு ளேஅருட்
ஜோதிநட ராஜகுருவே. 33

1375 ஓங்கிய பெருங்கருணை பொழிகின்ற வானமே
ஒருமைநிலை உறுஞானமே
உபயபத சததளமும் எனதிதய சததளத்
தோங்கநடு வோங்குசிவமே
பாங்கியல் அளித்தென்னை அறியாத ஒருசிறிய
பருவத்தில் ஆண்டபதியே
பாசநெறி செல்லாத நேசர்தமை ஈசராம்
படிவைக்க வல்லபரமே
ஆங்கியல்வ தென்றுமற் றீங்கியல்வ தென்றும்வாய்
ஆடுவோர்க் கரியசுகமே
ஆனந்த மயமாகி அதுவுங் கடந்தவெளி
ஆகிநிறை கின்றநிறைவே
தூங்கிவிழு சிறியனைத் தாங்கிஎழு கென்றெனது
தூக்கந் தொலைத்ததுணையே
துரியவெளி நடுநின்ற பெரியபொரு ளேஅருட்
ஜோதிநட ராஜகுருவே. 34

திருச்சிற்றம்பலம்

Koviloor Digital Library

98. சற்குருமணி மாலை

எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

1376 மாற்றறி யாதசெ ழும்பசும் பொன்னே
மாணிக்க மேசுடர் வண்ணக் கொழுந்தே
கூற்றறி யாதபெ ருந்தவர் உள்ளக்
கோயில் இருந்த குணப்பெருங் குன்றே
வேற்றறி யாதசிற் றம்பலக் கனியே
விச்சையில் வல்லவர் மெச்சுவி ருந்தே
சாற்றறி யாதஎன் சாற்றுங் களித்தாய்
தனிநட ராஜஎன் சற்குரு மணியே. 1

1377 கற்கரை யும்படி கரைவிக்குங் கருத்தே
கண்மணி யேமணி கலந்தகண் ஒளியே
சொற்கரை யின்றிய ஒளியினுள் ஒளியே
துரியமுங் கடந்திட்ட பெரியசெம் பொருளே
சிற்கரை திரையறு திருவருட் கடலே
தெள்ளமு தேகனி யேசெழும் பாகே
சர்க்கரை யேஅது சார்ந்தசெந் தேனே
தனிநட ராஜஎன் சற்குரு மணியே. 2

1378 என்னுயி ரேஎன தின்னுயிர்க் குயிரே
என்அறி வேஎன தறிவினுக் கறிவே
அன்னையில் இனியஎன் அம்பலத் தமுதே
அற்புத மேபத மேஎன தன்பே
பொன்னிணை அடிமலர் முடிமிசை பொருந்தப்
பொருத்திய தயவுடைப் புண்ணியப் பொருளே
தன்னியல் அறிவருஞ் சத்திய நிலையே
தனிநட ராஜஎன் சற்குரு மணியே. 3

1379 காய்மனக் கடையனைக் காத்தமெய்ப் பொருளே
கலைகளுங் கருதரும் ஒருபெரும் பதியே
தேய்மதிச் சமயருக் கரியஒண் சுடரே
சித்தெலாம் வல்லதோர் சத்திய முதலே
ஆய்மதிப் பெரியருள் அமர்ந்தசிற் பரமே
அம்பலத் தாடல்செய் செம்பதத் தரசே
தாய்மதிப் பரியதோர் தயவுடைச் சிவமே
தனிநட ராஜஎன் சற்குரு மணியே. 4

Koviloor Digital Library

1380 உருவமும் அருவமும் உபயமும் உளதாய்
உளதில தாய்ஒளிர் ஒருதனி முதலே
கருவினில் எனக்கருள் கனிந்தளித் தவனே
கண்ணுடை யாய்பெருங் கடவுளர் பதியே
திருநிலை பெறஎனை வளர்க்கின்ற பரமே
சிவகுரு துரியத்தில் தெளிஅனு பவமே
தருவளர் பொழில்வடல் சபைநிறை ஒளியே
தனிநட ராஜஎன் சற்குரு மணியே. 5

1381 ஆறந்த நிலைகளின் அனுபவ நிறைவே
அதுஅது வாய்ஒளிர் பொதுவுறு நிதியே
கூறெந்த நிலைகளும் ஒருநிலை எனவே
கூறிஎன் உள்ளத்தில் குலவிய களிப்பே
பேறிந்த நெறிஎனக் காட்டிஎன் தனையே
பெருநெறிக் கேற்றிய ஒருபெரும் பொருளே
சாறெந்த நாள்களும் விளங்கும்ஓர் வடல்வாய்த்
தனிநட ராஜஎன் சற்குரு மணியே. 6

1382 சாகாத தலைஇது வேகாத காலாம்
தரம்இது காண்எனத் தயவுசெய் துரைத்தே
போகாத புனலையும் தெரிவித்தென் உளத்தே
பொற்புற அமர்ந்ததோர் அற்புதச் சுடரே
ஆகாத பேர்களுக் காகாத நினைவே
ஆகிய எனக்கென்றும் ஆகிய சுகமே
தாகாதல் எனத்தரும் தருமசத் திரமே
தனிநட ராஜஎன் சற்குரு மணியே. 7

1383 தத்துவ மசிநிலை இதுஇது தானே
சத்தியம் காண்எனத் தனித்துரைத் தெனக்கே
எத்துவந் தனைகளும் நீக்கிமெய்ந் நிலைக்கே
ஏற்றிநான் இறவாத இயல்அளித் தருளால்
சித்துவந் துலகங்கள் எவற்றினும் ஆடச்
செய்வித்த பேரருட் சிவபரஞ் சுடரே
சத்துவ நெறிதரு வடல்அருட் கடலே
தனிநட ராஜஎன் சற்குரு மணியே. 8

1384 இதுபதி இதுபொருள் இதுசுகம் அடைவாய்
இதுவழி எனஎனக் கியல்புற உரைத்தே
விதுஅமு தொடுசிவ அமுதமும் அளித்தே
மேனிலைக் கேற்றிய மெய்ந்நிலைச் சுடரே

Koviloor Digital Library

பொதுநடம் இடுகின்ற புண்ணியப் பொருளே
புரையறும் உளத்திடைப் பொருந்திய மருந்தே
சதுமறை முடிகளின் முடியுறு சிவமே
தனிநட ராஜஎன் சற்குரு மணியே. 9

1385 என்னிலை இதுவுறு நின்னிலை இதுவாம்
இருநிலை களும்ஒரு நிலைஎன அறிவாய்
முன்னிலை சிறிதுறல்* இதுமயல் உறலாம்
முன்னிலை பின்னிலை முழுநிலை உளவாம்
இந்நிலை அறிந்தவண் எழுநிலை கடந்தே
இயனிலை அடைகஎன் றியம்பிய பரமே
தன்னிலை ஆகிய நன்னிலை அரசே
தனிநட ராஜஎன் சற்குரு மணியே. 10

1386 காரணம் இதுபுரி காரியம் இதுமேல்
காரண காரியக் கருவிது பலவாய்
ஆரணம் ஆகமம் இவைவிரித் துரைத்தே
அளந்திடும் நீஅவை அளந்திடல் மகனே
பூரண நிலைஅனு பவமுறில் கணமாம்
பொழுதினில் அறிதிஎப் பொருள் நிலை களுமே
தாரணி தனில்என்ற தயவுடை அரசே
தனிநட ராஜஎன் சற்குரு மணியே. 11

1387 பன்னெறிச் சமயங்கள் மதங்கள்என் றிடும்ஓர்
பவநெறி இதுவரை பரவிய திதனால்
சென்னெறி அறிந்திலர் இறந்திறந் துலகோர்
செறிஇருள் அடைந்தனர் ஆதலின் இனிநீ
புன்னெறி தவிர்த்தொரு பொதுநெறி எனும்வான்
புத்தமு தருள்கின்ற சுத்தசன் மார்க்கத்
தன்னெறி செலுத்துக என்றஎன் அரசே
தனிநட ராஜஎன் சற்குரு மணியே. 12

1388 அடிஇது முடிஇது நடுநிலை இதுமேல்
அடிநடு முடியிலா ததுஇது மகனே
படிமிசை அடிநடு முடிஅறிந் தனையே
பதிஅடி முடியிலாப் பரிசையும் அறிவாய்
செடியற உலகினில் அருள்நெறி இதுவே
செயலுற முயலுக என்றசிற் பரமே
தடிமுகில் எனஅருள் பொழிவடல் அரசே
தனிநட ராஜஎன் சற்குரு மணியே. 13

---

* சிறிதுற – பி. இரா. பதிப்பு சிறிதுறில் – படிவேறுபாடு ஆ.பா.

Koviloor Digital Library

1389 நண்ணிய மதநெறி பலபல அவையே
நன்றற நின்றன சென்றன சிலவே
அண்ணிய உலகினர் அறிகிலர் நெடுநாள்
அலைதரு கின்றனர் அலைவற மகனே
புண்ணியம் உறுதிரு வருள்நெறி இதுவே
பொதுநெறி எனஅறி வுறமுய லுதிநீ
தண்ணிய அமுதுணத் தந்தனம் என்றாய்
தனிநட ராஜஎன் சற்குரு மணியே. 14

1390 அஞ்சலை நீஒரு சிறிதும்என் மகனே
அருட்பெருஞ் ஜோதியை அளித்தனம் உனக்கே
துஞ்சிய மாந்தரை எழுப்புக நலமே
சூழ்ந்தசன் மார்க்கத்தில் செலுத்துக சுகமே
விஞ்சுற மெய்ப்பொருள் மேனிலை தனிலே
விஞ்சைகள் பலவுள விளக்குக என்றாய்
தஞ்சம்என் றவர்க்கருள் சத்திய முதலே
தனிநட ராஜஎன் சற்குரு மணியே. 15

1391 வேதத்தின் முடிமிசை விளங்கும்ஓர் விளக்கே
மெய்ப்பொருள் ஆகம வியன்முடிச் சுடரே
நாதத்தின் முடிநடு நடமிடும் ஒளியே
நவைஅறும் உளத்திடை நண்ணிய நலமே
ஏதத்தின் நின்றெனை எடுத்தருள் நிலைக்கே
ஏற்றிய கருணைஎன் இன்னுயிர்த் துணையே
தாதுற்ற உடம்பழி யாவகை புரிந்தாய்
தனிநட ராஜஎன் சற்குரு மணியே. 16

1392 சந்திர சூரியர் ஒளிபெற விளங்கும்
தனிஅருட் பெருவெளித் தலத்தெழுஞ் சுடரே
வந்திர விடைஎனக் கருளமு தளித்தே
வாழ்கஎன் றருளிய வாழ்முதற் பொருளே
மந்திர மேஎனை வளர்க்கின்ற மருந்தே
மாநிலத் திடைஎனை வருவித்த பதியே
தந்திரம் யாவையும் உடையமெய்ப் பொருளே
தனிநட ராஜஎன் சற்குரு மணியே. 17

1393 அமரரும் முனிவரும் அதிசயித் திடவே
அருட்பெருஞ் ஜோதியை அன்புடன் அளித்தே
கமமுறு சிவநெறிக் கேற்றிஎன் தனையே
காத்தென துளத்தினில் கலந்தமெய்ப் பதியே

Koviloor Digital Library

எமன்எனும் அவன்இனி இலைஇலை மகனே
எய்ப்பற வாழ்கஎன் றியம்பிய அரசே
சமரச சன்மார்க்க சங்கத்தின் முதலே
தனிநட ராஜஎன் சற்குரு மணியே. 18

1394 நன்மார்க்கத் தவர்உளம் நண்ணிய வரமே
நடுவெளி நடுநின்று நடஞ்செயும் பரமே
துன்மார்க்க வாதிகள் பெறற்கரு நிலையே
சுத்தசி வானந்தப் புத்தமு துவப்பே
என்மார்க்கம் எனக்களித் தெனையுமேல் ஏற்றி
இறவாத பெருநலம் ஈந்தமெய்ப் பொருளே
சன்மார்க்க சங்கத்தார் தழுவிய பதியே
தனிநட ராஜஎன் சற்குரு மணியே. 19

1395 ஆதியும் அந்தமும் இன்றிஒன் றாகி
அகம்புறம் அகப்புறம் புறப்புறம் நிறைந்தே
ஓதியும் உணர்ந்தும்இங் கறிவரும் பொருளே
உளங்கொள்சிற் சபைநடு விளங்குமெய்ப் பதியே
ஜோதியும் ஜோதியின் முதலுந்தான் ஆகிச்
சூழ்ந்தெனை வளர்க்கின்ற சுதந்தர அமுதே
சாதியும் சமயமும் தவிர்த்தவர் உறவே
தனிநட ராஜஎன் சற்குரு மணியே. 20

1396 கற்பனை முழுவதும் கடந்தவர் உளத்தே
கலந்துகொண் டினிக்கின்ற கற்பகக் கனியே
அற்பனை ஆண்டுகொண் டறிவளித் தழியா
அருள்நிலை தனில்உற அருளிய அமுதே
பற்பல உலகமும் வியப்பஎன் தனக்கே
பதமலர் முடிமிசைப் பதித்தமெய்ப் பதியே
தற்பர பரம்பர சிதம்பர நிதியே
தனிநட ராஜஎன் சற்குரு மணியே. 21

1397 பவநெறி செலுமவர் கனவினும் அறியாப்
பரம்பொரு ளாகிஎன் உளம்பெறும் ஒளியே
நவநெறி கடந்ததோர் ஞானமெய்ச் சுகமே
நான்அருள் நிலைபெற நல்கிய நலமே
சிவநெறி யேசிவ நெறிதரு நிலையே
சிவநிலை தனில்உறும் அனுபவ நிறைவே
தவநெறி செலும்அவர்க் கினியநல் துணையே
தனிநட ராஜஎன் சற்குரு மணியே. 22

Koviloor Digital Library

1398 அறியாமல் அறிகின்ற அறிவினுள் அறிவே
அடையாமல் அடைகின்ற அடைவினுள் அடைவே
செறியாமல் செறிகின்ற செறிவினுட் செறிவே
திளையாமல் திளைக்கின்ற திளைப்புறு திளைப்பே
பிறியாமல் என்னுளம் கலந்தமெய்க் கலப்பே
பிறவாமல் இறவாமல் எனைவைத்த பெருக்கே
தறியாகி உணர்வாரும் உணர்வரும் பொருளே
தனிநட ராஜஎன் சற்குரு மணியே. 23

1399 கருதாமல் கருதும்ஓர் கருத்தினுட் கருத்தே
காணாமல் காணும்ஓர் காட்சியின் விளைவே
எருதாகத் திரிந்தேனுக் கிகபரம் அளித்தே
இறவாத வரமுந்தந் தருளிய ஒளியே
வருதாகந் தவிர்த்திட வந்ததெள் ளமுதே
மாணிக்க மலைநடு மருவிய பரமே
தருதான முணவெனச் சாற்றிய பதியே
தனிநட ராஜஎன் சற்குரு மணியே. 24

1400 ஏகாஅ னேகாஎன் றேத்திடு மறைக்கே
எட்டாத நிலையேநான் எட்டிய மலையே
ஓகாள மதங்களை முழுவதும் மாற்றி
ஒருநிலை ஆக்கஎன் றுரைத்தமெய்ப் பரமே
ஈகாதல் உடையவர்க் கிருநிதி அளித்தே
இன்புறப் புரிகின்ற இயல்புடை இறையே
சாகாத வரந்தந்திங் கெனைக்காத்த அரசே
தனிநட ராஜஎன் சற்குரு மணியே. 25

திருச்சிற்றம்பலம்

99. தத்துவ வெற்றி

தான்பெற்ற பேறு

அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

1401 திருவளர்பே ர்அருளுடையான் சிற்சபையான் எல்லாம்
செய்யவல்ல தனித்தலைமைச் சித்தன்எல்லாம் உடையான்
உருவமுமாய் அருவமுமாய் உபயமுமாய் அலவாய்
ஓங்கும் அருட்பெருஞ்ஜோதி ஒருவனுண்டே அவன்தான்
பெருமையினால் எனையீன்றான் நான்ஒருவன் தானே
பிள்ளைஅவன் பிள்ளைஎனப் பெரியர்எலாம் அறிவார்
இருமையுறு தத்துவர்காள் என்னைஅறி யீரோ
ஈங்குமது துள்ளலெலாம் ஏதும்நட வாதே. 1

Koviloor Digital Library

1402 மனம்எனும்ஓர் பேய்க்குரங்கு மடைப்பயலே நீதான்
மற்றவர்போல் எனைநினைத்து மருட்டாதே கண்டாய்
இனமுறஎன் சொல்வழியே இருத்தியெனில் சுகமாய்
இருந்திடுநீ என்சொல்வழி ஏற்றிலைஆ னாலோ
தினையளவுன் அதிகாரம் செல்லவொட்டேன் உலகம்
சிரிக்கஉனை அடக்கிடுவேன் திருவருளால் கணத்தே
நனவில்எனை அறியாயோ யார்எனஇங் கிருந்தாய்
ஞானசபைத் தலைவனுக்கு நல்லபிள்ளை நானே. 2

1403 பன்முகஞ்சேர் மனம்எனும்ஓர் பரியாசப் பயலே
பதையாதே சிதையாதே பார்க்கும்இடம் எல்லாம்
கொன்முகங்கொண் டடிக்கடிபோய்க் குதியாதே எனது
குறிப்பின்வழி நின்றிடுநின் குதிப்புநட வாது
என்முனம்ஓர் புன்முனைமேல் இருந்தபனித் துளிநீ
இம்மெனும்முன் அடக்கிடுவேன் என்னைஅறி யாயோ
பின்முன்என நினையேல்காண் சிற்சபையில் நடிக்கும்
பெரியதனித் தலைவனுக்குப் பெரியபிள்ளை நானே. 3

1404 விரிந்தமனம் எனும்சிறிய விளையாட்டுப் பயலே
விரிந்துவிரிந் தலையாதே மெலியாதே விடயம்
புரிந்தநெறி புரிந்தவமே போகாதே பொறிவாய்ப்
புரையாதே விரையாதே புகுந்துமயங் காதே
தெரிந்துதெளிந் தொருநிலையில் சித்திரம்போல் இருநீ
சிறிதசைந்தால் அக்கணமே சிதைத்திடுவேன் கண்டாய்
பரிந்தெனைநீ யார்என்று பார்த்தாய்சிற் சபைவாழ்
பதிதனக்கே அருட்பட்டம் பலித்தபிள்ளை நானே. 4

1405 பாய்மனம்என் றுரைத்திடும்ஓர் பராய்முருட்டுப் பயலே
பல்பொறியாம் படுக்காளிப் பயல்களொடும் கூடிச்
சேய்மையினும் அண்மையினும் திரிந்தோடி ஆடித்
தியங்காதே ஒருவார்த்தை திருவார்த்தை எனவே
ஆய்வுறக்கொண் டடங்குகநீ அடங்கிலையேல் உனைத்தான்
அடியொடுவேர் அறுத்திடுவேன் ஆணைஅருள் ஆணை
பேய்மதியா நீஎனைத்தான் அறியாயோ எல்லாம்
பெற்றவன்தன் செல்வாக்குப் பெற்றபிள்ளை நானே. 5

1406 மயங்குபுத்தி எனும்உலக வழக்காளிப் பயலே
வழிதுறையீ தென்றறியாய் வகைசிறிதும் அறியாய்
உயங்கிவிசா ரித்திடவே ஓடுகின்றாய் உணரும்
உளவறியாய் வீணுழைப்பிங் குழைப்பதில்என் பயனோ

Koviloor Digital Library

வயங்குமனம் அடங்கியவா றடங்குகநீ இலையேல்
மடித்திடுவேன் கணத்தில்உனை வாய்மைஇது கண்டாய்
இயங்களன்னை அறியாயோ யார்எனஎண் ணினையோ
எல்லாஞ்செய் வல்லவனுக் கினியபிள்ளை நானே. 6

1407 கலையறியாச் சித்தம் எனும் கனமோசப் பயலே
கால்அறியாய் தலைஅறியாய் காண்பனகண் டறியாய்
நிலையறியாய் ஒன்றைஒன்றா நிச்சயித்திவ் வுலகை
நெறிமயங்க மயக்குகின்றாய் நீயோஇங் குறுவாய்
அலையறியாக் கடல்போலே அசைவறநின் றிடுநீ
அசைவாயேல் அரைக்கணத்தே அடக்கிடுவேன் உனைத்தான்
அலைவறியாய் என்தனைநீ அறியாயோ நான்தான்
ஆண்டவன்தன் தாண்டவங்கண் டமர்ந்தபிள்ளை காணே. 7

1408 அகங்காரம் எனும்பொல்லா அடவாதிப் பயலே
அடுக்கடுக்காய் எடுக்கின்றாய் அடுத்துமுடுக் கின்றாய்
செகங்காணத் தலைகாலும் தெரியாமல் அலைந்து
திரிகின்றாய் நின்செபந்தான் சிறிதும்நட வாது
இகங்காண அடங்குகநீ அடங்காயேல் கணத்தே
இருந்தஇடம் தெரியாதே எரிந்திடச்செய் திடுவேன்
சுகங்காண வென்றனைநீ அறியாயோ நான்தான்
சுத்தசிவ சன்மார்க்கம் பெற்றபிள்ளை காணே. 8

1409 மான்எனும்ஓர் ஜகஜாலச் சிறுக்கி இது கேள்உன்
வஞ்சகக்கூத் தெல்லாம்ஓர் மூட்டைஎனக் கட்டி
ஈனம்உற நின்தலைமேல் ஏற்றெடுத்துக் கொண்டுன்
ஏவல்புரி பெண்களொடே இவ்விடம்விட் டேகிக்
கானடைந்து கருத்தடங்கிப் பிழைத்திடுநீ இலையேல்
கணத்தில்உனை மாய்ப்பேன்உன் கணத்தினொடு கண்டாய்
ஏன்எனைநீ அறியாயோ சிற்சபையில் நடஞ்செய்
இறைவன்அருட் பெருஞ்ஜோதிக் கினியபிள்ளை நானே. 9

1410 மாயைஎனும் படுதிருட்டுச் சிறுக்கிஇது கேள்உன்
மாயைஎலாம் சுமைசுமையா வரிந்து கட்டிக் கொண்டுன்
சாயைஎனும் பெண் இனத்தார் தலைமேலும் உனது
தலைமேலும் சுமந்துகொண்டோர் சந்துவழி பார்த்தே
பேய்எனக்காட் டிடைஓடிப் பிழைத்திடுநீ இலையேல்
பேசுமுன்னே மாய்த்திடுவேன் பின்னும்முன்னும் பாரேன்
ஆய்எனைநீ அறியாயோ எல்லாஞ்செய் வல்லார்
அருள்அமுதுண் டருள்நிலைமேல் அமர்ந்தபிள்ளை நானே. 10

Koviloor Digital Library

1411 மாமாயை எனும்பெரிய வஞ்சகிநீ இதுகேள்
வரைந்தஉன்தன் பரிசனப்பெண் வகைதொகைகள் உடனே
போமாறுன் செயல்அனைத்தும் பூரணமாக் கொண்டு
போனவழி தெரியாதே போய்பிழைநீ இலையேல்
சாமாறுன் தனைஇன்றே சாய்த்திடுவேன் இதுதான்
சத்தியம்என் றெண்ணுதிஎன் தன்னைஅறியாயோ
ஆமாறு சிற்சபையில் அருள்நடனம் புரிவார்
அருள்அமுதுண் டருள்நிலைமேல் அமர்ந்தபிள்ளை நானே. 11

1412 கன்மம்எனும் பெருஞ்சிலுகுக் கடுங்கலகப் பயலே
கங்குகரை காணாத கடல்போலே வினைகள்
நன்மையொடு தீமைஎனப் பலவிகற்பங் காட்டி
நடத்தினைநின் நடத்தைஎலாம் சிறிதும்நட வாது
என்முன்இருந் தனைஎனில்நீ அழிந்திடுவாய் அதனால்
இக்கணத்தே நின்இனத்தோ டேகுகநீ இலையேல்
இன்மையுற மாய்த்திடுவேன் என்னையறி யாயோ
எல்லாஞ்செய் வல்லவனுக் கினியபிள்ளை நானே. 12

1413 எத்துணையும் காட்டாத ஆணவம்என் றிடும்ஓர்
இருட்டறைக்கோர் அதிகாரிக் குருட்டுமுடப் பயலே
இத்தனைநாள் பிடித்ததுனைக் கண்டுதுரத் திடவே
இன்னும்அரைக் கணந்தரியேன் இக்கணத்தே நினது
பொத்தியசுற் றத்துடனே போய்விடுதி இலையேல்
பூரணமெய் அருள்ஒளியால் பொன்றுவிப்பேன் நினையே
சத்தியஞ்சொன் னேன்எனைநீ அறியாயோ ஞான
சபைத்தலைவன் தருதலைமைத் தனிப்பிள்ளை நானே. 13

1414 பெருமாயை என்னும்ஒரு பெண்பிள்ளை நீதான்
பெற்றவுடம் பிதுசாகாச் சுத்தவுடம் பாக்கி
ஒருஞானத் திருவமுதுண் டோங்குகின்றேன் இனிநின்
உபகரிப்போர் அணுத்துணையும் உளத்திடைநான் விரும்பேன்
அருளாய ஜோதிஎனக் குபகரிக்கின் றதுநீ
அறியாயோ என்னளவில் அமைகஅயல் அமர்க
தெருளாய உலகிடைஎன் சரிதமுணர்ந் திலையோ
சிற்சபைஎன் அப்பனுக்குச் சிறந்தபிள்ளை நானே. 14

1415 பேசுதிரோ தாயிஎனும்பெண்மடவாய் இதுகேள்
பின்முன்அறி யாதெனைநீ என்முன்மறைக் காதே
வேசறமா மலஇரவு முழுதும்விடிந் ததுகாண்
வீசும்அருட் பெருஞ்ஜோதி விளங்குகின்ற தறிநீ

Koviloor Digital Library

ஏசுறுநின் செயல்அனைத்தும் என்னளவில் நடவா
திதைஅறிந்து விரைந்தெனைவிட் டேகுகஇக் கணத்தே
மாசறும்என் சரிதம்ஒன்றும் தெரிந்திலையோ எல்லாம்
வல்லஒரு சித்தருக்கே நல்லபிள்ளை நானே. 15

1416 தூக்கம்எனும் கடைப்பயலே சோம்பேறிஇதுகேள்
துணிந்துனது சுற்றமொடு சொல்லும்அரைக் கணத்தே
*தாக்கு பெருங் காட்டகத்தே ஏகுகநீ இருந்தால்
தப்பாதுன் தலைபோகும் சத்தியம்ஈ தறிவாய்
ஏக்கமெலாம் தவிர்த்துவிட்டேன் ஆக்கமெலாம் பெற்றேன்
இன்பமுறு கின்றேன்நீ என்னை அடையாதே
போக்கில்விரைந் தோடுகநீ பொற்சபைசிற் சபைவாழ்
பூரணர்க்கிங் கன்பான பொருளன்என அறிந்தே. 16

1417 பயம்எனும்ஓர் கொடும்பாவிப் பயலேநீ இதுகேள்
பற்றறஎன் தனைவிடுத்துப் பனிக்கடல்வீழ்ந் தொளிப்பாய்
தயவின்உரைத் தேன்இன்னும் இருத்திஎனில் உனது
தன்தலைக்குத் தீம்புவரும் தலைமட்டோ நினது
செயலுறும்உள் உடம்பழியும் சுற்றமெலாம் இறக்கும்
தீர்ந்ததினி இல்லைஎன்றே திருவார்த்தை பிறக்கும்
அயலிடைநேர்ந் தோடுகநீ என்னைஅறி யாயோ
அம்பலத்தென் அப்பன்அருள் நம்புபிள்ளை நானே. 17

1418 கோபமெனும் புலைப்பயலே காமவலைப் பயலே
கொடுமோகக் கடைப்பயலே குறும்புமதப் பயலே
தாபஉலோ பப்பயலே மார்சரியப் பயலே
தயவுடன்இங் கிசைக்கின்றேன் தாழ்த்திருக்கா தீர்காண்
தீபம்எலாம் கடந்திருள்சேர் நிலஞ்சாரப் போவீர்
சிறிதுபொழு திருந்தாலும் திண்ணம்இங்கே அழிவீர்
சாபமுறா முன்னம்அறிந் தோடுமினோ என்னைத்
தான்அறியீர் தனித்தலைவன் தலைப்பிள்ளை நானே. 18

1419 பசிஎனும்ஓர் பெரும்பாவிப் பயலேதுன் பெனும்ஓர்
படுபாவிப் பயலேஆ பத்தெனும்பொய்ப் பயலே
வசியவத்தைக் கடைப்பயலே தடைப்பயலே இடராம்
வன்பயலே நீவிர்எலாம் என்புடைநில் லாதீர்

---

* "தாக்கு" என்றே எல்லாப் படிகளிலும் முதல் அச்சிலும் காண்கிறது. மூலத்தில் இது தணிந்த என்பதுபோலும் தெளிவற்றுத் தோன்றுகிறது – ஆ.பா.
சாலையில் உள்ள பெருமானார் கையெழுத்துப் படியில் தணிந்த என்றே உள்ளது. மிகத் தெளிவாகவும் காணப்படுகிறது.

Koviloor Digital Library

நசியஉமக் குளம்உளதோ இக்கணத்தே நீவிர்
நடந்துவிரைந் தோடுமினோ நாடறியா வனத்தே
கசியுமனத் தெனைஅறியீர் சிற்சபையில் விளங்கும்
கடவுள்மகிழ்ந் தளித்ததனிக் கதிர்பிள்ளை நானே. 19

1420 மரணம்எனும் பெருந்திருட்டு மாபாவிப் பயலே
வையகமும் வானகமும் மற்றகமும் கடந்தே
பரணமுறு பேரிருட்டுப் பெருநிலமும் தாண்டிப்
பசைஅறநீ ஒழிந்திடுக இங்கிருந்தாய் எனிலோ
இரணமுற உனைமுழுதும் மடித்திடுவேன் இதுதான்
என்னுடையான் அருள்ஆணை என்குருமேல்ஆணை
அரணுறும்என் தனைவிடுத்தே ஓடுகநீ நான்தான்
அருட்பெருஞ்ஜோ திப்பதியை அடைந்தபிள்ளை காணே. 20

திருச்சிற்றம்பலம்

100. பேறடைவு

எழுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

1421 மணம்புரி கடிகை இரண்டரை எனும்ஓர்
வரையுள தாதலான் மகனே
எணம்புரிந் துழலேல் சவுளம்ஆ தியசெய்
தெழில்உறு மங்கலம் புனைந்தே
குணம்புரிந் தெமது மகன்எனும் குறிப்பைக்
கோலத்தால் காட்டுக எனவே
வணம்புரி மணிமா மன்றில்என் தந்தை
வாய்மலர்ந் தருளினர் மகிழ்ந்தே. 1

1422 எம்பொருள் எனும்என் அன்புடைமகனே
இரண்டரைக் கடிகையில் உனக்கே
அம்புவி வானம் அறியமெய் அருளா
மணங்கனை தனைமணம் புரிவித்
தும்பரும் வியப்ப உயர்நிலை தருதும்
உண்மைஈ தாதலால் உலகில்
வெம்புறு துயர்தீர்ந் தணிந்துகொள் என்றார்
மெய்ப்பொது நடத்திறை யவரே. 2

1423 அன்புடை மகனே மெய்யருள் திருவை
அண்டர்கள் வியப்புற நினக்கே
இன்புடை உரிமை மணம்புரி விப்பாம்
இரண்டரைக் கடிகையில் விரைந்தே

Koviloor Digital Library

துன்புடை யவைகண் முழுவதுந் தவிர்ந்தே
தூய்மைசேர் நன்மணக் கோலம்
பொன்புடை விளங்கப் புனைந்துகொள் என்றார்
பொதுநடம் புரிகின்றார் தாமே. 3

1424 ஈதுகேள் மகனே மெய்யருள் திருவை
இரண்டரைக் கடிகையில் நினக்கே
ஊதியம் பெறவே மணம்புரி விப்பாம்
உண்மைஈ தாதலால் இனிவீண்
போதுபோக் காமல் மங்கலக் கோலம்
புனைந்துளம் மகிழ்கநீ என்றார்
தீதுதீர்த் தென்னை இளந்தையில் தானே
தெருட்டிய சிற்சபை யவரே. 4

1425 விரைந்துகேண் மகனே உலகெலாம் களிக்க
மெய்யருள் திருவினை நினக்கே
வரைந்துநன் மணஞ்செய் தொருபெரு நிலையில்
வைத்துவாழ் விக்கின்றோம் அதனால்
இரைந்துளம் கவலேல் இரண்டரைக் கடிகை
எல்லையுள் எழில்மணக் கோலம்
நிறைந்துறப் புனைதி என்றுவாய் மலர்ந்தார்
நிருத்தஞ்செய் ஒருத்தர்உள் உவந்தே. 5

1426 களிப்பொடு மகனே அருள்ஒளித் திருவைக்
கடிகைஓர் இரண்டரை அதனில்
ஒளிப்பிலா துலகம் முழுவதும் அறிய
உனக்குநன் மணம்புரி விப்பாம்
அளிப்புறு மகிழ்வால் மங்கலக் கோலம்
அணிபெறப் புனைகநீ விரைந்தே
வெளிப்பட உரைத்தாம் என்றனர் மன்றில்
விளங்கும்மெய்ப் பொருள்இறை யவரே. 6

1427 கலங்கிடேல் மகனே அருள்ஒளித் திருவைக்
களிப்பொடு மணம்புரி விப்பாம்
விலங்கிடேல் வீணில் போதுபோக் காமல்
விரைந்துநன் மங்கலக் கோலம்
நலங்கொளப் புனைந்து மகிழ்கஇவ் வுலகர்
நவிலும்அவ் வுலகவர் பிறரும்
இலங்கநின் மணமே ஏத்துவர் என்றார்
இயலுறு சிற்சபை யவரே. 7

Koviloor Digital Library

1428 ஐயுறேல் இதுநம் ஆணைநம் மகனே
அருள்ஒளித் திருவைநின் தனக்கே
மெய்யுறு மகிழ்வால் மணம்புரி விப்பாம்
விரைந்திரண் டரைக்கடி கையிலே
கையுற வனைத்துந் தவிர்த்துநீ மிகவுங்
களிப்பொடு மங்கலக் கோலம்
வையமும் வானும் புகழ்ந்திடப் புனைக
என்றனர் மன்றிறை யவரே. 8

1429 தூங்கலை மகனே எழுகநீ விரைந்தே
தூயநீர் ஆடுக துணிந்தே
பாங்குற ஒங்கு மங்கலக் கோலம்
பண்பொடு புனைந்துகொள் கடிகை
ஈங்கிரண் டரையில் அருள்ஒளித் திருவை
எழில்உற மணம்புரி விப்பாம்
ஏங்கலை இதுநம் ஆணைகாண் என்றார்
இயன்மணி மன்றிறை யவரே. 9

1430 மயங்கிடேல் மகனே அருள்ஒளித் திருவை
மணம்புரி விக்கின்றாம் இதுவே
வயங்குநல் தருணக் காலைகாண் நீநன்
மங்கலக் கோலமே விளங்க
இயங்கொளப் புனைதி இரண்டரைக் கடிகை
எல்லையுள் என்றுவாய் மலர்ந்தார்
சயங்கொள எனக்கே தண்ணமு தளித்த
தந்தையார் சிற்சபை யவரே. 10

திருச்சிற்றம்பலம்

101. உய்வகை கூறல்

கலித்துறை

திருச்சிற்றம்பலம்

1431 அருட்பெ ருந்தனிச் சோதிஅம் பலத்திலே நடிக்கும்
பொருட்பெ ருந்திரு நடமது போற்றுவீர் புவியீர்
மருட்பெ ரும்பகை நீக்கிமெய் வாழ்வுபெற் றிடலாம்
தெருட்பெ ரும்பதத் தாணைஈ தறிமினோ தெளிந்தே. 1

1432 வாரஞ் செய்தபொன் மன்றிலே நடிக்கும்பொன் அடிக்கே
ஆரஞ் செய்தணிந் தவர்க்குமுன் அரிஅயன் முதலோர்
வீரஞ் செல்கிலா தறிமினோ வேதமேல் ஆணை
ஓரஞ் சொல்கிலேன் நடுநின்று சொல்கின்றேன் உலகீர். 2

Koviloor Digital Library

1433 ஆதி அந்தமும் இல்லதோர் அம்பலத் தாடும்
சோதி தன்னையே நினைமின்கள் சுகம்பெற விழைவீர்
நீதி கொண்டுரைத் தேன்இது நீவிர்மேல் ஏறும்
வீதி மற்றைய வீதிகள் கீழ்ச்செலும் வீதி. 3

1434 நாதஞ் சொல்கின்ற திருச்சிற்றம் பலத்திலே நடிக்கும்
பாதஞ் சொல்கின்ற பத்தரே நித்தர்என் றறிமின்
வேதஞ் சொல்கின்ற பரிசிது மெய்ம்மையான் பக்க
வாதஞ் சொல்கிலேன் நடுநின்று சொல்கின்றேன் மதித்தே. 4

1435 துரிய மேல்பர வெளியிலே சுகநடம் புரியும்
பெரிய தோர்அருட் சோதியைப் பெறுதலே எவைக்கும்
அரிய பேறுமற் றவைஎலாம் எளியவே அறிமின்
உரிய இம்மொழி மறைமொழி சத்தியம் உலகீர். 5

1436 ஆக மாந்தமும் வேதத்தின் அந்தமும் அறையும்
பாக மாம்பர வெளிநடம் பரவுவீர் உலகீர்
மோக மாந்தருக் குரைத்திலேன் இதுசுகம் உன்னும்
யோக மாந்தர்க்குக் காலமுண் டாகவே உரைத்தேன். 6

1437 வான நாடரும் நாடரு மன்றிலே வயங்கும்
ஞான நாடகக் காட்சியே நாம்பெறல் வேண்டும்
ஊன நாடகக் காட்சியால் காலத்தை ஒழிக்கும்
ஈன நாடகப் பெரியர்காள் வம்மினோ ஈண்டே. 7

1438 சமயம் ஓர்பல கோடியும் சமயங்கள் தோறும்
அமையும் தெய்வங்கள் அனந்தமும் ஞானசன் மார்க்கத்
தெமையும் உம்மையும் உடையதோர் அம்பலத் திறையும்
அமைய அம்பலத்தாடும் பொற் பதமும்என் றறிமின். 8

1439 ஆறு கோடியாம் சமயங்கள் அகத்தினும் அவைமேல்
வீறு சேர்ந்தசித் தாந்தவே தாந்தநா தாந்தந்
தேறும் மற்றைய அந்தத்தும் சிவம்ஒன்றே அன்றி
வேறு கண்டிலேன் கண்டிரேல் பெரியர்காள் விளம்பீர். 9

1440 கலைஇ ருந்ததோர் திருச்சிற்றம் பலத்திலே கருணை
நிலைஇ ருந்தது நினைத்தவை யாவையும் பெறலாம்
மலைஇ ருந்தென இருப்பிரேல் வம்மினோ அன்றிக்
கொலைவி ரும்புவீர் எனிற்புறத் தேகுமின் குலைந்தே. 10

Koviloor Digital Library

1441 கதிஇ ருக்கின்ற திருச்சிற்றம் பலத்திலே கருணை
நிதிஇ ருக்கின்ற தாதலால் நீவிர்கள் எல்லாம்
பதிய இங்ஙனே வம்மினோ கொலைபயில் வீரேல்
விதியை நோமினோ போமினோ சமயவெப் பகத்தே. 11

1442 அருள்வி ளங்கிய திருச்சிற்றம் பலத்திலே அழியாப்
பொருள்வி ளங்குதல் காண்மினோ காண்மினோ புவியீர்
மருள்உ ளங்கொளும் வாதனை தவிர்ந்தருள் வலத்தால்
தெருள்வி ளங்குவீர் ஞானசன் மார்க்கமே தெளிமின். 12

திருச்சிற்றம்பலம்

102. இறைவன் வரவு இயம்பல்

நெஞ்சோடு கிளத்தல்

எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

1443 அப்பன்வரு தருணம்இதே ஐயம்இலை கண்டாய்
அஞ்சாதே அஞ்சாதே அகிலமிசை உள்ளார்க்
கெய்ப்பறவே சத்தியம்என் றுரைத்திடுநின் உரைக்கோர்
எள்ளளவும் பழுதுவரா தென்னிறைவர் ஆணை
இப்புவியோ வானகமும் வானகத்தின் புறத்தும்
எவ்வுயிரும் எவ்வெவரும் ஏத்திமகிழ்ந் திடவே
செப்பம்உறு திருவருட்பே ரொளிவடிவாய்க் களித்தே
செத்தாரை எழுப்புதல்நாந் திண்ணம்உணர் மனனே. 1

1444 இறைவன்வரு தருணம்இதே இரண்டிலைஅஞ் சலைநீ
எள்ளளவும் ஐயமுறேல் எவ்வுலகும் களிப்ப
நிறைமொழிகொண் டறைகஇது பழுதுவரா திறையும்
நீவேறு நினைத்தயரேல் நெஞ்சேநான் புகன்ற
முறைமொழிஎன் னுடையவன்தான் மொழிந்தமொழி எனக்கோர்
மொழிஇலைஎன் உடலாவி முதல்அனைத்துந் தானே
பொறையுறக்கொண் டருட்ஜோதி தன்வடிவும் உயிரும்
பொருளும்அளித் தெனைத்தானாய்ப் புணர்த்தியது காணே. 2

1445 என்இறைவன் வருதருணம் இதுகண்டாய் இதற்கோர்
எட்டுணையும் ஐயமிலை என்னுள் இருந்தெனக்கே
தன்னருள்தெள் ளமுதளிக்கும் தலைவன்மொழி இதுதான்
சத்தியம்சத் தியம்நெஞ்சே சற்றும்மயக் கடையேல்

Koviloor Digital Library

மன்னுலகத் துயிர்கள்எலாம் களித்துவியந் திடவே
வகுத்துரைத்துத் தெரித்திடுக வருநாள்உன் வசத்தால்
உன்னிஉரைத் திடமுடியா தாதலினால்இன்றே
உரைத்திடுதல் உபகாரம் உணர்ந்திடுக விரைந்தே. 3

1446 எல்லாஞ்செய் வல்லதனிப் பெருந்தலைமைச் சித்தன்
எனமறைஆ கமம்புகலும் என்இறைவன் மகிழ்ந்தே
நல்லார்கள் வியக்கஎனக் கிசைத்தபடி இங்கே
நான்உனக்கு மொழிகின்றேன் நன்றறிவாய் மனனே
பல்லாரும்களிப்படையப் பகல்இரவும் தோற்றாப்
பண்பின்அருட் பெருஞ்ஜோதி நண்பினொடு நமக்கே
எல்லாநன் மைகளும்உற வருதருணம் இதுவே
இவ்வுலகம் உணர்ந்திடநீ இசைத்திடுக விரைந்தே. 4

1447 கருநாள்கள் அத்தனையும் கழிந்தனநீ சிறிதும்
கலக்கமுறேல் இதுதொடங்கிக் கருணைநடப் பெருமான்
தருநாள்இவ் வுலகமெலாம் களிப்படைய நமது
சார்பின்அருட் பெருஞ்ஜோதி தழைத்துமிக விளங்கும்
திருநாள்கள் ஆம்இதற்கோர் ஐயம்இலை இதுதான்
திண்ணம்இதை உலகறியத் தெரித்திடுக மனனே
வருநாளில் உரைத்திடலாம்எனநினைத்து மயங்கேல்
வருநாளில் இன்பமயம் ஆகிநிறை வாயே. 5

1448 உள்ளபடி உரைக்கின்றேன் சத்தியமாம் உரையீது
உணர்ந்திடுக மனனேநீ உலகமெலாம் அறிய
வள்ளல்வரு தருணம்இது தருணம்இதே என்று
வகுத்துரைத்துத் தெரித்திடுக மயக்கம்அணுத் துணையும்
கொள்ளலைஎன் குருநாதன் அருட்ஜோதிப் பெருமான்
குறிப்பிதுஎன் குறிப்பெனவும் குறியாதே கண்டாய்
நள்ளுலகில் இனிநாளைக் குரைத்தும்எனத் தாழ்க்கேல்
நாளைதொட்டு நமக்கொழியா ஞானநடக் களிப்பே. 6

1449 மாயைவினை ஆணவமா மலங்களெலாம் தவிர்த்து
வாழ்வளிக்கும் பெருங்கருணை வள்ளல்வரு தருணம்
மேயதிது வாம்இதற்கோர் ஐயம்இலை இங்கே
விரைந்துலகம் அறிந்திடவே விளம்புகநீ மனனே
நாயகன்றன் குறிப்பிதுஎன் குறிப்பெனநீ நினையேல்
நாளைக்கே விரித்துரைப்பேம் எனமதித்துத் தாழ்க்கேல்
தூயதிரு அருட்ஜோதித் திருநடங்காண் கின்ற
தூயதிரு நாள்வருநாள் தொடங்கிஒழி யாவே. 7

Koviloor Digital Library

1450 மாற்றுரைக்க முடியாத திருமேனிப் பெருமான்
வருதருணம் இதுகண்டாய் மனனேநீ மயங்கேல்
நேற்றுரைத்தேன் இலைஉனக்கிங் கிவ்வாறென் இறைவன்
நிகழ்த்துகஇன் றென்றபடி நிகழ்த்துகின்றேன் இதுதான்
கூற்றுதைத்த திருவடிமேல் ஆணைஇது கடவுள்
குறிப்பெனக்கொண் டுலகமெலாம் குதுகலிக்க விரைந்தே
சாற்றிடுதி வருநாளில் உரைத்தும்எனத் தாழ்க்கேல்
தனித்தலைவன் அருள்நடஞ்செய் சாறொழியா இனியே. 8

1451 ஏதும்அறி யாச்சிறிய பயல்களினும் சிறியேன்
இப்பெரிய வார்த்தைதனக் கியானார்என் இறைவன்
ஓதுகநீ என்றபடி ஓதுகின்றேன் மனனே
உள்ளபடி சத்தியம்ஈ துணர்ந்திடுக நமது
தீதுமுழு தும்தவிர்த்தே சித்திஎலாம் அளிக்கத்
திருவருளாம் பெருஞ்ஜோதி அப்பன்வரு தருணம்
ஈதிதுவே என்றுலகம் அறியவிரைந் துரைப்பாய்
எல்லாரும் களிப்படைந்துள் இசைந்தேத்தி யிடவே. 9

1452 தனித்தலைவன் எல்லாஞ்செய் வல்லசித்தன் ஞான
சபைத்தலைவன் என்உளத்தே தனித்திருந்துள் உணர்த்தக்
கனித்தஉளத் தொடும்உணர்ந்தே உணர்த்துகின்றேன் இதைஓர்
கதைஎனநீ நினையேல்மெய்க் கருத்துரைஎன் றறிக
இனித்தஅருட் பெருஞ்ஜோதி ஆணைஎல்லாம் உடைய
இறைவன்வரு தருணம்இது சத்தியமாம்இதனைப்
பனித்தவுல கவர் அறிந்தே உய்யும்வகை இன்னே
பகர்ந்திடுக நாளைஅருட் பரமசுகச் சாறே. 10

திருச்சிற்றம்பலம்

103. தலைவி கூறல்

எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

1453 தந்தேகம் எனக்களித்தார் தம்அருளும் பொருளும்
தம்மையும்இங் கெனக்களித்தார் எம்மையினும் பிரியார்
எந்தேகம் அதிற்புகுந்தார் என்உளத்தே இருந்தார்
என்உயிரில் கலந்தநடத் திறையவர்கா லையிலே
வந்தேஇங் கமர்ந்தருள்வார் ஆதலினால் விரைந்தே
மாளிகையை அலங்கரித்து வைத்திடுதி இதற்குச்
சந்தேகம் இல்லைஎன்றன் தனித்தலைவர் வார்த்தை
சத்தியம்சத் தியம்மாதே சத்தியம்சத் தியமே. 1

Koviloor Digital Library

1454 நன்பாட்டு மறைகளுக்கும் மால்அயர்க்கும் கிடையார்
நம்அளவில் கிடைப்பாரோ என்றுநினைத் தேங்கி
என்பாட்டுக் கிருந்தேனை வலிந்துகலந் தணைந்தே
இன்பமுறத் தனிமாலை இட்டநடத் திறைவர்
முன்பாட்டுக் காலையிலே வருகுவர்மா ளிகையை
முழுதும்அலங் கரித்திடுக ஐயுறவோ டொருநீ
தன்பாட்டுக் கிருந்துளறேல்* ஐயர்திரு வார்த்தை
சத்தியம்சத் தியம்மாதே சத்தியம்சத் தியமே. 2

1455 முன்பாட்டுக் காலையிலே வருகுவர்என் கணவர்
மோசம்இலை மோசம்என மொழிகின்றார் மொழிக
பின்பாட்டுக் காலையிலே நினைத்தஎலாம் முடியும்
பிசகிலைஇம் மொழிசிறிதும் பிசகிலைஇவ் வுலகில்
துன்பாட்டுச் சிற்றினத்தார் சிறுமொழிகேட் டுள்ளம்
துளங்கேல்நம் மாளிகையைச் சூழஅலங் கரிப்பாய்
தன்பாட்டுத் திருப்பொதுவில் நடத்திறைவர் ஆணை
சத்தியம்சத் தியம்மாதே சத்தியம்சத் தியமே. 3

1456 உள்ளுண்ட உண்மைஎலாம் நான்அறிவேன் என்னை
உடையபெருந் தகைஅறிவார் உலகிடத்தே மாயைக்
கள்ளுண்ட சிற்றினத்தார் யாதறிவார் எனது
கணவர்திரு வரவிந்தக் காலையிலாம் கண்டாய்
நள்ளுண்ட மாளிகையை மங்கலங்கள் நிரம்ப
நன்குபுனைந் தலங்கரிப்பாய் நான்மொழிந்த மொழியைத்
தள்ளுண்டிங் கையமுறேல் நடத்திறைவர் ஆணை
சத்தியம்சத் தியம்மாதே சத்தியம்சத் தியமே. 4

1457 என்னுடைய தனிக்கணவர் அருட்ஜோதி உண்மை
யான்அறிவேன் உலகவர்கள் எங்ஙனம்கண்டறிவார்
உன்னல்அற உண்ணுதற்கும் உறங்குதற்கும் அறிவார்
உலம்புதல்கேட் டையமுறேல் ஓங்கியமா ளிகையைத்
தன்னுறம் மங்கலம் விளங்க அலங்கரிப்பாய் இங்கே
தூங்குதலால் என்ன பலன் சோர்வடையேல் பொதுவில்
தன்னுடைய நடம்புரியும் தலைவர்திரு ஆணை
சத்தியம்சத் தியம்மாதே சத்தியம்சத் தியமே. 5

1458 என்னைமண மாலைஇட்டார் என்னுயிரில் கலந்தார்
எல்லாம்செய் வல்லசித்தர் எனக்கறிவித் ததனை
இன்னஉல கினர்அறியார் ஆதலினால் பலவே
இயம்புகின்றார் இயம்புகநம் தலைவர்வரு தருணம்

* இருந்திடேல் – வே.ப.மு. பதிப்பு

Koviloor Digital Library

மன்னியகா லையில்ஆகும் மாளிகையை விரைந்து
மங்கலங்கள் புனைந்திடுக மயங்கிஐயம் அடையேல்
தன்நிகர்தா னாம்பொதுவில் நடம்புரிவார் ஆணை
சத்தியம்சத் தியம்மாதே சத்தியம்சத் தியமே. 6

1459 கிளைஅனந்த மறையாலும் நிச்சயிக்கக் கூடாக்
கிளர்ஒளியார் என்அளவில் கிடைத்ததனித் தலைவர்
அளையஎனக் குணர்த்தியதை யான்அறிவேன் உலகர்
அறிவாரோ அவர்உரைகொண் டையமுறேல் இங்கே
இளைவடையேன் மாளிகையை மங்கலங்கள் நிரம்ப
இனிதுபுனைந் தலங்கரிப்பாய் காலைஇது கண்டாய்
தளர்வறச்சிற் றம்பலத்தே நடம்புரிவார் ஆணை
சத்தியம்சத் தியம்மாதே சத்தியம்சத் தியமே. 7

1460 ஆர்அறிவார் எல்லாம்செய் வல்லவர்என் உள்ளே
அறிவித்த உண்மையைமால் அயன்முதலோர் அறியார்
பார்அறியா தயல்வேறு பகர்வதுகேட் டொருநீ
பையுளொடும் ஐயமுறேல் காலைஇது கண்டாய்
நேர்உறநீ விரைந்துவிரைந் தணிபெறமா ளிகையை
நீடஅலங் கரிப்பாய்உள் நேயமொடு களித்தே
தாரகமிங் கெனக்கான நடத்திறைவர் ஆணை
சத்தியம்சத் தியம்மாதே சத்தியம்சத் தியமே. 8

1461 ஐயர்எனக் குள்ளிருந்திங் கறிவித்த வரத்தை
யார்அறிவார் நான் அறிவேன் அவர் அறிவார் அல்லால்
பொய்உலகர் அறிவாரோ புல்லறிவால் பலவே
புகல்கின்றார் அதுகேட்டுப் புந்திமயக் கடையேல்
மெய்யர்எனை ஆளுடையார் வருகின்ற தருணம்
மேவியது மாளிகையை அலங்கரிப்பாய் விரைந்தே
தையல்ஒரு பாலுடைய நடத்திறைவர் ஆணை
சத்தியம்சத் தியம்மாதே சத்தியம்சத் தியமே. 9

1462 உடையவர்என் உளத்திருந்தே உணர்வித்த வரத்தை
உலகவர்கள் அறியார்கள் ஆதலினால் பலவே
இடைபுகல்கின் றார்அதுகேட் டையமுறேல் இங்கே
இரவுவிடிந் ததுகாலை எய்தியதால் இனியே
அடைவுறநம் தனித்தலைவர் தடையறவந் தருள்வார்
அணிபெறமா ளிகையைவிரைந் தலங்கரித்து மகிழ்க
சடையசையப் பொதுநடஞ்செய் இறைவர்திரு வார்த்தை
சத்தியம்சத் தியம்மாதே சத்தியம்சத் தியமே. 10

திருச்சிற்றம்பலம்

Koviloor Digital Library

104. உலகர்க்கு உய்வகை கூறல்

உறுதி கூறல்-1

எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

1463 கட்டோடே கனத்தோடே வாழ்கின்றோம் என்பீர்
கண்ணோடே கருத்தோடே கருத்தனைக் கருதீர்
பட்டோடே பணியோடே திரிகின்றீர் தெருவில்
பசியோடே வந்தாரைப் பார்க்கவும் நேரீர்
கொட்டோடே முழக்கோடே கோலங்காண் கின்றீர்
குணத்தோடே குறிப்போடே குறிப்பதைக் குறியீர்
எட்டோடே இரண்டுசேர்த் தெண்ணவும் அறியீர்
எத்துணை கொள்கின்றீர் பித்துல கீரே. 1

1464 ஆறாமல் அவியாமல் அடைந்தகோ பத்தீ
அடர்வுற உலகிடை அஞ்சாது திரிவீர்
மாறாமல் மனஞ்சென்ற வழிசென்று திகைப்பீர்
வழிதுறை காண்கிலீர் பழிபடும் படிக்கே
நாறாத மலர்போலும் வாழ்கின்றீர் மூப்பு
நரைதிரை மரணத்துக் கென்செயக் கடவீர்
ஏறாமல் வீணிலே இறங்குகின் றீரே
எத்துணை கொள்கின்றீர் பித்துல கீரே. 2

1465 ஆயாமை யாலேநீர் ஆதிஅ னாதி
ஆகிய சோதியை அறிந்துகொள் கில்லீர்
மாயாமை பிறவாமை வழியொன்றும் உணரீர்
மறவாமை நினையாமை வகைசிறி தறியீர்
காயாமை பழுக்கின்ற கருத்தையும் கருதீர்
கண்மூடித் திரிகின்றீர் கனிவொடும் இரப்போர்க்
கீயாமை ஒன்றையே இன்துணை என்பீர்
எத்துணை கொள்கின்றீர் பித்துல கீரே. 3

1466 சாமாந்தர் ஆகாத் தரஞ்சிறி துணரீர்
தத்துவ ஞானத்தை இற்றெனத் தெரியீர்
மாமாந்த நோயுற்ற குழவியில் குழைந்தீர்
வாழ்க்கையில்அற்ப மகிழ்ச்சியும் பெற்றீர்
காமாந்த காரத்தில் கண்மூடித் திரிவீர்
கற்பன கற்கிலீர் கருத்தனைக் கருதா
தேமாந்து தூங்குகின் றீர்விழிக் கின்றீர்
எத்துணை கொள்கின்றீர் பித்துல கீரே. 4

Koviloor Digital Library

1467 அச்சையும் உடம்பையும் அறிவகை அறியீர்
அம்மையும் அப்பனும் ஆர்எனத் தெரியீர்
பச்சையும் செம்மையும் கருமையும் கூடிப்
பலித்தநும் வாழ்க்கையில் பண்பொன்றும் இல்லீர்
பிச்சையிட் டுண்ணவும் பின்படு கின்றீர்
பின்படு தீமையின் முன்படு கின்றீர்
இச்சையில் கண்மூடி எச்சுகம் கண்டீர்
எத்துணை கொள்கின்றீர் பித்துல கீரே. 5

1468 வட்டிமேல் வட்டிகொள் மார்க்கத்தில் நின்றீர்
வட்டியை வளர்க்கின்ற மார்க்கத்தை அறியீர்
பெட்டிமேல் பெட்டிவைத் தாள்கின்றீர் வயிற்றுப்
பெட்டியை நிரப்பிக்கொண் டொட்டியுள் இருந்தீர்
பட்டினி கிடப்பாரைப் பார்க்கவும் நேரீர்
பழங்கஞ்சி ஆயினும் வழங்கவும் நினையீர்
எட்டிபோல் வாழ்கின்றீர் கொட்டிபோல் கிளைத்தீர்
எத்துணை கொள்கின்றீர் பித்துல கீரே. 6

1469 வன்சொல்லின் அல்லது வாய்திறப் பறியீர்
வாய்மையும் தூய்மையும் காய்மையில் வளர்ந்தீர்
முன்சொல்லும் ஆறொன்று பின்சொல்வ தொன்றாய்
மூட்டுகின் றீர்வினை மூட்டையைக் கட்டி
மன்சொல்லும் மார்க்கத்தை மறந்துதுன் மார்க்க
வழிநடக் கின்றீர்அம் மரணத்தீர்ப் புக்கே
என்சொல்ல இருக்கின்றீர் பின்சொல்வ தறியீர்
எத்துணை கொள்கின்றீர் பித்துல கீரே. 7

1470 துன்மார்க்க நடையிடைத் தூங்குகின் றீரே
தூக்கத்தை விடுகின்ற துணைஒன்றும் கருதீர்
சன்மார்க்க சங்கத்தைச் சார்ந்திட விழையீர்
சாவையும் பிறப்பையும் தவிர்ந்திட விரும்பீர்
பன்மார்க்கம் செல்கின்ற படிற்றுளம் அடக்கீர்
பசித்தவர் தம்முகம் பார்த்துண வளியீர்
என்மார்க்கம் எச்சுகம் யாதுநும் வாழ்க்கை
எத்துணை கொள்கின்றீர் பித்துல கீரே. 8

1471 பொய்கட்டிக் கொண்டுநீர் வாழ்கின்றீர் இங்கே
புலைகட்டிக் கொண்டஇப் பொய்யுடல் வீழ்ந்தால்
செய்கட்டி வாழ்கின்ற செருக்கற்று நரகில்
சிறுபுழு ஆகித் திகைத்திடல் அறியீர்

Koviloor Digital Library

கைகட்டி வாய்பொத்தி நிற்பாரைக் கண்டே
கைகொட்டிச் சிரிக்கின்றீர் கருணைஒன் றில்லீர்
எய்கட்டி இடைமொய்க்கும் ஈயினும் சிறியீர்
எத்துணை கொள்கின்றீர் பித்துல கீரே. 9

1472 பண்ணாத தீமைகள் பண்ணுகின் றீரே
பகராத வன்மொழி பகருகின் றீரே
நண்ணாத தீயின நண்ணுகின் றீரே
நடவாத நடத்தைகள் நடக்கவந் தீரே
கண்ணாகக் காக்கின்ற கருத்தனை நினைந்தே
கண்ணார நீர்விட்டுக் கருதறி யீரே
எண்ணாத தெண்ணவும் நேரும்ஓர் காலம்
எத்துணை கொள்கின்றீர் பித்துல கீரே. 10

திருச்சிற்றம்பலம்

105. புனித குலம்பெறுமாறு புகலல்

உறுதி கூறல்-2

எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

1473 சாதியிலே மதங்களிலே சமயநெறி களிலே
சாத்திரச்சந் தடிகளிலே கோத்திரச்சண் டையிலே
ஆதியிலே அபிமானித் தலைகின்ற உலகீர்
அலைந்தலைந்து வீணேநீர் அழிதல்அழ கலவே
நீதியிலே சன்மார்க்க நிலைதனிலே ஞான
நிருத்தமிடும் தனித்தலைவர் ஒருத்தர்அவர் தாமே
வீதியிலே அருட்ஜோதி விளையாடல் புரிய
மேவுகின்ற தருணம்இது கூவுகின்றேன் உமையே. 1

1474 காடுவெட்டி நிலந்திருத்திக் காட்டெருவும் போட்டுக்
கரும்பைவிட்டுக் கடுவிரைத்துக் களிக்கின்ற உலகீர்
கூடுவிட்டுப் போயினபின் எதுபுரிவீர் இங்கே
குடியிருப்பீர் ஐயோநீர் குறித்தறியீர் இங்கே
பாடுபட்டீர் பயன்அறியீர் பாழ்க்கிறைத்துக் கழித்தீர்
பட்டதெலாம் போதும்இது பரமர்வரு தருணம்
ஈடுகட்டி வருவீரேல் இன்பம்மிகப் பெறுவீர்
எண்மைஉரைத் தேன்அலன்நான் உண்மையுரைத் தனனே. 2

Koviloor Digital Library

1475 ஆற்றுவெள்ளம் வருவதன்முன் அணைபோட அறியீர்
அகங்காரப் பேய்பிடித்தீர் ஆடுதற்கே அறிவீர்
கூற்றுவருங் கால்அதனுக் கெதுபுரிவீர் ஐயோ
கூற்றுதைத்த சேவடியைப் போற்றவிரும் பீரே
வேற்றுரைத்து வினைபெருக்கி மெலிகின்ற உலகீர்
வீணுலகக் கொடுவழக்கை விட்டுவிட்டு வம்மின்
சாற்றுவக்க எனதுதனித் தந்தைவரு கின்ற
தருணம்இது சத்தியஞ்சிற் சத்தியைச்சார் வதற்கே. 3

1476 பொய்விளக்கப் புகுகின்றீர் போதுகழிக் கின்றீர்
புலைகொலைகள் புரிகின்றீர் கலகலஎன் கின்றீர்
கைவிளக்குப் பிடித்தொருபாழ்ங் கிணற்றில்விழு கின்ற
களியர்எனக் களிக்கின்றீர் கருத்திருந்தும் கருதீர்
ஐவிளக்கு மூப்புமர ணாதிகளை நினைத்தால்
அடிவயிற்றை முறுக்காதோ கொடியமுயற் றுலகீர்
மெய்விளக்க எனதுதந்தை வருகின்ற தருணம்
மேவியதீண் டடைவீரேல் ஆவிபெறு வீரே. 4

1477 எய்வகைசார் மதங்களிலே பொய்வகைச்சாத் திரங்கள்
எடுத்துரைத்தே எமதுதெய்வம் எமதுதெய்வம் என்று
கைவகையே கதறுகின்றீர் தெய்வம்ஒன்றென் றறியீர்
கரிபிடித்துக் கலகமிட்ட பெரியரினும் பெரியீர்
ஐவகைய பூதவுடம் பழிந்திடில்என் புரிவீர்
அழியுடம்பை அழியாமை ஆக்கும்வகை அறியீர்
உய்வகை என் தனித்தந்தை வருகின்ற தருணம்
உற்றதிவண் உற்றிடுவீர் பெற்றிடுவீர் உவப்பே. 5

1478 உடம்புவரு வகைஅறியீர் உயிர்வகையை அறியீர்
உடல்பருக்க உண்டுநிதம் உறங்குதற்கே அறிவீர்
மடம்புகுபேய் மனத்தாலே மயங்குகின்றீர் மனத்தை
வசப்படுத்தீர் வசப்படுத்தும் வழிதுறைகற் றறியீர்
இடம்பெறுபொய் வாழ்க்கையிலே இன்பதுன்பம் அடுத்தே
எண்ணிஎண்ணி இளைக்கின்றீர் ஏழைஉல கீரே
நடம்புரிஎன் தனித்தந்தை வருகின்ற தருணம்
நண்ணியது நண்ணுமினோ புண்ணியஞ்சார் வீரே. 6

1479 நரைமரண மூப்பறியா நல்லஉடம் பினரே
நற்குலத்தார் எனஅறியீர் நானிலத்தீர் நீவிர்
வரையில்உயர் குலம்என்றும் தாழ்ந்தகுலம் என்றும்
வகுக்கின்றீர் இருகுலமும் மாண்டிடக்காண் கின்றீர்

Koviloor Digital Library

புரையுறுநும் குலங்கள்எலாம் புழுக்குலம்என் றறிந்தே
புத்தமுதம் உண்டோங்கும் புனிதகுலம் பெறவே
உரைபெறும்என் தனித்தந்தை வருகின்ற தருணம்
உற்றதிவண் உற்றிடுவீர் உண்மைஉரைத் தேனே. 7

1480 கனமுடையேம் கட்டுடையேம் என்றுநினைத் திங்கே
களித்திறுமாந் திருக்கின்றீர் ஒளிப்பிடமும் அறியீர்
சினமுடைய கூற்றுவரும் செய்திஅறி யீரோ
செத்தநும தினத்தாரைச் சிறிதும்நினை யீரோ
தினகரன்போல் சாகாத தேகமுடை யவரே
திருவுடையார் எனஅறிந்தே சேர்ந்திடுமின் ஈண்டே
மனமகிழ்ந்து கேட்கின்ற வரமெல்லாம் எனக்கே
வழங்குதற்கென் தனித்தந்தை வருதருணம் இதுவே. 8

1481 வையகத்தீர் வானகத்தீர் மற்றகத்தீர் நுமது
வாழ்க்கைஎலாம் வாழ்க்கைஎன மதித்துமயங் காதீர்
மையகத்தே உறுமரண வாதனையைத் தவிர்த்த
வாழ்க்கையதே வாழ்க்கைஎன மதித்ததனைப் பெறவே
மெய்அகத்தே விரும்பிஇங்கே வந்திடுமின் எனது
மெய்ப்பொருளாம் தனித்தந்தை இத்தருணந் தனிலே
செய்அகத்தே வளர்ஞான சித்திபுரந் தனிலே
சித்தாடல் புரிகின்றார் திண்ணம்இது தானே. 9

1482 கரணம்மிகக் களிப்புறவே கடல்உலகும் வானும்
கதிபதிஎன் றாளுகின்றீர் அதிபதியீர் நீவிர்
மரணபயம் தவிராதே வாழ்வதில்என் பயனோ
மயங்காதீர் உயங்காதீர் வந்திடுமின் ஈண்டே
திரணமும்ஓர் ஐந்தொழிலைச் செய்யஒளி வழங்கும்
சித்திபுரம் எனஓங்கும் உத்தரசிற் சபையில்
சரணம்எனக் களித்தெனையும் தானாக்க எனது
தனித்தந்தை வருகின்ற தருணம்இது தானே. 10

திருச்சிற்றம்பலம்

Koviloor Digital Library

106. சுத்த சிவநிலை

நேரிசை வெண்பா

திருச்சிற்றம்பலம்

1483 கண்ணிற் கலந்தான் கருத்திற் கலந்தான்என்
எண்ணிற் கலந்தே இருக்கின்றான் – பண்ணிற்
கலந்தான்என் பாட்டிற் கலந்தான் உயிரில்
கலந்தான் கருணை கலந்து. 1

1484 எல்லா நலமும் எனக்கே கொடுக்கின்றான்
எல்லாம் செயவல்லான் எம்பெருமான் – எல்லாமாய்
நின்றான் பொதுவில் நிருத்தம் புரிகின்றான்
ஒன்றாகி நின்றான் உவந்து. 2

1485 எண்ணுகின்றேன் எண்ணங்கள் எல்லாம் தருகின்றான்
பண்ணுகின்றேன் பண்ணுவித்துப் பாடுகின்றான் – உண்ணுகின்றேன்
தெள்ளமுதம் உள்ளந் தெளியத் தருகின்றான்
வள்ளல்நட ராயன் மகிழ்ந்து. 3

1486 சித்தியெலாந் தந்தே திருவம் பலத்தாடும்
நித்தியனென் உள்ளே நிறைகின்றான் – சத்தியம்ஈ
தந்தோ உலகீர் அறியீரோ நீவிரெலாம்
சந்தோட மாய்இருமின் சார்ந்து. 4

1487 அய்யாஎன் றோர்கால் அழைக்கின்றேன் அப்பொழுதே
எய்யேன் மகனேஎன் றெய்துகின்றான் – ஐயாஎன்
அப்பன் பெருங்கருணை யார்க்குண் டுலகத்தீர்
செப்பமுடன் போற்றுமினோ சேர்ந்து. 5

1488 அப்பாஎன் றோர்கால் அழைக்கின்றேன் அப்பொழுதே
அப்பா மகனேஎன் றார்கின்றான் – துப்பார்
சடையான்சிற் றம்பலத்தான் தானேதான் ஆனான்
உடையான் உளத்தே உவந்து. 6

1489 தானேவந் தென் உளத்தே சார்ந்து கலந்துகொண்டான்
தானே எனக்குத் தருகின்றான் – தானேநான்
ஆகப் புரிந்தானென் அப்பன் பெருங்கருணை
மேகத்திற் குண்டோ விளம்பு. 7

Koviloor Digital Library

1490 பாலும் கொடுத்தான் பதிதிறக்கும் ஓர்திறவு
கோலும் கொடுத்தான் குணங்கொடுத்தான் – காலும்
தலையும் அறியும் தரமும் கொடுத்தான்
நிலையும் கொடுத்தான் நிறைந்து. 8

1491 வெவ்வினையும் மாயை விளையும் தவிர்ந்தனவே
செவ்வைஅறி வின்பம் சிறந்தனவே – எவ்வயினும்
ஆனான்சிற் றம்பலத்தே ஆடுகின்றான் தண்அருளாம்
தேன்நான்உண் டோங்கியது தேர்ந்து. 9

1492 வஞ்சவினை எல்லாம் மடிந்தனவன் மாயைஇருள்
அஞ்சிஎனை விட்டே அகன்றனவால் – எஞ்சலிலா
இன்பமெல்லாம் என்றனையே எய்தி நிறைந்தனவால்
துன்பமெலாம் போன தொலைந்து. 10

1493 அம்மை திரோதை அகன்றாள் எனைவிரும்பி
அம்மைஅருட் சத்தி அடைந்தனளே – இம்மையிலே
மாமாயை நீங்கினள்பொன் வண்ணவடி வுற்றதென்றும்
சாமா றிலைஎனக்குத் தான். 11

1494 நானே தவம்புரிந்தேன் நானிலத்தீர் அம்பலவன்
தானேவந் தென்னைத் தடுத்தாண்டான் – ஊனே
புகுந்தான்என் உள்ளம் புகுந்தான் உயிரில்
புகுந்தான் கருணை புரிந்து. 12

1495 ஒன்றே சிவம்என் றுணர்ந்தேன் உணர்ந்தாங்கு
நின்றேமெய்ஞ் ஞான நிலைபெற்றேன் – நன்றேமெய்ச்
சித்தியெலாம் பெற்றேன் திருஅம்ப லத்தாடி
பத்திஎலாம் பெற்ற பலன். 13

1496 தூக்கங் கெடுத்தான் சுகங்கொடுத்தான் என்னுளத்தே
ஏக்கந் தவிர்த்தான் இருள்அறுத்தான் – ஆக்கமிகத்
தந்தான் எனைஈன்ற தந்தையே என்றழைக்க
வந்தான்என் அப்பன் மகிழ்ந்து. 14

1497 வாட்டமெலாம் தீர்த்தான் மகிழ்வளித்தான் மெய்ஞ்ஞான
நாட்டமெலாம் தந்தான் நலங்கொடுத்தான் – ஆட்டமெலாம்
ஆடுகநீ என்றான்தன் ஆனந்த வார்கழலைப்
பாடுகநீ என்றான் பரன். 15

Koviloor Digital Library

1498 தான்நான் எனும்பேதந் தன்னைத் தவிர்த்தான்நான்
ஆனான்சிற் றம்பலவன் அந்தோநான் – வானாடர்
செய்தற் கரியதவம் செய்தேன் மகிழ்கின்றேன்
எய்தற் கரியசுகம் ஏய்ந்து. 16

1499 சுத்த வடிவும் சுகவடிவாம் ஓங்கார
நித்த வடிவும் நிறைந்தோங்கு – சித்தெனும்ஓர்
ஞான வடிவுமிங்கே நான்பெற்றேன் எங்கெங்கும்
தானவிளை யாட்டியற்றத் தான். 17

1500 நான்உரைக்கும் வார்த்தைஎலாம் நாயகன்சொல் வார்த்தைஅன்றி
நான்உரைக்கும் வார்த்தை அன்று நாட்டீர்நான் – ஏன்உரைப்பேன்
நான்ஆர் எனக்கெனஓர் ஞானஉணர் வேதுசிவம்
ஊன்நாடி நில்லாஉழி. 18

1501 ஆரணமும் ஆகமமும் ஆங்காங் குரைக்கின்ற
காரணமும் காரியமும் காட்டுவித்தான் – தாரணியில்
கண்டேன் களிக்கின்றேன் கங்குல்பகல் அற்றவிடத்
துண்டேன் அமுதம் உவந்து. 19

1502 துன்மார்க்கம் எல்லாம் தொலைத்துவிட்டேன் சுத்தசிவ
சன்மார்க்க சங்கம் தலைப்பட்டேன் – என்மார்க்கம்
நன்மார்க்கம் என்றேவான் நாட்டார் புகழ்கின்றார்
மன்மார்க்கத் தாலே மகிழ்ந்து. 20

1503 பன்மார்க்கம் எல்லாம் பசையற் றொழிந்தனவே
சன்மார்க்கம் ஒன்றே தழைத்ததுவே – சொன்மார்க்கத்
தெல்லா உலகும் இசைந்தனவே எம்பெருமான்
கொல்லா நெறிஅருளைக் கொண்டு. 21

1504 சாதிகுலம் என்றும் சமயமதம் என்றுமுப
நீதிஇயல்* ஆச்சிரம நீட்டென்றும் – ஓதுகின்ற
பேயாட்ட மெல்லாம் பிதிர்ந்தொழிந்த வேபிறர்தம்
வாயாட்டம் தீர்ந்தனவே மற்று. 22

1505 சிந்தா குலந்தவிர்த்துச் சிற்றம் பலப்பெருமான்
வந்தான் எனைத்தான் வலிந்தழைத்தே – ஐந்தொழிலும்
நீயேசெய் என்றெனக்கே நேர்ந்தளித்தான் என்னுடைய
தாயே அனையான் தனித்து. 23

---

* நீதிஇல் – வே.ப.மு. பதிப்பு

Koviloor Digital Library

1506 கூகா எனஅடுத்தோர் கூடி அழாதவண்ணம்
சாகா வரம்எனக்கே தந்திட்டான் – ஏகாஅ
னேகா எனமறைகள் ஏத்துஞ்சிற் றம்பலத்தான்
மாகா தலனா மகிழ்ந்து. 24

1507 நாடுகின்ற தெம்பெருமான் நாட்டமதே நான் உலகில்
ஆடுகின்ற தெந்தைஅருள் ஆட்டமதே – பாடுகின்ற
பாட்டெல்லாம் அம்பலவன் பாத மலர்ப்பாட்டே
நீட்டெல்லாம் ஆங்கவன்தன் நீட்டு. 25

1508 சத்தியஞ்செய் கின்றேன் சகத்தீர் அறிமின்கள்
சித்திஎலாம் வல்ல சிவம்ஒன்றே – நித்தியம் என்
றெண்ணுமெண்ணத் தாலேநம் எண்ணமெலாம் கைகூடும்
நண்ணுமின்பத் தேன்என்று நான். 26

1509 நானே தவம்புரிந்தேன் நம்பெருமான் நல்லருளால்
நானே அருட்சத்தி நாடடைந்தேன் – நானே
அழியா வடிவம் அவைமூன்றும் பெற்றேன்
இழியாமல் ஆடுகின்றேன் இங்கு. 27

1510 எவ்வுலகும் அண்டங்கள் எத்தனையும் நான்காண
இவ்வுலகில் எந்தை எனக்களித்தான் – எவ்வுயிரும்
சன்மார்க்க சங்கம்தனை அடையச் செய்வித்தே
என்மார்க்கம் காண்பேன் இனி. 28

1511 சாத்திரங்கள் எல்லாம் தடுமாற்றம் சொல்வதன்றி
நேத்திரங்கள் போல்காட்ட நேராவே – நேத்திரங்கள்
சிற்றம் பலவன் திருவருள்சீர் வண்ணமென்றே
உற்றிங் கறிந்தேன் உவந்து. 29

1512 வேதாக மங்களென்று வீண்வாதம் ஆடுகின்றீர்
வேதாக மத்தின்விளைவறியீர் – சூதாகச்
சொன்னவலால் உண்மைவெளி தோன்ற உரைக்கவிலை
என்ன பயனோ இவை. 30

1513 சாகாத கல்வித் தரம்அறிதல் வேண்டுமென்றும்
வேகாத கால்உணர்தல் வேண்டுமுடன் – சாகாத்
தலைஅறிதல் வேண்டும் தனிஅருளால் உண்மை
நிலைஅடைதல் வேண்டும் நிலத்து. 31

Koviloor Digital Library

1514 பொய்உரைஎன் றெண்ணுதிரேல் போமின் புறக்கடையில்
மெய்யுரைஎன் றெண்ணுதிரேல் மேவுமினோ – ஐயனருள்
சித்திஎலாம் வல்ல திருக்கூத் துலவாமல்
இத்தினந்தொட் டாடுகிற்பான் இங்கு. 32

1515 வான்வந்த தேவர்களும் மால்அயனும் மற்றவரும்
தான்வந்து சூழ்ந்தார் தலைக்கடையில் – தேன்வந்த
மங்கை சிவகாம வல்லியொடும் எம்பெருமான்
இங்குநடஞ் செய்வான் இனி. 33

1516 சத்திஎலாம் கொண்டதனித் தந்தை நடராயன்
சித்திஎலாம் வல்லான் திருவாளன் – நித்தியன்தான்
ஊழிபல சென்றாலும் ஓவாமல் இவ்விடத்தே
வாழிநடஞ் செய்வான் மகிழ்ந்து. 34

1517 இன்று தொடங்கியிங்கே எம்பெருமான் எந்நாளும்
நன்று துலங்க நடம்புரிவான் – என்றுமென்சொல்
சத்தியம்என் றெண்ணிச் சகத்தீர் அடைமின்கள்
நித்தியம்பெற் றுய்யலாம் நீர். 35

1518 என்உடலும் என்பொருளும் என்உயிரும் தான்கொண்டான்
தன்உடலும் தன்பொருளும் தன்உயிரும் – என்னிடத்தே
தந்தான் அருட்சிற் சபையப்பா என்றழைத்தேன்
வந்தான்வந் தான்உள் மகிழ்ந்து. 36

1519 செத்தாரை எல்லாம் திரும்ப எழுப்புதல்இங்
கெத்தால் முடியுமெனில் எம்மவரே – சித்தாம்
அருட்பெருஞ் ஜோதி அதனால் முடியும்
தெருட்பெருஞ் சத்தியம்ஈ தே. 37

1520 இவ்வுலகில் செத்தாரை எல்லாம் எழுகஎனில்
எவ்வுலகும் போற்ற எழுந்திருப்பார் – செவ்வுலகில்
சிற்றம் பலத்தான் திருவருள்பெற் றார்நோக்கம்
உற்றவரை உற்றவர்கள் உற்று. 38

1521 யான்புரிதல் வேண்டுங்கொல் இவ்வுலகில் செத்தாரை
ஊன்புரிந்து மீள உயிர்ப்பித்தல் – வான்புரிந்த
அம்பலத்தான் நல்லருளால் அந்தோநான் மேற்போர்த்த
கம்பலத்தால் ஆகும் களித்து. 39

Koviloor Digital Library

1522 என்னே உலகில் இறந்தார் எழுதல்மிக
அன்னே அதிசயமென் றாடுகின்றார் – இன்னே
திருவம் பலத்தான் திருநோக்கம் பெற்றார்க்
குருவம் பலத்தேஎன் றுன். 40

1523 ஆடாதீர் சற்றும் அசையாதீர் வேறொன்றை
நாடாதீர் பொய்உலகை நம்பாதீர் – வாடாதீர்
சன்மார்க்க சங்கத்தைச் சார்வீர் விரைந்தினிஇங்
கென்மார்க்க மும்ஒன்றா மே. 41

1524 மார்க்கமெலாம் ஒன்றாகும் மாநிலத்தீர் வாய்மைஇது
தூக்கமெலாம் நீக்கித் துணிந்துளத்தே – ஏக்கம்விட்டுச்
சன்மார்க்க சங்கத்தைச் சார்ந்திடுமின் சத்தியம்நீர்
நன்மார்க்கம் சேர்வீர்இந் நாள். 42

1525 இந்நாளே கண்டீர் இறந்தார் எழுகின்ற
நன்னாள்என் வார்த்தைதனை நம்புமினோ–இந்நாள்
அருட்பெருஞ் ஜோதி அடைகின்ற நாள்மெய்
அருட்பெருஞ் சத்தியம்ஈ தாம். 43

1526 ஏமாந் திருக்கும் எமரங்காள் இவ்வுலகில்
சாமாந்தர் ஆகாத் தரம்பெறவே – காமாந்த
காரத்தை விட்டுக் கருதுமினோ இத்தருணம்
நீரத்தைச் சேர்வீர் நிஜம். 44

1527 வீணே பராக்கில் விடாதீர் உமதுளத்தை
நாணே உடைய நமரங்காள் – ஊணாகத்
தெள்ளமுதம் இன்றெனக்குச் சேர்த்தளித்தான் சித்தாட
உள்ளியநாள் ஈதறிமின் உற்று. 45

1528 போற்றி உரைக்கின்றேன் பொய்என் றிகழாதீர்
நாற்றிசைக்கண் வாழும் நமரங்காள் – ஆற்றலருள்
அப்பன்வரு கின்றான் அருள்விளையாட் டாடுதற்கென்
றிப்புவியில் இத்தருணம் இங்கு. 46

1529 ஆளுடையான் நம்முடைய அப்பன் வருகின்ற
நாள்எதுவோ என்று நலியாதீர் – நீள
நினையாதீர் சத்தியம்நான் நேர்ந்துரைத்தேன் இந்நாள்
அனையான் வருகின்றான் ஆய்ந்து. 47

திருச்சிற்றம்பலம்

Koviloor Digital Library

107. ஞானசரியை

வாய்ப்பறை யார்த்தல்

எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

1530 நினைந்துநினைந் துணர்ந்துணர்ந்து நெகிழ்ந்துநெகிழ்ந் தன்பே
நிறைந்துநிறைந்து ஊற்றெழுங்கண் ணீரதனால் உடம்பு
நனைந்துநனைந் தருளமுதே நன்னிதியே ஞான
நடத்தரசே என்னுரிமை நாயகனே என்று
வனைந்துவனைந் தேத்துதும்நாம் வம்மின்உல கியலீர்
மரணமிலாப் பெருவாழ்வில் வாழ்ந்திடலாம் கண்டீர்
புனைந்துரையேன் பொய்புகலேன் சத்தியஞ்சொல் கின்றேன்
பொற்சபையில் சிற்சபையில் புகுந்தருணம் இதுவே. 1

1531 புகுந்தருணம் இதுகண்டீர் நம்மவரே நான்தான்
புகல்கின்றேன் என்மொழிஓர் பொய்மொழிஎன் னாதீர்
உகுந்தருணம் உற்றவரும் பெற்றவரும் பிறரும்
உடைமைகளும் உலகியலும் உற்றதுணை அன்றே
மிகுந்தசுவைக் கரும்பேசெங் கனியேகோற் தேனே
மெய்ப்பயனே கைப்பொருளே விலையறியா மணியே
தகுந்ததனிப் பெரும்பதியே தயாநிதியே கதியே
சத்தியமே என்றுரைமின் பத்தியொடு பணிந்தே. 2

1532 பணிந்துபணிந் தணிந்தணிந்து பாடுமினோ உலகீர்
பரம்பரமே சிதம்பரமே பராபரமே வரமே
துணிந்துவந்த வேதாந்த சுத்தஅனு பவமே
துரியமுடி அனுபவமே சுத்தசித்தாந் தமதாய்த்
தணிந்தநிலைப் பெருஞ்சுகமே சமரசசன் மார்க்க
சத்தியமே இயற்கையுண்மைத் தனிப்பதியே என்று
கணிந்துளத்தே கனிந்துநினைந் துரைத்திடில்அப் பொழுதே
காணாத காட்சிஎலாம் கண்டுகொளல் ஆமே. 3

1533 கண்டதெலாம் அநித்தியமே கேட்டதெலாம் பழுதே
கற்றதெலாம் பொய்யேநீர் களித்ததெலாம் வீணே
உண்டதெலாம் மலமேஉட் கொண்டதெலாம் குறையே
உலகியலீர் இதுவரையும் உண்மையறிந் திலிரே
விண்டதனால் என்இனிநீர் சமரசசன் மார்க்க
மெய்ந்நெறியைக் கடைப்பிடித்து மெய்ப்பொருள்நன் குணர்ந்தே
எண்டகுசிற் றம்பலத்தே எந்தைஅருள் அடைமின்
இறவாத வரம்பெறலாம் இன்பமுற லாமே. 4

Koviloor Digital Library

1534 இன்புறலாம் எவ்வுலகும் ஏத்திடவாழ்ந் திடலாம்
எல்லாம்செய் வல்லசித்தி இறைமையும்பெற் றிடலாம்
அன்புடையீர் வம்மின் இங்கே சமரசசன் மார்க்கம்
அடைந்திடுமின் அகவடிவிங் கனகவடி வாகிப்
பொன்புடைநன் கொளிர்ஒளியே புத்தமுதே ஞான
பூரணமே ஆரணத்தின் பொருள்முடிமேல் பொருளே
வன்புடையார் பெறற்கரிதாம் மணியேசிற் சபையின்
மாமருந்தே என்றுரைமின் தீமையெலாம் தவிர்ந்தே. 5

1535 தீமைஎலாம் நன்மைஎன்றே திருஉளங்கொண் டருளிச்
சிறியேனுக் கருளமுதத் தெளிவளித்த திறத்தை
ஆமயந்தீர்த் தியற்கைஇன்ப அனுபவமே மயமாய்
அம்பலத்தே விளங்குகின்ற அருட்பெருஞ்ஜோ தியைஓர்
ஓமயவான் வடிவுடையார் உள்ளகத்தே நிறைந்த
ஒருபொருளைப் பெருங்கருணை உடையபெரும் பதியை
நாமருவி இறவாத நலம்பெறலாம் உலகீர்
நல்லஒரு தருணம்இது வல்லைவம்மின் நீரே. 6

1536 நீர்பிறரோ யான்உமக்கு நேயஉற வலனோ
நெடுமொழியே உரைப்பன் அன்றிக் கொடுமொழிசொல் வேனோ
சார்புறவே அருளமுதம் தந்தெனைமேல் ஏற்றித்
தனித்தபெருஞ் சுகம்அளித்த தனித்தபெரும் பதிதான்
சீர்பெறவே திருப்பொதுவில் திருமேனி தரித்துச்
சித்தாடல் புரிகின்ற திருநாள்கள் அடுத்த
ஓர்புறவே இதுநல்ல தருணம்இங்கே வம்மின்
உலகியலீர் உன்னியவா றுற்றிடுவீர் விரைந்தே. 7

1537 விரைந்துவிரைந் தடைந்திடுமின் மேதினியீர் இங்கே
மெய்மைஉரைக் கின்றேன்நீர் வேறுநினை யாதீர்
திரைந்துதிரைந் துளுத்தவரும் இளமைஅடைந் திடவும்
செத்தவர்கள் எழுந்திடவும் சித்தாடல் புரிய
வரைந்துவரைந் தெல்லாஞ்செய் வல்லசித்தன் தானே
வருகின்ற தருணம்இது வரம்பெறலாம் நீவிர்
கரைந்துகரைந் துளம்உருகிக் கண்களில்நீர் பெருகிக்
கருணைநடக் கடவுளைஉட் கருதுமினோ களித்தே. 8

1538 களித்துலகில் அளவிகந்த காலம்உல கெல்லாம்
களிப்படைய அருட்ஜோதிக் கடவுள்வரு தருணம்
தெளித்திடும்எத் தருணம்அதோ என்னாதீர் இதுவே
செத்தவரை எழுப்புகின்ற திகழ்தருணம் உலகீர்

Koviloor Digital Library

ஒளித்துரைக்கின்றேன் அலன்நான் வாய்ப்பறைஆர்க் கின்றேன்
ஒருசிறிதும் அச்சமுறேன் உள்ளபடி உணர்ந்தேன்
அளித்திடுசிற் றம்பலத்தென் அப்பன்அருள் பெறவே
ஆசைஉண்டேல் வம்மின்இங்கே நேசமுடையீரே. 9

1539 ஆசைஉண்டேல் வம்மின் இங்கே அருட்ஜோதிப் பெருமான்
அம்மையுமாய் அப்பனுமாய் அருளும்அரு ளாளன்
ஏசறநீத் தெனை ஆட்கொண் டெண்ணியவா றளித்தான்
எல்லாஞ்செய் வல்லசித்தன் என்னுயிரில் கலந்தான்
தேசுடைய பொதுவில்அருள் திருநடனம் புரியத்
திருவுளங்கொண் டெழுந்தருளும் திருநாள்இங் கிதுவே
மோசஉரை எனநினைத்து மயங்காதீர் உலகீர்
முக்காலத் தினும்அழியா மூர்த்தம் அடைந் திடவே. 10

1540 அடைந்திடுமின் உலகீர்இங் கிதுதருணம் கண்டீர்
அருட்ஜோதிப் பெரும்பதிஎன் அப்பன்வரு தருணம்
கடைந்ததனித் திருவமுதம் களித்தருத்தி எனக்கே
காணாத காட்சிஎலாம் காட்டுகின்ற தருணம்
இடைந்தொருசார் அலையாதீர் சுகம்எனைப்போல் பெறுவீர்
யான்வேறு நீர்வேறென் றெண்ணுகிலேன் உரைத்தேன்
உடைந்தசம யக்குழிநின் றெழுந்துணர்மின் அழியா
ஒருநெறியாம் சன்மார்க்கத் திருநெறிபெற் றுவந்தே. 11

1541 திருநெறிஒன் றேஅதுதான் சமரசசன் மார்க்கச்
சிவநெறிஎன் றுணர்ந்துலகீர் சேர்ந்திடுமின் ஈண்டு
வருநெறியில் எனையாட்கொண் டருளமுதம் அளித்து
வல்லபசத் திகளெல்லாம் வழங்கியஒர் வள்ளல்
பெருநெறியில் சித்தாடத் திருவுளங்கொண் டருளிப்
பெருங்கருணை வடிவினொடு வருதருணம் இதுவே
கருநெறிவீழ்ந் துழலாதீர் கலக்கமடை யாதீர்
கண்மையினால் கருத்தொருமித் துண்மைஉரைத் தேனே. 12

1542 உண்மையுரைக் கின்றேன்இங் குவந்தடைமின் உலகீர்
உரைஇதனில் சந்தேகித் துளறிவழி யாதீர்
எண்மையினான் எனநினையீர் எல்லாஞ்செய் வல்லான்
என்னுள்அமர்ந் திசைக்கின்றான் இதுகேண்மின் நீவிர்
தண்மையொடு சுத்தசிவ சன்மார்க்க நெறியில்
சார்ந்துவிரைந் தேறுமினோ சத்தியவாழ் வளிக்கக்
கண்மைதரும் ஒருபெருஞ்சீர்க் கடவுள்எனப் புகலும்
கருணைநிதி வருகின்ற தருணம்இது தானே. 13

Koviloor Digital Library

1543 தானேதான் ஆகிஎலாம் தானாகி அலனாய்த்
தனிப்பதியாய் விளங்கிடும்என் தந்தையைஎன் தாயை
வானேஅவ் வான்கருவே வான்கருவின் முதலே
வள்ளால்என் றன்பரெலாம் உள்ளாநின் றவனைத்
தேனேசெம் பாகேஎன் றினித்திடுந்தெள் ளமுதைச்
சிற்சபையில் பெருவாழ்வைச் சிந்தைசெய்மின் உலகீர்
ஊனேயும் உடலழியா தூழிதொறும் ஓங்கும்
உத்தமசித் தியைப்பெறுவீர் சத்தியம்சொன் னேனே. 14

1544 சத்தியவே தாந்தமெலாம் சித்தாந்தம் எல்லாம்
தனித்தனிமேல் உணர்ந்துணர்ந்தும் தனையுணர்தற் கரிதாய்
நித்தியசிற் சபைநடுவே நிறைந்துநடம் புரியும்
நித்தபரி பூரணனைச் சித்தசிகா மணியை
அத்தகையோர் பெரும்பதியை அருமருந்தை அடியேன்
ஆவியைஎன் ஆவியிலே அமர்ந்ததயா நிதியைச்
சித்தியெலாம் எனக்களித்த சிவகதியை உலகீர்
சிந்தைசெய்து வாழ்த்துமினோ நிந்தைஎலாம் தவிர்ந்தே. 15

1545 நிந்தையிலார் நெஞ்சகத்தே நிறைந்தபெருந் தகையை
நிலையனைத்தும் காட்டிஅருள் நிலைஅளித்த குருவை
எந்தையைஎன் தனித்தாயை என்னிருகண் மணியை
என்உயிரை என்உணர்வை என்அறிவுள் அறிவை
சிந்தையிலே தனித்தினிக்கும் தெள்ளமுதை அனைத்தும்
செய்யவல்ல தனித்தலைமைச் சிவபதியை உலகீர்
முந்தைமல இருட்டொழிய முன்னுமினோ கரண
முடுக்கொழித்துக் கடைமரண நடுக்கொழித்து முயன்றே. 16

1546 முயன்றுலகில் பயன்அடையா மூடமதம் அனைத்தும்
முடுகிஅழிந் திடவும்ஒரு மோசமும்இல் லாதே
இயன்றஒரு சன்மார்க்கம் எங்குநிலை பெறவும்
எம்மிறைவன் எழுந்தருளல் இதுதருணம் கண்டீர்
துயின்றுணர்ந்தே எழுந்தவர்போல் இறந்தவர்கள் எல்லாம்
தோன்றஎழு கின்றதிது தொடங்கிநிகழ்ந் திடும்நீர்
பயின்றறிய விரைந்துவம்மின் படியாத படிப்பைப்
படித்திடலாம் உணர்ந்திடலாம் பற்றிடலாம் சுகமே. 17

1547 சுகமறியீர் துன்பம்ஒன்றே துணிந்தறிந்தீர் உலகீர்
சூதறிந்தீர் வாதறிந்தீர் தூய்மையறிந் திலிரே
இகம்அறியீர் பரம்அறியீர் என்னேநுங் கருத்தீது
என்புரிவீர் மரணம்வரில் எங்குறுவீர் அந்தோ

Koviloor Digital Library

அகமறியீர் அனகமறிந் தழியாத ஞான
அமுதவடி வம்பெறலாம் அடைந்திடுமின் ஈண்டே
முகமறியார் போலிருந்தீர் என்னைஅறி யீரோ
முத்தரெலாம் போற்றும்அருட் சித்தர்மகன் நானே. 18

1548 நான்உரைக்கும் வார்த்தைஎலாம் நாயகன்தன் வார்த்தை
நம்புமினோ நமரங்காள் நற்றருணம் இதுவே
வான்உரைத்த மணிமன்றில் நடம்புரிஎம் பெருமான்
வரவெதிர்கொண் டவன்அருளால் வரங்கள்எலாம் பெறவே
தேன்உரைக்கும் உளம்இனிக்க எழுகின்றேன் நீவிர்
தெரிந்தடைந்தென் உடன்எழுமின் சித்திபெறல் ஆகும்
ஏனுரைத்தேன் இரக்கத்தால் எடுத்துரைத்தேன் கண்டீர்
யானடையும் சுகத்தினைநீர் தான்அடைதல் குறித்தே. 19

1549 குறித்துரைக்கின் றேன் இதனைக் கேண்மின் இங்கே வம்மின்
கோணும்மனக் குரங்காலே நாணுகின்ற உலகீர்
வெறித்தஉம்மால் ஒருபயனும் வேண்டுகிலேன் எனது
மெய்யுரையைப் பொய்யுரையாய் வேறுநினை யாதீர்
பொறித்தமதம் சமயம்எலாம் பொய்பொய்யே அவற்றில்
புகுதாதீர் சிவம்ஒன்றே பொருள்எனக்கண் டறிமின்
செறித்திடுசிற் சபைநடத்தைத் தெரிந்துதுதித் திடுமின்
சித்திஎலாம் இத்தினமே சத்தியம்சேர்ந் திடுமே. 20

1550 சேர்ந்திடவே ஒருப்படுமின் சமரசசன் மார்க்கத்
திருநெறியே பெருநெறியாம் சித்திஎலாம் பெறலாம்
ஓர்ந்திடுமின் உண்ணுதற்கும் உறங்குதற்கும் உணர்ந்தீர்
உலகம்எலாம் கண்டிடும்ஓர் உளவைஅறிந் திலிரே
வார்ந்தகடல் உலகறிய மரணம்உண்டே அந்தோ
மரணம்என்றால் சடம்எனும்ஓர் திரணமும்சம் மதியா
சார்ந்திடும்அம் மரணமதைத் தடுத்திடலாம் கண்டீர்
தனித்திடுசிற் சபைநடத்தைத் தரிசனஞ்செய் வீரே. 21

1551 செய்தாலும் தீமைஎலாம் பொறுத்தருள்வான் பொதுவில்
திருநடஞ்செய் பெருங்கருணைத் திறத்தான்அங் கவனை
மெய்தாவ நினைத்திடுக சமரசசன் மார்க்கம்
மேவுகஎன் றுரைக்கின்றேன் மேதினியீர் எனைத்தான்
வைதாலும் வைதிடுமின் வாழ்த்தெனக்கொண் டிடுவேன்
மனங்கோணேன் மானம்எலாம் போனவழி விடுத்தேன்
பொய்தான்ஓர் சிறிதெனினும் புகலேன்சத் தியமே
புகல்கின்றேன் நீவிர்எலாம் புனிதமுறும் பொருட்டே. 22

Koviloor Digital Library

1552 பொருட்டலநும் போகம்எலாம் பொய்யாம்இங் கிதுநான்
புகலுவதென் நாள்தொறுநும் புந்தியிற்கண் டதுவே
மருட்டுலகீர் இருட்டுலகில் மடிவதழ கலவே
மரணமிலாப் பெருவாழ்வில் வாழவம்மின் இங்கே
பொருட்டிறஞ்சேர் சுத்தசிவ சன்மார்க்க நிலையில்
பொருந்துமின்சிற் சபைஅமுதம் அருந்துமின்அன் புடனே
அருட்டிறஞ்சேர்ந் தெண்ணியவா றாடுமினோ நும்மை
அடுப்பவரே அன்றிநின்று தடுப்பவர்மற் றிலையே. 23

1553 மற்றறிவோம் எனச்சிறிது தாழ்த்திருப்பீர் ஆனால்
மரணமெனும் பெரும்பாவி வந்திடுமே அந்தோ
சற்றும்அதை நும்மாலே தடுக்கமுடி யாதே
சமரசசன் மார்க்கசங்கத் தவர்கள் அல்லால் அதனை
எற்றிநின்று தடுக்கவல்லார் எவ்வுலகில் எவரும்
இல்லைகண்டீர் சத்தியமீ தென்மொழிகொண் டுலகீர்
பற்றியபற் றனைத்தினையும் பற்றறவிட் டருளம்
பலப்பற்றே பற்றுமினோ என்றும்இற வீரே. 24

1554 இறந்தவரை எடுத்திடும்போ தரற்றுகின்றீர் உலகீர்
இறவாத பெருவரம்நீர் ஏன்அடைய மாட்டீர்
மறந்திருந்தீர் பிணிமூப்பில் சம்மதமோ நுமக்கு
மறந்தும்இதை நினைக்கில்நல்லோர் மனம்நடுங்கும் கண்டீர்
சிறந்திடுசன் மார்க்கம்ஒன்றே பிணிமூப்பு மரணம்
சேராமல் தவிர்த்திடுங்காண் தெரிந்துவம்மின் இங்கே
பிறந்தபிறப் பிதில்தானே நித்தியமெய் வாழ்வு
பெற்றிடலாம் பேரின்பம் உற்றிடலாம் விரைந்தே. 25

1555 உற்றமொழி உரைக்கின்றேன் ஒருமையினால் உமக்கே
உறவன்அன்றிப் பகைவன்என உன்னாதீர் உலகீர்
கற்றவரும் கல்லாரும் அழிந்திடக்காண் கின்றீர்
கரணம்எலாம் கலங்கவரும் மரணமும்சம் மதமோ
சற்றும்இதைச் சம்மதியா தென்மனந்தான் உமது
தன்மனந்தான் கன்மனமோ வன்மனமோ அறியேன்
இற்றிதனைத் தடுத்திடலாம் என்னொடுசேர்ந் திடுமின்
என்மார்க்கம் இறப்பொழிக்கும் சன்மார்க்கந் தானே. 26

1556 சன்மார்க்கப் பெருங்குணத்தார் தம்பதியை என்னைத்
தாங்குகின்ற பெரும்பதியைத் தனித்தசபா பதியை
நன்மார்க்கத் தெனைநடத்திச் சன்மார்க்க சங்கம்
நடுவிருக்க அருளமுதம் நல்கியநா யகனைப்

Koviloor Digital Library

புன்மார்க்கர்க் கறிவரிதாம் புண்ணியனை ஞான
பூரணமெய்ப் பொருளாகிப் பொருந்தியமா மருந்தை
அன்மார்க்கம் தவிர்த்தருளி அம்பலத்தே நடஞ்செய்
அருட்பெருஞ்ஜோ தியைஉலகீர் தெருட்கொளச்சார் வீரே. 27

1557 சார்உலக வாதனையைத் தவிர்த்தவர்உள் ளகத்தே
சத்தியமாய் அமர்ந்தருளும் உத்தமசற் குருவை
நேர்உறவே எவராலும் கண்டுகொளற் கரிதாம்
நித்தியவான் பொருளைஎலா நிலைகளுந்தான் ஆகி
ஏர்உறவே விளங்குகின்ற இயற்கைஉண்மை தன்னை
எல்லாம்செய் வல்லபத்தை எனக்களித்த பதியை
ஓர்உறவென் றடைந்துலகீர் போற்றிமகிழ்ந் திடுமின்
உள்ளம்எலாம் கனிந்துருகி உள்ளபடி நினைந்தே. 28

திருச்சிற்றம்பலம்

108. சமாதி வற்புறுத்தல்

அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

1558 ஆய்உரைத்த அருட்ஜோதி வருகின்ற
தருணம்இதே அறிமின் என்றே
வாய்உரைத்த வார்த்தைஎன்தன் வார்த்தைகள்என்
கின்றார்இம் மனிதர்அந்தோ
தாய்உரைத்த திருப்பொதுவில் நடம்புரிந்தென்
உளங்கலந்த தலைவா இங்கே
நீஉரைத்த திருவார்த்தை என அறியார்
இவர் அறிவின் நிகழ்ச்சி* என்னே. 1

1559 இறந்தவர்கள் பலரும்இங்கே எழுகின்ற
தருணம்இதே என்று வாய்மை
அறந்தழைய உரைக்கின்ற வார்த்தைகள்என்
வார்த்தைகள்என் றறைகின் றாரால்
மறந்தசிறி யேன் உரைக்க வல்லேனோ
எல்லாஞ்செய் வல்லோய் உன்தன்
சிறந்ததிரு வார்த்தைஎனத் தெரிந்திலர் இம்
மனிதர்மதித் திறமை என்னே. 2

* இகழ்ச்சி – வே.ப.மு. பதிப்பு

Koviloor Digital Library

1560 சோற்றாசை யொடுகாமச் சேற்றாசைப்
படுவாரைத் துணிந்து கொல்லக்
கூற்றாசைப் படும்எனநான் கூறுகின்ற
துண்மையினில் கொண்டு நீவிர்
நேற்றாசைப் பட்டவருக் கின்றருள்வார்
போலும்அன்றி நினைத்த வாங்கே
பேற்றாசைக் கருள்புரியும் ஞானசபா
பதிப்புகழைப் பேசு வீரே. 3

1561 தொண்டாளப் பணந்தேடுந் துறையாள
உலகாளச் சூழ்ந்த காமப்
பெண்டாளத் திரிகின்ற பேய்மனத்தீர்
நும்முயிரைப் பிடிக்க நாளைச்
சண்டாளக் கூற்றுவரில் என்புகல்வீர்
ஞானசபைத் தலைவன் உம்மைக்
கொண்டாளக் கருதுமினோ ஆண்டபின்னர்
இவ்வுலகில் குலாவு வீரே. 4

1562 பிறந்தவரை நீராட்டிப் பெருகவளர்த்
திடுகின்றீர் பேய ரேநீர்
இறந்தவரைச் சுடுகின்றீர் எவ்வணஞ்சம்
மதித்தீரோ இரவில் தூங்கி
மறந்தவரைத் தீமூட்ட வல்லீரால்
நும்மனத்தை வயிரம் ஆன
சிறந்தவரை எனப்புகழச் செய்துகொண்டீர்
ஏன்பிறந்து திரிகின் றீரே. 5

1563 அணங்கெழுபே ரோசையொடும் பறையோசை
பொங்கக்கோ ரணிகொண் டந்தோ
பிணங்கழுவி எடுத்துப்போய்ச் சுடுகின்றீர்
இனிச்சாகும் பிணங்க ளேநீர்
கணங்கழுகுண் டாலும்ஒரு பயனுண்டே
என்னபயன் கண்டீர் சுட்ட
எணங்கெழும்சாம் பலைக்கண்டீர் அதுபுன்செய்
எருவுக்கும் இயலா தன்றே. 6

1564 குணம்புதைக்க உயிரடக்கம் கொண்டதுசுட்
டால்அதுதான் கொலையாம் என்றே
வணம்புதைக்க வேண்டும்என வாய்தடிக்கச்
சொல்கின்றேன் வார்த்தை கேட்டும்

Koviloor Digital Library

பிணம்புதைக்கச் சம்மதியீர் பணம்புதைக்கச்
சம்மதிக்கும் பேய ரேநீர்
எணம்புதைக்கத் துயில்வார்நும் பாற்றுயிலற்
கஞ்சுவரே இழுதை யீரே. 7

1565 கட்டாலும் கனத்தாலும் களிக்கின்ற
பேயுலகீர் கலைசோர்ந் தாரைப்
பொட்டாலும் துகிலாலும் புனைவித்துச்
சுடுகின்றீர் புதைக்க நேரீர்
சுட்டாலும் சுடுமதுகண் டுமதுடம்பு
துடியாதென் சொல்லீர் நும்மைத்
தொட்டாலும் தோஷமுறும் விட்டாலும்
கதியிலைமேல் சூழ்வீர் அன்றே. 8

1566 பரன்அளிக்கும் தேகம்இது சுடுவதப
ராதம்எனப் பகர்கின் றேன்நீர்
சிரம்நெளிக்கச் சுடுகின்றீர் செத்தவர்கள்
பற்பலரும் சித்த சாமி
உரனளிக்க எழுகின்ற திருநாள்வந்
தடுத்தனஉ துணர்ந்து நல்லோர்
வரனளிக்கப் புதைத்தநிலை காணீரோ
கண்கெட்ட மாட்டி னீரே. 9

1567 புலைத்தொழிலே புரிகின்றீர் புண்ணியத்தைக்
கருங்கடலில் போக விட்டீர்
கொலைத்தொழிலில் கொடியீர்நீர் செத்தாரைச்
சுடுகின்ற கொடுமை நோக்கிக்
கலைத்தொழிலில் பெரியர்உளம் கலங்கினர்அக்
கலக்கம்எலாம் கடவுள் நீக்கித்
தலைத்தொழில்செய் சன்மார்க்கம் தலைஎடுக்கப்
புரிகுவதித் தருணம் தானே. 10

திருச்சிற்றம்பலம்

Koviloor Digital Library

109. உலகப்பேறு

கலி விருத்தம்

திருச்சிற்றம்பலம்

1568 இன்பால் உலகங்கள் யாவும் விளங்கின
துன்பால் இறந்தவர் துன்பற்றுத் தோன்றினர்
அன்பால் அடியவர் ஆடினர் பாடினர்
என்பால் அருட்பெருஞ் ஜோதியார் எய்தவே. 1

1569 பாம்பெலாம் ஓடின பறவையுட் சார்ந்தன
தீம்பலா வாழைமாத் தென்னை சிறந்தன
ஆம்பலன் மென்மேலும் ஆயின என்னுளத்
தோம்பல்என் அருட்பெருஞ் ஜோதியார் ஓங்கவே. 2

1570 மலங்கழிந் துலகவர் வானவர் ஆயினர்
வலம்பெறு சுத்தசன் மார்க்கம் சிறந்தது
பலம்பெறு மனிதர்கள் பண்புளர் ஆயினர்
நலம்பெறும் அருட்பெருஞ் ஜோதியார் நண்ணவே. 3

1571 முன்னுள மார்க்கங்கள் யாவும் முடிந்தன
மன்னுள சுத்தசன் மார்க்கம் சிறந்தது
பன்னுளந் தெளிந்தன பதிநடம் ஓங்கின
என்னுளத் தருட்பெருஞ் ஜோதியார் எய்தவே. 4

1572 விடம்பெற்ற உயிர்எலாம் விடம்அற்று வாழ்ந்தன
மடம்பெற்ற மனிதர்கள் மதிபெற்று வாழ்கின்றார்
திடம்பெற்றே எழுகின்றார் செத்தவர் தினந்தினம்
நடம்பெற்ற அருட்பெருஞ் ஜோதியார் நண்ணவே. 5

1573 அண்டமும் அகிலமும் அருளர சாட்சியைக்
கொண்டன ஓங்கின குறைஎலாம் தீர்ந்தன
பண்டங்கள் பலித்தன பரிந்தென துள்ளத்தில்
எண்டகும் அருட்பெருஞ் ஜோதியார் எய்தவே. 6

1574 குணங்கள் சிறந்தன குற்றங்கள் அற்றன
மணங்கள் விளங்கின வாழ்வுகள் ஓங்கின
பிணங்கள் எலாம்உயிர் பெற்றெழுந் தோங்கின
இணங்க அருட்பெருஞ் ஜோதியார் எய்தவே. 7

Koviloor Digital Library

1575 பத்தர்கள் பாடினர் பணிந்துநின் றாடினர்
முத்தர்கள் மெய்ப்பொருள் முன்னி மகிழ்ந்தனர்
சித்தர்கள் ஆனந்தத் தெள்ளமு துண்டனர்
சுத்த அருட்பெருஞ் ஜோதியார் தோன்றவே. 8

1576 ஏழுல கவத்தைவிட் டேறினன் மேனிலை
ஊழிதோ றூழியும் உயிர்தழைத் தோங்கினன்
ஆழியான் அயன்முதல் அதிசயித் திடஎனுள்
வாழிஅ ருட்பெருஞ் ஜோதியார் மன்னவே. 9

1577 இருட்பெரு மலமுழு துந்தவிர்ந் திற்றன
மருட்பெரும் கன்மமும் மாயையும் நீங்கின
தெருட்பெருஞ் சித்திகள் சேர்ந்தன என்னுளத்
தருட்பெருஞ் ஜோதிஎன் அன்பிற் கலந்ததே. 10

திருச்சிற்றம்பலம்

110. தனித்திரு அலங்கல்

சுத்த சன்மார்க்க வேண்டுகோள்

அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

1578 அன்பாடு திருப்பொதுவில் ஆடுகின்ற அரசேநின் அடிமேல் ஆணை
என்பாடொன் றிலைஎன்னால் துரும்பும் அசைத் திடமுடியா திதுகால் தொட்டுப்
பொன்பாடெவ் விதத்தானும் புரிந்துகொண்டு நீதானே புரத்தல் வேண்டும்
உன்பாடு நான்உரைத்தேன் நீஇனிச்சும் மாஇருக்க ஒண்ணா தண்ணா. 1

1579 முன்பாடு பின்பயன்தந்திடும்எனவே உரைக்கின்றோர் மொழிகள் எல்லாம்
இன்பாடும் இவ்வுலகில் என்னறிவில் இலைஅதனால் எல்லாம் வல்லோய்
அன்பாடு திருப்பொதுவில் ஆடுகின்றோய் அருட்ஜோதி அளித்துக் காத்தல்
உன்பாடுநான் உரைத்தேன் எனக்கொருபா டுண்டோநீ உரைப்பாய் அப்பா. 2

1580 உன்ஆணை உன்னைவிட உற்றதுணை வேறிலைஎன் உடையாய் அந்தோ
என்ஆணைக் காத்தருளி இத்தினமே அருட்ஜோதி ஈதல் வேண்டும்
அந்நாணை யாதபடி அருள்புரிந்த பெருங்கருணை அரசே என்னை
முன்னாள்நின் அடியவன்என் றுலகறிந்த இந்நாள்என் மொழிந்தி டாதே. 3

1581 தூங்காதே விழித்திருக்கும் சூதறிவித் தெனைஆண்ட துரையே என்னை
நீங்காதே என்னுயிரில் கலந்துகொண்ட பதியேகால் நீட்டிப் பின்னே
வாங்காதே விரைந்திவண்நீ வரல்வேண்டும் தாழ்த்திடில்என் மனந்தான் சற்றும்
தாங்காதே இதுநினது தனித்ததிரு வுளமறிந்த சரிதம் தானே. 4

Koviloor Digital Library

1582 இயங்காளிபுலிகரடி எனப்பெயர்கேட் டுளம்நடுங்கி இருந்தேன் ஊரில்
சயங்காளிக் கோயிலைக்கண் டஞ்சிமனம் தழுதழுத்துத் தளர்ந்தேன் இந்தப்
பயங்காளிப் பயல்போலப் பயந்தவர்கள் எங்குளர்காண் பதியே என்னை
வயங்காளில் ஒருவன்என நினையேல்கைப் பிள்ளைஎன மதித்தி டாயே. 5

1583 சிறுசெயலைச் செயும்உலகச்சிறுநடையோர் பலபுகலத் தினந்தோ றுந்தான்
உறுசெயலை அறியாஇச் சிறுபயலைப் பிடித்தலைத்தல் உவப்போ கண்டாய்
தெறுசெயலைத் தவிர்த்தெல்லாச் சித்தியும்பெற் றிடஅழியாத் தேகன் ஆகப்
பெறுசெயலை எனக்களித்தே மறுசெயலைப் புரிகஎனைப் பெற்ற தேவே. 6

சாலையப்பனை வேண்டல்

சொச்சகக் கலிபா

1584 மன்னப்பா மன்றிடத்தே மாநடஞ்செய் அப்பாஎன்
தன்னப்பா சண்முகங்கொள் சாமியப்பா எவ்வுயிர்க்கும்
முன்னப்பா பின்னப்பா மூர்த்தியப்பா மூவாத
பொன்னப்பா ஞானப் பொருளப்பா தந்தருளே. 7

கலித்துறை

1585 ஆதிஅப் பாநம் அனாதியப் பாநங்கள் அம்மைஒரு
பாதிஅப் பாநிரு பாதிஅப் பாசிவ பத்தர்அனு
பூதிஅப் பாநல் விபூதிஅப் பாபொற் பொதுநடஞ்செய்
ஜோதிஅப் பாசுயஞ் ஜோதிஅப் பாஎனைச் சூழ்ந்தருளே. 8

1586 அண்டஅப் பாபகி ரண்டஅப் பாநஞ் சணிந்தமணி
கண்டஅப் பாமுற்றும் கண்டஅப் பாசிவ காமிஎனும்
ஒண்தவப் பாவையைக் கொண்டஅப் பாசடை ஓங்குபிறைத்
துண்டஅப் பாமறை விண்டஅப் பாஎனைச் சூழ்ந்தருளே. 9

1587 வேலைஅப் பாபடை வேலைஅப் பாபவ வெய்யிலுக்கோர்
சோலைஅப் பாபரஞ் ஜோதிஅப் பாசடைத் துன்றுகொன்றை
மாலைஅப் பாநற் சமரச வேதசன் மார்க்கசங்கச்
சாலைஅப் பாஎனைத் தந்தஅப் பாவந்து தாங்கிக்கொள்ளே. 10

1588 மெச்சிஅப் பாவலர் போற்றப் பொதுவில் விளங்கியஎன்
உச்சிஅப் பாஎன் னுடையஅப் பாஎன்னை உற்றுப்பெற்ற
அச்சிஅப் பாமுக்கண் அப்பாஎன் ஆருயிர்க் கானஅப்பா
கச்சிஅப் பாதங்கக் கட்டிஅப் பாஎன்னைக் கண்டுகொள்ளே. 11

Koviloor Digital Library

1589 எக்கரை யும்இன்றி ஓங்கும் அருட்கடல் என்றுரைக்கோ
செக்கரை வென்றபொன் என்கோ படிகத் திரளதென்கோ
திக்கரை அம்பரன் என்கோஎன் உள்ளத்தில் தித்திக்கின்ற
சக்கரைக் கட்டிஎன் கோநினைத் தான்மன்றில் தாண்டவனே. 12

1590 ஒட்டிஎன் கோதறுத் தாட்கொண் டனைநினை ஓங்கறிவாம்
திட்டிஎன் கோஉயர் சிற்றம் புலந்தனில் சேர்க்கும்நல்ல
வெட்டிஎன் கோஅருட் பெட்டியில் ஓங்கி விளங்கும்தங்கக்
கட்டிஎன் கோபொற் பொதுநடஞ் செய்யுமுக் கண்ணவனே. 13

சன்மார்க்க முரசு

எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

1591 கிழக்குவெளுத் ததுகருணை அருட்ஜோதி உதயம்
கிடைத்ததென துளக்கமலம் கிளர்ந்ததென தகத்தே
சழக்குவெளுத் ததுசாதி ஆச்சிரமா சாரம்
சமயமதா சாரம்எனச் சண்டையிட்ட கலக
வழக்குவெளுத் ததுபலவாம் பொய்ந்நூல்கற் றவர்தம்
மனம்வெளுத்து வாய்வெளுத்து வாயுறவா தித்த
முழக்குவெளுத் ததுசிவமே பொருள்எனும் சன் மார்க்க
முழுநெறியில் பரநாத முரசு முழங் கியதே. 14

1592 நாதரருட் பெருஞ்ஜோதி நாயகர்என் தனையே
நயந்துகொண்ட தனித்தலைவர் ஞானசபா பதியார்
வாதநடம் புரிகருணை மாநிதியார் வரதர்
வள்ளல்எலாம் வல்லவர்மா நல்லவர்என் இடத்தே
காதலுடன் வருகின்றார் என்றுபர நாதம்
களிப்புறவே தொனிக்கின்ற தந்தரதந் துபிதான்
ஏதமற முழங்குகின்ற தென்றுசொல்லிக் கொண்டே
எழுகின்றாள் தொழுகின்றாள் என்னுடைய மகளே. 15

திருவருட்பேறு

எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

1593 கொழுந்தேனும் செழும்பாகும் குலவுபசும் பாலும்
கூட்டிஉண்டாற் போல்இனிக்குங் குணங்கொள்சடைக் கனியே
தொழுந்தேவ மடந்தையர்க்கு மங்கலநாண் கழுத்தில்
தோன்றவிடம் கழுத்தினுள்ளே தோன்றநின்ற சுடரே

Koviloor Digital Library

எழுந்தேறும் அன்பருளத் தேற்றுதிரு விளக்கே
என்உயிர்க்குத் துணையேஎன் இருகண்ணுள் மணியே
அழுந்தேற அறியாதென் அவலநெஞ்சம் அந்தோ
அபயம்உனக் கபயம்எனை ஆண்டருள்க விரைந்தே. 16

1594 அம்பலத்தே ஆடுகின்ற ஆரமுதே அரசே
ஆனந்த மாகடலே அறிவேஎன் அன்பே
உம்பர்கட்கே அன்றிஇந்த உலகர்கட்கும் அருள்வான்
ஒளிர்கின்ற ஒளியேமெய் உணர்ந்தோர்தம் உறவே
எம்பலத்தே வாகிஎனக் கெழுமையும்நற் றுணையாய்
என்உளத்தே விளங்குகின்ற என்இறையே நினது
செம்பதத்தே மலர்விளங்கக் கண்டுகொண்டேன் எனது
சிறுமைஎலாம் தீர்ந்தேமெய்ச் செல்வமடைந் தேனே. 17

1595 அடிவிளங்கக் கனகசபைத் தனிநடனம் புரியும்
அருட்சுடரே என்உயிருக் கானபெருந் துணையே
துடிவிளங்கக் கரத்தேந்தும் ஜோதிமலை மருந்தே
சொற்பதம்எல் லாம்கடந்த சிற்சொருபப் பொருளே
பொடிவிளங்கத் திருமேனிப் புண்ணியனே ஞான
போதகரைச் சிவிகையின்மேல் பொருந்தவைத்த புனிதா
படிவிளங்கச் சிறியேன்நின் பதமலர்கண் டுவந்தேன்
பரிவொழிந்தேன் அருட்செல்வம் பரிசெனப்பெற் றேனே. 18

1596 அயலறியேன் நினதுமலர் அடிஅன்றிச் சிறிதும்
அம்பலத்தே நிதம்புரியும் ஆனந்த நடங்கண்
டுயலறியேன் எனினும்அது கண்டுகொளும் ஆசை
ஒருகடலோ எழுகடலோ உரைக்கவொணா துடையேன்
மயலறியா மனத்தமர்ந்த மாமணியே மருந்தே
மதிமுடிஎம் பெருமான்நின் வாழ்த்தன்றி மற்றோர்
செயலறியேன் எனக்கருளத் திருவுளஞ்செய் திடுவாய்
திருஎழுத்தைந் தாணைஒரு துணைசிறிதிங் கிலனே. 19

அருட்பெருஞ்ஜோதி அபயம்

நேரிசை வெண்பா

திருச்சிற்றம்பலம்

1597 அருட்பெருஞ் ஜோதி அபயம் அபயம்
அருட்பெருஞ் ஜோதி அபயம் – அருட்பெருஞ்
ஜோதி அபயம்சிற் ஜோதி அபயம்பொற்
ஜோதி அபயம் துணை. 20

Koviloor Digital Library

1598 துணைவா அபயம் துயர்அகல என்பால்
அணைவா அபயம் அபயம் – பணைவாய்
வடலா அபயம் வ்ரதா அபயம்
நடநாய கா அபயம் நான். 21

1599 நானாகித் தானாய் நடித்தருள்கின்றாய் அபயம்
தேனாய் இனிக்கும் சிவஅபயம் – வானாடு
மெய்யா அபயம் விமலா அபயமென்றன்
ஐயா அபயமப யம். 22

1600 அபயம் பதியே அபயம் பரமே
அபயம் சிவமே அபயம் – உபய
பதத்திற் கபயம் பரிந்தென்உளத் தேநல்
விதத்தில் கருணை விளை. 23

1601 கருணா நிதியே அபயம் கனிந்த
அருணா டகனே அபயம் – மருணாடும்
உள்ளக் கவலை ஒழிப்பாய்என் வன்மனத்துப்
பொள்ளற் பிழைகள் பொறுத்து. 24

மாயை நீக்கம்

கலித்துறை

திருச்சிற்றம்பலம்

1602 முன்னாள்செய் புண்ணியம் யாதோ உலகம் முழுதும்என்பால்
இந்நாள் அடைந்தின்பம் எய்திட ஓங்கினன் எண்ணியவாறு
எந்நாளும் இவ்வுடம் பேஇற வாத இயற்கைபெற்றேன்
என்னாசை அப்பனைக் கண்டுகொண் டேன்என் இதயத்திலே. 25

1603 தாழைப் பழம்பிழி பாலொடு சர்க்கரைச் சாறளிந்த
வாழைப் பழம்பசு நெய்நறுந் தேனும் மருவச்செய்து
மாழைப் பலாச்சுளை மாம்பழம் ஆதி வடித்தளவி
ஏழைக் களித்தனை யேஅரு ளாரமு தென்றொன்றையே. 26

1604 தென்பால் முகங்கொண்ட தேவேசெந் தேனில் சிறந்தபசு
வின்பால் கலந்தளி முக்கனிச் சாறும் எடுத்தளவி
அன்பால் மகிழ்ந்து மகனே வருகென் றழைத்தருளி
என்பால் அளித்தனை யேஅரு ளாரமு தென்றொன்றையே. 27

Koviloor Digital Library

1605 அருட்பெருஞ் ஜோதிஎன் அம்மையி னோடறி வானந்தமாம்
அருட்பெருஞ் ஜோதிஎன் அப்பன்என் உள்ளத் தமர்ந்தன்பினால்
அருட்பெருஞ் ஜோதித்தெள் ளாரமு தம்தந் தழிவற்றதோர்
அருட்பெருஞ் ஜோதிச்செங் கோலும் கொடுத்தனன்அற்புதமே. 28

1606 போதோ விடிந்த தருளர சேஎன் பொருட்டுவந்தென்
தாதோர் எழுமையும் நன்மையுற் றோங்கத் தருவதுதான்
மாதோட நீக்கும் கனிரச மோவந்த வான்கனியின்
கோதோ அறிந்திலன் யாதோ திருவுளம் கூறுகவே. 29

முறையீடு

எழுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

1607 மன்றுள்நின் றாடும் வள்ளலே எனது
வள்ளல்என் றெனக்குளே தெரிந்த
அன்றுதான் தொடங்கி அம்மையே அப்பா
ஐயனே அன்பனே அரசே
என்றுநின் தனையே நினைத்திருக் கின்றேன்
எட்டுணை எனினும்வே றிடத்தில்
சென்றுநின் றறியேன் தெய்வமே இதுநின்
திருவுளம் தெரிந்தது தானே. 30

1608 கண்ணெலாம் நிரம்பப் பேரொளி காட்டிக்
கருணைமா மழைபொழி முகிலே
விண்ணெலாம் நிறைந்த விளக்கமே என்னுள்
மேவிய மெய்ம்மையே மன்றுள்
எண்ணெலாம் கடந்தே இலங்கிய பதியே
இன்றுநீ ஏழையேன் மனத்துப்
புண்ணெலாம் தவிர்த்துப் பொருளெலாம் கொடுத்துப்
புகுந்தென துளங்கலந் தருளே. 31

1609 உள்ளலேன் உடையார் உண்ணவும் வறியார்
உறுபசி உழந்துவெந் துயரால்
வள்ளலே நெஞ்சம் வருந்தவும் படுமோ
மற்றிதை நினைத்திடுந் தோறும்
எள்ளலேன் உள்ளம் எரிகின்ற துடம்பும்
எரிகின்ற தென்செய்வேன் அந்தோ
கொள்ளலேன் உணவும் தரிக்கிலேன் இந்தக்
குறையெலாம் தவிர்த்தருள் எந்தாய். 32

Koviloor Digital Library

1610 அன்பிலேன் எனினும் அறிவிலேன் எனினும்
அன்றுவந் தாண்டனை அதனால்
துன்பிலேன் எனஇவ் வுலகெலாம் அறியச்
சொல்லினேன் சொல்லிய நானே
இன்பிலேன் எனஇன் றுரைத்திடல் அழகோ
எனைஉல கவமதித் திடில்என்
என்பிலே கலந்தாய் நினக்கும்வந் திடுமே
எய்துக விரைந்தென திடத்தே. 33

1611 சிரிப்பிலே பொழுது கழிக்கும்இவ் வாழ்க்கைச்
சிறியவர் சிந்தைமாத் திரமோ
பொருப்பிலே தவஞ்செய் பெரியர்தம் மனமும்
புளிப்பிலே துவர்ப்பிலே உவர்ப்புக்
கரிப்பிலே கொடிய கயப்பிலே கடிய
கார்ப்பிலே கார்ப்பொடு கலந்த
எரிப்பிலே புகுவ தன்றிஎள் அளவும்
இனிப்பிலே புகுகின்ற திலையே. 34

சிவானந்த நிலை

எழுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

1612 முந்தைநாள் அயர்ந்தேன் அயர்ந்திடேல் எனஎன்
முன்னர்நீ தோன்றினை அந்தோ
அந்தநாள் தொடங்கி மகிழ்ந்திருக் கின்றேன்
அப்பனே அய்யனே அரசே
இந்தநாள் கவலை இடர்பயம் எல்லாம்
என்னைவிட் டொழிந்திடப் புரிந்தாய்
எந்தநாள் புரிந்தேன் இப்பெரும் பேறிங்
கெய்துதற் குரியமெய்த் தவமே. 35

1613 வாய்க்குறும் புரைத்துத் திரிந்துவீண் கழித்து
மலத்திலே கிடந்துழைத் திட்ட
நாய்க்குயர் தவிசிட் டொருமணி முடியும்
நன்றுறச் சூட்டினை அந்தோ
தூய்க்குணத் தவர்கள் புகழ்மணி மன்றில்
ஜோதியே நின்பெருந் தயவைத்
தாய்க்குறு தயவென் றெண்ணுகோ தாயின்
தயவும்உன் தனிப்பெருந் தயவே. 36

Koviloor Digital Library

1614 பேரிடர் தவிர்த்துப் பேரருள் புரிந்த
பெருமநின் தன்னைஎன் றுனக்கே
சாருறு தாயே என்றுரைப் பேனோ
தந்தையே என்றுரைப் பேனோ
சீருறு குருவே என்றுரைப் பேனோ
தெய்வமே என்றுரைப் பேனோ
யாரென உரைப்பேன் என்னெனப் புகழ்வேன்
யாதுமொன் றறிந்திலேன் அந்தோ. 37

பராபரன் உண்மை நிலையம்

அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

1615 எவ்வுயிரும் பொதுஎனக்கண் டிரங்கிஉப
கரிக்கின்றார் யாவர் அந்தச்
செவ்வியர்தம் செயல்அனைத்தும் திருவருளின்
செயல்எனவே தெரிந்தேன் இங்கே
கவ்வைஇலாத் திருநெறிஅத் திருவாளர்
தமக்கேவல் களிப்பால் செய்ய
ஒவ்வியதென் கருத்தவர்சீர் ஓதிடஎன்
வாய்மிகவும் ஊர்வ தாலோ. 38

1616 எத்துணையும் பேதமுறா தெவ்வுயிரும்
தம்உயிர்போல் எண்ணி உள்ளே
ஒத்துரிமை உடையவராய் உவக்கின்றார்
யாவர்அவர் உளந்தான் சுத்த
சித்துருவாய் எம்பெருமான் நடம்புரியும்
இடம்எனநான் தெரிந்தேன் அந்த
வித்தகர்தம் அடிக்கேவல் புரிந்திடஎன்
சிந்தைமிக விழைந்த தாலோ. 39

1617 கருணைஒன்றே வடிவாகி எவ்வுயிரும்
தம்உயிர்போல் கண்டு ஞானத்
தெருள்நெறியில் சுத்தசிவ சன்மார்க்கப்
பெருநீதி செலுத்தா நின்ற
பொருள்நெறிசற் குணசாந்தப் புண்ணியர்தம்
திருவாயால் புகன்ற வார்த்தை
அருள்நெறிவே தாகமத்தின் அடிமுடிசொல்
வார்த்தைகள்என் றறைவ ராலோ. 40

Koviloor Digital Library

அம்மையே அப்பனே அபயம்

எழுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

1618 பொருட்பெருந் தனிமெய்ப் போகமே என்னைப்
புறத்தினும் அகத்தினும் புணர்ந்த
தெருட்பெருஞ் சிவமே சுத்தசன் மார்க்கச்
செல்வமே நான்பெற்ற சிறப்பே
மருட்பெருங் கடலைக் கடத்திஎன் தன்னை
வாழ்வித்த என்பெரு வாழ்வே
அருட்பெருஞ் ஜோதி அம்பலத் தரசே
அம்மையே அப்பனே அபயம். 41

1619 பொருட்பெரு மறைகள் அனந்தம்ஆ கமங்கள்
புகலும்ஓர் அனந்தம்மேற் போந்த
தெருட்பெரு வெளிமட் டளவிலாக் காலம்
தேடியும் காண்கிலாச் சிவமே
மருட்பெரும் பகைதீர்த் தென்னைஆட் கொண்ட
வள்ளலே தெள்ளிய அமுதே
அருட்பெருஞ் ஜோதி அம்பலத் தரசே
அம்மையே அப்பனே அபயம். 42

1620 பொருட்பெருஞ் சுடர்செய் கலாந்தயோ காந்தம்
புகன்றபோ தாந்த நாதாந்தம்
தெருட்பெரு வேதாந் தம்திகழ் சித்தாந்
தத்தினும் தித்திக்கும் தேனே
மருட்பெரு இருளைத் தீர்த்தெனை வளர்க்கும்
மாபெருங் கருணையா ரமுதே
அருட்பெருஞ் ஜோதி அம்பலத் தரசே
அம்மையே அப்பனே அபயம். 43

அபய நிலை

அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

1621 ஆணை ஆணைநீ அஞ்சலை அஞ்சலை
அருள்ஒளி தருகின்றாம்
கோணை மாநிலத் தவரெலாம் நின்னையே
குறிக்கொள்வர் நினக்கேஎம்
ஆணை அம்பலத் தரசையும் அளித்தனம்
வாழ்கநீ மகனேஎன்
றேணை பெற்றிட எனக்கருள் புரிந்தநின்
இணைமலர்ப் பதம்போற்றி. 44

Koviloor Digital Library

1622 எல்லா உலகமும் என்வசம் ஆயின
எல்லா உயிர்களும் என்உயிர் ஆயின
எல்லா ஞானமும் என்ஞானம் ஆயின
எல்லா வித்தையும் என்வித்தை ஆயின
எல்லாப் போகமும் என்போகம் ஆயின
எல்லா இன்பமும் என்இன்பம் ஆயின
எல்லாம் வல்லசிற் றம்பலத் தென்னப்பர்
எல்லாம் நல்கிஎன் உள்ளத்துள் ளாரே. 45

அனுபவ நிலை

கொச்சகக் கலிப்பா

1623 நான்ஆனான் தான்ஆனான் நானும்தா னும்ஆனான்
தேன்ஆனான் தெள்ளமுதாய்த் தித்தித்து நிற்கின்றான்
வான்ஆனான் ஞான மணிமன்றில் ஆடுகின்றான்
கோன்ஆனான் என்னுட் குலாவுகின்ற கோமானே. 46

விண்ணப்பம்

அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

1624 ஐவகைத் தொழிலும் என்பால் அளித்தனை அதுகொண் டிந்நாள்
செய்வகை தெரிவித் தென்னைச் சேர்ந்தொன்றாய் இருத்தல் வேண்டும்
பொய்வகை அறியேன் வேறு புகலிலேன் பொதுவே நின்று
மெய்வகை உரைத்தேன் இந்த விண்ணப்பம் காண்க நீயே. 47

திருத்தொண்டர் அடிப்பெருமை

எழுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

1625 வண்டணிபூங் குழல்அம்மை எங்கள்சிவ காம
வல்லியொடு மணிமன்றில் வயங்கியநின் வடிவம்
கண்டவரைக் கண்டவர்தம் கால்மலர்முத் தேவர்
கனமுடிக்கே முடிக்கின்ற கடிமலராம் என்றால்
பண்டகுநின் திருத்தொண்டர் அடிப்பெருமை எவரே
பகர்ந்திடுவர் மறைகளெலாம் பகர்ந்திடுவான் புகுந்தே
விண்டுலர்ந்து வெளுத்தஅவை வெளுத்தமட்டோ அவற்றை
வியந்தோதும் வேதியரும் வெளுத்தனர்உள் உடம்பே. 48

சன்மார்க்க துன்மார்க்க இயல்பு

கலித்துறை

1626 சேய்போல் உலகத் துயிரைஎல் லாம்எண்ணிச் சேர்ந்துபெற்ற
தாய்போல் உரைப்பர்சன் மார்க்கசங் கத்தவர் சாற்றும்எட்டிக்
காய்போல் பிறர்தமைக் கண்டால் கசந்துள் கடுகடுத்தே
நாய்போல் குரைப்பர்துன் மார்க்கசங் கத்தவர் நானிலத்தே. 49

Koviloor Digital Library

பதிநிச்சயம்

அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

1627 உருவ ராகியும் அருவின ராகியும் உருஅரு வினராயும்
ஒருவ ரேஉளார் கடவுள்கண் டறிமினோ உலகுளீர் உணர்வின்றி
இருவ ராம்என்றும் மூவரே யாம்என்றும் இயலும்ஐ வர்கள்என்றும்
எருவ ராய்உரைத் துழல்வதென் உடற்குயிர் இரண்டுமூன் றெனலாமே.
50

பிரார்த்தனை விளக்கம்

அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

1628 கருணைக் கடலே அதில்எழுந்த கருணை அமுதே கனியமுதில்
தருணச் சுவையே சுவைஅனைத்தும் சார்ந்த பதமே தற்பதமே
பொருண்மெய்ப் பரமே சிதம்பரமாம் பொதுவில் நடிக்கும் பரம்பரமே
தெருண்மெய்க் கருத்தில் கலந்தெனையும் சித்தி நிலைகள் தெரித்தருளே.
51

உண்மை விளக்கம்

இலக்கணைப் பொருள்

எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

1629 வருமுன் வந்ததாக் கொள்ளுதல் எனக்கு
வழக்கம் வள்ளல்நீ மகிழ்ந்தருட் ஜோதி
தருமுன் தந்தனை என்றிருக் கின்றேன்
தந்தை நீதரல் சத்தியம் என்றே
குருமுன் பொய்யுரை கூறலேன் இனிஇக்
குவலை யத்திடைக் கவலையைத் தரியேன்
திருமுன் விண்ணப்பம் செய்தனன் கருணை
செய்க வாழ்கநின் திருவருட் புகழே. 52

மாயை நீக்கம்

அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

1630 அருட்பெருங் கடலே என்னை ஆண்டசற் குருவே ஞானப்
பொருட்பெருஞ் சபையில் ஆடும் பூரண வாழ்வே நாயேன்
மருட்பெரு மாயை முற்றும் மடிந்தன வினைக ளோடே
இருட்பெருந் தடையை நீக்கி இரவியும் எழுந்த தன்றே. 53

1631 மாணவ நிலைக்கு மேலே வயங்கிய ஒளியே மன்றில்
தாணவ நடஞ்செய் கின்ற தனிப்பெருந் தலைவ னேஎன்
கோணவ மாயை எல்லாம் குலைந்தன வினைக ளோடே
ஆணவ இருளை நீக்கி அலரியும் எழுந்த தன்றே. 54

Koviloor Digital Library

1632 தற்பரம் பொருளே வேதத் தலைநின்ற ஒளியே மோனச்
சிற்பர சுகமே மன்றில் திருநடம் புரியுந் தேவே
வற்புறு மாயை எல்லாம் மடிந்தன வினைக ளோடே
இற்படும் இருளை நீக்கி இரவியும் எழுந்த தன்றே. 55

சிதம்பரேசன் அருள்

கலி விருத்தம்

1633 சிற்றறி வுடையநான் செய்த தீமைகள்
முற்றவும் பொறுத்தருள் முனிந்திடேல் இன்றே
தெற்றென அருட்பெருஞ் ஜோதிச் செல்வமும்
மற்றவும் வழங்குக வரதனே என்றேன். 56

1634 என்றசொல் செவிமடுத் திறையும் அஞ்சிடேல்
இன்றுனக் கருட்பெருஞ் ஜோதி ஈந்தனம்
நன்றுற மகிழ்களந் நாளுஞ் சாவுறா
வென்றியும் அளித்தனம் என்றுமேவினான். 57

1635 மேவிஎன் உள்ளகத் திருந்து மேலும்என்
ஆவியிற் கலந்திவன் அவன்என் றோதும்ஓர்
பூவியற் பேதமும் போக்கி ஒன்றதாய்த்
தேவியற் புரிந்தனன் சிதம்ப ரேசனே. 58

போற்றிச் சந்த விருத்தம்

சந்த விருத்தம்

1636 போற்றி நின்அருள் போற்றி நின்பொது
போற்றி நின்புகழ் போற்றி நின்உரு
போற்றி நின்இயல் போற்றி நின்நிலை
போற்றி நின்நெறி போற்றி நின்சுகம்
போற்றி நின்உளம் போற்றி நின்மொழி
போற்றி நின்செயல் போற்றி நின்குணம்
போற்றி நின்முடி போற்றி நின்நடு
போற்றி நின்அடி போற்றி போற்றியே. 59

1637 போற்றி நின்இடம் போற்றி நின்வலம்
போற்றி நின்நடம் போற்றி நின்நலம்
போற்றி நின்திறம் போற்றி நின்தரம்
போற்றி நின்வரம் போற்றி நின்கதி
போற்றி நின்கலை போற்றி நின்பொருள்
போற்றி நின்ஒளி போற்றி நின்வெளி
போற்றி நின்தயை போற்றி நின்கொடை
போற்றி நின்பதம் போற்றி போற்றியே. 60

Koviloor Digital Library

1638 போற்று கின்றஎன் புன்மை யாவையும்
பொறுத்த நின்பெரும் பொறுமை போற்றிஎன்
ஆற்று வேன்உனக் கறிகிலேன்எனக்
கறிவு தந்தபே ரறிவ போற்றிவான்
காற்று நீடழல் ஆதி ஐந்துநான்
காணக் காட்டிய கருத்த போற்றிவன்
கூற்று தைத்துநீத் தழிவி லாஉருக்
கொள்ள வைத்தநின் கொள்கை போற்றியே. 61

பாடமும் படிப்பும்

எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

1639 அம்பலம் சேர்ந்தேன் எம்பலம் ஆர்ந்தேன்
அப்பனைக் கண்டேன் செப்பமுட் கொண்டேன்
உம்பர் வியப்ப இம்பர் இருந்தேன்
ஓதா துணர்ந்தேன் மீதானம் உற்றேன்
நம்பிடில் அணைக்கும் எம்பெரு மானை
நாயகன் தன்னைத் தாயவன் தன்னைப்
பம்புறப் பாடிப் படிக்கின்றேன் மேலும்
படிப்பேன் எனக்குப் படிப்பித்த வாறே. 62

1640 கள்ளத்தை அற்ற உள்ளத்தைப் பெற்றேன்
கன்றிக் கனிந்தே மன்றில் புகுந்தேன்
தெள்ளத் தெளிந்த வெள்ளத்தை உண்டேன்
செய்வகை கற்றேன் உய்வகை உற்றேன்
அள்ளக் குறையா வள்ளற் பொருளை
அம்பலச் ஜோதியை எம்பெரு வாழ்வை
பள்ளிக்குட் பாடிப் படிக்கின்றேன் மேலும்
படிப்பேன் எனக்குப்படிப்பித்த வாறே. 63

1641 காட்டைக் கடந்தேன் நாட்டை அடைந்தேன்
கவலை தவிர்ந்தேன் உவகை மிகுந்தேன்
வீட்டைப் புகுந்தேன் தேட்டமு துண்டேன்
வேதாக மத்தின் விளைவெலாம் பெற்றேன்
ஆட்டைப் புரிந்தே அம்பலத் தோங்கும்
ஐயர் திருவடிக் கானந்த மாகப்
பாட்டைப் படித்தேன் படிக்கின்றேன் மேலும்
படிப்பேன் எனக்குப் படிப்பித்த வாறே. 64

Koviloor Digital Library

பாட்டும் திருத்தமும்

அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

1642 தேன்பாடல் அன்புடையார் செயப்பொதுவில் நடிக்கின்ற சிவமே ஞானக்
கான்பாடிச் சிவகாம வல்லிமகிழ் கின்றதிருக் கணவா நல்ல
வான்பாட மறைபாட என்னுளத்தே வயங்குகின்ற மன்னா நின்னை
யான்பாட நீதிருத்த என்னதவஞ் செய்தேனோ எந்தாய் எந்தாய். 65

1643 ஆன்பாலு நறுந்தேனும் சர்க்கரையும் கூட்டியதெள் ளமுதே என்றன்
ஊன்பாலு முளப்பாலும் உயிர்ப்பாலும் ஒளிர்கின்ற ஒளியே வேதம்
பூம்பாடல் புனைந்தேத்த என்னுளத்தே ஆடுகின்ற பொன்னே நின்னை
யான்பாட நீதிருந்த என்னதவஞ் செய்தேனோ எந்தாய் எந்தாய். 66

எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

1644 இணக்கறியீர் இதம்அறியீர் இருந்தநிலை அறியீர்
இடம்அறியீர் தடம்அறியீர் இவ்வுடம்பை எடுத்த
கணக்கறியீர் வழக்கறியீர் அம்பலத்தே மாயைக்
கலக்கம்அற நடிக்கின்ற துலக்கம்அறி வீரோ
பிணக்கறிவீர் புரட்டறிவீர் பிழைசெயவே அறிவீர்
பேருணவைப் பெருவயிற்றுப் பிலத்தில்இட அறிவீர்
மணக்கறியே பிணக்கறியே வறுப்பேயோர்ப் பொரிப்பே
வடைக்குழம்பே சாறேஎன் றடைக்க அறிவீரே. 67

1645 உழக்கறியீர் அளப்பதற்கோர் உளவறியீர் உலகீர்
ஊர்அறியீர் பேர்அறியீர் உண்மைஒன்றும் அறியீர்
கிழக்கறியீர் மேற்கறியீர் அம்பலத்தே மாயைக்
கேதம்அற நடிக்கின்ற பாதம்அறி வீரோ
வழக்கறிவீர் சண்டையிட்டே வம்பளக்க அறிவீர்
வடிக்கும்முன்னே சோறெடுத்து வயிற்றடைக்க அறிவீர்
குழைக்கறியே பழக்கறியே கூட்டுவர்க்கக்க றியே
குழம்பேசா றேஎனவும் கூறஅறி வீரே. 68

அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

1646 உணிக்கும் மூட்டுக்கும் கொதுகுக்கும் பேனுக்கும் உவப்புறப் புசிக்கின்றீர்
துணிக்கும் காசுக்கும் சோற்றுக்கும் ஊர்தொறும் சுற்றிப்போய் அலைகின்றீர்
பிணிக்கும் பீடைக்கும் உடலுளம் கொடுக்கின்றீர் பேதையீர் நல்லோர்கள்
பணிக்கும் வேலைசெய் துண்டுடுத் தம்பலம் பரவுதற் கிசையீரே. 69

1647 மழவுக்கும் ஒருபிடிசோ றளிப்பதன்றி இருபிடிஊண் வழங்கில் இங்கே
உழவுக்கும் முதல்குறையும் எனவளர்த்தங் கவற்றைஎலாம் ஓகோ பேயின்
விழவுக்கும் புலால்உண்ணும் விருந்துக்கும் மருந்துக்கும் மெலிந்து மாண்டார்
இழவுக்கும் இடர்க்கொடுங்கோல் இறைவரிக்கும் கொடுத்திழப்பர் என்னே என்னே.

Koviloor Digital Library

1648 கடுகாட்டுக் கறிக்கிடுக தாளிக்க எனக்கழறிக் களிக்கா நின்ற
சுடுகாட்டுப் பிணங்காள்இச் சுகமனைத்தும் கணச்சுகமே சொல்லக் கேண்மின்
முடுகாட்டுக் கூற்றுவரும் சாவீரால் சாவதற்கு முன்னே நீவிர்
இடுகாட்டுப் பிணங்கண்டால் ஏத்துமினோ எமையும்இவ்வா றிடுக என்றே.
71

1649 மதிப்பாலை அருட்பாலை ஆனந்தப் பாலைஉண்ண மறந்தார் சில்லோர்
விதிப்பாலை அறியேம்தாய்ப் பாலைஉண்டு கிடந்தழுது விளைவிற் கேற்பக்
கொதிப்பாலை உணர்வழிக்கும் குடிப்பாலை மடிப்பாலைக் குடிப்பார் இங்கே
துதிப்பாலை அருள்தருநம் தேவசிகா மணித்தேவைத் துதியார் அந்தோ.
72

கலிநிலைத்துறை

1650 பூவார் கொன்றைச் செஞ்சடை யாளர் புகழாளர்
ஈவார் போல்வந் தென்மனை புக்கார் எழில்காட்டி
தேவார் தில்லைச் சிற்சபை மேவும் திருவாளர்
ஆவா என்றார் என்னடி அம்மா அவர்சூதே. 73

எழுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

1651 நல்வினை சிறிது நயந்திலேன் என்பாள்
நான்செயத் தக்கதே தென்பாள்
செல்வினை ஒன்றுந் தெரிந்திலன் ஐயோ
தெய்வமே தெய்வமே என்பாள்
வெல்வினை மன்றில் நடம்புரி கின்றார்
விருப்பிலர் என்மிசை என்பாள்
வல்வினை உடையேன் என்றுளம் பதைப்பாள்
வருந்துவாள் நான்பெற்ற மகளே. 74

கலிநிலைத்துறை

1652 அங்கே உன்றன் அன்பர்கள் எல்லாம் அமர்கின்றார்
இங்கே நீதான் என்னள வின்னும் இரங்காயேல்
எங்கே போகேன் யாரொடு நோகேன் எதுசெய்கேன்
செங்கேழ் வேணித் திங்கள் அணிந்தருள் சிவனேயோ. 75

1653 ஈயோ டுறமும் சிறியேன்அளவில் எந்தாய்நின்
சேயோ டுறமும் பேரருள் வண்ணத் திருவுள்ளம்
காயோ பழமோ யாதோ அறியேன் கவல்கின்றேன்
தீயோ டுறமும் திருவருள் வடிவச் சிவனேயோ. 76

Koviloor Digital Library

அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

1654 உடைய நாயகன் பிள்ளைநான் ஆகில்எவ் வுலகமும் ஒருங்கின்பம்
அடைய நான்அருட் ஜோதிபெற் றழிவிலா யாக்கை கொண் டுலகெல்லாம்
மிடைய அற்புதப் பெருஞ்செயல் நாடொறும் விளைத்தெங்கும் விளையாடத்
தடைய தற்றநல் தருணம்இத் தருணமாத் தழைக்கஇத் தனியேற்கே. 77

1655 கோது கொடுத்த மனச்சிறியேன் குற்றம் குணமாக் கொண்டேஇப்
போது கொடுத்த நின்அருளாம் பொருளை நினைக்கும் போதெல்லாம்
தாது கொடுத்த பெருங்களிப்பும் சாலா தென்றால் சாமிநினக்
கேது கொடுப்பேன் கேட்பதன்முன் எல்லாம் கொடுக்க வல்லாயே. 78

1656 கன்றுடைய பசுப்போலே கசிந்துருகும் அன்பரெலாம் காணக் காட்டும்
என்றுடைய நாயகனே எல்லாஞ்செய் வல்லவனே இலங்குஞ் ஜோதி
மன்றுடைய மணவாளா மன்னவனே என்னிருகண் மணியே நின்னை
அன்றுடையேன் இன்றுவிடேன் ஆணைஉன்மேல் ஆணைஉன்மேல் ஆணை ஐயா. 79

1657 திருநி லைத்தநல் அருளொடும் அன்பொடும் சிறப்பொடும் செழித்தோங்க
உருநி லைத்திவண் மகிழ்வொடு வாழ்வுற உவந்துநின் அருள்செய்வாய்
இருநி லத்தவர் இன்புறத் திருவருள் இயல்வடி வொடுமன்றில்
குருநி லைத்தசற் குருஎனும் இறைவநின் குரைகழற் பதம்போற்றி. 80

1658 குற்றம் புரிதல் எனக்கியல்பே குணமாக் கொள்ளல் உனக்கியல்பே
சிற்றம் பலவா இனிச்சிறியேன் செப்பும் முகமன் யாதுளது
தெற்றென் றடியேன் சிந்தைதனைத் தெளிவித் தச்சந் துயர்தீர்த்தே
இற்றைப் பொழுதே அருட்ஜோதி ஈக தருணம் இதுவாமே. 81

1659 அருளா ரமுதே என்னுடைய அன்பே என்றன் அறிவேஎன்
பொருளாய் அகத்தும் புறத்தும்எனைப் புணர்ந்த கருணைப் பொருப்பேமெய்த்
தெருளாம் ஒளியே வெளியாகச் சிற்றம் பலத்தே நடிக்கின்றோய்
இருளா யினஎல் லாம்தவிர்த்தென் எண்ணம் முடிப்பாய் இப்போதே. 82

1660 மந்திரம் அறியேன் மற்றை மணிமருந் தறியேன் வேறு
தந்திரம் அறியேன் எந்தத் தகவுகொண் டடைவேன் எந்தாய்
இந்திரன் முதலாம் தேவர் இறைஞ்சப்பொன் மன்றில் வேணிச்
சந்திரன் ஆடஇன்பத் தனிநடம் புரியும் தேவே. 83

1661 கலக்கம் அற்றுநான் நின்றனைப் பாடியே களிக்கின்ற நாள்எந்நாள்
இலக்கம் உற்றறிந் திடஅருள் புரிகுவாய் எந்தைஇவ் விரவின்கண்
துலக்க முற்றசிற் றம்பலத் தாடுமெய்ச் ஜோதியே சுகவாழ்வே
அலக்கண் அற்றிடத் திருவருள் புரியும்என் அப்பனே அடியேற்கே. 84

Koviloor Digital Library

கட்டளைக் கலிப்பா

1662 பண்டு நின்திருப் பாதம லரையே
பாடி யாடிய பத்திமை யோரைப்போல்
தொண்டு கொண்டெனை ஆண்டனை இன்றுதான்
துட்டன் என்றது ரத்திடல் நன்றுகொல்
குண்டு நீர்க்கடல் சூழல கத்துவோர்
குற்றம் ஆயிரங் கோடிசெய் தாலும்முன்
கொண்டு பின்குலம் பேசுவ ரோஎனைக்
குறிக்கொள் வாய்எண் குணந்திகழ் வள்ளலே. 85

1663 வான்வேண்டு சிற்றம் பலத்தே வயங்கி வளர்அமுதத்
தேன்வேண்டி னேன்இத் தருணத் தருள்செய்க செய்திலையேல்
ஊன்வேண்டும் என்னுயிர் நீத்துநின் மேற்பழி யோவிளைப்பேன்
நான்வேண்டு மோபழி தான்வேண்டு மோசொல்க நாயகனே. 86

எழுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

1664 செவ்வணத் தவரும் மறையும்ஆ கமும்
தேவரும் முனிவரும் பிறரும்
இவ்வணத் ததுஎன் றறிந்திடற் கரிதாம்
எந்தைநின் திருவருள் திறத்தை
எவ்வணத் தறிவேன் எங்ஙனம் புகல்வேன்
என்தரத் தியலுவ தேயோ
ஒவ்வணத் தரசே எனக்கென இங்கோர்
உணர்ச்சியும் உண்டுகொல் உணர்த்தே. 87

1665 உணர்ந்துணர்ந் தாங்கே உணர்ந்துணர்ந் துணரா
உணர்ந்தவர் உணர்ச்சியான் நுழைந்தே
திணர்ந்தனர் ஆகி வியந்திட விளங்கும்
சிவபதத் தலைவநின் இயலைப்
புணர்ந்தநின் அருளே அறியும்நான்அறிந்து
புகன்றிடும் தரஞ்சிறி துளனோ
கொணர்ந்தொரு பொருள்என் கரங்கொளக் கொடுத்த
குருஎனக் கூறல்என் குறிப்பே. 88

எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

1666 என்னால்ஓர் துரும்பும்அசைத் தெடுக்கமுடி யாதே
எல்லாஞ்செய் வல்லவன்என் றெல்லாரும் புகலும்
நின்னால்இவ் வுலகிடைநான் வாழ்கின்றேன் அரசே
நின்அருள்பெற் றழியாத நிலையைஅடைந் திடஎன்

Koviloor Digital Library

தன்னால்ஓர் சுதந்தரமும் இல்லைகண்டாய் நினது
சகலசுதந் தரத்தைஎன்பால் தயவுசெயல் வேண்டும்
பின்நாள்என் றிடில்சிறிதும் தரித்திருக்க மாட்டேன்
பேராணை உரைத்தேன்என் பேராசை இதுவே. 89

1667 இச்சைஎலாம் புகன்றேன்என் இலச்சைஎலாம் விடுத்தேன்
இனிச்சிறிதும் தரியேன்இங் கிதுதருணத் தடைந்தே
அச்சைஎலாம் வெளிப்படுத்தி அச்சம்எலாம் அகற்றி
அருட்ஜோதித் தனிஅரசே ஆங்காங்கும் ஓங்க
விச்சைஎலாம் எனக்களித்தே அவிச்சைஎலாம் தவிர்த்து
மெய்யுறஎன் னொடுகலந்து விளங்கிடுதல் வேண்டும்
பச்சைஎலாஞ் செம்மைஎலாம் பொன்மைஎலாம் படர்ந்த
படிகமணி விளக்கேஅம் பலம்விளங்கும் பதியே. 90

1668 தருவகைஇத் தருணநல்ல தருணம்இதில் எனக்கே
தனித்தஅருட் பெருஞ்ஜோதி தந்தருள்க இதுதான்
ஒருவகைஈ திலைஎனில்வே றொருவகைஎன் னுடைய
உடல்உயிரை ஒழித்திடுக உவப்பினொடே இந்த
இருவகையும் சம்மதமே திருவடிசாட் சியதாய்
இயம்பினன்என் இதயம்உன்றன் இதயம்அறிந் ததுவே
அருவகையோ உருவகையும் ஆகிஎன்னுள் அமர்ந்தாய்
அம்மேஎன் அப்பாஎன் அய்யாஎன் அரசே. 91

1669 வினைத்தடைதீர்த் தெனைஆண்ட மெய்யன்மணிப் பொதுவில்
மெய்ஞ்ஞான நடம்புரிந்து விளங்குகின்ற விமலன்
எனைத்தனிவைத் தருளொளிஈந் தென்னுள் இருக் கின்றான்
எல்லாஞ்செய் வல்லசித்தன் இச்சையருட் ஜோதி
தினைத்தனைபெற் றவரேனும் சாலுமுன்னே உலகில்
செத்தவர்கள் எல்லாரும் திரும்பவரு கென்று
நினைத்தவுடன் எதிர்வந்து நிற்பர்கண்டாய் எனது
நெஞ்சேநீ அஞ்சேல்உள் அஞ்சேல்அஞ் சேலே. 92

குறள்தாழிசை

1670 அணியே எனதுமெய் யறிவே பொதுவளர் அரசே திருவருள் அமுதே
இனிதருள் வாய்இது தருணம் அமுதரு ளாய்இது தருணம்
மணியே எனதுகண் மணியே பொதுவளர் மதியே திருவருண் மதியே
அருள்புரி வாய்இது தருணம் அருள்புரி வாய்இது தருணம். 93

Koviloor Digital Library

நேரிசை வெண்பா

1671 இதுவே தருணம் எனைஅணைதற் கிங்கே
பொதுவே நடிக்கும் புனிதா – விதுவேய்ந்த
சென்னியனே சுத்த சிவனே உனக்கடியேன்
அன்னியனே அல்லேன் அறிந்து. 94

கலித்துறை

1672 ஆதி யேதிரு அம்பலத் தாடல்செய் அரசே
நீதி யேஎலாம் வல்லவா நல்லவா நினைந்தே
ஓதி யேஉணர் தற்கரி தாகிய ஒருவான்
ஜோதி யேஎனைச் சோதியேல் சோதியேல் இனியே. 95

கட்டளைக் கலித்துறை

1673 அப்பனை இப்பனை ஆக்கிச் சிவிகை அமர்ந்தவன்சொல்
அப்பனை என்னுயிர்க் கானசெந் தேனை அமுதைஅந்நாள்
அப்பனை ஆழி கடத்திக் கரைவிட் டளித்தசடை
அப்பனைச் சிற்றம் பலவனை நான்துதித் தாடுவனே. 96

1674 மாதோர் புடைவைத்த மாமருந் தேமணி யேஎன்மட்டில்
யாதோ திருவுளம் யானறி யேன்இதற் கென்னசெய்வேன்
போதோ கழிகின்ற தந்தோநின் தன்னைப் பொருந்துகின்ற
சூதோர் அணுவும் தெரியேன்நின் பாதத் துணைதுணையே. 97

தரவு கொச்சகக் கலிப்பா

1675 ஆர்ந்தஅருட் பெருஞ்ஜோதி அப்பாநான் அடுத்தவர்தம்
சோர்ந்தமுகம் பார்க்கஇனித் துணியேன் நின்அருள்ஆணை
நேர்ந்தவர்கள் நேர்ந்தபடி நெகிழ்ந்துரைக்கும் வார்த்தைகளும்
ஓர்ந்துசெவி புகத்துணியேன் உன்ஆணை உன்ஆணை. 98

1676 அழியா நிலையாதது மேவிநின் அன்பினோடும்
ஒழியா துனைப்பாடி நின்றாடி உலகினூடே
வழியாம் உயிர்க்கின்பம் புரிந்து வயங்கல்வேண்டும்
இழியா தருள்வாய் பொதுமேவிய எந்தைநீயே. 99

1677 கரும்பசைக்கும் மொழிச்சிறியார் கல்மனத்தில் பயின்றுபயின்
றிரும்பசைக்கும் மனம்பெற்றேன் யானோஇவ் வேழைகள்தம்
அரும்பசிக்கு மருந்தளிப்பேன் அந்தோஇங் கென்னாலே
துரும்பசைக்க முடியாதே ஜோதிநடப் பெருமானே. 100

Koviloor Digital Library

அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

1678 மதிக்களவா மணிமன்றில் திருநடஞ்செய் திருத்தாளை வழுத்தல் இன்று
பதிக்களவா நலந்தருவல் என்றுநினை ஏத்துதற்குப் பணிக்கின் றேன்நீ
விதிக்களவாச் சித்திகண்முன் காட்டுகஇங் கென்கின்றாய் விரைந்த நெஞ்சே
பொதிக்களவா முன்னர்இங்கே சத்தத்திற் களவென்பார் போன்றாய் அன்றே. 101

1679 ஆடியகால் மலர்களுக்கே அன்புடையார் யாவரிங்கே அவர்க்கே இன்பம்
கூடியதென் றாரணமும் ஆகமமும் ஆணையிட்டுக் கூறும்வார்த்தை
ஓடியதோ நெஞ்சேநீ உன்னுவதென் பற்பலவாய் உன்னேல் இன்னே
பாடிஅவன் திருப்பாட்டைப் படிகண்டாய்இன்புலகப் படிகண் டாயே. 102

எழுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

1680 ஒன்றுமுன் என்பால் எண்ணிடக் கிடைத்த
வுவைக்குமேற் றனைஅருள் ஒளியால்
நன்றுகண் டாங்கே அருட்பெருஞ் ஜோதி
நாதனைக் கண்டவன் நடிக்கும்
மன்றுகண் டதனில் சித்தெலாம் வல்ல
மருந்துகண் டுற்றது வடிவாய்
நின்றுகொண் டாடுந் தருணம்இங் கிதுவே
நெஞ்சமே அஞ்சலை நீயே. 103

1681 கலைவளர் முடிய தென்னைஆட் கொண்ட
கருணையங் கண்ணது ஞான
நிலைவளர் பொருள துலகெலாம் போற்ற
நின்றது நிறைபெருஞ் ஜோதி
மலைவளர் கின்றது அருள்வெளி நடுவே
வயங்குவ தின்பமே மயமாய்த்
தலைவளர் திருச்சிற் றம்பலந் தனிலே
தனித்தெனக் கினித்ததோர் கனியே. 104

நிலைமண்டில ஆசிரியப்பா

1682 சிற்சபைக் கண்ணும் பொற்சபைக் கண்ணும்
திருநடம் புரியும் திருநட ராஜ
எனக்கருள் புரிந்த நினக்கடி யேன்கைம்
மாற்றை அறிந்திலன் போற்றிநின் அருளே. 105

1683 நாயினும் சிறியேன் ஆயினும் பெரியேன்
யாதிற் பெரியேன் தீதிற் பெரியேன்
என்னைஆண் டருளினை என்னைஆண் டவனே
அம்பலத் தாடல்செய் எம்பெரும் பொருளே. 106

Koviloor Digital Library

நேரிசை வெண்பா

1684 உண்மைஉரைத் தருள்என் றோதினேன் எந்தைபிரான்
வண்மையுடன் என்அறிவில் வாய்ந்துரைத்தான் – திண்மையுறு
சித்திநிலை எல்லாம் தெரிவித் தருள்கின்றேம்
இத்தருணம் சத்தியமே என்று. 107

1685 உலகமெலாம் போற்ற ஒளிவடிவ னாகி
இலகஅருள் செய்தான் இசைந்தே – திலகன்என
நானேசன் மார்க்கம் நடத்துகின்றேன் நம்பெருமான்
தானே எனக்குத் தனித்து. 108

1686 தனித்துணையாய் என்றன்னைத் தாங்கிக்கொண் டென்றன்
மனித்த உடம்பழியா வாறே – கனித்துணையாம்
இன்னமுதம் தந்தெனக்கே எல்லாமும் வல்லசித்தி
தன்னையுந்தந் துட்கலந்தான் தான். 109

1687 சர்க்கரைஒத் தான்எனக்கே தந்தான் அருளென்மனக்
கற்கரையச் செய்தே களிப்பித்தான் – கற்க
இனியான் அருட்ஜோதி எந்தைஎன்னுள் உற்றான்
இனியான் மயங்கேன் இருந்து. 110

1688 உன்னைவிட மாட்டேன்நான் உன்ஆணை எம்பெருமான்
என்னைவிட மாட்டாய் இருவருமாய் – மன்னிஎன்றும்
வண்மை எலாம்வல்ல வாய்மைஅரு ளால் உலகுக்
குண்மைஇன்பம் செய்தும் உவந்து. 111

கட்டளைக் கலித்துறை

1689 நஞ்சுண் டுயிர்களைக் காத்தவ னேநட நாயகனே
பஞ்சுண்ட சிற்றடிப் பாவைபங் காநம் பராபரனே
மஞ்சுண்ட செஞ்சடை மன்னாபொன் அம்பல வாவலவா
பிஞ்சுண்ட வாய்க்குப் பழம்அளித் தாண்ட பெரியவனே. 112

1690 அப்பூறு செஞ்சடை அப்பாசிற் றம்பலத் தாடுகின்றோய்
துப்பூறு வண்ணச் செழுஞ்சுட ரேதனிச் ஜோதியனே
வெப்பூறு நீக்கிய வெண்ணீறு பூத்தபொன் மேனியனே
உப்பூறு வாய்க்குத்தித் திப்பூறு காட்டிய உத்தமனே. 113

1691 நான்செய்த புண்ணியம் என்னுரைக் கேன்பொது நண்ணியதோர்
வான்செய்த மாமணி என்கையில் பெற்றுநல் வாழ்வடைந்தேன்
ஊன்செய்த தேகம் ஒளிவடி வாகநின் றோங்குகின்றேன்
கோன்செய்த விச்சை குணிக்கவல் லார்எவர் கூறுமினே. 114

Koviloor Digital Library

1692 பண்ணிய பூசை நிறைந்தது சிற்றம் பலநடங்கண்
டெண்ணிய எண்ணம் பலித்தன மெய்இன்பம் யெய்தியதோர்
தண்ணியல் ஆரமு துண்டனன் கண்டனன் சாமியைநான்
நண்ணிய புண்ணியம் என்னுரைக் கேன்இந்த நானிலத்தே. 115

கலிவிருத்தம்

1693 அருட்பெருஞ் ஜோதிஎன் அகத்தில் ஓங்கின
மருட்பெரும் திரையெலாம் மடிந்து நீங்கின
இருட்பெரும் மலமுதல் யாவும் தீர்ந்தன
தெருட்பெரும் சித்திகள் சேர்ந்த என்னையே. 116

1694 ஓவுறாத் துயர்செயும் உடம்புதான் என்றும்
சாவுறா தின்பமே சார்ந்து வாழலாம்
மாவுறாச் சுத்தசன் மார்க்க நன்னெறி
மேவுறார் தங்களை விடுக நெஞ்சமே. 117

1695 பொத்திய மலப்பிணிப் புழுக்கு ரம்பைதான்
சித்தியல் சுத்தசன் மார்க்கச் சேர்ப்பினால்
நித்திய மாகியே நிகழும் என்பது
சத்தியம் சத்தியம் சகத்து ளீர்களே. 118

கொச்சகக் கலிப்பா

1696 வானாகி வானடுவே மன்னும்ஒளி யதனில்
தானாகி வானாகிச் சன்மார்க்கர் உள்ளிருக்குந்
தேனாகித் தெள்ளமுதாய்த் தித்திக்கும் தேவேநீ
யானாகி என்னுள் இருக்கின்றாய் என்னேயோ. 119

1697 ஞானா கரச்சுடரே ஞான மணிவிளக்கே
ஆனா அருட்பெருஞ்சிற் றம்பலத்தே ஆனந்தத்
தேனார் அமுதாம் சிவமே சிவமேநீ
நானாகி என்னுள் நடிக்கின்றாய் என்னேயோ. 120

1698 என்தரத்துக் கேலாத எண்ணங்கள் எண்ணுகின்றேன்
முன்தரத்தின் எல்லாம் முடித்துக் கொடுக்கின்றாய்
நின்தரத்தை என்புகல்வேன் நின்இடப்பால்* மேவுபசும்
பொன்தரத்தை என்உரைக்கேன் பொற்பொதுவில் நடிக்கின்றோய். 121

1699 என்னுடைய விண்ணப்பம் இதுகேட்க எம்பெருமான்
நின்னுடைய பெருங்கருணை நிதிஉடையேன் ஆதலினால்
பொன்னுடையான் அயன்முதலாம் புங்கவரை வியவேன்என்
தன்னுடைய செயல்எல்லாம் தம்பிரான் செயலன்றே. 122

---

* வலப்பால் – முதற்பதிப்பு, பொ.சு.ப. ச.மு.க.

Koviloor Digital Library

1700 ஓங்கும்அன்பர் எல்லாரும் உள்ளே விழித்துநிற்கத்
தூங்கிய என்தன்னை எழுப்பிஅருள் தூயபொருள்
வாங்குகளன் றென்பால் வலியக் கொடுத்தமுதும்
பாங்குறநின் றூட்டினையே எந்தாய்நின் பண்பிதுவே. 123

1701 நாட்பாரில் அன்பரெலாம் நல்குகஎன் றேத்திநிற்ப
ஆட்பாரில் அன்போர் அணுத்துணையும் இல்லேற்கே
நீட்பாய் அருளமுதம் நீகொடுத்தாய் நின்னை இங்கே
கேட்பார் இலைஎன்று கீழ்மேல தாக்கினையே. 124

1702 எல்லார்க்கும் கடையாகி இருந்தேனுக் கருள்புரிந்தே
எல்லார்க்கும் துணையாகி இருக்கவைத்தாய் எம்பெருமான்
எல்லார்க்கும் பொதுவில்நடம் இடுகின்றாய் இவ்வண்ணம்
எல்லார்க்கும் செய்யாமை யாதுகுறித் திசைஎனக்கே. 125

கட்டளைக் கலித்துறை

1703 எல்லாக் குறையும் தவிர்த்தேன்உன் இன்னருள் எய்தினன்நான்
வல்லாரின் வல்லவன் ஆனேன் கருணை மருந்தருந்தி
நல்லார் எவர்க்கும் உபகரிப் பான்இங்கு நண்ணுகின்றேன்
கொல்லா விரதத்தில் என்னைக் குறிக்கொண்ட கோலத்தனே. 126

1704 கண்டேன் சிற்றம்பலத் தானந்த நாடகம் கண்டுகளி
கொண்டேன் எல்லாம்வல்ல சித்தனைக் கூடிக் குலவிஅமு
துண்டேன் மெய்ஞ்ஞான உருஅடைந் தேன்பொய் உலகொழுக்கம்
விண்டேன் சமரச சன்மார்க்கம் பெற்ற வியப்பிதுவே. 127

1705 கண்கொண்ட பூதலம் எல்லாம்சன் மார்க்கம் கலந்துகொண்டே
பண்கொண்ட பாடலில் பாடிப் படித்துப் பரவுகின்றார்
விண்கொண்ட சிற்சபை ஒன்றே நிறைந்து விளங்குகின்ற
தெண்கொண்ட மற்றை மதமார்க்கம் யாவும் இறந்தனவே. 128

1706 செத்தார் எழுந்தனர் சுத்தசன் மார்க்கம் சிறந்ததுநான்
ஒத்தார் உயர்ந்தவர் இல்லா ஒருவனை உற்றடைந்தே
சித்தாடு கின்றனன் சாகா வரமும் சிறக்கப்பெற்றேன்
இத்தா ரணியில் எனக்கிணை யார்என் றியம்புவேனே. 129

கலிநிலைத்துறை

1707 கருணை யாம்பெருங் கடல்அமு தளித்தனை எனக்கே
தருண வாரிச மலர்ப்பதம் தந்தனை நின்னை
அருண வண்ணஒண் சுடர்மணி மண்டபத் தடியேன்
பொருள்ந யப்புறக் கண்டுகண் டுளமகிழ் போதே. 130

Koviloor Digital Library

எழுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

1708 சிறுநெறிக் கெனைத்தான் இழுத்ததோர் கொடிய
தீமன மாயையைக் கணத்தே
வெறுவிய தாக்கித் தடுத்தெனை ஆண்ட
மெய்யநின் கருணைஎன் புகல்வேன்
உறுநறுந் தேனும் அமுதும்மென் கரும்பில்
உற்றசா றட்டசர்க் கரையும்
நறுநெயுங் கலந்த சுவைப்பெரும் பழமே
ஞானமன் றோங்கும்என் நட்பே. 131

1709 புல்லிய நெறிக்கே இழுத்தெனை அலைத்த
பொய்ம்மன மாயையைக் கணத்தே
மெல்லிய தாக்கித் தடுத்தெனை ஆண்ட
மெய்யநின் கருணைஎன் புகல்வேன்
வல்லிஎன் அம்மை மகிழமன் றோங்கும்
வள்ளலே மறைகள்ஆ கமங்கள்
சொல்லிய பதியே மிகுதயா நிதியே
தொண்டனேன் உயிர்க்குமெய்த் துணையே. 132

1710 அருந்தவர் காண்டற் கரும்பெருங்கருணை
அருட்பெருஞ் ஜோதிஎன் உளத்தே
இருந்தனன் அம்மா நான்செய்த தவந்தான்
என்னையோ என்னையோ என்றாள்
திருந்துதெள் ளமுதுண் டழிவெலாந் தவிர்ந்த
திருவுரு அடைந்தனன் ஞான
மருந்துமா மணியும் மந்திர நிறைவும்
வாய்த்தன வாய்ப்பின்என் றாளே. 133

1711 இன்பிலே வயங்கும் சிவபரம் பொருளே
என்உயிர்க் கமுதமே என்தன்
அன்பிலே பழுத்த தனிப்பெரும் பழமே
அருள்நடம் புரியும்என் அரசே
வன்பிலே விளைந்த மாயையும் வினையும்
மடிந்தன விடிந்ததால் இரவும்
துன்பிலேன் இனிநான் அருட்பெருஞ் ஜோதிச்
சூழலில் துலங்குகின் றேனே. 134

1712 உயிரெலாம் ஒருநீ திருநடம் புரியும்
ஒருதிருப் பொதுஎன அறிந்தேன்
செயிரெலாம் தவிர்ந்தேன் திருவெலாம் அடைந்தேன்
சித்தெலாம் வல்லதொன் றறிந்தேன்

Koviloor Digital Library

மயிரெலாம் புளகித் துளமெலாம் கனிந்து
மலர்ந்தனன் சுத்தசன் மார்க்கப்
பயிரெலாம் தழைக்கப் பதியெலாம் களிக்கப்
பாடுகின் றேன் பொதுப் பாட்டே. 135

1713 படித்தஎன் படிப்பும் கேள்வியும் இவற்றின்
பயனதாம் உணர்ச்சியும் அடியேன்
பிடித்தநல் நிலையும் உயிரும்மெய் இன்பும்
பெருமையும் சிறப்பும்நான் உண்ணும்
வடித்ததெள் ளமுதும் வயங்குமெய் வாழ்வும்
வாழ்க்கைநன் முதலும்மன் றகத்தே
நடித்தபொன் னடியும் திருச்சிற்றம் பலத்தே
நண்ணிய பொருளும்என் றறிந்தேன். 136

1714 கலையனே எல்லாம் வல்லஓர் தலைமைக்
கடவுளே என்இரு கண்ணே
நிலையனே ஞான நீதிமன் றிடத்தே
நிருத்தஞ்செய் கருணைமா நிதியே
புலையனேன் பொருட்டுன் திருவடி அவனி
பொருந்திய புதுமைஎன் புகல்வேன்
சிலையைநேர் மனத்தேன் செய்தவம் பெரிதோ
திருவருட் பெருந்திறல் பெரிதே. 137

1715 தரம்பிறர் அறியாத் தலைவஓர் முக்கட்
டனிமுதல் பேரருட் ஜோதிப்
பரம்பர ஞான சிதம்பர நடஞ்செய்
பராபர நிராமய நிமல
உரம்பெறும் அயன்மால் முதற்பெருந் தேவர்
உளத்ததி சயித்திட எனக்கே
வரந்தரு கின்றாய் வள்ளல்நின் கருணை
மாகடற் கெல்லைகண் டிலனே. 138

1716 யான்முனம் புரிந்த பெருந்தவம் யாதோ
என்சொல்வேன் என்சொல்வேன் அந்தோ
ஊன்மனம் உருக என்தனைத் தேற்றி
ஒளிஉருக் காட்டிய தலைவா
ஏன்மனம் இரங்காய் இன்றுநீ என்றேன்
என்றசொல் ஒலிஅடங் குதன்முன்
ஆன்மகிழ் கன்றின் அணைத்தெனை எடுத்தாய்
அருட்பெருஞ் ஜோதிஎன் அரசே. 139

Koviloor Digital Library

1717 பனிப்பறுத் தெல்லாம் வல்லசித் தாகிப்
பரந் தருகின்ற மெய்வாழ்வாம்
தனிப்பழம் எனக்கே தந்தைதான் தந்தான்
தமியனேன் உண்டனன் அதன்தன்
இனிப்பைநான் என்என் றியம்புவேன் அந்தோ
என்னுயிர் இனித்ததென் கரணம்
சனிப்பற இனித்த தத்துவம் எல்லாம்
தனித்தனி இனித்தன தழைத்தே. 140

1718 விண்ணெலாம் கலந்த வெளியில்ஆ னந்தம்
விளைந்தது விளைந்தது மனனே
கண்ணெலாம் களிக்கக் காணலாம் பொதுவில்
கடவுளே என்றுநம் கருத்தில்
எண்ணலாம் எண்ணி எழுதலாம் எழுதி
ஏத்தலாம் எடுத்தெடுத் துவந்தே
உண்ணலாம் விழைந்தார்க் குதவலாம் உலகில்
ஓங்கலாம் ஓங்கலாம் இனியே. 141

1719 வள்ளலாம் கருணை மன்றிலே அமுத
வாரியைக் கண்டனம் மனமே
அள்ளலாம் எடுத்துக் கொள்ளலாம் பாடி
ஆடலாம் அடிக்கடி வியந்தே
உள்ளலாம் நிரம்ப உண்ணலாம் உலகில்
ஓங்கலாம் உதவலாம் உறலாம்
கள்ளலாம் உண்டவண்டென இன்பம்
காணலாம் களிக்கலாம் இனியே. 142

1720 சனிதொ லைந்தது தடைத விர்ந்தது தயைமி குந்தது சலமொடே
துணிதொ லைந்தது சுமைத விர்ந்தது சுபமி குந்தது சுகமொடே
கனிஎ திர்ந்தது களைத விர்ந்தது களிமி குந்தது கனிவொடே
புனித மன்றிறை நடம லிந்தது புகழ்உ யர்ந்தது புவியிலே. 143

1721 உரையும் உற்றது ஒளியும் உற்றது உணர்வும் உற்றது உண்மையே
பரையும் உற்றது பதியும் உற்றது பதமும் உற்றது பற்றியே
புரையும் அற்றது குறையும் அற்றது புலையும் அற்றது புன்மைசேர்
திரையும் அற்றது நரையும் அற்றது திரையும் அற்றுவி ழுந்ததே. 144

Koviloor Digital Library

எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

1722 அன்புடை யவரேஎல் லாம்உடை யவரே
அருட்பெருஞ் ஜோதிஎன் ஆண்டவ ரேஎன்
வன்புடை மனத்தைநன் மனமாக்கி எனது
வசஞ்செய்வித் தருளிய மணிமன்றத் தவரே
இன்புடை யவரேஎன் இறையவ ரேஎன்
இருகணுண் மணிகளுள் இசைந்திருந் தவரே
என்புடை எனைத்தூக்கி எடுத்தீர் இங் கிதனை
எண்ணுகின் றேன்அமு துண்ணுகின் றேனே. 145

1723 கலக்கம் நீங்கினேன் களிப்புறு கின்றேன்
கனக அம்பலம் கனிந்தசெங் கனியே
துலக்கம் உற்றசிற் றம்பலத் தமுதே
தூய ஜோதியே சுகப்பெரு வாழ்வே
விலக்கல் இல்லதோர் தனிமுதல் அரசே
வேதம் ஆகமம் விளம்புமெய்ப் பொருளே
அலக்கண் அற்றமெய் அன்பர்தம் உளத்தே
அமர்ந்த தோர்சச்சி தானந்த சிவமே. 146

1724 ஓங்கார அணைமீது நான்இருந்த தருணம்
உவந்தெனது மணவாளர் சிவந்தவடி வகன்றே
ஈங்காரப் பளிக்குவடி வெடுத்தெதிரே நின்றார்
இருந்தருள்க எனஎழுந்தேன் எழுந்திருப்ப தென்நீ
ஆங்காரம் ஒழிஎன்றார் ஒழித்தனன்அப்போது
நான்தானோ அவர்தானோ அறிந்திலன்முன் குறிப்பை
ஊங்கார இரண்டுருவும் ஒன்றானோம் ஆங்கே
உறைந்தஅனு பவம்தோழி நிறைந்தபெரு வெளியே. 147

1725 சொல்லுகின்றேன் பற்பலநான் சொல்லுகின்ற வெல்லாம்
துரிசலவே சூதலவே தூய்மையுடை யனவே
வெல்லுகின்ற வார்த்தைஅன்றி வெறும்வார்த்தை என்வாய்
விளம்பாதென் ஐயர்நின்று விளம்புகின்ற படியால்
செல்லுகின்ற படியேநீ காண்பாய்இத் தினத்தே
தேமொழிஅப் போதெனைநீ தெளிந்துகொள்வாய் கண்டாய்
ஒல்லுகின்ற வகைஎல்லாம் சொல்லுகின்றே னடிநான்
உண்மைஇது உண்மைஇது உண்மைஇது தானே. 148

1726 தந்தை தன்மையே தனையன்தன் தன்மை
என்று சாற்றுதல் சத்தியம் கண்டீர்
எந்தை எம்பிரான் ஐந்தொழில் புரியும்
இறைவன் மன்றுளே இயல்நடம் புரிவான்

Koviloor Digital Library

மைந்தன் என்றன்னை ஆண்டவன் எல்லாம்
வல்ல நாயகன் நல்லசீர் உடையான்
அந்த ணாளன்மெய் அறிவுடை யவன்என்
அப்பன் தன்மைஎன் தன்மைஎன் றறிமின். 149

அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

1727 என்உடலும் என்உயிரும் என்பொருளும்
நின்னஎன இசைந்தஞ் ஞான்றே
உன்னிடைநான் கொடுத்தனன்மற் றென்னிடைவே
றொன்றும்இலை உடையாய் இங்கே
புன்னிகரேன் குற்றமெலாம் பொறுத்ததுவும்
போதாமல் புணர்ந்து கொண்டே
தன்னிகர்என் றென வைத்தாய் இஞ்ஞான்றென்
கொடுப்பேன்நின் தன்மைக் கந்தோ. 150

1728 என்னுரைக்கேன் என்னுரைக்கேன் இந்தஅதி
சயந்தன்னை எம்மா னோர்காள்
பொன்னுரைக்கும் மணிமன்றில் திருநடனம்
புரிகின்ற புனிதன் என்னுள்
மின்உரைக்கும் படிகலந்தான் பிரியாமல்
விளங்குகின்றான் மெய்ம்மை யான
தன்னுரைக்கும் என்னுரைக்கும் சமரசம்செய்
தருள்கின்றான் சகத்தின் மீதே. 151

1729 ஆடுகின்ற சேவடிக்கே ஆளானேன்
மாளாத ஆக்கைப் பெற்றேன்
கூடுகின்ற சன்மார்க்க சங்கத்தே
நடுவிருந்து குலாவு கின்றேன்
பாடுகின்றேன் எந்தைபிரான் பதப்புகழை
அன்பினொடும் பாடிப் பாடி
நீடுகின்றேன் இன்பக்கூத் தாடுகின்றேன்
எண்ணமெலாம் நிரம்பி னேனே. 152

கட்டளைக் கலிப்பா

1730 நாய்க்கும் ஓர்தவி சிட்டுப்பொன் மாமுடி
நன்று சூட்டினை என்றுநின் அன்பர்கள்
வாய்க்கு வந்த படிபல பேசவே
மதியி லேனையும் மன்னருட் சத்தியாம்
தாய்க்குக் காட்டிநல் தண்ணமு தூட்டிஓர்
தவள மாடப்பொன் மண்டபத் தேற்றியே
சேய்க்கு நேரஎன் கையில்பொற் கங்கணம்
திகழக் கட்டினை என்னைநின் செய்கையே. 153

Koviloor Digital Library

எண்சீர்க் கழிநெடிலடி வேறு ஆசிரிய விருத்தம்

1731 தன்னைவிடத் தலைமைஒரு தகவினும்இங் கியலாத்
தனித்தலைமை பெரும்பதியே தருணதயா நிதியே
பொன்னடிஎன் சிரத்திருக்கப் புரிந்தபரம் பொருளே
புத்தமுதம் எனக்களித்த புண்ணியனே நீதான்
என்னைவிட மாட்டாய்நான் உன்னைவிட மாட்டேன்
இருவரும்ஒன் றாகிஇங்கே இருக்கின்றோம் இதுதான்
நின்னருளே அறிந்ததெனில் செயுஞ்செய்கை அனைத்தும்
நின்செயலோ என்செயலோ நிகழ்த்திடுக நீயே. 154

1732 கடல்கடந்தேன் கரையடைந்தேன் கண்டுகொண்டேன் கோயில்
கதவுதிறந் திடப்பெற்றேன் காட்சியெலாம் கண்டேன்
அடர்கடந்த திருஅமுதுண் டருள்ஒளியால் அனைத்தும்
அறிந்துதெளிந் தறிவுருவாய் அழியாமை அடைந்தேன்
உடல்குளிர்ந்தேன் உயிர்கிளர்ந்தேன் உள்ளமெலாம் தழைத்தேன்
உள்ளபடி உள்ளபொருள் உள்ளவனாய் நிறைந்தேன்
இடர்தவிர்க்கும் சித்திஎலாம் என்வசம்ஓங் கினவே
இத்தனையும் பொதுநடஞ்செய் இறைவன்அருட் செயலே. 155

1733 காற்றாலே புவியாலே ககனமத னாலே
கனலாலே புனலாலே கதிராதி யாலே
கூற்றாலே பிணியாலே கொலைக்கருவி யாலே
கோளாலே பிறவியற்றும் கொடுஞ்செயல்க ளாலே
வேற்றாலே எஞ்ஞான்றும் அழியாதே விளங்கும்
மெய்அளிக்க வேண்டுமென்றேன் விரைந்தளித்தான் எனக்கே
ஏற்றாலே இழிவெனநீர் நினையாதீர் உலகீர்
எந்தைஅருட் பெருஞ்ஜோதி இறைவனைச்சார் வீரே. 156

1734 சன்மார்க்க சங்கத்தீர் சிற்றடியேன் உமது
தாள்வணங்கிச் சாற்றுகின்றேன் தயவினொடும் கேட்பீர்
என்மார்க்கத் தெனைநுமக்குள் ஒருவனெனக் கொள்வீர்
எல்லாம்செய் வல்லநம திறைவனையே தொழுவீர்
புன்மார்க்கத் தவர்போலே வேறுசில புகன்றே
புந்திமயக் கடையாதீர் பூரணமெய்ச் சுகமாய்த்
தன்மார்க்க மாய்விளங்கும் சுத்தசிவம் ஒன்றே
தன்ஆணை என்ஆணை சார்ந்தறிமின் ஈண்டே. 157

Koviloor Digital Library

எழுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

1735 ஆதியும்நடுவும் அந்தமும் இல்லா
அருட்பெருஞ் ஜோதிஎன் உளத்தே
நீதியில் கலந்து நிறைந்தது நானும்
நித்தியன் ஆயினேன் உலகீர்
சாதியும் மதமும் சமயமும் தவிர்த்தே
சத்தியச் சுத்தசன் மார்க்க
வீதியில் உமைத்தான் நிறுவுவல் உண்மை
விளம்பினேன் வம்மினோ விரைந்தே. 158

1736 வாது பேசிய மனிதர் காள்ஒரு
வார்த்தை கேண்மின்கள் வந்துநும்
போது போவதன் முன்ன ரேஅருட்
பொதுவி லேநடம் போற்றுவீர்
தீது பேசினீர் என்றி டாதுமைத்
திருவு ளங்கொளும் காண்மினோ
சூது பேசிலேன் நன்மை சொல்கின்றேன்
சுற்றம் என்பது பற்றியே. 159

1737 தூக்கமும் துயரும் அச்சமும் இடரும்
தொலைந்தன தொலைந்தன எனைவிட்
டேக்கமும் வினையும் மாயையும் இருளும்
இரிந்தன ஒழிந்தன முழுதும்
ஆக்கமும் அருளும் அறிவும்மெய் அன்பும்
அழிவுறா உடம்பும்மெய் இன்ப
ஊக்கமும் எனையே உற்றன உலகீர்
உண்மைஇவ் வாசகம் உணர்மின். 160

சிற்சபை

1738 அருட்சபை நடம்புரி அருட்பெருஞ் ஜோதி
தெருட்பெருஞ் சீர்சொலத் திகழ்வ சித்தியே. 161

பந்து

1739 பூவாம லேநிதம் காய்த்த இடத்தே
பூவார் மலர்கொண்டு பந்தாடா நின்றேன்
சாவா வரம்தந்து வாழ்வாயோ பந்தே
சாவாமல் என்னொடு வீழ்வாயோ பந்தே. 162

திருச்சிற்றம்பலம்

Koviloor Digital Library

கண்ணிகள்

111. நெஞ்சொடு கிளத்தல்

கலித்தாழிசை

இராகம்—புன்னாகவராளி—ஆதிதாளம்

திருச்சிற்றம்பலம்

1740 அடங்குநாள் இல்லா தமர்ந்தானைக் காணற்கே
தொடங்குநாள் நல்லதன் றோ — நெஞ்சே
தொடங்குநாள் நல்லதன் றோ. 1

1741 வல்லவா றெல்லாமும் வல்லானைக் காணற்கே
நல்லநாள் எண்ணிய நாள் — நெஞ்சே
நல்லநாள் எண்ணிய நாள். 2

1742 காலங் கடந்த கடவுளைக் காணற்குக்
காலங் கருதுவ தேன் — நெஞ்சே
காலங் கருதுவ தேன். 3

1743 ஆலம் அமுதாக்கும் அண்ணலைக் காணற்குக்
காலம் கருதுவ தேன் — நெஞ்சே
காலம் கருதுவ தேன். 4

1744 தடையாதும் இல்லாத் தலைவனைக் காணற்கே
தடையாதும் இல்லைகண் டாய் — நெஞ்சே
தடையாதும் இல்லைகண் டாய். 5

1745 கையுள் அமுதத்தை வாயுள் அமுதாக்கப்
பையுள் உனக்கென்னை யோ — நெஞ்சே
பையுள் உனக்கென்னை யோ. 6

1746 என்னுயிர் நாதனை யான்கண் டணைதற்கே
உன்னுவ தென்னை கண்டாய் — நெஞ்சே
உன்னுவ தென்னை கண்டாய் 7

1747 நான்பெற்ற செல்வத்தை நான்பற்றிக் கொள்ளற்கே
ஏன்பற்று வாயென்ப தார் — நெஞ்சே
ஏன்பற்று வாயென்ப தார். 8

Koviloor Digital Library

1748 தத்துவா தீதத் தலைவனைக் காணற்குத்
தத்துவ முன்னுவ தேன் – நெஞ்சே
தத்துவ முன்னுவ தேன். 9

1749 ஒக்க அமுதத்தை உண்டோம் இனிச்சற்றும்
விக்கல் வராதுகண் டாய் – நெஞ்சே
விக்கல் வராதுகண் டாய். 10

திருச்சிற்றம்பலம்

112. மெய்யருள் வியப்பு

இராகம் – செஞ்சுருட்டி – ரூபகதாளம்

திருச்சிற்றம்பலம்

பல்லவி

1750 எனக்கும் உனக்கும் இசைந்த பொருத்தம் என்ன பொருத்த மோ
இந்தப் பொருத்தம் உலகில் பிறருக் கெய்தும் பொருத்த மோ. 1

சரணங்கள்.

1751 தனக்கு நிகரிங் கில்லா துயர்ந்த தம்பம் ஒன்ற தே
தாவிப் போகப் போக நூலின் தரத்தில் நின்ற தே
கனக்கத் திகைப்புற் றங்கே நானும் கலங்கி வருந்த வே
கலக்கம் நீக்கித் தூக்கி வைத்தாய் நிலைபொ ருந்த வே. 1
எனக்கும் உனக்கும்

1752 இங்கோர் மலையின் நடுவில் உயர்ந்த தம்பம் நணுக வே
ஏறிப் போகப் போக நூலின் இழைபோல் நுணுக வே
அங்கே திகைத்து நடுங்கும் போதென் நடுக்கம் நீக்கி யே
அதன்மேல் உயர்ந்த நிலையில் வைத்தாய் அடிமை ஆக்கி யே. 2
எனக்கும் உனக்கும்

1753 இரவில் பெரிய வெள்ளம் பரவி எங்கும் தயங்க வே
யானும் சிலரும் படகில் ஏறி யேம யங்க வே
விரவில் தனித்தங் கென்னை ஒருகன் மேட்டில் ஏற்றி யே
விண்ணில் உயர்ந்த மாடத் திருக்க விதித்தாய் போற்றி யே. 3
எனக்கும் உனக்கும்

1754 மேலைப் பாற்சிவ கங்கை என்னுமோர் தீர்த்தந் தன்னை யே
மேவிப் படியில் தவறி நீரில் விழுந்த என்னை யே
ஏலத் துகிலும் உடம்பும் நனையா தெடுத்த தேஒன் றோ
எடுத்தென் கரத்தில் பொற்பூண் அணிந்த இறைவன் நீயன் றோ.4
எனக்கும் உனக்கும்

Koviloor Digital Library

1755 என்ன துடலும் உயிரும் பொருளும் நின்ன தல்ல வோ
எந்தாய் இதனைப் பெருக எனநான் இன்று சொல்ல வோ
சின்ன வயதில் என்னை ஆண்ட திறத்தை நினைக்கு தே
சிந்தை நினைக்கக் கண்ணீர் பெருக்கி உடம்பை நனைக்கு தே. 5
எனக்கும் உனக்கும்

1756 அப்பா நின்னை அன்றி எங்கும் அணைப்பார் இல்லை யே
அந்தோ நின்னை அன்றி எங்கும் அருள்வார் இல்லை யே
எப்பா லவர்க்கும் நின்னை அன்றி இறைமைஇல்லை யே
எனக்கு நின்மே லன்றி உலகில் இச்சை இல்லை யே. 6
எனக்கும் உனக்கும்

1757 அரசே உன்னை அணைக்க எனக்குள் ஆசை பொங்கு தே
அணைப்போம் என்னும் உண்மை யால்என் ஆவி தங்கு தே
விரைசேர் பாதம் பிடிக்க என்கை விரைந்து நீளு தே
மேவிப் பிடித்துக் கொள்ளுந் தோறும் உவகை ஆளு தே. 7
எனக்கும் உனக்கும்

1758 தனியன் மேல்நீ வைத்த தயவு தாய்க்கும் இல்லை யே
தகும்ஐந் தொழிலும் வேண்டுந் தோறும் தருதல் வல்லை யே
வினவும் எனக்கென் உயிரைப் பார்க்க மிகவும் நல்லை யே
மிகவும் நான்செய் குற்றம் குறித்து விடுவாய் அல்லை யே. 8
எனக்கும் உனக்கும்

1759 என்னை ஆண்ட வண்ணம் எண்ணில் உள்ளம் உருகு தே
என்னை விழுங்கி எங்கும் இன்ப வெள்ளம் பெருகு தே
உன்ன உன்ன மனமும் உயிரும் உடம்பும் இனிக்கு தே
உன்னோ டென்னை வேறென் றெண்ணில் மிகவும் பனிக்கு தே. 9
எனக்கும் உனக்கும்

1760 உன்பே ரருளை நினைக்குந் தோறும் உடம்பு பொடிக்கு தே
உண்டு பசிதீர்ந் தாற்போல் காதல் மிகவும் தடிக்கு தே
அன்பே அமையும் என்ற பெரியர் வார்த்தை போயிற்றே
அன்போர் அணுவும் இல்லா எனக்கிங் கருளல் ஆயிற்றே. 10
எனக்கும் உனக்கும்

1761 நினைக்க நினைக்கத் தித்திப் பெனது நினைவில் கொடுக்கு தே
நின்பால் அன்றிப் பிறர்பால் செல்ல நெஞ்சம் நடுக்கு தே
எனைத்துன் பொழித்தாட் கொண்ட நின்னை அன்னை என்ப னோ
எந்தாய் அன்பி லேன்நின் னடிக்கு முன்னை அன்ப னோ. 11
எனக்கும் உனக்கும்

1762 உன்னை மறக்கில் எந்தாய் உயிர்என் உடம்பில் வாழு மோ
உன்பால் அன்றிப் பிறர்பால் என்தன் உள்ளம் சூழு மோ
என்னைக் கொடுக்க வாங்கிக் கொண்ட தென்ன கருதி யோ
எந்தாய் நின்னைக் கொடுக்க என்பால் இன்று வருதி யோ. 12
எனக்கும் உனக்கும்

Koviloor Digital Library

1763 நெடுநாள் முயன்றும் காண்டற் கரிய நிலையைக் காட்டி யே
நிறைந்தென் அகத்தும் புறத்தும் சூழ்ந்தாய் ஒளியை நாட்டியே
நடுநா டியநின் அருளுக் கென்மேல் என்ன நாட்ட மோ
நாய்க்குத் தவிசிட் டனைநின் தனக்கிங் கிதுவோர் ஆட்ட மோ.13
எனக்கும் உனக்கும்

1764 நாகா திபனும் அயனும் மாலும் நறுமு றென்ன வே
ஞான அமுதம் அளித்தாய் நானும் உண்டு துன்ன வே
சாகாக் கலையை எனக்குப் பயிற்றித் தந்த தயவை யே
சாற்றற் கரிது நினக்கென் கொடுப்ப தேதும் வியவை யே. 14
எனக்கும் உனக்கும்

1765 யாது கருதி என்னை ஆண்ட தைய வைய வோ
யானுன் அடிப்பொற் றுணைகட்குவந்து தொழும்பு செய்ய வோ
ஓது கடவுட் கூட்டம் அனைத்தும் அடிமை அல்ல வோ
உடையாய் அவர்க்குள் எனையும் ஒருவன் என்று சொல்ல வோ.15
எனக்கும் உனக்கும்

1766 தலையும் காலும் திரித்து நோக்கித் தருக்கி னேனையே
தாங்கித் தெரிந்த தயவை நினைக்கில் உருக்கு தூனையே
புலையும் கொலையும் தவிர்ந்த நெறியில் புனிதர் மதிக்க வே
புகுவித் தாயை என்வாய் துடிப்ப தேத்தித் துதிக்க வே. 16
எனக்கும் உனக்கும்

1767 தாயே எனக்குந் தயவு புரிந்த தருணத் தந்தை யே
தனியே நின்னை நினைக்கக் கிளர்வ தெனது சிந்தை யே
நாயேன் எண்ணம் அனைத்தும் முடித்துக் கொடுத்த பண்ப னே
நான்செய் தவத்தால் எனக்குக் கிடைத்த நல்ல நண்ப னே. 17
எனக்கும் உனக்கும்

1768 ஏறா நிலையில் விரைந்து விரைந்திங் கென்னை ஏற்றி யே
இறங்கா திறங்கும் படிகள் முழுதும் எடுத்தாய் போற்றி யே
மாறாக் கருணை என்மேல் வைக்க வந்த தென்னை யோ
மதியி லேன்நின் அருட்குச் செய்த தவந்தான் முன்னை யோ. 18
எனக்கும் உனக்கும்

1769 இடமும் வலமும் இதுவென் றறியா திருந்த என்னை யே
எல்லாம் அறிவித் தருள்செய் கருணை என்னை என்னை யே
நடமும் நடஞ்செய் இடமும் எனக்கு நன்று காட்டி யே
நாயி னேனை வளர்க்கின் றாய்நல் லமுதம் ஊட்டியே. 19
எனக்கும் உனக்கும்

1770 விதுவும் கதிரும் இதுவென் றறியும் விளக்கம் இன்றி யே
விழித்து மயங்கி னேன்பால் பெரிய கருணை ஒன்றி யே
அதுவும் அதுவும் இதுவென் றெனக்குள் அறியக் காட்டி யே
அடிய னேனை வளர்க்கின் றாய்நல் லமுதம் ஊட்டி யே. 20
எனக்கும் உனக்கும்

Koviloor Digital Library

1771 இருளும் ஒளியும் வந்த வகையை எண்ணி எண்ணி யே
இரவும் பகலும் மயங்கி னேனை இனிது நண்ணி யே
அருளும் பொருளும் கொடுத்து மயக்கம் நீக்கிக் காட்டி யே
அன்பால் என்னை வளர்க்கின் றாய்நல் லமுதம் ஊட்டி யே. 21
எனக்கும் உனக்கும்

1772 அண்டத் தகத்தும் புறத்தும் உன்றன் ஆணை செல்லு தே
அவனே எல்லாம் வல்லான் என்று மறைகள் சொல்லு தே
பிண்டத் தகத்தும் புறத்தும் நிறைந்த பெரிய ஜோதி யே
பேயேன் அளவில் விளங்கு கின்ற தென்ன நீதி யே. 22
எனக்கும் உனக்கும்

1773 கருணா நிதிநின் தன்னைக் காணக் கண்கள் துடிக்கு தே
காண்போம் என்று நினைக்குந் தோறும் உடம்பு பொடிக்கு தே
அருள்நா டகஞ்செய் பதங்கள் பாடிஆட விரைவ தே
ஆடும் பொதுவை நினைக்க நினைக்க நெஞ்சம் கரைவ தே. 23
எனக்கும் உனக்கும்

1774 அருளார் ஜோதி என்னுள் விளங்க அளித்த காலத் தே
அடியேன் குறைகள் யாவும் தவிர்ந்த திந்த ஞாலத் தே
பொருளாய் எனையு நினைக்க வந்த புதுமை என்னை யோ
பொன்னென் றைய மதிப்ப துதவாத் துரும்பு தன்னை யோ. 24
எனக்கும் உனக்கும்

1775 எனக்குள் நீயும் உனக்குள் நானும் இருக்கும் தன்மை யே
இன்று காட்டிக் கலக்கம் தவிர்த்துக் கொடுத்தாய் நன்மை யே
தனக்குள் எதுதன் தலைவர்க் குளதென் றறிஞர் சொல்வ தே
சரியென் றெண்ணி எனது மனது களித்து வெல்வ தே. 25
எனக்கும் உனக்கும்

1776 கருணைப் பொதுவில் பெரிய சோதித் தருவில் கனித்த தே
கனித்த பெரிய தனித்த கனிஎன் கருத்துள் இனித்த தே
தருணத் துண்டு மகிழ்வுற் றேன்அம் மகிழ்ச்சி சொல்ல வே
தனித்துக் கரைந்த எனது கருத்தின் தரத்த தல்ல வே. 26
எனக்கும் உனக்கும்

1777 என்னா ருயிர்க்குத் துணைவ நின்னை நான்து திக்க வே
என்ன தவஞ்செய் தேன்முன் உலகு ளோர்ம திக்க வே
பொன்னார் புயனும் அயனும் பிறரும் பொருந்தல் அரிய தே
புலைய னேனுக் களித்த கருணை மிகவும் பெரிய தே. 27
எனக்கும் உனக்கும்

1778 என்கண் மணியுள் இருக்கும் தலைவ நின்னைக் காண வே
என்ன தவஞ்செய் தேன்முன் அயனும் அரியும் நாண வே
புன்கண் ஒழித்துத் தெள்ளா ரமுதம் புகட்டி என்னை யே
பொருளாய் எண்ணி வளர்க்கின் றாய்நீ எனக்கோர் அன்னை யே.
எனக்கும் உனக்கும்

Koviloor Digital Library

1779 அறிவி லேன்டுசெய் குற்றம் அனைத்தும் பொறுத்த தன்றி யே
அமுதும் அளித்தாய் யார்செய்வார்கள் இந்த நன்றி யே
செறிவி லாத பொறியும் மனமும் செறிந்து நிற்க வே
செய்தாய் மேலும் தெரிந்தாய் சாகாக் கல்வி கற்க வே. 29
எனக்கும் உனக்கும்

1780 ஒருநா ழிகையில் யோக நிலையை உணர்த்தி மாலை யே
யோகப் பயனை முழுதும் அளித்தாய் மறுநாள் காலை யே
திருநாள் நிலையும் தீர்த்த நிலையும் தெய்வ நிலையு மே
சிறியேன் அறியக் காட்டித் தெரித்தாய் வேதக் கலையு மே. 30
எனக்கும் உனக்கும்

1781 அண்டப் பரப்பின் திறங்கள் அனைத்தும் அறிய வேண்டி யே
ஆசைப் பட்ட தறிந்து தெரித்தாய் அறிவைத் தூண்டி யே
பிண்டத் துயிர்கள் பொருத்தும் வகையும் பிண்டம் தன்னை யே
பிரியும் வகையும் பிரியா வகையும் தெரித்தாய் பின்னை யே. 31
எனக்கும் உனக்கும்

1782 வேதா கமங்கள் புகன்ற விரிவை ஒன்றொன் றாக வே
விளங்க விரைந்து தெரித்தாய் பயிலும் ஆசை போக வே
பூதா திகளைப் பொருத்தும் பகுதிப் பொருத்தம் முற்று மே
பொய்மை நீக்கிக் காணக் காட்டித் தெரித்தாய் மற்று மே. 32
எனக்கும் உனக்கும்

1783 வள்ளால் உன்னைப் பாடப் பாட வாய்ம ணக்கு தே
வஞ்ச வினைகள் எனைவிட் டோடித் தலைவ ணக்கு தே
எள்ளா துனது புகழைக் கேட்கச் செவிந யக்கு தே
எந்தாய் தயவை எண்ணுந் தோறும் உளம்வி யக்கு தே. 33
எனக்கும் உனக்கும்

1784 இறைவா நின்னைக் கனவி லேனும் யான்ம றப்ப னோ
எந்தாய் உலகத் தவர்கள் போல்நான் இனி இறப்ப னோ
மறைவா சகமும் பொருளும் பயனும் மதிக்கும் மதியி லே
வாய்க்கக் கருணை புரிந்து வைத்தாய் உயர்ந்த பதியி லே. 34
எனக்கும் உனக்கும்

1785 தலைவா எனக்குக் கருணை அமுதம் தரஇத் தலத்தி லே
தவம்செய் தேன்அத் தவமும் உன்தன் அருள்வ லத்தி லே
அலைவா ரிதியில் துரும்பு போல அயனும் மாலுமே
அலைய எனக்கே அளிக்கின் றாய்நீ மேலும் மேலு மே. 35
எனக்கும் உனக்கும்

1786 உடையாய் எனக்குப் புரிந்த தயவை உன்ன உன்ன வே
உடம்பு பூரிக் கின்ற தொளிர்பொன் மலைய தென்ன வே
தடையா தினிஉள் மூல மலத்தின் தடையும் போயிற் றே
சமய விகற்பம் எல்லாம் நீக்கிச் சமம தாயிற் றே. 36
எனக்கும் உனக்கும்

Koviloor Digital Library

1787 மயங்குந் தோறும் உள்ளும் புறத்தும் மயக்கம் நீக்கி யே
மகிழ்விக் கின்றாய் ஒருகால் ஊன்றி ஒருகால் தூக்கி யே
உயங்கு மலங்கள் ஐந்தும் பசையற் றொழிந்து வெந்த தே
உன்பே ரருட்பொற் ஜோதி வாய்க்குந் தருணம் வந்த தே. 37
எனக்கும் உனக்கும்

1788 எனக்கும் நின்னைப் போல நுதற்கண் ஈந்து மதனை யே
எரிப்பித் தாய்பின் எழுப்பிக் கொடுத்தாய் அருவ மதனை யே
சினக்குங் கூற்றை உதைப்பித் தொழித்துச் சிதைவு மாற்றி யே
தேவர் கற்பம் பலவும் காணச் செய்தாய் போற்றி யே. 38
எனக்கும் உனக்கும்

1789 கள்ளம் அறியேன் நின்னால் கண்ட காட்சி ஒன்று மே
கருத்தில் உளது வேறோர் விடயம் காணேன் என்று மே
உள்ள துரைக்கின் றேன்நின் அடிமேல் ஆணை முன்னை யே
உள்ளே விளங்கிக் காண்கின் றாய்க்கிங் கொளிப்ப தென்னை யே.
எனக்கும் உனக்கும்

1790 என்னை அடிமை கொண்டாய் நானும் நினக்கு நல்ல னோ
எல்லாம் வல்ல தலைவ நினக்கு நல்லன் அல்ல னோ
முன்னை வினைகள் அனைத்தும் நீக்கி அமுதம் ஊட்டி யே
மூவர்க் கரிய நிலையில் வைத்தாய் என்னை நாட்டி யே. 40
எனக்கும் உனக்கும்

1791 ஜோதி மலையில் கண்டேன் நின்னைக் கண்க ளிக்க வே
துய்த்தேன் அமுதம் அகத்தும் புறத்தும் பரிம ளிக்க வே
ஓதி உணர்தற் கரிய பெரிய உணர்வை நண்ணி யே
ஓதா தனைத்தும் உணர்கின் றேன்நின் அருளை எண்ணி யே.41
எனக்கும் உனக்கும்

1792 ஏழு நிலைகள் ஓங்கும் தெய்வ மாடம் ஒன்றி லே
ஏற்றிக் களிக்க வைத்தாய் அதன்மேல் இலங்கு குன்றி லே
வாழும் பரிசும் கவிக்கும் குடையும் மதிக்கும் தூசு மே
மகிழ்ந்து கொடுத்துப் பின்னும் கொடுத்தாய் மணிப்பொற்கா சுமே.42
எனக்கும் உனக்கும்

1793 இந்த உலகில் உள்ளார் பலரும் மிகவும் நன்மை யே
என்பால் செய்ய வைத்தாய் இதுநின் அருளின் தன்மை யே
அந்த உலகில் உள்ளார் பலரும் என்னை நோக்கி யே
அப்பா வாழி எனவும் புரிந்தாய் அடிமை யாக்கி யே. 43
எனக்கும் உனக்கும்

1794 அழியாக் கருணை அமுத வடிவின் ஓங்கும் சோதி யே
அரசே எனக்குள் விளங்கும் ஆதி யாம்அனாதி யே
ஒழியாத் துயரை ஒழித்த பெரிய கருணை யாள னே
ஒன்றாய் ஒன்றில் உபய மாகி ஒளிரும் தாள னே. 44
எனக்கும் உனக்கும்

Koviloor Digital Library

1795 பாலும் தேனும் கலந்த தென்ன என்னுள் இனிக்க வே
பரம ஞான அமுதம் அளிக்கின் றாய்த னிக்க வே
ஏலும் உயிர்கள் எல்லாம் நினக்குப் பொதுவ தென்ப ரே
இன்று நோக்கி ஓர வாரன் என்பர் அன்ப ரே. 45
எனக்கும் உனக்கும்

1796 ஐயா நான்செய் பிழைகள் ஏழு கடலில் பெரிய தே
அனைத்தும் பொறுத்த தயவு பிறருக் கரிய தரிய தே
மெய்யா நீசெய் உதவிக் கொருகைம் மாறு வேண்டு மே
வேண்டா தென்ன அறிந்தும் எனக்குள் ஆசை தூண்டு மே. 46
எனக்கும் உனக்கும்

1797 பூத வெளியி னடமும் பகுதி வெளியினா ட்டமும்
போக வெளியில் கூத்தும் யோக வெளியுள் ஆட்ட மும்
நாத வெளியில் குனிப்பும் பரம நாத நடமுமே
நன்று காட்டிக் கொடுத்தாய் என்றும் நலியாத் திடமு மே. 47
எனக்கும் உனக்கும்

1798 எட்டும் இரண்டும் இதுஎன் றெனக்குச் சுட்டிக் காட்டி யே
எட்டா நிலையில் இருக்கப் புரிந்தாய் இட்டுக் கூட்டி யே
துட்ட வினையைத் தீர்த்து ஞானச் சுடருள் ளேற்றி யே
தூண்டா தென்றும் விளங்க வைத்தாய் உண்மை சாற்றி யே. 48
எனக்கும் உனக்கும்

1799 அருளாம் பெரிய வெளிக்குள் ஜோதி வடிவ னாகி யே
அரசு செலுத்தும் தனித்த தலைமைப் பரம யோகி யே
பொருளாய் எனையும் உளங்கொண் டளித்த புனித நாத னே
போற்று நாத முடிவில் நடஞ்செய் கமல பாதனே. 49
எனக்கும் உனக்கும்

1800 உருவும் அருவும் உபய நிலையும் உடைய நித்த னே
உயிருள் நிறைந்த தலைவ எல்லாம் வல்ல சித்த னே
மருவும் துரிய வரையுள் நிறைந்து வயங்கும் பரம மே
மன்றில் பரமா னந்த நடஞ்செய் கின்ற பிரம மே. 50
எனக்கும் உனக்கும்

1801 அன்னே என்னை ஆண்ட தலைவ அடியேன் உள்ள மே
அமர்ந்த துணைவ எனக்குக் கிடைத்த அமுத வெள்ள மே
பொன்னே பொன்னில் பொலிந்து நிறைந்த புனித வான மே
புனித வானத் துள்ளே விளங்கும் புரண ஞான மே. 51
எனக்கும் உனக்கும்

1802 சமயத் தெய்வம் பலவும் சிறிய துரும்ப தென்ன வே
சாற்றப் புகினும் சாலா அருளின் பெருமை உன்ன வே
அமையும் அண்டப் பகுதி பலவும் அணுவின் பொடியி லே
அனந்தத் தொன்றென் றுரைத்துஞ் சாலா நின்பொன் னடியி லே.
எனக்கும் உனக்கும்

Koviloor Digital Library

1803 அப்பா நின்னை அடைந்த என்னை ஒப்பார் யாவ ரே
ஆறா றகன்ற நிலையை அடைந்தான் என்பர் தேவ ரே
இப்பா ராதி பூதம் அடங்குங் காலும் நின்னை யே
ஏத்திக் களித்து வாழ்வேன் இதற்கும் ஐய மென்னை யே. 53
எனக்கும் உனக்கும்

1804 என்னை மறைத்த மறைப்பை நீக்கி என்னைக் காட்டி யே
இறைவ நினையும் காட்டி வளர்த்தாய் அமுதம் ஊட்டி யே
முன்னை மறைக்கும் எட்டா நினது பெருமை தன்னை யே
முன்னி மகிழ்ந்து பாடப் புரிந்தாய் அடிமை என்னை யே. 54
எனக்கும் உனக்கும்

1805 எண்ணுந் தோறும் எண்ணுந் தோறும் என்னுள் இனிக்கு தே
இறைவ நின்னைப் பாட நாவில் அமுதம் சனிக்கு தே
கண்ணும் கருத்தும் நின்பால் அன்றிப் பிறர்பால் செல்லு மோ
கண்டேன் உன்னை இனிமேல் என்னை மாயை வெல்லு மோ. 55
எனக்கும் உனக்கும்

1806 விந்தோ நாத வெளியும் கடந்து மேலும் நீளு தே
மேலை வெளியும் கடந்துன் அடியார் ஆணை ஆளு தே
அந்தோ உனது பெருமை சிறிதும் அறிவார் இல்லை யே
அறிந்தா லுருகி இன்ப வடிவம் ஆவர் ஒல்லை யே. 56
எனக்கும் உனக்கும்

1807 இறுகப் பிடித்துக் கொண்டேன் பதத்தை இனிநான் விடுவ னோ
எந்தாய் பாதம் பிடித்த கையால் வேறு தொடுவ னோ
குறுகப் பயந்து கூற்றும் ஓடிக் குலைந்து போயிற் றே
கோவே உன்தன் அருட்சிற் ஜோதி என்ன தாயிற் றே. 57
எனக்கும் உனக்கும்

1808 காய்க்கும் பருவம் தன்னைப் பழுத்த பருவம் ஆக்கி யே
கனக சபையில் நடிக்கின் றாய்ஓர் காலைத் தூக்கி யே
நாய்க்குத் தவிசிட் டொருபொன் முடியும் நன்று சூட்டி யே
நட்ட நடுவே வைத்தாய் கருணை அமுதம் ஊட்டி யே. 58
எனக்கும் உனக்கும்

1809 கல்லை நோக்கிக் கனிந்து பழுத்த கனிய தாக்கி யே
கனக சபையில் நடிக்கின் றாய்ஓர் காலைத் தூக்கி யே
புல்லை முடிக்கும் அணிகின் றாய்என் புன்சொல் மாலை யே
புனைந்தென் உளத்தில் இருக்கப் புரிந்தாய் நின்பொற் காலையே.
எனக்கும் உனக்கும்

1810 சாதல் பிறத்தல் என்னும் அவத்தைத் தவிர்த்துக் காலை யே
தனித்துன் அருளின் அமுதம் புகட்டிக் கொடுத்தாய் மேலை யே
ஓதல் உணர்தல் உவத்தல் எனக்கு நின்பொற் பாத மே
உலக விடயக் காட்டில் செல்லா தெனது போத மே. 60
எனக்கும் உனக்கும்

Koviloor Digital Library

1811 அருளும் பொருளும் பெற்றேன் அடிய னாகி நானு மே
அஞ்சேன் மாயை வினைகட் கொருசிற் றளவ தேனு மே
இருளும் நிறத்துக் கூற்றைத் துரத்தி அருள்சிற் ஜோதி யே
என்தன் அகத்தும் புறத்தும் விளங்கு கின்ற வாதி யே. 61
எனக்கும் உனக்கும்

1812 காமக் கடலைக் கடந்து வெகுளிக் கடலை நீந்தி னேன்
கடிய மயக்கக் கடலைத் தாண்டி அடியை ஏந்தி னேன்
சேமப் பொதுவில் நடங்கண் டெனது சிறுமை நீங்கி னேன்
சிற்றம் பலத்து நடங்கண் டுவந்து மிகவும் ஓங்கி னேன். 62
எனக்கும் உனக்கும்

1813 தாங்கல் விடுதல் இரண்டும் எனக்குச் சமம தாயிற் றே
சகத்தில் வழங்கும் மாயை வழக்குத் தவிர்ந்து போயிற்றே
ஏங்கல் சலித்தல் இரண்டும் இன்றி இளைப்பு நீங்கி னேன்
எந்தாய் கருணை அமுதுண் டின்பப் பொருப்பில் ஓங்கி னேன். 63
எனக்கும் உனக்கும்

1814 உறவு பகைஎன் றிரண்டும் எனக்கிங் கொன்ற தாயிற்றே
ஒன்றென் றிரண்டென் றுளறும் பேதம் ஓடிப் போயிற்றே
மறவு நினைவென் றென்னை வலித்த வலிப்பு நீங்கி னேன்
மன்றில் பரமா னந்த நடங்கண் டின்பம் ஓங்கி னேன். 64
எனக்கும் உனக்கும்

1815 உன்னைக் கண்டு கொண்டேன் கண்ட வுடன்இங் கென்னையே
உலக மெல்லாம் கண்டு கொண்ட உவப்பிதென்னை யே
என்னைக் கண்டு கொண்ட காலத் திறைவ நின்னை யே
யாரும் கண்டு கொண்டார் இல்லை யாங்க தென்னை யே. 65
எனக்கும் உனக்கும்

1816 மலத்தில் புழுத்த புழுவும் நிகர மாட்டா நாயி னேன்
வள்ளல் கருணை அமுதுண் டின்ப நாட்டான் ஆயி னேன்
குலத்தில் குறியில் குணத்தில் பெருமை கொள்ளா நாயி னேன்
கோதில் அமுதுண் டெல்லா நலமும் உள்ளான் ஆயி னேன். 66
எனக்கும் உனக்கும்

1817 கடைய நாயில் கடைய நாய்க்கும் கடையன் ஆயி னேன்
கருணை அமுதுண் டின்ப நாட்டுக் குடையன் ஆயி னேன்
விடயக் காட்டில் ஓடித் திரிந்த வெள்ளை நாயி னேன்
விமலா நினக்கு மிகவும் சொந்தப் பிள்ளை ஆயி னேன். 67
எனக்கும் உனக்கும்

1818 அயனும் மாலும் தேடித் தேடி அலர்ந்து போயி னார்
அந்தோ இவன்முன் செய்த தவம்யா தென்ப ராயி னார்
மயனும் கருத மாட்டாத் தவள மாடத் துச்சி யே
வயங்கும் அணைமேல் வைத்தாய் சிறிய நாயை மெச்சி யே. 68
எனக்கும் உனக்கும்

Koviloor Digital Library

1819 வல்லாய் உனது கருணை அமுதென் வாய்க்கு வந்த தே
மலமும் மாயைக் குலமும் வினையும் முழுதும் வெந்த தே
எல்லா நலமும் ஆன அதனை உண்டு வந்த தே
இறவா தென்றும் ஓங்கும் வடிவம் எனக்கு வந்த தே. 69
எனக்கும் உனக்கும்

1820 சிற்றம் பலத்தில் நடங்கண் டவர்காற் பொடிகள் புல்ல தே
சிருட்டி முதல்ஓர் ஐந்து தொழிலும் செய்ய வல்ல தே
பற்றம் பலத்தில் வைத்தார் தம்மைப் பணியும் பத்த ரே
பரம பதத்தர் என்று பகர்வர் பரம முத்த ரே. 70
எனக்கும் உனக்கும்

1821 சிருட்டி முதல்ஓர் ஐந்து தொழிலும் செய்யென் றென்னை யே
செல்வப் பிள்ளை யாக்கி வளர்க்கின் றாய்இ தென்னை யே
தெருட்டித் திருப்பொற் பதத்தைக் காட்டி அமுதம் ஊட்டி யே
திகழ நடுவைத் தாய்சன் மார்க்க சங்கம் கூட்டியே. 71
எனக்கும் உனக்கும்

1822 அடியன் ஆக்கிப் பிள்ளை ஆக்கி நேயன் ஆக்கி யே
அடிகள் ஆக்கிக் கொண்டாய் என்னை அவலம் நீக்கி யே
படியு ளோரும் வானு ளோரும் இதனை நோக்கி யே
பதியும் ஓர வாரன் என்பர் பரிவு தேக்கி யே. 72
எனக்கும் உனக்கும்

1823 அண்ணா எனையும் பொருளென் றெண்ணி இரவும் பகலு மே
அகத்தும் புறத்தும் திரிகின் றாய்இவ் வுலகென் புகலு மே
தண்ணா ரமுதம் மிகவும் எனக்குத் தந்த தன்றி யே
தனியே இன்னும் தருகின் றாய்என் னறிவின் ஒன்றியே. 73
எனக்கும் உனக்கும்

1824 வேதா கமத்தின் அடியும் நடுவும் முடியு மற்று மே
வெட்ட வெளிய தாகி விளங்கக் கண்டேன் முற்று மே
நாதா சிறிய நாய்க்கும் கடையேன் முற்றும் கண்ட தே
நானோ கண்டேன் எந்தாய் கருணை நாட்டம் கண்ட தே. 74
எனக்கும் உனக்கும்

1825 புழுவில் புழுத்த புழுவும் நிகரப் போதா நாயி னேன்
பொதுவில் நடிக்கும் தலைவ நினக்கே அடிமைஆயி னேன்
தழுவற் கரிய பெரிய துரியத் தம்பத் தேறி னேன்
தனித்தப் பாலோர் தவள மாடத் திருந்து தேறி னேன். 75
எனக்கும் உனக்கும்

1826 கடையன் எனது கொடிய கடின நெஞ்சக் கல்லை யே
கனிய தாக்கித் தூக்கிக் கொண்டாய் துரியத் தெல்லை யே
உடையாய் துரியத் தலத்தின் மேல்நின் றோங்குந் தலத்தி லே
உன்பால் இருக்க வைத்தாய் என்னை உவந்து வலத்தி லே. 76
எனக்கும் உனக்கும்

Koviloor Digital Library

1827 அறிந்த நாள்கள் தொடங்கி இற்றைப் பகலின் வரையு மே
அடியேன் பட்ட பாட்டை நினைக்கில் கல்லும் கரையுமே
எறிந்தப் பாடு முழுதும் பெரிய இன்ப மாயிற்றே
எந்தாய் கருணை எனக்கு மிகவும் சொந்த மாயிற்றே. 77
எனக்கும் உனக்கும்

1828 பனிரண் டாண்டு தொடங்கி இற்றைப் பகலின் வரையுமே
படியில் பட்ட பாட்டை நினைக்கில் மலையும் கரையு மே
துனியா தந்தப் பாடு முழுதும் சுகம தாயிற் றே
துரையே நின்மெய் அருளிங் கெனக்குச் சொந்த மாயிற் றே. 78
எனக்கும் உனக்கும்

1829 ஈரா றாண்டு தொடங்கி இற்றைப் பகலின் வரையுமே
எளியேன் பட்ட பாட்டை நினைக்கில் இரும்பும் கரையு மே
ஏராய் அந்தப் பாடு முழுதும் இன்ப மாயிற் றே
இறைவா நின்மெய் அருளிங் கெனக்குச் சொந்த மாயிற் றே. 79
எனக்கும் உனக்கும்

1830 பாட்டால் உனது பதத்தை நாடிப் பாடும் வாய ரே
பதியே இந்த உலகில் எனக்கு மிகவும் நேய ரே
நாட்டார் எனினும் நின்னை உளத்து நாட்டார் ஆயி லோ
நயவேன் சிறிதும் நயத்தல் கயக்கும் எட்டிக் காயி லோ. 80
எனக்கும் உனக்கும்

1831 சின்ன வயது தொடங்கி என்னைக் காக்கும் தெய்வ மே
சிறியேன் மயங்கும் தோறும் மயக்கம் தீர்க்கும் தெய்வ மே
என்னை அவத்தைக் கடல்நின் றிங்ஙன் எடுத்த தெய்வ மே
எல்லா நலமும் தரும்இன் னமுதம் கொடுத்த தெய்வமே. 81
எனக்கும் உனக்கும்

1832 அச்சம் தீர்த்திங் கென்னை ஆட்கொண்டருளும் அமுத னே
அடியேன் பிழைகள் அனைத்தும் பொறுத்துள் அமர்ந்த அமுத னே
இச்சை யாவும் முடித்துக் கொடுத்துள் இலங்கும் குரவ னே
என்றும் இறவாக் கல்வி அடியேற் கீந்த குரவ னே. 82
எனக்கும் உனக்கும்

1833 உள்ளும் புறத்தும் கருணை அமுதம் ஊட்டும் அன்னை யே
ஓதா துணர உணரும் உணர்வை உதவும் அன்னை யே
தெள்ளும் கருணைச் செங்கோல் செலுத்தச் செய்த அப்ப னே
செல்வப் பிள்ளை யாக்கி என்னுள் சேர்ந்த அப்ப னே. 83
எனக்கும் உனக்கும்

1834 இரவும்பகலும் என்னைக் காத்துள் இருக்கும் இறைவ னே
எல்லா உலகும் புகழ எனைமேல் ஏற்றும் இறைவ னே
கரவு நினையா தெனக்கு மெய்ம்மை காட்டும் துணைவ னே
களித்தென் தனையும் சன்மார்க் கத்தில் நாட்டும் துணைவ னே.
எனக்கும் உனக்கும்

Koviloor Digital Library

1835 சற்றும் வருந்தப் பாரா தென்னைத் தாங்கு நேய னே
தான்நான் என்று பிரித்தற் கரிய தரத்து நேய னே
முற்றும் தனதை எனக்குக் கொடுத்து முயங்கும் நேய னே
முன்னே நான்செய் தவத்தால் எனக்குள் முளைத்த நேய னே. 85
எனக்கும் உனக்கும்

1836 நேயா நின்னை நினைக்க நினைக்க நெஞ்சம் களிக்கு தே
நெடிய விழிகள் இரண்டும் இன்ப நீர்து ளிக்கு தே
ஓயா துனது பெருமை நினைக்க உவகை நீடு தே
உரைப்பார் எவர்என் றுலகில் பலரை ஓடித் தேடு தே. 86
எனக்கும் உனக்கும்

1837 பொன்னே நின்னை உன்ன உடம்பு புளகம் மூடு தே
பொதுவைக் காண உள்ளே ஆசை பொங்கி ஆடு தே
என்னே பிறர்தம் வரவு நோக்கக் கண்கள் வெதும்பு தே
எந்தாய் வரவை நினைக்கக் களிப்புப் பொங்கித் ததும்புதே. 87
எனக்கும் உனக்கும்

1838 மணியே நின்னைப் பொதுவில் கண்ட மனிதர் தேவ ரே
மனிதர் கண்ணிற் பட்ட புல்லும் மரமும் தேவ ரே
அணியே நின்னைப் பாடும் அடியர் தாமோ மூவ ரே
அவரைக் கண்டார் அவரைக் கண்டார் அவர்கள் மூவ ரே. 88
எனக்கும் உனக்கும்

1839 வாழ்வே நினது நடங்கண் டவரைச் சுத்தர் என்ப னோ
மலங்கள் மூன்றும் தவிர்த்த சுத்த முத்தர் என்ப னோ
ஏழ்வே தனையும் நீக்கி வாழும் நித்தர் என்ப னோ
எல்லாம் செய்ய வல்ல ஞான சித்தர் என்ப னோ. 89
எனக்கும் உனக்கும்

1840 சிவமே நின்னைப் பொதுவில் கண்ட செல்வர் தம்மை யே
தேவர் கண்டு கொண்டு வணங்கு கின்றார் இம்மை யே
தவமே புரிந்து நின்னை உணர்ந்த சாந்த சித்த ரே
தகும்ஐந் தொழிலும் தாமே இயற்ற வாய்ந்த சித்த ரே. 90
எனக்கும் உனக்கும்

1841 ஐவ ராலும் நின்னை அறிதற் கருமை அருமை யே
ஆரே அறிவர் மறையும் அறியா நினது பெருமை யே
பொய்வ ராத வாய்கொண் டுன்னைப் போற்றும் அன்ப ரே
பொருளே நின்னை அறிவர் அவரே அழியா இன்ப ரே. 91
எனக்கும் உனக்கும்

1842 என்னைக் காட்டி என்னுள் இலங்கும் நின்னைக் காட்டி யே
இறங்கா நிலையில் ஏற்றி ஞான அமுதம் ஊட்டி யே
பொன்னைக் காட்டிப் பொன்னே நினது புகழைப் பாடி யே
புந்தி களிக்க வைத்தாய் அழியா தென்னை நாடி யே. 92
எனக்கும் உனக்கும்

Koviloor Digital Library

1843 அண்ட கோடி அனைத்தும் காணும் கண்கள் எய்தி யே
அறிந்தேன் அங்கைக் கனிபோல் அவற்றில் உள்ள செய்தி யே
பிண்ட கோடி முழுதும் காணப் பெற்று நின்னை யே
பேசிப் பேசி வியக்கின் றேன்இப் பிறவி தன்னை யே. 93
எனக்கும் உனக்கும்

1844 சிற்றம் பலத்தின் நடனம் காட்டிச் சிவத்தைக் காட்டி யே
சிறப்பாய் எல்லாம் வல்ல சித்தித் திறத்தைக் காட்டி யே
குற்றம் பலவும் தீர்த்தென் தனக்கோர் முடியும் சூட்டியே
கோவே நீயும் என்னுள் கலந்து கொண்டாய் நாட்டி யே. 94
எனக்கும் உனக்கும்

1845 சுத்த நிலையின் நடுநின் றெங்கும் தோன்றும் ஜோதி யே
துரிய வெளியைக் கடந்தப் பாலும் துலங்கும் ஜோதியே
சித்தர் உளத்தில் சுடர்செய் தோங்கும் தெய்வச் ஜோதி யே
சிற்றம் பலத்தில் நடஞ்செய் தெனக்குள் சிறந்த ஜோதி யே. 95
எனக்கும் உனக்கும்

1846 அன்றே என்னை அடியன் ஆக்கி ஆண்ட ஜோதி யே
அதன்பின் பிள்ளை ஆக்கி அருள்இங் களித்த ஜோதி யே
நன்றே மீட்டும் நேயன் ஆக்கி நயந்த ஜோதி யே
நானும் நீயும் ஒன்றென் றுரைத்து நல்கு ஜோதி யே. 96
எனக்கும் உனக்கும்

1847 நீயே வலிந்திங் கென்னை ஆண்ட நீதிச் ஜோதி யே
நின்னைப் பாட என்னை வளர்க்கும் நிமலச் ஜோதி யே
தாயே எனவந் தென்னைக் காத்த தருமச் ஜோதி யே
தன்மை பிறரால் அறிதற் கரிய தலைமைச் ஜோதி யே. 97
எனக்கும் உனக்கும்

1848 சாகாக் கல்வி எனக்குப் பயிற்றித் தந்த ஜோதி யே
தன்னேர் முடிஒன் றெனது முடியில் தரித்த ஜோதி யே
ஏகாக் கரப்பொற் பீடத் தென்னை ஏற்று ஜோதி யே
எல்லாம் வல்ல சித்தி ஆட்சி ஈய்ந்த ஜோதி யே. 98
எனக்கும் உனக்கும்

1849 ஜோதி எவையும் விளங்க விளங்கும் ஜோதி வாழி யே
துரிய வெளியின் நடுநின் றோங்கும் ஜோதி வாழி யே
சூதி லாமெய்ச் சிற்றம் பலத்து ஜோதி வெல்க வே
துலங்கப் பொன்னம் பலத்தில் ஆடும் ஜோதி வெல்க வே. 99
எனக்கும் உனக்கும்

1850 சுத்த சிவசன் மார்க்க நீதி ஜோதி போற்றி யே
சுகவாழ் வளித்த சிற்றம் பலத்து ஜோதி போற்றி யே
சுத்த சுடர்ப்பொற் சபையில் ஆடும் ஜோதி போற்றி யே
ஜோதி முழுதும் விளங்க விளங்கும் ஜோதி போற்றி யே. 100

எனக்கும் உனக்கும் இசைந்த பொருத்தம் என்ன பொருத்த மோ
இந்தப் பொருத்தம் உலகில் பிறருக் கெய்தும் பொருத்த மோ

திருச்சிற்றம்பலம்

Koviloor Digital Library

113. அம்பலவாணர் வருகை

வருகைக் கண்ணி

வர்க்கமாலை என்னும் காலைப்பாட்டு

இராகம்–காம்போதி–அடதாளம்

திருச்சிற்றம்பலம்

பல்லவி

1851 வாரீர் சிதம்பர வல்லி சிவகாம
வல்லி மணாளரே வாரீர்
மணிமன்ற வாணரே வாரீர் 1

சரணங்கள்

1852 அருட்பெருஞ் ஜோதிஎன் ஆண்டவ ரேதிரு
அம்பல வாணரே வாரீர்
அன்புடை யாளரே வாரீர். வாரீர் 1

1853 அச்சம் தவிர்த்தென்னை ஆட்கொண் டருளிய
அந்தண ரேஇங்கு வாரீர்
அம்பலத் தையரே வாரீர். வாரீர் 2

1854 அன்புரு வானவர் இன்புற உள்ளே
அறிவுரு வாயினீர் வாரீர்
அருட்பெருஞ் ஜோதியீர் வாரீர். வாரீர் 3

1855 அண்டங்கள் எல்லாம் அணுவில் அடக்கும்
அரும்பெருஞ் சித்தரே வாரீர்
அற்புத ரேஇங்கு வாரீர். வாரீர் 4

1856 அம்மையு மாய்எனக் கப்பனு மாகிஎன்
அன்பனு மாயினீர் வாரீர்
அங்கண ரேஇங்கு வாரீர். வாரீர் 5

1857 அல்லல் அறுத்தென் அறிவை விளக்கிய
அம்பல வாணரே வாரீர்
செம்பொரு ளாயினீர் வாரீர். வாரீர் 6

1858 அப்பணி பொன்முடி அப்பனென் றேத்துமெய்
அன்பருக் கன்பரே வாரீர்
இன்பம் தரஇங்கு வாரீர். வாரீர் 7

Koviloor Digital Library

1859 அச்சுதர் நான்முகர் உச்சியில் மெச்சும்
அடிக்கம லத்தீரே வாரீர்
நடிக்கவல் லீர்இங்கு வாரீர். வாரீர் 8

1860 அண்டர்க் கரும்பதந் தொண்டர்க் கெளிதில்
அளித்திட வல்லீரே வாரீர்
களித்தென்னை ஆண்டீரே வாரீர் வாரீர் 9

1861 அம்பர மானசி தம்பர நாடகம்
ஆடவல் லீர்இங்கு வாரீர்
பாடல்உ வந்தீரே வாரீர் வாரீர் 10

1862 ஆதிஅ னாதிஎன் றாரணம் போற்றும்
அரும்பெருஞ் ஜோதியீர் வாரீர்
ஆனந்த நாடரே வாரீர் வாரீர் 11

1863 ஆகம வேதம் அனேக முகங்கொண்
டருச்சிக்கும் பாதரே வாரீர்
ஆருயிர் நாதரே வாரீர். வாரீர் 12

1864 ஆசறும் அந்தங்கள் ஆறும் புகன்றநல்
ஆரிய ரேஇங்கு வாரீர்
ஆனந்தக் கூத்தரே வாரீர். வாரீர் 13

1865 ஆல நிழற்கண் அமர்ந்தறஞ் சொன்னநல்
ஆரிய ரேஇங்கு வாரீர்
ஆனந்தக் கூத்தரே வாரீர் வாரீர் 14

1866 ஆரமு தாகிஎன் ஆவியைக் காக்கின்ற
ஆனந்த ரேஇங்கு வாரீர்
ஆடல்வல் லீர்இங்கு வாரீர் வாரீர் 15

1867 ஆதர வாய்என் அறிவைத் தெளிவித்
தமுதம் அளித்தீரே வாரீர்
ஆடிய பாதரே வாரீர். வாரீர் 16

1868 ஆதார மீதானத் தப்பாலும் காண்டற்
கரும்பெருஞ் ஜோதியீர் வாரீர்
கரும்பினில் இனிக்கின்றீர் வாரீர். வாரீர் 17

1869 ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெரும்
ஜோதிய ரேஇங்கு வாரீர்
வேதிய ரே இங்கு வாரீர் வாரீர் 18

1870 ஆடல்கொண் டீர்திரு வம்பலத் தேஎன்றன்
பாடல்கொண் டீர்இங்கு வாரீர்
கூடவல் லீர்இங்கு வாரீர். வாரீர் 19

Koviloor Digital Library

1871 ஆக்கம் கொடுத்தென்றன் தூக்கம் தடுத்தஎன்
ஆண்டவ ரேஇங்கு வாரீர்
தாண்டவ ரேஇங்கு வாரீர். வாரீர் 20

1872 ஆபத்தை நீக்கிஓர் தீபத்தை ஏற்றிஎன்
ஆணவம் போக்கினீர் வாரீர்
காணவந் தேன்இங்கு வாரீர் வாரீர் 21

1873 இதுதரு ணம்தரு ணம்தரு ணம்என்
இறையவ ரேஇங்கு வாரீர்
இடர்தவிர்த் தாட்கொண்டீர் வாரீர். வாரீர் 22

1874 இச்சையின் வண்ணம் எனக்கருள் செய்ய
இதுதரு ணம்இங்கு வாரீர்
இன்னமு தாயினீர் வாரீர் வாரீர் 23

1875 இன்பம் கொடுத்தேஎன் துன்பம் கெடுத்துள்
இருக்கின்ற நாதரே வாரீர்
இருக்கின் பொருளானீர் வாரீர். வாரீர் 24

1876 இரவும் பகலும் இதயத்தி லூறி
இனிக்கும் அமுதரே வாரீர்
இனித்தரி யேன்இங்கு வாரீர். வாரீர் 25

1877 இன்னும்தாழ்த் தங்கே இருப்ப தழகன்று
இதுதரு ணம்இங்கு வாரீர்
இருமையும் ஆயினீர் வாரீர். வாரீர் 26

1878 இடர்தவிர்த் தின்பம் எனக்களித் தாளற்
கிதுதரு ணம்இங்கு வாரீர்
இனியவ ரேஇங்கு வாரீர். வாரீர் 27

1879 இறையும் பொறுப்பரி தென்னுயிர் நாதரே
இத்தரு ணம்இங்கு வாரீர்
இதுநடஞ் செய்கின்றீர் வாரீர். வாரீர் 28

1880 இம்மையி லேஎனக் கம்மையின் இன்பம்
இதுஎன் றளித்தீரே வாரீர்
இதயத் திருந்தீரே வாரீர். வாரீர் 29

1881 இங்கங்கென் னாமலே எள்ளுக்குள் எண்ணெய்போல்
எங்கும் நிறைந்தீரே வாரீர்
இந்செழில் வண்ணரே வாரீர் வாரீர் 30

1882 இணைஒன்றும் இல்லா இணையடி என்தலை
ஏறவைத் தீர்இங்கு வாரீர்
இறுதியி லீர்இங்கு வாரீர். வாரீர் 31

Koviloor Digital Library

1883 ஈன்றாளும் எந்தையும் என்குரு வும்எனக்
கின்பமும் ஆயினீர் வாரீர்
அன்பருக் கன்பரே வாரீர். வாரீர் 32

1884 ஈனம் அறுத்துமெய்ஞ் ஞான விளக்கென்
இதயத்தில் ஏற்றினீர் வாரீர்
உதயச் சுடரினீர் வாரீர். வாரீர் 33

1885 ஈடறி யாதமெய் வீடுதந் தன்பரை
இன்புறச் செய்கின்றீர் வாரீர்
வன்பர்க் கரியீரே வாரீர். வாரீர் 34

1886 ஈதியல் என்றுநின் றோதிய வேதத்திற்
கெட்டா திருந்தீரே வாரீர்
நட்டார்க் கெளியீரே வாரீர். வாரீர் 35

1887 ஈசர் எனும்பல தேசர்கள் போற்றும்ந
டேசரே நீர்இங்கு வாரீர்
நேசரே நீர்இங்கு வாரீர். வாரீர் 36

1888 ஈசர் பலிக்குழல் நேசர்என் றன்பர்கள்
ஏசநின் றீர்இங்கு வாரீர்
நாசமில் லீர்இங்கு வாரீர். வாரீர் 37

1889 ஈறறி யாமறை யோன்என் றறிஞர்
இயம்பநின் றீர்இங்கு வாரீர்
வயந்தரு வீர்இங்கு வாரீர். வாரீர் 38

1890 ஈதல்கண் டேமிகக் காதல்கொண் டேன்எனக்
கீதல்செய் வீர்இங்கு வாரீர்
ஓதரி யீர்இங்கு வாரீர். வாரீர் 39

1891 ஈடணை அற்றநெஞ் சூடணை உற்றுமற்
றீடணை யீர்இங்கு வாரீர்
ஆடல்வல் லீர்இங்கு வாரீர். வாரீர் 40

1892 ஈண்டறி வோங்கிடத் தூண்டறி வாகிஉள்
ஈண்டுகின் றீர்இங்கு வாரீர்
ஆண்டவ ரேஇங்கு வாரீர். வாரீர் 41

1893 உள்ளதே உள்ளது விள்ளது வென்றெனக்
குள்ள துரைசெய்தீர் வாரீர்
வள்ளல் விரைந்திங்கு வாரீர். வாரீர் 42

1894 உருவாய் அருவாய் உருவரு வாய்அவை
ஒன்றுமல் லீர்இங்கு வாரீர்
என்றும்நல் லீர்இங்கு வாரீர். வாரீர் 43

Koviloor Digital Library

1895 உறவும் பகையும் உடைய நடையில்
உறவும்எண் ணேன்இங்கு வாரீர்
பிறவுநண் ணேன்இங்கு வாரீர். வாரீர் 44

1896 உள்ளக் கருத்தைநான் வள்ளற் குரைப்பதென்
உள்ளத் திருந்தீரே வாரீர்
விள்ளற் கரியீரே வாரீர். வாரீர் 45

1897 உய்யவல் லார்க்கருள் செய்யவல் லீர்நானும்
உய்யவல் லேன்இங்கு வாரீர்
செய்யவல் லீர்இங்கு வாரீர். வாரீர் 46

1898 உடையவ ரார்இக் கடையவ னேனுக்
குடையவ ரேஇங்கு வாரீர்
சடையவ ரே இங்கு வாரீர் வாரீர் 47

1899 உறங்கி இறங்கும் உலகவர் போலநான்
உறங்கமாட்டேன்இங்கு வாரீர்
இறங்கமாட் டேன்இங்கு வாரீர். வாரீர் 48

1900 உண்டுடுத் தின்னும் உழலமாட் டேன்அமு
துண்டி விரும்பினேன் வாரீர்
உண்டி தரஇங்கு வாரீர் வாரீர் 49

1901 உன்னுதோ றுன்னுதோ றுள்ளே இனிக்கின்ற
உத்தம ரேஇங்கு வாரீர்
உற்ற துணையானீர் வாரீர். வாரீர் 50

1902 உம்மாணை உம்மாணை உம்மைஅல் லால்எனக்
குற்றவர் மற்றிலை வாரீர்
உற்றறிந் தீர்இங்கு வாரீர். வாரீர் 51

1903 ஊன நடந்தவிர்த் தான நடங்காட்டு
மோன நடேசரே வாரீர்
ஞான நடேசரே வாரீர். வாரீர் 52

1904 ஊருமில் லீர்ஒரு பேருமில் லீர்அறி
வோருமில் லீர்இங்கு வாரீர்
யாருமில் லீர்இங்கு வாரீர். வாரீர் 53

1905 ஊறு சிவானந்தப் பேறு தருகின்ற
வீறுடை யீர்இங்கு வாரீர்
நீறுடை யீர்இங்கு வாரீர். வாரீர் 54

1906 ஊன்றுநும் சேவடி சான்று தரிக்கிலேன்
ஏன்றுகொள் வீர்இங்கு வாரீர்
ஆன்றவ ரேஇங்கு வாரீர். வாரீர் 55

Koviloor Digital Library

1907 ஊற்றை உடம்பிது மாற்றுயர் பொன்னென
ஏற்றம் அருள்செய்வீர் வாரீர்
தேற்றம் அருள்செய்வீர் வாரீர் வாரீர் 56

1908 ஊடல்இல் லீர்எனைக் கூடல்வல் லீர்என்னுள்
பாடல்சொல் வீர்இங்கு வாரீர்
ஆடல்நல் லீர்இங்கு வாரீர். வாரீர் 57

1909 ஊக்கம் கொடுத்தென்றன் ஏக்கம் கெடுத்தருள்
ஆக்க மடுத்தீரே வாரீர்
தூக்கம் தவிர்த்தீரே வாரீர். வாரீர் 58

1910 ஊமை எழுத்தினுள் ஆமை எழுத்துண்டென்
றோமை அறிவித்தீர் வாரீர்
சேமஞ் செறிவித்தீர் வாரீர். வாரீர் 59

1911 ஊக மிலேன்பெற்ற தேகம் அழியாத
யோகம் கொடுத்தீரே வாரீர்
போகம் கொடுத்தீரே வாரீர் வாரீர் 60

1912 ஊதியம் தந்தநல் வேதிய ரேஉண்மை
ஓதிய நாதரே வாரீர்
ஆதிஅ னாதியீர் வாரீர் வாரீர் 61

1913 என்குறை தீர்த்தென்னுள் நன்குறை வீர்இனி
என்குறை என்முன்னீர் வாரீர்
தன்குறை இல்லீரே வாரீர். வாரீர் 62

1914 என்னுயிர் ஆகிஎன் றன்உயிர்க் குள்ளேஓர்
இன்னுயிர் ஆயினீர் வாரீர்
என்னுயிர் நாதரே வாரீர். வாரீர் 63

1915 என்கண் அருள்செய்தென் புன்கண் விலக்கிய
என்கண் ணனையீரே வாரீர்
மின்கண் ணுதலீரே வாரீர். வாரீர் 64

1916 எல்லா உயிர்களும் நல்லார் எனத்தொழும்
எல்லாம்வல் லீர்இங்கு வாரீர்
சொல்லா நிலையினீர் வாரீர். வாரீர் 65

1917 எட்டும் இரண்டுமென் றிட்டு வழங்குதல்
எட்டும் படிசெய்தீர் வாரீர்
எட்டுரு வாயினீர் வாரீர். வாரீர் 66

1918 என்று கண்டாம்இது நன்றுகொண் டாளுக
என்றுதந் தீர்இங்கு வாரீர்
அன்றுவந் தீர்இன்று வாரீர். வாரீர் 67

Koviloor Digital Library

1919 எச்சம யங்களும் பொய்ச்சம யமென்றீர்
இச்சம யம்இங்கு வாரீர்
மெய்ச்சம யந்தந்தீர் வாரீர். வாரீர் 68

1920 என்பாற் களிப்பொடும் அன்பால்ஒன் றீந்திதை
இன்பால் பெறுகென்றீர் வாரீர்
தென்பால் முகங்கொண்டீர் வாரீர். வாரீர் 69

1921 எச்ச உரையன்றென் இச்சைஎல் லாம்உம
திச்சைகண் டீர்இங்கு வாரீர்
அச்சந்த விர்த்தீரே வாரீர். வாரீர் 70

1922 எண்ணமெல் லாம்உம தெண்ணமல் லால்வேறோர்
எண்ணம் எனக்கில்லை வாரீர்
வண்ணம் அளிக்கின்றீர் வாரீர். வாரீர் 71

1923 ஏராய நான்முகர் நாராய ணர்மற்றும்
பாராய ணம்செய்வீர் வாரீர்
பூராயம் ஆயினீர் வாரீர். வாரீர் 72

1924 ஏம மிகுந்திரு வாம சுகந்தரும்
ஏம சபேசரே வாரீர்
சோம சிகாமணி வாரீர். வாரீர் 73

1925 ஏத மிலாப்பர நாத முடிப்பொருள்
ஏதது சொல்லுவீர் வாரீர்
ஈதல் உடையீரே வாரீர். வாரீர் 74

1926 ஏக பராபர யோக வெளிக்கப்பால்
ஏக வெளிநின்றீர் வாரீர்
ஏகர் அனேகரே வாரீர். வாரீர் 75

1927 ஏறி இறங்கி இருந்தேன் இறங்காமல்
ஏறவைத் தீர்இங்கு வாரீர்
தேறவைத் தீர்இங்கு வாரீர். வாரீர் 76

1928 ஏகாந்த நன்னிலை யோகாந்தத் துள்ளதென்
றேகாந்தம் சொல்லினீர் வாரீர்
தேகாந்தம் இல்லீரே வாரீர். வாரீர் 77

1929 ஏகாத கல்விதான் சாகாத கல்வியென்
றேகாத லாற்சொன்னீர் வாரீர்
வேகாத காலினீர் வாரீர். வாரீர் 78

1930 ஏடா யிரமென்னை கோடா மொழிஒன்றே
ஏடாளன் றீர்இங்கு வாரீர்
ஈடாவார் இல்லீரே வாரீர். வாரீர் 79

Koviloor Digital Library

1931 ஏசாத தந்திரம் பேசாத மந்திரம்
ஈசான மேலென்றீர் வாரீர்
ஆசாதி இல்லீரே வாரீர். வாரீர் 80

1932 ஏனென்பார் வேறிலை நான்அன்பாற் கூவுகின்
றேன்என்பால் ஏனென்பீர் வாரீர்
ஆனின்பால் ஆடுவீர் வாரீர். வாரீர் 81

1933 ஐந்து மலங்களும் வெந்து விழஎழுத்
தைந்துஞ் செயும்என்றீர் வாரீர்
இந்து சிகாமணி வாரீர். வாரீர் 82

1934 ஐயமுற் றேனைஇவ் வையங் கரியாக
ஐயம் தவிர்த்தீரே வாரீர்
மெய்யம் பலத்தீரே வாரீர். வாரீர் 83

1935 ஐயர் நடம்புரி மெய்யர்என் றேஉணர்ந்
தையர் தொழநின்றீர் வாரீர்
துய்யர் உளநின்றீர் வாரீர். வாரீர் 84

1936 ஐவணங் காட்டுநும் மெய்வணம் வேட்டுநின்
றைவணர் ஏத்துவீர் வாரீர்
பொய்வணம் போக்குவீர் வாரீர். வாரீர் 85

1937 ஒன்றே சிவம்அதை ஒன்றுசன் மார்க்கமும்
ஒன்றேஎன் றீர்இங்கு வாரீர்
நன்றேநின் றீர்இங்கு வாரீர். வாரீர் 86

1938 ஒப்பாரில் லீர்உமக் கிப்பாரில் பிள்ளைநான்
ஒப்பாரி அல்லகாண் வாரீர்
முப்பாழ் கடந்தீரே வாரீர். வாரீர் 87

1939 ஒத்த இடந்தன்னில் நித்திரை செய்என்றீர்
ஒத்த இடங்காட்ட வாரீர்
சித்த சிகாமணி வாரீர். வாரீர் 88

1940 ஒட்டுமற் றில்லைநான் விட்டுப் பிரிகலேன்
ஒட்டுவைத் தேனும்மேல் வாரீர்
எட்டுக் குணத்தீரே வாரீர். வாரீர் 89

1941 ஒருமை நிலையில் இருமையும் தந்த
ஒரிமையி னீர்இங்கு வாரீர்
பெருமையி னீர்இங்கு வாரீர். வாரீர் 90

1942 ஒண்மை விரும்பினேன் அண்மையில் ஈகுவீர்
உண்மைசொன் னேன்இங்கு வாரீர்
பெண்மை இடங்கொண்டீர் வாரீர். வாரீர் 91

Koviloor Digital Library

1943 ஒங்கார நாடகம் பாங்காகச் செய்கின்ற
ஒங்கார நாடரே வாரீர்
ஆங்கார நீக்கினீர் வாரீர். வாரீர் 92

1944 ஒங்கும்பிண் டாண்டங்கள் தாங்கும் பெருவெளி
ஒங்கு நடேசரே வாரீர்
பாங்குசெய் வீர்இங்கு வாரீர். வாரீர் 93

1945 ஒசையின் உள்ளேஓர் ஆசை உதிக்கமெல்
ஒசைசெய் வித்தீரே வாரீர்
பாசம் அறுத்தீரே வாரீர். வாரீர் 94

1946 ஒரா துலகினைப் பாரா திருநினக்
கோரா வகைஎன்றீர் வாரீர்
பேரா நிலைதந்தீர் வாரீர். வாரீர் 95

1947 ஒடாது மாயையை நாடாது நன்னெறி
ஊடா திருஎன்றீர் வாரீர்
வாடா திருஎன்றீர் வாரீர். வாரீர் 96

1948 ஒலக் கபாடத்தைச் சாலத் திறந்தருள்
ஒலக்கங் காட்டினீர் வாரீர்
காலக் கணக்கில்லீர் வாரீர். வாரீர் 97

1949 ஒடத்தின் நின்றொரு மாடத்தில் ஏற்றிமெய்
யூடத்தைக் காட்டினீர் வாரீர்
வேடத்தைப் பூட்டினீர் வாரீர். வாரீர் 98

1950 ஒமத்தி லேநடுச் சாமத்தி லேஎனை
ஒமத்தன் ஆக்கினீர் வாரீர்
சாமத்த நீக்கினீர் வாரீர். வாரீர் 99

1951 ஒமென்ப தற்குமுன் ஆமென் றுரைத்துடன்
ஊமென்று காட்டினீர் வாரீர்
நாமென்று நாட்டினீர் வாரீர். வாரீர் 100

1952 ஔவிய மார்க்கத்தின் வெவ்வியல் நீக்கியே
செவ்வியன் ஆக்கினீர் வாரீர்
ஒவ்விஒன் றாக்கினீர் வாரீர். வாரீர் 101

1953 கண்ணனை யீர்உம்மைக் காணஎன் ஆசைக்
கடல்பொங்கு கின்றது வாரீர்
உடல்தங்கு கின்றது வாரீர். வாரீர் 102

1954 கண்டணைந் தால்அன்றிக் காதல் அடங்காதென்
கண்மணி யீர்இங்கு வாரீர்
உண்மணி யீர்இங்கு வாரீர். வாரீர் 103

Koviloor Digital Library

1955 கட்டிக்கொண் டும்மைக் கலந்து கொளல்வேண்டும்
காரண ரேஇங்கு வாரீர்
பூரண ரேஇங்கு வாரீர். வாரீர் 104

வாரீர் சிதம்பர வல்லி சிவகாம
வல்லி மணாளரே வாரீர்
மணிமன்ற வாணரே வாரீர்
திருச்சிற்றம்பலம்

114. அம்பலவாணர் அணைய வருகை

வேட்கைக் கண்ணி

இராகம் – ஆனந்தபைரவி – ஆதிதாளம்

திருச்சிற்றம்பலம்

பல்லவி

1956 அணையவா ரீர் என்னை அணையவா ரீர்
அணிவளர் சிற் றம்பலத்தீர் அணையவா ரீர். 1

சரணங்கள்

1957 இயற்கைஉண்மை வடிவினரே அணையவா ரீர்
எல்லாம்செய் வல்லவரே அணையவா ரீர்
இயற்கைவிளக் கத்தவரே அணையவா ரீர்
எல்லார்க்கும் நல்லவரே அணையவா ரீர்
இயற்கைஇன்ப மானவரே அணையவா ரீர்
இறைமையெலாம் உடையவரே அணையவா ரீர்
இயற்கைநிறை வானவரே அணையவா ரீர்
என்னுடைய நாயகரே அணையவா ரீர். அணையவா ரீர் 1

1958 உலகமெலாம் உடையவரே அணையவா ரீர்
உண்மைஉரைக் கின்றவரே அணையவா ரீர்
கலகம்அறுத் தாண்டவரே அணையவா ரீர்
கண்ணனைய காதலரே அணையவா ரீர்
அலகறியாப் பெருமையரே அணையவா ரீர்
அற்புதப்பொற் ஜோதியரே அணையவா ரீர்
இலகுசபா பதியவரே அணையவா ரீர்
என்னுடைய நாயகரே அணையவா ரீர். அணையவா ரீர் 2

1959 பொதுவில்நடிக் கின்றவரே அணையவா ரீர்
பொற்புடைய புண்ணியரே அணையவா ரீர்
மதுவில் இனிக் கின்றவரே அணையவா ரீர்
மன்னியஎன் மன்னவரே அணையவா ரீர்

Koviloor Digital Library

விதுவின்அமு தானவரே அணையவா ரீர்
மெய்யுரைத்த வித்தகரே அணையவா ரீர்
இதுதருணம் இறையவரே அணையவா ரீர்
என்னுடைய நாயகரே அணையவா ரீர். அணையவா ரீர் 3

1960 வினைமாலை நீத்தவரே அணையவா ரீர்
வேதமுடிப் பொருளவரே அணையவா ரீர்
அனைமாலைக் காத்தவரே அணையவா ரீர்
அருட்பெருஞ்ஜோ திப்பதியீர் அணையவா ரீர்
புனைமாலை வேய்ந்தவரே அணையவா ரீர்
பொதுவில்நிறை பூரணரே அணையவா ரீர்
எனைமாலை யிட்டவரே அணையவா ரீர்
என்னுடைய நாயகரே அணையவா ரீர். அணையவா ரீர் 4

1961 சிறுவயதில் எனைவிழைந்தீர் அணையவா ரீர்
சித்தசிகா மணியேநீர் அணையவா ரீர்
உறுவயதிங் கிதுதருணம் அணையவா ரீர்
உண்மைசொன்ன உத்தமரே அணையவா ரீர்
பொறுமைமிக உடையவரே அணையவா ரீர்
பொய்யாத வாசகரே அணையவா ரீர்
இறுதிதவிர்த் தாண்டவரே அணையவா ரீர்
என்னுடைய நாயகரே அணையவா ரீர். அணையவா ரீர் 5

1962 சாதிமதந் தவிர்த்தவரே அணையவா ரீர்
தனித்தலைமைப் பெரும்பதியீர் அணையவா ரீர்
ஆதியந்தம் இல்லவரே அணையவா ரீர்
ஆரணங்கள் போற்றநின்றீர் அணையவா ரீர்
ஓதியுணர் வரியவரே அணையவா ரீர்
உள்ளபடி உரைத்தவரே அணையவா ரீர்
ஈதிசைந்த தருணமிங்கே அணையவா ரீர்
என்னுடைய நாயகரே அணையவா ரீர். அணையவா ரீர் 6

1963 அன்பாட்டை விழைந்தவரே அணையவா ரீர்
அருட்ஜோதி வடிவினரே அணையவா ரீர்
துன்பாட்டை ஒழித்தவரே அணையவா ரீர்
துரியநிறை பெரியவரே அணையவா ரீர்
பின்பாட்டுக் காலையிதே அணையவா ரீர்
பிச்சேற்று கின்றவரே அணையவா ரீர்
என்பாட்டை ஏற்றவரே அணையவா ரீர்
என்னுடைய நாயகரே அணையவா ரீர். அணையவா ரீர் 7

Koviloor Digital Library

1964 அரைக்கணமும் தரியேன்நான் அணையவா ரீர்
ஆணைஉம்மேல் ஆணைஎன்னை அணையவா ரீர்
புரைக்கணங்கண் டறியேன்நான் அணையவா ரீர்
பொன்மேனிப் புண்ணியரே அணையவா ரீர்
வரைக்கணஞ்செய் வித்தவரே அணையவா ரீர்
மன்றில்நடிக் கின்றவரே அணையவா ரீர்
இரைக்கணவு தருணமிதே அணையவா ரீர்
என்னுடைய நாயகரே அணையவா ரீர். அணையவா ரீர் 8

1965 கருணைநடஞ் செய்பவரே அணையவா ரீர்
கண்மணியில் கலந்தவரே அணையவா ரீர்
அருள்நிறைசிற் சபையவரே அணையவா ரீர்
அன்பர்குறை தீர்த்தவரே அணையவா ரீர்
தருணமிது விரைந்தென்னை அணையவா ரீர்
சத்தியரே நித்தியரே அணையவா ரீர்
இருள்நிறைந்தார்க் கறிவரியீர் அணையவா ரீர்
என்னுடைய நாயகரே அணையவா ரீர். அணையவா ரீர் 9

1966 சேரஉம்மேல் ஆசைகொண்டேன் அணையவா ரீர்
திருவுளமே அறிந்ததெல்லாம் அணையவா ரீர்
ஆரெனக்கிங் கும்மையல்லால் அணையவா ரீர்
அயலறியேன் ஆணைஉம்மேல் அணையவா ரீர்
ஈரகத்தேன் அல்லஇங்கே அணையவா ரீர்
என்னாசை பொங்குகின்றது அணையவா ரீர்
ஏரகத்தே அமர்ந்தருள்வீர் அணையவா ரீர்
என்னுடைய நாயகரே அணையவா ரீர். அணையவா ரீர் 10

1967 கலந்துகொள வேண்டுகின்றேன் அணையவா ரீர்
காதல்பொங்கு கின்றதென்னை அணையவா ரீர்
புலந்தறியேன் விரைகின்றேன் அணையவா ரீர்
புணர்வதற்குத் தருணமிதே அணையவா ரீர்
அலந்தவிடத் தருள்கின்றீர் அணையவா ரீர்
அரைக்கணமும் இனித்தரியேன் அணையவா ரீர்
இலந்தைநறுங் கனியனையீர் அணையவா ரீர்
என்னுடைய நாயகரே அணையவா ரீர். 11

அணையவா ரீர்என்னை அணையவா ரீர்
அணிவளர் சிற் றம்பலத்தீர் அணையவா ரீர்.

திருச்சிற்றம்பலம்

Koviloor Digital Library

115. அம்பலவாணர் ஆட வருகை

ஆடலமுதக் கண்ணி

இராகம்–மோகனம்–ஏகதாளசாப்பு

திருச்சிற்றம்பலம்

பல்லவி

1968 ஆடவா ரீர் என்னோடு ஆடவா ரீர்
அம்பலத்தில் ஆடுகின்றீர் ஆடவா ரீர். 1

சரணங்கள்

1969 தன்மைபிறர்க் கறிவரியீர் ஆடவா ரீர்
தனித்தலைமைப் பெரும்பதியீர் ஆடவா ரீர்
வன்மைமனத் தவர்க்கரியீர் ஆடவா ரீர்
வஞ்சமிலா நெஞ்சகத்தீர் ஆடவா ரீர்
தொன்மைமறை முடியமர்ந்தீர் ஆடவா ரீர்
துரியபதங் கடந்தவரே ஆடவா ரீர்
இன்மை தவிர்த் தெனைமணந்தீர் ஆடவா ரீர்
என்னுடைய நாயகரே ஆடவா ரீர். ஆடவா ரீர் 1

1970 திருவாளர் போற்ற என்னோடு ஆடவா ரீர்
திருவனையார் வாழ்த்தஇங்கே ஆடவா ரீர்
பெருவாய்மைப் பெருந்தகையீர் ஆடவா ரீர்
பேராசை பொங்குகின்றேன் ஆடவா ரீர்
உருவாகி ஓங்குகின்றீர் ஆடவா ரீர்
உத்தமரே இதுதருணம் ஆடவா ரீர்
இருவாணர் ஏத்தநின்றீர் ஆடவா ரீர்
என்னுடைய நாயகரே ஆடவா ரீர். ஆடவா ரீர் 2

1971 வேற்றுமுகம் பாரேன்என்னோடு ஆடவா ரீர்
வெட்கமெல்லாம் விட்டுவிட்டேன் ஆடவா ரீர்
மாற்றுதற்கெண் ணாதீர்என்னோடு ஆடவா ரீர்
மாற்றில்உயிர் மாய்ப்பேன்கண்டீர் ஆடவா ரீர்
கூற்றுதைத்த சேவடியீர் ஆடவா ரீர்
கொண்டுகுலங் குறியாதீர் ஆடவா ரீர்
ஏற்றதனித் தருணமீதே ஆடவா ரீர்
என்னுடைய நாயகரே ஆடவா ரீர் . ஆடவா ரீர் 3

1972 இல்லாமை நீக்கிநின்றீர் ஆடவா ரீர்
என்னைமண மாலையிட்டீர் ஆடவா ரீர்
கொல்லாமை நெறிஎன்றீர் ஆடவா ரீர்
குற்றமெலாங் குணங்கொண்டீர் ஆடவா ரீர்

Koviloor Digital Library

நல்லார்சொல் நல்லவரே ஆடவா ரீர்
நற்றாயில் இனியவரே ஆடவா ரீர்
எல்லாம்செய் வல்லவரே ஆடவா ரீர்
என்னுடைய நாயகரே ஆடவா ரீர். ஆடவா ரீர் 4

1973 ஆசைகொண்டேன் ஆடஎன்னோடு ஆடவா ரீர்
ஆசைவெட்கம் அறியாதால் ஆடவா ரீர்
ஓசைகொண்ட தெங்குமிங்கே ஆடவா ரீர்
உம்ஆணை உம்மைவிடேன் ஆடவா ரீர்
காசுபணத் தாசையிலேன் ஆடவா ரீர்
கைபிடித்தாற் போதும்என்னோடு ஆடவா ரீர்
ஏசறநீத் தெனைஆண்டீர் ஆடவா ரீர்
என்னுடைய நாயகரே ஆடவா ரீர். ஆடவா ரீர் 5

1974 சன்மார்க்க நெறிவைத்தீர் ஆடவா ரீர்
சாகாத வரந்தந்தீர் ஆடவா ரீர்
கன்மார்க்க மனங்கரைத்தீர் ஆடவா ரீர்
கண்ணிசைந்த கணவரேநீர் ஆடவா ரீர்
சொன்மார்க்கப் பொருளானீர் ஆடவா ரீர்
சுத்தஅருட் ஜோதியரே ஆடவா ரீர்
என்மார்க்கம் உளத்துகந்தீர் ஆடவா ரீர்
என்னுடைய நாயகரே ஆடவா ரீர். ஆடவா ரீர் 6

1975 அண்டமெலாம் கண்டவரே ஆடவா ரீர்
அகண்டபரி பூரணரே ஆடவா ரீர்
பண்டமெலாம் படைத்தவரே ஆடவா ரீர்
பற்றொடுவீ டில்லவரே ஆடவா ரீர்
கொண்டெனைவந் தாண்டவரே ஆடவா ரீர்
கூத்தாட வல்லவரே ஆடவா ரீர்
எண்தகுபொற் சபையுடையீர் ஆடவா ரீர்
என்னுடைய நாயகரே ஆடவா ரீர். ஆடவா ரீர் 7

1976 பேதநினை யாதுவிரைந்து ஆடவா ரீர்
பின்பாட்டுக் காலையிதே ஆடவா ரீர்
ஓதஉல வாதவரே ஆடவா ரீர்
உள்ளாசை பொங்குகின்றது ஆடவா ரீர்
சாதல்அறுத் தெனைஆண்டீர் ஆடவா ரீர்
தனித்தலைமைப் பெரும்பதியீர் ஆடவா ரீர்
ஏதமறுத் தவர்க்கினியீர் ஆடவா ரீர்
என்னுடைய நாயகரே ஆடவா ரீர். ஆடவா ரீர் 8

Koviloor Digital Library

1977 கள்ளமொன்றும் அறியேன்நான் ஆடவா ரீர்
கைகலந்து கொண்டீர்என்னோடு ஆடவா ரீர்
உள்ளபடி உரைக்கின்றேன் ஆடவா ரீர்
உம்மாசை பொங்குகின்றது ஆடவா ரீர்
தள்ளரியேன் என்னோடிங்கே ஆடவா ரீர்
தாழ்க்கில்இறை யும்தரியேன் ஆடவா ரீர்
எள்ளல்அறுத் தாண்டுகொண்டீர் ஆடவா ரீர்
என்னுடைய நாயகரே ஆடவா ரீர் . ஆடவா ரீர் 9

1978 நச்சுகின்றேன் நிச்சலிங்கே ஆடவா ரீர்
நாணமச்சம் விட்டேனென்னோடு ஆடவா ரீர்
விச்சையெலாம் தந்துகளித்து ஆடவா ரீர்
வியந்துரைத்த தருணமிதே ஆடவா ரீர்
எச்சுகமும் ஆகிநின்றீர் ஆடவா ரீர்
எல்லாம்செய் வல்லவரே ஆடவா ரீர்
இச்சைமய மாய்இருந்தேன் ஆடவா ரீர்
என்னுடைய நாயகரே ஆடவா ரீர் . ஆடவா ரீர் 10

1979 என்உயிருக் குயிரானீர் ஆடவா ரீர்
என்அறிவுக் கறிவானீர் ஆடவா ரீர்
என்னுடைஅன் பிற் கலந்தீர் ஆடவா ரீர்
என்னுடைஉள் ளத்திருந்தீர் ஆடவா ரீர்
என்உரிமைத் தாயனையீர் ஆடவா ரீர்
எனதுதனித் தந்தையரே ஆடவா ரீர்
என்ஒருமைச் சற்குருவே ஆடவா ரீர்
என்னுடைய நாயகரே ஆடவா ரீர். ஆடவா ரீர் 11

ஆடவா ரீர் என்னோடு ஆடவா ரீர்
அம்பலத்தில் ஆடுகின்றீர் ஆடவா ரீர்.

திருச்சிற்றம்பலம்

Koviloor Digital Library

116. ஆடேடி பந்து

ஆனந்த மேலீடு

இராகம்—ப்யாகடை—அடதாள சாப்பு

திருச்சிற்றம்பலம்

பல்லவி

1980 ஆடேடி பந்து ஆடேடி பந்து
ஆடேடி பந்து ஆடேடி பந்து 1

சரனங்கள்

1981 வாழிஎன் தோழிஎன் வார்த்தைகேள் என்றும்
மரணமில் லாவரம் நான்பெற்றுக் கொண்டேன்
சூழியற் செஞ்சுடர்த் தோற்றுறு கீழ்பால்
தூய்த்திசை நோக்கினேன் சீர்த்திகழ் சித்தி
ஊழிதோ றூழிநின் றாடுவன் நீயும்
உன்னுதி யேல் இங்கே மன்னரு ளாணை
ஆழி கரத்தணிந் தாடேடி பந்து
அருட்பெருஞ் ஜோதிகண் டாடேடி பந்து. ஆடேடி 1

1982 இசையாமல் போனவர் எல்லாரும் நாண
இறவாப் பெருவரம் யான்பெற்றுக் கொண்டேன்
வசையாதும் இல்லாத மேற்றிசை நோக்கி
வந்தேன்என் தோழிநீ வாழிகாண் வேறு
நசையாதே என்னுடை நண்பது வேண்டில்
நன்மார்க்க மாம்சுத்த சன்மார்க்கம் தன்னில்
அசையாமல் நின்றிங்கே ஆடேடி பந்து
அருட்பெருஞ் ஜோதிகண் டாடேடி பந்து. ஆடேடி 2

1983 இன்பாலே உலகத்தார் எல்லாரும் காண
இறவாப் பெருவரம் யான்பெற்றுக் கொண்டேன்
தென்பாலே நோக்கினேன் சித்தாடு கின்ற
திருநாள் இதுதொட்டுச் சேர்ந்தது தோழி
துன்பாலே அசைந்தது நீக்கிஎன் னோடே
சுத்தசன் மார்க்கத்தில் ஒத்தவ ளாகி
அன்பாலே அறிவாலே ஆடேடி பந்து
அருட்பெருஞ் ஜோதிகண் டாடேடி பந்து. ஆடேடி 3

Koviloor Digital Library

1984 சதுமறை ஆகம சாத்திரம் எல்லாம்
சந்தைப் படிப்புநம் சொந்தப் படிப்போ
விதுநெறி சுத்தசன் மார்க்கத்தில் சாகா
வித்தையைக் கற்றனன் உத்தரம் எனுமோர்
பொதுவளர் திசைநோக்கி வந்தனன் என்றும்
பொன்றாமை வேண்டிடில் என்தோழி நீதான்
அதுஇது என்னாமல் ஆடேடி பந்து
அருட்பெருஞ் ஜோதிகண் டாடேடி பந்து. ஆடேடி 4

1985 தப்பாலே சகத்தவர் சாவே துணிந்தார்
தாமுள நாணநான் சாதலைத் தவிர்த்தே
எப்பாலும் எக்காலும் இருத்தலே பெற்றேன்
என்தோழி வாழிநீ என்னோடு கூடி
துப்பாலே விளங்கிய சுத்தசன் மார்க்க
ஜோதிஎன் றோதிய வீதியை விட்டே
அப்பாலே போகாமல் ஆடேடி பந்து
அருட்பெருஞ் ஜோதிகண் டாடேடி பந்து. ஆடேடி 5

1986 வெங்கேத மரணத்தை விடுவித்து விட்டேன்
விச்சைஎ லாம்கற்றென் இச்சையின் வண்ணம்
எங்கேயும் ஆடுதற் கெய்தினேன் தோழி
என்மொழி சத்தியம் என்னோடும் கூடி
இங்கே களிப்பது நன்றிந்த உலகோ
ஏதக் குழியில் இழுக்கும் அதனால்
அங்கேபா ராதேநீ ஆடேடி பந்து
அருட்பெருஞ் ஜோதிகண் டாடேடி பந்து. ஆடேடி 6

1987 சிவமே பொருள்என் றறிவால் அறிந்தேன்
செத்தாரை மீட்கின்ற திண்மையைப் பெற்றேன்
உவமேயம் இல்லாத ஒருநிலை தன்னில்
ஒன்றிரண் டென்னாத உண்மையில் நின்றேன்
தவமே புரிகின்றார் எல்லாரும் காணத்
தயவால் அழைக்கின்றேன் கயவாதே தோழி
அவமேபோ காதென்னோ டாடேடி பந்து
அருட்பெருஞ் ஜோதிகண் டாடேடி பந்து. ஆடேடி 7

1988 துஞ்சாத நிலைஒன்று சுத்தசன் மார்க்கச்
சூழலில் உண்டது சொல்லள வன்றே
எஞ்சாத அருளாலே யான்பெற்றுக் கொண்டேன்
இறந்தாரை எல்லாம் எழுப்புதல் வல்லேன்

Koviloor Digital Library

விஞ்சாத அறிவாலே தோழிநீ இங்கே
வேதுசெய் மரணத்துக் கெதுசெய்வோ மென்றே
அஞ்சாமல் என்னோடே ஆடேடி பந்து
அருட்பெருஞ் ஜோதிகண் டாடேடி பந்து. ஆடேடி 8

1989 ஈரமும் அன்பும்கொண் டின்னருள் பெற்றேன்
என்மார்க்கம் இறவாத சன்மார்க்கம் தோழி
காரமும் மிகுபுளிச் சாரமும் துவர்ப்பும்
கைப்போடே உப்போடே கசப்போடே கூட்டி
ஊரமு துண்டுநீ ஒழியாதே அந்தோ
ஊழிதோறூழியும் உலவாமை நல்கும்
ஆரமு துண்டென்னோ டாடேடி பந்து
அருட்பெருஞ் ஜோதிகண் டாடேடி பந்து. ஆடேடி 9

1990 துதிசெயும் முத்தரும் சித்தரும் காணச்
சுத்தசன் மார்க்கத்தில் உத்தம ஞானப்
பதிசெயும் சித்திகள் பற்பல வாகப்
பாரிடை வானிடைப் பற்பல காலம்
விதிசெயப் பெற்றனன் இன்றுதொட் டென்றும்
மெய்யருட் ஜோதியால் விளைவிப்பன் நீஅவ்
அதிசயம் பார்க்கலாம் ஆடேடி பந்து
அருட்பெருஞ் ஜோதிகண் டாடேடி பந்து. ஆடேடி 10

ஆடேடி பந்து ஆடேடி பந்து
அருட்பெருஞ் ஜோதிகண் டாடேடி பந்து.
திருச்சிற்றம்பலம்

117. ஞான மருந்து

ஆனந்தகளிப்பு-1

இராகம்–இந்துஸ்தானி – அனுஷிக தாளம்

திருச்சிற்றம்பலம்

பல்லவி

1991 ஞான மருந்திம் மருந்து – சுகம்
நல்கிய சிற்சபா நாத மருந்து 1

சரணங்கள்

1992 அருட்பெருஞ் ஜோதி மருந்து – என்னை
ஐந்தொழில் செய்தற் களித்த மருந்து
பொருட்பெரும் போக மருந்து – என்னைப்
புறத்தும் அகத்தும் புணர்ந்த மருந்து. ஞான 1

Koviloor Digital Library

1993 எல்லாம்செய் வல்ல மருந்து – என்னுள்
என்றும் விடாமல் இனிக்கு மருந்து
சொல்லால் அளவா மருந்து – சுயஞ்
ஜோதி அருட்பெருஞ் ஜோதி மருந்து. ஞான 2

1994 காணாது காட்டு மருந்து – என்றன்
கையிற்பொற் கங்கணம் கட்டு மருந்து
ஆணாகிப் பெண்ணாம் மருந்து – அது
வாகி மணிமன்றில் ஆடு மருந்து. ஞான 3

1995 சுத்தசன் மார்க்க மருந்து – அருட்
ஜோதி மலையில் துலங்கு மருந்து
சித்துரு வான மருந்து – என்னைச்
சித்தெலாம் செய்யச்செய் வித்த மருந்து. ஞான 4

1996 அன்பர்க் கெளிய மருந்து – மற்றை
ஐவர்க்கும் காண்டற் கரிய மருந்து
என்பற்றில் ஓங்கு மருந்து – என்னை
இன்ப நிலையில் இருத்து மருந்து ஞான 5

1997 நாதாந்த நாட்டு மருந்து – பர
ஞான வெளியில் நடிக்கு மருந்து
போதாந்தற்கு கெய்து மருந்து – என்னுள்
பொன்னடி காட்டிப் புணர்ந்த மருந்து ஞான 6

1998 ஆதி அனாதி மருந்து – திரு
அம்பலத் தேநட மாடு மருந்து
ஜோதி மயமா மருந்து – என்னைச்
சோதியா தாண்ட துரிய மருந்து. ஞாள 7

1999 ஆறந்தத் தோங்கு மருந்து –அதற்
கப்பாலுக் கப்பாலும் ஆன மருந்து
ஊறந்த மில்லா மருந்து – எனக்
குள்ளே கலந்த உறவா மருந்து. ஞான 8

2000 என்னுயிர்க் கன்பா மருந்து – கலந்
தென்னுயிர்க் குள்ளே இருந்த மருந்து
என்னுயிர் காக்கு மருந்து – என்றும்
என்னுயி ராகிய இன்ப மருந்து. ஞான 9

Koviloor Digital Library

2001 என்னறி வுட்கொள்மருந்து – என்றும்
என்னறி வாகி இலங்கு மருந்து
என்னறி வின்ப மருந்து – என்னுள்
என்னறி வுக்கறி வென்னு மருந்து. ஞான 10

2002 என்குரு வான மருந்து – என்றும்
என்தெய்வம் ஆகி இருக்கு மருந்து
என்அன்னை யென்னு மருந்து – என்றும்
என்தந்தை யாகியஇன்ப மருந்து. ஞான 11

2003 என்பெரு வாழ்வா மருந்து – என்றும்
என்செல்வ மாகி இருக்கு மருந்து
என்னுயிர் நட்பா மருந்து – எனக்
கெட்டெட்டுச் சித்தியும் ஈந்த மருந்து. ஞான 12

2004 என்னிறை யான மருந்து – மகிழ்ந்
தெனக்குத்தன் பொன்மேனி ஈந்த மருந்து
தன்னறி வாகு மருந்து – என்னைத்
தந்த மருந்தென்றன் சொந்த மருந்து. ஞான 13

2005 உள்ளத்தி னுள்ளா மருந்து – என்றன்
உயிருக் கனாதி உறவா மருந்து
தெள்ளத் தெளிக்கு மருந்து – என்னைச்
சிவமாக்கிக் கொண்ட சிவாய மருந்து. ஞான 14

2006 மெய்ப்பொரு ளென்னு மருந்து – எல்லா
வேதா கமத்தும் விளங்கு மருந்து
கைப்பொரு ளான மருந்து – மூன்று
கண்கொண்ட என்னிரு கண்ணுள் மருந்து. ஞான 15

2007 மதியில் விளைந்த மருந்து – யார்க்கும்
மதிக்கப்ப டாதபொன் வண்ண மருந்து
கதிதரும் இன்ப மருந்து – அருட்
கண்ணால்என் றன்னைக் கலந்த மருந்து. ஞான 16

2008 கற்பூர ஜோதி மருந்து – பசுங்
கற்பூர நன்மணங் காட்டு மருந்து
பொற்பூவின் ஓங்கு மருந்து – என்தற்
போதம் தவிர்த்தசிற் போத மருந்து. ஞான 17

Koviloor Digital Library

2009 மேலை வெளியா மருந்து – நான்
வேண்டுந்தோ றெல்லாம் விளையு மருந்து
சாலை விளக்கு மருந்து – சுத்த
சமரச சன்மார்க்க சங்க மருந்து. ஞான 18

2010 என்னைத்தா னாக்கு மருந்து – இங்கே
இறந்தாரை எல்லாம் எழுப்பு மருந்து
துன்னுமெய் ஜோதி மருந்து – அருட்
ஜோதியால் என்னைத் துலக்கு மருந்து. ஞான 19

2011 பொய்யர்க் கரிதா மருந்து – என்னைப்
புறத்தும் அகத்தும் புணர்ந்த மருந்து
கையிற் கிடைத்த மருந்து – சிவ
காமக் கொடியைக் கலந்த மருந்து. ஞான 20

2012 ஆணவம் தீர்க்கு மருந்து –பர
மானந்தத் தாண்டவ மாடும் மருந்து
மாணவ வண்ண மருந்து – என்னை
வலிய அழைத்து வளர்க்கு மருந்து. ஞான 21

2013 வானடு வான மருந்து – என்னை
மாமணி மேடைமேல் வைத்த மருந்து
ஊனம் தவிர்த்த மருந்து – கலந்
துள்ளே இனிக்கின்ற உண்மை மருந்து. ஞான 22

2014 மலையிலக் கான மருந்து – என்றன்
மறப்பைத் தவிர்த்தமெய் வாழ்க்கை மருந்து
கலைநலம் காட்டு மருந்து – எங்கும்
கண்ணாகிக் காணும் கனத்த மருந்து. ஞான 23

2015 அற்புத ஜோதி மருந்து – எல்லாம்
ஆகியன் றாகி அமர்ந்த மருந்து
தற்பதம் தந்த மருந்து – எங்கும்
தானேதா னாகித் தனித்த மருந்து. ஞான 24

2016 தன்னை அளித்த மருந்து – என்றும்
சாகாத நல்வரம் தந்த மருந்து
பொன்னடி ஈந்த மருந்து – அருட்
போனகம் தந்த புனித மருந்து. ஞான 25

Koviloor Digital Library

2017 கண்ணுக் கினிய மருந்து – என்றன்
கைப்பொரு ளாந்தங்கக் கட்டி மருந்து
எண்ணுக் கடங்கா மருந்து – என்னை
ஏதக்குழிவிட் டெடுத்த மருந்து. ஞான 26

2018 சுட்டப் படாத மருந்து – என்றன்
தூக்கமும் சோர்வும் தொலைத்த மருந்து
எட்டுதற் கொண்ணா மருந்து – நான்
எட்டிப் பிடிக்க இசைந்த மருந்து. ஞான 27

2019 உன்னற் கரிதா மருந்து – எனக்
குள்ளும் புறத்தும் உலாவு மருந்து
தன்னந் தனித்த மருந்து – சுத்தச்
சாக்கிரா தீதச் சபேச மருந்து. ஞான 28

2020 ஒன்றில்ஒன் றான மருந்து – அந்த
ஒன்றில் இரண்டாகி ஓங்கு மருந்து
அன்றிமூன் றான மருந்து – நான்
காகிஐந் தாகி அமர்ந்த மருந்து. ஞான 29

2021 வெளிக்குள் வெளியா மருந்து – எல்லா
வெளியும் கடந்து விளங்கு மருந்து
ஒளிக்குள் ஒளியா மருந்து – எல்லா
ஒளியும்தா னாகிய உண்மை மருந்து. ஞான 30

2022 ஆறாறுக் கப்பால் மருந்து – அதற்
கப்புறத் தீராறுக் கப்பால் மருந்து
ஈறாதி இல்லா மருந்து – என்னை
எல்லாம் செயச்செய்த இன்ப மருந்து. ஞான 31

2023 ஆரணத் தோங்கு மருந்து – அருள்
ஆகம மாகிஅண் ணிக்கு மருந்து
காரணம் காட்டு மருந்து – எல்லாம்
கண்ட மருந்தென்னுள் கொண்ட மருந்து. ஞான 32

2024 மலமைந்து நீக்கு மருந்து – புவி
வானண்ட மெல்லாம் வளர்க்கு மருந்து
நலமிக் கருளு மருந்து – தானே
நானாகித் தானாகு நாட்டு மருந்து. ஞான 33

ஞான மருந்திம் மருந்து – சுகம்
நல்கிய சிற்சபா நாத மருந்து.

திருச்சிற்றம்பலம்

Koviloor Digital Library

118. சிவசிவ ஜோதி

ஆனந்தக் களிப்பு-2

இங்கிலிஷ் மெட்டு

இராகம்—சங்கராபரணம்—அடதாளம்

திருச்சிற்றம்பலம்

பல்லவி

2025 சிவசிவ சிவசிவ ஜோதி — சிவ
சிவசிவ சிவசிவ சிவசிவ ஜோதி
சிவசிவ சிவசிவ ஜோதி.

சரணங்கள்

2026 சிற்பர மாம்பரஞ் ஜோதி — அருட்
சித்தெல்லாம் வல்ல சிதம்பர ஜோதி
தற்பர தத்துவ ஜோதி — என்னைத்
தானாக்கிக் கொண்ட தயாநிதி ஜோதி. சிவசிவ 1

2027 சித்துரு வாம்சுயஞ் ஜோதி — எல்லாம்
செய்திட வல்ல சிதம்பர ஜோதி
அத்துவி தானந்த ஜோதி — என்னை
ஆட்கொண் டருளும்சிற் றம்பல ஜோதி. சிவசிவ 2

2028 சின்மய மாம்பெருஞ் ஜோதி — அருட்
செல்வ மளிக்கும் சிதம்பர ஜோதி
தன்மய மாய்நிறை ஜோதி — என்னைத்
தந்தமெய் ஜோதி சதானந்த ஜோதி. சிவசிவ 3

2029 ஆதிஈ றில்லாமுற் ஜோதி — அரன்
ஆதியர் தம்மை அளித்தபிற் ஜோதி
ஓதி உணர்வரும் ஜோதி — எல்லா
உயிர்களின் உள்ளும் ஒளிர்கின்ற ஜோதி. சிவசிவ 4

2030 மன்னிய பொன்வண்ண ஜோதி — சுக
வண்ணத்த தாம்பெரு மாணிக்க ஜோதி
துன்னிய வச்சிர ஜோதி — முத்து
ஜோதி மரகத ஜோதியுள் ஜோதி. சிவசிவ 5

2031 பார்முதல் ஐந்துமாம் ஜோதி — ஐந்தில்
பக்கமேல் கீழ்நடுப் பற்றிய ஜோதி
ஓர்ஐம் பொறியுரு ஜோதி — பொறிக்
குள்ளும் புறத்தும் ஒளிர்கின்ற ஜோதி. சிவசிவ 6

Koviloor Digital Library

2032 ஐம்புல மும்தானாம் ஜோதி – புலத்
தகத்தும் புறத்து மலர்ந்தொளிர் ஜோதி
பொய்ம்மயல் போக்கும்உள் ஜோதி – மற்றைப்
பொறிபுலன் உள்ளும் புறத்துமாம் ஜோதி. சிவசிவ 7

2033 மனமாதி எல்லாமாம் ஜோதி – அவை
வாழ அகம்புறம் வாழ்கின்ற ஜோதி
இனமான உள்ளக ஜோதி – சற்றும்
ஏறா திறங்கா தியக்குமோர் ஜோதி. சிவசிவ 8

2034 முக்கணமு மூன்றாம் ஜோதி – அவை
முன்பின் இயங்க முடுக்கிய ஜோதி
எக்குணத் துள்ளுமாம் ஜோதி – குணம்
எல்லாம் கடந்தே இலங்கிய ஜோதி. சிவசிவ 9

2035 பகுதிமூன் றாகிய ஜோதி – மூலப்
பகுதிகள் மூன்றும் படைத்தருள் ஜோதி
விகுதி பலவாக்கும் ஜோதி – சற்றும்
விகுதிஒன் றின்றி விளக்கிய ஜோதி. சிவசிவ 10

2036 கால முதற்காட்டும் ஜோதி – கால
காரணத் தப்பால் கடந்தொளிர் ஜோதி
கோலம் பலவாகும் ஜோதி – ஒன்றும்
குறிக்கப் படாச்சிற் குணப்பெருஞ் ஜோதி. சிவசிவ 11

2037 தத்துவம் எல்லாம் ஜோதி – அந்தத்
தத்துவம் எல்லாம் தருவிக்கும் ஜோதி
அத்துவி தப்பெருஞ் ஜோதி – எல்லாம்
அருளில் விளங்க அமர்த்திய ஜோதி. சிவசிவ 12

2038 சத்தர்கள் எல்லாமாம் ஜோதி – அவர்
சத்திகள் எல்லாம் தழைப்பிக்கும் ஜோதி
முத்தர் அனுபவ ஜோதி – பர
முத்தியாம் ஜோதிமெய்ச் சித்தியாம் ஜோதி. சிவசிவ 13

2039 ஆறந்தத் தேநிறை ஜோதி – அவைக்
கப்புறத் தப்பாலும் ஆகிய ஜோதி
வீறும் பெருவெளி ஜோதி – மேலும்
வெட்ட வெளியில் விளங்கிய ஜோதி. சிவசிவ 14

Koviloor Digital Library

2040 பேரருட் ஜோதியுள் ஜோதி – அண்ட
பிண்டங்கள் எல்லாம் பிறங்கிய ஜோதி
வாரமுற் றோங்கிய ஜோதி – மன
வாக்குக் கெட்டாததோர் மாமணி ஜோதி. சிவசிவ 15

2041 ஒன்றான பூரண ஜோதி – அன்பில்
ஒன்றாத உள்ளத்தில் ஒன்றாத ஜோதி
என்றா ஒளிர்கின்ற ஜோதி – என்னுள்
என்றும் விளங்கிய என்னுயிர் ஜோதி. சிவசிவ 16

2042 மெய்யேமெய் யாகிய ஜோதி – சுத்த
வேதாந்த வீட்டில் விளங்கிய ஜோதி
துய்ய சிவானந்த ஜோதி – குரு
துரியத் தலத்தே துலங்கிய ஜோதி. சிவசிவ 17

2043 சிவமய மாம்சுத்த ஜோதி – சுத்த
சித்தாந்த வீட்டில் சிறந்தொளிர் ஜோதி
உவமையில் லாப்பெருஞ் ஜோதி – என
துள்ளே நிரம்பி ஒளிர்கின்ற ஜோதி. சிவசிவ 18

2044 என்னைத்தா னாக்கிய ஜோதி – இங்கே
இறந்தாரை எல்லாம் எழுப்புமோர் ஜோதி
அன்னைக்கு மிக்கருட் ஜோதி – என்னை
ஆண்டமு தம்தந்த ஆனந்த ஜோதி. சிவசிவ 19

2045 சித்தம் சிவமாக்கும் ஜோதி – நான்
செய்த தவத்தால் தெரிந்த உட் ஜோதி
புத்தமு தாகிய ஜோதி – சுக
பூரண மாய்ஒளிர் காரண ஜோதி. சிவசிவ 20

2046 தம்பத்தில் ஏற்றிய ஜோதி – அப்பால்
சார்மணி மேடைமேல் தான்வைத்த ஜோதி
விம்பப் பெருவெளி ஜோதி – அங்கே
வீதியும் வீடும் விளக்கிய ஜோதி. சிவசிவ 21

2047 சுகமய மாகிய ஜோதி – எல்லா
ஜோதியு மான சொரூபஉட் ஜோதி
அகமிதந் தீர்த்தருள் ஜோதி – சச்சி
தானந்த ஜோதி சதானந்த ஜோதி. சிவசிவ 22

Koviloor Digital Library

2048 நித்த பரானந்த ஜோதி – சுத்த
நிரதிச யானந்த நித்திய ஜோதி
அத்துவி தானந்த ஜோதி – எல்லா
ஆனந்த வண்ணமும் ஆகிய ஜோதி. சிவசிவ 23

2049 பொய்யாத புண்ணிய ஜோதி – எல்லாப்
பொருளும் விளங்கப் புணர்த்திய ஜோதி
நையா தருள்செய்த ஜோதி – ஒரு
நானும்தா னும்ஒன்றாய் நண்ணிய ஜோதி. சிவசிவ 24

2050 கண்ணிற் கலந்தருள் ஜோதி – உளக்
கண்ணுயிர்க் கண்ணருட் கண்ணுமாம் ஜோதி
எண்ணிற்ப டாப்பெருஞ் ஜோதி – நான்
எண்ணிய வண்ணம் இயற்றிய ஜோதி. சிவசிவ 25

2051 விந்து ஒளிநடு ஜோதி – பர
விந்து ஒளிக்குள் விளங்கிய ஜோதி
நம்துயர் தீர்த்தருள் ஜோதி – பர
நாதாந்த நாட்டுக்கு நாயக ஜோதி. சிவசிவ 26

2052 தான்அன்றி ஒன்றிலா ஜோதி – என்னைத்
தன்மயம் ஆக்கிய சத்திய ஜோதி
நான்இன்று கண்டதோர் ஜோதி – தானே
நானாகி வாழ்ந்திட நல்கிய ஜோதி. சிவசிவ 27

2053 தன்னிகர் இல்லதோர் ஜோதி – சுத்த
சன்மார்க்க சங்கம் தழுவிய ஜோதி
என்னுள் நிறைந்தமெய் ஜோதி – என்னை
ஈன்றைந் தொழில்செய்என் றேவிய ஜோதி. சிவசிவ 28

2054 அச்சம் தவிர்த்தமெய் ஜோதி – என்னை
ஆட்கொண் டருளிய அம்பல ஜோதி
இச்சை எலாம்தந்த ஜோதி – உயிர்க்
கிங்குமங் கென்னாமல் எங்குமாம் ஜோதி. சிவசிவ 29

2055 காலையில் நான்கண்ட ஜோதி – எல்லாக்
காட்சியும் நான்காணக் காட்டிய ஜோதி
ஞாலமும் வானுமாம் ஜோதி – என்னுள்
நானாகித் தானாகி நண்ணிய ஜோதி. சிவசிவ 30

Koviloor Digital Library

2056 ஏகாந்த மாகிய ஜோதி – என்னுள்
என்றும் பிரியா திருக்கின்ற ஜோதி
சாகாத வரந்தந்த ஜோதி – என்னைத்
தானாக்கிக் கொண்டதோர் சத்திய ஜோதி. சிவசிவ 31

2057 சுத்த சிவமய ஜோதி – என்னை
ஜோதி மணிமுடி சூட்டிய ஜோதி
சத்திய மாம்பெருஞ் ஜோதி – நானே
தானாகி ஆளத் தயவுசெய் ஜோதி. சிவசிவ 32

சிவசிவ சிவசிவ ஜோதி – சிவ
சிவசிவ சிவசிவ சிவசிவ ஜோதி
சிவசிவ சிவசிவ ஜோதி.

திருச்சிற்றம்பலம்

119. ஜோதியுள் ஜோதி

ஆனந்தக் களிப்பு - 3

இராகம் – கமாஸ் – ஆதிதாளம்

திருச்சிற்றம்பலம்

பல்லவி

2058 ஜோதியுள் ஜோதியுள் ஜோதி – சுத்த
ஜோதி சிவஜோதி ஜோதியுள் ஜோதி
ஜோதியுள் ஜோதியுள் ஜோதி. 1

சரணங்கள்

2059 சிவமே பொருளென்று தேற்றி – என்னைச்
சிவவெளிக் கேறும் சிகரத்தில் ஏற்றிச்
சிவமாக்கிக் கொண்டது பாரீர் – திருச்
சிற்றம் பலத்தே திருநட ஜோதி. ஜோதி 1

2060 வித்தெல்லாம் ஒன்றென்று நாட்டி – அதில்
விளைவு பலபல வேறென்று காட்டிச்
சித்தெல்லாம் தந்தது பாரீர் – திருச்
சிற்றம் பலத்தே திருநட ஜோதி. ஜோதி 2

2061 சொல்வந்த அந்தங்கள் ஆறும் – ஒரு
சொல்லாலே ஆமென்றச் சொல்லாலே வீறும்
செல்வம் கொடுத்தது பாரீர் – திருச்
சிற்றம் பலத்தே திருநட ஜோதி. ஜோதி 3

Koviloor Digital Library

2062 தங்கோல் அளவெனக் கோதிச் – சுத்த
சமரச சத்திய சன்மார்க்க நீதிச்
செங்கோல் அளித்தது பாரீர் – திருச்
சிற்றம் பலத்தே திருநட ஜோதி. ஜோதி 4

2063 ஆபத்தை நீக்கி வளர்த்தே – சற்றும்
அசையாமல் அவியாமல் அடியேன் உளத்தே
தீபத்தை வைத்தது பாரீர் – திருச்
சிற்றம் பலத்தே திருநட ஜோதி. ஜோதி 5

2064 மெய்யொன்று சன்மார்க்க மேதான் – என்றும்
விளங்கப் படைப்பாதி மெய்த்தொழில் நீதான்
செய்யென்று தந்தது பாரீர் – திருச்
சிற்றம் பலத்தே திருநட ஜோதி. ஜோதி 6

2065 என்பால் வருபவர்க் கின்றே – அருள்
ஈகின்றேன் ஈகின்றேன் ஈகின்றேன் என்றே
தென்பால் இருந்தது பாரீர் – திருச்
சிற்றம் பலத்தே திருநட ஜோதி. ஜோதி 7

2066 துரியத் தலமூன்றின் மேலே – சுத்த
துரியப் பதியில் அதுஅத னாலே
தெரியத் தெரிவது பாரீர் – திருச்
சிற்றம் பலத்தே திருநட ஜோதி. ஜோதி 8

2067 பரைதூக்கிக் காட்டிய காலே – ஆதி
பரைஇவர்க் கப்பால்அப் பால்என்று மேலே
திரைதூக்கிக் காட்டுதல் பாரீர் – திருச்
சிற்றம் பலத்தே திருநட ஜோதி. ஜோதி 9

2068 தற்பர மேவடி வாகி – அது
தன்னைக் கடந்து தனிஉரு வாகிச்
சிற்பரத் துள்ளது பாரீர் – திருச்
சிற்றம் பலத்தே திருநட ஜோதி. ஜோதி 10

2069 நவவெளி நால்வகை யாதி – ஒரு
நடுவெளிக் குள்ளே நடத்திய நீதிச்
சிவவெளி யாம்இது பாரீர் – திருச்
சிற்றம் பலத்தே திருநட ஜோதி. ஜோதி 11

Koviloor Digital Library

2070 மேருவெற் புச்சியின் பாலே – நின்று
விளங்குமோர் தம்பத்தின் மேலுக்கு மேலே
சேருமோர் மேடைமேல் பாரீர் – திருச்
சிற்றம் பலத்தே திருநட ஜோதி. ஜோதி 12

2071 ஆரண வீதிக் கடையும் – சுத்த
ஆகம வீதிகள் அந்தக் கடையும்
சேர நடுக்கடை பாரீர் – திருச்
சிற்றம் பலத்தே திருநட ஜோதி. ஜோதி 13

2072 பாடல் மறைகளோர் கோடி – அருட்
பாதஉருவ சொரூபங்கள் பாடி
தேட இருந்தது பாரீர் – திருச்
சிற்றம் பலத்தே திருநட ஜோதி. ஜோதி 14

2073 நீடு சிவகாமங் கோடி – அருள்
நேருறப் பாடியும் ஆடியும் ஒடித்
தேட இருந்தது பாரீர் – திருச்
சிற்றம் பலத்தே திருநட ஜோதி. ஜோதி 15

2074 பத்தி நெறியில் செழித்தே – அன்பில்
பாடுமெய் யன்பர் பதியில் பழுத்தே
தித்தித் திருப்பது பாரீர் – திருச்
சிற்றம் பலத்தே திருநட ஜோதி. ஜோதி 16

2075 பித்தாடு மாயைக்கு மேலே – சுத்தப்
பிரம வெளியினில் பேரரு ளாலே
சித்தாடு கின்றது பாரீர் – திருச்
சிற்றம் பலத்தே திருநட ஜோதி. ஜோதி 17

2076 தருநெறி எல்லாம்உள் வாங்கும் – சுத்த
சன்மார்க்கம் என்றோர் தனிப்பேர்கொண் டோங்கும்
திருநெறிக் கேசென்று பாரீர் – திருச்
சிற்றம் பலத்தே திருநட ஜோதி. ஜோதி 18

2077 எம்பொருள் எம்பொருள் என்றே – சொல்லும்
எல்லாச் சமயத்துள் எல்லார்க்கும் ஒன்றே
செம்பொருள் என்பது பாரீர் – திருச்
சிற்றம் பலத்தே திருநட ஜோதி. ஜோதி 19

Koviloor Digital Library

2078 சைவ முதலாக நாட்டும் – பல
சமயங்கள் எல்லாம் தனித்தனிக் காட்டும்
தெய்வம் இதுவந்து பாரீர் – திருச்
சிற்றம் பலத்தே திருநட ஜோதி. ஜோதி 20

2079 எள்ளலில் வான்முதல் மண்ணும் – அமு
தெல்லாம் இதிலோர் இறையள வென்னும்
தெள்ளமு தாம்இது பாரீர் – திருச்
சிற்றம் பலத்தே திருநட ஜோதி. ஜோதி 21

2080 எத்தாலும் ஆகாதே அம்மா – என்றே
எல்லா உலகும் இயம்புதல் சும்மா
செத்தாரை மீட்பது பாரீர் – திருச்
சிற்றம் பலத்தே திருநட ஜோதி. ஜோதி 22

2081 பிறந்து பிறந்துழன் றேனை – என்றும்
பிறவா திறவாப் பெருமைதந் தூனைச்
சிறந்தொளிர் வித்தது பாரீர் – திருச்
சிற்றம் பலத்தே திருநட ஜோதி. ஜோதி 23

2082 வருவித்த வண்ணமும் நானே – இந்த
மாநிலத் தேசெயும் வண்ணமும் தானே
தெரிவித் தருளிற்றுப் பாரீர் – திருச்
சிற்றம் பலத்தே திருநட ஜோதி. ஜோதி 24

2083 பாரிடம் வானிட மற்றும் – இடம்
பற்றிய முத்தர்கள் சித்தர்கள் முற்றும்
சேரிட மாம்இது பாரீர் – திருச்
சிற்றம் பலத்தே திருநட ஜோதி. ஜோதி 25

2084 உய்பிள்ளை பற்பலர்ஆவல் – கொண்டே
உலகத் திருப்பஇங் கென்னைத்தன் ஏவல்
செய்பிள்ளை ஆக்கிற்றுப் பாரீர் – திருச்
சிற்றம் பலத்தே திருநட ஜோதி. ஜோதி 26

2085 உருவும் உணர்வும்செய் நன்றி – அறி
உளமும் எனக்கே உதவிய தன்றித்
திருவும் கொடுத்தது பாரீர் – திருச்
சிற்றம் பலத்தே திருநட ஜோதி. ஜோதி 27

Koviloor Digital Library

2086 எண்ணிய எண்ணங்கள் எல்லாம் – நான்
எண்ணிய வாறேஇனிதுதந் தென்னைத்
திண்ணியன் ஆக்கிற்றுப் பாரீர் – திருச்
சிற்றம் பலத்தே திருநட ஜோதி. ஜோதி 28

2087 பேருல கெல்லாம் மதிக்கத் – தன்
பிள்ளைஎன் றென்னைப் பெயரிட் டழைத்தே
சீருறச் செய்தது பாரீர் – திருச்
சிற்றம் பலத்தே திருநட ஜோதி. 29

ஜோதியுள் ஜோதியுள் ஜோதி – சுத்த
ஜோதி சிவஜோதி ஜோதியுள் ஜோதி
ஜோதியுள் ஜோதியுள் ஜோதி.

திருச்சிற்றம்பலம்

120. அஞ்சாதே நெஞ்சே அஞ்சாதே

நெஞ்சோடு கிளத்தல்

இராகம்–இந்துஸ்தான் காபி– சாப்பு தாளம்

திருச்சிற்றம்பலம்

பல்லவி

2088 அஞ்சா தே நெஞ்சே அஞ்சா தே
அஞ்சா தே நெஞ்சே அஞ்சா தே. 1

சரணங்கள்

2089 வஞ்சமி லாநாம் வருந்திடில் அப்போதே
அஞ்சலென் பார்இதோ அம்பலத் திருக்கின்றார் அஞ்சா தே 1

2090 துய்யர் அருட்பெருஞ் ஜோதியார் நம்முடை
அய்யர் இதோதிரு வம்பலத் திருக்கின்றார் அஞ்சா தே 2

2091 மண்ணில் நமையாண்ட வள்ளலார் நம்முடை
அண்ணல்இதோதிரு வம்பலத் திருக்கின்றார் அஞ்சா தே 3

2092 இப்புவி யில்நம்மை ஏன்றுகொண் டாண்டநம்
அப்பர் இதோதிரு வம்பலத் திருக்கின்றார் அஞ்சா தே 4

2093 சித்தர் எலாம்வல்ல தேவர் நமையாண்ட
அத்தர் இதோதிரு வம்பலத் திருக்கின்றார் அஞ்சா தே 5

2094 ஜோதி அருட்பெருஞ் ஜோதியார் நம்முடை
ஆதி இதோதிரு வம்பலத் திருக்கின்றார் அஞ்சா தே 6

Koviloor Digital Library

2095 தாண்டவ னார்எனைத் தான்தடுத் தாட்கொண்ட
ஆண்டவ னார் இதோ அம்பலத் திருக்கின்றார் அஞ்சா தே 7

2096 வன்பர் மனத்தை மதியா தவர்நம
தன்பர் இதோதிரு வம்பலத் திருக்கின்றார் அஞ்சா தே 8

2097 தெருளுடை யார்எலாஞ் செய்யவல் லார்திரு
அருளுடை யார்இதோ அம்பலத் திருக்கின்றார் அஞ்சா தே 9

2098 நம்மை ஆட்கொள்ள நடம்புரி வார்நம
தம்மை யினோடிதோ அம்பலத் திருக்கின்றார் அஞ்சா தே 10

2099 தன்னைஒப் பார்சிற் சபைநடஞ் செய்கின்றார்
அன்னைஒப் பார்இதோ அம்பலத் திருக்கின்றார் அஞ்சா தே 11

2100 பாடுகின் றார்க்கருட் பண்பினர் ஞானக்கூத்
தாடுகின் றார்இதோ அம்பலத் திருக்கின்றார் அஞ்சா தே 12

2101 காதரிப் பார்கட்குக் காட்டிக் கொடார்நம்மை
ஆதரிப் பார்இதோ அம்பலத் திருக்கின்றார் அஞ்சா தே 13

2102 நீளவல் லார்க்குமேல் நீளவல்லார் நம்மை
ஆளவல் லார்இதோ அம்பலத் திருக்கின்றார் அஞ்சா தே 14

2103 இன்புடை யார்நம் இதயத் தமர்ந்தபே
ரன்புடை யார்இதோ அம்பலத் திருக்கின்றார் அஞ்சா தே 15

2104 உபய பதத்தைநம் உச்சிமேற் சூட்டிய
அபயர் இதோதிரு வம்பலத் திருக்கின்றார் அஞ்சா தே 16

2105 வேண்டுகொண் டார்என்னை மேல்நிலைக் கேற்றியே
ஆண்டுகொண் டார்இதோ அம்பலத் திருக்கின்றார் அஞ்சா தே 17

2106 எச்சம்பெ றேல்மக னேஎன்றென் னுள்உற்ற
அச்சம் தவிர்த்தவர் அம்பலத் திருக்கின்றார் அஞ்சா தே 18

2107 நமுதன் முதற்பல நன்மையு மாம்ஞான
அமுதர் இதோதிரு வம்பலத் திருக்கின்றார் அஞ்சா தே 19

Koviloor Digital Library

2108 செடிகள் தவிர்த்தருட் செல்வ மளிக்கின்ற
அடிகள் இதோதிரு வம்பலத் திருக்கின்றார் அஞ்சா தே 20

2109 விரசுல கெல்லாம் விரித்தைந் தொழில்தரும்
அரசுடை யார்இதோ அம்பலத் திருக்கின்றார் அஞ்சா தே 21

2110 செறிவுடை யார்உளத் தேநடஞ் செய்கின்ற
அறிவுரு வார்இதோ அம்பலத் திருக்கின்றார் அஞ்சா தே 22

அஞ்சா தே நெஞ்சே அஞ்சா தே
அஞ்சா தே நெஞ்சே அஞ்சா தே.

திருச்சிற்றம்பலம்

121. இது நல்ல தருணம்

இராகம்–கல்யாணி–அடதாளம்

திருச்சிற்றம்பலம்

பல்லவி

2111 இதுநல்ல தருணம் – அருள்செய்ய
இதுநல்ல தருணம்.

அநு பல்லவி

2112 பொதுநல்ல நடம்வல்ல புண்ணிய ரேகேளும்
பொய்யேதும் சொல்கிலேன் மெய்யே புகல்கின்றேன். இதுநல்ல 1

சரணங்கள்

2113 மதித்த சமயமத வழக்கெல்லா மாய்ந்தது
வருணாச் சிரமம்எனு மயக்கமும் சாய்ந்தது
கொதித்த லோகாசாரக் கொதிப்பெல்லாம் ஒழிந்தது
கொலையும் களவுமற்றைப் புலையும் அழிந்தது. இதுநல்ல 1

2114 குறித்த வேதாகமக் கூச்சலும் அடங்கிற்று
குதித்த மனமுருட்டுக் குரங்கு முடங்கிற்று
வெறித்தவெவ் வினைகளும் வெந்து குலைந்தது
விந்தைசெய் கொடுமாயைச் சந்தையும் கலைந்தது.
இதுநல்ல 2

2115 கோபமும் காமமும் குடிகெட்டுப் போயிற்று
கொடியஓர் ஆங்காரம் பொடிப்பொடி ஆயிற்று
தாபமும் சோபமும் தான்தானே சென்றது
தத்துவம் எல்லாம்என் றன்வசம் நின்றது. இதுநல்ல 3

Koviloor Digital Library

2116 கரையா எனது மனக் கல்லும் கரைந்தது
கலந்து கொளற்கென் கருத்தும் விரைந்தது
புரையா நிலையில்என் புந்தியும் தங்கிற்று
பொய்படாக் காதல் ததும்பிமேல் பொங்கிற்று. இதுநல்ல 4

இதுநல்ல தருணம் – அருள்செய்ய
இதுநல்ல தருணம்.

திருச்சிற்றம்பலம்

122. என்ன புண்ணியம் செய்தேனோ

இராகம்–உசேனி–அடதாளம்

திருச்சிற்றம்பலம்

பல்லவி

2117 என்ன புண்ணியம் செய்தே னோ – அம் மாநான்
என்ன புண்ணியம் செய்தே னோ. 1

அநு பல்லவி

2118 மன்னர்நாதர் அம்பலவர் வந்தார்வந்தார் என்றுதிருச்
சின்னநாதம் என்னிரண்டு செவிகளினுள் சொல்கின்றதே.
என்ன 1

சரணங்கள்

2119 பொருள்நான் முகனுமாலும் தெருள்நான்ம றையுநாளும்
போற்றும்சிற் றம்பலத்தே ஏற்றும ணிவிளக்காய்
அருள்நாட கம்புரியும் கருணாநி தியர்உன்னை
ஆளவந்தார் வந்தார்என்றெக் காளநாதம் சொல்கின்றதே.
என்ன 1

2120 பாடியநல் லோர் தமக்கே நாடியதெல் லாம்அளிப்பார்
பத்திவலை யுட்படுவார் சத்தியர்நித் தியர்மன்றில்
ஆடியபொற் பாதர்வேதம் தேடியசிற் போதர்உன்னை
அணையவந்தார் வந்தார்என்றே இணையில்நாதம் சொல்கின்றதே.
என்ன 2

2121 எந்தரமுட் கொண்டஞான சுந்தரர்என் மணவாளர்
எல்லாம்செய் வல்லசித்தர் நல்லோர் உளத்தமர்ந்தார்
மந்திரமா மன்றில்இன்பம் தந்தநட ராசர் உன்னை
மருவவந்தார் வந்தார்என்று தெருவில்நாதம் சொல்கின்றதே.
என்ன 3

2122 ஓதிஎந்த விதத்தாலும் வேதியனும் தேர்வரியார்
ஓங்கார பஞ்சகத்தே பாங்காக நடிக்கின்றார்
ஆதியந்தம் காண்பரிய ஜோதிசுயஞ் ஜோதிஉன்னோடு
ஆடவந்தார் வந்தார்என்றே நாடிநாதம் சொல்கின்றதே. என்ன 4

Koviloor Digital Library

2123 அற்புதப்பே ரழகாளர் சொற்பதம் கடந்துநின்றார்
அன்பரெலாம் தொழுமன்றில் இன்பநடம் புரிகின்றார்
சிற்பரர்எல் லாமும்வல்ல தற்பரர் விரைந்திங்குன்னைச்
சேரவந்தார் வந்தார்என்றோங் காரநாதம் சொல்கின்றதே.
என்ன 5

2124 ஆரணர்நா ரணர்* எல்லாம் பூரணர்என் றேத்துகின்ற
ஐயர்திரு வம்பலவர் மெய்யர்எல்லாம் வல்லசித்தர்
காரணமும் காரியமும் தாரணிநீ யாகஉன்னைக்
காணவந்தார் வந்தார்என்றே வேணுநாதம் சொல்கின்றதே.
என்ன 6

2125 பாகார்மொழி யாள்சிவ காம வல்லிநாளும்
பார்த்தாட மணிமன்றில் கூத்தாடு கின்றசித்தர்
வாகாஉனக்கே என்றும் சாகா வரங்கொடுக்க
வலியவந்தார் வந்தார்என்றே வலியநாதம் சொல்கின்றதே.
என்ன 7

என்ன புண்ணியம் செய்தே னோ —அம் மாநான்
என்ன புண்ணிம் செய்தே னோ.
திருச்சிற்றம்பலம்

123. வருவார் அழைத்து வாடி

சிந்து
இராகம் – பியாகடை – அடதாளசாப்பு
திருசிற்றம்பலம்

பல்லவி

2126 வருவார ழைத்துவாடி வடலூர் வடதிசைக்கே
வந்தாற் பெறலாம்நல்ல வரமே. 1

அநுபல்லவி

2127 திருவார்பொன் னம்பலத்தே செழிக்குங்குஞ் சிதபாதர்
சிவசிதம் பரபோதர் தெய்வச் சபாநாதர் வருவார் 1

சரணங்கள்

2128 சிந்தை களிக்கக்கண்டு சிவானந்த மதுவுண்டு
தெளிந்தோர்எல் லாரும்தொண்டு செய்யப் பவுரிகொண்டு
இந்த வெளியில்நட மிடத்துணிந் தீரேஅங்கே
இதைவிடப் பெருவெளி இருக்குதென் றால்இங்கே. வருவார் 1

* காரணர் – வே.ப.மு. பதிப்பு

Koviloor Digital Library

2129 இடுக்கி லாமல்இருக்க இடமுண்டு நடஞ்செய்ய
இங்கம் பலம்ஒன்றங்கே எட்டம் பலம்உண்டைய
ஒடுக்கில் இருப்பதென்ன உளவுகண்டு கொள்வீர் என்னால்
உண்மைஇது வஞ்சமல்ல உம்மேல் ஆணை என்றுசொன்னால்
வருவார் 2

2130 மெல்லியல் சிவகாம வல்லி யுடன்களித்து
விளையா டவும்எங்கள் வினைஓ டவும்ஒளித்து
எல்லையில் இன்பந்தரவும் நல்லசம யந்தானிது
இங்கும் அங்கும் நடமாடி இருக்கலாம் என்றபோது

வருவார ழைத்துவாடி வடலூர் வடதிசைக்கே
வந்தாற் பெறலாம்நல்ல வரமே.
திருச்சிற்றம்பலம்

124. பெருவழக்கு

சிந்து
இராகம்—பைரவி—ரூபக தாளம்
திருச்சிற்றம்பலம்

பல்லவி

2131 இவர்க்கும் எனக்கும்பெரு வழக்கிருக் கின்றது அது*
என்றும் தீரா வழக்குக் காண டி. 1

அநு பல்லவி

2132 எவர்க்கும் பெரியவர்பொன் னம்பலத் தேநடம்
இட்டார் எனக்குமாலை இட்டார் இதோவந்தார். இவர்க்கும் 1

சரணங்கள்

2133 அன்றிதோ வருகின்றேன் என்று போனவர்அங்கே
யார்செய்த தடையாலோ இருந்தார்என் கையிற்சங்கை
இன்றுதம் கையிற்கொண்டே வந்துநிற் கின்றார்இங்கே
இந்தக் கதவைமூடு இவர்போவ தினிஎங்கே. இவர்க்கும் 1

2134 அவரவர் உலகத்தே அறிந்தலர் தூற்றப்பட்டேன்
அன்றுபோ னவர்இன்று வந்துநிற் கின்றார்கெட்டேன்
இவர்சூதை அறியாதே முன்னம் ஏமாந்துவிட்டேன்
இந்தக் கதவைமூடு இனிஎங்கும் போகவொட்டேன். இவர்க்கும் 2

* இருக்கின்றது — வே.ப.மு. பதிப்பு

Koviloor Digital Library

2135 சின்ன வயதில்என்னைச் சேர்ந்தார்புன் னகையோடு
சென்றார் தயவால்இன்று வந்தார் இவர்க்கார்ஈடு
என்னைவிட் டினிஇவர் எப்படிப் போவார்ஓடு
இந்தக் கதவைமூடு இரட்டைத்தாட் கோலைப்போடு. 3

இவர்க்கும் எனக்கும்பெரு வழக்கிருக் கின்றதது
என்றும் தீரா வழக்குக் காண டி.

திருச்சிற்றம்பலம்

125. ஆடிய பாதம்

சிந்து

இராகம் – தன்யாசி – ரூபக தாளம்

திருச்சிற்றம்பலம்

பல்லவி

2136 ஆடிய பாதமன் றாடிய பாதம்
ஆடிய பாதம்நின் றாடிய பாதம். 1

கண்ணிகள்

2137 பாடிய வேதங்கள் தேடிய பாதம்
பத்திசெய் பத்தர்க்குத் தித்திக்கும் பாதம்
நாடிய மாதவர்* நேடிய பாதம்
நாதாந்த நாட்டுக்கு நாயக பாதம். ஆடிய 1

2138 தீராத வல்வினை தீர்க்கின்ற பாதம்
தெய்வங்கள் எல்லாந் தெரிசிக்கும் பாதம்
வாரா வரவாகி வந்தபொற் பாதம்
வஞ்ச மனத்தில் வசியாத பாதம். ஆடிய 2

2139 ஆரா அமுதாகி அண்ணிக்கும் பாதம்
அன்பர் உளத்தே அமர்ந்தருள் பாதம்
நாரா யணன்விழி நண்ணிய பாதம்
நான்புனை பாடல் நயந்தபொற் பாதம். ஆடிய 3

2140 நல்லவர் எல்லாம் நயக்கின்ற பாதம்
நாத முடிவில் நடிக்கின்ற பாதம்
வல்லவர் சொல்லெல்லாம் வல்லபொற் பாதம்
மந்திர யந்திர தந்திர பாதம். ஆடிய 4

---

* மாதவன் – ஆ.பா.பதிப்பு

Koviloor Digital Library

2141 எச்சம யத்தும் இலங்கிய பாதம்
எள்ளுக்குள் எண்ணெய்போல் எங்குமாம் பாதம்
அச்சம் தவிர்த்தென்னை ஆட்கொண்ட பாதம்
ஆனந்த நாட்டுக் கதிபதி பாதம். ஆடிய 5

2142 தேவர்கள் எல்லாரும் சிந்திக்கும் பாதம்
தெள்ளமு தாய்உளந் தித்திக்கும் பாதம்
மூவரும் காணா முழுமுதற் பாதம்
முப்பாழுக் கப்பால் முளைத்தபொற் பாதம். ஆடிய 6

2143 துரிய வெளிக்கே உரியபொற் பாதம்
சுகமய மாகிய சுந்தரப் பாதம்
பெரிய பொருளென்று பேசும்பொற் பாதம்
பேறெல்லாந் தந்த பெரும்புகழ்ப் பாதம். ஆடிய 7

2144 சாகா வரந்தந்த தாரகப் பாதம்
சச்சிதா னந்த சதோதய பாதம்
தேகாதி எல்லாம் சிருட்டிக்கும் பாதம்
திதிமுதல் ஐந்தொழில் செய்கின்ற பாதம். ஆடிய 8

2145 ஓங்கார பீடத் தொளிர்கின்ற பாதம்
ஒன்றாய் இரண்டாகி ஓங்கிய பாதம்
தூங்காத தூக்கத்தில் தூக்கிய பாதம்
துரியத்தில் ஊன்றித் துலுங்கிய பாதம். ஆடிய 9

2146 ஐவண்ண முங்கொண்ட அற்புதப் பாதம்
அபயர் எல்லார்க்கும் அமுதான பாதம்
கைவண்ண நெல்லிக் கனியாகும் பாதம்
கண்ணும் கருத்தும் கலந்தபொற் பாதம். ஆடிய 10

2147 ஆருயிர்க் காதாரம் ஆகிய பாதம்
அண்ட பிண்டங்கள் அளிக்கின்ற பாதம்
சாருயிர்க் கின்பம் தருகின்ற பாதம்
சத்திய ஞான தயாநிதி பாதம். ஆடிய 11

2148 தாங்கி எனைப் பெற்ற தாயாகும் பாதம்
தந்தையு மாகித் தயவுசெய் பாதம்
ஓங்கிஎன் னுள்ளே உறைகின்ற பாதம்
உண்மை விளங்க உரைத்தபொற் பாதம். ஆடிய 12

---

* ஐயர் – ச.மு.க.

Koviloor Digital Library

2149 எண்ணிய வாறே எனக்கருள் பாதம்
இறவா நிலையில் இருத்திய பாதம்
புண்ணியர் கையுள் பொருளாகும் பாதம்
பொய்யர் உளத்தில் பொருந்தாத பாதம். ஆடிய 13

2150 ஆறந்தத் துள்ளும் அமர்ந்தபொற் பாதம்
ஆதி அனாதியும் ஆகிய பாதம்
மாறந்தம் இல்லாஎன் வாழ்முதற் பாதம்
மண்முதல் ஐந்தாய் வழங்கிய பாதம். ஆடிய 14

2151 அருட்பெருஞ் ஜோதிய தாகிய பாதம்
அம்மையும் அப்பனும் ஆகிய பாதம்
பொருட்பெரும் போகம் புணர்த்திய பாதம்
பொன்வண்ண மாகிய புண்ணிய பாதம். ஆடிய 15

2152 நாரண னாதியர் நாடரும் பாதம்
நான்தவத் தாற்பெற்ற நற்றுணைப் பாதம்
ஆரணம் ஆகமம் போற்றிய பாதம்
ஆசைவிட் டார்க்கே அணிமையாம் பாதம். ஆடிய 16

ஆடிய பாதமன் றாடிய பாதம்
ஆடிய பாதம்நின் றாடிய பாதம்
திருச்சிற்றம்பலம்

126. அபயம் அபயம் அபயம்

இராகம்—தோடி—ஆதிதாளம்
திருச்சிற்றம்பலம்
பல்லவி

2153 அபயம் அபயம் அபயம் அபயம் அபயம் 1

சரணங்கள்

2154 உபயம தாய்என் உறவாய்ச் சிதம்பரச்
சபையில் நடஞ்செயும் சாமி பதத்திற்கே அபயம் 1

2155 எம்பலத் தால்எம்மை ஏன்றுகொ ளத்தில்லை
அம்பலத் தாடும்எம் ஐயர் பதத்திற்கே அபயம் 2

2156 தவசிதம் பரமாகித் தன்மய மாய்ச்செயும்
சிவசிதம் பரமகா தேவர் பதத்திற்கே அபயம் 3

Koviloor Digital Library

2157 ஒன்றும் பதத்திற் குயர்பொரு ளாகியே
என்றும்என் உள்ளத் தினிக்கும் பதத்திற்கே அபயம் 4

2158 வானந்த மாந்தில்லை மன்றிடை என்றுநின்று
ஆனந்தத் தாண்டவ மாடும் பதத்திற்கே அபயம் 5

2159 நாரா யணனொடு நான்முக னாதியர்
பாரா யணம்செயும் பதும பதத்திற்கே அபயம் 6

2160 அன்பர் செயும்பிழை ஆயிர மும்பொறுத்து
இன்ப மளிக்கும்நம் ஈசர் பதத்திற்கே அபயம் 7

2161 குற்றம் செயினும் குணமாகக் கொண்டுநம்
அற்றம் தவிர்க்கும்நம் அப்பர் பதத்திற்கே அபயம் 8

2162 செம்பொருள் ஆகிச் சிதம்பரத் தேஎன்றும்
நம்பொருள் ஆன நடேசர் பதத்திற்கே அபயம் 9

2163 வெச்சென்ற மாயை வினையாதி யால்வந்த
அச்சம் தவிர்க்குநம் ஐயர் பதத்திற்கே அபயம் 10

2164 எண்ணிய எண்ணங்கள் எல்லா முடிக்குநம்
புண்ணிய னார்தெய்வப் பொன்னடிப் போதுக்கே அபயம் 11

2165 மன்னம் பரத்தே வடிவில் வடிவாகிப்
பொன்னம் பலத்தாடும் பொன்னடிப் போதுக்கே அபயம் 12

2166 நாதமுடிவில் நடம்புரிந் தன்பர்க்குப்
போதம் அளிக்கின்ற பொன்னடிப் போதுக்கே அபயம் 13

2167 உச்சி தாழ்கின்ற உறவோர் உறவான
சச்சி தானந்தத் தனிநடப் போதுக்கே அபயம் 14

2168 சித்தமும் உள்ளமும் தித்தித் தினிக்கின்ற
புத்தமு தாகிய பொன்னடிப் போதுக்கே அபயம் 15

அபயம் அபயம் அபயம் அபயம்

திருச்சிற்றம்பலம்

Koviloor Digital Library

127. அற்புதம் அற்புதமே

இராகம்–தர்பார் –ரூபக தாளம்

திருச்சிற்றம்பலம்

பல்லவி

2169 அற்புதம் அற்புத மே – அருள்
அற்புதம் அற்புத மே அற்புதம் 1

சரணங்கள்

2170 சிற்பதம் பொற்பதஞ் சீரே சிறந்தது
சித்தாடு கின்ற திருநாள் பிறந்தது
கற்பத நெஞ்சக் கரிசு துறந்தது
கற்றபொய்ந் நூல்கள் கணத்தே மறந்தது அற்புதம் 1

2171 செத்தார் எழுகின்ற திருநாள் அடுத்தது
சிவநெறி ஒன்றே எங்கும்தலை எடுத்தது
இத்தா ரணிமுதல் வானும் உடுத்தது
இறவா வரந்தான் எனக்குக் கொடுத்தது அற்புதம் 2

2172 ஆனந்த நாடகம்ஆடுதல் சார்ந்தது
அடுத்த தருணம் இதுவாக நேர்ந்தது
ஈனந்த மாயை இருள்வினை சோர்ந்தது
என்னருட் ஜோதிஎன் உள்ளத்தில் ஆர்ந்தது அற்புதம் 3

2173 சத்திய ஞான சபைஎன்னுள் கண்டனன்
சன்மார்க்க சித்தியை நான்பெற்றுக் கொண்டனன்
நித்திய ஞான நிறையமு துண்டனன்
நிந்தை உலகியற் சந்தையை விண்டனன் அற்புதம் 4

2174 வஞ்சகர் அஞ்சினர் வாய்மூடிச் சென்றனர்
வந்து திரும்பவும் வாயிலில் நின்றனர்
தஞ்சம் எமக்கருள் சாமிநீ என்றனர்
சன்மார்க்க சங்கத் தவர்களே வென்றனர் அற்புதம் 5

2175 புறங்கூறி னாரெல்லாம் புல்லெனப் போயினர்
பொற்படிக் கீழ்ப்புற மீளவு மேயினர்
மறங்கூறி னோம்என்செய் வோம்என்று – கூயினர்
வாழிய என்றசொல் வாயினர் ஆயினர் அற்புதம் 6

Koviloor Digital Library

2176 வெவ்வினைக் காடெலாம் வேரோடு வெந்தது
வெய்ய மாமாயை விரிவற்று நொந்தது
செவ்விய ஞானம் சிறப்புற வந்தது
சித்திகள் யாவையும் செய்திடத் தந்தது அற்புதம் 7

2177 சாதி சமயச் சழக்கெலாம் அற்றது
சன்மார்க்க ஞான சபைநிலை பெற்றது
மேதினியிற் சாகா வித்தையைக் கற்றது
மெய்யருட் ஜோதிஎன் உள்ளத்தில் உற்றது அற்புதம் 8

அற்புதம் அற்புத மே – அருள்
அற்புதம் அற்புத மே.
திருச்சிற்றம்பலம்

128. ஆணிப்பொன்னம்பலக் காட்சி

காட்சிக்கண்ணி

இராகம்–எதுகுலகாம்போதி–அடதாள உசி
திருச்சிற்றம்பலம்
பல்லவி

2178 ஆணிப்பொன் னம்பலத் தேகண்ட காட்சிகள்
அற்புதக் காட்சிய டி – அம்மா
அற்புதக் காட்சிய டி. 1

2179 ஜோதி மலைஒன்று தோன்றிற் றதில்ஒரு
வீதிஉண் டாச்சுத டி – அம்மா
வீதிஉண் டாச்சுத டி. ஆணி 1

2180 வீதியில் சென்றேன்அவ் வீதி நடுஒரு
மேடை இருந்தத டி – அம்மா
மேடை இருந்தத டி. ஆணி 2

2181 மேடைமேல் ஏறினேன் மேடைமேல் அங்கொரு
கூடம் இருந்தத டி – அம்மா
கூடம் இருந்தத டி. ஆணி 3

2182 கூடத்தை நாடஅக் கூடமேல் ஏழ்நிலை
மாடம் இருந்தத டி – அம்மா
மாடம் இருந்தத டி. ஆணி 4

Koviloor Digital Library

2183 ஏழ்நிலைக் குள்ளும் இருந்த அதிசயம்
என்னென்று சொல்வன டி – அம்மா
என்னென்று சொல்வன டி. ஆணி 5

2184 ஓர்நிலை தன்னில் ஒளிர்முத்து வெண்மணி
சீர்நீலம் ஆச்சுத டி – அம்மா
சீர்நீலம் ஆச்சுத டி. ஆணி 6

2185 பாரோர் நிலையில் கருநீலம் செய்ய
பவளம தாச்சுத டி – அம்மா
பவளம தாச்சுத டி. ஆணி 7

2186 மற்றோர் நிலையில் மரகதப் பச்சைசெம்
மாணிக்கம் ஆச்சுத டி – அம்மா
மாணிக்கம் ஆச்சுத டி. ஆணி 8

2187 பின்னோர் நிலையில் பெருமுத்து வச்சிரப்
பேர்மணி ஆச்சுத டி – அம்மா
பேர்மணி ஆச்சுத டி. ஆணி 9

2188 வேறோர் நிலையில் மிகும்பவ ளத்திரள்
வெண்மணி ஆச்சுத டி – அம்மா
வெண்மணி ஆச்சுத டி. ஆணி 10

2189 புகலோர் நிலையில் பொருந்திய பன்மணி
பொன்மணி ஆச்சுத டி – அம்மா
பொன்மணி ஆச்சுத டி. ஆணி 11

2190 பதியோர் நிலையில் பகர்மணி எல்லாம்
படிகம தாச்சுத டி – அம்மா
படிகம தாச்சுத டி. ஆணி 12

2191 ஏழ்நிலை மேலே இருந்ததோர் தம்பம்
இசைந்தபொற் றம்பம டி – அம்மா
இசைந்தபொற் றம்பம டி. ஆணி 13

2192 பொற்றம்பம் கண்டேறும் போதுநான் கண்ட
புதுமைஎன் சொல்வன டி – அம்மா
புதுமைஎன் சொல்வன டி. ஆணி 14

Koviloor Digital Library

2193 ஏறும்போ தங்கே எதிர்ந்த வகைசொல
என்னள வல்லவ டி – அம்மா
என்னள வல்லவ டி. ஆணி 15

2194 ஆங்காங்கே சத்திகள் ஆயிரம் ஆயிரம்
ஆகவந் தார்கள டி – அம்மா
ஆகவந் தார்கள டி. ஆணி 16

2195 வந்து மயக்க மயங்காமல் நான் அருள்
வல்லபம் பெற்றேன டி – அம்மா
வல்லபம் பெற்றேன டி. ஆணி 17

2196 வல்லபத் தால்அந்த மாதம்பத் தேறி
மணிமுடி கண்டேன டி – அம்மா
மணிமுடி கண்டேன டி. ஆணி 18

2197 மணிமுடி மேலோர் கொடுமுடி நின்றது
மற்றது கண்டேன டி – அம்மா
மற்றது கண்டேன டி. ஆணி 19

2198 கொடுமுடி மேல்ஆயி ரத்தெட்டு மாற்றுப்பொற்
கோயில் இருந்தத டி – அம்மா
கோயில் இருந்தத டி. ஆணி 20

2199 கோயிலைக் கண்டங்கே கோபுர வாயிலில்
கூசாது சென்றேன டி – அம்மா
கூசாது சென்றேன டி. ஆணி 21

2200 கோபுர வாயிலுள் சத்திகள் சத்தர்கள்
கோடிபல் கோடிய டி – அம்மா
கோடிபல் கோடிய டி. ஆணி 22

2201 ஆங்கவர் வண்ணம்வெள் வண்ணம்செவ் வண்ணமுன்
ஐவண்ணம் ஆகும டி – அம்மா
ஐவண்ணம் ஆகும டி. ஆணி 23

2202 அங்கவ ரெல்லாம்இங் கார்இவர் என்னவும்
அப்பாலே சென்றேன டி – அம்மா
அப்பாலே சென்றேன டி. ஆணி 24

Koviloor Digital Library

2203 அப்பாலே சென்றேன்அங் கோர்திரு வாயிலில்
ஐவர் இருந்தார டி – அம்மா
ஐவர் இருந்தார டி. ஆணி 25

2204 மற்றவர் நின்று வழிகாட்ட மேலோர்
மணிவாயில் உற்றேன டி – அம்மா
மணிவாயில் உற்றேன டி. ஆணி 26

2205 எண்ணும்அவ் வாயிலில் பெண்ணோ டாணாக
இருவர் இருந்தார டி – அம்மா
இருவர் இருந்தார டி. ஆணி 27

2206 அங்கவர் காட்ட அணுக்கத் திருவாயில்
அன்பொடு கண்டேன டி – அம்மா
அன்பொடு கண்டேன டி. ஆணி 28

2207 அத்திரு வாயிலில் ஆனந்த வல்லிஎன்
அம்மை இருந்தாள டி – அம்மா
அம்மை இருந்தாள டி. ஆணி 29

2208 அம்மையைக் கண்டேன் அவளருள் கொண்டேன்
அமுதமும் உண்டேன டி – அம்மா
அமுதமும் உண்டேன டி. ஆணி 30

2209 தாங்கும் அவளரு ளாலே நடராஜர்
சந்நிதி கண்டேன டி – அம்மா
சந்நிதி கண்டேன டி. ஆணி 31

2210 சந்நிதி யில்சென்று நான்பெற்ற பேறது
சாமி அறிவார டி – அம்மா
சாமி அறிவார டி. ஆணி 32

ஆணிப்பொன் னம்பலத் தேகண்ட காட்சிகள்
அற்புதக் காட்சிய டி – அம்மா
அற்புதக் காட்சிய டி.

திருச்சிற்றம்பலம்

Koviloor Digital Library

129. அக்கச்சி

சிந்து

இராகம்—எதுகுலகாம்போதி—அடதாளம்

திருச்சிற்றம்பலம்

2211 வானத்தின் மீது மயிலாடக் கண்டேன்
மயில்குயில் ஆச்சுத டி — அக்கச்சி
மயில்குயில் ஆச்சுத டி. 1

2212 துள்ளலை விட்டுத் தொடங்கினேன் மன்றாடும்
வள்ளலைக் கண்டேன டி — அக்கச்சி
வள்ளலைக் கண்டேன டி. 2

2213 சாதி சமயச் சழக்கைவிட் டேன்அருட்
ஜோதியைக் கண்டேன டி — அக்கச்சி
ஜோதியைக் கண்டேன டி. 3

2214 பொய்யை ஒழித்துப் புறப்பட்டேன் மன்றாடும்
ஐயரைக் கண்டேன டி — அக்கச்சி
ஐயரைக் கண்டேன டி. 4

திருச்சிற்றம்பலம்

130. ஊதூது சங்கே

தாழிசை

இராகம்—சஹானா—அடதாளம்

திருச்சிற்றம்பலம்

பல்லவி

2215 ஊதூது சங்கே ஊதூது சங்கே
ஊதூது சங்கே ஊதூது சங்கே. ஊதூது

சரணங்கள்

2216 கைவிட மாட்டான்என்று ஊதூது சங்கே
கனக சபையான்என்று ஊதூது சங்கே
பொய்விடச் செய்தான்என்று ஊதூது சங்கே
பூசைப லித்ததென்று ஊதூது சங்கே 1

2217 தூக்கம் தொலைத்தான்என்று ஊதூது சங்கே
துன்பம் தவிர்த்தான் என்று ஊதூது சங்கே
ஏக்கம் கெடுத்தான்என்று ஊதூது சங்கே
ஏம சபையான்என்று ஊதூது சங்கே 2

Koviloor Digital Library

2218 பொன்னடி தந்தான் என்று ஊதூது சங்கே
பொன்னம் பலத்தான் என்று ஊதூது சங்கே
இன்னல் அறுத்தான் என்று ஊதூது சங்கே
என்னுள் அமர்ந்தான் என்று ஊதூது சங்கே 3

2219 அச்சம் தவிர்த்தான்என்று ஊதூது சங்கே
அம்பல வாணன்என்று ஊதூது சங்கே
இச்சை அளித்தான்என்று ஊதூது சங்கே
இன்பம் கொடுத்தான் என்று ஊதூது சங்கே 4

2220 என்உயிர் காத்தான்என்று ஊதூது சங்கே
இன்பம் பலித்ததென்று ஊதூது சங்கே
பொன்உருத் தந்தான்என்று ஊதூது சங்கே
பொற்சபை அப்பன்என்று ஊதூது சங்கே 5

2221 சிவமாக்கிக் கொண்டான்என்று ஊதூது சங்கே
சிற்றம் பலத்தான்என்று ஊதூது சங்கே
நவநோக் களித்தான் என்று ஊதூது சங்கே
நான்அவன் ஆனேன்என்று ஊதூது சங்கே 6

2222 நாத முடியான்என்று ஊதூது சங்கே
ஞான சபையான்என்று ஊதூது சங்கே
பாத மளித்தான்என்று ஊதூது சங்கே
பலித்தது பூசைஎன்று ஊதூது சங்கே 7

2223 தெள்ளமு தானான்என்று ஊதூது சங்கே
சிற்சபை அப்பன்என்று ஊதூது சங்கே
உள்ளம் உவந்தாம்என்று ஊதூது சங்கே
உள்ளது படைத்தான்என்று ஊதூது சங்கே 8

2224 என்னறி வானான்என்று ஊதூது சங்கே
எல்லாம்செய் வல்லான்என்று ஊதூது சங்கே
செந்நிலை தந்தான்என்று ஊதூது சங்கே
சிற்சபை அப்பன்என்று ஊதூது சங்கே 9

2225 இறவாமை ஈந்தான் என்று ஊதூது சங்கே
எண்ணம் பலித்ததென்று ஊதூது சங்கே
திறமே அளித்தான்என்று ஊதூது சங்கே
சிற்றம் பலத்தான்என்று ஊதூது சங்கே 10

Koviloor Digital Library

2226 கரவு தவிர்ந்ததென்று ஊதூது சங்கே
கருணை கிடைத்ததென்று ஊதூது சங்கே
இரவு விடிந்ததென்று ஊதூது சங்கே
எண்ணம் பலித்ததென்று ஊதூது சங்கே 11

2227 எல்லாம்செய் வல்லான்என்று ஊதூது சங்கே
எல்லார்க்கும் நல்லான்என்று ஊதூது சங்கே
எல்லாம் உடையான் என்று ஊதூது சங்கே
எல்லாமும் ஆனான் என்று ஊதூது சங்கே 12

2228 கருணா நிதியனெ ன்று ஊதூது சங்கே
கடவுள் அவனேஎன்று ஊதூது சங்கே
அருள்நா டகத்தான் என்று ஊதூது சங்கே
அம்பல ஜோதிஎன்று ஊதூது சங்கே 13

2229 தன்னிகர் இல்லான்என்று ஊதூது சங்கே
தலைவன் அவனேஎன்று ஊதூது சங்கே
பொன்னியல் வண்ணன்என்று ஊதூது சங்கே
பொதுநடம் செய்வான் என்று ஊதூது சங்கே 14

2230 ஆனந்த நாதன்என்று ஊதூது சங்கே
அருளுடை அப்பன்என்று ஊதூது சங்கே
தானந்தம் இல்லான்என்று ஊதூது சங்கே
தத்துவ ஜோதிஎன்று ஊதூது சங்கே 15

2231 பொய்விட் டகன்றேன்என்று ஊதூது சங்கே
புண்ணியன் ஆனேன்என்று ஊதூது சங்கே
மெய்தொட்டு நின்றேன்என்று ஊதூது சங்கே
மேல்வெளி கண்டேன்என்று ஊதூது சங்கே 16

திருச்சிற்றம்பலம்

Koviloor Digital Library

131. சின்னம்பிடி

தாழிசை
இராகம்—தன்யாசி—ஆதிதாளம்
திருச்சிற்றம்பலம்

2232 அம்பலவர் வந்தார்என்று சின்னம்பிடி
அற்புதம்செய் கின்றார்என்று சின்னம்பிடி
செம்பலன் அளித்தார்என்று சின்னம்பிடி
சித்திநிலை பெற்றதென்று சின்னம்பிடி 1

2233 சிற்சபையைக் கண்டோம்என்று சின்னம்பிடி
சித்திகள்செய் கின்றோம்என்று சின்னம்பிடி
பொற்சபை புகுந்தோம்என்று சின்னம்பிடி
புந்திமகிழ் கின்றோம்என்று சின்னம்பிடி 2

2234 ஞானசித்தி புரம்என்று சின்னம்பிடி
நாடகம்செய் இடம்என்று சின்னம்பிடி
ஆனசித்தி செய்வோம்என்று சின்னம்பிடி
அருட்ஜோதி பெற்றோம்என்று சின்னம்பிடி 3

2235 கொடிகட்டிக் கொண்டோம்என்று சின்னம்பிடி
கூத்தாடு கின்றோம்என்று சின்னம்பிடி
அடிமுடியைக் கண்டோம்என்று சின்னம்பிடி
அருளமுதம் உண்டோம்என்று சின்னம்பிடி 4

2236 அப்பர்வரு கின்றார்என்று சின்னம்பிடி
அற்புதம்செய் வதற்கென்று சின்னம்பிடி
செப்பநிலை பெற்றதென்று சின்னம்பிடி
சித்திபுரம் இடமென்று சின்னம்பிடி 5

2237 தானேநான் ஆனேன்என்று சின்னம்பிடி
சத்தியம்சத் தியம்என்று சின்னம்பிடி
ஊனே புகுந்ததென்று சின்னம்பிடி
ஒளிவண்ணம் ஆனதென்று சின்னம்பிடி 6

2238 வேகாத கால்உணர்ந்து சின்னம்பிடி
வேகாத நடுத்தெரிந்து சின்னம்பிடி
சாகாத தலைஅறிந்து சின்னம்பிடி
சாகாத கல்விகற்றுச் சின்னம்பிடி 7

Koviloor Digital Library

2239 மீதான நிலைஏறிச் சின்னம்பிடி
வெட்டவெளி நடுநின்று சின்னம்பிடி
வேதாக மம்கடந்து சின்னம்பிடி
வேதாந்தச் சித்தாந்த சின்னம்படி 8

2240 பன்மார்க்க மும்கடந்து சின்னம்பிடி
பன்னிரண்டின் மீதுநின்று சின்னம்பிடி
சன்மார்க்க மார்க்கம்என்று சின்னம்பிடி
சத்தியம்செய் கின்றோம்என்று சின்னம்பிடி 9

2241 சித்தாடு கின்றார்என்று சின்னம்பிடி
செத்தார் எழுவார்என்று சின்னம்பிடி
இத்தா ரணியில்என்று சின்னம்பிடி
இதுவே தருணம்என்று சின்னம்பிடி 10

திருச்சிற்றம்பலம்

132. கண்புருவப் பூட்டு

தாழிசை
இராகம்—சஹானா—ரூபகதாளம்
திருச்சிற்றம்பலம்

2242 கையறவி லாதுநடுக் கண்புருவப் பூட்டு
கண்டுகளி கொண்டுதிறந் துண்டுநடு நாட்டு
ஐயர்மிக உய்யும்வகை அப்பர்விளை யாட்டு
ஆடுவதென் றேமறைகள் பாடுவது பாட்டு. 1

2243 சிற்சபையும் பொற்சபையும் சொந்தமென தாச்சு
தேவர்களும் மூவர்களும் பேசுவதென் பேச்சு
இச்சமய வாழ்வில்எனக் கென்னைஇனி ஏச்சு
என்பிறவித் துன்பமெலாம் இன்றோடே போச்சு. 2

2244 ஐயர்அருட் ஜோதியர சாட்சிஎன தாச்சு
ஆரணமும் ஆகமமும் பேசுவதென் பேச்சு
எய்யுலக வாழ்வில்எனக் கென்னைஇனி ஏச்சு
என்பிறவித் துன்பமெலாம் இன்றோடே போச்சு. 3

2245 ஈசன்அரு ளால்கடலில் ஏற்றதொரு ஓடம்
ஏறிக்கரை ஏறினேன் இருந்ததொரு மாடம்
தேசுறும்அம் மாடநடுத் தெய்வமணி பீடம்
தீபஒளி கண்டவுடன் சேர்ந்ததுசந் தோடம். 4

Koviloor Digital Library

2246 மேருமலை உச்சியில்வி ளங்குகம்ப நீட்சி
மேவும்அதன் மேல்உலகில் வீறுமர சாட்சி
சேரும்அதில் கண்டபல காட்சிகள்கண் காட்சி
செப்பல்அரி தாம்இதற்கென் அப்பன்அருள் சாட்சி. 5

2247 துரியமலை மேல்உளதோர் ஜோதிவள நாடு
தோன்றும்அதில் ஐயர்நடம் செய்யுமணி வீடு
தெரியும்அது கண்டவர்கள் காணில்உயி ரோடு
செத்தவர் எழுவார்என்று கைத்தாளம் போடு. 6

2248 சொல்லால் அளப்பரிய ஜோதிவரை மீது
தூயதுரி யப்பதியில் நேயமறை ஓது
எல்லாம்செய் வல்லசித்தர் தம்மைஉறும் போது
இறந்தார் எழுவாரென்று புறந்தாரை ஊது. 7

2249 சிற்பொதுவும் பொற்பொதுவும் நான்அறிய லாச்சு
சித்தர்களும் முத்தர்களும் பேசுவதென் பேச்சு
இப்பெரிய இவ்வுலகில் என்னைஇனி ஏச்சு
என்பிறவித் துன்பமெலாம் இன்றோடே போச்சு. 8

2250 வலதுசொன்ன பேர்களுக்கு வந்ததுவாய்த் தாழ்வு
மற்றவரைச் சேர்ந்தவர்க்கும் வந்ததலைத் தாழ்வு
வலதுபுஜம் ஆடநம்பால் வந்ததருள் வாழ்வு
மற்றுநமைச் சூழ்ந்தவர்க்கும் வந்ததுநல் வாழ்வு. 9

2251 அம்பலத்தில் எங்கள்ஐயர் ஆடியநல் லாட்டம்
அன்பொடுது தித்தவருக் கானதுசொல் லாட்டம்
வம்புசொன்ன பேர்களுக்கு வந்ததுமல் லாட்டம்
வந்ததலை யாட்டமின்றி வந்ததுபல் லாட்டம். 10

2252 நாத்திகம்சொல் கின்றவர்தம் நாக்குமுடை நாக்கு
நாக்குருசி கொள்ளுவதும் நாறியபிண் ணாக்கு
சீர்த்திபெறும் அம்பலவர் சீர்புகன்ற வாக்கு
செல்வாக்கு நல்வாக்கு தேவர்திரு வாக்கு. 11

திருச்சிற்றம்பலம்

Koviloor Digital Library

133. பிரபஞ்ச வெற்றி

இராகம்—பைரவி—ரூபக தாளம்

திருச்சிற்றம்பலம்

2253 அருட்ஜோதி ஆனேன்என்று அறையப்பா முரசு
அருளாட்சி பெற்றேன்என்று அறையப்பா முரசு
மருட்சார்பு தீர்ந்தேன்என்று அறையப்பா முரசு
மரணந்த விர்ந்தேன்என்று அறையப்பா முரசு. 1

திருச்சிற்றம்பலம்

நாமாவளி

134. அம்பலத்தரசே

இராகம்—இந்துஸ்தான் பியாக்—ஆதி தாளம்

திருச்சிற்றம்பலம்

2254 சிவசிவ கஜமுக கணநாதா
சிவகண வந்தித குணநீதா 1

2255 சிவசிவ சிவசிவ தத்துவ போதா*
சிவகுரு பரசிவ சண்முக நாதா 2

2256 அம்பலத் தரசே அருமருந் தே
ஆனந்தத் தேனே அருள்விருந் தே. 1

2257 பொதுநடத் தரசே புண்ணிய னே
புலவரெ லாம்புகழ் கண்ணிய னே. 2

---

* ஆ.பா. பதிப்பைத் தவிர மற்றைப் பதிப்புகள் அனைத்திலும் அம்பலத்தரசே முதலாக நாமாவளி தொடங்குகிறது. ஆ.பா. பதிப்பில் மட்டும் இவ்விரண்டு நாமாவளிகளும் முன்வைக்கப் பெற்று அம்பலத்தரசே மூன்றாவதாக வைக்கப்பெற்றுள்ளது. இறுக்கம் இரத்தினமுதலியார். வேட்டவலம் ஜமீன்தார் அப்பாசாமி பண்டாரியார் இவ்விருவரின் படிகளில் மட்டுமே இவ்விரண்டு நாமாவளிகள் காணப்பெறுவதாயும். கிடைத்த மற்றைப் படிகளில் இவை இல்லை என்றும், அவற்றில் அம்பலத்தரசே என்பதே தொடக்கம் என்றும் ஆ.பா. குறிக்கிறார். இப்பதிப்பில் இவ்விரு நாமாவளிகளும் தனியாக எண்ணிட பெற்றுத் தனிப்படுத்திக் காட்டப் பெற்றுள்ளன.

Koviloor Digital Library

2258 மலைதரு மகளே மடமயி லே
மதிமுக அமுதே இளங்குயி லே. 3

2259 ஆனந்தக் கொடியே இளம்பிடி யே
அற்புதத் தேனே மலைமா னே. 4

2260 சிவசிவ சிவசிவ சின்மய தேஜா
சிவசுந் தரகுஞ் சிதநட ராஜா. 5

2261 படன விவேக பரம்பர வேதா
நடன சபேச சிதம்பர நாதா. 6

2262 அரிபிர மாதியர் தேடிய நாதா
அரகர சிவசிவ ஆடிய பாதா. 7

2263 அந்தண வங்கண அம்பர போகா
அம்பல நம்பர அம்பிகை பாகா. 8

2264 அம்பர விம்ப சிதம்பர நாதா
அஞ்சித ரஞ்சித குஞ்சித பாதா. 9

2265 தந்திர மந்திர யந்திர பாதா
சங்கர சங்கர சங்கர நாதா. 10

2266 கனக சிதம்பர கங்கர புரஹர
அனக பரம்பர சங்கர ஹரஹர. 11

2267 சகல கலாண்ட சராசர காரண
சகுண சிவாண்ட பராபர பூரண. 12

2268 இக்கரை கடந்திடில் அக்கரை யே
இருப்பது சிதம்பர சர்க்கரை யே. 13

2269 என்னுயிர் உடம்பொடு சித்தம தே
இனிப்பது நடராஜ புத்தமு தே. 14

2270 ஐயர் திருச்சபை ஆடக மே
ஆடுதல் ஆனந்த நாடக மே. 15

Koviloor Digital Library

2271 உத்தர ஞான சிதம்பர மே
சித்திள லாந்தரும் அம்பர மே. 16

2272 அம்பல வாசிவ மாதே வா
வம்பல வாவிங்கு வாவா வா. 17

2273 நடராஜன் எல்லார்க்கும் நல்லவனே
நல்லள லாம்செய வல்லவ னே. 18

2274 ஆனந்த நாடகம் கண்டோ மே – பர
மானந்த போனகம் கொண்டோ மே. 19

2275 சகள உபகள நிட்கள நாதா
உகள சததள மங்கள பாதா. 20

2276 சந்தத மும்சிவ சங்கர பஜனம்
சங்கிதம் என்பது சற்சன வசனம். 21

2277 சங்கர சிவசிவ மாதே வா
எங்களை ஆட்கொள வாவா வா. 22

2278 அரகர சிவசிவ மாதே வா
அருளமு தம்தர வாவா வா. 23

2279 நடனசி காமணி நவமணி யே
திடனக மாமணி சிவமணி யே. 24

2280 நடமிடும் அம்பல நன்மணி யே
புடமிடு செம்பல பொன்மணி யே. 25

2281 உவட்டாது சித்திக்கும் உள்ளமு தே
தெவிட்டாது தித்திக்கும் தெள்ளமு தே. 26

2282 நடராஜ வள்ளலை நாடுத லே
நம்தொழி லாம்விளை யாடுத லே. 27

2283 அருட்பொது நடமிடு தாண்டவ னே
அருட்பெருஞ் ஜோதிஎன் ஆண்டவ னே. 28

Koviloor Digital Library

2284 நடராஜ மாணிக்கம் ஒன்றது வே
நண்ணுதல் ஆணிப்பொன் மன்றது வே. 29

2285 நடராஜ பலமது நம்பல மே
நடமாடு வதுதிரு அம்பல மே. 30

2286 நடராஜர் பாட்டே நறும்பாட்டு
ஞாலத்தார் பாட்டெல்லாம் வெறும்பாட்டு. 31

2287 சிதம்பரப் பாட்டே திருப்பாட்டு
ஜீவர்கள் பாட்டெல்லாம் தெருப்பாட்டு. 32

2288 அம்பலப் பாட்டே அருட்பாட்டு
அல்லாத பாட்டெல்லாம் மருட்பாட்டு. 33

2289 அம்பல வாணனை நாடின னே
அவனடி யாரொடும் கூடின னே. 34

2290 தம்பத மாம்புகழ் பாடின னே
தந்தன என்றுகூத் தாடின னே. 35

2291 நான்சொன்ன பாடலும் கேட்டா ரே
ஞான சிதம்பர நாட்டா ரே. 36

2292 இனித்துயர் படமாட்டேன் விட்டே னே
என்குரு மேல்ஆணை இட்டே னே. 37

2293 இனிப்பாடு படமாட்டேன் விட்டே னே
என்னப்பன் மேல்ஆணை இட்டே னே. 38

2294 சன்மார்க்கம் நன்மார்க்கம் நன்மார்க்கம்
சகமார்க்கம் துன்மார்க்கம் துன்மார்க்கம். 39

2295 நாதாந்த நாட்டுக்கு நாயக ரே
நடராஜா ரேசபா நாயக ரே. 40

2296 நான்சொல்லும் இதுகேளீர் சத்திய மே
நடராஜா எனில்வரும் நித்திய மே. 41

Koviloor Digital Library

2297 நல்லோர் எல்லார்க்கும் சபாபதி யே
நல்வரம் ஈயும் தயாநிதி யே. 42

2298 நடராஜர் தம்நடம் நன்னட மே
நடம்புரி கின்றதும் என்னிட மே. 43

2299 சிவகாம வல்லிக்கு மாப்பிள்ளை யே
திருவாளன் நான்அவன் சீர்ப்பிள்ளை யே. 44

2300 சிவகாம வல்லியைச் சேர்ந்தவ னே
சித்தெல்லாம் செய்திடத் தேர்ந்தவ னே. 45

2301 இறவா வரம்தரு நற்சபை யே
எனமறை புகழ்வது சிற்சபை யே. 46

2302 என்இரு கண்ணுள் இருந்தவ னே
இறவா தருளும் மருந்தவ னே. 47

2303 சிற்சபை அப்பனை உற்றே னே
சித்திள லாம்செயப் பெற்றே னே. 48

2304 அம்பல வாணர்தம் அடியவ ரே
அருளர சாள்மணி முடியவ ரே. 49

2305 அருட்பெருஞ் ஜோதியைக் கண்டே னே
ஆனந்தத் தெள்ளமு துண்டே னே. 50

2306 இருட்பெரு மாயையை விண்டேனே
எல்லாம்செய் சித்தியைக் கொண்டேனே. 51

2307 கருணா நிதியே குணநிதி யே
கதிமா நிதியே கலாநிதி யே. 52

2308 தருணா பதியே சிவபதி யே
தனிமா பதியே சபாபதி யே. 53

2309 கருணாம் நிதியே சபாபதியே
கதிமா நிதியே பசுபதியே. 54

Koviloor Digital Library

.2310 சபாபதி பாதம் தபோப்ர சாதம்
தயாநிதி போதம் சதோதய வேதம். 55

2311 கருணாம் பரவர கரசிர பவபவ
அருணாம் பரதர ஹரஹர சிவசிவ. 56

2312 கனகா கரபுர ஹரசிர கரதர
கருணா கரபர சுரவர ஹரஹர. 57

2313 கனக சபாபதி பசுபதி நவபதி
அனக உமாபதி அதிபதி சிவபதி. 58

2314 வேதாந்த பராம்பர சமோதம
நாதாந்த நடம்பர ஜயஜய. 59

2315 ஏகாந்த சர்வேச சமோதம
யோகாந்த நடேச நமோநம. 60

2316 ஆதாம்பர ஆடக அதிசய
பாதாம்புஜ நாடக ஜயஜய. 61

2317 போதாந்த புரேச சிவாகம
நாதாந்த நடேச நமோநம. 62

2318 ஜால கோலகன காம்பர சாயக
கால காலவன காம்பர நாயக 63

2319 சதபரி சதவுப சதமத விதபவ
சிதபா கதபத சிவசிவ சிவசிவ 64

2320 அரகர வரசுப கரகர பவபவ
சிரபுர கரபர சிவசிவ சிவசிவ 65

2321 உபல சிரதல சுபகண வங்கண
சுபல கரதல கணபண கங்கண. 66

2322 அபயவ ரதகர தலபுரி காரண
உபயப ரதபத பரபரி பூரண. 67

Koviloor Digital Library

2323 அகரஉ கரசுப கரவர சினகர
தகரவ கரநவ புரசிர தினகர. 68

2324 வகரசி கரதின கரசசி கரபுர
மகரஅ கரவர புரஹர ஹரஹர. 69

2325 பரமமந் திரசக ளாகன கரணா
படனதந் திரநிக மாகம சரணா. 70

2326 அனந்தகோ டிகுண கரகர ஜொலிதா
அகண்டவே தசிர கரதர பலிதா. 71

2327 பரிபூரண ஞானசி தம்பர
பதிகாரண நாதப ரம்பர. 72

2328 சிவஞானப தாடக நாடக
சிவபோதப ரோகள கூடக. 73

2329 சகல லோகபர காரக வாரக
சபள யோகசரபூரக தாரக. 74

2330 சத்வ போதக தாரண தன்மய
சத்ய வேதக பூரண சின்மய. 75

2331 வரகே சாந்த மகோதய காரிய
பரபா சாந்த சுகோதய சூரிய. 76

2332 பளித தீபக சோபித பாதா
வளித ரூபக ஸ்தாபித நாதா. 77

2333 அனிர்த கோபகரு ணாம்பக நா தா
அமிர்த ரூபதரு ணாம்புஜ பா தா. 78

2334 அம்போ ருகபத அரஹர கங்கர
சம்போ சிவசிவ சிவசிவ சங்கர. 79

2335 சிதம்பிர காசா பரம்பிர கா சா
சிதம்ப ரேசா சுயம்பிர கா சா. 80

Koviloor Digital Library

2336 அருட்பிர காசம் பரப்பிர காசம்
அகப்பிர காசம் சிவப்பிர காசம். 81

2337 நடப்பிர காசம் தவப்பிர காசம்
நவப்பிர காசம் சிவப்பிர காசம். 82

2338 நாத பரம்பர னே பர – நாத சிதம்பர னே
நாத திகம்பர னே தச – நாத சுதந்தர னே. 83

2339 ஞான நடத்துவ னே பர – ஞானி இடத்தவ னே
ஞான வரத்தவனே சிவ ஞான புரத்தவ னே. 84

2340 ஞான சபாபதி யே மறை – நாடு சதாகதி யே
தீன தயாநிதி யே பர – தேவி உமாபதி யே. 85

2341 புத்தம்தரும் போதா வித்தம்தரும் தாதா
நித்தம்தரும் பாதா சித்தம்திரும் பாதா. 86

திருச்சிற்றம்பலம்

135. போகம் சுகபோகம்

இராகம்–சங்கராபரணம்–இங்கிலிஷ்மெட்டு–ஆதிதாளம்

2342 போகம் சுகபோகம் சிவபோகம் அதுநித்தியம்
ஏகம் சிவம்ஏகம் சிவம்ஏகம் இதுசத்தியம். 1

2343 நலமங்கலம் உறும்அம்பல நடனம்அது நடனம்
பலநன்கருள் சிவசங்கர படனம்அது படனம். 2

136. சூதுமன்னும் இந்தையே

இராகம்–சங்கராபரணம்–இங்கிலிஷ்மெட்டு–ஆதிதாளம்

திருச்சிற்றம்பலம்

2344 சூதுமன்னும் இந்தையே சூடல் என்ன விந்தையே
கோதுவிண்ட சிந்தையே கோயில்கொண்ட தந்தையே. 1

2345 அன்புமுந்து சிந்தையே அம்பலங்கொள் விந்தையே
இன்பமென்பன் எந்தையே எந்தைதந்தை தந்தையே. 2

2346 ஞானசித்தி புரத்தனே நாதசத்தி பரத்தனே
வானம்உத்த தரத்தனே வாதவித்தை வரத்தனே. 3

Koviloor Digital Library

2347 நீஎன்னப்பன் அல்லவா நினக்கும்இன்னஞ் சொல்லவா
தாயின்மிக்க நல்லவா சர்வசித்தி வல்லவா. 4

2348 பலத்தில்தன்னம் பலத்தில்பொன்னம் பலத்தில்துன்னும் நலத்தனே
பலத்தில்பன்னும் பரத்தில்துன்னும் பரத்தின்மன்னும் குலத்தனே. 5

2349 ஆதவாத வேதகீத வாதவாத வாதியே
தூயவாய காயதேய தோயமேய ஜோதியே. 6

2350 ஆயவாய நேயஞேய மாயஞாய வாதியே
சூதவாத பாதநாத சூதஜாத ஜோதியே. 7

2351 அங்கசங்க மங்கைபங்க ஆதிஆதி ஆதியே
துங்கபுங்க அங்கலிங்க ஜோதிஜோதி ஜோதியே. 8

2352 அத்தமுத்த அத்தமுத்த ஆதிஆதி ஆதியே
சுத்தசித்த சப்தநிர்த்த ஜோதிஜோதி ஜோதியே. 9

2353 அஞ்சல்அஞ்சல் என்றுவந்தென் நெஞ்சமர்ந்த குழகனே
வஞ்சநஞ்சம் உண்டகண்ட மன்றுள்நின்ற அழகனே. 10

2354 தொண்டர்கண்டு கண்டுமொண்டு கொண்டுள்உண்ட இன்பனே
அண்டர்அண்டம் உண்டவிண்டு தொண்டுமண்டும் அன்பனே. 11

2355 கந்ததொந்த பந்தசிந்து சிந்தவந்த காலமே
எந்தஎந்த சந்தமுந்து மந்தவந்த கோலமே. 12

2356 என்றும்என்றின் ஒன்றிமன்றுள் நன்றுநின்ற ஈசனே
ஒன்றும்ஒன்றும் ஒன்றும்ஒன்றும் ஒன்றதென்ற தேசனே. 13

2357 எட்டஎட்டி ஒட்டஒட்டும் இட்டதிட்ட கீர்த்தியே
அட்டவட்டம் நட்டமிட்ட சிட்டவட்ட மூர்த்தியே. 14

2358 சேர்இகார சாரவார சீர்அகார ஊரனே
ஓர்உகார தேரதீர வாரவார தூரனே. 15

2359 வெய்யநொய்ய நையநைய மெய்புகன்ற துய்யனே
ஐயர்ஐய நையும்வையம் உய்யநின்ற ஐயனே. 16

Koviloor Digital Library

2360 பாசநாச பாபநாச பாததேச ஈசனே
வாசவாச தாசர்நேச வாசகாச பேசனே. 17

2361 உரியதுரிய பெரியவெளியில் ஒளியில்ஒளிசெய் நடனனே
பிரியஅரிய பிரியமுடைய பெரியர்இதய படனனே. 18

2362 அகிலபுவன உயிர்கள்தழைய அபயம்உதவும் அமலனே
அயனும்அரியும் அரனும்மகிழ அருளும்நடன விமலனே. 19

2363 அகரஉகர மகரவகர அமுதசிகர சரணமே
அபரசபர அமனசமன அமலநிமல சரணமே. 20

2364 தகரககன நடனகடன சகளவகள சரணமே
சகுணநிகுண சகமநிகம சகிதவிகித சரணமே. 21

2365 அனகவனஜ அமிதஅமிர்த அகலஅகில சரணமே
அதுலவனத அசுதவசல அநிலவனல சரணமே. 22

2366 தனககனக சபயஅபய சரதவரத சரணமே
சதுரசதர சகசசரித தருணசரண சரணமே. 23

2367 உளமும்உணர்வும் உயிரும்ஒளிர ஒளிரும்ஒருவ சரணமே
உருவின்உருவும் உருவுள் உருவும் உடைய தலைவ சரணமே. 24

2368 இளகும்இதய கமலம்அதனை இறைகொள்இறைவ சரணமே
இருமைஒருமை நலமும்அருளும் இனியசமுக சரணமே. 25

2369 அடியும்நடுவும் முடியும்அறிய அரியபெரிய சரணமே
அடியர்இதய வெளியில்நடனம் அதுசெய்அதிப சரணமே. 26

2370 ஒடிவில்கருணை அமுதம்உதவும் உபலவடிவ சரணமே
உலகமுழுதும் உறையநிறையும் உபயசரண சரணமே. 27

2371 அறிவுள்அறியும் அறிவைஅறிய அருளும்நிமல சரணமே
அவசம்உறுமெய் யடியர்இதயம் அமரும்அமல சரணமே. 28

2372 எறிவில்உலகில் உயிரைஉடலில் இணைசெய்இறைவ சரணமே
எனையும்ஒருவன் எனவுள்உணரும் எனதுதலைவ சரணமே. 29

Koviloor Digital Library

2373 நினையுநினைவு கனியஇனிய நிறைவுதருக சரணமே
நினையும்எனையும் ஒருமைபுரியும் நெறியில்நிறுவு சரணமே. 30

2374 வனையுமதுர அமுதஉணவு மலியஉதவு சரணமே
மருவுசபையில் நடனவரத வருகவருக சரணமே. 31

2375 நினைக்கில்நெஞ்சம் இனிக்கும்என்ற நிருத்தமன்றில் ஒருத்தனே
நினைக்கும்அன்பர் நிலைக்கநின்று பொருத்துகின்ற கருத்தனே. 32

2376 மயங்கிநின்று கலங்கிநின்று மலங்கினேனை ஆண்டவா
வயங்கிநின்று துலங்குமன்றில் இலங்குஞான தாண்டவா. 33

2377 களங்கவாத கலங்கொள்சூதர் உளங்கொளாத பாதனே
களங்கிலாத உளங்கொள்வாருள் விளங்குஞான நாதனே. 34

2378 தடுத்தமலத்தைக் கெடுத்துநலத்தைக் கொடுத்தகருணைத் தந்தையே
தனித்தநிலத்தில் இனித்தகுலத்தில் குனித்தஅடிகொள் எந்தையே. 35

2379 எச்சநீட்டி விச்சைகாட்டி இச்சைஊட்டும் இன்பனே
அச்சம்ஒட்டி அச்சுநாட்டி வைச்சுள்ஆட்டும் அன்பனே. 36

2380 சபாசிவா மஹாசிவா சகாசிவா சிகாசிவா
சதாசிவா சதாசிவா சதாசிவா சதாசிவா. 37

2381 வாசிவா சதாசிவா மஹாசிவா தயாசிவா
வாசிவா சிவாசிவா சிவாசிவா சிவாசிவா. 38

திருச்சிற்றம்பலம்

137. நடுநாடி நடுநாடி

இராகம்—மோகனம்—ஆதிதாளம்

திருச்சிற்றம்பலம்

2382 நடுநாடி நடுநாடி நடமாடு பதியே
நடராஜ நடராஜ நடராஜ நிதியே. 1

2383 நடுநாடி யொடுகூடி நடமாடும் உருவே
நடராஜ நடராஜ நடராஜ குருவே. 2

2384 நடுநாடி இடைநாடி நடமாடும் நலமே
நடராஜ நடராஜ நடராஜ பலமே. 3

Koviloor Digital Library

138. தங்குறுவம்பு

இராகம்—பியாக்—ஆதிதாளம்
திருச்சிற்றம்பலம்

2385 தங்குறுவம்பு மங்கநிரம்பு சங்கம்இயம்பும் நம்கொழுகொம்பு
சங்கரசம்பு சங்கரசம்பு சங்காசம்பு சங்கரசம்பு. 1

2386 சந்தம்இயன்று அந்தணர்நன்று சந்ததம்நின்று வந்தனம்என்று
சந்திசெய்மன்று மந்திரம்ஒன்று சங்காசம்பு சங்கரசம்பு. 2

2387 நனந்தலைவீதி நடந்திடுசாதி நலம்கொளும்ஆதி நடம்புரிநீதி
தினங்கலைஓதி சிவம்தரும்ஓதி சிதம்பரஜோதி சிதம்பரஜோதி. 3

2388 நகப்பெருஞ்ஜோதி சுகப்பெருஞ்ஜோதி
நவப்பெருஞ்ஜோதி சிவப்பெருஞ்ஜோதி
அகப்பெருஞ்ஜோதி நடப்பெருஞ்ஜோதி
அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி. 4

2389 உமைக்கொருபாதி கொடுத்தருள்நீதி உவப்புறுவேதி நவப்பெருவாதி
அமைந்திடுபூதி அகத்திடும்ஆதி அருட்சிவஜோதி அருட்சிவஜோதி.5

2390 அகரசபாபதி சிகரசபாபதி அனகசபாபதி கனகசபாபதி
மகரசபாபதி உகரசபாபதி வரதசபாபதி சரதசபாபதி. 6

2391 அமலசபாபதி அபயசபாபதி அமுதசபாபதி அகிலசபாபதி
நிமலசபாபதி நிபுணசபாபதி நிலயசபாபதி நிபிடசபாபதி. 7

2392 பரநடம்சிவ சிதம்பரநடமே பதிநடம்சிவ சபாபதிநடமே
திருநடனம்பர குருநடமே சிவநடம்அம்பர நவநடமே. 8

2393 அம்பலத்தொருநடம் உருநடமே அருநடம் ஒருநடம் திருநடமே
எம்பலத்தொருநடம் பெருநடமே இதன்பரத்திடுநடம் குருநடமே. 9

வேறு

2394 அஞ்சசோடஞ்சவை ஏலாதே அங்கோடிங்கெனல் ஆகாதே
அந்தோவெந்துயர் சேராதே அஞ்சோகஞ்சுகம் ஓவாதே
தஞ்சோபம்கொலை சாராதே சந்தோடம்சிவ மாம்ஈதே
சம்போசங்கர மாதேவா சம்போசங்கர மாதேவா. 10

Koviloor Digital Library

வேறு

2395 எந்தாய் என்றிடில் இந்தா நம்பதம் என்றீ யும்பர மன்றா டும்பத
என்றோ டிந்தன நன்றா மங்கண வெங்கோ மங்கள வெஞ்சா நெஞ்சுக
சந்தே கங்கெட நந்தா மந்திர சந்தோ டம்பெற வந்தா ளந்தண
சம்போ சங்கர சம்போ சங்கர சம்போ சங்கர சம்போ சங்கர. 11

2396 நஞ்சோ என்றிடு நங்கோ பங்கெட நன்றே தந்தனை நந்தா மந்தண
நம்பா நெஞ்சில் நிரம்பா நம்பர நம்ப நம்பதி யம்பா தம்பதி
தஞ்சோ வென்றவர் தஞ்சோ பந்தெறு தந்தா வந்தன நுந்தாள் தந்திடு
சம்போ சங்கர சம்போ சங்கர சம்போ சங்கர சம்போ சங்கர. 12

திருச்சிற்றம்பலம்

139. பொதுநிலை அருள்வது

இராகம்—ஹிந்துஸ்தான்—பியாக்—ஆதிதாளம்—

திருச்சிற்றம்பலம்

2397 பொதுநிலை அருள்வது பொதுவினில் நிறைவது
பொதுநலம் உடையது பொதுநடம் இடுவது
அதுபரம் அதுபதி அதுபொருள் அதுசிவம்
அரஅர அரஅர அரஅர அரஅர. 1

2398 நவநிலை தருவது நவவடி வுறுவது
நவவெளி நடுவது நவநவ நவமது
சிவமெனும் அதுபதம் அதுகதி அதுபொருள்
சிவசிவ சிவசிவ சிவசிவ சிவசிவ. 2

2399 சந்திர தரசிர சுந்தர சுரவர
தந்திர நவபத மந்திர புரநட
சங்கர சிவசிவ சங்கர சிவசிவ
சங்கர சிவசிவ சங்கர சிவசிவ. 3

திருச்சிற்றம்பலம்

140. வானசிற்கன

இராகம்—சங்கராபரணம்—ஆதி தாளம்

திருச்சிற்றம்பலம்

2400 வானசிற்கன மந்திரதந்திர வாதசிற்குண மந்தணவந்தண
வாரசற்சன வந்திதசிந்தித வாமஅற்புத மங்கலைமங்கல
ஞானசிற்சுக சங்கரகங்கர ஞாயசற்குண வங்கண அங்கண
நாதசிற்பர வம்பரநம்பர நாததற்பர விம்பசிதம்பர. 1

Koviloor Digital Library

2401 பாரதத்துவ பஞ்சகரஞ்சக பாதசத்துவ சங்கஜபங்கஜ
பாலநித்திய வம்பகநம்பக பாசபுத்தக பண்டிதகண்டித
நாரவித்தக சங்கிதவிங்கித நாடகத்தவ நம்பதிநங்கதி
நாதசிற்பர நம்பர அம்பர நாததற்பர விம்பசிதம்பர. 2

2402 நாத பாலசு லோசன வர்த்தன
ஜாத ஜாலவி மோசன நிர்த்தன 3

திருச்சிற்றம்பலம்

141. ஓத அடங்காது

KOVILOOR ANDAVAR LIBRARY, KOVILOOR
A. No. 12469

சிந்து

இராகம் – மாஞ்சி – ஆதிதாளம்

திருச்சிற்றம்பலம்

2403 ஓதஅடங் காதுமடங் காதுதொடங் காது
ஓகைஒடுங் காதுமடங் காதுநடுங் காது
சூதமலங் காதுவிலங் காதுகலங் காது
ஜோதிபரஞ் ஜோதிசுயஞ் ஜோதிபெருஞ் ஜோதி. 1

2404 ஏதமுயங் காதுகயங் காதுமயங் காது
ஏறிஇறங் காதுஉறங் காதுகறங் காது
சூதமிணங் காதுபிணங் காதுவணங் காது
ஜோதிபரஞ் ஜோதிசுயஞ் ஜோதிபெருஞ் ஜோதி. 2

திருச்சிற்றம்பலம்

142. விரைசேர் சடையாய்

இராகம் – தீரசங்கராபரணம் – ஆதி தாளம்

திருச்சிற்றம்பலம்

2405 விரைசேர் சடையாய் விடையாய் உடையாய்
விகிர்தா விபவா விமலா அமலா
வெஞ்சேர் பஞ்சார் நஞ்சார் கண்டா விம்பசி தம்பர னே. 1

2406 அரைசே குருவே அமுதே சிவமே
அணியே மணியே அருளே பொருளே
அந்தோ வந்தாள் எந்தாய்எந்தாய் அம்பல நம்பதி யே. 2

2407 உருவே உயிரே உணர்வே உறவே
உரையே பொருளே ஒளியே வெளியே
ஒன்றே என்றே நன்றே தந்தாய் அம்பர நம்பர னே. 3

Koviloor Digital Library

2408 அருவே திருவே அறிவே செறிவே
அதுவே இதுவே அடியே முடியே
அந்தோ வந்தாள் எந்தாய் எந்தாய் அம்பல நம்பதியே. 4

திருச்சிற்றம்பலம்

143. பசியாத அமுதே

இராகம்—ஆனந்தபைரவி—ஆதிதாளம்

திருச்சிற்றம்பலம்

2409 பசியாத அமுதே பகையாத பதியே
பகராத நிலையே பறையாத சுகமே
நசியாத பொருளே நலியாத உறவே
நடராஜ மணியே நடராஜ மணியே. 1

2410 புரையாத மணியே புகலாத நிலையே
புகையாத கனலே புகையாத பொருளே
நரையாத வரமே நடியாத நடமே
நடராஜ நிதியே நடராஜ நிதியே. 2

2411 சிவஞான நிலையே சிவயோக நிறைவே
சிவபோக உருவே சிவமான உணர்வே
நவநீத மதியே நவநாத கதியே
நடராஜ பதியே நடராஜ பதியே. 3

2412 தவயோக பலமே சிவஞான நிலமே
தலையேறும் அணியே விலையேறு மணியே
நவவார நடமே சுவகார புடமே
நடராஜ பரமே நடராஜ பரமே. 4

2413 துதிவேத உறவே சுகபோத நறவே
துணிதீரும் இடமே தனிஞான நடமே
நதியார நிதியே அதிகார பதியே
நடராஜ குருவே நடராஜ குருவே. 5

2414 வயமான வரமே வியமான பரமே
மனமோன நிலையே கனஞான மலையே
நயமான உரையே நடுவான வரையே
நடராஜ துரையே நடராஜ துரையே. 6

Koviloor Digital Library

2415 பதியுறு பொருளே பொருளுறு பயனே
பயனுறு நிறைவே நிறைவுறு வெளியே
மதியுறும் அமுதே அமுதுறு சுவையே
மறைமுடி மணியே மறைமுடி மணியே. 7

2416 அருளுறு வெளியே வெளியுறு பொருளே
அதுவுறு மதுவே மதுவுறு சுவையே
மருளறு தெருளே தெருளுறு மொளியே
மறைமுடி மணியே மறைமுடி மணியே. 8

2417 தருவளர் நிழலே நிழல்வளர் சுகமே
தடம்வளர் புனலே புனல்வளர் நலனே
திருவளர் உருவே உருவளர் உயிரே
திருநட மணியே திருநட மணியே. 9

2418 உயிருறும் உணர்வே உணர்வுறும் ஒளியே
ஒளியுறு வெளியே வெளியுறு வெளியே
செயிரறு பதியே சிவநிறை நிதியே
திருநட மணியே திருநட மணியே. 10

2419 கலைநிறை மதியே மதிநிறை அமுதே
கதிநிறை கதிரே கதிர்நிறை சுடரே
சிலைநிறை நிலையே நிலைநிறை சிவமே
திருநட மணியே திருநட மணியே. 11

2420 மிகவுயர் நெறியே நெறியுயர் விளைவே
விளைவுயர் சுகமே சுகமுயர் பதமே
திகமுயர் உயர்வே உயருயர் உயர்வே
திருநட மணியே திருநட மணியே. 12

2421 இயல்கிளர் மறையே மறைகிளர் இசையே
இசைகிளர் துதியே துதிகிளர் இறையே
செயல்கிளர் அடியே அடிகிளர் முடியே
திருநட மணியே திருநட மணியே. 13

2422 புரையறு புகழே புகழ்பெறு பொருளே
பொருளது முடிபே முடிவுறு புணர்வே
திரையறு கடலே கடலெழு சுதையே
திருநட மணியே திருநட மணியே. 14

Koviloor Digital Library

2423 நிகழ்நவ நிலையே நிலையுயர் நிலையே
நிலையருள் நிதியே நிதிதரு பதியே
திகழ்சிவ பதமே சிவபத சுகமே
திருநட மணியே திருநட மணியே. 15

திருச்சிற்றம்பலம்

144. நீடிய வேதம்

இராகம்—இந்துஸ்தானி—ஆதி தாளம்

திருச்சிற்றம்பலம்

2424 நீடிய வேதம் தேடிய பாதம்
நேடிய கீதம் பாடிய பாதம்
ஆடிய போதம் கூடிய பாதம்
ஆடிய பாதம் ஆடிய பாதம். 1

2425 சாக்கிய வேதம் தேக்கிய பாதம்
தாக்கிய ஏதம் போக்கிய பாதம்
சோக்கிய வாதம் ஆக்கிய பாதம்
தூக்கிய பாதம் தூக்கிய பாதம். 2

2426 ஏன்றிய சூதம் தோன்றிய பாதம்
ஈன்றிய நாதம் ஆன்றிய பாதம்
ஒன்றிய பூதம் ஞான்றிய பாதம்
ஊன்றிய பாதம் ஊன்றிய பாதம். 3

2427 சஞ்சித வீடும் நெஞ்சித பாதம்
தஞ்சித மாகும் சஞ்சித பாதம்
கொஞ்சித மேவும் ரஞ்சித பாதம்
குஞ்சித பாதம் குஞ்சித பாதம். 4

2428 எண்ணிய நானே திண்ணியன் ஆனேன்
எண்ணிய வாறே நண்ணிய பேறே
புண்ணியன் ஆனேன் அண்ணியன் ஆனேன்
புண்ணிய வானே புண்ணிய வானே. 5

2429 தொத்திய சீரே பொத்திய பேரே
துத்திய பாவே பத்திய நாவே
சத்தியம் நானே நித்தியன் ஆனேன்
சத்திய வானே சத்திய வானே. 6

Koviloor Digital Library

2430 எம்புலப் பகையே எம்பலத் துறவே
எம்குலத் தவமே எம்குலச் சிவமே
அம்பினில் கனலே அந்தணர்க் கிறையே
அம்பலத் தரசே அம்பலத் தரசே. 7

2431 இன்புடைப் பொருளே இன்சுவைக் கனியே
எண்குணச் சுடரே இந்தகத் தொளியே
அன்புடைக் குருவே அம்புயற் கிறையே
அம்பலத் தமுதே அம்பலத் தமுதே. 8

திருச்சிற்றம்பலம்

145. வேத சிகா மணியே

தாழிசை
இராகம்–இந்துஸ்தான் தோடி–அடதாள சாப்பு
திருச்சிற்றம்பலம்

2432 வேத சிகாமணியே போத சுகோதயமே
மேதகு மாபொருளே ஓதரும் ஓர்நிலையே
நாத பராபரமே சூத பராவமுதே
ஞான சபாபதியே ஞான சபாபதியே. 1

2433 ஏக சதாசிவமே யோக சுகாகரமே
ஏம பராநலமே காம விமோசனமே
நாக விகாசனமே நாத சுகோடணமே
ஞான சபாபதியே ஞான சபாபதியே. 2

2434 தூய சதாகதியே நேய சதாசிவமே
சோம சிகாமணியே வாம உமாபதியே
ஞாய பராகரமே காய புராதரமே
ஞான சபாபதியே ஞான சபாபதியே. 3

2435 ஆரண ஞாபகமே பூரண சோபனமே
ஆதிஅ னாதியனே வேதிய னாதியனே
நாரண னாதரமே காரண மேபரமே
ஞான சபாபதியே ஞான சபாபதியே. 4

Koviloor Digital Library

2436 ஆகம போதகமே யாதர வேதகமே
ஆமய மோசனமே ஆரமு தாகரமே
நாக நடோதயமே நாத புரோதயமே
ஞான சபாபதியே ஞான சபாபதியே. 5

2437 ஆடகநீடொளியே நேடக நாடளியே
ஆதி புராதனனே வேதி பராபரனே
நாடக நாயகனே நானவ னானவனே
ஞான சபாபதியே ஞான சபாபதியே. 6

2438 ஆரிய னேசிவனே ஆரண னேபவனே
ஆலய னேஅரனே ஆதர னேசுரனே
நாரிய னேவரனே நாடிய னேபரனே
ஞான சபாபதியே ஞான சபாபதியே. 7

2439 ஆதர வேதியனே ஆடக ஜோதியனே
ஆரணி பாதியனே ஆதர வாதியனே
நாத விபூதியனே நாம வனாதியனே
ஞான சபாபதியே ஞான சபாபதியே. 8

2440 தேவ கலாநிதியே ஜீவ தயாநிதியே
தீன சகாநிதியே சேகர மாநிதியே
நாவல ரோர் பதியே நாரி உமாபதியே
ஞான சபாபதியே ஞான சபாபதியே. 9

2441 ஆடிய நாடகனே ஆலமர் ஆதியனே
ஆகம மேலவனே ஆரண நாவலனே
நாடிய காரணனே நீடிய பூரணனே
ஞான சபாபதியே ஞான சபாபதியே. 10

திருச்சிற்றம்பலம்

146. பதநம்புறு

இராகம்—கருடத்தொனி—ஏகதாளம்

திருச்சிற்றம்பலம்

2442 பதநம்புறு பவர்இங்குறு பவசங்கடம் அறநின்றிடு
பரமம்பொது நடம்என்றென துளம்நம்புற அருள்அம்பர
சிதகுஞ்சித பதரஞ்சித சிவசுந்தர சிவமந்திர
சிவசங்கர சிவசங்கர சிவசங்கர சிவசங்கர 1

Koviloor Digital Library

வேறு

2443 கலகந்தரும் அவலம்பன கதிநம்பல நிதமும்
கனகந்தரு மணிமன்றுறு கதிதந்தருள் உடலஞ்
சலசந்திரன் எனநின்றவர் தழுவும்பத சரணம்
சரணம்பதி சரணம்சிவ சரணம்குரு சரணம். 2

2444 எனதென்பதும் நினதென்பதும் இதுஎன்றுணர் தருணம்
இனம்ஒன்றது பிறிதன்றென இசைகின்றது பரமம்
தனதென்பது மனதென்பது ஜகமென்றனை சரணம்
சரணம்பதி சரணம்சிவ சரணம்குரு சரணம். 3

திருச்சிற்றம்பலம்

நாமாவளி முற்றிற்று

Koviloor Digital Library

147. அனுபவ மாலை

எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

2445 அம்பலத்தே திருநடஞ்செய் அடிமலர்என் முடிமேல்
அணிந்துகொண்டேன் அன்பொடும்என் ஆருயிர்க்கும் அணிந்தேன்
எம்பரத்தே மணக்கும்அந்த மலர்மணத்தைத் தோழி
என்உரைப்பேன் உரைக்கஎன்றால் என்னளவன் றதுவே
வம்பிசைத்தேன் அன்றடிநீ என் அருகே இருந்துன்
மணிநாசி அடைப்பதனைத் திறந்துமுகந் தறிகாண்
நம்புறுபார் முதல்நாத வரையுளநாட் டவரும்
நன்குமுகந் தனர்வியந்தார் நன்மணம்ஈ தெனவே. 1

2446 கண்உறங்கேன் உறங்கினும்என் கணவரொடு கலக்கும்
கனவேகண் டுளமகிழ்வேன் கனவொன்றோ நனவும்
எண்அடங்காப் பெருஞ்ஜோதி என்இறைவர் எனையே
இணைந்திரவு பகல்காணா தின்புறச்செய் கின்றார்
மண்உறங்கும் மலைஉறங்கும் அலைகடலும் உறங்கும்
மற்றுளஎல்லாம்உறங்கும் மாநிலத்தே நமது
பெண்உறங்காள் எனத்தாயர் பேசிமகிழ் கின்றார்
பெண்கள்எலாம் கூசுகின்றார் பெருந்தவஞ்செய் கிலரே. 2

2447 எல்லாஞ்செய் வல்லதுரை என்னைமணம் புரிந்தார்
எவ்வுலகில் யார்எனக்கிங் கீடுரைநீ தோழீ
நல்லாய்மீக் கூற்றுடையார் இந்திரர்மா முனிவர்
நான்முகர்நா ரணர்எல்லாம் வான்முகராய் நின்றே
பல்லாரில் இவள்புரிந்த பெருந்தவத்தை நம்மால்
பகர்வரிதென் கின்றார்சிற் பதியில்நடம் புரியும்
வல்லானை மணந்திடவும் பெற்றனள்இங் கிவளே
வல்லாள்என் றுரைக்கின்றார் நல்லார்கள் பலரே. 3

2448 இச்சைஎலாம் வல்லதுரை என்னைமணம் புரிந்தார்
யான்செய்தவம் யார்செய்தார் இதுகேள்என் தோழி
எச்சமயத் தேவரையும் சிறுதுரும்பென் றேனும்
எண்ணுவனோ புண்ணியரை எண்ணுமனத் தாலே
பிச்சஎன நினைத்தாலும் நினையடிநீ அவரைப்
பிரிவேனோ பிரிவென்று பேசுகினும் தரியேன்
விச்சைநடம் கண்டேன்நான் நடங்கண்டால் பேயும்
விடத்துணியா தென்பர்கள்என் விளைவுரைப்ப தென்னே. 4

Koviloor Digital Library

2449 வஞ்சமிலாத் தலைவருக்கே மாலைமகிழ்ந் தணிந்தேன்
மறைகளுடன் ஆகமங்கள் வகுத்துவகுத் துரைக்கும்
எஞ்சலுறா வாழ்வனைத்தும் என்னுடைய வாழ்வே
எற்றோநான் புரிந்ததவம் சற்றேநீ உரையாய்
அஞ்சுமுகம் காட்டியஎன் தாயர்எலாம் எனக்கே
ஆறுமுகம் காட்டிமிக வீறுபடைக் கின்றார்
பஞ்சடிப்பா வையர்எல்லாம் விஞ்சடிப்பால் இருந்தே
பரவுகின்றார் தோழிஎன்றன் உறவுமிக விழைந்தே. 5

2450 அன்னம்உண அழைக்கின்றாய் தோழிஇங்கே நான்தான்
அம்பலத்தே ஆடுகின்ற அண்ணல்அடி மலர்த்தேன்
உன்னைநினைத் துண்டேன்என் உள்ளகத்தே வாழும்
ஒருதலைமைப் பெருந்தலைவ ருடையஅருட் புகழாம்
இன்னமுதில் என்னுடைஅன் பென்னும்நறுங் கனியின்
இரதமும்என் தனிக்கணவர் உருக்காட்சி எனும்ஓர்
கன்னல்உளே தனித்தெடுத்த தேம்பாகும் கலந்தே
களித்துண்டேன் பசிசிறிதும் கண்டிலன் உள் ளகத்தே. 6

2451 பொதுநடஞ்செய் துரைமுகத்தே தளதளஎன் றொளிரும்
புன்னகையே ஒருகோடிப் பொன்பெறும்என் றுரைப்பார்
இதுவரையோ பலகோடி என்னினும்ஓர் அளவோ
எண்இறந்த அண்டவகை எத்தனைகோ டிகளும்
சதுமறைசொல் அண்டவகை தனித்தனியே நடத்தும்
சத்தர்களும் சத்திகளும் சற்றேனும் பெறுமோ
துதிபெறும்அத் திருவாளர் புன்னகையை நினைக்குந்
தோறும்மனம் ஊறுகின்ற சுகஅமுதம் பெறுமே. 7

2452 கண்கலந்த கணவர்எனைக் கைகலந்த தருணம்
கண்டறியேன் என்னையும்என் கரணங்கள் தனையும்
எண்கலந்த போகம்எலாம் சிவபோகம் தனில்ஓர்
இறைஅளவென் றுரைக்கின்ற மறைஅளவின் றறிந்தேன்
விண்கலந்த திருவாளர் உயிர்கலந்த தருணம்
வினைத்துயர்தீர்ந் தடைந்தசுகம் நினைத்திடுந்தோ றெல்லாம்
உண்கலந்த ஆனந்தப் பெரும்போகம் அப்போ
துற்றதென எனைவிழுங்கக் கற்றதுகாண் தோழி. 8

2453 மாடமிசை ஓங்குநிலா மண்டபத்தே எனது
மணவாளர் கொடுத்ததிரு அருளமுதம் மகிழ்ந்தே
ஏடவிழ்பூங் குழலாய்நான் உண்டதொரு தருணம்
என்னைஅறிந் திலன்உலகம் தன்னையும்நான் அறியேன்

Koviloor Digital Library

தேடறிய நறும்பாலும் தேம்பாகும் நெய்யும்
தேனும்ஒக்கக் கலந்ததெனச் செப்பினும்சா லாதே
ஈடறியாச் சுவைபுகல என்னாலே முடியா
தென்னடியோ அவ்வமுதம் பொன்னடிதான் நிகரே. 9

2454 கற்பூரம் மணக்கின்ற தென்னுடம்பு முழுதும்
கணவர்திரு மேனியிலே கலந்தமணம் அதுதான்
இற்பூத மணம்போலே மறைவதன்று கண்டாய்
இயற்கைமணம் துரியநிறை இறைவடிவத் துளதே
பொற்பூவும் நறுமணமும் கண்டறியார் உலகர்
புண்ணியனார் திருவடிவில் நண்ணியவா றதுவே
நற்பூதி அணிந்ததிரு வடிவுமுற்றும் தோழி
நான் கண்டேன் நான்புணர்ந்தேன் நான்அதுஆ னேனே. 10

2455 மன்னுதிருச் சபைநடுவே வயங்குநடம் புரியும்
மணவாளர் திருமேனி வண்ணங்கண் டுவந்தேன்
என்னடிஇத் திருமேனி இருந்தவண்ணம் தோழி
என்புகல்வேன் மதிஇரவி இலங்கும்அங்கி உடனே
மின்னும்ஒன்றாய்க் கூடியவை எண்கடந்த கோடி
விளங்கும்வண்ணம் என்றுரைக்கோ உரைக்கினும்சா லாதே
அன்னவண்ணம் மறைமுடிவும் அறைவரிதே அந்த
அரும்பெருஞ்ஜோ தியின் வண்ணம் யார் உரைப்பர் அந்தோ. 11

2456 கள்ளுண்டாள் எனப்புகன்றார் கனகசபை நடுவே
கண்டதுண்டு சிற்சபையில் உண்டதும்உண் டடிநான்
எள்ளுண்ட பலவிடயத் திறங்குங்கள் அன்றே
என்றும்இற வாநிலையில் இருத்துங்கள் உலகர்
உள்ளுண்ட போதுமயக் குற்றிடுங்கள் அலவே
உள்ளமயக் கனைத்தினையும் ஒழித்திடுங்கள் மடவாய்
அள்ளுண்ட பிறரும்எனை அடுத்தடுத்துக் கண்டால்
அறிவுதரும் அவர்க்கும்இங்கே யான்உண்ட கள்ளே. 12

2457 காரிகைநீ என்னுடனே காணவரு வாயோ
கனகசபை நடுநின்ற கணவர்வடி வழகை
ஏரிகவாத் திருவடிவை எண்ணமுடி யாதேல்
இயம்பமுடிந் திடுமோநாம் எழுதமுடிந் திடுமோ
பேரிகவா மறைகளுடன் ஆகமங்கள் எல்லாம்
பின்னதுமுன் முன்னதுபின் பின்முன்னா மயங்கிப்
பாரிகவா தின்றளவும் மிகஎழுதி எழுதிப்
பார்க்கின்ற முடிவொன்றும் பார்த்ததிலை அம்மா. 13

Koviloor Digital Library

2458 கண்ணாறு படும்எனநான் அஞ்சுகின்றேன் பலகால்
கணவர்திரு வடிவழகைக் கண்டுகண்டு களிக்கில்
எண்ணாஎன் ஆசைவெள்ளம் என்சொல்வழி கேளா
தென்னைஈர்த்துக் கொண்டுசபைக் கேகுகின்ற தந்தோ
பெண்ணாசை பெரிதென்பர் விண்ணாளும் அவர்க்கும்
பெண்ணாசை பெரிதலகாண் ஆணாசை பெரிதே
உண்ணாடிப் பற்பலகால் கண்ணாறு கழிக்கல்
உறுகின்றேன் தோழிநின்னால் பெறுகின்ற படியே. 14

2459 கற்பூரம் கொணர்ந்திடுக தனித்தோழி எனது
கணவர்வரு தருணம்இது கண்ணாறு கழிப்பாம்
எற்பூத நிலைஅவர்தம் திருவடித்தா மரைக்கீழ்
இருப்பதடி கீழிருப்ப தென்றுநினை யேல்காண்
பற்பூத நிலைகடந்து நாதநிலைக் கப்பால்
பரநாத நிலைஅதன்மேல் விளங்குகின்ற தறிநீ
இற்பூவை அவ்வடிக்குக் கண்ணாறு கழித்தால்
எவ்வுலகத் தெவ்வுயிர்க்கும் இனிதுநலந் தருமே. 15

2460 மனைஅணைந்து மலர்அணைமேல் எனைஅணைந்த போது
மணவாளர் வடிவென்றும் எனதுவடி வென்றும்
தனைநினைந்து பிரித்தறிந்த தில்லையடி எனைத்தான்
சற்றுமறி யேன்எனில்யான் மற்றறிவ தென்னே
தினைஅளவா யினும்விகற்ப உணர்ச்சிஎன்ப திலையே
திருவாளர் கலந்தபடி செப்புவதெப் படியோ
உனைஅணைந்தால் இவ்வாறு நான்கேட்பேன் அப்போ
துன்னறிவும் என்னறிவும் ஓரறிவாம் காணே. 16

2461 தாழ்குழலாய் எனைச்சற்றே தனிக்கவிட்டால் ஞான
சபைத்தலைவர் வருகின்ற தருணம்இது நான்தான்
வாழ்வடைபொன் மண்டபத்தே பளிக்கறையி னூடே
மலரணையை அலங்கரித்து வைத்திடுதல் வேண்டும்
சூழுறநான் அலங்கரிப்பேன் என்கின்றாய் தோழி
துரைக்குமனம் இல்லைஅது துணிந்தறிந்தேன் பலகால்
ஏழ்கடலில் பெரிதன்றோ நான்அடைந்த சுகம்இங்
கிதைவிடநான் செய்பணிவே றெப்பணி நீ இயம்பே. 17

2462 தனித்தலைவர் வருகின்ற தருணம்இது தோழி
தனிக்கஎனை விடுநீயும் தனித்தொருபால் இருத்தி
இனித்தசுவைத் திரள்கலந்த திருவார்த்தை நீயும்
இன்புறக்கேட் டுளங்களிப்பாய் இதுசாலும் நினக்கே

Koviloor Digital Library

மனித்தர்களோ வானவரோ மலர்அயனோ மாலோ
மற்றையரோ என்புகல்வேன் மகேசுரர்ஆ தியரும்
தனித்தஒரு திருவார்த்தை கேட்பதற்கே கோடித்
தவஞ்செய்து நிற்கின்றார் நவஞ்செய்த நிலத்தே. 18

2463 மணவாளர் வருகின்ற தருணம்இது மடவாய்
மாளிகையின் வாயில்எலாம் வளம்பெறநீ புனைக
குணவாளர் அணையும்மலர் அணைஅகத்தை நானே
குலவுமணி விளக்கத்தால் அலங்கரிக்கப் புகுவேன்
தணவாத சுகந்தரும்என் தனிக்கணவர் வரிலோ
சற்றுமயல் வாதனைகள் உற்றிடுதல் ஆகா
அணவாத மனத்தவரைப் புறப்பணிக்கே விடுக
அன்புடையார் களுக்கிடுக அகப்பணிசெய் திடவே. 19

2464 அரும்பொன் அனை யார்எனது கணவர்வரு தருணம்
ஆயிழைஈ தாதலினால் வாயில்முகப் பெல்லாம்
விரும்புறுதோ ரணம்கொடிகள் பழுத்தகுலை வாழை
விரைக்கமுகு தெங்கிளநீர் எனப்பலவும் புனைக
கரும்புநெல்லின் முளைநிறைநீர்க் குடம்இணைந்த கயலும்
கண்ணாடி கவரிமுதல் உண்ணாடி இடுக
இரும்பொடுகல் ஒத்தமனங் களும்கனிய உருக்கும்
இறைவர்திரு வரவெதிர்கொண் டேத்துவதற் கினிதே. 20

2465 பதிவரும்ஓர் தருணம்இது தருணம்இது தோழீ
பராக்கடையேல் மணிமாடப் பக்கமெலாம் புனைக
அதிகநலம் பெறுபளிக்கு மணிமேடை நடுவே
அணையைஅலங் கரித்திடநான் புகுகின்றேன் விரைந்தே
கதிதருவார் நல்வரவு சத்தியம்சத் தியம்நீ
களிப்பினொடு மணிவிளக்கால் கதிர்பரவ நிரைத்தே
புதியநவ மணிகுயின்ற ஆசனங்கள் இடுக
புண்ணியனார் நல்வரவை எண்ணிஎண்ணி இனிதே. 21

2466 மன்றாடும் கணவர்திரு வரவைநினைக் கின்றேன்
மகிழ்ந்துநினைத் திடுந்தோறும் மனங்கனிவுற் றுருகி
நன்றாவின் பால்திரளின் நறுநெய்யும் தேனும்
நற்கருப்பஞ் சாறெடுத்த சர்க்கரையும் கூட்டி
இன்றார உண்டதென இனித்தினித்துப் பொங்கி
எழுந்தெனையும் விழுங்குகின்ற தென்றால்என் தோழி
இன்றாவி அன்னவரைக் கண்டுகொளும் தருணம்
என்சரிதம் எப்படியோ என்புகல்வேன் அந்தோ. 22

Koviloor Digital Library

2467 கூடியஎன் தனிக்கணவர் நல்வரத்தை நானே
குறிக்கின்ற தோறும்ஒளி எறிக்கின்ற மனந்தான்
நீடியபொன் மலைமுடிமேல் வாழ்வடைந்த தேவர்
நீள்முடிமேல் இருக்கின்ற தென்றுரைக்கோ அன்றி
ஆடியபொற் சபைநடுவே சிற்சபையின் நடுவே
ஆடுகின்ற அடிநிழற்கீழ் இருக்கின்ற தென்கோ
ஏடவிழ்பூங் குழலாய்என் இறைவரைக்கண் ணுற்றால்
என்மனத்தின் சரிதம்அதை யார்புகல்வார் அந்தோ. 23

2468 அருளாளர் வருகின்ற தருணம்இது தோழி
ஆயிரம்ஆ யிரங்கோடி அணிவிளக்கேற் றிடுக
தெருளாய பசுநெய்யே விடுகமற்றை நெய்யேல்
திருமேனிக் கொருமாசு செய்தாலும் செய்யும்
இருள்ஏது காலைவிளக் கேற்றிடவேண் டுவதோ
என்னாதே மங்கலமா ஏற்றுதலாங் கண்டாய்
மருளேல்அங் கவர்மேனி விளக்கமதெண் கடந்த
மதிகதிர்செங் கனல்கூடிற் றென்னினும்சா லாதே. 24

2469 என்னிருகண் மணி அனையார் என்னுயிர்நா யகனார்
என்உயிருக் கமுதானார் எல்லாஞ்செய் வல்லார்
பொன்அணிபொற் சபையாளர் சிற்சபையார் என்னைப்
புறம்புணர்ந்தார் அகம்புணர்ந்தார் புறத்தகத்தும் புணர்ந்தார்
அன்னியர்அல் லடிஅவரே எனதுகுல தெய்வம்
அருந்தவத்தால் கிடைத்தகுரு வாகும்அது மட்டோ
மன்னுறும்என் தனித்தாயும் தந்தையும்அங் கவரே
மக்கள்பொருள் மிக்கதிரு ஒக்கலும்அங் கவரே. 25

2470 தந்தைஎன்றாய் மகன்என்றாய் மணவாளன் என்றாய்
தகுமோஇங் கிதுஎன்ன வினவுதியோ மடவாய்
சிந்தைசெய்து காணடிநீ சிற்சபையில் நடிக்கும்
திருவாளர் எனைப்புணர்ந்த திருக்கணவர் அவர்தம்
அந்தநடு முதலில்லா அரும்பெருஞ்சோ தியதே
அண்டசரா சரங்கள்எலாம் கண்டதுவே றிலையே
எந்தவகை பொய்புகல்வேன் மற்றையர்போல் அம்மா
வீறுமவர் திருமேனி நானும்என அறியே. 26

2471 எல்லாமுஞ் செயவல்ல தனித்தலைவர் பொதுவில்
இருந்துநடம் புரிகின்ற அரும்பெருஞ்சோ தியினார்
நல்லாய்நல் நாட்டார்கள் எல்லாரும் அறிய
நண்ணிஎனை மணம்புரிந்தார் புண்ணியனார் அதனால்

Koviloor Digital Library

இல்லாமை எனக்கில்லை எல்லார்க்கும் தருவேன்
என்னுடைய பெருஞ்செல்வம் என்புகல்வேன் அம்மா
செல்லாத அண்டமட்டோ அப்புறத்தப் பாலும்
சிவஞானப் பெருஞ்செல்வம் சிறப்பதுகண் டறியே. 27

2472 வான்கண்ட பிரமர்களும் நாரணரும் பிறரும்
மாதவம்பன் னாட்புரிந்து வருந்துகின்றார் அந்தோ
நான்கண்ட காட்சியவர் கண்டிலரே உலகில்
நான்ஒருபெண் செய்ததவம் எத்தவமோ அறியேன்
கோன்கண்ட குடிக்கொன்றும் குறைவிலையேல் அண்ட
கோடிஎலாம் தனிப்பெருஞ்செங் கோல்நடத்தும் இறைவர்
தான்கண்ட குடியானேன் குறைகளெலாம் தவிர்ந்தேன்
தனித்தவள மாடமிசை இனித்திருக் கின்றேனே. 28

2473 என்கணவர் பெருந்தன்மை ஆறந்த நிலைக்கே
எட்டிநின்று பார்ப்பவர்க்கும் எட்டாதே தோழி
பொன்கணவர் கலைமடந்தை தன்கணவர் முதலோர்
புனைந்துரைக்கும் கதைபோல நினைந்துரைக்கப் படுமோ
புன்கணவர் அறியாதே புலம்புகின்றார் அவர்போல்
புகல்மறையும் ஆகமமும் புலம்புகின்ற தம்மா
உன்கணவர் திறம்புகல்என் றுரைக்கின்றாய் நீதான்
உத்தமனார் அருட்சோதி பெற்றிடமுன் விரும்பே. 29

2474 ஈங்குசிலர் உண்ணுகஎன் றென்னைஅழைக் கின்றார்
என்தோழி நான்இவர்கட் கென்புகல்வேன் அம்மா
ஓங்குநிலா மண்டபத்தே என்கணவ ருடனே
உவட்டாத தெள்ளமுதம் உண்டுபசி தீர்ந்தேன்
தேங்குழல்இங் கினிஎனக்குப் பசிவரில்அப் போது
செப்புகின்றேன் இப்போது சிலுகிழைத்தல் வேண்டா
ஏங்கல்அற நீஅவர்க்குத் தெளிவிப்பாய் மற்றை
இருந்தவரும் விருந்தவரும் இனிதுபுசித் திடற்கே. 30

2475 ஐயர்எனை ஆளுடையார் அரும்பெருஞ்சோ தியினார்
அம்பலத்தே நடம்புரியும் ஆனந்த வடிவர்
மெய்யர்எனை மணம்புரிந்த தனிக்கணவர் துரிய
வெளியில்நிலா மண்டபத்தே மேவிஅமு தளித்தென்
கையகத்தே ஒருபசும்பொற் கங்கணமும் புனைந்தார்
கங்கணத்தின் தரத்தைஎன்னால் கண்டுரைக்கப் படுமோ
வையகமும் வானகமும் கொடுத்தாலும் அதற்கு
மாறாக மாட்டாதேல் மதிப்பரிதாம் அதுவே. 31

Koviloor Digital Library

2476 தன்வடிவம் தானாகும் திருச்சிற்றம் பலத்தே
தனிநடஞ்செய் பெருந்தலைவர் பொற்சபைஎங் கணவர்
பொன்வடிவம் இருந்தவண்ணம் நினைத்திடும்போ தெல்லாம்
புகலரும்பே ரானந்த போகவெள்ளம் ததும்பி
என்வடிவில் பொங்குகின்ற தம்மாஎன் உள்ளம்
இருந்தபடி என்புகல்வேன் என்அளவன் றதுதான்
முன்வடிவம் கரைந்தினிய சர்க்கரையும் தேனும்
முக்கனியும் கூட்டிஉண்ட பக்கமும்சா லாதே. 32

2477 இவ்வுலகில் எனைப்போல்வார் ஓர்அனந்தம் கோடி
என்னில்உயர்ந் திருக்கின்றார் எத்தனையோ கோடி
அவ்வுலகில் சிறந்துநின்றார் அளவிறந்த கோடி
அத்தனைபேர் களும்அந்தோ நித்தம்வருந் திடவும்
எவ்வுலகும் உணர்வரிய திருச்சிற்றம் பலத்தே
இனிதமர்ந்த தலைவர்இங்கே என்னைமணம் புரிந்தார்
நவ்விவிழி மடமாதே கீழ்மேல்என் பதுதான்
நாதர்திரு அருட்சோதி நாடுவதொன் றிலையே. 33

2478 திருவாளர் பொற்சபையில் திருநடஞ்செய் தருள்வார்
சிற்சபையார் என்தனக்குத் திருமாலை கொடுத்தார்
உருவாளர் அருவாகி ஒளியாகி வெளியாய்
ஓங்குகின்றார் என்னுடைய உயிர்த்துணைவர் அவர்தம்
பெருவாய்மைத் திருவருளே பெருவாழ்வென் றுணர்ந்தோர்
பேசியமெய் வாசகத்தின் பெருமையைஇன் றுணர்ந்தேன்
துருவாத எனக்கிங்கே அருள்நினைக்கும் தோறும்
சொல்லளவல் லாதசுகம் தோன்றுவதென் தோழி. 34

2479 அருளாளர் பொற்பொதுவில் ஆனந்த நடஞ்செய்
ஆனந்த வண்ணர்எனை ஆளுடையார் நான்தான்
தெருளாத பருவத்தே தெருட்டிமணம் புரிந்த
திருவாளர் அவர்பெருமைத் திறத்தைஎவர் புகல்வார்
மருளாத ஆகமங்கள் மாமறைகள் எல்லாம்
மருண்டனவேல் என்னடிநம் மனவாக்கின் அளவோ
இருளாமை என்றுறுமோ அன்றுசிறி துரைப்பாம்
என்னவும்நாண் ஈர்ப்பதிதற் கென்புரிவேன் தோழி. 35

2480 செம்பவளத் திருமலையோ மாணிக்க விளக்கோ
தெய்வமர கதத்திரளோ செழுநீலப் பொருப்போ
பம்புமணி ஒளியோநற் பசும்பொன்னின் சுடரோ
படிகவண்ணப் பெருங்காட்சி தானோஎன் றுணர்ந்தே

Koviloor Digital Library

எம்பரமன் றெம்பெருமான் புறவண்ணம் யாதோ
என்பாரேல் அகவண்ணம் யார்உரைக்க வல்லார்
தம்பரமென் றென்னைஅன்று மணம்புரிந்தார் ஞான
சபைத்தலைவர் அவர்வண்ணம் சாற்றுவதென் தோழி. 36

2481 தேவர்களோ முனிவர்களோ சிறந்தமுத்தர் தாமோ
தேர்ந்தசிவ யோகிகளோ செம்பொருள்கண் டோரோ
மூவர்களோ ஐவர்களோ முதற்பரையோ பரமோ
முன்னியஎன் தனித்தலைவர் தம்இயலை உணர்ந்தார்
யாவர்களும் அல்லஎன்றால் யான்உணர்ந்து மொழிதற்
கமையுமோ ஒருசிறிதும் அமையாது கண்டாய்
ஆவலொடும் அன்பர்தொழச் சிற்சபையில் நடிப்பார்
அவர்பெருமை அவர்அறிவர் அவரும்அறிந் திலரே. 37

2482 திருச்சிற்றம் பலத்தின்பத் திருவுருக்கொண் டின்பத்
திருநடஞ்செய் தருள்கின்ற திருவடிக்கே தொழும்பாய்
அருச்சிக்கும் பேரன்பர் அறிவின்கண் அறிவாய்
அவ்வறிவில் விளைந்தசிவா னந்தஅமு தாகிப்
பரிச்சிக்கும் அவ்வமுதின் நிறைந்தசுவை யாகிப்
பயனாகிப் பயத்தின்அனு பவமாகி நிறைந்தே
உருச்சிக்கும் எனமறைகள் ஆகமங்கள் எல்லாம்
ஓதுகின்ற எனில்அவர்தம் ஒளிஉரைப்ப தெவரே. 38

2483 வெடித்தளித்த முக்கனியின் வடித்தரசந் தனிலே
விரும்புறஉட் பிழிந்தெடுத்த கரும்பிரதம் கலந்தே
தடித்தசெழும் பாற்பெய்து கோற்றேன்விட் டதனைத்
தனித்தபர அமுதத்தில் தான்கலந்துண் டாற்போல்
இடித்திடித்தென் உளமுழுதும் தித்திக்கும் வார்த்தை
இனிதுரைத்து மணம்புரிந்த என்னுயிர்நா யகர்வான்
பொடித்திருமே னியர்அவரைப் புணரவல்லேன் அவர்தம்
புகழ்உரைக்க வல்லேனோ அல்லேன்காண் தோழீ. 39

2484 கன்னிஎனை மணந்தபதி கனிதருசிற் சபைக்கே
கலந்ததனிப் பதிவயங்கு கனகசபா பதிவான்
பன்னியருக் கருள்புரிந்த பதிஉலக மெல்லாம்
படைத்தபதி காத்தருளும் பசுபதிஎவ் வுயிர்க்கும்
அன்னியம்அல் லாதகத்தும் புறத்தும்அகப் புறத்தும்
அருட்செங்கோல் செலுத்துகின்ற அதிபதியாம் அதனால்
என்னியல்போல் பிறர்இயலை எண்ணியிடேல் பிறரோ
என்பதிபால் அன்பதிலார் அன்புளரேல் எண்ணே. 40

Koviloor Digital Library

2485 என்னியல்போல் பிறர்இயலை எண்ணேல்என் றுரைத்தேன்
இறுமாப்பால் உரைத்தனன்என் றெண்ணியிடேல் மடவாய்
பன்னியநான் என்பதியின் பற்றலது வேறோர்
பற்றறியேன் உற்றவரும் மற்றவரும் பொருளும்
உன்னியஎன் உயிரும்என துடலும்என துணர்வும்
உயிர்உணர்வால் அடைசுகமும் திருச்சிற்றம் பலத்தே
மன்னியதா தலில்நான்பெண் மகளும்அலேன் வரும்ஆண்
மகனும்அலேன் அலியும்அலேன் இதுகுறித்தென் றறியே. 41

2486 பார்முதலாப் பரநாதப் பதிகடந்தப் பாலும்
பாங்குடைய தனிச்செங்கோல் ஓங்கநடக் கின்ற
சீர்தெரிந்தார் ஏத்துதொறும் ஏத்துதற்கோ எனது
திருவாளர் அருள்கின்ற தன்றுமனங் கனிந்தே
ஆர்தருபே ரன்பொன்றே குறித்தருளு கின்றார்
ஆதலினால் அவரிடத்தே அன்புடையார் எல்லாம்
ஓர்தரும்என் உறவினராம் ஆணைஇது நீயும்
உறவான தவர்அன்பு மறவாமை குறித்தே. 42

2487 நாதாந்த வரையும்எங்கள் நாயகனார் செங்கோல்
நடக்கின்ற தென்கின்றார் நாதாந்த மட்டோ
போதாந்த நிலையும்உயர் யோகாந்த நிலையும்
புனிதகலாந் தப்பதியும் புகல்கின்றார் புகலும்
வேதாந்த வெளியும்மிக சித்தாந்த வெளியும்
விளங்கும்இவற் றப்பாலும் அதன்மேல்அப் பாலும்
வாதாந்தத் ததன்மேலும் அதன்மேல்அப் பாலும்
மன்றாடி அருட்செங்கோல் சென்றாடல் அறியே. 43

2488 புண்ணியனார் என்உளத்தே புகுந்தமர்ந்த தலைவர்
பொதுவிளங்க நடிக்கின்ற திருக்கூத்தின் திறத்தை
எண்ணியநான் எண்ணுதொறும் உண்டுபசி தீர்ந்தே
இருக்கின்றேன் அடிக்கடிநீ என்னைஅழைக் கின்றாய்
பண்ணுறும்என் தனிக்கணவர் கூத்தாடுஞ் சபையைப்
பார்த்தாலும் பசிபோமே பார்த்திடல்அன் றியுமே
அண்ணுறும்அத் திருச்சபையை நினைக்கினும்வே சாறல்
ஆறுமடி ஊறுமடி ஆனந்த அமுதே. 44

2489 கூசுகின்ற தென்னடிநான் அம்பலத்தே நடிக்கும்
கூத்தாடிக் கணவருக்கே மாலையிட்டாய் எனவே
ஏசுகின்றார் ஆரடியோ அண்டபகி ரண்டத்
திருக்கின்ற சத்தர்களும் சத்திகளும் பிறரும்

Koviloor Digital Library

பேசுகின்ற வார்த்தைஎலாம் வள்ளல்அருட் கூத்தின்
பெருமையலால் வேறொன்றும் பேசுகின்ற திலையே
வீசுகின்ற பெருஞ்சோதித் திருக்கூத்தின் திறமே
வேதமுடன் ஆகமங்கள் விளம்புகின்ற தன்றே. 45

2490 குலமறியார் புலமறியார் அம்பலத்தே நடிக்கும்
கூத்தாடி ஐயருக்கே மாலையிட்டாய் எனவே
புலமறியார் போல்நீயும் புகலுதியோ தோழி
புலபுலஎன் றளப்பதெலாம் போகவிட்டிங் கிதுகேள்
அலகறியாத் திருக்கூத்தென் கணவர்புரி யாரேல்
அயன்அரியோ டரன்முதலாம்ஐவர்களும் பிறரும்
விலகறியா உயிர்பலவும் நீயும்இங்கே நின்று
மினுக்குவதும் குலுக்குவதும் வெளுத்துவிடும் காணே. 46

2491 கொடி இடைப்பெண் பேதாய் நீ அம்பலத்தே நடிக்கும்
கூத்தாடி என்றெனது கொழுநர்தமைக் குறித்தாய்
படிஇடத்தே வான்இடத்தே பாதலத்தே அண்ட
பகிரண்ட கோடியிலே பதிவிளக்கம் எல்லாம்
அடிமலர்கொண் டையர்செய்யும் திருக்கூத்தின் விளக்கம்
ஆகும்இது சத்தியம்என் றருமறைஆ கமங்கள்
கெடியுறவே பறையடித்துத் திரிகின்ற அவற்றைக்
கேட்டறிந்து கொள்வாய்நின் வாட்டமெலாம் தவிர்ந்தே. 47

2492 இன்பவடி வந்தருதற் கிறைவர்வரு கின்றார்
எல்லாஞ்செய் வல்லசித்தர் இங்குவரு கின்றார்
அன்பர்உளத் தேஇனிக்கும் அமுதர்வரு கின்றார்
அம்பலத்தே நடம்புரியும் ஐயர்வரு கின்றார்
என்புருப்பொன் உருவாக்க எண்ணிவரு கின்றார்
என்றுதிரு நாதஒலி இசைக்கின்ற தம்மா
துன்பமறத் திருச்சின்ன ஒலிஅதனை நீயும்
சுகம்பெறவே கேளடிஎன் தோழிஎனைச் சூழ்ந்தே. 48

2493 துரியபதம் கடந்தபெருஞ் சோதிவரு கின்றார்
சுகவடிவந் தரஉயிர்க்குத் துணைவர்வரு கின்றார்
பெரியபிர மாதியர்க்கும் அரியர் வருகின்றார்
பித்தர்என மறைபுகலும் சித்தர்வரு கின்றார்
இரிவகல்சிற் சபைநடஞ்செய் இறைவர்வரு கின்றார்
என்றுதிரு நாதஒலி இசைக்கின்ற தம்மா
உரிமைபெறும் என்தோழி நீயும்இங்கே சின்ன
ஒலிகேட்டுக் களித்திடுவாய் உளவாட்டம் அறவே. 49

Koviloor Digital Library

2494 ஈசர்என துயிர்த்தலைவர் வருகின்றார் நீவிர்
எல்லீரும் புறத்திருமின் என்கின்றேன் நீதான்
ஏசறவே அகத்திருந்தால் என்எனக்கேட் கின்றாய்
என்கணவர் வரில்அவர்தாம் இருந்தருளும் முன்னே
ஆசைவெட்கம் அறியாது நான்அவரைத் தழுவி
அணைத்துமகிழ் வேன்அதுகண் டதிசயித்து நொடிப்பார்
கூசறியாள் இவள்என்றே பேசுவர்அங் கதனால்
கூறியதல் லதுவேறு குறித்ததிலை தோழீ. 50

2495 அரசுவரு கின்றதென்றே அறைகின்றேன் நீதான்
ஐயமுறேல் உற்றுக்கேள் அசையாது தோழி
முரசுசங்கு வீணைமுதல் நாதஒலி மிகவும்
முழங்குவது திருமேனி வழங்குதெய்வ மணந்தான்
விரசஎங்கும் வீசுவது நாசிஉயிர்த் தறிக
வீதிஎலாம் அருட்சோதி விளங்குவது காண்க
பரசிஎதிர் கொள்ளுதும்நாம் கற்பூர விளக்குப்
பரிந்தெடுத்தென் னுடன்வருக தெரிந்தடுத்து மகிழ்ந்தே. 51

2496 தாழ்குழல்நீ ஆண்மகன்போல் நாணம்அச்சம் விடுத்தே
சபைக்கேறு கின்றாய்என் றுரைக்கின்றாய் தோழி
வாழ்வகைஎன் கணவர்தமைப் புறத்தணைந்தாள் ஒருத்தி
மால்எனும்பேர் உடையாள்ஓர் வளைஆழிப் படையாள்
ஆழ்கடலில் துயில்கின்றாள் மாமணிமண் டபத்தே
ஆள்கின்றாள் ஆண்மகனாய் அறிந்திலையோ அவரைக்
கேழ்வகையில் அகம்புணர்ந்தேன் அவர்கருணை அமுதம்
கிடைத்ததுநான் ஆண்மகனா கின்றததி சயமோ. 52

2497 துடியேறும் இடைஉனக்கு வந்தஇறு மாப்பென்
சொல்என்றாய் அரிபிரமர் சுரர்முனிவர் முதலோர்
பொடிஏறு வடிவுடையார் என்கணவர் சபையின்
பொற்படிக்கீழ் நிற்பதுபெற் றப்பரிசு நினைந்தே
இடிஏறு போன்றிறுமாந் திருக்கின்றா ரடிநான்
எல்லாரும் அதிசயிக்க ஈண்டுதிருச் சபையின்
படிஏறித் தலைவர்திரு அடிஊறும் அமுதம்
பருகுகின்றேன் இறுமாக்கும் பரிசுரைப்ப தென்னே. 53

2498 ஈற்றறியேன் இருந்திருந்திங் கதிசயிப்ப தென்நீ
என்கின்றாய் நீஎனைவிட் டேகுதொறும் நான்தான்
காற்றறியாத் தீபம்போல் இருந்திடும்அத் தருணம்
கண்டபரி சென்புகல்வேன் அண்டபகி ரண்டம்

Koviloor Digital Library

தோற்றறியாப் பெருஞ்சோதி மலைபரநா தத்தே
தோன்றியதாங் கதன்நடுவே தோன்றியதொன் றதுதான்
மாற்றறியாப் பொன்ஒளியோ அவ்வொளிக்குள் ஆடும்
வள்ளல்அருள் ஒளியோஈ ததிசயிக்கும் வகையே. 54

2499 நடம்புரிவார் திருமேனி வண்ணம்அதை நான்போய்
நன்கறிந்து வந்துனக்கு நவில்வேன்என் கின்றாய்
இடம்வலம்இங் கறியாயே நீயோஎன் கணவர்
எழில்வண்ணம் தெரிந்துரைப்பாய் இசைமறையா கமங்கள்
திடம்படநாம் தெரிதும்எனச் சென்றுதனித் தனியே
திருவண்ணம் கண்டளவே சிவசிவஎன் றாங்கே
கடம்பெறுகள் உண்டவென மயங்குகின்ற வாறு
கண்டிலைநீ ஆனாலும் கேட்டிலையோ தோழீ. 55

2500 பொய்பிடித்தார் எல்லாரும் புறத்திருக்க நான்போய்ப்
பொதுநடங்கண் டுளங்களிக்கும் போதுமண வாளர்
மெய்பிடித்தாய் வாழியநீ சமரசசன் மார்க்கம்
விளங்கஉல கத்திடையே விளங்குகஎன் றெனது
கைபிடித்தார் நானும்அவர் கால்பிடித்துக் கொண்டேன்
களித்திடுக இனியுனைநாம் கைவிடோம் என்றும்
மைபிடித்த விழிஉலகர் எல்லாரும் காண
மாலையிட்டோம் என்றெனக்கு மாலையணிந் தாரே. 56

2501 பொருத்தமிலார் எல்லாரும் புறத்திருக்க நான்போய்ப்
பொதுநடங்கண் டுவந்துநிற்கும் போதுதனித் தலைவர்
திருத்தமுற அருகணைந்து கைபிடித்தார் நானும்
தெய்வமல ரடிபிடித்துக் கொண்டேன்சிக் கெனவே
வருத்தமுறேல் இனிச்சிறிதும் மயங்கேல்காண் அழியா
வாழ்வுவந்த துன்தனக்கே ஏழுலகும் மதிக்கக்
கருத்தலர்ந்து வாழியஎன் றாழிஅளித் தெனது
கையினில்பொற் கங்கணமும் கட்டினர்காண் தோழி. 57

2502 தமைஅறியார் எல்லாரும் புறத்திருக்க நான்போய்ச்
சபைநடங்கண் டுளங்களிக்கும் தருணத்தே தலைவர்
இமைஅறியா விழிஉடையார் எல்லாரும் காண
இளநகைமங் களமுகத்தே தளதளஎன் றொளிர
எமைஅறிந்தாய் என்றெனது கைபிடித்தார் நானும்
என்னைமறந் தென்இறைவர் கால்பிடித்துக் கொண்டேன்
சுமைஅறியாப் பேரறிவே வடிவாகி அழியாச்
சுகம்பெற்று வாழ்கஎன்றார் கண்டாய்என் தோழி. 58

Koviloor Digital Library

2503 ஐயமுற்றார் எல்லாரும் புறத்திருக்க நான்போய்
அம்பலத்தே திருநடங்கண் டகங்களிக்கும் போது
மைஅகத்தே பொருந்தாத வள்ளல்அரு கணைத்தென்
மடிபிடித்தார் நானும்அவர் அடிபிடித்துக் கொண்டேன்
மெய்அகத்தே நம்மைவைத்து விழித்திருக்கின் றாய்நீ
விளங்குகசன் மார்க்கநிலை விளக்குகஎன் றெனது
கைஅகத்தே ஒருபசும்பொற் கங்கணமும் புனைந்தார்
கருணையினில் தாய்அனையார் கண்டாய்என் தோழி. 59

2504 காமாலைக் கண்ணர்பலர் பூமாலை விழைந்தார்
கணங்கொண்ட கண்ணர்பலர் மணங்கொள்ளத் திரிந்தார்
கோமாலை மனச்செருக்கால் மயங்கிஉடம் பெல்லாம்
குறிகொண்ட கண்ணர்பலர் வெறிகொண்டிங் கலைந்தார்
ஆமாலை அவர்எல்லாம் கண்டுளம்நாண் உறவே
அரும்பெருஞ்சோ தியர்என்னை விரும்பிமணம்புரிந்தார்
தேமாலை அணிகுழலாய் நான்செய்த தவந்தான்
தேவர்களோ மூவர்களும் செய்திலர்கண் டறியே. 60

2505 காமாலைக் கண்ணர்என்றும் கணக்கண்ணர் என்றும்
கருதுபல குறிகொண்ட கண்ணர்என்றும் புகன்றேன்
ஆமாலும் அவ்வயனும் இந்திரனும் இவர்கள்
அன்றிமற்றைத் தேவர்களும் அசைஅணுக்கள் ஆன
தாமாலைச் சிறுமாயா சத்திகளாம் இவர்கள்
தாமோமா மாயைவரு சத்திகள் ஓங்காரத்
தேமாலைச் சத்திகளும் விழித்திருக்க எனக்கே
திருமாலை அணிந்தார்சிற் சபையுடையார் தோழி. 61

2506 மாதேகேள் அம்பலத்தே திருநடஞ்செய் பாத
மலர்அணிந்த பாதுகையின் புறத்தெழுந்த அணுக்கள்
மாதேவர் உருத்திரர்கள் ஒருகோடி கோடி
வளைபிடித்த நாரணர்கள் ஒருகோடி கோடி
போதேயும் நான்முகர்கள் ஒருகோடி கோடி
புரந்தரர்கள் பலகோடி ஆகஉருப் புனைந்தே
ஆதேயர் ஆகிஇங்கே தொழில்புரிவார் என்றால்
ஐயர்திரு வடிப்பெருமை யார்உரைப்பார் தோழி. 62

2507 உருத்திரர்கள் ஒருகோடி நாரணர்பல் கோடி
உறுபிரமர் பலகோடி இந்திரர் பல்கோடி
பெருத்தமற்றைத் தேவர்களும் முனிவர்களும் பிறரும்
பேசில்அனந் தங்கோடி ஆங்காங்கே கூடித்

Koviloor Digital Library

திருத்தமுறு திருச்சபையின் படிப்புறத்தே நின்று
தியங்குகின்றார் நடங்காணும் சிந்தையராய் அந்தோ
வருத்தமொன்றும் காணாதே நான்ஒருத்தி ஏறி
மாநடங்காண் கின்றேன்என் மாதவந்தான் பெரிதே. 63

2508 பார்உலகா திபர்புவனா திபர்அண்டா திபர்கள்
பகிரண்டா திபர்வியோமா திபர்முதலாம்அதிபர்
ஏர்உலவாத் திருப்படிக்கீழ் நின்றுவிழித் திருக்க
எனைமேலே ஏற்றினர்நான் போற்றிஅங்கு நின்றேன்
சீர்உலவா யோகாந்த நடம்திருக்க லாந்தத்
திருநடம்நா தாந்தத்தே செயும்நடம்போ தாந்தப்
பேர்உலவா நடங்கண்டேன் திருஅமுதம் உணவும்
பெற்றேன்நான் செய்ததவம் பேருலகில் பெரிதே. 64

2509 என்புகல்வேன் தோழிநான் பின்னர்கண்ட காட்சி
இசைப்பதற்கும் நினைப்பதற்கும் எட்டாது கண்டாய்
அன்புறுசித் தாந்தநடம் வேதாந்த நடமும்
ஆதிநடு அந்தமிலாச் சோதிமன்றில் கண்டேன்
இன்பமய மாய்ஒன்றாய் இரண்டாய்ஒன் றிரண்டும்
இல்லதுவாய் எல்லாஞ்செய் வல்லதுவாய் விளங்கித்
தன்பரமாம் பரங்கடந்த சமரசப்பேர் அந்தத்
தனிநடமும் கண்ணுற்றேன் தனித்தசுகப் பொதுவே. 65

2510 தூங்குகநீ என்கின்றாய் தூங்குவனோ எனது
துரைவரும்ஓர் தருணம்இதில் தூக்கமுந்தான் வருமோ
ஈங்கினிநான் தனித்திருக்க வேண்டுவதா தலினால்
என்னுடைய தூக்கம் எலாம் நின்னுடைய தாக்கி
ஏங்கலறப் புறத்தேபோய்த் தூங்குகநீ தோழி
என்னிருகண் மணி அணையார் எனைஅணைந்த உடனே
ஓங்குறவே நான்அவரைக் கலந்தவரும் நானும்
ஒன்றான பின்னர்உனை எழுப்புகின்றேன் உவந்தே. 66

2511 ஐயமுறேல் காலையில்யாம் வருகின்றோம் இதுநம்
ஆணைஎன்றார் அவராணை அருளாணை கண்டாய்
வெய்யர்உளத் தேபுகுதப் போனதிருள் இரவு
விடிந்ததுநல் சுடர்உதயம் மேவுகின்ற தருணம்
தையல்இனி நான்தனிக்க வேண்டுவதா தலினால்
சற்றேஅப் புறத்திருநீ தலைவர்வந்த உடனே
உய்யஇங்கே நான் அவரைக் கலந்தவரும் நானும்
ஒன்றான பின்னர்உனை அழைக்கின்றேன் உவந்தே. 67

Koviloor Digital Library

2512 மன்றுடையார் என்கணவர் என்உயிர்நா யகனார்
வாய்மலர்ந்த மணிவார்த்தை மலைஇலக்காம் தோழி
துன்றியபே ரிருள்எல்லாம் தொலைந்ததுபன் மாயைத்
துகள்ஒளிமா மாயைமதி ஒளியொடுபோ யினவால்
இன்றருளாம் பெருஞ்ஜோதி உதயமுற்ற ததனால்
இனிச்சிறிது புறத்திருநீ இறைவர்வந்த உடனே
ஒன்றுடையேன் நான்அவரைக் கலந்தவரும் நானும்
ஒன்றான பின்னர்உனை அழைக்கின்றேன் உவந்தே. 68

2513 வைகறைஈ தருளுதயம் தோன்றுகின்ற தெனது
வள்ளல்வரு தருணம்இனி வார்த்தைஒன்றா னாலும்
சைகரையேல் இங்ஙனம்நான் தனித்திருத்தல் வேண்டும்
தாழ்குழல்நீ ஆங்கேபோய்த் தத்துவப்பெண் குழுவில்
பொய்கரையா துள்ளபடி புகழ்பேசி இருநீ
புத்தமுதம் அளித்தஅருட் சித்தர்வந்த உடனே
உய்கரைவாய் நான்அவரைக் கலந்தவரும் நானும்
ஒன்றான பின்னர்உனை அழைக்கின்றேன் உவந்தே. 69

2514 காலையிலே வருகுவர்என் கணவர்என்றே நினக்குக்
கழறினன்நான் என்னல்அது காதில்உற்ற திலையோ
வேலைஇலா தவள்போலே வம்பளக்கின் றாய்நீ
விடிந்ததுநான் தனித்திருக்க வேண்டுவதா தலினால்
சோலையிலே மலர்கொய்து தொடுத்துவந்தே புறத்தில்
சூழ்ந்திருப்பாய் தோழிஎன்றன் துணைவர்வந்த உடனே
ஓலைஉறா தியானவரைக் கலந்தவரும் நானும்
ஒன்றான பின்னர்உனை அழைக்கின்றேன் உவந்தே. 70

2515 விடிந்ததுபேர் ஆணவமாம் கார்இருள்நீங் கியது
வெய்யவினைத் திரள்எல்லாம் வெந்ததுகாண் மாயை
ஒடிந்ததுமா மாயைஒழிந் ததுதிரைதீர்ந் ததுபே
ரொளிஉதயம் செய்ததினித் தலைவர்வரு தருணம்
திடம்பெறநான் தனித்திருக்க வேண்டுவதா தலினால்
தேமொழிநீ புறத்திருமா தேவர்வந்த உடனே
உடம்புறவே நான்அவரைக் கலந்தவரும் நானும்
ஒன்றான பின்னர்உனை அழைக்கின்றேன் உவந்தே. 71

2516 மாலையிலே உலகியலார் மகிழ்நரொடு கலத்தல்
வழக்கம்அது கண்டனம்நீ மணவாள ருடனே
காலையிலே கலப்பதற்கிங் கெனைப்புறம்போ என்றாய்
கண்டிலன்ஈ ததிசயம்என் றுரையேல்என் தோழி

Koviloor Digital Library

ஓலையிலே பொறித்ததைநீ உன்னுளத்தே கருதி
உழல்கின்றாய் ஆதலில்இவ் வுளவறியாய் தருமச்
சாலையிலே சமரசசன் மார்க்கசங்கந் தனிலே
சற்றிருந்தாய் எனில்இதனை உற்றுணர்வாய் காணே. 72

2517 இரவகத்தே கணவரொடு கலக்கின்றார் உலகர்
இயல்அறியார் உயல்அறியார் மயல்ஒன்றே அறிவார்
கரவகத்தே கள்உண்டு மயங்கிநிற்கும் தருணம்
கனிகொடுத்தால் உண்டுசுவை கண்டுகளிப் பாரோ
துரவகத்தே விழுந்தார்போன் றிவர்கூடும் கலப்பில்
சுகம்ஒன்றும் இல்லையடி துன்பம்அதே கண்டார்
உரவகத்தே என்கணவர் காலையில்என் னுடனே
உறுகலப்பால் உறுசுகந்தான் உரைப்பரிதாம் தோழி. 73

2518 என்னுடைய தனித்தோழி இதுகேள்நீ மயங்கேல்
எல்லாஞ்செய் வல்லவர்என் இன்னுயிர்நா யகனார்
தன்னுடைய திருத்தோளை நான்தழுவும் தருணம்
தனித்தசிவ சாக்கிரம்என் றினித்தநிலை கண்டாய்
பன்னும்இந்த நிலைபரசாக் கிரமாக உணரேல்
பகர்பரசாக் கிரம்அடங்கும் பதியாகும் புணர்ந்து
மன்னுநிலை மற்றிரண்டும் கடந்தகுரு துரிய
மாநிலைஎன் றுணர்கஒளிர் மேனிலையில் இருந்தே. 74

2519 நான்புகலும் மொழிஇதுகேள் என்னுடைய தோழி
நாயகனார் தனிஉருவம் நான்தழுவும் தருணம்
வான்புகழும் சுத்தசிவ சாக்கிரம்என் றுணர்ந்தோர்
வழுத்துநிலை ஆகும்உருச் சுவைகலந்தே அதுவாய்த்
தேன்கலந்த சுவையொடுநன் மணிகலந்த ஒளியாய்த்
திரிபின்றி இயற்கைஇன்பச் சிவங்கலந்த நிலையே
தான்புகல்மற் றையமூன்றும் கடந்தப்பால் இருந்த
சாக்கிரா தீதம் எனத் தனித்துணர்ந்து கொள்ளே. 75

2520 இவ்வுலகோர் இரவகத்தே புணர்கின்றார் அதனை
எங்ஙனம்நான் இசைப்பதுவோ என்னினும்மற் றிதுகேள்
எவ்வமுறும் இருட்பொழுதில் இருட்டறையில் அறிவோர்
எள்ளளவும் காணாதே கள்ளளவின் றருந்திக்
கவ்வைபெறக் கண்களையும் கட்டிமறைத் தம்மா
கலக்கின்றார் கணச்சுகமும் கண்டறியார் கண்டாய்
செவ்வையுறக் காலையில்என் கணவரொடு நான்தான்
சேர்தருணச் சுகம்புகல யார்தருணத் தவரே. 76

Koviloor Digital Library

2521 பொன்பறியாப் புகல்வார்போல் மறைப்பதென்னை மடவாய்
பூவையர்கா லையில்புணர நாணுவர்காண் என்றாய்
அன்பறியாப் பெண்களுக்கே நின்உரைசம் மதமாம்
ஆசைவெட்கம் அறியாதென் றறிந்திலையோ தோழி
இன்பறியாய் ஆதலினால் இங்ஙனம்நீ இசைத்தாய்
இறைவர்திரு வடிவதுகண் டிட்டதரு ணந்தான்
துன்பறியாக் காலைஎன்றும் மாலைஎன்றும் ஒன்றும்
தோன்றாது சுகம்ஒன்றே தோன்றுவதென் றறியே. 77

2522 அருளுடையார் எனையுடையார் அம்பலத்தே நடிக்கும்
அழகர்எலாம் வல்லவர்தாம் அணைந்தருளும் காலம்
இருளுடைய இரவகத்தே எய்தாது கண்டாய்
எதனால்என் றெண்ணுதியேல் இயம்புவன்கேள் மடவாய்
தெருளுடைஎன் தனித்தலைவர் திருமேனிச் சோதி
செப்புறுபார் முதல்நாத பரியந்தம் கடந்தே
அருளுறும்ஓர் பரநாத வெளிகடந்தப் பாலும்
அப்பாலும் விளங்குமடி அகம்புறத்தும் நிறைந்தே. 78

2523 அம்மாநான் சொன்மாலை தொடுக்கின்றேன் நீதான்
ஆர்க்கணிய என்கின்றாய் அறியாயோ தோழி
இம்மாலை அம்பலத்தே எம்மானுக் கன்றி
யார்க்கணிவேன் இதைஅணிவார் யாண்டைஉளார் புகல்நீ
செம்மாப்பில் உரைத்தனைஇச் சிறுமொழிஎன் செவிக்கே
தீநுழைந்தால் போன்றதுநின் சிந்தையும்நின் நாவும்
பன்மாீலைத் தத்துவத்தால் அன்றிரும்பொன் றாலே
படைத்ததுனைப் பழக்கத்தால் பொறுத்தனன்என் றறியே. 79

2524 நாடுகின்ற பலகோடி அண்டபகி ரண்ட
நாட்டார்கள் யாவரும்அந் நாட்டாண்மை வேண்டி
நீடுகின்ற தேவர்என்றும் மூர்த்திகள்தாம் என்றும்
நித்தியர்கள் என்றும்அங்கே நிலைத்ததெலாம் மன்றில்
ஆடுகின்ற திருவடிக்கே தங்கள்தங்கள் தரத்துக்
கானவகை சொல்மாலை அணிந்ததனால் அன்றோ
பாடுகின்ற என்னுடைய பாட்டெல்லாம் பொன்னம்
பலப்பாட்டே திருச்சிற்றம் பலப்பாட்டே தோழி. 80

2525 தொடுக்கின்றேன் மாலைஇது மணிமன்றில் நடிக்கும்
துரைஅவர்க்கே அவருடைய தூக்கியகால் மலர்க்கே
அடுக்கின்றோர்க் கருள்அளிக்கும் ஊன்றியசே வடிக்கே
அவ்வடிகள் அணிந்ததிரு அலங்காரக் கழற்கே

Koviloor Digital Library

கொடுக்கின்றேன் மற்றவர்க்குக் கொடுப்பேனோ அவர்தாம்
குறித்திதனை வாங்குவரோ அணிதரம்தாம் உளரோ
எடுக்கின்றேன் கையில்மழுச் சிற்சபைபொற் சபைவாழ்
இறைவர்அலால் என்மாலைக் கிறைவர்இலை எனவே. 81

2526 நான்தொடுக்கும் மாலைஇது பூமாலை எனவே
நாட்டார்கள் முடிமேலே நாட்டார்கள் கண்டாய்
வான்தொடுக்கும் மறைதொடுக்கும் ஆகமங்கள் தொடுக்கும்
மற்றவையை அணிவார்கள் மதத்துரிமை யாலே
தான்தொடுத்த மாலைஎலாம் பரத்தையர்தோள் மாலை
தனித்திடும்என் மாலைஅருட் சபைநடுவே நடிக்கும்
ஊன்றெடுத்த மலர்கள்அன்றி வேறுகுறி யாதே
ஓங்குவதா தலில்அவைக்கே உரித்தாகும் தோழி. 82

2527 வான்கொடுத்த மணிமன்றில் திருநடனம் புரியும்
வள்ளல்எலாம் வல்லவர்நன் மலர்எடுத்தென் உளத்தே
தான்கொடுக்க நான்வாங்கித் தொடுக்கின்றேன் இதனைத்
தலைவர்பிறர் அணிகுவரோ அணிதரந்தாம் உளரோ
தேன்கொடுத்த சுவைபோலே தித்தித்தென் உளத்தே
திருக்கூத்துக் காட்டுகின்ற திருவடிக்கே உரித்தாம்
யான்கொடுக்கும் பரிசிந்த மாலைமட்டோ தோழி
என்ஆவி உடல்பொருளும் கொடுத்தனன்உள் இசைந்தே. 83

2528 என்மாலை மாத்திரமோ யார்மாலை எனினும்
இறைவரையே இலக்கியமாய் இசைப்பதெனில் அவைதாம்
நன்மாலை ஆகும்அந்தச் சொன்மாலை தனக்கே
நான்அடிமை தந்தனன்பல் வந்தனம்செய் கின்றேன்
புன்மாலை பலபலவாப் புகல்கின்றார் அம்மா
பொய்புகுந்தாற் போல்செவியில் புகுந்தோறும் தனித்தே
வன்மாலை நோய்செயுமே கேட்டிடவும் படுமோ
மன்றாடி பதம்பாடி நின்றாடும் அவர்க்கே. 84

2529 உரியபெருந் தனித்தலைவர் ஓங்குசடாந் தத்தின்
உட்புறத்தும் அப்புறத்தும் ஒருசெங்கோல் செலுத்தும்
துரியர்துரி யங்கடந்த சுகசொருபர் பொதுவில்
சுத்தநடம் புரிகின்ற சித்தர்அடிக் கழலே
பெரியபதத் தலைவர்எலாம் நிற்குநிலை இதுஓர்
பெண்உரைஎன் றெள்ளுதியோ கொள்ளுதியோ தோழி
அரியபெரும் பொருள்மறைகள் ஆகமங்கள் உரைக்கும்
ஆணையும்இங் கீதிதற்கோர் ஐயம்இலை அறியே. 85

Koviloor Digital Library

2530 மதம்எனும்பேய் பிடித்தாட்ட ஆடுகின்றோர் எல்லாம்
மன்றிடத்தே வள்ளல்செயும் மாநடம்காண் குவரோ
சதம்எனவே இருக்கின்றார் படுவதறிந் திலரே
சாகாத கல்விகற்கும் தரம்இவர்க்கும் உளதோ
பதம்அறியா இந்தமத வாதிகளோ சிற்றம்
பலநடங்கண் டுய்ந்தேனைச் சிலபுகன்றார் என்றாய்
சுதைமொழிநீ அன்றுசொன்ன வார்த்தைஅன்றோ இன்று
தோத்திரஞ்செய் தாங்காங்கே தொழுகின்றார் காணே. 86

2531 எவ்வுலகில் எவ்வெவர்க்கும் அரும்பெருஞ்சோ தியரே
இறைவர்என்ப தறியாதே இம்மதவா திகள்தாம்
கவ்வைபெறு குருடர்கரி கண்டகதை போலே
கதைக்கின்றார் சாகாத கல்விநிலை அறியார்
நவ்விவிழி யாய்இவரோ சிலபுகன்றார் என்றாய்
ஞானநடம் கண்டேன்மெய்த் தேன்அமுதம் உண்டேன்
செவ்வைபெறு சமரசசன் மார்க்கசங்கந் தனிலே
சேர்ந்தேன்அத் தீமொழியும் தேமொழிஆ யினவே. 87

2532 பெருகியபே ரருளுடையார் அம்பலத்தே நடிக்கும்
பெருந்தகைஎன் கணவர்திருப் பேர்புகல்என் கின்றாய்
அருகர்புத்த ராதிஎன்பேன் அயன்என்பேன் நாரா
யணன்என்பேன் அரன்என்பேன் ஆதிசிவன் என்பேன்
பருகுசதா சிவம்என்பேன் சத்திசிவம் என்பேன்
பரமம்என்பேன் பிரமம்என்பேன் பரப்பிரமம் என்பேன்
துருவுசுத்தப் பிரமம் என்பேன் துரியநிறை வென்பேன்
சுத்தசிவம் என்பன்இவை சித்துவிளை யாட்டே. 88

2533 சிற்சபையில் நடிக்கின்ற நாயகனார் தமக்குச்
சேர்ந்தபுறச் சமயப்பேர் பொருந்துவதோ என்றாய்
பிற்சமயத் தார்பெயரும் அவர்பெயரே கண்டாய்
பித்தர்என்றே பெயர்படைத்தார்க் கெப்பெயர்ஒவ் வாதோ
அச்சமயத் தேவர்மட்டோ நின்பெயர்என் பெயரும்
அவர்பெயரே எவ்வுயிரின் பெயரும்அவர் பெயரே
சிற்சபையில் என்கணவர் செய்யும்ஒரு ஞானத்
திருக்கூத்துக் கண்டளவே தெளியும்இது தோழி. 89

2534 எப்பொருட்கும் எவ்வுயிர்க்கும் உள்ளகத்தும் புறத்தும்
இயல்உண்மை அறிவின்ப வடிவாகி நடிக்கும்
மெய்ப்பொருளாம் சிவம்ஒன்றே என்றறிந்தேன் உனக்கும்
விளம்புகின்றேன் மடவாய்நீ * கிளத்துகின்றாய் மீட்டும்

* கிளத்துகின்றாய் – கிளம்புகின்றாய் படி வேறுபாடு

Koviloor Digital Library

இப்பொருள்அப் பொருள்என்றே இசைப்பதென்னே பொதுவில்
இறைவர்செயும் நிரதிசய இன்பநடந் தனைநீ
பைப்பறவே காணுதியேல் அத்தருணத் தெல்லாம்
பட்டநடுப் பகல்போல வெட்டவெளி யாமே. 90

2535 காணாத காட்சியெலாம் காண்கின்றேன் பொதுவில்
கருணைநடம் புரிகின்ற கணவரைஉட் கலந்தேன்
கோணாத மேல்நிலைமேல் இன்பஅனு பவத்தில்
குறையாத வாழ்வடைந்தேன் தாழ்வனைத்தும் தவிர்ந்தேன்
நாணாளும் திருப்பொதுவில் நடம்பாடிப் பாடி
நயக்கின்றேன் நற்றவரும் வியக்கின்ற படியே
மாணாகம் பொன்ஆகம் ஆகவரம் பெற்றேன்
வள்ளல்அருள் நோக்கடைந்தேன் கண்டாய்என் தோழி. 91

2536 சாதிசம யங்களிலே வீதிபல வகுத்த
சாத்திரக்குப் பைகள்எல்லாம் பாத்திரம்அன் றெனவே
ஆதியில்என் உளத்திருந்தே அறிவித்த படியே
அன்பால்இன் றுண்மைநிலை அறிவிக்க அறிந்தேன்
ஓதிஉணர்ந் தோர்புகழும் சமரசசன் மார்க்கம்
உற்றேன்சிற் சபைகாணப் பெற்றேன்மெய்ப் பொருளாம்
சோதிநடத் தரசைஎன்றன் உயிர்க்குயிராம் பதியைச்
சுத்தசிவ நிறைவைஉள்ளே பெற்றுமகிழ்ந் தேனே. 92

2537 சரியைநிலை நான்கும்ஒரு கிரியைநிலை நான்கும்
தனியோக நிலைநான்கும் தனித்தனிகண் டறிந்தேன்
உரியசிவ ஞானநிலை நான்கும்அருள் ஒளியால்
ஒன்றொன்றா அறிந்தேன்மேல் உண்மைநிலை பெற்றேன்
அரியசிவ சித்தாந்த வேதாந்த முதலாம்
ஆறந்த நிலைஅறிந்தேன் அப்பால்நின் றோங்கும்
பெரியசிவ அனுபவத்தால் சமரசசன் மார்க்கம்
பெற்றேன்இங் கிறவாமை உற்றேன்காண் தோழி. 93

2538 நான்பசித்த போதெல்லாம் தான்பசித்தார் ஆகி
நல்லதிரு அமுதளித்தே அல்லல்பசி தவிர்த்தே
ஊன்பதித்த என்னுடைய உளத்தேதம் முடைய
உபயபதம் பதித்தருளி அபயம்எனக் களித்தார்
வான்பதிக்கும் கிடைப்பரியார் சிற்சபையில் நடிக்கும்
மணவாளர் எனைப்புணர்ந்த புறப்புணர்ச்சித் தருணம்
தான்பதித்த பொன்வடிவம் தனைஅடைந்து களித்தேன்
சாற்றும்அகப் புணர்ச்சியின்ஆம் ஏற்றம் உரைப் பதுவே. 94

Koviloor Digital Library

2539 துருவுபர சாக்கிரத்தைக் கண்டுகொண்டேன் பரம
சொப்பனங்கண் டேன்பரம சுழுத்தியுங்கண் டுணர்ந்தேன்
குருபிரம சாக்கிரத்தைக் கண்டேன்பின் பிரமம்
குலவியசொப் பனங்கண்டேன் சிவசுழுத்தி கண்டேன்
குருதுரியம் காண்கின்றேன் சமரசசன் மார்க்கம்
கூடினேன் பொதுவில்அருட் கூத்தாடும் கணவர்
மருவிடப்பெற் றவர்வடிவம் நான்ஆனேன் களித்து
வாழ்கின்றேன் எதிர்அற்ற வாழ்க்கையில்என் தோழி. 95

2540 தனிப்படும்ஓர் சுத்தசிவ சாக்கிரநல் நிலையில்
தனித்திருந்தேன் சுத்தசிவ சொப்பனத்தே சார்ந்தேன்
கனிப்படுமெய்ச் சுத்தசிவ சுழுத்தியிலே களித்தேன்
கலந்துகொண்டேன் சுத்தசிவ துரியநிலை அதுவாய்ச்
செனிப்பிலதாய் எல்லாமாய் அல்லதுவாம் சுத்த
சிவதுரியா தீதத்தே சிவமயமாய் நிறைந்தேன்
இனிப்புறுசிற் சபைஇறையைப் பெற்றபரி சதனால்
இத்தனையும் பெற்றிங்கே இருக்கின்றேன் தோழி. 96

2541 அருட்ஜோதித் தலைவர்எனக் கன்புடைய கணவர்
அழகியபொன்மேனியைநான்தழுவிநின்ற தருணம்
இருட்சாதித் தத்துவங்கள் எல்லாம்போ யினவால்
எங்கணும்பே ரொளிமயமாய் இருந்தனஆங் கவர்தாம்
மருட்சாதி நீக்கிஎனைப் புணர்ந்தஒரு தருணம்
மன்னுசிவா னந்தமயம் ஆகிநிறைவுற்றேன்
தெருட்சார்பில் இருந்தோங்கு சமரசசன் மார்க்கத்
திருச்சபைக்கண் உற்றேன்என் திருக்கணவ ருடனே. 97

2542 புறப்புணர்ச்சி என்கணவர் புரிந்ததரு ணந்தான்
புத்தமுதம் நான்உண்டு பூரித்த தருணம்
சிறப்புணர்ச்சி மயமாகி அகப்புணர்ச்சி அவர்தாம்
செய்ததரு ணச்சுகத்தைச் செப்புவதெப் படியோ
பிறப்புணர்ச்சி விடயமிலை சுத்தசிவா னந்தப்
பெரும்போகப் பெருஞ்சுகந்தான் பெருகிஎங்கும் நிறைந்தே
மறப்புணர்ச்சி இல்லாதே நான்அதுவாய் அதுஎன்
மயமாய்ச்சின் மயமாய்த்தன் மயமான நிலையே. 98

2543 தாயினும்பே ரருளுடையார் என்னுயிரில் கலந்த
தனித்தலைவர் நான்செய்பெருந் தவத்தாலே கிடைத்தார்
வாயினும்ஓர் மனத்தினும்மா மதியினும்எத் திறத்தும்
மதித்தளத்தற் கருந்துரிய மன்றில்நடம் புரிவார்

Koviloor Digital Library

ஆயினும்என் அளவின்மிக எளியர்என என்னை
அகம்புணர்ந்தார் புறம்புணர்ந்தார் புறப்புணர்ச்சித் தருணம்
தூயஒளி பெற்றழியா தோங்குவடி வானேன்
சுகமயமாம் அகப்புணர்ச்சி சொல்லுவதெப் படியோ. 99

2544 அறியாத பருவத்தே என்னைவலிந் தழைத்தே
ஆடல்செயும் திருவடிக்கே பாடல்செயப் பணித்தார்
செறியாத மனச்சிறியேன் செய்தபிழை எல்லாம்
திருவிளையாட் டெனக்கொண்டே திருமாலை அணிந்தார்
பிறியாமல் என்னுயிரில் கலந்துகலந் தினிக்கும்
பெருந்தலைவர் நடராயர் எனைப்புணர்ந்தார் அருளாம்
அறிவாளர் புறப்புணர்ச்சி எனைஅழியா தோங்க
அருளியதீண் டகப்புணர்ச்சி அளவுரைக்க லாமே. 100

திருச்சிற்றம்பலம்

148. சத்திய வார்த்தை

அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

2545 சிவம்எ னும்பெயர்க் கிலக்கியம் ஆகிஎச் செயலும்தன் சமுகத்தே
நவநி றைந்தபேர் இறைவர்கள் இயற்றிட ஞானமா மணிமன்றில்
தவநி றைந்தவர் போற்றிட ஆனந்தத் தனிநடம் புரிகின்றான்
எவன்அ வன்திரு வாணைஈ திசைத்தனன் இனித்துய ரடையேனே. 1

கொச்சகக் கலிப்பா

2546 பிச்சுலகர் மெச்சப் பிதற்றிநின்ற பேதையனேன்
இச்சைஎலாம் எய்த இசைந்தருளிச் செய்தனையே
அச்சமெலாம் தீர்ந்தேன் அருளமுதம் உண்கின்றேன்
நிச்சலும்பே ரானந்த நித்திரைசெய் கின்றேனே. 2

149. சத்திய அறிவிப்பு

எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

2547 ஐயன்அருள் வருகின்ற தருணம்இது கண்டீர்
ஐயம்இலை ஐயம்இலை ஐயன்அடி ஆணை
மெய்யன்எனை ஆட்கொண்ட வித்தகன்சிற் சபையில்
விளங்குகின்ற சித்தன்எலாம் வல்லஒரு விமலன்
துய்யன்அருட் பெருஞ்ஜோதி துரியநட நாதன்
சுகஅமுதன் என்னுடைய துரைஅமர்ந்திங் கிருக்க
வையமிசைத் திருக்கோயில் அலங்கரிமின் விரைந்தே
மணியாலும் பொன்னாலும் மலராலும் வியந்தே. 1

Koviloor Digital Library

2548 தனித்தலைமைப் பெரும்பதிஎன் தந்தைவரு கின்ற
தருணம்இது சத்தியம்காண் சகதலத்தீர் கேண்மின்
இனித்தநறும் கனிபோன்றே என்னுளம்தித் திக்க
இன்னமுதம் அளித்தென்னை ஏழுலகும் போற்ற
மனித்தஉடம் பிதைஅழியா வாய்மைஉடம் பாக்கி
மன்னியசித் தெல்லாம்செய் வல்லபமும் கொடுத்தே
கனித்தசிவா னந்தம்எனும் பெரும்போகம் தனிலே
களித்திடவைத் திடுகின்ற காலையும் இங் கிதுவே. 2

2549 சத்தியவான் வார்த்தைஇது தான் உரைத்தேன் கண்டாய்
சந்தேகம் இலைஇதனில் சந்தோடம் உறுவாய்
இத்தினமே அருட்ஜோதி எய்துகின்ற தினமாம்
இனிவரும்அத் தினங்கள்எலாம் இன்பம்உறு தினங்கள்
சுத்தசிவ சன்மார்க்கம் துலங்கும்எலா உலகும்
தூய்மைஉறும் நீஉரைத்த சொல்அனைத்தும் பலிக்கும்
செத்தவர்கள் எழுந்துலகில் திரிந்துமகிழ்ந் திருப்பார்
திருவருட் செங்கோல் எங்கும் செல்லுகின்ற தாமே. 3

2550 என்சாமி எனதுதுரை என்உயிர்நா யகனார்*
இன்றுவந்து நான்இருக்கும் இடத்தில்அமர் கின்றார்
பின்சாரும் இரண்டரைநா ழிகைக்குள்ளே எனது
பேர்உடம்பில் கலந்துளத்தே பிரியாமல் இருப்பார்
தன்சாதி உடையபெருந் தவத்தாலே நான்தான்
சாற்றுகின்றேன் அறிந்திதுதான்✿ சத்தியம்சத் தியமே
மின்சாரும் இடைமடவாய் என்மொழிநின் தனக்கே
வெளியாகும் இரண்டரைநா ழிகைகடந்த போதே. 4

திருச்சிற்றம்பலம்

"இங்ஙனம் எல்லாம் வல்லவர் ஓதுக என்றபடி உரைத்துளேன்"

---

* நாயகமே – பிற பதிப்புகள்

✿ அறிந்ததிது – வே.ப.மு. பதிப்பு

Koviloor Digital Library

150. ஜோதி ஜோதி ஜோதி

2551 ஜோதி ஜோதி ஜோதி சுயம்
ஜோதி ஜோதி ஜோதி பரம்
ஜோதி ஜோதி ஜோதி அருள்
ஜோதி ஜோதி ஜோதி சிவம் 1

2552 வாமஜோதி சோமஜோதி வானஜோதி ஞானஜோதி
மாகஜோதி யோகஜோதி வாதஜோதி நாதஜோதி
ஏமஜோதி வியோமஜோதி யேறுஜோதி வீறுஜோதி
ஏகஜோதி ஏகஜோதி ஏகஜோதி ஏகஜோதி. 2

2553 ஆதிநீதி வேதனே ஆடல்நீடு பாதனே
வாதிஞான போதனே வாழ்கவாழ்க நாதனே. 3

திருச்சிற்றம்பலம்

திருஅருட்பா ஆறாம் திருமுறை முற்றிற்று

அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி

Koviloor Digital Library

பல்வகைய தனிப்பாடல்கள்

Koviloor Digital Library

1. குடும்ப கோஷம்

காப்பு

அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

1 பூவுலகும் பொன்னுலகும் புகழ்தவத்தில்
பெரியர்உளம் புனித மான
தேவுலகென் றமர்ந்தருளும் சிவகளிற்றை
ஐந்துகரத் தெய்வந் தன்னை
மூவுலகும் துதிஆறு முகத்தமுதை
எம்குருவை முக்கட் கோவை
நாவுலகு நயப்பெய்த வழுத்திஎம
துறுவினையின் நவைகள் தீர்ப்பாம். 1

2 ஆனைமுகத் தனைஆறு முகத்தனைஐம்
முகத்தனைப்பா லவளைப் பூதச்
சேனைமுகத் தலைவனைச்சண் டேசுரனைக்
கவுணியகோத் திரநம் கோவைச்
சோனைமுகத் தருள்திருத்தாண் டகம்புனைந்த
அப்பனைவன் தொண்டத் தேவை
வானைமுகத் தவர்வழுத்தும் வாதவூர்
அடிகளையாம் வணங்கி வாழ்வாம். 2

3 தெறுங்கைஆ னனம்உரித்த சிவனேஇக்
குடும்பத்தின் செய்கை சொல்லப்
பெறுங்கையாம் வகைஒன்றும் தெரியாமே
சொலப்புகுந்த பேதை யேனைக்
குறுங்கையால் மலைஅணைத்துக் கொளநினைத்தோன்
என்கேனோ கொளும் தூசின்றி
வெறுங்கையால் முழம்போடும் வேலையிலா
வீணன்என விளம்பு கேனோ. 3

4 சீர்பாட்டில் சிறந்தசிவ குருவேஇக்
குடும்பத்தின் திறம்பா டற்கே
ஓர்பாட்டிற் கொருகோடிப் பசும்பொன்வரும்
ஆனாலும் உன்பேர் அன்றிப்
பார்பாட்டில் சிறுதெய்வப் பேர்களைமுன்
னிலைவைத்துப் பாடேன் இந்த
நேர்பாட்டில் பிழைகுறியேல் அருட்செவிக்கேற்
பித்தல்அருள் நிலைமை யன்றோ. 4

Koviloor Digital Library

அவை அடக்கம்
கலி நிலைத்துறை

5 மாநில மீதிந் நூன்முறை செய்தது மனைமேவும்
நான்எனில் நானே நாணமி லேனை நகுகின்றேன்
ஈனமில் புலவீர் என்னுள் அமர்ந்தருள் இறைஎம்மான்
தான்எனில் அடியேன் அவைசொல் அடக்கஞ் சதுரன்றே. 5

1. குருதரிசனப் படலம்
கலிவிருத்தம்
திருச்சிற்றம்பலம்

6 நீர்வளம் நிலவளம் நிறைந்த பொற்பது
கார்வளர் பொழில்புடை கவின்ற காட்சிய
தேர்வளர் நலனெலாம் என்றும் உள்ளது
சீர்வளர் தலங்களுள் திலகம் என்பது. 1

7 திருவளர் புயத்தனும் திசைமு கத்தனும்
தருவளர் மகத்தனும் சார்ந்து நாடொறும்
மருவளர் மலர்கொடு வழிபட் டெண்ணிய
உருவளர் சிறப்பெலாம் உற்ற மாண்பது. 2

8 அற்றமில் சண்பைய ராதி மூவரும்
சொற்றமிழ்ப் பதிகங்கள் தோறும் சேர்வது
நற்றவர் புகழ்வது நாயினே னுக்கும்
கற்றவர் உறவினைக் காட்டி நின்றது. 3

9 தவநெறி தழைத்துமெய்ச் சாந்தம் பூத்துவன்
பவநெறி காய்த்தருட் பழம்ப ழுத்திடும்
நவநெறி தரும்பர நவிற்றும் சைவமாம்
சிவநெறி தரும்தருச் சிறந்த சீரது. 4

10 சோலையும் தடங்களும் துரிசி லாஅறச்
சாலையும் மடங்களும் சத்தி ரங்களும்
பாலையும் பழத்தையும் பருகல் ஒத்தசொன்
மாலையும் தொடுப்பவர் வாழ்வும் உள்ளது. 5

11 அந்தணர் அறுதொழில் ஆற்றும் சால்பது
மந்தண மறைமுடி வழுத்தும் மாண்பது
சுந்தர நீற்றணி துலங்கும் அன்பர்கள்
வந்துவந் தனைசெய்து வசிக்கும் பேறது. 6

Koviloor Digital Library

12 பூவெலாம் புதுமணம் பொலியும் ஒண்தளிர்க்
காவெலாம் சிவமணம் கமழு கின்றது
தேவெலாம் செறிவது சிவம்க னிந்தமெய்ந்
நாவெலாம் புகழ்வது நன்மை சான்றது. 7

13 சாலியும் போலிய தழைகொள் கன்னலின்
வேலியு முக்கனி விழைவும் தாழைகள்
கோலிய பொங்கரும் குறைவி லாதது
பாலியின் வடகரைப் படியின் மேலது. 8

14 எண்டிசை புகழநின் றிலங்கு கின்றது
அண்டர்கள் முடிவினும் அழிவி லாதது
தொண்டமண் டலவடற் றூய கீழ்த்திசை
கண்டல்சூழ் கடற்கரை காண உள்ளது. 9

15 திருமகள் கலைமகள் சிறந்த ஞானமாம்
குருமகள் மூவரும் கூடி வாழ்வது
தெருமரல் அகற்றும்எம் சிவபி ரான்மலை
ஒருமகள் உடனுறை ஒற்றி மாண்பதி. 10

16 அப்பெரும் பதியிடை அயன்முன் னாகிய
முப்பெருந் தலைவரும் முடி வணங்கிட
ஒப்பருஞ் சிவபிரான் உருவு கொண்டருள்
செப்பருங் கோயிலைச் சேர்ந்த சூழலில். 11

17 கிள்ளைகள் ஆகமம் கிளக்கக் கேட்டதற்
குள்ளுணர் பூவைகள் உரைவி ரித்திடத்
தெள்ளிய மயிலினம் தேர்ந்துள் ஆனந்தம்
கொள்ளைகொண் டயல்நடம் குயிற்ற உள்ளது. 12

18 சைவயா கங்களும் சாற்று மற்றைய
தெய்வயா கங்களும் செய்ய ஓங்கிய
மைவிடாப் புகையொடு மழையும் கூடினும்
மெய்விடார் உளமென விளங்கு கின்றது. 13

19 கண்டவர் உளமெலாம் கட்டு கின்றது
தண்டமிழ்க் கவிதைபோல் சாந்தம் மிக்கது
விண்டயன் பதமுதல் விரும்பத் தக்கது
எண்டரும் தவம்அர சிருக்கும் சீரது. 14

Koviloor Digital Library

20 வந்தியார் அமுதையும் வாங்கி உண்டருள்
அந்தியார் வண்ணர்தம் அருளில் நின்றது
நந்திஆச் சிரமமாம் நாமம் பெற்றது
நிந்தியா நெறியதோர் நிலையுண் டாயிடை. 15

21 வேதமும் ஆகம விரிவும் மற்றைநூற்
போதமும் மன்னுறப் போதிப் போர்களும்
வாதமும் விதண்டமும் மருளுறா வகைப்
பேதமும் அபேதமும் பேசு வோர்களும். 16

22 பவமெலாம் தவிர்த்தருட் பதம்அ ளிப்பது
தவமலா திலைஎனச் சார்ந்து ளோர்களும்
அவமெலாம் அகன்றபின் அனுப விப்பது
சிவமலா திலைஎனச் சேர்ந்து ளோர்களும். 17

23 ஞான யோகத்தினை நண்ணி னோர்களும்
மோனமே பொருள்என முன்னி னோர்களும்
வானமே பெறினும்இம் மாய வாழ்க்கையில்
ஊனமே இருத்தல்என் றுவட்டி னோர்களும். 18

24 மறந்திலர் உலகர்இவ் வஞ்ச வாழ்க்கையைத்
துறந்திலர் என்எனச் சொல்கின் றோர்களும்
இறந்திலர் பிறந்திலர் இன்பம் எய்தினர்
வறந்திலர் தவர்என வகுக்கின் றோர்களும். 19

25 தென்சொலும் வடசொலும் தெரிந்து ளோர்களும்
இன்சொலும் வாய்மையும் இசைக்கின் றோர்களும்
வன்சொலும் மடமையும் மறமும் வஞ்சமும்
புன்சொலும் உடையர்பால் பொருந்து றார்களும். 20

26 கருநெறித் தமிழ்எலாம் கைய கன்றுமெய்த்
திருநெறித் தமிழ்மறை தேர்ந்து ளோர்களும்
அருள்நெறித் தனிஎழுத் தைந்தின் உட்பொருள்
குருநெறித் தகவுறக் குறிக்கின் றோர்களும். 21

27 இரவொடு பகல்இலா திருக்கின் றோர்களும்
வரவொடு போக்கிலா வழிநின் றோர்களும்
கரவொடு மாயையைக் கடிந்த சீலரும்
உரவொடு மெய்ந்நிலை ஓங்கு வோர்களும். 22

Koviloor Digital Library

28 பொறிவழி மனம்செலாப் புனித சித்தரும்
அறிவழி அவ்வழி அகன்று ளோர்களும்
செறிவழி யாவகைச் சிறந்த முத்தரும்
குறிவழி திறம்புறாக் கொள்கை யோர்களும். 23

29 மால்வகை முழுவதும் நீக்கி மன்னரும்
நூல்வகை ஞானத்தின் நுவலு கின்றதோர்
நால்வகை நிலைகளில் நண்ணு வோர்களும்
ஏல்வகை இணையடி ஏத்திச் சூழ்ந்திட. 24

30 தெள்ளிய அமுதவெண் திங்க ளோநறை
துள்ளிய நறுமணம் சூழ்ந்த லர்ந்திடும்
ஒள்ளிய கமலமோ என்ன ஓங்கிய
வள்ளிய திருமுக மண்ட லத்திலே. 25

31 கடைவரை நிறைபெறும் கருணை வெள்ளமேல்
மடைதிறந் தொழுகிவான் வழிந்து பாரெலாம்
தடைபடாத் தண்ணளி ததும்பி ஆனந்தக்
கொடைதரும் விழிமலர் குலவி வாழ்ந்திட 26

32 சிறைதெறும் சிவசிவ சிவஎன் றன்பொடு
மறைமொழி சிறக்கும்வாய் மலரும் விண்ணக
நிறையமு தொழுகிவெண் ணிலவ லர்ந்தருள்
இறைபெறும் புன்னகை எழிலும் ஓங்கிட 27

33 வேதபுத் தகம்திகழ் மென்கை யும்திருப்
பாதபங் கயங்களும் பரவு நீற்றொளி
போதஉத் தூளனம் பொலிந்த மேனியும்
ஓதுகண் மரங்களும் உருகத் தோன்றிட 28

34 அருஞ்சிவ ஞானமும் அமல இன்பமும்
திருத்தஓர் உருக்கொடு சேர்ந்த தென்னவே
தரும்சிவ குருஎனும் தக்க தேசிகன்
இருந்தனன் இருந்தவா றிருந்த நாளினே. 29

அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

35 ஒருநாளில் ஒருமகன்ஓர் பதினாறாண்
டகவைநல முடையான் ஒற்றித்
திருநாளில் எம்பெருமான் தியாகேசன்
திருப்பவனிச் சேவை செய்து

Koviloor Digital Library

பருநாள் மலர்த்தடம்சூழ்ந் தெழில்பெறும்அவ்
வாச்சிரம வனத்துட் போந்து
கருநாளின் கரிசறுக்கும் குருநாதன்
இருக்கைஎதிர் கண்டான் மன்னோ. 30

36 கண்டவன்அக் குருநாதன் கடைக்கணிக்கப்
பெற்றதனால் கடத்தில் சற்றே
திண்டகுதே றிடச்சிறிது தெளிநீர்போல்
தெளிந்தறிவு சிறிது தோன்றத்
தண்டம்எனக் கீழ்விழுந்து வணங்கிஎதிர்
நின்றுகரம் தலைமேற் கூப்பிப்
பண்டுறும்அன் பொடுவிழிகள் நீர்சொரிய
வியந்துதுதி பண்ணு வானால். 31

37 கருணைநெடுங் கடல்என்கோ கல்லாலின்
அடிஅமர்ந்த கடவுள் என்கோ
அருணகிரிக் கருள்புரிந்த ஆறுமுகக்
குருஎன்கோ அமுதம் என்கோ
மருள்நலிய வரும்பிறவி மருந்தென்கோ
அடியேன்கண் மணிஎன் கோமெய்த்
தெருள்நிறைந்த சிவகுருவே நின்தனைஈண்
டெவ்வாறு சிந்திக் கேனே. 32

38 என்றானைக் கருணையொடும் சிவகுருஅங்
கெதிர்நோக்கி இளையோய் உன்றன்
நன்றான சரிதம்எது நவிலுதிஎன்
றுரைத்தருள ஞான யோகம்
குன்றாத குணக்குன்றே குறையாத
குளிர்மதியே குருவே என்றும்
பொன்றாத நிலைஅருள்வோய் கேட்டருள்க
எனவணங்கிப் புகல்வான் மாதோ. 33

39 கற்றவர்சூழ் இத்தலத்துக் கைங்கடிகை
எல்லைதனில் கவின்சேர் சென்னை
உற்றடியேன் இருக்கும்ஊர் சூத்திரர்தம்
குலத்து ஆசை உடையான் என்னைப்
பெற்றவன்பேர் வினைச்சிஎனைப் பெற்றவள்பேர்
எனக்குமுன்னே பிறந்தார் மற்றும்
சுற்றமிக உடையேன்சஞ் சலன்எனும்பேர்
என்பெயராச் சொல்வ ராலோ. 34

Koviloor Digital Library

40 குடிப்பேறில் தாய்முலைப்பால் ஏழாண்டு
மட்டுமிகக் குடித்து நாக்குத்
தடிப்பேறிற் றாதலினால் படிப்பேறிற்
றிலைஅடியேன் தனக்குக் கல்விப்
பிடிப்பேறிச் சிறியேன்முன் பிறந்தவர்தம்
பெயர்எழுதப் பெரிதும் கற்று
நடிப்பேறி னார் அவர்முன் நொடிப்பேற
நின்றேன் இந்நாயி னேனே. 35

41 தந்தைஉணர்ந் திவன்மிகநாத் தடிப்பேறி
னான்உடம்பும் தடித்தான் மற்றைப்
புந்தியிலும் காரிருப்புப் பொருப்பு லக்கைக்
கொழுந்தானான் போதஞ் சாரா
மந்தன்எனப் பயின்றகலைச் சாலையினின்
றகற்றிஅவ்வை வாக்கு நாடிப்
பந்தமனைப் பண்டமெலாம் கடைஉழன்று
சுமந்துவரப் பணித்தான் எந்தாய். 36

42 அண்ணுறும்என் தந்தைதாய்க் கடியனேன்
கடைப்பிள்ளை யான தொன்றோ
கண்ணுறுநற் கல்வியினும் கடைப்பிள்ளை
ஆனேன்பின் கருதும் வாழ்க்கை
நண்ணுறுபல் பண்டமெலாம் கொள்வதினும்
கடைப்பிள்ளை நானே ஆனேன்
உண்ணுறும்இவ் வுடலோம்பி ஒதியேபோல்
மிகவளர்ந்தேன் உணர்வி லேனே. 37

43 பெருஞ்செல்வப் பெருக்கத்தில் பிறந்தேன்நான்
பிள்ளையாய் பிறந்த நாள்தொட்
டிருஞ்செல்வத் திந்நாள்மட் டயல்வேறு
குறைசிறிதும் இல்லை எந்தாய்
அருஞ்செல்வம் எனும்கல்வி அறிவில்லாக்
குறைஒன்றே அடைந்திட் டேன்அவ்
வருஞ்செல்வத் தாசையுளேன் பேடிமணம்
நாடிமனம் வருந்தல் போன்றே. 38

44 இன்னவகை உழல்கின்றேன் இத்தலத்தில்
திருநாளென் றிசைக்கக் கேட்டிங்
கென்னனைய சிறுவர்களோ டெய்தினேன்
திருப்பவனி இனிது கண்டேன்

Koviloor Digital Library

பின்னர்என துடனுற்றோர் பிரிந்தனர்நா
யடியேன்முன் பிறப்பிற் செய்த
தன்னனைய தவப்பயனால் தேவேநின்
திருச்சமுகம் தரிசித் தேனே. 39

45 ஈதெனது சரிதம்ஒரு தெய்விகத்தால்
களர்நிலத்தின் இடையே செந்நெல்
பேதமற முளைத்ததுபோல் தேவேநின்
திருச்சமுகப் பெருமை யாலே
மூதறிவு சிறிதென்னுள் முளைத்ததது
பயிராக முழுதுங் கல்விக்
காதலுறு சிறியேனைக் காத்தருள
வேண்டும்எனக் கழறி னானே. 40

46 அன்னவன்சொல் மொழிகேட்டுச் சிவகுருஅங்
கிளநிலா அரும்ப உள்ளே
புன்னகைகொண் டுன்னகத்தில் புரிந்ததுநன்
றாயினும்இப் போது நீஉன்
மன்னகருக் கேகிஅவண் தந்தைதாய்க்
குரைத்தவர்சம் மதம்பெற் றீண்டித்
தொன்னகருக் கெய்துதிஎன் றுரைத்தருளச்
சஞ்சலன்கை தொழுது சொல்வான். 41

47 வேர்ப்புலகின் புவப்புறும்என் தந்தைதாய்
சம்மதத்தை வேண்டி மீண்டே
ஆர்ப்புலவாச் சென்னைநகர் அடைந்தேனேல்
பெருங்குகையில் அமர்ந்த செங்கட்
போர்ப்புலியைப் பார்த்துவரப் போனகதை
யாய்முடியும் பொருளாய் என்னைச்
சேர்ப்புடைய குருமணியே என்செய்கேன்
அறிவறியாச் சிறிய னேனே. 42

48 கண்பார்என் றயர்ந்துபணிந் தழுதிருகண்
ணீர்சொரியக் கலங்கி னானை
நண்பார்மெய்க் குருநாதன் நோக்கிஇவண்
இருந்திடநீ நயப்பாய் அப்பா
பண்பார்இங் குறுமவர்தாம் பிச்சைச்சோ
றுச்சியிலே பரிந்து வாங்கி
உண்பார்மற் றவ்வகைநீ உண்ணுதியோ
உண்ணுதியேல் உறைதி என்றான். 43

Koviloor Digital Library

49 உச்சியிலே பிச்சைஎடுத் துண்பதுவோ
பெரிதெளியேற் கோவா தோடிக்
கச்சியிலே பிச்சைகொண்டு காசியிலே
நீராடிக் கடிது போகிக்
கொச்சியிலே செபமுடித்துக் கொங்கணத்தி
லேபுசித்துக் கொள்ளென் றாலும்
மெச்சிஉளே மிகமகிழ்ந்து செய்வேன்என்
றனைஐயா விட்டி டேலே. 44

50 புல்லமுதே நல்லமுது புரைக்குடிலே
புனைமாடம் புடைக்கும் பாறைக்
கல்லணையே மெல்லணைநாள் கழிந்தபழங்
கந்தையே கலைஎன் றாலும்
அல்லலுறேன் அரசேநின் சொல்லமுதுண்
டருந்தவமா டத்தே வைகி
ஒல்லுமனோ திடஅணைகொண் டருட்போர்வை
போர்த்துநலம் உடுக்கின் மாதோ. 45

51 சைவநீ றணிவிளங்கி நகைதுளும்பி
உபசாந்தம் ததும்பிப் பொங்கித்
தெய்வநீ டருட்கருணை நிறைந்துவழிந்
தழகொழுகிச் செம்பொற் கஞ்சப்
பொய்கைவாய் மலர்ந்தசெழும் போதனைய
நின்முகத்தின் பொலிவு நோக்கும்
செய்கையேன் உலகுறுபுன் சுகம்பொசித்தல்
மிகையன்றோ தேவ தேவே. 46

52 எவ்வகைநின் திருவுளப்பாங் கிருப்பதெளி
யேன்அளவில் எந்தாய் எந்தாய்
அவ்வகைநின் றிடச்சிறிதும் அஞ்சேன்என்
றன்னைவிடேல் ஆள்க என்றே
இவ்வகையில் பலபகர்ந்து விழுந்திறைஞ்சி
எழுந்திரா திருகண் ணீரால்
செவ்வகையில் குருநாதன் திருவடிக்கீழ்
நிறையாது செய்தான் மன்னோ. 47

53 தெருளுறும்அவ் வாச்சிரமத் திருந்துதுற
வறம்காக்கும் செல்வர் எல்லாம்
அருளுறுமெய்ச் சிவகுருவின் அடிவணங்கிச்
சிறியோமை அடர்ந்த பாச

Koviloor Digital Library

மருளுறுவன் கடல்கடத்தி வாழ்வித்த
குணக்கலமே மணியே இந்த
இருளுறும்ஓர் சிறுவனையும் காத்தருள
வேண்டுமென இரந்தார் ஐயன். 48

54 மற்றவனை எழுகஎனக் கருணைபுரிந்
தமலமுகம் மலர்ந்து நோக்கிப்
புற்றரவம் அரைக்கசைத்த ஒற்றிநகர்ப்
பெருமானைப் போது மூன்றும்
நற்றகைஅன் புடன்தரிசித் தவன்கோயிற்
பணியாற்றி நாளும் நம்பால்
கற்றவர்தம் சொல்வழியிற் கலைபயின்று
நெறிநிற்கக் கடவாய் என்று. 49

55 தனிமலர்வாய் மலர்ந்தருளிப் பின்னர்அவண்
மாணாக்கர் தம்மை நோக்கிப்
புனிதநெறி யீர் இவனைப் புதியன்எனக்
கருதாமல் புரிந்து நாளும்
கனிவுறாஉண் டிவன்அகத்தில் கல்லாமை
எனும்இருளைக் கடியும் வண்ணம்
இனியகலை விளக்கிடுவீர் என்றான்சஞ்
சலன்அதுகேட் டின்பம் எய்தா. 50

56 அடியனேன் உய்ந்தனன்நின் அருள்நோக்கம்
பெறற்கேது வாய தூய
நெடியமா தவம்எதுசெய் திருந்தேன்என்
றகம்குளிர்ந்து நெஞ்சந் தேறி
முடியினால் பன்முறைதாழ்ந் துடம்பொடுக்கித்
தூசொடுக்கி முறையால் பேசும்
படியின்வாய்ப் பொத்திஎதிர் நின்றான்பின்
குருநாதன் பணித்த வாறே. 51

57 வேதமுதல் கலைஅனைத்தும் விதிப்படிகற்
றுணர்ந்தறிவால் மேலோர் ஆகிப்
போதமனச் செறிவுடைய மாணாக்கர்
சஞ்சலனைப் புரிந்து நோக்கி
மூதறிவன் தேசிகன்தன் திருவாக்கின்
படிஇன்று முதல்ஓர் கன்னற்
போதுகலை பயின்றுமற்றைப் போதெலாம்
சிவபணியே புரிதி என்றார். 52

Koviloor Digital Library

58 என்றஅருட் சிதம்பரமா முனிவர்அவன்
தனையருகே இருத்தி அன்பால்
ஒன்றியவெண் ணீறணிந்து தூலஎழுத்
தைந்துணர்த்தி உடையான் கோயில்
சென்றுதொழும் நெறியனைத்தும் விளக்கிஅருட்
சிவபணியும் தேற்றி உள்ள
மன்றஅவன் பருவமறிந் ததற்கியைந்த
கலைபயிற்றி மகிழ்வித் தாரால். 53

2. முயற்சிப் படலம்

அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்
திருச்சிற்றம்பலம்

59 அவ்வண்ணம் சஞ்சலன்தான் புரிந்தியற்றும்
முயற்சியெலாம் அளவிட் டோதச்
செவ்வண்ணம் பழுத்தஒற்றிச் சிவக்கொழுந்தின்
திருவருளைச் சேர்ந்தோர்க் கன்றி
இவ்வண்ணம் எனப்பகர்தல் பிறர்க்கரிதே
ஆயினும்அவ் விறைவன் தாளை
வெவ்வண்ணச் சிறியேன்உள் ளமர்த்திஒரு
சிறிதறிய விளம்பு வேனால். 1

60 மேலையிலே படுத்திருந்த வெஞ்சுடரோன்
குணபாலின் விழித்துப் பூவோர்
வேலையிலே முயலுறக்கீழ் வேலையிலே
எழுவதற்கு மேவு மாதி
காலையிலே எழுந்தேகிக் கங்கையிலே
மிக்கதெனக் கருதி மேலோர்
ஓலையிலே பொறித்தநந்தி ஓடையிலே
தெய்வநன்னீர் ஒடி ஆடி. 2

61 வெண்ணிலவு ததும்புதிரு வெண்ணீறைந்
தெழுத்தோதி மிகவும் பூசி
உண்ணிலவு சிவகுருவின் அடித்துணையும்
திருவொற்றி உவந்து மேவும்
கண்ணிலவு நுதற்கரும்பின் கழற்பதமும்
அன்பினொடு கருதிச் சென்றே
எண்ணிலவு குருபரன்தன் திருமுன்அடைந்
தஞ்சலிசெய் திறைஞ்சி மன்னோ. 3

Koviloor Digital Library

62 முன்னறியான் பின்னறியான் முழுமூடன்
என்றென்னை முனியா தாண்ட
நின்னருளை என்னனயான் நிகழ்த்துறுவேன்
பெருங்கருணை நிறைவே தூய
நன்னெறியே நடக்கஅருட் போதமெனும்
செங்கோலை நடத்தா நின்ற
மன்னவனே சிவகுருவாம் வள்ளலே
நின்துணைப்பொன் மலர்த்தாள் போற்றி. 4

63 அருந்தவரும் உணவின்இயல் எதுவென்றால்
இதுஎனவும் அறிய நீநின்று
இருந்ததிசை எதுவென்றால் இதுஎனச்சுட்
டவும்தெரியா திருந்த என்னைத்
திருந்தஅருட் கடைநோக்கஞ் செய்தளித்த
பெருங்கருணைச் செல்வ மேநன்
மருந்தமுதம் அனையஅருட் சிவகுருவே
போற்றிஎன வழுத்திப் பின்னர். 5

64 ஆங்குவிடை கொண்டுகுரு அருள்நோக்கால்
சிவயோக மாதி நண்ணி
ஓங்குதிருக் கூட்டத்தைத் தனித்தனிநின்
றிறைஞ்சிஎனை உவக்கும் வண்ணம்
தீங்ககற்றும் சிவகுருவின் திருவுளத்தை
நாயேன்மேல் திருப்பி இன்பம்
வாங்கிஎனக் களித்தஅருண் மாதவரே
நும்முடைய மலர்த்தாள் போற்றி. 6

65 குருவெல்லை கடவாத குணக்குன்றம்
அனையீரே கோதில் வாய்மை
மருவெல்லை நெறிநின்ற மனத்தீரே
போற்றிஎன வழுத்திப் பின்னர்ப்
பொருவெல்லை அகன்றோங்கும் அன்பினொடும்
அவண்நின்று போந்தவ் வொற்றித்
திருவெல்லை தனைமகிழ்வில் கருவெல்லை
கடக்கவலம் செய்து மாதோ. 7

66 தொழுந்தகைய முனிவரும் கரரும்மிகத்
தொழுதேத்தத் துலங்கும் திங்கட்
கொழுந்தசையச் சடைஅசையக் கூத்தாடிக்
கொண்டேஎம் கோமான் நாளும்

Koviloor Digital Library

எழுந்தருளும் பெருஞ்செல்வத் திருமாட
வீதிதனை இறைஞ்சி ஏத்தி
அழுந்தியசற் பத்தியுடன் மூன்றுமுறை
வலஞ்செய்தங் கதற்குப் பின்னர். 8

67 உளந்தெளிந்து விளங்குகின்ற உத்தமர்செய்
தவமேபோல் ஓங்கி வானம்
அளந்ததிருக் கோபுரம்கண் டஞ்சலிசெய்
திறைஞ்சிமுகி லாதி சூடி
இளங்கதிர்வெண் திங்கள்அணி எம்பெருமான்
சடைமுடிபோல் இலங்கும் தூய
வளங்கெழுமோர் திருமதிலை ஐந்துமுறை
வலமாக வந்து மாதோ. 9

68 உட்புகுந்து திருவாயல்இடைஓங்கும்
விடைக்கொடியை உவந்து நோக்கிக்
கட்புனலில் குளித்திரண்டு கைகுளிரத்
தொழுதிறைஞ்சிக் கருணை செய்யும்
ஒட்புடைய நம்பெருமான் மாளிகையை
வலம்ஏழின் உவந்து செய்து
நட்புடைய மனங்கசிய ஐந்தெழுத்துள்
நினைந்துமெல்ல நடந்து மாதோ. 10

69 அம்பொடித்துப் பகைதுரக்கும் கயமுகனைக்
கருணையினால் ஆளும் வண்ணம்
கொம்பொடித்து வீசிஅவன் கோளொடித்துக்
கோலொடித்துக் கோதில் விண்ணோர்
வம்பொடித்து வாழ்வித்த ஆனைமுகப்
பெருமானை வணங்கித் தன்தே
கம்பொடித்துக் கைகுவித்துக் கருத்துருகிக்
கண்களில்நீர் காணநின்றே. 11

70 தடைஉடைக்கும் தனிமுதலே தண்ணமுதே
எங்கள்பெருந் தகையே ஓங்கி
மடைஉடைக்கும் பெருங்கருணை மதமலையே
ஆனந்த மலையே உள்ளத்
திடைஉடைக்கும் துயர்நீக்கி இன்பளிக்கும்
ஐந்துகரத் திறையே மாயைக்
கடைஉடைக்கும் கழற்புனைதாட் கணபதியே
போற்றிஎனக் கனிந்து மன்னோ. 12

Koviloor Digital Library

71 திறம்பழுத்த அருணந்தி தேவர்அடி
வணங்கிஅருட் சிவத்தின் செய்ய
நிறம்பழுத்த மலரடியை மால்முதலோர்
அழுக்காறு நிரம்ப மேற்கொண்
டறம்பழுத்த விடைஉருவத் தண்ணலே
எனப்பரவி அனுக்ஞை பெற்று
மறம்பழுத்தார்க் கரியதிரு விமானத்தை
அனந்தமுறை வலஞ்செய் தேத்தி. 13

72 வன்னிதியை மருவாத மாதவரும்
மால்அயனும் வணங்கிப் போற்றும்
சந்நிதியைச் சார்ந்துவிழி யானந்த
நீர்வெள்ளந் ததும்பப் பல்கால்
நன்னிதிபெற் றிடப்பணிந்து கரங்குவித்துப்
படம்பக்க நாதன் என்னும்
செந்நிதியிற் பரஞ்சுடரைப் பொன்னிதிகண்
டவன்போல்கண் செழிக்கக் கண்டு. 14

73 உடல்முழுதும் புளகம்எழ உளமுழுதும்
உருக்கம்எழ உவந்தா னந்தக்
கடல்முழுதும் கண்கள்எழக் கரசரணங்
கம்பமெழக் கருத்தி னோடு
மடல்முழுதும் எழமலர்ந்த மலரின்முக
மகிழ்ச்சிஎழ மலிந்த பாசத்
திடல்முழுதும் அகன்றன்பே வடிவாக
நின்றுதுதி செய்வான் மாதோ. 15

74 உடையானே எவ்வுயிர்க்கும் ஒருமுதலே
இளம்பிறைகொண் டோங்கும் கங்கைச்
சடையானே அன்பருளத் தாமரையில்
அமர்ந்தபெருந் தகையே வெள்ளை
விடையானே மறைமுடிபின் விளங்கியமெய்ப்
பொருளேமெய் விளங்கார் தம்மை
அடையானே திருவொற்றி ஆலயத்தெம்
அரசேநின் னடிகள் போற்றி. 16

75 கலைமகளும் திருமகளும் கழுத்தணிந்த
மங்கலநாண் கழற்றா வண்ணம்
அலைகடலின் எழுவிடத்தை அடக்கியருள்
மணிமிடற்றெம் அமுதே தெய்வ

Koviloor Digital Library

மலைமகளை ஒருபுறம்வைத் தலைமகளை
முடியிட்ட மணியே மேருச்
சிலைவளைத்துப் புரம்எரித்த சிறுநகைஎம்
பெருமான்நின் திருத்தாள் போற்றி. 17

76 மறைதேட அயன்தேட மால்தேட
அன்பர்உள மலரி னுள்ளே
இறையேனும் பிரியாமல் இருந்தருளும்
பெருவாழ்வே இறையே என்றும்
குறையாத குளிர்மதியே கோவாத
ஒளிமணியே குணப்பொற் குன்றே
பொறையாளர் வழுத்தும்ஒற்றிப் பூங்கோயில்*
பெருமானே போற்றி போற்றி. 18

77 எனப்பெரிதும் துதித்திறைஞ்சி ஆடுகின்ற
பெருமான்முன் எய்தித் தூக்கும்
வனப்புடைய மலர்ப்பதமும் மாயைதனை
மிதித்தூன்றும் மலர்ப்பொற் றாளும்
மனப்பருவ மலர்மலரக் கண்குளிரக்
கண்டுமிக வணங்கிப் பல்கால்
இனப்பெரியார்க் கின்பருளும் கூத்துடைய
மாமணியே இன்ப வாழ்வே. 19

78 காரணமுக் கண்கொளும்செங் கரும்பேசெங்
கனியேஎன் கண்ணே மேலை
ஆரணத்துட் பொருளாகி அனைத்துமாய்
யாதொன்றும் அல்லா தாகிப்
பூரணசின் மயவெளியில் சச்சிதா
னந்தநடம் புரியுந் தேவே
ஏரணவு நடராயப் பெருமானே**
எம்மானே என்று வாழ்த்தி.+ 20

---

* பூங்கோயில் – ஒற்றியூர்க் கோயிலுக்குப் பூங்கோயில் என்று பெயர். திருவாரூர்க் கோயிலுக்கும் பெயர்.

** பெம்மானே – பொ.சு., பி. இரா., ச.மு.க.

\+ வள்ளற் பெருமானது தொடக்ககாலத் தனிப்பாடல்கள் சிற்சில கொண்ட ஒரு சுவடியில் ஓர் ஏட்டில் இந்தப்பாட்டு மட்டும் பின்வருமாறு காணப்படுவதாக ஆ.பா. குறிப்பிடுகிறார்.
பூரணசின் மயவெளியிற் சச்சிதா நந்தநடம் புரியுந் தேவே
காரணமுக் கண்கொள்ளும்செங் கரும்பேஎன் கண்ணேமெய்க் கடவு ளேநால்
ஆரணமும் கடந்தப்பால் அனைத்துமாய் யாதொன்றும் அல்லா தாகி
ஏரரணவு நடராஜப் பெருமானே எம்மானே என்று போற்றி

Koviloor Digital Library

79 சடையாடச் சடைமீதிற் சலமகளும்
இளமதியும் ததும்பக் கொன்றைத்
தொடையாடக் கருணைவிழிக் கடைதுளும்பப்
புன்னகைஉள் துலங்க வெள்ளைக்
கொடையாட இமயமடக் கொடியாடத்
தனிநெடுவேற் குழந்தை மேவி
இடையாடப் பவனிவரும் எம்பெருமான்
தியாகன்எதிர் இறைஞ்சி நின்று. 21

80 இருந்தேஎன் உளத்திலங்கும் செழுஞ்சுடரே
ஓவாத இன்ப மேயா
வருந்தேறா நிலைநின்ற வான்பொருளே
பவப்பிணியை மாற்றும் தெய்வ
மருந்தேஎன் கண்ணேகண் மணியேசெம்
மணியேஎன் வாழ்வே எங்கள்
பெருந்தேவே தருந்தியாகப் பெருமானே
கடவுளர்தம் பிரானே போற்றி. 22

81 என்றுதுதித் தருள்வடிவிற் கல்லாலின்
அடியமர்ந்த இறைவன் முன்னின்
றொன்றுமனத் தன்புடன்கீழ் விழுந்துபணிந்
தெழுந்திருகை உச்சி கூப்பி
நன்றுணர்ந்த நால்வருக்கன் றருள்மொழிந்த
குருமணியே நாயி னேனை
இன்றுமகிழ்ந் தாட்கொண்ட சிவகுருவே
சற்குருவே என்று வாழ்த்தி. 23

82 மயிலேறும் பெருமான் முன் இறைஞ்சிமலர்க்
கரங்கூப்பி வணங்கி நின்றே
அயிலேறும் கதிர்வேற்கை ஐயாஎன்
அப்பாஎன் அரசே அன்பர்
கையிலேறும் கனியேமுக் கண்ஏறு
பெற்றஇளங் காளாய் நீலக்
குயிலேறு மொழிக்கடவுட் குஞ்சரந்தோய்
களிறேஎன் குருவே போற்றி. 24

83 ஓடுகின்ற சிறுவர்களோ டுடன்கூடி
விளையாட்டே உவந்து நாளும்
ஆடுகின்ற பருவத்தே அடியேனுள்
அமர்ந்தருளி அன்பால் நின்னை

Koviloor Digital Library

நாடுகின்ற வகைசிறிதே அளித்தீண்டு
குருவாகி நலந்தந் துள்கிப்
பாடுகின்ற வகைஅளித்த பரகுருவே
போற்றிஎனப் பரவி மன்னோ*. 25

84 பன்முறைநாத் தழும்பேறத் துதித்துநெடுங்
கடல்முழுதும் பருகிக் கந்நாள்
நன்முறைசெய் மணக்கோலங் காட்டியருள்
பெருமான்முன் நண்ணி நின்று
தொன்முறைமா றாமல் அருள் சுந்தரிசேர்
கல்யாண சுந்த ரர்முன்
சொன்முறைசேர் சுந்தரன்தன் தோழாஎன்
றகங்குளிர்ந்து துதித்து வாழ்த்தி. 26

85 மான்மகனை நான்முகனா வைத்தவன்றன்
சிரநகத்தால் வகிர்ந்து வாங்கித்
தேன்மலர்ப்பொற் கரத்தேந்தும் காபாலி
முன்பணிந்து திருமால் வேதன்
வான்மகனா தியர்தம்மை வருத்தியஅந்
தகன்செருக்கு மாளச் சூலத்
தூன்மலர நுழைத்தேந்தும் வயிரவநிற்
போற்றிஎன உவந்து வாழ்த்தி. 27

86 நிலையாய்நின் றுயர்ந்தவர்கட் கருள்புரியும்
பரம்பரையை நிமலை தன்னைத்
தலையால்மெய் யுறவணங்கி உலகமெலாம்
அளித்தபெருந் தாயே மேருச்
சிலையான்தன் இடத்தமர்ந்த தெள்ளமுதே
ஆனந்தத் தேனே மானே
மலையான்தன் ஒருமகளே வடிவுடைய
இளங்குயிலே மயிலே போற்றி. 28

---

* இப்பாடல் பின்வருமாறுசில பாடபேதங்களுடன் குருட்டாட்டம் எழுதியுள்ள ஏடுகளுள் ஒன்றன் ஒதுக்கிடங்களில் பெருமானாரால் எழுதப்பட்டுள்ளதாக ஆ.பா. குறிப்பிட்டுள்ளார்.
ஓடுகின்ற சிறுவர்களோ டுடன்கூடி விளையாட்டே உவந்து நாளும்
ஆடுகின்ற பருவத்தே அடியேனுள் எழுந்தருளி அன்பால் நின்னை
நாடுகின்ற வகைசிறிதே அளித்தின்று குருவாகி நலந்தந் துன்னைப்
பாடுகின்ற பணிஅளித்த பரகுருவே போற்றிஎனப் பரவி மன்னோ.

Koviloor Digital Library

87 வான்வளர்த்த மலர்க்கொடியே மலைவளர்த்த
மடப்பிடியே மணியே வாசக்
கான்வளர்த்த மலர்க்கோதைக் கனியேமுக்
கனியேபைங் கரும்பே செங்கை
மான்வளர்த்துச் சடையிலேஇள மதிவளர்த்த
ஒருகிழவன் மகிழ வாய்த்த
தேன்வளர்த்த மொழிக்குமரி கௌரிஎன
மறைபுகழ்மா தேவி போற்றி. 29

88 போற்றிஎனப் புகழ்ந்துசண்பைப் புனிதமறைக்
குலமணியைப் போந்து போற்றி
நாற்றிசையும் புகழ்கின்ற நாவரசைப்
பணிந்துசிவ ஞானந் தேறித்
தோற்றியஓர் சங்கிலியால் துடக்குண்ட
யானைதனைத் தொழுது மாயை
மாற்றியநம் மாணிக்க வாசகப்பொன்
மலையடியை வணங்கி மாதோ. 30

89 தொண்டுநிலை சேர்ந்துயர்ந்த சண்டேசர்
முதலோரைத் தொழுது போற்றி
விண்டுமுதல் நெருங்குதிரு வாயலிடை
அன்பினொடு மேவி ஆங்குத்
தண்டுவிழுந் தெனவிழுந்து பணிந்துபணிந்
திருவிழியில் தரள மாலை
கொண்டுநடங் கொண்டுநெறி கொண்டுமகிழ்
கொண்டுமனங் குளிர்ந்தான் பின்னர். 31

90 கருவலகிட் டருள்புரியும் கண்ணுடையான்
விமானத்தின் கனகச் சூழல்
மருவலகின் மணித்திரள்மா ளிகைமண்ட
பங்கள்முதல் வகுத்த எல்லாம்
திருவலகிட் டணிசாந்தத் திருமெழுக்கிட்
டன்பினொடும் திருவா யற்கண்
ஒருவலகில் திரணமொடு புல்லாதி
களைக்களைந்தாங் குவந்து மாதோ. 32

91 புறத்தணுகித் திருமதிலின் புறத்தினும்நல்
திருக்குளத்தின் புறத்தும் ஞானத்
திறத்தர்மகிழ்ந் தேத்துகின்ற திருமாட
வீதியினும் தெரிந்து காலின்

Koviloor Digital Library

உறத்தருமுட் கல்லொடுபுல் லாதிகளை
நீக்கிநல முறுத்திப் பாசம்
அறத்தொழுநல் அறத்தொழுகும் சிவனடியர்க்
கேவல்பல அன்பாற் செய்து. 33

92 கருமுடிக்கும் களம் உடையான் கண்ணுடையான்
எம்முடைய கருத்தன் செய்ய
திருமுடிக்கும் செங்கமலத் திருவடிக்கும்
புனைந்திடுவான் சிறப்ப வைத்த
மருமுடிக்கு மலர்நந்த வனத்தினையுள்
அன்புடனே வணங்கித் தூநீர்
உருமுடிக்கட் சுமந்துகொணர்ந் துட்குளிர
விடுத்துவிடுத் தூட்டி மாதோ. 34

93 தேங்கமழ்பொற் கொன்றைநறும் பாடலம்மா
லதிவகுளம் சிறந்த சாதிக்
கோங்குவழை மயிலைநறு மல்லிகைஒண்
தளவமலர்க் குரவம் தும்பைப்
பாங்கறுகு கூவிளநற் பத்திரமா
தியமிகுசற் பத்தி உள்ளத்
தோங்குறமெய்ப் புனிதமொடும் உவந்துபறித்
தைந்தெழுத்தும் உன்னி ஆங்கே. 35

94 பொன்மாலை யனையகொன்றைப் பூமாலை
முதற்பிணையல் புனித மாலை
என்மாலை யகற்றுடையான் திருமுடிக்குச்
சாத்துதிரு இண்டை மாலை
கன்மாலை நெஞ்சமுறான் கழல்மாலை
தோள்மாலை கன்னி மாலை
மன்மாலை தார்மாலை வகைமாலை
தொடுத்தெடுத்து வந்து மாதோ. 36

95 மீண்டுமருட் கோயிலினுட் புகுந்துச்சிப்
பூசனைசெய் வேலை தன்னில்
ஆண்டவனுக் கணிவித்து வலம்புரிந்து
தொழுதுதுதித் தாடிப் பாடி
ஆண்டமரும் பரிவாரத் தேவர்முதல்
அனைவரையும் அன்பால் ஏத்தி
வேண்டுவிருப் புடன்பிரியா விடைகொண்டு
புறத்தணுகி மேவி ஆங்கண். 37

Koviloor Digital Library

96 சீரேனம் அறியாத திருவடியும்
குருவடியும் சிந்தித் தேகி
யாரேனும் கொலைகுறியார் எமக்குரியார்
எனஅவர்தம் இல்லந் தோறும்
போரேர்நெற் சோறேனும் புதுக்கஞ்சி
யேனும்அன்றிப் புளித்த காடி
நீரேனும் கூழேனும் கிடைத்ததுகை
யேற்றுவந்து நின்று வாங்கி. 38

97 அங்குருவின் தகைதெரிக்கும் ஆச்சிரமத்
திடைஅணுகி அன்பி னோடும்
தங்குருவின் அடிமுடிமண் ணுறவணங்கி
இருகரமும் தலைமேற் கூப்பி
எங்குருவே சிவகுருவே எழிற்குமர
குருவேஇவ் வெளியேன் தன்பால்
இங்குருவிற் கருணைபுரி திருவாக்கின்
படிபிச்சை ஏற்ற தீதால். 39

98 எனத்தொழுது நின்றானைக் கருணையொடும்
கடைக்கணித்தே இறைவன் கோயில்
கனத்தபணி புரிந்தனைநின் இளைத்தஉடல்
ஆங்கதனைக் காட்டு கின்ற
தினத்தவரோ டுண்ணுதிபின் பெய்துதிஈண்
டெனஉரைப்ப இறைஞ்சி வாழ்த்திச்
சினத்தழல்நீத் தருள்மிகுத்த திருக்கூட்டந்
தனைவணங்கிச் சிந்தித் தேத்தி. 40

99 அக்கூட்டந் தனில்உண்ணா அருந்தவரை
வினவிஅவ ரடியில் தாழ்ந்து
மிக்கூட்டும் அன்னையினும் மிகப்பரிவின்
அவர்க்கூட்டி மிகுந்த சேடங்
கைகூட்டக் காணாதே ஆயினும் மற்
றதுகுருவின் கழல்கள் எத்தி
மெய்க்கூட்டம் விழைந்தவன்றான் மிகமகிழ்ச்சி
யுடன்உண்டு விரைந்து மாதோ. 41

100 வாய்பூசிக் கைபூசி வந்துசிவ
குருவின்அடி வணங்கி நின்றான்
தாய்பூசித் தெதிர்நிற்கும் தனையனைப்பார்த்
துரைப்பதுபோல் தயவால் நோக்கிப்

Koviloor Digital Library

பேய்பூசித் திடும்சிறிய பேதையர்போல்
அல்லாது பெரிது மிக்கன்
பாய்பூசித் திறைவனடி வணங்குகின்ற
நல்லோரைப் பணிந்து வாழ்த்தி. 42

101 அன்பிரக்கம் அறிவூக்கம் செறிவுமுதல்
குணங்கள்உற அமைந்து நாளும்
இன்புறக்கண் ணுதலான்தன் திருக்கோயில்
பணிபுரிந்தீண் டிருக்கும் நல்லோர்
துன்பறச்சொல் வழிஎந்த வழிஅந்த
வழிநடந்து துகளில் கல்வி
பொன்புரக்கும் தொழில்வணிகர் போல்பயில்க
எனக்குரவன் புகன்றான் மன்னோ. 43

102 அம்மொழியாஞ் செம்மணியை அடிமுடியின்
அணிந்துமன மலர்ந்து நாயேன்
இம்மொழிஆ ரமுதருந்த என்னஅருந்
தவமுன்னர் இயற்றி னேனோ
செம்மொழிஆ ரணம்பரவும் சிவகுருவே
எனத்துதித்துச் சினங்கொண் டோதும்
வெம்மொழிஒன் றில்லாத திருக்கூட்டத்
தவர்களொடும் மேவி னானால். 44

கலிவிருத்தம்

103 கொற்றவர் புகழும்அக் கூட்டந் தன்னில்வாழ்
முற்றவர் சிதம்பர முனிவர் தம்முனர்
உற்றிடும் சஞ்சலன் உளத்தை ஓர்ந்தவன்
கற்றிடற் கேற்றநற் கலைகள் தேற்றவே. 45

104 உளங்கொண் டங்கவன் தனைஉழை யிருத்திஓர்
வளங்கெழு கன்னலின் மட்டும் இன்சுவை
அளந்தறிந் தூட்டுநல் அன்னை போல்மனக்
களங்கறப் பருவநேர் கலைப யிற்றிட. 46

105 பயின்றனன் சஞ்சலன் பரிந்து தெள்ளமு
தயின்றனன் ஆமென அகங்க ளித்தனன்
வியந்தனன் ஆங்கவர் விடுக்க மீண்டுநல்
வயந்தரு கோயிலின் மருங்கு நண்ணினான். 47

Koviloor Digital Library

106 அன்புடன் புனிதநீ ராடி நீறணிந்
தின்புடன் கண்டிகை எடுத்துப் பூண்டுதன்
துன்பறக் குருபதந் துதித்துக் கோபுரம்
முன்புறப் பணிந்துமா முகனைப் போற்றியே. 48

107 அந்தியார் வண்ணனை அந்திப் பூசனை
சந்தியா நின்றஅச் சமயத் தெய்தியுட்
புந்தியால் நினைந்துடல் புளகம் போர்த்திட
வந்தியா நின்றடி வணங்கி ஏத்தியே. 49

108 பாங்கமர் சிவபரம் பரையை வாழ்த்திக்கை
ஓங்கயிற் பிள்ளையை உவந்து போற்றிநின்
றாங்கமர் மற்றுள அமல மூர்த்திகள்
பூங்கழல் வணங்கிஓர் புறத்தி ருந்தரோ. 50

109 வருநெறி மூலமாம் மந்தி ரத்தினை
மருவிய அக்கமா மணிவ டங்கொடு
இருமைகொள் ஆயிரத் தெட்டின் எல்லையாம்
உருவுறச் செபமுடித் துளத்தின் உன்னியே. 51

110 எழுந்துவீழ்ந் திறைஞ்சிநின் றேத்தி அன்பினில்
அழுந்துநெஞ் சகத்தொடு அமல மாம்சிவக்
கொழுந்தமர் தளிவலங் கொண்டு கண்ணடி
உழுந்துருள் அளவும்வே றுன்னல் இன்றியே. 52

111 மாலயற் கரியநம் வள்ள லார்வளர்
ஆலயத் திரவிடை ஆற்றத் தக்கன்
ஏலநெய்த் திருவிளக்கேறப் பார்த்திடும்
மூலமெய்த் திருப்பணி முதல ஆற்றியே. 53

112 விடைகொடு புறத்துறீஇ விமலன் அன்பர்கட்
கடைவுறப் பணிகள்செய் தகங்கு ளிர்ந்துவான்
தடைபொழில் ஆச்சிர மத்திற் சார்ந்தவண்
இடைமகிழ் குருவடி இறைஞ்சி ஏத்தியே. 54

113 எண்ணுறு தவர்அடிக் கேவல் ஆற்றியும்
கண்ணுறு பாடம்உட் கருதி யும்அவை
நண்ணுறக் கேட்டும்சொல் நயங்கள் நாடியும்
பண்ணுறு பொருள்நலம் பாங்கின் ஓர்ந்துமே. 55

Koviloor Digital Library

114 காமமும் வெகுளியும் கடுஞ்சொல் ஆதிய
நாமமும் கனவினும் நண்ணல் இன்றியே
சேமமும் ஒழுக்கமும் செறிவும் ஆதிய
தாமமும் மணியும்போல் தாங்கி ஓங்கியும். 56

115 கண்வளர்ந் திடுதல்ஐங் கடிகை மற்றைய
திண்வளர் பொழுதெலாம் தேசி கப்பிரான்
பண்வளர் திருவடிப் பணியும் எம்பிரான்
ஒண்வளர் பணிகளும் உஞற்றி வைகினான். 57

116 மாசறு தவர்கள்உள் மகிழ்ந்து நோக்கவும்
தேசிகன் திருவுளம் திரும்பித் தேக்கவும்
ஆசறு கலைபயின் றமர்ந்து ளான்இவன்*
ஏசற இவ்வணம் இயற்று நாளினே. 58

திருச்சிற்றம்பலம்

குடும்ப கோஷம்

இது பெருமானார் இளமையில் சென்னையில் வதிந்தபோது ஒற்றியூர் வழிபாட்டுக் காலத்தில் இயற்றத் தொடங்கிய செய்யுள் நூல். 19 படலங்களைக் கொண்டது.

1. குருதரிசனப் படலம்
2. முயற்சிப் படலம்
3. தந்தையாதியர் வரு படலம்
4. விடைகொடுத்த படலம்
5. தந்தையாதியர் புலம்புறு படலம்
6. நகர்காண் படலம்
7. விண்ணப்பப் படலம்
8. குடும்பகோஷப் படலம்
9. தேசசஞ்சாரப் படலம்
10. துயருறு படலம்
11. தூஷணப் படலம்
12. உலகியற் படலம்
13. பெண்சமுகப் படலம்
14. ஆண்சமுகப் படலம்
15. துறவுப் படலம்
16. சாதுசங்கப் படலம்
17. நிராசைப் படலம்
18. மகிழ்ச்சிப் படலம்
19. உபதேசப் படலம்

எட்டாம் படலத்தின் பெயரே நூற்பெயராக அமைந்துள்ளது. முதல் இரண்டு படலங்களே (116 பாடல்கள்) செய்யப்பெற் றுள்ளன. ஏனைய 17 படலங்களும் பாடப் பெறவில்லை. படலப்பெயர்கள் மட்டுமே குறிக்கப்பெற்றுள்ளன. இப்படலங்களும் பாடி, நூல் முற்றுப்பெற்றிருக்குமாயின் ஆயிரம் பாடல்களுக்குமேற் கொண்டதோர் அரிய சாதன நூலாக விளங்கும். பல பொருள்களும் சாதன முறைகளும் அனுபவங்களும் வெளிப்பட்டிருக்கும்.

இந்நுல் முற்றும் கற்பனை அன்று பெருமானார் உண்மை வரலாற்றையே கற்பனை நயத்துடன் கூறுகின்றார். சஞ்சலன் வரலாறும் பெருமானார் வரலாறும் பெரிதும் ஒத்திருக்கிறது. சென்னை பதிப்பு, 'இக்குடும்பகோஷம் வள்ளற்பெருமானைப் பற்றியதன்று' என்று கூறும். தம் வரலாற்றையும் அனுபவங்களையும் புனைபெயர்களில் பல படலங்களாக பெருமானார் இளமையில் பாடத் தலைப்பட்டனரோ எனக் கருத இடமுண்டு. நூலை முடிக்காது நிறுத்திவிட்டமை இக்கருத்தை மேலும் வலியுறுத்தும்.

* இவண் – பி.இரா. ச.மு.க.

Koviloor Digital Library

2. குருட்டாட்டம்

1. குருட்டு மாணாக்கர் புல்லொழுக்கம்

அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

1 திங்களணி சடைமவுலிச் சிவனேஇக்
கலிமகிமைத் திறத்தில் இங்கே
எங்கள்உல கியலின்உறு பிரமசரி
யத்தின்நெறி என்சொல் கேனோ
தங்கள்உப நயனவிதிச் சடங்குசெயும்
பருவமிது தானே என்றால்
உங்களுக்கிங் கெதுதெரியும் ஒன்பதுதொட்
டைம்பதுமட் டுண்டென் பாரே. 1

2 இவ்வகைஇங் காபாச உபநயன
மல்லாமல் எள்ளிற் பாதிச்
செவ்வகையும் பருவமதில் இச்சடங்கின்
விதிஒன்றும் செய்யக் காணேன்
உவ்வகையோர் நரைத்தலைக்கு விளக்கெண்ணெய்
கிடைத்தபரி சொத்து மேவும்
அவ்வகையோர் தமைச்சிவனே எவ்வகையோர்
எனக்கலியின் அறைவ தன்றே. 2

3 பெருஞ்சவுசம் செய்தல்எனும் சங்கடத்துக்
கென்செய்வோம் பேய்போல் பல்கால்
வருங்குளநீர் கொண்டலம்பல் அமையாதே
மண்ணெடுத்து வருந்தித் தேய்த்து
இருங்கரம்ஆ சனந்தேய்ந்தோம் என்பர்சில
மாணிகள்ஈ தென்னே என்னே
கருங்களமா மணியேஇக் கலிகால
மகிமை என்னால் கழறற் பாற்றோ. 3

4 (இந்தஜபம் அடி)க்கடிஇங் காராலே
செயமுடியும் அந்தோ நீரில்
(வந்துயிர்க்கும் உயி)ர்களுக்கும் சலிப்பாமே
முப்பொழுதும் மலிநீ ராட
(நிந்தைஎன்ப தெ)ங்கேநாம் இங்கேவந்
தகப்பட்டோம் நிலையல் தம்மோர்
(இந்திரவில் லா)ய்ச்சொல்வம் என்பர்சில
மாணிகள்மா தேவ என்னே. 4

Koviloor Digital Library

5 சந்தியா வந்தனையாம் ஏழரைநாட்
சனியொன்றும் தானே போதும் .
சிந்தியாப் பெருஞ்சுமைவெந் தீயினிடைச்
சமிதைகொடு செய்யுஞ் செய்கை
புந்தியால் நினைக்கில் உளந் திடுக்கிடுவ
தென்பர்சிலர் போத மிக்கோர்
வந்தியார் பிட்டருந்து மாமணியே
கலிகால மகிமை ஈதே. 5

6 (கா)கம்போல் நான்குமறை யென்னும்பே
ரவதியைநாம் கதறும் வெப்பம்
(மேகம்போல்) நெய்குடித்தும் போகாதே
என்செய்வோம் ஓவா தொத்த
(தேகமெலாம்) நோகின்ற தெம்மாலே
முடியா தீ தென்பார் சில்லோர்
(மோகமிலா) தளித்தநுதற் கண்கரும்பே
கலிகால முறைமை நன்றே. 6

7 முத்தனைய நகைமாதர் இன்பமிலை
முடிக்குமலர் முடித்தல் இல்லை
இத்தனையும் அழகுசெய்யும் தாம்பூல
தாரணமும் இல்லை அந்தோ
எத்தனைநாள் இவையெல்லாம் இல்லாமல்
இருப்பதுநாம் என்பார் சில்லோர்
சித்தனையர் உளமமர்ந்த சிவக்கொழுந்தே
இதுகலியின் சீர்மை தானே. 7

8 (முருக்கும்)நா ணரைஎங்கே பெரன்னரைநாண்
வேண்டிஇவண் முயல்கின் றார்க்கு
(இருக்கன்)மான் தோலுடுக்கை எங்கேபொற்
சரிகையுடை ஏற்கின் றார்க்கு
(வி)ருக்கங்கோ லென்படு நெடும்பொற்
சித்திரக்கோல் விழைகின் றோர்பால்
(கருக்க)ணிகண் டத்தோய்இக் கலிகால
மாணிகள்சீர் நவிலற் பாற்றோ. 8

9 (இந்தமட்டு)ம் போதும்இனி இல்லொழுக்கம்
சொல்லுமென இசைக்கின் றோரும்
(வந்தமட்டு)ம் சொல்வமன்றி வாராது
நிறுத்துமென வகுக்கின் றோரும்

Koviloor Digital Library

(எந்தமட்டு)ம் நுழைந்ததென்றால் வால்மட்டும்
நுழைந்ததென இசைக்கின் றோரும்
(சிந்தைமட்டா)ம் சிவக்கொழுந்தே இக்கலியின்
உண்டுசில சீடர்க் குள்ளே. 9

10 இல்லறத்தார் ஆகஎமக் கிச்சைஉமக்
கிச்சைஎன்ன என்கின் றோரும்
சொல்லறத்தில் நிற்கஇனி முடியாது
விடுகஎனச் சொல்கின் றோரும்
நல்லறத்தில் நல்லறமொன் றெமக்குரையும்
சுளுவில்என நவில்கின் றோரும்
செல்லறத்திற் சிவக்கொழுந்தே இக்கலியின்
உண்டுசில சீடர்க் குள்ளே. 10

11 (குருவின்சொ)ல் வழிநின்று பணிபுரிவ
தெங்கேஅக் குருவா னோன்தான்
(மருவினிய) நற்சொல்மொழிந் திடினும்வளை
யாதபனை மரம்போல் நிற்பார்
(கருவின்கண்) ணேஇவர்தாம் கற்றுமுடிந்
திட்டார்சொல் கபடம் பேசி
(உருவதனின்) மிகச்சிறியர் போற்பழிப்பர்
தெழிப்பர்நகைத் துலவு வாரே. 11

12 சீர்க்குருவுக் குபசாரம் செய்வதெங்கே
சிவனேஉட் சிரிப்புத் தோன்ற
வேர்க்குருவோ முகக்குருவோ நம்குருவென்
றேஎனமே விரிப்பார் அன்றிப்
பார்க்குரிய மறையோது கின்றோர்போல்
மெணமெணப் பழிச்சொல் ஓதி
ஊர்க்குருவி போல்கிளைப்பர் மாணிகள்இக்
கலிகாலத் துவப்பாம் அன்றே. 12

13 (அற்பமதும்) சுதந்தரந்தான் இல்லாமல்
இக்குருவுக் கடங்கி முன்னே
(நிற்பதுவும் இவ)ன்பின்னே நடப்பதுவும்
இவன்குறிப்பில் நின்று வேதம்
(கற்பதுவும் போ) லாம்இக் கட்டையெலாம்
விட்டுமெள்ளக் கடப்போம் என்பார்
(பொற்பொதுவில்) நடமியற்றும் புனிதாஇம்
மாணிகள்தம் புதுமை என்னே. 13

Koviloor Digital Library

14 எவ்வாறிப் பிரமசரி யாம்சனியை
இழப்போம்என் றிரங்கி நிற்பார்
இவ்வாறு நிகழ்கின்ற மாணிசிலர்
நல்லோர்காண் இவ்வா றன்றி
ஒவ்வாத கொடுஞ்சொல்லால் குருவைஎதிர்க்
கின்றோரும் உண்டே பல்லோர்
செவ்வாம்பல் கனிவாய்மா தேவிஒரு
புடையாய்இத் திறந்தான் என்னே. 14

2. குருட்டு ஆசிரியர் புல்லொழுக்கம்

அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

15 (பொய்யதனை உ)ரைப்பர்கள்இப் பிரமசா
ரிகள்நெறிதான் புதிதே முக்கண்
(ஐயனே இவ)ர்மீதிற் குறையொன்றும்
இலைஇவர்கட் கறிவு சாற்றிச்
(செய்யுமா) சிரியர்செய லுரைக்கில்பிண
மும்நின்று சிரிக்குமிகச் சிறியர்நின்று
(வையுமவர்) சீடரவர்க் கெழுகோடி
மடங்கதிகம் என்ன லாமே. 1

16 எய்கின்றான் குருஅம்பால் எறிகின்றான்
சீடன்கல் லெடுத்து வஞ்சம்
செய்கின்றான் குருஇடித்துச் சிரிக்கின்றான்
சீடன்மிகத் தீய சொல்லால்
வைகின்றான் குருஅவனை வலிக்கின்றான்
சீடன்நடு வழியில் நின்று
பெய்கின்றான் குருஒடிப் பெய்கின்றான்
சீடன்என்னோ பிறைவேய்ந் தோனே. 2

17 (வன்பிடுவார்) குருஅவர்பால் வழக்கிடுவார்
சீடர்அயல் மனையை வேண்டித்
(துன்படைவார் கு)ருத்தாம்போய்ச் சுகித்திடுவார்
சீடர்பின் சுளித்துக் கையால்
(முன்படுவார்) குருஅவரை மொத்திடுவார்
சீடர்இந்த முறைமை யன்றோ
(உன்புடையார் க)லிமகிமை கண்டாய்முக்
கண்ணுடன்என் னுளங்கொண் டோயே. 3

Koviloor Digital Library

18 இருந்துறங்கும் ஆசிரியர் இயல்கண்டே
படுத்துறங்கியிடுவார் சீடர்
கருந்தடங்கண் பெண்முலைமேல் கண்வைப்பர்
ஆசிரியர் கண்டு சீடர்
இருந்தடங்கை வைத்திடுவார் ஆசிரியர்
சித்திரம்பே சிடுவார் கேட்டுள்
வருந்திவிளை யாடிடுவார் சீடர்கள்முக்
கண்ணுடன்என் னுளங்கொண் டோயே. 4

19 (சூதினையே)கொண்டுமறை சொல்லுவிப்பர்
ஆசிரியர் சூழ்ந்தா ரோடு
(வாதினையே) கொண்டதனை வாசிப்பார்
மாணாக்கர் வஞ்சங் கொண்டு
(காதினையே)கொண்டமணிக் கடுக்கனிட்ட
முகமன்றிக் கருணை யன்புப்
போதினையே கொண்டமுக மிலைஇவர்பால்
கலியன்றே விடையூர்ந் தோயே.✦ 5

3. குடும்ப கோரம்

நிலைமண்டில ஆசிரியப்பா

திருச்சிற்றம்பலம்

திருவளர் கமலக் குருமலர் தவிசினன்
முதற்பெருந் தேவர் மூவரும் பணியப்
பொதிவிடைத் திருநடம் புரியுநம் பெருமான்
அடிமலர்க் கன்புசெய் அன்பர்கட் கன்பன்
சீர்விளை தூய்மை நீர்விளை யாடிச்

சொற்றரு வாய்மைப் பொற்றுகில் உடுத்துக்
கரிசில்வெண் ணீற்றுக் கவசந் தரித்துத்
தத்துவ சிற்பர சற்குண அகண்ட
பூரண சச்சித போதா னந்த
அற்புத சிற்குண அங்கலிங் கேசனை

✦ இப் பத்தொன்பது பாடல்களும் பெருமானது தொடக்க காலத்திய பாடல்கள் கொண்ட ஒரு சுவடியில் பெருமானால் எழுதப்பட்டுள்ள தென்றும், எண் குறிப்பும் தலைப்பும் இல்லை என்றும், அடைப்புக் குறிக்குள் உள்ளவை ஏடுகள் சிதைந்துள்ள இடங்களில் ஒருவாறு காமா, சோமா என்ற வகையில் தாம் அமைத்தவை ஆ.பா. அடிக்குறிப்பெழுதுகிறார். குருட்டாட்டம் என்ற பெயரும் உள் தலைப்புகளும் ஆ.பா. அமைத்தவையே.

Koviloor Digital Library

அகத்தும் புறத்தும் அருச்சனை புரிந்து
சிவந்தரு சுகமெனும் திருவமு துண்டு
சீலம் எனும்தாம் பூலந் தரித்தே
அளவில் இன்பம் அனுபவிக் கின்றவன்
மூதறி வாளன் முத்து சாமிஎன்

றியற்பெய ருடையஇத் திருவா ளனுக்கு
இராம லிங்கம் எழுதி விடுத்த
மயலுறு சோபன வாசகம் ஆவது
ஐயநின் புடைஇப் பொய்யனேன் போதர
தடைபல உளஅவை சாற்றிட என்றால்

ஆயிரங் கோடிநா வாயினும் முடியா
இருந்து மற்றவை எண்ணிட என்றால்
உள்ளம் உடம்பெலாம் கொள்ளினும் போதா
எழுதஎன் றாலும் ஏட்டுக் கடங்கா
என்னினும் சிறிதே எழுதத் துணிந்தனன்

குடும்பத் தலைவன்

என்னெனில் யான்ஓர் ஏழை என்பதும்
தெளிவிலாச் சிறியரில் சிறியனேன் என்பதும்
இன்புடை அறிவே இல்லை என்பதும்

எனது முதல் மனைவி : ஆணவம்

அன்புடையயாய் நீ அறியாத தன்றே
செம்பொடு களிம்பு செறிந்தது போன்றோர்
ஆணவக் கிழத்தி அநாதியில் இறுகப்
பிரமரா க்ஷசிபோற் பிடித்துக் கொண்டனள்
சிவபூ ரணத்தைச் சிறிதும் காட்டாள்
ஜெகமெனும் ஏக தேசமும் தெரிக்காள்
எவ்விடத் திருளும் என்னகச் சுவரெனக்

கனவிருள் வடிவம் காட்டும் கொடியாள்
இரவிது பகலிது இன்பிது துன்பிது
ஒளிவெளி இதுவென ஒன்றுந் தெரிக்காள்
இறுக்கும் அரக்கி இவளொடும் இருந்தே
எளியேன் முயங்கிடல் என்தவம் என்கோ

முதல் மனைவியின் பிள்ளை : அஞ்ஞானம்

முற்றும் அஞ்ஞான மூடப் பிள்ளை
ஒருவன் பிறந்தனன் ஒடிவான் அவன்தனால்
பானுவின் ஒளியைப் படரிருள் மூடல்போல்
என்அகக் கண்ணையும் என்புறக் கண்ணையும்
அங்கையால் மூடி அலக்கழிப் பான்எனைத்

Koviloor Digital Library

தன்னைஇன் னான்எனத் தானும் காட்டான்
என்னைஇன் னான்என எண்ணவும் ஒட்டான்
ஏடுறும் எண்ணும் எழுத்தும் உணரான்
தாயினும் கொடியன் ஆயினும் என்தன்
விதியை நொந்து விருப்பின் வளர்த்தேன்

இவன்தன் வாழ்க்கையும் வாழ்க்கையோ என்ன
மதிப்பவர் ஆரெனை வையகம் மகிழ்ந்தே
வையக மகிழ்ச்சி வையகம் நெருப்பாம்
மருளுறு சிறுவன் வளர்நாள் தொடுத்தே
உறவகன் றார்யான் அறிவகன் றிட்டேன்

செப்புறும் தெய்வச் செயலென் கேனோ
இருதொ டக்குகள் இயலா தென்றே
தொடக்குப் பற்பல அடுக்கடுக் காயின

பசுபதி

ஆரோ பசுபதி அவன்வடி வழலாம்
அங்கண் மூன்றாம் அருட்சத்தி மானாம்

மண்ணும் விண்ணும் மாலய னோரால்
நேடியுங் காணா நீள்பத முடியனாம்
எழுமலை எழுகடல் எழுபுவி எழுகார்
ஆன எவையும் அளித்துநோக் குவனாம்
ஊர்தரும் மாருதம் உயிர்ப்பாய் உளனாம்

உயிரெழு வகுப்பையும் ஊட்டியுறக் குவனாம்
ஊழிகள் தோறும் உள்ள ஒருவனாம்
உரைகொண் டோதரும் உய்ர்வே தாகமம்
உற்ற கலைகள் உயரிய நிலைகள்
அண்ட பிண்டம் அவற்றின் துறைகள்

சாரும் இறைகள் சராச ரங்கள்
வளமுறு வர்ணா சிரம வகைகள்
வகுக்குறு வகுப்பினும் வதிவாழ்க் கையனாம்
சதிர்மா மாயை சத்திகள் கோடி
மன்னிய அரங்கிடை வதிபெற் றியனாம்

அவன்றான் யாரோ அறியேன் யானே
அறிதர வேண்டும் அப்பரு வத்தே

Koviloor Digital Library

எனது இரண்டாவது மனைவி : மாயை

மாயை என்னும் மாதினைக் கொணர்ந்தே
சிறுகருங் காக்கைக் குறுகுறுங் கழுத்தில்
கனம்பெறு பனங்காய் கட்டிய வாறெனக்

கட்டிப் புண்ணியங் கட்டிக் கொண்டனன்
விடுத்தெனைப் புண்ணியன் விலகலும் அவள்தான்
விண்ணவர் மண்ணவர் வியக்கும் உருக்கொடு
கொள்ளிவாய்ப் பேய்களோர் கோடி நின்றே
தடித்த குழவியைப் பிடித்தது போல

மற்றவள் என்னை மணந்து கொண்டனள்
பெண்ணடை அனைத்தும் பெருங்கதை யாகும்
அடுத்தவர் என்னை அந்தோ கொடிய
அருந்தளை ஏனென அறைந்தெனை அகன்றனர்
அகமெலாம் பகீரென அனந்த உருவாய்

அவ்வவ் வுருகொண் டணைத்துக் கெடுப்பள்
காற்றினை ஒருசிறு கரகத் தடைப்பள்
கடல்ஏ ழினையும் கடுகிடை முகப்பள்
வகைவகை யாயுடல் வனைந்து வகுப்பள்
வையக முற்றும் வாயில் மடுப்பள்

பகலிடை நள்ளிருள் இருக்கப் பண்ணுவள்
இருளில் பானுவை எவர்க்குங் காட்டுவள்
அண்டம் எல்லாம் அணுவிற் செறிப்பள்
அணுவை அண்டமாய் ஆக்கி நகைப்பள்
பொய்யை மெய்யாப் பொருந்தி மகிழ்வள்

பொருந்தும் மெய்யைப் பொய்யாச் செய்வள்
அடர்வஞ் சகக்கழங் காடற் பிரியாள்
காணாப் பன்னிலை கலையுடன் காட்டுவள்
இருளை இரிக்கும் இந்து ரவிகளைப்
படைத்திங் கயிற்றுவள் பற்பல ஜாலம்

பிரமனை வலக்கைப் பிடிக்குள் அடக்குவள்
இடக்கையில் மால்பதி ஏந்தித் தரிப்பள்
தலையிடை உருத்திரன் தன்பதி தெரிப்பள்

Koviloor Digital Library

குளிரெழு கடலிவள் குளிக்கும் தடமே
அண்ட மெல்லாம் கொண்டையில் முடிப்பள்.

ஜெகமெலாம் கலைக்குள் சேர்த்துக் கட்டுவள்
உடம்பிடை உரோமம் ஒவ்வொன் றிடையே
புவனமொன் றாகப் பொருந்தச் சமைப்பள்
எவரையும் கணத்தில் எய்தி மயக்குவள்
இக்கொடும் பாவி என்மனை யானது

பிடாரியைப் பெண்டாய்ப் பெற்றது போலும்
அனுகூ லச்சொலை அகத்திடை மதியாள்
அடிமடி பிடிப்பள் அரியவம் பிசைப்பள்
உறங்க விடாளவள் உறங்குபாய் சுருட்டாள்
மடிமாங் காயிடுங் கொடுமைக் கிளையாள்

சாகவும் விடாளவள் சார்பழி தளராள்
தவத்தில் இசையாள் பவத்தின் நசையால்
மருட்பேய் என்ன மதித்திட வாட்டிப்
படைத்தென் மானம் பறக்கச் செய்வள்
மான மகற்றியும் மனைவிட் டேகாள்

இரவும் பகலும் எனையிழுத் தணைப்பள்
இவளாற் படுமிடர் இம்மட் டிலவே
புகலப் படுமோ புகலின் இருசெவி
பொருந்துளங் கைத்திடும் போதும் போதும்
மல்லாந் துமிழின் மார்பின் மேலெனச்
சொல்லுவர் அதனால் சொல்வது மரபல

மாயையின் முதல் பிள்ளை : மனம்

கொடுந்தவம் புரிந்தொரு குரங்குபெற் றாற்போல்
மலைக்கப் பெற்றிட மனம்எனும் இளைஞன்
உலக்கைக் கொழுந்தென ஒருவன் பிறந்தனன்
வருமிவன் சேட்டை வகுக்கவாய் கூசும்

விதிவிலக் கறியா மிகச்சிறிய னாயினும்
விண்மண் நடுங்க வினைகள் இயற்றிக்
காமக் குழியில் கடுகிப் படுகுழி
விழுமதக் களிறென விழுந்து திகைப்பன்
பதியை இழந்த பாவையின் செயல்போல்

Koviloor Digital Library

கோபவெங் கனலில் குதித்து வெதும்புவன்
நிதிகவர் கள்வர் நேரும் சிறையென
உலோபச் சிறையில் உழன்று வாழ்வன்
வெற்பெனும் யானையை விழுங்கும் முதலை
முழுகிக் கடலில் முளைத்திடல் போல

மோகக் கடலில் மூழ்கி மயங்குவன்
மதுகுடித் தேங்கி மயக்குறு வார்போல்
மதத்தால் வீறி மதங்களில் வியப்பன்
பட்டினி இருக்கும் வெட்டுணி போல
மச்சரம் கொண்டு மகிழ்கூர்ந் தலைவன்

காசில் ஆசை கலங்குறா வேசை
எனினும் விழிமுனம் எதிர்ப்படில் அக்கணம்
அரிய தெய்வமென் றாடுவன் பாடுவன்
அணிகள் அணிவன் அடியும் பணிவன்
எலும்பைச் சுரண்டும் எரிநாய் போலச்

சுற்றுவன் பற்றுவன் தொழுவன் எழுவன்
கணத்தில் உலகெலாம் கண்டே இமைப்பில்
உற்ற இடத்தில் உறுவன் அம்மா
சேய்மை எல்லாம் செல்லற் கிளையான்
பித்தோங் கியஉன் மத்தனாய்த் திரிவான்

சொல்வழி நில்லான் நல்வழி செல்லான்
சேர அழைக்கில் சிரத்தே ஏறுவன்
வெட்டிலும் துணியான் கட்டிலும் குறுகான்
மலக்கி ஈன்ற மாதினும் பாவி
கள்ளது குடித்துத் துள்ளுவான் போல

மதத்தாற் பொங்கி வழிந்து துள்ளுவன்
முத்தந் தரல்போல் மூக்கைக் கடிப்பன்
மறைசொல் வான்போல் வளர்செவி கிள்ளுவன்
சற்றும் இரங்கான் தனித்துயில் கொள்ளான்
கூவிளிச் செய்வன் கூடுவன் பலரை

கூவி அதட்டினும் கோபங் கொள்வான்
இங்கு முள்ளான் அங்கு முள்ளான்
படைக்கு முன்னே பங்கு கொள்வான்
மடியில் நிறுத்தி வாய்மை வழங்கினும்
வண்ணான் கல்லிடை வறிஞர் சீலையை

Koviloor Digital Library

ஒலித்திடல் போல உரத்திக் கத்துவன்
என்னைத் தாதையென் றெண்ணான் சொல்லும்
வாய்மை எல்லாம் வண்புனல் ஓவியம்
ஆகக் கொள்வான் அவன்பரி சுரைக்கேன்
பிறந்தஇப் பாவி இறந்தான் இலையே

சென்றநாள் எலாமிச் சிறுவனால் அன்றோ
வருசுகங் காணா வைச்சுமை நேர்ந்தேன்
திறந்திவன் செயலைத் தினைத்துணை விடாது
செப்பின் கற்கள் சிதைந்து கசியும்
கனத்த மரங்கள் கண்ணீர் பொழியும்

கடவுளர் இவன்செயல் காணு வாரேல்
இமையாக் கண்களை இமைத்திடு வாரால்.

மாயையின் இரண்டாவது பிள்ளை : புத்தி

காசிபன் மனைவிமுன் கடுந்தவம் புரிந்து
பையுடைப் பாம்பைப் பயந்தது போன்று
புத்தி என்னும் புத்திரன் தன்னை

ஈன்றனள் அவனோ எளியரில் எளியன்
வாய்மையும் தூய்மையும் வதிதரு வாழ்க்கையன்
தாயொடும் பழகான் தமையனோ டணையான்
தறுக ணாளரிற் குறுகியுற வாடான்
பாவம் என்னில் பதறி அயர்வான்

பாடு படற்குக் கூடான் உலகர்
கயங்கு நெறியில் உயங்கி மயங்குவன்
பாழ்நிகர் புந்தியர் பாலிற் பொருந்தான்
எப்பா டும்படான் எவரையும் கூடான்
கபடரைக் காணில் காதம் போவான்

கங்குலும் பகலும் கருதுவிவ காரத்
தடத்திடை வீழ்ந்து தயங்குறு நயங்கள்
சாருவன் கூறுவன் தருக்குவன் எவைக்கும்
அடங்குவன் வறிதே அமைதல் இல்லான்
இவனை மடியில் இருத்தித் திடமொழி

Koviloor Digital Library

செப்பிடச் சோர்வு செறிவ தெனக்கே
இவன்பால் செய்வ தேதும் அறியேன்

மாயையின் மூன்றாவது பிள்ளை : சித்தம்

செறிதரு கோளுள சேயிழை யாள்பினும்
நையப் புணர்ந்து நாள்பட வருந்தி
நாடி நாடி நாயைஈன் றதுபோல்

உணர்விலி என்றே உலகர் ஓதும்
சித்தம் என்னும் சிறிய குழவியைப்
பயந்து கரத்தில் பதற எடுத்தனள்
கரைதரு விண்ணீர்க் கடிதடம் ஆகக்
கதிர்விடும் உடுக்கள் கறங்குமீ னாக

மதியைத் தாமரை மலராய் மதித்ததில்
மூழ்கப் பிடிக்க முன்னங் கொய்திட
எண்ணுவன் எழுவன் எட்டுவன் சிறிதும்
நேரா திளைத்தே நிலைகள் பற்பல
வான்கண் டவன்போல் வாயாற் கொஞ்சுவன்

எனையும் கூவுவன் இவனிடர் பலவே
இடர்பல இயற்றி இழுக்கும் கொடியன்
இவன்செயல் நிற்க இவன்தாய் வயிற்றில்

மாயையின் நான்காவது பிள்ளை : அகங்காரம்

தாருகன் என்னும் தறுகண் களிற்றைத்
தந்தமா யைக்குத் தனிமூத் தவளாய்

அகங்கா ரம்எனும் அடங்காக் காளை
அவனி மூன்றும் அதிர்ந்து கவிழக்
கடைமுறை பெற்றுக் களித்தனள் அவன்செயல்
கருதவும் பேசவும் கனிவாய் கூசுமே
கூற்றுவர் கோடி கொண்டுதித் தால்என

முளைத்து வளர்ந்தனன் மூத்தவன் மூழை
இளையவன் காளை எனும்இலக் கியமாய்
முன்னுள மூவரை முடுகி ஈர்த்தே
எண்ணில் விளையாட் டெழுப்புந் திறத்தன்
எல்லா ஆற்றலும் என்பால் உளதெனத்

Koviloor Digital Library

தருக்குவன் இவன்தன் சங்கடம் பலவே
தன்னைத் தானே தகைமையில் மதிப்பன்
தரணியில் பெரியார் தாம்இலை என்பான்
மாதின் வயிற்றில் வந்தவன் எனாது
தானே பிறந்த தன்மைபோல் பேசுவன்

விடியும் அளவும் வீண்வா திடுவன்
வாயால் வண்மை வகைபல புரிவான்
ஓதவன் பெருமை ஈதவன் இயல்பே
சொல்லினும் கேளாத் துரியோ தனன்என
வானவர் தமக்கும் வணங்கா முடியன்

முன்வினை யாவும் முற்றும் திரண்டே
உருக்கொடிங் கியம்பொணா ஊறுகள் இயற்றுவன்
பிள்ளையும் அல்லன் கொள்ளியும் அல்லன்
இன்னும் இவன்செயும் இடர்பல வற்றை
எவர்பால் சொல்லி என்துயர் ஆற்றுவேன்

பாதகி துன்பம் பவக்கடல் ஏழும்
மக்கள் துன்பம் மலையோர் எட்டும்
நீளல்போ தாதென நெஞ்சில் நினைத்தோ
அவளது சூழ்ச்சி அற்புதம் அற்புதம்
தொல்லை மரபில் தொழில்பல கற்ற

எனது மூன்றாவது மனைவி : காமியம்

உலவுறு காமிய ஒண்டொடி என்னும்
கபடவஞ் சகியாம் களத்தினைக் கொணர்ந்து
பேய்பிடித் தவன்பால் பெரும்பூதம் கூட்டித்
தான் மணந் ததுபோ தாதிங் கென்றுபின்
மாற்றுகா லுக்கு மறுகால் ஆக

மாட்டி மிகமன மகிழ்ந்தாள் கூர்வேல்
கண்ணினை யாள்நெடுங் கடல்சூழ் உலகில்
நிறைந்துள யாரையும் நெருங்குவள் கணத்தில்
இவள்செயும் வீரம் எண்ணி விளம்ப
உடலெலாம் நாவாய் உறினும் ஒண்ணா

Koviloor Digital Library

ஒருத்தியே இரண்டங் குருகொடவ் வவற்றில்
பலவாய்ப் பலவுளும் பற்பல வாய்உரு
பொருத்த முறவே புரிவள்அவ் வவற்றில்
பலகால் புணர்ந்து பயன்வலி போக்கி
ஒருருக் கரும்பும் ஒருருக் காஞ்சியும்

ஒருரு அமுதமும் உண்ண அளிப்பாள்
விட்டிவை எல்லாம் பட்டினி யாக்குவள்
ஒருரு வடிவால் உயர்பஞ் சணைமேல்
அகமகிழ் சுரதம் அளித்துக் களிப்பள்
ஒருருத் தன்னால் உறுநிலப் பாய்மேல்

என்பு நோவ இழுத்தே அணைவள்
இங்ஙனம் பற்பல ஏழைக் குறும்புகள்
இயற்றி எவருமே ஏக்கங் கொளவே
இவள்முன் நம்செபம் என்றும் சாயா
அரகர என்றே அரற்றி மெலிவேன்

மூன்று பிள்ளைகள் : முக்குணங்கள்

இவ்வா றென்னை இழைத்திடுங் கொடியாள்
முக்குணம் மூன்றும் மூவுரு எடுத்தே
வயிறு கிழிய வந்த சிறார்கள்
மூவர் தமையுமம் மூவரும் அறியார்
வெலவரும் இவரால் மேலொடு கீழ்நடு

ஆய உலகும் அவ்வுல குயிரும்
பற்பல நெறியில் பாடுபட் டாரெனில்
எளியேன் பாடிங் கியம்பவும் படுமோ
இவர்கள்தம் இயல்பை எண்ணவும் பயமாம்
பாரெலாம் தாமாய்ப் பரவும் இவர்தாம்

ஏற்றுவர் இறக்குவர் எங்கு நடத்துவர்
இயற்றுவர் கீழ்மேல் எங்கு மாக
உவகை ஊட்டுவர் உறுசெவி மூடத்
திட்டுவர் பலவாய்த் திரண்டு திரண்டே
ஆற்றுறு மாற்றலே ஆற்றல் அரிதாம்

இவ்வுல கதனில் என்கண் காண
ஆயிழை யாளை ஆய்ந்து மணந்த
நாளில் தொடங்கிஇந் நாள்பரி யந்தம்

Koviloor Digital Library

மனஞ்சலித் திடவே வலிய விலங்கினைத்
தாளில் இட்டுத் தயங்கி அலைந்தேன்

வீண்சஞ் சலமென விளம்பும் துகளை
முடிமூழ்க வாரி முடித்திட் டேனால்
ஈட்டிய பொருளால் இற்பசு ஈந்தே
எருமை தன்னை அருமையா யடைந்தனோ
ஆற்ற முடியா தலைவேன் எனவும்

குறித்தங் கெடுத்திடும் கூவல் நீரை
விழற்கு முத்துலை வேண்டிட் டிறைத்துத்
துணைக்கரம் சலித்தே துயருற் றேனோ
காற்றினும் விரைந்தே காரான் பாலைக்
கமரிடை ஏனோ கவிழ்த்தும் கலங்குவேன்

கலநீர் தன்னைக் கண்ணிற் சிந்திக்
கழறிக் குழறிக் கனிஉடல் களைக்கச்
சிலைநேர் நுதலில் சிறுவியர் வரும்ப
அருந்தொழில் செய்திங் கடைந்த பொருளைச்
சிவபுண் ணியத்தில் செலவிற் கலவாது

பெண்சிலு குக்குப் பெரிதும் ஒத்தேன்
பகலும் இரவும் பாவிகள் அலைத்தனர்
இவர்கள் சல்லியம் ஏற்பவர் ஆரெனக்
கூக்குரல் கொண்டு குழறுவன் எழுவன்
கிணற்றில் மண்ணைக் கெல்லப் பூதம்

தோன்றிய தென்னும் சொல்லை ஒத்தது
இவரூ டாட என்னால் முடியுமோ
அவளுக் கிவள்தான் அறியவந் தாளெனும்
மூன்று மாதரும் முழுப்பாய் சுருட்டிகள்
இவர்களில் ஒருவரும் இசையவந் தாரலர்

இச்சை வழியே இணங்கி வலிவில்
மணமது கொண்டு வாழ்ந்து வருகையில்
சண்டன் மிண்டன் தலைவர் என்ன
புவிமிசைப் பாதகர் போந்திங் குதித்தனர்
இவரால் நேர்ந்த எண்ணிலாத் துயரைப்

Koviloor Digital Library

பொறுப்ப தரிதாம் வெறுப்பது விதியே
பாவ மின்னும் பற்பல உளவே

எனது குடிக்கூலி வீடு : தேகம்

குடும்பத் துடனே குடித்தனஞ் செய்யக்
குடிக் கூலிக்குக் கொண்ட மனையில்
கண்ட காட்சிகள் கனவிரோ தங்கள்

இராமா யணத்தும் பாரதத் தும்இலை
இழிவினும் இழிவது எண்சாண் உள்ளது
மலமும் சலமும் மாறா ஒழுக்கது
சுற்றினும் ஒன்பது பொத்தல் உடையது
சீழும் கிருமியும் சேர்ந்து கிடப்பது

என்புதோல் இறைச்சி எங்கும் செந்நீர்
ஆய்ந்து செய்த ஆகா முற்றது
அகலல் அணுகல் புகலல் இகலல்
அணிகள் துணிகள் அணிவ தாய
சால வித்தைகள் சதுரில் கொண்டது

கிடந்தும் இருந்தும் நடந்தும் பற்பல
பகரிம் மனையால் படும்பா டதிகம்

எனது குடிக்கூலி வீட்டின் தலைவர் : வாத பித்த சிலேஷ்மம்

இம்மனைத் தலைவராய் எழுந்த மூவர்
தறுகட் கடையர் தயவே இல்லார்
பணிசிர முதலாய்ப் பாதம் வரையில்

வாது செய்திடும் வண்கால வாதி
பெருகுறு கள்ளினும் பெரிதுறு மயக்கம்
பேதைமை காட்டும் பெருந்தீப் பித்தன்
கொடுவிடம் ஏறிடுங் கொள்கைபோல் இரக்கங்
கொள்ளா திடர்செய் குளிர்ந்த கொள்ளி

இவர்கள் என்னோ டிகல்வர் இரங்கார்
எனக்கு நேரும் எழ்மையும் பாரார்

Koviloor Digital Library

நான் கொடுக்கும் குடிக்கூலி : பிண்டம்

பிண்ட மென்னும் பெருங்குடிக் கூலி
அன்றைக் கன்றே நின்று வாங்குவர்
தெரியா தொருநாள் செலுத்தா விட்டால்

உதரத் துள்ளே உறுங்கனல் எழுப்பி
உள்ளும் புறத்தும் எண்ணெரி ஊட்டி
அருநோய் பற்பல அடிக்கடி செய்வர்

இவர்கொடுஞ் செய்கை எண்ணுந் தோறும்
பகீரென உள்ளம் பதைத்துக் கொதித்து

வெதும்பும் என்னில் விளம்புவ தென்னே
சினமிகும் இவர்தம் செய்கைகள் கனவிலும்
நினைந்து விழித்து நேர்வதன் முன்னர்

மதவாதிகள் வருகை

மற்போர் கருதி வந்தவர் போல
ஓதும்வே தாந்தம் உரைப்பர் சிலபேர்

வாட்போ ரினுக்கு வந்தவர் போல
வயங்குசித் தாந்தம் வழங்குவர் சிலபேர்
தண்டா யுதப்போர் தாங்குவார் போல
இதிகா சத்தை இசைப்பவர் சிலபேர்
உலக்கைப் போரை உற்றார் போல

இலக்கண நூலை இயம்புவர் சிலபேர்
கற்போர் விளைக்கக் காட்டுவார் போலச்
சமய நூல்களைச் சாற்றுவர் சிலபேர்
வாய்ப்போ ருக்கு வந்தவர் போல
விவகா ரங்கள் விளம்புவர் சிலபேர்

மடிபிடி போர்க்கு வாய்ந்தவர் போல
மததூ ஷணைகள் வழங்குவர் சிலபேர்
கட்குடியர் வந்து கலக்குதல் போலக்
காம நூலைக் கழறுவர் சிலபேர்
விழற்கு நீரை விடுவார் போல

Koviloor Digital Library

வீண்கதை பேச விழைவார் சிலபேர்
இவர்கள் முன்னே இவருக் கேற்ப
குரல்கம் மிடவும் குறுநா உலரவும்
அழலை எழவும் அவரவர் தம்பால்
சமயோ சிதமாய்ச் சந்ததம் பேசி

எனது நித்திய கருமம்

இயன்ற மட்டில் ஈடுதந் தயர்வேன்
பின்னர் மனையின் பின்புறத் தேகிக்
கலக்கு மலத்தைக் கடிதே கழித்துக்
கல்லில் அழுக்கைக் கழற்றுதல் போன்று
பல்லின் அழுக்கைப் பண்பின் மாற்றிச்

சோமனைப் போலவெண் சோமனைத் துவைத்து
நன்னீர் ஆடி நறுமலர் கொய்து
தேவருக் கேற்ற திரவியங் கூட்டிப்
பாவையை வைத்துப் பாடி ஆடும்
சிறாரைப் போலச் செய்பணி யாற்றி

மண்ணின் சுவர்க்கு வண்சுதை தீட்டல்போல்
வெண்ணீ றதனை விளங்கப் பூசிப்
புகழ்ருத் ராக்கப் பூனை என்ன
உற்ற செபவடம் உருட்டி உருட்டிக்
குரண்டகம் போன்று குறித்த யோகம்

செய்த பின்னர் சிறிது நேரம்
அருத்தியிற் பூசனை அமர்ந்தங் காற்றி
ஊன்பிண் டத்திற் குறுபிண்ட மீந்து
குடிக்கூ லிக்கடன் குறையறத் தீர்த்துப்
பகல்வே டத்தால் பலரை விரட்டி

நித்திரைப் பரத்தையை நேர்ந்து கூடவும்
பொழுதும் சரியாய்ப் போகின் றதுவே

இது, முத்துசாமி முதலியாரின் திருமணத்திற்குத் தாம் வர இயலாமையைக் குறித்து வரைந்த திருமுகம், முத்துசாமி முதலியார் வீரசைவர்: பெருமானின் மாணாக்கர்களில் ஒருவர், தாம் இயற்றிய தோத்திரப் பாக்களுக்கு பெருமானிடம் சாற்றுக்கவி பெற்றவர். பெருமானார் வடலூரிலிருந்த போது சென்னையில் இவருக்கு திருமணம் நிகழ்ந்தது திருமணத்திற்கு எழுந்தருளி வாழ்த்த வேண்டுமென விரும்பினார். அவ் விருப்பம் நிறைவேறவில்லை அதனால் வருந்திய முத்துசாமி முதலியார்க்குப் பெருமானர் இக் குடும்ப கோரத்தைப் பாடி, கொந்தமூர் சீனிவாச வரதாசாரியார் மூலமாய் அனுப்பினர். முதலியார் இவ்வகவலை மனப்பாடஞ் செய்து வைத்திருந்தார். மனப்பாடமாக அவர் சொல்லக்கேட்டதனை மோசூர் கந்தசாமி எழுதி வைத்தார். அது சித்தாந்த சரபம் கலியாண சுந்தர யதீந்திரரால் பார்வையிடப் பெற்று, காஞ்சி நாகலிங்க முதலியாரால் நடத்தப்பெற்ற தொழிற்கல்வி 1914 ஜுலை (ஆனந்த, ஆடி தொகுதி 1, பகுதி 4) இதழில் ஒருபாதியும் (ஆவணி, தொகுதி 1, பகுதி 5) ஆகஸ்டு இதழில் மறுபாதியுமாக வெளியாயிற்று.

Koviloor Digital Library

4. திருமுக அகவல்

நிலைமண்டில ஆசிரியப்பா

திருச்சிற்றம்பலம்

அகண்டமெய்ஞ் ஞான அற்புத அமல
பரம்பர அனாதி பவ பராபர
புண்ணிய சைவ போத பூரண
சச்சிதா நந்த சாக்ஷாத் கார
நித்திய நிரஞ்சன நிமல நிராமய

எண்குண விநோத இன்ப சுபாவ
சுத்த நிட்கள சுயம்பிர காச
சிவக்கியான சித்தி சித்தோப தேச
பதிபசு பாசப் பண்புரை தேசிக
விபூதி ருத்திராக்க பூடண வடிவ

சர்வ வல்லப சாந்த சித்த
தயாநிதி எனவளர் சாமி யவர்கள்
ஸ்ரீதிவ் வியோபய செந்தா மரையாம்
திருவடிக் கடியேன் திருச்சிற் றம்பலம்
காசறு காவிரி கங்கை யாதிய

வாச நீரால் மஞ்சனம் ஆட்டி
மல்லிகை முல்லை மாமலர்க் கொன்றை
மயிலை முதற்பூ மாலை சாத்தி
தூய வாசத் தூப தீப
நைவேத் தியமுதல் நண்ணுப சாரம்

கூடுற இயற்றிக் கூவிள பத்திரம்
ஆயிரம் அவையால் அருச்சனை செய்து
உள்ளம் குழைய உரோமம் சிலிர்ப்பப்
பாடி ஆடிப் படிமிசை வீழ்ந்து
அன்புறும் அங்கம் ஐந்தொடும் எட்டொடும்

இன்புறத் தெண்ட னிட்டவிண் ணப்பம்
திருவளர்உலகில் சீர்பூ ரணமென்று
ஒருபெயர் நிறீஇ ஓங்கிய தணிகைக்
குன்றிடை விளங்கும் குமார தேசிகன்
நன்றிடை யாவகை நவின்மணி வார்த்தை

Koviloor Digital Library

கார்நிகர் வண்கையும் கல்விப் பெருக்கும்
பார்நிகர் பொறையும் பண்பும் பான்மையும்
சீரும் சிறப்பும் திறனும் செல்வமும்
யாரும் புகழ்தரு மியல்புநல் லறிவும்
எம்பால் அன்பும் எமதருள்உடையோர்

தம்பால் சார்பும் தணப்புறாத் தன்மையன்
தானம்ஈ ரெட்டும் தருவோர் நாண
ஈனமில் அவற்றின் எல்லைமேல் ஒன்றின்
நான்கிலோர் பாகம் நண்ணிய தானம்
தான்கிளர் உலகில் சால்புடை யவர்தம்

கண்களிப் புறவும் காதிசை பெறவும்
ஒண்களிப் பொடுமன முவந்துவந் துருகவும்
தருபவன் புரசைச் சபாபதி எனும்பெயர்
மருவிய கலைவலோன்* மகிழ்வொடும் கேட்க
எம்மிடை ஒருவன் எளிமையில் சிறந்தோன்

செம்மையிற் போந்தென் சிறுமனைக் கிழத்தி
எந்தாய் நுந்தமை ஈன்றநற் றாயின்
நந்தா அருள்திரு நாமம் கொண்டனள்
ஆங்கவள் தன்னை அப்பெய ரால்அழைத்து
ஈங்கெவ் வேலையும் இடுதற் கஞ்சினேன்

ஈதல துமக்கும்ஓர் இழிவுண் டிதனால்
ஆதலின் அப்பெயர் அகற்றுதற் காயிரம்
பொன்வேண்டும் என்றனன் பொன்வடி வல்லது
பொன்வே றிலையால் பொன்னுடை யவன்எம்
மாதுலன் ஆதலின் வலிவிற் கைக்கடன்

வாதுறக் கேட்டலும் வாங்கலும் ஈனம்
தரம்பெறும் உமது தந்தையோ எனில்அவர்
இரந்துழல் கின்றதை யாவரும் அறிவர்
நின்மல ராகிய நீரோ என்றால்
நென்மலி உலகின் நின்கண் காண

---

* புரசை அட்டாவதானம் சபாபதி முதலியார். மேல் ஆறு அடிகளில் அட்டாவதானம் குறிப்பிடப்பெற்றது.

Koviloor Digital Library

ஒருமணஞ் செய்தோர்க் குறுதுயர் பலஉள
இருமணஞ் செய்த எமக்கெத் தனையோ
சங்கடம் அதுநின் றனக்குந் தெரியும்
எங்கணும் நின்போல் எமக்கன்பினர் இலை
அதனால் நின்பால் அவனை அனுப்பினம்

இதமே அன்றி அகிதம் இசையா
நெடும்பொற் புடையோய் நீயும் எம்போல்
குடும்ப பாரம் கொண்டனை ஆதலின்
ஆயிரம் என்றதில் அரைப்பங் கேனும்
காயகம் அறியோய் காற்பங் கேனும்

இல்லைஎன் னாமல் எம்முகம் நோக்கி
நல்லைநீ அவர்க்கு நல்குவிப் பாயே.

திருச்சிற்றம்பலம்

5. திருமுகப் பாசுரம்

**மதுரை திருஞானசம்பந்த சுவாமிகள் ஆதீனம்
288வது குருமகாசந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகத் திருஞானசம்பந்த தேசிக பரமாசாரிய சுவாமிகள்
அவர்களுக்கு வரைந்த திருமுகப் பாசுரம்.**

நிலைமண்டில ஆசிரியப்பா

திருச்சிற்றம்பலம்

திருவளர் மார்பனும் திசைமுகத் தவனும்
உருவளர் தேவரும் உணர்ந்திடப் படாத
சச்சிதா னந்த சாக்ஷாத் கார
சொச்ச நித்திய சுயம்பிர காச
நிர்க்குண நிச்சல நிமல நிராமய

சிற்குண தற்பர சிற்பர சின்மய
அகள அற்புத அனந்தா னந்த
சகள மத்திய சத்திய சத்துவ
அகண்ட பூரண அருளா னந்த
மகண்ட விண்டல வாணர்கள் வந்தித

Koviloor Digital Library

தத்துவ சொரூப தத்துவா தீத
தத்துவ காரண தத்துவ ரகித
விச்சுவ சொரூப விச்சுவ காரண
விச்சுவ ரகித விச்சுவா தீத
பிரணவ சொரூப பிரணவ காரண

பிரணவ ரகித பிரணவா தீத
பஞ்சாக் கரப்பொருட் பாங்குறு வடிவ
எஞ்சாக் கருணை யெனுந்திரு வுருவ
நாத வடிவ நாதநா தாந்த
வேத வடிவ வேதவே தாந்த

உள்ளமர் ஒளிய ஒளியினுள் ஒளிய
கள்ளமில் அன்பர் கண்ணமர் வெளிய
பெரியதில் பெரிய பெருங்குணக் கடல
அரியதில் அரிய அனாதி போதக
ஆகம வடிவ ஆகம முடிவ

ஆகம நிலய ஆகம காரண
சைவசித் தாந்த ஸ்தாபகஞ் செய்த
தெய்வ மகத்துவ சிறப்புறு நெறிய
ஞான காரண ஞானமெய்ச் சொருப
ஞான நாடக ஞானசம் பந்த

தேவ தேவ சிவசிவ சிவஎன
யாவரும் துதிக்க இனியதென் பாண்டி
நாட்டிடை மதுரா நகர்த்திரு மடாலயத்து
ஈட்டிய அருளால் எழிலருள் வடிவங்
கொண்டம்மை அடிமை கொண்டருள் புரிந்த

தண்டமிழ் மறைமொழி தருந்தனி முதலே
மூவாண் டதனில் மூவுல கும்தொழத்
தேவாண்ட ஞானத் தெள்ளமு தருந்திய
மணியே என்கண் மணியே சைவ
மணியே தெய்வ மணியே அணியே

முத்துச் சிவிகையின் முளைத்தெழும் இளங்கதிர்
ஒத்துத் தனியமர்ந் தருளிய ஒளியே
சைவந் தழைக்கச் சமண்கழு வேறத்
தெய்வநீ றளித்த திருவருட் குன்றே
பிழைத்தலில் என்பைப் பெண்ணுரு வாக

Koviloor Digital Library

அழைத்தருள் புரிந்த அற்புத அமுதே
சரியை யாதிய சாதுர்ப் பாதமும்
தெரியநல் லோர்க்குத் தெரித்தருள் தெளிவே
பாலொடு கலந்த பழம்போல் இனிக்க
நூலொடு மெய்ம்மொழி நுவன்றருள் பதியே

தவமே தவத்திற் சார்தரும் பயனே
நவமே சாந்த நகைமுக மதியே
செவ்விய கரும்பே தேனே கனியின்
திவ்விய சுவையே தெவிட்டா மருந்தே
அஞ்செழுத் துண்மையை அறிந்திட அடியேன்

நெஞ்சமுழுத் துறஅருள் நீள்தயா நிதியே
என்னொரு தாயே என்னையீன் றோனே
என்னுயிர்க் குயிரே என்பெரும் பொருளே
என்னுடை அறிவே என்னுளத் தன்பே
என்னுயர் கதியே என்னுடைக் குருவே

அடியேன் புரியும் ஆயிரம் பிழையும்
படியாற் பொறுத்துப் பாங்கருள் பரமே
எல்லாம் வல்ல இறையே அடைந்தவர்
பொல்லாங் கெல்லாம் பொறுத்தருள் பொறையே
முற்றும் உணர்ந்த முதலே உலகப்

பற்றை அகன்றநற் பண்பினர் உறவே
ஆனசம் பந்தநல் ஆறு முகத்திரு
ஞானசம் பந்த ஞானதே சிகனே
போற்றிநின் சேவடி போற்றிநின் பூம்பதம்
போற்றிநின் தாள்மலர் போற்றிநின் கழற்கால்

குற்றமும் குணமாக் கொண்டருள் புரியும்
போற்றிநின் கருணைப் பெரும்பெயல் அதற்கு
அட்ட மாக அனந்தந் தெண்டன்
இட்டமா வடியேன் இட்டவிண் ணப்பம்
திருச்செவிக் கேற்றுத் திருவுளத் தெளியேன்

உருச்செவி அறியா உறுபிழை பொறுத்திட
வேண்டு நின்னருள் வேண்டுநின் கருணை
வேண்டும் வேண்டும் வேண்டும் என்னெனில்
என்னென உரைக்கேன் என்னென உரைக்கேன்
பொன்னன நினது பூம்பதம் தரிசித்து

Koviloor Digital Library

அன்பர்கள் எல்லாம் அவ்விடை வாழ
நன்பயன் அறியா நாயேன் ஒருவனும்
நன்னிதி அனையநின் சந்நிதி அதனில்
மன்னுநின் கருணை வடிவக் காட்சியைத்
தரிசித் தின்பத் தனிக்கடல் ஆடப்

பிரியத் துடனே பெற்றிலா தந்தோ
தகவிலேன் நெடுநாள் தனித்துச் சேய்மையில்
புருடனைப் பிரிந்த பூவையைப் போல
வாழ்விற் குறைந்து மனந்தளர் வெய்தித்
தாழ்வுறு நாணந் தலைக்கொள நின்றேன்

ஆதலாற் சுவாமிகள் அருளிற் புரிந்த
தீதிலாத் திருமுகத் தெய்வந் தன்னை*
தரிசித் துள்ளந் தழைத்து வணங்கிப்
பரிசித் தன்பொடு பரவிப் போற்றி
வணங்கி வணங்கி வாசித் துடம்பும்

உயிருந் தழைக்க உவந்தா னந்தக்
கூத்திது வரையிற் குயிற்றிநிற் கின்றேன்
என்னினும் அந்தோ என்செய்வேன் பிரிந்த
புன்னெறி நினைத்துப் போந்த நாணமும்
அச்சமும் என்னை அடிக்கடி தகைக்க

நச்சிய வித்தனை நாளும் விண்ணப்
பத்திரஞ் செய்து பரவத் தாழ்த்தேன்
குத்திர மனத்துக் கொடியேன் செய்பிழை
மலையினும் கடலினும் மண்ணினும் பெரிதே
நிலையினும் அறியா நெடும்பிழை எந்தாய்

என்செய்தால் தீரும்என் செய்வேன் எளியேன்
பொன்செய்தா லன்னநின் பொன்மலர் அடியை
இரவும் பகலும் இடைவிடா துன்னிப்
பரவும் பரிசே பரிசென அருளே.

சென்னைப்பட்டணத்தைச்
சார்ந்த மயிலையில்
ஆனந்த வருடம் புரட்டாசி மாதம் 21 தேதி
5–10–1854

அடியேன்
சிதம்பரம்
இராமலிங்கம்.

---

* சுவாமிகள் வள்ளற் பெருமானாருக்கு அனுப்பியதாக இங்குக் குறிப்பிடப்பெறும் திருமுகம் கிடைக்கவில்லை

Koviloor Digital Library

6. திருமுகப் பாசுரங்கள்

திருவாவடுதுறை ஆதீனம்
வித்துவான் தாண்டவராயத் தம்பிரான் சுவாமிகளுக்கு
வரைந்த திருமுகப் பாசுரங்கள்

நூற்றுப்பன்னிரு சீரான் வந்த கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

அணிவளரும் உயர்நெறிகொள் கலைகள்நிறை மதிமகிழ்வை
அடையும்ஒளி யுடைய சடையோய்
அருளொழுக அமுதொழுக அழகொழுக இளநிலவின்
அளியொழுக ஒளிர்மு கத்தோய்
அமலநிலை உறவும்உறு சமலவலை அறவும்உணர்
வருள்கருணை மிகுகு ணத்தோய்
அடியர்வினை அகலஒரு பரமசுக நிலையருளு
மதுகருது திருவு ளத்தோய்
அநகசுப விபவசுக சரிதரக சிரகமந
அதுல அதுலித பதத்தோய்
அகிலசர அசரஅப ரிமிதமித அணுவும்அணு
வணுவும்இவை எனஉ ரைத்தோய்
அகிதவித விவிதபரி சயசகல விகலஜக
வரஸரஜ தளம்இ ழைத்தோய்
அகளமன ரமணவபி நிகடவபி நிபிடதட
அநதிசய சுகம்அ ளித்தோய்
அனுபக்ஷம் இதுசம்பு பக்ஷம்இது காண்களன்
றன்புடன் உரைத்த பெரியோய்
அதிக்கிராந் தத்தியல்பு திக்கிராந் தத்தியல்பின்
அமைதிஇஃ தென்ற அறவோய்
அதிகார போகஇல யங்கள்இரு வகைஇயல்
அறிந்திட உணர்த்தும் உணர்வோய்
அருவம்இஃ துருவம்இஃ தருவுருவம் இஃதென
அறைந்தறி வுறுத்தும் அறிவோய்
அபதேசம் வேதந கயஞ்சத்தி இயல்எலாம்
அலைவற விரித்த புகழோய்
அநநிய பரிக்கிரக சத்திவிளை வெல்லாம்கை
ஆமலகம் எனஇ சைத்தோய்
அத்துவா நெறிஆறும் ஒத்துவா னெறியா
றடைந்திடுக என்ற பரிசோய்
அவுத்திரியின் உத்திரம் உனக்கிசைவு றுத்துதும்
அமர்ந்திடுக என்ற இனியோய்

Koviloor Digital Library

பணிவளரும் நிபுணகண பணகரண பரணவண
பரதயுக சரண புரண
பரம்பர சிதம்பர திகம்பர நிரந்தர
பரந்தர விளங்கு பரம
படகபட தடவிகட கரடகட கரியுரிகொள்
பகவ அரகர என்னவே
பவன்தகு சிவன்தனை உவந்தனை சுவந்தனை
பகர்ந்திடுக என்ற அமுதே
பகர்அகர உகரபர மகரகுண குணிகள்உறு
பரிசறிய உரைசெய் அரசே
பயன்தரு வயிந்துவ துவந்திகழ் சிவம்புகல்
பதம்தெளிய அருள்செய் இறையே
பதசிகர வகரநெறி அகரநக ரமகரஉ
பயஅபய நிலைசொல் மலையே
பவந்தெறு நவந்தரு குவம்பரி பவம்பொடி
படும்படி எனும் புனிதமே
பதியுதவு பதிதனது பரிசும்அஃ தடையும்ஒரு
பசுஇயலும் அருள்செய் பொருளே
பந்தநிலை அந்தநிலை இந்தநிலை என்றுபர
பந்தமொழி தந்த மணியே
படியும்இடர் வடியும்இருள் விடியுமணி மொழிமறைகள்
படியும்என நொடிம ருந்தே
பஞ்சமல கஞ்சுகமும் எஞ்சும்வகை பஞ்சம்இலை
பஞ்சமகம் என்ற நிதியே
பதிதநெறி விடுகஒரு பதிதனெறி தொடுகஒளி
படரும்வகை எனும்என் உறவே
பங்கம்அற அங்குமுள இங்குமுள எங்குமுள
பண்டைவெளி என்ற ஒளியே
பலிதஅநு சிதஉசித யுகளஇக பரம்இரவு
பகல்என விளம்பு வளமே
பன்னிலையும் முன்னிலையும் நின்னிலையும் என்னிலை
படிந்துவிடு கென்ற நன்றே
திணிவளரும் அறிவுகொடு தொடர்வரிது பெரிதுபர
சிவம்அது வெனும் செல்வமே
சிவசா தனம்பெறார் பவசா தனம்பெறுவர்
தெளிகஎனும் அளிகொள் குருவே
திருநீறு காண்நினது கருநீறு காணுவது
தேர்ந்துணர்க என்ற தெளிவே
சிவமேவு சமயம்அது தவமேவு சமயம்இது
சித்தம்என ஓது முதலே

Koviloor Digital Library

சிவனடியை வாழ்த்தாத வாய்ஊத்தை வாய்கொடிய
செவ்வாய் எனச்சொல் நிறைவே*
சிவமான்மி யம்புகாக் காதுகா தென்னும்
தெலுங்கமொழி என்ற ஒன்றே
சிவனடி வணங்காத தலைசிதலை அவன்விழாத்
தெரிசியாக் கண்கள் புண்கள்
சிவனைநினை யாச்சிந்தை நிந்தையாம் இதுநமது
சித்தாந்தம் என்ற திருவே
திகழ்பரம னடவும்விடை மனையினமும் அவன்முனோர்
செறிகமரின் அமுதுண்ட நாள்
சேர்வுற விடேல்என்ற ஒருமரக் கறியும் அச்
சிவபிரான் விடய மாகத்
திருவாத வூரடிகள் திருவாய் மலர்ந்தருள்
திருக்கோவை யார்செய் கையுஞ்
செப்புகஎ னக்கடாஅய் நின்றவர்க் கிறைமொழி
தெரிக்கும் சிறப்பு வாய்ந்தே
சீரைந் தெழுத்தினால் இலகுநக ரின்கண்ஓர்
திருவைந் தெழுத்தின் ஓங்கும்
தேசிகத்✣ தண்ணமுத வான்கடல் படிந்தருள்
தெள்ளமுதம் உண்டு தேக்கிச்
செறிபவக் கோடையற அருண்மழை பொழிந்தொளி
சிறந்தோங்கு சீர்க் கொண்டலே
செய்யதாண் டவராய தூயவாழ் வேநினது
திருவடிக் கன்பு கொண்டே

தணிவளர் விராகமது பெற்றிலேன் காமரந்
தானும்அறி யேன் துன்பினைத்
தலிதஞ்சே யேன்மங்கு லங்கொண்டு நகபதந்
தன்னிற் பருத்து வினையைத்
தாங்குசும் மாடாயி னேன்நவ விராகமுதல்
சாற்றுசும் மாடு மட்டுந்
தங்குமொழி முதலைஉடை யேன்முதற் கயலில்
தயங்குமொரு நாமம் உடையேன்
தகுமுறைக் கடைமூன்றி னுஞ்சுவசி யுற்றிலேன்
சதுரிலேன் பஞ்ச நயவேன்
சட்டியில் இரண்டின்ஒன் றேய்ந்திலேன் ஒன்றுபோற்
றானுழைத் துழலு கின்றேன்

---

* நிறைவே – ச.மு.க. பதிப்பு.

✣ சீரைந் தெழுத்தினால் இலகும்நகர் – (திரு) ஆவடுதுறை
திருவைந்தெழுத்தின் ஓங்கும் தேசிகர் – நமசிவாய தேசிகர் திருவாவடுதுறை ஆதினத்தின் ஆதி குருமூர்த்திகள்

Koviloor Digital Library

தண்டன் ஆயிரமிட் டுரைக்கும்வின் ணப்பமது
தான்என்னை யெனில் உன்னடியார்
சைவயோ கஞ்செய்வர் யானுமொரு கால்போன
சைவ யோகஞ் செய்குவேன்
தட்டுறா ஞானம்உடை யார்நினது தொண்டர்யான்
தானும்அது சுட்ட உடையேன்
சாந்தநெஞ் சுடையர்நின தன்பர்யான் மணம்வீசு
சாந்தநெஞ் சதுவும் உடையேன்
சகசநிய மம்பெறுவர் நின்அடியர் அடிமையும்
சகச நியமம் பெற்றுளேன்
தனிவீடு விழைவர்நின் அன்பர்யான் பலகூட
சாலையுள வீடு விழைவேன்
சார்புலக் கள்வர்வரின் அஞ்சுவர்நின் அடியர்யான்
தனிவரினும் மிக அஞ்சுவேன்
தாழ்பொறி அடக்குவர்நின் அன்பர்யான் உயர்பொறிகள்
தமைஅகம் அடக்க வல்லேன்
தமியனேன் தன்னைநீ கைவிடேல் விடினும்நின்
தன்னைநான் விடுவ னல்லேன்
தகுவழக் கிட்டெனினும் நின்பால் எனக்குமொரு
சார்புறச் செய்கு வேனே. 1

வெண்பா

பண்டு குலம்பேசப் பரிந்ததில்லை ஈண்டென்னைக்
கொண்டு குலம்பேசக் குறிப்பானோ – தொண்டுசெய
நீண்டவரா யப்பெருமா னீக்குந் திருத்துறைசைத்
தாண்டவரா யப்பெருமான் றான். 2

கட்டளைக் கலித்துறை

வானோர் அமரர் வருந்திக் கடைந்த மருந்துவந்து
தானே ஒருசிறு நாய்க்குக் கிடைத்த தகவெனஎம்
மானோர் துறைசைநற் றாண்டவ ராய மணிஎனது
பானோர் கிடைத்தும் பயன்கொள்கி லேன்வெறும் பாவியனே. 3

மின்னேர் சடைமுடித் தாண்டவ ராய வியன்றவநின்
றன்னோர் அடைதற் கெளிதாக நான்பெற்றுந் தாழ்த்துகின்றேன்
பொன்னே கொடுத்தும் ஏனுநா லடியின்* பொருட்கிலக்காய்
என்னே இருந்துழல் என்ஏழை வன்மதி என்மதியே. 4

* இங்கு மேற்கொண்டுள்ள நாலடியார்ச் செய்யுள் :

பொன்னே கொடுத்தும் புணர்தற் கரியாரைக்
கொன்னே தலைக்கூடப் பெற்றிருந்தும் – அன்னோ
பயனில் பொழுதாக் கழிப்பரே நல்ல
நயமில் அறிவி னவர். – பெரியாரைப் பிழையாமை 2 (162)

Koviloor Digital Library

வருந்துக் கனவினுஞ் சோற்றி யானை மணத்தி
விருந்துக் கழைப்பது போலேநின் பொற்பத
மருந்துக்கு மெய்சொல வாராத வென்றனை
தருந்துக்க ஊழ்விட மாட்டாது தாண்டவ 5

வாய்மட் டுமோமன் மட்டோஎன் ஆருயிர்மட்ட
போய்மட் டுறுமின் சுவைமய மாக்குநின் பொன்மலர்
ஆய்மட் டமுதஞ் செவிக்கேற முன்முய லாமையிந
நாய்மட் டுமோதந்தை தாய்மட்டு மாஞ்சைவ நி✲ 6

திருச்சிற்றம்பலம்

7. திருமுகப் பாடல்கள்

அன்பர்களுக்கு எழுதி விடுத்த திருமுகப் பாடல்கள்

அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

படிப்பதுநன் றெனத்தெரிந்த பாங்குடையாய்
  மன்றுள்வெளிப் பரம னன்பே
தடிப்பதுநன் றெனத்தேர்ந்த சதுருடையாய்
  அறநவின்ற தவத்தாய் வீணில்
துடிப்பதிலாத் தூயமனச் சுந்தரப்பேர்
  உடையாய்என் தோழ கேள் நீ
அடிப்பதுமச் சிறுவர்களை அடிப்பதுநன்
  றலஎன்மேல்ஆணை ஆணை.★ 1

திருவோங்கு பொற்சபையும் சிற்சபையும்
  நம்பெருமான் செய்யா நின்ற
உருவோங்கும் ஆனந்தத் தாண்டவமும்
  கண்டினிதாங் குறைக யானும்
தருவோங்கு தில்லைநகர்க் கோரிருபால்
  நாள்வரைக்குட் சார்கின் றேன்நம்
இருவோங்கள் குறையும்இறைக் குரைத்தகற்றிக்
  கொளலாம்நீ இளையேல் ஐயா.✪ 2

✲ தாண்டவராய சுவாமிகளுக்கு எழுதிய ஆறுபாடல்களில் முதல் இரண்டு பாடல்களும் ஒரு திருமுகம் பின் நான்கு பாடல்களும் வேறோர் சமயம் எழுதியவை. 5, 6ஆம் பாடல்களில் புள்ளியிட்ட இடங்களில் ஏடுகள் சிதைந்துள்ளதாக ஆ.பா. குறிக்கிறார்.

★ படிக்கும் பிள்ளைகளை அடிக்க வேண்டாம் எனப் பொன்னேரி சுந்தரம் பிள்ளைக்கு எழுதி அனுப்பியது.

✪ பொன்னேரி சுந்தரம் பிள்ளை வறுமைதீர வழிகேட்டபோது பாடி அளித்தது.

Koviloor Digital Library

பண்ப னேகமும் திரண்டுரு
வாகிஎம் பாக்கியம் போல்வந்த
நண்ப னேநினைப் பிரிந்தநாள்
முதல்இந்த நாள்வரை உணவெல்லாம்
புண்ப னேர்ந்தபோ துண்டவாம்
கண்டுநிற் புல்லிநின் னுடனிங்கே
உண்ப னேல்அஃ துணவென
மதிப்பன்ஈ துண்மைஎன் றுணர்வாயே.✤ 3

திருவளருந் திறத்தாய் என்கண் ணனையாய்
நீ அனுப்பச் சிறியேன் தன்பால்
வருகடிதந் தனைஎ திர்கொண் டிருகைவிரித்
தன்பினொடு வாங்கி நின்றேன்
உருவளரு மணிமுடியாய்ச் சூட்டினேன்
கண்களிலே ஒற்றிக் கொண்டேன்
பொருவருமோர் முத்தமிட்டேன் பூசித்தேன்
வாசித்தேன் புளகுற் றேனே. 4

திருமயிலா புரியீசன் திருவருளால்
வேலெனும்பேர் சிறக்க வாழ்வோய்
ஒருமையிலா மற்றவர்போல் எமைநினைத்தல்
வேண்டாம்எம் உள்ளம் நின்றன்
கருமையிலாக் கருணைமுகம் காண்பதற்கு
விழைந்தங்கே கலந்த திங்கே
அருமையிலாப் பெருமையிலே இருக்கின்றேம்
இதுகடவுள் ஆணை என்றே.★ 5

✤ இதுவும் அடுத்த பாட்டும் இன்னார்க்கு எழுதியது என்பது விளங்கவில்லை

★ இராயல் ஹோட்டல் புதுவை வேலு முதலியார்க்கு எழுதியது மதுரைத் தமிழ்ச்சங்கம் ம.ரா. கந்தசாமிக் கவிராயர் தொகுத்த தனிச்செய்யுட்சிந்தாமணியில் (1908) உள்ளது. கொட்டாம்பட்டி, கருப்பையா பாவலர் தொகுத்து ஊ. புஷ்பரதசெட்டி & கம்பெனி வெளியிட்ட தனிச்செய்யுட்சிந்தாமணியில் (1901) இது சில பாட பேதங்களுடன் பின்வருமாறு காணப்படுகிறது.

திருமயிலா புரியீசன் திருவருளால்
வேலெனும்பேர் சிறக்க வாழ்வோய்
ஒருமையிலா மற்றவர்போல் எனைநினைத்தல்
வேண்டாம்என் உள்ளம் நின்றன்
கருமையிலாக் கருணைமுகம் காண்தற்கு
விழைந்ததிங்கே கலந்த தங்கே
அருமையிலாப் பெருமையிலே இருக்கின்றேன்
இதுகடவுள் ஆணை என்றே

ஆ.பா. இதனை இவ்வாறே திருமுகப் பகுதியில் சேர்த்துள்ளார் பாவலர் பாடத்தினும் கவிராயர் பாடமே பொருட்பொருத்த முடையது. சிறந்தது.

Koviloor Digital Library

நிலைமண்டில ஆசிரியப்பா

இறையருள் நிரம்ப இருத்தலான் மகிழ்ந்து
பிறையென வளருநம் பிள்ளை மணிக்கு
ஊருவிற் கட்டி உடனே உடையும்
அதுகுறித் தையநீ அஞ்சலை அஞ்சலை
இதுகுறித் தருள்நீ றிதற்குள் அடக்கஞ்
செய்துவைத் தனன்அத் திருநீ றெடுத்து
எய்துமுப் போதும் இடுகமற் றதன்மேல்
கொவ்வைச் சாறும் கோள்வெடி யுப்பும்
கவ்வக் கலந்து காய்ச்சிப் பூசுக
பூசுக உடைந்தபிற் பூரம் பூசுக
பாசுறு முருங்கைப் பட்டைச் சாற்றினில்.✹ 6

கல்வியிற் கேள்வியிற் கடவினுஞ் சிறந்து
அன்பறி வொழுக்கம் அமைந்தென் னிரண்டு
கண்போன் றென்பாற் கனிவுகொண் டமர்ந்த
குணரத் தினநீ குடும்பத் துடனே
தீர்க்க ஆயுளும் செல்வப் பெருக்கும்
நோயற்ற வாழ்வும் நுவலரும் கீர்த்தியும்
சிவந்திகழ் ஞானமும் சித்தியும் பெற்று
வாழ்க வாழ்க மகிழ்ந்து அருள்துணையால்
வாழ்க வாழ்க வளம்பெற வாழ்க.✦ 7

திருச்சிற்றம்பலம்

✹ கூடலூர் பேரை தேவநாத பிள்ளைக்கு எழுதியது. பிறைஎன வளரும் நம்பிள்ளை மணி எனக் குறிப்பிடப் பெறுபவர் தேவநாத பிள்ளையின் மகன் அய்யாசாமிப்பிள்ளை.

✦ இறுக்கம் இரத்தின முதலியார்க்கு எழுதிய 20ஆவது திருமுகத்தின் தலைப்பில் காணப்படுகிறது. (19–05–1864)

Koviloor Digital Library

8. சாற்றுக் கவிகள்

1. நிட்டானுபூதி உரைக்கு

அருளிய சாற்றுக்கவி✣

எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

நலங்கொள்சிவ யோகமணம் நாற்றிசையு மணக்கும்
ஞானமணம் கந்திக்கும் மோனமணம் நாறும்
விலங்கலில்சித் தாந்தமணம் பரிமளிக்கும் இன்பா
வேதாந்த மணங்கமழும் வேதமணம் வீசும்
தலங்கொளுமெய் அத்துவிதத் திருமணமும் பரவும்
தனிமுத்துக் கிருட்டினப்பேர் தங்கியநம் பிரமம்
வலங்கொளுநன் னிட்டானு பூதியெனு நூற்கே
வாய்மலர்ந்த உரையெனுமோர் மாமலரி னிடத்தே.

திருச்சிற்றம்பலம்

2. சிதம்பரபுராணப் பதிப்புக்கு

அருளிய சாற்றுக்கவிகள்❈

காப்பு

குறள்வெண் செந்துறை

திருச்சிற்றம்பலம்

சிதம்பர புராணம் இதம்பெறத் திருத்திய
சிதம்பர முனிவன் பதம்பர வியது.

✣ நிட்டானுபூதி சிறந்த அனுபூதி நூல். அருளியவர் திருக்கோவலூர் ஆதீனம் ஞானியார் மடாலயம், முதல் குருமூர்த்திகளாகிய ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகமெய்ஞ்ஞான சிவாசாரிய சுவாமிகள். உரைசெய்தவர் முத்துக்கிருஷ்ணபிரம்மம். இவ்வுரை மிகச் சிறந்த உரை 91 நூல்களிலிருந்து 410 செய்யுள்களை மேற்கோளாக உரையாசிரியர் எடுத்துக் காட்டுகிறார். இவ்வுரை பெருமானாரின் சாற்றுக் கவியுடன் 1851 இல் (விரோதிகிருதி, மார்கழி) அச்சாயிற்று.

❈ புராணத் திருமலைநாதர் இயற்றிய சிதம்பரபுராணத்தை மதுரை ஆதீனம் சிதம்பர சுவாமிகள் 1885இல் (இராட்சத, ஆவணி) அச்சிற் பதிப்பித்தார். இவை அப்பதிப்புக்கு அடிகள் அருளிய சாற்றுக்கவிகளாம். இச் சிதம்பர சுவாமிகள் பெருமானாருடன் பழக்கமிக்குடையவர். 1867இல் திருவருட்பா முதன் முதலில் அச்சிடப்பெற்றபோது. “தண்ணீர் விளக்கெரித்த”, என்னும் வெண்பாவை நூற்சிறப்பாகப் பாடியவர்.

Koviloor Digital Library

நிலைமண்டில ஆசிரியப்பா

செம்மலர்ச் செம்மலுந் திருத்தகு நிறத்தனும்
அம்மலர்க் கரத்திற் கம்மலர்க் கடவுளும்
படைத்திடல் முன்னாப் பயனுறு பெருந்தொழில்
நடைத்திற மூன்று நடாஅய்ப் பிறங்கிய
தத்தந் தலைமையிற் றாழ்வின்றி ஓங்குபு

சித்தந் திறமுறத் திருவருட் சார்த்திச்
சின்மய வடிவில் சிதாகா யத்திடைத்
தன்மய இன்பத் தனிநடம் புரியும்
காரண எண்குணா கார அகண்ட
பூரண பாரபர புனித சிற்பர

சிவநிலை இஃதெனத் தெளிவித் தழியா
நவநிலை ஞாங்கர் நண்ணி அனுபவத்
தனிச்சிவ ஞானந் தன்னைமூ வாண்டிற்
பனிப்புறச் சிவைமுலைப் பாலொடு மளாஅய்
ஊட்டிட உண்டிவ் வுலகெலாந் தழைப்ப

வாட்டமில் அமுத வாய்மலர் மலர்ந்து
தோடுடை எனுமறைச் சொல்லமு தளித்து
நாடுடைத் தாதையை நயப்பித் தருளிப்
பற்பல சைவப் பதிதொறும் அணுகிச்
சொற்பல பதிகச் சுருதிகள் புனைந்து

பொற்றிருத் தாளமும் புதுமணிச் சிவிகையும்
கொற்றவர் புகழ்மணிக் குடையும் சின்னமும்
சுந்தரக் காளமும் சந்தநற் றாரையும்
சிந்தரும் வெண்மணிப் பந்தரும் காசும்
பரம்பரன் அளிக்கப் பண்புடன் பெற்றோன்

வரம்பெறு மழவன் மகட்பிணி சவட்டி
மருகலில் வசியன் வல்விடந் தீர்ந்து
வருநெறி பற்பல மகத்துவம் புரியாக்
கூடலில் தென்னன் கூனும் குற்றமும்
வாடலில் அமணர்தம் மதமும் வாழ்க்கையும்

எளிதினின் முருக்கி இயல்புறும் ஆண்பனை
அளியுறு பெண்பனை யாகக் காட்டிஒண்
மயிலையில் என்பினை மங்கை யாக்கியுள்

Koviloor Digital Library

அயர்வறு திருமணத் தடைந்தவர் தமக்கெலாம்
பெறலருஞ் சோதிப் பேருரு வளித்திவ்

வையமும் வானமும் மறையும் சைவமும்
உய்ய ஓங்கிய ஒருபெருங் குரவன்
ஞான சம்பந்த நாயகன் அருளால்
ஈன சம்பந்த மெல்லாம் ஒழித்தோன்
நரைவரும் என்றெணி நல்லறி வாளர்

இரைவுறு குழவி யிடத்தே துறந்தார்
என்று நாலடிக்◆ கிலக்கிய மானவன்
மன்னுமா தவரெலாம் வழுத்தும் அருந்தவன்
எல்லா உயிர்க்கும் இதஞ்செய லன்றிப்
பொல்லாமை ஒன்றும் புணராப் புண்ணியன்

வாய்மையும் மாண்பும் வயம்பெறு மனனும்
தூய்மையும் தெளிவும் சுற்றமாக் கொண்டோன்
கனவினும் உலகைக் கருதாக் கருத்தினன்
நனவினிற் சுழுத்தி நண்ணிய திறத்தோன்
முப்பொருட் டிறனும் முழுதுணர் முனிவன்

எப்பொருட் கண்ணும் மெய்ப்பொருள் உணர்ந்தோன்
சிவமலா தொன்றும் சிந்தைவைத் தறியான்
பவமிலா நெறியே பற்றிய நிலையினன்
காமம் வெகுளி மயக்கெனும் கரிசினை
நாமங் கெடஉள் நலிவித்த வித்தகன்

துறவரில் துறவன் சுத்தமெய்ஞ் ஞானி
அறவரின் அறவன் அன்பரின் அன்பன்
திகழ்சிவ யோகி ஜீவன் முக்தன்
புகழ்இகழ் ஒன்றும் பொருந்தாப் புனிதன்
சிவநூல் முழுதும் தெளிந்த சத்துவன்

◆ இங்கு மேற்கொண்டுள்ள நாலடியார்ச் செய்யுள் :

நரைவரும் என்றெண்ணி நல்லறி வாளர்
குழவி யிடத்தே துறந்தார் – புரைதீரா
மன்னா இளமை மகிழ்ந்தாரே கோல்ஊன்றி
இன்னாங் கெழுந்திருப் பார். – இளமை நிலையாமை 1 (11)

Koviloor Digital Library

பவநூல் மறந்தும் பாராத் திறலோன்
என்போன் றவர்க்கும் இன்னருள் புரிவோன்
தன்போன் றவரிலாச் சாந்த வேந்தன்
சைவம் பழுத்த தனித்தரு நங்குல
தெய்வமாம் மதுரைச் சிதம்பர தேவன்

புண்ணிய சிதம்பர புராணந் தன்னை
நுண்ணிய அறிவால் நோக்குபு திருத்தம்
ஏர்பெற இயற்றி யாவரும் பயின்றுயப்
பாருறும் அச்சிற் பதிப்பித் தருளிய
உதவியை நினைந்துளம் உவந்து முப்பொழுதும்
பதமருள் அவனருட் பதமிறைஞ் சுதுமே

எழுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

உலகெலாம் புகழும் சிதம்பர வரலா
　　றுயிரெலாம் உணர்ந்துவீ டடைவான்
அலகுறா மடற்கண் எழுதுறா எழுத்தின்
　　அமைவித்த அருட்பெருங் கடலே
இலகுசீர்க் கூடன் மடாலயத் தமர்ந்த
　　எழிற்றிரு ஞானசம் பந்தத்
திலகசற் குருவின் அருள்பெறும் பொருளே
　　சிதம்பர மாதபோ நிதியே. 1

சிதம்பர வரலா றுலகெலா முணரத்
　　திருத்திஎம் போன்றவர் தமக்கும்
இதம்பெறும் அழியாப் பதம்பெற அளித்த
　　இன்பமே என்தனி அன்பே
கதம்பெறு மதங்கள் அதம்பெறப் புரிந்த
　　கவுணியற் கினியஉட் களிப்பே
சிதம்பெறு ஞானா முதம்தரு மதுரைச்
　　சிதம்பர மாதபோ நிதியே. 2

சத்திறை உயிர்தான் சத்தசத் தாகும்
　　தடைமல மசத்திவற் றிடைநீ
இத்திறை அபர நோக்கலை பரநோக்
　　கெய்துதி இறைநிறை வுறைவாய்
புத்திஈ தெனஎன் புத்தியைத் திருத்தும்
　　போதசின் மயஒளி மணியே
சித்திஎண் வகையும் பெறத்தரு மதுரைச்
　　சிதம்பர மாதபோ நிதியே. 3

Koviloor Digital Library

மறைநெறிப் பொதுவும் ஆகமச் சிறப்பும்
வகுப்பது சிவத்தொடு மருவிக்
குறைநிறை வகலக் கூடுதல் இதனைக்
குறிப்பறக் குறியெனக் குறிக்கக்
கறைமிடற் றொளித்துச் சடைமுடி யோடும்
காட்சிதந் தருள்செழுங் கதிரே
சிறைமலம் அகற்றி அருள்தரு மதுரைச்
சிதம்பர மாதபோ நிதியே 4

ஒன்றெனில் இரண்டாங் குறுமயல் அதனால்
ஒன்றெனக் குறித்தலும் ஒழித்தே
நின்றனை யெனில்நீ நின்றனை அறிதி
நெறியிதென் றுணர்த்திய நிறைவே
மன்றிலா னந்த வாரிவா யமுதம்
வாரியுண் டெழுஞ்செழு முகிலே
தென்றிசைக் கணிகொண் டோங்கிய மதுரைச்
சிதம்பர மாதபோ நிதியே. 5

திருச்சிற்றம்பலம்

3. வேதநாயகம் பிள்ளை நீதிநூலுக்கு அருளிய சாற்றுக்கவி°

அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

வளங்கொள்குளத் தூர்அமர்ந்த வேதநா
யகன்அருளால் வயங்க முன்னாள்
உளங்கொள்மனு உரைத்தனன்ஓர் நீதிநூல்
அந்நூற்பின் உறுநூ லாக
தூளங்கிடும்அவ் வூர்உறைஅத் தோன்றல்ஓர்
நீதிநூல் சொன்னான் இந்நாள்
விளங்கும் இந்நூல் முன்னர்மற்றை
நூல்எல்லாம் கிழிபடத்தின் வெண்ணூல்அன்றே.

திருச்சிற்றம்பலம்

° மாயூரம் முன்சீப் வேதநாயகம் பிள்ளை (11–10–1826–21–7–1889) கிறித்தவர். ஆயினும் சமய சமரச நோக்கம் உடையவர். மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்களின் நண்பர். சைவ ஆதீனங்களுடன் பழக்கமுடையார். இவரது நீதிநூல் 1859 இல் (காளயுத்தி, தை) அச்சாயிற்று. இரண்டாம் பதிப்பு –1860. பெருமானாரின் சாற்றுக்கவி, சென்னபட்டணம் வித்வான் ஸ்ரீ இராமலிங்க பிள்ளையவர்க ளியற்றியது என அச்சிடப் பெற்றுள்ளது.

Koviloor Digital Library

4. தேவநாத பிள்ளை தோத்திரங்களுக்கு அருளிய சாற்றுக்கவி*

அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

இரும்புருக்க உலைக்களந்தோ றுழல்கின்றீர்
இரும்பொன்றோ இளகாக் கல்லும்
விரும்பிஒரு கணத்துருக்கும் உளவொன்று
கேட்கவள மேவு கூடற்*
பெரும்புகழான் தேவநா தன்பரனைக்
குறித்தன்பு பிறங்கப் பாடும்
கரும்பியைந்த சுவைப்பாட்டில் ஒன்றவைக்கு
முன்பாடிக் காணு வீரே.

திருச்சிற்றம்பலம்

5. முத்துசாமி முதலியார் தோத்திரங்களுக்கு அருளிய சாற்றுக்கவி ❋

பன்னிருசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

ஒருவகைப் பொருள்தெரித் துயவுதீர்
மறைகள்நான் கொன்றி வாழ்க
உயரரன் தரும் ஏழு நான்கதாம்
ஆகமம் உலகின் மல்க
இருகைப் பவம்ஒழித் திலகும்வெண்
நீற்றினம் எங்கும் ஓங்க
இணையில்நல் அறமுன்ஆம் பயன்ஒரு
நான்கும்ஈ டேறி வெல்க
பொருவலற் றரையர்எத் திசையுளும்
நீதியால் பொலிக யாரும்
புகழ்சிவாத் துவிதசித் தாந்தமெய்ச்
சரணர்எண் புல்க நாளும்
திருவருட் பனுவல்சொற் றிடும்அவர்க்
கெண்திரு சேர்க வாதைச்
செப்பு முத்துச்சுவா மிக்கவிக்
குரிசில்சீர் செழிக மாதோ.

திருச்சிற்றம்பலம்

பல்வகைய தனிப்பாடல்கள் முற்றும்.

---

* இறையருள் நிரம்ப இருத்தலான் என்னும் திருமுகப் பாடல் இத் தேவநாத பிள்ளைக்கு எழுதப் பெற்றதே.

* கூடல் – கூடலூர்

❋ குடும்பகோரம் எழுதப்பெற்றது இம்முத்துசாமி முதலியார்க்கே.

Koviloor Digital Library

பின் இணைப்புகள் : ஆதாரப்பதிப்புகளின் முகப்பேடுகள்

ஆறாம் திருமுறை முதற் பதிப்பின் முகப்பேடு

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

திருவருட்பிரகாசவள்ளலாரென்னும்

சிதம்பரம்

இராமலிங்கசுவாமிகள்

திருவாய்மலர்ந்தருளிய

திருவருட்பா

❖❖❖❖❖

ஆறாவது திருமுறை

****

இஃது

சமரச வேதசன்மார்க்க சங்காபிமானிகளாகிய

வேலூர் — பத்மநாப முதலியார்

பெங்களூர் — இராகவலு நாயகர்

வேண்டுகோளின்படி

சென்னைக்கவர்ன்மெண்டு நார்மல்பாடசாலைத் தமிழ்ப்புலவர்

சோடசாவதானம்

தி—க. சுப்பராயசெட்டியார் பார்வையிட்டு

மேற்படி சமரசவேதசன்மார்க்கசங்காபிமானி

திரிசிரபுரம் — ம. லோகநாத செட்டியாரால்

அச்சிற்பதிப்பிக்கப்பட்டது

கலியுகாதி — சகஅசு — ல் நிகழும் தாரண௵ கும்பரவி

PRINTED AT THE AUTHIKALANITHI PRESS :- MADRAS

MARCH 1885.

Registered Copy - Right

Koviloor Digital Library

ஆறுதிருமுறைகளும் சேர்ந்த முதற் பதிப்பின் முகப்பேடு.

உ
கணபதி துணை
திருச்சிற்றம்பலம்

அருட்பெருஞ் சித்தராயமர்ந்த
திருவருட் பிரகாச வள்ளலாரென்னும்
சிதம்பரம்

இராமலிங்க பிள்ளை அவர்கள்

திருவாய்மலர்ந்தருளிய

திருவருட்பாத் திருமுறைத் திரட்டு

இஃது
கா. திருவேங்கட முதலியார்
விருப்பத்தின்படி
பிள்ளையவர்கள் மருகரும் சமரச வேத சன்மார்க்க சங்க
வித்வான்களி லொருவருமாகிய
புராணிகர்
பொ. சுந்தரம் பிள்ளையவர்கள்
திரட்டித்தர,
அஷ்டாவதானம்
பூவை. கலியாணசுந்தர முதலியாரால்
பார்வையிடப்பட்டு,
பிருங்கிமா நகரம்
இராமசாமி முதலியாரால்

சென்னை :
ஆல்பீனியன் அச்சியந்திரசாலையில் பதிப்பிக்கப்பட்டது.
கலியாப்தம் [illegible]ல் நிகழும் நந்தன ௵
1892

Registered Copy - Right

Koviloor Digital Library

பிருங்கிமாநகரம் இராமசாமி முதலியார் பதிப்பின் முகப்பேடு.

உ
கணபதி துணை
திருச்சிற்றம்பலம்

அருட்பெருஞ்சித்தராயமர்ந்த
திருவருட்பிரகாசவள்ளலாரென்னும்
சிதம்பரம்

இராமலிங்கபிள்ளை அவர்கள்

திருவாய்மலர்ந்தருளிய

திருவருட்பாத் திருமுறை

இதனுள்
ஆறுதிருமுறைகளுடன் இதுகாறுமச்சிடாத
பற்பலபதிகங்களும், நித்தியவிதியென்னும் உலகியலும்
நாமாவளிகளும்
நூதனமாகச் சேர்க்கப்பட்டு,

சமரசவேத சன்மார்க்க சங்கத்தி லொருவராகிய
பிருங்கிமாநகரம்
இராமசாமி முதலியாரவர்களால்

தமது
இந்துயூனியன் அச்சியந்திரசாலையில்
பதிப்பிக்கப்பட்டது.
சென்னை

கலியாப்தம் **சகூகூஅ** நிகழும் துர்முகி ௵

1896

Koviloor Digital Library

சமரசபஜனை ச.மு. கந்தசாமி பிள்ளை பதிப்பின் முகப்பேடு.

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

அருட்பெருஞ்ஜோதி - தனிப்பெருங்கருணை

திருவருட்பிரகாச வள்ளலார்
என்னும்
சிதம்பரம் இராமலிங்கசுவாமிகள்
திருவாய்மலர்ந்தருளிய

திருவருட்பா

திருவருட்பிரகாச வள்ளலாரை
உபாசனா மூர்த்தியாகக் கொண்டொழுகும்
காரணப்பட்டு - சமரஸ பஜனை
ச.மு. கந்தசாமி பிள்ளை அவர்களால்
பார்வையிடப்பட்டு

❋❋❋❋❋

இதுகாறும் வெளிவராத பாடல்கள்
குறிப்புகளுடன்

புதுக்கோட்டைச்சீமை - இராமச்சந்திரபுரம்
தீ.நா. முத்தையா செட்டியார், F.R.S.A.
அவர்களால்
சென்னை சூளை, ஸன் ஆப் இந்தியா பிரஸ்ஸில்
பதிப்பித்தது.

ருத்ரோத்காரி ௵) 1924 (ரிஜிஸ்டர் செய்தது

Koviloor Digital Library

திருஅருட்பா

ஆ. பாலகிருஷ்ணன் பிள்ளை அவர்கள் பதிப்பு

இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை சென்னை முன்னாள் ஆணையர்

12 புத்தகங்கள்

1.	கீர்த்தனைப் பகுதி	முதற் பதிப்பு	01–02–1931
		2 ஆம் "	11–12–1933
		3 ஆம் "	06–09–1961
2.	வசனப் பகுதி	முதற் பதிப்பு	23–05–1931
		2 ஆம் "	22–04–1934
		3 ஆம் "	19–06–1958
		4 ஆம் "	
		5 ஆம் "	24–01–1959
3.	வியாக்கியானப் பகுதி	முதற் பதிப்பு	09–10–1931
		2 ஆம் "	09–12–1935
		3 ஆம் "	1961
4.	உபதேசப் பகுதி	முதற் பதிப்பு	23–01–1932
		2 ஆம் "	23–04–1959
5.	திருமுகப் பகுதி	முதற் பதிப்பு	12–05–1932
		2 ஆம் "	21–08–1959
6.	தனிப்பாசுரப் பகுதி	முதற் பதிப்பு	02–02–1933
		2 ஆம் "	25–12–1959
7.	முதல் திருமுறை அல்லது பெருநூல் பகுதி		13–01–1956
8.	இரண்டாம் திருமுறையும் மூன்றாம் திருமுறையும் அல்லது திருஒற்றியூர்ப் பகுதி		28–12–1956
9.	ஐந்தாம் திருமுறை அல்லது திருத்தணிகைப் பகுதி		25–09–1957
10.	நான்காம்திருமுறையும் ஆறாம்திருமுறை முன்பகுதியும் அல்லது பூர்வஞான சிதம்பரப் பகுதி		05–01–1958
11.	ஆறாம் திருமுறை இடைப்பகுதி அல்லது உத்தரஞானசிதம்பரப் பகுதி		14–07–1958
12.	ஆறாம் திருமுறை முடிந்தபகுதி அல்லது சித்திவளாகப் பகுதி		20–10–1958

Koviloor Digital Library

அ

அகங்காரக் கொடுங்கிழங்கை 67
அகங்காரம் எனும் பொல்லா 1408
அகத்தானைப் புறத்தானை 671
அகத்தேகறுத்துப் புறத்துவெளுத் 1273
அகத்தொன்று புறத்தொன்று 953
அகம்புறம் மற்றை அகப்புறம் 981
அகரநிலை விளங்கு சத்தர் 13
அகவடிவை ஒருகணத்தே 781
அங்கலிட்ட களத்தழகர் 1058
அங்கே அடியர் தமக்கெல்லாம் 81
அங்கே உன்றன் அன்பர்கள் 1652
அச்சந் தவிர்த்தே அருளிற் 1018
அச்சமெலாந் தவிர்த்தருளி 790
அச்சம் தீர்த்திங் கென்னை 1832
அச்சம் நீக்கிய என் 760
அச்சாநான் வேண்டுதல்கேட் 353
அச்சையும் உடம்பையும் 1467
அச்சோ என்என்று புகல்வேன் 1324
அஞ்சலை நீ ஒரு சிறிதும் 1390
அஞ்சல் என்றெனை 1049
அஞ்சாதே நெஞ்சே அஞ்சாதே 2088
அஞ்சி அஞ்சி ஊனும் அருந்தாமல் 1211
அடங்குநாள் இல்லா தமர்ந்தானை 1740
அடர்மலத் தடையால் தடையுறும் 719
அடாத காரியங்கள் செய்தனன் 153
அடிஇது முடிஇது நடுநிலைஇது 1388
அடிகேள்நான் வேண்டுதல்கேட் 351
அடிக்கடி என் அகத்தினிலும் 560
அடிக்கடி நுண்மை விழைந்துபோய் 117
அடிச்சிறியேன் அச்சமெலாம் 632
அடிநடு முடியோர் 708
அடிபிடித்துத் திரிகின்ற மறைக 417
அடியனேன் உள்ளம் 337
அடியனேன் பொருட்டிவ் வவனி 810
அடியன் ஆக்கிப் பிள்ளை ஆக்கி 1822
அடியாதென் றறிந்துகொளற் 795
அடியார் இதயாம்புயனே அபயம் 522
அடியார் வருத்தம்தனைக்கண்டு 76
அடிவளர் இயலே 28
அடிவிளங்கக் கனகசபைத் 1595
அடுக்கியபே ரண்டமெலாம் 792
அடுக்குந் தொண்டர் தமக் 93
அடுத்தவர் மயங்கி மதித்திட 450
அடுத்தானை அடியேனை 657
அடுத்துநான் உன்னைக் 1051
அடைந்திடுமின் உலகீர் 1540
அணங்கெழுபேர் ஓசையொடும் 1563
அணிமதியிலே மதியின் 1353
அணியே எனது மெய்யறிவே 1670
அணிவளர் திருச்சிற்றம்பலத் 747
அணையவாரீர் என்னை அணைய 1956
அண்ட அப்பா 1586
அண்ட ஒருமைப்பகுதி 1354
அண்டகோடி அனைத்தும் 1843
அண்டத் தகத்தும் புறத்தும் 1772
அண்டப் பரப்பின் திறங்கள் 1781
அண்டமும் அகிலமும் 1573
அண்டமெலாம் பிண்டமெலாம் 19
அண்டவகை எவ்வளவோ 616
அண்டவள வெவ்வளவோ 545
அண்ணா எனையும் பொருளென் 1823
அண்ணாநான் வேண்டுதல்கேட் 348
அதுபார் அதிலே அடைந்துவதி 1219
அதுபாவக முகத்தானந்த 1068
அதுவளர் அணுவே அணுவளர் 34
அத்த நீ எனை ஓர் தாய்கையில் 421
அத்தம்நேர் கிடைத்த 761
அத்தனே திருச்சிற்றம்பலத் 302
அத்தாநான் வேண்டுதல்கேட் 349
அந்தமோடாதி இல்லதோர் 245
அந்நாளில் அம்பலத் 1371
அந்நாள்வந் தென்றனை 1070
அபயம் அபயம் அபயம் 2153
அபயம் பதியே அபயம் பரமே 1600
அப்பணிமுடி என்அப்பனே 193
அப்பனை இப்பனை ஆக்கி 1673
அப்பன்வரு தருணம் இதே 1443
அப்பாஎனக்கெய்ப்பில்வைப்பாய் 1275
அப்பாஎன் றோர்கால் 1488
அப்பாநான் பற்பலகால் 466
அப்பாநான் வேண்டுதல்கேட் 346
அப்பா நின்னை அடைந்த 1803
அப்பா நின்னை அன்றி 1756
அப்பூறு செஞ்சடை அப்பா 1690
அமரரும் முனிவரும் அதிசயித்திட 1393
அமலாநான் வேண்டுதல்கேட் 356
அம்பலத்தரசே அருமருந்தே 2256

Koviloor Digital Library

அம்பலத்தாடும் அமுதமேஎன்கோ 757
அம்பலத்தே ஆடுகின்ற 1594
அம்பலத்தேதிருடஞ்செய்அடிமலர் 2445
அம்பலத்தேதிருநடஞ்செய்அடிமலர் 1078
அம்பலத்தே நடம்புரியும் 1066
அம்பலம் சேர்ந்தேன் எம்பலம் 1639
அம்பலவர் வந்தார் என்று 2232
அம்புவிதனிலே தந்தையர் 315
அம்புவியிலே புவியின் 1347
அம்மதவேள் கணைஒன்றோ 1057
அம்மாநான் சொன்மாலை 2523
அம்மாநான் வேண்டுதல்கேட் 352
அம்மை திரோதை அகன்றாள் 1493
அம்மையே என்கோ அப்பனே 758
அயர்வறு பேரறிவாகி அவ்வறிவுக் 18
அயலறியேன் நினதுமலர் அடியன்றி 1596
அயனும் மாலும் தேடித்தேடி 1818
அயன் முதலோர் ஐவர்செயும் 1257
அய்யாஎன்றோர்கால் அழைக்கின் 1487
அரங்கினிற் படைகொண்டுயிர்க் 41
அரசர்எலாம் மதித்திடப் 51
அரசுவரு கின்றதென்றே 2495
அரசேஉன்னை அணைக்க 1757
அரிபிரமர் உருத்திரரும் அறிந்து 415
அருட்சபை நடம்புரி 1738
அருட்ஜோதி ஆனேன்என்று 2253
அருட்ஜோதித் தலைவர்எனக் 2541
அருட்ஜோதித் தெய்வம்எனை 737
அருட்பெருங் கடலே என்னை 1630
அருட்பெருஞ்ஜோதி அபயம் 1326
அருட்பெருஞ்ஜோதி அபயம் 1597
அருட்பெருஞ்ஜோதி அமுதமே 797
அருட்பெருஞ்ஜோதி என் அகத்தில் 1693
அருட்பெருஞ்ஜோதி என் அம்மை 1605
அருட்பெருஞ்ஜோதி என் ஆருயிரில் 1170
அருட்பெருஞ்ஜோதி (அகவல்) 4
அருட்பெருந் தனிஜோதி 1431
அருட்பெரு வெளியில் அருட்பெரு 5
அருணாடறியா மனக்குரங்கை 1233
அருந்தவர் காண்டற் கரும்பெருங் 1710
அரும்பிலா மலர்வுற் றருள்மணம் 772
அரும்பொன் அனையார் 2464
அரும்பொன் அனையார் 1096
அருளரசை அருட்குருவை 677
அருளாநான் வேண்டுதல்கேட் 355
அருளாம் பெரிய வெளிக்குள் 1799
அருளார் அமுதே என்னுடை 1659
அருளார் ஜோதி என்னுள் 1774
அருளாளர் பொற்பொதுவில் அற் 1112
அருளாளர்பொற்பொதுவில் ஆனந் 2479
அருளாளர் வருகின்ற தருணம் 2468
அருளினை அளிக்கும் அப்பனே 257
அருளுடையார் எல்லாரும் 611
அருளுடையார் எனையுடையார் 2522
அருளும் பொருளும் பெற்றேன் 1811
அருளும் பொருளும் யான் 1266
அருளுறு வெளியே 2416
அருளெலாம் அளித்த அம்பலத் 687
அருளே உணர்த்த அறிந்து 1267
அருளே பழுத்த சிவதருவில் 898
அருளே வடிவாம் அரசே நீ 385
அருளோங்குகின்ற தருட்பெருஞ் 1193
அருளோங்கு தண்ணமுதம் 1299
அருள்அளித்தான் அன்பளித்தான் 1183
அருள்நிலை விளங்கு சிற்றம்பலம் 1342
அருள்வளர் திருச்சிற்றம்பலத் 754
அருள்விளக்கே அருட்சுடரே 537
அருள்விளங்கியதிருச்சிற்றம்பலத் 1442
அரைசெலாம் வழங்கும் தனி 132
அரைசேநான் வேண்டுதல்கேட் 350
அலங்கரிக்கின்றோம் ஓர் திருச்சபை 929
அலப்பற விளங்கும் அருட்பெரு 804
அவமே புரிந்தேன் தனை 900
அவ்வண்ணம் பழுத்தவரும் 408
அழகனே ஞான அமுதனே 127
அழியாக் கருணை அமுத 1794
அழியாநிலை யாதது மேவி 1676
அளத்திலே படிந்த துரும்பினும் 102
அளந்திடு வேதாகமத்தின் 1288
அளவெலாம் கடந்த பெருந்தலை 643
அளவைகள் அனைத்தும் 706
அளியே அன்பர் அன்பே 82
அறங்காதல் செய்தேனை 1069
அறங்குலவு தோழி இங்கே 1161
அறிந்த நாள்கள் தொடங்கி 1827
அறிந்தன அறிந்தாங் கறிந்தறிந் 645
அறிந்தானை அறிவறிவுக் கறிவா 667
அறிந்திலையோ என்பாடெலாம் 154

Koviloor Digital Library

அறியாத பருவத்தே என்னை	2544
அறியாத பொறியவர்க்கும்	48
அறியாமல் அறிகின்ற	1398
அறியேன் சிறியேன் செய்தபிழை	395
அறிவாநான் வேண்டுதல்கேட்	354
அறிவிலாச் சிறிய பருவத்திற்	196
அறிவிலேன் அறிந்தார்க்	120
அறிவிலேன் செய்குற்றம்	1779
அறிவில் அறிவை அறியும்	1043
அறிவொரு சிறிதிங் கறிந்த நாள்	287
அறைகின்ற காற்றிலே	1350
அறையாத மிகுபெருங்காற் றடித்	561
அற்புத நிறைவே	801
அற்புதம் அற்புதமே	2169
அற்றமும் மறைக்கும் அறிவிலா	437
அனந்தமறை ஆகமங்கள்	796
அன்பனே அப்பா அம்மையே	817
அன்பாடு திருப்பொதுவில்	1579
அன்பிலே பழுத்த தனிப்பழம்	763
அன்பிலேன் எனினும்	1610
அன்புடைமகனே மெய்யருள்	1423
அன்புடைய என்னறிவே	791
அன்புடையவரே எல்லாம்	1722
அன்பெனும் பிடியுள் அகப்படும்	3
அன்பே என்னரசே திருவம்பலத்	842
அன்றெனக்கு நீஉரைத்த	485
அன்றே என்னை அடியன் ஆக்கி	1846
அன்னப் பாரப்பால் அழகாம்	1067
அன்னமுண அழைத்தனர் நான்	1083
அன்னம்உண அழைக்கின்றாய்	2450
அன்னே என்னை ஆண்ட	1801
அன்னையப்பன் மாவினத்தார்	1214
அன்னையே அப்பா திருச்சிற்றம்	224
அன்னையே என்றன் அப்பனே	327
அன்னையைக்கண் டம்மாநீ	1062
ஆ	
ஆகம போதகமே	2436
ஆகமாந்தமும் வேதத்தின்	1436
ஆக்கல்ஒன்றோதொழில்ஐந்தையும்	1322
ஆக்கி அளித்தல் முதல்	1254
ஆக்கியநாள் இதுதான்	867
ஆங்காரம் தவிர்ந்தவருள்	793
ஆசைஉண்டேல் வம்மின்	1539
ஆடஎடுத்தான்என் றறைகின்றீர்	1024
ஆடக நீடொளியே	2437
ஆடகப் பொற்சபை நடுவே	794
ஆடகமணிப் பொற்குன்றமே	428
ஆடவாரீர் என்னோ டாடவாரீர்	1968
ஆடாதீர் சற்றும் அசையாதீர்	1523
ஆடியகால் மலர்களுக்கே	1679
ஆடிய நாடகனே ஆலமர்	2441
ஆடிய பாதத் தழகன்	1056
ஆடியபாத மன்றாடியபாதம்	2136
ஆடுகின்ற சேவடிக்கே	1729
ஆடேடிபந்து ஆடேடிபந்து	1980
ஆட்டம் ஒய்கிலா வஞ்சக	142
ஆணவமாம் இருட்டறையில்	613
ஆணிப்பொன் னம்பலத்தே	2178
ஆணை ஆணை நீ அஞ்சலை	1621
ஆணை உன்மேல் ஆணை	467
ஆணை நும்ஆணை என்அருட்	952
ஆண்டவனே திருஅம்பலத்தே	1279
ஆதர வேதியனே	2439
ஆதலால் இரக்கம்பற்றி நான்	99
ஆதி அந்தமும் இல்லதோர்	1433
ஆதிஅந்தம் தோற்றாத	789
ஆதிஅப்பா நம் அனாதியப்பா	1585
ஆதியிலே எனை ஆண்டென்	630
ஆதியும் அந்தமும் இல்லாத்	1031
ஆதியும் அந்தமும் இன்றி	1395
ஆதியும் நடுவும் அந்தமும்	1735
ஆதியே திருஅம்பலத் தாடல்செய்	1672
ஆதியே நடுவே அந்தமேஎனும்	301
ஆதியை ஆதிஅந்த மீதென	694
ஆயகால் இருந்தும் நடந்திட	436
ஆயாமையாலே நீர்	1465
ஆயேன் வேதாகமங்களை	391
ஆய்உரைத்த அருட்ஜோதி	1558
ஆய்தரு வேதாகமத்தின் அடிமுடி	682
ஆரண ஞாபகமே	2435
ஆரண முடிமேல் அமர்	703
ஆரணமும் ஆகமும் ஆங்காங்	1501
ஆரணமும் ஆகமும் ஆங்காங்	1184
ஆரணமே ஆகமமே ஆரண	778
ஆரணம் உரைத்த வரைப்	293
ஆரமுதம் தந்தென்னுள் அச்சமெலா	1327
ஆராஅமுதம் அளித்தருளி	906
ஆராலும் அறிந்துகொளற் கரிய	788

Koviloor Digital Library

ஆரியனே சிவனே	2438
ஆர்அறிவார் எல்லாம்செய்	1460
ஆர்கின்ற தெள்ளமுதின் சுவை	1171
ஆர்நீஎன் றெதிர்வினவில்	510
ஆர்ந்த அருட்பெருஞ்ஜோதி	1675
ஆர்ந்த வேதாந்தப் பதிமுதல்	295
ஆலம் அமுதாக்கும் அண்ணலைக்	1743
ஆவாஎன்னெனை யாட்கொண்	787
ஆளுடையான் நம்முடைய அப்பன்	1529
ஆறந்தநிலைகளின் அனுபவ	1381
ஆறாமல் அவியாமல் அடைந்த	1464
ஆறாறுக் கப்புறமாகும் பொதுவில்	1040
ஆறுகோடியாம் சமயங்கள்	1439
ஆறெனும் அந்தங்கள் ஆகி	1076
ஆற்றாத அடிச்சிறியேற் காற்றல்	783
ஆற்றுவிடயானந்தம்	22
ஆற்றுவெள்ளம் வருவதன்முன்	1475
ஆனந்தநடம் பொதுவில்	175
ஆனேன் அவனா அவன் அருளால்	1190
ஆன்பாலும் நறுந்தேறும்	1643
ஆன்றானை அறிவானை	674
இ	
இகத்திருந்த வண்ணம் எலாம்	410
இகத்திலே எனைவந் தாண்ட	322
இகத்தும் பரத்தும் பெறும்	944
இகத்துழல் பகுதித்தேவர்	720
இங்கோர் மலையின் நடுவில்	1752
இசைத்திடவும் நினைத்திடவும்	165
இசைந்தான் என்உள்ளத்	1186
இசையாமல் போனவர்	1982
இசைவளர் திருச்சிற்றம்பலத்	753
இச்சைஎலாம் எனக்களித்தே	742
இச்சைஎலாம் புகன்றேன் என்	1667
இச்சைஎலாம் வல்லதுரை	2448
இச்சைஎலாம் வல்லதுரை	1081
இச்சைஒன்றும் இல்லாதே	589
இச்சைவேறில்லை இங்கென்கருத்	959
இடமும் வலமும் இதுவென்	1769
இடம்பெறும் இந்திரிய இன்பம்	16
இடம்பெற்ற உயிர்எலாம்	1572
இடர்தீர் நெறியே அருள்வாய்	525
இடர்தொலைந்த ஞான்றே	1328
இணக்கறியீர் இதம்அறியீர்	1644
இணைஎன்று தான்தனக்கேற்றது	1194
இணையேதும் இன்றிநின்ற	779
இதுதருணம் நமையாளற்	486
இதுநல்ல தருணம்	2111
இதுபதி இதுபொருள்	1384
இதுவரை அடியேன் அடைந்த	339
இதுவே தருணம் எனை	1671
இத்தகை உலகில் இங்ஙனம்	325
இத்தனை என்றிட முடியாச்	732
இத்தனை என்றுநின்	492
இத்தாரணியில் என்பிழைகள்	914
இந்த உலகில் உள்ளார் பலரும்	1793
இந்தவிர் சடைஎம் இறைவனே	254
இந்தார் அருளமுதம் யானருந்தல்	1297
இந்நாளே கண்டீர் இறந்தார்	1525
இப்பாரில் உடல் ஆவி பொருளும்	159
இப்பார் முதல் எண் மூர்த்தமாய்	910
இமையவர் பிரமர் நாரணர்	336
இயங்காளி புலி கரடி	1582
இயல்கிளர் மலையே	2421
இயல் வேதாகமங்கள்	623
இயற்கையிலே பாசங்கள்	24
இரவகத்தே கணவரொடு	2517
இரவிமதி உடுக்கள் முதல்	21
இரவிலா தியம்பும் பகலிலா	776
இரவிலே பிறர்தம் இடத்திலே	267
இரவில் பெரிய வெள்ளம்	1753
இரவும் பகலும் என்னைக்	1834
இரவும் பகலும் தூங்கியஎன்	857
இரவுவிடிந்தது இணையடி	930
இருட்சாதித் தத்துவச் சாத்திரக்	497
இருட்பெரு மலமுழுதுந்	1577
இருந்த இடந் தெரியாதே	634
இருமையும் ஒருமைதன்னில்	877
இரும்பினும் கொடிய மனஞ்	308
இரும்புநேர் மனத்தேன்	219
இருளான மலம்அறுத் திகபரங்	496
இருளும் ஒளியும் வந்தவகையை	1771
இருளைக் கெடுத்தென் எண்ண	950
இருளையே ஒளியென மதித்	65
இருள் இரவில் ஒருமூலைத்	584
இலங்குகின்ற சிற்றம்பலத்	1310
இலங்குகின்ற பொதுஉண்மை	1167
இலங்கு பொன்னணிப்	501
இல்லை உண்டெனும் இவ்	131

Koviloor Digital Library

இவர்க்கும் எனக்கும் 2131
இவையலால் பிறிதோர் 212
இவ்வணஞ் சிறியேற் 281
இவ்வுலகதிலே இறை அரசாட்சி 201
இவ்வுலகில் எனைப்போல்வார் 2477
இவ்வுலகில் செத்தாரை 1520
இவ்வுலகோர் இரவகத்தே 2520
இழைஎலாம் விளங்கும் 868
இளிவே தவிர்த்து சிறியேன்தன் 903
இறக்கவும் ஆசைஇல்லை 203
இறந்தவரை எடுத்திடும்போ 1554
இறந்தவர்கள் பலரும் இங்கே 1559
இறந்திறந்தே இளைத்ததெலாம் 183
இறுகப் பிடித்துக் கொண்டேன் 1807
இறை அளவும் துரிசிலதாய்த் 651
இறைஅளவும்அறிவொழுக்கத் 54
இறைவன் வருதருணம் இதே 1449
இறைவா நின்னைக் கனவி 1784
இனிஓர் இறையும் தரியேன் 521
இனித்த செங்கரும்பில் எடுத்த 887
இனித்த பழச்சாறு விடுத் 49
இனிப்பிரிந் திறையும் 398
இனிய நற்றாயின் இனிய என் 125
இனியே இறையும் சகிப்பறியேன் 864
இன்உரைஅன் றென்றுலகம் 1246
இன்சுவை உணவு பல பல 197
இன்ப மடுத்துன் அடியர் எலாம் 90
இன்பவடிவந் தருதற் கிறைவர் 2492
இன்பாலே உலகத்தார் எல்லாரும் 1983
இன்பால் உலகங்கள் யாவும் 1568
இன்பிலே வயங்கும் சிவபரம் 1711
இன்புடைப் பொருளே 2431
இன்புறநான் எய்ப்பிடத்தே 539
இன்புறலாம் எவ்வுலகும் 1534
இன்புறும் உணவு கொண்டபோ 242
இன்பே நன்றருளிஅருள் 168
இன்று தொடங்கியங்கே 1517
இன்னவா றடியேன் அச்சமுந் 284
இன்னுமிங் கெனைநீ மடந்தையர் 195

ஈ

ஈங்குசிலர் உண்ணுகஎன் 2474
ஈசர்என துயிர்த்தலைவர் 2494
ஈதுகேள் மகனே மெய்யருள் 1429
ஈயெனப் பறந்தேன் எறும்பென 453
ஈயோ டுறழும் சிறியேன் 1653
ஈரமும் அன்பும் கொண் 1989
ஈராறாண்டு தொடங்கி 1829
ஈற்றறியேன் இருந்திருந்திங் 2498
ஈற்றில்ஒன்றாய் மற்றை 1216
ஈனஉலகத் திடர் நீங்கி 1303
ஈனமெலாம் தீர்ந்தனவே 1329
ஈன்றநற் றாயுந் தந்தையும் 975

உ

உடம்புவரு வகைஅறியீர் 1478
உடம்பொரு வயிறாய்ச் 112
உடல்எலாம் உயிர்எலாம் 1344
உடுத்ததுகில் அவிழ்த்து 782
உடுத்திலேம் சிறிதும் 105
உடுப்பவனும் உண்பவனும் 163
உடைய அம்பலத்தில் ஒருவனே 246
உடைய நாயகன் பிள்ளை 1654
உடையவர்என் உளத்திருந்தே 1462
உடையாய் எனக்குப் புரிந்த 1786
உடையாய் திருஅம்பலத்தாடல் 379
உடையானை அருட்ஜோதி 666
உணர்ந்தவர் உளத்தை 882
உணர்ந்தவர் உளம்போன் 690
உணர்ந்தவர் தமக்கும் 1101
உணர்ந்துணர்ந் தாங்கே 1665
உணிக்கும் மூட்டுக்கும் 1646
உண்டதும் பொருந்தி 360
உண்டதோ றெல்லாம் 225
உண்டியே விழைந்தேன் 118
உண்ணஉண்ணத் தெவிட்டாதே 549
உண்ணுகின்ற ஊண்வெறுத்து 619
உண்மைஉரைத் தருள்என் 1684
உண்மையுரைக் கின்றேன்இங் 1542
உத்தரஞான சித்திமாபுரத்தின் 714
உயத்திடம் அறியா திறந்தவர் 998
உயிருறும் உணர்வே 2418
உயிரெலாம் ஒருநீ திருநடம் 1712
உயிர்க்கொலையும் புலைப் 607
உரத்தவான் அகத்தே 878
உரத்தொரு வருக்கங் கொருவர் 268
உரியபெருந் தனித்தலைவர் 2529
உருத்திரர்கள் ஒருகோடி 2507
உருமலி உலகில் உன்னைநான் 205
உருவமும் அருவமும் உபயமும் 1381

Koviloor Digital Library

உருவராகியும் அருவினராகியும் 1627
உருவாய் அருவாய் ஒளியாய் 517
உருவினதாய் அருவினதாய் 652
உருவும் அருவும் உபய நிலையும் 1800
உருவுள மடவார் தங்களை 261
உருவெளியே உருவெளிக்குள் 556
உரைகடந்த திருவருட்பேர் 181
உரையும் உற்றது ஒளியும் உற்றது 1721
உரைவளர் கலையே 26
உரைவளர் திருச்சிற் றம்பலத் 751
உரைவிசுவம் உண்டவெளி 1362
உலகமெலாம் போற்ற ஒளிவடிவ 1685
உலகம்எலாந் தொழ உற்ற 1195
உலகறி வெனக்கிங் குற்றநாள் 207
உலகு பல்கோடி கோடிகள் 717
உலகுபுகழ் திருவமுதம் 1286
உவந்தென துளத்தே 331
உழக்கறியீர் அளப்பதற்கோர் 1645
உளத்தே பெருங்களிப்புற் 1172
உள்ளக் கவலையெலாம் ஓடி 1330
உள்ளதே உள்ள திரண்டிலை 979
உள்ளபடி உரைக்கின்றேன் 1448
உள்ளபடி உள்ளதுவாய் 649
உள்ளமே இடங்கொண் 821
உள்ளலேன் உடையார் 1609
உள்ளவாம் அண்டகோடி 644
உள்ளானைக் கதவு திறந்துள்ளே 669
உள்ளிருள் நீங்கிற்று 936
உள்ளுண்ட உண்மைஎலாம் 1456
உள்ளும் புறத்தும் கருணை 1833
உறவானை என்னுயிர்க்குள் 670
உறவு பகைஎன் றிரண்டும் 1814
உறவே எனதின் னுயிரேஎன் 1175
உறியிலே தயிரைக் திருடி 109
உறுவினை தவிர்க்கும் ஒருவனே 313
உறைந்திடும்ஐங் கருவினிலே 1148
உற்றதா ரணியில் எனக்குல 243
உற்றதோர் திருச்சிற்றம்பலத் 303
உற்றமொழி உரைக்கின்றேன் 1555
உற்றியலும் அணுவாதி 1356
உன்ஆணை உன்னைவிட 1580
உன்கடன் அடியேற்கருளல் 121
உன்புடைநான் பிறர்போலே 182
உன்பேர் அருளை நினைக்குந் 1760
உன்னுகின்றதோறு மெனதுள்ளம் 1208
உன்னைக் கண்டு கொண்டேன் 1815
உன்னை மறக்கில் எந்தாய் 1762
உன்னை மறத்திடுவேனோ 472
உன்னை விடமாட்டேன்நான் 1688

ஊ

ஊடல்செய் மதமும் சமயமும் 978
ஊராசை உடலாசை 1064
ஊழிதோ றூழிபல அண்டபகிர் 1363
ஊற்றை உடம்பில் இருட்டறை 858
ஊனஉடம்பே ஒளிஉடம்பாய் 1331
ஊனே புகுந்தென் உளங்கனிவித் 905
ஊன்உரைக்கும் உயிரளவும் 512
ஊன்பெறும் உயிரும் 433

எ

எக்கரையும்மின்றி ஓங்கும் 1589
எக்கரையும் காணாதே 1014
எங்குமாய் விளங்கும் சிற்சபை 12
எஞ்சல் இன்றிய துயரினால் 140
எட்டரும் பொருளே திரு 234
எட்டிரண்டும் என்என்றால் 558
எட்டும் இரண்டும் இதுஎன் 1798
எண்ணலை வேறிரங்கலைநின் 735
எண்ணாத மந்திரமே எழுதாத 591
எண்ணா நின்றேன் எண்ணம் 940
எண்ணிய எல்லாம் வல்ல 299
எண்ணிய எனதுள் எண்ணமே 405
எண்ணிய நானே திண்ணியன் 2428
எண்ணியவா விளையாடென் 741
எண்ணிலா அண்டபகிர் 1346
எண்ணுகின்றேன் எண்ணங்கள் 1485
எண்ணுகின்றேன் எண்ணங்கள் 988
எண்ணுகின்றேன் எண்ணுந் 1253
எண்ணுந்தோறும் எண்ணும் தோறும் 1805
எதுதருணம் அதுதெரியேன் 483
எத்தனை நான் குற்றம்செய்தும் 863
எத்தாலும் மிக்கதெனக் 1198
எத்துணையும் காட்டாத 1413
எத்துணையும் சிறியேனைநான் 633
எத்துணையும் பேதமுறா 1616
எந்தவகை செய்திடிற் 92
எந்தாய் உனைக் கண்டு 890
எந்தைஎன் குருவே 819
எந்தையைக் கண்டேன் 937

எந்நாள் கருணைத் தனிமுதல் 91
எப்பொருட்கும் எவ்வுயிர்க்கும் 2534
எப்பொருளும் எவ்வுயிரும் 729
எம்புலப் பகையே எம்புலத் 2430
எம்பொருள் எனும்என் 1422
எம்மத நிலையும் நின்னருள் 980
எம்மேதகவும் உடையவர்தம் 915
எம்மையும் என்தனைப்பிரியா 733
எய்ப்பற எனக்குக் கிடைத்த 1373
எய்ப்பிலே கிடைத்த வைப்பது 759
எய்வகைசார் மதங்களிலே 1477
எருதின் உழைத் திருந்தேனுக் 780
எல்லா உலகமும் என்வசம் 1622
எல்லாக் குறையும் தவிர்ந்தேன் 1703
எல்லாஞ்செய் வல்லவனேஎனை 894
எல்லாஞ்செய் வல்லதனிப் 1446
எல்லாஞ்செய் வல்லதுரை எனை 2447
எல்லாஞ்செய் வல்லதுரை என் 1080
எல்லாஞ்செய் வல்லதெய்வம் 738
எல்லா நலமும் எனக்கே 1484
எல்லாந்தான் உடையதுவாய் 17
எல்லாமுஞ் செயவல்ல 2471
எல்லாமும் வல்லசித்தென் 1301
எல்லாம் உடையாய் நின் 94
எல்லாம்செயல்கூடும் என் ஆணை 1
எல்லாம் செய்வல்லான் 1332
எல்லாம் வகுத்தா 387
எல்லார்க்கும் கடையாகி 1702
எவ்வகைத்தாந் தவஞ்செயினும் 745
எவ்விடத்தும் எவ்வுயிர்க்கும் 622
எவ்வுலகில் எவ்வெவர்க்கும் 2531
எவ்வுலகும் அண்டங்கள் 1510
எவ்வுலகும் எவ்வுயிரும் 1357
எவ்வுயிரும் பொதுஎனக்கண் 1615
எவ்வுயிர்த் திரளும் என்னுயிர் 206
எழுவினும் வலிய மனத்தினேன் 36
எளியரை வலியார் அடித்தபோது 266
எளியவர் விளைத்த நிலமெலாங் 451
எள்ளலாம் பயத்தால் துயரினால் 285
எனக்குள் நீயும் உனக்குள் 1775
எனக்கும் உனக்கும் இசைந்த 1750
எனக்கும் நின்னைப்போல 1788
எனதென்பதும் நினதென்பதும் 2444
எனையான் மதித்துப் புகல்கின்ற 1283
என் அறிவாம் என் அறிவின் 993
என்ஆசை எல்லாம்தன் 602
என்இயலே யான் அறியேன் 1295
என்இயல் உடம்பிலே 1343
என் இறைவன் வருதருணம் 1445
என்உடலும் என்உயிரும் 1727
என்உடலும் என்பொருளும் 1518
என் உயிரும் என் உடலும் 596
என்உளம் பிரியாப் பேர்ஒளி 766
என்உள வரைமேல் அருள்ஒளி 137
என்கணவர் பெருந்தன்மை 2473
என்கண் மணியுள் இருக்கும் 1778
என்சாமி எனதுதுரை 2550
என்சுதந் தரம்ஓர் எட்டுணை 286
என்செயல் அனைத்தும் 695
என்செய்வேன் சிறியனேன் 1366
என்தரத்துக் கேலாத 1698
என்நிகர் இல்லா இழிவினேன் 156
என்பாட்டுக்கெண்ணாத 1247
என்பிழை அனைத்தும் 811
என்புகல்வேன் தோழிநான் 2509
என்புடை வந்தார் தம்முகம் 271
என்பொருள் என்உடல் 532
என்மாலை மாத்திரமோ 2528
என்றசொல் செவிமடுத் 1634
என்றிரவி தன்னிலே 1352
என்றும் நாடுறுவோர்க்கின்பமே 229
என்றே யென்றுளுறுஞ் 845
என்ன துடலும் உயிரும் 1755
என்ன புண்ணியம் செய்தேனோ 2117
என்னவா அனைத்தும் ஈந்தவா 825
என்னள விலையே என்னினும் 340
என்னாருயிர்க்குத் துணைவ 1777
என்னால்ஓர் துரும்பும் அசைத் 1666
என்னிதய கமலத்தே இருந் 740
என்னிருகண் மணிஅனையார் 2469
என்னியல்போல் பிறர்இயலை 2485
என்னிலை இதுவுறு நின்னிலை 1385
என்னுடைய தனிக்கணவர் 1457
என்னுடைய தனித்தோழி 2518
என்னுடைய விண்ணப்பம் இது 1699
என்னுயிர் காத்தல் கடன் உனக் 344
என்னுயிர்க் குயிராம் தெய்வமே 216
என்னுயிரில் கலந்துகொண்டார் 1065
என்னுயிரே எனதின்னுயிர்க் 1378

Koviloor Digital Library

என்னுயிர் நாதனை யான்	1746
என்னுரைக்கேன்	1728
என்னே அதிசயம்ஈ திவ்வுலகீர்	1248
என்னே உலகில் இறந்தார்	1522
என்னேஎம் பெருமான்இங்	160
என்னே எம்மீதெம் பெருமான்	1323
என்னே செய்வேன் செய்வகை	518
என்னேநின் தண்ணருளை	1206
என்னை அடிமை கொண்டாய்	1790
என்னை ஆண்ட வண்ணம்	1759
என்னைக் காட்டி என்னுள்	1842
என்னைத் தன்னோடே	1044
என்னைமண மாலை இட்டார்	1458
என்னை மறைத்த மறைப்பை	1804
என்னை ஆண்டருளி என்பிழை	218
என்னையும் இரக்கந் தன்னையும்	312
என்னையும்என் பொருளையும்	734
ஏ	
ஏக சதாசிவமே	2433
ஏகமோ அன்றி அனேகமோ	10
ஏகா அனேகா என்றேத்திடு	1400
ஏகாந்தமாகி வெளியாய்	1203
ஏங்கலை மகனே தூங்கலை	697
ஏசா உலகவர்கள் எல்லாரும்	1333
ஏட்டைத் தவிர்த்தென் எண்ண	971
ஏதாகுமோ எனநான் எண்ணி	1245
ஏதும் அறியாச் சிறிய பயல்	1451
ஏதும்ஒன் றறியாப் பேதையாம்	404
ஏதும் தெரியா தகங்கரித்திங்	855
ஏமாந் திருக்கும் ஏமரங்காள்	1526
ஏய்ந்தபொன் மலைமேல்	332
ஏய்ப்பந்தி வண்ணர் என்றும்	1120
ஏலுநன் மணிமா மன்றருட்	1110
ஏழு நிலைகள் ஓங்கும் தெய்வ	1792
ஏழு லகவத்தைவிட் டேறினன்	1576
ஏழ்நிலைக்கும்மேற்பால்	1302
ஏறாநிலையில் விரைந்து	1768
ஏறுகின்றோம் எனமதித்தே	50
ஏற்றமுறும் ஐங்கருவுக்	1139
ஏற்றிடு வேதாகமங்கள்	1164
ஏன்றிய சூதம் தோன்றிய	2426
ஐ	
ஐந்தொழில்நான் செயப்	1260
ஐம்பூத பரங்கள் முதல்	564
ஐயநான் ஆடும் பருவத்திற்	288
ஐயநான் பயத்தால் துயரினால்	342
ஐயமுறேல் என்மகனே	627
ஐயமுறேல் காலையில்யாம்	2511
ஐயமுற்றோர் எல்லாரும்	2503
ஐயர்எனக் குள்ளிருந்திங்	1461
ஐயர்எனை ஆளுடையார்	2475
ஐயனெனக் கீந்த அதிசயத்தை	1334
ஐயன்அருள் வருகின்ற தருணம்	2547
ஐயாநான் செய்பிழைகள்	1796
ஐயாநான் வேண்டுதல்கேட்	347
ஐயுறேல் இதுநம் ஆணை	1428
ஐவகைத் தொழிலும் என்பால்	1624
ஐவராலும் நின்னை அறிதற்	1841
ஐவர்செயும் தொழில்எனக்கே	1258
ஒ	
ஒக்க அமுதத்தை உண்டோம்	1749
ஒசித்தகொடி அனையேற்குக்	540
ஒடித்த இவ்வுலகில் சிறுவர்	249
ஒட்டிஎன் கோதறுத்	1590
ஒட்டியே என்னுள் உறும்ஒளி	768
ஒத்தாரையும் இழிந்தாரையும்	1197
ஒப்பா ருரைப்பார் நின்பெருமைக்	918
ஒப்பிலா மணிஎன் அப்பனே	324
ஒப்புயிர்வொன் றில்லா ஒருவன்	1335
ஒருநாழிகையில் யோக நிலய	1780
ஒருபிரமன் அண்டங்கள்	1359
ஒருமடந்தை வலிந்தணைந்து	583
ஒருமைபெறு தோற்றம்ஒன்று	1128
ஒருமையின் உலகெலாம் ஓங்குக	925
ஒருவா தடியேன் எண்ணியவா	899
ஒழித்தேன் அவலம் அச்சம்	1269
ஒளிஒன்றே அண்டபகிரண்ட	1163
ஒளியாகி உள்ளொளியாய்	1293
ஒளியே அவ்வொளியின்	834
ஒளிவளர்உயிரே உயிர்வளர்	27
ஒள்ளிய நெருப்பிலே உப்பிலே	1349
ஒன்றியே உணவை உண்டுடல்	454
ஒன்றிலேன் பிறிதொன்	1055
ஒன்றுகண்டேன் திருஅம்பலத்தே	1285
ஒன்றுமுன் என்பால் எண்ணிடக்	1680
ஒன்றும் அலார் இரண்டும் அலார்	25
ஒன்றெனக் காணும் உணர்ச்சி	365
ஒன்றே சிவம் என்றுணர்ந்திவ்	1016

Koviloor Digital Library

ஒன்றே சிவம் என்றுணர்ந்தேன் 1495

ஓ

ஓங்கார அணைமீது 1724
ஓங்கிய ஐம்பூ இவைக்குள் 1145
ஓங்கிய ஓர் துணைஇன்றிப் 581
ஓங்கிய திருச்சிற் றம்பல முடைய 278
ஓங்கியபெருங்கருணை 1375
ஓங்குகின்ற சிற்றம்பலத் தருள்நடம் 1311
ஓங்குபொன்அணி அம்பலத் 500
ஓங்கும் அன்பர் எல்லாரும் 1700
ஓடினேன் பெரும்பே ராசையால் 442
ஓத உலவா ஒருதோழன் 1336
ஓர்ந்தஉள் ளகத்தே நிறைந் 231
ஓவா இன்ப மயமாகி 902
ஓவாதுண்டு படுத்துறங்கி 856
ஓவுறாத் துயர்செயும் 1694

ஔ

ஔவியந்தீர் உள்ளத் 1337

க

கங்குலிலே வருந்தியஎன் 542
கடல்கடந்தேன் கரையடைந்தேன் 1732
கடியரில் கடியேன் 45
கடுகாட்டுக் கறிக்கிடுக தாளிக்க 1648
கடுங்கணத்தோர் பெறற்கரிய 1159
கடுத்த மனத்தை அடக்கி ஒரு 1224
கடுத்தவிடர் வன்பயம் கவலை 970
கடுமையேன் வஞ்சக் கருத்தினேன் 38
கடைய நாயில் கடைய நாய்க்கும் 1817
கடையன் எனது கொடிய 1826
கடையேன் உள்ளக் கவலைஎலாம் 943
கடையேன் புரிந்த குற்றமெலாம் 1223
கட்டமும் கழன்றேன் 1003
கட்டமே அறியேன் 448
கட்டவிழ்ந்த கமலம் எனக் 375
கட்டாலும் கனத்தாலும் 1565
கட்டுக் கடங்கா மனப்பரியைக் 947
கட்டோடே கணத்தோடே 1463
கணக்குவழக் கதுகடந்த 631
கண்உறங்கேன் உறங்கினும்என் 1079
கண்கலந்த கணவர் எனைக் 2452
கண்கலந்த கள்வர் என்னைக் 1085
கண்களிக்கப் புகைசிறிதும் 555
கண்கொண்ட பூதலம் எல்லாம் 1705
கண்டதெலாம் அனித்தியமே 1533
கண்டே களிக்கும் பின்பாட்டுக் 1268
கண்டேன் அருட்பெருஞ் 1174
கண்டேன் களித்தேன் 986
கண்டேன் களித்தேன் 990
கண்டேன் சிற்றம்பலத் 1704
கண்ணார் அமுதக் கடலே 912
கண்ணாறு படும்என நான் 2458
கண்ணிற் கலந்தான் 1483
கண்ணுடையீர் பெருங்கருணைக் 513
கண்ணுறங்கேன் உறங்கினும்என் 2446
கண்ணெலாம் நிரம்பப் 1608
கண்ணே கண்மணியே 840
கண்ணேறுபடும் என 1091
கண்முதல் பொறியால் 7
கதிஇருக்கின்ற திருச்சிற்றம் 1441
கதிக்குவழி காட்டுகின்ற 544
கயந்துளே உவட்டும் காஞ்சிரங் 441
கயவுசெய் மதகரிஎன 148
கரணமெலாம் கரைந்ததனிக் 170
கரணம்மிகக் களிப்புறவே 1482
கரண வாதனையால் மிக 144
கரவறியா அம்பலத்தென் 1063
கருங்களிறு போல்மதத்தால் 411
கருணாநிதி நின்தன்னை 1773
கருணாநிதியே அடியேன் இரு 888
கருணாநிதியே அபயம்அபயம் 519
கருணாநிதியே அபயம் கனிந்த 1601
கருணாநிதியே என் இரண்டு 392
கருணைஇலா ஆட்சி 1019
கருணைஒன்றிலாக் கல்மனக் 143
கருணை ஒன்றே வடிவாகி 1617
கருணைக்கடலே அதில்எழுந்த 1628
கருணைக் கருத்து மலர்ந் 380
கருணை ததும்பிப் பொது 850
கருணைப்பெருக்கே ஆனந்தக் 459
கருணைப் பொதுவில் பெரிய 1776
கருணைமா நிதியே என்னிரு 767
கருணையம்பதி நங்கண்ணுள் 335
கருணையாம் பெருங்கடல் 1707
கருணையார் அமுதே என்னுயிர்க் 217
கருணையும் சிவமே பொருள் 306
கருணையே வடிவாய்ப் பிறர்களுக் 210
கருதாமல் கருதுமோர் கருத்தினுட் 1399
கருத்தனே எனது கருத்தினுக் 770

Koviloor Digital Library

கருத்தனை எனது கண்அனைய	712
கருத்தனை என் கண்மணியைக்	727
கருத்தில்கருதிக் கொண்டஎலாம்	854
கருத்து வேறாதிக் கோயிலில்	252
கருநாள்கள் அத்தனையும்	1447
கருமுதற் கருவாய்க்	646
கரும்பசைக்கும் மொழிச்சிறியோர்	1677
கரும்பிடை இரதமும்	529
கரும்பிலின் சாற்றைக்	700
கரும்பின்மிக இனிக்கின்ற	515
கருவியொடு கரணமெலாம்	656
கருவிற் கலந்த துணையே	851
கரைக்கணம் இன்றியே	534
கரைசேரப் புரிந்தாலும்	167
கரைந்துவிடா தென்னுடைய	543
கரையிலாக் கடலிலே	1355
கலக்கம் அற்றுநான் நின்றனைப்	1661
கலகந்தரும் அவலம்	2443
கலக்கம் நீங்கினேன்	1723
கலங்கிடேல் மகனே	1427
கலங்கிய போதும் திருச்சிற்றம்	307
கலை இருந்ததோர் திருச்சிற்றம்	1440
கலைஎலாம் புகலும் கதிஎலாம்	300
கலைகளோர்அனந்தம்	799
கலைக்கடலைக் கடந்தமுனிக்	1121
கலைக்கொடிகண் டறியாத	600
கலைசார் முடிவு கடந்	853
கலைத்தொழில் அறியேன்	43
கலைநிறை மதியே மதிநிறை	2419
கலைநிறை மதியைக் கனலைச்	710
கலைமுடிவு கண்டறியேன்	71
கலையறியாச் சித்தம்எனும்	1407
கலையனே எல்லாம் வல்லஓர்	1714
கலையுரைத்த கற்பனையே	187
கலைவளர் கலையே கலையினுட்	814
கலைவளர் முடிய தென்னை	1681
கல்லாய மனங்களும் கரையப்	923
கல்லாய மனத்தையும்ஓர்	166
கல்லார்க்கும் கற்றவர்க்கும்	575
கல்லுங் கனியத் திருநோக்கம்	86
கல்லை நோக்கிக் கனிந்து	1809
கல்லோ மணலோ கனியோ	1218
கவலையெலாம் தவிர்ந்துமிகக்	476
கவையெலாந் தவிர்ந்த வெறுமரம்	455
களக்கமறப் பொதுநடம்	173
களங்கொளுங் கடையேன்	701
களவிலே களித்த காலத்தும்	361
களித்தபோ தெல்லாம் நின்	359
களித்துலகில் அளவிகந்த காலம்	1538
களித்தென துடம்பில் புகுந்தனை	155
களிப்புறு சுகமாம் உணவினைக்	241
களிப்புறும் அடியேன் கையிலே	407
களிப்பொடு மகனே	1426
கள்ளம் அறியேன் நின்னால்	1789
கள்ளத்தை அற்ற உள்ளத்தைப்	1640
கள்ளத்தை எல்லாம் கடக்க	982
கள்ளவாதனையைக் களைந்	366
கள்ளிருந்த மலர் இதரிச்	409
கள்ளுண்டாள் எனப் புகன்றார்	2456
கள்ளுண்டாள் எனப் புகன்றீர்	1089
கறுத்துரைக் கின்றவர்	536
கற்கரையும்படி கரைவிக்குங்	1377
கற்குமுறை கற்றறியேன்	68
கற்பனை முழுவதும் கடந்தவர்	1396
கற்பூரம் கொணர்ந்திடுக	2459
கற்பூரம் கொணர்ந்து வம்மின்	1092
கற்பூரம் மணக்கின்ற தென்மேனி	1087
கற்பூரம் மணக்கின்ற தென்னு	2454
கற்ற மேலவர்தம் உறவினை	37
கற்றவர் உளத்தே கரும்பினில்	228
கற்றவர் கல்லார் பிறர் பிறர்	334
கற்றேன் சிற்றம்பலக் கல்வியைக்	1034
கனகமா மன்றில் நடம்புரி	1107
கனமுடையேம் கட்டுடையேம்	1480
கனமே எனும் பெருஞ் சிலுகுக்	1412
கன்னிஎனை மணந்தபதி	2484
கன்றுடைய பசுப்போலே	1656
கா	
காக்கைகள் கூவக் கலங்கினேன்	236
காசையும் பணத்தையும்	531
காடுவெட்டி நிலந்திருத்திக்	1474
காட்சியுறக் கண்களுக்குக்	576
காட்டிலே திரியும் விலங்கினிற்	443
காட்டினை ஞான அமுதளித்	1277
காட்டுகின்ற உவர்க்கடல்போல்	55
காட்டுயர் அணைமேல்	279
காட்டைஎலாம் கடந்துவிட்டேன்	376
காட்டை கடந்தேன்	1641
காணாத காட்சிகள் காட்டுவிக்	1201

Koviloor Digital Library

காணாத காட்சியெலாம் 2535
காணியே கருதும் கருத்தினைப் 449
காணுகின்ற ஐயங்கரிவின் 1141
காணுறு பசுக்கள் கன்றுகளாதி 272
காதல் கைம்மிகுந்த 1047
காமக் கடலைக் கடந்து 1812
காமமா மதமாங் காரமாதி 251
காமாலைக் கண்ணர்என்றும் 2505
காமாலைக் கண்ணர்பலர் 2504
காய்எலாம் கனிஎனக் கனிவிக்கும் 1372
காய்க்கும் பருவம் தன்னைப் 1808
காய்ந்திடு மனத்தாள் போன்றன 426
காய்மனக் கடையனைக் காத்த 1379
காய்மையே தவிர்த்துக் 824
காரண அருவே காரிய உருவே 816
காரண காரியக் கல்விகள் 487
காரணம்இது புரிகாரியம்இது 1386
காரிகைநீ என்னுடனே காண 2457
காரிகையீர் எல்லீரும் காண 1090
கார்ப்பிலதாய்த் துவர்ப்பிலதாய் 578
காலங் கடந்த கடவுளைக் காண 1742
காலையிலே என்றனக்கே 628
காலையிலே நின்றன்னை 983
காலையிலே வருகுவர் என் 2514
காவிநேர் கண்ணாள் பங்கனே 226
காற்றாலே புவியாலே 1733
காற்றுருவோ கனல்உருவோ 1124
கானமே உழல் விலங்கினிற் 64

கி

கிழக்கு வெளுத்தது கருணை 1591
கிளக்கின்ற மறைஅளவை 1169
கிளைஅனந்த மறையாலும் 1459
கிளைத்த இவ்வுடம்பில் ஆசை 200

கீ

கீரையே விரும்பேன் பருப்பொடு 110

கு

குணங்கள் சிறந்தன குற்றங்கள் 1574
குணம்அறியேன் செய்தபெருங் 635
குணம்புதைக்க உயிரடக்கம் 1564
குணம்புரி எனது தந்தையே 321
குருநெறிக்கே என்னைக் 1199
குலத்திடையும் கொடியன்ஒரு 46
குலத்திலே சமயக் குழியிலே 996
குலமறியார் புலமறியார் 2490
குலவுபேர் அண்டப் பகுதிஓர் 6
குறித்துரைக்கின்றேன் இதனைக் 1549
குற்றமோ குணமோ நான்அறியேன் 304
குற்றம் பல ஆயினும் நீ 526
குற்றம்புரிதல் எனக்கியல்பே 1658

கூ

கூகா என அடுத்தோர் கூடி 1506
கூகா எனக் குடி எடாதிக் 889
கூசுகின்ற தென்னடி நான் 2489
கூடவும் பின்னே பிரியவும் 997
கூடியஎன் கணவர் எனைக் 1100
கூடியஎன் தனிக்கணவர் 2467
கூடிய நாளிது தான் 866
கூடுங்கருணைத் திருக்குறிப்பை 95
கூறுகந்தாய் சிவகாமக் 1278
கூறுகின்ற சமயம்எலாம் 185

கை

கைக்கிசைந்த பொருள்எனக்கு 479
கைக்கிசைந்த பொருளேஎன் 551
கைத்தலத் தோங்கும் கனியின் 283
கைத்தலைமே லிட்டலையிற் 1217
கையறவிலாது நடுக்கண்புருவப் 2242
கையாத தீங்கனியே 590
கையின் நெல்லிபோல் 1315
கையுற வீசி நடப்பதை நாணிக் 264
கையுள் அமுதத்தை வாயுள் 1745
கைவிட மாட்டான் என்று 2216

கொ

கொடிஇடைப்பெண் பேதாய்நீ 2491
கொடிப்பெரு மணிப்பொற் 1108
கொடியவரே கொலைபுரிந்து 609
கொடிய வெம்புலிக் குணத்தி 60
கொடியேன் பிழைநீ குறியேல் 524
கொடுத்திடநான் எடுத்திடவும் 552
கொட்டிலை அடையாப் பட்டிமா 100
கொண்டான் அடிமை குறியான் 989
கொலைபல புரிந்தே புலைநுகர்ந் 452
கொலைபுரிவார் தவிரமற்றை 606
கொல்லா நெறியது கோடா 1200
கொழுந்தேனும் செழும்பாகும் 1593
கொள்ளைஎன இன்பம் கொடுத் 985
கொள்ளைவினைக் கூட்டுறவால் 620

கோ

கோஎன எனது குருஎன 820

Koviloor Digital Library

கோடாமறை ஆகமம் ஆதிய 893
கோடையிலே இளைப்பாற்றிக் 538
கோணாத நிலையினராய்க் 684
கோது கொடுத்த மனச்சிறியேன் 1655
கோபமெனும் புலைப்பயலே 1418
கோபமே வருமோ காமமே 250
கோள்அறிந்த பெருந்தவர்தம் 484

ச

சகப்புற வாழ்வைப் பார்த்திடில் 260
சஞ்சிதம் விடும் நெஞ்சித 2427
சதுமறை ஆகம சாத்திரம் 1984
சத்திஎலாம் கொண்டதனித் 1516
சத்திய ஞான சபாபதி 1104
சத்தியஞ் செய்கின்றேன் சகத்தீர் 1508
சத்தியபதியே சத்தியநிதியே 812
சத்திய நான்முகர் அனந்தர் 617
சத்தியமாந் தனித்தெய்வம் 746
சத்தியம் சத்தியம் அருட்பெருஞ் 951
சத்தியவான் வார்த்தை இது 2549
சத்திய வேதாந்தமெலாம் 1544
சந்திரர் சூரியர் ஒளிபெற 1392
சமயத் தெய்வம் பலவும் 1802
சமயமும் மதமும் கடந்ததோர் 705
சமயம் ஓர்பல கோடியும் 1438
சரியை ஓர் நான்கும் 202
சரியைநிலை நான்கும் 2537
சர்க்கரை ஒத்தான் 1687
சற்சபைக் குரியார் தம்மொடும் 204
சற்றும் வருந்தப் பாரா 1835
சனி தொலைந்தது 1720
சன்மார்க்க சங்கத்தீர் 1734
சன்மார்க்கப் பெருங்குணத்தார் 1556

சா

சாகா அருளமுதம் 1298
சாகாக்கல்வி எனக்குப் 1848
சாகாத கல்வித் தரம் அறிதல் 1513
சாகாத கல்வியிலே தலையான 592
சாகாத கல்வியிலே தலைகாட்டிக் 508
சாகாத கல்வியே கல்வி 1369
சாகாத தலைஅறியேன் 73
சாகாத தலைஇது வேகாத 1382
சாகாத வரம்எனக்கே 743
சாக்கிய வேதம் 2425
சாதல் பிறத்தல் என்னும் 1810
சாதிகுலம் என்றும் சமயமதம் 1504
சாதிகுலம் சமயம் எலாம் 559
சாதி சமயங்களிலே வீதிபல 2536
சாதி சமயம்எனும் சங்கடம் 72
சாதியிலே மதங்களிலே 1005
சாதி மதம் சமயமுதற் 1473
சாதியும் மதமும் சமயமும் 363
சாதியைநீள் சமயத்தை மதத்தை 736
சாத்திரங்கள் எல்லாம் தடுமாற்றம் 1511
சாமத் திரவில் எழுந்தருளித் 464
சாமாந்தர் ஆகாத் தரஞ் 1466
சார்உலக வாதனையைத் 1557
சார் கலாந்தாதிச் சடாந்தமுங் 707
சார்பூத விளக்கமொடு 15
சாவதென்றும் பிறப்பதென்றும் 164
சாற்றுகின்ற கலை ஐந்தில் 569
சாற்றுபேரண்டப்பகுதிகள் 297
சாற்றுவேன் எனது தந்தையே 157

சி

சிதத்திலே ஊறித் தெளிந்த 689
சிதத்தொளிர் பரமே பரத் 813
சிதமலரோ சுகமலரும் பரிமளிக்க 1122
சிதம்பர ஒளியைச் சிதம்பர 702
சிதம்பரத்தே ஆனந்த சித்தர் 172
சித்திஎலாம் வல்ல சிவசித்தன் 377
சித்திகள் எல்லாம் வல்லதோர் 296
சித்திபுரத்தே தினந்தோறும் 1015
சித்தியெலாந் தந்தே 1486
சித்தெலாம் வல்ல சித்தனே 798
சிந்தாகுலத்தொடு நான் 1207
சிந்தாகுலந் தவிர்த்துச் 1505
சிரத்தைஆதிய சுபகுணம் 146
சிரம்பெறு வேதாகமத்தின் 654
சிரம்வளர் முதலே முதல்வளர் 29
சிரிப்பிலே பொழுது கழிக்கும் 1611
சிருட்டிஒன்று சிற்றணுவில் 1130
சிருட்டிமுதல் ஐந்தொழில்நான் 1255
சிருட்டிமுதல் ஓர்ஐந்தொழிலும் 1821
சிவங்கனிந்த சிற்றம்பலத் 1306
சிவசிவ சிவசிவ ஜோதி 2025
சிவஞான நிலையே சிவயோக 2411
சிவந்திகழ் கருணைத் திருநெறிச் 135
சிவமயமே வேறிலை எல்லாம் 1162
சிவமே நின்னைப் பொதிவில் 1840

Koviloor Digital Library

சிவமே பொருள்என் றறிவால் 1987
சிவம் எனும் பெயர்க் 2545
சிறந்த தத்துவங்கள் அனைத்து 298
சிறந்த பேரொளித் திருச்சிற் 1311
சிறந்த பொன்அணித் திருச்சிற் 502
சிறுசெயலைச் செயும்உலகச் 1583
சிறுநெறிக் கெனைத்தான் 1708
சிற்சபை அப்பனைக் கண்டு 1028
சிற்சபை இன்பத் திருநடங் 490
சிற்சபைக்கண்ணும் பொற்சபைக் 1682
சிற்சபையில் நடிக்கின்ற 2533
சிற்சபையும் பொற்சபையும் 1017
சிற்பதமும் தற்பதமும் 629
சிற்றம்பலத்தில் நடங்கண் 1820
சிற்றம்பலத்தின் நடனம் 1844
சிற்றம்பலத்தைத் தெரிந்து 1284
சிற்றறி வுடையன் ஆகித் 870
சிற்றறி வுடைய நான்செய்த 1633
சினைப்பள்ளித் தாமங்கள் 926
சின்மய வெளியிடைத் தன்மய 1038
சின்ன வயது தொடங்கி 1831

சீ

சீரிடம் பெறும்ஓர் திருச்சிற் 149
சீர்த்தசிற்சபைஎன் அப்பனே 222
சீர்வளர் திருச்சிற் றம்பலத் 750
சீர்விளங்கு சுத்தத் திருமேனி 1204

சு

சுகமறியீர் துன்பம் ஒன்றே 1547
சுகமே நிரம்பப் பெருங்கருணைத் 396
சுடரே அருட்பெருஞ் ஜோதியனே 1177
சுதந்தரம் உனக்கே கொடுத்தனம் 158
சுத்தசிவ சன்மார்க்க நீதி 1850
சுத்தநிலை அனுபவங்கள் 593
சுத்தநிலையின் நடுநின் 1845
சுத்த பரமுதல் நான்கும் 568
சுத்தமுற்ற ஐம்பூதவெளி 1123
சுத்தவடிவம் சுகவடிவாம் 1499
சுத்தவேதாந்த பிரமராசியத் 704
சுத்தவேதாந்த மவுனமோ 9

சூ

சூழ்ந்திடும் ஐங்கருவினிலே 1149
சூழ்விலா துழல் மனத்தினால் 141
சூது மன்னும் 2344

செ

செடிமுடிந்தலையும் மனத்தினேன் 40
செத்தவர்கள் எல்லாம் திரும்ப 1519
செத்தவர்கள் எல்லாம் திரும்பஎழு 1022
செத்தார் எழுக சிவமே பொருள் 1021
செத்தார் எழுகெனச் சிந்தை 1321
செத்தார் எழுந்தனர் 1706
செப்பார் கலைகள் மொழிந்த 916
செம்பவளத் திருமலையோ 2480
செம்பவளத் திருமலையோ 1113
செய்தாலும் தீமை எலாம் 1551
செய்யானைக் கரியானைப் 672
செய்வகை அறியேன் மன்றுள் 119
செய்வகை என்னனத் திகைத்தேன் 470
செல்லமாட்டேன் பிறரிடத்தே 457
செவ்வணத் தவரும் மறையும் 1664
செறிவதில் மனத்தேன்காசிலே 198

சே

சேட்டித் துலகச் சிறுநடையில் 1226
சேய்போல் உலகத் துயிரை 1626
சேர்த்தானை என்றனைத்தன் 661
சேர்த்தான் பதம்என் சிரத்தே 1185
சேர்ந்திடவே ஒருப்படுமின் 1550

சொ

சொல்லவனே பொருளவனே 368
சொல்லுகின்ற என்சிறுவாய்ச் 1244
சொல்லுகின்றேன் பற்பல நான் 1725
சொல்வந்த வேதமுடி முடிமீதில் 1202

சோ

சோதியேல் எனைநீ சோதனை 130
சோறுவேண்டினும் துகில்அணி 139
சோற்றாசை யொடு காமச் 1560
சோற்றானைச் சோற்றில் உறும் 660
சோற்றிலே விருப்பஞ் சூழ்ந்திடில் 107

ஞா

ஞான ஆனந்த வல்லியாம் 427
ஞானமணிப் பொதுநடஞ்செய் 178
ஞான மருந்திம் மருந்து 1991
ஞானமும் அதனால் அடை 124
ஞானம் உதித்தது 934
ஞானாகரச் சுடரே 1697

த

தகைத்தபேருலகில் ஐயனே 259
தங்கமே அனையார் கூடிய 209

Koviloor Digital Library

தடித்த ஓர் மகனைத் தந்தை	189
தடுத்திடல் வல்லார் இல்லை	1052
தடுத்தெனை ஆட்கொண்ட	530
தடையறியாத் தகையினதாய்த்	650
தடையாதும் இல்லாத் தலைவனை	1744
தடையாவுந் தவிர்த்தே	847
தடையிலாத சிற்றம்பலந்	1314
தடையிலா தெடுத்த	764
தடையுறாப் பிரமன் விண்டு	718
தண்டுகாய் கிழங்கு	114
தண்ணிய மதியே தனித்த	800
தத்துவங் கடந்த தத்துவா	883
தத்துவத் துட்புறந் தானாம்	1046
தத்துவ பதியே தத்துவம் கடந்த	802
தத்துவசிநிலை இது இது	1383
தத்துவம் அனைத்தும் தவிர்த்து	774
தத்துவம் அனைத்தும் தனித்தனி	11
தத்துவம் எல்லாம் என்றன்	491
தத்துவம் என்வசமாகத்	74
தத்துவருந் தத்துவஞ்செய்	1061
தத்துவாதீதத் தலைவனைக்	1748
தந்தாய் இன்றும் தருகின்றாய்	397
தந்தேகம் எனக்களித்தார்	1453
தந்தைஎன்றாய் மகன்என்றாய்	2470
தந்தை தன்மையே தனையன்தன்	1726
தந்தைநீ அலையோ தனயன்நான்	151
தந்தையர் வெறுப்ப மக்கள்தாம்	314
தந்தையும் தாயும் குருவும்	126
தந்தையைக் கண்டேன்நான்	938
தப்படி எடுத்துக்கொண்	954
தப்பாலே சகத்தவர் சாவே	1985
தப்போதுவார் உளம்	1071
தமைஅறியார் எல்லாரும்	2502
தம்குறுவம்பு	2385
தயைஉடையார் எல்லாரும்	610
தரம்பிறர் அறியாத் தலைவ	1715
தரித்திடேன் சிறிதும்	122
தருணத்துக் கேற்றவா சொல்லி	955
தருணநிதியே என்னொருமைத்	1230
தருணம் இஞ்ஞான்றே	136
தருவகை இத்தருணம்	1668
தருவளர் நிழலே	2417
தரைத்தலத் தெனைநீ எழுமையும்	282
தலம்வளர் திருச்சிற்றம்பலத்	756
தலைகால் இங்கறியாதே திரிந்த	636
தலைநெறி ஞான சுத்தசன்மார்க்க	280
தலையும் காலும் திரித்து	1766
தலைவர்கள் எல்லாம் தனித்தனி	310
தலைவா எனக்குக் கருணை	1785
தவநேயமும் சுத்தசன்மார்க்க	1178
தவம்புரியேன் தவம்புரிந்தார்	53
தவம்வளர் தயையே	32
தவயோக பலமே	2412
தவறாத வேதாந்த சித்தாந்த	626
தழைத்தானைத் தன்னைஒப்பார்	665
தளர்ந்திடேல் மகனே என்றெனை	419
தற்ஜோதி என்னுயிர்ச் சத்திய	1317
தற்பரம் பொருளே வேதத்	1632
தனக்கு நிகரிங் கில்லா துயர்ந்த	1751
தனியன் என்மேல் நீ வைத்த	1758
தனிச்சிறியேன் சிறிதிங்கே	582
தனித்தலைமைப் பெரும்பதிஎன்	2548
தனித்தலைவர் வருகின்ற—தோழி	2462
தனித்தலைவர் வருகின்ற—மடவீர்	1095
தனித்தலைவன் எல்லாஞ்செய்	1452
தனித்தனி முக்கனி பிழிந்து	553
தனித்துணை எனும்என்	402
தனித்துணையாய் என்றன்னைத்	1686
தனிப்படும்ஓர் சுத்தசிவ சாக்கிர	2540
தனிப்பெருஞ் ஜோதித் தந்தையே	318
தனிப்பெருஞ் ஜோதித் தலைவனே	213
தனிப்பெருந் தலைவரே	527
தனிப்பெரும் பதியே என்பதி	1102
தனியே கிடந்து மணங்கலங்கி	1236
தனையா வென்றழைத்தே	843
தன்அரசே செலுத்தி நின்ற	603
தன்பெருமை தான் அறியாத்	548
தன்மைகாண் பரிய தலைவனே	323
தன்மைகாண் பரிய தலைவனே	807
தன்படிவம் தானாகும் திருச்சிற்	2476
தன்னிகர் அறியாத் தலைவனே	329
தன்னிகர் இல்லாத் தலைவ	639
தன்னேரிலாத தலைவா	1032
தன்னே ரில்லவனே	833
தன்னை நேரில்லாத் தந்தையே	319
தன்னைவிடத் தலைமை ஒரு	1731
தா	
தாகமுள் எடுத்த போதெதிர்	773

Koviloor Digital Library

தாங்க என்தனை ஓர்தாய்	420
தாங்கல் விடுதல் இரண்டும்	1813
தாங்காதே பசிபெருக்கி	786
தாதையாம் என்னுடைய தாயாம்	991
தாயனே எனது தாதையே	771
தாயாகி என்னுயிர்த் தந்தையும்	1030
தாயாகித் தந்தையுமாய்த்	739
தாயானைத் தந்தைஎனக்	664
தாயினும்பே ரருளுடையார்	2543
தாயும் என்ஒருமைத் தந்தையும்	129
தாயே எனக்குத் தயவுபுரிந்த	1767
தாயே எனைத்தந்த தயாநிதித்	896
தாயே எனைத்தான் தந்தவனே	390
தாய்கொண்ட திருப்பொதுவில்	176
தாய்முதலோ ரொடு சிறிய	580
தாய்மொழி குறித்தே	233
தார்த்தட முலையார்	445
தாலவாழ்க்கையிலே சார்ந்தவர்	106
தாவுமான் எனக்குதித்துக்	56
தாழாதெனை ஆட்கொண்	892
தாழைப் பழம்பிழி பாலொடு	1603
தாழ்குழலாய் எனைச்சற்றே	2461
தாழ்குழலீர் எனைச்சற்றே	1094
தாழ்குழல்நீ ஆண்மகன்போல்	2496
தானந்தம் இல்லாத தன்மையை	489
தானலா திறையும் உயிர்க்	215
தானே அருள்ஆனான் தானே	1187
தானே தயவால் சிறியேற்குத்	852
தானேதான் ஆகிஎலாம் தானாகி	1543
தானே வந்தென் உளத்தே	1489
தான்எனைப் புணரும் தருணம்	123
தான்நான் எனும்பேதந்	1498
தி	
திகழ்ந்தார்கின்ற திருப்பொதுவில்	386
திகைப்பார் திகைக்க நான்	381
திசையறிய மாட்டாதே திகைத்த	595
திடுக்கற எனைத்தான்	418
திண்ணம் பழுத்த சிந்தையிலே	460
திண்மையே முதலைங் குணக்	823
தித்திக்கப் பேசிக் கசப்புள்ளே	957
திரிபிலாப் பொருளே திருச்சிற்	214
திருஉடையாய் சிற்சபைவாழ்	367
திருஎலாம் தரும்ஓர் தெய்வமாம்	357
திருக்கதவம் திறவாயோ	179
திருச்சிற்றம்பலத் தின்பத்	2482
திருச்சிற்றம்பலத் தின்பத்	1117
திருத்தகு பொன்னம்பலத்தே	169
திருத்தகும்ஓர் தருணம்இதில்	188
திருத்தகு வேதாந்தமொடு	678
திருத்தமிக் முனிவர்களும்	683
திருநிலைத்து நல்அருளொடும்	1657
திருநிலை பெற்றனன்	962
திருநெறி ஒன்றே அதுதான்	1541
திருந்தும் என்உள்ளத்	533
திருப்பொதுவில் திருநடம் நான்	174
திருமணிப் பொதுவில்	1105
திருவளர் திருஅம் பலத்திலே	330
திருவளர் திருச்சிற் றம்பலத்	208
திருவளர் திருச்சிற் றம்பலம்	748
திருவளர்பே ரருளுடையான்	1401
திருவளர் வளமே	30
திருவாம் என் தெய்வமாம்	992
திருவாளர் கனகசபைத்	1111
திருவாளர் பொற்சபையில்	2478
திருவிளங்கச் சிவயோக	2
திருவே தெள்ளமுதே	846
திரைஇலதாய் அழிவிலதாய்	577
திரைகண்ட மாயைக் கடல்	1318
திரைசேர் மறைப்பைத்	941
திரையற்று விட்டது	935
திரையோதசத்தே திகழ்கின்ற	1304
திலகவாள் நுதலார் தமைக்	362
தினைத்தனையும்	1011
தீ	
தீட்டுகின்ற சிற்றம்பலந்	1313
தீட்டு பொன்அணி அம்பலத்	506
தீட்டுமணிப் பொதுநடஞ்செய்	177
தீதுநினைக்கும் பாவிகட்கும்	83
தீமைகள் யாவும்	1035
தீமைஎலாம் நன்மை என்றே	1535
து	
துஞ்சாத நிலைஒன்று	1988
துடியேறும் இடைஉனக்கு	2497
துணைவா அபயம்	1598
துண்ணெனக் கொடியோர் பிற	276
துதிசெயும் முத்தரும் சித்தரும்	1990
துதிபெறும் அயனோ டரிஅரன்	1000
துதிவேத உறவே	2413

Koviloor Digital Library

துதிவளர் திருச்சிற் றம்பலத் 749
துப்பார் கனகப் பொதுவில் 917
துப்பார் செஞ்சடையாய் 829
துப்பார் செஞ்சுடரே 844
தும்மினேன் வெதும்பித் 424
துரியத்திற் கப்பாலுந் தோன்றும் 1045
துரியநிலை துணிந்தவரும் 369
துரியபதம் கடந்த பெருஞ் 2493
துரிய பதம் அடைந்த 1006
துரியமேல் பரவெளியிலே 1435
துருக்கலோ கொடுங் கருங்கலோ 63
துரும்பினில் சிறியேன் 873
துருவிலா வயிரத் தொட்டிலே 425
துருவுபர சாக்கிரத்தைக் 2539
துற்குண மாயைபோய்த் 921
துனித்த வெம் மடவார் 444
துனிநான் அனைத்தும் 1265
துன்பமெலாம் தீர்ந்த சுகம் 1367
துன்பம் கெடுத்துச் சுகம் 1341
துன்பம் தவிர்ந்தது 933
துன்புறு மனத்தனாய் 1374
துன்புறேல் மகனே 698
துன்பெலாந்தீர்ந்தது சுகம் 1339
துன்பெலாம் தவிர்க்கும் 403
துன்பெலாம் தவிர்த்த துணையை 688
துன்பெலாம்தவிர்த்த துணைவனே 769
துன்பமெலாம் ஒரு 1008
துன்மார்க்க நடையிடைத் 1470
துன்மார்க்கம் எல்லாம் 1502

தூ

தூக்கங்கெடுத்தான் சுகங்கொடுத் 1496
தூக்கமும் துயரும் அச்சமும் 1737
தூக்கம்எனும் கடைப்பலே 1416
தூக்கம்கெடுத்துச் சுகம்கொடுத் 1340
தூக்கம் தொலைந்தது 932
தூங்கலை மகனே எழுகநீ 1429
தூங்காதே விழித்திருக்கும் 1581
தூங்குக நீ என்கின்றாய் 2510
தூங்குகின்றதே சுகம் என 61
தூண்டாத மணிவிளக்காய்த் 744
தூய சதாகதியே 2434
தூயநெஞ்சினேன் அன்று 145

தெ

தெய்வங்கள் பலபல 961
தெரிந்த பெரியர்க் கருள்புரிதல் 383
தெரிந்தமகா சுத்தபர 573
தெரிந்தேன் அருளால் 1191
தெருமனைதோ றலைந்தேனை 1264
தெருவிடத்தே விளையாடிக் 474
தெற்றியிலே நான்பசித்துப் 579
தென்பால் முகங்கொண்ட 1604

தே

தேகமுறு பூதநிலைத் திறம் 69
தேகம் எப்போதும் சிதையாத 488
தேகாகி மூன்றும் உன்பாற் 1033
தேடியதுண்டு நினதுருவுண்மை 972
தேட்டிலே மிகுந்த சென்னையில் 270
தேர்ந்தேன் தெளிந்தேன் 1189
தேர்விலாச் சிறிய பருவத்திற் 289
தேவ கலாநிதியே 2440
தேவர்களோ சித்தர்களோ 1114
தேவர்களோ முனிவர்களோ 2481
தேனாய்த் தீப்பழமாய் 838
தேனே அமுதே சிற்சபையில் 942
தேனே கன்னல் செழும்பாகே 1271
தேனே திருச்சிற்றம்பலத்தில் 394
தேன்பாடல் அன்புடையார் 1642

தொ

தொகுப்புறு சிறுவர் பயிலுங்கால் 248
தொகையள விவைஎன் 723
தொடுக்கின்றேன் மாலை இது 2525
தொண்டாளப் பணந்தேடுந் 1561
தொத்திய சீரே 2429
தொம்பர உருவொடு தத்பத 1037
தொழுதெலாம் வல்ல கடவுளே 103
தொழுந்தகை உடைய ஜோதியே 244

தோ

தோய்ந்தானை என்னுளத்தே 675
தோலைக்கருதித் தினந்தோறும் 1227
தோற்றம்ஒன்றே வடிவொன்று 1127
தோன்றியஐங் கருவினிலே 1147
தோன்றிய வேதாகமத்தைச் 624
தோன்றுசத்தி பலகோடி 1126

ந

நகைத்த மேல்நிலை ஈதென 8
நஞ்சுண் டுயிர்களைத் 1689
நடம்புரிவார் திருமேனி வண்ணம் 2499
நடம்வளர் நலமே 33

Koviloor Digital Library

நடிப்பார் வதிதில்லை 1221
நடுநிலை இல்லாக் கூட்டத்தைக் 277
நடுநாடி நடுநாடி 2382
நடைக்குரிய உலகிடைஓர் 586
நட்டானை நட்டஎனை 659
நண்ணிய மதநெறி பலபல 1389
நண்புடையாய் என்னுடைய 1290
நதிகலந்த சடைஅசையத் 413
நந்நாலுங் கடந்தே 849
நம்பார்வதிபாக ணம்புரத்தில் 1220
நயத்தால் உனது திருவருளை 89
நயந்தகருணை நடத்தரசே 388
நயந்தநட நாயகர்உன் 1156
நயந்தநட நாயகர்உன் 1157
நயந்தநட நாயகர்உன் 1158
நயந்தபொற் சரிகைத் துகில் 263
நரைமரண மூப்பறியா 1479
நலிதரு சிறிய தெய்வ 275
நல்லவா அளித்த நல்லவா 822
நல்லாரும் என்னை நயந்தாரும் 1023
நல்லார்சொல் யோகாந்தப் 546
நல்வினை சிறிதும் நயத்திலேன் 1651
நவநிலைமேற் பரநாதத் 1039
நனவினும் எனது கனவினும் 699
நனவினும் பிழையே செய்தேன் 875
நன்பாட்டு மறைகளுக்கும் 1454
நன்மார்க்கத் தவர்உளம் 1394
நன்மைஎலாம் தீமை எனக் 598
நன்றானை மன்றகத்தே 676
நன்றே தருந்திரு நாடகம் 1316

நா

நாகாதிபனும் அயனும் மாலும் 1764
நாடல்செய் கின்றேன் 999
நாடாக்கொடிய மனம் அட்க்கி 966
நாடுகலந் தாள்கின்றோர் 1289
நாடுகின்ற தெம்பெருமான் 1507
நாடுகின்ற பலகோடி அண்ட 2524
நாடுகின்ற மறைகள் எலாம் 412
நாட்டார்கள் சூழ்ந்து மதித் 550
நாட்டிய ஓங்காரம் ஐந்தில் 570
நாட்டியதோர் சுத்தபராசத்தி 547
நாட்டுக்கிசைந்த மணிமன்றில் 461
நாட்பாரில் அன்பரெலாம் 1701
நாதமட்டும் சென்றனம் மேல் 1125
நாதம் சொல்கின்ற திருச்சிற் 1434
நாதருட் பெருஞ்ஜோதி 1592
நாதசரை சென்றுமறை 1118
நாதனே என்னை நம்பிய 227
நாதாந்தத் திருவீதி நடந்து 171
நாதாந் நிலையொடு போதாந்த 1042
நாதாந்த போதாந்த யோகாந்த 1358
நாதாந்த வரையும் எங்கள் 2487
நாயினும் சிறியேன் ஆயினும் 1683
நாயிற் கடையேன் கலக்கமெலாம் 382
நாயெனவே திரிந்தேனை 1262
நாயேன் உலகில் அறிவுவந்த 88
நாய்க்கும் ஓர் தவிசிட்டுப் 1730
நால்வருணம் ஆசிரமம் ஆசாரம் 621
நானந்த மடையாதெந் 1004
நானாகித் தானாய் நடித்தருள் 1599
நானே தவம்புரிந்தேன் நம்பெரு 1509
நானே தவம்புரிந்தேன் நானிலத்தீர் 1494
நானே தவம் புரிந்தேன் நானே 1212
நான் அளக்குந்தோறும் 594
நான்ஆனான் தான்ஆனான் 1623
நான் உரைக்கும் வார்த்தை எலாம் 1500
நான் உரைக்கும் வார்த்தை எலாம் 1548
நான் என்றும் தான் என்றும் 557
நான்செய்த நற்றவந்தான் 1192
நான் செய்த புண்ணியம்.... திரு 860
நான்செய்தபுண்ணியம்.... 1691
நான்செய்தபுண்ணியம்... தந்தன 861
நான்செய்தபுண்ணியம் யார்செய் 1282
நான்தொடுக்கும் மாலை இது 2526
நான்பசித்த போதெல்லாம் தான் 2538
நான்பசித்த போதெல்லாம் தான் 585
நான்படுத்த பாய்அருகில் நண்ணி 1209
நான்புகலும் மொழிஇதுகேள் 2519
நான்புனைந்த சொன்மாலை 1243
நான்பெற்ற செல்வத்தை 1747
நான்மறந்தேன் எனினும் 473
நான்முகர்கள் மிகப்பெரியர் 1131
நான்முகர்நல் உருத்திரர்கள் 625
நான்முகன் நாரணன் முதலாம் 1261

நி

நிகழ்நவ நிலையே 2423
நிதியே என்னுள்ள நிறைவே 1180
நிதிவளர் நிலமே 35

Koviloor Digital Library

நிந்தையிலார் நெஞ்சகத்தே 1545
நிலத்தே அடைந்தஇடர் 1272
நிலத்திலும் பணத்தும் நீள்விழி 39
நிலத்தேபுழுத்த புழுவும் 1179
நிலந்தெளிந்தது கணமழுங்கின 922
நிலைபுரிந் தருளும் நித்தனே 230
நிறமுறு விழிக்கீழ்ப் புறத்தொடு 238
நிறைவளர் முறையே 31
நினைக்க நினைக்கத் 1761
நினைத்த போதெல்லாம் நின்னை 358
நினைந்துநினைந் துணர்ந்துணர்ந் 1530

நீ

நீக்கிய மனம்பின் அடுத்தெனைக் 974
நீடியவேதம் தேடியபாதம் 2424
நீடுலகில் உற்றவர்கள் நன்குற 1370
நீட்டாய சித்தாந்த நிலையினிடத் 685
நீட்டுக்கொடியே சன்மார்க்க 964
நீண்டமறைகள் ஆகமங்கள் 945
நீநினைத்த நன்மைஎலாம் 587
நீயே என்பிள்ளைஇங்கு 1252
நீயே வலிந்திங் கென்னை ஆண்ட 1847
நீரிலே நீர்உற்ற நிறையிலே 1348
நீர்க்கிசைந்த நாமநிலை மூன்று 1215
நீர்பிறரோ யான் உமக்கு 1536

நெ

நெடுநாள் முயன்றும் காண்டற் 1763

நே

நேரிழையவர்தம் புணர்முலை 101
நேயா நின்னை நினைக்க 1836

நோ

நோவாது நோன்பெனைப்போல் 1025

ப

பகலிர வடியேன் படுத்தபோ 247
பகுதிபரமுதல் நான்கும் 566
பங்கமோர் அணுவும் பற்றிடா 886
பசிஎனும்ஓர் பெரும்பாவிப் 1419
பசியாத அமுதே பகையாத 2409
பசுநிறத்த ஐங்கருவில் 1150
பஞ்சுநேர் உலகப் பாட்டிலே 440
படமாட்டேன் துயர்சிறிதும் 507
படமுடியா தினித்துயரம் 468
படம்புரி பாம்பிற் 438
படிகள்எலாம் ஏற்றுவித்தீர் 477
படிசெய் பிரமன் முதலோர் 648
படித்தஎன் படிப்பும் 1713
படித்தனன் உலகப் படிப்பெலாம் 439
படிப்படக்கிக் கேள்விஎலாம் 784
படிமேல் ஆசை பலவைத்துப் 87
படைத்தபடைப் பொன்றதிலே 1129
படைத்தல்முதல் ஐந்தொழில் 642
படைத்திடல்முதல் ஐந்தொழில்செய் 1256
பட்டிப் பகட்டின் ஊர்திரிந்து 1228
பணத்திலே சிறிதும் ஆசை 199
பணமிலார்க் கிடுக்கண் 44
பணிந்தடங்கும் மனத்தவர்பால் 1291
பணிந்தறியேன் அன்புடனே 785
பணிந்துபணிந் தணிந்தணிந்து 1532
பணிப்பறுத் தெல்லாம் 1717
பண்டுகொண் டெனைத்தான் 401
பண்டுநின் திருப்பாத மலரையே 1662
பண்ணாத தீமைகள் 1472
பண்ணிகாரங்கள் பொசித்த 262
பண்ணிய தவமும் பலமும் 692
பண்ணிய பூசை நிறைந்தது 1692
பதிஉடையார் கனகசபாதி 1115
பதிசாரவைத்து முற்பசுநிலை 495
பதியனே பொதுவில் பரம 256
பதியுறு பொருளே 2415
பதியே எம்பரனே எம்பரம்பரனே 777
பதிவரும்ஓர் தருணம்இது 2465
பதிவரும்ஓர் தருணம் இது 1098
பத்தர்கள் பாடினர் பணிந்து 1575
பத்தியஞ்சிறி துற்றிலேன் 147
பந்தமெலாம் 1009
பயத்தொடு துயரும், மறைப்பு 341
பயத்தோ டொருபால் 1205
பயந்துயர் இடர்உள் மருட்சி 343
பயமும்வன் கவலைஇடர் 709
பயம்எனும்ஓர் கொடும்பாவிப் 1417
பரமதனோ டுலகுயிர்கள் 1165
பரமான சிதம்பர ஞான 895
பரம்பர நிறைவே பராபர 805
பரவியஐங் கருவினிலே 1153
பரவெளியே நடுவெளியே 604
பரன்அளிக்கும் தேகம்இது 1566
பரிகலத்தே திருஅமுதம் 480
பரிக்கிலேன்பயமும் இடரும் 345
பரிந்துனைப் பதியாப்பெற்ற 291

Koviloor Digital Library

பருப்பிடி யரிவாலிடிக ளாதி 116
பருவமிலாக் குறையாலோ 1077
பரைஇருந்த வெளிமுழுதும் 1119
பரைதரு சுத்தநிலைமுதல் 726
பரைத்தனிவெளியில் நடம்புரிந்த 223
பல்லிகள் பலவாயிடத்தும் 235
பல்வாதன்னையும் தவிர்த்தெனக்கே 901
பவநெறி செலுமவர் கனவினும் 1397
பவமே தவிர்ப்பது சாகா வரமும் 1196
பவனே வெம்பவ நோய் 837
பழம்பிழி மதுரப் பாட்டல 128
பற்றியபற் றனைத்தினையும் 655
பற்றுதலும் விடுதலும் 563
பனம்பழமே எனினும் இந்தப் 1059
பனிஇடர் பயந்தீர்த்தெனக் 716
பனிரண்டாண்டு தொடங்கி 1828
பன்மார்க்கம் எல்லாம் பசை 1503
பன்முகஞ்சேர் மனம்எனும்ஓர் 1403
பன்னிரண் டாண்டு தொடங்கி 338
பன்னெறிச் சமயங்கள் மதங்கள் 1387

பா

பாடுஞ்சிறியேன் பாட்டனைத்தும் 946
பாட்டால் உனது பதத்தை 1830
பாட்டுவந்து பரிசளித்து 673
பாட்டுவித்தால் பாடுகின்றேன் 162
பாதிஇரவில் எழுந்தருளிப் 465
பாம்பெலாம் ஓடின பறவையுட் 1569
பாயிரமா மறைகளெலாம் 511
பாய்மனம்என் றுரைத்திடும்ஓர் 1405
பாராதி பூதமொடு பொறிபுலன் 1361
பாரொடு நீர்கனல் காற் 20
பாரொடு விண்ணும் படைத்த 1074
பார்உலகாதிபர் புவனாதிபர் 2508
பார்த்தாலும் நினைத்தாலும் 562
பார்த்தர் இரங்கச் 389
பார்த்தேன் பணிந்தேன் 987
பார்முதலாப் பரநாதப் 2486
பார்முதல் நாதப்பதிஎலாங் 294
பாலானைத் தேனானை 668
பாலிலே கலந்த சோறெனில் 111
பாலும் கொடுத்தான் பதிதிறக்கும் 1490
பாலும் தேனும் கலந்த 1795
பால்வகை ஆணோ பெண் 640
பாவிமனக் குரங்காட்டம் 374
பான்மறுத்து விளையாடும் 614

பி

பிச்சங் கவரி நிழற்றி 949
பிச்சுலகர் மெச்சப் பிதற்றி 2546
பிதிர்ந்த மண் உடம்பை 273
பித்தெலாம் உடைய உலகர் 364
பிரமம்என்றும் சிவம்என்றும் 1166
பிரிந்தினிச் சிறிதும் தரிக்கலேன் 399
பிறந்தவரை நீராட்டிப் 1562
பிறந்தேற் கென்றும் இறவாது 909
பிறிவெனைத்துந் தோற்றாதென் 730
பின்முன் அறியேன் நான் 1251

பீ

பீழைபுரிவான் வருந்துகின்ற 78

பு

புகுந்தருணம் இதுகண்டீர் 1531
புண்ணியந்தான் யாதுபுரிந்தேனோ 1210
புண்ணிய பதியைப் புணர்ந்தனன் 1103
புண்ணியனார் என்உளத்தே 2488
புண்ணிலே புகுந்த கோல் 432
புண்படா உடம்பும் புரைபடா 431
புத்தியஞ்சேல் சற்றும் 865
புயலானை மழையானை 663
புரிசைவான்உலகில் 1001
புரைசேர் துயரப் புணரி 911
புரைசேர் வினையும் 859
புரையறு புகழே 2422
புரையாத மணியே 2410
புலங்கொள் கொடிய மனம் 968
புலந்த மனத்தை அடக்கி 1235
புலைகொலை தவிர்த்த 715
புலைத்தொழிலே புரிகின்றீர் 1567
புலையைத் தவிர்த்தென் குற்ற 1232
புலைவிலைக் கடையில் 99
புல்லவரே பொய்உலக போகம் 1060
புல்லவா மனத்தேன் என்னினும் 430
புல்லிய நெறிக்கே இழுத்தெனை 1709
புல்லிய நெறிநீத் தெனைஎடுத் 691
புல்லுங் களபப் புணர்முலையர் 948
புல்லொழுக்கம் எல்லாம் 1020
புல்வழங்கு புழுஅதனில் 1263
புழுவில் புழுத்த புழுவும் 1825
புறப்புணர்ச்சி என்கணவர் 2542
புன்புலால் உடம்பின் அசுத்தமும் 253

Koviloor Digital Library

புன்மார்க்கத் துள்ளும் புறத்தும்	958
புன்மாலை இரவெலாம்	924
புன்னிகர் இல்லேன் பொருட்	696
பூ	
பூஒன்றே முப்பூ ஐம்பூ எழுபூ	1155
பூதமுதலாம் பல கருவிகள்	1364
பூதவெளியின் நடமும் பகுதி	1797
பூத்தசுடர்ப் பூஅகத்தே	1151
பூப்பினும் பலகால் மடந்தையர்	97
பூமிபொருந்து புரத்தே	1222
பூமியோ பொருளோ	1050
பூவாமலே நிதம் காய்த்த	1739
பூவார் கொன்றைச் செஞ்சடை	1650
பெ	
பெட்டிஇதில் உலவாத	478
பெண்ணாய் ஆணுருவாய்	848
பெண்ணுக் கிசைந்தே பல	1239
பெண்ணே பொருளே எனச்	1237
பெண்மையை வயங்கும்	693
பெண்மையே விழைந்தேன்	446
பெரியஎனப் புகல்கின்ற	1136
பெரியன் அருட்பெருஞ்ஜோதிப்	475
பெருகியபே ரருளுடையார்	2532
பெருகுமா கருணைப் பெருங்	818
பெருமாயை என்னும்ஒரு	1414
பெறுவது நுமை அன்றிப்	528
பெற்றதம் பிள்ளைக் குணங்	190
பெற்றேன் என்றும் இறவாமை	1274
பே	
பேசு திரோதாயி எனும்	1415
பேசும் ஓங்காரம் ஈறதா	725
பேயினும் பெரியேன் செய்த	872
பேராலும்	1010
பேரிடர் தவிர்த்துப் பேரருள்	1614
பேருற்ற உலகிலுறு சமயமத	1368
பை	
பையார் பாம்பு கொடியதெனப்	77
பொ	
பொடிஎடுக்கப் போய் அதனை	161
பொடியேற்கும் புயனே	839
பொதுநடஞ்செய் துரைமுகத்தே	2451
பொதுநடஞ்செய் துரைமுகத்தே	1084
பொதுநடஞ்செய் மலரடிஎன்	514
பொதுவென் றறிந்தும் இரங்காத	84
பொதுவாகிப் பொதுவில்	1012
பொத்திய மலப்பிணிப் புழுக்	1695
பொய்உரைஎன் றெண்ணுதி	1514
பொய்கட்டிக் கொண்டுநீர்	1471
பொய்கொடுத்த மனமாயைச்	481
பொய்படாப் பயனே	328
பொய்பிடித்தார் எல்லாரும்	2500
பொய்பிழை அனந்தம் புகல்கின்	192
பொய்யாதென்றும் எனதுளத்தே	913
பொய்யிற் கிடைத்த மனம்	1241
பொய்யுடையார் விழைகின்ற	184
பொய்யே உரைக்கின்ற என்	897
பொய்வகைமனத்தேன்	326
பொய்விட்டகலாப் புலைக்	463
பொய்விளக்கப் புகுகின்றீர்	1476
பொருட்டலநும் போகம் எலாம்	1552
பொருட்பெருஞ் சுடர்செய்	1620
பொருட்பெரு தனிமெய்ப்	1618
பொருட்பெரு மறைகள்	1619
பொருணற் கொடியே	963
பொருத்தமிலார் எல்லாரும்	2501
பொருத்திக்கொடுத்த புலை	1238
பொருளறியேன் பொருளறிந்	52
பொருளிலே உலகம் இருப்ப	258
பொழுது விடிந்த தினிச்	378
பொழுது விடிந்தது பொற்பதம்	931
பொழுது விடிந்ததென் உள்ள	920
பொறிகரண முதற்பலவாம்	618
பொறித்துணைப் பதியாப் பெற்ற	290
பொறிவேறின்றி நினை	831
பொற்பங்கயத்தின் புதுநறவும்	1231
பொற்புடைய ஐங்கருவுக்	1138
பொன்செய் நின்வடிவைப்	1053
பொன்பறியாப் புகல்வார்போல்	2521
பொன்புனை உள்ஒளிக்	731
பொன்புனை புயனும் அயனும்	637
பொன்வணப் பொருப்	721
பொன்வண்ணப் பூதமுதல்	1137
பொன்னின் மாமணிப் பொது	498
பொன்னே நின்னை உன்ன	1837
பொன்னொப்பதாம் ஒருநீ	1250
போ	
போகமாட்டேன் பிறரிடத்தே	456
போகமாதியை விழைந்தனன்	57

Koviloor Digital Library

போகமே விழைந்தேன் புலை 96
போகம் சுகபோகம் சிவபோகம் 2342
போதல்ஒழியா மனக்குரங்கின் 1242
போதுதான் விரைந்து போகின்ற 150
போதுதான் வீணே போக்கிப் 869
போதெலாம் வீணில் போக்கி 133
போதோ விடிந்த தருளரசே 1606
போற்றி உரைக்கின்றேன் 1528
போற்றி நின்அருள் போற்றி 1636
போற்றி நின்இடம் போற்றி 1637
போற்று கின்றஎன் புன்மை 1638
போற்றுவார் போற்றும் 320

ம

மங்கையர் எனைத்தாம் வலிந்து 239
மஞ்சனைய குழலம்மை எங்கள் 414
மடங்கலந்தார் பெறற்கரி 1160
மடம்புரி மனத்தாற் கலங்கிய 973
மடுக்கநும் பேரருள் 535
மணங்கொள் கொடிப்பூ 967
மணமுளதாய் ஒளியினதாய் 653
மணம்புரிகடிகை இரண்டரை 1421
மணவாளர் வருகின்ற தருணம் 2463
மணவாளர் வருகின்ற தருணம் 1097
மணிக்கதவம் திறவாயோ 180
மணியே நின்னைப் பொதுவில் 1838
மண்அனந்தங்கோடி அளவு 1132
மண்ணாதி ஐம்புதவகை 1133
மண்ணினீர் நடையில் வந்த 269
மண்ணுலகதிலே உயிர்கள் 211
மண்ணுள் மயங்கிச் சுழன்றோடு 1234
மண்பூதமுதற்சத்தி வால் அணு 1134
மண்முதலாம்தத்துவத்தின் 1142
மண்முதல் பகர்பொன் வண்ணத் 722
மதத்திலே அபிமானங் கொண் 59
மதத்திலே சமய வழக்கிலே 995
மதம்புகல் முடிபு கடந்த 884
மதம்எனும்பேய் பிடித்தாட்ட 2530
மதம்என்றும் சமயம்என்றும் 601
மதம்பிடித்தவர் எல்லாம் 927
மதிக்களவா மணி மன்றில் 1678
மதித்திடுதல் அரியஒரு 680
மதிப்பாலை அருட்பாலை 1649
மதிமண்டலத் தமுதம் 1296
மதியைக்கெடுத்து மரணம் 1229
மந்திரம் அறியேன் மற்றை 1660
மயங்கிடேல் மகனே 1430
மயங்கினேன் எனினும் 1048
மயங்குந்தோறும் உள்ளும் 1787
மயங்குபுத்திஎனும் உலக 1406
மரணம்எனும் பெருந்திருட்டு 1420
மருணாடுலகில் கொலைபுரிவார் 79
மருந்தறியேன் மணிஅறியேன் 66
மருந்தானை மணியானை 673
மருந்திது மணிஇது மந்திரம்இது 493
மருவும் உலகம் மதித்திடவே 1225
மருளும் துயரும் தவிரும்படி 520
மருளேய் நெஞ்சகனேன் 835
மருளொடு மாயைபோய்த் 928
மருட்பெருஞ்சோதனை 1007
மருள்வடிவே 1013
மருள்நெறிசோர் மலஉடம்பை 686
மலங்கழிந் துலகவர் வானவர் 1570
மலத்திலே கிடந்தேன் தனை 220
மலத்தில் புழுத்த புழுவும் 1816
மலப்பகை தவிர்க்கும் 406
மலவாதனைதீர் கலவா அபயம் 523
மலைவறியாப் பெருஞ்ஜோதி 554
மலைவிலாத் திருச்சிற் றம்பலத் 317
மழவுக்கும் ஒருபிடி 1647
மறப்பிறயாப் பேரறிவில் 370
மறப்பற்ற நெஞ்சிடை வாழ்கின்ற 1075
மறப்பெலாம் தவிர்த்த மதிஅமு 762
மறப்பே தவிர்த்திங் கெனை 904
மறப்பேன் அலேன் உன்னை 1176
மறைமுடி வயங்கும் ஒருதனித் 232
மறைமுடி விளங்கு பெரும் 765
மற்றறிவோம் எனச்சிறிது 1553
மனக்கேத மாற்றி 1319
மனமகிழ்ந்தேன் மனமாயையை 1173
மனம்இளைத்து வாடியபோ 541
மனம்எனும்ஓர் பேய்க்குரங்கு 1402
மனை அணைந்துமலரணை 1093
மனைஅணைந்துமலர்அணை 2460
மன்செய்து கொண்ட 960
மன்பதை வகுக்கும் பிரமர் 638
மன்றஓங்கிய மாமாயையின் 724
மன்றாடங் கணவர் திருவரவை 2466
மன்றாடங் கணவர்திருவார்த்தை 1099

Koviloor Digital Library

மன்றுடையார் என்கணவர்	2512
மன்றுள் நின்றாடும் வள்ளலே	1607
மன்னப்பா மன்றிடத்தே	1584
மன்னிய நின்னருள் ஆரமுதம்	1182
மன்னுகின்ற அபரசத்திப்	571
மன்னுகின்ற பொன்வடிவும்	597
மன்னு திருச்சபை நடுவே	2455
மன்னு திருச்சபை நடுவே	1088
மா	
மாடமிசை ஓங்குநிலா	2453
மாடமிசை ஓங்குநிலா	1086
மாட்சி அளிக்கும் சன்மார்க்க	1240
மாணவநிலைக்கு மேலே	1631
மாதவத்தால் நான்பெற்ற	1287
மாதேகேள் அம்பலத்தே	2506
மாதோர் புடைவைத்த	1674
மாநிருபாதிபர்சூழ	373
மாமாயை எனும் பெரிய வஞ்சகி	1411
மாமாயைப் பரமாதி நான்கும்	567
மாயை எனும் படுதிருட்டுச்	1410
மாயையால் வினையால்	305
மாயையாற் கலங்கி வருந்திய	976
மாயைவினை ஆணவமா	1449
மார்க்கமெலாம் ஒன்றாகும்	1524
மாலக்கொடியேன் குற்றமெலாம்	965
மாலிலே மயங்கி மண்ணிலே	994
மாலையிலே உலகியலார்	2516
மாழைமாமணிப் பொதுநடம்	497
மாற்றறியாத செழும்பசும்	1376
மாற்றிலாத பொன்அம்பலத்	505
மாற்றுரைக்கமுடியாத திரு	1450
மாற்றைஅளந் தறிந்திலம்என்	681
மான்எனும் ஓர் சகசாலச்	1409
மான்முதலா உள்ள	1188
மி	
மிகவுயர் நெறியே	2420
மிளகு மேன் மேலும் சேர்த்த	113
மின்போலே வயங்குகின்ற	482
மு	
முத்தா முத்தருளே	832
முத்தியைப் பெற்றேன்	939
முத்தொழிலோ ஐந்தொழிலும்	1259
முந்தைநாள் அயர்ந்தேன்	1612
மும்மையை எல்லாம் உடைய	711
முயன்றுஉலகில் பயன்அடையா	1546
முளையானைச் சுத்தசிவ	662
முனித்தவெவ் வினையோ	255
முன்ஒருநாள் மயங்கினன்	471
முன்பாடு பின்பயன்தந்திடும்	1579
முன்பாட்டுக் காலையிலே	1455
முன்பின் அறியாது மொழிந்த	1249
முன்னே என்றனையே	836
முன்னவாதிபர்க்கு முன்னவா	879
முன்னாள்செய் புண்ணியம்	1602
முன்னுங் கொடுமை பலபுரிந்து	80
முன்னுள மார்க்கங்கள் யாவும்	1571
முன்னுழைப்பால் உறும்எனவே	371
முன்னொடு பின்னும்நீதரு	194
மூ	
மூர்த்திகளும் நெடுங்காலம்	588
மூவர்களும் செய்ய முடியா	984
மூவிரு முடிபின் முடிந்ததோர்	808
மூவிரு முடிபும் கடந்ததோர்	885
மெ	
மெச்சி அப்பாவலர் போற்றப்	1588
மெய்க்குலம் போற்ற விளங்கு	1072
மெய்ச்சுகமும் உயிர்ச்சுகமும்	615
மெய்தழைய உள்ளங்குளிர்ந்து	1345
மெய்ம்மையே கிடைத்த	815
மெய்யனை என் துயர்தவிர்த்த	728
மெய்யா மெய்யருளே	830
மெய்வைப் பழியா நிலைக்கேற்றி	907
மெலிந்தஎன் உளத்தை	1054
மே	
மேலவனே திருஅம்லத்	1280
மேலை ஏகாந்த வெளியிலே	400
மேலைப்பாற் சிவகங்கை	1754
மேல்வளர் திருச்சிற்றம்பலத்	752
மேல்வெளி காட்டி வெளியிலே	803
மேவிஎன் உள்ளகத் திருந்து	1635
மை	
மைதவழ் விழிஎன் அம்மை	292
மையரி நெடுங்கணார்தம்	871
யா	
யாதுகருதி என்னை ஆண்ட	1765
யாரினும் கடையேன் யாரினும்	152
யான்புரிதல் வேண்டுங்கொல்	1521

Koviloor Digital Library

யான்முனம் புரிந்த பெருந்தவம் 1716

யோ

யோகமெய்ஞ் ஞானம் பலித்த 775

வ

வகாரவெளியில் சிகார உருவாய் 1041
வகுத்தஉயிர் முதற்பலவாம் 23
வஞ்சமிலாத் தலைவருக்கே 2449
வஞ்சமிலாத் தலைவருக்கே 1082
வஞ்சவினை எல்லாம் மடிந்தன 1492
வட்டவான் சுடரே வளர்ஒளி 429
வட்டிமேல் வட்டிகொள் 1468
வட்டியே பெருக்கிக் கொட்டி 104
வண்கலப்பில் சந்திசெயும் 1135
வண்டணி பூங்குழல் அம்மை 1625
வண்ணப்பொன்னம்பல வாழ் 1027
வண்ணமிகு பூதவெளி 14
வண்ணம் வேறெனினும் வடிவு 977
வண்பூவில் வடிவு பல 1144
வந்தருள் புரிக விரைந்திது 138
வம்பனேன் பிறர்போல 435
வயங்குகின்ற சிற்றம்பலந் 1312
வயமான வரமே 2414
வரம்பெறும் ஆன்ம உணர்ச்சி 641
வரவுசெலவற்ற பரிபூரணாகார 1360
வருத்தநேர் பெரும்பாரமே 62
வருமுயிர் இரக்கம் பற்றியே 309
வருமுன் வந்ததாக் கொள்ளுதல் 1629
வருவாய் என்கண் மணிநீ 393
வருவா ரழைத்துவாடி 2126
வரைஅபர மார்க்கமொடு 75
வரைகடந் தடியேன் செய்த 874
வரையற்ற சீர்ப்பெரு வாழ்வு 1029
வலத்தவா நாத வலத்தவா 881
வலத்திலே செவிலி எடுத்திடச் 423
வலிந்தெனை அழைக்கும் 240
வல்லவா றெல்லாமும் 1741
வல்லாய் உனது கருணை 1819
வளம்பெறு விண்அணுக்குள் 1152
வளியே வெண்ணெருப்பே 841
வள்ளலாம் கருணை மன்றிலே 1719
வள்ளலைப் புணர்ந்தேன் அம்ம 1106
வள்ளல்இவ்வுலகில் தந்தையர் 316
வள்ளால் உன்னைப் பாடப்பாட 1783
வறுத்தலே பொடித்து 115
வன்செயல் பொறுத்தாட் 876
வன்சொலின் அல்லது 1469
வன்புடையார் கொலைகண்டு 608
வன்மையில் பொருள்மேல் 447

வா

வாக்கொழிந்து மனம்ஒழிந்து 1294
வாங்கிய செவிலி அறிவொடும் 422
வாடிய பயிரைக் கண்டபோ 274
வாட்டமும் துயரும் அச்சமும் 434
வாட்டமெலாம் தீர்த்தான் 1497
வாட்டமெல்லாந் தவிர்ந்தேன் 1281
வாட்டமே உடையார் தங்களை 42
வாட்டமொடு சிறியனேன் 1365
வாட்டமோ டிருந்த சிறியனேன் 333
வாதித்த மாயை வினை 1320
வாதுபேசிய மனிதர்காள் 1736
வாதுறும் இந்திய கரண 565
வாய்க்குறும் புரைத்துத் 1613
வாய்திறவா மவுன மதே 1168
வாய்ந்த பரநாதம் ஐந்தில் 574
வாய்ந்த பொன்அணிப் பொது 504
வாய்மட்டில் சொல்லுகின்ற 956
வாரம்செய்யத பொன்மன்றிலே 1432
வாரீர் சிதம்பர வல்லி 1851
வாழி எனைத்தூக்கி வைத்த 1213
வாழிஎன் ஆண்டவன் 1325
வாழிஎன் தோழிஎன் வார்த்தை 1981
வாழிஎன்றேஎனை மால்அயன் 1181
வாழிமா மணிமன் றிறைவனே 1109
வாழையடி வாழைஎன 469
வாழ்வே நினது நடங்கண் 1839
வாழ்வேன் அருளார் அமுதுண் 891
வானத்தின்மீது மயிலாடக் 2211
வான நாடரும் நாடரும் 1437
வானாகி வானடுவே மன்னும் 1696
வானிருக்கும் பிரமர்களும் 647
வானிலே வானுற்ற வாய்ப்பிலே 1351
வானோர்க் கரிதெனவே 1360
வான்கண்ட பிரமர்களும் 2472
வான்கொடுத்த மணிமன்றில் 2527
வான்வந்த தேவர்களும் 1515
வான்வளர் திருச்சிற் றம்பலத் 755
வான்வேண்டு சிற்றம்பலத்தே 1663

Koviloor Digital Library

வி

விஞ்சுகின்ற சிற்றம்பலத் 1308
விஞ்சு பொன்அணி அம்பலத் 499
விடம்பெற்ற உயிர்எலாம் 1572
விடிந்ததுபேர் ஆணவமாம் 2515
விடையவாதனைதீர் விடையவா 880
விண்ட போதகரும் அறிவரும் 221
விண்ணார் செஞ்சுடரே 828
விண்ணிடத்தே முதன்முப்பூ 1143
விண்ணெலாம் கலந்த வெளியில் 1718
விதித்தனை என்னைநின் 1276
விதிப்பவர்கள் பலகோடி 1292
விதுவும் கதிரும் இதுவென் 1770
வித்தெலாம் அளித்த விமலனை 713
விந்தோ நாதவெளியும் நடந்து 1806
விரதமாதிகளும் தவிர்த்து 826
விரித்தானைக் கருவிஎலாம்விரிய 658
விரிந்திடும் ஐங்கருவினிலே 1146
விரிந்தமனம் எனும் 1404
விருப்பிலேன்போலக் காட்டி 108
விரைசோர் பொன்மலரே 827
விரைசேர் சடையாய் 2405
விரைந்துவிரைந் தடைந்துடுமின் 1537
விரைந்துகேள் மகனே 1425
விரைந்து நின் அருளை ஈந்திடல் 134
விரைந்து விரைந்து படி 1270
விழற்கிறைத்துக் களிக்கின்ற 416
விழித்துவிழித் திமைத்தாலும் 372
விழியைத் தூர்க்கின்ற வஞ்சரை 58
விழுக்குலத்தார் அருவருக்கும் 599
விழுத்தலை நெறியை விரும்பிலேன் 98
விளக்கறியா இருட்டறையில் 47
விளங்கிய ஐங்கருச்சத்தி 1140
விளங்குகின்ற சிற்றம்பலத் 1307
விளங்குபர சத்திகளின் பரமாதி 572
விளங்கு பொன்அணிப் பொது 503
வினைத்தடை தீர்த்தெனை ஆண்ட 1669

வீ

வீணே பராக்கில் விடாதீர் 1527

வெ

வெங்கேத மரணத்தே விடுவித்து 1986
வெடிக்கப் பார்த்து நிற்கின்ற 85
வெடித்தளிந்த முக்கனியின் 1116
வெடித்தளிந்த முக்கனியின் 2483
வெப்பார் உள்ளக் கலக்க 919
வெம்மத நெஞ்சிடை மேவுற 1073
வெம்மதிக் கொடிய மகன் 191
வெம்மாலைச் சிறுவரொடும் 612
வெய்யலிலே நடந்திளைப்பு 605
வெவ்வினையும் மாயை 1491
வெறிக்கும் சமயக் குழியில்விழ 969
வெறுக்க மாட்டேன் நின்றனை 458
வெற்புறு முடியில் தம்பமேல் 806

வே

வேண்டார் உளரோ 384
வேத சிகாமணியே 2432
வேதத்தின் முடிமிசை விளங்கும் 1391
வேதநெறி ஆகமத்தின்நெறி 186
வேதந் தலைமேற் கொளவிரும்பி 462
வேதமும் பொருளும் பயனும் 809
வேதமும் வேதத்தின் அந்தமும் 1026
வேதமே விளங்க மெய்ம்மையே 1002
வேதாகமங்களென்று வீண் 1512
வேதாகமங்கள் புகன்ற விரிவை 1782
வேதாகமத்தின் அடியும் நடுவும் 1824
வேதாந்த நிலைநாடி விரைந்து 70
வேதாந்த நிலையும் அதன் 509
வேதாந்த நிலையொடு சித்தாந்த 1036
வேலைஅப்பா படைவேலை 1587
வேறுபல் விடஞ்செய் உயிர்களைச் 237

வை

வைகறைஈ தருளுதயம் 2513
வைகியநகரில் எழிலுடை 265
வையகத்தீர் வானகத்தீர் 1481

ஜோ

ஜோதி எவையும் விளங்க 1849
ஜோதிக் கொடியே ஆனந்த 962
ஜோதிப் பிழம்பே சுகவடிவே 1338
ஜோதிமலை ஒருதலையில் ஜோதி 1154
ஜோதிமலை மேல்வீட்டில் 1305
ஜோதிமலையில் கண்டேன் 1791
ஜோதியுள் ஜோதியுள் ஜோதி 2058
ஜோதி ஜோதி ஜோதி 2551

அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி

Koviloor Digital Library

KOVILOOR ANDAVAR
A. No. 12469
LIBRARY, KOVILOOR

Koviloor Digital Library

வடலூர் சத்திய ஞானசபை